சட்ட வட்டிவீதம் / சந்தை வட்டிவீதம் (ழ)	7.76	5.98	7.06	9.08	11.50	11.64	10.12
பணச் சந்தை வீதங்கள்							
சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்	6.40	8.42	8.15	8.95	7.45	4.55	5.95
திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள்							
91 நாட்கள்	6.45	8.72	7.69	10.01	7.51	4.69	8.16
364 நாட்கள்	7.30	10.17	8.90	11.20	8.45	5.05	8.24
வைப்பு வீதங்கள்							
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம்	6.20	8.17	9.07	8.81	8.20	5.80	4.94
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம்	7.57	10.46	11.48	10.85	10.05	7.14	5.94
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம்	6.96	11.17	10.06	10.94	8.89	4.93	6.45
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம்	7.13	11.44	10.65	11.27	9.17	5.08	6.67
தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு வீதம்	5.00	4.25	4.00	4.00	4.00	3.50	3.50
தேசிய சேமிப்பு வங்கியின் 12 மாத நிலையான வைப்பு வீதம்	7.25	11.00	11.00	10.50	9.83	5.25	5.50
கடன் வழங்கல் வீதங்கள்							
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் - வாராந்தம்	7.53	11.52	11.55	12.09	9.74	5.81	8.61
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம்	11.00	13.20	13.88	14.40	13.59	10.29	9.87
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம்	10.19	13.94	14.31	14.54	12.80	8.38	9.48
மூலதனச் சந்தை							
அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100)	6,894.5	6,228.3	6,369.3	6,052.4	6,129.2	6,774.2	12,226.0
எஸ் அன்ட் பீ எஸ் எல் 20 சுட்டெண் (2004 திசெம்பர் = 1,000)	3,625.7	3,496.4	3,671.7	3,135.2	2,937.0	2,638.1	4,233.3
வர்த்தகப்படுத்தப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ. மில்லியன்)	253,251	176,935	220,591	200,069	171,408	396,882	1,173,157
இலங்கையல்லாதோரின் தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்)	-5,372	338	17,655	-23,239	-11,735	-51,356	-52,649
சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்லியன்)	2,938.0	2,745.4	2,899.3	2,839.5	2,851.3	2,960.7	5,489.2

(ங) ஐ.அ.டொலர்களிலுள்ள மொ.உ.உ. மதிப்பீடுகளின் அடிப்படையில்

(ச) வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் பெறப்பட்ட முற்பணங்கள் வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக

(ஞ) பண்ணாட்டு நாணய நிதியத்தின் வெளிநாட்டு பங்குகடன் புள்ளிவிபரங்கள் வழிகாட்டி (2003)இற்கு இணங்க கொடுகடன் பணியிடலை உள்வாங்குவதற்காக ஒட்டுமொத்த படுகடன் பணிவிகிதங்கள் மீள்வகைப்படுத்தப்பட்டன

(ட) பண்ணாட்டு நாணய நிதியத்தின் அலகு கணக்கிற்கான சிறப்பு எடுப்பனவு உரிமை

(ண) செலாவணி வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு என்பது தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியாக பிரதிபலிக்கப்படுகிறது

(த) உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதத்தை கணிப்பிடுவதற்காக கொழும்பு துறைவோர் விலைச் சுட்டெண் பயன்படுத்தப்பட்டது. கூடையினுள் உள்ளடக்கப்பட்ட நாணயங்களின் நாடுசார்ந்த பணவீக்க வேறுபாடுகளுக்கு பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதத்தை சீராக்குவதன் மூலம் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிப்பிடப்படுகின்றது

(ந) 2022 மார்ச் 29இல் கிடைப்பனவாக இருந்த தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ப) நிதி அமைச்சினுடைய 2020இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2019இன் சில இறைத்துறை புள்ளிவிபரங்கள் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டன

(ம) 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்தால் வெளியிடப்பட்ட அரச நிதி புள்ளிவிபரவியல் கையேட்டிலுள்ள அரச படுகடன் புள்ளிவிபரங்களை தொகுப்பதற்கான வழிகாட்டுதல்களின்படி, 2019இலிருந்து கரைகடந்த வங்கியியல் அலகுகளில் வதிவற்றோர் வெளிநின்ற இலங்கை அதிவிருத்தி முறி உடமைகள் வெளிநாட்டு கடனின் கீழ்வகைப்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு வங்கியியல் அலகுகளில் வதிவோர் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறி உடமைகள் உள்நாட்டு கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன

(ய) அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் வெளிநின்ற நிலுவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ர) 2015இற்கான தரவுகளில் 2015 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் டிஎவ்சிசி வர்த்தன வங்கியுடன் ஒன்றிணைக்கப்பட்ட டிஎவ்சிசி வங்கி பிஎல்சி இன் சொத்துக்கள்/ பொறுப்புக்களை உள்ளடக்கியது

(ல) 2014 சனவரி 02 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மீள் கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பன முறையே துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என மீள் பெயரிடப்பட்டன

(வ) கடைசிக் கடன் வழங்குனராக வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி முற்பணங்கள் வழங்கும் வீதம்

(ழ) சட்ட வீதமானது 1990ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் பணத்தொகையை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். சந்தை வீதமானது 1990ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடன் அறவீட்டு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் இணங்கப்பட்ட வட்டி வீதம் அல்லாத வர்த்தக கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழும் ரூ.150,000இற்கு அதிகமான படுகடனை மீட்டெடுப்பதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களால் நிறுவப்பட்ட எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். மத்திய வங்கியின் நாணயச் சபை சட்டவீதம் மற்றும் சந்தை வீதத்தை தீர்மானிக்கின்றதுடன் அரசாங்க வர்த்தமானியில் ஒவ்வொரு ஆண்டுக்கானதும் திசெம்பர் மாதத்தில் வெளியிடுகின்றதுடன் எதிர்வரும் ஆண்டிற்கும் இது பிரயோகிக்கப்படும். 2022ற்கான சட்டவீதம் மற்றும் சந்தை வீதம் ஆண்டிற்கு 7.48 ஆகும்

முதன்மைச் சமூகக் குறிகாட்டிகள்

பௌதிக தோற்றமும் காலநிலையும்

அமைவிடம்
வடஅகலக்கோடு 5^0 55‘ இற்கும் 9^0 50‘ இற்குமிடையில்
கிழக்குநெடுங்கோடு 79^0 31‘ இற்கும் 81^0 53‘ இற்குமிடையில்

தூரம்
433 கி.மீ. (269 மைல்கள்) வடக்குத் தெற்காக
226 கி.மீ. (140 மைல்கள்) மேற்குக் கிழக்காக

உயரம்
ஆகக்கூடிய உயரம் 2,525 மீற்றர்கள் (8,284 அடி)

பரப்பு

மொத்தப்பரப்பு	:	65,610 ச.கி.மீ.
நிலப்பரப்பு	:	62,705 ச.கி.மீ.
உள்நாட்டு நீர்ப்பரப்பு	:	2,905 ச.கி.மீ.

காலநிலை

தாழ் நிலம்	:	ஆகக் குறைந்தது 24.5^0 செ - ஆகக் கூடியது 31.8^0 செ
மலை நாடு	:	ஆகக் குறைந்தது 18.4^0 செ - ஆகக் கூடியது 27.0^0 செ
ஆண்டு மழைவீழ்ச்சி (சராசரி) மி.மீ	:	2020 : 1,613
		2021 : 2,312

குடித்தொகையும் முக்கிய புள்ளிவிபரங்களும்

குடித்தொகை புள்ளிவிபரங்கள் (அ)

நடுவாண்டுக் குடித்தொகை (‘000) (2021)	:	22,156
வயதுப் பரம்பல் (‘000) (2021)		
0 - 14 ஆண்டுகள்	:	5,596
15 - 64 ஆண்டுகள்	:	14,823
65 ஆண்டுகளுக்கு மேல்	:	1,737
குடித்தொகை அடர்த்தி (2021)	:	சதுர கிலோ மீற்றருக்கு 353 ஆட்கள்
செப்பமற்ற பிறப்பு வீதம் (2021)	:	ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 12.9
செப்பமற்ற இறப்பு வீதம் (2021)	:	ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 7.4
இயற்கை அதிகரிப்பு வீதம் (2021)	:	ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 5.5
சிசுமரண வீதம் (2015)	:	ஒவ்வொரு 1,000 பிறப்புகளிற்கு 7.5 (திருத்தப்பட்டது)
தங்கியிருப்போர் வீதம் (2021)	:	49.4%
சராசரி குடியிருப்பு அளவு (2019) (ஆ)	:	3.7 ஆட்கள்

தொழில்நிலை (2021)

தொழிலிலுள்ள ஆட்கள் (‘000) (ஈ)(உ)	:	8,114
வேளாண்மை	:	27.3%
கைத்தொழில்	:	26.0%
பணிகள்	:	46.7%
அரச ஊழியர்கள் (‘000) (ஊ)	:	1,493
அரசதுறை	:	57.5%
மாகாண பொதுத்துறை	:	26.8%
அரசசார் துறை	:	15.7%

வருமானப் பங்கீடு (ஆ)

குடும்ப அலகுகளின் வருமான கினி குணகம் (2019)	:	0.46
சராசரி குடும்ப அலகு வருமானம் (2019)	:	மாதமொன்றிற்கு ரூ. 76,414
நடுத்தர குடும்ப அலகு வருமானம் (2019)	:	மாதமொன்றிற்கு ரூ. 53,333

வறுமை (ஆ)

நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கிலோ கலோரி (2019)	:	2,120
தலைக்குரிய வறுமைச் சுட்டெண் (இ)	:	14.3 (2019)
	:	16.0 (2016)
	:	22.5 (2012/13)

மனித அபிவிருத்திச் சுட்டெண் (2019)

	:	0.782
189 நாடுகளிடையேயான நிலை	:	72

இலங்கைச் சமீப்சச் சுட்டெண் (2020)

	:	0.786
பொருளாதார மற்றும் வணிக காலநிலை துணைச் சுட்டெண்	:	0.846
மக்களின் நல்வாழ்வுத் துணைச் சுட்டெண்	:	0.795
சமூக-பொருளாதார உட்கட்டமைப்புத் துணைச் சுட்டெண்	:	0.718

பிறப்பில் வாழ்நாள் எதிர்பார்ப்பு (2017) : 75.5 ஆண்டுகள்

கல்வி அறிவு வீதம் (2020) (ஈ)

சராசரி	:	93.0%
ஆண்	:	93.8%
பெண்	:	92.2%

பௌதிக, சமூக மற்றும் நிதியியல் உட்கட்டமைப்பு வசதிகள்

	அலகு	2021
போக்குவரத்து		
தேசிய வீதிகளின் நீளம் (ஏ மற்றும் பீ)	கி.மீ.	12,225
கடுகதிப் பாதைகளின் நீளம்	கி.மீ.	312.6
தொழிற்பாட்டிலிருக்கும் புகைவண்டிப் பாதையின் நீளம் (2020)	கி.மீ.	1,648
மின்வலு		
மின்னூட்டல் மட்டம் (2016)	சதவீதம்	99.3
தலைக்குரிய மின்வலுப் பாவனை	கிவாம	686.7
தொடர்பூட்டல்		
தொலைபேசி அடர்த்தி		
நிலையான இணைப்புக்கள்	ஒவ்வொரு 100 ஆட்களுக்கு	12.9
செலூலர் தொலைபேசி உட்பட	ஒவ்வொரு 100 ஆட்களுக்கு	148.1
இணைய அடர்த்தி (எ)	ஒவ்வொரு 100 ஆட்களுக்கு	100.4
ஒரு அஞ்சல் அலுவலகத்தினால்		
சேவையாற்றப்படும் சராசரி குடித்தொகை	எண்ணிக்கை	5,283
நிதியியல் உட்கட்டமைப்பு		
வங்கிகள்		
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கிளைகள் (ஏ)	எண்ணிக்கை	2,919
உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கிளைகள் (ஏ)	எண்ணிக்கை	705
பாவனையிலுள்ள கொடுகடன் அட்டைகள்	ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு	9,275
வங்கித்தொழில் அடர்த்தி	ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கும் கிளைகள்	16
ஏனைய நிதியியல் நிறுவனங்கள்		
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கிளைகள்	எண்ணிக்கை	1,647
சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் கிளைகள்	எண்ணிக்கை	60
உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் கிளைகள்	எண்ணிக்கை	123
தன்னியக்கக் கூற்றுப் பொறிகள், காசு மீள்சுழற்சி பொறிகள் மற்றும் காசு வைப்புப் பொறிகள்	ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு	31

	அலகு	2021
நீர் வழங்கலும் சுத்திகரிப்பும்		
பாதுகாப்பான குடிநீரைப் பெறுவோர்	சதவீதம்	94.4
குழாய் நீரைப் பெறுவோர்	சதவீதம்	54.3
பொதுக்கல்வி		
பள்ளிக்கூடம் ஒன்று உள்ளடக்கும் பிரதேசம் (ஐ)	ச.கி.மீ.	6.5
மாணவர்/ஆசிரியர் விகிதம் (ஐ)	எண்ணிக்கை	16.0
வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (தரம் 1-9) (2019)	சதவீதம்	94.8
ஆரம்ப வகுப்புக்களில் அனுமதி பெற்றோரின் தேறிய விகிதம் (ஒ)	சதவீதம்	94.4
பல்கலைக்கழக கல்வி (ஓ)		
மாணவர்/ஆசிரியர் விகிதம்	எண்ணிக்கை	19.7
வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (வயது 19 -23 ஆண்டுகள்) (ஔ)	சதவீதம்	8.7
க.பொ.த உயர்தரத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு முன்னேற்றம்		
பல்கலைக்கழகத்திற்கு நுழைந்தோர்	சதவீதம்	62.4
பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர்	சதவீதம்	22.5
கல்வி மீதான அரச செலவினம் (க)	மொ.உ.உ இன் சதவீதமாக	1.8
பொதுச் சுகாதாரம்		
வைத்தியசாலை படுக்கைகள்	ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கு	3.5
வைத்தியர் ஒருவருக்கான நபர்கள்	எண்ணிக்கை	1,167
தாதிகள்	ஒவ்வொரு 10,000 ஆட்களுக்கு	17.5
சுகாதாரம் மீதான அரசின் செலவினம்	மொ.உ.உ. இன் சதவீதமாக	2.3

குறிப்பு : 2021இற்கான தரவுகள் தற்காலிகமானவை

மூலங்கள்: தொடர்பான நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட புள்ளிவிபரங்கள்

(அ) பதிவாளர் நாயகம் திணைக்களம்

(ஆ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டினை (2019) அடிப்படையாகக் கொண்டது

(இ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டில் 2019இல் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுச் சுற்றில், முன்னர் 2002 ஆண்டின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டுத் தரவுகளின் அடிப்படையிலமைந்த உத்தியோகபூர்வ வறுமைக் கோடானது 2012/13 ஆண்டு குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டுத் தரவுகளைப் பயன்படுத்தித் திருத்தப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினது திருத்தத்துடன் தலைக்குரிய வறுமைச் சுட்டெண்ணும் திருத்தப்பட்டுள்ளது

(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் காலாண்டு தொழிற்படை அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது.

(உ) 2021இன் நான்கு காலாண்டுகளினதும் சராசரி

(ஊ) இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அரச துறை தொழில்நிலை அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது

(எ) செல்லிட இணைய சேவைகள் உள்ளடங்கலாக

(ஏ) மானவ சேமிப்பு அலகுகள் நீங்கலாக அனைத்து வங்கித்தொழில் பிரிவுகளும்

(ஐ) அரச பாடசாலைகள் மட்டும்

(ஒ) அரச மற்றும் தனியார் பாடசாலைகள் மட்டும்

(ஓ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழான பல்கலைக்கழகங்களின் விபரங்கள்

(ஔ) மாணவர்களின் உள்ளக அனுமதிகளை மட்டும் உள்ளடக்கியுள்ளது

(க) பொது மற்றும் உயர்கல்வி மீதான அரச செலவினம்

1

பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

1.1 பொதுநோக்கு

பல தசாப்தங்களாக ஆழமாக வேரூன்றிக் காணப்பட்ட அமைப்பியல் பிரச்சனைகள் மற்றும் பாதிப்படையக்கூடியதன்மைகள் முன்னிலைக்கு வெளிப்பட்டு அதன் மூலம் 2022 ஆரம்பத்தின் முன்னெப்பொழுதுமில்லாத வகையில் சமூக அரசியல் பதற்றங்கள் தோற்றுவிக்கப்பட்டதெனினும் 2020இன் உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து இலங்கைப் பொருளாதாரம் 2021இல் மீட்சியடைந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பக்கங்களில் பன்முகம் கொண்ட எதிரலைகளின் தாக்கத்திற்குட்படும் பொழுது பொருளாதாரமானது அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய தாங்கிருப்புக்களைக் கொண்டிராத ஏற்கனவே வலுவிழந்த நிலையிலிருந்தது. பொருளாதாரத்தின் இத்தகைய பாதிப்படையக்கூடியதன்மைக்கு 2019இன் பிற்பகுதியில் வரிக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களினால் மேலும் மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளியின் போதாமை பிரதானமாகப் பங்களிப்புச் செய்திருந்தது. உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முகம்கொடுப்பதற்கும் நீண்ட காலம் நிலைத்திருக்கும் பொருளாதாரச் சரிவு மற்றும் வாழ்வாதாரங்களில் வடுக்களின் தாக்கங்களை முன்கூட்டியே தடுப்பதற்கு பொருளாதாரத்தினைப் பாதுகாப்பதற்குமான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உலகத்தில் இலங்கை விதிவிலக்கொன்றாக இருக்கவில்லை. எனினும், பொருளாதாரத்தில் காணப்பட்ட குறிப்பிட்ட பாதிப்படையக்கூடியதன்மைகளுக்கு மத்தியில் இறைத் துறையில் கொள்கை இடைவெளி போதுமற்றதாகவிருந்தமை அல்லது இறைத் துறையிலிருந்து நேரகாலத்துடனான பதிலிறுப்புக்களின்மையினால் நாணயக் கொள்கைத் தளர்த்தல், சந்தைகளுக்கும் அரசாங்கத்திற்கும் போதியளவு திரவத்தன்மையை வழங்குதல் மற்றும் பல்வேறு வெளிநாட்டுத் துறை மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகளினை நடைமுறைப்படுத்தல் வடிவங்களில் அசாதாரணமான பதிலிறுப்புக்களை வழங்கி பொருளாதாரத்தினைப் பாதுகாப்பதில் இலங்கை மத்திய வங்கி பெரிதும் ஈடுபட வேண்டியிருந்தது. மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட தீவிரமான பேரண்டப் பொருளாதாரத் தளர்த்தல் கொள்கைப் பொதியானது 2020இல் பதிவுசெய்யப்பட்ட வரலாற்று ரீதியான பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து 2021இல் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்த வேளையில் பரந்துபட்ட ஆர்வலர்களின் மீது உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைத் தணிப்பதிலும் துணைபுரிந்தது. அரச மற்றும் தனியார் துறைகள் இரண்டும் தொழிற்படு மூலதனம் மற்றும் வியாபார முதலீட்டுக்கான தாழ்ந்த செலவுமிக்க நிதியின் சலுகைகளை அனுபவித்ததுடன் இது இந்த இக்கட்டான காலத்தில் அவற்றினைத் தொடர்ந்தும் இயங்குவதற்கும் கைத்தொழில்களை ஆற்றல்மிக்கதாக தக்கவைத்திருப்பதற்கும் சில வளர்ச்சியினை அவதானிப்பதற்கும் கூட துணைபுரிந்தது. மறுபுறத்தில், பொதுமக்களுக்கும் அதேபோன்று ஏனைய இன்றியமையாத நிரம்பல் சங்கிலிகளுக்கும் அரச பணிகள், பொதுப் பயன்பாடுகள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகளின் தடங்கலற்ற வழங்கலை இது உறுதிப்படுத்தியது. எனினும், உலகளாவிய நோய்த்தொற்றின் உச்சமான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத கொள்கைப் பதிலிறுப்புக்கள், எதிர்பார்க்கப்பட்ட இறைப் பதிலிறுப்புக்கள் போதுமானளவு இடம்பெறாமையினால் கொள்கை வழிமுறைகளை மீளப்பெற முடியாதிருந்தமையுடன் இணைந்து புறக்கீடு செய்யும் வழிமுறைகளுக்கான இடைவெளி போதாமையினைத் தோற்றுவித்து 2021இல் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டில் சில எதிர்பாராத தாக்கங்களுக்கு இட்டுச்சென்றதுடன் இவை 2022 ஆரம்பத்தில் மேலும் தீவிரமடைந்தன. மேலும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை வற்றிப்போனதற்கு மத்தியில் செலாவணி வீதத்தில் அவதானிக்கப்பட்ட அழுத்தங்கள் 2021இலும்

1

2022 ஆரம்பத்தில் மேலும் தீவிரமடைந்து சமூகத்தின் மீது செலாவணி வீதத்தின் ஒரு பாரிய தேய்வடைதலின் பாதகமான தாக்கம் பற்றிய கரிசனைகளுக்கு மத்தியில் சந்தையில் நிலவிய மட்டத்துடன் ஒப்பிடுமிடத்து 2022 ஆரம்பத்தில் செலாவணி வீதத்தில் ஒரு திருத்தத்தினைத் தேவைப்படுத்தின. எனினும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய திரவத்தன்மை மீதான கணிசமான அழுத்தங்களையும் சந்தைத் திருத்தத்திலான தாமதத்தினையும் பிரதிபலித்து சந்தைச் சக்திகளின் பாரிய தேய்மானத்தின் காரணமாக 2022 மாச்சில் அனுமதிக்கப்பட்ட செலாவணி வீதத்தின் நெகிழ்ச்சித்தன்மை மீதான எதிர்பார்க்கை எதிர்பார்த்ததற்கு மாறாகவிருந்தது.

கடந்த தசாப்தத்திற்கு மேலாக பேரண்டப் பொருளாதாரத்தின் வலுவானதொரு தூணாக விளங்கிய விலை உறுதிப்பாடு உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிரம்பலினால் உந்தப்பட்ட காரணங்கள் மற்றும் போதுமானற்ற இறை இடைவெளிக்கு மத்தியில் முன்னெப்பொழுதுமில்லாத நாணய நிதியிடல் உள்ளடங்கலாக அசாதாரண நாணய வசதிப்படுத்தலின் பிரதான காரணமாக விலைகளின் மீதான மிதமிஞ்சிய கேள்வி அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுதல் போன்றவற்றின் இணைந்த தாக்கத்தினால் 2021இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து சவாலுக்குட்படுத்தப்பட்டது. மேலும், கணிசமான படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் அதனுடன் இணைந்து வெளிநாட்டு செலாவணிச் சந்தை பெருமளவில் திரவத்தன்மையற்றதாகவுள்ள நிலையில் இன்றியமையாத இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கான கடுமையான தேவைக்கு மத்தியில் அலுவல்சார் ஒதுக்குகளின் சொற்பமான மட்டத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு சென்மதி நிலுவைகள் மீது பெருகிவரும் அழுத்தங்களின் காரணமாக 2021இன் இறுதியிலிருந்து வெளிநாட்டுத் துறை ஆபத்தான நிலையின் விளிம்பல் தொடர்ந்துமிருந்தது. உடனடியாகத் தீர்க்கப்பட்டாலன்றி சக்தி மற்றும் வலுத் துறையிலான இக்கட்டானநிலையானது இன்றியமையாதவை மற்றும் மூலப்பொருட்களுக்கான கடுமையான பற்றாக்குறை மற்றும் பொருளாதாரத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இவற்றின் கசிவுத் தாக்கங்கள் போன்றவை பொருளாதாரச் செயற்பாட்டினை மிதமிஞ்சியளவில் பாதிக்கக்கூடும். இத்தகைய தீவிரமான நிலைப்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பிற்போடுவதற்கும் சிறிது சிறிதான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் கொள்கை வழிமுறைகளும் பயனற்றதாகவிருந்ததனை நிரூபித்துள்ளன அல்லது புதிய பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளன. வரலாற்று ரீதியில் உயர்வான பொதுப்படுகடன் மட்டங்கள், மேலும் வலிவிழந்துவரும் இறை மீதிகள் மற்றும் மிகவும் தாழ்ந்த நாட்டுக்கான தரமிடல் போன்றவற்றின் காரணமாக இத்தகைய உள்நாட்டுப் பொருளாதார நிலைப்பாடுகளை இலகுபடுத்தி வழமை நிலையினை மீளச் செயற்படுத்துவதில் இறை அதிகாரங்களின் குறிப்பிடத்தக்க ஏதாவது தலையீடு சாத்தியமற்றதாகவே தொடர்ந்துமிருக்கின்றது. இதனொரு விளைவாக, மத்திய வங்கியானது 2022 ஏப்பிறல் ஆரம்பத்தில் ஏனையவற்றிற்கு மத்தியில் நாணயக் கொள்கையின் கணிசமான இறுக்கமாக்குதலினூடாக பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மேலும் நிலைகுலைவதனை முன்கூட்டியே தடுப்பதற்கும் விலை உறுதிப்பாட்டினை மீளநிலைநிறுத்துவதற்கும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இத்தகைய கொள்கை உந்துதல்கள் நீண்ட காலத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான அத்தியாவசியமான நிலைப்பாடாக தொடர்ந்துமிருக்கின்ற நடுத்தர கால மற்றும் நீண்ட கால பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை புத்துயிர் பெறச் செய்வதற்கு துணிச்சல்மிக்க அமைப்பியல் சீர்திருத்தங்களை ஆரம்பிப்பதற்கு இன்றியமையாததாகவிருக்கும்.

இந்த வகையில், மத்திய வங்கியின் பரிகாரக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கு அரசாங்கத்தின் பல்வேறு அமைப்பியல் சீர்திருத்தங்கள் இந்த சந்தர்ப்பத்தில் இன்றியமையாததாகவிருக்கின்றன. நீண்ட காலமாக காலம் தாழ்ந்தப்பட்டதும் கடந்த காலத்தில் அடிக்கடி மீளப்பெறப்பட்டதுமான வலுவான இறைத் திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் தற்போதைய சிக்கலான பொருளாதாரக் குழப்பங்களிலிருந்து கண்கூடான திருப்புமுனைக்கு இட்டுச்செல்லும். அரசிறையில் மேல் நோக்கிய நிலைமாற்றத்துடன் அரச செலவினத்தின் சிக்கனப்படுத்தல் மற்றும் முன்னுரிமைபடுத்தலினூடாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் மட்டுப்படுத்தப்படுதல் எதிர்வரும் காலத்தில் அரச கடன்பாட்டின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதில் துணைபுரியும். மேலும், பொதுப்படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும்தன்மையினை அடைந்து கொள்வதற்கும் பேணிக் கொள்வதற்குமான அனைத்தையுமுள்ளடக்கியதும் ஒத்திசைவானதுமானதொரு அணுகுமுறை தற்போதைய பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்ப்பதில் முன்னெடுக்கப்படும் முக்கிய படியாகும். இத்தகைய இன்றியமையாத இறைத் திருத்தங்கள் ஏனையவற்றிற்கு மத்தியில் செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் கட்டமைப்புக்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதியியல் ரீதியாக சுயாதீனமானதும் சுயநிர்ணயம் கொண்டதுமான அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள், சிறந்த ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் பொறிமுறையினை நிறுவனமயமாக்குதல்இ ஒட்டுமொத்த பொதுத் துறையில் குறிப்பிடத்தக்க உற்பத்தித்திறன் மற்றும் பணிவழங்கலின் மேம்பாடுஇ மற்றும் நன்கு இலக்கிடப்பட்ட சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்தல் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட வேண்டும். அரச நிறுவனங்களின் பொதுமக்களிற்கு பொறுப்புக்கூறும் கடப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு சட்டக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவது அத்தியாவசியாகின்ற அதேவேளையில் தொடர்புபட்ட நிறுவனங்கள் கொள்கை உருவாக்கத்திலும் நடைமுறைப்படுத்தலிலும் தற்போதுள்ள சட்ட அதிகாரங்களைக் கையாள்வது நாட்டில் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார நலனோம்புகையை உறுதிப்படுத்தும். இத்தகைய மாற்றங்கள் இலகுத்தன்மையுடன் தனியார் துறையின் அதிகரித்த பங்களிப்பினையும் அதேவேளையில் பொதுத் துறை பொருளாதாரத்தில் ஒருங்கிணைப்பாளரெனும் பங்கினை தொடர்ந்தும் வகிப்பதனையும் உறுதிப்படுத்தும்.

1

இலங்கையினால் விடாப்பிடியாக முகங்கொடுக்கப்படும் இரட்டைப் பற்றாக்குறையெனும் இக்கட்டான நிலையானது ஒரு நீடித்துநிலைத்திருக்கு அடிப்படையில் சென்மதி நிலுவைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக் காட்டுகின்றன. மாறுகின்ற அரசியல் ஆட்சிகளுக்குட்படாததும் தொடர்புபட்ட ஆர்வலர்களினால் உருவாக்கப்படுகின்றதுமான வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைப்பதனையும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை முகாமை செய்யக்கூடிய மட்டத்தில் பேணுவதனையும் இலக்காகக் கொண்ட தேசிய கொள்கைகள் இந்த முயற்சிக்கு இன்றியமையாததாகின்றன. மேலும், அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு ஏனைய படுகடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணியை உருவாக்குகின்ற மூலங்களைக் கண்டறிந்து கொள்வதும் நிறுவுவதும் அவசியமாகின்ற வேளையில் சென்மதி நிலுவைக்கு வெளிநாட்டுப் படுகடனினால் நிதியிடலினைக் குறைப்பது அவசியமாகும். வியாபாரம் செய்வதற்கு உகந்த சூழலை உருவாக்குதலும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்புக்களும் இந்த வெளிநாட்டுத் துறை உறுதிப்படுத்தல் பொதிக்கு ஆதரவளிக்க வேண்டும்.

இலங்கையில் அண்மையில் முகங்கொடுக்கப்பட்ட நிகழ்வுகள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு, சமூக ஒருமைப்பாடு மற்றும் அரசியல் உறுதிப்பாடு போன்றவை எவ்வாறு ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்திருக்கின்றன என்பதனையும் ஒரு அம்சத்தின் தாக்கம் எவ்வாறு இன்னொன்றின் மீது கசிவுத் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனையும் வெளிப்படுத்துகின்றன. ஆகவே, இலங்கையினை புதிய உயரத்திற்கு மீள இயக்குவதற்கு தற்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடி, சமூகக் கிளர்ச்சி மற்றும் அரசியல் உறுதிப்பாடின்மை போன்ற மும்முனையிலான நெருக்கடிக்கான ஒட்டுமொத்தத் தீர்வானது இந்த அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். கடப்பாடுகளின் ஒழுங்கானதும் ஒத்திசைவானதுமான மீள்கட்டமைப்பினைச் சார்ந்து இடைக்காலத்தில் வெளிநாட்டில் படுகடன் பணிக் கொடுப்பனவு செய்தல் அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டமை, பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து பொருளாதாரச் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை வேண்டி நிற்றல், அரச செலவினத்தைச் சிக்கனப்படுத்துவதற்கும் அரசிறையை உயர்த்துவதற்குமானதொரு கடப்பாடு மற்றும் பக்கச்சார்பற்ற அரசியல் மற்றும் பொருளாதார அரசியல் தந்திரம் உள்ளடங்கலாக பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் ஏனையவற்றின் மத்தியில் பேரண்டப் பொருளாதார உறுதியினை மீட்டெடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய முயற்சிகளின் ஒட்டுமொத்த வெற்றியானது சமூக ஒருங்கிசைவினை மீள உறுதிப்படுத்துவதிலும் அரசியல் உறுதிப்பாட்டினை மீள உருவாக்குவதிலும் எதிர்வரும் காலத்தில் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலினை எடுத்துச் செல்வதற்கான நிரந்தரமான அரசியல் விருப்பத்திலும் தங்கியுள்ளது.

அட்டவணை 1.1

பேரண்டப் பொருளாதார செயலாற்றம் (2017-2021)

குறிகாட்டி	அலகு	2017	2018	2019	2020 (அ)	2021 (ஆ)
உண்மைத்துறை (இ)						
உண்மை மொ.உ.உ. வளர்ச்சி	%	3.6	3.3	2.3 (அ)	-3.6 (ஆ)	3.7
நடைமுறைச் சந்தை விலையில் மொ.உ.உ.	ரூ.பில்	13,328	14,291	14,997 (அ)	15,027 (ஆ)	16,809
தலைக்குரிய மொ.உ.உ. (ஈ)	ஐ.அ.டொ.	4,077	4,057	3,848 (அ)	3,695 (ஆ)	3,815
வெளிநாட்டுத்துறை						
வர்த்தக நிலுவை (இ)	மொ.உ.உ. இன் %	-11.0	-11.8	-9.5	-7.4	-9.6
நடைமுறை கணக்கு நிலுவை (இ)	மொ.உ.உ. இன் %	-2.6	-3.2	-2.2	-1.5	-4.0
திரண்ட நிலுவை	ஐ.அ.டொ.மில்	2,068	-1,103	377	-2,328	-3,967
வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள்	ஐ.அ.டொ.மில்	7,959	6,919	7,642	5,664	3,139
இறைத்துறை (இ) (உ)						
நடைமுறை கணக்கு நிலுவை	மொ.உ.உ. இன் %	-0.7	-1.2	-3.6 (ஊ)	-7.9	-7.7
ஆரம்ப நிலுவை	மொ.உ.உ. இன் %	0.02	0.6	-3.6 (ஊ)	-4.6	-6.0
திரண்ட இறை நிலுவை	மொ.உ.உ. இன் %	-5.5	-5.3	-9.6 (ஊ)	-11.1	-12.2
மத்திய அரச படுகடன் (எ)	மொ.உ.உ. இன் %	77.9	84.2	86.9 (ஊ)	100.6	104.6
நாணயத்துறை மற்றும் பணவீக்கம்						
விரிந்த பண வளர்ச்சி (M_{2b}) (ஏ)	%	16.7	13.0	7.0	23.4	13.2
தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி (M_{2b} இல்) (ஏ)	%	14.7	15.9	4.2	6.5	13.1
ஆண்டுச் சாராசரிப் பணவீக்கம் (ஐ)	%	6.6	4.3	4.3	4.6	6.0

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உ மதிப்பீடுகளை (அடித்தள ஆண்டு 2010) அடிப்படையாகக் கொண்டது
(ஈ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2022 மார்ச்சு 29 கிடைக்கப்பெற்ற 2019 மற்றும் 2020ற்கான திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஊ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க 2019 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள்குறிப்பிடப்பட்டிருந்தன
(எ) 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைனசிற்கு முதலீடு வழங்குவதற்காக வழங்கப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01 முதிர்ச்சியானது) மற்றும் 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01 அன்று முதிர்ச்சியானதுடன் தற்போதைய வெளிநின்ற தொகை ரூ. 56,662 மில்லியனதாகும்) என்பவை உள்ளடங்கலாக
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொ.நு.வி.சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

1

1.2 2021இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள்

உண்மைத் துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்

2020இல் கொவிட்-19இனால் தூண்டப்பட்ட சுருக்கத்தைத் தொடர்ந்து, இலங்கையின் பொருளாதாரம் 2021இல் மீட்சியடைந்தது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக தேசிய கணக்கீட்டு மதிப்பீடுகளின்படி, இலங்கையின் பொருளாதாரம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில், 2021இல் 3.7 சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. ஆண்டுகாலப்பகுதியில், பொருளாதாரத்தின் அனைத்து துறைகளும் (வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி 2.0 சதவீதம், கைத்தொழில் 5.3 சதவீதம், பணிகள் 3.0 சதவீதம்) வளர்ச்சியைப் பதிவுசெய்தன. வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி துறையின் செயலாற்றமானது தானியங்கள் (அரிசி தவிர்ந்த), எண்ணெய் பசையுள்ள பழங்கள் மற்றும் தேயிலை போன்ற துணை வகைகளின் பயிர்ச்செய்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியால் மிதமடைந்திருந்த அதேவேளையில், அரிசி மற்றும் ஏனைய குடிபானப் பயிர்களின் பயிர்ச்செய்கையில் காணப்பட்ட சுருக்கமானது துறைசார் செயலாற்றத்தில் எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. கைத்தொழில் துறையினுள்

வரைபடம் 1.1
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு நடவடிக்கை வாரியான பங்களிப்பு



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

உள்ள பெரும்பாண்மையான துணை வகைகள் வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. சுத்திகரிப்பு நிலையங்கள் அவ்வவ்போது நிறுத்துப்படுவதன் காரணமாக நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளுடன் தொடர்புபட்ட தயாரிப்பு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க சீரற்றத்தன்மை காணப்பட்டதுடன் ஆண்டுகாலப்பகுதியில் இது 30.5 சதவீத சுருக்கத்தைப் பதிவுசெய்தது. பணிகள் துறையின் அனைத்து துணை வகைகளும் வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில்

அட்டவணை 1.2
நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய வருமானம் (அ)(ஆ)

பொருளாதார நடவடிக்கை	ரூ.மில்லியன்		மொ.உ.உ இன் பங்கு (%)		வளர்ச்சி (%)		வளர்ச்சிக்கான பங்களிப்பு (%)	
	2020 (இ)	2021	2020 (இ)	2021	2020 (இ)	2021	2020 (இ)	2021
வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி	**672,930**	**686,478**	**7.1**	**6.9**	**-2.2**	**2.0**	**-0.2**	**0.1**
வேளாண்மை மற்றும் காடாக்கல்	578,407	590,632	6.1	6.0	0.6	2.1	0.0	0.1
மீன்பிடி	94,522	95,845	1.0	1.0	-16.6	1.4	-0.2	0.0
கைத்தொழில்	**2,427,872**	**2,556,998**	**25.5**	**25.9**	**-6.9**	**5.3**	**-1.8**	**1.4**
சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்	202,873	208,505	2.1	2.1	-12.5	2.8	-0.3	0.1
தயாரிப்பு	1,481,325	1,587,489	15.5	16.1	-3.9	7.2	-0.6	1.1
மின்வலு, எரிவாயு, நீர் மற்றும் கழிவு கையாளல்	150,702	156,595	1.6	1.6	-0.8	3.9	0.0	0.1
கட்டடவாக்கம்	592,972	604,410	6.2	6.1	-13.2	1.9	-0.9	0.1
பணிகள்	**5,595,176**	**5,760,308**	**58.7**	**58.3**	**-1.6**	**3.0**	**-0.9**	**1.7**
மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணிகள் நடவடிக்கைகள்	2,158,494	2,187,426	22.6	22.1	-5.0	1.3	-1.2	0.3
தகவல் மற்றும் தொடர்பூட்டல்	83,444	97,636	0.9	1.0	13.7	17.0	0.1	0.1
நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட உரிமை உள்ளடங்கலான உண்மைச் சொத்து நடவடிக்கைகள்	1,470,197	1,552,626	15.4	15.7	4.7	5.6	0.7	0.9
தொழிற்தகைமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகள்	1,061,663	1,073,914	11.1	10.9	-5.9	1.2	-0.7	0.1
பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள்	821,378	848,706	8.6	8.6	2.0	3.3	0.2	0.3
அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டல்	**8,695,978**	**9,003,784**	**91.2**	**91.1**	**-3.2**	**3.5**	**-2.9**	**3.2**
மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி	836,931	877,612	8.8	8.9	-8.1	4.9	-0.7	0.4
சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	**9,532,909**	**9,881,397**	**100.0**	**100.0**	**-3.6**	**3.7**	**-3.6**	**3.7**
வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம்	-263,075	-238,607			8.3	9.3		
சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்	**9,269,834**	**9,642,790**			**-3.5**	**4.0**		

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டு) மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களம்

தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் அதிகரித்த பயன்பாட்டையும் தகவல் தொழில்நுட்ப - வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் துறையின் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டி, தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் ஆலோசனை மற்றும் தொடர்புபட்ட நடவடிக்கைகளுடன் தொலைத்தொடர்பூட்டல் துறையானது முறையே, 21.7 சதவீதம் மற்றும் 16.2 சதவீத கணிசமானளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மாணியங்களின் வீழ்ச்சியனாலும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கமைவாக, ஆண்டுகாலப்பகுதியில் விதிக்கப்பட்ட வரி வருமானங்களினால் உந்தப்பட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மானியங்களைக் கழித்த வரிகள் கூறானது 2021இல் 4.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

பெயரளவு நியதிகளில், இலங்கையின் பொருளாதாரமானது 2020இன் மந்தமான 0.2 சதவீத சிறிதளவு விரிவாக்கமொன்றுடன் ஒப்பிடுகையில், 2021இல் 11.9 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. இதற்கமைய, பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அளவு முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 81.0 பில்லியனிலிருந்து 2021இல் ஐ.அ.டொலர் 84.5 பில்லியனிற்கு விரிவடைந்திருந்தது. தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2020இன் ஐ.அ.டொலர் 3,695 இலிருந்து ஐ.அ.டொலர் 3,815 இற்கு வளர்ச்சியடைந்தது. செலவினப் பக்கத்தில், இறுதி நுகர்வுச் செலவினமானது 2020இன் 2.0 சதவீத மிதமான வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விலைகளில் 9.9 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. வீட்டுத்துறை நுகர்வுச் செலவினங்களினால் தூண்டப்பட்ட இவ்வளர்ச்சியானது முன்னைய ஆண்டின் 1.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ஆண்டுகாலப்பகுதியில் 10.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. எனினும், நடைமுறை விலைகளில் அரச நுகர்வுச் செலவினம் 2020இல் அவதானிக்கப்பட்ட 9.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2021இல் ஒப்பீட்டளவில் 3.7 சதவீத மிதமான துரிதத்தில் வளர்ச்சியடைந்தது. நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நுகர்வுச் செலவினத்தின் பங்கானது 2021இல் 79.9 சதவீதத்தில் காணப்பட்டது. அதேவேளை, 2019 மற்றும் 2020 ஆகிய காலப்பகுதிகளில் பதிவுசெய்த சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் மொத்த மூலதனவாக்கமானது 2021இல் 23.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த மூலதனவாகத்தின் பங்கானது 2021இல் 27.7 சதவீதத்திற்கு சிறிதளவில் மேம்பட்டது. ஏற்றுமதிகளின் வளர்ச்சியை விஞ்சிய இறக்குமதிகளின் வளர்ச்சியுடன் 2021இல் 31.6 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்து பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது கடுமையாக மோசமடைந்தது. தனியார் சேமிப்புக்களில் காணப்பட்ட அதிகரிப்பானது உள்நாட்டு சேமிப்பில் 20.3 குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றுக்கு இட்டுச்சென்ற அதேவேளையில், குறைந்த அரசசிறையானது அரசாங்கத்தின் சேமிப்பின்மையில் அதிகரிப்பொன்றுக்கு வழிவகுத்தது. இதற்கமைய, மொத்த உள்நாட்டு உற்பத்தியின்

அட்டவணை 1.3

நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியும் (அ)(ஆ)

விடயம்	ரூ.பில்லியன்		வளர்ச்சி (%)		மொ.உ.உ இன் சதவீதமாக (%)	
	2020 (இ)	2021	2020 (இ)	2021	2020 (இ)	2021
1. உள்நாட்டு கேள்வி	**15,993.3**	**18,081.0**	**0.5**	**13.1**	**106.4**	**107.6**
1.1 நுகர்வு	12,214.3	13,425.2	2.0	9.9	81.3	79.9
தனியார்	10,662.0	11,814.9	1.0	10.8	71.0	70.3
பொது	1,552.3	1,610.3	9.9	3.7	10.3	9.6
1.2 முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்)	3,779.1	4,655.8	-4.2	23.2	25.1	27.7
2. தேறிய வெளிநாட்டு கேள்வி	**-966.0**	**-1,271.7**	**-5.1**	**-31.6**	**-6.4**	**-7.6**
பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி	2,418.5	2,981.6	-30.3	23.3	16.1	17.7
பொருட்களினதும் பணிகளினதும இறக்குமதி	3,384.5	4,253.3	-22.9	25.7	22.5	25.3
3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1+2)	**15,027.4**	**16,809.3**	**0.2**	**11.9**	**100.0**	**100.0**
4. உள்நாட்டு சேமிப்புகள் (3-1.1)	**2,813.1**	**3,384.2**	**-7.0**	**20.3**	**18.7**	**20.1**
தனியார்	3,993.5	4,674.6	12.2	17.1	26.6	27.8
பொது	-1,180.4	-1,290.4	-121.2	-9.3	-7.9	-7.7
5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம்	**-423.1**	**-406.6**	**4.2**	**3.9**	**-2.8**	**-2.4**
6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ)	**1,150.8**	**1,030.3**	**11.7**	**-10.5**	**7.7**	**6.1**
7. தேசிய சேமிப்புக்கள் (4+5+6)	**3,540.8**	**4,007.9**	**-2.1**	**13.2**	**23.6**	**23.8**
8. சேமிப்பு - முதலீட்டு இடைவெளி						
உள்நாட்டு சேமிப்பு - முதலீடு (4-1.2)	-966.0	-1,271.7			-6.4	-7.6
தேசிய சேமிப்பு - முதலீடு (7-1.2)	-238.2	-648.0			-1.6	-3.9
9. வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை (2+5+6) (ஈ)	**-238.2**	**-648.0**			**-1.6**	**-3.9**

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டு) மொ.உ.உ மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

1

சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2020இன் 18.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 20.1 சதவீதமாக காணப்பட்டது. உள்நாட்டு சேமிப்பு முதலீட்டு இடைவெளியானது 2020இன் -6.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் -7.6 சதவீத்திற்கு விரிவடைந்தது. தேசிய சேமிப்பு- முதலீட்டு இடைவெளியானது முதலீட்டு செலவினத்தின் வளர்ச்சியினால் உந்தப்பட்டு 2020இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் -1.6 சதவீதத்திலிருந்து 2021இல் மொ.உ.உ.இன் -3.9 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

பொருளாதாரத்தின் நிலையான மீட்சியானது தொழிலின்மை வீதத்தில் வீழ்ச்சிக்கு வழிவகுத்த அதேவேளையில், ஆண்டுகாலப்பகுதியில் தொழிற்படை மற்றும் தொழில்புரியாத குடித்தொகை ஆகிய இரண்டினதும் அதிகரிப்பு தொழிற்படை பங்கேற்பு வீதத்தில் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 5.5 சதவீதத்திலிருந்து 2021இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்கள் மற்றும் பெண்களிடையேயான தொழிலின்மை வீதங்களும் இதைப்பின்பற்றி, 2020இன் முறையே 4.0 சதவீதம் மற்றும் 8.5 சதவீதத்திலிருந்து 2021இல் முறையே 3.7 சதவீதம் மற்றும் 7.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. இதற்கிடையில், தொழிலில் ஈடுபடுவதில் ஆர்வம் குறைவடைந்ததுடனும் உலகளாவிய நோய்த்தொற்றினால் வழமையான நடைமுறைகளில் ஏற்பட்ட இன்னல்களுடனும் பொருளாதார ரீதியில் தொழில்புரியாத குடித்தொகையானது 2020உடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.7 சதவீதத்தினால் 8.6 மில்லியனிற்கு அதிகரித்தது. இந்த அபிவிருத்தியுடன் தொழிற்படையில் 1.0 சதவீத சிறிதளவு அதிகரிப்புடன், இது 2020இல் 50.6 சதவீதத்திலிருந்து 2021இல் 49.9 சதவீதத்திற்கு ஒட்டுமொத்த தொழிற்படை பங்கேற்பு வீதத்தில் வீழ்ச்சியை விளைவித்தது. ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரினது தொழிற்படை பங்கேற்பு வீதங்கள் 2020இன் முறையே 71.9 சதவீதம் மற்றும் 32.0 சதவீதத்திலிருந்து 2021இல் முறையே 71.0 சதவீதம் மற்றும் 31.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. மொத்த தொழில்நிலையில் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணித் துறைகள் முறையே 27.3 சதவீதம், 26.0 சதவீதம் அத்துடன் 46.7 சதவீதத்திற்கு வகைகூறின.

2021இல் முதன்மைப் பணவீக்கமானது பிரதானமாக உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிரம்பல் பக்க இடையூறுகள், உலகளாவிய பண்ட விலைகளின் அதிகரிப்பு அத்துடன் நிருவகிக்கப்பட்ட விலைகளுக்கான மேல்நோக்கிய திருத்தங்கள் என்பனவற்றினால் உந்தப்பட்டு விரிவடைந்த அதேவேளை, கணிசமான நாணயத் தளர்த்தலின் காலங்கடந்த விளைவை பிரதிபலிக்கும் வகையில் மையப் பணவீக்கமும் விரிவடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு, 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு 2013 = 100) ஆகிய இரண்டின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, உணவுப் பணவீக்கம் அதிகளவான பங்கை வகைகூறிய போதிலும், முதன்மைப் பணவீக்கத்தின் விரிவடைதலுக்கு உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கம் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட விரிவடைதல் காரணமாக காணப்பட்டது. பணவீக்கத்தில் ஏற்பட்ட இத்தகைய உயர்விற்கு, பன்னாட்டுச் சந்தையில் விலை உயர்வை பிரதிபலித்து வலு விலைகள் மற்றும் ஏனைய நிருவாக விலைகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேல்நோக்கிய திருத்தங்கள் அதேபோன்று உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நிரம்பல் பக்க இடையூறுகள் மற்றும் குறித்தப் பொருட்களின் உற்பத்தி இழப்பு ஆகியவற்றிலிருந்தான தளம்பலடையும் உணவு விலைகள் பெரும்பாலும் பங்களித்தன. உயர்ந்தபட்ச சில்லறை விலைகளின் நீக்கம் போன்ற வெளிவாரி அதிர்வு உள்ளீர்த்தல் முறைகளுடன் மேற்குறிப்பிடப்பட்ட திருத்தங்களின் கசிவுத்தாக்கமும் பணவீக்க உயர்விற்கு பகுதியளவில் பங்களித்தது. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 4-6 சதவீத இலக்கிடப்பட்ட மட்டத்தை மீறுகின்ற விதத்தில், 2020இன் இறுதியில் 4.2

வரைபடம் 1.2
சேமிப்பு, முதலீடு மற்றும் சேமிப்பு - முதலீடு இடைவெளி
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.3
தொழிலின்மை வீதம்



(அ) 2021இன் நான்கு காலாண்டுகளின் சராசரி
மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

சதவீதத்தை பதிவுசெய்து 2021 இறுதியில் 12.1 சதவீதத்திற்கு விரிவடைந்தது. இப்போக்கைப் பின்பற்றி, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமும் விரிவடைந்ததுடன் 2020இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியளவில் 14.0 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது. 2022ஆம் ஆண்டு வரையில் முதன்மைப் பணவீக்கத்தின் மேல்நோக்கியத் திருத்தம் தொடர்ந்தது. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2022 மார்ச்சில் 18.7 சதவீதத்திற்கு விரிவடைந்த அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் 2022 மார்ச்சில் 21.5 சதவீதத்திற்கு விரிவடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட குறித்த நாணயத் தளர்த்தலின் காலங்கடந்த விளைவுகளின் தாக்கத்தினால் தூண்டப்பட்ட கேள்வித் தூண்டல் சார்ந்த பணவீக்க அழுத்தங்களைப் பிரதிபலித்து, அடிப்படை கேள்வி அழுத்தத்தை அளவிடுகின்ற மையப் பணவீக்கமும் 2021இன் நடுப்பகுதியிலிருந்து சடுதியாக விரிவடைந்தது. இதன்படி, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2020இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.5 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 8.3 சதவீதத்திற்கு விரைவடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2020இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 10.8 சதவீதத்திற்கு விரிவடைந்தது. மேலும், இதே போக்கைத் தொடர்ந்து, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2022 மார்ச்சில் 13.0 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்ட அதேவேளை தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2022 மார்ச்சில் 17.3 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. பணவீக்க வீதங்களை விரைவாக

வரைபடம் 1.4
முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)



மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

இலக்கிடப்பட்ட எல்லையை நோக்கி திருப்புவதற்கு ஆதரவளிக்கும் வகையில், மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வலுவான முன்னேற்பாட்டு கொள்கை வழிமுறைகள் கேள்வித் தூண்டல் சார்ந்த பணவீக்க அழுத்தங்கள் மற்றும் பாதகமான பணவீக்க எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை மேலும் உருவாக்குவதை தடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

இலங்கையின் வெளிநாட்டுத் துறை நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் சடுதியான விரிவாக்கம், நிதியியல் கணக்கிற்கான மட்டுப்படுத்தப்பட்ட உட்பாய்ச்சல்கள், பாரியளவிலான தீர்ப்பனவுத் தேவைப்பாடுகளின் விளைவொன்றாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் குறைவடைதல் மற்றும் இலங்கை ரூபாவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க தேய்மானம் என்பன உள்ளடங்கலாக பல்வேறு சவால்களைத் தொடர்ந்தும் எதிர்கொள்கிறது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க உத்வேகமொன்று காணப்பட்ட போதிலும் வணிகப்பொருள் இறக்குமதிகள் ஏற்றுமதிகளின் இவ்வளர்ச்சியினை விஞ்சி உயர்ந்தளவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்து 2021இல் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில், எரிபொருள் விலைகள் உள்ளடங்கலான பிரதானமாக உயர்ந்த பண்ட விலைகளினால் உந்தப்பட்டதுடன் பொருளாதார நடவடிக்கை வழமைக்குத் திரும்பியதனால் இறக்குமதிசெய்யும் பண்டங்களுக்கான அதிகரித்த கேள்வி, தடுப்பூசிகள் போன்ற மருந்துகள் மற்றும் மருந்தாக்கற் பொருட்களின் அதிகரித்து இறக்குமதிசெய்தல் மற்றும் அத்தியாவசியமில்லாத பொருட்களின் இறக்குமதி மீதான சில தடைகளின் தளர்த்தல் போன்றவையுடன் இறக்குமதிகளில் சடுதியான மீட்சியின் இணைந்த தாக்கம் என்பது இறக்குமதிச் செலவினத்திற்கு முக்கிய காரணமாயமைந்தது. உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னரான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பணிகள் துறை மிகையானது தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது. எனினும், ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களில் படிப்படியான அதிகரிப்பொன்று காணப்பட்ட வேளையில் கணனிப் பணிகள் துறை ஏற்றுமதிகளில் ஆரோக்கியமானதொரு வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது. முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையானது வட்டி மற்றும் நறுக்குக் கொடுப்பனவுகள் அதேபோன்று பங்கிலாபக் கொடுப்பனவுகள் என்பவற்றில் குறைப்புடன் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகை வங்கித்தொழில் முறைமையினால் பெறப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்கதொரு சுருக்கத்தின் விளைவாகக் குறைவடைந்தது. இவ்வபிவிருத்திகளுடன் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2020இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1.2 பில்லியனுடன்

1

வரைபடம் 1.5
சென்மதி நிலுவை



மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஒப்பிடுகையில் 2021இல் ஐ.அ.டொலர் 3.3 பில்லியனிற்குக் (மொ.உ.உற்பத்தியின் 4.0 சதவீதம்) குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் நிதியிடலானது நிதியியல் கணக்கிற்கான மிதமடைந்த உட்பாய்ச்சல்கள் மற்றும் தொடர்ச்சியான படுகடன் பணிக் கொடுப்பனவுகள் என்பவற்றுக்கு மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் குறைவடையச் செய்வதன் மூலம் அடையப்பெற்றது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வடிவிலான வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்ட வேளையில் பங்குச் சந்தைக்கும் அரச பிணையங்கள் சந்தைக்குமான வெளிநாட்டு முதலீடுகள் ஆண்டு காலப்பகுதியில் மிதமான தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தமைக்கு மத்தியிலும் அரசாங்கமும் மத்திய வங்கியும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை ஓரளவிற்கு மீள்நிரப்புவதனை இயலுமைப்படுத்துகின்ற சில உட்பாய்ச்சல்களைப் பெற்றன. இவை பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு, சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்தான இரு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதி மற்றும் சீன மக்கள் வங்கி மற்றும் வங்காளதேஷ வங்கியுடனான பன்னாட்டு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கின. எனினும், படுகடன் பணிக் கொடுப்பனவுகள் அதேபோன்று அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணியின் வழங்கல் என்பவற்றின் காரணமாக அலுவல்சார் ஒதுக்குகளிலிருந்தான கணிசமான வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2020 இறுதியில் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 5.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியளவில் ஐ.அ.டொலர் 3.1 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2021இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4.0 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் வீழ்ச்சி மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் விளைவாக அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது போதிலும் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. மேலும், மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்கு புதிய பன்னாட்டு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகள் காரணமாயமைந்தன. இதன் விளைவாக, இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2020 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 49.0 பில்லியனிலிருந்து 2021 இறுதியிளவில் ஐ.அ.டொலர் 50.7 பில்லியனிற்கு அதிகரித்தது. பல்வேறு சவால்களை எதிர்கொள்ளல், நாட்டிற்கான கடன் செலுத்தத் தவறுகைகளின் சாத்தியமானதொரு ஊகம் மற்றும் தொடர்ச்சியான நாட்டிற்கான கொடுகடன் தரமிடல் குறைப்புக்கள் என்பவற்றிற்கு மத்தியிலும் இலங்கை அதன் வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகளைத் தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்து 2021 யூலையில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1 பில்லியன் மற்றும் 2022 சனவரியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வெற்றிகரமாகத் தீர்ப்பனவு செய்தது. இலங்கை ரூபா 2021 மற்றும் 2022இன் முன்னைய காலப்பகுதியில் நிலையான மட்டங்களில் பரந்தளவில் பேணப்பட்டு ஏறத்தாழ ரூபா 200 மட்டங்களில் நாணயத்தினை நிலையாகப் பேணுவதற்கான தார்மீகப் பொறுப்பினால் பகுதியளவில் உதவியளிக்கப்பட்டது. எனினும், வெளிநாட்டு அதிர்வுகளின் தீவிரத்தன்மை மற்றும் உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பக்கங்களில் மேலும் பாதகமான அபிவிருத்திகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு வெளிநாட்டுத் துறை எதிர்கொள்கின்ற தற்போதைய இடர்பாடான சூழ்நிலையினைத் தணிப்பதற்கு அறிவிக்கப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய கொள்கைத் தொகுப்பின் பகுதியாக மத்திய

வரைபடம் 1.6
செலாவணி வீதமும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடும்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வங்கி 2022 மாச்சின் முன்னைய பகுதியிலிருந்து செலாவணி வீதத்தில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்தது. இருப்பினும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட அதிகமான அழுத்தங்கள் இலங்கை ரூபாயில் ஓர் பாரிய மேல்பாய்வினை விளைவித்தது. இதன் விளைவாக, 2021இல் 7.0 சதவீதத்தினால் தேய்வடைந்திருந்த இலங்கையின் ரூபா 2022 மாச்சு இறுதியளவில் 33.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்தது. அரசாங்கமும் மத்திய வங்கியும் வெளிநாட்டுத்துறைப் பாதிப்படையக்கூடிய தன்மையினைத் தீர்ப்பதற்கான அவசர வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையினையும் அத்தகைய வழிமுறைகள் பொருளாதாரத்தில் தொடர்ச்சியான மற்றும் நீடித்திருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதனை நோக்காகக்கொண்டு விரிவான பொருளாதார மறுசீரமைப்புக்களுடன் முழுமை பெறச்செய்தல் வேண்டும் என்பதனையும் அடையாளம் கண்டுள்ளது. பல பிராந்திய நாடுகளும் நிறுவனங்களும் பல்வேறு கொடுகடன் வசதிகள், பன்னாட்டுப் பரஸ்பர வசதிகள், கூட்டுக்கடன்கள் மற்றும் கணிசமான நடைமுறை மற்றும் மூலதனக் கொடைகள் என்பவற்றினால் நாட்டிற்கு உதவிசெய்துள்ள வேளையில் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீள்கட்டியெழுப்புவதற்காக நாட்டின் வெளிநாட்டுப் படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பன்னாட்டு நாணய நிதியத்துடனும் ஏனைய வெளிநாட்டு ஆர்வலர்களுடனும் மிகவும் பரந்தளவிலான ஏற்பாடொன்றினை நாடு எதிர்பார்த்து நிற்கின்றது.

இறைத் துறை அபிவிருத்திகள்

பல ஆண்டுகளாகக் காணப்பட்ட அரச செலவின எல்லை மீறல்கள் மற்றும் அரசிறை நலுவல்கள் என்பவற்றினால் ஏற்பட்ட நீண்டகால உயர் கட்டமைப்பு ரீதியிலான வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைகளினால் பாதிப்படைந்துள்ள இறைத்துறைச் செயலாற்றமானது 2021இல் மோசமடைந்து, அரச படுகடன் இருப்பை மேலும் உயர்வடையச்செய்தது. 2021 வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட இறைத் தந்திரோபாயங்கள் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதனை நோக்காகக்கொண்டுள்ள வேளையில், பொருளாதார மீட்சி மற்றும் வறுமை ஒழிப்பு என்பவற்றினை மேம்படுத்திய போதிலும், சூழலுக்குகந்த இறைக்கொள்கைகளினால் போதியளவு ஆதரவளிக்கப்படாமையினால் முக்கியமாக அரசிறை வருவாய்களுடன் தொடர்புடைய விஞ்சியளவிலான நம்பிக்கைதருகின்ற இறை இலக்குகளைக் கொண்டிருந்தமையின் விளைவாக 2021 காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட இறைப் பெறுபேறுகள் அடையப்பெறாது விடப்பட்டன. அரசிறை வருவாய்கள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 9.1 சதவீதத்திற்கு எதிராக 2021இல் மொ.உ.உற்பத்தியின் 8.7 சதவீதம் கொண்ட வரலாற்றில் தாழ்ந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தன. உண்மையான அரசிறைச் சேகரிப்பு மொ.உ.உற்பத்தியின்

வரைபடம் 1.7
இறைத்துறை செயலாற்றத்தின் திரட்டு
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)



மூலம்: நிதி அமைச்சு

11.1 சதவீத மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு விலகியிருந்தமையானது எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார மீட்சியினைப் பார்க்க மெதுவடைந்த அதேபோன்று தொடர்ச்சியான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பவற்றினால் 2019இற்குப் பின்னைய மற்றும் 2020இற்கு முன்னைய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட வரித் தளர்வுகளின் விளைவாக ஏற்பட்ட அரசிறைப் பாய்ச்சல்களின் இழப்பிற்குக் காரணமாயமைந்தது. எனினும், பெயரளவு நியதிகளில், அரசிறை வருவாய்கள் 6.5 சதவீத மிதமான வளர்ச்சியொன்றினை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பதிவுசெய்தது. வருமான வரிகள், பெறுமதிசேர் வரி, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை மற்றும் செஸ் தீர்வை என்பன அரசிறை வருவாய்களின் பெயரளவு வளர்ச்சிக்குப் பங்களித்த போதிலும், இறக்குமதித் தீர்வை, கலால் தீர்வை மற்றும் விசேட பண்ட தீர்வை என்பனவூடாகத் திரட்டப்பட்ட வருவாய்கள் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக முதன்மையாக வீழ்ச்சியடைந்தன. அரசிறை வருவாய்களின் வளர்ச்சி வீதம் கடந்த காலங்களைப் போலவே 2021இல் வருமான வளர்ச்சி வீதத்தின் வேகத்தைத் தக்கவைத்துக்கொள்ளத் தவறியமைக்கு 2019இன் பின்னைய பகுதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட மிகை வரி ஊக்குவிப்புக்களின் தொடர்ச்சி மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்திலிருந்தும் 2021 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழும் அறிமுகப்படுத்தப்பட்ட மேலதிக நேரடியான மற்றும் மறைமுகமான வரிச் சலுகை மறுசீரமைப்புக்கள் என்பன முக்கிய காரணமாயமைந்தன. மறுபுறம், பெயரளவு நியதிகளிலான செலவினம் 2021இல் ரூ. 3,521.7 பில்லியனிற்கு 15.8 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தது. இதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச செலவினம் 2020இல் 20.2 சதவீதத்திலிருந்து 2021இல் 21.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிச் செலவினங்கள் மீதான

1

சிறப்புக்குறிப்பு 1

பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியத்துவம்

பின்னணி

பன்னாட்டு நாணய நிதியமானது உலகளாவிய நாணய ஒத்துழைப்பை உருவாக்குவதற்கும், நிதியியல் உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கும்,பன்னாட்டுவர்த்தகத்தை வசதிப்படுத்துவதற்கும் உயர் தொழில்வாய்ப்பையும் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவிப்பதற்கும் அத்துடன் உலகளவில் வறுமையை குறைப்பதற்கும் 1944ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட அமைப்பொன்றாகும். சென்மதி நிலுவை பிரச்சனைகளை அனுபவிக்கும் உறுப்பு நாடுகளில் அடிப்படை பிரச்சனைகளை சரிசெய்யும் அதேவேளை பன்னாட்டு ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்புவதற்கும், நாணயங்களை உறுதிநிலைப்படுத்துவதற்கும், இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும் அத்துடன் பொருளாதார வளர்ச்சியை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்கும் பொருட்டு பன்னாட்டு நாணய நிதியமானது வழக்கமாக அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கடன்களை வழங்குகிறது. பன்னாட்டு நாணய நிதியத்தின் அனைத்து உறுப்பினர்களும் பொது வளங்கள் கணக்குகளில் (General Resource Account) உள்ள பன்னாட்டு நாணய நிதியத்தின் வளங்களை சலுகையற்ற நியதிகளில் அணுகுவதற்கு தகுதியுடையவர்களாவர் என்பதுடன் பன்னாட்டு நாணய நிதியமானது வறுமை குறைப்பு மற்றும் வளர்ச்சி நம்பிக்கையின் (Poverty Reduction and Growth Trust) மூலமாக சலுகைரீதியிலான நிதியியல் ஆதரவையும் வழங்குகிறது. இது குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற நாடுகளின் பன்முகத்தன்மைக்கும் தேவைகளுக்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற வளர்ந்துவரும் மற்றும் முன்னேற்றங்கண்ட சந்தை பொருளாதாரங்களுக்கு குறுகிய கால அல்லது சாத்தியமான சென்மதி நிலுவை பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் வகையில் துணைநில் உடன்படிக்கைகளின் (Stand-By Arrangements) மூலமாக பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவி வழங்கப்படுகிறது. துணைநில் கொடுகடன் வசதியானது (Stand-By Credit Facility) குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற நாடுகளுக்கு இதேபோன்ற நோக்கத்தை வழங்குகிறது. குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற நாடுகளுக்கான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி (Extended Fund Facility) மற்றும் தொடர்புடைய விரிவாக்கப்பட்ட கொடுகடன் வசதி (நுஒவநனெந ஊசநனவை குயஉடைவைல) என்பன நீண்டகால சென்மதி நிலுவை பிரச்சனைகளை எதிர்கொள்கின்ற நாடுகளுக்கு நடுத்தரகால ஆதரவு வழங்குவதை இலக்காகக் கொண்ட முக்கிய வசதிகளாகும். நெருக்கடிகளை தடுப்பதற்கும் அல்லது தணிப்பதற்கும் அத்துடன் சந்தை நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் ஏற்கனவே வலுவான கொள்கைகளை கொண்டுள்ள உறுப்பினர்கள் நெகிழ்வான கொடுகடன் தொடர் (Flexible Credit Line) அல்லது முன்னெச்சரிக்கை மற்றும் திரவத்தன்மைத் தொடரைப் (Precautionary and Liquidity Line) பயன்படுத்தலாம். குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற நாடுகளுக்காக துரித நிதியிடல் சாதனமும் (Rapid Financing Instrument) தொடர்புடைய துரித கொடுகடன் வசதியும் (Rapid Credit Facility) பண்ட விலை அதிர்வுகள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் உள்நாட்டு சீர்குலைவுகளினால் ஏற்பட்ட இடர்பாடுகளை உள்ளடக்கிய அவசர சென்மதி நிலுவை தேவைப்பாடுகளுடன் நாடுகளுக்கு துரித உதவியை வழங்கின. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிதியளித்தல் ஏற்பாடொன்றின் கீழ் காணப்படும் குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் நிபந்தனைகள் போன்றன நாட்டின் குறித்த பொருளாதார சூழ்நிலைகளை சார்ந்திருக்கின்றன.

நிகழ்ச்சித்திட்டமொன்றிற்காக பன்னாட்டு நாணய நிதியத்தை அணுகுவது தொடர்பாக அடிக்கடி எழுப்பப்படும் முக்கிய கரிசனையானது இதனுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகளாகும். பொதுவாக, பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ள நிபந்தனைகள் முக்கிய பேரண்டப்பொருளாதார மற்றும் அமைப்பியல் கொள்கை சீராக்கங்களை உள்ளடக்குகின்றன. 1980களின் முற்பகுதி வரையில், இத்தகைய நிபந்தனைகள் பெருமளவிலான பேரண்டப்பொருளாதார கொள்கைகள் மீது கவனம்செலுத்தியிருந்த போதிலும், குறைந்த வருமானத்தை ஈட்டுகின்றதும் இடைநிலை நாடுகளில் பன்னாட்டு நாணய நிதியத்தின் மேம்பட்ட ஈடுபாட்டை பிரதிபலித்து, அமைப்பியல் நிலைமைகளின் சிக்கலும் நோக்கெல்லையும் பின்னர் அதிகரிக்கப்பட்டன. இத்தகைய நிபந்தனைகள் இப்பிரச்சனைகளின் தொடர்ச்சியான நிகழ்வுகளைத் தவிர்க்கின்ற அதேவேளை சென்மதி நிலுவை பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நாடுகளுக்கு உதவுவதை நோக்கமாகக்கொண்டுள்ளன. மேலும், நாட்டின் சென்மதி நிலுவையானது இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் வெளிநாட்டுப் படுகடனை நிலையான முறையொன்றில் செலுத்துவதற்கும் போதியளவு வலுவானதாக இருக்கின்றன என்பதை உறுதிசெய்வதை நிவாரண வழிமுறைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

நாட்டு அதிகாரசபைகளுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை உறுதிப்பாடுகள் பொதுவாக பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

முன்கூட்டிய நடவடிக்கைகள் (Prior Actions): பன்னாட்டு நாணய நிதியமானது நிகழ்ச்சித்திட்டமொன்றின் கீழ் நிதியுதவிக்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்னர் நாடு முன்னெடுப்பதற்கு உடன்படுகின்ற நடவடிக்கைகளாக இவை காணப்படுகின்றன. நாடானது வெற்றிகரமாக நிகழ்ச்சித்திட்ட இலக்குகளை அடைவதற்கான தேவையான அடித்தளத்தைக் கொண்டுள்ளது என்பதை உறுதிசெய்வதற்காக இத்தகைய நடவடிக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. முன்கூட்டிய நடவடிக்கைகள் பொதுவாக விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல் (ஏதேனும் இருப்பின்), நடுத்தர கால இறைக் கட்டமைப்பிற்கு ஏற்ப அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் கடன் உறுதிப்பாட்டினை அடைவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

கணியம் சார் செயலாற்ற பிரமாணம் (Quantitative Performance Criteria): இவை நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்கள், பன்னாட்டு ஒதுக்குகள், இறை நிலுவைகள் அத்துடன் வெளிநாட்டு கடன்பாடுகள் போன்ற அதிகாரசபைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பேரண்டப்பொருளாதார மாறிகள் தொடர்பான குறித்த அளவிடக்கூடிய நிபந்தனைகளாக விளங்குகின்றன. கணியம் சார் செயலாற்ற பிரமாணம்

பொதுவாக அரச முதலாந்தர நிலுவையின் குறைந்தபட்ச மட்டம், அரசின் கடன்கள் மீதான உச்சவரம்பு மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளின் குறைந்தபட்ச மட்டம் ஆகியவற்றை உள்ளடக்கலாம்.

குறிகாட்டி இலக்குகள் (Indicative Targets): நிகழ்ச்சித்திட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான கணியம் சார் குறிகாட்டிகளுக்காக இக் குறிகாட்டி இலக்குகள் அமைக்கப்படலாம். பொருளாதார போக்குகளின் நிச்சயமற்றத்தன்மை காரணமாக கணியம் சார் செயலாற்ற பிரமாணத்திற்கு பதிலாக குறிகாட்டி இலக்குகள் சில சந்தர்ப்பங்களில் அமைக்கப்படுகின்றன. நிச்சயமற்ற தன்மை குறைக்கப்படுவதால், இந்த இலக்குகள் பொருத்தமான மாற்றங்களுடன் கணியம் சார் செயலாற்ற பிரமாணமாக மாற்றமடையலாம். குறிகாட்டி இலக்குகள் பொதுவாக அரச முதலாந்தர நிலுவையின் குறைந்தபட்ச மட்டம், உள்நாட்டு அரசிறை சேகரிப்பின் குறைந்தபட்ச மட்டம் மற்றும் சமூக உதவி செலவினத்தின் குறைந்தபட்ச மட்டம் ஆகியவற்றை உள்ளடக்கலாம்.

அமைப்பியல் ரீதியிலான அளவிடல்கள் (Structural Benchmarks): இவை சீர்திருத்த வழிமுறைகளாக காணப்படுகின்ற இவ் அளவிடல்கள் பெரும்பாலும் அளவிட முடியாதவையாக இருக்கும். இருப்பினும் இவை திட்ட இலக்குகளை அடைவதற்கு பிரதானமானவையாக கருதப்படுகின்றன. அமைப்பியல் ரீதியிலான அளவிடல்கள் பொதுவாக நிதியியல் துறை தொழிற்பாடுகளில் மேம்பாடுகள், சமூக பாதுகாப்பு வலையமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பொது நிதியியல் முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கலாம்.

நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் வாயிலாக பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றி

பன்னாட்டு நாணய நிதியமானது அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றத்தை காலத்திற்குகாலம் மீளாய்வு செய்கிறது. கணியம் சார் செயலாற்ற பிரமாணம், குறிகாட்டி இலக்குகள் போன்றவற்றை நிறைவேற்றுவதில் நிதியங்களின் பகிர்ந்தளிப்புகள் நிபந்தனைக்குட்படுகின்ற வகையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்படுகிறது. நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியை மேம்படுத்தி இடர்நேர்வுகளை குறைக்கும் பொருட்டு, பன்னாட்டு நாணய நிதியமானது எறிவுகளின் நடைமுறைத்தன்மையை மேம்படுத்துவதற்கும், படுகடன் உறுதிப்பாட்டு பகுப்பாய்வை விருத்திசெய்வதற்கும், இறைத்திரட்சியின் தரத்தை உயர்த்துவதற்கும் அத்துடன் அமைப்பியல் நிலைமைகளின் திருத்தத்தை மேம்படுத்துவதற்கும் வழிமுறைகளை விதந்துரைக்கிறது. பன்னாட்டு நாணய நிதியத்தினால் வழங்கப்படும் தொடர்புடைய துரித கொடுகடன் வசதி மற்றும் துரித நிதியிடல் சாதனம் போன்ற வசதிகளுக்கு வரையறுக்கப்பட்ட ஒட்டுமொத்த நிபந்தனைகளைத் தவிர, உண்மையான மதிப்பீட்டு திட்டம் அடிப்படையிலான நிபந்தனைகளோ அல்லது மீளாய்வுகளோ காணப்படுவதில்லை. ஒரு நாடு கணியம் சார் செயலாற்ற பிரமாணத்தை நிறைவேற்றத் தவறுமாயின், பன்னாட்டு நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவானது அந்நிகழ்ச்சித்திட்டம் இன்னும் வெற்றிபெறும் என்ற திருப்தி ஏற்படும்பட்சத்திலும், விலகலானது சிறியதாக.்தற்காலிகமானது இருக்கும்பட்சத்திலும் அல்லது தேசிய அதிகார சபைகள் திருத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பட்சத்திலும் தள்ளுபடி வழங்குவதற்கு அனுமதியளிக்கலாம். தவறவிட்ட அமைப்பியல் அளவிடல்கள் மற்றும் குறிகாட்டி இலக்குகளுக்கு தள்ளுபடிகள் தேவைப்படுவதில்லை என்றபோதிலும் ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்ட செயலாற்றத்தின் பின்னணியில் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

இலங்கைக்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்கும் இடையிலான தொடர்பின் வரலாறு

1950இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்புரிமையைப் பெற்றதிலிருந்து இலங்கையானது பதினாறு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. 1965இல் இலங்கையின் முதல் பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றதுடன் இறுதி நிகழ்ச்சித்திட்டம் 2016இல் இடம்பெற்றது. 2009இல் ஆரம்பிக்கப்பட்ட துணைநில் ஏற்பாடானது மிகவும் வெற்றிகரமான பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டமாக காணப்பட்டதுடன் இதில் பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கான நிதியங்களின் முழு ஒதுக்கீட்டையும் பகிர்ந்தளித்தது. முன்னைய பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதானமாக வெளிநாட்டு ஒதுக்குகளை மேம்படுத்துதல் மற்றும் நாணயக் கொள்கையை மேற்கொள்ளுதல் தொடர்பில் கவனம்செலுத்தின. இதற்கு மேலதிகமாக, எரிபொருள் விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்துதல், மத்திய வங்கி சுயாதீனமாக செயற்படுவதை மேம்படுத்துதல், நெகிழ்வான செலாவணி வீதக் கொள்கை மற்றும் அரசிறை அடிப்படையிலான இறைத்திரட்சி உள்ளிட்ட முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் வலியுறுத்தப்பட்டது. இலங்கைத் தொடர்பில், பன்னாட்டு நாணய நிதியத்துடனான அலுவல்சார் நடவடிக்கைகளுக்காக, கௌரவ. நிதியமைச்சர் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுநரின் இயலாற்றலைக் கொண்டுள்ளதுடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்று ஆளுநரின் இயலாற்றலைக் கொண்டுள்ளார்.

மேலும், பன்னாட்டு நாணய நிதியமானது எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமை மாதிரி உள்ளடங்கலாக பல தொழில்நுட்ப ரீதியிலான உதவி வாய்ப்புக்களை மத்திய வங்கிக்கும் அரசாங்கத்திற்கும் விரிவுபடுத்தியுள்ளது. இம்முறைமையானது நெகிழ்வான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கு மாற்றுவதன் வாயிலாக மத்திய வங்கியின் தொழில்நுட்ப இயலாற்றலை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களின் ஒட்டுமொத்த வெற்றி

1965இலிருந்து இலங்கை பல நிகழ்ச்சித்திட்டங்களின் பங்காளராக இருந்தபோதிலும், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சில பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே அதிகாரிகளினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் காணப்பட்ட ஈடுபாடின்மையே இதற்கு காரணமாக அமைகின்றது. குறிப்பாக, இவை பொருளாதாரத்தில் நீண்ட கால உற்பத்தித்திறன்

1

தொடர்பான மேம்பாடுகளை இலக்காகக்கொண்ட கடினமான பேரண்டப்பொருளாதார சீராக்கங்களையும் பிரபல்யமற்ற கொள்கைளையும் தேவைப்படுத்திய அமைப்பியல் சீர்திருத்தங்களுடன் தொடர்புபட்டனவாகக் காணப்பட்டன. குறிப்பிடத்தக்க வகையில், அமைப்பியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு நாடு என்ற வகையில் முன்னெடுப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தவறியதன் விளைவாக வெளிநாட்டு உதவியை நாட வேண்டிய தேவை ஏற்பட்டதுடன் இவை பெரும்பாலும் பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் சேர்க்கப்படுகின்றன. முன்னைய பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களில் குறுகிய கால குறிக்கோள்களை நிறைவேற்றிய அதேவேளையில், நிதியிடல் வசதிகளின் கீழ் சில பகிர்ந்தளிப்புகளை எடுப்பனவு செய்த பின்னர் அடையாளங்காணப்பட்ட பெரும்பாலான சீர்த்திருத்தங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட வில்லை அல்லது தீடிரென கைவிடப்படன. இது அட்டவணை சி.கு. 1.1இல் தரப்பட்டுள்ளுதன்படி, பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் சுழற்சிக்கு அடிக்கடி வழிவகுத்தது. இதற்கு மாறாக, 1951 தொடக்கம் 1993 வரையான காலப்பகுதியில் இந்தியா பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து ஏழு நிகழ்ச்சித்திட்டங்களை பெற்றபோதிலும் 1993இல் மேற்கொள்ளப்பட்ட அதன் இறுதி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பன்னாட்டு நாணய நிதியத்தை அணுகவில்லை. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டமொன்று வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டிருக்குமாயின், குறிப்பாக அமைப்பியல் சீராக்கத்தின் மூலமாக பொருளாதாரம் நீண்ட கால பலன்களை அடைந்துகொள்ள கூடியதாக இருக்கும் என்பதுடன் குறுகிய கால பொருளாதார அழுத்தங்களின் எதிர்கால நிகழ்வுகள் தொடர்பில் பன்னாட்டு நாணய நிதியத்தை அணுக வேண்டிய அவசியம் குறைவாக இருந்திருக்கும். நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் இலங்கைக்கு 2009 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் நீடிக்கப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் அண்மைய திட்டங்களின் வெற்றியின் தொகுப்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

2009இல் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய - துணைநில் ஏற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

துணைநில் ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எட்டாவதும் இறுதியுமான மீளாய்விற்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் அறிக்கையின்படி, நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்குகள், தேறிய உள்நாட்டு நிதியிடல் மற்றும் ஒதுக்குப் பண குறிகாட்டி இலக்குகள் போன்றவற்றை இலங்கை நிறைவுசெய்தது. நிகழ்ச்சித்திட்டம் முடிவுறுவதற்கு முன்னர் தனியார் ஓய்வூதிய நிதியங்களுக்கான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பிற்கு முன்மொழியப்பட்ட சீர்த்திருத்தங்களைத் தவிர, அனைத்து அமைப்பியல் அளவிடல்களையும் இலங்கை நடைமுறைப்படுத்தியது.

2016இல் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம்

விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆறாவது மீளாய்விற்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் அறிக்கையின்படி, 2019 ஏப்பிறலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் அரசிறையில் ஏற்பாட்ட குறிப்பிடத்தக்க பற்றாக்குறையின் காரணமாக இறை இலக்குகளை இலங்கை அடைய முடியாமலிருந்தது. செலாவணி வீதத்தில் மேலதிக நெகிழ்ச்சித்தன்மையை அனுமதிக்கும் அதேவேளை, தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்குகள் எட்டப்பட்டன அத்துடன் ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு இலங்கை மத்திய வங்கி ஈடுபாட்டுடன் செயற்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை அமைப்பியல் சீர்த்திருத்தங்களின் நிகழ்ச்சிநிரல் தொடர்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் மேற்கொண்டது. இதில் முக்கிய அமைப்பியல் அளவிடல்களை நடைமுறைப்படுத்தியது. இவை நெகிழ்வான பணவீக்க இலக்கிடல் மற்றும் நெகிழ்வான செலாவணி வீத முறைமைக்கான வழிகாட்டலொன்றை உருவாக்குதல், வரிச் செலவினக்

அட்டவணை சி.கு.1.1

இலங்கையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதி நிகழ்ச்சித்திட்டங்களின் வரலாறு

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் '000

வசதி	ஒழுங்கின் திகதி	காலாவதியாகும் திகதி	ஒத்துக்கொள்ளப்பட்ட தொகை	பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை	வெளிநின்ற தொகை
EFF	யூன் 03, 2016	யூன் 02, 2020	1,070,780	952,230	892,283
SBA	யூலை 24, 2009	யூலை 23, 2012	1,653,600	1,653,600	0
ECF	ஏப் 18, 2003	ஏப் 17, 2006	269,000	38,390	0
EFF	ஏப் 18, 2003	ஏப் 17, 2006	144,400	20,670	0
SBA	ஏப் 20, 2001	செத் 19, 2002	200,000	200,000	0
ECF	செத் 13, 1991	யூலை 31, 1995	336,000	280,000	0
SAFC	மார் 09, 1988	மார் 08, 1991	156,170	156,170	0
SBA	செத் 14, 1983	யூலை 31, 1984	100,000	50,000	0
EFF	சன 01, 1979	திசெ 31, 1981	260,300	260,300	0
SBA	திசெ 02, 1977	திசெ 01, 1978	93,000	93,000	0
SBA	ஏப் 30, 1974	ஏப் 29, 1975	24,500	7,000	0
SBA	மார் 18, 1971	மார் 17, 1972	24,500	24,500	0
SBA	ஒகத் 12, 1969	ஒகத் 11, 1970	19,500	19,500	0
SBA	மே 06, 1968	மே 05, 1969	19,500	19,500	0
SBA	யூன் 15, 1966	யூன் 14, 1967	25,000	25,000	0
SBA	யூன் 15, 1965	யூன் 14, 1966	30,000	22,500	0

மூலம் : இலங்கை நாட்டிற்கான பக்கம் (பன்னாட்டு நாணய நிதியத்தின் இணையத்தளம்)

EFF - நீடிக்கப்பட்ட நிதி வசதி, SBA - துணைநில் ஒழுங்கு, ECF - நீடிக்கப்பட்ட கொடுகடன் வசதி, SAFC - கட்டமைப்பியல் சீராக்க வசதி கடப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை

கூற்று உள்ளடங்கலாக 2018இல் வரிச் செலவினங்களையும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வர்த்தகமற்ற கடப்பாடுகளின் மதிப்பிடப்பட்ட இறைச் செலவுகளையும் கட்டுப்படுத்துவதற்கான திட்டமொன்றையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்ட இலக்குகளுக்கமைவாக 2018இற்கான வரவுசெலவுத்திட்டத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல், சிறிலங்கன் எயார்லைன்ஸ் சபையினால் வினைத்திறன்மிக்க உபாயத்திட்டத்தையும் தொழிற்பாட்டு வியாபார மாதிரியையும் தயாரித்தல், அரசிறை இழப்புகளை ஈடுகட்ட புதிய அரசிறை மூலங்களுடன் நடுத்தர கால இடைவெளியில் பரா-தீர்வைகளை கட்டுப்படுத்துவதற்கான உபாயமொன்றுக்காக அமைச்சரவையின் அனுமதியைப் பெறுதல் அத்துடன் இவற்றுக்கு மத்தியில் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை போன்றவற்றை அறிமுகப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொண்டது.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான பிராந்திய நாடுகளின் நிகழ்ச்சித்திட்டங்கள்

பொருளாதார நிலைமைகளை அடிப்படையாகக்கொண்டு பிராந்தியத்தின் ஏனைய நாடுகளும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்புகொண்டுள்ளன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியுடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்திற்கான பல்வேறு நாடுகளின் கோரிக்கைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளன. பிராந்திய நாடுகளின்

அட்டவணை சி.கு.1.2

தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்திய நாடுகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் '000

வசதி	ஒழுங்கின் திகதி	காலாவதியாகும் திகதி	ஒத்துக்கொள்ளப்பட்ட தொகை	பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை	வெளிநின்ற தொகை
பாகிஸ்தான்					
EFF	யூலை 03, 2019	ஒத் 02, 2022	4,268,000	2,144,000	2,144,000
RFI	ஏப் 16, 2020	ஏப் 20, 2020	1,015,500	1,015,500	1,015,500
EFF	செத் 04, 2013	செத் 30, 2016	4,393,000	4,393,000	2,244,750
SBA	நவம் 24, 2008	செத் 30, 2011	7,235,900	4,936,035	0
ECF	திசெ 06, 2001	திசெ 05, 2004	1,033,700	861,420	0
இந்தியா					
SBA	ஒத் 31, 1991	யூன் 30, 1993	1,656,000	1,656,000	0
SBA	சன 18, 1991	ஏப் 17, 1991	551,925	551,925	0
EFF	நவம் 09, 1981	மே 01, 1984	5,000,000	3,900,000	0
SBA	மார் 22, 1965	மார் 21, 1966	200,000	200,000	0
SBA	யூலை 09, 1963	யூலை 08, 1964	100,000	0	0
வங்களாதேசம்					
RCF	மே 29, 2020	யூன் 02, 2020	177,770	177,770	177,770
RFI	மே 29, 2020	யூன் 02, 2020	355,530	355,530	355,530
ECF	ஏப் 11, 2012	ஒத் 29, 2015	639,960	639,960	283,411
ECF	யூன் 20, 2003	யூன் 19, 2007	400,330	316,730	0
ECF	ஒகத் 10, 1990	செத் 13, 1993	345,000	330,000	0
நேபாலம்					
ECF	சன 12, 2022	மார் 11, 2025	282,420	78,500	78,500
RCF	மே 06, 2020	மே 08, 2020	156,900	156,900	156,900
RCF	யூலை 31, 2015	ஒகத் 10, 2015	35,650	35,650	24,955
ECF	நவம் 19, 2003	நவம் 18, 2007	49,900	49,900	0
ECF	ஒத் 05, 1992	ஒத் 04, 1995	33,570	16,785	0
மாலைத்தீவு					
RCF	ஏப் 22, 2020	ஏப் 24, 2020	21,200	21,200	21,200
SBA	திசெ 04, 2009	திசெ 03, 2012	49,200	8,200	0
ESF	திசெ 04, 2009	திசெ 03, 2011	8,200	2,050	0
ஆப்கானிஸ்தான்					
ECF	நவம் 06, 2020	மே 05, 2024	259,040	184,566	184,566
RCF	ஏப் 29, 2020	யூன் 23, 2020	161,900	161,900	161,900
ECF	யூலை 20, 2016	திசெ 31, 2019	32,380	32,380	31,930
ECF	நவம் 14, 2011	நவம் 13, 2014	85,000	24,000	1,200
ECF	யூன் 26, 2006	செத் 25, 2010	81,000	75,350	0

மூலங்கள்: பாகிஸ்தான், இந்தியா, வங்காளதேசம், நேபாலம், மாலைதீவு, மற்றும் ஆப்கானிஸ்தான் நாட்டிற்கான பக்கங்கள் (பன்னாட்டு நாணய நிதியத்தின் இணையத்தளம்

EFF - நீடிக்கப்பட்ட நிதி வசதி, RFI – விரைவான நிதியிடல் கருவி, SBA - துணைநில் ஒழுங்கு, ECF - நீடிக்கப்பட்ட கொடுகடன் வசதி, SAFC - கட்டமைப்பியல் சீராக்க வசதி, RCF – விரைவான நிதியிடல் கருவி கடப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை

1

மூலம் பெறப்பட்ட அண்மைய பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் பட்டியல் அட்டவணை சி.கு. 2.2 இல் தரப்பட்டுள்ளது.

இலங்கை மீது எதிர்கால நிகழ்ச்சித்திட்டத்தின் தாக்கங்கள்

முன்னர் குறிப்பிடப்பட்டதற்கமைவாக, சென்மதி நிலுவையின் நிலை மற்றும் அரசாங்கத்தின் சீர்த்திருத்தங்களின் நிகழ்ச்சிநிரல் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு இலங்கையானது காலத்திற்குகாலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. எனினும், தற்போதைய சூழ்நிலையைப் பொறுத்தவரையில் முன்னைய நிகழ்வுகளைப் போலன்றி நாட்டில் நிலவுகின்ற சவால்மிக்க பொருளாதார நிலைமைகளை எதிர்கொள்வதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டமானது உபாயங்களின் முக்கிய பங்காக விளங்கும். பன்னாட்டு ஒதுக்குகளின் தற்போதைய குறைந்த மட்டத்தை கருத்திற்கொண்டு, கணிசமான உயர் படுகடன் மீள்கொடுப்பனவுகளை குறுகிய காலத்தில் செலுத்தவேண்டியது பெரும் சவால்மிக்கதாக அமையும். உயர் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியவற்றுக்கு மத்தியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையானது இறுக்கமடைந்துள்ளதுடன் எரிபொருள், எரிவாயு, நிலக்கரி, மருந்துப்பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான வெளிநாட்டுச் செலாவணி கேள்வியினை நிறைவேற்றுவதற்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் குறிப்பிடத்தக்க குறைப்பையும் வெளிநாட்டுச் செலாவணியின் போதியளவின்மையையும் இது தோற்றுவித்தது. இத்தகைய சூழலில், எதிர்வரும் காலத்தில் வெளிநாட்டு நிதியிடலின் கணிசமான தொகையை பாதுகாப்பது இன்றியமையாததாகும். பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பது மேலதிக நிதியிடலுக்கான அணுகலை மாத்திரம் வழங்காது மாறாக பல்புடை மற்றும் இருபுடை இணைத்தரப்பினர்களை உள்ளடக்கிய சாத்தியமான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உயர்த்துவதற்கும் இயலுமாகயிருக்கும். இது, பேரண்டப்பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதுடன் இணைந்து ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தை உறுதிநிலைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. படுகடன் அல்லாத நிதியியல் உட்பாய்ச்சல்களை மேலும் இது ஊக்குவிக்கும்.

பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கலந்துரையாடலில் கவனம்செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் முக்கிய விடயங்களில் இறைத்திரட்சி, இறுக்கமான நாணயக்கொள்கை நிலைப்பாடு, செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மை, நாணய நிதியிடலை படிப்படியாக நிறுத்துதல், அரசுக்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகளை சீர்த்திருத்துதல், மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளின் படிப்படியான தளர்வு, சந்தை அடிப்படையிலான பயன்பாட்டுச் சூத்திரங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் சமூக பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்துதல் போன்றவை உள்ளடங்கும். மேற்குறிப்பிடப்பட்ட சில வழிமுறைகள் ஏற்கனவே மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் நாணயக்கொள்கை நிலைப்பாடு குறிப்பிடத்தக்க வகையில் இறுக்கமாக்கப்பட்டுள்ளதுடன் செலாவணி வீதம் சந்தை சக்திகளால் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது, மேலும் உள்நாட்டு பெற்றோலியம் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகளின் சீராக்கங்கள் செலவுகளைப் பிரதிபலிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. சீராக்கல் கட்டத்தில் இப்பேரண்டப் பொருளாதார உறுதிப்படுத்தல் வழிமுறைகள் பொருளாதாரத்திற்கு கடினமான சீராக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இருப்பினும் தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு இது கட்டாயமாகிவிட்டது. எனினும், பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு, நாடானது பொருத்தமான வழிமுறைகள் மூலம் வெளிநாட்டுப் படுகடனை நிலையான முறையில் முகாமை செய்வதை உறுதி செய்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, பன்னாட்டு நாணய நிதியத்தால் ஆதரவு வழங்கப்பட்ட பொருளாதார சீராக்கல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க, படுகடன் கடப்பாடுகளின் ஒழுங்கானதும் ஒத்திசைவானதுமான மீள்கட்டமைப்பில் இடைக்காலமொன்றிற்காக வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவின் இடைநிறுத்தலை அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளது. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு வெற்றிகரமான பேச்சுவார்த்தையை நடாத்தி நடைமுறைப்படுத்தும் பொருட்டு, தொடர்புடைய அனைத்து ஆர்வலர்களுக்கும் இடையிலான உடன்படிக்கையின் மூலம் அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாட்டை அடைந்துகொள்ள வேண்டும். எனவே, நிலைபெறத்தக்க பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துகின்றதன் வாயிலாக நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட அமைப்பியல் சீர்த்திருத்தங்கள் எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதிலேயே பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றி தங்கியிருக்கும்.

உசாத்துணைகள்

1. International Monetary Fund. (2022). *Sri Lanka: 2021 Article IV Consultation - Press Release, Staff Report, and Statement by the Executive Director for Sri Lanka*. 091. International Monetary Fund, Washington D.C.
2. International Monetary Fund. (2019). *Sri Lanka: Sixth Review Under the Extended Arrangement Under the Extended Fund Facility and Requests for Waiver of Nonobservance and Modification of Performance Criterion - Press Release, Staff Report, and Statement by the Executive Director for Sri Lanka*. 335. International Monetary Fund, Washington D.C.
3. International Monetary Fund. (2012). *Sri Lanka: Eighth and Final Review Under the Stand-By Arrangement - Staff Report, Press Release on the Executive Board Discussion; and Statement by the Executive Director for Sri Lanka, Staff Report, and Statement by the Executive Director for Sri Lanka*. 198. IMF.
4. Factsheet - International Monetary Fund Conditionality [Online]. Available at: https://www.imf.org/en/About/Factsheets/Sheets/2016/08/02/21/28/IMF-Conditionality#:~:text=When%20a%20country%20borrows%20from,able%20to%20repay%20the%20IMF
5. International Monetary Fund's Sri Lanka Country Page [Online]. Available at: https://www.imf.org/en/Countries/LKA

உயர்ந்தளவிலான செலவினம் மீண்டெழும் செலவினத்தில் வளர்ச்சியை உந்தச்செய்து 2021இல் மொ.உ.உற்பத்தியின் 11.3 சதவீதமாகவும் அரசிறையின் 130.0 சதவீதமாகவும் விளங்கியது. மேலும், 2021இல் அரச முதலீடுகள் 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதிலும், மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் தளத் தாக்கத்துடன் 57.2 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்தன. செலவினத்தைச் சிக்கனப்படுத்துகின்ற திட்டமானது இறுக்கமான மீண்டெழும் செலவினங்கள் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் மற்றும் வியாபாரங்களிற்கு வழங்கப்பட்ட பொதுச் சுகாதார பணிகள் மற்றும் நேரடி மற்றும் மறைமுக நிதியியல் ஆதரவு மீதான மேலதிக செலவினத் தேவைப்பாடுகள் என்பவற்றுடன் தடம் புரண்டு காணப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமொன்றாக திரண்ட இறை நிலுவை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 11.1 சதவீதத்திலிருந்து (ரூ. 1,667.7 பில்லியனிலிருந்து 2021இல் 12.2 சதவீதத்திற்கு (ரூ. 2,057.9 பில்லியன்) மோசமடைந்தது. அதேவேளை, 2021இல் முதலாந்தர பற்றாக்குறை ரூ. 687.4 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 4.6 சதவீதம்) 2021இல் ரூ. 1,009.5 பில்லியனிற்கு (மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதம்) அதிகரித்து ஆண்டின் வட்டியல்லா செலவினத்தையேனும் பூர்த்திசெய்வதற்கான அரசிறை வருவாய்களின் போதாமையினை எடுத்துக்காட்டியது. அரசின் குறைச்சேமிப்பினைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் பெயரளவு நியதிகளில் 2020இல் ரூ. 1,180.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ. 1,290.4 பில்லியனிற்கு விரிவடைந்திருந்த வேளையிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்டிருந்த 7.9 சதவீதத்திலிருந்து 2021இல் 7.7 சதவீதத்திற்குச் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இவ்வபிவிருத்திகளுடன் முதலாந்தர பற்றாக்குறை, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் திரண்ட வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை என்பன 2021இற்கான மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2021 வரவு செலவுத்திட்டத்தில் குறித்துக்காட்டியமையின் பிரகாரம் முறையே 4.0 சதவீத, 2.9 சதவீத மற்றும் 8.9 சதவீத எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களிலிருந்து குறிப்பிடத்தக்களவு விலகியிருந்தன. பாதகமான உலகளாவிய அபிவிருத்திகள் மற்றும் நாட்டிற்கான தரமிடல் குறைப்புக்கள் என்பவற்றினைத் தொடர்ந்து வெளிநாட்டு நிதியியல் சந்தைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகலுக்கு மத்தியில் வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறைக்கு, குறிப்பாக வங்கித்தொழில் துறையிலிருந்து நிதியளிப்பதற்கான உள்நாட்டு மூலங்களின் மீது அரசாங்கம் பெருமளவில் தங்கியுள்ளது. இதற்கமைய, 2021 காலப்பகுதியில், உள்நாட்டு மூலங்களினூடாக தேறிய நிதியிடலானது ரூ. 2,071.8 பில்லியனாக விளங்கிய வேளையில் வெளிநாட்டு மூலங்களுடன் தொடர்புடைய தேறிய மீள்கொடுப்பனவு ரூ. 13.9 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டது. அதிகரித்துவரும் செலவினத் தேவைப்பாடுகளைப்

வரைபடம் 1.8
வெளிநின்ற மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)



மூலங்கள் : நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

பூர்த்திசெய்வதற்கும் 2021 காலப்பகுதியில் அரசாங்கம் வங்கித்தொழில் துறையிலிருந்து நிதியிடுவதற்குக், குறிப்பாக மத்திய வங்கியின் மீது பெருமளவில் தங்கியிருந்தது. இதன் விளைவாக, 2021 காலப்பகுதியில் மத்திய வங்கியிடமிருந்து அரசாங்கம் பெற்றுக்கொண்ட உள்நாட்டு வங்கிக் கடன்பாடுகள் ரூ. 1,225.2 பில்லியனாக விளங்கியது. விரிவடைந்த இறைப் பற்றாக்குறை, அதிகரித்த சந்தை வட்டி வீதங்கள் அதேபோன்று செலாவணி வீத தேய்மானத்தினால் ஏற்பட்ட சமநிலை இழப்புக்கள் என்பன மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் 2020 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூ. 15,117.2 பில்லியனிலிருந்து 2021 இறுதியளவில் ரூ. 17,589.4 பில்லியனிற்குக் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பதற்கு வழிவகுத்தன. இதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் முன்னைய ஆண்டின் இறுதியளவில் பதிவுசெய்யப்பட்டிருந்த 100.6 சதவீதத்திலிருந்து 2021 இறுதியளவில் 104.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. பெயரளவு நியதிகளில், உள்நாட்டுப் படுகடன் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் 2020இலும் பார்க்க 2021 காலப்பகுதியில் முறையே 22.4 சதவீதத்தினாலும் 7.3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. திரைசேறி உண்டியல்கள் மற்றும் திரைசேறி முறிகளிலிருந்தான அதிகரித்த உள்நாட்டுக் கடன் பெறுகைகள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 60.0 சதவீதத்திலிருந்து மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் 63.1 சதவீதத்திற்கு அதிகரிக்கும் விதத்தில் அரச படுகடன் சொத்துப்பட்டியலில் உள்நாட்டுப் படுகடன் பங்கினைத் தோற்றுவித்துள்ளன. மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2020இல் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூ. 1,941.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ. 2,375.6 பில்லியனிற்கு அதிகரித்தன. இதற்கமைய, படுகடன் பணிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 12.9 சதவீதத்திலிருந்து 2021இல் மொ.உ.உற்பத்தியின் 14.1 சதவீதத்திற்கு அதிகரித்தன. 2021இல் வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் மூலதனக்

1

கொடுப்பனவுகள் முறையே மொ.உ.உற்பத்தியின் 6.2 சதவீதமாகவும் 7.9 சதவீதமாகவும் விளங்கின. மோசமடைந்த வெளிநாட்டுத்துறைத் திரவத்தன்மை நிலை மற்றும் பலவீனமான இறைத் தோற்றப்பாடு மற்றும் எதிர்வரவிருந்த கணிசமான படுகடன் பணிக் கொடுப்பனவுகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு இலங்கை நாட்டிற்கான தரமிடல் குறைப்புக்களின் தொகுதியொன்று 2021 காலப்பகுதியில் பெருமளவிலான தரமிடல் முகவராண்மைகளினால் மேற்கொள்ளப்பட்டன. இப்பின்னணியில், அரசின் பாரியளவிலான படுகடன் சொத்துப்பட்டியலினைக் கருத்திற்கொள்வதுடன் குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கான அதிகரித்தளவிலான வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய தன்மை தொடர்பிலான தீவிர கரிசனைகளை எழுப்பியுள்ளதுடன் இவை படுகடன் சொத்துப்பட்டியலின் மீள்தோற்றப்பாடு, வலுவான இறைத் திரட்சி முயற்சிகள் மற்றும் முன்மதியுடைய பொறுப்பு முகாமைத்துவத் தந்திரோபாயங்கள் என்பவற்றுடன் துரிதமாகத் தீர்க்கப்பட வேண்டும்.

நாணயத் துறை அபிவிருத்திகள்

வெளிநாட்டுத்துறையிலும் நிதியியல் சந்தைகளிலும் வெளிப்படுகின்ற மிகையான பணவீக்க அழுத்தங்கள் மற்றும் சமநிலையின்மை என்பவற்றை சாத்தியமாக கட்டியெழுப்புவதைக் கருத்திற்கொண்டு, 2020இலிருந்து முன்னெப்பொழுதுமில்லாத நாணய தூண்டல் வழிமுறைகளை வெளிப்படுத்துகின்ற மத்திய வங்கியானது 2021இன் ஓகத்தின் நடுக்காலப்பகுதியிலிருந்து நாணய இறுக்க வழிமுறைகளை ஆரம்பித்திருந்தது. 2020இன் ஆரம்பத்தில் நிலவிய நோய்த்தொற்று காலப்பகுதி தொடக்கம் 2021இன் ஓகத்து நடுக் காலப்பகுதி வரை மத்திய வங்கியினால் பேணப்பட்ட தீவிர தளர்த்தப்பட்ட நாணய கொள்கை நிலைப்பாடானது சந்தை வட்டிவீதங்களை வரலாற்று ரீதியாக தாழ்வான மட்டங்களுக்கு குறைப்பதற்கும் அத்துடன் போதுமான திரவத்தன்மையை உள்நாட்டு பணச்சந்தைக்கு வழங்குவதற்கும் உதவிபுரிந்தது, இதன்மூலம் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்படும் தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவுகின்ற அதேவேளை பொருளாதார மீட்சிக்கும் வசதியளித்தது. மத்தியவங்கியானது உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் குறைந்தளவான அரசிறைத் திரட்சி மற்றும் கூடியளவான செலவீனம் என்பவற்றுடன் கூடிய அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல்களுக்கான இடையூறுகளுக்கு மத்தியிலும் அதன் அவசர நிதியிடல் தேவைகளை சந்திப்பதற்காக முதலாந்தர சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்தல் அதேபோன்று மத்தியவங்கிக்கான நேரடி ஒதுக்கீடுகள் போன்ற வழிகள் மூலம் அரசாங்கத்திற்கான அதிவிசேட நிதியியல் ஆதரவினை தொடர்ந்தும் வழங்கியது. எவ்வாறாயினும், நடுத்தர காலப்பகுதியில் ஏற்படுகின்ற தீவிர பணவீக்க அழுத்தங்களை

வரைபடம் 1.9
துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்



(அ) 2022 ஏப்பிறல் 8இல் உள்ளவாறு

மூலம் : இலங்கை மத்திய வங்கி

முன் கூட்டியே கட்டியெழுப்புவதற்க்கும் வெளிநாட்டுத்துறை மற்றும் நிதியியல் சந்தைகளிலிமுள்ள சமநிலையின்மையை தீர்ப்பதற்கும் 2021இன் ஓகத்து காலப்பகுதியிலிருந்து நாணயக் கொள்கை நிலைப்பாட்டை இறுக்கமடையச்செய்தலை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய 2021இன் ஓகத்து நடுப்பகுதியில் முக்கிய கொள்கை வட்டிவீதங்களான துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கள் வசதி வீதமும் முறையே 5.00 சதவீதத்திற்கும் 6.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டதுடன் 2021இன் செத்தெம்பரில் நடைமுறைக்கு வரும்வகையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபாய் வைப்பு பொறுப்புக்கள் மீது ஏற்புடைத்தான நியதிச்சட்ட ஒதுக்குவீதமானது 4.00 சதவீதத்திற்கு 2 சதவீத புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டது. சந்தை நிலைமைகளை சிறப்பாக பிரதிபலிப்பதற்கு பல்வேறு ஏனைய ஒழுங்குபடுத்தல் வழிமுறைகளும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டன. சந்தையில் ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் என்பவற்றுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்கு மத்தியவங்கியானது 2021இன் ஓகத்தில்

வரைபடம் 1.10
தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.11
விரிந்த பண வளர்ச்சி மற்றும் பங்களிப்பு



மூலம் : இலங்கை மத்திய வங்கி

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றின் வெளிநாட்டு நாணய வைப்புச் சாதனங்களுக்காக வழங்கப்படும் வட்டி வீதங்கள் மீது உச்சவரம்பை விதித்தது. ஊதியம் பெறுகின்ற ஊழியர்களுக்கான ஈடுகளினால் பிணையளிக்கப்பட்ட விசேட வீடமைப்புக் கடன்திட்டம் மீது ஏற்புடைத்தான வட்டிவீதமானது 2021இன் திசெம்பரில் மீள்திருத்தப்பட்டு மாறி வட்டிவீதமொன்றுடன் இணைக்கப்பட்டது. வெளிநாட்டுத்துறை பணவீக்க முனைகள் என்பவற்றிலிருந்து தோற்றம்பெறுகின்ற தொடர்ச்சியான சவால்களுடன் மத்தியவங்கியானது துணைநில் வைப்பு வசதி வீதத்தையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தையும் மொத்தமாக 150 அடிப்படை புள்ளிகளால் உயர்த்துவதன் மூலம் அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை 2022இன் சனவரி மற்றும் மார்ச்சில் மேலும் இறுக்கமடையச்செய்தது. 2022இன் மார்ச்சில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசியசேமிப்பு வங்கி என்பவற்றின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது விதிக்கப்படும் உயர்ந்தபட்ச வட்டி வீதமும் அகற்றப்பட்ட அதேவேளை உள்நாட்டு கடன்வழங்கல் சாதனங்களான கொடுகடன் அட்டைகள் முன்கூட்டியே ஏற்பாடுசெய்யப்பட்ட தற்காலிக மேலதிக பற்றுக்கள் மற்றும் அடகு வசதிகள் என்பவற்றின் வட்டி வீதங்கள் மீது விதிக்கப்படும் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மேல்நோக்கி திருத்தப்பட்டன. சில வங்கிகளால் எதிர்நோக்கப்படும் நாணயக்கொள்கை நிலைப்பாட்டையும் ரூபா திரவத்தன்மை கரிசனைகளையும் இறுக்கமடையச் செய்வதுடன் குறிப்பிடத்தக்க மிகையான மட்டங்களில் காணப்படுகின்ற உள்நாட்டு பணச்சந்தையிலுள்ள திரவத்தன்மையானது பாரியளவு பற்றாக்குறை மட்டங்களுக்குள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. வரலாற்று ரீதியான தாழ்வான மட்டங்களில் வீழ்ச்சியடைந்த சந்தை வட்டிவீதங்களானது படிப்படியாக மேல்நோக்கி சீராக ஆரம்பித்தது. அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக அரசபிணையங்கள் மீதான விளைவுகளும் உயர்ந்தபட்ச விளைவு வீதங்களை அகற்றுவதுடன் அதிகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. 2022இன் ஏப்பிறல் முன்னைய காலத்தில் கணிசமானளவு செலாவணி வீத தேய்மானம், மொத்த கேள்வியை கட்டியெழுப்புதல், உலகளாவிய மற்றும் உள்நாட்டு ரீதியான நிரம்பல் இடையூறுகளால் ஏற்படும் பண்டங்களின் அதிகரித்த விலைகள் ஆகியவற்றின் மூலம் தூண்டப்படும் பணவீக்க அழுத்தங்களை கருத்திற்கொண்டு மத்தியவங்கியானது பணவீக்க அழுத்தங்களாலும் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகளின் முன்கூட்டிய அதிகரிப்புக்களாலும் தூண்டப்பட்ட மிகையான கேள்வியை கட்டியெழுப்புவதை நிறுத்துவதற்கும், செலாவணி வீதத்தை நிலைநிறுத்துவதற்கு தேவையான உத்வேகத்தை வழங்குவதற்கும் அத்துடன் சந்தை வட்டிவீத கட்டமைப்பில் அவதானிக்கப்படும் முரண்பாடுகளை சீராக்குவதற்கும் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட ஒரே நாள் திருத்தமாக கொள்கை வட்டிவீதங்களை 700 அடிப்படை புள்ளிகளால் கணிசமான அளவில் அதிகரித்தது. இதற்கமைய 2022இன் ஏப்பிரல் 08 அன்று வியாபாரத்தை மூடும் நாளன்று நடைமுறைக்கு வரும் வகையில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 13.50 சதவீதத்திற்கும் 14.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட உள்நாட்டு கடன்வழங்கல் மீது விதிக்கப்படும் வட்டி வரம்புகளும் அகற்றப்பட்டன.

வங்கித்தொழில் முறைமை மூலம் நீடிக்கப்படும் உள்நாட்டு கொடுகடனானது மத்திய வங்கியால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடனின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பால் தூண்டப்பட்டு, ஆண்டுக்காலப்பகுதியில் கணிசமானளவில் விரிவடைந்த அதேவேளை வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களானது விரிந்த பண நிரம்பலின் மிதமான தன்மையை தோற்றுவித்து சுருக்கமடைந்தது. அரசிறையிலும் மட்டுப்படுத்தப்பட்ட அணுகலிலும் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும், அரசாங்கத்தின் அதிகரிக்கப்பட்ட நிதியிடல் தேவைப்பாடானது உள்நாட்டு வங்கித்தொழில் முறைமையூடாக பாரியளவில் முகங்கொடுக்கப்பட்டது. எனவே, வங்கித்தொழில் முறைமை மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது 2021ஆம் ஆண்டில் ரூ. 1,284.4 பில்லியன் அளவின் மூலம் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கப்பட்டது. இதில், 95 சதவீதம் மத்தியவங்கியால் நிதியிடப்பட்டது. அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மூலம் பெறப்பட்ட கொடுகடனானது அதன் பலவீனமான நிதியியல் நிலைமைகளை தோற்றுவித்து, 2021இல் ரூ.185.9 பில்லியனால் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. தாழ்ந்த கிரய நிதியங்களால் ஆதரவளிக்கப்பட்டு, தனியார் துறைக்கு விரிவாக்கப்பட்ட கொடுகடனும் 2021இல் ரூ. 810.5 பில்லியனால் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. எவ்வாறாயினும், அரசாங்கத்தின் சார்பாக மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும்

1

வெளிநாட்டு நாணய படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் காரணமாக வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் குறிப்பாக மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படுகின்ற சுருக்கத்துடன், விரிந்த பணநிரம்பலின் வளர்ச்சியானது 2020 இல் பதிவு செய்யப்பட்ட 23.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இன் இறுதியில் 13.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து, 2021இன் பின்னைய பகுதியை நோக்கி மிதமடைந்தது.

நிதியியல் துறை அபிவிருத்திகள்

பொருளாதாரத்தல் எதிர்நோக்கப்படும் கடுமையான சவால்களுக்கு மத்தியில், 2021 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையின் நிதியியல் முறைமைகளின் உறுதிப்பாடானது பாதுகாக்கப்பட்டது. தேறிய வட்டி வருமானம் மற்றும் வட்டியல்லா வருமானம் ஆகிய இரண்டிலும் ஏற்படுகின்ற குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்புக்களின் காரணமாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையின் மூலமான நிதியியல் இடையீடு திருப்திகரமாக காணப்பட்ட அதேவேளை துறையின் இலாபத்தன்மையும் கணிசமானளவில் மேம்பட்டது. எவ்வாறாயினும் நாட்டினால் எதிர்நோக்கப்படும் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் பற்றாக்குறையின் காரணமாக வங்கிகள் கடுமையான வெளிநாட்டு நாணய திரவத்தன்மை பற்றாக்குறைக்கு முகங்கொடுத்தது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த கம்பனிகளும் நிதியியல் துறை ஒன்றுதிரட்டல் முதன்மைத் திட்டத்தை செயன்முறைப்படுத்துகின்ற பின்னணியிலுள்ள கொடுகடன் வளர்ச்சி மற்றும் இலாபத்தன்மை என்பவற்றின் நியதிகளுக்கமைவாக குறிப்பிடத்தக்களவிலான ஒட்டுமொத்த மேம்பாடொன்றைக் காண்பித்தன. உலகளாவிய நோய்த்தொற்றினால் இடையூறுபடுத்தப்பட்ட பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கொன்றுடன் மத்திய வங்கியானது புதிய இயல்பு வாழ்க்கையை பின்பற்றுவதற்காக நிதியியல் நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்கியதுடன் சில ஒழுங்குமுறைப்படுத்தல் சகிப்புத்தன்மைகளையும் வழங்கியது. காப்புறுதித் துறையும் விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது. 2021 ஓகத்திலிருந்து தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கையின் வெளிநாட்டு படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் மீளத்திரும்பலைத் தொடர்ந்து பணச் சந்தையிலுள்ள திரவத்தன்மையின் கிடைப்பனவு பற்றாக்குறை மட்டங்களுக்கு மாற்றமடைந்தன. ஆண்டுக் காலப்பகுதியில், சுற்றுலாத் துறை வருவாய்களிலுள்ள தாமதமான அறவீடுகள், ஏற்றுமதிப் பெறுகைகளின் மெதுவடைந்த மாற்றல்கள், இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பு அதேபோன்று பல்வேறு நாட்டிற்கான தரமிடல்களால் வழிநடத்தப்படும் பாதகமான சந்தை நிலைமைகள் என்பவற்றின் காரணமாக உள்நாட்டு நாணய செலாவணியிலுள்ள திரவத்தன்மையானது கணிசமானளவில் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் மிகச்சொற்பமான பங்களிப்புக்கு மத்தியில் கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையானது 2021இல் மேம்பாடொன்றை பதிவுசெய்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் நாட்டின் முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையானது சீராக தொழிற்பட்டது. அதேவேளை மத்தியவங்கியானது ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பிற்காக வலுவான சட்டரீதியான அடித்தளத்தை வழங்குகின்ற நோக்குடன் பிரதான சட்டவாக்கங்களுக்கு சட்ட சீர்திருத்தங்களை தொடர்ந்தும் வழங்கியது.

1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

2022ஆம் ஆண்டில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகளிலிருந்து உலகப் பொருளாதாரம் மீட்சியடைய ஆரம்பிக்கின்ற வேளை, இம்முன்னேற்றமானது ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளுக்கிடையிலான எதிர்வுகளால் கடுமையாக இடையூறுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது. 2022இன் ஏப்பிறலில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதார தோற்றப்பாட்டிற்கமைவாக, உலகப்பொருளாதாரத்தின் வளர்ச்சியானது 2020இன் 3.1 சதவீத சுருக்கமொன்றுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 6.1 சதவீதத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் 5.2 சதவீத வளர்ச்சியொன்றை பதிவுசெய்துள்ள அதேவேளை தோற்றம் பெற்றுவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் என்பவற்றிற்கான வளர்ச்சியின் மதிப்பீடு 6.8 சதவீதத்தில் காணப்பட்டது. உக்ரேன் மீது ரஷ்யாவின் படையெடுப்பு தொடர்பான கசிவுத்தாக்க விளைவுகளையும் உலகப் பொருளாதாரத்தில் ரஷ்யா மீது விதிக்கப்பட்ட ஒருங்கிணைந்த தடைகளையும் பிரதிபலித்து, 2022ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார வளர்ச்சி 3.6 சதவீதமாக மெதுவடையுமென பன்னாட்டு நாணய நிதியம் எறிவுசெய்கின்றது. யுத்தத்திற்கு மேலதிகமாக, சீனாவில் அடிக்கடி விதிக்கப்பட்ட பாரிய அளவிலான முடக்கல் நிலைமைகள், ஏராளமான நாடுகளின் நாணயக் கொள்கைகள் இறுக்கமடைவதற்கு வழிவகுக்கின்ற தொடர்ச்சியான பணவீக்க அழுத்தங்கள் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தை தணிப்பதற்கு உலகம் முழுவதும் முன்னர் வழங்கப்பட்ட இறைக் கொள்கை ஆதரவைத் திரும்பப் பெறுதல் என்பனவற்றின் காரணமாக உலக வழங்கல் சங்கிலிகளில் ஏற்படும் இடையூறுகளானது உலக வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை பாதகமாக பாதிக்கக்கூடும் என்பதை பன்னாட்டு நாணய நிதியம் அனுமானிக்கின்றது. இதற்கமைய, முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களுக்கும் தோற்றம்பெற்றுவரும் சந்தைகள்

மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களுக்குமான பொருளாதார வளர்ச்சி வீதங்களானது 2022ஆம் ஆண்டில் முறையே 3.3 சதவீதமாகவும் 3.8 சதவீதமாகவும் எறிவுசெய்யப்படுகின்றன. மேலும், 2023ஆம் ஆண்டிற்கான உலக வளர்ச்சி எறிவானது 2022 சனவரி உலகப் பொருளாதார தோற்றப்பாட்டினை விட 0.2 சதவீத புள்ளிகள் குறைவாக 3.6 சதவீதத்திற்கு பன்னாட்டு நாணய நிதியத்தால் கீழ்நோக்கித் திருத்தப்பட்டிருக்கின்றது.

உயிர் இழப்புக்களுக்கும் மனித இடர்களுக்கும் மேலதிகமாக, தற்போது இடம்பெறுகின்ற ரஷ்யா - உக்ரேன் மோதலானது இவ்விரு நாடுகளுக்கு அப்பால் சென்று குறிப்பிடத்தக்க பொருளாதார இடர்நேர்வுகளின் மூலமாக உலகளாவிய ரீதியில் உணரக்கூடிய பொருளாதார தாக்கங்களை உருவாக்குகின்றன என்ற ஒருமித்த கருத்து காணப்படுகின்றது. யுத்தமானது துன்பகரமான உயிர் இழப்புக்களையும் மனித இடர்நேர்வுகளையும் அத்துடன் உக்ரேனிய உட்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்களவு சேதத்தையும் தோற்றுவித்து இதன்விளைவாக, உக்ரேனிய பொருளாதாரம் 2022இல் பாரிய பொருளாதார மந்த நிலையை எதிர்நோக்கியுள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்திற்கமைவாக, உக்ரேனிய பொருளாதாரம் 2022இல் 35 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சில பாரிய பொருளாதாரங்கள் எண்ணெய் மற்றும் எரிவாயுவிற்கான தடையை விதித்தல், மேற்கத்திய நாடுகள் ரஷ்ய மத்திய வங்கியின் சொத்துக்களை முடக்குதல் அத்துடன் பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் பணிகளை பயன்படுத்துவதை இடைநிறுத்துதல் போன்றன உள்ளடங்கலாக ரஷ்யா மீது விதிக்கப்படும் இறுக்கமான வர்த்தக மற்றும் நிதியியல் தடைகள் 2022ஆம் ஆண்டில் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 8.5 சதவீத வீழ்ச்சியை ஏற்படுத்தி ரஷ்ய பொருளாதாரத்தில் கடுமையான சுருக்கத்தை தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை உலகப்பொருளாதாரத்திலும் நிதியியல் சந்தைகளிலும் கணிசமான தாக்கத்தை தோற்றுவிக்கும். குறிப்பாக, வர்த்தகத்திலும் பணவனுப்பலிலும் அத்துடன் அகதிகளின் வருகையின் மூலமும் ஏற்படும் இடையுறுகளினால் இவ்விரு நாடுகளின் அயல் நாடுகள் பாதிப்படைகின்றன. பன்னாட்டு நாணய நிதியத்திற்கமைவாக, யுத்த விளைவுகளின் கசிவுத் தாக்கமானது ஐந்து முக்கிய வழிகளினூடாக எஞ்சிய உலக நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றது. வலு மற்றும் கோதுமை, சோளம், உலோகங்கள் மற்றும் உரங்களுக்கான உள்ளீடுகள் என்பன உள்ளடங்கலாக பண்ட விலைகளில் ஏற்படும் அதிகரிப்பானது முதன்மையானதும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதுமான வழியாக காணப்படுகின்றது. வழங்கல் சங்கிலி இடையூறுகள் மற்றும் கொவிட் -19 உலகளாவிய நோய்த்தொற்றின் மீளெழுச்சியினால் ஏற்கனவே ஏற்பட்ட பணவீக்க அழுத்தங்களை இது மேலும் அதிகரிக்கின்றது.

அட்டவணை 1.4

உலக பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)

விடயம்	2020 (ஆ)	2021 (இ)	2022 (எறிவு)	2023 (எறிவு)
உலக வெளியீடு	**-3.1**	**6.1**	**3.6**	**3.6**
முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள்	-4.5	5.2	3.3	2.4
ஐக்கிய அமெரிக்கா	-3.4	5.7	3.7	2.3
ஐரோப்பிய பிராந்தியம்	-6.4	5.3	2.8	2.3
ஐக்கிய இராச்சியம்	-9.3	7.4	3.7	1.2
யப்பான்	-4.5	1.6	2.4	2.3
தோற்றம்பெற்று வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள்	-2.0	6.8	3.8	4.4
தோற்றம்பெற்று வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா	-0.8	7.3	5.4	5.6
சீனா	2.2	8.1	4.4	5.1
இந்தியா	-6.6	8.9	8.2	6.9
உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்) விலை அசைவுகள்	**-7.9**	**10.1**	**5.0**	**4.4**
நுகர்வோர் விலைகள்				
முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள்	0.7	3.1	5.7	2.5
தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள்	5.2	5.9	8.7	6.5
பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.)				
எண்ணெய்	-32.7	67.3	54.7	-13.3
எரிபொருள் அல்லாதவை	6.8	26.8	11.4	-2.5

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம் : உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (ஏப்பிறல் 2021), பநா.நிதியம்

அதன்படி, 2022ஆம் ஆண்டிற்கான பணவீக்கமானது முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் 5.7 சதவீதமாகவும் வளர்ந்துவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்களில் 8.7 சதவீதமாகவும் உயர்வடையுமென எறிவுசெய்யப்படுகின்றது. இரண்டாவதாக, ரஷ்யா மற்றும் உக்ரேனுடனான நேரடி மற்றும் கணிசமான வர்த்தக மற்றும் பணவனுப்பல் தொடர்புகளைக் கொண்டுள்ள நாடுகளும் மோசமாக பாதிப்படையக்கூடும். மேலும், பொருளாதார இடையூறுகள் மற்றும் ரஷ்யாவிடமிருந்தான பன்னாட்டு கொடுப்பனவு பணிகளின் புறக்கீடு என்பன காரணமாக சுற்றுலாப்பயணிகளின் வருகை குறைவடைந்து இதன்மூலம் ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளின் சுற்றுலாப்பயணிகளை அதிகளவு நம்பியிருக்கும் நாடுகளின் சுற்றுலா துறை வருவாய்கள் பாதிப்படையக்கூடும். மூன்றாவதாக, ரஷ்யா மற்றும் உக்ரேனின் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளின் ஒருங்கிணைப்பானது வழக்கமான பண்ட இணைப்புகளுக்கு மேற்பட்டதாக இருப்பதனால், எல்லைகளுக்கிடையிலான உற்பத்தி வலையமைப்புக்களின் ஊடாக மூலப்பொருள் பற்றாக்குறையால் உருவாகும் கூறு தயாரிப்பு செயன்முறைக்கான இடையூறுகள் உலகம் முழுவதும் பரவக்கூடும். நான்காவது வழியாக வியாபார நம்பிக்கை மற்றும் நிதியியல் நிலைமைகள் காணப்படுகின்றதுடன் இவை பண்ட விலை அழுத்தக்கங்களினாலும் தடைகளினாலும் ஏற்கனவே இறுக்கமடைந்து வருகின்றது. ஆசிய பிராந்தியங்களில், அதிகரித்த உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகள், இறுக்கமான

1

உலகளாவிய நிதியியல் நிலைமைகள் மற்றும் குறைவடைந்த சுற்றுலா துறை வருவாய்கள் போன்றன எண்ணெய் இறக்குமதி செய்யும் சில பொருளாதாரங்களின் வளர்ச்சியைத் தடுக்கும் அதேவேளை எண்ணெய் ஏற்றுமதியாளர்கள் அதிகரித்த படிம எரிபொருள் விலைகளின் மூலமாக ஆதாயமடையக்கூடும். மறுபுறத்தில், உரத்திற்கும் தானியத்திற்குமாக ரஷ்யா மற்றும் உக்ரேன் மீது தங்கியுள்ள சில தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் வேளாண்மை கைத்தொழில்களும் மோசமாக பாதிப்படையக்கூடும். மேலும், நிதியியல் சந்தைகளின் இடர்நேர்வு தவிர்ப்புடன் ஆசியப் பிராந்தியத்திலிருந்து மூலதன வெளிப்பாய்ச்சல்கள் தூண்டப்படலாம். 2022ஆம் ஆண்டில் 4.4 சதவீதமாக எறிவுசெய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சியுடன் சீனப் பொருளாதாரத்தின் அபிவிருத்திகள் ஆசியாவிற்கான தோற்றப்பாட்டில் ஆதிக்கம் செலுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக, அதிகரித்துவரும் உலகளாவிய வலு மற்றும் பண்ட விலைகள், உயர் உள்நாட்டு பணவீக்கம் மற்றும் விரிவடையும் வர்த்தகப் பற்றாக்குறைக்கு வழிவகுத்தல், உலகளாவிய கேள்வி பலவீனமடைதல், தளம்பலடையும் மூலதனப் பாய்ச்சல்கள், செலாவணி வீத உறுதியற்றத்தன்மைகள், அதிகரித்துவரும் கடன்பாட்டுச் செலவுகள் அத்துடன் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் நாணய இறுக்கமாக்கலின் விளைவாக ஏற்பட்ட இறுக்கமடையும் உலகளாவிய நிதியியல் நிலைமைகள் போன்றன அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை பெருமளவில் பாதிப்படையச் செய்யலாம் என்பதுடன் சில சந்தர்ப்பங்களில் பொருளாதார மந்த நிலையையும் கடன் தீர்க்கமுடியாத நிலையையும் பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைகளின் முடக்கத்தையும் இது தோற்றுவிக்கும் அபாயம் ஏற்படுகின்றது.

வலு மற்றும் உணவுப் பண்டங்களின் விலைகள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய கரிசனைகளின் தளர்வுடன் உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட மீட்சியின் காரணமாக 2021 ஆண்டு முழுவதிலும் உயர்வடைந்து செல்கின்ற போக்கொன்றினைக் கொண்டிருந்ததுடன் ஐரோப்பாவில் தற்போதுள்ள புவிசார் அரசியல் பதட்ட நிலைகளுடன் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2020இல் ஏற்பட்ட கொவிட்-19 நோய்ப்பரவலுடன் மசகெண்ணெய் விலைகள் கடுமையாக சரிவடைந்து காணப்பட்ட போதிலும், 2020 ஏப்பிறல் மாதம் தொடக்கம் விலைகள் வலுவாக அதிகரித்ததுடன் 2021 ஒத்தோபரில் ஏழு வருட உயர்வினை அடைவதற்கு முன்னர் 2021 மாச்சு மாதமளவில் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களை அடைந்தன. ரஷ்யா மற்றும் உக்ரேன் நாடுகளுக்கிடையிலான புவிசார் அரசியல் பதட்ட நிலைகளின் அண்மைய தோற்றமானது மசகெண்ணெய் விலைகள் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 100இற்கு மேலாகக் காணப்பட வழிவகுத்தமைக்கு வாங்குநர்கள் ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு அஞ்சியமையினால் உலகளாவிய மசகெண்ணெய் நிரம்பல்களை மேலும் இறுக்கமடையச்செய்கின்ற கரிசனைகள் காரணமாயமைந்தன. 2022 ஏப்பிறல் மாத உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் பிரகாரம் 2022இற்கான சராசரி மசகெண்ணெய் விலையானது பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 106.83ஆக எதிர்வுகூறப்பட்டதன் மூலம் சீனாவில் தற்பொழுது காணப்படுவதனைப் போன்று கொவிட்-19 நோய்ப்பரவல் மற்றும் தொடர்புடைய நகர்வும் கட்டுப்பாடுகள் என்பவற்றிலிருந்து தோற்றம்பெறுகின்ற சில கீழ்நோக்கிய அழுத்தங்கள் மற்றும் நாடுகளின் மூலோபாய ஒதுக்குகளிலிருந்து மேலதிக எண்ணெய் நிரம்பல்களை விடுவிக்கின்ற எதிர்பார்ப்பு ஆகியவற்றிற்கு மத்தியிலும் மசகெண்ணெய் விலைகள் ஆண்டு முழுவதிலும் உயர்வடைந்து காணப்படுமெனும் வலுவான சாத்தியக்கூறினைச் சமிக்ஞை செய்துள்ளது. உணவு விலைகள் தொடர்பில் 2021 காலப்பகுதியில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைச் சுட்டெண்ணானது 2020ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட விலைகளுக்கு மேலாக 28.1 சதவீத ஒட்டுமொத்த வளர்ச்சியொன்றினை எடுத்துக்காட்டியது. உயர்ந்தளவிலான உள்ளீட்டுச் செலவுகள், சாதகமற்ற காலநிலைமைகள் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான தயக்கம் என்பவற்றிற்கு மத்தியில் உலகளாவிய உணவு விலைகள் மேல்நோக்கிய போக்கொன்றினைக் கொண்டிருந்தன. இக்கரிசனைகள் தொடர்ந்தும் நீடித்ததுடன் முக்கிய வேளாண்மை ஏற்றுமதியாளர்களாகவுள்ள ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான புவிசார் அரசியல் பதட்ட நிலைகளினால் தொடர்ந்தும் தீவிரமடையும். இது 2022இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் சுட்டெண்ணானது தொடர்ந்து உயர்வடைய வழிவகுத்தது.

உலகிலுள்ள அநேகமான மத்திய வங்கிகள் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் 2021இன் முன்னைய காலப்பகுதியிலும் கணிசமான நாணயத் தளர்வு வழிமுறைகளைப் பின்பற்றி பல்வேறு பொருளாதாரங்களின் கொள்கை வட்டி வீதங்கள் வரலாற்று ரீதியான தாழ்வான மட்டங்களை அடைவதற்கு வழிவகுத்தன. நாணயக் கொள்கை மற்றும் வெற்றிகரமான தடுப்பூசியேற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக பல்வேறு கொள்கை ஆதரவினால் பங்களிப்புச் செய்யப்பட்டு, 2021 ஆண்டுக் காலப்பகுதியில் மீட்சியடைகின்ற சமிக்ஞைகளை உலகப் பொருளாதாரம் காண்பிக்க ஆரம்பித்துள்ளது. குறிப்பாக, ஏராளமான நாடுகளிலுள்ள கேள்வி நிலைமைகள் நிரம்பல் நிலைமைகளை விட விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்ப ஆரம்பித்து அதன்மூலம் பல்வேறு துறைகளில் விலை அழுத்தங்களையும் உருவாக்கின. இதன் விளைவாக, பல்வேறு நாடுகள் குறிப்பாக முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் அதிகரிக்கும், பணவீக்க அழுத்தங்கள் மற்றும் பாதகமான

பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை கருத்திற்கொண்டு இதுவரை மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான நாணயக் கொள்கை தளர்வு வழிமுறைகளை விளைவற்றதாக்குவதற்கும் நாணய நிலைமைகளை இறுக்கமடையச் செய்வதற்கும் ஆரம்பித்தன. மேலும், ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளிற்கிடையிலான யுத்தத்தால் தூண்டப்பட்ட அண்மைய உலகளாவிய அரசியல் நிச்சயமற்றதன்மையும் நிரம்பல் இடையூறுகளும் பல்வேறு பொருளாதாரங்களின் விலை மட்டங்கள் மீதான மேலதிக அழுத்தங்களையும் உருவாக்கி கடந்த காலத்தில் எறிவுசெய்யப்பட்டு அனுபவிக்கப்பட்ட மட்டங்களைவிட கணிசமாளவில் உயர்வாக காணப்படுகின்ற பணவீக்க வீதங்களுக்கு முகம்கொடுப்பதற்கு கொள்கை வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு பல அரசாங்கங்களை வலியுறுத்தின. 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 40 ஆண்டு உயர்வொன்றாக ஐக்கிய அமெரிக்காவின் பணவீக்கம் அதிகரித்தமையால் பணவீக்க அழுத்தங்களை கருத்திற்கொண்டு, கடந்த இரு ஆண்டுகளாக 0.00 சதவீத்திலிருந்து 0.25 சதவீத வீச்சில் பெடரல் நிதியங்கள் இலக்கிடல் வீதத்தை பேணிய ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ஒதுக்கானது இதனை 2022 மாச்சில் 25 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்தது. இத்தகைய கொள்கை வட்டி வீத அதிகரிப்பிற்கு மேலதிகமாக, பெடரல் ஒதுக்கானது அண்மைய காலத்தில் கொள்கை வட்டி வீத உயர்வுகளுடனும் அதன் ஐந்தொகையின் சுருக்கத்துடனும் கூடிய நாணயக் கொள்கையை மேலும் இறுக்கமடையச் செய்வதற்கான சமிக்ஞையையும் காட்டியது. உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிப்படைந்த பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டு 2020ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றை பின்பற்றிய இங்கிலாந்து வங்கியானது 2021 இறுதியளவில் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை இறுக்கமாக்கத் தொடங்கியது. நோய்த்தொற்று காலப்பகுதியில் நிலவிய வங்கி வீதத்துடன் ஒப்பிடுகையில் இங்கிலாந்து வங்கியானது 2022 மாச்சு இறுதியளவில் அதன் வங்கி வீதத்தை மூன்று படிமுறைகளில் 65 அடிப்படை புள்ளிகளால் அதிகரித்துள்ளது. ஐரோப்பிய மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வீதமானது ஏற்கனவே பூச்சிய மட்டத்தை அடைந்துள்ளமையினால், நோய்த்தொற்று காலப்பகுதியின் போது, ஐரோப்பியப் பிராந்தியத்தில் கொள்கை தளர்த்தலானது முதன்மையாக சொத்து கொள்வனவு திட்டங்களுடன் முன்னெடுக்கப்பட்டது. எனினும், தேறிய சொத்துக்களின் கொள்வனவுகள் படிப்படியாக குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை தேறிய சொத்துக்களின் கொள்வனவுகள் முடிவடைந்த பிறகு கொள்கை வீதங்களில் ஏதேனும் சீராக்கங்கள் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வட்டி வீத பாதையில் முன்னோக்கிய வழிகாட்டலை வழங்குவதையும் ஐரோப்பிய மத்திய வங்கி உறுதிசெய்துள்ளது. இதற்கிடையில், சீனா உட்பட பல்வேறு ஆசிய பொருளாதாரங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் ஆதரவு வழங்கும்பொருட்டு தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கையை தொடர்ந்தும் பின்பற்றின. 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீன மக்கள் வங்கியானது பணவீக்கத்தின் தாழ்ந்த மட்டம் மற்றும் ஆதனத் துறையிலுள்ள சிக்கல்கள் மற்றும் சில பகுதிகளில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மீளெழுச்சி காரணமாக ஏற்பட்ட வளர்ச்சி கரிசனைகளுக்கு மத்தியில் நாணயக் கொள்கையைத் தொடர்ந்தும் தளர்த்தியது. இந்திய றிசேர்வ் வங்கி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டை தொடர்ந்தும் பேணிய அதேவேளை எதிர்வரும் காலக்கட்டத்தில் பணவீக்கம் இலக்கிற்குள் இருப்பதை உறுதிசெய்வதற்காக நாணயத் தூண்டல்களை புறக்கீடுசெய்வதில் கவனம்செலுத்தியது. 2020ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பல்வேறு படிமுறைகளில் அதன் ஓரிரவு கொள்கை வீதத்தை 1.75 சதவீதமாகக் குறைத்த மலேசிய நெகரா வங்கியானது 2021ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டின் தொடக்கம் வரை கொள்கை வீதத்தை மாற்றமின்றி பேணியதன் மூலம் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டை தொடர்ச்சியாகப் பேணியது. பணவீக்க அழுத்தங்களினால் உந்தப்பட்ட கேள்வி தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்பட்டமை மற்றும் வலு மற்றும் உணவு விலைகளின் நிலைப்படுத்தலுடன் நடுத்தர காலப் பணவீக்க எறிவுகள் இலக்கு மட்டங்களுக்கு மீளுமென எதிர்பார்க்கப்பட்டமை என்பவற்றினால் தாய்லாந்து வங்கியானது அதன் தளர்த்தப்பட்ட கொள்கை நிலைப்பாட்டினைப் பேணுவதன் மூலம் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதன் முக்கியத்துவத்தினைத் தொடர்ந்தும் பேணியது. இதற்கொத்ததாக, பிலிப்பைன்ஸ் மத்திய வங்கியும் 2021 காலப்பகுதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பேணியதுடன் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டு 2022 மாச்சளவில் அதிலிருந்த விலகியிருக்காத போதிலும் பணவீக்க எதிர்பார்க்கைகளாக உறுதிநிலையற்றதாக்குகின்ற பணவீக்க அழுத்தங்களைத் தீர்ப்பதற்கான அதன் தயார்நிலையினை வலியுறுத்தியது. இந்தோனேசியக் கொள்கை நடத்தையும் மேலே கலந்துரையாடிய பிற தென்கிழக்காசியப் பொருளாதாரங்களை ஒத்திருந்ததுடன் இந்தோனேசிய வங்கியானது அதன் கொள்கை வீதத்தினை 2021ஆம் ஆண்டின் முன்னைய காலப்பகுதி தொடக்கம் நிலையாகப் பேணியது. அதேநேரம், இந்தோனேசிய வங்கி ஒதுக்குத் தேவைப்பாடுகளைக் கிரமமாக அதிகரித்ததன் மூலம் திரவத்தன்மை நிலைமைகளை வழமைக்குத்திருப்பியது. 2020 காலப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் உலகெங்கிலுமுள்ள அநேகமான மத்திய வங்கிகளினால் பின்பற்றப்பட்ட பெரும்பாலான ஒத்தியங்கும் கொள்கைத் தளர்த்தல்களுக்கு மாறாக, நாடுகளுக்கிடையில் அத்தகைய தளர்த்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் முடிவுறுத்தலானது வேறுபட்டதாகப் புலப்படுவதற்குப் பணவீக்க அழுத்தங்களின் மாறுபட்ட மட்டங்கள், அத்தகைய அழுத்தங்களிற்கான

1

உள்ளார்ந்த காரணிகள் மற்றும் வளர்ச்சித் தோற்றப்பாடு தொடர்பிலான கரிசனைகள் என்பன காரணமாயமைந்தன. சில பொருளாதாரங்கள் மற்றையவற்றினைப் பார்க்கிலும், குறிப்பாக நிரம்பல் பக்க சீராக்கங்களுடன், சிறப்பான முறையில் பணவீக்க அழுத்தங்களை முகாமைத்துவம் செய்துள்ளதாகப் புலப்படுகின்ற வேளையில், அநேகமான நாடுகள் விலை உறுதிப்பாட்டிற்கும் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான வளர்ச்சியினது மீட்சிக்கும் இடையில் சமநிலையைப் பேணுவதற்கு முயற்சித்துள்ளன. ஆயினும், 2022 மார்சு மாதமளவில் ரஷ்யா-உக்ரேன் நாடுகளுக்கு இடையிலான யுத்தத்துடன் தொடர்புடைய முன்னேற்றங்கள் உலகளாவிய பொருளாதாரத் தோற்றப்பாட்டில் கணிசமானளவிலான நிச்சயமற்றதன்மைக்கு வழிவகுத்தன. மாறுபட்ட பொருளாதாரங்களுக்கிடையில் யுத்த விளைவுகளின் ஊடுகடத்தலானது பன்முகப்படுத்தப்பட்டிருக்கல ாமென்பதனால் நாடுகளுக்கிடையிலான பொருத்தமான நாணயப் பதிலிறுத்தல்கள் கணிசமானளவு மாறுபடலாமென 2022 ஏப்பிறல் மாத உலகளாவிய பொருளாதாரத் தோற்றப்பாடு கூறியுள்ளதுடன் எதிர்வரும் காலப்பகுதியில் கொள்கை நம்பகத்தன்மையினைப் பேணும் பொருட்டு தெளிவான தொடர்பூட்டல் மற்றும் தரவுகளினால் உந்தப்பட்ட முன்னோக்கிய வழிகாட்டல் என்பவற்றின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகிறது.

1.4 பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு

நடுத்தர காலத்தில் பொருளாதாரத்தினை உத்வேகமடைய வசதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் பொருளாதாரச் சீராக்கச் செயற்றிட்டமொன்றுடன் இணைந்து படுகடன் மறுசீரமைப்புச் செயற்றிட்டம் மற்றும் நீண்ட காலமாக பிற்போடப்பட்ட கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்கள் என்பவற்றுடன் பொருளாதாரமானது மீளமையவுள்ளமையினால் இலங்கைப் பொருளாதாரமானது குறுங்காலத்தில் மிதமாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் இறைப் பக்கங்கள் ஆகிய இரண்டினதும் மீதான அதிகரித்தளவிலான பாதிப்படையக்கூடிய தன்மைகள், அதிகரிக்கின்ற சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் உறுதிப்பாடின்மை, உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்கள், உள்நாட்டு வலு நெருக்கடி மற்றும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு ரீதியில் உயர்வடைந்து காணப்படும் பண்ட விலைகள் என்பவற்றிலிருந்து பொருளாதாரத்தில் தோற்றம்பெற்றுள்ள பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடின்மையின் கட்டியெழுப்பலானது 2022இல் வளர்ச்சி வாய்ப்புக்களைக் குறிப்பிடத்தக்களவு மெதுவடையச்செய்யுமெனவும் உடனடி எதிர்காலத்தில் நீடித்த தாக்கங்களையேற்படுத்தி வளர்ச்சியில் மெதுவடைதலொன்றிற்கு வழிவகுக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், இடைக்காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளை இடைநிறுத்துகின்ற அறிவிப்பு மற்றும் படுகடன் மறுசீரமைப்புச் செயற்றிட்டத்திற்கான அர்ப்பணிப்பு என்பவற்றிற்கு மத்தியில் பொருளாதாரச் செயற்பாடானது மேலும் மெதுவடையும் சாத்தியமுள்ளது. எனினும், பன்னாட்டு நாணய நிதியத்துடனான ஈடுபாடு, மேம்பட்ட நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்புக்கள் என்பவற்றுடன் பிணைந்து உள்நாட்டுப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டினை நோக்காகக்கொண்ட முன்மதியுடைய பேரண்டப்பொருளாதார கொள்கைகளின் செயற்படுத்தலானது நடுத்தர காலத்தில் வளர்ச்சி வேகத்தினை மீளமைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நாணயக் கொள்கையினை வலிந்து இறுக்கமடையச்செய்தலானது நாட்டில் மிதமிஞ்சிய பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதன் மூலம் பணவீக்க எதிர்பார்க்கைகளை உறுதிநிலைப்படுத்துவதானது முதலீட்டிற்குத் தூண்டுதலளிக்கும் சூழலொன்றினை நிறுவுவதற்கு இன்றியமையாததாகும். எனினும், குறுங்காலத்தில், வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்க உயர்வடைதலானது கடன்வழங்கலை ஊக்கமிழக்கச்செய்து பொருளாதார வளர்ச்சியை பாதிப்படையச்செய்கின்ற போதிலும் செலாவணி வீதம் தொடர்பிலான வட்டி வீத முரண்பாடுகளையும் அழுத்தங்களையும் ஓரளவு தீர்க்கலாம் என்பதன் மூலம் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட கால ஓட்டத்தில் உற்பத்தித்திறன்மிக்க முதலீட்டினைக் கவரும். இறுக்கமாக்கப்பட்ட நாணயக்கொள்கை உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியினைச் சாதகமாக நிலைப்படுத்துவதில் முக்கியமானதொன்றாகக் காணப்பட்டு வெளிநாட்டுச் செலாவணியின் பாய்ச்சலை வசதிப்படுத்தும். இறுக்கமான நாணயக்கொள்கையின் காலங்கடந்த விளைவுகளினால் தனியார் துறைக்கான கொடுகடன் அதேபோன்று விரிந்த பண நிரம்பல் என்பவற்றின் விரிவாக்கமானது 2023இல் ஓரளவு மிதமடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படும் வேளையில், எதிர்பார்க்கப்படும் இறைத்திரட்சி முயற்சிகள் பொருண்மியமாகலாமென்பதனால் தேறிய அரசிற்கான கொடுகடன் விரிவாக்கத்தில் மிதமடைதலுக்கு மத்தியில் விரிந்த பண மற்றும் தனியார் துறைக் கொடுகடன் என்பவற்றின் வளர்ச்சி இயல்புநிலைக்குத்திரும்புமெனவும் 2024 தொடக்கம் நடுத்தர காலத்தில் மேம்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய கேள்வியில் எதிர்பார்க்கப்படும் மீட்சியுடன் சாதகமான செலாவணி வீதங்கள் மற்றும் வர்த்தகப்படுத்தப்படக்கூடிய துறையினை மேம்படுத்துவதற்கான கொள்கைகளுடனும் எதிர்வரும் காலப்பகுதியில் வலுவடைவதற்கு முன்னர் 2022 காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மிதமடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2022 மற்றும் எதிர்வரும் காலப்பகுதியில் இறுக்கமான நாணயக்கொள்கை மற்றும் இறக்குமதிகளுக்கு நிதியிடலிலுள்ள பிரச்சினைகள் காரணமாக இறக்குமதிகளுக்கான கேள்வி குறைவடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படும் வேளையில், எரிபொருள் உள்ளடங்கலாக உயர்ந்தளவிலான உலகளாவிய பண்ட விலைகள் இறக்குமதிகளை ஒப்பீட்டளவில்

உயர்வடைந்த மட்டங்களில் பேணும் சாத்தியமுள்ளது. ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடானது நடுத்தர காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறையின் சுருக்கமொன்றினை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, உலக பொருளாதாரமும் உலகெங்கிலுமுள்ள மக்களின் நடமாட்டமும் படிப்படியாக இயல்புநிலைக்கு திரும்புவதனால், தற்போது காணப்படும் சமூக பொருளாதார சீரற்ற நிலை தணிந்தவுடன் இலங்கை எதிர்வரும் காலங்களில் சுற்றுலாத் துறையிலிருந்து பயனடையும் சாத்தியமுண்டு. போக்குவரத்து பணிகள் நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்படும் மீட்சியுடனும் தகவல் தொழில்நுட்பம் /வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலின் துணை துறைகளின் உயர் வளர்ச்சியுடனும் இணைந்து நடுத்தர காலத்தில் பணிகள் கணக்கில் மிகையை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இடைக்காலப்பகுதிக்காக வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவினை இடைநிறுத்துதல் மற்றும் படுகடன் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட தொடக்கத்தின் காரணமாக வெளிநாட்டுப் படுகடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகளை செலுத்துவது மீது எதிர்பார்க்கப்படும் சேமிப்புகளுடன், முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையானது முன்னோக்கிய காலப்பகுதியில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக நாட்டை விட்டு புறப்படுதலின் படிப்படியான முன்னேற்றம், உலகளாவிய பயணத்தின் முன்னேற்றம், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் முறையான வழிகளினூடாக அனுப்பப்படும் பணவனுப்பல்களின் பாய்ச்சலில் எதிர்பார்க்கப்படும் மீட்சி ஆகியவற்றுடன் தொழிலாளர் பணவனுப்பல்கள் நடுத்தர காலப்பகுதியில் சீராக மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்விளைவாக, வெளிநாட்டு நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையானது நிலையான மட்டமொன்றுக்கு படிப்படியாக குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கொழும்பு துறைமுக நகரத்திற்கும் ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் போன்ற கைத்தொழில் வலயங்களின் அபிவிருத்திக்கும் எதிர்பார்க்கப்படும் படுகடனை உருவாக்காத உட்பாய்ச்சல்கள் மூலமாக நிதியியல் பாய்ச்சல்கள் நடுத்தரக் காலத்தில் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. படுகடன் மீள்கட்டமைப்பு திட்டத்திலிருந்தும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் பொருளாதார சீராக்கமொன்றுடன் எதிர்பார்க்கப்படும் ஈடுபாடு ஆகியவற்றிலிருந்து மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையினால் நிதியியல் கணக்குகளுக்கான

வுயடிடந 1.5

அண்மைக்கால பேரண்டப் பொருளாதார எறிவுகள் (அ)

குறிகாட்டி	அலகு	2020 (ஆ)	2021 (இ)	2022 (எறிவுகள்)
உண்மைத்துறை (ஈ)				
உண்மை மொ.உ.உ. வளர்ச்சி	%	-3.6 (இ)	3.7	1.0
நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ.	ரூ.பில்	15.0 (இ)	16.8	20.7
தலைக்குரிய மொ.உ.உ.	ஐ.அ.டொ.	3,695 (இ)(உ)	3,815	3,041
மொத்த முதலீடு	மொ.உ.உ. இன் %	25.1 (இ)(ஊ)	27.7	28.0
உள்நாட்டு சேமிப்புகள்	மொ.உ.உ. இன் %	18.7 (இ)(ஊ)	20.1	19.5
தேசிய சேமிப்புகள்	மொ.உ.உ. இன் %	23.6 (இ)(ஊ)	23.8	25.4
வெளிநாட்டுத்துறை				
வர்த்தக இடைவெளி (ஈ)	மொ.உ.உ. இன் %	-7.4	-9.6	-12.4
ஏற்றுமதிகள்	ஐ.அ.டொ.பில்	10.0	12.5	13.0
இறக்குமதிகள்	ஐ.அ.டொ.பில்	16.1	20.6	21.4
நடைமுறை கணக்கு நிலுவை (ஈ)	மொ.உ.உ. இன் %	-1.5	-4.0	-2.6
வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள்	இறக்குமதி மாதங்கள்	4.2	1.8	1.5
இறைத் துறை (ஈ)(எ)(ஏ)				
திரண்ட இறை நிலுவை	மொ.உ.உ. இன் %	-11.1 (ஐ)	-12.2	-10.2
மத்திய அரச படுகடன்	மொ.உ.உ. இன் %	100.6	104.6	108.2
நாணயத் துறை மற்றும் பணவீக்கம்				
விரிந்த பண வளர்ச்சி (M_{2b}) (ஒ)	%	23.4	13.2	12.7
தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி (M_{2b} இல்) (ஒ)	%	6.5	13.1	10.0
ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஓ)	%	4.6	6.0	22.0

(அ) 2020 ஏப்பிறல் நடுப்பகுதி வரை கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் தினைக்களத்தின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 தள ஆண்டு)
(உ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(ஊ) 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு, உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் என்பனவற்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் தினைக்களம் முறையே 25.2%, 18.9% மற்றும் 23.9% திருத்தியமைத்துள்ளது
(எ) இறைத்துறை எறிவுகள் நிதி அமைச்சிலிருந்தான உள்ளீடுகளை அடிப்படையாகக் கொண்டவை.
(ஏ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் தினைக்களத்தினால் 2022 மார்ச்சு 29இல் வெளியிடப்பட்ட 2019 இற்கான திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஐ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, 2020 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள் குறிப்பிடப்பட்டிருந்தன
(ஒ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஓ) கொ.நு.வி.சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் தினைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

1

பாய்ச்சல்களுக்கு ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையில், இறைத் திரட்சிக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு, பொருத்தமான வரி கட்டமைப்புடன் அரசிறை திரட்டலை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் அதேபோன்ற படுகடனல்லாத வெளிநாட்டுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்கான முயற்சிகள் போன்றன பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு இன்றியமையாதவையாகும். இதற்கமைய, இலங்கை பொருளாதாரமானது நடுத்தர காலப்பகுதியில் அதன் வளர்ச்சி ஆற்றலை அடையும் பொருட்டு, பொருளாதார உறுதிப்பாட்டை இலக்காகக் கொண்டு முன்மதியுடைய பேரண்டப்பொருளாதார கொள்கைகளினால் ஆதரவளிக்கப்பட்டு 2023இலிருந்து படிப்படியாக உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனூடாக, பொருளாதாரத்தின் உற்பத்தித்திறனை விரிவுபடுத்துகின்ற அதேவேளை நீண்டகாலமாக காணப்படுகின்ற அமைப்பியல் பிரச்சனைகளைத் தீர்க்கும்.

பல்வேறு அமைப்பியல் சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதுடன் பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித் திட்டமொன்றுக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல், வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகளில் வரவிருக்கும் மீள்கட்டமைப்புக்கள், இறைத் திரட்சியை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் உள்ளடங்கலாக சமீபத்தில் (2022 ஏப்பிறல் தொடக்கத்தில்) அறிவிக்கப்பட்ட கொள்கை மாற்றங்களின் தாக்கம் மீது நடுத்தர கால பேரண்டப்பொருளாதார கட்டமைப்பின் எறிவுகளுக்கு போதியளவு தகவல்கள் தேவைப்படுகின்றன. இக் கொள்கை அறிவிப்புக்களில் பெரும்பாலானவை தற்போது ஆரம்பக் கட்டத்திலேயே இருப்பதனால், மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் கிரமமாக வெளியிடப்படும் நடுத்தர கால பேரண்டப்பொருளாதார கட்டமைப்பானது கிடைக்கப்பெறவில்லை, அதற்கு பதிலாக 2022இற்கான முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளுக்கான எறிவுகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. முக்கிய பேரண்டப்பொருளாதார மாறிகளுக்கான விபரமான எறிவுகள் கிடைக்கப்பெற்றவுடன், நடுத்தர கால பேரண்டப்பொருளாதார கட்டமைப்பானது மத்திய வங்கியின் வரவிருக்கும் வெளியீடுகளில் கிடைக்கப்பெறும்.

1.5 பிரச்சனைகளும் கொள்கைகளும்

பல தசாப்தங்களுக்கும் மேலாக, இலங்கையின் பொருளாதாரம் அதில் இடம்பெற்று வந்த பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, குறிப்பாக, நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக் குறிகாட்டிகளின் நியதிகளில், சமூக உட்கட்டமைப்பில் காணப்பட்ட நிலையான முதலீடுகளுடன் சேர்ந்து, அதன் இணைத்தரப்பினர்களை வேகமாக விஞ்சிக் காணப்பட்ட போதிலும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பேரண்டப் பொருளாதார உறுதித் தன்மையினையும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியினையும் உறுதிப்படுத்துவதற்கு நாட்டின் பொருளாதார வாய்ப்புக்களை மறைத்துவிட்ட விடாப்பிடியான அமைப்பியல் தடைகளை அவசரமானதொரு அடிப்படையில் கட்டுப்படுத்துவது மிக அவசியமானதாகவுள்ளது. சுதந்திரமடைந்த காலத்தில் இலங்கை விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமாக மிகச்சிறந்த வலுவான நிலையில் காணப்பட்டதுடன் ஆசியாவின் மிகச் சிறந்த வலுவான நாடுகளிலொன்றாகவும் விளங்கியது. நாட்டின் தனித்துவமான உபாய ரீதியான புவிசார் அமைவிடம், பிரதான கடற்பாதையில் கடற்போக்குவரத்து மையம் மற்றும் வர்த்தக மையம் என்ற அடையாளம் மற்றும் சுதந்திரத்தினை நோக்கிய[1] படிப்படியான பரிணாம வளர்ச்சியில் நேர்த்திமிக்க தன்மைக்கான மாதிரி அடையாளம் ஆகிய சிறப்புத்தன்மைகள் என்பவை அணிசேரா இராஜதந்திரம், நன்கமைந்த சனநாயகம், மனித மூலவளங்களில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட முதலீடு, உயர்மட்ட கல்வி அறிவினை தோற்றுவித்த இலவசக் கல்வி, வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலத்தினை அதிகரித்த இலவச சுகாதாரம் ஆகிய நியதிகளிலமைந்த சமூக உட்கட்டமைப்பு, பௌதீக உட்கட்டமைப்பில் முன்னேற்றங்களைத் தோற்றுவித்த மூலதன இருப்பில் செய்யப்பட்ட முதலீடுகள், அதேபோன்று சந்தை சார்ந்த முன்னேற்றகரமான கொள்கைகள் மற்றும் மற்றைய தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களுக்கெல்லாம் முன்னதாக நடைமுறைக்கிடப்பட்ட திறந்த வர்த்தகம் என்பனவற்றையெல்லாம் உள்ளடக்கிய மற்றைய பல நேர்க்கணியத் தன்மைகளுடன் சேர்ந்து ஆசியாவில் சுபீட்சம்மிக்க தேசமாக மாறுவதற்கேற்ற விதத்தில் பொருளாதாரமானது சுமூகமாக மாறிக்கொள்வதற்கான தூண்டுதலளிக்கும் சூழ்நிலையொன்றினை வழங்கின. அத்தகைய சாதனைகளெல்லாம் காணப்பட்டமைக்கிடையிலும் நாட்டின் நீண்டகாலப் பொருளாதார முன்னேற்றம் அதன் உள்ளார்ந்த வளர்ச்சிக்கும் கீழே காணப்படுகின்ற தன்மையானது சுபீட்சத்தினை நோக்கிய பயணத்தில் தாமதத்தினை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கையின் பொருளாதாரம் தாழ்ந்த வருமான நாடு என்ற அந்தஸ்திலிருந்து தாழ்ந்த நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்திற்கு புதிய புத்தாயிரமாம் ஆண்டுகாலப்பகுதியிலேயே மாறக்கூடியதாக இருந்தபோதும் அத்தகைய முன்னேற்றத்தினை மக்களின் நன்மைக்கான உயர்ந்த பொருளாதார அந்தஸ்த்தினை அடைந்துகொள்ளும் விதத்தில் நிலையாக பேணிக்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக உயர் வருமான நாடொன்றாக மாறவேண்டிய பொருளாதாரத்தின் முன்னேற்றம் கணக்கற்ற சவால்களினால் ஆரம்பத்திலேயே கிள்ளி எறியப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்றதிலிருந்து கடந்த ஏழு தசாப்த காலமாக பொருளாதாரச் செயலாற்றம் உள்நாட்டு மோதல்கள், இயற்கை அனர்த்தங்கள், மனிதனால் இழைக்கப்பட்ட பேரழிவுகள், நோய்கள், இடைக்கிடையிலான வெளிநாட்டு அதிர்வுகள், பலயீனமான நிறுவனங்கள், ஊழல், விரயம், சுயநலம் மற்றும் அரசியல் உறுதித்தன்மையற்ற குறிப்பிட்ட நிகழ்வுகள் என்பன

1 லீ குவான் யூ 2000, 3ஆம் உலகத்திலிருந்து முதலாவதற்கு - சிங்கப்பூரின் கதை: 1965 - 2000, சிங்கப்பூர்: சிங்கப்பூர் பிறஸ் ஹோல்டிங்ஸ்

உட்பட பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் ஆளுகை என்பனவற்றுடன் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் இவையெல்லாவற்றிற்கும் மேலாக காத்திரமான பொருளாதார முகாமைத்துவத்தில் காணப்பட்ட பலயீனமான தன்மைகள் போன்ற பல காரணிகளினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதன் விளைவாக பொருளாதாரமானது வளர்ச்சியில் காணப்பட்ட தளம்பல், உயர்ந்த பணவீக்க நிகழ்வுகள், குறிப்பாக, விடாப்பிடியான பாரிய இறைப் பற்றாக்குறை மற்றும் படுகடன் சுமை ஆகிய நியதிகளில் இறையின் சமநிலையற்ற தன்மை மற்றும் வெளிநாட்டு மற்றும் நாணயத் துறை உறுதிப்பாட்டின் மீதான இறைச் சமநிலையற்றதன்மை மற்றும் இறையின் சமநிலையற்ற தன்மையின் கசியும் தாக்கங்கள் என்பனவற்றினால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. நாட்டின் இயலாற்றலுக்கும் மிக அதிகமாக மிகையான விதத்திலான செலவிடலின் காரணமாக சமநிலையற்றதன்மையிலிருந்து தோன்றியதும் இறை மற்றும் வெளிநாட்டுத் துறைகளில் காணப்படும் சமநிலையற்றதன்மையில் பிரதிபலிக்கின்றதுமான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நடைமுறை கணக்குப் பற்றாக்குறை ஆகிய இரண்டு சவால்களும் முக்கிய அமைப்பியல் தடைகளாகவும் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதற்கான முக்கிய மூலங்களாகவும் விளங்குகின்றன. நீண்ட இறை விரிவாக்கங்கள் நடைமுறைக் கணக்கின் சமநிலையற்றதன்மைக்குப் பங்களித்து, அதன் மூலம் பல பேரண்டப் பொருளாதாரப் பாதிப்புக்களை ஏற்படுத்திவிடும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாக இலங்கை விளங்குகின்றது. இப்பின்னணியில், அத்தகைய நீடித்த சமநிலையற்றதன்மைகளைக் கட்டுப்படுத்துவதுவதற்கு தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களினால் எடுக்கப்பட்ட முன்மதியுடைய இறையுடன் தொடர்பான கடப்பாடுகளெல்லாம் விரிவடைந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு குறைந்த ஆயுளையே கொண்டிருந்ததுடன் இதன் விளைவாக, அதனுடன் இணைந்த வட்டிச் செலவுகளும் கரிசனைக்குரிய மட்டமொன்றிற்கு உயர்வடைந்திருக்கின்றன. மறுபுறத்தில், உயர்ந்த இறக்குமதி செலவினத்திற்கு மத்தியில் ஏற்றுமதிச் செயலாற்றம் அற்பமாக இருந்தமை, உயர்ந்த வெளிநாட்டு படுகடன் சவால் மற்றும் ஒழுங்கற்ற செலாவணி வீதம் என்பனவற்றினால் வெளிநாட்டுத் துறை பாதிக்கப்பட்டு பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கின்றன. நீண்டகாலப் பொருளாதார முன்னேற்றங்களைக் கவனத்திற் கொண்ட நிலையான தேசிய கொள்கைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக குறுங்கால மனோபாவங்களுடன் கூடிய பிரபல்யம் தரும் சமூக மற்றும் அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படும் நிலையற்ற இறைக் கொள்கைகள் நாட்டின் பேரண்டப் பொருளாதாரத்தின் குறிக்கோள்களையும் அதேபோன்று பிரசைகளின் ஒட்டுமொத்த நலனோம்புகைகளையும் எய்துவதனை நோக்கிய பயணத்திற்கு தொடர்ச்சியாக தீங்கிழைப்பனவாகக் காணப்படுகின்றன. இத்தகையதொரு பின்னணியில், இலங்கை அதன் பொருளாதார ஆற்றலில் பலத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் சமூக மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டு நியதிகளிலும் இலங்கையை விஞ்சிச் சென்று கொண்டிருக்கும் அதன் இணை நாடுகளின் வெற்றிகரமான கதைகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்வதன் மூலம் அதன் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த வளத்தினை முழுமையாக அடைந்துகொள்வதற்கு இலங்கை அடிக்கடி தவறியிருக்கின்றது. அது மட்டுமன்றி, உலகளாவிய நோய்த்தொற்று திடீரென தோற்றம் பெற்றமையும் அதனுடன் தொடர்பான நிச்சயமற்றதன்மைகளும் இலங்கையின் பொருளாதாரத்தில் கடந்த காலத்தில் அடையப்பட்ட சாதனைகளையெல்லாம் கடுமையாகப் பாதித்திருக்கின்ற வேளையில் அதன் பேரண்டப் பொருளாதார பாதிப்படையக்கூடியதன்மையை தீவிரப்படுத்தியிருக்கிறது. உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில் கட்டுப்படுத்தப்படாது நீண்டகாலமாக மீண்டும் மீண்டும் பிற்போடப்பட்டு வந்தமையும் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்படுகின்றதுமான அமைப்பியல் தடைகள் தற்பொழுது வெளிக்கிளம்பி, முறையே நாணய மற்றும் இறை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட முன்னொருபோதுமில்லாத நாணய மற்றும் இறைத் தூண்டல்களுக்கு மத்தியிலும், பொருளாதார மீட்சிக்குத் தடைகளை ஏற்படுத்தியிருக்கிறன. இது, விடாப்பிடியாகவும் கடுமையாகவும் காணப்படும் பேரண்டப் பொருளாதார சமநிலையற்றதன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கு நம்பகமான பேரண்டப் பொருளாதார திட்டங்களையும் தேசியக் கொள்கை நிகழ்ச்சிநிரலையும் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தினை கோடிட்டுக் காட்டுகிறது. ஆகவே நீண்ட காலமாக தாமதப்படுத்தப்பட்ட அமைப்பியல் பிரச்சனைகளையும் உலகளாவிய நோய்த்தொற்றினால் மேற்கிளம்பிய புதிய சவால்களையும் கட்டுப்படுத்துவற்கு வலுவான பேரண்டப் பொருளாதார முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை நிறுவுவதன் வாயிலாக விரைவாக நடைமுறைப்படுத்தக்கூடிய தெளிவானதும் திரட்சிப்படுத்தப்பட்டதுமான முயற்சிகள் பொருத்தமானதும் நிலையானதுமான கொள்கை நெறிப்படுத்தல்களுடன் தேவைப்படுகின்றன. அத்தகைய முயற்சிகள் நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற உயர் வளர்ச்சி உத்வேகத்தினை நோக்கி நாடு முன்னேறுவதற்கு வழியமைக்கின்ற வேளையில், உறுதியான பொருளாதார நிலைமைகளையும் உறுதிப்படுத்தும். இது இறுதியில் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்துவதற்கு வசதியளிக்கும்.

மேற்குறிப்பிட்டவற்றின் பின்னணியில், விசேடத் துவமானதும் அவசர கவனிப்பினைத் தேவைப்படுத்துவதுமான பொருளாதாரத்திலுள்ள முக்கிய துறைகளை கோடிட்டுக்காட்டும் நோக்குடன் பல்வேறு அமைப்பியல் பிரச்சனைகளும் ஆராயப்படுகின்றன.

பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதன் மூலமும் தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிப்பதனூடாகவும் உறுதித்தன்மை

1

வாய்ந்த நடைமுறைக் கணக்கு நிலுவையினை அடைந்துகொள்வது வெளிநாட்டுத் துறையின் சமநிலையற்றதன்மைகளிலிருந்து தோன்றுகின்ற அதிகரித்தளவிலான பாதிக்கப்படும்தன்மையினை வென்றுகொள்வதற்கு மிக முக்கியமானதாகும். விடாப்பிடியாகக் காணப்படும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை இலங்கையின் பேரண்டப் பொருளாதார தோற்றப்பாட்டில் பாரியதும் கட்டுப்படுத்தப்பட முடியாததுமான பாதிக்கப்படையக்கூடிய தன்மைகளிலொனன்றாகக் காணப்படுகின்றது. இதற்கு, வர்த்தகம் மற்றும் ஆரம்ப வருமானம் கணக்குகளின் பற்றாக்குறை தொடர்ச்சியாக விரிவடைகின்றமை முக்கிய தூண்டுதலாக விளங்குவதுடன் இவை பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கிலுள்ள மிகைகளின் மூலம் எதிரீடு செய்வதற்கு அளவிற்கு விஞ்சிய விதத்தில் பெரியனவாகவுள்ளன. கடந்த ஒரு சில தசாப்தங்களாக இலங்கையின் ஏற்றுமதிகள் முக்கிய வளர்ச்சியின் துண்டுதல்களையோ, செழிப்பான தன்மையினையோ காட்டாமைக்கு மட்டுப்படுத்தப்பட்டளவிலான பன்முகப்படுத்தல், பெறுமதிகூட்டல் குறைந்தளவில் காணப்படுகின்றமை, உலகளாவிய பெறுமதிச்சங்கிலியுடன் மெதுவாக ஒருங்கிணைக்கப்படுவது மற்றும் தொடர்ச்சியான போட்டித் தன்மைக்குத் தேவையான நவீனத்துவ ஏற்பாடுகள் குறைவாக இருக்கும் தன்மை என்பன காரணங்களாக விளங்குவதுடன் வர்த்தகப்படுத்தத்தக்க துறையில் முதலீடுகள் போதுமானதாக இருக்கவில்லை. அதேநேரம், அத்தியாவசியமல்லாத மற்றும் அவசரமற்ற இறக்குமதிகளை உள்ளடக்கிய இறக்குமதிகள் மீதான செலவினம் விரைந்த வேகத்தில் அதிகரித்து கணிசமான வர்த்தகப் பற்றாக்குறைக்கு வழியமைத்தது. இலங்கை அதன் பிராந்தியத்திலுள்ள இணை நாடுகளுக்கு முன்னதாகவே 1977இல் பொருளாதாரத்தினை தாராளமயமாக்கியதுடன் தனியார் துறையினால் தூண்டப்பட்ட அபிவிருத்தி, ஏற்றுமதியினால் வழிநடத்தப்படும் வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் ஊக்குவிப்பு போன்ற தாராளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளையும் பின்பற்றியது. இவை வெளிநாட்டு வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை உடனடியாக அடைந்து கொள்ளவும் வழிவகுத்தது. எனினும், கடந்த ஒரு சில தசாப்தங்களாக இலங்கையின் பன்னாட்டு வர்த்தகச் செயலாற்றம் குறைந்தளவில் காணப்பட்டதுடன் தொடர்ந்தும் பின்னடைவினைக் கொண்டதாக காணப்பட்டு இறுதியாக, மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு மத்தியில் வெளிநாட்டு துறைக் கடன்பாடுகளினூடாக முக்கியமாக நிதியிடப்படுகின்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைவதற்கு பங்களித்தது. வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை நிரப்புவதற்கும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை நிதியிடுவதற்குமான இக்கடன்பாடுகள் அரசின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பினை அதிகரித்தது மட்டுமன்றி, வட்டிக் கொடுப்பனவுகளின் அளவினையும் அதிகரித்தமையின் மூலம் ஆரம்ப வருமானக் கணக்கின் பற்றாக்குறை விரிவடையவும் பங்களித்தன. படுகடன் மீள்கொடுப்பனவுச் சுமையினை குறைக்கும் பொருட்டு, வெளிநாட்டுக் கடன்பாடுகள் வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கும் உற்பத்தியாக்கத்தினை உயர்த்துகின்ற தொழில்முயற்சிகளுக்கு, குறிப்பாக, வெளிநாட்டு செலாவணி வருவாய்களை உருவாக்குகின்ற வர்த்தகப்படுத்தத்தக்க துறைக்கு காத்திரமான விதத்தில் பயன்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். அதேநேரம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும் வணிகப் பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை அதிகரிக்கின்றமையின் மூலம் வர்த்தகப் பற்றாக்குறையினை குறைப்பதற்கான உபாயத்திலும் அதேவேளை பணிகள் கணக்கின் மிகைகளை அதிகரிப்பதன் மீதும் கவனம் செலுத்துவதாக இருத்தல் வேண்டும். மேலும், உற்பத்தியை பன்முகப்படுத்தல், நிலைக்குத்தாகவும் கிடற்கையாகவும் ஒருங்கிணைத்தல்களை மேற்கொள்ளுதல், உற்பத்தியைப் பகிர்ந்து கொள்கின்ற வலையமைப்பில் பங்கேற்றுக் கொள்ளுதல் மற்றும் கூறு தயாரிப்புக்களினூடாக உலகளாவிய பெறுமதிச் சங்கிலியுடன் இணைத்தல் அதேபோன்று புதிய சந்தைகளைக் கண்டறிவதன் வாயிலாக ஏற்றுமதிச் சேரிடங்களாகவுள்ள குறிப்பிட்ட சந்தைகளில் அளவுக்கதிகமாக தங்கியுள்ளமையினைக் குறைத்தல் என்பனவை உலகின் ஏனைய பகுதிகளுடன் ஒருங்கிணைக்கப்படுவதனால் கிடைக்கும் வருவாய்களை உச்சப்படுத்திக் கொள்வதற்கான இன்றியமையாத முயற்சிகளாகக் கருதப்படமுடியும் என்பதுடன் மோசமான உலகளாவிய கசிவுகளின் மூலமாக ஏற்படும் இடர்நேர்வுகளையும் குறைக்கும். அரசியல் ஆட்சியில் மாற்றங்கள் ஏற்படுகின்றமைக்கிடையில், தேசிய ஏற்றுமதி உபாயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விரைவாகவும் இடையூறுகளின்றியும் நடைமுறைப்படுத்துவது, எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை எய்துவதற்கான தேசிய நலன்களுக்கு இன்றியமையாததாகும். இடைநிலைப் பொருட்களை நிரம்பல் செய்கின்ற உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்ட கொள்கை வழிமுறைகளை, ஏற்றுமதித் துறைகளை உள்நாட்டுப் பெறுமதி கூட்டல்களை உயர்த்தும் விதத்தில் சரியான முறையில் நடைமுறைக்கிடல் வேண்டும். மேலும், புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை நோக்கி நகர்வதற்கான முன்னெடுப்புக்களும் நாடு படிம எரிபொருட்களில் தங்கியிருப்பதனைக் குறைத்து அதன் மூலம் எரிபொருள் இறக்குமதியிலிருந்து தோன்றுகின்ற நடைமுறைக் கணக்கின் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்கு உதவுகின்றது. மேலும், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையின் தாக்கத்தினைக் குறைப்பதற்கு பணிகளின் ஏற்றுமதிகள் இன்றியமையாததாக இருப்பதுடன் இதன் காரணமாக இப்பணிகளில் ஏற்றுமதியின் உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொள்வது தவிர்க்கமுடியாததாகும். குறிப்பிட்ட பணிகளின் ஏற்றுமதிகள், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம்/பணிகளை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளுதல் துறை

நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலைக் கொண்டு வருவதில் முன்னணியாளராக மாறியிருக்கிறது. உயர்ந்த உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் துறையினை அரசாங்கத்தின் உதவியுடன் தற்போதைய மட்டமான ஆண்டொன்றிற்கான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1 பில்லியனிலிருந்து நடுத்தர காலத்தில் ஐ.அ.டொலர் 5 பில்லியனுக்கு அதிகரித்தல் வேண்டும். தகவல் தொழில்நுட்பம்/ பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் துறைகளில் காணப்படும் வளர்ச்சி வாய்ப்புக்கள், உலக ரீதியாக பொருளாதாரங்களின் அதிகரித்த டிஜிட்டல் மயப்படுத்தலுடன் விரிவடைந்துள்ளதுடன் இதற்கு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் திடீர் தோற்றத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட நவீனத்துவமான பணியாற்றும் ஏற்பாடுகள் ஆதரவாக அமைந்தன. இலங்கையை டிஜிட்டல் தேசமாக மேம்படுத்துவற்கு தேர்ச்சிபெற்ற தொழிற்படையினதும் அதிநவீனத்துவம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினதும் கிடைப்பினை இலங்கை பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதன் மூலம் உயர்ந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் ஊக்குவிக்கப்படுகிறது. அத்துடன் தகவல் தொழில்நுட்பக் கல்விக் கொள்கைளை இத்துறையின் விரிவாக்கத்தினைப் பேணுவதற்குத் தேவையான மனித மூலதனத்தின் அபிவிருத்தியைப் பூரணப்படுத்தும் விதத்தில் இணைப்பது அவசியமானதாகும். மேலும் உலகளாவிய புவிசார் அரசியல் பதட்டங்களின் காரணமாக சில புதிய இடர்நேர்வுகள் தோற்றம் பெற்றிருக்கின்ற போதும் பயணக் கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டமை மற்றும் வெற்றிகரமான தடுப்பு மருந்து செலுத்தும் உத்தி என்பனவற்றின் காரணமாக உலகளாவிய நோய்த்தொற்றுக்குப் பின்னர் சுற்றுலாத்துறை மீளெழுச்சி பெறுவதற்கான சமிக்ஞைகளைக் காட்டுகிறது. எனவே, சுற்றுலாத் தொழில் துறையில் காணப்பட்ட மீட்சியின் உயர்ந்த பட்ச நன்மைகளை அடைந்து கொள்வதற்கு உயர்ந்த செலவிடல்களை மேற்கொள்கின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற உயர் பெறுமதி கொண்ட சிறப்புச் சந்தைகளில் கவனச்செலுத்துகின்ற விதத்தில் சுற்றுலாத் துறையினை பன்முகப்படுத்துவது தவிர்க்க முடியாததாகும். இதன் மூலம் பாரம்பரியமற்ற சந்தைகளையும் வேறுபட்ட நோக்கங்களுக்காகப் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளையும் அணுகுவதனை இயலுமைப்படுத்திக் கொள்ளமுடியும். அதேவேளை, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் வர்த்தப் பற்றாக்குறையின் தாக்கத்தினைக் குறைப்பதற்கு, இலங்கை மத்திய கிழக்கு பொருளாதாரங்களிலிருந்தான தொழிலாளர் பணவனுப்பல்களின் மீது பெருமளவிற்கு தங்கியிருக்கிறது. இது, இலங்கை, ஏதேனும் புவிசார் அரசியல் மோதல்கள் மற்றும் எண்ணெய் விலைத் தளம்பல்களின் காரணமாக மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் வளர்ச்சி மெதுவடைவதனாலும் இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையினை அதிகரிக்கிறது. ஆகவே மத்திய கிழக்கிலிருந்தான தொழிலாளர் பனவனுப்பல்களை நடைமுறைக் கணக்கின் குறையினை நிதியிடுவதற்கான நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மூலமாக இனிமேலும் கருதமுடியாது. எனவே குறிப்பாக, தென்கொரியா, சிங்கப்பூர், யப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்ற புதிய தொழிலாளர் சந்தைகளைக் கண்டறிவதன் மூலம் மாற்று நாடுகளைக் கண்டறிவது அவசியமாகவுள்ளது. மேலும், புலம்பெயர்கின்ற ஊழியர்களின் தேர்ச்சியை மேம்படுத்துவது உயர்ந்த மற்றும் உறுதியான வருவாய்களுடன் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள பயன்மிக்கதாக இருக்கும். மேலும் மிக முக்கியமான விடயம், தற்பொழுது பகுதியளவில் முறைசாரா மார்க்கங்களினூடாக வழிப்படுத்துகின்ற பணவனுப்பல்களை அனைத்து ஆர்வலர்களினதும் ஆதரவுடன் இலக்கிடப்பட்ட கொள்கை வழிமுறைகளினூடாக முறைசார்ந்த வங்கித்தொழில் மார்க்கங்களினூடாக அனுப்பி வைப்பது தற்போதைய கட்டத்தில் வர்த்தக இடைவெளியினை நிரப்புவதற்கு காலத்தின் தேவையாகும். விரிவடைந்து செல்லும் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்ட வழிமுறைகளுக்குப் புறம்பாக, பாரிய வெளிநாட்டுத் துறை உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும் மேம்பட்ட பேரண்டப் பொருளாதார உறுதித்தன்மைக்கும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் சொத்துப் பட்டியல் முதலீடுகள் போன்ற வடிவங்களிலமைந்த படுகடனை உருவாக்காத உட்பாய்ச்சல்களை சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்குள் கவர்ந்து கொள்வதன் மூலம் அதனை துணை நிரப்பியாக பயன்படுத்திக் கொள்வதும் இதற்கு அவசியமாகும்.

உயர்ந்த வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகள் மற்றும் படுகடன் கொடுப்பனவிற்காக இறை இடைவெளி குறைவாகவிருக்கும் தன்மை என்பனவற்றின் காரணமாக, வெளிநாட்டுத் துறையின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, முன்னோக்கிய பயணத்தில், வெளிநாட்டு துறையின் தாக்குப்பிடிக்கும்தன்மையினை வலுப்படுத்துவதற்கு படுகடனை உருவாக்காத வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களைக் கவர்ந்துகொள்வது அவசியமான தேவையாகவுள்ளது. இரட்டைப் பற்றாக்குறை நாடொன்றாக இருப்பதனால், இலங்கை வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மற்றும் அரச வரவு செலவுத் திட்டம் இரண்டிற்கும் நிதியிடுவதற்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு படுகடன்களை நாடி வந்துள்ளது. இதன் விளைவாக, மொ.உ.உற்பத்தி தொடர்பிலான வெளிநாட்டுப் படுகடனின் விகித சமமற்ற அதிகரிப்பும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அதிகரிப்பதும் அண்மைய காலத்தில் வெளிநாட்டுத் துறையின் சமநிலையற்றதன்மைக்கு பெருமளவற்றிற்கு பங்களித்திருக்கின்றது. மேலும், நாடு நடுத்தர வருமான நாடொன்றாக மாற்றமடைந்திருப்பதற்கேற்ப சலுகை ரீதியான நிதியிடல்களை அணுகுவதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் நிதியிடல் தேவைப்பாடுகளை

1

வர்த்தக கடன்களூடாகவும் நாட்டிற்கான படுகடன் வழங்கல்களினூடாகவும் மாத்திரமே நிறைவு செய்யவேண்டியிருக்கின்றது. அத்தகைய முயற்சிகளுக்கு உலகளாவிய நிதியியல் சந்தைகளில் காணப்படும் அதிகளவிலான நிச்சயமற்றதன்மை மற்றும் நாட்டிற்கான தரமிடல் தொடர்ச்சியாக குறைக்கப்படுகின்றமை என்பன தடைகளாக அமைந்துள்ளன. இதற்கமைய கடந்த இரண்டாண்டுகளாக பன்னாட்டு மூலதனச் சந்தைகளிலிருந்து போதுமான நிதிகளை இலங்கையினால் திரட்ட முடியாமற் போயிற்று. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் நலிவடைந்த உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் சில தற்காலிக அதிகரிப்புக்கள் சந்தையில் காணப்பட்ட போதிலும் உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து முதலீட்டாளர் மனோபாவம் பலயீனமடைந்ததன் காரணமாக, பங்குச் சந்தையிலும் அரச பிணையங்கள் சந்தையிலும் வெளிநாட்டு முதலீடுகள் கடந்த இரண்டாண்டுகளாக கணிசமானளவிற்கு குறைவடைந்திருக்கின்றன. ஆகவே வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்கள் போதுமானளவில் இல்லாமை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை குறிப்பிடத்தக்களவிற்கு வற்றிப்போனமை என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை வெளிநாட்டு ஒதுக்குகளைக் குறைத்தமையின் மூலமே பூர்த்திசெய்ய வேண்டியிருந்தது. இத்தகையதொரு பின்னணியில், அடிக்கடி மீண்டும் மீண்டும் வெளிநாட்டு கடன்பாடுகளைக் கூடுதலாக நாடுவதிலும் பார்க்க உடனடி எடுப்பனவுகளுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தாதனவாகவுள்ள வெளிநாட்டு நேரடி முதலீடு நீண்டகால மூலதன பாய்ச்சல்களாகவும் சொத்துப்பட்டியல் முதலீடுகள் போன்ற படுகடனை உருவாக்காத வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்களைக் கவர்வதன் மீது கவனம் செலுத்துவது மிக இன்றியமையாததாகும். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கும் உள்நாட்டு மூலதனங்களை பெருக்குவதற்கும் ஆதரவளிப்பதற்கு அப்பால், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தொழில்நுட்பவியல் கசிவுகள் எங்கும் பரந்து செல்வதனை உருவாக்குதல், மனித மூலதன அபிவிருத்திக்கு ஆதரவளித்தல், வியாபார விரிவாக்கத்திற்கு உதவுதல் மற்றும் மேம்பட்ட வெளிநாட்டுச் சந்தைகளை அணுகுவதனூடாக பன்னாட்டு வர்த்தக இணைப்புக்களை அதிகரித்தல் என்பனவற்றின் மூலமாக பொருளாதார வளர்ச்சியைப் பேண உதவுகின்றன. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2020இலும் 2021இலும் உலகளாவிய ரீதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்த போதும் கடுமையான தொழிற்சந்தை ஒழுங்குகள், பொது வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் இடர்பாடுகள், சிக்கலானதும், நிலையற்றதுமான வரி அமைப்புக்கள் மற்றும் குறிப்பாக, ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல், ஏற்றுமதி இறக்குமதி ஆவணங்கள், வியாபாரங்களை ஆரம்பித்தல், நிதிகளைப் பெற்றுக் கொள்ளுதல், சொத்துக்களைக் கையேற்றல் தொடர்பான கடினமான ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புக்கள் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்புக்கு வசதிகள் போதுமானளவு இல்லாமை போன்றனவற்றின் காரணமாக இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதன் பிராந்திய இணை நாடுகளுடன் ஒப்பிடுகையில் கடந்த தசாப்தங்களாக மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. இக்காரணிகளை விட, நிச்சயமற்ற கொள்கை, ஊழல் மற்றும் இணைப்புக்கள் தவறுதலாகப் போனமை போன்ற நிறுவனரீதியான மற்றும் ஆளுகைரீதியான பலயீனங்கள் என்பன இலங்கையில் தூண்டுதலளிக்கும் முதலீட்டுச் சூழல் உருவாக்கத்திற்குத் தடைகளை ஏற்படுத்தின. ஆகவே, முதலீட்டாளர் நம்பிக்கையினைப் பேணும் பொருட்டு அனைத்தையுமுள்ளடக்கிய முதலீட்டுக் கொள்கையை தெரிவுபடுத்துவதன் மூலமும் கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மனித தகுதிகளையும் நிறுவன ரீதியான இயலாற்றலைக் கட்டியெழுப்புவதன் மூலமும் வெளிப்படையானதும் காத்திரமானதுமான கொள்கைச் சூழலை நிறுவிக்கொள்வது இலங்கைக்கு அவசியமாகும். முதலீட்டுக் கொள்கையினை வர்த்தக மற்றும் கைத்தொழில் கொள்கைகள் போன்ற ஏனைய அரச அபிவிருத்திக் கொள்கைகளுடன் ஒருங்கிணைத்துக்கொள்வதும் இக்கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் நிறுவனங்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துவது போன்ற உபாயங்களுடன் இணங்குவித்துக் கொள்வதும் சமமான முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. இக்கரிசனைக்குரிய விடயங்களைக் திருத்திக் கொள்வதற்கு தொடர்பான அதிகாரிகளினால் ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டத்திற்கு உலகளாவிய வெளிநாட்டு நேரடிப் பாய்ச்சல்களை மீண்டும் தொடருவதற்கு முன்னதாக, இவற்றின் நடைமுறைப்படுத்தல் செயல்முறைகளை விரைவுபடுத்துவது மிக முக்கியமானதாகும். மேலும், தொழிற்சந்தை மற்றும் காணிச் சந்தை சீர்திருத்தங்களினூடாகவும் வரிச் சீர்திருத்தங்களினூடாகவும் தூண்டுதலளிக்கும் ஒழுங்குமுறைப்படுத்தும் சூழலை உருவாக்குவது இம்முயற்சியை பூரணப்படுத்த உதவும். சட்டவாட்சியை நிறுவுவதும் மதிப்பதும் ஊழலை ஒழிப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்துதல், வெளிப்படைத் தன்மையினை உறுதிப்படுத்தல் என்பனவும் இலங்கை கவர்ச்சிகரமான முதலீட்டு சேரிடமாக மாறுவதற்கு அவசியமானமையாகும். நிருவாக ரீதியான குறைபாடுகளையும் பணித் துறையில் காணப்படும் கடுமையான படிமுறைத் தடைகளையும் குறைப்பதனை நோக்கமாகக் கொண்ட கொள்கைச் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதன் மீது மீண்டும் கவனத்தினைச் செலுத்துவதும் உயர்ந்த மட்டத்திலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கும் அவற்றை தக்கவைத்துக் கொள்வதற்கும் ஒரு கருவியாக அமையும். கொழும்பு துறைமுக நகரை அபிவிருத்தி செய்வதும் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களை பண்டங்களை வர்த்தகப்படுத்தும் மையங்களாக ஊக்குவிப்பதும் எதிர்காலத்தில் கணிசமானளவு வெளிநாட்டு முதலீடுகளை நாட்டிற்குள் கவர்ந்து கொள்ள உதவும். வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சலை

அதிகரிப்பதற்கு வழிமுறைகளை எடுக்கின்ற வேளையில், வெளிநாட்டுப் படுகடன் சுமையினைக் குறைக்கின்ற நோக்குடன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிப்படுத்துகைகளை படிப்படியாகக் குறைப்பதும் முக்கியமானதாகும். மேலும், உபாயரீதியல்லாத, பயன்படுத்தப்படாத சொத்துக்களை நாணயமயப்படுத்திக் கொள்வதற்கு பயன்படுத்துவதும் மிகத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியினை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கு உதவும். மிக முக்கியமான விடயம் யாதெனில் கொடுகடன் தரமிடல் நடவடிக்கைகள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கொள்ளப்பட்ட நாடு பற்றிய எதிர்க்கணியமான கண்ணோட்டம் உள்ளிட்ட பல்வேறுபட்ட ஊடகச் செய்திகள் என்பவற்றினால் உருவாக்கப்பட்ட தேவையற்ற அச்சங்களினால் நலிவடைந்து போன முதலீட்டாளர் நம்பிக்கையினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உடனடிக் கவனம் எடுப்பதாகும். இது தொடர்பில் ஏற்கனவேயுள்ள மற்றும் முதலீட்டாளர்களாக வரக்கூடிய சாத்தியங்களைக் கொண்ட முதலீட்டாளர்களுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்தைகளில் ஈடுபடல், முதலீட்டு வாய்ப்புக்களை வசீகரித்துக் கொள்வதற்கு வர்த்தகம் மற்றும் இராஜதந்திர உறவுகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல், பெறுமதிமிக்க அளவில் சிறிய சந்தைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பிராந்திய இணைத் தரப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்துதல், பசுமை நிதியிடல் தேர்வுகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முதலீட்டு வாய்ப்புக்களைக் கண்டறிதல் என்பனவும் நன்மையளிக்கும். பசுமை மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் நிதியிடல் முயற்சிகள் தொடர்பில் பலராலும் அடையாளங்காணப்பட்ட பிரச்சனையாகவிருப்பது நியம வரைவிலக்கணங்களை, அதாவது வகைப்படுத்தலை உருவாக்குவதற்கான தேவையாகும். மத்திய வங்கி பசுமை நிதிக்கான சிறப்பியல்புவாய்ந்த சந்தை அபிவிருத்தி செய்யும் செயன்முறையில் ஈடுபட்டிருப்பதுடன் பசுமைச் செயற்றிட்டங்களுக்கு நிதியளிக்கும் போது வங்கித்தொழில் துறைக்கு முதலீட்டுப் பகுப்பாய்வுக் கட்டமைப்பினை இது வழங்கும்.

பொருளாதாரத்தில் வலுப் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கும் வலுத் துறைக்கான ஒரு முழுமையான திட்டத்தினை உருவாக்குவதற்கு சகல ஆர்வலர்களும் ஒன்றிணைந்து வேலைசெய்வதற்கான ஓர் அவசரத் தேவைப்பாடுள்ள அதேவேளையில் நேர்கணியமான விளைவுகளை உருவாக்கும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான உந்துகோல்களாக வலுத் துறை தொடர்பான அரசிற்குச் சொந்தமான வர்த்தக முயற்சிகள் இருக்கவேண்டும் என்பதனையும் உறுதிப்படுத்தவேண்டும். மின்சாரத்தின் கிடைப்பனவு 99 சதவீதத்தினை எய்தி போரிற்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் வலுத் துறை ஓர் விரைவான மாற்றத்தினைக் கண்டதுடன் நாட்டின் வலு உருவாக்கம் சார்ந்த உட்கட்டமைப்பு தளத்தின் மேம்படுத்தலில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. 2030ற்குள் நாட்டின் வலுத் தேவைப்பாட்டின் 70 சதவீதத்தினை பூர்த்திசெய்வதற்கு புதுப்பிக்கத்தக்ககூடிய வலுத் துறையினை விரிவாக்குவதற்கான அரசின் அண்மைய உந்துதல் ஓர் பாரட்டத்தக்க முன்னெடுப்பாகும். ஏனெனில் குறிப்பாக வெப்ப வலு உருவாக்கத்திற்கு இடையூறு விளைவிக்கக்கூடிய அதிகரித்துச்செல்லும் வலுப் பண்ட விலைகள் மற்றும் நீர் வலு உருவாக்கத்தினைப் பாதிக்கும் வானிலை தொடர்பான தளம்பல்கள் என்பவற்றிற்கு மத்தியில் இது வலுத் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதற்கு கணிசமாக உதவும். கடந்த பல மாதங்களாக நீண்ட மற்றும் தொடர்ச்சியான மின்சாரத் துண்டிப்புக்களினால் பொருளாதார நடவடிக்கைகளிற்கு கணிசமானளவில் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன் இது சமூக குழப்பங்களையும் அரசியல் கிளர்ச்சியினையும் கூட விளைவித்தது. ஓர் வலுச் சிக்கலாக உருவெடுக்கும் இவ்வகையிலான பாதகமான அபிவிருத்திகள் பொருளாதாரத்தின் நீடித்து நிலைத்திருக்கக்கூடியதன்மைக்கும் அதன் மீட்சி வழிமுறைக்கும் ஓர் பாரிய பின்னடைவாகும். இவ்வாறான நீண்ட நேர மின்சார துண்டிப்புக்களுக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மோசமாக பாதிப்படையக்கூடியதாகக் காணப்படும் அதே வேளையில் புடவைகள் மற்றும் பணிகள் துறையிலுள்ளோர் உள்ளடங்கலாக பல ஏற்றுமதியாளர்கள் அவர்களின் போட்டித்தன்மையை இழக்க நேரிடும். இது போட்டியாளர் நாடுகளுக்கு கேள்வியின் நகர்வினை விளைவிக்கும் சாத்தியமுள்ளது. 2020இல் மசகெண்ணெயின் விலைகளின் சடுதியான வீழ்ச்சியும் அதற்குப் பின்னர் 2021 முழுவதிலும் உயர்ந்த நீர்மின்வலு உருவாக்கத்தினை இயலச்செய்த சாதகமான வானிலை நிலைமைகளுடன் கூட, இவ்வகையிலான விலை வீழ்ச்சிகளிலிருந்து நாடு நன்மைகளை பெறமுடியவில்லை. இதே வேளையில், அரசிற்குச் சொந்தமான வர்த்தக முயற்சிகளின் தொடர்ச்சியான நலிவான நிதியியல் நிலைமையின் பகுதியிளவிலான விளைவே தற்போது காணப்படுகிற வலுத் துறை நெருக்கடியாகும், வலுவிற்கான தொடர்ச்சியான கேள்விக்கு மத்தியில் வலுப் பண்டங்களின் மேல் நோக்கிய விலைப்போக்குகள் மற்றும் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையின் பற்றாக்குறை என்பவையினால் இந்த நலிவான நிதியியல் நிலைமை மேலும் மோசமடைந்தது. வலுவிற்கான வளர்ந்துவரும் கேள்வி மற்றும் இந்த கேள்வியினை பூர்த்திசெய்வதற்கு ஓர் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வழியினை இனங்காணல் என்பவற்றினை மையமாகக் கொண்ட ஓர் நீண்ட கால வலுத் திட்டத்தினை உருவாக்குவதற்கு இத்தகைய அரசிற்குச்சொந்தமான வர்த்தக முயற்சிகளின் முன்னோக்கிய திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்திற்கு மேலதிகமாக பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் மின்சாரத் தீர்வைகள் இரண்டிற்கும் செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடலின் முக்கியத்துவத்தினை இந்த அபிவிருத்திகள் எடுத்துக்காட்டுகின்றன. அரசிற்குச் சொந்தமான வர்த்தகத் தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றல்வாய்ந்ததன்மையை வலுப்படுத்துவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் மட்டுமின்றி

1

வங்கித்தொழில் துறையினதும் பேரண்டப்பொருளாதாரத்தினதும் உறுதித்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கு செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் பொறிமுறைகளின் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும். இவ்வகையிலான பொறிமுறையின் நடைமுறைப்படுத்தலானது செயற்றிறன், வெளிப்படைத்தன்மை மற்றும் முன்கூட்டி அறியக் கூடியத்தன்மையை மேம்படுத்துவதனால் மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய விலைத் திருத்தங்கள் இரண்டினதும் பொதுமக்களின் ஏற்புத்தன்மையை மேம்படுத்தும். ஆகவே இவ்வகையிலான சந்தை அடிப்படையிலான பொறிமுறை அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகள் மற்றும் நுகர்வோர் இரண்டின் அக்கறைகளை எப்பொழுதும் பாதுகாப்பதுடன் ஏதேனும் விலை உயர்வுகளின் செலவினங்களையும் விலை வீழ்ச்சிகளினதும் நன்மைகளையும் விரைவாக ஊடுகடத்தும். இது தொடர்பில் வலுத் துறையின் சகல அம்சங்களை கருத்திற்கொண்டு ஓர் பொருத்தமான விலையிடல் பொறிமுறை மட்டுமின்றி நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நீண்ட கால உபாயங்களையும் உருவாக்குவதற்கு இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை மின்சார சபைக்குமிடையில் மட்டுமின்றி இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வலு அதிகாரசபை மற்றும் தன்னிச்சையான வலு உற்பத்தியாளர்கள் மற்றும் ஏனைய தனியார் மற்றும் பொது ஆர்வலர்களுடன் வலுவான கூட்டிணைப்பு முயற்சிகள் தேவைப்படுகின்றது. முன்னோக்கிச் செல்கையில், கொழும்புத் துறைமுக நகரம், கைத்தொழில் பேட்டைகள் மற்றம் ஏனைய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் அபிவிருத்தியிலிருந்து எழும் வலுவிற்கான அதிகரித்துச்செல்லும் கேள்வியுடன் நாட்டின் உற்பத்தித்திறனையும் போட்டித்தன்மையும் மேம்படுத்துவதற்கு நம்பகத்தன்மை, போதுமாந்தன்மை மற்றும் நியாயமான செலவுடன்கூடிய வலுப் பயன்பாடுகளின் வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான திட்டங்களை வகுப்பது அவசியமாகும்.

கொழும்பு துறைமுக நகரத்தின் உள்ளார்ந்த நன்மைகளைப் பொருளாதாரத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அதற்கு எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை விரைவுபடுத்துவதற்கு வழிமுறைகள் எடுக்கப்படுவது அவசியமாகும். பாராளுமன்றச் சட்டத்தின் நியதிகளில் அண்மையில் நிறுவப்பட்ட கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, வியாபாரங்களில் ஈடுபடுவதற்கு உரிமங்கள் மற்றும் அதிகாரமளித்தல்களை விடுப்பதன் மூலம் அல்லது வழங்குவதன் மூலமும் ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வைக்கு வசதியளித்து அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல்களுக்கு வசதியளிப்பதுடன் கொழும்புத் துறைமுக நகரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரசாங்கத்தின் சந்தைப்படுத்தத்தக்க காணியின் குத்தகைக்கும் வசதியளிக்கிறது. மேலும், இது ஒரேயொரு கூரையிலான முதலீட்டு வசதியளிப்பவராக நிறுவப்பட்டுள்ளமையினால் முதலீட்டாளர்களுக்கான ஏகத்தொடர்பு மையமாக விளங்கி வருவதுடன், விரைவுபடுத்தப்பட்ட ஒப்புதல்களினூடாக வியாபாரம் செய்யும் சூழலை இலகுபடுத்தும் பொருட்டு அதனை மேம்படுத்துவதற்கும் பன்னாட்டு நிதியியல் மற்றும் வியாபார மையங்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஏதேனும் வர்த்தக ரீதியான பிணக்குகளுக்கு விரைந்த தீர்மானங்களைக் காணவும் இதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டங்களுக்கு ஏற்கனவே வழிப்படுத்தப்பட்ட பாரிய முதலீடுகளின் காரணமாக, தற்பொழுது முக்கிய வளர்ச்சி தூண்டுதல்களின் பற்றாக்குறையினைப் கருத்திற்கொள்ளும்போது உலகளாவிய பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கின்ற முக்கிய மார்க்கமாக உள்நாட்டுப் பெருளாதாரத்திற்கான கொழும்புத் துறைமுக நகரத்தின் பங்களிப்பு, மிக முக்கியமாதாகக் காணப்படுகிறது. இருப்பினும் கூட, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களின் காரணமாக ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில், உள்நாட்டுப் பொருளாதார கஷ்டங்கள் அதிகரித்தமையுடன் சேர்ந்து தற்பொழுது காணப்படுகின்ற பன்னாட்டு முதலீட்டாளர் மனோபாவத்தின் காரணமாக செயலாற்றத்தின் ஆரம்ப கட்டங்களை நிறைவு செய்யும் போது காணப்பட்ட தருணம் சிறந்ததாக அமையததால் கொழும்புத் துறைமுக நகரத்திற்கான வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்ந்தும் மிதமானதாகவே காணப்படுகிறது. எனினும், தீவிரமான முதலீட்டாளர் வசதிப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படுமிடத்து, கொழும்பு துறைமுக நகரம் தென்னாசிய மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் முக்கிய நகரங்களுக்கு அண்மித்தாகவுள்ள அனுகூலத்தினைக் கொண்டுள்ளதனால், நடுத்தர காலத்தில் நாட்டிற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டினை அதிகரிப்பதற்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கொழும்பு துறைமுக நகரம் குறிப்பிட்ட சட்டவாக்கத்தினால் ஆளப்பட்டு, ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகளையும் கொண்டுள்ளபோதும் முதலீடுகள் மற்றும் வியாபாரங்கள் இலகுபடுத்தும் இலங்கை தொடர்பான முதலீட்டாளர்களினது முன்னுரிமையினை வசீகரித்துக் கொள்வதற்கு மிக இன்றியமையாததாகும். அத்துடன் முதலீடுகளை மேம்படுத்துவதற்காக வாய்ப்புக்களைக் கொண்ட முதலீட்டாளர்களை அணுகுவதற்காக உத்வேகமிக்கதும் பாரம்பரியமானதுமான உபாயங்களைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும். மேலும் கொழும்பு துறைமுக நகரத்திற்குள் நிதியியல் நகரமொன்றினை நிதியியல் பணிகள் மையமாக நிறுவவுள்ளமை பற்றி முன்மொழியப்பட்டிப்பதனால் இப்பொருளாதாரத்திற்கு கொழும்புத் துறைமுக நகரின் பங்களிப்பினை முழுமையாக பிரதிபலிக்கும் விதத்தில், நாட்டின் மொ.உ.உற்பத்தியில் இப்பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கி கொள்வதற்கு முக்கியமானதாகும். நிதியியல் மையமொன்றாக கொழம்புத் துறைமுக நகரை அபிவிருத்தி செய்வது நிதியியல் பணிகள், தகவல் தொழில்நுட்பம்.

சிறப்புக் குறிப்பு 02
நடுத்தரகாலத்திலிருந்து நீண்ட காலம் வரை இலங்கையின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை அடைதல்

அறிமுகம்

வெளிநாட்டுத் துறை சமநிலையின்மைகளானது பொருளாதாரத்தின் அனைத்து துறைகள் முழுவதிலும் பரந்தளவான கசிவுத்தாக்கங்களை ஏற்படுத்தி, இதன்மூலம் ஒட்டுமொத்தப் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டையும் அச்சுறுத்தக்கூடும் என்பதால் வெளிநாட்டு துறையின் உறுதிப்பாடு என்பது திறந்த பொருளாதாரமொன்றில் மிக முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றினாலும் உலகளாவிய பொருளாதாரத்திலுள்ள பாதகமான அபிவிருத்திகளாலும் எழுகின்ற சிக்கல்களுக்கு மத்தியில், இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது அண்மைய ஆண்டுகளாக முன்னெப்போதுமல்லாத சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இப்பின்னணியில், நிலைபெறத்தக்க வெளிநாட்டு படுகடன் நிலைமையாலும் முகாமைசெய்யக்கூடிய நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையாலும் வகைப்படுத்தப்படும் வெளிநாட்டுத் துறையிலுள்ள நீண்ட கால உறுதிப்பாடானது, பேரண்டப்பொருளாதார கொள்கை உருவாக்கத்தில் நடுத்தர கால முன்னுரிமைக்கு அருகில் முக்கியத்துவம்வாய்ந்ததொன்றாக அடையாளங்காணப்பட்டுள்ளது. குறுங்கால வழிமுறைகளுடன் தொடர்புடைய வெளிநாட்டுத் துறையில் நீண்ட கால உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கான நிலைபெறத்தக்க தீர்மானங்கள் இலங்கைக்கு தேவைப்படுகின்றது.

இலங்கையில் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பில் வெளிநாட்டுத் துறையின் பரிணாம வளர்ச்சி

பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரத்தை பெறுகின்ற காலப்பகுதியில், நவீன பெருந்தோட்ட துறையொன்றாலும் நிலையான செலாவணி வீத முறைமையுடனான வாழ்வாதார வேளாண் துறையொன்றாலும் வகைபடுத்தப்படும் வேளாண்மையை அடிப்படையாக கொண்ட திறந்த பொருளாதாரமாக இலங்கை காணப்பட்டது. மொத்த ஏற்றுமதிகளின் 90 சதவீதமளவில் வகைகூறப்படும் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆகிய பிரதான பயிர்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதிகள் காணப்பட்டன.

சுதந்திரத்திற்கு பின்னரான யுகத்தில் வெளிநாட்டுக் கொள்கைகள்

1950களின் ஆரம்பத்தில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

சுதந்திரத்திற்கு முன்னரான காலப்பகுதியில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை முறைமையொன்றை இலங்கை பேணியதுடன் ஆசியாவின் மிகவும் தாரளமயமான பொருளாதாரங்களில் ஒன்றாகவும் இந்நாடு காணப்பட்டது. 1950களின் பின்னர் வரை, இலங்கையானது வெளிநாட்டு ஒதுக்குகளை கணிசமானளவிற்கு கட்டியெழுப்புவதற்கு வழிவகுத்த இரு பண்ட ஏற்றங்களால் ஆதரவளிக்கபட்டு பாரியளவான வர்த்தக மிகைகளுடன் திறந்த வர்த்தக முறைமையை நிலைத்திருக்கக்கூடியதாகவிருந்தது. எவ்வாறாயினும், 1957இலிருந்து இறக்குமதிச் செலவினத்தின் துரிதமான வளர்ச்சி மற்றும் வர்த்தக மாற்று வீதத்தின் சிதைவு ஆகிய காரணங்களால் கணிசமானளவு வர்த்தகப் பற்றாக்குறைகள் பதிவுசெய்யப்பட்டன.

1950களின் நடுக்காலப்பகுதியிலிருந்து 1960களின் நடுக்காலப்பகுதி வரையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள்

1956இற்கு பின்னரான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் கடுமையான குறைவடைவை விளைவித்து பாரியளவிலான வர்த்தகப் பற்றாக்குறைகள சென்மதி நிலுவையில் அழுத்தங்களைத் தோற்றுவித்தன. இதற்கு பதிலிறுப்பாக, அரசாங்கமானது வெளிநாட்டுச் செலாவணி வரவுசெலவுத்திட்ட குழுவொன்றை தாபிப்பதன் மூலம் உணவு, பெற்றொலியம் மற்றும் மருந்தாக்கல் ஆகிய இறக்குமதிகளைத் தவிர, இறக்குமதிகள் மீது அனுமதிப்பங்குகள், உரிமங்கள் மற்றும் தீர்வைகள் என்பவற்றை விதித்தல் உள்ளடங்கலாக கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை விதித்தது. அத்தியாவசிய பண்டங்களில் இறக்குமதிச் செலவினத்தை குறைப்பதற்கும் தன்னிறைவை அடைவதற்கும் இறக்குமதி பதிலீட்டை ஊக்குவித்தல் மற்றும் உள்நாட்டு வேளாண்மை விரிவாக்கம் என்பவற்றை அடிப்படையாக கொண்டு அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாயம் காணப்பட்டது. 1960களின் நடுக்காலப்பகுதியளவில், பொருளாதாரமானது பாதுகாப்பான வழிமுறைகளுடன் பாரியளவில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுடன் மேலதிகப் பெறுமதியுடைய செலாவணி வீதமொன்றும் பேணப்பட்டது. அதேவேளை சென்மதி நிலுவை பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஏற்றுமதி ஊக்குவிப்பு உபாயங்களும் பின்பற்றப்பட்டன.

1960இன் பின்னையகாலப்பகுதியிலிருந்து 1970ஆம் ஆண்டு வரை பொருளாதாரத்தின் பகுதியளவாக தாரளாமயமாக்கல்.

1967இல் 20 சதவீத நாணய பெறுமதியிழப்புடன் இணைந்த இறக்குமதி கட்டுப்பாடுகளின் பகுதியளவான தளர்வுடன் 1966ஆம் ஆண்டிலிருந்து பன்னாட்டு வர்த்தகத்தின் பகுதியளவிலான தாராளமயமாக்கல் அனுமதிக்கப்பட்டதுடன் 1968இல் வெளிநாட்டுச் செலாவணி உரிமை சான்றிதழ் பொறிமுறையின் கீழ் இரட்டை செலாவணி வீத முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த காலப்பகுதியில் பல்புடை நிறுவனங்களான பன்னாட்டு நாணய நிதியம் போன்றவையிலிருந்து வெளிநாட்டு நிதியிடல் உதவி பெறப்பட்டாலும் 1960களில் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் கணிசமான அளவினால் நலிவடைந்தது.

1970இலிருந்து 1977 வரை இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மீளவிதித்தல்

1970இல் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சோசலிச நோக்குடைய கொள்கைகளுடன் மிகத் தீவிரமான வர்த்தக மற்றும் செலாவணிக் கட்டுப்பாடுகளையும் இக்காலப்பகுதியில் இலங்கை அனுபவித்தது. அனைத்து இறக்குமதிகளும்

1

உரிமங்களின் தேவைப்பாடுகளின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன் மரபுரீதியற்ற ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கான ஊக்கங்கள் வழங்கப்பட்டன. இக்காலப்பகுதியில், பொருளாதாரமானது எண்ணெய் நெருக்கடி, வியட்நாம் யுத்தம் மற்றும் அமெரிக்க பொருளாதாரத்தில் கட்டமைப்பு குறைபாடுகள் ஆகியவற்றிலிருந்து உலகளாவிய தலையீடுகளை எதிர்கொண்டது. இது, 1973இல் பிரெட்டன் வூட்ஸ் செலவாணி வீத முறைமையை நிலைகுலைய வழிவகுத்தது. பிரெட்டன் வூட்ஸ் முறைமை யின் நிலைகுலைவு மற்றும் சென்மதி நிலுவை அழுத்தங்கள் என்பவற்றினைத் தொடர்ந்து ஐ.அ டொலருக்கெதிரான ரூபாயின் பெறுமதியின் மாற்றத்துடன் நடைமுறைக்கொடுக்கல் வாங்கல்களினதும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களினதும் செலாவணிக் கட்டுப்பாடுகள் இறுக்கமடையப்பட்டதுடன் இத்தகைய இறுக்கமான கட்டுப்பாடுகள் 1977 வரை நடைமுறையில் காணப்பட்டன.

1977இல் திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் அறிமுகம்

உற்பத்தி மற்றும் முதலீடு என்பவற்றில் தனியார் துறையின் மேம்படுத்தப்பட்ட பங்கேற்புடன் தாராளவாத பொருளாதாரக் கொள்கைகளின் அறிமுகத்துடன் இலங்கை பொருளாதாரம் 1977இல் கணிசமான தடமொன்றைப் பதிவு செய்தது. தாராளவாத கொள்கை முறைமையின் பகுதியொன்றாக, ஒருங்கிணைந்த செலாவணி வீதமொன்றை தாபிப்பதன் மூலம் இரட்டைச் செலாவணி வீத முறைமை ஒழிக்கப்பட்டது. நிலையான செலாவணி வீத முறைமையொன்றிலிருந்து சந்தையின் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதத்தை தீர்மானிக்கின்ற மிதக்கும் செலாவணி வீதமொன்றிற்கான நிலைமாற்றமானது இலங்கையின் செலாவணி வீத கொள்கையில் தீவிர மாற்றமொன்றாகக் காணப்பட்டது. அதிகளவான செலாவணி கட்டுப்பாட்டு தளர்வு வழிமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன. கொள்கை வழிமுறைகளானது நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தடைகளை அகற்றுதல், கணியம்சார் இறக்குமதி தடைகளை நீக்கல், இறக்குமதி தீர்வைக் கட்டமைப்பு சிக்கனப்படுத்தி எளிமைப்படுத்தல் அத்துடன் விலைக் கட்டுப்பாடுகளையும் உரிமங்களின் தேவைப்பாடுகளையும் அகற்றுதல் என்பவற்றை உள்ளடக்கின. அதே நேரத்தில்,

வரைபடம் சி.கு. 2.1
நடைமுறைக் கணக்கின் உள்ளடக்கம் 1975-2021



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் சி.கு. 2.2
வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சல்கள்: இலங்கை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்திய நாடுகள் - 2020



மூலங்கள் : உலக வங்கி
வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD)
இலங்கை மத்திய வங்கி

இறைத் துறை சமநிலையின்மைகளிலிருந்து எழுகின்ற பாதகமான தாக்கங்களை குறைக்கும் நோக்கில், உணவு மானியங்களை மீளக்கட்டமைத்தல், அரசாங்க தொழில் முயற்சிகளை தனியார்மயமாக்கல் அத்துடன் தனியார்துறையினால் முன்னெடுக்கப்பட்ட வளர்ச்சியினை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு இறை சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஏற்றுமதி கைத்தொழல்களுக்கும் ஏற்றுமதி செயன்முறை வலயங்களுக்கும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்கள் செலாவணிக் கட்டுபாட்டு தளர்வுகளுடன் 1977இற்கு பின்னர் படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்தன. இதனைத் தொடர்ந்து, பொருளாதாரம் அதன் போக்கை முதன்மையாக விவசாயப் பொருளாதாரத்திலிருந்து பணிகள் மற்றும் கைத்தொழில்துறை துறைகளால் தூண்டப்பட்டதற்கமைவாக இலங்கையானது அதன் பிராந்திய ரீதியான சக நாடுகளுடன வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில் பல முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டது.

வெளிநாட்டுத்துறை: நடைமுறை நிலைமைகளும் பிரச்சினைகளும்

கடுமையான உயர் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறைகள்

இலங்கையானது கடந்த சில ஆண்டுகளாக வணிக வர்த்தக கணக்கிலும் முதலாந்தர வருமான கணக்கிலும் ஏற்பட்ட பாரிய பற்றாக்குறை மூலம் பிரதானமாக தூண்டப்பட்டு கடுமையான வெளிநாட்டு நடைமுறைக்கு கணக்கு பற்றாக்குறைகளை அனுபவித்து வருகின்றது. பணிகள் வர்த்தகக் கணக்கும் தொழிலாளர் பணவனுப்பல்களை உள்ளடக்குகின்ற இரண்டாந்தர வருமானக் கணக்கும் மிகைகளை பதிவுசெய்த போதிலும், இத்தகைய மிகைகளானது நடைமுறைக் கணக்கில் வணிகப் பொருட்களின் வர்த்தகம் மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறைகளின் தாக்கத்தைத் பாதுகாப்பதற்கு பாரியளவில் போதியளவாக காணப்படவில்லை. ஏற்றுமதி வருவாய்களிலுள்ள மந்தமான செயலாற்றமும் அதிகரிக்கின்ற இறக்குமதிச் செலவினமும் கடந்த ஆண்டுகளில் வணிகப்பொருள் வர்த்தகத்தில்

விரிவான பற்றாக்குறையொன்றிற்கு வழிவகுத்தது. 1977இல் தாரளவாத பொருளாதாரக் கெள்கைகளை பின்பற்றுவதில் பிராந்தியத்திலுள்ள நாடுகளில் முதலாவது நாடாக இலங்கை காணப்பட்டிருந்த போதும் அதன் திறந்த வர்த்தகம் குறைவாகவே காணப்படுகிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புடைய ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் கூட்டுத் தொகையாக காணப்படுகின்ற திறந்த வர்த்தகமானது 1977இல் 36.4 சதவீதமாக காணப்பட்டதுடன் 1979இல் இது 72.2 சதவீதத்தால் அண்ணளவாக இரட்டிப்பானது. எவ்வாறாயினும், இலங்கையின் திறந்த வர்த்தகம் 38.0 சதவீதமாக காணப்படுமிடத்து 2019ஆம் ஆண்டளவில் தாராளமயமாக்கலுக்கு முன்னைய யுகத்தில் காணப்பட்ட மட்டங்களுக்கு வீழ்ச்சியடைகின்ற இலங்கையின் பன்னாட்டு வர்த்தக செயலாற்றம் திறந்த வர்த்தகத்தின நியதிகளுக்கமைவாக சிறப்பானதாகக் காணப்படவில்லை. தொழிலாளர் பணவனுப்பல்கள் விரிவடைகின்ற நடைமுறைக்கணக்கு பற்றாக்குறைகளுக்கு பங்களிப்புச் செய்து, 2021இன் மத்தியிலிருந்து வீழ்ச்சியடையும் போக்கொன்றையும் காண்பித்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் உலகளாவிய கொவிட்-19 நோய்த்தொற்று என்பவற்றுடன் நடைமுறைக் கணக்கு மீதான பாதகமான விளைவுகள்

குறைவடைந்த இறக்குமதிச் செலவீனத்தால் தூண்டப்படும் வர்த்தக பற்றாக்குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு சுருக்கத்தின் காரணமாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை குறுக்கமடைந்த போதும், உதிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தெற்றின் பரவலுடன் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் என்பவற்றின் காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்களின் இழப்பினால் பணிகள் கணக்கிலுள்ள மிகை இரு ஆண்டுகளிலும் பாதகமாக பாதிக்கப்பட்டது. 2020இன் இறுதியிலிருந்து குறிப்பிடத்தக்களவான மீட்சி காணப்பட்டபோதிலும், சுற்றுலாத் துறையானது உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களை இதுவரை அடையவில்லை. உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியின் ஆரம்பத்தில் வீழ்ச்சியடைந்த தொழிலாளர் பணவனுப்பல்கள், 2020இன் நடுக்காலப்பகுதியிலிருந்து துரிதமாக அதிகரிக்க ஆரம்பித்தது. எவ்வாறாயினும், போலிச் சந்தைகளுக்கும் அலுவல்சார் வழிகளுக்குமிடையில் நிலவுகின்ற செலவாணி வீதத்திலுள்ள வேறுபாடுகளின் பிரதான காரணமாக முறைசார்ந்த வழிகளூ டாக கிடைக்கப்பெறும் தொழிலாளர் பணவனுப்பல்களானது 2021இன் நடுப்பகுதியிலிருந்து வீழச்சியடைய ஆரம்பித்தது. கடந்த இரு ஆண்டுகளில் குறுகிய வர்த்தக பற்றாக்குறை குறிப்பாக வருடத்தின் இரண்டாம் பாதியில் இறக்குமதி செலவினங்களின் விரைவான அதிகரிப்பின் காரணமாக ஏற்றுமதி வருவாய்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் தாக்கத்தை தகர்த்தி தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் கூட, 2021ஆம் ஆண்டில் கணிசமாக விரிவடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்றுக்குப் பின்னைய காலப்பகுதியில் ஏற்பட்ட இத்தகைய பாதகமான அபிவிருத்திகள், குறிப்பாக வர்த்தகப் பற்றாக்குறை, பணிக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் மற்றும் தொழிலாளப் பணவனுப்பல்கள் ஆகியவை, ஏற்கனவே பலவீனமான வெளிநாட்டுத் துறையில் பாதிப்புகளை அதிகப்படுத்தியன.

நிதியியல் கணக்கில் தாழ்வான செயலாற்றம்

வெளிநாட்டு நேரடி முதலீடுகளுடன் தொடர்புடைய கட்டமைப்பு சார்ந்த மற்றும் கொள்கை ரீதியான பிரச்சினைகளின் காரணமாக, எதிர்பார்க்கப்படும் மட்டங்களில் வெளிநாட்டு நேரடி முதலீடு போன்ற படுகடனை உருவாக்காத வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்களை யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியிலும் கூட இலங்கையால் ஈர்க்க முடியவில்லை. கடந்த தசாப்த காலமாக, வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் சராசரியாக 1 பில்லியன் ஐ.அ.டொலருக்கும் குறைவாகவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1-2 சதவீதமாகவும் காணப்பட்டது. இலங்கையில் தற்போது நிலவுகின்ற பலவீனமான முதலீட்டுச் சூழலுக்கு கொள்கை நிச்சயமற்றதன்மை, கட்டுப்பாடான தொழிலாளர் ஒழுங்குவிதிகள், எளிதாக வியாபாரம் செய்வதில் முன்னேற்றமின்மை, ஆதன உரிமைகளைப் பாதுகாப்பதில் உள்ள முரண்பாடுகள் மற்றும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதில் உள்ள பலவீனங்கள் அத்துடன் இது போன்ற வேறு காரணங்கள் உள்ளடங்கலாக பல்வேறு வகையான காரணிகள் பங்களிப்புச் செய்யக்கூடும். இதற்கு மேலதிகமாக, ஊழல், பலவீனமான ஒழுங்குவிதிகள், அலுவல் நடைமுறைக் கடினங்கள் (red tape) மற்றும் உறுதியிற்ற உட்கட்டமைப்பு போன்ற நிறுவன ரீதியிலான பலவீனங்களானது இலங்கை அதன் சக பொருளாதாரங்களை விட கணிசமானளவில் குறைந்தளவான வெளிநாட்டு நேரடி முதலீட்டை உட்பாய்ச்சல்களை ஈர்ப்பதனை தோற்றுவித்துள்ளது.

ஏற்றமடைகின்ற வெளிநாட்டு படுகடன்

கடந்த தசாப்தத்தில், வளர்ச்சியடைகின்ற வெளிநாட்டு படுகடனும் ஏற்றமடைகின்ற படுகடன் பணிக் கொடுப்பனவுகளும் வெளிநாட்டுத் துறை சமநிலையின்மைகளுக்கான முக்கிய பங்காளிப்பாளராக காணப்பட்டது. 2007 முதல் நிதிகளைத் திரட்ட பன்னாட்டு நிதியியல் சந்தைகளை அணுகி நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதன்

வரைபடம் சி.கு. 2.3
வெளிநின்ற வெளிநாட்டு படுகடன்: இலங்கை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்திய நாடுகள் - 2020



மூலங்கள் : உலக வங்கி
இலங்கை மத்திய வங்கி

1

வரைபடம் சி.கு. 2.4
இலங்கையின் வெளிநாட்டு
படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2000 - 2021



மூலம் : இலங்கை மத்திய வங்கி

மூலம் நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் ஓர் திடமான துரிதத்தில் திரண்டுவருகிறது. இருப்பினும், சலுகையான வீதங்களில் இலங்கை பெற்றுக்கொண்ட அபிவிருத்தி உதவி நிதிகளுடன் ஒப்பிடுகையில் பன்னாட்டு நாட்டிற்கான முறிகள் பெரும்பாலும் ஒப்பீட்டளவில் உயர்ந்த வட்டி வீதங்களில் விலையிடப்பட்டால் இது படுகடன் பட்டியலின் திரண்ட நிதியிடல் செலவினை அதிகரித்தது. மேலும், யுத்தத்திற்கு பின்னரான பொருளாதார மீளெழுச்சியுடன் பரியாளவான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கு நீதியீட்டம் செய்வதன் காரணமாக அரசாங்கத்தின் இறைப் பற்றாக்குறையில் ஏற்பட்ட விரிவாக்கமும் இவ்வதிகரிப்புக்கு பங்களிப்புச்செய்தது. படுகடன் திரட்சியின் போக்கைத் தொடர்ந்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடனும் கடந்த தசாப்தமாக படிப்படியாக அதிகரித்து சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 60 சதவீதமாகவும் காணப்படுகின்றது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடனை பிராந்திய ரீதியான சக நாடுகளுடனான ஒப்பிடுகையில், பூட்டான், மாலைதீவு மற்றும் கம்போடியாவிற்கு அடுத்ததாக இலங்கை அதிகளவான விகிதத்தை பதிவு செய்துள்ளது. இந்த நான்கு நாடுகளைத் தவிர, வேறு சமத்துவ ஆசிய நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்திற்கான வெளிநாட்டுப் படுகடனானது தொடர்புடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகின்றது.

வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

அதிகரித்துவரும் வெளிநாட்டுப் படுகடன் இருப்புடன் சலுகையான கடன்களிலிருந்து சலுகையல்லாததும் வர்த்தக ரீதியானதுமான கடன்பெறுகைகளுக்கு இலங்கையின் வெளிநாட்டுப் படுகடனின் பகுப்பாய்வு மாறியதால் இது வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் அதிகரிப்பினை விளைவித்துள்ளது. வெளிநாட்டு கடன்பெறுகைகளின் உயர்ந்த செலவானது முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையை விரிவடையச் செய்து சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதான மேலதிக அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. வணிகப்பொருள் மற்றும் பணிகள் என்பவற்றின் ஏற்றுமதியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகளானது 2012 இல் 13.1 சதவீதத்திலிருந்து 2021 இல் 30.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது இலங்கையின் வருடாந்த ஏற்றுமதி வருவாய்கள் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு படுகடன் தீர்ப்பனவால் பயன்படுத்தப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும், வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் 80 சதவீதத்திற்கும் மேலதிகமானது அரச படுகடன் தீர்ப்பனவாகும். இது வெளிநாட்டுத் துறையின் நிதியிடல் பிரச்சினைகள் பிரதானமாக இறை சமநிலையின்மைகளிலிருந்து எழுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைதல்

வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்கள் போதாமைக்கு மத்தியில் உயர்வான வெளிநாட்டு நாணய படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் காரணமாக நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமைகளானது 2021இன் இறுதியில் நெருக்கடியான தாழ்வான மட்டங்களுக்கு சிதைவடைந்தது. ஏற்றுமதி வருவாய்களை மீளனுப்புதல், தொழிலாளர்கள் பணவனுப்பல்கள் மற்றும் வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல்கள் ஆகியவற்றின் நியதிகளுக்கமைவான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் தாழ்வான மட்டமானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை பற்றாக்குறையை தோற்றுவித்தது. இது அத்தியாவசிய இறக்குமதிகளை நிதியிடுவதற்கான வெளிநாட்டு செலாவணியை மத்திய வங்கி வழங்கவதனை தேவைபடுத்தியதுடன் ஒதுக்கு மட்டங்களை மேலும் குறைவடையச்செய்தது.

செலாவணி வீதம் மீதான கணிசமான அழுத்தம்

வெளிநாட்டுத் துறையின் சமநிலையின்மைகளானது, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் வறண்ட திரவத்தன்மை நிலைமைகள், நாட்டிற்கான தரமிடல்களின் தொடரான கள் செலாவணி வீதத்தில் கணிசமான தேய்மான அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ள பன்னாட்டு ஒதுக்குகளின் அபாயகரமான மட்டத்துடன் கூடிய நாட்டிற்கான தரமிடல்களின் தொடரான தரமிரக்கல் என்பவற்றால் பாரியளவில் பிரதிபலிக்கப்படுகின்றன. 2021ஆம் ஆண்டின் காலப்பகுதியிலும் 2022இன் மார்சின் ஆரம்ப காலப்பகுதியிலும் செலாவணி வீதம் முக்கியமாக தார்மீக ரீதியாக இணங்குவதனூடக ஐ.அ.டொலர் ஒன்றிற்கு அண்ணளவாக ரூ.200 - ரூ. 203 வரை மத்திய வங்கியால் பேணப்பட்ட அதேவேளை, வெளிநாட்டு செலாவணிக்கான சமாந்தரச் சந்தைகளின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022இன் மார்சின் முன்னைய பகுதியிலிருந்து செலாவணி வீதத்தில் நெகிழ்வுத்தன்மையை அனுமதிக்கப்பட்ட தீர்மானத்தை தொடர்ந்து, இலங்கை ரூபா 2022இன் மார்சு இறுதியளவில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 33 சதவீதத்தால் தேய்வடைந்தது. எவ்வாறாயினும், உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாக கருதப்படுகின்ற வேறு திருத்த வழிமுறைகளுடன் கூடிய செலாவணி வீதத்தில் சில உறுதிப்பாடு 2022ஆம் ஆண்டு ஏப்பிறல் ஆரம்பத்தில் நாணய கொள்கை நிலைப்பாட்டின் கணிசமான இறுக்கத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது. இது, முக்கியமாக

பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கான பன்னாட்டு நாணய நிதியத்துடனான ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள், ஒழுங்கானதும் ஒத்திசைவானதுமான படுகடன் மீள்கட்டமைப்புச் செயன்முறையொன்றிற்கு வழிவகுக்கின்ற இடைத்தர காலமொன்றிற்கான வெளிநாட்டு படுகடன் பணியிடுதலின் நிறுத்தி வைத்தல் மற்றும் இறைத் திரட்சி என்பவற்றை உள்ளடக்குகின்றது.

வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினை அடையும் பொருட்டு நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலக் கொள்கைகளை அடைதல்

மத்திய வங்கி வெளிநாட்டுத்துறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அண்மைய கடந்த காலத்தில் அநேகமான குறுங்கால வழிமுறைகளை மேற்கொண்டது. பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளின் கட்டாய மீளனுப்பல் மற்றும் இலங்கை ரூபாவாக மாற்றலுடன் தொடர்புடைய புதிய விதிமுறைகளை மத்திய வங்கி வெளியிட்டதுடன் அது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகளை மேம்படுத்தத் துணைபுரிந்தது. மேலும், படுகடனல்லாத மூலங்களினூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன் மத்திய வங்கியானது அவ்வாறு மாற்றப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் ஒரு பகுதியினை மத்திய வங்கிக்கு விற்பனைசெய்ய உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்தியது. இவ்வழிமுறையானது உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைத் திரவத்தன்மையில் ஓரளவு தாக்கத்தினை ஏற்படுத்திய வேளையில், இது அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளுக்கான கேள்விக்குப் பகுதியளவில் நிதியளிப்பதற்கு மிகவும் அவசியமான வெளிநாட்டுச் செலாவணியைச் சந்தைக்கு வழங்குவதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்தது. உரிமம்பெற்ற வங்கிகளில் மாற்றப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிப் பணவனுப்பல்களுக்காக சாதாரண செலாவணி வீதத்திற்கு மேலான ஊக்குவிப்புக்களின் ஏற்பாடு, தொழிலாளர் பணவனுப்பல்கள் கணக்கின் மீது உறப்பட்ட கொடுக்கல்வாங்கல் செலவினங்களின் மீள்செலுத்தல் மற்றும் 'லங்கா ரெமிட்' என பெயரிடப்பட்ட தேசிய வெளிநாட்டுப் பணவனுப்பல் செல்லிடத் தொலைபேசிச் செயலியினது அங்குரார்ப்பணம் என்பன உள்ளடங்கலாக முறையான வழிகளினூடாகத் தொழிலாளர் பணவனுப்பல்களின் பரிமாற்றலினை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்துள்ள சுற்றுலா விடுதிப் பணி வழங்குநர்கள் வதிவற்றோருக்கு வழங்குகின்ற பணிகள் தொடர்பிலான கொடுப்பனவுகளை வெளிநாட்டுச் செலாவணியில் மாத்திரம் ஏற்பதனைத் தேவைப்படுத்துகின்ற விதிமுறைகள் விடுக்கப்பட்டன. மேலும், இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல்களின் வாயிலாக பிராந்திய மத்திய வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நிதியியல் உதவியினையும் மத்திய வங்கி பெற்றுக்கொள்வதற்கு முடியுமாயிருந்தது. குறுங்காலக் கொள்கை வழிமுறைகள் வெளிநாட்டுத்துறையினைப் புத்துயிரளிப்பதில் குறிப்பிடத்தக்களவு வினைத்திறனுடையதாகக் காணப்பட்ட போதிலும் வெளிநாட்டுத்துறையில் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்துவதற்கும் தொடர்ச்சியான உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கு நீடிக்கும் கொள்கைகள் அவசியமாகின்றன. பின்வரும் முக்கிய பகுதிகளில் அத்தகைய கொள்கைகளின் கவனம் செலுத்தப்பட வேண்டும்:

நடுத்தர கால வழிமுறைகள்

பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார சீராக்கச் செயற்றிட்டமொன்றுடன் ஒத்திசைகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய பேரண்டப் பொருளாதார மறுசீரமைப்புக்களை ஆரம்பித்தல்

நாடு எதிர்கொண்டுள்ள கீழ் நோக்கிய சுழற்சித்தன்மையுடைய பொருளாதார நெருக்கடியினைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் பன்னாட்டு நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதுடன் அது பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை நோக்காகக்கொண்ட பன்னாட்டு நாணய நிதியத்தினால் நிதியளிக்கப்படும் செயற்றிட்டத்திற்கு வழிவகுக்கலாம். இப்பன்னாட்டு நாணய நிதிய நிதியிடல் ஏற்பாடானது மற்றையவற்றிற்கிடையில் இறைத் திரட்சி, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் நிதியியல் செயலாற்றத்தினை வலுப்படுத்தல், நாணய நிதியளித்தலைப் படிப்படியாக நிறுத்துதல் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டங்களின் வினைத்திறனை மேம்படுத்தல் போன்ற முக்கிய பகுதிகள் தொடர்பிலான அனைத்தையுமுள்ளடக்கிய மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலொன்றுடன் முழுமைப்படுத்தப்படலாம்.

வெளிநாட்டுப் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை நிச்சயப்படுத்துவதற்கான தேவை

பொருளாதாரத்தில் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கட்டியெழுப்புவதற்காக நீண்ட காலத்தில் நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை நிச்சயப்படுத்துவதில் அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் தற்போதைய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இச்சூழலில் அரசாங்கம் தனது வெளிநாட்டுப் படுகடனை நீடித்துநிலைத்திருக்கும் முறையில் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு நிதியியல் ஆலோசகர்களையும் சட்ட மதியுரைஞர்களையும் நியமிப்பதற்கு ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையினை ஏற்கனவே வெளியிட்டுள்ளது. அத்தகைய படுகடன் முகாமைத்துவச் செயன்முறையானது அனைத்தையுமுள்ளடக்கிய படுகடன் மறுசீரமைப்புத் திட்டமொன்றினை உள்ளடக்கியிருக்கலாம் என்பதுடன் இது பன்னாட்டு நாணய நிதியத்துடனான பொருளாதார மறுசீரமைப்புச் செயற்றிட்டமொன்றிற்கான நிபந்தனையாகவும் இருக்கலாம். இதற்கிணையாக, இடைக்காலப்பகுதியில் நிலுவையிலுள்ள ஒத்திசைவான வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பொன்றிற்காக வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அரசு 2022 ஏப்பிறல் 12ஆந் நாளன்று அறிவித்தது.

1

மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் ஆரோக்கியமான மட்டங்களைப் பேணுதல்

வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு, வெளிநாட்டு அதிர்வுகளைத் தாங்குவதற்கான நாட்டின் இயலுமை அதேபோன்று வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளைப் பூரணப்படுத்துவதற்கான அதன் இயலுமை என்பவற்றின் குறிகாட்டியொன்றான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் ஆரோக்கியமானதொரு மட்டத்தினைப் பேணுவது அத்தியாவசியமாகின்றது. ஆதலால், நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரிப்பதானது வெளிநாட்டுத்துறையின் மிக முக்கியமான நடுத்தர கால நோக்காகக் காணப்படுகின்றது. குறைந்தபட்சம் 4 மாத காலப்பகுதிக்கு வணிகப்பொருள் இறக்குமதிகளை உள்ளடக்கின்ற விதத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை மேம்படுத்துவதற்கு நாடு எதிர்பார்க்கிறது. இவ்விலக்குகள் குறிப்பிடத்தக்களவு சவால்மிக்கதாகக் காணப்படுகின்ற வேளையில், படுகடன் மறுசீரமைப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் என்பன தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகள் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்குப் படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் அது மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் படிப்படியான கட்டியெழுப்புதலை இயலுமைப்படுத்தும். மத்திய வங்கியின் நடுத்தர கால நோக்கு ஒதுக்குகளின் அளவைப் படிப்படியாக அதிகரிப்பதாயமைந்துள்ள வேளையில், உள்ளடக்கமும் படுகடனல்லா மூலங்களினூடாக ஒதுக்குகளின் சீரான கட்டியெழுப்பலின் மூலம் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பிராந்திய ஒத்துழைப்பினை வலுப்படுத்தல்

நடுத்தர காலத்தில் நீடித்து நிலைத்திருக்கும் வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டிற்கு வழிவகுக்கின்ற விதத்தில் ஆர்வலர்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும் பொருட்டு பிராந்திய மத்திய வங்கிகள், அரசுகள், வியாபாரச் சமூகங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் பல்புடை முகவராண்மைகள் என்பன உள்ளடங்கலாக பிராந்திய ஆர்வலர்களுடன் பன்னாட்டு ஒத்துழைப்பினைப் பேணுதல் அத்தியாவசியமாகிறது. இது தொடர்பில், பல்வேறு பிராந்திய நாடுகளிலுள்ள இணைத்தரப்பினர்களுடன் எதிர்காலக் கூட்டிணைப்பு தொடர்பிலான கலந்துரையாடல்களை மத்திய வங்கி மேற்கொண்டு வருகிறது.

நீண்ட கால வழிமுறைகள் படுகடனல்லாத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்தல்

வணிகப்பொருள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகள் துறைகளை ஊக்குவித்தல்

தேசிய ஏற்றுமதி மூலோபாயமானது உயர்ந்தளவிலான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை அடைவதற்குப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகிய இரு ஏற்றுமதிக் கைத்தொழில் துறைக்கும் ஆதரவளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. தற்போதுள்ள தேசிய ஏற்றுமதி மூலோபாயமானது புத்துருவாக்கத்தினால் உந்தப்பட்ட ஏற்றுமதி மையமொன்றிற்கு இலங்கையை மாற்றும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 2018 - 2022 வரையிலான 5 வருட கால எல்லையினுள் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. தேசிய ஏற்றுமதி மூலோபாயமானது பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட அண்மைய அபிவிருத்திகளுக்குப் பொருத்தமானவையாகவும் ஏற்றுமதிகள் துறைக்கு மிகவும் அவசியமான கொள்கை ஆதரவினை வழங்குவதற்கும் ஏற்றவாறான சில திருத்தங்களுடன் புத்துயிரளிக்கப்படுவது முக்கியமானதொன்றாயமையும் என்பதுடன் அத்தகைய கொள்கைகள் எத்தகைய அரசியல் ஆட்சி முறையின் கீழும் தடங்களின்றி தொடர்தல் வேண்டும். பரந்த அடிப்படையிலமைந்த மற்றும் இசைவான தேசிய ஏற்றுமதி மூலோபாயமொன்றின் நடைமுறைப்படுத்தலானது ஏற்றுமதிகளில் வலுவான மற்றும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கான ஆற்றல்வாய்ந்த ஏற்றுமதித்துறைகளைத் உருவாக்குவதுடன் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகள் மற்றும் உற்பத்திப் பகிர்வு வலையமைப்புக்களில் அதிகரித்த பங்குபற்றலினூடாகப் பெறுமதிக் கூட்டலினையும் வசதிப்படுத்தும். இவற்றுடன், வர்த்தகம்செய்யக்கூடிய துறைக்குக் குறிப்பாக, ஏற்றுமதித் துறைக்காக இடைநிலைப்பொருட்களை உற்பத்திசெய்யும் கைத்தொழில் துறைகள் மற்றும் முக்கியமாக உலகளாவிய வர்த்தகத்தைச் சார்ந்த கைத்தொழில் துறைகள் என்பவற்றிற்கான முதலீட்டினை ஈர்க்கும் விதத்திலான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படல் வேண்டும்.

மரபார்ந்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளைப் பார்க்கிலும் உயர் ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் உள்நாட்டுப் பெறுமதி கூட்டல் என்பவற்றைக்கொண்ட பணிகள் துறை ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும் சம அளவில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிப்படைந்த போதிலும் அண்மைய ஆண்டுகளில் பணிகள் கணக்கில் மிகையேற்படுவதற்கான முக்கிய பங்களிப்பாளராக சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் திகழ்கின்றன. சுற்றுலாத்துறை அதன் ஆற்றல்வாய்ந்த தன்மையினை அடையும் விதத்தில் தொடர்ச்சியாக முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். தகவல் தொழில்நுட்பம்.'.வெளிமூலங்களிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல், போக்குவரத்து மற்றும் துறைமுகப் பணிகள் துறைகள் போன்ற ஏனைய பணிகள் துறைகளும் பொருட்கள் மற்றும் பணிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களை வலுப்படுத்துவதற்கான தேசிய திட்டத்தினுள் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

தொழிலாளர் பணவனுப்பல்களை மேம்படுத்தல்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான தாக்கங்களின் படிப்படியான குறைப்பு மற்றும் இலக்கிடப்பட்ட கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல் என்பவற்றுடன் தொழிலாளர் பணவனுப்பல்களும் முன்னேற்றச் சமிக்ஞைகளைக் காண்பித்துள்ளன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்கின்ற புலம்பெயர்

பணியாளர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான புறப்படுகைகள் அதிகரிக்கின்றன. மேலும், 2022 மார்ச்சின் முன்னைய பகுதியிலிருந்து செலாவணி வீதத்தில் அதிகளவிலான நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை முயற்சிகளும் உயர்ந்தளவிலான வெளிநாட்டுப் பணவனுப்பல்களைக் கவர்வதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு வேலையாப்பினை ஊக்குவித்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையினைப் பன்முகப்படுத்தல் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்தல் என்பவற்றிற்கான முனைப்புடனான ஆர்வலர் ஈடுபாடானது உயர் வருவாய்களுடன் அதிகளவிலான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத்தருமென எதிர்பார்க்கப்படுவதன் மூலம் விரிவடையும் வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தினைக் குறைப்பதற்கான தொழிலாளர் பணவனுப்பல்களின் பங்களிப்பினை அதிகரிக்கும்.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்தல்

நடுத்தர காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்ற படுகடனல்லாத வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்களின் ஆரோக்கியமானதொரு உத்வேகத்தினை நிலைபெறச்செய்வதற்கு, கொள்கை ஒத்திசைவினைப் பேணல், வியாபாரம் செய்யும் நிலைமைகளை மேம்படுத்தல், நிறுவனங்களை வலுப்படுத்தல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை வசதிப்படுத்துவதற்கான ஒப்புதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயன்முறைகளை துரிதப்படுத்தல் போன்றவற்றிற்கான கடுமையான தேவையொன்று காணப்படுகிறது. கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி, கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களைப் பண்ட வர்த்தக மையங்களாக ஊக்குவித்தல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்களுக்கான நவீன முதலீட்டு வலயங்களை நிறுவுதல் என்பன எதிர்வரும் காலப்பகுதியில் நாட்டிற்குக் கணிசமானளவிலான வெளிநாட்டு முதலீடுகளைக் கவருமென எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட கால பேரண்டப்பொருளாதார தாங்கியிருக்குந்தன்மையினைக் கட்டியெழுப்பும் பொருட்டு அத்தகைய முதலீடுகளை வசதிப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கான உன்னிப்பானதொரு ஒருங்கிணைப்பும் கண்காணிப்பும் அவசியமாகின்றது.

முடிவுரை

பொருளாதார சீராக்கச் செயற்றிட்டமொன்றிற்காக பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல், வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் தொடக்கம், இறைத்திரட்சியை நோக்கிய அர்ப்பணிப்பு, குறிப்பிடத்தக்க நாணயக் கொள்கை இறுக்கமாக்கலுடன் இணைந்து செலாவணி வீத நிர்ணயிப்பில் நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்தல் போன்றன உள்ளடங்கலாக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல் வழிமுறைகள் எதிர்வரும் காலப்பகுதியில் பொருளாதாரத்தில் ஆர்வலர்களது நம்பிக்கையினை மீளக்கட்டியெழுப்புமென எதிர்பார்க்கப்படுகிறது. பல தசாப்தங்களாக மீண்டெழுகின்ற வெளிநாட்டுத்துறை உறுதிப்பாடின்மைக்கு மூல காரணமாக இருக்கின்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் இறைப் பற்றாக்குறை என்பவற்றினைக் குறைப்பதற்கு எதிர்வரும் காலப்பகுதியில் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்ட கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துவதானது தவிர்க்க முடியாததொன்றாகும். நாட்டின் வெளிநாட்டுப் படுகடனில் நீண்ட கால உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கு இரட்டைப் பற்றாக்குறைகளை நீடித்து நிலைத்திருக்கும் மட்டங்களில் முகாமை செய்வது இன்றியமையாததொன்றாயமையும் வேளையில், வெளிநாட்டுத் துறையினை வெகுவாகப் பாதிக்கின்ற பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கு ஒதுக்குகளின் ஆரோக்கியமான மட்டங்களைப் பேணுவதன் மூலம் வெளிநாட்டுத்துறையின் நீண்ட கால உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தும்.

உசாத்துணைகள்

1. Central Bank of Sri Lanka. (1998). Economic Progress of Independent Sri Lanka. Colombo: Central Bank of Sri Lanka
2. Central Bank of Sri Lanka. (2011). 40th Anniversary Commemorative Volume. Colombo: Central Bank of Sri Lanka

வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றவற்றின் ஏற்றுமதிகளினூடாக பணிகள் கணக்கிற்கு உட்பாய்ச்சல்களை அதிகரித்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் போட்டிமிக்க சூழலொன்றில் உலகளாவிய முதலீட்டாளர்களிடமிருந்து உபாயம்மிக்க ஈடுபாடுகளை ஈர்த்துக் கொள்ளக்கூடிய விதத்தில் புவிசார் அரசியல் முக்கியத்துவம் மிக்க உபாயம் நிறைந்த அமைவிடமொன்றில் கொழும்பு துறைமுக நகரம் அமைவு பெற்றிருப்பதால் பிராந்திய மற்றும் உலகளாவிய இணைத் தரப்பினருடன் வெளிநாட்டு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் இலங்கையின் அணி சேரா வெளிநாட்டுக் கொள்கையுடன் இணைந்து செல்லும்விதத்தில் ஈடுபாடுடைய வெளிநாட்டுத் தரப்பினருடன் தொடர்புகளை மேற்கொள்வது அவசியமாகும். கொழும்பு துறைமுக நகரம் எச்சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படுகின்றதோ அச்சட்டமானது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அதிகளவிற்கு தூண்டுதலளிக்கும் வியாபாரச் சூழலை வழங்குவதுடன் முதன்மை பொருளாதாரத்திலிருந்து இது பிரிக்கப்படமாட்டாது என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் கொள்கைகள் மிகக் கவனமாக உருவாக்கப்பட வேண்டும். கொழும்புத் துறைமுக நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய ஆரம்ப முதலீடுகள் மற்றும் உருவாக்கக் காலத்தில் புதிதாக நிறுவப்படவுள்ள தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கணிசமான வரிச் சலுகைகளையும் கருத்திற்கொள்ளும் போது ஒட்டுமொத்த செயற்றிட்டத்தின் வெற்றியானது வரி மற்றும் ஏனைய நியதிகளில் திரட்டப்படும் வருவாயின் அளவிலும் அவற்றினை பொருளாதாரத்திற்கு நன்மையளிக்கும் வகையில் பயன்படுத்துவதிலும் தங்கியிருக்கும்

1

கொழும்பு துறைமுக நகரில் நிறுவப்படவுள்ள மிக முன்னேற்றம் கண்ட தொழில்முயற்சிகளுக்கு தேவைப்படும் தேர்ச்சி விடயங்கள் அத்தகைய தொழில்முயற்சிகளினால் வழங்கப்படும் கூலிக்கட்டணத்தில் பிரதிபலிக்கப்படும் என்பதனால் இலங்கையின் ஏனைய பகுதியிலிருந்து தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் குடியேறுவதற்கு உத்வேகமளிக்கும் பொருளாதாரமொன்றிற்குள் நவீனமாக துறையொன்று வடிவமைக்கப்படும் பொழுது இரண்டு முக்கிய தாக்கங்களை எதிர்பார்க்க முடியும். முதலாவது, வழங்கப்படுகின்ற கூலிக்கட்டணமானது உயர்ந்த கேள்வியினைக் கொண்ட தேர்ச்சிபெற்றோரை கையகப்படுத்திக்கொள்வதனை ஊக்குவிக்கப்படுவதன் மூலம் தொழிலாளர் உற்பத்தித் திறனில் ஒட்டுமொத்த முன்னேற்றமொன்றிக்கு வழிவகுக்கப்படுவதன் மூலமாக அமைப்பியல் உருமாற்றம் விரைந்து மாற்றமடையும். இரண்டாவது, நவீன துறையில் வழங்கப்படுகின்ற கவர்ச்சிகரமான கூலிக் கட்டணத்தின் காரணமாக அது வருமானப் பங்கீட்டில் பிறழ்வுகளுக்கு வழிவகுக்கும். இருப்பினும் கூட, இயக்கவாற்றலிலுள்ள தொழிலாளர் சந்தையில் தேவைப்படுகின்ற நவீன தொழில்நுட்பம் மற்றும் தேவைப்பாடுகளுடன் பொருந்தத்தக்கவாறான விசேடத்துவ தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு தொழிலாளரை ஊக்குவிக்கும் என்பதனால் கூலிக் கட்டண இடைவெளி ஒரு ஊக்குவிப்பாகவே விளங்கும். அதேநேரம் கொழும்பு துறைமுக நகரத்தின் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கான கேள்வியைப் பூர்த்திசெய்யும் விதத்தில் கல்வி முறைமையினை மாற்றியமைக்க வேண்டியிருக்கும் என்பதுடன் அறிவியல், தொழில்நுட்பவியல், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் கூடுதலான பட்டதாரிகளை உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்வது வலுப்படுத்தப்படல் வேண்டும். கொழும்பு துறைமுக நகரம் ஆடம்பரமான சேரிடமொன்றாக ஊக்குவிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதனைக் கவனத்தில் கொள்கையில் இச்செயற்றிட்டமானது சுற்றுலாத் துறையினையும் உத்வேகப்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன் செல்வந்தரான சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான வழிகளையும் கண்டறிதல் வேண்டும். கொழும்பு துறைமுக நகரில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நடவடிக்கைகளும் தங்குமிட வசதிகளும் உயர்ந்த செலவிடல்களைக் கொண்ட பெறுமதிமிக்க சிறப்பியல்புவாய்ந்த சுற்றுலாப் பயணிகளின் சந்தையினை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் உயர்ந்த விலையினைக் கொண்டிருப்பதும் அவசியமாகும். மேலும், கொழும்பு துறைமுக நகருக்கு வதிவிட விசாவினைக் கொண்டுள்ளவர்களைக் கவரும் இலக்குடன் வதியும் விருந்தினர் விசா நிகழ்ச்சித்திட்டம் மற்றும் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள கோல்டன் பரடைஸ் வதிவிட விசா நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றை வெளிநாடுகளில் ஊக்குவிக்க முடியும். பணிகள் மீதான வருவாய் கொழும்பு துறைமுக நகருக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களிலிருந்தான மிகவும் தேவையான படுகடனை உருவாக்காத நிதியியல் பாய்ச்சல்கள் நடுத்தர காலத்தில் சென்மதி நிலுவைக்குள் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் மூலம் இலங்கையின் வெளிநாட்டுத் துறையின் மீட்சியை நோக்கமாகக் கொண்ட கொள்கை முயற்சிகளையும் மேற்கொள்ள முடியும்.

கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாகக் காணப்படும் குறைந்த அரசிறைத் திரட்டல்கள் இறைத் துறையிலும் பேரண்ட பொருளாதார சமநிலையற்றதன்மையிலும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படையக்கூடிய தன்மைகளை ஏற்படுத்துவதற்கான அடிப்படைக் காரணமாக இருப்பதுடன் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அரசிறை உருவாக்க வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கான அவசியத்தினையும் தேவைப்படுத்துகின்றது. பிராந்தியத்திலுள்ள இணை நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் அரச செலவினம் மிதமான மட்டத்தில் காணப்பட்ட போதும், அரசாங்கத்தின் அரசிறைச் சேகரிப்பு இணைப் பொருளாதாரங்களின் சராசரி இறைச் சேகரிப்புக்களிலும் பார்க்க மிகக் கீழே காணப்படுவதுமட்டுமன்றி கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இது தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தும் வருகின்றது. 2021இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் அரசிறை 8.7 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டவிடத்து இது தோற்றம் பெற்றவருகின்ற மற்றும் நடுத்தர வருமான நாடுகளின் மொ.உ.உற்பத்தியில் 26 சதவீதமாகக் காணப்பட்டது. 2019இன் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட குறைந்த வட்டி கட்டமைப்பு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக தோன்றிய பொருளாதாரச் சரிவுடன் இணைந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக அரச அரசிறையில் கடுமையான குறைப்பினைத் தோற்றுவித்தது. மேலும், இலங்கையின் வரி நெகிழ்ச்சித்தன்மை மற்றும் வரிச் செழிப்பு என்பன ஒன்றினைவிடக் குறைவாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் வரி அரசிறை திரட்சியில் காணப்படும் விரிவு பொருளாதார நடவடிக்கையில் காணப்படும் விரிவிலும் பார்க்கப் பலயீனமானதாக காணப்படுவதனைக் குறிக்கின்றது.[2] மேலும், இலங்கையின் வரி முறைமை விகிதாசாரமற்ற வரி அமைப்பிற்கு உட்பட்டிருப்பதுடன் வரி அரசிறையில் 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட அளவு மறைமுக வரிகள் மூலம் திரட்டப்பட்டு வருகின்றமையானது குறைந்த வருமானம் பெறும் குடியிருப்பாளர்கள் மீது விகிதாசாரமற்ற முறையில் உயர்ந்த வரிச் சுமையினை ஏற்படுத்துகிறது. உயர்ந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழிவகுக்க வேண்டிய நிர்பந்தமற்ற பல்வேறுபட்ட வரி விலக்கல்களும் வரி விடுப்புக்களும், அவ்வப்போது செய்யப்படும் வரிக் குறைப்புக்கள் மற்றும் வரியற்ற கீழ் மட்டம் மேல் நோக்கித் திருத்தப்பட்டமை மற்றும் வரிப் பிரிவுகள், வரித் தளத்தின் மெதுவான விரிவு,

2 வரி அமைப்பில் மாற்றமெதுவுமில்லை என்ற எடுகோளின் அடிப்படையில் வரி நெகிழ்ச்சித்தன்மை மொ.உ.உற்பத்திக்கான வரி அரசிறையின் இயல்பாகவே இணைந்து காணப்படும் பதிலிறுப்புத் தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது. வரி மொ.உ.உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களுக்கு வரியின் மொத்த பதிலிறுப்பினை பிரதிபலிக்கிறது. இது வரி வீதங்களின் அதிகரிப்பு, வரித் தளத்தின் விரிவாக்கம் போன்ற தற்றுணிபு கொள்கைச் சீராக்கத்தின் தாக்கத்தினை உள்ளடக்குகிறது.

விகிதாசார ரீதியான வரி போதுமானளவில் இல்லாமை, குறைந்த வரி இணங்குவிப்புக்கள், வரி ஏய்ப்பு மற்றும் வரித் தவிர்புக்கள் மற்றும் பலயீனமான வரி நிருவாகம் என்பன இலங்கையில் குறைந்த வரி அரசிறைத் திரட்டல்களுக்கு வழியமைத்த முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. அடிக்கடி வரிகளில் மாற்றங்களை செய்வது வரி இணங்குவிப்புக்களில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் நிலையான வரி முறைமைக்கும் தடங்கல்களை ஏற்படுத்துகின்ற வேளையில் வரி நிருவாகச் செலவினையும் அதிகரிக்கிறது. தொடர்ச்சியாகக் காணப்படும் குறைந்த அரசிறைத் திரட்டல்கள் உயர்த்தப்பட்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மூலங்களிலிருந்தான உயர்ந்த நிதியிடல் தேவைப்பாடுகள் என்பனவற்றுடன் சேர்ந்து பேரண்டப் பொருளாதாரத்தின் மீது கடுமையான விளைவுகளைத் தோற்றுவித்ததன் மூலம் அரச படுகடனில் அதிகரிப்பு, உள்நாட்டு நிதியியல் முறைமையில் பாதிப்படையக்கூடியதன்மை, பணவீக்க அழுத்தங்கள், சென்மதி நிலுவைப் பிரச்சனைகள் மற்றும் செலாவணி வீதத்தின் மீதான தேய்வின் அழுத்தங்கள் என்பனவற்றை தோற்றுவித்தது. குறைந்த அரசிறைத் திரட்சியும், பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு இரண்டிலும் அரச முதலீடுகளைச் செய்கின்ற அரசாங்கத்தின் இயலாற்றலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியின் மீது தடங்கல்களை ஏற்படுத்துகிறது. ஆழமாக வேரூன்றிய இப்பிரச்சனைகள் நீண்ட கால பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினையும் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியையும் இறுதியில் வழங்கக்கூடிய நிலையானதும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதுமான அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத் திரட்சியினை விரைவாக நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன. இது தொடர்பில், நேரடி மற்றும் மறைமுக வரி வீதங்கள் இரண்டையும் உயர்த்துதல், வரியற்ற கீழ் மட்டத்தினைக் குறைப்பதனூடாக வரித் தளத்தினை விரிவுபடுத்தல், வரி விலக்கல்களைக் குறைத்தல், நீண்டகால வரி விடுப்புக்களை ஒழித்தல் என்பன குறுங்காலத்தில் அரச அரசிறையினை அதிகரிக்கக்கூடும். ஏதேனும் வரிச் சலுகைகளை வழங்குவதாக இருப்பின் அத்தகைய கொள்கைகள் பொருளாதார வளர்ச்சியையும் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதாரக் குறிக்கோள்களையும் எய்துவதனூடாக நீண்ட காலத்தில் இறை நிலுவைகளை மேம்படுத்துவதில் காத்திரமான தன்மையினைக் கொண்டிருக்கிறது என்பதனை கவனத்திற் கொண்டு வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய சலுகைகள் குறுங்காலக் கட்டமைப்பினைக் கொண்டனவாகவும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் படிப்படியாக ஆதரவளிக்கும் நோக்குடன் குறிப்பிட்ட தொழில்துறையின் செயலாற்றப் பெறுபேறுகளை அளவிடக்கூடிய விதத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், கடந்த கால அனுபவங்களையும் பொருளாதார நிலைமைகளையும் அடிப்படையாகக் கொண்டு யதார்த்த பூர்வமான அரசிறை எதிர்வுகூறல்களையும் அரசிறை இலக்குகளையும் நிர்ணயித்துக் கொள்வது அரசிறை இலக்குகளில் மீண்டும் மீண்டும் ஏற்படும் பிறழ்வுகளையும் அளவுக்கதிகமான செலவினத்தினையும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் ஏற்படும் தொடர்ச்சியான வரி விரிவாக்கத்தையும் சரிசெய்து கொள்வது மிக முக்கியமானதாகும். மேலும், வரி இணங்குவிப்பினை ஊக்குவிப்பதற்கும் அதன் மூலம் அரசிறை சேகரிப்புக்களை மேம்படுத்துவதற்கும் நிலையான இலகுபடுத்தப்பட்ட வரி அமைப்பு மிக முக்கியமானதாகும். அதேவேளை, அதிகரித்த வரிச் சேகரிப்பின் நீடித்துநிலைத்திருக்கும்தன்மை வரி நிருவாகத்தின் சீர்திருத்தங்களுடன் வழமையாக ஒன்றுடனொன்று இணைந்திருப்பதனால் அரச அரசிறையினை உயர்த்துவதில் வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதும் மிக இன்றியமையாததாகும். வரி நிருவாக நடவடிக்கைகள் உள்ளக ரீதியில் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டிருப்பதனை கருத்திற் கொள்கையில், எண்ணற்ற வரி நிருவாக அடுக்குகளில் பல சீர்திருத்த உபாயங்களைத் தொடர்கின்ற முழுமையான அணுகுமுறை வரி நிருவாகத்தின் இயலாற்றலையும் வினைத்திறனையும் மேம்படுத்தக்கூடியதாக இருக்கும் அதேவேளையில் வரி ஏய்ப்பினையும் குறைக்கக்கூடியதாக இருக்கும். எனவே, பதிவுசெய்தல் மற்றும் கோப்பிடுதல் தொடர்பான விதிகளை கடுமையாக நடைமுறைப்படுத்தல், நிதியியல் நிறுவனங்களின் சிறந்த ஒத்துழைப்பினூடாக கணக்காய்வு மற்றும் சரிபார்த்தல் வழிமுறைகளை பலப்படுத்தல், பாரிய நிறுவன ரீதியான இணைப்புக்களுக்காக தகவல் தொழில்நுட்பவியல் முறைமைகளை தரமுயர்த்துதல், வரிக் கோப்பிடலுக்கான நடவடிக்கை முறைகளை இலகுபடுத்தல், வரிக் கொடுப்பனவுகள் மற்றும் அறிக்கையிடல் என்பன வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கு மிக இன்றியமையாதவைகளாகும். மேலும், அலுவலர்களின் தொழில்நுட்ப தேர்ச்சியை அதிகரித்தல், அத்தகைய முகவர்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல், முன்மதியுடைய உபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் வரிச் சட்டவாக்கங்களை வலுப்படுத்துவதனூடாக அரசிறையினைச் சேகரிக்கும் நிறுவனங்களுக்கு வலுவூட்டல் என்பனவற்றினை மேற்கொள்வதன் மூலம் முகாமைத்துவம், ஆளுகை மற்றும் வரி நிருவாகத்தின் மனித வளங்கள் என்பனவற்றை மேம்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். பாரியளவு வரி செலுத்துபவர்கள் அரச வரி அரசிறைச் சேகரிப்பிற்கு உயர்ந்தளவிற்கு பங்களிப்பதனால் வரி நிருவாக முயற்சிகளை அளவிடுகின்ற முயற்சி பாரிய வரி செலுத்துபவர்களை இலக்காகக் கொண்டிருப்பது உரிய நேரத்தில் கோப்பிடப்படுவதனையும் வரிகளின் கொடுப்பனவினையும் உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாததாகும். மேலும், உயர்மட்ட அரசியல் மற்றும் வலுவானதும் ஆழமானதுமான சமூக கலந்துரையாடலுடன் கூடிய கடப்பாடும் சீர்திருத்தங்களின் காத்திரமான தன்மையினை உயர்த்துவதற்கு முக்கியமானதாகும். வரிச் செலுத்துகைகளை ஊக்குவிப்பதற்கு அரச செலவிடலின்

1

பயன் மற்றும் வினைத்திறன் மற்றும் அரச நிதிகளில் வெளிப்படைத்தன்மை என்பனவும் உயர் வரி இணைங்குவிப்பு கலாச்சாரத்தினை மேம்படுத்துவதற்கு அவசியமானவைகளாகும்.

அரசாங்கத்தின் நடுத்தர கால இறை இலக்குகளை எய்துவது என்பது நிலையானதும் நன்கு இணைக்கப்பட்டதும், சான்றுகளை அடிப்படையாகக் கொண்டதுமான கொள்கை வகுப்புக்களின் மீது தங்கியிருக்கிறது. வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் நடுத்தர கால இறை விதிகளுடன் ஒப்பிடுகையில் தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களின் இறைத் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பிறழ்வுகளை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துக்காட்டுகிறன. அரசிறைத் திரட்சி அடிக்கடி இலக்குகளுக்கு கீழே வீழ்ச்சியடைகின்ற வேளையில் அரச செலவினம் தொடர்ச்சியாக வரும் ஆண்டுகளில் மதிப்பீடுகளை விஞ்சிக் காணப்படுகிறது. அவ்வப்பொழுது தற்காலிக கொள்கை வழிமுறைகளை நடைமுறைக்கிடுவது ஒட்டுமொத்த இறை மற்றும் பேரண்டப் பொருளாதாரக் குறிக்கோள்களுக்கு ஒவ்வாததாக இருப்பதுடன் அத்தகைய தேவையற்ற பிறழ்வுகளுக்கான முக்கிய காரணிகளிலொன்றாகவும் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இத்திட்டமிடப்படாத கொள்கைகளில் பெரும்பாலானவை அரசிறை மற்றும் செலவினப்பக்கத்தின் மீதும் பற்றாக்குறைக்கு நிதியிடல் நியதிகளிலும் நேரடியான மற்றும் மறைமுகமான இறைச் சிக்கல்களைக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக, சமூகம் மற்றும் அரசியல் ரீதியான பிரபல்யமளிக்கும் குறுங்கால எண்ணங்களுடன் தூண்டப்படுகின்ற அவ்வப்போது தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் அரசாங்கக் கொள்கைகள் வரவு செலவுத்திட்டத்தின் மீது இடைக்காலத் தாக்கங்களைக் கொண்டிருப்பதுடன் அரசாங்கத்திற்கான நீண்ட கால செலவிடல் கடப்பாடுகளை உருவாக்குவதன் மூலம் இறைக் குறிக்கோள்களை எய்துவது தொடர்பிலும் பிரசைகளின் ஒட்டுமொத்த நலன்புரிகள் தொடர்பிலும் தீங்கிழைத்துவிடக்கூடும். எடுத்துக்காட்டாக, பதவி வெற்றிடத் தேவைப்பாடுகளை பரிசீலனையில் கொள்ளாமலும் கூலி அதிகரிப்புக்களை உற்பத்தியாக்க மேம்பாடுகளுடன் இணைக்காமலும் சமூக அமைதியின்மைக்குட்படாமல் எதிர்காலத்தில் மீளப்பெறுவதற்குக் கடினமாக இருக்கும் படிகள்/ உதவுதொகை ஒதுக்கங்கள் போன்றவற்றிற்கு மத்தியில் மீண்டெழும் செலவினத்தை முகாமைப்படுத்தி சிக்கனமாகப் பேணுவது சவால்நிறைந்த பணியொன்றாகக் காணப்படுகிறது. அசாதாரணமான கொள்கை வகுப்புக்கள் இறை ஒழுங்கீனங்கள், குறைவான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும்தன்மை என்பனவற்றிற்கு வழிவகுத்து அதன் மூலம் நிச்சயமற்ற வியாபாரச் சூழலொன்றினைத் தோற்றுவித்து விடுகிறது. மேலும், அரசாங்கத்தின் குறுங்கால அரசிறைப் பற்றாக்குறைகளைப் பூர்த்திசெய்வதற்காக அவ்வப்போது தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் சட்டவாக்கத் திருத்தத்திற்கு முன்னரான வரி விதிப்புக்கள் வரி முறைமையில் நிலையற்ற தன்மையொன்றையும் வியாபாரங்களுக்கு நிச்சயமற்றதன்மைகளையும் ஏற்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர் நம்பிக்கையினைத் தேய்வடையச் செய்து அதிகரித்த வரிச் செலவினை இறுதியில் வாடிக்கையாளர் மீது சுமத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு இடர்பாடான நிலைமைகள் ஏற்பட காரணமாகிவிடுகிறது. மேலும், ஒரு துறையின் நன்மைக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற அரச கொள்கைகள் இன்னொரு துறையின் மீது கசிவுத் தாக்கங்களைக் கொண்டிருப்பதுடன் அதன் மூலம் மறைமுகமாக வரவு செலவுத்திட்டத் தாக்கங்களையும் தோற்றுவித்து விடுகிறது. எனவே, சான்றுகளை அடிப்படையாகக் கொண்டதும் நன்கு இணைக்கப்பட்டதுமான கொள்கை வகுப்புக்களை முழுமையான நோக்குடன் தயாரிப்பது இறைச் செயலாற்றம் மற்றும் ஒழுக்கவியலின் மீது எதிர்பாராமல் ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்கும் மிக முக்கியமானதாகும். மேலும், குறுங்கால இலக்கிடப்படாத செலவுகளும் இறை ஒழுங்கீனங்களும் நீண்ட கால இறைச் சமநிலையற்றதன்மைகளைத் தோற்றவித்து இறுதியாக பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினையும் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியையும் பாதிக்கின்ற வேளையில் எதிர்காலச் சந்ததியினர் மீது உயர்ந்த வரிச் சுமையினையும் தோற்றுவித்து விடுகிறது என்பது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டுவது மிகமுக்கியமானதொன்றாகும். அத்தகை விழிப்புணர்வினை உருவாக்குவது அரசாங்கங்களின் செயலாற்றத்தினை நீண்ட கால பேரண்டப் பொருளாதாரக் குறிக்கோள்களை எய்துவதில அவர்களின் காத்திரமான தன்மையின் அடிப்படையில் மதிப்பிடுவதற்கான பொதுமக்களின் மனதை மாற்றுவதற்கு மிகமுக்கியமாதாகும். பொதுமக்களின் மனப்போக்கினை அவ்வாறு மாற்றியமைப்பது அதிகாரிகள் நீண்ட கால அபிவிருத்திக் குறிக்கோள்கள் மீதும் குறுகிய பார்வையுடன் கூடிய பிரபல்யமான கொள்கைகளை அவ்வப்போதைய தேவைகளுடன் நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, நலன்புரிகளை உச்சப்படுத்தக்கூடிய கொள்கைகளை நோக்கி தமது முன்னுரிமைகளில் கவனம் செலுத்துவதுதற்கு ஊக்குவிப்பாக அமையும்.

கடந்த பல தசாப்தங்களாக நலிவடைந்த இறைத் துறைச் செயலாற்றத்தினால் தூண்டப்பட்ட மத்திய அரசாங்கப் படுகடனில் சடுதியான உயர்வு, இறைப் பக்கத்தில் முக்கிய பிரச்சனையொன்றாக தொடர்ந்தும் விளங்கி முதலீட்டாளர்கள், கடன்கொடுநர்கள் மற்றும் தரப்படுத்தல் முகவராண்மைகளின் கரிசனைகளை உயர்த்தின. விடாப்பிடியான அமைப்பியல்சார்ந்த வரவுசெலவுப் பற்றாக்குறைகள், மிதமிஞ்சிய செலவினங்கள், தொடர்ச்சியான அரசிறையின் சரிவுகள், உயர்வடைகின்ற மொத்த நிதியிடல் தேவைகள் அத்துடன் தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களின் மிதமிஞ்சிய கடன்பெறுகைகள் என்பன கணிசமாக உயர்வான பொதுப்படுகடன் மட்டங்களை மிகவும் உச்சமடையச்செய்துள்ளன. மேலும், அண்மைய ஆண்டுகளில் பதிவாகிய மந்தமான பொருளாதார வளர்ச்சியும் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் எதிர்பாராத

பொருளாதாரப் பின்னடைவும் நாட்டின் படுகடன் பிரச்சனையினை மேலும் தீவிரப்படுத்தியுள்ள அதேவேளை, முக்கிய இறை விகிதாசாரங்களை சீர்குலையச்செய்துள்ளன. பல பேரண்டப்பொருளாதார சவால்களைத் தோற்றுவித்த படுகடன் இருப்பானது கடந்தகாலத்தில் பெயரளவு நியதிகளில் ஒவ்வொரு ஐந்து தொடக்கம் ஆறு ஆண்டுகளுக்கும் இரு மடங்கினால் அதிகரித்து 2021இன் இறுதியளவில் வரலாற்றிலேயே இரண்டாவது உயர்வான 104.6 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் விகிசாரத்தினை எய்தியது. உயர்வான பொதுப்படுகடன் மட்டமானது பேரண்டப்பொருளாதார அதிர்வுகளுக்கு பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடியதன்மையினை மேலும் மோசமடையச் செய்கின்றது. வளர்ச்சியடைந்துவரும் பொதுப் படுகடனானது எதிர் சுழற்சிமிக்க இறைக் கொள்கை வழிமுறைகளை பின்பற்றுவதற்கான வசதியினையும் தடுத்துத்துநிறுத்தி, நாட்டுக்கான தாழந்த தரப்படுத்தலுடன் இணையப்பெற்றுள்ள அதிகரித்த இடர்நேர்வு காப்பீடு மற்றும் அதிகரித்த கடன்பெறுதல் செலவுகள் என்பனவற்றின் ஊடாக தனியார் துறை மீது கசிவுத் தாக்கங்களையும்இது, பொருளாதார வீழ்ச்சியினை தீவிரமாக மட்டுப்படுத்தக்கூடும் என்பதுடன் மேலும் பொருளாதாரம் சுருக்கமடைவதைத் தோற்றுவிக்கலாம். எனவேதான், மந்தமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட காலப்பகுதிக்கு மத்தியிலும்கூட படுகடன் சுமையைக் குறைப்பதற்கும் படுகடனை முகாமைசெய்யத்தக்க மட்டங்களில் நிலைநிறுத்துவதற்கும் தீவிரமான இறைத் திரட்சிப்படுத்தல் அவசியப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, உயர்வான படுகடன் சுமையானது நாட்டின் நீண்டகாலப் போக்கில் பொருளாதார, விசேடமாக தனியார் முதலீடுகளை தடுப்பதனூடாகவும் நீண்டகாலத்தில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு வசதி போன்ற தேவையுடைய துறைகளை நோக்கிய அரசாங்க முதலீட்டிற்கான இயலளவினைக் குறைப்பதன் வாயிலாகவும் நாட்டின் நீண்டகால பொருளாதார வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கலாம். அதே சந்தர்ப்பத்தில், உயர்வான படுகடன் மட்டங்களுடன் இணையப்பெற்ற உயர்வான படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் நாணயக் கொள்கையின் செயல்திறன்வாய்ந்ததன்மையினையும், விசேடமாக இறைப் பற்றாக்குறையானது நாணய மேலாண்மைச் சபையினால் மிதமிஞ்சிப் பணமாக்கப்படுகின்ற போது அடிக்கடி சவாலுக்குட்படுத்துகின்றன. மேலும், உயர்வான படுகடன் மட்டங்கள் எதிர்காலத்தில் சந்தைப் பொருட்களின் விலைகளை திரிபடையச்செய்கின்ற சாத்தியமான வரிகளையும் தன்னிச்சையான நிச்சயமின்மைகளையும் அதிகரிப்பதுடன் நிதியியல் முறைமை உறுதியின்மைகளைத் தோற்றுவிப்பதற்கான சாத்தியத்தினையும் அதிகரிக்கின்றது. இலங்கையின் பொதுப்படுகடன் சுமையானது விசேடமாக முதிர்ச்சியடைகின்ற வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் ஒன்றுசேர்வதுடன் இணைந்து வெளிநாட்டுப் படுகடனின் உயர்வான பங்கு அத்துடன் சாதகமற்ற முதிர்ச்சிக் கட்டமைப்பு என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுத் துறையின் பாதிக்கப்படும்தன்மைகளை பெருகச்செய்துள்ளது. இலங்கையின் உயர்வான பொதுப்படுகடனைக் கொண்ட இப்பயணப்பாதையானது மிதமிஞ்சிய நம்பிக்கைவாய்ந்த அரசிறை இலக்குகளை உருவாக்குவதல் மற்றும் குறைவான அரசிறைத் திரட்டல், ஆரம்பப் பற்றாக்குறைகள் மீண்டும் மீண்டும் தோற்றம்பெறுதல், எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவான பொருளாதார வளர்ச்சி, சலுகை அடிப்படையிலான உட்பாய்ச்சல்கள் கிடைக்கப்பெறாமை, அத்துடன் வெளிநாட்டு நாணய வருவாய்களை ஈட்டுகின்ற உற்பத்தித்திறன்வாய்ந்த செயற்றிட்டங்களுடன் பொருந்தாத வெளிநாட்டுக் கடன்பாடுகள் என்பவற்றுக்கு மத்தியில் இறைப் திரட்சிப்படுத்தல் இலக்குகளை பலவீனமாக கடைப்பிடித்ததன் மூலம் இலங்கையின் இந்த உயர்ந்த பொதுபடுகடனின் பாதை வழிநடத்தப்பட்டுள்ளது. படுகடன் ஒன்றுசேர்வதைத் தளர்த்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் இரண்டினதும் நியதிகளில் வட்டிக் கடப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு மேலதிகக் கடன்பெறுதல்களை நிறுத்துவதற்கு அரசாங்க நிதியில் படிப்படியான மேம்படுத்தல் அத்தியாவசியமானதாக விளங்குகின்றது. ஆதலால், படுகடன் நிலைபெறுதன்மையினை நிலைநிறுத்துவதற்கு குறிப்பாக, ஆரம்ப மீதியில் கணிசமான மிகையொன்றினை உருவாக்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட இறை ஒழுக்கம் மற்றும் கடுமையான இறைப் திரட்சிப்படுத்தல் முயற்சிகளூடாக படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையைப் பாதுகாப்பதற்கு துரிதமான நடவடிக்கைகள் இன்றியமையாதவையாக விளங்குகின்றன. இறைசார்ந்த விதிகளை அதாவது, 2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வரவுசெலவுதிட்ட கூட்டுகள் மீது எண்சார்ந்த வரையறைகளை விதிப்பதன் வாயிலாக இறைக்கொள்கை மீது விதிக்கப்படும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் தடைகளை கடைப்பிடிப்பதற்கான நம்பகமான அர்ப்பணிப்பு, நீடித்துநிலைத்திருக்கும் இறைத் திரட்சியினை உறுதிப்படுவதற்கும் அதனூடாக மிதமிஞ்சிய செலவிடுதலுக்கான அழுத்தங்களைக் கட்டுப்படுத்தி இறைசார்ந்த வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக்கூறும்தன்மையினையும் உறுதிசெய்வதற்கும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. மேலும் தன்னார்வமுள்ளதும் கட்டாயமற்றதுமான இறைவிதிகளுக்கு பதிலாக கட்டாயமான இறை விதிகளை நடைமுறைப்பத்துவது இறை ஒழுக்காற்றலினை மேலும் வலுப்படுத்தும். அத்துடன், உண்மைப் பொருளாதார நடவடிக்கை தொடர்பில் எதிர்கொள்ளும் குறுகியகால இடர்பாடுகளைப் பொருட்படுத்தாது வெளிநாட்டு நாணயக் கிடைப்பனவுகள் அல்லது வெளிப்பாய்ச்சல் முகாமைத்துவம் ஊடாக ஒதுக்குகளை குறைநிரப்புவதற்கும் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்குமான முயற்சிகள் தொடர்ந்து பின்பற்றப்படவேண்டும். வினைத்திறனற்ற நிறுவனங்களின் தொடர்ந்துவருகின்ற நட்டங்கள் இறுதியாக அரசாங்கத்தின் எதிர்பாரா பொறுப்புகளாக மாற்றப்படுவதற்கு அதிக சாத்தியம் காணப்படுவதனால் அரசுக்குச் சொந்தமான

1

சிறப்புக்குறிப்பு 3

இறைத்திரட்சி : பேரின இறை உறுதிப்பாட்டிற்கான பாதை

உலகளாவிய நோய்த்தொற்றின்போது மேற்கொள்ளப்பட்ட இறைக்கொள்கைகள்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கான இறைக்கொள்கைசார் பதிலிறுப்புக்கள் அரச நிதியின் மீது குறிப்பிடத்தக்களவான சுமையை ஏற்படுத்தி நாடுகளில் இறைசார் அழுத்தங்களின் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தபோதிலும் அது உலகிலுள்ள பொருளாதாரங்கள் மீது ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலான விளைவுகளைக் கட்டுப்படுத்தி நோய்த்தொற்றுக்குப் பின்னரான மீட்சியினை வசதிப்படுத்தியிருந்தது. எதிர்பாராத மற்றும் முன்னொருபோதுமில்லாத பொருளாதார நெருக்கடிக்கு பதிலிறுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட துரித இறைசார் வழிமுறைகளின் அளவு, வகை மற்றும் உள்ளடக்கம் என்பன வேறுபட்டிருந்ததுடன் அவை ஒவ்வொரு நாட்டினதும் சிறப்பியல்புவாய்ந்த கட்டமைப்பு, உட்பொதிந்த மற்றும் இறைசார் சலுகைகள் என்பவற்றின் மீதும் தங்கியிருந்தன. சிறிய தோற்றம்பெற்றுவருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் அத்தகைய இறைசார் தூண்டல்களுக்கு இடமளிப்பதற்கு முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம்பெற்றுவருகின்ற சந்தைகள் சார்பு ரீதியில் போதியளவான இறைசார் நெகிழ்ச்சித்தன்மைகளுடன் சிறந்த நிலைமைகளில் காணப்பட்டன. சுகாதாரம் மீதான அதிகரித்த செலவினம், தொழிலற்றோருக்கான நன்மைகள் மற்றும் ஏனைய நிவாரணங்களை வழங்குதல், வரிச் சலுகைகள் மற்றும் வரியினைப் பிற்போடுதல், திரவத்தன்மை உதவிகள், பங்குரிமை மூலதன உட்செலுத்தல்கள் உள்ளடங்கலாக நேரடியான வரவு செலவுதிட்டம் சார்ந்த வழிமுறைகள் அதேபோன்று பிற்போடப்பட்ட படுகடன் கொடுப்பனவுகளுக்கான உத்தரவாதத்தை வழங்குதல் உள்ளடங்கலாக நேரடியற்ற நடவடிக்கைகள் பல்வேறு நாடுகளினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுவான இறைக்கொள்கை வழிமுறைகளாக காணப்படுகின்றன. பற்றாக்குறைக்கான நிதியீட்டம் ஊடான இறைத் தூண்டல்களின் உறுதியான சீரமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி மெதுவடைதலுடன் இணைந்ததான உலகளாவிய நோய்த்தொற்றின் தொடர்ச்சியான தாக்கங்கள் என்பன அநேகமான பொருளாதாரங்களின் இறைத்தொழிற்பாடுகளின் மீது அழுத்தங்களை ஏற்படுத்தியிருந்ததுடன் அவற்றினூடாக தொடர்புடைய நாடுகளின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியிருந்தது.

ஏனைய குறைந்த நடுத்தர வருமானம் பெறும் மற்றும் சந்தையை அனுகக்கூடிய நாடுகளில் அறிக்கையிடப்பட்டவாறு, உலகளாவிய நோய்த்தொற்றின் பரவல் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் முக்கியமாக இலங்கையின் இறைத்துறையின் மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இறைசார் தலையீடுகளை கணிசமானளவில் மேற்கொள்வதற்கு போதியளவு இறைசார்ந்த இடைவெளிகள் கிடைக்கப்பெறாத நிலையில் இலங்கை அரசாங்கமும் நோய்த்தொற்று தொடங்கியதிலிருந்து ஏற்படுத்தப்பட்டிருந்த அழுத்தங்களின் முன்னுரிமைகளை கையாள்வதற்கும் பல்வேறு வகையான இறைத் தூண்டல்களை வழங்குவதற்கும் அர்ப்பணித்திருந்தது. சுகாதாரக் கவனிப்பு மற்றும் நோய்த்தொற்றுக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் அதேபோன்று பாதிக்கப்படும் தன்மையுடைய வகுப்பினருக்கான நிதிசார் மற்றும் பண்டங்களின் மாற்றல் கொடுப்பனவுகள் என்பவற்றிற்கான அதிகரித்த செலவுகளின் காரணமாக அரசாங்கம் 2020 மற்றும் 2021 காலப்பகுதிகளில் உலகளாவிய நோய்த்தொற்றிற்காக குறைந்தது முறையே ரூ.117.5 பில்லியன் மற்றும் ரூ.134.8 பில்லியன்களை செலவிட்டிருந்தது. 2019இற்கு பின்னரான காலப்பகுதியிலிருந்து மந்தமான பொருளாதார நடவடிக்கைகளுக்கு தூண்டுதலளிப்பதற்காக அரசாங்கம் குறைந்த வரிக்கட்டமைப்பினைத் தொடங்கியிருந்ததுடன் இக்குறைவான வரிச் சூழல் நோய்த்தொற்றுக் காலப்பகுதியிலும் பேணப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் மருந்துகள் உள்ளடங்கலாக சில அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக பல்வேறுபட்ட வரி நிவாரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. இதன்விளைவாக, மிதமடைந்த வரி வீதங்கள், வரி விலக்கு மட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட அதிகரிப்புக்கள் அதேபோன்று மந்தமான பொருளாதார வளர்ச்சி போன்றவற்றின் காரணமாக வீழ்ச்சியடைந்த வரி அடித்தளத்தின் விளைவாக நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அரசாங்கத்தின் அரசிறையானது சடுதியாக வீழ்ச்சியடைந்திருந்தது. இதற்கமைய, வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2020 மற்றும் 2021 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முறையே 11.1 சதவீதத்திற்கும் 12.2 சதவீதத்திற்கும் அதிகரித்திருந்தது. அதேவேளை, 2021 ஒத்தோபரில் வெளியிடப்பட்ட கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கான இறைக்கொள்கை பதிலிறுப்புக்கள் பற்றிய இறைக் கண்காணிப்புத் தரவுத்தளத்தின் பிரகாரம், உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பில் அரசிற்கான ஒன்றுதிரண்ட மேலதிகச் செலவிடல் பெறுமதி மற்றும் இழக்கப்பட்ட அரசிறை என்பன மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 1.1 சதவீதமாகவிருந்தது. இது பிராந்தியத்திலுள்ள இணையான நாடுகளுடன் அதாவது இந்தியா (4.1 சதவீதம்), பாகிஸ்தான் (2.0 சதவீதம்), வங்காளதேசம் (2.3 சதவீதம்) மற்றும் மாலைதீவுகள் (8.0 சதவீதம்) போன்றவற்றுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகக் காணப்படுகின்றது. மேலும், நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட

வரைபடம் சி.கு. 3.1

அரச செலவினம் மற்றும் அரசிறை



மூலம் : நிதி அமைச்சு

இறை வசதியுடன் இலங்கையில் நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்கள் என்பன பிரதானமாக தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையின் ஊடாக ஆதரவளிக்கப்பட்டிருந்தன. உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் குறைவடைந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் மற்றும் கணிசமான படுகடன் பணிக் கொடுப்பனவுகள் என்பன இறை மற்றும் வெளிநாட்டுத் துறைகள் என்பவற்றின் மீது மேலதிக அழுத்தங்களினை ஏற்படுத்தியிருந்தன. குறிப்பாக, புதிய வெளிநாட்டு நிதியீட்டல் மூலங்களுக்கு காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வழிகள், பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் ஏற்பட்டுள்ள திரவத்தன்மை வரையறைகள் அதேபோன்று இலங்கையின் நாட்டிற்கான தரக்குறைப்புகள் என்பவற்றுடன் நிதியீட்டல் இடைவெளிகளை நிரப்புவதற்காக அரசாங்கமானது உள்நாட்டுக் கடன்பெறுதல்களுக்கு விசேடமாக உயர்ந்தளவில் மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் துறை என்பவற்றில் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. அத்தகைய இறைச் சமமின்மைகள் 2020இன் இறுதி மற்றும் 2021இன் இறுதிக் காலப்பகுதியில் அரசாங்கத்தின் படுகடன் அளவினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முறையே 100.6 சதவீதம் மற்றும் 104.6 சதவீதம் போன்ற மட்டங்களை அடைவதற்கு இட்டுச்சென்றிருந்தது.

இருந்தபோதிலும், இலங்கையில் காணப்படுகின்ற தற்போதைய பலவீனமான இறை நிலை மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட பேரண்டப் பொருளாதார பிரச்சினைகள் என்பன முழுமையாக நோய்த்தொற்று நிலைமையின் காரணமாக ஏற்பட்டவையல்ல. மாறாக, அவை இறைத் துறையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற பிரச்சனைகளின் பிரதிபலிப்பாகும். பல தசாப்தங்களாக இலங்கை விடாப்பிடியான இறைப் பற்றாக்குறைகளினால் பீடிக்கப்பட்டு வருவதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகள் ஆகிய இரண்டிலுமிருந்து அரசாங்கம் தொடர்ச்சியாகக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கப் படுகடனின் திரட்டலினையும் ஏற்படுத்தியிருந்தது. அதன்விளைவாக, அரசாங்கத்தின் வருமானம் மற்றும் நாட்டிற்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் என்பவற்றின் பெருமளவான பகுதி படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் உற்பத்தித் திறன் வாய்ந்த முதலீடுகளுக்கு சிறிதளவான அனுமதியினையே வழங்கியிருந்தது. 1994ஆம் ஆண்டு தொடக்கம், அரசிறை மற்றும் கொடைகளின் அளவானது குறைந்தது அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தையேனும் நிறைவேற்றிக்கொள்வதற்குப் போதுமானதாக இல்லாதிருந்துவருவதுடன் பொதுவாக எதிர்கால பொருளாதார வளர்ச்சி மற்றும் நாட்டின் படுகடன் மீள்செலுத்தல்களின் சாத்தியத்தன்மை போன்றவற்றிற்கு பங்களிப்பு செய்யாத மீண்டெழும் செலவினத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் கடன் பெறப்படவேண்டியதனை அவசியப்படுத்தியிருந்தது. மேலும், வரைபடம் சி.கு.3.1 இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் அரசிறை மற்றும் கொடைகளின் மொத்தப் பெறுமதியானது சம்பளங்கள், ஓய்வூதியம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற இறுக்கமான செலவுகளைக் காட்டிலும் நன்கு கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன் இப்பிரச்சனையின் தீவிரத்தன்மையினை அதிகரித்துள்ளது. முன்னொருபோதுமில்லாத 2019இன் இறுதிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாரியளவான வரிக்குறைப்பானது அரசாங்கத்தின் குறைந்தளவான அரசிறை

வரைபடம் சி.கு. 3.2
அரசிறை - வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு எதிராக உண்மையானவை



வரைபடம் சி.கு. 3.3
அரச செலவினம் - வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு எதிராக உண்மையானவை



மூலம் : நிதி அமைச்சு

பிரச்சினையினை தீவிரப்படுத்தியிருந்ததுடன் 2020 மற்றும் 2021 காலப்பகுதியில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கான நாணய நிதியீட்டத்தினையும் கட்டாயப்படுத்தியிருந்தது.

வரலாற்று ரீதியான உண்மையான தரவுப் போக்கில் பிரதிபலிக்கப்பட்டவாறு ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் படுகடன் மட்டம் என்பவற்றை கடந்த பல ஆண்டுகளாக நிலைபெறத்தக்க மட்டமொன்றிற்குக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் இலக்குகளை எடுத்துரைக்கின்ற வரவுசெலவுத்திட்ட உரையுடன் சேர்த்து வெளிப்படுத்தப்பட்ட நடுத்தரகாலப் பேரண்ட இறைக் கட்டமைப்பு ஒருபோதும் கைகூடவில்லை. அரசிறை தொடர்பாக வரவு செலவுத்திட்டத்தில் காணப்படுகின்ற மிகையான இலக்குகள் மற்றும் மேலதிகமாக மதிப்பிடப்பட்ட அரசிறைக்கு இணங்கியதாக வருடாந்த செலவினங்களை திட்டமிடுதல் என்பன எதிர்பார்க்கப்பட்டதனைக் காட்டிலும் எப்போதும் விரிவானதொரு வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு இட்டுச்சென்றிருந்தன. அதேவேளை, பொறுப்புவாய்ந்த இறை முகாமைத்துவம், முன்மதியுடைய பொதுப்படுகடன் முகாமைத்துவத்துவம் மற்றும் 'இறை விதிகள்' என்பவற்றை

1

அமுலாக்குவதன் ஊடான இறை விவகாரங்கள் மீதான பொதுக்கூர்ந்தாய்வினையும் தற்போது செயற்பாட்டிலில்லாத பிணிக்கின்ற விதிகளையும் நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக உறுதிசெய்வதற்காக 2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இறை முகாமைத்துவம் (பொறுப்புச் சட்டம்) இயற்றப்பட்டது. இறை முகாமைத்துவச் (பொறுப்பு) சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டவாறு அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை, பொதுப் படுகடன் மற்றும் எதிர்பாராப் பொறுப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய இவ் இறைவிதிகள் அட்டவணை சி.கு.3.1 இல் தரப்பட்டவாறு பின்னர் திருத்தம் செய்யப்பட்டன. தொடர்ச்சியாக பதவிக்குவந்த அரசாங்கங்கள் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை விதியினை தொடர்ச்சியாக நிறைவேற்றியிருக்காத அதேவேளை பொதுப்படுகடனைக் குறைத்தல் மற்றும் எதிர்பாராப் பொறுப்புக்களை மட்டுப்படுத்தல் என்பன தொடர்பிலான இறை விதிகள் குறித்துரைக்கப்பட்ட மைற்கற்களை எய்தியிருக்கவில்லை. மாறாக, இறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டமானது கால இலக்குகளை நீடித்தல் மற்றும் மேலதிக வரவுசெலவுத்திட்டத்திற்கான பல ஒப்புதல்கள் என்பவற்றின் ஊடாக பல தடவைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. முன்மதியுடைய இறை முகாமைத்துவத்தை உறுதிசெய்வதற்கான வலுவான அர்ப்பணிப்பு முன்மொழியப்பட்ட இறைத் திரட்சிக்கான சான்றாகக் காணப்படவில்லை.

அட்டவணை சி.கு. 3.1

இலங்கையின் இறை விதிகளின் கட்டமைப்பு

இறை விதிகள்	இறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டம் 2003	திருத்தம் 2013	திருத்தம் 2016	திருத்தம் 2021
இறைப் பற்றாக்குறை	2006 அளவிலும் அதற்கு அப்பாலும் ஆனால் 5 சதவீதத்திற்கும் குறைவு	மாற்றமில்லை	மாற்றமில்லை	மாற்றமில்லை
பொதுப்படுகடன் (மொ.உ.உற்பத்தியின் பங்கு)	2006 அளவில் 85 சதவீதத்தினை விடக் குறைவு மற்றும் 2013 இறுதியளவில் 60 சதவீதத்தினை விடக் குறைவு	2013 அளவில் 80 சதவீதத்தினை விடக் குறைவு மற்றும் 2020 இறுதியளவில் 60 சதவீதத்தினை விடக் குறைவு	மாற்றமில்லை	2030 இறுதியளவில் 60 சதவீதத்தினை விடக் குறைவு
திறைசேரி உத்தரவாதங்கள் (மொ.உ.உற்பத்தியின் பங்கு)	3 வருட அசைகின்ற சராசரி மொ.உ.உற்பத்தியின் அடிப்படையில் 4.5 சதவீதத்தினை விடக் குறைவு	மொ.உ. உற்பத்தியின் 7.5 சதவீதம்	மொ.உ. உற்பத்தியின் 10 சதவீதம்	மொ.உ. உற்பத்தியின் 15 சதவீதம்

மூலம் : இறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்ததான திருத்தங்கள்

விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றின் மீதான பலவீனமான இறைச் செயலாற்றத்தின் தாக்கம்

சேர்ஜன்ட் மற்றும் வெல்லஸ் (1981) கூறுவதற்கமைய, இறை ஆதிக்கத்திற்கு மத்தியிலும் இறைத் தொழிற்பாடுகள் தரப்பட்ட உயர்வான வரவுசெலவுத்திட்டப்பற்றாக்குறைப் பாதையொன்றிற்கு நிர்ணயிக்கப்படுகின்றபோது அரசாங்கத்தின் கடன் தீராற்றலை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கிகள் தொடர்ச்சியான உரிமை வருவாய்களை ஈட்டுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தன. பலன்சார்ட் (2004) என்பவரும் உயர்வான படுகடனைக் கொண்ட சூழலொன்றில் நாணயக்கொள்கையின் ஊடாக மாத்திரம் பணவீக்க இலக்கிடல் வெற்றிகரமாக அமையாது என்பதை உறுதிப்படுத்துகின்றார். பணவீக்கத்தை இலக்கிடப்பட்ட வீதத்தில் பேணும் நோக்குடன் உண்மை வட்டி வீதத்தினை உயர்த்துவதற்கான நாணய மேலாண்மைச் சபையின் முயற்சியானது இறைத்திரட்சி தொடர்பில் இறை மேலாண்மைச் சபையானது விருப்பமின்றிக் காணப்படுமாயின் அதிகரித்த கடன்பெறல் செலவுகளின் ஊடாக படுகடன் மட்டங்கள் மோசமடையக்கூடும். மேலும், படுகடன் மட்டங்களில் ஏற்படும் அதிகரிப்பானது நாட்டிற்கான தவணை தவறுதல் இடர்நேர்வினை தீவிரப்படுத்தி செலாவணி வீத தேய்மான அழுத்தத்தினை நெருக்கமடையச் செய்யக்கூடுவதுடன் அதனூடாக குறைவான பணவீக்கத்திற்கு மாறாக உயர்வான பணவீக்கத்திற்கு இட்டுச்செல்லக்கூடும். எனவே, பலன்சார்ட் (2004) என்பவர் உயர்வான படுகடன் சூழலொன்றில் பணவீக்கத்தினை முறியடிப்பதற்கு நாணயக்கொள்கையினை மாத்திரம் பயன்படுத்தவதற்குப் பதிலாக இறைக்கொள்கையினைப் பயன்படுத்தி வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைத்து அதனூடாக அரசாங்கப் பொதுப்படுகடன் மட்டங்களை குறைக்க முனைவதன் ஊடாக பணவீக்கமானது முகாமை செய்யப்படவேண்டுமென வலியுறுத்துகின்றார். அதேவேளை, பொதுப்படுகடனில் உயர்வுடன் ஈடுகொடுப்பதற்கு சாத்தியமான தீர்வுகளாக பணவீக்கம் மற்றும் நிதியியல் கட்டுப்பாடு[1] என்பன சாத்தியமான தீர்வுகளாக அமையக்கூடுமென சில அறிஞர்கள் வாதிடுகின்றனர் (றெயின்காட் மற்றும் ஸ்பெரன்சியா, 2011). எனினும், விசேடமாக உள்நாட்டு வங்கிகளிலிருந்து அரசாங்கம் கடன்பெறுகின்றபோது நீண்டகால நிதியியல் கட்டுப்பாடுகள் வங்கிகளுக்கு இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளைத் தோற்றுவித்து வங்கிகளின் ஐந்தொகைகளை சீர்குலைப்பதனால் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு அது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். மாறாக, சந்தைப் பங்கேற்பாளர்கள் குறிப்பாக கடன் பெறுதல் செலவுகளை அதிகரிக்கக்கூடிய அரசாங்கப் பிணையங்கள் விளைவு வீதங்களில் உயர்வான பணவீக்க எதிர்பார்க்கைகளை உள்ளகப்படுத்துகின்றபோது பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதற்கு பொருளாதாரத்தில் பணவீக்கம் உயர்வடைவதற்கு இடமளிப்பதனூடாக வரவுசெலவுத்திட்ட மீதி மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக படுகடன் மட்டத்தை மேம்படுத்துவதானது எதிர்வினையாற்றக்கூடியதாக மாறக்கூடும்.

தற்போது, இலங்கை மத்திய வங்கியானது பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டிற்கான வங்கியின் பொறுப்பாணைக்கிசைவாக பணவீக்கத்தினை குறைவான மற்றும் நிலையான மட்டங்களில் பேணுகின்ற நோக்குடன் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் நாணயக் கொள்கையினை நடாத்துகின்றது. எனினும், தொடர்ச்சியான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, உயர்வான அரசாங்கப் படுகடன் மட்டங்கள் அண்மைக்காலங்களில் பற்றாக்குறை நிதியிடலுக்காக அரசாங்கம் மத்திய வங்கியின் மீது அதிகளவு தங்கியிருந்தமை என்பன நாணயக்கொள்கையை வினைத்திறன்மிக்கவாறு நடாத்துவதனை வலிதற்றதாக்கியுள்ள அதேவேளை நிதியியல் முறைமையின் மீதான உறுதிப்பாட்டினையும் அச்சுறுத்துகின்றது. 2021இன் பிந்திய காலப்பகுதியில் வழங்கல்பக்க இடையூறுகள் பணவீக்கத்தின் துரிதமடைதலினால் தோற்றுவிக்கப்பட்டு நாட்டின் பணவீக்க இலக்கின் உயர்மட்டத்திற்கு அப்பால் சென்றிருந்ததுடன் வங்கித்தொழில் துறை மூலம் பிரதானமாக

1 நிதியியல் அடக்குமுறை என்பது வட்டி வீதங்கள் மீது வெளிப்படையான அல்லது உள்ளார்ந்த உச்சங்களின் வாயிலாக அரசாங்கத்திற்கான கடன்பெறுதல் செலவுகளைக் குறைப்பதற்கும் ஒய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் போன்ற கட்டுக்காப்பு உள்நாட்டு மூலங்களினால் அரசாங்கத்திற்கு பணிக்கப்படும் கடன் வழங்கலுக்கும் எல்லை தாண்டிய மூலதன அசைவுகளை ஒழுங்குபடுத்தல் அத்துடன் அரசாங்கத்திற்கும் வங்கிகளுக்குமிடையிலான வலுவான தொடர்பு என்பவற்றிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

அரசாங்கத்திற்கான அதிகரித்த கொடுகடனினால் தூண்டப்பட்ட கேள்வியும் பணவீக்கத்தின் உச்சத்திற்கான காரணமொன்றாக நோக்கப்படுகின்றது. இலங்கையின் பொருளாதாரம் பற்றிய வரலாறானது உயர்வான பணவீக்க நிகழ்வுகள் இறை சமமின்மைகளுடன் இணைந்து செல்வதாக எடுத்துக்காட்டுகின்றது. ஆகையால், நீண்டகால விலை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு இறைத்திரட்சியானது முக்கிய நிபந்தனையொன்றாக காணப்படுகின்றது.

பொருளாதார மந்தத்திற்கு மத்தியில் இறைத்திரட்சி

உலகின் பிற நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு மத்தியில், இறைத்திரட்சியானது அதன் பலவீனமான நிலை காரணமாக பொருளாதாரத்தில் ஏற்படும் நீடித்த தாக்கங்களை தவிர்ப்பதற்கு மொத்த கேள்வியை அதிகளவிற்கு குறைக்காத வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். இறைச் சிக்கனம் என்றும் அழைக்கப்படும் இறைத்திரட்சியானது குறுங்காலத்தில் பொருளாதார நடவடிக்கைகளின் மீது சுருக்கமான தாக்கவிளைவுகளை கொண்டிருக்குமென நியமமான கெயின்சிய முன்மொழிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதன்படி, இறைத்திரட்சிக்கான முயற்சிகளின் விளைவாக, பொருளாதார வளர்ச்சியின் மெதுவடைதலினால் ஏற்பட்ட குறைந்த அரசிறைச் சேகரிப்பு மற்றும் குறைந்த பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பவற்றின் காரணமாக நாட்டின் இறைச் செயலாற்றமானது மேலும் பாதிப்படையலாம். எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளதனால் நோய்த்தொற்று காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் இறைத்திரட்சியானது கொள்கை வகுப்பாளர்களுக்கு பெரும் கரிசனையொன்றாக காணப்படுகின்றது. எனினும், தொடர்ச்சியாக காணப்பட்ட பலவீனமான இறை நிலைமைகள் உயர் பணவீக்கம், பலவீனமான நாணயம் மற்றும் வங்கித்தொழில் துறையின் இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள், அதிகளவிலான நிச்சயமற்ற தன்மைகளை உருவாக்குதல், முதலீட்டாளர் நம்பிக்கையை குறைத்தல் மற்றும் நிதியியல் முறைமையில் உள்ள பாதிப்புகளை மோசமாக்குதல் போன்ற எண்ணற்ற பேரண்டப்பொருளாதார சமமின்மைகளை இலங்கைப் பொருளாதாரத்தில் தூண்டியுள்ளதுடன் இதனூடாக உயர் மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கான தடையினையும் ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, இம்முக்கியமான சூழலில் பேரண்டப்பொருளாதார சமமின்மைகளை தீர்ப்பதன் வாயிலாக பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டை அடைகின்ற குறிக்கோளானது குறுங்காலத்தில் உயர் வளர்ச்சியை அடையும் குறிக்கோளை பதிலீடுசெய்கின்றது. பாரம்பரிய கெயின்சிய கருத்திற்கு மாறாக குறிப்பாக பொதுப்படுகடன் உயர்வாக இருக்கின்றபோது பாரியளவான இறைத்திரட்சியை பொதுமக்கள் நம்பகத்தன்மை வாய்ந்ததாக உணருகின்றபோது இறைத்திரட்சியின் சுருக்கமான தாக்கங்களை எதிரீடு செய்வதற்கு சாத்தியப்பாடுகள் காணப்படுவதாக அண்மைக்கால ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன (கியாவசி மற்றும் பகானோ, 1990). மறுபுறத்தில், அரசாங்கமானது இறைத்திரட்சியை அடைவதற்கு முயற்சிக்கும்போது, அரசாங்கத்தற்கான கடன்பெறும் தேவைப்பாட்டில் நிரந்தர குறைப்பு ஏற்படுமென வீட்டுத்துறையினர் அறிந்திருப்பார்களாயின் தனியார் நுகர்வானது அதிகரிக்கும். அரசாங்கத்தின் கடன்பெறுகைகளின் அத்தகைய குறைப்பானது எதிர்காலத்தில் குறைந்த வரிகளை ஏற்படுத்துமென்பதுடன் இதனூடாக வீட்டுத்துறையினருக்கான ஆயுட்கால வருமானத்தை உயர்ந்தளவில் அதிகரிப்பதற்கும் தற்போதைய காலப்பகுதியில் அவர்கள் மேற்கொள்ளும் நுகர்வினை அதிகரிப்பதற்கும் ஊக்குவிக்கின்றன. மறுபுறத்தில், அரசாங்கத்திற்கான கடன்பெறுகைகளின் தேவைப்பாடுகளில் ஏற்படும் குறைப்பானது குறைந்த பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் குறைந்தளவான பொருளாதார நிச்சயமற்றதன்மை என்பவற்றை ஏற்படுத்துவதன் காரணமாக பொதுப்படுகடன் வழங்கல்களுடன் தொடர்புடைய பணவீக்க இடர்நேர்வு மட்டம் மற்றும் செலுத்தத் தவறுவதற்கான இடர்நேர்வு மட்டம் என்பன குறைவடையும். இது உண்மை வட்டி வீதங்களின் வீழ்ச்சிக்கு வழிவகுப்பதுடன் அதிக உற்பத்தித்திறன் வாய்ந்த தனியார்

அட்டவணை சி.கு. 3.2
இலங்கையின் வருமான வரி எதிர் பிராந்திய நாடுகள்

இலங்கை		இந்தியா		பாகிஸ்தான்		சிங்கப்பூர்		தாய்லாந்து	
வரி விதிக்கத்தக்க மட்டங்கள் (இ.ரூ. மில்.)	வரி வீதம் (%)	வரி விதிக்கத்தக்க மட்டங்கள (இந்திய ரூ. மில்.)	வரி வீதம் (%)	வரி விதிக்கத்தக்க மட்டங்கள் (பாகி.ரூ. மில்.)	வரி வீதம் (%)	வரி விதிக்கத்தக்க மட்டங்கள் (சி.டொ. மில்.)	வரி வீதம் (%)	வரி விதிக்கத்தக்க மட்டங்கள் (தா.பாட் மில்.)	வரி வீதம் (%)
0-3	0	0-0.25	0	0-0.6	0	0.005-0.02	1	0-0.15	0
3 -6	6	0.25-0.5	5	0.6-1.2	5	0.02-0.035	3	0.15-0.3	5
6-18	12	0.5-0.75	10	1.2-1.8	10	0.035-0.05	8	0.3-0.5	10
18 இற்கு மேல்	18	0.75-1	15	1.8-2.5	15	0.05-0.07	13	0.5-0.75	15
		1-1.25	20	2.5-3.5	17.5	0.07-0.1	21	0.75-1	20
		1.25-1.5	25	3.5-5	20	0.1-0.25	24	1-2	25
		1.5 இற்கு மேல்	30	5-8	22.5	0.25-0.4	24.5	2-5	30
				8-12	25	0.4-0.6	25	5 இற்கு மேல்	35
				12-30	27.5	0.6-1	26		
				30-50	30	1-2	28		
				50-75	32.5	2 இற்கு மேல்	30		
				75 இற்கு மேல்	35				

மூலம் : Pricewaterhousecoopers – உலக வரித் தொகுப்பு

1

முதலீட்டின் உள்ளீர்ப்பையும் அதிகரிப்பதற்கு ஊக்குவிக்கும். ஆகையால், பலவீனமான இறை நிலைமைகளில் இருந்து வெளிப்படுத்தப்படும் கடுமையான பேரண்டப் பொருளாதார சமமின்மைகளை கருத்திற்கொண்டு, குறிப்பாக நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட இறைத்திரட்சி வழிமுறைகள் இலங்கைப் பொருளாதாரத்திற்கு மிகவும் நன்மை பயக்கத்தக்கதாக அமையக்கூடும். எனினும், குறுங்காலத்தில் சாத்தியமான சுருக்க விளைவுகளைக் குறைத்து அதன்மூலம் இறைச் சிக்கனம் "தாமாகவே தமது திட்டத்தை முறியடித்தல்" உபாயமாக இருப்பதைத் தடுக்கும் விதத்தில் ஒருங்கிணைப்பு உத்திகளின் உத்தமமான இணைப்பை இலங்கை நடைமுறைப்படுத்துவது மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது.

அதேநேரம், இறைத்திரட்சி செயன்முறையானது பல்வேறு பொருளாதாரப் பிரிவுகளில் சமமற்ற விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் இதன்விளைவாக சமத்துவமின்மை விரிவடைவதற்கும் இட்டுச்செல்லக்கூடும். இறைச் சிக்கனமானது கொவிட்-19 நோய்த்தொற்றின் மூலமாக தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற சமமின்மைகளை மேலும் மோசமடையச் செய்யக்கூடும். எனவே, வெளியீட்டு விளைவுகளை மாத்திரமன்றி, சிக்கன வழிமுறைகளால் சமூகப் பிளவுகளில் ஏற்படக்கூடிய விளைவுகளையும் கருத்திற்கொண்டு இறைத்திரட்சி உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

முன்னோக்கிய பயணம்

இலங்கையின் இறை நிலைமைகள் உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதிக்கு முன்னரே மோசமடைந்திருந்த அதேவேளை நோய்த்தொற்றானது இறைத் துறையில் ஏற்கனவே இருக்கின்ற கடுஞ்சிக்கல்களை மேலும் அதிகரித்துள்ளது. எனவே, உறுதிப்பாட்டையும் நீண்டகால நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியையும் உறுதிசெய்வதற்கு இறைத்திரட்சியானது முக்கிய முன்னுரிமையாக விளங்குகின்றது. பொருளாதார மீட்சி இடம்பெறுகின்றபோது கொள்கை தொகுப்பானது குறைந்த பொருளாதாரச் செலவுகளுடன் தேவையான இறைத்தாக்கங்களை உருவாக்குவதனை உறுதிசெய்வதற்காக சிறிய இறைப் பெருக்கிகளைக்[2] கொண்ட இறைக் கருவிகளைப் பயன்படுத்தி, "வளர்ச்சிக்கு உகந்த" முறையில் இறைத்திரட்சி வழிமுறைகள் வடிவமைக்கப்படல் வேண்டும். இதனை மேற்கொள்வதன் விளைவாக, இறைக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறையின் தெளிவான புரிதல் மற்றும் வெவ்வேறுபட்ட அரசிறை மற்றும் செலவினக் கூறுகளுடன் தொடர்புடைய பிரிக்கப்பட்ட மட்டத்திலான இறைப் பெருக்கிகளுடன் தொடர்புடைய வெவ்வேறுபட்ட இறைச்சாதன பெருக்கிகளின் அளவு என்பன வெளியீடு மற்றும் சமமின்மைகள் என்பவற்றின் மீது சாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒருங்கிணைப்பு தொகுப்பொன்றை வடிவமைக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

அரசிறையை அடிப்படையாகக்கொண்ட இறைத்திரட்சியினைக் காட்டிலும் செலவினத்தை அடிப்படையாகக்கொண்ட இறைத்திரட்சியானது குறைந்தளவான சுருக்க தாக்க விளைவுகளை ஏற்படுத்துமென ஏனைய நாடுகளின் அனுபவரீதியான சான்றுகள் எடுத்துரைக்கின்றன (அலசினா, பவெரோ, மற்றும் கியாவசி, 2019). எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தளவான வரி வருவாயைக் கருத்திற்கொள்கின்றபோது இலங்கை இன்னமும் வெளியீட்டில் குறைந்தளவான இடையூறுகளுடன் அரசிறைக் கொள்கைகளின் ஊடாக இறைத்திரட்சிக்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாட்டைக் கொண்டுள்ளது. பிறேசில், கனடா, பின்லாந்து, நியுசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி வழிமுறைகள் வரித்தளத்தை விரிவுபடுத்துவதிலும் வரி நிருவாகத்தை இலகுபடுத்துவதற்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதிலும் கவனத்தை செலுத்தியிருந்தன (ஒக்வுஓகி, 2014). இக்கடினமானத் தருணத்தில் பெறுமதிசேர்வரி போன்ற நேரில் வரி வீதங்களை உயர்த்துவதானது குறைந்த வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வீட்டுத்துறையினரின் நுகர்வுகளை விகிதாசார முறையில் பாதிக்கக்கூடும் என்பதனால் வெளியீடு மற்றும் பகிர்ந்தளிப்பு போன்றன தொடர்பிலான விளைவுகளை குறைக்கின்ற அதேவேளை அரசிறையை அதிகரிப்பதற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரித்தளத்தை விரிவுபடுத்துவது (பெறுமதிசேர் வரியை செலுத்துகின்ற வியாபாரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்) பொருத்தமானதொரு தெரிவாக இருக்கக்கூடும். இது தொடர்பில் பெறுமதிசேர்வரி விலக்கு மட்டமானது கடந்த பெறுமதிசேர் வரி மட்ட சீராக்கத்திற்கு[3] முன்னர் இருந்த மட்டங்களுக்கு கீழ்நோக்கி திருத்தப்பட முடியும். அதேவேளை, பொருளாதார வளர்ச்சியின் மீதான மிதமான தாக்கத்தைக் கருத்திற்கொண்டு மூலதன வருவாய் மீதான வரிகள் தனிப்பட்ட அளவில் அதிகரிக்கப்படலாம்.

இலங்கையில் ஒப்பீட்டளவில் இறுக்கமான ஊதிய கட்டமைப்புகள் மற்றும் இறுக்கமான வேலைவாய்ப்பு ஒப்பந்தங்கள் ஆகியவற்றை பரிசீலனையில் கொண்டு, நிறுவனங்களின் செலவுகள் மற்றும் ஊழிய உள்ளீட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாமல், வரி விலக்கு மட்டங்கள் மற்றும் வரி வீத வகைகளையும் கடந்த வரித் திருத்தத்திற்கு முன்னராக காணப்பட்ட மட்டங்களுக்கு சீராக்குகின்ற அதேவேளை மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரி அல்லது தனியாள் வருமான வரி வீதங்கள் போன்றவற்றை ஏனைய பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடத்தக்க வகையில் குறிப்பிடத்தக்கதொரு மட்டமொன்றிற்கு உயர்த்தப்பட முடியும். மிக முக்கியமாக, வரி ஏய்ப்பு மற்றும் ஊழல் என்பவற்றை கட்டுப்படுத்துவதன் ஊடாக நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் அரசிறையை அதிகரிப்பதற்கு பல்வேறுபட்ட நிருவாக மற்றும் நடைமுறைப்படுத்தல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

செலவினக் குறைப்பானது அரசாங்கத்தின் உயர்ந்தளவான அர்ப்பணிப்பையும் வினைத்திறன்மிக்கதொரு நன்மையையும் பிரதிபலிக்கின்றமையினால் செலவினக் குறைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற இறைச்சிக்கனமானது மிகவும் வெற்றிகரமானதாகுமென ஏனைய நாடுகளின் கடந்தகால அனுபவங்கள் சான்றுபகர்கின்றன (பிரைஸ், 2010). ஏனைய நாடுகளில் இறைத் திரட்சியை மேற்கொள்வதில்

2 இறைப்பெருக்கியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இறைச் செலவினம் அல்லது வரிகளின் அதிகரிப்பின் விளைவை அளவிடுகின்றது.

3 2019 திசெம்பரில், பெறுமதசேர் வரி விலக்கு மட்டமானது ஆண்டொன்றுக்கு ரூ.12 மில்லியனிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.300 மில்லியனுக்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டது.

சம்பளங்கள் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் மிகவும் வினைத்திறன் மிக்கவையாக காணப்படுகின்றதென நிரூபிக்கப்பட்டபோதிலும், இலங்கையின் தற்போதைய சூழலைப் பொறுத்தமட்டில் தொடர்புடைய அரசியல் செலவுகள் மற்றும் இறுக்கமான தொழிலாளர் சந்தை நிலைமைகள் என்பவற்றை அவதானிக்கின்றபோது அத்தகைய நடவடிக்கைகள் எளிதானதாக அமையமாட்டாது. எனவே, குறைந்தபட்சம் சிறந்த மானியங்களை இலக்காகக் கொண்டு அரசாங்க சேவைகளுக்கான புதிய ஆட்சேர்ப்புகள் மற்றும் முக்கியமான பொது ஊதியங்கள் மீதான திருத்தம் என்பவற்றை மேற்கொள்வது தொடர்பில் அவதானத்துடன் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். மறுபுறத்தில், மூலதனச் செலவினங்கள், சுகாதாரம் மற்றும் கல்விக்கான செலவினம் என்பவற்றில் ஏற்படுத்தப்படுகின்ற குறைப்பானது குறிப்பாக பௌதீக மற்றும் மென்பாக உட்கட்டமைப்பில் காணப்படுகின்ற நாட்டின் குறைபாடுகள் காரணமாக குறுகிய மற்றும் நீண்ட காலத்திற்கு அதிக சுருக்கத்தாக்க விளைவுகளை உருவாக்கக் கூடும். எனவே, கணிசமான மூலதனச் செலவினக் குறைப்புக்களின் ஊடாக ஏற்படுத்தப்படும் இறைத்திரட்சியானது அனைத்திலும் மேற்கொள்ளப்படுகின்ற செலவுக் குறைப்புகளுக்கு மாறாக 'பணத்திற்கான பெறுமதி' உபாயங்களின் ஊடாக அடையப்படல் வேண்டும். இது தொடர்பில் உயர்ந்தளவான பொருளாதாரப் பெறுமதி மற்றும் எதிர்கால வளர்ச்சி சாத்தியப்பாடு என்பவற்றை உருவாக்குகின்ற உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை தெரிவுசெய்வதன் ஊடாக மத்திய அரசாங்கம் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் என்பன மூலதனச் செலவினங்களை கட்டுப்படுத்துதல் வேண்டும். மேலும், பணி தொடர்பான செயன்முறைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் டிஜிட்டல்மயமாக்குதல் அதேபோன்று உற்பத்தித்திறனற்ற மீண்டெழும் செலவினங்களைக் குறைத்தல் ஆகியவை வினைத்திறன்மிக்க நன்மைகளுக்கும் அரசாங்க செலவினங்கள் மீதான அழுத்தங்களை குறைப்பதற்கும் அவசியமாகும்.

இத்தகைய கடுமையான பொருளாதாரச் சூழலில் நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கும் வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கும் வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற முதலீடுகளுடன் இணைந்த இறைத்திரட்சியும் நீண்டகாலமாக மேற்கொள்ளப்படாமல் காணப்படுகின்ற கட்டமைப்பு சீர்திருத்தங்களும் வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாக அமையக்கூடும். வினைத்திறனற்ற நட்டத்தில் இயங்குகின்ற அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் படுகடன் கடன் சுமையானது அரசாங்கத்தின் சாத்தியமான பொறுப்புகளாக மாறக்கூடுவதனால் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் தொடர்பான சீர்திருத்தங்கள் இறைச்சிக்கனத்துடன் இணைந்து விரைவாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் தொடர்பாக நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்ற பல்வேறுபட்ட சீர்திருத்தங்களாக செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைப் பொறிமுறைகள், வினைத்திறன்மிக்க நன்மைகளுக்கான நிறுவனம்சார் மீள்கட்டமைப்பு, சந்தையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் பணி வழங்கல் என்பன காணப்படுகின்றன. இவற்றுக்கு மேலாக, இறைச் சிக்கனத்தின் இலக்குகளை நிறைவேற்றும் வகையில் இறைத்திரட்சி செயன்முறையின் முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கும் இறைத்திரட்சி செயன்முறை தொடர்பாக பொதுமக்களின் கவனத்தை பலப்படுத்தல் மற்றும் கொள்கைவகுப்பாளர்களதும் அரச அதிகாரிகளதும் பொறுப்புக்களை உறுதிப்படுத்தல் என்பவற்றிற்காக சட்டவாக்கம் மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும். அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் தொடர்ந்தும் இரண்டு அரசாங்க வங்கிகளிலும் தங்கியிருத்தலானது இறுதியாக மத்திய வங்கியின் நிதியீட்டத்திற்கு இட்டுச்செல்வதுடன் விலை உறுதிப்பாட்டிற்கும் பாரியளவான சவால்களை உருவாக்குமென்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும். ஆகையால், அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் அவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பில் பொறுப்புத்தன்மை வாய்ந்தவையாக காணப்பட வேண்டுமென்பதுடன் வணிக வங்கிகள் மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் மீது அவற்றின் படுகடன் சுமைகளை சுமத்துதல் கூடாது.

இலங்கைப் பொருளாதாரமானது இன்று முக்கியமானதொரு கட்டத்தை எட்டியுள்ளது. இங்கு இறைத்திரட்சி இன்றியமையாததாக விளங்குவதுடன் இதனை திறம்பட செயல்படுத்துவதில் ஏற்படுகின்ற தாமதமானது பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மிகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனினும், இறை விதிகள் மற்றும் இறைத்திரட்சிப் பாதை என்பவற்றைப் பின்பற்றுவதற்கான அரசாங்கத்தின் வலுவான அர்ப்பணிப்பானது விரும்பப்படுகின்ற பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு மிகவும் இன்றியமையாதனவையாகும். பரந்தளவிலான அரசியல் கருத்தொற்றுமையின்மை, அதிகாரிகளின் மந்தமான அணுகுமுறை மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட குறுகியகால 'வளர்ச்சியை நிறுத்துதல்' மற்றும் தற்காலிக கொள்கைகள் போன்றவை இறைத்திரட்சி செயன்முறையின் தடங்கல்களை கட்டுப்படுத்துவதற்கான முக்கிய தடைகள் முற்றுமுழுதாக நீக்கப்படுதல் வேண்டும். அதேநேரம், இறைத்திரட்சியின் வெற்றி மற்றும் அதனது தொடர்ச்சி என்பன பொதுமக்களின் ஆதரவில் பெரிதும் தங்கியிருக்கின்றமையினால் வாக்காளர்களின் தளத்தை மேலும் இறை வல்லமைமிக்க வகையில் மாற்றுவதற்கான பெரும் தூண்டுகோளாக அமைகின்ற 'மானியங்களைப் பெற்றுக்கொள்ளும் எண்ணப்பாங்கின்' பின்விளைவுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகுமென்பதுடன் இதனையொட்டி இறை மோசடியை மேற்கொள்கின்ற கொள்கை வகுப்பாளர்களை தடுப்பதற்கும் இது ஏதுவாக அமைகின்றது.

உசாத்துணைகள்

1. Alesina, A., Favero, C., & Giavazzi, F. (2019). Effects of Austerity: Expenditure- and Tax-based Approaches. Journal of Economic Perspectives, 33(2), 141-162.
2. Giavazzi, F., & Pagano, M. (1990). Can Severe Fiscal Contractions Be Expansionary? Tales of Two Small European Countries. NBER Macroeconomics Annual, 5, 75-111.
3. Okwuokei, J. (2014). Fiscal Consolidation: Country Experiences and Lessons from the Empirical Literature. In A. Charles, & T. Turner-Jones, Caribbean Renewal: Tackling Fiscal and Debt Challenges (pp. 103-131). International Monetary Fund.
4. Price, R. (2010). The Political Economy of Fiscal Consolidation. OECD Economics Department Working Paper No. 776.
5. Reinhart, C., & Sbrancia, M. (2011). The Liquidation of Government Debt. NBER Working Paper.

1

தொழில்முயற்சிகள் தொடர்பில் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் பொறிமுறைகளை அறிமுகப்படுத்தல் அத்துடன் வினைத்திறன்மிக்க ஆளுகைக் கட்டமைப்பு போன்ற செய்யப்படவேண்டிய பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதும் அத்தியாவசியமானவையாக விளங்குகின்றன. இதற்கு மேலதிகமாக, நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவித்தலும் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதாசாரத்தினைக் குறைப்பதற்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்ற அதேவேளை, நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கான தடைகளை இல்லாமற்செய்வதற்கு அமைப்பியல் சீர்திருத்தங்கள் மிக முக்கியமானவையாக விளங்குகின்றன. வரையறுக்கப்பட்ட இறை இடைவெளியினைக் கருத்திற்கொண்டு அரசாங்கமானது பொருளாதார முன்னுரிமைகளின் அடிப்படையில் தொடர்ந்து வரவுள்ள வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களை நெறிப்படுத்துகின்ற அதேவேளை, மத்திய அரசாங்கத்தின் எதிர்காலப்படுகடன் இருப்பு ஒன்றுதிரள்வதைக் குறைக்கவல்ல நிதியங்களின் பயன்பாட்டின் வெளிப்படைத்தன்மையும் வினைத்திறனுமிக்க பயன்பாட்டினையும் உறுதிசெய்வதற்குமான உயர்வான பொருளாதார ஆதாய வீதங்களில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். மேலும், சலுகை அடிப்படையிலான நிதியளித்தலை நாடுவதும் அரசாங்கம் அதன் படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் இலக்குகளை எய்துவதற்கும் பேரண்டப்பொருளாதார அடிப்படைகளை வலுப்படுத்துவதற்கும் உதவக்கூடும். எடுத்துக்காட்டாக, நீடித்துநிலைத்திருக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான பசுமை.சமுத்திர சூழல்சார் நிதியளித்தல் தெரிவுகளை மேற்கொள்வது ஒப்பீட்டளவில் குறைவான வட்டி வீதங்கள் மற்றும் நீண்ட மீள்கொடுப்பனவுக் காலங்கள் போன்ற கடன்பெறுதலுக்கான மிகவும் சாதகமான நிபந்தனைகளை கொண்டிருக்கக்கூடும்.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட பின்னடைவுகளின் பிடியில் நாடு இருப்பதனால் பொருளாதார மீட்சிச் செயன்முறையில் தரம் மற்றும் வினைத்திறன் நியதிகளில் அரசாங்கத் துறை பணி வழங்கல் முன்னொருபோதுமில்லாத அளவு மிகவும் முக்கியத்துவமிக்கதாகத் தோற்றம் பெற்றுள்ளது. அரசாங்கத் துறையானது, உட்கட்டமைப்பு வசதிகளுக்கு அனைவரையும் உட்படுத்தி சமத்துவமான பெறுவழியினை உறுதிசெய்து அத்துடன் தனியார் துறை முதலீடுகளையும் வளர்ச்சிகளையும் பேணிவளர்க்கும் நோக்குடன் ஆக்கபூர்வமான தொழில் சூழலை உருவாக்குகின்ற மிகவும் வேண்டப்படுகின்ற அரசாங்க பொருட்கள் மற்றும் பணிகளை வழங்குவதன் வாயிலாக இலங்கையின் அபிவிருத்திப் பாதையில் மிகமுக்கிய பாகமாக இருந்துவருகின்றது. குறிப்பாக, கடந்த அண்மைக்காலத்தில் கொவிட்-19 நோய்பரவலினை முறியடிப்பதிலும் சமூகப் பொருளாதார இக்கட்டான நிலையினைத் தணிப்பதிலும் அரசாங்கத் துறையிலுள்ள சில துணைத் துறைகளால் ஆற்றப்பட்ட வகிபாகமானது அத்துறையின் உயர்வான புகழை மீளவும் நிலைறிறுத்தியது. உலகளாவிய நோய்த்தொற்று அதேபோன்று மீளெழுகின்ற வளர்ச்சி உத்வேகம் என்பவற்றுக்கு மத்தியில் ' புதிய இயல்பு' நிலையினை பொருளாதாரம் படிப்படியாக அனுசரிப்பதனால் அரசாங்கத் துறையில் வினைத்திறன் வாய்ந்த வள ஒதுக்கீடு மற்றும் பொது நிர்வாகத்துடன் தொடர்புடைய பணித்துறையில் இறுக்கமான நடைமுறைகளைக் குறைத்தல் அத்துடன் தொழில் வசதிப்படுத்தல் என்பன உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்ளடங்கலாக நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கும் அதேபோன்று வியாபார இணைவுகளுக்கும் உதவுவதும் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், அரசாங்கத் துறையில் அதிகரித்துவருகின்ற வினைத்திறனின்மைகள் மற்றும் அதன் விளைவான இறைசார்ந்த சுமை என்பன அல்லாவிடின் தனியார் துறையினால் வினைத்திறன்மிக்க பயன்பாட்டிற்காக கிடைக்கப்பெறக்கூடிய நிதியியல் மற்றும் தொழிலாளர் மூலவளங்களின் கணிசமான பாகத்தினை அரசாங்கம் பயன்படுத்துவதனால் கொள்கைச் சுற்றுகளில் நீண்டகாலம் நிலைத்திருக்கின்ற கரிசனைகளாக இருந்துவருகின்றது. அதேவேளை, உலகளாவிய நோய்த்தொற்றானது அரசதுறை பணி வழங்கலில் ஏற்கனவே காணப்படுகின்ற நலிவுத்தன்மைகளையும் கெடுபிடிகளையும் மேலும் வெளிக்காட்டி அரசாங்கப் பணிகளை மேம்படுத்துவதற்கான புதிய சவால்களையும் வாய்ப்புக்களையும் தோற்றுவித்தது. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் வீட்டிலிருந்து பணியாற்றுதல் ஏற்பாடுகள் பரந்தளவில் பின்பற்றப்பட்ட போதிலும், இப்புதிய ஒழுங்குகளின் கீழ் அரசாங்கத் துறையின் செயலாற்றமானது இத்தகைய புதிய நெறிமுறைகளை வெற்றிகரமாக நிறுவனமயப்படுத்திய தனியார் துறையுடன் ஒப்பிடத்தக்கதாகவிருக்கவில்லை. பௌதீகக் கட்டமைப்புக்கள் மற்றும் தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகள் என்பவற்றில் மட்டுப்பாடுகள், அதேபோன்று அரசாங்கத் துறை தொழிற்படையின் மட்டுப்படுத்தப்பட்டளவிலான இணங்கிச்செல்லும்தன்மை, பலவீனமிக்க கண்காணித்தல் பொறிமுறை மற்றும் கண்டிப்பான பணியாற்றும் ஒழுங்குகள் அத்துடன் நடைமுறைகள் என்பன உலகளாவிய நோய்த்தொற்று தொடங்கியதிலிருந்து இடைத்தடங்கலற்ற தொழிற்பாடுகளுக்கும் சீரான பணி வழங்கலுக்கும் தடைகளாகவிருந்து பொதுமக்களுக்கு கடுமையான இன்னல்களைத் தோற்றுவித்தன. தொகைமதிப்பு புள்ளிவிரத் திணைக்களத்தின் அரசாங்க மற்றும் அரசாங்க பகுதியளவான துறை, தொழில்நிலை- 2016 அறிக்கையின் பிரகாரம் அரசாங்கத் துறை ஊழியர்களில் 33.2 சதவீதமானோர் கணனியினைப் பயன்படுத்துவதற்கு இயலாதவர்களாகவிருந்த அதேவேளை, மேலும், 30.4 சதவீதமானோர் அலுவலக நோக்கங்களுக்காக கணனியினைப் பயன்படுத்தாமல் இருந்தமை தொழில்நுடப் செறிவுமிக்க பணியாற்றும் சூழலை நோக்கி

அரசாங்கத் துறையைச் சேர்ந்த தொழிற்படை நகருவதனைத் தடுக்கின்ற திறன் இடைவெளியினை எடுத்துக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், ஏற்கனவே காணப்படுகின்ற தொழிற்படையை மீளத்தேர்ச்சிபெறச் செய்வதன் மூலமும் தேர்ச்சியினை அதிகரிப்பதன் மூலமும் எளிமையான மற்றும் மக்கள் சிநேகமிக்க தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகளையும் மெய்நிகர்த் தளங்களையும் அறிமுகப்படுத்துவதன் வாயிலாகவும் ஏற்கனவேயுள்ள தொழிற்படையின் ஒரு பகுதியினை பயன்படுத்தி அநேகமான அரசாங்கப் பணிகள் வினைத்திறன்மிக்க விதத்தில் வழங்கப்படக்கூடியதாகவிருக்கும் என்பதனை உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன. முன்னோக்கிச் செல்கையில், சிறந்த வாடிக்கையாளர் உறவுகளைக் கட்டியெழுப்புதல், மேம்பட்ட நிறுவனசார் ஒருங்கிணைப்பு, தரவு முகாமைத்துவம் அத்துடன் முன்னேற்றகரமான சான்று அடிப்படையிலமைந்த கொள்கை வகுத்தல் என்பவற்றினூடாக குடித்தொகையின் இயக்கவாற்றமிக்க தேவைகளையும் எதிர்பார்க்கைகளையும் நிறைவேற்றுவதற்கு இலங்கையின் அரசாங்கத் துறையானது புதிய தொழில்நுட்பங்களைத் தழுவிக்கொள்ள வேண்டும். நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அல்லது இயற்கை அனர்த்தங்கள் போன்ற ஏதேனும் வேறு இடையூறுகளின் போது இடைத்தடங்கலற்ற பணி வழங்கலை உறுதிசெய்வதற்கு இலத்திரன்மயமாக்கலுடன்கூடிய சட்டவாக்க மற்றும் நடைமுறைசார் திருத்தங்களும் நெகிழ்வுமிக்க பணியாற்றல் ஒழுங்குகளும் இதனுடன் இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பணி வழங்கலின் செயல்திறன்வாய்ந்ததன்மை என்பது வெறுமனே தொழில்நுட்ப மேம்படுத்தல்களில் மாத்திரம் தங்கியிருக்காது மனித மூலதனம் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் அத்துடன் கொள்கைகளை அமுல்படுத்தல் என்பன மீதும் காணப்படுகின்றது. அரசாங்க செயல்திறன் வாய்ந்ததன்மைச் சுட்டெண் - 2020இல் 51 ஆவதாக தரப்படுத்தப்பட்டிருந்த இலங்கை அதே சுட்டெண்ணில் உயர்வான தரத்தில் தரப்படுத்தப்பட்ட சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து அரசாங்கத் துறையின் செயல்திறன்வாய்ந்த தன்மை பற்றிய கொள்கைப் பரிந்துரைப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம். சிங்கப்பூரின் அதிகார முறைமையானது ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் முன்னேற்றங்களில் திறமையினை வலியுறுத்துதல், போட்டிமிக்க சந்தை ஊதியங்கள் மற்றும் தொடர்ச்சியான பயிற்சி போன்றவற்றுடன் செயல்திறன்வாய்ந்த கொள்கை நடைமுறைப்படுத்தலுக்காக உயர்தகைமை மிக்க ஆளணி ஆகியவற்றைக்கொண்டு வசதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, ஊழலுக்கெதிரான வழிமுறைகளை கடுமையாக அமுல்படுத்துவதற்கு போதிய ஆளணி மற்றும் நிதியளித்தலுடன் இணைந்த ஊழலுக்கெதிரான வலுவான சட்டவாக்கக் கட்டமைப்பானது அரசாங்கத் துறையில் ஊழலை வெற்றிகரமாக முறியடிப்பதற்கும் உயர் வினைத்திறன் மட்டத்தினைப் பேணுவதற்கும் சிங்கப்பூரை இயலச்செய்துள்ளது. மேலும், நிருவாக மற்றும் பேரண்டப்பொருளாதார தேவைப்பாடுகளுக்கிசைவாகக் காணப்படுகின்ற அரசாங்கத் துறை ஆட்சேர்ப்புக்கள், வரவுசெலவுத்திட்டம் அமைத்தலில் இலக்கினை நோக்காகக் கொண்ட அணுகுமுறைகள், மிதமிஞ்சிய துறைகளிலிருந்து தேவையான துறைகளுக்கு மூலவளங்களை மீள் ஒதுக்கீடுசெய்தல், தொழிலாளர்களின் திட்டமிடப்பட்ட மீள்தேர்ச்சியளித்தல் மற்றும் உயர்தேர்ச்சியளித்தல் அத்துடன் அரசாங்கத் துறையினுள் வேறுபட்ட துறைகளுக்கிடையில் நகர்வதற்கு நிருவாகரீதியான நெகிழ்ச்சித்தன்மையினைத் தோற்றுவித்தல் என்பன இலங்கை அரசாங்கத் துறையில் உற்பத்தித்திறன் வாய்ந்த வினைத்திறனை உறுதிசெய்வதற்கு அத்தியாவசியமானதாகும்.

நிதியிடலைப் பெற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கி உள்ளடங்கலாக வங்கித்தொழில் முறைமை மீது அரசாங்கத்துறையின் மிதமிஞ்சித் தங்கியிருக்கின்ற நிலை, மாற்றுவழி நிதியளித்தல் மூலங்களைக் கண்டறிதல் மூலமும் நீண்டகாலமாக செய்யப்படாதுள்ள அமைப்பியல் சார்ந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் குறைக்கப்படுவதன் மூலம் வங்கித்தொழில் முறைமையின் நிதியியல் வலிமையை மேம்படுத்துவதனை இயலச்செய்ய வேண்டும். அரசாங்கத் துறையினால் ஈட்டப்படுகின்ற அரசிறைக்குப் புறம்பாக அரசாங்கம் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் இரண்டிற்குமான முக்கிய நிதியளித்தல் மூலங்களிலொன்றாக வங்கி நிதியிடல் இருந்துவருகின்றது. அண்மைய ஆண்டுகளில் குறிப்பாக, உலகளாவிய நோய்த்தொற்று தோற்றம்பெற்றதிலிருந்து அரசாங்கத் துறையானது, பெரும்பாலும் அரசாங்கம், அதன் நிதியியல் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு அதிகளவில் வங்கித்தொழில் துறை மீது தங்கியிருக்கின்றது. இதனூடாக வங்கித்தொழில் துறை மீதும், விசேடமாக அரச வங்கிகள் மீதும், உள்நாட்டு விலை உறுதிப்பாடு மீதும் அதிகப்படியான அழுத்தத்தினை உருவாக்குகின்றது. படுகடனில் உயர்வு அத்துடன் நாட்டிற்கான கடன் தரப்படுத்தல் தரக்குறைப்புகள் என்பவற்றுக்கு மத்தியில் பன்னாட்டு மூலதனச் சந்தைகளுக்கான பெறுவழியை இழந்தமை அரசாங்கத்தின் நிதியிடலிலான தடைகளை தீவிரப்படுத்தியுள்ள அதேவேளை, நிர்வாகரீதியாக நிர்ணயிக்கப்பட்ட விலைகள் மற்றும் அவற்றின் உற்பத்திகளின் தீர்வைகள் என்பன போதியளவு சீர்படுத்தப்படாமையின் காரணமாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், வங்கித்தொழில் துறையிலிருந்து கடன்பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு தொழிற்படு மூலதன நோக்கங்களுக்காக அவை தொடர்ந்தும் கடன்பெறவேண்டிய நிலைக்குத் தளளப்பட்டுள்ளன. வங்கி நிதியிடல் மீது அரசாங்கத் துறை அவ்வாறு மிதமிஞ்சித் தங்கியிருப்பது, உள்நாட்டு வங்கித்தொழில்துறைக்கும் ஒட்டுமொத்த உள்நாட்டு நிதியியல் சந்தைக்கும் அழுத்தத்தினை ஏற்படுத்தி நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு

1

கரிசனைகளையும் எழச்செய்துள்ளது. மேலும், உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் போன்றவற்றில் மேம்பாட்டுடன் இணைக்கப்படாத அரசாங்கத்துறையின் தொடர்ச்சியான நிதியளித்தல் இன்னும் உயர்வான பணவீக்க அழுத்தங்களைத் தோற்றுவிக்கக்கூடிய அதேவேளை, அரசாங்கத்திற்கும் வரிசெலுத்துவோருக்கும் அதிகரித்த சுமையினை ஏற்படுத்தும். அதேபோன்று உற்பத்தித்திறனுடன் இணைக்கப்பட்ட தனியார் துறைக்கான முதலீட்டினை கிடைக்கப்பெறாமல் செய்வதற்கு இது வழிவகுக்கக்கூடுமென்பதனால் பொருளாதாரத்தின் நீண்டகால வளர்ச்சி உள்ளார்ந்த ஆற்றலின் மீது பாதகமான தாக்கங்களை இது கொண்டிருக்கக்கூடும். வரி தளர்த்தல்கள் மற்றும் விலக்குகள் அதேபோன்று வரி சேகரிப்புடன் தொடர்பான மட்டுப்பாடுகள் என்பன மூலம் அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, சில அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான குறிப்பாக, வேறு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்து கிடைக்கவேண்டிய பாரியளவு நிலுவையாகவுள்ள கொடுப்பனவுகளும் காசுப்பாய்ச்சல்களில் தாக்கம்செலுத்தி உயர்வான வட்டி வீதங்களில் கடன்களையும் மேலதிகப் பற்றுக்களையும் பெற்றுக்கொள்வதற்கு அவை நிர்ப்பந்திக்கப்பட்டு, இதன்மூலம் இலாபத்தன்மை மட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. வங்கியல்லா மூலங்களிலிருந்து நிதி திரட்டுவதற்கான வழிகளை அரசாங்கம் முனைப்புடன் கண்டறிவதற்கான தேவையினை இது எடுத்துக்காட்டுகின்றது. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் விடயத்தில் ஒட்டுமொத்த உற்பத்திச் செலவினையும் குறைப்பதற்கு, செலவுகளைப் பிரதிபலிக்குமாறு சில்லறை விற்பனை விலைகளைத் திருத்துகின்ற அதேவேளை, உற்பத்தித்திறனை அதிகரித்து உட்கட்டமைப்பினை மேம்படுத்தி அதனுடன் தொடர்புபட்ட விரயங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இது அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் ஆதரவில்லாமல் தன்னிச்சையான நிறுவனங்களாக தமது சொந்த அடிப்படையில் தொழிற்படுவதற்கு அவற்றினை இயலச்செய்யும். மேலும், தீர்வைச் சேகரிப்பினை வலுப்படுத்துவதனூடாக அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் ரீதியாக உறுதிவாய்ந்ததன்மையினை மேம்படுத்தி அதனூடாக காசுப்பாய்ச்சல் முகாமைத்துவத்தினை மேம்படுத்துகின்ற அதேவேளை, மாற்றுவழியில் குறைந்த செலவு, நீண்டகால நிதியளித்தல் தெரிவுகளைக் கண்டறிவதற்கும் உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டும். முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத் துறை செயலாற்றத்தினை மேம்படுத்துவதன் மூலம் அரசாங்கத் துறையின் நிதியளித்தல் தேவைகளை நிறைவுசெய்வதற்கான வங்கிகளின் ஆதரவை நாடுவதனை மட்டுப்படுத்தி அண்மைய காலத்திலிருந்து நடுத்தரகாலத்தில் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் நீண்டகாலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கும் வசதியளிக்கும்.

பணவீக்கத்தினை ஓர் இலக்கிடப்பட்ட வீச்சிற்குள் பேணுவதற்கும் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநாட்டுவதற்கும் மத்திய வங்கியின் முன்னெடுப்புக்களை நலிவடையச்செய்யும் உணவுப் பணவீக்கத்தினால் உந்துதலளிக்கப்பட்டு பொது விலை மட்டங்களில் அடிக்கடி ஏற்படும் தளம்பல் மற்றும் தொடருந்தன்மை உரிய நேரத்திலும் நிலைத்திருக்கக்கூடியதுமான அடிப்படையில் அரச தலையீடுகளினால் கட்டுப்படுத்தப்படவேண்டும்.

பண்டங்கள் மற்றும் பணிகளைக் கொண்ட நுகர்வோரின் விலைக் கூடையில் பெரும் பகுதியானது இலங்கையில் உணவுப் பொருட்களாகக் காணப்படுவதனால், உணவு விலைகளில் காணப்படும் அடிக்கடியான மற்றும் கணிசமான மாற்றங்கள் பணவீக்கத்தில் தளம்பலை எற்படுத்துகிறது. பிரதானமாக உணவுப் பணவீக்கத்தினால் உந்துதலளிக்கப்பட்ட பணவீக்க இலக்கிலிருந்து பணவீக்கத்தின் உயர்வான, அடிக்கடியான மற்றும் தொடருந்தன்மையுடைய விரிவுகள் என்பவை நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலின் குறிக்கோள்களை குறைமதிப்பிற்குட்படுத்தலாம். ஓர் நாட்டில் உணவு விலை அதிகரிப்புக்களை பெருமளவிற்கு நிரம்பல் சார் காரணங்கள் ஏற்படுத்தக்கூடிய அதே வேளையில் இவ்வகையிலான விலை அதிகரிப்புக்களுக்கு கேள்வி சார் காரணிகளும் பங்களிக்கலாம். இலங்கையில் நோய்த்தொற்று மற்றும் வானிலை தொடர்பான நிரம்பல் சீர்குழப்பங்கள் உள்ளடங்கலான நிரம்பலினால் உந்துதலளிக்கப்பட்ட காரணிகளுடன் உலகளாவிய உணவு மற்றும் பண்ட விலைகளில் பாரிய மாற்றங்கள் போன்ற வெளிநாட்டுக் காரணிகளும் அண்மைய உணவுப் பணவீக்கத்தின் பிரதான காரணிகளாக இருந்தன. மேலும், சேதன வேளாண்மைக்கான மாற்றக் காலத்தில் ஏற்பட்ட உற்பத்தித்திறன் இழப்புக்கள் மற்றும் அறுவடைக்குப் பின்னரான நிரம்பல் சங்கிலியிலுள்ள சிக்கல்கள், மட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியப்படுத்தல், பெறுமதிக் கூட்டல் மற்றும் பதப்படுத்தல் செயல்முறைகள் போன்ற மரபுரீதியான சிக்கல்களும் உணவு விலைகளின் விரைவான அதிகரிப்பிற்கு வகைகூறலாம். உணவு விலைகளினால் உந்துதலளிக்கப்படும் பணவீக்க அதிகரிப்புக்கள் சமூதாயத்தில் குறைவான வசதிபடைத்தவர்களைக் கொண்ட துறைகளை வீதாசாரத்திற்கு அப்பாற்பட்டு பாதித்து வறியோரின் வாழ்க்கை நிலைமையை தாழச்செய்கிறது. இவ்வகையிலான நிரம்பலினால் உந்துதலளிக்கப்பட்ட பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் பிரதானமாக நாணயக் கொள்கை வழிமுறைகளினூடாகக் இருக்குமாயின் இது எதிர்விளைவுகளைக் கொண்டதாக அல்லது செயற்றிறனற்றதாக இருக்கலாம். ஆகவே, உள்நாட்டு உணவு நிரம்பல்ச் சங்கிலிகளின் சீரான செயற்பாட்டிற்கும் உலகளாவிய விலைகளின் மேல்நோக்கிய அசைவுகளின் தாக்கத்தை மட்டுப்படுத்துவதற்கும் குறுங்கால முதல் நெடுங்காலம் வரையிலான நன்கு திட்டமிடப்பட்ட நிரம்பல் சார் அரசாங்க கொள்கைகள் அத்தியாவசியமாகும். இவ்வையிலான கொள்கைகள் உள்நாட்டு உற்பத்தியினை மேம்படுத்தல், பருவகாலத்திற்கு அப்பாற்பட்ட பயிர்ச்செய்கை, உணவு

களஞ்சியப்படுத்தலுக்கான உட்கட்டமைப்பு, பதப்படுத்தல் செயன்முறைகளை மேற்கொள்ளுதல், போக்குவரத்துச் செலவினத்தை மட்டுப்படுத்தல், உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் மற்றும் செலவுச்சிக்கனமான இறக்குமதிப் பதிலீட்டு கைத்தொழில்களை விருத்திசெய்தல் என்பவற்றை உள்ளடக்கவேண்டும். பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்துலுடன் இருப்புக்களுக்கான உச்ச எல்லைகளை விதித்தல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்தல், அடிப்படை இறக்குமதித் தீர்வைகளை குறைத்தல் போன்ற பல குறுங்கால நிரம்பல் சார் வழிமுறைகளை நடமுறைப்படுத்துவதனூடாக இந்தியா போன்ற நாடுகள் தங்களது உயர்ந்த உணவுப் பணவீக்கத்தினை மெதுவாக்கியுள்ளன. குறிப்பாக தற்காலிக உணவு விலை உயர்வுகள் தொடர்பில் நிரம்பல் சார் கரிசனைகளை தீர்ப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளிக்குள் இவ்வகையிலான குறுங்கால கொள்கைகளை இலங்கை மேற்கொண்டிருந்தபோதிலும், நாட்டில் ஓர் திடமான மற்றம் மீளெளுந்தன்மையுடைய உணவு நிரம்பல் சங்கிலியை பேணுவதற்கு மேலும் வழிமுறைகள் தேவைப்படுகின்றன. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில், உணவு நிரம்பல் சங்கிலியில் ஈடுபட்டுள்ளோரிற்கான பயணத் தடைகளின் நீக்கம் போன்ற பல குறுங்கால வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டது. நீண்டகாலத்தில், வேளாண்மையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் உணவுப் பாதுகாப்பு விடயங்கள் மீது கவனஞ்செலுத்துவதற்கும் முதலீடு செய்வதற்கு பொருத்தமான கொள்கைகளும் உட்கட்டமைப்பும் இருக்கவேண்டும். இந்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தனியார் துறையிடமிருந்து ஆதரவு பெற்றுக்கொள்வதும் அவசியமாகும். இறக்குமதி பதிலீடுகளாக இனங்காணப்பட்ட வேளாண்மை மற்றும் கைத்தொழில் பண்டங்களின் உற்பத்தியை விருத்திசெய்ய முயற்சிக்கும் அதேவேளையில் உணவு உற்பத்தியின் மேம்பாட்டின் மூலம் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு வரி சௌபாக்கியா போன்ற உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே தொடங்கியுள்ளது. மேலும், அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களை குறைப்பதற்கும் பருவகாலமற்ற களஞ்சியப்படுத்தலுக்கும் கட்டுப்படுத்தப்பட்ட சூழல்களுடனான முறையான களஞ்சியப்படுத்தல் முறைமைகள் இருப்பது அவசியமாகும். பன்னாட்டு மற்றும் உள்நாட்டு தனியார் துறையினது முதலீடுகள் நாட்டிற்குள் களஞ்சியப்படுத்தல் மற்றும் பண்டங்களின் போக்குவரத்து வசதிகளினை விரிவாக்கஞ்செய்யும் அதே வேளையில், உணவு வங்கிகளின் நிறுவதல் அவசர காலங்களில் பிராந்திய உணவு ஒதுக்குகளின் பயன்படுத்தலுக்கு உதவும். அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் நிரம்பல் சார் தட்டுப்பாடுகளை விளைவிக்கக்கூடிய சாத்தியமான அபிவிருத்திகளை கண்டறிவதற்கும் உணவு நிரம்பல் தொடர்பான சாத்தியமான அதிர்வுகளுக்கு முகங்கொடுப்பதற்கு பொருளாதாரத்தை தயார்படுத்துவதற்கான முன்மதியுடைய கொள்கை பரிந்துரைப்புக்களை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கும், வேறு வழிமுறைகளுக்கு மத்தியில், அரசாங்க மற்றும் தனியார் தறை இரண்டினதையும் கொண்ட ஓர் நிபுணத்துவமுடைய சிறப்பு தகுநிலை அணியினை வைத்திருப்பது காலத்திற்கு பொருத்தமானதாக இருக்கும். மேலும், தனியுரிமைகள், இருப்புக்களின் தகாத களஞ்சியப்படுத்தல் மற்றம் இதன் பின்னரான விலை அதிகரிப்புக்களை தவிர்ப்பதற்கு வேளாண்மைத் துறை முதல் சில்லறைத் துறை வரையிலான உணவு நிரம்பல் சங்கிலிகளின் தொழிற்பாட்டிற்கு ஓர் திடமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்று அவசியமாகும். இதன் மூலம் உணவு விலைகளின் தளம்பல்களை குறைத்தது. பணவீக்கத்தின் இயக்கவாற்றல் நிலையை உணவுப் பணவீக்கத்தில் குறைவான தளம்பல்களின் மூலம் வடிவமைத்து பணவீக்க எதிர்பார்கைகள் நிலைப்படுத்தப்படுதல் விலை உறுதிப்பாட்டினை எய்துவதற்கும் பேணுவதற்கும் உதவும்.

உலகளாவிய நோய்த்தொற்றினால் எழுந்த சவால்கள் மற்றும் உலகளாவிய சந்தைகள் மற்றும் பண்ட விலைகளை பாதிக்கும் உலகளாவிய சிக்கல்களிலிருந்து எழும் இடர்நேர்வுகளுக்கு முகங்கொடுப்பதற்கான இயலளவையும் மீளெழுந்தன்மையையும் ஏற்றுமதிக் கைத்தொழில்முயற்சிகள் கட்டியெழுப்ப வேண்டும் என்பதுடன் வளர்ச்சியடைவதற்கும் பன்முகப்படுத்துவதற்குமான உபாயங்களை அமைக்கவேண்டும்.

2020இல் உலகளாவிய நோய்த்தொற்று ஆரம்பித்த காலப்பகுதியில் கணிசமாக பாதிக்கப்பட்ட ஏற்றுமதிக் கைத்தொழில்கள் ஓர் குறுகிய காலப்பகுதியில் மீட்சிபெற்று 2021இல் வராற்றிலேயே உயர்வான ஏற்றுமதி வருவாய்களை பதிவுசெய்தன. உலகளாவிய நோய்த்தொற்று தீவிரமடைந்து தொடாந்ததுடன் கேள்விப் போக்குளின் மாற்றங்கள், பன்னாட்டு கடற்போக்குவரத்து சீர்குழப்பங்களின் விளைவாக கப்பல்களும் கொள்கலன்களும் இல்லமையினால் செலவுகளின் அதிகரிப்பு, உற்பத்தியினையும் போக்குவரத்தினையும் இடையூறுக்குள்ளாக்கிய நகர்வு மீதான கட்டுப்பாடுகள் சில உள்ளீட்டுகளைப் பெற்றுகொள்வதில் சிரமம் மற்றும் மூலப் பொருட்களின் செலவின் கணிசமான அதிகரிப்பென்பவை ஏற்றுமதிகளுக்கு முக்கிய கரிசனைகளாகயிருந்தன. இருந்தபோதிலும், 2020இன் பின்னைய பகுதி முதல் சில ஏற்றுமதி வகைகள் (பிரதானமாக வேளாண்மை ஏற்றுமதிகள்) நன்கு செயற்பட்ட வேளையில், ஏனைய ஏற்றுமதி வகைகள் இதுவரையில் பகுதியளவிக மாத்திரமே மீட்சிப்பெற்றன. எனினும், உலகளாவிய நோய்த்தொற்றின் தொடர்ச்சி, பாரிய பொருளாதாரங்களில் நாணயக் கொள்கையின் வழமைப்படுத்தல், உயர்ந்த பண்ட விலைகள், வலுச் சந்தை சிக்கல்கள் மற்றம் அண்மைக்கால புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றிலிருந்து எழும் நிச்சயமற்றதன்மைகள் பன்னாட்டுப் பொருளாதாரத்தில் இன்னும் காணப்படுகின்றன. இந்த சிரமங்களிருந்தபோதிலும், "புதிய வழமை" என்ற காலத்தில் ஏற்றுமதித் துறையை

1

அபிவிருத்தி செய்வது ஓர் கொள்கை முதன்மையாக இலங்கை இனங்காணவேண்டும். இது படுகடனல்லா உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதுடன் பொருளாதாரத்தில் உற்பத்தித்திறனுடைய வர்த்தகப்படுத்தத்தக்க துறையில் வளங்கள் ஒதுக்கப்படுவதனால் வளர்ச்சியை துரிதப்படுத்தும். ஏற்றுமதி சந்தைகளை பன்முகப்படுத்துவதற்கான தேவைப்பாடு மீது மட்டுமின்றி தொழில்நுட்ப ரீதியாக முன்னேற்றகரமான, உயர்ந்த தரமுடைய மற்றும் உயர்ந்த பெறுமதியைக் கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளாக ஏற்றுமதிப் பொருட்களின் மேம்பட்ட முன்னேற்றகரமான ஏற்றுமதிப் பொருட்கள் மீதும் வெளிநாட்டுத் துறைக் கொள்கைகள் கவனஞ்செலுத்தவேண்டும். தகவல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வர்த்தக வழிமுறைகளைப் பெற்றுக்கொள்ளல், மின்சார உபகரணம் இலத்திரனியல்கள், பதப்படுத்தப்பட்ட உணவு, குடிபானங்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் செறிவான திரவியங்கள், கப்பல் கட்டுமானம் மற்றும் விற்பனைக்குப் பின்னரான பணிகள் மற்றும் மருந்தாக்கல் போன்ற அதிகமான உள்நாட்டு பெறுமதி கூட்டலுடைய உள்ளாற்றலுள்ள புதிய ஏற்றுமதித் துறைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டு வந்தன. கொள்கைகளுக்கான தேவை ஆராயப்பட்டு ஆதரவளிக்கப்படவேண்டும். ஓர் நெகிழ்சியான செலாவணி வீதம், மாற்றமில்லாத வரி மற்றும் முதலீடு கொள்கைகள் மற்றும் அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற நாட்டின் சாதகமான பேரண்டப்பொருளாதாரக் கொள்கைகள் மூலம் ஏற்றுமதித் துறை ஆதரவளிக்கப்படவேண்டும்.

நாட்டில் அவசியமான பொருட்களின் கிடைக்குமாந் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், இறக்குமதிப் பதலீட்டுக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்கும் வலுவான கைத்தொழில் கொள்கைகள் மற்றும் உபாயங்களின் கையாளல் அவசியமாகும். பல தசாப்தகாலமாக இலங்கை ஓர் வாத்தகம் சார்ந்த பொருளாதாரமாக இருந்தபோதிலும் உலகளாவிய நோய்த்தொற்றுக்கும் அதன் விளைவான உலகளாவிய நிரம்பல் சங்கிலி சிக்கல்கள் மற்றும் தற்போதுள்ள புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவை பேரண்டப்பொருளாதார எய்துநிலைகள் கொண்ட ஒரு நாடு குறிப்பாக நெருக்கடி காலங்களில் உணவு மற்றும் அத்தியாவசிய பண்டங்களின் இடையூறற்ற நிரம்பலினை பெற்றுக்கொள்வதற்கு அதிகளவில் ஏனைய நாடுகளில் தங்கியிருப்பது கடினமானது என்பதனை எடுத்துக்காட்டியுள்ளது. இறக்குமதியில் ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் பண்டங்களின் தட்டுப்பாட்டிற்கு மத்தியில் குறைந்தபட்சம் உள்நாட்டில் உற்பத்திசெய்யக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியாவசிய பண்டங்கள் தொடர்பில் இறக்குமதி பதிலீட்டிற்கான தேவைப்பாடு வலுவாக உணரப்பட்டது. உணவு, மருந்துப் பொருட்கள், கைத்தொழில்களுக்கு அவசியமான உள்ளீடுகள், கட்டடவாக்க பொருட்கள் மற்றும் பொறிகள் என்பவை இவ்வகையான அத்தியாவசிய பொருட்களில் உள்ளடங்கும். இது தொடர்பில், இறக்குமதிகளை ஊக்கமிழக்கச்செய்து வேளாண்மைத் துறையை அபிவிருத்தி செய்வது, ஓர் மருந்தாக்கல் தயாரிப்பு வலயத்தினை நிறுவுவதற்கான திட்டங்களை அமைத்தல், புடவை தயாரிப்புப் பூங்கா மற்றும் எனைய அரசின் முயற்சிகள் பாராட்டத்தக்கவை. பாரிய ஏற்றுமதித் துறைகளின் பெறுமதிச் சங்கிலிகளின் பின்னோக்கிய ஒருங்கினைப்பினை ஊக்குவிக்கும் கொள்கைகளும் இதற்கு ஆதரவளிக்கிறது. மறுபுறத்தில், கவனமாக வடிவமைக்கப்பட்ட மற்றும் உபாயகரமான பதலீட்டுக் கொள்கைகள் நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணியை சேமிக்க உதவும். இந்த பின்னணியில், முக்கியமாக உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னரான அலையாக இறக்குமதிப் பதிலீடு போன்ற கொள்கைகளை ஏனைய பல நாடுகள் மேற்கொள்கின்றன. அண்மைக்காலத்தில் சீனா, இந்தியா, அமெரிக்கா மற்றும் பல ஆபிரிக்க நாடுகள் இறக்குமதிகளை ஊக்கமிழக்கச்செய்து உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிக்க முயற்சிக்கின்றனர். மேலும், ஏற்றுமதியினை மையமாகக் கொண்ட தயாரிப்புக்கு மட்டுமின்றி இனங்காணப்பட்ட பின்னோக்கிய ஒருங்கிணைப்புத் துறைகளுக்கும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்வதனால் பெறுமதி சங்கிலிகள் மீது அதிக கட்டுபாட்டினை கொண்டிருப்பதனை ஆதரிப்பதுடன் செயற்றிறனாக இறக்குமதிகளை பதிலீடுசெய்ய முடியும். இருப்பினும், வேளாண்மைக் கொள்கைகளுடனும் இணைக்கப்பட்ட ஓர் முழுமையான மற்றும் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கக்கூடிய கைத்தொழில் கொள்கைக்குக் கீழான கைத்தொழில்மயமாக்கலினை மையமாகக் கொண்ட வலுவான மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளை முன்னெடுத்தல் தொடர்ந்தும் அவசியமானதாகவும் அவசரமானதாகவுமுள்ளது.

ஏற்றுமதித் துறைகளின் அபிவிருத்தி சுதந்திர மற்றும் முன்னுரிமை அடிப்படையிலான வர்த்தக ஒப்பந்தங்கள் மீது அதிகமாக தங்கியிருக்கக்கூடாது. பதினொரு பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முறைமைத் திட்டங்கள் (ஐரோப்பிய பிராந்தியத்தின் GSP+ உள்ளடங்கலாக) மூலம் பல வெளிநாட்டுச் சந்தைகளுக்கு இலங்கை முன்னுரிமை அடிப்படையிலான நுழைவினைக் கொண்டுள்ளது. இதே வேளையில், சலுகை அடிப்படையில் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு முன்னுரிமை அடிப்படையிலான நுழைவினை அனுமதிக்கும் ஏழு பல்புடை மற்றும் இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளை இலங்கை மேற்கொண்டுள்ளது. அதேநேரம், சீனா, யப்பான், இந்தோனீசியா, சிங்கப்பூர் மற்றும் வங்காளதேசம் போன்ற உயர்ந்த உள்ளாற்றல் கொண்ட வர்த்தக பங்குதாரர்களுடன் சுதந்திர / முன்னுரிமை அடிப்படையிலான வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வர்த்தக ஒப்பந்தங்கள் பொதுவாக தீர்வைகள் மற்றும் ஒதுக்குகள் மீது கவனங்கொண்டிந்தாலும், இவற்றின் செயலெல்லை அண்மைக்காலத்தில் பணி ஏற்றுமதிகள், அறிவுசார் சொத்து உரிமைகள் மற்றும் காப்புரிமை விதிகள்,

நலன் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், தொழிற்படை மற்றும் சூழல் நியமங்கள், முதலீடுகள் மற்றும் வங்கித்தொழில் போன்றவற்றையும் உள்ளடக்கிறது. பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முறைமை செயற்றிட்டங்களை பொறுத்தவரையில், இவற்றை நடைமுறைப்படுத்தும் நாடுகள் பரஸ்பரமல்லாத முன்னுரிமை அடிப்படையிலான சந்தை நுழைவினை தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்குகின்றன. இவ்வாறான செயற்றிட்டங்களில் இலங்கை ஒரு பயன்பெறுநர் ஆகும். தாழ்ந்த தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்ற அளவுகோலிலும் நல்ல ஆளுகைத் தேவைப்பாடுகள், தொழிற்படை நியமங்கள் மற்றும் சூழல் காரணிகள் போன்ற வழங்கும் நாட்டின் நிபந்தனைகளிலும் சில பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முறைமைத் திட்டங்களின் பயன்பெறுநர் தகுதி தங்கியுள்ளது. இலங்கையின் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உறபத்தி அதிகரிக்கும்போது இந்த சில திட்டங்களுக்கான தகுதியை இலங்கை இழக்கலாம். வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முறைமைத் திட்டங்கள் உற்பத்தி மூலம்தொடர்பான விதிகளின் கடுமையான தேவைப்பாட்டினையும் உள்ளடக்குவதனால் இலங்கைக்குள் உயர்வான பெறுமதி கூட்டல் இருக்கவேண்டும். ஆகவே, இந்த வர்த்தக ஒப்ந்தங்களை பயன்படுத்தும் பல எண்ணிக்கையான ஏற்றுமதிகள் வேளாண்மை ஏற்றுமதிகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் போன்ற உள்நாட்டு உள்ளீடுகள் மீது தங்கியிருக்கும் கைத்தொழில் பொருட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதிகளிவல் இறக்குமதிசெய்யப்பட்ட உள்ளீடுகளை பயன்படுத்தும் ஏற்றுமதிகளினால் கடுமையான உற்பத்தி மூலம் தொடர்பான விதிகளின் தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வது கடினமாகும். ஆகவே, இறப்பர் உற்பத்திகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வேளாண்மை ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பிரதான ஏற்றுமதியான ஆடைகளுக்குக்கூட ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முறைமைத் திட்டத்தின் பயன்பாடு அதிகமில்லை. 2010 ஓகத்து மாதத்திற்கும் 2017 மே மாத்திற்கும் இடையேலே ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முறைமைத் திட்டத்திற்கான தகுதியினை இலங்கை இழந்த போதும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் கணிசமாக வீழ்ச்சியடையவில்லை. இந்த கரிசனைகளுக்கு மத்தியிலும், இந்த திட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்குக் கீழ் தாழ்ந்த தீர்வைகள் மூலம் கணிசமான நன்மைகளை சில ஏற்றுமதிகள் பெறுகின்றன. இதன் விளைவாக, 2021 இல் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 43 சதவீதமானது பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முறைமைத் திட்டங்கள் உள்ளடங்கலான முன்னுரிமை அடிப்படையிலான வர்த்தக ஒப்பந்தங்களிற்குக் கீழான ஏற்றுமதிகள் மூலம் ஈட்டப்பட்டது. இருப்பினும், வர்த்தக ஒப்பந்தங்களுக்குக் கீழ் இலங்கையின் பெரும் பங்கான ஏற்றுமதி வருவாய்கள் பெறப்பட்டுள்ளது என்பது இத்தகைய ஒப்பந்தகளே ஏற்றுமதிகளின் அறிக்கையிடப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமான தனிக் காரணமாகும் என்பதில்லை. ஏற்றுமதி நிறுவனம் தொடர்பிலான ஏனைய காரணிகள், உள்நாட்டுப் பொருளாதார காரணிகள் மற்றும் உலகளாவியச் சந்தைக் காரணிகள் என்பவற்றினால் இத்தகைய ஏற்றுமதிகள் ஊக்கமளிக்கப்பட்டிருக்கலாம். இதே வேளையில், ஏனைய நாடுகளின் பிராந்திய அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடைமை (கிழக்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியாவிலுள்ள 30 நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட RCEP) போன்ற வர்த்தக ஒப்பந்தங்களும் இலங்கையின் எதிர்கால போட்டித்தன்மைத் தொடர்பான கரிசனைகளை எழுப்புகின்றன. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முறைமைத் திட்டங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற நன்மைகள் பாரியனவாக இருந்தாலும் இத்தகைய வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்கள் மீதான தங்கியிருப்பினை குறைப்பது முன்மதியுடையதாகயிருக்கும். இதே வேளையில், உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் ஏற்றமதிசெய்யப்பட்ட பண்டங்களின் பன்முகப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையின் விரிவாக்குதல் என்பவற்றினைக் கருத்திற் கொள்ளவேண்டும். எனினும், ஏற்றுமதிகளின் உள்ளாற்றலான அதிகரிப்பு இல்லாவிடில் இறக்குமதிகளிலிருந்தான செலவுச் சிக்கனம் ஏதேனும் இனங் காணப்பட்டாலோ நியாயப்படுத்தப்பட்டாலோ மாத்திரமே சுதந்திர / முன்னுரிமை அடிப்படையிலான வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளவேண்டும். இருந்தபோதிலும், தீர்வை சலுகைகள் மீது அதிகமாக தங்கியிருக்காமல் நடுத்தரம் முதல் நீண்ட காலத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினால் உந்துதலளிக்கப்பட்ட புத்தாக்கத்தினால் எய்தப்பட்டு தாழ்ந்த உற்பத்திச் செலவில் உயர்ந்த பெறுமதி கூட்டலுடன் மேம்பட்ட தரத்துடனான பொருட்களை ஏற்றுமதி செய்வது மீது ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கைகள் கவனஞ்செலுத்தவேண்டும்.

வெளிநாட்டில் உயர்தர கல்விக்கான அதிகரித்த கேள்வி மற்றும் பாரிய அளவிலான வெளிநாட்டுச் செலாவணிச் செலவினமென்பது உள்நாட்டில் கிடைக்கக்கூடிய உயர் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பிலான சிக்கல்களை தீர்ப்பதற்கான அவசரத் தேவைப்பாட்டினை எடுத்துக்காட்டுகிறது. இலவசக் கல்வி மற்றும் உயர் கல்வி தொடர்பான உட்கட்டமைப்பினை நிலை உயர்த்துவதில் தொடர்ச்சியான அரசாங்கங்கள் கடப்பாட்டினைக் கொண்டிருந்தாலும் பட்டதாரி நிலை மற்றும் பட்டத்திற்குப் பின்னரான மட்டத்தில் பல தகுதிபெற்ற மாணவர்கள் பொதுக் கல்வி முறைமைக்குள் உள்ளடக்படாமலிருக்கின்றார்கள். 2020 இல், கல்விப் பொதுத்தராதர உயர் தர பரீட்சைக்கு தோற்றியோரில் ஏறத்தாழ 63 சதவீதமானோர் உயர்தர பொதுக் கல்வி முறைமைக்குள் நுழைவதற்கு தகுதியுடையவர்களாக இருந்தபோதிலும் அண்மைக்காலத்தில் உள்ளீர்ப்புக்களில்

1

அதிகரிப்புக்கள் காணப்பட்ட போதிலும் தகுதி பெற்றோரில் 22 சதவீதமானோர் மட்டுமே முறைமைக்குள் அனுமதிக்கப்பட்டனர். இதற்கேற்ப, உள்நாட்டில் அரச மற்றும் தனியார் உயர் கல்வி முறைமைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள் இருப்பது உயர் கல்விக்காக வெளிநாட்டுக்கு மாணவர்கள் தொடர்ச்சியாக செல்வதனை விளைவித்துள்ளது. வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான வெளிப்பாய்ச்சல் இது தொடர்பிலான முக்கிய சிக்கலாகவிருந்து வெளிநாட்டுத் துறையில் நிலவுகிற சமமின்மைகள் மீதான அழுத்தத்தை அதிகரிக்கின்றது. மேலும், உலகளாவிய பொருளாதாரத்துடன் அதிகளவில் பொருளாதாரம் இணையும்போது ஓர் நவீன வேலைச் சூழல் தொடர்பான மாற்றமடையும் கேள்வியினை பூர்த்திசெய்யுமவாறு உள்நாட்டு தொழிற்படை மாறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வர்த்தக சேவைகளைப்பெறும் துறை ஐ.அ.டொ. 5 பில்லியன் பெறுமதியான கைத்தொழிலாக விரிவடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்வதற்கு இலங்கை முயலும்போது பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற தகமைகள் கொண்ட திறனுடைய தொழிற்படைக் குழாமொன்றின் கிடைப்பனவு அவசியமாகும். ஒத்திசைவாக, கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் பன்னாட்டு நிதியியல் நகரம் என்பவற்றிற்குள் உருவாக்கப்படவுள்ள புதிய தொழில்வாய்ப்புக்களுக்கும் இவ்வகையான திறனுடைய நபர்கள் குழாம் தேவைப்படும். இதற்கேற்ப, பன்னாட்டுத் தரத்திலுள்ள உள்நாட்டுக் கல்விக்கான வாய்ப்புக்களை மேம்படுத்துவது தொழிற்படைக்கு தேவைப்பாடான திறனை மேம்படுத்துவதற்கு உதவுவதுடன் ஓரளவிற்கு நாட்டிற்குள் திறமையை வைத்துக்கொள்வதனையும் இயலச்செய்வதுடன் பணிகள் துறையைமேலும் விரிவுபடுத்தும். ஆகவே, உள்நாட்டு மாணவர்களை வைத்துக்கொள்வதற்கு மட்டுமின்ற வெளிநாடுகளிலிருந்து பன்னாட்டு மாணவர்களை கவர்வதற்கும் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் உள்ளாற்றல் மேம்பாடுகளுடன் அவற்றின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் குறிப்பான கொள்கை முன்னெடுப்புக்கள் அவசியமாகும். மேலும், தங்குமிட வசதிகள், சமூக நடவடிக்கைகள், சிறப்பியல்புவாய்ந்த ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகூட வசதிகள் போன்றவற்றைக் கொண்ட பல்கலைக்கழகத் தர உட்கட்டமைப்பினை கட்டுவது மீது தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் கவனஞ்செலுத்துவதும் அவசியமாகும். இவ்வகையிலான முன்னெடுப்புக்கள் கற்கை விநியோகத்தின் தரத்தினை அதிகரிப்பதற்கு பங்களிப்பது மட்டுமின்றி மொத்த கற்கை அனுபவத்தினை மேம்படுத்தும். இதுவும் தற்போது உயர் கல்விக்காக வெளிநாட்டுக்குச் செல்லும் மாணவர்களுக்கு ஓர் முக்கிய கவர்ச்சியாகவுள்ளது. பன்னாட்டு தரச்சான்றிதழுடன் உலக தரத்திலான பல்கலைக்கழகங்களுடன் அதிகரித்த ஒருங்கிணைவுடன் தனியார் உயர்கல்வித் துறையில் ஓர் விரிவாக்கத்தினை வசதிப்படுத்துவதனை அரசாங்கம் கருத்திற்கொள்ளலாம். மேலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இலங்கையில் கிளைப் பல்கலைக்கழகங்களை நிறுவுவதனை வசதிப்படுத்தல் என்பது வெளிநாட்டு மாணவர்களை கவர்வதற்கான ஓர் பாராட்டத்தக்க முன்னெடுப்பு என்பதுடன் இது இங்கே வசிக்கும் அதே வேளையில் உள்நாட்டு மாணவர்கள் பிரசித்தி பெற்ற வெளிநாட்டு நிறுவனங்களில் கற்பதனையும் இயலச்செய்யும். பன்னாட்டு அங்கீகாரம்பெற்ற கல்வி நிறுவனங்களின் கல்வி வழங்கலின் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஓர் வதிவிட அனுமதித் திட்டத்திற்குக் கீழ் உலகத் தரத்திலான கற்பிப்பவர்களை கவர்வதும் தேவைப்பாடாகவுள்ளது. இவ்வகையிலான ஒழுங்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மேம்படுத்தி தொழில்நுட்ப அறிவினையும் உள்ளே கொண்டுவரும். இவ்வகையிலான முன்னெடுப்புக்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வர்த்தக சேவைகளை வழங்குவதில் ஓர் முன்னோடியாக தோற்றம்பெறுவதற்காக நடைபெற்றுவரும் நடவடிக்கைகளுக்கு வசதியளித்து தொழிற்படையின் அளவு மற்றும் தரத்தினை உயர்த்தி இந்த கைத்தொழிலின் தேவையை பூர்த்திசெய்வதற்கு தொழிற்படையின் தரத்தினை உயர்த்துவதனை வசதியளிப்பதுடன் இங்கே இலத்திரனியல் நாடோடியாக பின்னர் தொடரக்கூடிய பன்னாட்டு மாணவர்களை கவர்வதற்கும் உதவும். இது அரசாங்கத்தின் மீது முழுச் சுமையையும் சுமத்தாமல் உயர் கல்விக்கான நுழைவில் ஓர் திரண்ட மேம்பாட்டிற்கான வழியினை உருவாக்கும் அதே வேளையில் இது எதிர்காலத்தில் உயர் கல்வித் துறை ஓர் முக்கிய வெளிநாட்டுச் செலாவணியினை பெற்றுக்கொள்ளக்கூடிய துறையாக தோற்றம்பெறுவதனை இயலச்செய்யும்.

சுதந்திரத்திலிருந்து வேளாண்மைத் துறை உருமாறியிருந்தபோதிலும் ஆரோக்கியமான வருமான மட்டங்களை உருவாக்கும் இயலுமையுள்ள அதே வேளையில் துறையின் ஒட்டுமொத்த வினைத்திறனை மேம்படுத்துவதற்கு உணவு பாதுகாப்பு மற்றும் செயற்றிறனான சூழல்முறைமை முகாமைத்துவத்தினை உறுதிசெய்யும் ஓர் நிலைத்திருக்கக்கூடிய வேளாண்மைத் துறையினை உருவாக்குவதற்கு இலங்கை தொடர்ந்தும் போராடுகிறது. ஓர் உரத்திற்கான மானியத் திட்டத்திற்குக் கீழ் இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய வேளாண்மை இரசாயன உள்ளீடுகளின் அதிகரித்த பாவனையுடன் உயர் விளைவுடனான பயிர் வகைகளின் விரைவான அறிமுகத்தினைக் கொண்டு பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு வேளாண்மைத் துறையினை வளர்ப்பது 1960களிலிருந்த வேளாண்மை முன்னெடுப்பாகும். தொடர்ந்துவந்த காலப்பகுதிகளில், உற்பத்தியில் நிலையான அதிகரிப்புக்களினை உறுதிசெய்யும் நோக்குடன் பணக் கொடைகளாக அல்லது இலவசமாக அல்லது சந்தைப் பெறுமதிக்கு குறைவான வீதத்தில் பசளையை வழங்கி தொடர்ந்தும் விவசாயிகளுக்கு பசளை தொடர்பான சலுகைகளை இலங்கை வழங்கியது. இதன் விளைவாக, விவசாயிகளுக்கான இவ்வகையிலான சலுகைகளின் தொடர்ச்சியுடன் குறைவான விரிவாக்கச் சேவைகள் மற்றும்

விவசாயிகளின் விழிப்புணர்வின்மையினால் வேளாண்மை உற்பத்தி வழிமுறையில் இரசாயன மற்றும் அசேதன பொருட்களின் மேலதிகமான பயன்பாட்டினை விளைவித்து. இது இறைப் பக்கத்தில் செலவின சுமைக்கு மேலதிகமாக மனித நலன் மற்றும் சூழல் முறைமைகள் மீது நீண்ட காலத்திற்கான எதிர்கணியமான தாக்கத்தினை கொண்டது. மேலும், குறைவான தாழ்ந்த செலவில் நாட்டில் பெருமளவில் சந்தை விலைகளிற்கு இரசாயன பசளை இருப்பதனால் இது பயிர்ச்செய்கையில் சேதன உரத்தினையும் ஏனைய சேதன மற்றும் நிலைத்திருக்கக்கூடிய விவசாய முறைகளையும் மேற்கொள்வதனை தடுத்துள்ளது. ஏனெனில் இந்த முறைகளுக்கு அதிகளவிலான தொழிற்படை மற்றும் நேரம் தேவைப்படுகிறது. வளர்ப்போர், நுகர்வோர் மற்றும் சூழலிற்கும் சேதனப் பசளை பல நன்மைகளை எப்போதும் உருவாக்கும். இது மண்ணின் பலவித உயிர்களை பேணுவதுடன் அதனது கனிமச்சத்து மற்றம் நீர்த்தேக்கத்தன்மைக்கு ஆதரவளித்து மண்ணின் செழுமையையும் ஆதரிக்கிறது. இருப்பினும், இரசாயன பசளையின் பாவனை மற்றும் சேதனப் பசளை மற்றும் மண்ணைப் பாதுகாக்கும் நடைமுறைகளின் பாவனையின்மை என்பவை மணணின் தரக்குறைவு, நில மற்றும் மேற்பரப்பு நீரின் மாசுபடுத்தல், மிகையூட்டம் மற்றும் நீர்சார்ந்த சூழல் முறைமையின் சீர்குலைவு என்பவற்றின் மூலம் இயற்கைச் சூழலின் நலிவடைதலை விளைவித்துள்ளது. இதே வேளையில், வேளாண்மை இரசாயனங்களின் மேலதிகமான பாவனை பலவித உயிர்கள் மீது கணிசமான எதிர்கணியமான தாக்கத்தை கொண்டிருக்கும் என்பதுடன் இது நேரடியான மற்றும் மறைமுகமான நலன் சார்ந்த இடையூறுகளையும் விளைவிக்கும். இதற்கேற்ப, நிலைத்திருக்கக்கூடிய வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான ஓர் நீண்டகால கொள்கை கட்டமைப்பினை உருவாக்குவதற்கு ஓர் அவசர தேவையுள்ளது. இது பொருளாதார இலாபகரத்தன்மை, சமூக மற்றும் பொருளாதார சமத்துவம் மற்றும் சூழலின் நலனையும் உறுதிபடுத்தும். வேளாண்மையில் செயற்கையான பசளையின் பாவனையின் மேலதிகமான பாவனையை மட்டுப்படுத்தும் நோக்குடன் சேதனப் பசளைக்கான ஊக்குவிப்பு தொடர்பான அரசின் முன்னெடுப்புக்களை அங்கீகரிக்கும் அதே வேளையில் நிலைத்திருக்கக்கூடிய வேளாண்மை தொடர்பிலான சகல விடயங்களையும் உள்ளடக்கிய ஓர் முழுமையான உபாயத்தினால் மட்டுமே எதிர்கால சந்ததியினரின் தேவைப்பாடுகளை விட்டுக்கொடுக்காமல் தற்கால சந்ததியினரின் தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வதனை உறுதிப்படுத்த முடியும். இலங்கையின் தொழிற்படையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர் வேளாண்மைத் துறையில் தொழில்புரிவர்கள் என்பதுடன் அதிர்வுகள்கெதிராக தாக்குப்பிடிக்கும்தன்மை கொண்டிருக்காமையினால் அவர்களுடைய வாழ்வாதாரம் தொடர்நதும் எய்து நிலையில் காணப்படுகிறது. இது தொடர்பில், இந்த நிலைத்திருக்கக்கூடிய மற்றும் வானிலை செயற்றிறனான வேளாண்மை முறைகளிலிருந்து விவசாயி நன்மை பெறுவதனை இயலச்செய்யும் ஓர் நிலைத்திருகக்கூடிய வேளாண்மைத் தளத்தினை உருவாக்குவதற்கு அரசாங்கம் வசதிப்படுத்தவேண்டும். இதற்கேற்ப, வேளாண்மையில் உள்ளீட்டின் அனுகூலமான பாவனையை ஊக்குவிக்கும் நுணுக்கமான வேளாண்மை முறைமையை நிறுவுவது தொடர்பில் அவசர வழிமுறைகள் தேவைப்படுகின்றன. இந்த அணுகுமுறைக்குக் கீழ் சேதனப் பசளை ஊக்குவிக்கப்படும் அதே வேளையில் இரசாயன பசளையின் செயற்றினான மற்றும் அனுகூலமான பாவனை மிகவும் முக்கியமானது. அண்மைக்காலத்தில் நாட்டில் காணப்பட்ட அடிக்கடியான வறட்சிக் காலத்தினை கருத்திற்கொள்ளும்போது சொட்டு நீர்ப்பாசனம் போன்ற குறைந்த அளவு நீர்ப்பாசன முறைமைகளுடன் வறட்சியைத் தாக்குப்பிடிக்கும் பயிர் வகைகளின் அறிமுகம் மூலம் செயற்றிறனான நீரின் முகாமைத்துவமும் ஊக்குவிக்கப்படவேண்டும். அத்துடன், வேளாண்மை நிலங்களில் மண்ணின் நீண்ட கால வினைத்திறனை உறுதிபடுத்துவதற்கும் நிலச்சரிவு அபாயத்தை குறைப்பதற்கும் மண்ணை பாதுகாக்கும் உபாயங்கள் மீது அதிக கவனஞ்செலுத்தப்படவேண்டும். அதே வேளையில், அதிகரித்து வரும் உணவுக் கேள்வி, வானிலை மாற்றம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சாகுபடி நிலம் சார்ந்த சிக்கல்கலை தீர்ப்பதுடன் நிலைக்குத்தான விவசாயம் மற்றம் நகர்புற விவசாயம் போன்ற புத்தாக்கமான விவசாய முறைகளை ஊக்குவிக்கப்படும் அதே வேளையில் மரபுசார்ந்த வேளாண்மைத் துறையில் வேளாண்மை நடவடிக்கைகளினை இயந்திரமயமாக்குதல் அவசியமாகும். இதே வேளையில், நாடு இறக்குமதிசெய்யப்பட்ட விதைகள், பசளை மற்றும் வேளாண்மை இரசாயனங்கள் மீது அதிகம் தங்கியிருப்பினை கொண்டதானல் பசளை, வேளாண்மை இரசாயனங்கள் மற்றும் விதைகளின் உள்நாட்டு உற்பத்தியின் ஊக்குவிப்பு என்பது வேளாண்மையில் நிலைத்திருக்கக்கூடியதன்மையினை எய்துவதற்கு அவசியமாகும். ஓர் நிலைத்திருக்கக்கூடிய வேளாண்மைத் துறையை கட்டியெழுப்புவதனை நோக்கிய முயற்சியில் நிலைத்திருக்கக்கூடிய, வானிலை செயற்றிறனான மற்றும் நன்மையான வேளாண்மை பிரயோகங்கள் பற்றிய விழிப்புணர்வு சகல ஆர்வலர்கள் மத்தியிலும் உருவாக்குவதன் மூலம் ஓர் விரைவான மாற்றத்தினை ஏற்படுத்தலாம். மேலும், இவ்வகையிலான மாற்றத்தின் முழு பயன்களும் வேளாண்மை நிரம்பல் சங்கிலிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு கடத்தப்படுவதனை உறுதிசெய்யும் அதேவேளையில் ஓர் நிலைத்திருக்கக்கூடிய முறைமையாக தற்போதைய வேளாண்மை முறைமையை உருமாற்றுவதற்கு ஓர் பொருத்தமான மாற்ற காலத்துடன் நன்கு விருத்திசெய்யப்பட்ட மற்றும் முழுமையான பொறிமுறை அவசியமாகும்.

பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய உந்துகோலாக இருந்தபோதிலும் மேலும் வளர்ச்சிக்கான உள்ளாற்றலை கொண்டிருந்தபோதிலும், இலங்கையிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் பல தடங்கல்களை

1

சந்திப்பதனால், இது தேசிய மட்டத்தில் கொள்கை முன்னுரிமைகளை தேவைப்படுத்துகிறது. வேளாண்மையற்ற துறையிலுள்ள 99 சதவீதத்திற்கு மேலான நிறுவனங்கள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளாகக் காணப்படுகின்றதுடன் இவை வேளாண்மை துறைக்குள் 75 சதவீதமான தொழில்நிலைக்கு பங்களிக்கின்றன[3]. இலங்கையில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் பங்களிப்பு 50 சதவீதத்திற்கு மேலானது என வேறுபட்ட ஆய்வுகள் அறிக்கையிடுகின்றன. இருப்பினும், அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் சில அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களுடன் கூட ஒப்பிடுகையில் இது ஒப்பீட்டளவில் தாழ்வாகக் காணப்படுகிறது. இலங்கையில் பல எண்ணிக்கையான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் இருக்கின்றபோதிலும் இவற்றின் பொருளாதார பங்களிப்பு இன்னும் அதனது உள்ளாற்றலை எய்தாமலிருக்கலாம் என்று இந்த அவதானிப்புக்கள் பரிந்துரைக்கின்றன. இயற்கை அனர்த்தங்கள், தீவிரவாதிகளின் நடவடிக்கைகள், சுகாதார நெருக்கடிகள் போன்ற பலவற்றை உள்ளடக்கிய பல காரணங்களினால் இலங்கையிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் பல தசாப்தகாலமாக கடினமான சூழ்நிலைகளை அபிவிருத்திருந்தன. உதாரணத்திற்கு, உலகளாவிய நோய்த்தொற்று போன்ற இவ்வகையிலான காலப்பகுதிகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு ஏனைய பல நாடுகளைப் போல் நிதியியல் மற்றும் நிதியியலல்லாத நிவாரணங்களைக் கொண்ட ஓர் கணிசமான பொதியினை அரசாங்கமும் மத்திய வங்கியும் வழங்கின. இருந்தபோதிலும், இந்த துறையிலுள்ள கணிசமான தொழில்முயற்சிகளும் நபர்களும் மீண்டிருக்கமாட்டார்கள் இல்லாவிடில் இத்தகைய ஆதரவுத் திட்டங்களின் உள்ளாற்றலை ஆரய்ந்துகூட இருக்கமாட்டார்கள். நிதிக்கான நுழைவுத்தன்மை மற்றும் நிதியியல் கல்வியறிவின் போதாமை உள்ளடங்கலான பல விடயங்கள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் துறையினை முடக்கியுள்ளது என இனங்காணப்பட்டுள்ளது. நிதியியல் நிறுவனங்களினால் தேவைப்படுத்தப்படுகிற போதியளவு தகவல்களுடன் செயற்றிட்ட பரிந்துரைப்புக்களை தயார்செய்வதற்குத் தேவையான நிதியியல் கல்வியறிவினை பல நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் கொண்டிருக்கவில்லை என்பதுடன் இந்த தொழில்முயற்சியாளர்கள் மத்தியில் நிதியியல் அறிக்கையிடல் ஒப்பீட்டளவில் நலிவாக இருப்பதனால், இது நிதியியல் நிறுவனங்களை பிணையம் சார்ந்த தேர்வின் மீது தங்கியிருக்க வற்புறுத்துகிறது. இது நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் இயற்கையாகவே சிறிய சொத்துத் தளத்தினைக் கொண்டிருப்பதனால் கடன்களை பெற்றுக்கொள்ளும் இயலுமையை தடுப்பதனால் முறைசாரா கடன்வழங்குநர்களின் பணிகளைப் பயன்படுத்துவதற்கு தள்ளப்படுகிறார்கள். ஏற்றுக்கொள்ளக்கூடிய போதுமானளவு பிணையங்களின் இல்லாமைக்கு மத்தியில் தங்களது செயற்றிட்டங்களுக்கு நிதியினை பெற்கொள்வதில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்திற்கொண்டு, பல ஆர்வலர்களுடன் ஆலோசித்து அரசாங்கம் ஓர் கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தை நிறுவுவதற்கான முன்னெடுப்பில் முனைந்தது. இது ஓர் நீண்டகாலமாக தாமதமான தேவைப்பாடாகும். நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் கரிசனைகள் ஓரளவிற்கு கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தின் நடைமுறைப்படுத்தலுடன் இலகுவாகும் என்பதுடன் முன்னோக்கிச் செல்கையில் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைக்கான இவற்றின் பங்களிப்பினையும் தோற்றப்பாடுகளையும் மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தின் காலதாமதமில்லாத நடைமுறைபடுத்தல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் துறை செழிப்பதற்கு மிகவும் ஆதவளிக்கும். இதேவேளையில், நாட்டிலுள்ள சிறிய வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கு ஓர் நன்கு தொழிற்படும் அபிவிருத்தி வங்கியினை நிறுவதலும் அவசியமாகும் என்பதுடன் இது பல ஆண்டுகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், வேறு நாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு வெற்றிகரமாகக் காணப்பட்ட மாற்று நிதியிடல் வழிகளான கூட்டுநிதியிடல், முயற்சி மூலதன முதலீடுகள், எண்ணக்கரு போட்டிகள் போன்ற ஏனையவற்றையும் மேற்கொள்வதற்கும் பிரபல்யப்படுத்துவதற்குமான சாத்தியமும் ஆராயப்படவேண்டும். அதே வேளையில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள எம்பவர் போர்ட் மூலம் வசதிப்படுத்தும் மூலதன நிதி வாய்ப்புக்கள் போன்றவை பற்றிய விழிப்புணர்வினை மேம்படுத்துவதிலிருந்து நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் நன்மைபெறலாம். தாழ்ந்த மட்டங்களிலான முகாமைத்துவ தேர்ச்சிகள், காலங்கடந்த தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் இதன் விளைவான தாழ்ந்த தரத்திலான வெளியீடு, மட்டுப்படுத்தப்பட்ட சந்தை அறிவு, தகவல் சமச்சீரின்மை மற்றும் தொழில்முயற்சியார் அபிவிருத்திக்கு குறைந்தளவு சாதகமான சில கலாச்சார நோக்குகள் என்பவை உள்ளடங்கலானவை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் தங்களது உண்மை உள்ளாற்லை எய்துவதற்கு தடங்கல்களாக காணப்படுகின்றன. சில காரணிகளை உன்னிப்பாக பார்க்கும்போது இவை ஒன்றை ஒன்றுடன் பிணைக்கப்பட்ட பிரச்சனைகள் என்பதும் வலியுறுத்தும் சில தொடர்புடைய விடயங்களை எடுத்துக்காட்டுகின்றன. இவையை வெற்றிகரமாக தீர்ப்பதற்கு ஓர் திரண்ட முயற்சி தேவைப்படுகிறது. அரசாங்கமும் ஏனைய முகவர்களும் எடுத்த முயற்சிகள் பல நபர்களும் வியாபாரங்களும் சில விடயங்களை வெற்றிகொள்ள உதவியபோதிலும், இலங்கையில் தொழிற்படும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் முன்னேறுவதற்கு

3 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பொருளாதார தொகைமதிப்பு 2013/14 இல் அறிக்கையிடப்பட்டவாறு.

இடமுண்டு. இலங்கையிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் முகாமைத்துவ மற்றும் தொழில்முயற்சி சார் தேர்ச்சிகளை வலுப்படுத்துவதற்கும் நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்ட முனைப்புக்கள் தொடர்வது அவசியமாகும். அரச மற்றும் அரச சார்பற்ற முகவர்கள் இருவரினாலும் வழங்கப்படும் வர்த்தக ஆலோசனைப் பணிகளின் வழங்கல் மற்றும் கொடுகடன் ஆலோசனை சேவைகளின் வழங்கல் மேம்படுத்தப்படவேண்டிய இதே வேளையில், நிதியியல் நிறுவனங்களிலுமுள்ள சிறப்பு அலகுகள் மூலம் இத்தகைய பணிகளை வழங்கியும் பிரபலப்படுத்தவதனாலும், இது இறுதியில் நிதியியல் ஒழுங்குகளுக்கு வழி வகுக்கும். மேலும், உள்நாட்டிலும் பன்னாட்டிலும் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை அபிவிருத்திசெய்தல் என்பது நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் வெற்றிக்கு அத்தியாவசியமாகும் அதேவேளையில் பெரும் வர்த்தகங்களுடன் நிரம்பல் சங்கிலி ஒருங்கிணைப்பினை இயலச்செய்வது துறையின் தாக்குபிடிக்கும்தன்மையை மேம்படுத்த உதவும். இதே வேளையில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் வெளியீட்டின் தரத்தினை முன்னேற்றுவதற்கும் அவற்றின் சந்தை நுழைவினை மேம்படுத்துவதற்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் புதிய தொழில்நுட்பத்தின் பயன்படுத்தலை மேம்படுத்துவதற்கு சகல ஆர்வலர்களிடமிருந்து ஓர் முழுமையான முயற்சி தேவையாகின்றது. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் அரச மற்றம் அரசசார்பற்ற முகவர்களின் செயற்றிறனை அதிகரிப்பதற்கு வேறுபட்ட அலகுகளுக்கிடையான ஒருங்கிணைப்பினை மேம்படுத்துவதும் அவசியமாகும். தேவைப்படும்போது வியாபாரங்களும் தனிநபர்களும் இலகுவாக அவர்களை தொடர்புகொள்வதற்கு பல ஆதரவு விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்துவது அவசியமாகும். அதே வேளையில், நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட முறையீடுகளை கையாளும் பொறிமுறை ஒன்று மாவட்ட ரீதியில் அல்லது பிரிவுச் செயலக மட்டத்தில் தொழிற்பட்டால் ஒட்டுமொத்த நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் நன்மைபெறும் என்பதுடன் இது அவை முகங்கொடுக்கும் தொழிற்பாட்டு சிக்கல்களை இலகுபடுத்துவதற்கு பங்களித்து அத்துடன் ஏதேனும் பாரிய சிக்கல்களை உரிய கொள்கைகளினூடாக தீர்ப்பதற்கு உயர் தரப்பினருக்கு பரப்புவதற்கு ஓர் வழிமுறையாக உதவும். மேலும், நாட்டின் வியாபாரம் செய்யும் சூழலில் நீண்டகாலமாகவுள்ள இடர்பாடுகளை குறைப்பதற்கான முனைப்புக்களும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவுமென்பதில் எந்தவித ஐயமுமில்லை என்பதுடன் பொருளாதாரத்தில் சகல வியாபார நடவடிக்கைகளிலும் மேம்பாடுகளுக்கு வசதியளிக்கும்.

பல கொள்கை முன்னெடுப்புக்களுக்கு மத்தியிலும், கொவிட்-19 நோய்த்தொற்றினால் மேலும் அதிகரிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ விடயங்களுடன் இலங்கை தொடர்ந்தும் போராடுகிறது. அண்மை ஆண்டுகளில், இலங்கையின் கழிவு முகாமைத்துவ வழக்கங்களின் மீது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இது குறிப்பாக 2017 இல் மீத்தொட்டமுல்லை குப்பை நிலச்சரிவு விபத்து மற்றும் மிக அண்மையில் திறந்த கழிவுக் குவியலினால் மிருகங்கள் பாதிக்கப்படும் சம்பவங்களினால் ஏற்பட்டதாகும். கழிவு முகாமைத்து வழக்கங்களின் மேம்படுத்தல் தொடர்பில் பல தேசிய மற்றும் நுண்பாக மட்ட முன்னெடுப்புக்கள் மற்றும் இலக்குகள் இருந்தபோதிலும் இவற்றின் செயற்றிறனான நடைமுறைபடுத்தலில் ஓர் தொடர்ச்சியான பின்னடைவு உள்ளது. மேலும், கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவலும் அதன் விளைவாக முகக்கவசங்கள், தனியார் பாதுகாப்பு உபகரணங்கள், கையுறைகள், கைக்குட்டைகள், மெல்லிழைத் தாள்கள், சுகாதாரக் குட்டை, குழந்தைகளின் இடைத் துணி மற்றும் நோயாளர்களின் உடற் திரவங்களினால் மாசுபடுத்தப்பட்ட ஏனைய பொருட்கள் என்பவை நலன் நிறுவனங்கள், தொற்றுநோய் ஒதுக்கிடங்கள் மற்றும் குடியிருப்புக்களிலிருந்து இவையின் அப்புறப்படுத்தல் ஓர் கடுமையான கரிசனையாகவுள்ளது. ஏனெனில் இவ்வகையிலான 'ஒற்றைப் பாவனை' பொருட்கள் எதிர்வரும் காலங்களில் குறைவதற்கான சாத்தியமில்லை. நலன் கழிவு முகாமைத்துவம் மீதான தேசிய கணக்காய்வு அறிக்கை - 2019 இன்படி நோய்த்தொற்றின் முன்னரான காலத்தில் தணிக்கையிடப்பட்ட மருத்துவமனைகளில் ஏறத்தாழ 70 சதவீதமானவை சுகாதார கழிவு முகாமைத்துவ தரங்களினைப் பின்பற்றவில்லை. நலன் கழிவு முகாமைத்துவ தரங்களை பின்னபற்றாமலிருப்பதுடன் ஆபத்தான மற்றும் தொற்றுடைய கழிவுகளின் பொருத்தமற்ற அகற்றல் என்பவை சூழல், பொது நலன் மற்றும் பலவித உயிர்கள் மீது பாரிய அச்சுறுத்தலைக் கொண்டிருப்பதனால் இது பாரிய நடைமுறை இடர்நேர்வுகளை ஏற்படுத்தலாம். மேலும் குறித்துரைக்கப்பட்ட கொவிட்-19 மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை மையங்களிலிருந்தான மருத்துவ கழிவின் கணிசமான அதிகரிப்பிற்கு மேலதிகமாக உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மருத்துவ கழிவுகளின் திறந்தவெளி எரிப்பிலும் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. நலன் நிறுவனங்களுக்கான வழிகாட்டலின் வழங்கல் மற்றும் மருத்துவ கழிவின் கையாளலுக்கான அதிகரித்த வளங்கள் மூலம் இந்த கரிசனைகளை தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள் இருந்தாலும், மட்டுப்படுத்தப்பட்ட கழிவுகளின் களஞ்சிய, போக்குவரத்து மற்றும் எரிக்கும் வசதிகள் போன்ற பாரிய வள மற்றும் தொழில்நுட்ப வரையறைகளுக்கு நலன்புரி நிலையங்கள் முகங்கொடுக்கின்றன. மேலும் நகர்புற கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்தின் விரைவான முடிவுறுத்தலுடன் கழிவிலிருந்து வலுவினைப் பெற்றுக்கொள்ளும் இயந்திரங்களை நிறவுவது நாட்டின் திண்மக் கழிவு முகாமைத்துவ பிரச்சனைகளுக்கு மட்டுமின்றி நாட்டின் மின்சாரத் தேவைகளுக்கும் ஓர் முக்கிய தீர்வாகயிருக்கலாம். இவற்றில் ஒன்று 10 மெகாவட் உருவாக்க இயலளவுடன் 2021ஆரம்பத்தில் தொடங்கப்பட்டது. இத்தகைய செயற்றிட்டங்களுடன் உயர்ந்த மட்டங்களிலான

1

முதலீடுகளின் காரணமாக இத்தகைய செயற்றிட்டங்களின் கட்டுமாணம் தாமதப்படுகின்றது. இலாபங்களுக்கு மட்டுமின்றி அபிவிருத்திக்கான செயற்றிட்டங்கள் மூலம் உலகளாவிய நிலைத்திருக்குந்தன்மை முன்னெடுப்புக்களுக்கு பங்களிப்பதற்கான வாய்ப்புக்களை முதலீட்டாளர்களும் கொடையாளர் முகவர்கள் தேடுவதனால் கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள்சுழற்சி செயற்றிட்டங்களுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் பல்புடை நிதிகளினை கவர்வதற்கு பாரிய சாத்தியமுள்ளது என்பதனை உலகளாவிய போக்குகள் எடுத்துக்காட்டுகின்றன. ஓர் செயற்றிறனான கழிவு சேகரிப்பு பொறிமுறையின் சரியான நடைமுறைபடுத்தல், தற்போதுள்ள கழிவகற்றல் நடைமுறைகளினைத் தரமுயர்த்துவது மற்றும் போதியளவு இயந்திரவியல் மற்றும் உயிரியல் செய்முறை நிலையங்களின் வழங்கல் என்பன நாட்டில் வளர்ந்துவரும் கழிவு முகாமைத்துவம் சிக்கலினை தீர்ப்பதற்கு இன்றியமையததாகும். இதற்கேற்ப மீள்சுழற்சி மற்றும் கழிவுகளின் மக்குதல் மட்டுமன்றி கழிவினை குறைப்பதனையும் மீள்பாவனையை ஊக்குவிப்பதன் மீதும் கவனஞ்செலுத்திய பல் துறை முன்னெடுப்புக்களுக்கான தொடர்ச்சியான ஒப்பிய பொறுப்பிற்கு ஓர் பாரிய தேவையுள்ளது. இது குறுங்காலத்தில் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கும் நீண்ட காலத்தில் சுற்றோட்டமாயமான பொருளாதாரத்திற்கும் மாறுவதற்குமான வழியை வகுக்கும்.

இலங்கையின் தேசிய வளங்கள் சிறந்தமுறையில் பாதுகாக்கப்பட்டு மீளக்கட்டியெழுப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு 'பசுமை' அபிவிருத்தி தொடர்பில் கவனம்செலுத்துவது முக்கிய சமகால தேவையொன்றாக காணப்படுகின்றதுடன் இதன்மூலம் பொருளாதாரம் அதன் சூழல்முறைமையின் முழு வாய்ப்பையும் அடைந்துகொள்ள முடியும். தற்போதுள்ள இயற்கை வளங்களை பாதுகாத்து அதன்மூலம் காலநிலை மாற்றத்தின் சிக்கலை தீர்ப்பதற்கு வள நுகர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் ஊடாக அடையப்பெற்ற பொருளாதார வளர்ச்சிக்கு இடையே சமநிலையொன்றை ஏற்படுத்துவதன் அவசியம் தொடர்பில் பரவலான ஒருமித்த அபிப்பிராயம் காணப்படுகின்றது. சமீபத்திய ஆண்டுகளில், வெள்ளம், நிலச்சரிவுகள் மற்றும் வரட்சி நிலைமைகள் மற்றும் ஏனையவை போன்ற இயற்கை பேரழிவுகளின் அடிக்கடி ஏற்படும் நிகழ்வுகளுடனான காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து குறிப்பிடத்தக்க கரிசனைகள் இருந்துவருகின்றன. இலங்கையின் வெப்பநிலை அதிகரிப்பு உலக சராசரியை விட சற்று குறைவாகவே இருக்கும் என்று எறிவுசெய்யப்படுகின்றது என உலக வங்கியின் அண்மைய ஆய்வு எடுத்துரைக்கின்றது. இது கடுமையான வெப்ப காலங்கள் அதிகரிக்கும் என்றும் எதிர்காலத்தில் இக்கடுமையான வெப்பநிலை தொடர்ந்து இருக்குமென்பதையும் எடுத்துகாட்டுகின்றது. அத்தகைய வெப்பநிலை அதிகரிப்புக்களானது விசேடமாக வறண்ட பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் நலனோன்புகையில் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் விசேடமாக வேளாண்மை உற்பத்தித்திறன், தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் வலு பாதுகாப்பு என்பவற்றின் தொடர்பில் பொருளாதாரத்திலும் நேரடித் தாக்கங்களைச் செலுத்தக்கூடும். வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் என்பனவற்றின் காரணமாக உயிர்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றிற்கு கணிசமான ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய, அடைமழை போன்ற தீவிரமான வானிலை நிலைமைகளின் காலஇடைவெளியும் செறிவும் இலங்கைக்கான பாதிப்புக்களை சாத்தியமாக அதிகரிக்கின்றது என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது. இயற்கைச் சூழலிருந்து எழுகின்ற அத்தகைய விளைவுகளின் பாரியளவான தாக்கமானது வறிய மற்றும் பின்தங்கிய சமூகங்கள் மீது குறிப்பாக வேளாண்மையில் ஈடுபடுகின்ற குடித்தொகையின் பாரிய பிரிவினர் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகைய கரிசனைகளுக்கு மத்தியில், பல தசாப்தங்களாக யானைகளுக்கும் மனிதருக்குமிடையிலான பிணக்கு, மணல் அகழ்வுச் சம்பவங்கள், கைத்தொழிற்சாலைகள் மூலம் நீர்நிலைகளுக்கு விடுவிக்கப்படுகின்ற அபாயகரமான கழிவுகள், காடழித்தல் மற்றும் அண்மைய காலத்தில் இடம்பெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் மூலம் இடம்பெற்ற கடலோர அனர்த்தம் போன்ற பல்வேறு ஏனைய பிரச்சனைகள் நாட்டில் இயற்கையான சூழல்களின் தரத்தை தொடர்ந்தும் பாதிக்கின்றன. இவ்வனைத்துச் சுற்றுச்சூழல் கரிசனைகளும் நீடித்த, தொடர்ச்சியான மற்றும் ஆற்றல்வாய்ந்த விதத்தில் மீண்டெழும் எதிர்க்கணிய சமூக பொருளாதார தாக்கங்களைக் கொண்டிருக்கும். இது நீடித்துநிலைத்திருக்கும் இயற்கை வள முகாமைத்துவத்திற்கு வழிவகுக்கின்ற முன்னோக்கிய பார்வை மற்றும் முழுமையான கொள்கை முயற்சிகளுக்கு உறுதியளிப்பதற்கான அவசரத் தேவையினை வலியுறுத்துகின்றது. இயற்கை வளங்களின் நிலையைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பது அத்தியாவசியமானதொரு அம்சமாவதுடன் இது வழக்குத்தொடரப்படுகின்ற சட்டவிரோத குற்றியாக்குதல், வேட்டையாடுதல் மற்றும் சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடித்தல் போன்ற சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளக் குற்றங்களின் தடுத்தலினை நிச்சயப்படுத்துகின்ற கண்டிப்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சட்டரீதியான கட்டமைப்பொன்றினூடாக வலுப்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கும் நிதி நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு அரசாங்கமும் மத்திய வங்கியும் இணைந்து பணியாற்ற வேண்டுமென்பதுடன் அது சுற்றுச்சூழல் நேய வியாபாரங்களுக்குக் கொடுகடனை வழிப்படுத்துவதில் மிக முக்கியமானதாயமையும்.

2030ஆம் ஆண்டளவில் அனைத்து வகையான ஊட்டச் சத்துக் குறைபாடுகளையும் ஒழித்தல் என்ற இலக்கை அடைவதற்கான நாட்டினுடைய முயற்சிகளுக்கு மத்தியில், நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளின்

கீழ் பிரகடனப்படுத்தப்பட்டதற்கமைவாக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடனும் வேளாண்மை பண்டங்களில் அவதானிக்கபட்ட வழங்கல்பக்க அதிர்ச்சிகளுடன் தொடர்புடைய அபிவிருத்திகளானது இதுவரை அடையப்பட்ட பெறுபேறுகளைப் பாதித்து நீண்டகால தடைகளை உருவாக்கக்கூடும். இலங்கையானது 2015ஆம் ஆண்டளவில் சமூகத்தின் சமூகப் பொருளாதார நலனோன்புகையை உயர்த்துவதற்கு புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளின் கீழ், பல்வேறு தேசிய மட்ட இலக்குகளை அடைவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்த போதும் புவிசார் பிரதேசங்களிடையேயும் பொருளாதாரத் துறைகளிடையேயும் ஊட்டச்சத்து தொடர்பாக ஏற்படுகின்ற முரண்பாடுகளின் பாதிப்பை பிரதிபலித்து, ஊட்டச்சத்திற்கான நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுடான செயலாற்றம் தொடர்ந்தும் அடையமுடியாமல் காணப்பட்டது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2016ஆம் ஆண்டிற்கான குடித்தொகை மற்றும் சுகாதார அளவீட்டிற்கமைவாக, பெருந்தோட்டத் துறை மோசமான ஊட்டச்சத்து விளைவுகளைக் காண்பிக்கின்ற அதேவேளை தாய், சிசு மற்றும் குழந்தை ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேசிய இலக்குகளுடன் ஒப்பிடுகையில், ஊட்டச்சத்து குறைபாடு தொடர்பான சில குறிகாட்டிகளான வளர்ச்சி குன்றிய நிலை (வயதுக்கு ஏற்ற உயரம்), நலிவுறுதல் (உயரத்திற்கு ஏற்ற எடை), உடல் பருமன் பாதிப்பு (வயதுக்கு ஏற்ற எடை) மற்றும் குறைந்த நிறையைக்கொண்ட பிறப்பு ஆகியவை தொடர்பான குறிகாட்டியை அடையமுடியாமல் காணப்பட்டன. அத்தகைய வேறுபாடுகளும் கரிசனைகளும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. 0-4 வயதுடைய குழந்தைகளில் 42.2 சதவீதமளவிலான குழந்தைகள் பல்பரிமாண ரீதியில் ஏழைகளில் 33.4 சதவீதமானோர் ஊட்டச்சத்து மறுக்கப்பட்டிருக்கின்றனர். என்பதை 2021 ஆம் ஆண்டில், இலங்கையின் குழந்தை பல்பரிமாண வறுமைக் குறிகாட்டியானது எடுத்துக்காட்டியது. மேலும், உலகளாவிய மற்றும் உள்நாட்டு அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற உணவின் கிடைப்புத்தன்மை மற்றும் செலவிடக்கூடியதன்மை தொடர்பில் அண்மையில் வழங்கல் பக்க அதிர்வுகள் அவதானிக்கப்பட்டு, குறிப்பாக சிறுவர் மற்றும் பெண்கள் குடித்தொகையின் ஊட்டச்சத்து விளைவுகளின் நீண்டகால தாக்கங்கள் மீதான கரிசனைகள் அதிகரித்துள்ளன. அவ்வப்போது நிகழும் உயர்ந்தளவான உணவு பணவீக்கமானது தொடர்ந்து நீடிக்குமாயின், குடித்தொகையின் எதிர்கால உற்பத்தித்திறன் மீதான நீடித்த வடுக்களை ஏற்படுத்தலாம். வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களை இலக்காகக்கொண்டு, அரசாங்கத்தின் பண மாற்றல்கள் மற்றும் உணவு பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் வழங்கலானது இவ்வீட்டுத்துறையினரின் ஊட்டச்சத்து நிலைகள் மீதான மோசமான தாக்கத்தை ஓரளவிற்குத் தணித்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான குறுங்கால மற்றும் நீண்ட கால உபாயங்களைக் கொண்ட முழுமையான கொள்கை அணுகுமுறையை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை இது மீண்டும் வலியுறுத்துகிறது. இத்தகைய கொள்கை முன்னெடுப்புக்கள் வேளாண்மைத் துறையில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறனினூடாக கிடைப்பனவில் கவனம்செலுத்துவது மாத்திரமன்றி அறுவடைக்குப் பிந்தைய சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றிலும் கவனம்செலுத்த வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புக்களின் ஒரு பகுதியாக, குறிப்பாக அத்தியாவசிய உணவுப் பண்டங்களுக்கான தேசிய கேள்வி மற்றும் உள்நாட்டு வழங்கலுடன் தொடர்புடைய தரவுத்தளங்களை வலுப்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. உணவுப் பாதுகாப்பு நிலை மற்றும் குடித்தொகையின் ஒட்டுமொத்த நலனோம்புகை என்பவற்றினைப் பாதுகாப்பதற்கும் நிவாரண வழிமுறைகளின் முன்கூட்டிய திட்டமிடலுக்கும் காலந்தவறாத நடைமுறைப்படுத்தலுக்குமாக வேளாண்மைத்துறையில் தொடர்புடைய நிறுவனங்களின் தரப்பில் யதார்த்தமான மற்றும் காலந்தவறாத முன்னோக்கிய பார்வையினைக் கொண்ட மதிப்பீடுகள் அத்தியாவசியமாகின்றன. நாட்டின் வேளாண்மைத் துறையினையும் உணவுப் பாதுகாப்பு நிலையினையும் வலுப்படுத்துவதற்கு பல்புடை நன்கொடை முகவராண்மைகளின் உதவியினை இலங்கை பெற்றுக்கொண்டதென்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். நடுத்தர வருமான நிலைக்கு இலங்கை முன்னேற்றங்கண்ட போதிலும் இது தொடர்பிலான பல்புடை உதவிகள் ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றினூடாகப் பரந்தளவில் கிடைப்பனவாயுள்ளன. தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பு என்பன தொடர்பில் தொழில்நுட்ப இயலளவினை மேம்படுத்தல் மற்றும் நிதியளித்தல் ஆகிய இரண்டிற்கும் இந்த மூலங்களைப் பயன்படுத்துவதானது குடித்தொகையின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துவதற்குப் பங்களிப்பது மாத்திரமன்றி நீண்ட காலத்தில் நாட்டின் வேளாண்மைத்துறையின் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பு நிலையினையும் மேம்படுத்தும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையில் அவதானிக்கப்பட்ட பெண்கள் தொழிற்படை பங்கேற்பின் பெருமளவாக மந்தமடைந்த மட்டங்கள் தொழிற்படையின் கணிசமான பகுதியொன்று பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி முன்னேற்றங்கள் என்பவற்றிற்கப்பாற்பட்டுக் காணப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டி, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகளிலிருந்து பொருளாதாரம் தூரிதமாக மீட்சியடைவதுடன் உயர்வான வளர்ச்சிப் பாதையொன்றுக்குள் முன்னேற்றமடைவதற்கு முயற்சிக்கின்றமையால் உடனடியான கவனத்தை வேண்டி நிற்கின்றது. இலங்கையின் பெண்கள் தொழிற்படை பங்கேற்பு

1

வீதத்தை 1953இன் 19 சதவீதமளவிலிருந்து 1990வரை 36 சதவீதமாக இரட்டிப்படையச் செய்வதற்கு சுமார் நான்கு தசாப்தங்கள் இலங்கைக்கு தேவைப்பட்டது. அன்றிலிருந்து, பெண்கள் தொழிற்படை பங்கேற்பு வீதம் 33 சதவீத சாராசரியை மாத்திரம் கொண்டுள்ளதுடன் அண்மைய காலங்களில் வீழ்ச்சியடைகின்ற போக்கொன்றையும் காண்பித்துள்ளது. இலங்கையானது தெற்காசியவின் சராசரியான 24 சதவீதத்தை விட முன்னோடியாக காணப்பட்ட போதும், அதன் தொழிற்படை பங்கேற்பில் பெண்களுக்கான சதவீதம் என்பது 'உயர் நடுத்தர வருமான' நாட்டின் 55 சதவீத சராசரியை விக் குறைவாகவே காணப்படுகின்றது. பொருளாதாரமானது துரிதமாக முதிர்ச்சியடைகின்ற குடித்தொகை, தொழிலாளர் உற்பத்தித் திறன் பிரச்சனைகள் மற்றும் விசேடமாக தேர்ச்சிபெற்ற மற்றும் பகுதியளவாக தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் ஆகியவர்களின் அதிகரிக்கின்ற புலம்பெயர்வு போன்ற விடயங்களுடன் போராடிக்கொண்டிருக்கின்றமையால், பெண்கள் தொழிற்படை பங்கேற்பின் தொடர்ச்சியான மந்தமடைந்த நிலையானது பொருளாதாரத்தில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய கொள்கைப் பிரச்சனையாக காணப்படுகின்றது. கடந்த ஏழு தசாப்தங்களாக அடுத்தடுத்துவந்த அரசாங்கங்கள் கல்வி மற்றும் நலத் துறைகளில் மேற்கொண்ட கணிசமானளவிலான முதலீடுகளுக்கான உரிய பரிசீலனையுடன் பெண்களைத் தொழிலாளர் படையினுள் கொண்டுவருவதன் மூலம் தொழிலாளர் படையில் விரிவாக்கமொன்றினை உருவாக்குதலானது நாட்டின் வளர்ச்சிச் செயன்முறையில் குறிப்பிடத்தக்க நேர்க்கணியத் தாக்கங்களை ஏற்படுத்த முடியுமாயுள்ள வேளையில் வரையறுக்கப்பட்ட இறை இடைவெளிக்கு மத்தியில் அத்தகைய முதலீடுகளின் விளைதிறனையும் நிச்சயப்படுத்தும். இது தொடர்பிலான முயற்சிகள் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெண்கள் 'கண்ணியமான வேலைகளைப்'[4] பெறுவதை நிச்சயப்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக எழுந்த விளைவுகள், பெண்கள் பணிகள் மற்றும் வேளாண்மைத் துறைகள் போன்ற பாதிக்கப்படக்கூடிய தொழில்களில் ஈடுபட்டிருத்தல் அநேகமாகக் குறையூதியம் செலுத்தப்பட்டிருக்க அல்லது சாதகம் குன்றிய தொழில் நியதிகளின் கீழ் ஈடுபட்டிருக்கக்கூடும் என்பதனால் பெண்களின் சமூக பொருளாதார பாதிப்படையக்கூடிய தன்மையில் அதிகரிப்பினை ஏற்படுத்தியமையானது பெண்களை 'கண்ணியமான வேலையில்' ஈடுபடுத்துவதற்கான தேவையினை எடுத்துக்காட்டியுள்ளது. நீண்டகாலமாக, பெண்களின் 'மும்மடங்கு சுமைகளை' தணிப்பது தொடர்பில் கவனம்செலுத்தப்படும் கொள்கைகளின் ஊடாக பெண்களின் தொழிற்படை பங்கேற்பை அதிகரித்தலானது இலங்கையைப் பொறுத்தவரையில் குறைவாக காணப்படுகின்றது என்ற ஒருமித்த அபிப்பிராயம் காணப்படுகின்றது. இது, செலவிடக்கூடியதும் ஒழுங்குப்படுத்தப்பட்டதுமான குழந்தைப் பராமரிப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு வசதிகளை பெறுவதில் உள்ள பற்றாக்குறை, நெகிழ்வான பணி ஏற்பாடுகளின்மை, நம்பகமான மற்றும் பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து முறைகளின்மை போன்றனவற்றிலிருந்து தெளிவாகின்றது. பன்னாட்டு அனுபவங்களில் பெண்கள் தொழிற்படை பங்கேற்பை மேம்படுத்துவதற்கு இவை இன்றியமையாதவை என எடுத்துக்காட்டப்படுகின்றது. இத்தகைய உட்கட்டமைப்பை விருத்திசெய்தலானது தொழிற்படைக்குள் பெண்களை சிறந்த முறையில் உள்வாங்குவதற்கு வழிவகுக்கலாம் என்பதுடன் பொருளாதாரத்தின் உற்பத்தி வளத் தளத்தின் அதிகரிப்பின் மூலமாக ஒட்டுமொத்த நலனோன்புகையிலுமான அதிகரிப்பொன்றுக்கு இட்டுச்செல்லும். நடுத்தர காலப்பகுதிகளில், உயர்ந்தளவிலான வீட்டுத்துறையினரின் வருமானங்கள் எதிர்கால சந்ததியினருக்கான மேம்பட்ட கல்வி மற்றும் ஆரோக்கியமான பெறுபேறுகளுக்கு வழிவகுக்கலாம் என்பதுடன் இதன்மூலம் தொழிற்படையின் உற்பத்தித்திறனில் சீரான முன்னேற்றத்திற்கு பங்களிக்கும். இதற்கமைவாக, வலுவான பன்முகத்தன்மை மற்றும் பாலின உணர்திறன் முறைக்குட்படுத்துவதை ஆதரிக்கின்ற இலக்கிடப்பட்டதும் முழுமையானதுமான மற்றும் பல்துறையிலான கொள்கை முன்னெடுப்பை உருவாக்குவது இன்றியமையாததாக விளங்குகின்றது.

இந்த பின்னணியில், முன்னோக்கிச் செல்லுகையில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை எய்துவதற்கும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை பேணுவதற்கு அமைப்பியல் ரீதியான சிக்கல்களை தீர்ப்பதுடன் எதிர்வரவுள்ள பாரதூரமான பொருளாதர விளைவுகளை முறியடிப்பதற்கும் ஓர் அவசரத்தன்மையுடன் பொருளாதாரத்தை நிலைத்திருக்கச் செய்வதற்கு அரச மற்றம் சகல ஆர்வலர்களினதும் ஒப்பிய முயற்சிகள் உடனடியான முன்னுரிமையான விடயமாகும். துணிச்சலான மற்றும் மேலும் நன்றாக ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கைச் சீர்திருத்தங்களை நடைமுறைபடுத்துவதற்கு எப்போதுமில்லாத வாய்ப்புக்களை கொவிட்-19 நோய்த்தொற்று ஏற்படுத்தியவேளையில் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்டு ஓர் பொருளாதார சீர்திருத்த செயற்றிட்டம் போன்ற ஓர் வெளிவாரியான நிறுவன ஆதரவுடன், புதிய கண்டறியப்படாத சவால்களை ஆராய்ந்து இவ்வகையிலான சவால்களை ஒருமித்த முயற்சிகள் மூலம் தாமதமின்றித் தீர்ப்பது இந்த தருணத்தில் அவசியமாகும். இதன் மூலம் ஓர் திடமான பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சித் தோற்றப்பாட்டிற்கு பொருளாதாரத்திற்கு தெளிவான மற்றும் பரந்த அடிப்படையிலான நன்மைகளை பெறுவதுடன் இது பெருமளவில் பொதுமக்களின் எதிர்பார்க்கைகளை பூர்த்திசெய்வதனையும் உறுதிப்படுத்தும்.

4 பன்னாட்டு தொழிலாளர் அமைப்பானது கண்ணியமான தொழில் என்பதை 'சுதந்திரம், ஒப்புறவு, பாதுகாப்பு மற்றும் மனித கண்ணியம் கொண்ட நிலைமைகளில் பெண்களுக்கும் ஆண்களுக்குமான உற்பத்தித்திறன் மிக்கத் தொழில்' என வரைவிலக்கணப்படுத்தியுள்ளது.

2

தேசிய உற்பத்தி, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை

2.1 பொதுநோக்கு

இலங்கைப் பொருளாதாரமானது கொவிட்-19 புதிய திரிபுகளிலிருந்து ஏற்பட்ட புதிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கடுமையான நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட 2020இன் 3.6 சதவீத வீழ்ச்சியிலிருந்து மீண்டு, 2021இல் 3.7 சதவீதத்தினால் மீளெழுச்சிபெற்றது. அதிகரித்த கேள்வி மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட இடையூறுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டதன் மூலம் உந்தப்பட்டும், 2020இல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க சுருக்கத்திலிருந்து ஏற்பட்ட சாதகமான தளத் தாக்கத்தினால் துணையளிக்கப்பட்டும் அனைத்து முன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் அதாவது வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் இம்மீட்சியை அவதானிக்கப்படக் கூடியதாகவிருந்தது. எவ்வாறிருப்பினும், வேகமாகத் தொற்றக்கூடிய டெல்டா திரிபின் விரைவான பரவல் இம்மீட்சியினை குறிப்பாக, ஆண்டின் மூன்றாவது காலாண்டுப் பகுதியில் இடர்நேர்வுக்குள்ளாக்கி பணிகள் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளை வெகுவாகப் பாதித்தது. புத்தாக்கம்பெற்ற இத்திடீர் எழுச்சியை முறியடிக்கப் போராடிய அதேவேளை, கொள்கைசார்ந்த தூண்டல்களுடனும் நாடளாவிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்துடனும் ஒன்றிணைந்து நடமாட்டக் கட்டுப்பாடுகள் மீது கவனம் செலுத்தப்பட்டமை, ஆண்டின் பிந்திய பகுதியினை நோக்கி சாதாரண நிலைமையைத் தழுவிக்கொள்வதற்கு ஊக்குவித்ததுடன் பொருளாதார நடவடிக்கைகளுக்கான அதிக வாய்ப்பினையும் வழங்கியது. புதிய இயல்புக்கு விரைவாக மாறியமைக்கு மத்தியில் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் பல தொழிற்சந்தைக் குறிகாட்டிகளும் மேம்பட்டன. இருந்தும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மீண்டெழும் அலைகளின் திசைமாறிய தாக்கங்களின் காரணமாக தொழிலாளர் சந்தை 2019இன் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முந்திய மட்டங்களை எட்டியிருக்கவில்லை. அதற்கமைய, விசேடமாக பணிகள் மற்றும் வேளாண்மைத் துறைகளில் உள்ள தொழில்புரியும் குடித்தொகையும் தொழிற்படையும் மேம்பட்ட அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்தது. இப்பின்னணியுடன் நிதியியல் பணிகள் அத்துடன் மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் விரிவடைதலினால் தூண்டப்பட்டு பணிகள் நடவடிக்கைகள் வளர்ச்சிப்பாதைக்கு நுழைந்தது. அதேவேளை, உள்நாட்டிலும் உலகளவிலும் அதிகரித்த கேள்வியுடன் தயாரிப்பு நடவடிக்கைகளில் கணிசமான மீளெழுச்சி கைத்தொழில் நடவடிக்கைகளை இயக்குவதற்கான செயலூக்கங்களை வழங்கியது. அதேநேரம், வேளாண்மை நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த விரிவடைதல் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நிலவிய வழங்கல் பக்க முட்டுக்கட்டைகளினால் சில வேளாண்மை மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. பண்ணைத் தொழிற்பாடுகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் மற்றும் விவசாய இரசாயனங்களின் நிரம்பல் பற்றாக்குறை நிலவிய சாதகமான வானிலைக்கு மத்தியிலும் ஆண்டின் பிந்திய பகுதியினை நோக்கி வேளாண்மை பயிர்களில் விளைச்சல் குறைவடைவதற்கு வழிவகுத்தது. மேலும், உச்சத்தை எட்டுகின்ற மூலப்பொருள் விலைகள் மற்றும் கப்பலேற்றங்களில் தாமதங்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையுடன் இணைந்து வழங்கல் சங்கிலியினை இறுகச்செய்து, இதனூடாக உற்பத்தித் திட்டங்களை இடையூறுக்குள்ளாக்கின என வியாபாரம் பற்றிய கணக்கெடுப்புக்கள் வெளிப்படுத்தின. குறிப்பாக, முக்கிய பொருட்கள் போதாமை கட்டடவாக்க கைத்தொழிலின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை பெருமளவு தடைப்படுத்தியது. அதேவேளை, செலவின நோக்கில், நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பியதன் மூலம் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் இரண்டும் 2021இல் படிப்படியாக அதிகரித்தன. எனினும், இறக்குமதிகளில் திடீர் உயர்வு ஏற்றுமதிகளின் வளர்ச்சியினை விஞ்சிச்சென்றமையினால் தேறிய வெளிநாட்டுக் கேள்வி மேலும் சுருக்கமடைந்தது. அதேவேளை, முதலீட்டுச் செலவினத்தில் உயர்வான வளர்ச்சியினைப் பிரதான காரணமாகக் கொண்டு ஆண்டுகாலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி விரிவடைந்தது.

2

2.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி,[1] மொத்தத் தேசிய வருமானம் மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி

மொ.உ.உற்பத்தியானது 2020இல் பதிவாகிய உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2021 காலப்பகுதியில் நடப்புச் சந்தை விலைகள் (நடப்பு விலைகள்) மற்றும் நிலையான (2010) சந்தை விலைகள் (நிலையான விலைகள்) இரண்டிலும் வளர்ச்சியடைந்தது. அதற்கமைய, நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தி 2020இல் பதிவாகிய 3.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.9,881.4 பில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தி 2021இல் ரூ.16,809.3 பில்லியன் (ஐ.அ.டொலர் 84.5 பில்லியன்) 2020இல் மதிப்பிடப்பட்ட ரூ.15,027.4 பில்லியன் (ஐ.அ.டொலர் 81.0 பில்லியன்) உடன் ஒப்பிடுகையில் 11.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மொ.உ.உற்பத்தி நடப்பு விலைகளில் உயர் அதிகரிப்பை பதிவுசெய்தமை ஆண்டில் விலைமட்டங்கள் அதிகரித்தமையை வெளிப்படுத்தியது. அதற்கமைய, மொ.உ.உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கி 2020இல் பதிவாகிய 4.0 சதவீதத்திலிருந்து 2021இல் 7.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், மொ.உ.உற்பத்தியை உற்பத்தி, செலவினம் மற்றும் வருமான அணுகுமுறைகளில் மதிப்பிடுகிறது.

வரைபடம் 2.1
மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)
மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.1
நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)

பொருளாதார நடவடிக்கை	வளர்ச்சி (%)		வளர்ச்சிக்கான பங்களிப்பு (%)		மொ.உ.உ இன் சதவீதமாக (%)	
	2020 (இ)	2021	2020 (இ)	2021	2020 (இ)	2021
வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்	**- 2.2**	**2.0**	**- 0.2**	**0.1**	**7.1**	**6.9**
தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக)	44.8	9.7	0.05	0.02	0.2	0.2
அரிசியின் வளர்ச்சி	7.0	- 6.7	0.05	- 0.06	0.8	0.7
காய்கறிகளின் வளர்ச்சி	7.6	- 2.5	0.04	- 0.02	0.6	0.6
கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி	19.3	- 7.4	0.00	- 0.00	0.0	0.0
பழவகைகளின் வளர்ச்சி	6.2	- 7.8	0.04	- 0.05	0.7	0.6
எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு)	- 10.4	11.2	- 0.07	0.07	0.6	0.7
தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்)	- 7.1	7.4	- 0.05	0.05	0.6	0.7
ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை)	21.7	- 15.6	0.00	- 0.00	0.0	0.0
வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி	3.3	4.5	0.02	0.03	0.7	0.7
இறப்பரின் வளர்ச்சி	4.6	- 1.7	0.01	- 0.00	0.2	0.2
ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி	1.6	- 4.8	0.00	- 0.01	0.2	0.2
விலங்கு உற்பத்தி	- 2.8	9.7	- 0.02	0.06	0.7	0.7
தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள்	- 0.4	10.6	- 0.00	0.01	0.1	0.1
காடாக்கலும் குத்திகளும்	- 7.9	5.1	- 0.05	0.03	0.6	0.6
மீன்பிடித்தல்	- 16.6	1.4	- 0.19	0.01	1.0	1.0
கைத்தொழில்	**- 6.9**	**5.3**	**- 1.8**	**1.4**	**25.5**	**25.9**
சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்	- 12.5	2.8	- 0.29	0.06	2.1	2.1
தயாரிப்பு	- 3.9	7.2	- 0.60	1.11	15.5	16.1
மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்	- 1.6	6.1	- 0.02	0.07	1.1	1.1
நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்	4.8	4.3	0.01	0.01	0.2	0.2
சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள்	- 1.0	- 3.3	- 0.00	- 0.01	0.3	0.3
கட்டடவாக்கம்	- 13.2	1.9	- 0.91	0.12	6.2	6.1
பணிகள்	**- 1.6**	**3.0**	**- 0.9**	**1.7**	**58.7**	**58.3**
மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள்	- 5.0	1.3	- 1.16	0.30	22.6	22.1
தகவல் மற்றும் தொடர்பூட்டல்	13.7	17.0	0.10	0.15	0.9	1.0
நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள்	4.7	5.6	0.67	0.86	15.4	15.7
தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள்	- 5.9	1.2	- 0.67	0.13	11.1	10.9
பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள்	2.0	3.3	0.17	0.29	8.6	8.6
அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை	**- 3.2**	**3.5**	**- 2.9**	**3.2**	**91.2**	**91.1**
உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரிகள்	- 8.1	4.9	- 0.7	0.4	8.8	8.9
சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை	**- 3.6**	**3.7**	**- 3.6**	**3.7**	**100.0**	**100.0**
வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம்	8.3	9.3				
சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்	**- 3.5**	**4.0**				

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் - 2.2

தேசிய வெளியீடு, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை - 2021



உற்பத்தி அணுகுமுறை



பணிகள் 3.0% ↑
முக்கிய செலுத்தி: நிதியியல் பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கம்

கைத்தொழில் 5.3% ↑
முக்கிய செலுத்தி: தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம்

வேளாண்மை 2.0% ↑
முக்கிய செலுத்தி: எண்ணெய்ப்பசை கொண்ட பழவர்க்கங்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட விரிவாக்கம்

மானியங்களை கழித்த வரிகள் 4.9% ↑

செலவின அணுகுமுறை



தனியார் நுகர்வு 10.8% ↑
முக்கிய செலுத்தி: உணவு மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

அரசாங்க நுகர்வு 3.7% ↑
முக்கிய செலுத்தி: பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 23.2% ↑
முக்கிய செலுத்தி: மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

தேறிய ஏற்றுமதிகள் -31.6% ↓
முக்கிய செலுத்தி: உண்மைப் பெறுமதியில் இறக்குமதிகளின் அதிகரிப்பு

பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 23.3% ↑

பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் 25.7% ↑

வருமான அணுகுமுறை



ஊழியர்களின் நட்டஈடு 8.5% ↑

மொத்த தொழிற்பாட்டு மிகை 13.6% ↑

தேறிய தொழிற்பாட்டு மிகை 14.0% ↑

கலப்பு வருமானம் 11.9% ↑

நிலையான மூலதனத்தின் நுகர்வு 12.4% ↑

உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் 4.2% ↑

தொழிற்சந்தை குறிகாட்டிகள்



தொழிற்படை

8.467 மில். (2020)
8.553 மில். (2021)



பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலில்லாத குடித்தொகை

8.273 மில். (2020)
8.581 மில். (2021)



தொழிற்படை பங்கேற்பு வீதம்

50.6% (2020)
49.9% (2021)



தொழில்புரிவோர் குடித்தொகை

7.999 மில். (2020)
8.114 மில். (2021)



தொழிலின்மை வீதம்

5.5% (2020)
5.1% (2021)



வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கான புறப்பாடுகள்

53,711 (2020)
121,795 (2021)

2

உலகின் ஏனைய நாடுகளிலிருந்து தேறிய முதலாந்தர வருமானத்திற்கு மொ.உ.உற்பத்தியைச் சீராக்கம் செய்ததன் மூலம் மதிப்பிடப்படும் மொத்தத் தேசிய வருமானம், நடப்பு விலைகளில் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 0.3 சதவீதம் கொண்ட சிறிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் நடப்பு விலைகளில் 12.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தியில் அதிகரிப்பிற்கு மேல் தேறிய முதலாந்தர வருமானத்தின் மறைக்கணிய மீதியில் ஏற்பட்ட வீழ்ச்சி மொத்தத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சிக்கு பெருமளவு காரணமாக அமைந்தது.

தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2020இன் ரூ.685,587 (ஐ.அ.டொலர் 3,695) உடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.758,680 (ஐ.அ.டொலர் 3,815)ஆக அதிகரித்தது. ரூபா நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியின் பிரதான காரணமாக நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தி அதிகரித்திருந்த அதேவேளையில், ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியில் மெதுவான அதிகரிப்பிற்கு ஆண்டுச் சராசரி அடிப்படையில் ஐ.அ.டொலருக்கெதிராக உள்நாட்டு நாணயம் நலிவடைந்தமை காரணமாக அமைந்தது. அதேவேளையில், தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம், 2020இன் ரூ.666,285 (ஐ.அ.டொலர் 3,591) உடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.740,328 (ஐ.அ.டொலர் 3,722) ஆக மதிப்பிடப்பட்டது.

2.3 நிறுவனசார் துறைகளிலிருந்தான பங்களிப்பு

வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையிலிருந்து 2021இல் நடப்புச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதிக்கு தொடர்ந்தும் பாரியளவில் பங்களிப்புகள் கிடைத்தன. வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கு வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை பாரியளவு பங்களிப்பினை நிலைநிறுத்திய அதேவேளை, கைத்தொழில் நடவடிக்கைகளை நிதியல்லா நிறுவனங்கள் துறை ஆதிக்கம் செலுத்தியது. அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், பொருளாரத்தின் ஒட்டுமொத்தமாக சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதியின் 48.0 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை 2021இல் 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, நிதியல்லா நிறுவனங்கள் துறை, 15.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. பொது அரசாங்கம் மற்றும் நிதி நிறுவனங்கள் துறைகள் 2021இல் முறையே 5.4 சதவீதம் மற்றும் 19.0 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன.

2.4 உற்பத்தி, கொள்கைகள், நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் பிரச்சனைகள்

வேளாண்மை

தெங்கு மற்றும் கால்நடை உற்பத்தி நடவடிக்கைகளின் விரிவடைதலின் பிரதான காரணமாக வேளாண்மை நடவடிக்கைகள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து சேர்க்கப்பட்ட பெறுமதி நியதிகளில் 2021இல் 2.0 சதவீத விரிவடைதலினைப் பதிவுசெய்தன. மேலும், தேயிலை, வாசனைத்திரவியங்கள் பயிர்ச்செய்கை, காடாக்கல் மற்றும் மரம் அறுத்தல் அத்துடன் தானியப் பயிர்ச்செய்கை என்பனவும் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்து ஒட்டுமொத்த வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தன. அதேவேளை, மீன்பிடி நடவடிக்கைகளும் 2021இல் மிதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்து 2020இல் பதிவாகிய குறிப்பிடத்தக்க சுருக்கத்திலிருந்து மீண்டன. எனினும், நெல், பழங்கள், காய்கறிகள், ஏனைய நீண்டகாலப் பயிர்கள், இறப்பர் மற்றும் ஏனைய குடிபானப் பயிர் (கோப்பி, கொக்கோ போன்றன) பயிர்ச்செய்கையானது ஆண்டுகாலப்பகுதியில் சுருக்கமடைந்தது. வேளாண்மை நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் விரிவடைதலொன்றினைப் பதிவுசெய்த போதிலும், குறிப்பாக, ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில்

வரைபடம் 2.3
2021இல் நிறுவனத்துறையினரின் மொத்த பெறுமதி சேர்ப்பின் பங்குச் சதவீதம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.4
வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2021 (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொடர்புடைய ஊட்டச்சத்துகள் மற்றும் விவசாய இரசாயனங்கள் போதாமை அப்பயிர்கள் அவற்றின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலையும் அடைவதிலிருந்து அவற்றைத் தடைப்படுத்தியது.

வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் வெளியீட்டினை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்[2] 2021இல் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணானது நெல், தேயிலை, தெங்கு, விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி உள்ளடங்கலாக அநேகமான துணைத் துறைகளின் வளர்ச்சியினால் தூண்டப்பட்டு 2020இன் 2.7 சதவீத அதிகரிப்பை விட ஆண்டுகாலப்பகுதியில் 3.0 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இறப்பர் துணைத் துறைச் சுட்டெண்ணானது சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது.

2 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் காடாக்கல் மற்றம் மரம் அறுத்தல் துறையினை உள்ளடக்கவில்லை.

அட்டவணை 2.2
வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100)

விடயம்	2020 (அ)	2021 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2019/20 (அ)	2020/21 (ஆ)
வேளாண்மை மற்றும் மீன்பிடி	129.4	133.3	2.7	3.0
1 வேளாண்மை	129.6	133.8	7.3	3.2
1.1 வேளாண்மை பயிர்கள்	123.7	126.9	9.2	2.5
நெல்	136.9	137.7	11.5	0.6
தேயிலை	89.5	96.1	-7.1	7.4
இறப்பர்	58.3	57.3	4.6	-1.7
தெங்கு	98.6	110.1	-9.5	11.7
ஏனைய பயிர்கள்	167.1	166.9	22.6	-0.1
இதில், மரக்கறிகள்	142.7	141.4	16.0	-0.9
பழங்கள்	199.6	169.3	33.0	-15.2
ஏனைய களப்பயிர்கள்	141.1	165.5	18.6	17.3
1.2 கால்நடை வளர்ப்பு	176.4	188.7	-2.3	7.0
2 மீன்பிடி	128.5	130.7	-15.2	1.7

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நெல்

2021 சிறுபோகக் காலப்பகுதியின் அபரிமிதமான அறுவடையுடன் 2021இல் நெல் உயர்வான உற்பத்தி அளவினைப் பதிவுசெய்தது. உகந்த வானிலை நிலைமைகள் மற்றும் அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்த உற்பத்திக்குப் பங்களித்தன. அதற்கமைய, மொத்த நெல் உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அறுவடையில் சிறிதளவு அதிகரிப்புடன் 2021இல் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் அபரிமிதமான அறுவடையினைப் பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில் மொத்த நெல் உற்பத்தியானது 5.1 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு ஆண்டுக்காண்டு அடிப்படையில் 0.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக, 2020/2021 பெரும்போக உற்பத்தியின் 4.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியானது 2021 சிறுபோக உற்பத்தியில் பதிவாகிய 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியினால் பாரியளவு எதிரீடு செய்யப்பட்டது. அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு, 2020/2021 பெரும்போகத்திலும் 2021 சிறுபோகத்திலும் முறையே 681,521 ஹெக்டயர்களுக்கு 2.8 சதவீதத்தினாலும் 445,084 ஹெக்டயர்களுக்கு 10.3 சதவீதத்தினாலும் விரிவடைந்து, 2020இல் அறுவடை செய்யப்பட்ட மொத்த தேறிய பரப்பை விட 5.6 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த அதிகரிப்பை பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தியில் ஏற்பட்ட ஒட்டுமொத்த மேம்படுத்தலுக்கு மத்தியில், 2020இன் தொடர்புடைய காலப்பகுதியனைவிட 2020/2021 பெரும்போக மற்றும் 2021 சிறுபோகக் காலப்பகுதியில் ஹெக்டயர் ஒன்றிற்கான நெல் விளைச்சல் முறையே ஹெக்கேடயர் ஒன்றிற்கு 4,492 கிலோகிராம்களுக்கு 6.8 சதவீதத்தினாலும் ஹெக்டயர் ஒன்றிற்கு 4,692 கிலோகிராம்களுக்கு 1.6 சதவீதத்தினாலும் குறைவடைந்து, வளமாக்கி மற்றும் ஏனைய இரசாயனங்கள் உள்ளடங்கலாக உள்ளீடுகளினது வழங்கல் போதுமாந்தன்மை மற்றும் மோசமான மண் மற்றும் பயிர் முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய கரிசனைகளை ஏறபடுத்தியது. பெரும்போகம் மற்றம் சிறுபோகம் இரண்டிலுமிருந்தான மொத்த நெல் உற்பத்தி 3.3 மில்லியன் மெற்றிக் தொன் அரிசிக்குச் சமமாகவிருந்ததுடன், இது ஏறத்தாழ 17 மாதங்களுக்கு[3] அரிசிக்கான உள்நாட்டுக் கேள்வியினை நிறைவு செய்வதற்குப் போதுமானதாகவிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. போதுமான உற்பத்திக்கு மத்தியிலும், அரிசி இறக்குமதிகள் 2020இன் 15,770 மெற்றிக் தொன்னிலிருந்து 2021இல் 147,091 மெற்றிக் தொன்களுக்கு குறிப்பிடத்தக்களவான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. இதில், ஏறத்தாழ 134,716 மெற்றிக் தொன்களைக் கொண்ட அரிசி 2021 நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டுச் சந்தையில் அவதானிக்கபட்ட அரிசி விலைகளில் மேல்நோக்கிய

3 வீட்டுத்துறையினரின் அரிசிக்கான கேள்வியானது இந்நோக்கத்திற்கான பிந்திய தரவுகளை வழங்குகின்ற வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2016 அடிப்படையிலான வீட்டுத்துறையினரின் சராசரி அரிசி நுகர்வு மற்றும் 2021இன் நடுவாண்டுக் குடித்தொகை என்பனவற்றினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகிறது.

அட்டவணை 2.3
நெல்த்துறை புள்ளிவிபரங்கள்

விடயம்	அலகு	2020 (அ)			2021 (ஆ)		
		பெரும்போகம்	சிறுபோகம்	மொத்தம்	பெரும்போகம்	சிறுபோகம்	மொத்தம்
விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	752	456	1,208	770	501	1,272
அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	740	451	1,191	762	497	1,259
அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	663	403	1,066	682	445	1,127
உற்பத்தி	'000 மெற்றிக்தொன்	3,197	1,924	5,121	3,061	2,088	5,150
	'000 புசல்கள்	153,188	92,206	245,395	146,702	100,067	246,769
எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சல் (இ)	கி.கி./ எக்டேயர்	4,821	4,770	4,802	4,492	4,692	4,571
வழங்கப்பட்ட கொடுகடன்	ரூ.மில்	5,605	4,096	9,701	8,603	4,449	13,052
அரிசி இறக்குமதிகள் (ஈ)	'000 மெற்றிக்தொன்	வி.கி	வி.கி	16	வி.கி	வி.கி	147
இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு சமனான நெல் (ஈ)	'000 மெற்றிக்தொன்	வி.கி	வி.கி	23	வி.கி	வி.கி	216

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலானது உற்பத்தியை தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டது
(ஈ) ஆண்டுக்கான பெறுமதி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

தளம்பல்களை நிலைநிறுத்தும் நோக்குடனும் போதியளவு கையிருப்பு பேணப்படுகின்றது என்பதனை உறுதிசெய்யும் நோக்கிலும் இறக்குமதி செய்யப்பட்டது.

போதுமான நெல் உற்பத்திக்கும் உயர்வான அரிசி இறக்குமதிகளுக்கும் மத்தியில் நெல்லின் மற்றும் அரிசி வகைகளின் விலைகள் ஆண்டு முழுவதும் குறிப்பிடத்தக்களவு உயர்வாகவே காணப்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் *சம்பா* நெல்லின் சராசரி விலை கிலோகிராமொன்றிற்கு ரூ.65.32 இனை எய்தி, 29.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, 2021இல் *நாடு* நெல் வகையின் சராசரி விலை கிலோகிராமொன்றிற்கு ரூ.57.61 ஆக 20.7 சதவீதத்தினால் அதிகரித்தது. வேளாண்மையாளர்களுக்கு நியாயமான விலைகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு அரசாங்கம் அதன் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தினை நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைமையில் தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதற்கமைய, 2021 மார்ச்சு தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நெல் சந்தைப்படுத்தும் சபை அனைத்து நெல் வகைகளுக்கும் கிலோகிராமொன்றிற்கு ரூ.56.50 விலையில் நெல்லைக் கொள்வனவு செய்தது. இது, பின்னர் *நாடு* கிலோகிராமொன்றிற்கு ரூ.50.00, *சம்பா* கிலோகிராமொன்றிற்கு ரூ.52.00 மற்றும் *கீரி சம்பா* கிலோகிராமொன்றிற்கு ரூ.55.00 என்ற ரீதியில் 2021 யூலையில் திருத்தம் செய்யப்பட்டது. மேலும், 2021 செத்தெம்பரில் *நாடு* வகைக்கான உத்தரவாத விலை கிலோகிராமொன்றிக்கு ரூ.55.00 ஆக மேலும் அதிகரிக்கப்பட்டது. நெல் சந்தைப்படுத்தல் சபையானது 2020/2021 பெரும்போகத்திலிருந்து ஏறத்தாழ 44,948 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவுசெய்த அதேவேளை, 2021 சிறுபோகக் காலப்பகுதியில் ஏறத்தாழ 7,728 மெற்றிக் தொன்களைக் கொள்வனவு செய்தது. மேலும், நெல் வேளாண்மையாளர்களுக்கு 2021/2022 பெரும்போகத்திற்கான நெல் கொள்வனவில் போட்டிமிக்க விலைகளை வழங்கும் நோக்குடன் *நாடு* வகைக்கு கிலோகிராமொன்றிற்கு ரூ.90.00, *சம்பா* கிலோகிராமொன்றிற்கு ரூ.92.00 மற்றும் *கீரி சம்பா* கிலோகிராமொன்றிற்கு ரூ.95.00 என்ற விலைகளில் கொள்வனவு செய்வதற்குரிய அனுமதி 2022 பெப்புருவரியில் வழங்கப்பட்டது. 2021/2022 பெரும்போகக் காலப்பகுதியில் ஏறத்தாழ 300,000 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வது நெல் சந்தைப்படுத்தல் சபையின் எதிர்பார்ப்பாக இருந்ததுடன் 2022 மார்ச்சு நடுப்பகுதியளவில் ஏறத்தாழ 70,000 மெற்றிக் தொன்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், களஞ்சிய வசதிகள், உலர்த்துதல் மற்றும் போக்குவரத்து வசதிகள் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளின் பற்றாக்குறை காரணமாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் வினைத்திறன் தடைப்பட்டமையினால் திறந்த சந்தையில் தனியார் ஆலை உரிமையாளர்கள் போட்டிமிக்க சந்தை விலைகளில் கணிசமான நெல் தொகையினைக் கொள்வனவு செய்ய இயலுமாகவிருந்தனர். சராசரியாக, *சம்பா* அரிசியின் சில்லறை விலை கிலோகிராமொன்றிற்கு ரூ.136.52 ஆகவிருந்ததுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 30.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பாக காணப்பட்டது. அதேவேளை, *நாட்டரிசியின்* சராசரி சில்லறை விலை முன்னைய ஆண்டில்

வரைபடம் 2.5
அரிசி : நிரம்பல் மற்றும் கேள்வி



மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

அறிக்கையிடப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ரூ.100.01 உடன் ஒப்பிடுகையில் 2021இல் கிலோகிராமொன்றிற்கு ரூ.116.56ஆக இருந்தது. உயர்வான விலைத் தளம்பல்கள் மற்றும் இத் தளம்பல்களினால் வாடிக்கையாளர்கள் பாதிப்படைவதைத் தடுக்கும் நோக்குடனும் *சம்பா* அரிசி கிலோகிராமொன்றிற்கு ரூ.103.00 மற்றும் *நாட்டரிசி* கிலோகிராமொன்றிற்கு ரூ.98.00 ஆக உயர்ந்தபட்ச சில்லறை விலையினை நிர்ணயித்து 2021 செத்தெம்பர் 02இல் வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டது. இருப்பினும், 2021 செத்தெம்பர் இறுதியில் இவ் வர்த்தமானி இரத்துச்செய்யப்பட்டு மேலதிக விலை உயர்விற்கு வழிவகுத்தது. அதேவேளை, சந்தையில் போதுமான மற்றும் தொடர்ச்சியான நிரம்பலை உறுதிசெய்யும் நோக்குடன், இறக்குமதி செய்யப்பட்ட *சம்பா, நாடு* மற்றும் *பச்சை* அரிசி மீதான விசேட பண்ட வரி 2021 ஒத்தோபரிலிருந்து 2022 யூன் வரையான காலப்பகுதிக்கு கிலோகிராமொன்றிற்கு ரூ.65.00 இலிருந்து ரூ.0.25இற்கு கணிசமானளவு குறைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பிற்கு இசைவாக நிலைபேறான விதத்தில் வேளாண்மைத் துறை உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கான பல்வேறு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன. வேளாண்மை இரசாயனங்களின் மிதமிஞ்சிய பயன்பாட்டின் பாதகமான விளைவுகளை உரியவாறு கரிசனையிற்கொண்டு, இரசாயன வளமாக்கிகள், பீடைநாசினிகள் மற்றும் களைநாசினிகள் இறக்குமதி மீது 2021 மேயில் தடைவிதிக்கப்பட்டது. இந்நோக்கில், நிலைபெறத்தக்க வேளாண்மை நடைமுறைகளை துரிதமாகப் பின்பற்றுவதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, உற்பத்தி வேகம் குறைவடைந்து காணப்பட்ட உள்நாட்டு சேதன வளமாக்கி உற்பத்தியும் ஊக்குவிக்கப்பட்டது. எனினும், இத் துரித கொள்கை முன்னெடுப்பானது அசேதன மற்றும் சேதன வளமாக்கிகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் கிடைக்கப்பெறுவதற்கு வழிவகுத்து நெற் பயிர்ச்செய்கையில் பாரிய விளைச்சல் இழப்புகள் பற்றிய கரிசனைகளைத் தோற்றுவித்து நெல் விலை உயர்விற்கு காரணமாக அமைந்தது. எனவே, நெற் பயிர்ச்செய்கைக்கான இயற்கை சேதனப் பசளை, சேர்வையாக்கப்பட்ட கனியங்கள் மற்றும் நுண்போசனைகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன. 2022 சிறுபோகக் காலப்பகுதியில் நெற் பயிர்ச்செய்கைக்காக பொட்டாசியம் மியூறியேற் (MOP) இறக்குமதி செய்வதற்கும் அரசாங்கம் திட்டமிட்டது. சேதன வேளாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கான மற்றுமொரு முயற்சியாக 2021/2022 பெரும்போகத்தில் தமது சொந்த நெற் பயிர்ச்செய்கைக்காக சேதன வளமாக்கிகளைப் பயன்படுத்துகின்ற வேளாண்மையாளர்களுக்கு ஒரு ஹெக்டயர் என்ற உயர்ந்தபட்ச உச்ச வரம்பில் ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.12,500 கொண்ட ஊக்குவிப்பினை வழங்கியிருந்தது. மேலும், நெல் வயல்களில் மண் போசனைப் பற்றாக்குறைகளைத் தீர்க்கும் பொருட்டு 2021/2022 பெரும் போகத்திற்காக மானியங்களாக சேதன மற்றும் உயிரியல் வளமாக்கிகள் வழங்கப்பட்ட அதேவேளை, அவர்களின் பயன்பாட்டிற்கென சொந்தமாக கூட்டுப்பசளையினை உற்பத்தி செய்வதற்கும் வேளாண்மையாளர்களுக்கு உதவியளிக்கப்பட்டது. இந்நோக்கில், கூட்டு வளமாக்கியின் தரத்தினை உறுதிசெய்வதற்கு ஆய்வுகூட வசதிகளும் கிடைக்கச்செய்யப்பட்டன. சிறப்பாக செயலாற்றுகின்ற இனங்களைத் தெரிவுசெய்வதற்கு 10 பிரபல்யமான இனங்களையும் 4 மரபுசார்ந்த இனங்களையும் இணைத்து சேதனப் பயிர்ச்செய்கைக்கான நெல் இன பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. *பயிர் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ், புதிய கலப்பினங்களை உருவாக்கி இனப்பெருக்க வகைகளை மதிப்பிடுதலும் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை நிலப்பண்படுத்தலில் தொடங்கி அறுவடை வரை ஒட்டுமொத்த பயிர்ச்செய்கைச் செயன்முறைக் காலப் பகுதியிலும் பொருத்தமான வேளாண்மைத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் *நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் செயற்றிட்டம்* தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

தேயிலை

தேயிலை உற்பத்தியானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியில் கொவிட்-19 நோய்த் தொற்றின் மூலம் தூண்டப்பட்ட தாழ்ந்த தளத்தாக்கத்தின் காரணமாக ஆண்டின் முதலரைக் காலப்பகுதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவடைதலினால் தூண்டப்பட்டு 2021இல் ஒட்டுமொத்தமாக 7.4 சதவீத வளர்ச்சியினை பதிவுசெய்தது. ஆண்டின் முதலரைப்பகுதியில் பதிவாகிய 24.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தொடர்ந்து, நவெம்பர் மற்றும் திசெம்பர் மாத காலப்பகுதியில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகளால் பெருமளவில் தூண்டப்பட்டு ஆண்டின் பிந்திய அரைப்பகுதியில் தேயிலை உற்பத்தியில் 7.2 சதவீதம் கொண்ட சடுதியான சுருக்கமொன்றை பதிவுசெய்தது. மொத்த தேயிலை உற்பத்தியில் முறையே ஏறத்தாழ 22 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் 61 சதவீதத்திற்கும் வகைகூறும் உயர்நில, மத்தியநில மற்றும் தாழ்நில வளர் தேயிலை உற்பத்தி 2021இல் முறையே 5.0 சதவீதத்தினாலும் 9.1 சதவீதத்தினாலும் 7.8 சதவீதத்தினாலும் விரிவடைந்தன. அதேவேளை, சிறு உடமையாளர் துறையின் சராசரி விளைச்சல் 2020இல் அறிக்கையிடப்பட்ட ஹெக்டயர் ஒன்றிற்கு 1,766 கிலோகிராம்களுடன் ஒப்பிடுகையில் ஹெக்டயர் ஒன்றிற்கு 1,880 கிலோகிராம்களுக்கு அதிகரித்ததுடன் பாரிய பெருந்தோட்டத் துறையின் சராசரி விளைச்சலுக்கு மேலாக காணப்பட்டது.

கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலை விலைகள் தொற்றுநோய்க்கு முந்திய மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2021இல் உயர்வடைந்து காணப்பட்டதாயினும், 2020இல் அவதானிக்கப்பட்ட மட்டங்களை விட கீழேயே காணப்பட்டன. சராசரி தேயிலை விலையானது 2020இல் பதிவாகிய கிலோகிராமொன்றுக்கு ரூ.633.85 இலிருந்து ஆண்டு காலப்பகுதியில் கிலோகிராமொன்றிற்கு ரூ.619.15 இற்கு 2.3

சதவீதத்தினால் குறைவடைந்தது. அதற்கமைய, 2021ஆம் ஆண்டில் தாழ்நில மற்றும் மத்தியநில வளர் தேயிலை சராசரி விலைகள் ஆண்டிற்கு ஆண்டு முறையே 1.0 சதவீதத்தினாலும் 3.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்த அதேவேளை, உயர்நில வளர் தேயிலை 0.6 சதவீதம் கொண்ட சிறிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், தேயிலைக் கொழுந்துகளுக்காக சிறு உடமையாளர்களுக்குக் கிடைக்கப்பெற்ற சராசரி விலை 2020இன் கிலோகிராமொன்றிற்கு ரூ. 94.36 இலிருந்து ஆண்டு காலப்பகுதியில் கிலோகிராமொன்றிற்கு 93.67ஆக வீழ்ச்சியடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை (கப்பல் ஏற்றல் பெறுமதி) ரூபா நியதிகளில் கிலோகிராமொன்றிற்கு ரூ.920.76 ஆக 6.2 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும், தேயிலையின் கப்பல் ஏற்றல் பெறுமதி ஐ.அ.டொலர் நியதிகளில் 2021 ஆண்டு காலப்பகுதியில் 0.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் சராசரி தேயிலை விலைகள் குறைவடைந்தமை தேயிலை உற்பத்தியில் அதிகரிப்பிற்கும் அதேபோன்று ஆண்டு காலப்பகுதியில் ஏலத்திற்கு விநியோகிக்கப்பட்ட அளவில் அதிகரிப்பிற்கும் பகுதியளவு காரணமாக அமைந்தன. மேலும், கப்பலில் அனுப்பும் செலவுகள் அத்துடன் பொதிசெய்யும் பொருட்கள் போன்ற ஏனைய உள்ளீட்டு செலவுகளில் சடுதியான அதிகரிப்புக்களும் ஆண்டு காலப்பகுதியில் விலைகள் மீது பாதகமான தாக்கத்தைச் செலுத்தின.

தேயிலை தொழில் துறையினை வலுப்படுத்துவதற்கு 2021இல் அரசாங்கத்தினால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் தேயிலைத் துறைக்கான ஐந்து ஆண்டு உபாயம் மற்றும் நடவடிக்கைத் திட்டம் (2021-2025) ஆண்டுகாலப்பகுதியில் திட்டமிடப்பட்டவாறு இறுதிப்படுத்தப்பட்டு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2020இல் கொவிட்-19 நோய்த்தொற்றுக் காலப்பகுதியின் போது தொடங்கப்பட்ட தேயிலை வர்த்தகத்திற்கான முக்கிய படிக்கல்லாகவிருந்த இலத்திரனியல் - ஏல முறைமை தொடர்ந்தும் வெற்றிகரமாகத் தொழிற்பட்டதுடன் 2021இல் வலுப்படுத்தப்பட்ட வர்த்தகப்படுத்தல் மற்றும் தரவு அம்சங்களுடன் *'ஸ்மாட்ஒக்ஸன்'* ஆகத் தரமுயர்த்தப்பட்டது. தேயிலை நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான மீள்நடுகை, புதிய நடுகை மற்றும் நிரப்பு நடுகை உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேயிலை பயிரிடப்படும் பிராந்தியங்களுக்கிடையில் 263 ஹெக்டயர்களுக்காக இலங்கை தேயிலைச் சபை ரூ.79.8 மில்லியனைப் பகிர்ந்தளித்தது. இலங்கைத் தேயிலைச் சபை, நடுத்தரளவிலான தேயிலைத் தோட்டங்களுக்கான மாதிரித் தேயிலைத் தோட்டச் செயற்றிட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை, 17 காணிகளுக்காக ரூ.2.3 மில்லியனை வழங்கியதுடன் 138 தேயிலை நாற்றுமேடைகளை நிறுவுவதற்கு எதிர்பார்க்கின்றது. இதில், 113 நாற்றுமேடைகள் ஆண்டின் இறுதியில் தாபிக்கப்பட்டிருந்தன. தூய இலங்கைத் தேயிலை ஏற்றுமதிக்கான வர்த்தக நாம ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தகைமைபெற்றுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு மானியம் வழங்குவதற்கு இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நிலையத்திலிருந்து ரூ.1 பில்லியன் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. இலங்கைக்கேயுரிய உற்பத்தியின் தரத்தினையும் தனித்துவமான பண்பினையும் இனங்காண்பதற்கு உதவக்கூடிய இலங்கைத் தேயிலைக்கான புவியியல்சார்ந்த குறிகாட்டிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதியியில் மற்றும் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு யூரோ 1 மில்லியன் பெறுமதியுடைய முத்தரப்பு உடன்படிக்கையொன்று இலங்கை தேயிலைச் சபையினால் கைச்சாத்திடப்பட்டது. தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையானது தேயிலை மீள்நடுகை மற்றும் புதிய நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் அத்துடன் பயிர் செழிப்பாக்கல் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன தொடர்பிலான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. 2021இல் ஏறத்தாழ 849 ஹெக்டயர் தேயிலைக் காணிகள் மீள்நடுகை செய்யப்பட்டதோடு ஏறத்தாழ 678 ஹெக்டயர் புதிய காணிகள் தேயிலைக் காணிகளாக மாற்றம்செய்யப்பட்ட அதேவேளை, தேயிலைக் காணிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான 3.3 மில்லியன் தேயிலைக் கன்றுகள் பயன்படுத்தப்பட்டன. ஐந்து வருடங்களின் பின்னர் ஏற்படும் இடைவெளிகளுக்கு தேயிலை மீள்நடுகை உதவுதொகையாக தேயிலை சிறு உடமையாளர்களுக்கு வழங்கப்படும் ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.500,000 தொகை ஆண்டுகாலப்பகுதியில் ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.630,000 ஆக அதிகரிக்கப்பட்ட அதேவேளை, ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.400,000 புதிய நடுகை உதவுதொகை ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.500,000 ஆக அதிகரிக்கப்பட்டது. நிலைபெறத்தக்க தேயிலை அபிவிருத்தி இலக்குகள், தேயிலைக்கான ஐந்து ஆண்டு உபாயம் மற்றும் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பு என்பவற்றிற்கிணங்க துறையினை வலுப்படுத்துவதற்கு அணிசேர்ந்துள்ள தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் உபாயத்திட்டத்துடன் (2019-2023) இணங்கும் வகையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அத்துடன் சேவைச் செயற்றிட்டங்களை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

இறப்பர்

பங்கசு நோய்ப்பரவலுடன் இணைந்து பால் சேகரிப்பு நாட்களின் போது பெருந்தோட்டப் பிரதேசங்களில் பெறப்பட்ட மழை வீழ்ச்சி காரணமாக இறப்பர் உற்பத்தி 2021இல் தொடர்ந்தும் குறைவடைந்து காணப்பட்டது. அதற்கமைய, 2020இல் உற்பத்தி செய்யப்பட்ட 78.2 மில்லியன் கிலோகிராம்களிலிருந்து 2021இல் 76.9 மில்லியன் கிலோகிராம்களுக்கு 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2021இன் முதலரைக் காலப்பகுதியில் இறப்பர் உற்பத்தி உயர்வடைகின்ற போக்கொன்றினைக் காண்பித்த போதிலும், இறப்பர் பெருந்தோட்டங்களின் உச்ச விளைச்சல் காலப்பகுதியாக பொதுவாகக் கருதப்படுகின்ற காலமான

ஆண்டின் இறுதிக் காலாண்டில் உற்பத்தியினைக் குறைவடையச் செய்த அதிக மழை நாட்களின் எண்ணிக்கை காரணமாக அதன் பின்னர் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மொத்த இறப்பர் உற்பத்தியின் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற தட்டை இறப்பர் உற்பத்தி மீளாய்வுக் காலப்பகுதியில் 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, கிறேப் இறப்பர் உற்பத்தி 7.4 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. மொத்த இறப்பர் உற்பத்தியின் ஏறத்தாழ 32 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஏனைய இறப்பர் உற்பத்தி வகைகள் முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2021இன் உள்நாட்டுக் கைத்தொழில்கள் மூலமான இறப்பரின் உள்நாட்டு நுகர்வானது, கைத்தொழில் துறை படிப்படியாக மீட்சியடைந்தமையுடன் இணைந்து 133.9 மில்லியன் கிலோகிராம்களுக்கு 19.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, குறைவான உற்பத்தியின் காரணமாக இறப்பர் ஏற்றுமதிகள் 2021இல் 15.5 மில்லியன் கிலோகிராம்களுக்கு 1.7 சதவீதம் கொண்ட சிறிய வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

உலக சந்தைகளில் இயற்கை இறப்பர் விலைகளின் அதிகரிப்பினைப் பிரதிபலித்து உள்நாட்டுச் சந்தையிலும், இறப்பர் விலைகள் 2021 காலப்பகுதியில் அதிகரித்த போக்கொன்றினைக் காண்பித்தன. கொழும்பு இறப்பர் ஏலத்தில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் (RSS1) சராசரி விலை 2020இல் பதிவாகிய விலைகளைவிட 2021இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.460.78ஆக 31.1 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை லேட்டெக்ஸ் கிறேப் இறப்பர் விலைகள் கிலோகிராமொன்றிற்கு ரூ.626.32 இற்கு 74.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் மற்றும் லேட்டெக்ஸ் கிறேப் இறப்பர் என்பவற்றின் சராசரி ஏல விலைகள் 2021 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.475.00 ஆகவும் கிலோகிராமொன்றிற்கு ரூ.696.58 ஆகவும் காணப்பட்டன. இறப்பரின் சராசரி கப்பல் ஏற்றல் பெறுமதி 2020இன் கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1.91 இலிருந்து 2021இல் கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.72 ஆக அதிகரித்தது. ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட திடீர் ஏற்றமானது கிழக்காசியாவிலிருந்து கிடைக்கும் அதிகரிக்கின்ற கேள்விக்கு மத்தியில் பருவகாலம்சாராத காரணிகள் மற்றும் பால் சேகரிப்புத் தொழிற்பாடுகளை இடையூறுகளுக்குள்ளாக்கிய கனமழையின் காரணமாக உலக சந்தைகளில் வழங்கல் பற்றாக்குறைகள் மூலம் தூண்டப்பட்டிருந்தது.

இறப்பர் கைத்தொழில்துறை சார்ந்த உற்பத்தித்திறனை மேம்படுத்துவதனையும் பெறுமதி சேர்த்தலை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டு, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட உபாயங்கள் 2021இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. தேசிய வேளாண்மைக் கொள்கைக்கு அமைவாக இயற்கை இறப்பருடன் இணைந்த உற்பத்தியில் ஈடுபடுவதற்கும் வருமான மூலங்களை பன்முகப்படுத்துவதனை ஊக்குவிப்பதன் வாயிலாக சிறிய இறப்பர் காணிகளை இலாபகரமான வர்த்தக அலகுகளாக மாறுதலடையச் செய்வதற்கும் உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாளர்களுக்காக உதவுதொகைகளை வழங்குவதற்கு வரவுசெலவுத் திட்டம் 2021இல் ரூ.60 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. சிறு உடமையாளர் துறையினை

அட்டவணை 2.4
முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

வகை	அலகு	2020 (அ)	2021 (ஆ)	மாற்றம் (%) 2019/20 (அ)	மாற்றம் (%) 2020/21 (ஆ)
1. தேயிலை					
1.1 உற்பத்தி (இ)	மில் கி.கி	278.9	299.5	-7.1	7.4
- தாழ் நிலம்	மில் கி.கி	169.9	183.2	-10.5	7.8
- மத்திய நிலம்	மில் கி.கி	46.7	51.0	-0.9	9.1
- உயர்ஒ நிலம்	மில் கி.கி	62.2	65.3	-1.3	5.0
1.2 மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	266	267	33.0	0.3
1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	266	267	37.7	0.3
1.4 உற்பத்திச் செலவு (ஈ)	ரூபா/கி.கி	492.48	533.13	1.8	8.3
1.5 சராசரி விலை					
- கொழும்பு ஏலம்	ரூபா/கி.கி	633.85	619.15	15.9	-2.3
- ஏற்றுமதி (க.ஏ.பெ)	ரூபா/கி.கி	866.70	920.76	5.4	6.2
1.6 மீள்நடுகை	எக்டேயர்கள்	812	1,123	-22.0	38.3
1.7 புதிய பயிரிடுகை	எக்டேயர்கள்	424	696	-61.6	64.2
1.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ)	மொஉஉஇன் %ாக	0.6	0.7		
2. இறப்பர்					
2.1 உற்பத்தி	மில் கி.கி	78.2	76.9	4.6	-1.7
- தட்டை இறப்பர்	மில் கி.கி	39.1	38.4	4.6	-1.7
- கிறேப் இறப்பர்	மில் கி.கி	13.0	13.9	-10.2	7.4
- ஏனையவை	மில் கி.கி	26.1	24.5	14.0	-6.2
2.2 மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	138	139	0.2	0.6
2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ)	'000 எக்டேயர்கள்	121	113	6.1	-6.0
2.4 உற்பத்திச் செலவு	ரூபா/கி.கி	213.50	221.00	1.7	3.5
2.5 சராசரி விலை					
- கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1)	ரூபா/கி.கி	351.46	460.78	21.8	31.1
- ஏற்றுமதி (க.ஏ.பெ)	ரூபா/கி.கி	353.84	540.77	6.5	52.8
2.6 மீள்நடுகை (ஊ)	எக்டேயர்கள்	976	1,470	-6.2	50.6
2.7 புதிய பயிரிடுகை (ஊ)	எக்டேயர்கள்	751	1,185	-31.9	57.8
2.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ)	மொஉஉஇன் %ாக	0.2	0.2		
3. தெங்கு					
3.1 உற்பத்தி	காய்கள் மில்	2,792	3,120	-9.5	11.7
- உலர்ந்த தேங்காய் துருவல்	காய்கள் மில்	226	298	-41.5	31.8
- தேங்காய் எண்ணெய்	காய்கள் மில்	48	211	-81.0	340.6
- ஏனையவை	காய்கள் மில்	2,516	2,607	2.9	3.6
3.2 மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	505	505	0.2	0.2
3.3 உற்பத்திச் செலவு	ரூபா/காய்	21.81	21.25	19.0	-2.6
3.4 சராசரி விலை					
- உற்பத்தியாளர் விலை	ரூபா/காய்	61.05	71.88	45.7	17.7
- ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ)	ரூபா/காய்	52.61	65.36	40.4	24.2
3.5 மீள்நடுகை/கீழ்பயிரிடுகை (ஏ)	எக்டேயர்கள்	5,333	7,647	-10.1	43.4
3.6 புதிய பயிரிகை (ஐ)	எக்டேயர்கள்	8,000	1,387	16.9	-82.7
2.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ)	மொஉஉஇன் %ாக	0.6	0.7		

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபவீச்சு உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்திலுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது.

மூலங்கள்:
இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை
பெருந்தோட்ட அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

2

இலக்காகக் கொண்டு 2020இல் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடங்கப்பட்ட உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய நடுகை, மீள் நடுகை, கைவிடப்பட்ட பயிர்ச்செய்கை காணிகளை இறப்பர் பால் எடுப்பதற்காக தயார்படுத்தல் மற்றும் காணிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் என்பன தொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை, 2021இல் கைவிடப்பட்ட காணிகளில் மீள் பயிர்ச் செய்கைகளுக்காகவும் மழைகாப்புக் கருவிகளையும் களையெடுக்கும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காகவும் உதவுதொகைகள் வழங்கப்பட்டன. மேலும், *சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின்* கீழ் மொனராகலை, அம்பாறை மாவட்டங்கள் உள்ளடங்கலாக பாரம்பரியமற்ற இறப்பர் பயிரிடப்படும் பிரதேசங்களில் இறப்பர் புதிய நடுகை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் தொடர்ந்தன. அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பாகமொன்றாக இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் புசல்லாவ, அகலவத்தை, களனிவெலி மற்றும் கேகாலை பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழ் 14 தோட்டங்களினதும் 6 சிறு உடமையாளர் பிரதேசங்களினதும் அறுவடைச் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கு சுற்றாடல் நட்புமிக்க மற்றும் பொருளாதார ரீதியாக இலாபகரமான மெதுவாக விடுவிக்கும் வளமாக்கித் தொழில்நுட்பமொன்றினை அறிமுகப்படுத்தியது. களுத்துறை, குருநாகல், மாத்தளை, கேகாலை, மாத்தறை, காலி, கொழும்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 131.8 ஏக்கர்களைக் கொண்ட மொத்தப்பரப்பை உள்ளடக்கிய கூட்டுப் பசளை பிரயோகத்திற்கான 64 தோட்டத்திலான பங்கேற்பு ஆராய்ச்சிப் பரிட்சாத்தங்களையும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் நடாத்தியது. மேலும், இறப்பர் கைத்தொழிலையும் அதனோடிணைந்த பெறுமதிச் சங்கிலிகளையும் அபிவிருத்திசெய்து வலுப்படுத்துவதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கொள்கைகளை உருவாக்கும் நோக்குடன் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி இறப்பர் பயிர்ச்செய்கை மற்றும் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கான நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழுவினை பெருந்தோட்ட அமைச்சு நிறுவியது.

தெங்கு

2021இல் தெங்கு உற்பத்தியானது மொத்தமாக 3,120 மில்லியன் காய் உற்பத்திகளுடன் வரலாற்றிலேயே உயர்வான மட்டத்தினை எட்டியுள்ளது. அதற்கமைய, தெங்கு உற்பத்தி 2020இன் பதிவாகிய 9.5 சதவீதக் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 11.7 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பானது, முக்கிய தெங்கு பயிரிடப்படும் பிரதேசங்களில் சாதகமான வாயு வெப்பநிலையுடன் 2020இன் பிந்திய பகுதியிலிருந்தும் 2021ஆம் ஆண்டு முழுவதும் நன்கு பரவலாகவிருந்த மழைவீழ்ச்சியினால் ஏற்பட்ட ஆக்கபூர்வமான வானிலை நிலைமைகளினால் தூண்டப்பட்டிருந்தது. 2020இல் அதன் குறைவடைந்த செயலாற்றத்திலிருந்து தெங்கு உற்பத்தி மீட்சியடைந்து மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் வெளியீடு மேம்பாடுகளைக் காண்பித்தது. அதற்கமைய, 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் துருவல் தேங்காய் உற்பத்தி 33,289 மெற்றிக் தொன்களுக்கு 31.8 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, தேங்காய் எண்ணெய் உற்பத்தி 117.8 சதவீதத்தினால் கணிசமாக மேம்பட்டது. உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தியினை ஊக்குவிக்கின்ற அதேவேளை, தாவர எண்ணெய் மற்றும் உண்ணத்தக்க எண்ணெய் இறக்குமதிகளையும் நுகர்வினையும் ஊக்கமிழக்கச் செய்வதற்கான அரசாங்கத்தின் கொள்கைசார்ந்த முயற்சிகளின் விளைவாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்டது. 2021இல் தேங்காய்க் களி, தேங்காய் பால், தேங்காயப் பால்மா உற்பத்தியும் அதிகரித்து காணப்பட்டது. மொத்த காய்கள் உற்பத்தி அதிகரித்த அதேவேளை, 2021இல் பதப்படுத்தப்பட்ட உற்பத்திகளுக்கான வளர்ச்சியடைகின்ற கைத்தொழில்சார் கேள்விக்கு மத்தியிலும் கொப்பரா மற்றும் உடன் தேங்காய் ஏற்றுமதிகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, தொழில்த் துறையின் வளர்ச்சியடைகின்ற கேள்வியினை நிறைவுசெய்வதற்கு உள்நாட்டு உற்பத்தி போதாமையினால் தேங்காய் அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்காக குளிரச்செய்யப்பட்ட தேங்காய் உள்ளீடுகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தேங்காய் உற்பத்தியின் உயர்வான அளவுகளுக்கு மத்தியிலும் 2021 காலப்பகுதியில் தேங்காய் மற்றும் தேங்காய் அடிப்படையிலமைந்த உற்பத்திகளின் விலைகள் உயர்வான மட்டத்திலேயே காணப்பட்டு தேங்காய் அடிப்படையிலமைந்த கைத்தொழில்களிலிருந்து தோற்றம்பெறுகின்ற கேள்வியினைப் பிரதிபலித்தது. அதற்கமைய, கொழும்பு தேங்காய் ஏலத்தில் தேங்காயின் சராசரி ஏல விலை 2020இன் காயொன்றுக்கு ரூ.48.89 இலிருந்து 2021இல் காயொன்றுக்கு ரூ.56.51 ஆக அதிகரித்தது. தேங்காயின் சராசரி சில்லறை விலை 2020 இனைவிட காயொன்றுக்கு ரூ.83.90 இற்கு 13.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020 செத்தெம்பரில் சுற்றளவினை அடிப்படையாகக் கொண்டு தேங்காய்களுக்கான உயர்ந்தபட்ச விலையினை ரூ.60 இலிருந்து ரூ.70 வரையான வீச்சில் அரசாங்கம் விதித்த போதிலும் உள்நாட்டுச் சந்தைகளில் தேங்காய்கள் கட்டுப்பாட்டு விலைகளுக்கு மேலதிகமாகவே விற்பனை செய்யப்பட்டதால், 2021 யூனில் விலைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு இது வழிவகுத்தது. உண்ணத்தக எண்ணெய் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் உலக சந்தையில் உண்ணத்தக்க எண்ணெய் விலைகளில் அதிகரிப்பு என்பவற்றுடன் தேங்காய் எண்ணெய்க்கான சராசரி உள்நாட்டு விலை 2021இல் 750 மி.லீற்றர் போத்தலொன்றிற்கு ரூ.443.42 இற்கு 29.2 சதவீதத்தினால் அதிகரித்தது. துருவப்பட்ட

தேங்காயின் சராசரி உள்நாட்டுச் சந்தை விலையும் முன்னைய ஆண்டில் பதிவாகிய கிலோகிராமொன்றிற்கு ரூ.447.56 உடன் ஒப்பிடுகையில் கிலோகிராமொன்றிற்கு ரூ.537.25 ஆக ஆண்டுகாலப்பகுதியில் மேலும் அதிகரித்தது.

நிலைபேறான தெங்கு பயிர்ச்செய்கை முறைமையினை நிறுவுவதன் வாயிலாக தெங்குப் பயிர்ச்செய்கைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர் வழிமுறைகளை எடுத்தது. அதற்கமைய, தெங்குப் பயிர்ச்செய்கை சபையானது துறையின் நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கு வழியமைப்பதற்கு ஏற்கனவே காணப்படுகின்ற தெங்கு பயிர்ச்செய்கைக் காணிகளின் உற்பத்தித்திறன் மேம்படுத்தல்களைத் தூண்டுதல் மீது விசேட கவனம் செலுத்தி அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அதற்கமைய, சேதன எரு, மண் ஈரப்பதனைக் காத்தல், ஈரப்பதன் பாதுகாப்பு நுட்பங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஏற்கனவேயுள்ள தெங்குக் காணிகளை புனரமைப்பதற்கு விசேட உதவுதொகைத் திட்டம் 2021இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன், முறைமைசார்ந்த பயிர்ச்செய்கைக்காக மானிய விலையில் தென்னங்கன்றுகளை வழங்கும் திட்டமும் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. நுண் நீர்ப்பாசன முறைமையினை நிர்மாணித்தல், குழாய் நீர்ப்பாசன முறைமை மற்றும் தெங்குக் காணிகளில் நீர் மூலங்கள் என்பவற்றுக்கு ஆதரவளிக்கின்ற புதிய உதவுதொகை முறைமையொன்றினூடாக தெங்குப் பயிர்ச்செய்கை மீது பாதகமான வானிலைத் தாக்கங்களைத் தணிப்பதற்கு தெங்குக் காணிகளில் வினைத்திறன்மிக்க நீர்ப்பாசன முறைமைகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுகாலப்பகுதியில், தெங்கு ஆராய்ச்சி நிலையம் மரபு ரீதியாக சிறந்த கலப்பு தேங்காய் நாற்றுகளை உற்பத்திசெய்தல் மற்றும் உயர்வான விளைச்சலைத் தருகின்ற *கப்சுவாய* கலப்பு தெங்கு பயிர்ச்செய்கைக்கான புதிய தெங்கு நாற்றுத் தோட்டமொன்றினை உருவாக்குதல் போன்ற பல நடவடிக்கைகளில் ஈடுபட்டது. தெங்குப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான சேதன வளமாக்கி பற்றிய மதிப்பீடு மற்றும் திண்ம மற்றும் திரவ சேதனப் பசளையினை தரப்படுத்தல் என்பன தொடர்புடைய முயற்சிகளிலும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டது. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையும் தேங்காய் உற்பத்தித் தயாரிப்பாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதியியல் ஆதரவினை வசதிப்படுத்துகின்ற அதேவேளை பெறுமதிசேர்க்கப்பட்ட தேங்காய் உற்பத்திகளின் பன்முகப்படுத்தல் மற்றும் தயாரிப்பு என்பவற்றில் தொடர்ச்சியான ஈடுபாட்டினை உறுதிசெய்வதன் மூலம் தெங்கு அடிப்படையிலமைந்த கைத்தொழில்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட உலகளாவிய வழங்கல் சங்கிலி இடையூறுகளுக்கு மத்தியிலும் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் வளர்ச்சி உத்வேகம் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்து காணப்பட்டது. ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின் படி சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி, 2020 விட 2021ஆம் ஆண்டில் 28.6 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. வாசனைத்திரவியங்கள் இறக்குமதி மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விவசாயிகளை பயிர்ச்செய்கையில் முனைப்புடன் ஈடுபட ஊக்குவித்து துறையின் மேம்பட்ட செயலாற்றத்திற்கு வழிவகுத்தது. கருவா, மிளகு, கராம்பு, ஏலக்காய், கோப்பி, கொக்கோ, சாதிக்காய் என்பவற்றின் உற்பத்தி 2021ஆம் ஆண்டில் வளர்ச்சியினைப் பதிவுசெய்த அதேவேளை வெற்றிலை உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. மேலும், மிளகுக்கான உலகளாவிய கேள்வியில் உயர்வடைதலைத் தொடர்ந்து அதன் விலைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2016 தொடக்கம் குறைவான விலையினால் பாதிப்படைந்த பயிர்ச்செய்கையாளர்களுக்கு நிதியியல் நிவாரணத்தை வழங்கியது. அரசாங்கத்தின் *துரிதப்படுத்தப்பட்ட மஞ்சள் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்* தொடக்கத்துடன் விளைச்சலில் தன்னிறைவினை அடைந்து கொள்ளும் அரசாங்கத்தின் இலக்கிற்கு அமைவாக 2021 காலப்பகுதியில் மஞ்சள் பயிர்ச்செய்கை குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது. மேம்பட்ட உற்பத்தியினைப் பிரதிபலித்து உயர்வான செயலாற்றத்தினைப் பதிவுசெய்த ஏற்றுமதி வேளாண்மைத் துறையானது ஆண்டுகாலப்பகுதியில் மொத்த ஏற்றுமதி அளவுகளில் 20.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்த அதேவேளை ரூபா நியதிகளில் 41.0 சதவீதத்தினால் ஏற்றுமதி வருவாய்களும் அதிகரித்தன.

ஏற்றுமதி வேளாண்மைத் துறையின் செயலாற்றத்தினைத் தரமுயர்த்துவதற்கு ஏற்றுமதி வேளாண்மை பயிர்களின் தரத்தினையும் உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதன் வாயிலாக வெளிநாட்டு வருவாய்களை ஈட்டுவதை இலக்காகக்கொண்ட பல்வேறு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அனுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற மரபுசாரா பிரதேசங்களில் மிளகு, பாக்கு, இஞ்சி, மஞ்சள், வெற்றிலை பயிர்ச்செய்கையினை விரிவாக்கம் செய்வதுடன் அதனுடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. சேதனப் பயிர்ச்செய்கையினை அறிமுகப்படுத்தி பிரபல்யப்படுத்தல், சிறந்த வேளாண்மை பயிற்சிகள் மற்றும் சிறந்த தயாரிப்பு பயிற்சிகள் என்பன உள்ளடங்கலாக உற்பத்தியின் தரத்தினை அதிகரிப்பதற்கான முயற்சிகளை ஏற்றுமதி வேளாண்மை திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. மேலும், பொருளாதார ரீதியாக உற்பத்தித்திறன்மிக்க பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் உதவுவதற்காக உற்பத்திதிறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிருக்கான குறிப்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேதனப் பயிர்ச்செய்கை திட்டங்கள் போன்ற பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளை

மேம்படுத்தும் நோக்குடனும் பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பெறுமதி சேர்த்தல் நடவடிக்கையினுள் அவர்களை ஈடுபடுத்துவதற்கும் தொழில்நுட்பம் தொடர்புபட்ட வழிகாட்டலுக்கான ஆதரவும் வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டன. தரச் சான்றிதழ்களைகளையும் சேதனப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக சேதனச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளுவதற்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவியளிக்கப்பட்டது.

2

ஏனைய களப் பயிர்கள்

இறக்குமதிகள் மீதான தடைகளுக்கு மத்தியிலும் சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் உள்நாட்டு உற்பத்திக்கான உயர்வான கேள்வி காரணமாக ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி அதிகரித்து காணப்பட்டது. அதற்கமைய, 2021ஆம் ஆண்டில் ஏனைய களப் பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தி ஆண்டுக்காண்டு அடிப்படையில் 27.3 சதவீதத்தினால் 843,297 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இவ் அதிகரிப்பு 2020/2021 பெரும்போகத்தில் பதிவுசெய்யப்பட்ட 41.9 சதவீத அதிகரிப்பினால் கணிசமான பங்கு தூண்டப்பட்டிருந்தது. அதேபோன்று 2021 சிறுபோகமும் முன்னைய சிறுபோகத்தை விட 2.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. சோளம், குரக்கன், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், பாசிப்பயறு. உளுந்து, நிலக்கடலை மற்றும் எள்ளு போன்ற ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்திகள் அதிகரிப்பினைப் பதிவுசெய்த அதேவேளை சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், கௌபி, சோயா அவரை மற்றும் இறுங்கு உற்பத்திகள் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. உள்நாட்டு சோள உற்பத்தியினை மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட பல்வேறு வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் விளைவாக, 2020 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு காலப்பகுதியில் சோள உற்பத்தி 472,444 மெற்றிக் தொன்களுக்கு 50.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. சோள இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக சோள இறக்குமதியும் 2021ஆம் ஆண்டில் 47.8 சதவீதத்தினால் குறைவடைந்தது. 2020ஆம் ஆண்டில் 36.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த உருளைக்கிழங்கு உற்பத்தி, 2021ஆம் ஆண்டில் 16.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் மீளெழுச்சிபெற்ற அதேவேளை உருளைக்கிழங்கு இறக்குமதிகள் 2020ஆம் ஆண்டைவிட 8.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், 2021ஆம் ஆண்டில் பெரிய வெங்காய உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 65,907 மெற்றிக் தொன்களுக்கு 53.2 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் பெரிய வெங்காய இறக்குமதி 257,421 மெற்றிக் தொன்களுக்கு 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் விநியோகத்தினூடாக தொடர்ச்சியான ஆதரவுக்கு மேலதிகமாக குறிப்பிடப்பட்ட உற்பத்தி மேம்படுத்தல் முயற்சிகளூடாக ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பல வழிமுறைகளைப் பின்பற்றியது. அதற்கமைய, ஆண்டுகாலப்பகுதியில், கமத்தொழில் அமைச்சு மேம்பட்ட உணவுப் பாதுகாப்புக்கு வழியமைக்கின்ற அதேவேளை அறுவடைகளுக்கு நியாய விலையினை உறுதிசெய்வதற்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேளாண்மையாளர்களுக்கு குறுகியகால களஞ்சிய வசதிகளை வழங்கும் நோக்குடன ஏனைய களப் பயிர்களுக்கான 102 களஞ்சியசாலைகளை நாடு முழுவதும் நிர்மாணிப்பதை முன்னெடுத்தது. இதில் 76 செயற்றிட்டங்கள் 2021 இறுதியளவில் நிறைவுபெற்றிருந்தன. கமத்தொழில் திணைக்களமானது சிறந்த வேளாண்மை நடைமுறைகளை ஊக்குவித்தல், ஏனைய களப் பயிர்களின் பயிர்ச்செய்கைப் பரப்பினை விரிவுபடுத்துதல், பீடை முகாமைத்துவ நுட்பங்களை மேம்படுத்துதல் அத்துடன் உயர் விளைச்சலைத் தருக்கின்ற விதைகளைப் பயன்படுத்தல் என்பவற்றுக்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை, நீர் முகாமைத்துவத்திற்கான மேம்படுத்தல்கள் மீதும் கவனம் செலுத்தியது. உள்நாட்டு உணவுப் பாதுகாப்பினை வலுப்படுத்தும் பொருட்டு, விதை உற்பத்தியினை ஊக்குவித்தல், வளமாக்கி மற்றும் பீடைநாசினிகள் போன்ற வேளாண்மை உள்ளீடுகளின் உகப்பான பயன்பாடு, களஞ்சிய இயலளவினை அதிகரித்தல், காலநிலைக்கு தாக்குப்பிடிக்கத்தக்க வேளாண்மை பற்றிய சிறந்த நடத்தைகளைப் பின்பற்றுதல், பெறுமதிச் சங்கிலிகளுக்கான ஒருங்கிணைப்பை அதிகரித்தல் மற்றும் புதிய சந்தைத் தளங்களை நிறுவுதல் போன்றவற்றின் மூலம் ஏனைய களப் பயிர்களினதும் வழங்கலை மேம்படுத்துவதற்கு மேலும் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

காய்கறிகள்

கொந்தளிப்பான வானிலை, வளமாக்கிப் பற்றாக்குறை மற்றும் அதிகரித்த இயந்திர மற்றும் போக்குவரத்துச் செலவுகள் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக காய்கறி வழங்கல் 2021ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தது. காய்கறிகளின் மொத்த உற்பத்தி, 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 1,693,095 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 1,669,515 மெற்றிக் தொன்களுக்கு 1.4 சதவீதத்தினால் குறைவடைந்தது. முன்னைய பெரும்போகத்தை விட 871,729 மெற்றிக் தொன்களுக்கு 2.5 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றுடன் 2020/2021 பெரும்போகக் காலப்பகுதியில் குறைவடைந்த காய்கறி உற்பத்தி இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. அதேவேளை, 2021 சிறுபோக உற்பத்தியும் 2020ஆம் ஆண்டின் தொடர்புடைய பருவகாலத்துடன் ஒப்பிடுகையில் 797,786 மெற்றிக் தொன்களுக்கு 0.2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. குறைவான உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கிலிக்கான இடையூறுகள் என்பன ஆண்டு முழுவதும் காய்கறி விலைகளின்

தளம்பலுக்கு வழிவகுத்தன. அதற்கமைய, பருவகால அறுவடை காரணமாக காய்கறி விலைகள் மாச்சு மற்றும் செத்தெம்பர் மாதங்களில் அவதானிக்கப் பெற்ற சிறிய வீழ்ச்சிகள் தவிர ஆண்டின் ஏனைய காலப்பகுதியில் உயர்வாகவே காணப்பட்டன. அதிக மழை வீழ்ச்சி மற்றும், வளமாக்கி இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து வேளாண்மையிற்கான இரசாயனங்களின் பற்றாக்குறை காரணமாக வளமாக்கித் தட்டுப்பாடு மற்றும் பீடை மற்றும் நோய்ப்பரவல் என்பனவற்றின் விளைவாக காய்கறி விலைகள் ஆண்டின் இறுதியில் பருவகால விலை வீதங்களையும் விஞ்சிக் காணப்பட்டது. அதேவேளை, ஐ.அ.டொலர் 28.5 மில்லியன் பெறுமதி கொண்ட 21,540 மெற்றிக் தொன் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்ட அதேவேளை ஐ.அ.டொலர் 384.3 மில்லியன் பெறுமதியுடைய 697,144 மெற்றிக் தொன் காய்கறிகள் 2021 காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டன. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு காய்கறி உற்பத்தியினை ஊக்குவித்து வலுப்படுத்துவதற்கு பல அரசாங்க நிறுவனங்களும் தொடர்ந்து வழிமுறைகளை மேற்கொண்டன. தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவதனை மேம்படுத்துகின்ற அதேவேளை அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவம் மீதான தொழில்நுட்பத்தை மையப்படுத்திய நூட்பங்கள் மற்றும் வேளாண் வியாபார அபிவிருத்தியினை வலுப்படுத்துவதன் மீதான அவற்றின் கசிவுத்தாக்கங்கள் அத்துடன் பாதுகாப்பினை மேம்படுத்துதல் போன்றவற்றின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு கமத்தொழில் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம் பல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் என்பவற்றை முன்னெடுத்தது. 2022இன் ஆரம்பப்பகுதியில் அரசாங்கமானது காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் உணவு பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டும் 8 அரசாங்க முகவராண்மையின் உதவியுடன் வீட்டுத்தோட்டம் செய்வதற்கான தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தொடங்கிவைத்தது.

பழங்கள்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின் படி 2021ஆம் ஆண்டில் பழ உற்பத்தி 3.3 மில்லியன் மெற்றிக் தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 38.0 மில்லியன் பெறுமதியுடைய 43,426 மெற்றிக்தொன் பழங்கள் ஏற்றுமதி செய்யபட்ட அதேவேளை ஐ.அ.டொலர் 67.6 மில்லியன் பெறுமதியுடைய 55,725 மெற்றிக்தொன் பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பழ ஏற்றுமதிகளில் முதல் மூன்று பிரதான ஏற்றுமதிகளாக வாழை, பப்பாசி மற்றும் அன்னாசி காணப்பட்ட அதேவேளை முதல் மூன்று பிரதான இறக்குமதிகளில் அப்பிள், திராட்சை, தோடம்பழம் என்பன உள்ளடங்கியிருந்தன. உள்நாட்டுப் பழங்களுக்கான கேள்வி வலுவடைந்ததற்கு மத்தியில், உள்நாட்டுக் கேள்விக்கு ஈடுகொடுப்பதற்கான உள்நாட்டு உற்பத்தியாளர்களின் மட்டுப்படுத்தப்பட்ட இயலளவு துறையின் அபிவிருத்திக்கு பாரிய தடையாக இருந்து வருகின்றது. அதற்கமைய, உற்பத்தித்திறன், களஞ்சிய மற்றும் விநியோக வசதிகள் அத்துடன் வேளாண்மை உள்ளீடுகளின் உகந்த பயன்பாடு என்பவற்றை அதிகரிக்கின்ற அதேவேளை அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைப்பதனை உறுதி செய்வதற்கு கமத்தொழில் அமைச்சும் கமத்தொழில் திணைக்களமும் பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தின. 2021 யூனில் கமத்தொழில் அமைச்சானது நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதித்தமையின் காரணமாக வசதியாக விற்பனை செய்யப்பட முடியாதிருந்த காய்கறிகள் மற்றும் பழங்கள் தொகையிருப்புகளை கொள்வனவு செய்வதற்கு மாவட்டச் செயலாளர்களுக்கு அல்லது அரசாங்க அதிபர்களுக்கென நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. காய்கறிகளும் பழங்களும் உரிய மாவட்ட விலைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் விலைகளில் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தன. இதனூடாக தமது உற்பத்திக்கு வேளாண்மையாளர்கள் நியாயமான விலையினைப் பெற்றுக்கொள்வது உறுதிப்படுத்தப்பட்டது. 2022 மாச்சில் அரசாங்கமானது அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான உயர்வான செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அதன் வழிமுறைகளின் ஒரு பகுதியாக தோடம்பழங்கள், மென்டரின் பழங்கள், திராட்சை, அப்பிள் உள்ளடங்கலாக பலவகையான பழங்களின் இறக்குமதியினை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தது.

சீனி

சாதகமான மழைவீழ்ச்சிப் போக்குகள் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட பயிர்ச்செய்கைப் பரப்பு என்பன மூலம் துணையளிக்கப்பட்டு, சீனி உற்பத்தி 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் அதன் மேல்நோக்கிய போக்கைத் தொடர்ந்தது. *செவனகல, பெல்வத்த,* மற்றும் *கல்ஓயா* சீனித்தொழிற்சாலைகளின் சீனி உற்பத்தியின் அளவு 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 14.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைவிட 2021ஆம் ஆண்டில் 70,606 மெற்றிக்தொன்களுக்கு 17.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. அதற்கமைய, மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் *செவனகல, பெல்வத்த,* மற்றும் *கல்ஓயா* சீனித்தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையே 10.4 சதவீதத்தினாலும் 28.8 சதவீதத்தினாலும் 11.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இத்தொழிற்சாலைகளால் முகாமை செய்யப்படுகின்ற கரும்புப் பயிர்ச்செய்கையின் கீழ் (முளைவிட்ட கரும்புகள் உள்ளடங்கலாக) மொத்தப் பரப்பும் ஆண்டுகாலப்பகுதியில் 3.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ள எத்திமலை தோட்டங்கள் அண்மைய எதிர்காலத்தில் உள்நாட்டுச் சீனி உற்பத்திக்கு கணிசமான பங்களிப்பைச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, கந்தளாய் சீனித்தொழிற்சாலை மற்றும் கரும்புத்தோட்டம் என்பவற்றை

2

மீளத்தாபிக்கும் நடவடிக்கைகள் சட்டரீதியான பிரச்சனைகள் காரணமாக மந்த வேகத்தில் முன்னேற்றமடைந்து வருகின்றது. 2021ஆம் ஆண்டில் மொத்த சீனி உற்பத்தியும் சராசரி விளைச்சலும் அதிகரித்த போதிலும், சீனி எடுத்தல் வீதம்[4] மூலம் அளவிடப்பட்டவாறு சீனி உற்பத்தித்திறன் 2021ஆம் ஆண்டில் குறைவடைந்து குறிப்பாக அறுவடைக் காலப்பகுதியில் நீர்ப்பாசன முகாமைத்துவத்தினையும் சீனித்தொழிற்சாலைகளில் முறையற்ற மாதிரியெடுத்தல் முறைமையுடன் இணைந்த தரம் அடிப்படையிலமைந்த கரும்பு விலையிடல் முறைமையில் வினைத்திறன்களின்மைகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

ஏற்கனவே காணப்படுகின்ற பயிர்ச்செய்கைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதனையும் பயிர்ச்செய்கையினை விரிவுபடுத்தலையும் மையப்படுத்தி சீனிக் கைத்தொழிலில் பல உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. குறைவான உள்நாட்டு உற்பத்தியை விட உயர்ந்தளவு சீனி இறக்குமதிகளைக் கருத்திற்கொண்டு நாற்றுக்கரும்பு வழங்குதல், பல்வேறு கரும்புச்செய்கை பிரதேசங்களில் நாற்றுவிருத்தி காணிகளை மற்றும் நாற்றுமேடைகளை உருவாக்குதல் மற்றும் பயிர் மேம்படுத்தல் மற்றும் வளமுகாமைத்துவ நடைமுறைகள் என்பன ஊடாக கரும்புத் தோட்டங்களை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டல்களுக்கிணங்க அசேனதப் பயிர்ச்செய்கை முறைகளிலிருந்து சேதனப் பயிர்ச்செய்கைக்கு மாறுதலடைதலுடன் தொடர்புபட்ட பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. சேதன வளமாக்கியை அறிமுகப்படுத்தல், உயிர் இரசாயன மற்றும் உயிரியில் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் கரும்பு பயிர்ச்செய்கை மண்ணுக்காக பிரதேசம் குறித்த வளமாக்கி பரிந்துரை மாதிரிகளை வகுத்தல் என்பவற்றை இவை உள்ளடக்கியிருந்தன. அதேவேளை, கரும்பு ஆராய்ச்சி நிறுவகமானது வெலிஓயா, ஹொரவப்பொத்தான மற்றும் பிபில போன்ற இடங்களில் சீனித் தொழிற்சாலைகளை நிறுவுகின்ற அதேவேளை கிளிநொச்சியின் ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் கரும்புப் பயிர்ச்செய்கை விரிவுபடுத்தலுடன் தொடர்புடைய முயற்சிகளை மேற்கொண்டது. அதேவேளை கரும்பு ஆராய்ச்சி நிறுவகமானது நடைமுறையிலுள்ள உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிலைமையினை சிறப்பாகப் பிரதிபலிப்பதற்கு 2016இல் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட *தேசிய சீனித்துறை அபிவிருத்திக் கொள்கையினை* இற்றைப்படுத்தும் செயன்முறையில் முனைப்புடன் ஈடுபட்டது. உலகளாவிய சீனி விலைகளின் சடுதியான அதிகரிப்பு, சீனி இறக்குமதிகள் மீது செலவிடப்படும் கணிசமான வெளிநாட்டுச் செலாவணி என்பவற்றின் நோக்கில் சீனிக் கைத்தொழிலை உரிய காலத்தில் மறுசீரமைக்கும் அதேவேளை மேம்பட்ட இனங்களைப் பயன்படுத்துதல், சிறந்த பயிராக்கவியல் நடத்தைகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் என்பன ஊடாக உற்பத்தி இயலளவை விரிவுபடுத்துவதற்கான சாத்தியப்பாட்டினைக் கண்டறிவதைப் பொறுப்பேற்பதற்கு இந்த நிறுவனங்களுடன் அரசாங்கம் கூட்டிணைந்து செயற்படுவது இன்றியமையாததாகும்.

4 சீனி எடுத்தல் வீதம் = (சீனி உற்பத்தி/ பிழியப்பட்ட கரும்பின் அளவு)*100

விலங்கு வளர்ப்பு

விலங்கு வளர்ப்புத் துறையின் செயலாற்றம் 2021 காலப்பகுதியில் மேம்பாட்டிற்கான சமிக்ஞைகளைக் காண்பித்தது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம், மொத்த தேசிய பால் உற்பத்தியானது 2021ஆம் ஆண்டில் 513 மில்லியன் லீற்றர்களுக்கு 4.4 சதவீதத்தினால் அதிகரித்தது. பால் உற்பத்தியில் இவ்வளர்ச்சிக்கு சராசரி பசும்பால் உற்பத்தியாளர் விலையில் அதிகரிப்பு, அதிகரித்த பால் சேகரிப்பு அத்துடன் புதிய பால் பண்ணைகள் இணைந்துகொண்டமை என்பன பிரதான தூண்டுகோலாக அமைந்தன. அதிகரித்த தீவன விலைகள் மற்றும் உயர்வான ஊழியச் செலவுகள் காரணமாக பசும்பாலின் சராசரி உற்பத்திச் செலவு முனனைய ஆண்டில் பதிவாகியிருந்த லீற்றரொன்றுக்கு ரூ.49.28 இலிருந்து 2021இல் ரூ.69.30 ஆக அதிகரித்தது. எனினும், இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு பால்மா தட்டுப்பாடுகளிலிருந்து தோற்றம்பெற்ற திரவப் பாலுக்கான அதிகரித்த கேள்வி அதேபோன்று பால்மா விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் என்பன காரணமாக உள்நாட்டு திரவப் பாலுக்கான பண்ணையாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற விலையும் ஆண்டுகாலப்பகுதியில் ஒப்பீட்டளவில் உயர்வாகவிருந்தது. அதற்கமைய, பசும்பால் லீற்றரொன்றுக்கான சராசரிப் பண்ணை விலை 2020ஆம் ஆண்டில் ரூ. 82.00 இலிருந்து 2021ஆம் ஆண்டில் ரூ.98.00 ஆக அதிகரித்தது. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள தரவுகளின் படி, 2021ஆம் ஆண்டில் உள்நாட்டு பால் உற்பத்தியின் பங்களிப்பானது நாட்டின் மொத்தத் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதில் ஏறத்தாழ 38 சதவீதமாகக் காணப்பட்டது. கோழி வளர்ப்புத் துறையினை நோக்குகையில், முட்டை உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 4.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், தீவன அடங்குபொருட்கள் பற்றாக்குறை மற்றும் அதிகரிக்கின்ற தீவனச்செலவுகள் என்பன கோழியொன்றுக்கு உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளின் அளவிலும் எண்ணிக்கையிலும் குறைவுகளை ஏற்படுத்தின. மேலும், கோழி இறைச்சி உற்பத்தி, 9.5 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, கோழி இறைச்சி உற்பத்திச் செலவும் 2021இல் கிலோகிராமொன்றுக்கு ரூ.342.07 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு ரூ.434.19ஆக அதிகரித்தது. உள்நாட்டு இறைச்சிக் கோழியின் (புரொயிலர்) பெற்றோர் கோழி உற்பத்தியானது மாற்றமின்றிக் காணப்பட்ட அதேவேளை, இறைச்சிக்கோழி பெற்றோர்களின் இறக்குமதி அதிகரித்து 2021ஆம் ஆண்டில் இறைச்சிக் கோழி பெற்றோர் ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் அதிகளவில் கிடைக்கப் பெறுவதற்கு வழிவகுத்தது. மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஆட்டிறைச்சி உற்பத்தி முறையே 4.4 சதவீதத்தினாலும் 4.9 சதவீதத்தினாலும் 1.0 சதவீதத்தினாலும் அதிகரித்தது.

அட்டவணை 2.5
கால்நடைத்துறை புள்ளிவிபரங்கள்

துணைத்துறை	2020 (அ)	2021 (ஆ)	மாற்றம் (%) 2019/20 (அ)	2020/21 (ஆ)
1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்)	1.4	1.5	3.0	2.6
கறவைப் பசுக்கள்	1.1	1.1	1.6	2.5
எருமைகள்	0.3	0.3	8.2	3.2
2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்)	491.5	513.3	9.8	4.4
பசும்பால்	413.6	425.4	10.6	2.8
எருமைப்பால்	77.9	87.9	5.9	12.9
3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) (இ)	வி.கி	வி.கி	-	-
4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்)	82.00	98.00	17.2	19.5
5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்)	1,869.7	1,953.7	-10.3	4.5
6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ)	216.2	236.7	-3.5	9.5

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தகவல்களின்படி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

ஆண்டுகாலப்பகுதியில் அவசியமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி கொள்கை ரீதியான ஆதரவினை வழங்குவதன் வாயிலாக விலங்கு வளர்ப்புத் துறையினை ஊக்குவிப்பதை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை இனப்பெருக்க செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச மிருகவைத்திய அலுவலகங்கள் ஊடாக 2021 காலப்பகுதியில் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் ஏறத்தாழ 196,364 செயற்கை கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. செயற்கை கருவூட்டல்கள் ஊடாக ஈன்றெடுத்த பெண் கன்றுகளின் போசணையினை மேம்படுத்துவதற்கு மாட்டுத்தீவனம் வழங்குதல் மற்றும் பல்வேறு விலங்கு நோய்களுக்கெதிராகத் தடுப்புமருந்து வழங்குதல் என்பனவும் மீளாய்வுட்படுகின்ற காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. மேலும், தேசிய மந்தைகளில் மருத்துவ மற்றும் உபமருத்து முலையழற்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் *அனைத்தையும் உள்ளடக்கிய முலையழற்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ் பால்மடி உட்செலுத்திகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டு பாற்பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டன. பாற்பண்ணை தொழில்துறையினை மேம்படுத்துவதற்கான பல்வேறுபட்ட முயற்சிகளுக்கு மத்தியிலும், உள்நாட்டு பாற்பண்ணைத் துறையானது நாளொன்றுக்கு சராசரியாக 2-3 லீற்றர்கள் உற்பத்தியளவுகளுடன் கூடிய சிறியளவிலான பால் உற்பத்தியாளர்களையே பெருமளவில் கொண்டமைந்துள்ளது. மோசமான தீவனம் வழங்கும் நடைமுறைகள், உள்நாட்டில் தயாரிக்கப்படும் தீவன மூலப்பொருட்களின் பற்றாக்குறை, அதிக கன்று ஈன்றல் இடைவெளிகள் மற்றும் இனப்பெருக்கப் பிரச்சனைகள், பால் களஞ்சியப்படுத்தல், குளிரூட்டல், கொண்டுசெல்லுதல் மற்றும் பதப்படுத்துதல் என்பவற்றுக்கான மட்டுப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பசுக்களின் மோசமான உடல் நிலைமைகள் என்பவை உற்பத்தித்திறன் குறைவிற்குத் தொடர்ந்தும் காரணங்களாகின. நாட்டின் பாற்பண்ணைத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான அவசர தேவையினைக் கருத்திற்கொண்டு, பாற்பண்ணைத் தொழிற்துறையினை நடுத்தரளவிலிருந்து பாரியளவு பண்ணைகளாக தரமுயர்த்துதல், மற்றும் மலிவான விலையில் உயர்தரத் தீவனங்களின் கிடைப்பனவை உறுதிசெய்தல், பால் மற்றும் பால் உற்பத்திகளுக்கான செலவைப் பிரதிபலிக்கும் விலைப் பொறிமுறையொன்றினை நிறுவுதல் மற்றும் ஏற்கனவே காணப்படும் மந்தைகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பன பால் மற்றும் பால் உற்பத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வியினை நிறைவுசெய்வதற்கு வசதியளிக்கும். மேலும், உள்நாட்டுக் கோழித் தீவன உற்பத்தியில் பிரதான மூலப் பொருளாக பெருமளவில் பயன்படுத்தப்படுகின்ற உள்நாட்டுச் சோள உற்பத்தியானது மொத்தக் கேள்வியினை நிறைவுசெய்வதற்கு இன்னும் போதாமையாகக் காணப்பட்டு, உயர் செலவுமிக்க பிரதியீடுகளைத் தெரிவுசெய்வதற்கு தீவன உற்பத்தியாளர்களைக் கட்டாயப்படுத்தி போதியளவு தீவனத்தைப் பெற்றுக் கொள்வதில் இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்ததுடன் தீவன விலைத் தளம்பல்களுக்கு வழிவகுத்து தீவன உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை ஏற்படுத்துகின்றது. அதற்கமைய, சிறியளவிலான கோழி உற்பத்தியாளர்கள் சந்தை அழுத்தங்களுக்கு அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களாக தோற்றம் பெற்றுள்ளனர். ஆகையினால், உள்நாட்டு சோளப் பயிர்ச்செய்கையினை ஊக்குவித்தலும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தலும் கோழி வளர்ப்புத் துறையில் நீண்டகாலம் உறுதிவாய்ந்த தன்மையினை உறுதிசெய்கின்ற அதேவேளை தற்காலிக வழங்கல் பற்றாக்குறைகள் உரியகாலத்தில் தீர்க்கப்படுகின்றமையினை உறுதிசெய்தலும் இன்றியமையாததாகும்.

மீன்பிடி

மீன்பிடித் துறையின் உற்பத்தியானது 2020ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட சடுதியான சுருக்கமடைதலைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டில் மெதுவடைந்து காணப்பட்டது. அதற்கமைய, கரையோர மற்றும் கரைகடந்த துணைத்துறைகளை உள்ளடக்குவதுடன் மொத்த மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 76 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற கடல்சார் மீன் உற்பத்தி 1.5 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டு மீன் உற்பத்தி 2.4 சதவீதத்தினால் அதிகரித்தது. மேம்பட்ட நீர் உயிரினவளர்ப்பு நடைமுறைகளுடன் ஒன்றிணைந்து இறால் பண்ணை உற்பத்தியில் அதிகரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. 2021ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் கரையோர மற்றும் கடல்சார் வளங்களுக்கு கணிசமான சேதத்தினை விளைவித்த *எக்ஸ்பிரஸ்* பேர்ல் கப்பல் விபத்தின் காரணமாக கடல்சார் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளால் மீன் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மீனவ சமூகத்தினதும் நுகர்வோர்களினதும் பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில் களுத்துறை தொடக்கம்

அட்டவணை 2.6
மீன் உற்பத்தி

'000 மெற்றித்தொன்கள்

துணைத்துறை	2020	2021 (அ)	மாற்றம் (%)	
			2019/20	2020/21 (அ)
கடல்	327	332	-21.3	1.5
கரையோரம் மற்றும் களப்பு	183	178	-24.7	-2.4
கடற்கரையிலிருந்து தொலைவில்	144	153	-16.5	6.3
நன்னீர் மீன்பிடி	102	104	12.7	2.4
பிடிப்பு	84	81	15.1	-4.3
பண்ணை மீன் வளர்ப்பு	10	9	-5.3	-10.2
இறால் வளர்ப்பு பண்னை	7	14	15.0	95.8
மொத்தம்	429	436	-15.2	1.7

(அ) தற்காலிகமானது

மூலம்: கடற்தொழில் அமைச்சு

நீர்கொழும்பு வரையான பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தற்காலிக மீன்பிடித்தடையினை விதிப்பதற்கு அதிகாரிகள் உடனடி வழிமுறைகளை எடுத்தனர். அதன் தொடர்ச்சியாக அரசாங்கமானது பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு ரூ.5000 கொடுப்பனவினை பகிர்ந்தளித்த அதேவேளை மீனவ சமூகங்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கின்ற விதத்தில் சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களுக்கான மாற்றுப் பொருட்களையும் வழங்கியது. எனினும், மீன் உற்பத்தியும் நுகர்வும் 2021ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் மீளெழுச்சி பெற்றன. மீன்பிடி நடவடிக்கைகளுக்கான இடையூறுகள் மற்றும் அதிகரித்த ஏற்பாட்டுச் செலவுகளின் விளைவாக மீன் வகைகளின் சில்லறை விலைகள் ஆண்டு முழுவதும் தளம்பலுக்குள்ளாகியிருந்தன. கடற்றொழில் அமைச்சின் படி, 2021ஆம் ஆண்டில் மீன் ஏற்றுமதிகள் அளவு நியதிகளில் 25.6 சதவீதத்தினாலும் ரூபா நியதிகளில் 58.6 சதவீதத்தினாலும் அதிகரித்தமையானது இறக்குமதி செய்கின்ற நாடுகளால் விதிக்கப்பட்ட தொடர்புடைய ஒழுங்கு விதிகளுக்கமைவாக உயர்தரத்திலான மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் பொருட்டு ஆர்வலர்களுக்கு அவசியமான வழிகாட்டலையும் உதவியினையும் வழங்குவதற்கு அதிகாரிகளால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் தாக்கத்தினை பிரதிபலித்தது. மேலும், மீளாய்வுட்படுகின்ற காலப்பகுதியில் மீன் இறக்குமதிகள் 34.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.

தேசியப் பொருளாதாரத்திற்கான மீன்பிடித் துறையின் பங்களிப்பினை அதிகரிப்பதை நோக்காகக் கொண்ட அதன் முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்தது. மீன் உற்பத்தியினை அதிகரிக்கின்ற அதேவேளை மொத்த உற்பத்தியின் ஏறத்தாழ 20-30 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைப்பதனை மையப்படுத்தி கடற்றொழில் அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. சட்டத்திற்கு புறம்பான, அறிக்கையிடப்படாத அத்துடன் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பாரியளவிலான பல நாள் மீன்பிடி கலங்கள் நங்கூரமிடுவதை இயலச் செய்வதற்குப் புதிய துறைமுகங்களின் கட்டுமான நடவடிக்கைகள், ஏற்கனவே காணப்படுகின்ற துறைமுகங்களைத் தரமுயர்த்துதல், நங்கூர மற்றும் தரையிறக்கும் பிரதேசங்களின் கட்டுமானம் என்பன ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. மேம்பட்ட மீன் உற்பத்திக்கு அத்தியாவசியமான ஏற்பாட்டு சேவைகளாக விளங்குகின்ற நவீன குளிரூட்டல், களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளும் 2021 காலப்பகுதியில் இடம்பெற்றன. கடற்றொழில் அமைச்சு, தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் கூட்டிணைந்து உள்நாட்டு மீன் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு உற்பத்தியினை அதிகரிப்பதற்கும், ஏற்றுமதிகளை மேம்படுத்து வதற்கும் கிராமியப் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கும் பல எண்ணிக்கையான மரபுசாரா பண்ணை முயற்சிகளை நடைமுறைப் படுத்தியது. இந்நோக்கில், சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட மீன் இனப்பெருக்க அலகுகளைத் தாபித்தல், அறுவடைக்குப் பின் வளர்ச்சிபெற உதவதற்காக சிறியளவிலான மீன் குஞ்சு உற்பத்திப் பிரிவுகளை மேம்படுத்தல் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களைப் புனரமைத்து மேம்படுத்தல் என்பன ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. நீர் மீள்சுழற்சி முறைமையினைப் பொருத்துதல், பண்ணைப் பிரதேசங்களின் உயிரியல் பாதுகாப்பினை மேம்படுத்துதல் மற்றும் தரமான நீரைப் பெறுவதற்காக புத்தளத்தில் டச்சுக்கால்வாயினைத் தூர்வாறுதல் போன்ற பல்வேறு வழிமுறைகளூடாக இறால் வளர்ப்பை தீவிரப்படுத்துவதற்கான முயற்சிகளும் தொடர்ந்தும் இடம்பெற்றன. இறால் பண்ணைக்கு மேலதிகமாக, தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை கடற்சாதாழை, கடற்பாசி, நண்டு, கடலட்டை மற்றும் பால்மீன் பண்ணை அபிவிருத்தியூடாக வர்த்தக ரீதியான நீர் உயிரினவளர்ப்பு ஊக்குவிப்பிலும் ஈடுபட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் புத்தளம் கடற்பிரதேசங்களில் கடற்பாசி வளர்ப்பு நடவடிக்கைகளிலும் புத்தளத்தில் பால்மீன் குஞ்சு பொரித்தல் நிலையமொன்றினை நிர்மாணித்தலும் ஆண்டுகாலப்பகுதியில் இடம்பெற்றன. 2021 மாச்சில் மன்னாரில் கடலட்டை குஞ்சு பொரித்தல் நிலையம் தொழிற்பாடுகளைத் தொடங்கியதுடன் கிளிநொச்சியில் கடலட்டைக் கிராமமொன்றும் உருவாக்கப்பட்ட அதேவேளை கடலட்டை ஏற்றுமதிகளை அதிகரிக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் கடலட்டை வளர்ப்பினை விரிவு படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், அலங்கார மீன் மற்றும் நீர்வாழ் தாவர வளர்ப்பு அபிவிருத்திக்கும் ஏற்றுமதித் துறைக்கும் ஆதரவளிக்கும் பொருட்டு புதிய அலங்கார மீன் வளர்ப்பு இயலளவினையும் முழுமையாக அபிவிருத்திசெய்தல், நீர் உயிரினவளர்ப்பு தொழில்நுட்ப முன்னேற்றம், மீன்குஞ்சு வழங்குதல் மற்றும் மீன் நோய்நிர்ணயச் செயற்பாடுகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை 2.7
முக்கிய உணவுப் பண்டங்களின் கிடைப்பனவு

விடயம்	அலகு	2010			2020 (அ)			2021 (ஆ)		
		உற்பத்தி	இறக்குமதிகள்	தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு)	உற்பத்தி	இறக்குமதிகள்	தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு)	உற்பத்தி	இறக்குமதிகள்	தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு)
அரிசி (இ)	மெ.தொ'000	3,011	126	152	3,482	16	164	3,502	147	165
சோளம்	மெ.தொ'000	162	16	9	314	44	16	472	23	22
கோதுமை	மெ.தொ'000	-	1,051	51	-	1,404	64	-	1,307	59
பெரிய வெங்காயம்	மெ.தொ'000	59	158	10	43	266	14	66	257	15
சீனி	மெ.தொ'000	31	548	28	60	683	34	71	582	29
உருளைக் கிழங்கு	மெ.தொ'000	52	130	9	65	127	9	76	117	9
உடன் மீன்	மெ.தொ'000	385	14	19	429	13	20	436	10	20
பசும்பால்	மில்லியன் லீற்றர்கள்	192	-	9(ஈ)	414	-	19(ஈ)	425	-	19(ஈ)
தேங்காய் எண்ணெய்	மெ.தொ'000	65	3	3	20	79	5	43	99	6

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.68 மெற்றிக்தொன் அரிசி
(ஈ) ஆண்டொன்றிற்கான லீற்றர்கள்

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சங்கம்
லங்கா சீனிக் கம்பனி லிமிட்டெட் - செவனகல அலகு
லங்கா சீனிக் கம்பனி (குளியார்) லிமிட்டெட் - பெல்வத்தை அலகு
கல்லோயா (ஹிங்குரான) சீனிக் கைத்தொழில் லிமிட்டெட்
கடற்றொழில் அமைச்சு
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

கைத்தொழில்

கைத்தொழிலானது அதிகரித்த கேள்வி மற்றும் 'புதிய இயல்பு' சூழலின் கீழ் தொடர்ச்சியான தொழிற்பாடுகள் என்பனவற்றிலிருந்து நன்மையடைந்து, அதன் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவாகிய 6.9 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து 2021இல் 5.3 சதவீதத்தினால் மீட்சியடைந்த போதிலும், வழங்கல் பக்க தடைகளினால் தோற்றுவிக்கப்பட்ட தொடர்ந்திருக்கின்ற சேதத்தின் பண்புகளை இத்தொகைகள் உள்ளடக்கியிருந்தன. கைத்தொழில் வளர்ச்சிக்கு தயாரிப்பு நடவடிக்கைகளில் மீட்சி வழிவகுத்த அதேவேளை, கட்டடவாக்கம் அத்துடன் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் மிதமான விரிவடைதல்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, மின்சாரம், எரிவாயு, நீராவி, வாயுச்சீராக்கும் வழங்கல் நடவடிக்கைகள் அத்துடன் சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் என்பனவும் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்து ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு சாதகமாகப் பங்களித்தன. எவ்வாறாயினும், கழிவு நீர், கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் நடவடிக்கைகள் 2021இல் சுருக்கமடைந்தன. கைத்தொழில் நடவடிக்கைகளில் மீட்சியினைப் பிரதிபலித்து காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கியினால் நடத்தப்படுகின்ற வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கைத்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கேள்வி மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்கள் ஆண்டுகாலப்பகுதியில் சராசரி விரிவடைதலை எடுத்துக்காட்டின.

வரைபடம் 2.6
கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2021 (அ)



(அ) மொ.உ.உ-உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)
மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தயாரிப்பு

புதிய இயல்பின் கீழ் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து தயாரிப்பு நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவாகிய 3.9 சதவீத வீழ்ச்சியிலிருந்து 2021இல் 7.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் மீட்சிப்பாதைக்குத் திரும்பியது. நாட்டில் வெற்றிகரமான தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டம், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நடமாட்டக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் தொழிற்சாலைத் தொழிற்பாடுகள் தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதித்தல் அத்துடன் புதிய இயல்புக்கு ஏற்றவாறு பொருளாதார சூழலினைச் சரிப்படுத்தல் என்பன ஆண்டு காலப்பகுதியில் தயாரித்தல் நடவடிக்கைகளில் இம்மீட்சிக்கு செயலூக்கம் அளித்தன. அதற்கமைய, சுபகஸ்கந்த சுத்திகரிப்புச் சாலையை தற்காலிகமாக மூடியதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தயாரிப்பு தவிர ஆண்டுகாலப்பகுதியில் அனைத்து தயாரிப்பு நடவடிக்கைகளும் விரிவடைந்தன. ஆரோக்கியமான வெளிநாட்டுக் கேள்வியினால் பெருமளவு தூண்டப்பட்டு புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோல் தொடர்புபட்ட உற்பத்திகள் தயாரிப்பானது தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு முக்கியமாக பங்களித்தன. மேலும், உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள்

2

வரைபடம் 2.7
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு (அ)



(அ) கொ.மு.சுட்டெண்ணானது கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் மனோபாவ அளவீட்டு அடிப்படையில் அமைந்ததாகும். இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்கு கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மற்றும் ஏனைய உலோகமல்லா கனிம உற்பத்திகள் தயாரிப்பும் தயாரித்தல் நடவடிக்கைகளில் விரிவடைதலுக்கு கணிசமாகப் பங்களித்தது. தயாரித்தல் தொடர்புபட்ட குறிகாட்டிகளைக் கருத்திற் கொள்கையில், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்ற கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2021இல் அதிகரிப்பினைப் பதிவுசெய்து, தயாரித்தல் நடவடிக்கைகளில் மீட்சியினை எடுத்துக்காட்டியது. மேலும், மாதாந்த அடிப்படையில் மத்திய வங்கியினால் தொகுக்கப்படுகின்ற தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணும் ஆண்டு காலப்பகுதியில் சராசரியாக தயாரிப்பு நடவடிக்கைகளின் விரிவடைதலினை எடுத்துக்காட்டியது. எனினும், வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட தாமதங்கள் அதன் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை அடைந்துகொள்வதிலிருந்து துறையினை தடைப்படுத்தியது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

தயாரித்தல் துறையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியில் 2020ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க பின்னடைவுக்கு பின்னர் 2021ஆம் ஆண்டில் மீளெழுச்சியினைக் காண்பித்தது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்ற கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் படி, பெரும்பாலான துணைத் துறைகள் முழுவதும் அதிகரித்த உற்பத்தியுடன் தயாரித்தல் துறையானது 2020ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட 10.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 7.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை காண்பித்தது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் தொகுத்தல் தொடங்கிய காலம் முதலான அதன் அதிஉச்ச பெறுமதியான 119.6ஐ 2021 மாச்சில் பதிவுசெய்தது. 2021ஆம் ஆண்டில் கொவிட்-19 பரவல் காலப்பகுதியில் அமுல்ப்படுத்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் குறைந்தளவான கட்டுப்பாடுகளைக் கொண்ட நடமாட்டக் கட்டுப்பாடுகள், முக்கிய கைத்தொழில் நடவடிக்கைகள் அதிக இடையூறுயின்றி இடம்பெறுவதற்கு இடமளித்தன. விசேடமாக, ஆண்டின் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் படிப்படியாக வேகமடைந்த கொவிட்-19 தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டமும் கைத்தொழில்சார் நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெறுவதற்கு வசதியளித்தது. அணியும் ஆடைகள், உலோகமல்லாத கனிம உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், புடவைகள் மற்றும் அடிப்படை உலோகங்கள் அத்துடன் குடிபானங்கள் என்பனவற்றின் துணைத்தயாரிப்பு துறைகளினால் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் சாதகமான செயலாற்றம் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. எனினும், சுத்திகரிப்புச்சாலை அவ்வப்போது மூடப்பட்டதன் காரணமாக, கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரித்தல் துணைத் துறையினால் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த சாதகமான உத்வேகமானது குறைவடைச்செய்யப்பட்டது.

ஆண்டு காலப்பகுதியில் உணவு தயாரித்தல் நடவடிக்கைகள் குறைவடைந்து காணப்பட்ட போதிலும் குடிபானத் தயாரிப்பு நடவடிக்கைகள் பாரிய வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் பாரிய துணைத்துறையான உணவு உற்பத்திகள் தயாரித்தலில் அவதானிக்கப்பட்ட மிதமான வளர்ச்சி வேகமானது பெருமளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்கல் சங்கிலிகள் இரண்டுக்குமான இடையூறுகளின் பெறுபேறாக அமைந்திருந்தது. ஆண்டின் முதலரையாண்டில் பதிவாகிய 0.8 சதவீதம் கொண்ட சிறிதளவான சுருக்கத்தினைத் தொடர்ந்து, கோழி இறைச்சி உற்பத்திகள், தகரத்திலடைத்த மீன், பழப்பாகு, சுவைச்சாறு மற்றும் பிஸ்கட் என்பவற்றின் அதிகரித்த தயாரிப்புடன் இத்துணைத் துறையானது பிந்திய அரைப்பகுதியில் மேம்பட்ட செயலாற்றுகையினைக் காண்பித்து ஆண்டுகாலப்பகுதியில் 0.2 சதவீதங்கொண்ட சிறிதளவான விரிவடைதலுக்கு வழிவகுத்தது. குடிபான தயாரித்தல் நடவடிக்கைகள் 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 6.7 சதவீதங்கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 9.8 சதவீதம் குறிப்பிடத்தக்க

வரைபடம் 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. நிகழ்வுகள் மற்றும் சமூகச் செயற்பாடுகள் மீதான கட்டுப்பாடுகள் பாரியளவில் தளர்த்தப்பட்டமையினால் பொருளாதாரம் இயல்புநிலைக்கு திரும்பியதற்கு அமைவாக குடிபானங்களுக்கான அதிகரித்த கேள்வியும் அவதானிக்கப்பட்டது.

உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நடமாட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் 2020ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட தாழ்ந்த தளத்தாக்கம் என்பவற்றுக்கு மத்தியில் உலகளாவிய வழங்கல் சங்கிலிகளின் மேம்பாடுகள் மற்றும் தயாரிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு வசதியளிப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கை தீர்மானங்கள் என்பன மூலம் ஆதரவளிக்கப்பட்டு 2021 காலப்பகுதியில் அணியும் ஆடை மற்றும் புடவைகள் தயாரித்தல் துணைத் துறைகள் வலுவான முன்னேற்றத்தை அடைந்தன. கைத்தொழில் தயாரிப்பு சுட்டெண்ணின் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதிக்கு வகைகூறுகின்ற அணியும் ஆடை தயாரித்தல் துணைத் துறை முன்னைய ஆண்டின் 30.7 சதவீதம் கொண்ட சடுதியான சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 17.5 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. புடவை தயாரித்தலும் இதே போக்கிலேயே காணப்பட்டு 2020ஆம் ஆண்டின் 5.6 சதவீதச் சுருக்கத்தின் பின்னர் 2021ஆம் ஆண்டில் 25.9 சதவீதம்கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. இத்துணைத் துறைகளின் சாதகமான செயலாற்றங்கள் உலகளாவிய பொருளாதாரத்தில் விசேடமாக ஏற்றுமதிக் கேள்வியின் உறுதியான மீட்சியினை இயலச்செய்திருந்த முக்கிய ஏற்றுமதி நாடுகளில் ஒட்டுமொத்த மீளெழுச்சியினால் தூண்டப்பட்டிருந்தன. மூலப்பொருட்களின் கிடைப்பனவில் எதிர்மறையாகத் தாக்கம் செலுத்தியிருந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய வழங்கல் சங்கிலிகளுக்கான இடையூறுகளைக் குறைவடையச் செய்தமையும் இத் துறையின் வளர்ச்சி உத்வேகத்திற்கு வசதியளித்தது. அதேவேளை, ஏனைய துறைசார் நடவடிக்கைகளுக்கிடையிலான நடமாட்ட கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தயாரிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அனுமதிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துடன் இணைந்து இத்துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கான தூரித தடுப்பு மருந்தேற்றலும் இடையூறுகளைக் குறைவடையச் செய்வதற்கு உதவியளித்து, அணியும் ஆடைகள் மற்றும் புடவை உற்பத்தி தயாரித்தலின் துறைசார் செயலாற்றம் மீளெழுச்சி பெறுவதற்கு இயலுமைப்படுத்தியது.

அட்டவணை 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்
2015=100

பிரிவு	கை. உ. சுட்டெண்ணில் நிறை ஏற்றங்கள் (%)	2020 (அ)	2021 (ஆ)	மாற்றம் (%) 2019/20 (அ)	மாற்றம் (%) 2020/21 (ஆ)
1. உணவு உற்பத்திகள்	35.2	109.1	109.3	3.3	0.2
2. குடிபானங்கள்	3.8	96.5	106.0	-6.7	9.8
3. புகையிலை உற்பத்திகள்	1.7	72.1	77.9	-11.0	8.0
4. புடவை	3.3	102.2	128.7	-5.6	25.9
5. அணியும் ஆடைகள்	19.8	81.2	95.4	-30.7	17.5
6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள்	0.3	77.6	78.6	-33.5	1.3
7. தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்கள் தயாரித்தல், வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்கள் தயாரிப்பு	0.2	71.8	82.5	-29.5	15.0
8. தாள் மற்றும் தாள் உற்பத்திகள்	1.7	81.8	86.5	-15.4	5.8
9. அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு	1.4	112.6	117.9	9.4	4.8
10. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்	7.4	97.2	71.1	-9.0	-26.8
11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள்	4.1	94.2	89.8	-7.8	-4.7
12. மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள்	0.1	104.7	117.9	6.6	12.6
13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள்	5.7	75.8	102.9	-28.8	35.7
14. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள்	7.8	111.7	137.4	-5.2	23.0
15. அடிப்படை உலோகங்கள்	2.4	110.7	133.6	-10.9	20.7
16. உரு. உலோக உற்பத்திகள் (பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த)	1.3	100.9	124.6	-8.9	23.5
17. இலத்திரனியல் சாதனங்கள்	2.0	67.5	81.4	-22.3	20.6
18. பொறி மற்றும் இயந்திரங்களின் உற்பத்தி	0.7	102.9	122.0	3.6	18.6
19. தளபாட உற்பத்தி	0.8	77.0	77.5	-14.7	0.7
20. ஏனைய உற்பத்திகள்	0.3	65.7	69.6	-0.5	6.0
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்		**97.1**	**104.2**	**-10.2**	**7.3**

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

உலோகமற்ற கனிம உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோக உற்பத்திகள் துணைத்துறைகள் 2020ஆம் ஆண்டில் கொவிட்-19 இனால் தூண்டப்பட்ட சுருக்கங்களின் பின்னதாக 2021ஆம் ஆண்டில் முறையே 23.0, 20.7, 23.5 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க விரிவடைதல்களைப் பதிவுசெய்தன. இத் துணைத் துறைகளின் சாதகமான செயலாற்றமானது உள்நாட்டு உற்பத்தியின் இயலளவினை மேம்படுத்துகின்ற அதேவேளை ஓடுகள் மற்றும் செரமிக் உற்பத்திகள் மீது இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளினால் தூண்டப்பட்டிருந்தது. ஆண்டு காலப்பகுதியில் கட்டடவாக்கத்துறையில் அவதானிக்கப்பட்ட மீளெழுச்சியும் இத் துணைத் துறைகளிலிருந்து கிடைத்த உற்பத்திகளுக்கான கேள்வியின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது. குறிப்பாக சீமெந்து, ஓடுகள், கண்ணாடிப் போத்தல்கள், கூரை ஓடுகள் மற்றும் பீங்கான் மேசைப்பொருட்கள் உற்பத்தியில் அதிகரிப்புகள் ஏனைய உலோகமல்லா கனிம உற்பத்தித் துணைத் துறை தயாரிப்பில் உற்பத்தி விரிவிடைதலுக்கு முக்கிய பங்களிப்பு காரணிகளாக விளங்கின. குறிப்பாக ஈயம் மற்றும் அலுமினியம், அலுமினிய சட்டங்கள் மற்றும் உருக்கு, மற்றும் அலுமனிய உற்பத்திகள் ஆகியவற்றின் அதிகரித்த உற்பத்தியினால் அடிப்படை உலோகத் தயாரித்தல் மற்றும் புனையப்பட்ட உலோகத் தயாரித்தல் துணைத்துறைகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த விரிவடைதல்கள் முதன்மையாக தூண்டப்பட்டிருந்தன.

2

வரைபடம் 2.9
இயலளவுப் பயன்பாடு



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புச்சாலையின் தொழிற்பாடுகள் தடைப்பட்டதன் காரணமாக கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களின் உற்பத்தியானது 2020ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சுருக்கத்தை விட ஆண்டுகாலப்பகுதியில் சடுதியான வீழ்ச்சியினைக் காண்பித்தது. கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளைத் தயாரித்தலானது முன்னைய ஆண்டுகாலப்பகுதியில் 9.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் 26.8 சதவீதங்கொண்ட சுருக்கத்தினைக் காட்டியது. 2021 முதலரைப்பகுதியில் பராமரிப்பு நோக்கங்களுக்காக ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு சுத்திகரிப்புச்சாலை மூடப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து உரியகால பெறுகையினைத் தடைப்படுத்திய வெளிநாட்டுச் செலாவணி சிக்கல்கள் மற்றும் உயர்வடைகின்ற மசகெண்ணெய் விலைகள் காரணமாக ஏற்பட்ட மசகெண்ணெய் இறக்குமதி பற்றாக்குறையின் காரணமாக 2021ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக் காலப்பகுதியில் ஏறத்தாள ஒரு மாத காலத்திற்கு மூடப்பட்டது. இதன் விளைவாக, ஆண்டுகாலப்பகுதியில் பெற்றோல், வாகன டீசல் மற்றும் உலை எண்ணெய் உற்பத்தியில் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அத்தியாவசிய உற்பத்தி தன்மையுடன் இணைந்து உள்நாட்டு மருந்துப் பொருட்கள் தயாரித்தலை மேம்படுத்துவதற்கான கொள்கை சார்ந்த பணிப்புரைகள், அடிப்படை மருந்துப் பொருள் தயாரிப்புகள் மற்றும் மருந்தாக்கற் தயார்படுத்தல்கள் துணைத் துறை 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் அதன் வளர்ச்சி உத்வேகத்தை முன்னெடுப்பதற்கு வழிவகுத்தது. அதற்கமைய, இத் துணைத் துறை, 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 6.6 சதவீத விரிவடைதலைத் தொடர்ந்து 2021 காலப்பகுதியில் 12.6 சதவீதம் கொண்ட விரிவடைதலைப் பதிவுசெய்தது. ஆயுர்வேத உற்பத்திகளுக்கான கேள்வியில் அதிகரிப்பானது பாரியளவில் உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்டு துணைத்துறையின் மேல்நோக்கிய வளர்ச்சி உத்வேகம் தொடர்ந்து மேல்நோக்கிச் செல்வதற்கு வழிவகுத்தது.

இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் தயாரித்தல் துணைத் துறையானது 2021 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க விரிவடைதலினைப் பதிவுசெய்தது. மருத்துவ இறப்பர் கையுறைகளுக்காக கொவிட்-19 இனால் தூண்டப்பட்ட கேள்வி, உள்நாட்டு டயர் உற்பத்தி இயலளவிற்கான குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் இத்துறையில் 35.7 சதவீத வளர்ச்சி பதிவாவதற்கு வழிவகுத்தது. இத் துணைத் துறையின் வளர்ச்சியானது ஏனையவற்றுக்கு மத்தியில் அதிகரித்த ஸிப்பர், பிளாத்திக்கு போத்தல்கள், நெகிழக்கூடிய நூல் உற்பத்திகளினால் தூண்டப்பட்டிருந்தது. 2021ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் சுருக்கமடைந்திருந்த புகையிலை உற்பத்திகள், 2020ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட 11.0 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 8.0 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.

தோல் மற்றும் தொடர்புபட்ட பொருட்களின் தயாரிப்புத் துணைத் துறையும் இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள் துணைத் துறையும் குறைவடைந்த செயலாற்றதினைக் காண்பித்தன. தோல் மற்றும் தொடர்புபட்ட பொருட்கள் தயாரிப்புத் துணைத் துறையானது 2021ஆம் ஆண்டில் 1.3 சதவீத சிறிய விரிவடைதலைப் பதிவுசெய்த அதேவேளை, இரசாயனங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தயாரித்தல் துணைத் துறை ஒட்டுமொத்தமாக 4.7 சதவீதச் சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. குறைவடைந்த இரசாயன வளமாக்கிகள் உற்பத்தி இத் துறையின் வீழ்ச்சிக்கு பிரதான தூண்டுகோல்களாக அமைந்தது. எனினும், உள்நாட்டுக் கேள்வி மேம்பட்டமையுடன் இணைந்து ஆண்டின் இறுதியில் இவ்விருதுறைகளும் மேம்பாடுகளுக்கான சமிக்ஞைகளைக் காண்பித்தன.

மரப்பொருட்கள் (தளபாடங்கள் நீங்கலாக), மின்சார சாதனங்கள், தளபாடங்கள், கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மற்றும் அச்சிடுதல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக மீளுருவாக்க தயாரிப்புக்கள் போன்ற ஏனைய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் துணைத் துறைகள் 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைதலைப் பதிவுசெய்தன. அதிகரித்த நெளி கடதாசிகள், கடதாசிப் பைகள், அப்பியாசப் புத்தகங்கள் உற்பத்தியானது கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் துணைத்துறையின் விரிவடைதலுக்குப் பங்களித்த அதேவேளை, நேரடிப் பாடசாலைகளை மீளத்திறத்தல் மற்றும் கல்வி நடவடிக்கைகள் மீளத் தொடங்கப்பட்டமை என்பன அதிகரித்த அச்சிடப்பட்ட புத்தகங்களின் உற்பத்திக்கு வழிவகுத்தன. இது அச்சு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக மீளுருவாக்க துணைத் துறையின் சாதகமான செயலாற்றத்திற்கு வழிவகுத்தது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் உள்நாட்டு உற்பத்திகளுக்கு

வரைபடம் 2.10
2021இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் முக்கிய பிரிவுகளின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு



குறிப்பு: ஒவ்வொரு பிரிவுக்குமான நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அதிகரித்து வருகின்ற கேள்வியுடன் இணைந்து பல்வேறு வீட்டுசாதனப் பொருட்களின் உற்பத்தியின் அதிகரிப்பானது மின்சார உபகரணங்கள் தயாரித்தல் துணைத் துறை விரிவடைதலுக்கு வழிவகுத்தது.

கைத்தொழில் கொள்கைகளும் நிறுவனசார் ஆதரவும்

ஆண்டுகாலப்பகுதியில் அரசாங்கமானது உள்நாட்டு உற்பத்தித் தளத்தினை மேம்படுத்துவதற்கு கைத்தொழில் துறையினை வலுப்படுத்தும் நோக்கில் பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. *கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையினை* வரைவதை நிறைவுசெய்தமை 2021ஆம் ஆண்டில் முக்கிய மைல்கல்லொன்றாக அடையாளப்படுத்தப்பட்டது. அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் விரிவான பகுப்பாய்வினை வழங்குவதற்கு சேவையாற்றுகின்ற, கைத்தொழில் அபிவிருத்தியின் முன்னேற்றத்தினைத் தடைப்படுத்திய காரணிகளை ஆராய்கின்ற கைத்தொழில் பற்றிய ஆய்வானது கைத்தொழில் அபிவிருத்திற்கான தேசிய கொள்கைக்கு தளமாக அமைந்தது. கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையானது நிலைபெறத்தக்க மற்றும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற வளர்ச்சிக்காக உலகளாவிய போட்டிமிகு தொழில்துறையினை நிறுவுகின்ற அதேவேளை பசுமை வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் மயமாக்க முன்னேற்றத்தினையும் மையப்படுத்துவதை நோக்கி தொழிற்படுகின்றது. அதேவேளை, *பிராந்திய கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ் கட்டுநாயக்கவின் களுதியாவெல பிரதேசத்தில் கைத்தொழில் வலயமொன்றினை தாபிப்பதற்கும் களுத்துறை கைத்தொழில் பேட்டையினை விரிவுபடுத்துவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கனிமம் அடிப்படையிலமைந்த கைத்தொழில்களின் நோக்கெல்லையினை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் இலக்கிற்கமைவாக அரசாங்க, தனியார் பங்குடமையாக வரையறுக்கப்பட்ட இலங்கை கனிய மணல் நிறுவனத்தினால் அகழ்வு செய்யப்படுகின்ற *கனிய மணலுக்கான பெறுமதி சேர்த்தல் செயற்றிட்டமொன்றினை* தொடங்குவதற்கான ஆரம்பகட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, வாகனம் தயாரித்தல், பொருத்துதல், உதிரிப்பாகங்களைத் தயாரித்தல் கைத்தொழிலுக்கான நியம தொழிற்படுத்தல் நடைமுறை வழிகாட்டல்கள் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2021 இறுதியளவில் 13 தயாரித்தல் கம்பனிகள் நியம தொழிற்படுத்தல் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த அதேவேளை 2,361 வாகனங்கள் பொருத்தப்பட்டன. மேலும், நாட்டின் ஏற்றுமதித் தளத்தினை மேம்படுத்தக்கூடிய அதேபோன்று அறிவைப் பகிர்ந்துகொள்வதை தோற்றுவிக்கக்கூடிய முன்னேற்றகரமான தொழில்நுட்பத்துடன் புதிய கூட்டுமுயற்சிகளின் வடிவில் வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் நோக்குடன் தொழில்நுட்ப அமைச்சின் மேற்பார்வையின் கீழ் காலி, குருநாகல், கண்டி, நுவரெலியா மற்றும் ஹபரன ஆகிய பிரதேசங்களில் 5 தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவுவதற்கு அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டது. ஆண்டுகாலப்பகுதியில் பெண் தொழில்முயற்சியாளர்களின் தொழில்நுட்பம் சார்ந்த இயலளவினை மேம்படுத்துவதனை இலக்காகக்கொண்டு நிதி அமைச்சும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக மெய்நிகரான தளமொன்றினை தாபிப்பதைத் தொடங்கியது. தேசிய புத்தாக்க அமைப்பு முறையினை மேம்படுத்தி நிலைநிறுத்தும் நோக்குடன் 2021 நவெம்பரில் திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கீழ் தேசிய புத்தாக்க முகவராண்மை தாபிக்கப்பட்டது. *தேசிய புத்தாக்க முகவராண்மையானது* பொருளாதாரத்திலுள்ள அனைத்து துறைகளுக்குமிடையில் புத்தாக்கங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வர்த்தகமயமாக்கத்தினை இயலச்செய்வதற்கும் தொழிற்துறை, கல்வித்துறையிலுள்ளோர் மற்றும் அரசாங்கம் என்பவற்றிக்கிடையிலான கூட்டிணைவுகளை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சானது கைத்தொழில் துறையின் கல்விசார் தேவைகளுக்கு சேவையளிப்பதற்கு பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. ஆண்டுகாலப்பகுதியில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் தொழிற்கல்வி பயிலுனர்களுக்கு ரூ.4,000 மாதாந்த கொடுப்பனவு வழங்குவதற்காக *நிபுணத்தா சிசு திரிய* கல்வி உதவுத்தொகை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், தொழில்நுட்பக் கல்லூரிகளை நவீனமயப்படுத்துவதற்கும் தொழிற்கல்வி பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கும் *டெக் உதான நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ் பல உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

முதலீட்டுச் சபையும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் உள்நாட்டு தயாரிப்புக் கைத்தொழிலுக்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டினை வசதிப்படுத்துவதற்குரிய பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபட்டன. ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச்

2

சந்தை இரண்டுக்கும் சேவையளிப்பதற்கு இலங்கையின் மருந்தாக்கல் தொழிற்துறையினை வலுப்படுத்தும் நோக்குடன் அம்பாந்தோட்டையின் அரபொக்க என்ற இடத்தில் நவீன மருந்துப் பொருள் தயாரித்தல் வலயம் தாபிக்கப்பட்டது. இது இரு கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன் ஒவ்வொரு கட்டமும் ஒரு கட்டத்தில் 20 கம்பனிகளுக்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டில் துணி பெறக் கூடிய வசதியுடன் உற்பத்தி செய்யப்படும் கால அளவினையும் செலவையும் குறைப்பதற்கு ஏறாவூரில் புடைவைத் தயாரிப்பு வலயமொன்று தாபிக்கப்பட்டது. இத்துணி தயாரித்தல் பிரதேசம் ஐ.அ.டொலர் 35 மில்லியன் தொகையுடைய முதலீடுகளை ஏற்கனவே கவர்ந்துள்ளது. மேலும், உபாயரீதியான அபிவிருத்திச் செயற்றிட்டமொன்றாக அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் பாரியளவிலான டயர் தயாரிப்புத் தொழிற்சாலையொன்றினை விருத்தி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டது. இச் செயற்றிட்டமானது டயர் தயாரிப்புக்கு உள்நாட்டு இறப்பர் மூலங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டு காலப்பகுதியில் படகு கட்டுதல் கைத்தொழிலை செய்வதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை உருவாக்குவதனை ஏற்றுமதி அபிவிருத்தி சபை நிறைவுசெய்துள்ளது. மேலும், ஐந்து வருட காலப்பகுதிக்காக முக்கிய 24 ஏற்றுமதித் துறைகளை உள்ளடக்கி 1979இன் 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச்சபைச் சட்டத்தின் கீழ் ஏற்றுமதி ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவ்வாலோசனைக் குழுக்கள், சந்தைச் சவால்கள் மற்றும் வாய்ப்புக்களை இனங்காண்கின்ற அதேவேளை போட்டித்தன்மையினை வலுப்படுத்தி தேவையான கொள்கைகளை வரைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளுக்கான கூட்டிணைவுகளை தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவுடனான கூட்டுமுயற்சியுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளையும் அவ்வாறான பெண் தொழில்முயற்சியாளர்களையும் ஊக்குவித்து இயலளவை விருத்திசெய்வதற்கு கருத்தரங்குகள், செயலமர்வுகள், சந்திப்புக்கள் மற்றும் கொள்வனவாளர் தொடர்பு ஒன்றுகூடல்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை ஒருங்கிணைத்தது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது சாத்தியமான வர்த்தகச் செயற்பாடுகளை வசதிப்படுத்துவதற்கு துறைசார்ந்த புத்துயிரளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், முறைசார்ந்த உதவிக்கருமபீடம், ஏற்றுமதியாளர் மன்றங்கள் மற்றும் இலத்திரனியல்-சந்தை மையம் போன்றவற்றினூடாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட ஏற்றுமதி வணிகங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.

பிராந்தியத்தினுள் முன்னணி இரத்தினக்கல் மையமான இலங்கையின் அந் நிலையினை தக்கவைத்துக் கொள்வதை இயலுமைப்படுத்துவதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை முன்னெடுத்திருந்தது. அதற்கமைய, ஆண்டுகாலப்பகுதியில் தீட்டாத இரத்தினக்கற்களை இலங்கைக்கு இறக்குமதி செய்து பெறுமதி சேர்ப்பதற்காக மடகஸ்கார், தன்சானியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. பயன்படுத்தப்படாத நிலத்தடி இரத்தினக்கல் மூலங்களுக்கான பல்வேறு உரிமங்களை மற்றும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையினை எளிமைப்படுத்துவதற்கு *ஒரே இடத்திலான சேவை மையமொன்றினை* தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. இரத்தினக்கல் மற்றும் ஆபரண விற்பனையினை ஊக்குவிப்பதற்காக இரத்தினக்கல் அகழ்வுக் கட்டுப்பாடுகளையும் அதனோடு இணைந்த கட்டணங்களையும் தளர்த்துவதற்கான வழிமுறையினை அதிகாரசபை மேற்கொண்டது. மேலும், தயாரித்தலை ஊக்குவிப்பதற்காக இரத்தினக்கல் ஆபரணத் தொழிலதிபர்களால் ஈட்டப்படும் இலாபங்கள் மீது விதிக்கப்படும் 14 சதவீத வரி 2021 ஏப்பிறலில் தள்ளுபடி செய்யப்பட்ட அதேவேளை மெய்நிகர் தளங்கள் ஊடாக விற்பனை செய்யக்கூடிய இரத்தினக்கல் பெறுமதி அடிப்படையளவு அதிகரிக்கப்பட்டது. மேலும், இரத்தினபுரியில் சர்வதேச இரத்தினக்கல் கோபுரத்துடன் தொடர்புடைய கட்டுமானப் பணி ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

கைத்தொழில் துறைக்கும் கொள்கை வகுப்பிற்கும் ஏனைய அரசாங்க அதிகாரசபைகள் தொடர்ந்தும் நிறுவனசார் ஆதரவினை வழங்கின. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, 2021ஆம் ஆண்டில் பல்வேறு வர்த்தக சந்தைகளூடாக *இலங்கைத் தயாரிப்பு* முத்திரையினைப் பிரபல்யப்படுத்துவதற்கு தொடர்ந்தும் அதன் முயற்சிகளை மேற்கொண்டது. ஆண்டு காலப்பகுதியில் 37 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் அவற்றின் உற்பத்திகள் உயர்வான பெறுமதி சேர்த்தல்களை உள்ளடக்கியமையினை அங்கீகரித்து அத்துடன் உலகளவில் சந்தைப்படுத்தத்தக்க விதத்தில் அத்தகைய உற்பத்திகளை ஊக்குவித்து தரமுயர்த்தும் நோக்குடன் இம்முத்திரைகளைத் தரமுயர்த்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. மேலும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு கிடைக்கப்பெறுகின்ற சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு *இலங்கைத் தயாரிப்பு* வியாபாரத்திலிருந்தான வியாபாரத்திற்கு (B2B) இணையவழி வணிக வாயில் 2021 திசெம்பரில் தொடங்கி வைக்கப்பட்டது. ஆண்டின் இறுதியளவில் 346 வியாபாரிகள் இவ்வாயிலுடன் பதிவுசெய்து கொண்டனர். தொழில்முயற்சியாண்மைகளை ஊக்குவித்து வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களாக பல்கலைக்கழக பட்டதாரிகளை உருவாக்குவதற்கான விருத்திப்பாதைகளை உருவாக்குகின்ற *பிராந்திய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும்*

பட்டதாரி தொழில்முயற்சி உதயம் நிகழ்ச்சித்திட்டம் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைய, 5,179 பிராந்திய மட்ட தொழில்முயற்சியாளர்களும் 71 பல்கலைக்கழக பட்டதாரிகளும் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மானியங்களை பெற்றுக்கொண்டனர். அதேவேளை தென்மாகாணத்தில் கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிக்கின்ற அதேவேளை அப்பிரதேசத்தில் முன்முயற்சிகளை வசதிப்படுத்துவதற்கு அம்பாந்தோட்டை பிரதேசத்திற்கான வினைத்திறன்மிக்க *ஒரே இடத்திலான மையம்* என்ற வசதிப்படுத்தல் நிலையத்தினை கைத்தொழில் அபிவிருத்திச் சபை நிறுவியது. ஆண்டுகாலப்பகுதியில் கைத்தொழில் அபிவிருத்திச்சபையானது சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டி ஆதரவளிப்பதற்கு *தெயட்ட புனருதயக் - கர்மாந்தயட ஜீவயக் நிகழ்ச்சித்திட்டத்தையும்* தொடங்கியது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை வலுவூட்டுவதனூடாக மக்களை மையப்படுத்திய பொருளாதாரத்தை உருவாக்கும் நோக்குடன் தேசிய உற்பத்தித்திறன் செயலகமானது மாவட்ட மற்றும் நிறுவனசார் மட்ட உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

ஆற்றல்வாய்ந்த கைத்தொழில் துறைக்கு அத்தியாவசியமானதென இனங்காணப்பட்டு வருகின்ற தொழில் நுட்பவியல் புத்தாக்கத்தினை உயர்த்தும் நோக்குடன் தொழில்நுட்பத்தினால் தூண்டப்படும் முயற்சிகளை பல்வேறு நிறுவனங்களும் தொடர்ந்தும் வசதிப்படுத்தின. அதற்கமைய கைத்தொழில் துறையில் தொழில்நுட்பத்தினையும் ஆராய்ச்சியையும் பிரயோகிப்பதை வசதிப்படுத்துவதற்கு தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனம் தொழில்நுட்ப பரிமாற்றல் கொள்கையொன்றினை தயார்படுத்துவதைத் தொடங்கி வைத்தது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் காப்புரிமை விழிப்புணர்வு, தொழில்நுட்பப் பரிமாற்றல் மற்றும் வர்த்தகமயப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய மெய்நிகர் பயிற்சி மற்றும் கல்விசார் அமர்வுகள் உலக புலமைச் சொத்து அமைப்புடனான கூட்டிணைப்பில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கம் என்பவற்றுக்கான ஒருங்கிணைப்பு செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமானது பிரம்பு, பித்தளை, மட்பாண்ட, தளபாட அத்துடன் கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சுடன் இணைந்து உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்தியினை வசதிப்படுத்துவதற்கு பல மெய்நிகர் தொழில்நுட்ப பரப்புதல் கருத்தரங்குகளை நடாத்தியது. அதேவேளை, இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனமானது உள்நாட்டு காரியம், அறுவடைக்குப்பிந்திய தொழில்நுட்பம், நனோ வளமாக்கி, கொவிட்-19 இற்கு எதிரான நூதனமான சுகாதார கவனிப்பு புத்தாக்கங்கள் உள்ளடங்கலாக தோற்றம்பெற்று வருகின்ற ஆய்வுத் துறைகள் தொடர்பில் அதன் தொழில்நுட்ப பரிமாற்றல் மற்றும் வர்த்தகமயமாக்கல் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. சுகாதாரம், வேளாண்மை, பொறியியல் மற்றும் கல்வி உள்ளடங்கலாக பல்துறைகளுக்கும் 11 புதிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மானியங்களை வழங்குவதனூடாக தேசிய விஞ்ஞான மன்றமானது உள்நாட்டு தயாரிப்புத் துறையின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தியது. ஆண்டுகாலப்பகுதியில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமானது மருந்துப் பொருள் ஆய்வுகூடம், உராய்வுநீக்கி மற்றும் பெற்றோலிய எண்ணெய் பரிசோதனை ஆய்வுகூடம் மற்றும் பொறியியல் பரிசோதனை ஆய்வுகூடம் உள்ளடங்கலாக பல புதிய ஆய்வுகூடங்களுடன் தொடர்புடைய பரிசோதனைச் சேவைகளைத் தொடங்கியது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் நுண்பிளாத்திக்கு பரிசோதனை ஆய்வுகூடமும் கடல்சார் கழிவுத் தரவுத்தளமும் நிறுவப்பட்டன. ஆண்டுகாலப்பகுதியில் தொழில்நுட்பப் பங்குடமையினை தாபிப்பதற்கும் கூட்டுமுயற்சி கல்விசார் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமானது பல்வேறு அமைச்சுக்கள், கைத்தொழில்கள், பன்னாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அதிகாரசபைகள் என்பவற்றுடன் 10 புரிந்துணர்வு உடன்படிக்கைகளையும் கைச்சாத்திட்டது.

இலங்கைக் கைத்தொழில்களின் போட்டித் தன்மையினை அதிகரிப்பதற்கு கைத்தொழில் சம்மேளனங்கள் தொடர்ந்தும் பயிற்சி மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்கின. ஆண்டு காலப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோற்றம்பெற்ற சமகால பிரச்சனைகளையும் சவால்களையும் வெற்றி கொள்வதற்கு இறக்குமதியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் வசதியளிப்பதை நோக்காகக் கொண்டு இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனம் பல்வேறு பயிற்சி மற்றும் அறிவுப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திய அதேவேளை இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கான வர்த்தக வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு வியாபாரத்திலிருந்து வியாபாரத்திற்கான மெய்நிகர் அமர்வுகள் மற்றும் வணிக மன்றங்கள் உள்ளடங்கலாக சர்வதேச மட்டங்களில் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. மேலும், இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனமானது 2021 காலப்பகுதியில் பிராந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் பல புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திட்டு இதனூடாக இணைத்தரப்பு அமைப்புக்களுடன் வலையமைப்புகள் நிறுவப்பட்டன. இலங்கை வர்த்தக சம்மேளனமானது சர்வதேசப் பங்காளரொருவருடனான கூட்டிணைப்பில் 2021 இறுதியளவில் *ஏற்றுமதியாளர் பொதுவான சந்தை எண்ணப்பாங்கு கணக்கெடுப்பினை*நடைமுறைப்படுத்தியது. இக் கணக்கெடுப்பானது ஏற்றுமதியாளர்களின் நோக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆண்டுக்கு இருமுறை நடாத்தப்படுகின்றது. மேலும், வர்த்தகம் மற்றும் வியாபார ஊக்குவிப்பிற்கு வசதியளித்து இலங்கை வர்த்தக சம்மேளனம் பன்னாட்டு இணையவழி கருத்தரங்குகள், வியாபாரத்திலிருந்து வியாபாரத்திற்கான அமர்வுகள் மற்றும் உள்நாட்டு அத்துடன் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்புக்கள் போன்றவற்றைக் கொண்ட நிகழ்வுகளையும் நடாத்தியது. மேலும், கைத்தொழில்த் துறைகளுக்கான

2

நிறுவனசார் ஒத்துழைப்பினை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆண்டு காலப்பகுதியில் பன்னாட்டு மட்ட சம்மேளனங்களுடன் 6 புரிந்துணர்வு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டது. அதேவேளை இலங்கை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் சம்மேளனம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு இயலளவு விருத்தி மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு அவசியமான நிதியியல் ஆதரவு வழங்கப்படுவதனை உறுதிசெய்வதற்கான தேசியக் கொள்கை கட்டமைப்பிற்கிணங்க பல கடன்திட்டங்கள் 2021இல் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறிய மற்றும் நடுத்தரளவு பாற்பண்ணையாளர்களை வலுவூட்டுவதை இலக்காகக் கொண்டு ஆண்டுகாலப்பகுதியில் ஆண்டுக்கு 7.5 சதவீத சலுகை வட்டிவீதத்தில் ஒவ்வொருவருக்கும் ரூபா 1 மில்லியன் தொகையுடைய கடன்களை வழங்குகின்ற *கிரி சக்தி* கடன்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய, இக்கொடுகடன் திட்டத்தின் கீழ் 739 கடன் வழங்கப்பட்டு 2021ஆம் ஆண்டில் ரூ.400.4 மில்லியன் தொகை பகிர்ந்தளிப்பதற்கு வழிவகுத்தது. மேலும், சேதன வளமாக்கி, பீடைநாசினிகள் மற்றும் களைநாசினிகள் தயாரிப்பாளர்களுக்கு நிதியியல் ஆதரவினை வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக புதிய கடன்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், சுயதொழில் செய்வோர் மற்றும் தனிப்பட்டவர்களை புத்துயிர்பெறச்செய்வதற்கு கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் தொழிற்படு மூலதனக் கடன் வசதிகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நிதியியல் நிறுவனங்களுக்கு மத்திய வங்கியினால் வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. ஆண்டுகாலப்பகுதியில் நிதி அமைச்சானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு தேசிய கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினைத் தாபிப்பதனையும் துரிதப்படுத்தியது. மேலும், *கூரைமீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உற்பத்தித் தொடர் கொடுகடன் திட்டமும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கொடுகடன் திட்டங்களும்* கொடையாளி முகவராண்மையின் நிதியியல் ஆதரவுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. 2021 இறுதியளவில் இவ்விரு கொடுகடன் திட்டடங்களின் கீழ் ரூ.23.4 பில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

கட்டடவாக்கம், மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

உண்மைச் சொத்து மற்றும் வீடமைப்புக்கான புதுப்பிக்கப்பட்ட கேள்வி மற்றும் கருத்திட்டங்களை மீளத்தொடங்கியமை என்பன மூலம் வலுப்பெற்று, கட்டடவாக்க சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவாகிய 13.2 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2021இல் 1.9 சதவீதத்தினால் படிப்படியாக உயர்வடைந்த போதிலும் மூலப்பொருள் பற்றாக்குறைகள் இத்துறை முழுமையாக மீட்சியடைவதை தடைப்படுத்தின. கட்டடவாக்கத்துடன் தொடர்புபட்ட குறிகாட்டிகளைக் கருத்திற்கொள்கையில், 2021 காலப்பகுதியில் நாட்டின் மொத்த சீமெந்து கிடைக்கப்பெறும் தன்மையானது சிறிய வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, கட்டடப்பொருட்கள் இறக்குமதிகள் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. அதேவேளை, தனிப்பட்ட வீடமைப்பு, கட்டடவாக்க நடவடிக்கைகள் உள்ளடங்கலாக கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனும் 2021 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு வளர்ச்சியினைப் பதிவுசெய்து கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக அதிகரித்த நிதியங்கள் கிடைக்கப்பெறும் தன்மையினைச் சுட்டிக்காட்டுகின்றது. எனினும், ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் வெளிப்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலை, உலகளாவிய மற்றும் உள்நாட்டு வழங்கல் சங்கிலிகளிலான இடையூறுகள் என்பன கட்டடவாக்கம் தொடர்புபட்ட நடவடிக்கைகளை வெகுவாகப் பாதித்தன. வழங்கல்பக்க தடைகள் விசேடமாக, சீமெந்து, உருக்கு மற்றும் ஓடுகள் போன்ற முக்கிய மூலப்பொருட்கள் பற்றாக்குறை மற்றும் சடுதியான விலை அதிகரிப்புக்கள் என்பன கட்டடவாக்க நடவடிக்கைகளின் விரிவுபடுத்தலில் தாக்கம் செலுத்தி தொழில்துறையின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலையும் தடைப்படுத்தின என மத்திய வங்கியினால் நடாத்தப்படும் கட்டடவாக்கம் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வியாபாரக் அளவீடுகள் குறிப்பிட்டன. அதேவேளை, மணல் அகழ்தல் போன்ற கட்டுமான நடவடிக்கைகளுக்கு உள்ளீடுகளை வழங்குகின்ற அகழ்வு நடவடிக்கைகளை பிரதானமாக உள்ளடக்குகின்ற சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளும் 2020இல் பதிவாகிய 12.5 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் மீட்சியிலிருந்து பெருமளவு நன்மையடைந்து 2021இல் 2.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. சுரங்கமகழ்தல் தொடர்புபட்ட ஏனைய குறிகாட்டிகளை பொறுத்தவரை பொசுபேற்று உற்பத்தி 2021இல் அதிகரிப்பினைப் பதிவுசெய்து சுரங்கமகழ்வு நடவடிக்கைகளில் சாதகமான செயலாற்றத்தினை எடுத்துக்காட்டியது. இரத்தினக்கல் அகழ்தலுடன் தொடர்புபட்ட குறிகாட்டிகளைக் கருத்திற்கொள்கையில், இரத்தினக்கல் ஏற்றுமதி அளவுகள் 2021இல் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு

மின்வலு மற்றும் எரிவாயு வழங்கல் தொடர்புபட்ட நடவடிக்கைகளினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவாகிய 0.8 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.9 சதவீதம் மீளெழுச்சி பெற்றது. இவ்வகையில் மேம்படுதலுக்கு பாரியளவில் பங்களிப்புச்செய்த மின்வலு, எரிவாயு, நீராவி மற்றும் வாயுச்சீராக்கி வழங்கல் நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 1.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில்

ஆண்டுகாலப்பகுதியில் 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மின்வலு உற்பத்தித் தரவுகளைக் கருத்திற்கொள்கையில், பொருளாதாரத்தில் ஏற்பட்ட மீட்சியுடன் கைத்தொழில் துறையிலிருந்து கிடைத்த உயர்வான கேள்வியினைப் பிரதான காரணமாகக் கொண்டு மொத்த மின்வலு உற்பத்தி குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இவ்வகையினுள் உள்ள ஏனைய துணைப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியில் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் 2020இன் 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றன. எனினும், கழிவுநீர், கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றுதல் நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 1.0 சதவீத வீழ்ச்சிக்கு மேல் 2021இல் 3.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பணிகள்

பொருளாதார நடவடிக்கைகள் மீளக்கட்டியெழுப்பப்பட்டு வீட்டலகு நுகர்வு படிப்படியாக உயர்வடைந்தமையுடன், பணிகளின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இன் 1.6 சதவீத சரிவிலிருந்து 2021இல் 3.0 சதவீதத்தினால் உயர்வடைந்தது. நிதியியல் பணிகளில் விரிவடைதல், இம்மீட்சிக்கு உறுதுணையளித்த அதேவேளை, மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கை அத்துடன் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் என்பன உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதிலிருந்து நன்மையடைந்து ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்தன. மேலும், உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட கேள்வியினால் துணையளிக்கப்பட்டு தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கல், தொலைத்தொடர்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகள் என்பனவும் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்தன. மேலும், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், மற்றும் தொழில்சார் பணிகள், காப்புறுதி மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பவற்றில் ஏற்பட்ட மீட்சியானது பொது நிர்வாகம், கல்விப் பணிகள், அஞ்சல் மற்றும் துரித அஞ்சல் பணிகள்

வரைபடம் 2.11
பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.12
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (அ)



(அ) கொ.மு.சுட்டெண்ணானது கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் மனோபாவ அளவீட்டு அடிப்படையில் அமைந்ததாகும். இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

என்பவற்றுடன் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தது. மேலும், தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள், தொடர்ச்சியாக இரண்டு ஆண்டு சுருக்கத்திற்குப் பின்னர், ஆண்டுகாலப்பகுதியில் மீளெழுச்சியுற்று மிதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. மத்திய வங்கியினால் மாதாந்தம் தொகுக்கப்படுகின்ற பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், மாதத்திற்கு மாத அடிப்படையில் பணிகள் செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற ஒட்டுமொத்த விரிவடைதலொன்றினை எடுத்துக்காட்டியது. மேலும், பணிகள் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கேள்வி மற்றும் விற்பனை துணைச் சுட்டெண்கள், ஆண்டுகாலப்பகுதியில் சராசரியாக அதிகரிப்பொன்றினைக் குறித்துக்காட்டி, பணிகள் நடவடிக்கைகளில் உயர்வடைதலினை எடுத்துக்காட்டின.

மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

கொள்கைசார் தூண்டல்கள் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை என்பன மூலம் தூண்டப்பட்டு மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 1.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் சேர்க்கப்பட்ட பெறுமதி நியதிகளில் 2.0 சதவீத மிதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. நாடு 'புதிய இயல்பு' இன் கீழ் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு படிப்படியாக பின்பற்றியமை மூலம் வர்த்தக நடவடிக்கைகள் உறுதியடைந்தன. மேலும், நிதியியல் உதவி, நுகர்வோரின் செலவிடத்தக்க வருமானத்தினை மிதக்கவிடுதல் போன்றன வாயிலாக அரசாங்கமும் காலமுறையான திரவத்தன்மை ஆதரவினை வழங்கியது. முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் காரணமாக ஆண்டுகாலப்பகுதியில் இறக்குமதிகளைப் பிரதான காரணமாகக் கொண்டு ஆண்டுகாலப்பகுதியில் மொத்த இறக்குமதி அளவுச் சுட்டெண் அதிகரிப்பினைப் பதிவுசெய்த

அதேவேளை, இறக்குமதிசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் அளவு சிறிய வீழ்ச்சியொன்றினையே பதிவுசெய்தது. இதற்கு மேலதிகமாக, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் கணிசமாக அதிகரித்தன.

2

போக்குவரத்தும் களஞ்சியப்படுத்தலும்

அவ்வப்போது நடமாட்டக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையுடன் போக்குவரத்து நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவுசெய்யப்பட்ட 6.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதத்தினால் சிறிதளவு மீட்சியடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்று தொடங்கியதிலிருந்து வெகுவாகப் பதிக்கப்பட்ட போக்குவரத்து நடவடிக்கைகள் 2021 இன் ஆரம்ப காலப் பகுதியில் மேம்பாடொன்றை எடுத்துக்காட்டிய, போதிலும், உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலை தோற்றம் பெற்றதன் பின்னர் குறைவடைந்தது. எனினும், நான்காவது காலாண்டின் தொடக்கத்திலிருந்து நடமாட்டக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமை போக்குவரத்து நடவடிக்கைகள் புத்துயிர்பெறுவதற்கு நன்மையளித்தன. நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட காலப்பகுதியில் பொதுப் போக்குவரத்து குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை அத்துடன் மட்டுப்படுத்தப்பட்டளவில் கிடைக்கப்பெற்றமை என்பன காரணமாக பயணிகள் போக்குவரத்து மோசமாகப் பாதிக்கப்பட்ட போதிலும் அத்தியாவசியச் சேவையொன்றாக பொருட் போக்குவரத்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் பரந்தளவில் தடங்கலற்றுக் காணப்பட்டது. உலகளாவிய வழங்கல் சங்கிலிகள் நீங்கியமைக்கு மத்தியில் துறைமுகங்களின் தொழிற்பாடுகளும் ஆண்டுகாலப்பகுதியில் உயர்வடைந்தன. அதற்கமைய, கொள்கலன் கையாளுதலில் (இருபது அடிக்குச் சமமான அலகு நியதிகளில்), கப்பற்பொருள் கையாளுதலில் ஆண்டு காலப்பகுதியில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மேலும், சிறிலங்கன் எயார்லைன்ஸ் மூலம் கொண்டுசென்ற பொருட் போக்குவரத்து கி.மீற்றர் தூரங்கள் 2021இல் அதிகரித்தன. எனினும், இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து தொழிற்படுத்துநர்கள் மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் மூலம் தொழிற்படுத்தப்பட்ட பயணி கி.மீற்றர் தூரங்கள் 2021 காலப்பகுதியில் தொடர்ந்தும் சுருக்கமடைந்தன.

தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் விடுமுறையைக் கழித்தல் என்பவற்றில் படிப்படியான அதிகரிப்பு, தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு செயலூக்கத்தினை வழங்கி 2020இல் பதிவாகிய 39.4 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 1.9 சதவீதத்தினால் மீட்சிபெற்றது. பன்னாட்டு மற்றும் உள்நாட்டு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையின் காரணமாக சுற்றுலா தொடர்புபட்ட நடவடிக்கைகள் உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. கவர்ச்சிகரமான சுற்றுலாப் பயணப் பொதிகளுடன் இணைத்து பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக குறைந்தளவு மக்கள் மாத்திரம் அணுகக்கூடிய இடத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குழுவாகவிருத்தலை அறிமுகப்படுத்தியதன் மூலம் உள்வருகின்ற பயணத்தடைகளை நாடு படிப்படியாக தளர்த்தியமை ஆண்டின் இறுதிப் பாகத்தினை நோக்கி சுற்றுலாப் பயணி வருகைகளில் வலுவான மாதத்திற்கு மாத வளர்ச்சியொன்றினை ஏற்படுத்தியது. மேலும், உள்நாட்டு பயணிகளுக்காக பல விடுதிகள் பிரத்தியேகமான தள்ளுபடிகளை வழங்கியமையினால் ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு சுற்றுலா நடவடிக்கைகளும் மீளெழுச்சிபெற்றன. எவ்வாறாயினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையினால் தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகளின் மீட்சி பெருமளவு தடைப்பட்டிருந்தது.

நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

நிதியியல் பணிகளில் தொடர்ச்சியான அதிகரிப்பானது நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதியை வழிநடாத்தியது, இது, 2020இல் பதிவாகிய 4.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 5.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதற்கமைய, நிதியியல் பணிகள் நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் என்பன 2020இன் 10.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதத்தினால் விரிவடைந்தன. சவால்மிக்க சூழலுக்கு மத்தியிலும் நிதியியல் பணிகளின் தொடர்ச்சியான விரிவடைதலினைப் பிரதிபலித்து, வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் கடன் அளவு ஆண்டுகாலப்பகுதியில் கணிசமாக அதிகரித்த அதேவேளை, வைப்புத் தளமும் விரிவடைந்தது. மேலும், காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கியினால் நடாத்தப்படுகின்ற கொடுகடன் வழங்கல் அளவீட்டில் குறித்துக்காட்டப்பட்டவாறு குறைவான வட்டி வீதச் சூழலின் காரணமாக கொடுகடனுக்கான கேள்வி உயர்வான மட்டங்களில் காணப்பட்ட அதேவேளை, அநேகமான காலப்பகுதியில் நிலவிய மிகையான திரவத்தன்மையின் காரணமாக கடன் வழங்குவதற்கான விருப்பமும் ஆரோக்கியமான மட்டங்களில் காணப்பட்டன. அதேவேளை, காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 3.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 5.1 சதவீதத்தினால் மீட்சியடைந்த அதேவேளை, வதிவிடச் சொத்துடமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2020இல் எதிர்கொண்ட 1.2 சதவீத சுருக்கதிலிருந்து மீட்சிபெற்று 2021இல் 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றன.

தகவல் மற்றும் தொடர்பூட்டல்

உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து கிடைத்த வாய்ப்புகளிலிருந்து நன்மையடைந்து தொடர்பூட்டல் மற்றும் தகவல்தொழில்நுட்ப செய்நிரலாக்கல் அத்துடன் ஆலோசனைச் சேவைகள் என்பவற்றின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் அடையப்பெற்ற 14.1 சதவீதத்திற்கு மேல் 17.5 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்து 2021இல் தொடர்ந்தும் உத்வேகமடைந்தது. தொலைத்தொடர்பு தொழில்துறையானது, உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் சமூகப் பொருளாதார இடைத்தொடர்பை பேணுவதில் முக்கிய பங்காற்றியது. இது, வீட்டிலிருந்து பணியாற்றுதல் ஏற்பாடுகள், இணையவழிக் கல்வி மற்றும் பொழுதுபோக்கு என்பன மீது அதிகரித்தளவில் தங்கியிருத்தலுடன் இணைந்து குரல் மற்றும் தரவு என்பவற்றுக்கான உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட மேலதிகக் கேள்வியிலிருந்து கணிசமானளவு நன்மையடைந்தது. அதற்கமைய, தொலைத்தொடர்பு நடவடிக்கைகள், 2020இன் 15.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் 16.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியுற்றது. இத் தொழில்த்துறையானது, செயற்பரப்பு மற்றும் இயலளவு மட்டங்களை விரிவுபடுத்தல், சேவைத்தரத்தினை மேம்படுத்தல் மற்றும் வீட்டிலிருந்து பணியாற்றுதல் அத்துடன் வீட்டிலிருந்து கற்றல் ஏற்பாடுகள் போன்ற தேவைகளுக்கு சேவையளிப்பதற்கு விசேட பொதிகளை அறிமுகப்படுத்தல் என்பனவாயிலாக வலுவான விதத்தில் பதிலிறுத்தியது. அதேவேளை, தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கல் ஆலோசனை மற்றும் அதனோடிணைந்த நடவடிக்கைகளும் டிஜிட்டல் ஊடகம், வலையமைப்பை ஏற்படுத்தல், இணையப் பாதுகாப்பு, கேள்வியின் மீது பெற்றுக்கொள்ளகூடிய கணனிச் சேவைகள் (கிளவுட் கணனிப் பணிகள்), செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியக்கப்படுத்தல் போன்ற தொழில்நுட்பம் அடிப்படையலமைந்த தீர்வுகளுக்கான கேள்வியில் தீடீர் அதிகரிப்பின் மூலம் உந்தப்பட்டு, 2020இல் 10.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 21.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தது.

ஏனைய பணி நடவடிக்கைகள்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முதல் இரண்டு அலைகளினதும் பாதகமான தாக்கங்களின் காரணமாக 2020இல் மந்தமடைந்த ஏனைய பணிகளுடன் தொடர்புபட்ட பொருளாதார நடவடிக்கைகளில் அநேகமானவை மீண்டெழுந்த அலைகளிலிருந்தான இடையூறுகளுக்கு மத்தியில் 2021இல் மீட்சிபெற இயலுமாகவிருந்தன. அதற்கமைய, 2020இல் 6.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்த கலைகள், பொழுதுபோக்கு மற்றும் ஓய்வு, துணி துவைத்தல் பணிகள், முடி திருத்துதல் மற்றும் ஏனைய அழகுசார்ந்த செயற்பாடுகள் அத்துடன் மரணச்சடங்கு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் போன்ற தனிப்பட்ட பணிகளை உள்ளடக்குகின்ற ஏனைய தனிப்பட்ட பணிகள் ஒப்பீட்டுரீதியான சாதகமான சூழலின் காரணமாக 2021இல் 1.4 சதவீதத்தினாலும் 1.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியுற்றன. மேலும் தொழில்சார் பணிகள் 2020இல் பதிவுசெய்த 2.7 சுருக்கத்திலிருந்து மீண்டு 2021இல் 1.4 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், பொது நிர்வாகமும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் 2020இல் அவதானிக்கப்பட்ட 1.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 1.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளை, உலகளாவிய நோய்த் தொற்றுக் காலப்பகுதியில் முனைப்புடன் காணப்பட்ட மனித சுகாதார நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 4.3 சதவீதத்திற்கு மேல் 2021இல் 5.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், கல்வி, அஞ்சல் மற்றும் விரைவுப் பொதி பணிகள் மற்றும் நிகழ்ச்சிகள் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் ஆண்டுகாலப்பகுதியில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தன.

2.5 செலவினம்

பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தை உள்ளடக்குகின்ற மொத்த உள்நாட்டுச் செலவினமானது நுகர்வு மற்றும் முதலீடு இரண்டினதும் செலவினத்தில் ஏற்பட்ட விரிவடைதலினால் துணையளிக்கப்பட்டு 2020இன் 0.5 சதவீதம் கொண்ட சிறிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் நடப்பு விலைகளில் 13.1 சதவீதம் கொண்ட உயர்வான வீதத்தினால் வளர்ச்சியுற்றது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை அதேபோன்று இறைக் கொள்கை தூண்டல்கள் என்பன இறுதி நுகர்வுச் செலவினத்தை வலுப்படுத்தின. அதற்கமைய, மொத்த உள்நாட்டுச் செலவினத்திற்கு முக்கியமாகப் பங்களிக்கின்ற நுகர்வுச் செலவினம் 2021இல் 9.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை, முதலீட்டுச் செலவினமும் 2021இல் 23.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்து மீளெழுச்சியுற்றது. வெளிநாட்டுப் பக்கத்தில், நடப்பு விலையில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2020இல் பதிவாகிய 5.1 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 31.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தது. இக்காலப்பகுதியில் நிலவிய உயர்வான இறக்குமதி விலைகளின் பகுதியளவான காரணத்தினால் பெருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியில் 23.3 சதவீதத்தினை விஞ்சிச்சென்ற பொருட்கள் மற்றும் பணிகள் இறக்குமதியில் 25.7 சதவீதம் கொண்ட வளர்ச்சி இதற்குக் காரணமாக அமைந்தது. அதற்கமைய, மொத்த உள்நாட்டுச் செலவினத்தினதும் தேறிய வெளிநாட்டுக் கேள்வியினதும் கூட்டாகக் காணப்படுகின்ற மொ.உ.உற்பத்தி நடப்பு விலைகளில் 2020இன் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 11.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. நிலையான விலைகளிலான மதிப்பீடுகளைக் கருத்திற்கொள்கையில், நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் ஆகியன 2021இல்

2

சிறப்புக்குறிப்பு 4

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை வளர்ச்சியைத் தூண்டுபவைகளாக ஊக்குவித்தல் மற்றும் சவால்கள்

அறிமுகம்

உலகெங்கிலுமுள்ள பெரும்பாலான நாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் முக்கிய மையத் தொழில்களாகத் தொடர்ந்தும் விளங்கி, தொழில்முயற்சிகளின் பாரிய பெரும்பான்மைக்கு வகைகூறிய அதேவேளையில், தொழில் வாய்ப்பில் பாரிய மூலத்தினை வழங்குமொன்றாகவும் வெளியீட்டில் கணிசமான விகிதத்தினை விளைவிப்பனவாகவும் காணப்படுகின்றன. பெரும்பாலான நாடுகளின் தொழில் வாய்ப்பில் இவை மூன்றிலிரண்டு பங்கிற்கு வகைகூறுவதுடன் மொ.உ.உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கும் பங்களிக்கின்றன.[1] பொருளாதார வெளியீட்டிற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையின் பங்களிப்பு நடுத்தர மற்றும் குறைந்த வருமான நாடுகளிலும் பார்க்க உயர்ந்த வருமான நாடுகளில் உயர்வாக இருக்குமென பொதுவாகக் கண்டறியப்பட்டுள்ளதுடன் வளர்ச்சிக்கான அவற்றின் பங்களிப்பினது உள்ளார்ந்த ஆற்றல், குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது (கொன்சேல்ஸ், ஹோம்ஸ் மற்றும் லோரா, 2014).

வரைபடம் சி.கு. 4.1
நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் பாரிய நிறுவனங்களின் சராசரிப் பங்குகள் (சதவீதம்)



மூலம்: நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி நாட்டு குறிகாட்டிகள் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் (கொன்சேல்ஸ், ஹோம்ஸ் மற்றும் லோரா 2014) 2019 இலிருந்து புதிய தரவுகள் நுண்பாக, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சி பொருளாதார குறிகாட்டிகளின் சிறிய நடுத்தர தொழில்முயற்சி நிதியியல் மன்றத்தில் கிடைக்கின்றன (https://www.smefinanceforum.org)[1]

பொதுவாக, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் சமூகக் கொத்தணியின் கிராமிய மற்றும் தாழ்ந்த வருமான துறைகள் உட்பட அனைத்து வடிவங்களிலும் பரந்து காணப்படுவதுடன், அத்தகைய நிறுவனங்களில் பெரும்பங்கு முறைசாரா நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. தோற்றம்பெற்றுவரும் நாடுகளில் ஏறத்தாழ 365 - 445 மில்லியன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள வேளையில், அத்தகைய நிறுவனங்களில் நான்கில் மூன்று பங்கு முறைசாரா நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. (பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு 2016). நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் குறைந்த வருமான குடும்பங்களின் வருமான மட்டங்களை அதிகரிப்பதற்குப் பங்களிப்பதுடன் இது வருமானப் பங்கீட்டில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் குறைவடையவும் பங்களிக்கிறது. மேலும், அவற்றின் சிறிய அளவின் காரணமாகவும் வாடிக்கையாளரின் செறிவுமிகுந்த வியாபார மாதிரியாகவும் விளங்குவதனால், சிறிய வியாபாரங்கள் மிக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்தனவாகவும் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டிருப்பதன் மூலம் பொருளாதாரத் தோற்றப்பாட்டில் ஏற்படும் மாற்றங்களுக்குச் சிறந்த முறையில் ஈடுகொடுப்பனவாகவும் காணப்படுகின்ற வேளையில், தொழில்நுட்பத்தில் காணப்படும் புதிய முன்னேற்றங்களை விரைவில் பின்பற்றக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பதனை எடுத்துக்காட்டுவனவாகவுமுள்ளன. ஆகவே, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பொருளாதாரமொன்றின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை குறிப்பிட்டளவிற்கு மேம்படுத்துமென்பதுடன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும்.

வளர்ச்சியைத் தூண்டுபவைகளாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள்

இறுதியில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பாரிய நிறுவனங்களாக பரிணாமமடையும் என்பதனைக் கருத்திற்கொள்கையில், பொருளாதார வளர்ச்சிக்கான அவற்றின் பங்களிப்பு தவிர்க்க முடியாததாகக் காணப்படுகிறது. கண்டறியப்பட்ட விடயங்களும் அவதானிப்புக்களும் நாட்டிற்கு நாடு வேறுபட்ட போதும், நுண்பாக, சிறிய நடுத்தரளவு மற்றும் தொழில்முயற்சிகளின் முக்கியத்துவத்திற்கும் நாடொன்றின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்குமிடையே நேர்க்கணியமான தொடர்புகள் காணப்படுவதனை நிரூபிப்பதற்கு கணிசமான புள்ளிவிபரச் சான்றுகள் காணப்படுகின்றன. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் தொழில் வழங்குநராக, வளர்ச்சியைத் தூண்டுபவராக, பாரிய நிறுவனங்களுக்கான நன்னிலமாக, புத்தாக்கங்களுக்கான வசதியளிப்பவராக தேசிய பொருளாதாரத்திற்கு முக்கியமான பங்களிப்பாளராக விளங்குவதன் மூலம் அனைத்தையுமுள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சிக்கு இட்டுச்செல்வதாகக் காணப்படுகிறது.

பாரிய நிறுவனங்கள் வளர்ச்சி பெறுவதற்கான நன்னிலம்: வெற்றிபெற்ற பெரும்பாலான பொருளாதாரங்கள் பாரிய மற்றும் சிறிய நிறுவனங்கள் இரண்டையும் கொண்ட ஆரோக்கியமான கலப்பான தன்மையொன்றினை உள்ளடக்கியிருந்தன. பாரிய நிறுவனங்கள் உண்மையில் கூடியளவு உற்பத்தித்திறன் கொண்டனவாகவும் மூலதனச் செறிவினைக் கொண்ட செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டனவாகவும் பாரியளவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு வசதியளிப்பதாகவும் விளைவு வளர்ச்சிப் பிரிவுகளுக்கு புதிய அறிவினைப் பங்களிக்கக்கூடிய விதத்தில் அவற்றினை நோக்கி வசதியைத் திருப்புவனவாகவும்

1 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி நிதியியல் மன்றத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி பொருளாதாரக் குறிக்காட்டிகளின் தரவுத்தளம் 2019இலிருந்தான தரவினை அடிப்படையாகக் கொண்டதுடன் (https://www.sas.com/en_us/insights/big-data/what-is-big-data.html) இது 176 நாடுகளிலுள்ள பதிவுசெய்யப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் இரண்டாந்தரத் தரவினை உள்ளடக்குகிறது. கிடைக்கத்தக்க பிந்திய ஆண்டிற்கான தகவல்கள் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளதுடன் இது எல்லா நாடுகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மூலவளங்களிலும் நேரத்திலும் காணப்படும் வேறுபாடு காரணமாக தரவுகள் நியமப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக நாடுகளுக்கிடையிலான ஒப்பீடு ஓரளவிற்கு மட்டுப்படுத்தப்படுகிறது. கிடைப்பனவின் அடிப்படையில், சராசரி பெறுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட தரவுப் புள்ளிகளின் எண்ணிக்கை தொழில்நிலை பங்குகளுக்கு 80 ஆகவும் பெறுமதிகூட்டப்பட்ட பங்குகளுக்கு 38 ஆகவும் காணப்படுகிறது.

காணப்படுகின்றன. மறுபுறுத்தல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் அத்தகைய பாரிய நிறுவனங்கள் வளர்வதற்கான நன்னிலமாகத் தொழிற்படுவதன் மூலம் முக்கிய பங்கொன்றினை ஆற்றுவதன் வாயிலாக வழங்கல் சங்கிலியை விரிவுபடுத்துவதன் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வியாபாரம் மேம்படுத்தப்படுகிறது. மிக நவீனத்துவமான உலகின் பாரிய இராட்சத வியாபார நிறுவனங்களான சாம்சுங்க், அப்பிள், மைக்ரோசொவ்ற், பேஸ்புக் போன்றவை அவற்றின் தொழிற்பாடுகளைச் சிறிய வியாபாரங்களாக ஆரம்பித்து தற்போதைய அவற்றின் நிலைக்கு அபிவிருத்தி செய்திருப்பது எந்தவொரு அளவிற்கும் மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியவாறான உள்ளார்ந்த வளத்தினை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் கொண்டிருப்பதனையும் இறுதியில் தொடர்பான தேசிய மற்றும் பிராந்திய பொருளாதாரங்களுக்குத் தூண்டுதலளிப்பனவாக இருப்பதனையும் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், ஆரோக்கியமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறையொன்று நாட்டின் பொதுமக்களிடையே தொழில்முயற்சியாண்மைத் தேர்ச்சியை மேம்படுத்தப் பங்களிக்க முடியும். இதன் மூலம் நீடித்துநிலைத்திருக்கத்தக்க வளர்ச்சிக்கு முற்தேவைப்பாடாக விளங்கும் மனித மூலதனத்தினைப் பெருக்க முடியும்.

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் தொழில்நிலையினையும் பொருளாதாரமொன்றிலுள்ள ஒட்டுமொத்த வெளியீட்டினையும் அதிகரிக்கின்றது: நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளில் பாரிய பிரிவு குறிப்பிடத்தக்களவு பாரிய எண்ணிக்கை கொண்ட தொழில்முயற்சிகளுடன் தொடர்புபட்டனவாக இருப்பனதால் குடித்தொகையில் பெரும் பங்கினருக்கு தொழில் வாய்ப்பினையும் வழங்குகிறது. இதன் மூலம் இது பொதுமக்களின் செலவிடல் சக்தியை அதிகரித்து, நுகர்வினைத் தூண்டி, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் உத்வேகப்படுத்துகிறது. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் முழுவதிலும் பரந்து காணப்பட்டமையின் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்களுக்கு வலுவூட்டுவதுடன் சமத்துவமின்மை குறைவடையவும் பங்களிக்கிறது. இந்நிறுவனங்கள் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை எய்துவதில் முக்கியமானதொரு வகிபாகத்தினைக் கொண்டிருப்பதுடன் அதன் வாயிலாக தொடர்பான பொருளாதாரம் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியைப் பதிவுசெய்வதற்கும் ஆதரவளித்தது. மேலும், நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கின் சாதனையொன்றாகப் பொதுவாக நாட்டின் சாத்தியமான தோற்றப்பாடொன்றினை வழங்குவதன் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையானது, முதலீட்டாளர் மனோபாவத்தினை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கு மறைமுகமான பங்களிப்பொன்றை ஆற்றுகிறது.

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள், நிறுவனங்களிடையே போட்டித்தன்மையினை அதிகரிக்கின்றன: நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் சிறிய பெறுமதிகூடிய நிலைகளை முன்னாய்வுகளை அடையாளம் காண்பதன் மூலம் அவை தொடர்பான வியாபாரச் சூழல்களில் போட்டித்தன்மையினை அதிகரிக்கின்றன. இயலுமைப்படுத்துகின்ற சூழலொன்றின் கீழ், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் உருவாக்கப்பட்ட போட்டித்தன்மையின் அதிகரித்த மட்டங்கள் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிப் பாதையின் இன்றியமையாத மூலமொன்றாக விளங்கும் புதிய புத்தாக்க யோசனைகளை ஊக்குவிக்கும். பகிரப்பட்ட பயணங்கள் மற்றும் வீடுகளிலேயே தங்கியிருப்பதற்கு வசதியளிக்கும் எயார்ப்ப் போன்ற புதிய யோசனைகளுக்குக் கிடைத்த அண்மைய வெற்றிகள் மற்றும் அதேபோன்ற பல்வேறுபட்ட முறைமைகள் பின்பற்றப்பட்டமை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் புத்தாக்க இயலாற்றலுக்கான சான்றுகளையும் வழமையாக பாரிய பாரம்பரிய நிறுவனங்களின் பகுதியொன்றாக இராத பெரும் எண்ணிக்கையான ஆர்வலர்களின் வாழ்க்கையை எவ்வாறு உயர்த்த முடியும் என்பதற்கான சான்றுகளையும் அவைகளால் வழங்க முடியும்.

அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம்பெற்று வருகின்ற பொருளாதாரங்களில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் முக்கியத்துவம்

அபிவிருத்தி செய்முறைக்கான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் பங்களிப்பு தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் மிக முக்கியமானவையாகும். ஏனெனில் அவை நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி மற்றும் புத்தாக்க வசதிப்படுத்தல்களின் ஊடாக வறுமை ஒழிப்பின் மீது காத்திரமான பங்களிப்பினை ஆற்றுவதேயாகும். உலக வங்கியின் மதிப்பீடுகளின் படி வளர்ந்துவரும் குடித்தொகையினருக்கு வசதியளிக்கும் பொருட்டு 2030 அளவில் ஏறத்தாழ 600 மில்லியன் வேலை வாய்ப்புக்கள் தேவைப்படுகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் குடித்தொகை வளர்ச்சியில் காணப்படும் உயர்ந்த மட்டங்களைக் கருத்திற் கொள்கையில், தொழில் வழங்குநர் என்ற ரீதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வகிபாகம் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக மாறியிருக்கின்றன. இது தொடர்பில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பொதுவாக கூடியளவிற்கு தொழில்செறிவு கொண்டனவாகவும் அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம்பெற்ற வருகின்ற நாடுகளின் பாரிய தொழிற்படையினை ஈர்த்துக் கொள்ளக்கூடிய உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருப்பவையாவும் காணப்படுகின்றன. மேலும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பினை மேம்படுத்த உதவும் குறைப்பயன்பாட்டினைக் கொண்ட இயற்கை மூலவளங்களைக் காத்திரமான முறையில் பயன்படுத்தவும் மற்றும் பல்வேறுபட்ட துறைகளுக்குமிடையே பொருளாதார நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதற்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளைப் பயன்படுத்த முடியும். அதேநேரம், இயலுமைப்படுத்துகின்ற நிபந்தனைகளைக் கருத்திற் கொள்கையில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் புத்தாக்க இயலளவு, வளர்ச்சி தேக்கமடைவதனைத் தவிர்ப்பதற்கு அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம்பெற்று வருகின்ற பொருளாதாரங்களுக்கு உதவமுடியும் என்பதுடன் உயர்ந்த வருமானம் பெறும் நாடுகளாக அவை உயர்வடையவும் அவர்களை இயலுமைப்படுத்தும். கடந்த ஒரு சில தசாப்தங்களாக, தொடர்பான வியாபார சூழல்களில் போட்டித்தன்மையுடையனவாக இருப்பதற்கு புத்தாக்கம் தேவைப்படுகின்ற நாடுகளான கொரியா, கொங்கொங், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற தென்கிழக்காசிய நாடுகளினால் ஆரோக்கியமான வளர்ச்சி வீதங்கள் பதிவுசெய்யப்பட்டமைக்கு நுண்பாக, சிறிய

2

மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தூண்டுதல்களே காரணமாகும் என வாதிடப்படுகிறது (ஆசியான் உற்பத்தியாக்க அமைப்பு 2015).

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் எதிர்நோக்கப்படும் சவால்கள்

குறிப்பிட்ட சில பண்புகள், உதாரணமாக, நுண்பாக, சிறிய, நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் சிறிய அளவு சில துறைகளைக் பொறுத்தவரை அனுகூலமானவையாக இருக்கக்கூடும். நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தன்மை சில சமயங்களில் பிரச்சனைக்குரியதாக மாறி கீழே ஆராயப்படுகின்றவாறு கணிசமான சவால்களுக்கு இட்டுச்செல்லலாம் என்பதுடன் இறுதியில் பாரிய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் குறைந்த உற்பத்தித்திறனுக்கும் வழிவகுக்கும்.

நிதியினை அணுகுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட வசதி: அநேகமான நாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் எதிர்நோக்கப்படும் முக்கிய தடைகளிலொன்றாக நிதியினை அணுகுவதில் காணப்படும் இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன. ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டவாறு, நிதியினைப் பெறுவதற்கு காணப்படும் அத்தகைய வரையறைகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கு முக்கிய தடையாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதன் விளைவாக, இந்நிறுவனங்களில் பெரும்பாலானவற்றிற்கு மூலதனச் செறிவுமிக்க செயற்றிட்டங்களை மேற்கொள்வது கடினமாகக் காணப்படுகின்றது. முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் இடர்ப்பாடுகளுக்கு எடுத்துக்காட்டப்படுகின்ற காரணங்கள் மற்றைய விடயங்களுடன் சமச்சீரற்ற தகவல்கள் பிணையுறுதிகளின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு மற்றும் குறைந்த தரம், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் குறைந்த நிதியியல் அறிவு, கடமை தவறும் வீதம் உயர்வாக இருத்தல் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மதிப்பிடுவதில் கடன் வழங்குபவர்களின் நிபுணத்துவம் குறைவாக இருத்தல் என்பனவற்றையும் உள்ளடக்குகின்றன. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்குக் காணப்படும் இவ்வரையறைகளின் விளைவாக வங்கிகளுக்கூடாக நிதியிடலைக் குறிப்பாக, செயற்றிட்ட நிதியிடலைப் பெறுவது, அதுவும் பிணையுறுதியின்றி பெறுவது இடர்ப்பாடானதாக மாறியிருக்கிறது.

மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரத் தேர்ச்சி மற்றும் முக்கிய ஊழியர்களை நிரந்தரமாக வைத்திருக்கும் இயலாற்றல்: எந்தவொரு வியாபார முயற்சியின் வெற்றிக்கும் தவிர்க்க முடியாத கூறாக விளங்கும் நிதி, கணக்கீடு, வரி விதிப்பு, மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் போன்றவை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளில் அவதானிக்கப்பட்ட முக்கிய பிரச்சனைகளாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. மேலும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் இயல்பாகவே பாரிய இழப்புக்களைக் ஈர்த்துக் கொள்வதற்குப் போதுமான தாங்கிருப்புக்களைக் கொண்டிருப்பதில்லை. எனவே, அவை வியாபார சுழற்சி மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு துறைகளிலிருந்து தோன்றுகின்ற அதிர்வு என்பனவற்றினால் உயர்ந்தளவிற்குப் பாதிக்கப்படும் தன்மையினைக் கொண்டிருக்கின்றன. முக்கிய ஊழியர்களை நிரந்தரமாக வைத்திருக்க இயலாமை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் முன்னேற்றத்தினைத் தடுக்கின்ற கரிசனைக்குரிய விடயமாக நோக்கப்படுகிறது. அநேக சந்தர்ப்பங்களில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் வழங்கப்படும் தொழில் வாய்ப்புக்கள் தற்காலிகமாக இருக்குமென்பதனால் அது ஊழியர்கள் வேறு தொழில் வாய்ப்புக்களை நாடிச் செல்வதற்குத் தொடர்ச்சியாகத் தூண்டுகிறது. அதேநேரம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் குறிப்பாக தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்குப் பாரிய நிறுவனங்களினால் வழங்கப்படும் சம்பளம் மற்றும் நன்மைகளுடன் போட்டியிட முடியாமலிருப்பது உயர்ந்த தொழிலாளர் புரள்வுகளைத் தோற்றுவிப்பதுடன் சிறிய வியாபாரங்களின் அபிவிருத்தியைத் தூண்டும் இயலாற்றலைக் கொண்ட அத்தகைய தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை நிரந்தரமாக வைத்திருப்பதையும் இயலாததாக்குகிறது. இதன் விளைவாக, அத்தகைய வியாபாரங்களில் பெரும்பாலானவை சொந்தக்காரர்களினாலேயே முகாமை செய்யப்பட்டு தொழிற்படுத்தப்படுவதுடன் இதன் விளைவாக வெற்றிகரமான தொழில்முயற்சிகளில் கூட முகாமைத்துவம், ஆளுகை, நிதி மற்றும் உறுதித்தன்மை என்பனவற்றில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஒழுங்குமுறைப்படுத்தல் தடைகள் மற்றும் முரண்பாடான கொள்கைகள்: அநேகமான நாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் வியாபாரப் பிரிவு, தரம் மற்றும் சூழல் சார்ந்த தரங்கள், அறிக்கையிடும் தேவைப்பாடுகள் வரி விதிப்பு போன்ற பல்வேறுபட்ட அம்சங்கள் தொடர்பில் காணப்படும் ஒழுங்குமுறைப்படுத்தல் தடைகளின் காரணமாக இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றன. எனினும், நாடுகளைப் பொறுத்து, இவ்விடர்ப்பாடுகளும் அவற்றின் தாக்கமும் வேறுபடுகின்றன. உதாரணமாக, கடந்த ஒரு தசாப்த காலமாக அல்லது அதற்கும் மேலாக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு நாடுகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் தடைகள் பெருமளவிற்கு குறைக்கப்பட்டிருந்த போதும் அத்தகைய தடைகள் தொடர்பான சிக்கல் தன்மை நாடுகள் முழுவதிலும் தொடர்ந்தும் பரந்து காணப்படுகிறது (பொ.ஒ.அ.நா 2018). தேர்ச்சி மற்றும் நிதியின் கிடைப்பனவு குறைவாக உள்ளமையின் காரணமாக, உண்மையில் சிறிய வியாபாரங்கள் ஒழுங்குமுறைப்படுத்தலின் சிக்கலான தன்மை பற்றி காத்திரமான முறையில் ஆராய்வதற்கான இயலாற்றலைக் கொண்டிருப்பதில்லை. இதன் விளைவாக, வியாபாரம் செய்யும் சூழலில் காணப்படும் ஒட்டுமொத்த வரையறைகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை பல்வேறுபட்ட இடர்ப்பாடுகளுக்கு இட்டுச்செல்லக்கூடும். குறிப்பாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இவை ஒப்பீட்டு ரீதியில் பலயீனமான நிறுவன ரீதியான கட்டமைப்பில் தொழிற்படுவதனால் இத்தகைய நிலைமைகளைக் காணமுடியும். மேலும், நிலையான கொள்கைகள் இல்லாமையும் குறைந்த வெளிப்படைத் தன்மையும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் எதிர்நோக்கப்படும் இவ்வொழுங்குமுறைப்படுத்தல் தடைகளை மேலும் அதிகரிக்கின்றன.

குறைந்த சந்தைப் பங்கு மற்றும் சந்தையை அணுகும் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை: சந்தைப் பங்குகள் மற்றும் சந்தைகளை அணுகுகின்ற தன்மைகள் குறைவாக இருப்பதன் காரணமாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் வருமானமளிக்கும் வழிகளைப்

பேணுவதில் சவால்களை எதிர்நோக்குவதுடன் பொதுவாக குறைந்த விற்பனைகளாலும் பாதிக்கப்படுகின்றன. இதற்கு மற்றைய காரணிகளுடன் சேர்ந்து பாரிய விளம்பரப்படுத்தல் வரவுசெலவுத் திட்டத்திற்கான பெருமளவு தொகையினைச் செலவிட முடியாமலுள்ளமை, மட்டுப்படுத்தப்பட்ட வலையமைப்பு மார்க்கங்கள் சமூக வலைத்தளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு, மட்டுப்படுத்தப்பட்ட இணையவழி பிரசன்னம் மற்றும் புதிய தொழில்நுட்பவியலைப் பின்பற்றுவதில் காணப்படும் பலயீனங்கள் போன்ற பல்வேறு காரணங்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைவான சந்தை அணுகுவசதிகளுக்கு இட்டுச்செல்வதற்குப் பங்களிக்கின்றன.

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பான போதுமானதற்ற தகவல்கள் மற்றும் தரவுகள்: அநேகமான நாடுகளில், குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் தொடர்பான தகவல்களைப் பெறுவது உண்மையில் இடர்ப்பாடானதாகக் காணப்படுகிறது. தகவல்களை வெளியிட வேண்டியிருக்கின்ற பாரிய நிறுவனங்களைப் போலன்றி, குறிப்பாக, நிதியியல் தரவுகள் தொடர்பில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் வழமையாக அத்தகைய தேவைப்பாடுகளைக் கொண்டிராமையினால், தகவல்கள் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கப்படுவதனால் கடன் வழங்குபவர்கள் நம்பகமான தகவல்களைப் பெறுவதற்கு அவர்களுக்கு மேலதிகச் செலவுகள் ஏற்படுவதன் காரணமாக அது அவர்களை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்குவதனை ஊக்கமிழக்கச் செய்கிறது (ஜொசினோ மற்றும் ரகிசிசடேவ் - கெசாறி 2016). இது நிதியியல் நிறுவனங்கள் இவ்வியாபாரத்தினை மதிப்பிடுவதனை தடுப்பது மட்டுமன்றி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையின் கிடைப்பனவு, தரம் மற்றும் நேரகாலம் என்பனவற்றினையும் மட்டுப்படுத்தி விடுமென்பதனால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கும் முட்டுக்கட்டையாக அமைகிறது.

உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கமும் ஏனைய நிகழ்வுகளும்: உலகம் முழுவதிலுமுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் போது ஏற்பட்ட இடர்ப்பாடுகளைச் சகித்துக் கொள்ள வேண்டியிருந்ததுடன் இது பாரிய வருமான இழப்புக்களை உருவாக்குவதுடன் நிச்சயமற்ற தன்மையினையும் அதிகரிக்கிறது. அரசாங்கங்களினாலும் ஏனைய அதிகாரிகளினாலும் முன்னொருபோதுமில்லாத அளவிற்கு கொள்கை ஆதரவுகள் வழங்கப்பட்டமையானது இவ்வியாபாரங்கள் இவ்விடர்ப்பாடான காலப்பகுதியில் தமது வியாபாரங்களைக் கொண்டு நடத்த உதவிய போதும் அவை இன்னமும் முழுமையாக மீட்சிபெறவில்லை. ருஷியா - உக்ரேன் மோதல் காரணமாக உலகளாவிய அரசியல் தோற்றப்பாடுகளில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு, குறிப்பாக பெறுமதிச் சங்கிலி மற்றும் ஏற்றுமதி வியாபாரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளவைகளுக்கும் சுற்றுலா போன்ற பணிகள் வர்த்தகத்திலுள்ளவற்றுக்கும் இடர்ப்பாடுகளைத் தோற்றவிக்கக்கூடும்.

பால் அடிப்படையிலான சமமின்மைகள்: நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிலுள்ள பெண் தொழில்முனைவோரின் பங்கேற்பு நாட்டிற்கு நாடு வேறுபடுவதனைக் காணமுடியும். முறைசார்ந்த சிறிய வியாபாரங்களில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கு பெண்களுக்குச் சொந்தமாக இருப்பதனை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்ற போதும், இப்பங்கானது கிழக்காசியா மற்றும் பசுபிக்கின் 40 சதவீதத்திற்கும் கூடுதலான உயர் பங்கிலிருந்து தென்னாசியாவின் 10 சதவீதத்திற்கும் குறைவான பங்கு வரை வேறுபடுகிறது (ப.நி. கூட்டுத்தாபனம் 2014). சிறிய வியாபாரங்களினால் எதிர்நோக்கப்படும் பொதுவான சவால்களுக்குப் புறம்பாக பெண்களுக்குச் சொந்தமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் முட்டுக்கட்டைகள், கலாச்சார பாரபட்சங்களின் மீது தங்கியிருக்கும் தன்மை மற்றும் ஒப்பீட்டு ரீதியில் அளவு மற்றும் வலையமைப்புக்களின் குறைந்தமட்டம் என்பனவற்றைக் கூடுதலாக எதிர்நோக்குகின்றன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கமும் பெண்களுக்குச் சொந்தமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளில் விகிதசமமற்ற விதத்தில் காணப்பட்டமையினை அவதானிக்க முடிந்ததுடன், இதில் பெண்களுக்குச் சொந்தமான வியாபாரங்கள் உலகளாவிய நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தமையினைக் காணமுடிந்ததுடன், தாக்குப்பிடிக்கக்கூடியதாகவும் அவை இருக்கவில்லை போல் தெரிகிறது (ஐக்கிய நாடுகள் 2021). எனினும், கிடைக்கத்தக்கதாகவுள்ள சான்றுகள் பெண்களுக்குச் சொந்தமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்ட துறையாக இருந்த போதும் நிதியியல் நிறுவனங்களினால் அவை அடிக்கடி கவனிக்கப்படாது விடப்படுகின்றன (ப.நி.கூட்டுத்தாபனம் 2014). பெண்கள் குடும்பங்களிலும் சமூகங்களிலும் மீள் முதலீடு செய்வது கூடுதலாகவுள்ளமை கண்டறியப்பட்டுள்ளமையினால் பெண்களின் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் சிறந்த நிலையில் காணப்படுகின்றன (பன்னாட்டு வர்த்தக மையம் 2014). எனவே, அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை எய்துவதற்கு பாலியல் அடிப்படையிலான சமச்சீரற்ற தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்குத் தொடர்ச்சியான கடப்பாடுகளை எடுப்பது முக்கியமானதாகும்.

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையினை மேம்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் பின்பற்றப்பட்ட வெற்றிகரமான உபாயங்கள்

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளினால் எதிர்நோக்கப்படும் பொதுவான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வேறுபட்ட நாடுகளினால் வேறுபட்ட உபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நிதியிடல் இடர்ப்பாடுகளைக் கட்டுப்படுத்தல்: அநேகமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் முறைசார்ந்த மார்க்கங்களிலிருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்வதில் இடர்ப்பாடுகளைக் கொண்டிருந்தமையினால் இவ்வரையறைகளைக் குறைப்பதற்கான உபாயங்கள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்குப் பங்களிக்க முடியும். மேலும், சிறிய தொழில்களினால் எதிர்நோக்கப்பட்ட வேறு பல சவால்களும் நிதியிடல் இடர்ப்பாடுகளின் விளைவாக குறைந்த இயலாற்றலுடன் இணைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் வேறுபட்ட நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான உபாயங்களில் சில நிதியியல் நிறுவனங்களினால் பிணையுறுதியை அடிப்படையாகக் கொண்ட கடன்வழங்கலின் வரையறைகளைக் கட்டுப்படுத்துகின்ற கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை அறிமுகப்படுத்தல் (உதாரணமாக

யப்பானிலுள்ள பல்வேறுபட்ட கொடுகடன் உத்தரவாதக் கூட்டுத்தாபனங்கள், கொரியாவின் கொடுகடன் உத்தரவாத நிதியம், கொரியாவிலுள்ள கொரிய தொழில்நுட்பவியல் நிதிக் கூட்டுத்தாபனம், மலேசியாவிலுள்ள கொடுகடன் உத்தரவாதக் கூட்டுத்தாபனம், மலேசியா பேர்காட் போன்றன). இலாபம் சாராத நோக்கத்தினைக் கொண்ட உயர் இடர்நேர்வினைக் கொண்ட செயற்றிட்டங்களுக்கு கடன் வழங்குவதன் மீது சிறப்பியல்பு வாய்ந்த அபிவிருத்தி வங்கிகளை நிறுவுதல் (உதாரணமாக சீனாவிலுள்ள சீன அபிவிருத்தி வங்கி, ஜேர்மனியிலுள்ள கிறடிட்ரான்சோல்ட் புர் வீடெடுப்பூ (கேஎவ்டபிள்யூ பான்கென்ரூபே) கொரியாவிலுள்ள கொரிய அபிவிருத்தி வங்கி, போன்றவை), சிறிய வியாபாரங்களுக்கு முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களினால் கடன் வழங்கப்படுவதனைத் தூண்டுவதற்கு கடன்வழங்கல் இலக்குகளைத் தூண்டுதல் போன்ற கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்; பல்தேசிய முகவர்களூடாக கொடை நிதியிடல்; நிதியிடலை ஏற்படுத்தல், ஏன்ஞல் முதலீட்டாளர் போன்ற நிதியிடல்கள் மாற்று ஏற்பாட்டு மார்க்கங்களுக்கான அணுகு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கடன்வழங்குநர்களினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களுடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தரவுத்தளத்தினை அபிவிருத்தி செய்தல் போன்ற சீரற்ற தகவல்களைக் குறைப்பதற்கான வழிமுறைகள் (உதாரணமாக, பெரும் எண்ணிக்கையான சிறிய வியாபாரங்களின் நிதியியல் தகவல்களுடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடன்வழங்கலின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் யப்பானின் கொடுகடன் இடர்நேர்வுத் தரவுத்தளம் நிறுவப்பட்டது).

ஆதரவளிக்கின்ற வெற்றியாளர்கள்: நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் நிதியியல் இடர்ப்பாடுகள் பற்றிய கரிசனைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் புறம்பாக, இத்துறையிலுள்ள நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்த உதவிகளை வழங்குவதற்காக உலகளாவிய ரீதியில் வேறு பல நிகழ்ச்சித்திட்டங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக, கொரியா போன்ற சில நாடுகள் 'வெற்றியாளர்களைத் தெரிவுசெய்யும் அணுகுமுறை' இனைப் பயன்படுத்துகின்றவிடத்து, தேசிய முன்னுரிமைகளுடன் சேர்த்து, வளர்ச்சி வாய்ப்பு மற்றும் அமைப்பியல் ரீதியான இயலாற்றலின் வளர்ச்சியுடன் கைத்தொழில்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவியளிப்பது இலக்கிடப்படுகிறது. எனினும், இது துணைத் தேர்வு மூலவள ஒதுக்கிற்கு வழிவகுக்கக்கூடுமென்பதனால் அத்தகைய கொள்கைகள் விமர்சனத்திற்குள்ளாகி வருகின்றன. இருப்பினும் கூட, விரும்புகின்ற துறைகளுக்கு மூலவளங்களை வழிப்படுத்தக்கூடியதாக, குறிப்பாக, சந்தைத் தூண்டல் ஒதுக்குகள், வளர்ச்சி வாய்ப்புக்களைக் கொண்ட பிரதேசங்களுக்குச் சென்றடையாத காலப்பகுதியில், இக்கொள்கையினைப் பயன்படுத்த முடியும்.

கொத்தணிப்படுத்தல் மற்றும் இணைப்புக்களை மேம்படுத்தல்: உலகளாவிய சந்தை தாராளமயப்படுத்தலும் உலகமயமாக்கலும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை பிரதிகூலமான நிலைமையொன்றிற்கு இட்டுச்செல்லக்கூடும். ஏனெனில் பன்னாட்டு தொழிற்பாட்டாளர்களுடன் பொருந்தும் விதத்தில் அவர்களின் இயலாற்றல் இருப்பதில்லை. இது தொடர்பில் வியாபார கொத்தணிகளை உருவாக்கி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள், மலேசியாவிலுள்ளது போன்று கைத்தொழில் இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்ற பாரிய அமைப்புக்களின் பெறுமதிச் சங்கிலிகளுடன் இணைப்பது. இது பன்னாட்டு வர்த்தகத்தில் போட்டியிடுவதற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு உதவும். மேலும், பாரிய தொழில்முயற்சிகளுக்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்குமிடையிலான துணை ஒப்பந்த இணைப்புக்கள் கைத்தொழிலின் உற்பத்தித்திறனை உயர்த்துகின்ற வேளையில் புதிய தொழில்நுட்பங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளல், முகாமைத்துவ முறை, சந்தைப்படுத்தல், உள்ளீட்டு மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி நுணுக்கங்கள் போன்ற நியதிகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு நன்மைகள் வழங்கப்படுகின்றன (விஜேசிங்க 2011).

இலக்கிடப்பட்ட ஆதரவு: தாய்லாந்திலுள்ளது போன்று நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி ஊக்குவிப்புத் திட்டம் போன்ற தேசிய முன்னுரிமையளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் பொருளாதாரப் பங்களிப்பு உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றமையானது (பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு/ஐரோப்பிய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கமுறை, 2018) நாடொன்றிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்ற முயற்சிகளையும் ஒழுங்குமுறைப்படுத்தும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் குறைந்தளவில் பயன்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட வேண்டிய முக்கிய துறையாக அடிக்கடி எடுத்துக்காட்டப்படுகின்றது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாக எவ்விதமான மெய்நிகர் பிரசன்னத்தினையும் கொண்டிராத வியாபாரங்கள் கூட வாடிக்கையாளர்களையும் வழங்குநர்களையும் அடைவதற்கு இணையவழிக் கருவிகளை தொடங்குவதற்கான வரவேற்கத்தக்க நிலைமையினைத் தோற்றுவித்திருக்கிறது. எனினும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் அவற்றின் வியாபாரங்களுக்குள் தகவல் தொழில்நுட்பச் சாதனங்களையும் பணிகளையும் இணைத்துக் கொள்வதன் மூலம் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. இது தொடர்பில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் தகவல் தொழில்நுட்பவியல் அதிகளவில் கைக்கொள்ளப்படுவதனை நோக்கமாகக் கொண்ட இந்தியாவிலுள்ள டிஜிட்டல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் திட்டம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் வாயிலாக, தகவல் தொழில்நுட்பவியலைப் பயன்படுத்துகின்ற அநுகூலங்கள் தொடர்பில் விழிப்புணர்வுகளை மேம்படுத்துவதன் மூலம் அரசாங்கமும் ஆதரவுக் குழுக்களும் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றமுடியும்.[2] பல்புடை கொடை முகவர்களும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் இயலாற்றல் அபிவிருத்திக்கு உதவியளிக்கின்றனர். இதன் மூலம் இத்தொழில்முயற்சிகளின் வியாபாரத் தேர்ச்சி மேம்படுத்துவதற்கு பங்களிக்கப்படுகிறது. மேலும், உலகெங்கிலுமுள்ள பெரும்பாலான அரசாங்கங்கள் மற்றும் சமூகங்களின் காலநிலை மாற்றங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் தொடர்பான கடப்பாடுகளைக் கருத்திற்கொள்கையில், 'பசுமை நடவடிக்கைகளில்' ஈடுபட்டுள்ள தொழில்துறைகளும் நீடித்து நிலைத்திருக்கும் வியாபார நடைமுறைகளை ஊக்குவிப்பவர்களும் பல்வேறுபட்ட அரச, தனியார் மற்றும் பல்தேசிய முகவர்களிடமிருந்து ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடிகின்ற வேளையில் அவர்கள் மேம்பட்ட சந்தைப் பிரசன்னத்தினையும் அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறது.

2 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் அமைச்சு, இந்திய அரசாங்கம்.

ஒட்டுமொத்தமாக, நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியினை வசதிப்படுத்துகின்ற வழிமுறைகள் வளர்ச்சித் தேக்கநிலையினை நாடுகள் தவிர்ப்பதற்கு அனுமதித்து, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சித் துறையினது அபிவிருத்திக்கும் வழிவகுக்கிறது. உதாரணமாக, புதியறிவினை விருத்திசெய்வதன் முக்கியத்துவத்துடன் பொருளாதாத்தின் அடிப்படையிலமைந்த அறிவை உருவாக்குவதற்கான முயற்சிகள் கொரிய பொருளாதாரத்தினதும் அதன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சித் துறையினதும் முக்கிய வெற்றிக் காரணியொன்றாகக் கருதப்படுகிறது (கிறெகறியும் மற்றையவர்களும் 2002). அதேபோன்று, ஜேர்மனிய நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளது வெற்றிக்கான பிரதான உந்து சக்தியாக அறிக்கையிடப்பட்டுள்ள (ஹெர் மற்றும் நெட்டிகோவன், 2018) தொழிற்கல்விப் பயிற்சியினூடாக வியாபாரங்களுடன் தொடர்புடைய திறன்களை விருத்திசெய்வதில் முனைப்புடன் கல்வி முறைமைக்கான மேம்படுத்தல்கள் நவீன உலகமயப்படுத்தப்பட்ட சந்தைகளில் போட்டியிடுவதற்கு அவசியமான திறன்களுடன் வலுப்படுத்தப்பட்ட சிறிய வியாபாரங்களை உருவாக்குவதற்குப் பங்களிக்க முடியும்.

இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள்[3]

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் குடித்தொகையில் பெரும் விகிதத்தினருக்கு தொழில் வாய்ப்பினை வழங்குவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திச் செய்முறையில் பெரும்பங்கினை ஆற்றிய வேளையில், மேலே ஆராயப்பட்ட அவற்றின் அபிவிருத்திக்கு பொதுவாக தடையாகவுள்ள அநேக விடயங்கள் இலங்கை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் எதிர்நோக்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதார வெளியீட்டிற்கான அவற்றின் முக்கியத்துவம் 50 சதவீதத்திலும்[4] கூடுதலானது என அறிவிக்கப்பட்டிருந்த போதும் இலங்கையின் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளில் பெரும்பாலானவை அவற்றின் உண்மையான உள்ளார்ந்த வளத்தினை இன்னமும் அடையவில்லை. இதற்கு மட்டுப்படுத்தப்பட்டளவிலான இயலாற்றல் (நிதியினை அணுகுவதற்கு மட்டுப்படுத்தப்பட்டளவிலான இணைப்பு) குறைந்தளவிலான தொழில்நுட்பம் பின்பற்றப்படுவது மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டுடனுமான பெறுமதிச் சங்கிலியின் மட்டுப்படுத்தப்பட்ட இணைப்புக்கள் என்பன காரணங்களாக அமைந்தன. இத்தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கு அரசாங்கத்தினாலும் அரசுசாரா அமைப்புக்களினாலும் வேறுபட்ட நேரங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் (2016) நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு அபிவிருத்தி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையின் அபிவிருத்திக்கான விபரமான நடவடிக்கைத் திட்டங்களை உள்ளடக்கியிருந்தது. எனினும், அத்தகைய கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலும் இணைப்பும் தொடர்ந்தும் பலவீனமாக இருந்தமை எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றங்களைத் தேவைப்படுத்தியது. மத்திய வங்கியும் பிரதேச அபிவிருத்தியின் அதன் முகவர் தொழிற்பாடுகளின் கீழ் சிறு தொழில்களுக்கு ஆதரவளிப்பதில் முக்கியமான வசதிப்படுத்தல் வகிபாகத்தினை ஆற்றியவிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் அநேக மூலவள வழங்குநர்களுடனும் சேர்ந்து நிதி மற்றும் நிதியல்லா ஆதரவுகள் இரண்டும் வழங்கப்பட்டன. அதேவேளை உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட பாரிய கொள்கை ஆதரவுகள் இடர்ப்பாடான காலப்பகுதியில் துறை உறுதியாக இருப்பதற்கு உதவியிருக்கக்கூடும். உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை தொடர்பில் தற்போது நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடுமையான தீங்கினை ஏற்படுத்தலாம் என்பதனால் இது மீட்பு மற்றும் தடுப்புக் கொள்கைகளைத் தேவைப்படுத்துகிறது. முன்னோக்கிப் பார்க்கையில் சவால்மிக்க நேரத்தினூடாக நீடித்ததும் செழிப்பானதுமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்குத் தேவையான நீடித்துநிலைத்திருக்கும் ஆதரவினை வழங்கும் பொருட்டு உத்தேச கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தின் விரைவான முறையில் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் தன்மை இதற்கே உரித்தான சிறப்பு அபிவிருத்தி வங்கியொன்றினை நிறுவுதல் உட்பட 'இயலுமைப்படுத்துநர்' களை நடைமுறைப்படுத்துவதற்குச் சரியான நேரத்திலான வழிமுறைகள் தேவைப்படுகின்றன. பொதுவாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளைப் பிரதான தொழில் நீரோட்டச் சூழலுக்கு கொண்டு வரும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை வளர்ப்பதற்குத் தேசிய தூண்டுதல்களை வழங்கும் விதத்தில் கொள்கை முன்னெடுப்புக்களை இணைப்பது அவசியமாக இருக்கிறது.

3 இலங்கையின் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தொடர்பான விபரமான ஆய்வு அத்தியாயம் 1இலுள்ள பிரச்சனைகள் மற்றும் கொள்கைகளில் தரப்பட்டுள்ளது.

4 கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, இலங்கை.

உசாத்துணைகள்

1. Asian Productivity Organization (2015). Innovation and SME Financing in Selected Asian Economies.
2. Gonzales, E., Hommes, M. and Laura, M.M. (2014). MSME Country Indicators 2014: Analysis Note.
3. Gregory, G., Harvie, C., and Lee, H.H. (2002). 'Korean SMEs in the 21st Century: Strategies, Constraints, and Performance in a Global Economy', SMEs in a Global Economy Conference - Sustaining SME Innovation, Competitiveness and Development in the Global Economy, 272–290.
4. Herr, H. and Nettekoven, Z.M. (2018). The Role of Small and Medium-Sized Enterprises in Development: What Can be Learned from the German Experience?, Global Labour University Working Paper No. 53.
5. IFC (2014). Women-Owned SMEs: A Business Opportunity for Financial Institutions.
6. International Labour Organization (2016). Role of Finance in Driving Formalization of Informal Enterprises.
7. International Trade Centre (2014). SMEs Drive World Trade and Economic Growth.
8. Ministry of Industry and Commerce (2016). National Policy Framework for Small and Medium Enterprises (SMEs) Development: Action Plan.
9. OECD (2018). Improving the Business Environment for SMEs Through Effective Regulation, Policy Note, 2018 SME Ministerial Conference, OECD.
10. OECD/ERIA (2018). SME Policy Index: ASEAN 2018: Boosting Competitiveness and Inclusive Growth. SME Policy Index, OECD Publishing, Paris/ERIA, Jakarta.
11. United Nations (2021). Micro-, Small and Medium-Sized Enterprises Day, 27 June.
12. Wijesinha, A. (2011). SME Development Strategies for Sri Lanka: Learning Lessons from Neighbouring Countries, Talking Economics, Institute of Policy Studies of Sri Lanka.
13. Yoshino, N. and Taghizadeh-Hesary, F. (2016). Major Challenges Facing Small and Medium-Sized Enterprises in Asia and Solutions for Mitigating Them, ADBI Working Paper Series No. 564.

2

முறையே 3.5 சதவீதத்தினாலும் 3.0 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. இதனைத்தொடர்ந்து, மொத்த உள்நாட்டுச் செலவினம் 2020இன் 4.6 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.4 சதவீத மிதமான வீதத்தினால் வளர்ச்சியுற்றது. அதேவேளை, நிலையான (2010) விலைகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது ஏற்றுமதி அளவுகளில் உயர்வான வளர்ச்சியிலிருந்து நன்மையடைந்து 2021இல் 0.4 சதவீதம் கொண்ட சிறிதளவு சுருக்கத்தினை மாத்திரம் பதிவுசெய்தது. இதன்விளைவாக, நிலையான (2010) விலைகளில் மொ.உ.உற்பத்தி 2020இன் 3.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

நுகர்வு

நடப்பு விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் 74.3 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுச் செலவினமானது நுகர்வோர் செலவிடுவதற்கான விரிபடுத்தப்பட்ட வசதியுடன் நுகர்வுக் கேள்வியில் மீளெழுச்சியினால் ஊக்குவிக்கப்பட்டு 2020இல் பதிவாகிய 2.0 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் 9.9 சதவீதம் கொண்ட சாதகமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. நுகர்வுச் செலவினத்தில் வளர்ச்சிக்கு மொத்த நுகர்வுச் செலவினத்தில் 88.0 சதவீதத்திற்கு வகைகூறிய முக்கிய நுகர்வுச் செலவின வகையான தனிப்பட்ட நுகர்வுச் செலவினம் கணிசமான வளர்ச்சியடைந்த அதேவேளை, அநேகமான நுகர்வோர் பொருட்கள் வகைகளில் குறிப்பாக, ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் உயர்வடைந்த விலைகள் இதற்கு காரணமாக அமைந்தது. அதே சந்தர்ப்பத்தில், அரசாங்க நுகர்வுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் மிதமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது.

பொருளாதாரம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து நுகர்வோர்கள் செலவிடுவதற்கு ஆர்வம் காட்டியமையுடன் இணைந்து நடப்பு விலைகளில் தனியார் நுகர்வுச் செலவு, 2020இல் 1.0 சதவீத சிறிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 10.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டமையுடன் இறை அதேபோன்று நாணயக் கொள்கைத் தூண்டல்கள் ஒன்றிணைந்து வாடிக்கையாளர்கள் சந்தைகளுக்குத் திரும்புவதை ஊக்குவித்தது. இது, போக்குவரத்து, உணவகங்கள் மற்றும் விடுதிகள், ஆடைகள் மற்றும் காலணி போன்ற அநேகமான தனிப்பட்ட நுகர்வுச் செலவின வகைகளில் அதிகரிப்புக்களை ஊக்குவித்தது. மேலும், உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள், வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள், சுகாதாரம் மற்றும் தொலைத்தொடர்பு வகைகள் மீதான தனிப்பட்ட நுகர்வுச் செலவினம் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பணிகளை உள்ளடக்குகின்ற தனிப்பட்ட நுகர்வுச் செலவின வகைகளும் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்தன.

அரசாங்கத்தின் கூட்டான இறுதி நுகர்வு செலவினத்தையும் தனிப்பட்ட இறுதி நுகர்வு செலவினத்தையும் உள்ளடக்குகின்ற நடப்பு விலைகளிலான அரசாங்க நுகர்வுச் செலவினம் 2020இன் 9.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சுகாதாரம் மற்றும் கல்வி மீதான அரசாங்க செலவிடலை குறிப்பாக, உள்ளடக்குகின்ற அரசாங்கத்தின் தனிப்பட்ட நுகர்வுச் செலவினம் 2020இல் அறிக்கையிடப்பட்ட 17.8 சதவீதம் கொண்ட உயர்வான வளர்ச்சிக்கு மேல் 2021இல் 1.0 சதவீதத்தினால் மிதமாக விரிவடைந்தது. மேலும், பாதுகாப்பு, அரசாங்க சேவைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற

அட்டவணை 2.9
மொத்த கேள்வி (அ)

விடயம்	நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்)			நிலையான (2010) விலைகள் (ரூ.மில்)		
	2019 (ஆ)	2020 (ஆ)(இ)	2021 (இ)	2019 (ஆ)	2020 (ஆ)(இ)	2021 (இ)
அ. உள்நாட்டுக் கேள்வி						
நுகர்வு	11,971,144	12,214,284	13,425,152	7,786,374	7,601,213	7,870,841
(% மாற்றம்)	8.0	2.0	9.9	4.5	-2.4	3.5
மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்	3,945,423	3,779,064	4,655,829	3,082,250	2,766,593	2,848,458
(% மாற்றம்)	-7.5	-4.2	23.2	-11.6	-10.2	3.0
மொத்த உள்நாட்டு கேள்வி	**15,916,567**	**15,993,349**	**18,080,981**	**10,868,624**	**10,367,806**	**10,719,300**
(% மாற்றம்)	**3.7**	**0.5**	**13.1**	**-0.7**	**-4.6**	**3.4**
ஆ. வெளிநாட்டுக் கேள்வி						
பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்	3,472,337	2,418,541	2,981,613	1,845,686	1,666,522	1,952,033
(% மாற்றம்)	5.5	-30.3	23.3	7.2	-9.7	17.1
பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள்	4,391,746	3,384,516	4,253,285	2,823,843	2,501,420	2,789,936
(% மாற்றம்)	0.9	-22.9	25.7	-5.8	-11.4	11.5
தேறிய வெளிநாட்டுக் கேள்வி	**-919,410**	**-965,975**	**-1,271,672**	**-978,157**	**-834,898**	**-837,903**
(% மாற்றம்)	**13.4**	**-5.1**	**-31.6**	**23.3**	**14.6**	**-0.4**
இ. மொத்த கேள்வி	14,997,157	15,027,374	16,809,309	9,890,468	9,532,909	9,881,397
(% மாற்றம்)	4.9	0.2	11.9	2.3	-3.6	3.7

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.10
நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

வகை	மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் சதவீதமாக (%)			வளர்ச்சி (%)	
	2019 (ஆ)	2020 (ஆ)(இ)	2021 (இ)	20/19 (ஆ)(இ)	21/20 (இ)
1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள்	27.9	30.9	31.3	11.6	12.4
2. வெறியமுள்ள குடிபானங்கள், புகையிலை மற்றும் போதைப்பொருள்	3.4	3.2	3.4	-4.7	15.5
3. புடவையும் காலணியும்	4.5	3.7	3.9	-15.6	15.0
4. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள்	10.1	10.4	10.0	3.6	6.7
5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு	1.0	1.0	1.1	-2.1	24.3
6. நலம்	2.8	2.8	3.4	1.7	33.1
7. போக்குவரத்து	24.1	20.2	19.3	-15.2	5.9
8. தொடர்பூட்டல்	0.7	0.7	0.8	0.1	20.9
9. பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம்	1.6	1.7	1.7	7.6	8.4
10. கல்வி	1.7	1.7	1.6	0.0	3.0
11. விடுதிகள் மற்றும் உணவகங்கள்	3.9	2.6	2.9	-34.2	24.4
12. பல்வகைப் பொருட்களும் பணிகளும்	21.5	21.4	21.4	0.7	10.8
13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள்	2.9	0.9	0.3	-68.7	-68.4
14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள்	6.2	1.2	0.9	-80.1	-17.2
மொத்த தனியார் நுகர்வுச் செலவு	**100.0**	**100.0**	**100.0**	**1.0**	**10.8**

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

ஒட்டுமொத்தமாக சமூகத்திற்கு நன்மையளிக்கின்ற பணிகள் மீதான பொதுவான அரசாங்கத்தின் செலவினத்தை உள்ளடக்குகின்ற கூட்டான நுகர்வுச் செலவினம் 2020இன் 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 5.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் ஈடுபாடு இறைக் கொள்கைத் தலையீடுகளும் அரசாங்க நுகர்வுச் செலவினத்தில் விரிவடைதலுக்குப் பங்களித்தன.

முதலீடு

பொருளாதார நடவடிக்கைகளில் படிப்படியான மீளெழுச்சி மற்றும் மீட்சி விரைவுபடுத்துவதற்கு இலக்கிடப்பட்ட கொள்கைத் தூண்டல்கள் என்பவற்றிலிருந்து நன்மையடைந்து முதலீட்டுச் செலவினமானது நடப்பு சந்தை விலைகளில் 2020இல் பதிவாகிய 4.2 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2021இல் 23.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டில் 6.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 14.5 சதவீதத்தினால் மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தில் கணிசமான வளர்ச்சியினால் இம்மீட்சி பெருமளவில தூண்டப்பட்டு இஒஒஒஒஒஒஒருந்தது. அதற்கமைய, கட்டடவாக்கம், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் பொறி மற்றும் கருவிகள் போன்ற மொத்த நிலையான மூலதன உருவாக்க முக்கிய சொத்து வகைகள் 2020இன் பின்னடைவிலிருந்து மீட்சியடைந்து 2021இல் விரிவடைந்தன. மேலும், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப சாதனங்கள் புலமைச் சொத்து உற்பத்திகள் போன்ற வகைகள் மீதான முதலீட்டுச் செலவினமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விரிவடைந்தது. அதேவேளை, இருப்புக்களில் மாற்றங்கள் மற்றும் கையகப்படுத்தல்கள் என்பன பெறுமதி வாய்ந்தவைகளின் கையுதிர்த்தல்களைக் கழித்து 2021இல் கணிசமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கு கிடைக்கப்பெற்ற கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2020ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 687.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 780.2 மில்லியனுக்கு[5] 13.6 சதவீதத்தினால்

5 இது முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட்ட பெறுகைகளை உள்ளடக்குவதுடன் முதலீட்டுச் சபையல்லா கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உள்ளடக்கப்படுவதன் காரணத்தால் அத்தியாயம் 5இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம். அதற்கிணங்க, 2021இல் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 784 மில்லியனாகும்.

வரைபடம் 2.13
முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ.மில்லியன்)



(அ) கடன்கள் உள்ளடங்கலாக

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

2

அட்டவணை 2.11
இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அமைச்சு என்பவற்றின்
கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

	செயற்றிட்ட எண்ணிக்கை		மதிப்பிடப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்)						மதிப்பிடப்பட்ட தொழிலாளர் (எண்ணிக்கை)	
			2020 (அ)			2021 (ஆ)				
	2020 (அ)	2021 ஆ)	வெளிநாடு	உள்நாடு	மொத்தம்	வெளிநாடு	உள்நாடு	மொத்தம்	2020 (அ)	2021 (ஆ)
முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்)										
ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்	162	144	300,608	123,178	423,786	348,926	168,451	517,377	14,376	26,463
பிரிவு 17இன் கீழ் (இ)	161	139	299,236	123,178	422,413	347,933	168,002	515,935	14,256	26,290
பிரிவு 16இன் கீழ்	1	5	1,373	-	1,373	993	449	1,442	120	173
பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ)	122	93	131,342	165,858	297,201	42,397	74,144	116,542	15,856	16,477
பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ)	1,943	1,875	2,105,156	1,812,278	3,917,434	2,258,989	2,021,406	4,280,395	வி.கி	வி.கி
வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ)	2,651	2,735	606,527	975,024	1,581,551	651,662	1,057,348	1,709,010	441,936	459,828
பிரிவு 17இன் கீழ் (இ)	2,116	2,216	580,734	966,286	1,547,021	626,170	1,046,161	1,672,331	413,280	431,550
பிரிவு 16இன் கீழ்	535	519	25,793	8,738	34,530	25,492	11,187	36,679	28,656	28,278
கைத்தொழில் அமைச்சு										
பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ஈ)	3,020	3,259	-	-	208,934	-	-	209,366	-	வி.கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அமைச்சு

குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்கம் மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

அதிகரித்து காணப்பட்டது. தயாரிப்புத் துறை, பணிகள் துறை, மற்றும் உட்கட்டமைப்பு வசதி செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக முக்கிய துறைகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மீட்சியொன்று பதிவாகிய அதேவேளை வேளாண்மைத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் 1978இன் 4ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16ஆம் மற்றும் 17ஆம் பிரிவின் கீழ் முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்தப்பெறுமதி ரூ.517.4 பில்லியனாக மதிப்பிடப்பட்டு, 2020 உடன் ஒப்பிடுகையில் 22.1 சதவீத விரிவடைதலைப் பதிவுசெய்தது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளைத் தொடங்கிய செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதி முறையே ரூ.1,672.3 பில்லியனாகவும் ரூ.36.7 பில்லியனாகவும் காணப்பட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக 8.1 சதவீத விரிவடைதலினைப் பதிவுசெய்தது.

மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

பொருளாதாரத்தின் மூலவளங்களின் கிடைப்பனவு 2020இல் பதிவாகிய 5.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் நடப்பு விலைகளில் 14.4 சதவீதத்தினால் 2021இல் விரிவடைந்தது. இந்நோக்கில் உள்நாட்டு மூலவளங்களையும் அதேபோன்று வெளிநாட்டு மூலவளங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இறக்குமதிகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மொ.உ.உற்பத்தியானது நடப்பு மற்றும் நிலையான இரு விலைகளிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் விரிவடைந்தது. கிடைக்கப்பெறுகின்ற மூலவளங்களைக் கருத்திற்கொள்கையில், மூலவளங்களில் பெரும்பாலானவை நுகர்வு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இது, 2021இல் மொத்த மூலவளப் பயன்பாட்டின் 63.7 சதவீதத்திற்கு வகைகூறியது, அதேவேளை, நடப்பு விலைகளில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்த அதேவேளை, நிலையான விலைகளில் ஏற்றுமதி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு அதிகரித்து இறக்குமதி நோக்கங்களுக்கானவை குறைவடைந்தது.

அட்டவணை 2.12
நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும்
அவற்றின் பயன்பாடும் (அ)(ஆ)

விடயம்	சதவீதப் பங்கு %		வளர்ச்சி %	
	2020 (இ)	2021	2020 (இ)	2021
அ. மூலவளங்கள்				
மொத்த உள்நாட்டு உற்பத்தி	81.6	79.8	0.2	11.9
பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள்	18.4	20.2	-22.9	25.7
மொத்தம்	100.0	100.0	-5.0	14.4
ஆ. பயன்பாடு				
நுகர்வு	66.3	63.7	2.0	9.9
மொத்த நிலையான மூலதனவாக்கம்	20.7	20.8	-6.0	14.5
பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம்	-0.2	1.4	67.9	874.2
பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி	13.1	14.2	-30.3	23.3
மொத்தம்	100.0	100.0	-5.0	14.4

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.14
2021இல் பொருளாதாரம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

சேமிப்புக்கள்

பொருளாதாரத்தின் உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் நடப்பு விலைகளில் 2021இல் மீளெழுச்சிபெற்றன. அதற்கமைய, ஆண்டுகாலப்பகுதியில் தனிப்பட்ட சேமிப்புகளில் அதிகரிப்பினால் பெருமளவில் தூண்டப்பட்டு, உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2021இல் 20.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. அதேவேளை, குறைவான அரசாங்க வருவாயினைப் பிரதான காரணமாகக் கொண்டு அரசாங்கச் சேமிப்பு கரைதலில் கணிசமான திடீர் அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டது. இதன்விளைவாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2021இல் 20.1 சதவீதத்திற்கு அதிகரித்தன. அதேசந்தர்ப்பத்தில் ரூபா நியதிகளில் தேறிய முதலாந்தர வருமானம் 2021இல் மேம்படுதலொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடப்பு மாற்றல்கள் சுருக்கமடைந்தன. இதனைத் தொடர்ந்து, உள்நாட்டுச் சேமிப்புக்களில் மீளெழுச்சியினை பிரதான காரணமாகக் கொண்டு தேசிய சேமிப்புக்கள் 2021இல் 13.2 சதவீதத்தினால் அதிகரித்தன. அதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2021இல் 23.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2020இன் மொ.உ.உற்பத்தியின் 1.6 சதவீதத்திலிருந்து 2021இல் மொ.உ.உற்பத்தியின் 3.9 சதவீதத்திற்கு விரிவடைந்தது. முதலீட்டுச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இதற்கு பெருமளவில் காரணமாக அமைந்தது.

2.6 வருமானம்

பொருளாதாரத்தின் வருமானக் கூறுக்கிடையில், மொத்த தொழிற்பாட்டு மிகைகள் ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ந்தும் பாரியளவு பங்களித்து அதனைத் தொடர்ந்து ஊழியர்களுக்கான இழப்பீடும் உற்பத்தி மீதான உதவுதொகை கழித்த வரிகளும் காணப்பட்டன. மொத்த தொழிற்பாட்டு மிகைகள், உள்நாட்டு உற்பத்தியின் 64.4 சதவீதத்திற்கு வகைகூறி 2021இல் நடப்பு விலைகளில் 13.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சிக்கு பிரதானமாக ஆண்டுகாலப்பகுதியில் தேறிய தொழிற்பாட்டு மிகைகளில் விரிவடைதல் காரணமாக அமைந்தது. வருமானத்தின் ஏனைய முக்கிய மூலங்களைக்

அட்டவணை 2.13
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ)(ஆ)

விடயம்	ரூ.மில்லியன்		வளர்ச்சி (%)		மொ.உ.உ.இன் சதவீதமாக (%)	
	2020 (இ)	2021	2020 (இ)	2021	2020 (இ)	2021
1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	15,027,374	16,809,309	0.2	11.9	100.0	100.0
2. நுகர்வுச் செலவினம்	12,214,284	13,425,152	2.0	9.9	81.3	79.9
தனியார்	10,661,955	11,814,865	1.0	10.8	71.0	70.3
அரசு	1,552,329	1,610,287	9.9	3.7	10.3	9.6
3. முதலீடுகள்	3,779,064	4,655,829	-4.2	23.2	25.1	27.7
4. உள்நாட்டுச் சேமிப்புக்கள்	2,813,090	3,384,158	-7.0	20.3	18.7	20.1
தனியார்	3,993,489	4,674,599	12.2	17.1	26.6	27.8
அரசு	-1,180,399	-1,290,441	-121.2	-9.3	-7.9	-7.7
5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி	-965,975	-1,271,672	-5.1	-31.6	-6.4	-7.6
6. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம்	-423,063	-406,605	4.2	3.9	-2.8	-2.4
7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ)	1,150,789	1,030,321	11.7	-10.5	7.7	6.1
8. தேசிய சேமிப்புக்கள்	3,540,816	4,007,874	-2.1	13.2	23.6	23.8

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுத்தலில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
நிதி அமைச்சு

2

அட்டவணை 2.14
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ)(ஆ)

விடயம்	சதவீதப்பங்கு (%)									
	2020 (இ)					2021				
	நிதியல்லா கூட்டுத் தாபனம்	நிதிக் கூட்டுத் தாபனம்	பொது அரசாங்கம்	வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள்	மொத்த பொருளாதாரம்	நிதியல்லா கூட்டுத் தாபனம்	நிதிக் கூட்டுத் தாபனம்	மத்திய அரசாங்கம்	வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள்	மொத்த பொருளாதாரம்
ஊழியர்களின் நட்டஈடு	33.1	7.5	30.3	29.1	100.0	34.4	7.5	28.6	29.4	100.0
மொத்த தொழிற்பாட்டு மிகை	34.3	5.8	1.5	58.4	100.0	35.1	6.4	1.8	56.7	100.0
தேறிய தொழிற்பாட்டு மிகை	36.8	6.5	0.7	56.0	100.0	38.0	7.3	0.6	54.1	100.0
கலப்பு வருமானம்	-	-	-	100.0	100.0	-	-	-	100.0	100.0
நிலையான மூலதனத்தின் நுகர்வு	45.9	6.0	8.2	40.0	100.0	44.7	5.7	10.8	38.9	100.0
உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள்	85.5	14.2	-	0.3	100.0	84.7	15.1	-	0.2	100.0
அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு	34.0	6.4	10.9	48.7	100.0	35.0	6.8	10.2	48.0	100.0

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கருத்திற்கொள்கின்ற போது ஊழியர்களுக்கான இழப்பீடும் அதேபோன்று உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகளும் ஆண்டுகாலப்பகுதியில் வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. அதேவேளை, வீட்டுத்துறை மற்றும் இலாபமீட்டாத நிறுவனங்களில் பணியாற்றுகின்ற வீட்டுத் துறை நிறுவனசார் வருமான வகைப்படுத்தலினுள் வருமானத்திற்கு பாரிய பங்களிப்பாளராக தொடர்ந்தும் இருந்ததுடன் அதனைத் தொடர்ந்து நிதியல்லா நிறுவனங்கள், பொது அரசாங்கம் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் காணப்பட்டன.

2.7 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

குடித்தொகை

பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் நடுவாண்டு குடித்தொகை மதிப்பீடுகளிற்கு அமைவாக இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 2021இல் 22.156 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கமைய, குடித்தொகை வளர்ச்சி வீதம் 2020இல் பதிவாகிய 0.5 சதவீதத்திலிருந்து 2021இல் 1.1 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்தது. குடித்தொகை வளர்ச்சிக்கு மேல் மாகாணம் பெருமளவு பங்களித்ததுடன் அதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணம் காணப்பட்டது. அதேவேளை, ஊவா மற்றும் வட மாகாணங்களிலிருந்து குடித்தொகை வளர்ச்சிக்கு ஆகக்குறைந்த பங்களிப்புக்களே காணப்பட்டன. 2021இல் மேல் மாகாணம் 28.1 சதவீதம் கொண்ட நடுவாண்டு குடித்தொகையின் அதிஉயர்வான பங்கிற்கு தொடர்ந்தும் வகைகூறி அதனைத் தொடர்ந்து நடுவாண்டு குடித்தொகையின் முறையே 12.7 சதவீதம் மற்றும் 12.2 சதவீதம் கொண்ட பங்கிற்கு மத்திய மற்றும் தென் மாகாணங்கள் வகைகூறி தொடர்ந்தும் அதேபோக்கு அவதானிக்கப்பட்டது. அதேவேளை, வட மாகாணம் 5.3 சதவீதம் கொண்ட நடுவாண்டு குடித்தொகையின் ஆகக்குறைந்த பங்கிற்கே தொடர்ந்தும் வகைகூறியது. குடித்தொகை வளர்ச்சிக்கு அமைவாக குடித்தொகை அடர்த்தியும் 2020இன் ஒரு சதுரக் கி.மீற்றருக்கு 350 மக்களிலிருந்து 2021இல் ஒரு சதுர கி.மீற்றருக்கு 353 மக்களாக அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளில் அவதானித்ததைப் போன்று பெண்கள் குடித்தொகை ஆண்கள் குடித்தொகையினைவிட தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டதுடன் முதியோர் குடித்தொகையின் பங்கு மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியில் அதே குறிப்பிடத்தக்க மட்டத்திலேயே இருந்தது.

அட்டவணை 2.15
மாகாண அடிப்படையிலான குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ)(ஆ)

மாகாணம்	2020		2021	
	குடித்தொகை '000 நபர்கள்	அடர்த்தி	குடித்தொகை '000 நபர்கள்	அடர்த்தி
மேல்	6,165	1,716	6,219	1,731
மத்திய	2,781	499	2,811	504
தென்	2,669	496	2,696	501
வடக்கு	1,152	139	1,165	141
கிழக்கு	1,746	187	1,783	190
வடமேல்	2,563	341	2,592	345
வடமத்திய	1,386	142	1,402	144
ஊவா	1,387	166	1,400	168
சப்ரகமுவ	2,070	421	2,088	424
மொத்தம்	21,919	350	22,156	353

(அ) தற்காலிகமானது
(ஆ) நடுவாண்டுக் குடித்தொகையானது 2012ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும் வீடமைப்பு மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

மூலம்: பதிவாளர் நாயகம் திணைக்களம்

தொழிற்படை

பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள குடித்தொகையான தொழிற்படை,[6] 2020இல் பதிவாகிய 8.467 மில்லியனிலிருந்து 2021இல் 8.553 மில்லியனுக்கு அதிகரித்து 1.0 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சியானது அனைத்து மூன்று துறைகளிலும் அதாவது நகரம், கிரமம் மற்றும் தோட்டம் ஆகியவற்றிலுள்ள தொழிற்படையில் அதிகரிப்புக்களால் தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, பொருளாதார ரீதியாக செயற்பாடற்ற குடித்தொகையானது முனைப்பாகத் தொழில் தேடுதலில் ஆர்வம் குறைந்தமை அத்துடன் வழமையான செயற்பாடுகள் மீது நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட குழப்ப நிலைகளுடன் 2020இல் 8.273 மில்லியனிலிருந்து 2021இல் 8.581 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு மேலும் அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது பெருமளவில் கிராமியத் துறையில் குறிப்பாக கிராமியப் பெண்கள் தொடர்பில் செயற்பாடற்றவர்களில் அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. தொழிற்படை மற்றும் தொழில்புரியாத குடித்தொகை இரண்டிலும் அதிகரிப்பினைத் தொடர்ந்து வீட்டுத்துறைக் குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதாசாரமான தொழிற்படை பங்கேற்றல் வீதம் 2020இன் 50.6 சதவீதத்திலிருந்து 2021இல் 49.9 சதவீத்திற்குக் குறைவடைந்தது. அதற்கமைய, ஆண், பெண் தொழிற்படைப் பங்கேற்பு வீதமும் 2020இன் முறையே 71.9 சதவீதம் மற்றும் 32.0 சதவீதத்திலிருந்தும் 2021இல் முறையே 71.0 சதவீதத்திற்கும் மற்றும் 31.8 சதவீதத்திற்கும் குறைவடைந்தது. சாதகமாக நோக்குகையில் தொழிற்படை பங்கேற்பு வீதத்தில் பாலின இடைவெளி 2020இன் 39.8 சதவீதத்திலிருந்து 2021இல் 39.2 சதவீதத்திற்குக் குறைவடைந்த போதிலும் எவ்வாறாயினும், நோய்த்தொற்றுக்கு முன்னைய மட்டங்களை எட்டியிருக்கவில்லை.

6 ஆய்விற்குட்படுத்தப்பட்ட ஒரு வாரக் காலப்பகுதியில் தொழிலிலுள்ள அல்லது தொழிலற்ற (15 வயதும் அதற்கு மேலும்) ஆட்களை குறிப்பிடுவதே தற்போதைய பொருளாதாரத்தில் செயற்பாட்டில் உள்ள குடித்தொகை ஆகும்.

தொழில்நிலை

தொழில்புரியும் குடித்தொகை[7] நோய்த்தொற்றுக்கு முந்திய தொழில்நிலை மட்டங்கள் வரை இன்னமும் மீட்சிபெற்றிருக்காத போதிலும் 2020இன் 7.999 மில்லியனிலிருந்து 2021இல் 8.114 மில்லியனுக்கு அதிகரித்தது. தொழில்நிலையில் அதிகரிப்பானது பிரதானமாக வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட தொழில்வாய்ப்புக்களின் அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, வேளாண்மையில் காணப்படும் தொழில்நிலை 2020இன் 2.170 மில்லியனிலிருந்து 2021இல் 2.213 மில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை, பணிகள் துறையிலுள்ள தொழில்நிலை 2020இன் 3.677 மில்லியனிலிருந்து 2021இல் 3.791 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், எதிர்கொண்ட விடாப்பிடியான பாதகமான நிலைமைகளுக்கு மத்தியில் கைத்தொழில் துறையின் தொழில்நிலை 2020இல் 2.153 மில்லியனிலிருந்து 2021இல் 2.109 மில்லியனுக்கு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, வேளாண்மை மற்றும் பணிகள் துறைகளின் தொழில்நிலையின் பங்குகள் 2020இன் முறையே 27.1 சதவீதம் மற்றும் 46.0 சதவீதத்திலிருந்து 2021இல் முறையே 27.3 சதவீதம் மற்றும் 46.7 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, கைத்தொழில் துறையின் தொழில்நிலைப் பங்கு 2020இல் 26.9 சதவீதத்திலிருந்து 2021இன் 26.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

மத்திய வங்கியினால் நடாத்தப்படுகின்ற பொதுத் துறை தொழில்நிலை அளவீட்டின் பிரகாரம் மொத்த பொதுத் துறை தொழில்நிலை 2020இன் 1.461 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இன் இறுதியில் 1.493 மில்லியனுக்கு அதிகரித்தது. இது, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள் அத்துடன் அரசசார் நிறுவனங்கள் என்பனவற்றிலுள்ள ஊழியர்களை உள்ளடக்குகின்றது. பொதுத் துறை தொழில்நிலையில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு வேலையற்ற பட்டதாரிகள்

7 தொடர்பான காலப்பகுதியில் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது கொடுப்பனவு பெறும் ஊழியராக, தொழில்தருநராக, சொந்தத் தொழில்புரிபவராக அல்லது பங்களிக்கின்ற குடும்ப உறுப்பினராகவுள்ள பணியாற்றும் ஆட்கள் தொழில்புரிபவர் எனக் குறிப்பிடப்படுவர். இது தொழிலிலுள்ள ஆட்களை உள்ளடக்குகிறது எனினும் தொடர்பான காலப்பகுதியில் தொழில்புரியாத ஆட்களை உள்ளடக்காது.

அட்டவணை 2.16

குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)

விடயம்	2020	2021 (ஆ)				
		கா1	கா2	கா3	கா4	ஆண்டு (இ)
குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள்	16,739	17,025	17,092	17,158	17,260	17,134
தொழிற்படை '000 ஆட்கள்	8,467	8,673	8,515	8,487	8,538	8,553
தொழிலுள்ளோர்	7,999	8,181	8,082	8,044	8,146	8,114
தொழிலற்றோர்	468	492	432	444	392	440
தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ)	50.6	50.9	49.8	49.5	49.5	49.9
ஆண்	71.9	71.7	71.1	71.0	70.2	71.0
பெண்	32.0 (உ)	33.4	30.9	30.9	32.0	31.8

(அ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் எண்ணிக்கை
(ஆ) தற்காலிகமானது
(இ) 2021இன் நான்கு காலாண்டுகளினதும் சராசரி
(ஈ) குடும்ப அலகுகளின் எண்ணிக்கையின் சதவீதமாக தொழிற்படைப் பங்கேற்பு
(உ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

அட்டவணை 2.17
பொதுத்துறை தொழில்நிலை

துறை	2020 (அ)	2021 (ஆ)	சதவீத மாற்றம் 2021/ 2020 (ஆ)
அரசு (இ)	1,223,617	1,258,440	2.8
அரசசார் (ஈ)	237,454	235,032	-1.0
பொதுத்துறை	1,461,071	1,493,472	2.2

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைகள்
(ஈ) அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரச அதிகாரசபைகள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மற்றும் பல பணி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான ஆட்சேர்ப்பு அத்துடன் ஆயுதப்படை மற்றும் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் சுகாதாரத் துறை தொடர்புபட்ட ஆட்சேர்ப்புகள் காரணமாக அமைந்தன. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின் குறிப்பிடப்பட்டவாறு பொதுத் துறை ஊழியர்கள், தொழில்தருநர்கள், சுயதொழில்புரிவோர் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை தனியார் துறை தொழில்நிலையானது உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக தனியார் துறைக் கம்பனிகள் எதிர்கொண்ட அவ்வப்போதான இடர்பாடுகளுக்கு மத்தியில் தொடர்ச்சியான பணி முடிவுறுத்தல்களுக்கமைவாக சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், 2021 காலப்பகுதியில் தனியார் துறையானது, 42.0 சதவீதம் கொண்ட பாரிய பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதான தொழில் உருவாக்குநராக தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத்தொடர்ந்து மொத்த தொழில்நிலையில் 33.4 சதவீதத்திற்கு சுயதொழில்புரிவோர் வகைகூறினர்.

தொழிலின்மை

தொழிலின்மை வீதமானது புதிய தொழில்வாய்ப்புகளின் உருவாக்கத்திற்கு அமைவாக 2020இல் பதிவாகிய 5.5 சதவீதத்திலிருந்து 2021இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, தொழிலற்ற குடித்தொகை[8] 2020இன் பதிவாகிய 0.468 மில்லியனிலிருந்து 2021இல் 0.440 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன்விளைவாக, ஆண், பெண் தொழிலின்மை வீதங்கள் 2020இன் முறையே 4.0 சதவீதம் மற்றும் 8.5 சதவீதத்திலிருந்து 2021இல் முறையே 3.7 சதவீதத்திற்கும் 7.9 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. மேலும், க.பொ.த.உ.த மற்றும் அதற்கு மேற்பட்ட வகையினரின் தொழிலின்மை வீதம் 2020இன் பதிவாகிய 9.8 சதவீதத்திலிருந்து 2021இல் 9.1 சதவீதத்திற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், இளைஞர் (15-24 வருடங்கள்) தொழிலின்மை

8 தொழிலுக்குக் கிடைக்கத்தக்க அத்துடன் அல்லது தொழிலை எதிர்பார்த்திருக்கும் ஆட்கள் என்பதுடன் தொழில்புரியாத மற்றும் கடந்த நான்கு வாரங்களில் தொழிலைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட அத்துடன் அடுத்த இரண்டு வார காலப்பகுதியில் தொழில்வாய்ப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ள ஆட்கள் தொழிலற்றவர்கள் எனக் குறிப்பிடப்படுவர்.

வரைபடம் 2.15
தொழிலின்மை வீதம் (சதவீதம்)



(அ) 2021இன் நான்கு காலாண்டுகளினதும் சராசரி

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வீதம் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 26.5 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டு ஆரம்ப மட்டத்தில் தொழில்வாய்ப்புகள் தொடர்ச்சியாகக் குறைவடைந்தமையினை எடுத்துக்காட்டியது. மேலும், ஒட்டுமொத்த தொழிலின்மை வீதமானது 2021இல் உருவாக்கப்பட்ட தொழில்வாய்ப்புக்கள் 2020 இலும் தொடர்ச்சியாக 2021 இலும் இடம்பெற்ற கணிசமான எண்ணிக்கையான பணி முடிவுறுத்தல்களை திரும்பலடையச் செய்வதற்குப் போதாமையாக இருந்தமையினால் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முந்திய மட்டங்களுக்கு மேலேயே இன்னும் காணப்படுகின்றது.

வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு

வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்கான புறப்படுகைகள், ஆண்டின் பிந்திய பகுதியை நோக்கி புறப்படுகைகளின் குறிப்பிடத்தக்க மேம்படுதலுக்கிசைவாக 2020இன் 53,711 இலிருந்து 2021இல் 121,795 இற்கு 126.8 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. அதற்கமைய, 2021இன் இறுதிக் காலாண்டில் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான புறப்படுகைகள் 2016 மூன்றாம் காலாண்டிலிருந்து அறிக்கையிடப்பட்ட ஒருபோதுமில்லாதளவு அதிகூடிய 61,447 புறப்படுகைகளைப் பதிவுசெய்தது. தளர்த்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்கின்ற நாடுகளில் தொழில்வாய்ப்புகளில் அதிகரிப்பு, தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு பயணிப்பதற்குக் காத்திருந்த புலம்பெயர் பணியாளர்களாகச் செல்லக்கூடியவர்களின் அதிகரித்த எண்ணிக்கை அத்துடன் புலம்பெயர் பணியாளர்களாகச் செல்லக்கூடியவர்களுக்கு துரித தடுப்புமருந்தேற்றல் என்பன வெளிநாட்டுத் தொழிலுக்கான புறப்படுகைகளில் குறிப்பிடத்தக்க இவ்வதிகரிப்பினைச் செலுத்தியது. அதற்கமைய, வெளிநாட்டுத் தொழிலுக்கான வெளிநாட்டு தொழில் மொத்தப் புறப்படுகைகளுக்கான ஆண் மற்றும் பெண் புறப்படுகைகளின் பங்கு முறையே 66.2 சதவீதமாகவும் 33.8 சதவீதமாகவும் காணப்பட்டது. வெளிநாட்டுத் தொழிலுக்கான மொத்தப் புறப்படுகைகளில் இவ்வதிகரிப்புகளுக்கமைவாக அனைத்து

வரைபடம் 2.16
திறமை அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்



வரைபடம் 2.17
முக்கிய நாடுகளின் அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்



வகைகளின் கீழும் அதாவது தொழில்சார், மத்திய மட்ட, எழுதுவினைஞர் மற்றும் தொடர்புபட்டவை, தேர்ச்சிபெற்ற, ஓரளவு தேர்ச்சிபெற்ற, தேர்ச்சிபெறாத அத்துடன் வீட்டுப் பணிப்பெண் என்பனவற்றுக்கான புறப்படுகைகள் மேம்பட்டன. இதில், பாரிய பங்களிப்புகள் தேர்ச்சிபெற்ற, தேர்ச்சிபெறாத அத்துடன் வீட்டுப் பணிப்பெண் வகைகளிலிருந்தே கிடைக்கப்பெற்றன. மத்திய கிழக்குப் பிராந்தியம் 2021ஆம் ஆண்டிலும் முக்கிய வெளிநாட்டுத் தொழில் அடைவிடமாக தொடர்ந்தும் முன்னணி வகித்து கட்டார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைட் ஆகிய நாடுகளின் 87.7 சதவீதத்துடன் வெளிநாட்டுத் தொழிலுக்கான மொத்தப் புறப்படுகைகளின் 84.8 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, 2022 முதல் காலாண்டுப்பகுதியில் அவதானிக்கப்பட்ட மேலதிக மேம்பாடுகளுக்கு மத்தியில் 2022ஆம் ஆண்டுக்காக வெளிநாட்டுத் தொழிலுக்கான புறப்படுகைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழிலாளர் உற்பத்தித்திறன்

வேலை செய்த மணித்தியாலமொன்றிற்கு சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதி நியதிகளில் அளவிடப்படுகின்ற (2010 விலைகளில்) தொழிலாளர் உற்பத்தித்திறன் 2020இல்[9] வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.577.36 இலிருந்து 2021இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.562.15 இற்கு 2.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் அனைத்து மூன்று நடவடிக்கைகள் அதாவது, தனியே வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் தொடர்பில் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதியில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்ட போதிலும் ஆண்டு காலப்பகுதியில்

9 2020இல் தொழிலாளர் உற்பத்தித்திறனின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலினைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறையிலிருந்த இறுக்கமான நடமாட்டக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வேலைசெய்த மணித்தியாலங்களில் கணிசமான குறைவு காரணமாக இருந்தது.

அட்டவணை 2.18
வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

தொழில்வாய்ப்பு	2019		2020 (அ)		2021 (ஆ)	
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்
மொத்த தொழிலிலுள்ளோர்	**203,087**	**100.0**	**53,711**	**100.0**	**121,795**	**100.0**
மூலத்தின்படி						
உரிமம்பெற்ற முகவர்கள்	69,278	34.1	18,065	33.6	42,012	34.5
ஏனையோர்	133,809	65.9	35,646	66.4	79,783	65.5
பால் வகையின்படி						
ஆண்	122,257	60.2	32,500	60.5	80,670	66.2
பெண்	80,830	39.8	21,211	39.5	41,125	33.8
மனிதவலு வகையின்படி						
தொழில் வல்லுநர்கள்	9,861	4.9	2,957	5.5	8,309	6.8
நடுத்தர மட்டம்	5,725	2.8	1,496	2.8	4,216	3.5
எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானோர்	9,163	4.5	2,496	4.6	6,495	5.3
தேர்ச்சிபெற்ற தொழிலாளர்	62,711	30.9	16,664	31.0	39,971	32.8
ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர்	2,950	1.5	789	1.5	1,908	1.6
தேர்ச்சியற்ற தொழிலாளர்	51,188	25.2	13,987	26.0	31,497	25.9
வீட்டுப் பணிப்பெண்கள்	61,489	30.3	15,322	28.5	29,399	24.1

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

2

நிலவிய குறைவான நடமாட்டக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வேலைசெய்த மணித்தியாலங்களில் கணிசமான மீட்சியின் காரணமாக ஒட்டுமொத்த தொழிலாளர் உற்பத்தித்திறன் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2020இன் முறையே வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.178.37, வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.611.90, வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.764.25 இலிருந்து 2021 இலிருந்து வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.175.64 இற்கும், வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.598.78 மற்றும் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.734.94 ஆக வீழ்ச்சியடைந்தது. உற்பத்தித்திறன் மட்டம் என்ற நியதிகளில் பணிகள் நடவடிக்கைகள் தொழில் வளத்தினை அநேகமாக வினைத்திறனுடன் பயன்படுத்துவதை தொடர்ந்தும் வெளிக்காட்டி அதிகூடிய தொழிலாளர் உற்பத்தித்திறன் மட்டத்தினைப் பதிவுசெய்து அதனைத்தொடர்ந்து கைத்தொழில் நடவடிக்கைகள் காணப்பட்ட அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகள் ஆகக்குறைந்த மட்டத்தினை பதிவுசெய்தன.

3

பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

3.1 பொதுநோக்கு

புதிய திரிபுகளின் தோற்றத்துடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுத் தொடர்ச்சிக்கு மத்தியில் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புத் தளமானது பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சிக்கு வசதிப்படுத்தியதுடன் மக்களின் சமூகப்பொருளாதார நலனனை உறுதிசெய்தது. உலகளாவிய கேள்வியின் மீட்சி மற்றும் நிரம்பலில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகரிப்புக்களினால் உந்தப்பட்டு உலகளாவிய சந்தைகளில் வலுப் பண்டங்களின் விலைகள் சடுதியாக அதிகரித்தமையானது 2021 காலப்பகுதியில் முக்கியமானதொரு சவாலாகக் காணப்பட்டதுடன் இவ்விலைப் போக்கானது கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட புவியியல்சார் அரசியல் பதற்றங்களுடன் தொடர்ந்தும் மோசமடைந்தது. இதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2021இல் இரண்டு சுற்றுக்களிலான விலைத் திருத்தங்களை மேற்கொண்ட போதிலும், 2022இன் முன்னைய பகுதியில் உலகளாவிய விலைகளில் ஏற்பட்ட மேலதிக அதிகரிப்புக்களின் தோற்றத்துடன் போதுமாந்தன்மையுடையனவாகக் காணப்படவில்லை. இது 2022இன் முன்னைய பகுதியில் இன்னுமொரு சடுதியான விலைத் திருத்தினை விளைவித்தது. விலைகள் மற்றும் தீர்வைகளுக்கு சரியான காலத்திலான செலவினைப் பிரதிபலிக்கும் சீராக்கங்களின்மையினால் வலுத்துறையின் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் தொடர்ந்தும் நிலையற்ற தன்மையிலேயே காணப்பட்டன. இத்தகைய அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் நீண்டகால நிதியியல் பிரச்சனைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்கள் போதியளவு இல்லாமை போன்றவை நாட்டின் வலு நெருக்கடியினை உச்சத்திற்குக் கொண்டுசென்றுள்ளதுடன் கொவிட்-19 யுகத்திற்குப் பின்னர் பொருளாதாரம் மீளமைவதற்கான முயற்சியினை மேற்கொள்கின்றமையினால் இது ஒட்டுமொத்த நடவடிக்கைகளிலும் கணிசமானளவு மந்தமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். பொருளாதாரத்தின் சமூகப் பொருளாதார உட்கட்டமைப்புத் தளத்தில் முதலீடுகளின் முக்கியத்துவத்தினை அடையாளங்கண்டு, கிராமிய நகர்ப்புற இணைப்புக்களையும் வாழ்விடங்களின் தரத்தினையும் மேம்படுத்துவதனைக் கவனத்திலெடுக்கும் முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்தது. கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டம் மற்றும் பெற்றோலிய வளங்களைக் கண்டறிவதுடன் தொடர்புடைய சட்டவாக்கங்கள், கெரவலபிட்டியவில் அமையப்பெற்றுள்ள முதலாவது திண்மக்கழிவு மின்வலு ஆலை மற்றும் புதிய களனிப் பாலத்தின் திறப்பினைத் தொடர்ந்து 2022 சனவரியில் மத்திய நெடுஞ்சாலையின் மற்றுமொரு பிரிவின் திறப்பு என்பவற்றினை ஆண்டு காலப்பகுதியிலான மைல்கற்கள் உள்ளடக்குகின்றன. இத்தகைய பௌதிக உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கு மத்தியில் குடித்தொகையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் குறுங்கால மற்றும் நீண்டகால தாக்கங்களைத் தணிப்பதில் பாரியளவிலான வகிபாகமொன்றினைக் கொண்டிருந்தாக எதிர்பார்க்கப்படும் நலக்கவனிப்பு மற்றும் கல்விப் பணிகளின் தொடர்ச்சியான வழங்கலை அரசாங்கம் உறுதிப்படுத்தியது. உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து தொற்றாத மற்றும் டெங்கு போன்ற ஏனைய தொற்று நோய்களின் சவால்களுக்கு மத்தியில் பரீட்சிப்பு, சிகிச்சை, மற்றும் தனிமைப்படுத்தல் வசதிகள் மாத்திரமன்றி முக்கியமாக காலந்தவறாது கொவிட்-19 தடுப்பு மருந்து மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகளையேற்றும் செயற்றிட்டங்களுக்கான ஏற்பாடுகளினூடாக கொவிட்-19 நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் நலத்துறை முன்னிலை வகித்துள்ளது. நாட்டின் செயற்றிறன்மிக்க தொலைத்தொடர்பூட்டல் துறையினால் பெருமளவு ஆதரவளிக்கப்பட்டு கல்வித் துறையானது இணையவழிக் கல்வியின் புதிய இயல்புநிலையினைத் தழுவியுள்ளதை எடுத்துகாட்டுகின்ற வேளையில், தொழில்நுட்பவியல் சாதனங்களின் உடைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய கல்வியறிவு மட்டங்களைத் தாழ்ந்தளவில் கொண்டுள்ள குறிப்பாக கிராமிய மற்றும் தோட்டக் குடியிருப்பாளர்கள் மற்றும் நலிவான இணையதள

தொடர்புகள் கொண்ட புறப்பகுதிகளில் வதிவோர் மத்தியில் கல்விசார் விளைவுகளின் தரம் தொடர்பிலான கரிசனைகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இறை மட்டுப்படுத்தல்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கும் தனிநபர்களுக்கும் அரசாங்கம் கொடுப்பனவுகளைச் செலுத்தியதுடன் நிவாரண வழிமுறைகளையும் மேற்கொண்டது. உலகளாவிய நோய்த்தொற்றின் நீடிப்பு மற்றும் அதனால் ஏற்பட்ட இடையூறுகள் வறுமையின் விளிம்பிலுள்ள மற்றும் கொவிட்-19 மற்றும் ஏனையவற்றால் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஏற்படும் ஏதேனும் இடையூறுகளினால் தோன்றும் வடுக்களினால் அதிகம் பாதிப்படையக்கூடிய குடித்தொகையினரில் 'புதிய ஏழைப்' பிரிவொன்றினை உருவாக்கியிருக்கக்கூடுமென வறுமையுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. நாட்டின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புத் தளத்திலான முதலீடுகள் வரையறுக்கப்பட்ட இறை இடைவெளியொன்றினுள் சவால்மிக்கதொன்றாகக் கருதப்படக்கூடுமெனினும் பல்வேறு தசாப்தங்களாக அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோற்றம்பெற்ற வடுக்களுடனான விளைவுகளிலிருந்து பெருமளவிற்கு வணிகங்களையும் குடியிருப்புக்களையும் தனிநபர்களையும் பாதுகாப்பதற்கு இலங்கையை இயலச்செய்துள்ளது என்பதனை அங்கீகரிக்க வேண்டும். எனினும், இவ்வாறான கணிசமான முதலீடுகளின் செயற்றிறனை நிச்சயப்படுத்தும் பொருட்டு குறுங்காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாத்திரமன்றி நடுத்தர காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் முறையொன்றில் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன்மிக்க உள்ளார்ந்த ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்ற முன்னோக்கிய பார்வை மற்றும் முழுமையான கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட உபாயங்களைத் திட்டமிடுவதற்கு பொது மற்றும் தனியார் துறையில் பல்துறை ஆர்வலர் கூட்டிணைப்பினை ஊக்குவித்தல் என்பன அரசாங்கத்திற்கு கட்டாயமானதொன்றாகத் திகழ்கின்றது. இது தளம்பல் மற்றும் அதிர்வுகளுக்கு பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமானதொன்றாக அமைவதன் மூலம் உயர்ந்த மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சி எறிவொன்றிற்கான பொருளாதாரத்தின் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியினை உத்தரவாதப்படுத்தும்.

3

3.2 சமூக உட்கட்டமைப்புக் கொள்கைகள், நிறுவனசார் கட்டமைப்பு மற்றும் செயலாற்றம்

பெற்றோலியம்

கொவிட்-19 நோய்த்தொற்றின் மீளெழுச்சிகளிலிருந்து சில கீழ்நோக்கிய அழுத்தங்களுக்கு மத்தியிலும், 2021இல் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் சடுதியாக உயர்வடைந்து, உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் நிலையான மீட்பு அதேபோன்று இறுக்கமான நிரம்பல் நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட உலகளாவிய கேள்வியிலேற்பட்ட சுருக்கத்தின் காரணமாக சராசரி மசகெண்ணெய் விலை (பிறென்ட்) 2020இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 43.35ஆக விளங்கிய போதும், உலகளாவிய பொருளாதாரத்தின் முழுமையான திரும்பல் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய இயக்கக் கட்டுப்பாடுகளின் தளர்வு என்பவற்றுடன் 2021இல் பன்னாட்டுச் சந்தையில் சராசரி விலை பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 70.80இற்கு 63.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020இன் நடுப்பகுதியில் ஆரம்பித்த உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் மீட்சியானது 2021 ஒத்தோபரில் ஏழு வருட உச்சத்தை அடைவதற்கு முன்னர் வேகமடைந்து 2021 மார்ச்சளவில் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களை அடைந்தது. வெஸ்ட் டெக்ஸாஸ் இன்டர்மீடியேட் (றுவுஐ) விலையும் அதிகரிக்கும் போக்கினைக் கொண்டிருந்ததுடன் 2020இல் பீப்பாயொன்றிற்கு சராசரியாக ஐ.அ.டொலர் 39.78உடன் ஒப்பிடுகையில் 2021இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 67.94ஆக பதிவுசெய்தது. உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் அதிகரிப்பானது பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (ழீறுஊ) மற்றும் அதன் நட்பு நாடுகளினால் பேணப்பட்ட இறுக்கமான உலகளாவிய எண்ணெய் நிரம்பல் நிலைமைகளுக்கு மத்தியில் உலகளாவிய மீட்சிச் செயன்முறைகளைச் சூழவுள்ள எதிர்பார்க்கைகள் மற்றும் உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட உயர்வு என்பவற்றினால் முதன்மையாக உந்தப்பட்டது. கீழ்நோக்கிய அழுத்தங்களின் குறுகிய நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டமைக்கு தற்காலிக முடக்கங்களையும் இயக்கக் கட்டுப்பாட்டு வழிமுறைகளையும் விதிப்பதனைக் கட்டாயப்படுத்திய கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் நோய்த்தொற்றின் புதிய திரிபுகளின் தோற்றம் என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற கேள்விசார் கரிசனைகள் காரணமாயமைந்தன. குறிப்பாக, ருசியா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையிலான புவியியல்சார் அரசியல் பதட்டங்கள் வழங்கலை மேலும் இறுக்கமடையச் செய்யும் என்கின்ற கரிசனைகளைத் தொடர்ந்து உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் மேலும் உயர்வடைந்ததுடன் 2008 யூலையிலிருந்து முதற்தடவையாக 2022 மார்ச்சில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர்

வரைபடம் 3.1

சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பின் செயலாற்றம்

சாதகமற்ற வலு விலை அபிவிருத்திகள்



நீர்மின் வலு மீதான அதிகரித்த தங்கியிருப்பு



அதிகரித்துவரும் இணையத்தள பாவனை



மந்தமான போக்குவரத்து நடவடிக்கைகள்



துறைமுக நடவடிக்கைகளில் மீட்சி

துறைமுகத் துறையின் முக்கிய மைல்கற்கள்

கொழும்புத் துறைமுக நகரம்



- ✓ சட்டவாக்கங்கள்
- ✓ பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கான கடற்கரை உலாவுமேடை திறப்பு

மேற்கு கொள்கலன் முனை



- ✓ ஆண்டிற்கு 3 மில் டிஈயூ கொள்ளளவு
- ✓ 2026 இல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது



பாதிக்கப்படக்கூடிய வறுமை நிலைமை



உலகளாவிய ரீதியில் பாராட்டப்பட்ட தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டம்



3

வரைபடம் 3.2
உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் போக்குகள்



140ஐத் தொட்டன. உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் அதிகரித்துச் செல்லும் போக்குகளுக்கு இசைவாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் சராசரி விலை 2020 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 45.57 சராசரியுடன் ஒப்பிடுகையில் 2021இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 68.86இற்கு 51.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் தொடர்ச்சியான உயர்வு ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலானதோர் இடைவெளிக்குப் பின்னர் 2021இல் முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தைத் தேவைப்படுத்தியது. இதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்நாட்டு விலைகள் 2021 யூன் மற்றும் திசெம்பர் காலப்பகுதியில் மேல்நோக்கித் திருத்தப்பட்டதனைத் தொடர்ந்து 2022 மாச்சில் கணிசமானளவு மேல்நோக்கித் திருத்தப்பட்டன. லங்கா ஐஓசி பிஎல்சியும் 2021 காலப்பகுதியில் மூன்று சுற்றுக்களில் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகளைத் திருத்தியதைத் தொடர்ந்து 2022 பெப்ருவரியில் இரண்டு சுற்றுக்களிலான திருத்தங்களும் 2022 மாச்சில் மேலும் இரு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. இரண்டு நிறுவனங்களினாலும் 2022 மாச்சில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் வரலாற்று ரீதியாக உயர்வானதாகக் காணப்பட்டதுடன் உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் சடுதியான அதிகரிப்பினையும் 2022 மாச்சின் முன்னைய பகுதியில் இலங்கை ரூபாவின் சடுதியான தேய்வின் தாக்கத்தினையும் பிரதிபலிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தன. சகல ஆர்வலர்களுக்கும், இது குறிப்பாக நுகர்வோருக்கு மத்தியில் விலையிடல் தொடர்பிலான வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துகின்ற செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறையொன்றினை உடனடியாக நிறுவனமயப்படுத்துவதற்கான தேவையினை மீள்வலியுறுத்துவதுடன் அத்தகைய திருத்தங்களின் பொதுவான ஏற்புக்கும் பங்களிக்க முடியும். இவ்வகையிலான சீர்த்திருத்தங்கள் நாட்டின் பொது விலை மட்டங்களில் தற்காலிகமான அதிர்வுகளை ஏற்படுத்தினாலும் நடுத்தர காலத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஆற்றலை நிச்சயப்படுத்துவதற்கு அத்தகைய பொறிமுறையொன்றும் அத்தியாவசியமாகின்றதன் மூலம் பேரண்டப்பொருளாதாரத்தினையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினையும் பாதுகாக்கின்றது. உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சந்தையில் தொடர்ச்சியாக மாற்றம் பெற்றுவரும் அபிவிருத்திகளை கருத்திற்கொண்டு முன்னோக்கிய மற்றும் இயக்காற்றல் வாய்ந்த உபாயமான திட்டமிடல் இல்லாமை பகுதியளவில் தற்போது உள்நாட்டுச் சந்தைக்கு எரிபொருளின் தொடர்ச்சியான வழங்கலில்லாமை என்பதற்கு வகைகூறலாம் என்பதை வலியுறுத்தப்படவேண்டும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆற்றல் மற்றும் உறுதிப்பாட்டிற்காக விலையிடல் மற்றும் பெறுகை செயன்முறைகள் இரண்டிலும் வெளிப்படைத்தன்மையை பேணுவது மிகவும் அவசியமாகும்.

வரைபடம் 3.3
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கான திருத்தங்கள்



வரைபடம் 3.4
லங்கா ஐஓசி பிஎல்சியின் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கான திருத்தங்கள்



வரைபடம் 3.5
போக்குவரத்துத் துறைக்கான பெற்றோல் மற்றும் டீசல் விற்பனை



மூலங்கள் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி

ஆண்டு காலப்பகுதியில், வலுத்துறைக்கான விற்பனைகளின் சுருக்கங்களினால் உந்தப்பட்டு உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் ஒட்டுமொத்த விற்பனை அளவுகள் 7.7 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது. கொவிட்-19 நோய்த்தொற்றின் ஏப்பிறல் மற்றும் ஓகத்து காலப்பகுதி முழுவதும் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தமையினால், இது 2021 காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கையில் மீளெழுச்சியொன்றினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் வானூர்தித் துறைகளுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை அளவில் முறையே 10.4 சதவீத, 39.5 சதவீத மற்றும் 18.6 சதவீத வளர்ச்சியினை இது பிரதிபலித்தது. அதேவேளை, நீர்த்தேக்கங்களில் காணப்பட்ட ஆரோக்கியமான நீர் மட்டங்களின் காரணமாக நீர்மின்வலு உருவாக்கம் தொடர்பில் அதிகரித்த தங்கியிருக்கும் தன்மையானது வலு உருவாக்கத்திற்கான டீசல் மற்றும் உலை எண்ணெய்யின் விற்பனையில் முறையே 23.2 சதவீத மற்றும் 35.9 சதவீத குறிப்பிடத்தக்க சுருக்கத்தினைப் பதிவுசெய்ததன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த விற்பனை செயலாற்றத்தினையும் மந்தமடையச் செய்தது.

சபுகஸ்கந்த சுத்தகரிப்பு ஆலையின் பன்முக முடக்கல்கள் காரணமாக சுத்திகரிப்பு ஆலையின் வெளியீடானது 2021இல் 24.7 சதவீதத்திலான ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. வழமையான பராமரிப்பின் நிமித்தம் பெப்புருவரி நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மூடுதலினைத் தொடர்ந்து சுத்திகரிப்புத் தொழிற்பாடுகளுக்கான மசகெண்ணெய்யின் கிடைப்பனவின்மையின் காரணமாக 2021 நவெம்பரில் மூன்று வாரங்களுக்கு சுத்திகரிப்பு ஆலை மீண்டும் மூடப்பட்டது. எனவே, ஒட்டுமொத்த மசகெண்ணெய் செயன்முறைப்படுத்தலானது 24.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், டீசல், பெற்றோல், எரிபொருள் எண்ணெய் மற்றும் நப்தா போன்ற முக்கிய உற்பத்திகளின் சுத்திகரிப்பு ஆலை வெளியீடானது பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் முறையே 31.1, 24.5, 22.9 மற்றும் 31.9 சதவீதங்களினால் சுருக்கமடைந்தன. இவ்வாறான உற்பத்தி இடைவெளிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதியினூடாக ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் இது ஆண்டு காலப்பகுதியில் 15.2 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளில் குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் 2021இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் மேலும் மோசமடைந்தது. உலகளாவிய மசகெண்ணெயின் விலைகளின் சடுதியான அதிகரிப்பிற்கு இசைவான வகையில் விலைத் திருத்தங்கள் போதாமையையும் காலந்தாழ்ந்த தன்மையையும் பிரதிபலிக்கும் வகையில், கணக்காய்வு செய்யப்படாத தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்திருந்த ரூ. 33.9 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ. 41.7 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இழப்பொன்றினை பதிவுசெய்தது. 2021இல் போக்குவரத்து மற்றும் வலு உருவாக்கத்தின் முக்கிய துறைகளுக்கான பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகள் தொழிற்பாட்டு இழப்புக்களை விளைவித்த வேளையில், வான்வழி மற்றும் கைத்தொழில் துறைகள் தொழிற்பாட்டு இலாபங்களை உருவாக்கின. ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்வடைதலானது ஆண்டு காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 33.2 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க செலாவணி வீத வேறுபாட்டு இழப்பொன்றினை விளைவித்து ஒட்டுமொத்த இழப்பில் (வரிகளுக்கு முன்னர்) எதிர்க்கணியமாக நிறையேற்றப்பட்டு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 2.4 பில்லியன் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ. 82.2 பில்லியனாக விளங்கியது. அதேவேளை, வங்கித்தொழில் துறையிலிருந்தான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன்பாடுகள் 2021இல் ரூ. 505.3 பில்லியனிற்கு ரூ. 123.5 பில்லியனினால் அதிகரித்திருந்த வேளையில், உள்நாட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனான வைப்புக்கள் 2021 இறுதியளவில் ரூ. 140.1 பில்லியனிற்கு ரூ. 76.2 பில்லியனினால் அதிகரித்தன. அரச கூட்டுத்தாபனங்களிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மொத்த வெளிநின்ற வர்த்தக கிடைக்கத்தக்கவைகள் 2020இல் ரூ. 142.7 பில்லியனிலிருந்து 2021இல் ரூ. 161.1 பில்லியனிற்கு அதிகரித்தமைக்கு இலங்கை மின்சார சபை மற்றும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் என்பவற்றிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய வளர்ந்துவரும் படுகடன்கள் முக்கிய காரணமாயமைந்தன. இதற்கமைய,

3

2021 இறுதியளவில், இலங்கை மின்சார சபை மற்றும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் என்பவற்றிலிருந்தான வர்த்தக கிடைக்கத்தக்கவைகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வர்த்தக கிடைக்கத்தக்கவைகளின் ஏறத்தாழ 90.1 சதவீதமாக விளங்கின. வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களின் போதாமையுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மோசமடையும் நிதியியல் நிலையானது காலந்தவறாததும் செலவு குறைந்ததுமான எரிபொருள் பெறுகைகளின் தடங்கல்களுக்கு வழிவகுத்துள்ளன. 2022 சனவரியில் காலந்தவறாத எரிபொருள் பெறுகையினை வசதிப்படுத்தும் மற்றும் அரசிற்குச் சொந்தமான இரண்டு வங்கிகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தங்கியிருக்கும் தன்மையினைக் குறைக்கும் பொருட்டு அவர்களது வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களுக்கான விகிதாசாரத்திற்கு அமைய உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையில் எரிபொருள் கொள்வனவுகளுக்கான அத்தியாவசிய இறக்குமதி உண்டியல்களின் நிதியிடலைப் பகிர்ந்தளிப்பதனை வசதிப்படுத்தும் வகையில் மத்திய வங்கி தலையிட்டது. குறிப்பாக, இந்தியாவிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளைக் கொள்வனவு செய்கின்ற வேளையில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதியினை நோக்காகக் கொண்டு 2022 முன்னைய பகுதியில் இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான குறுங்கால கொடுகடன் வசதியினையும் அரசாங்கம் பெற்றுக்கொண்டது.

நிதியியல் ஆற்றல் வாய்ந்த முறையொன்றில் பெற்றோலிய உற்பத்திகளின் தொடர்ச்சியான வழங்கலை நிச்சயப்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகளை மேற்கொள்வதற்கு அவசரத்தேவையொன்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் காணப்படுகின்றது. பெற்றோலிய உற்பத்திகளுக்கான குறிப்பாக போக்குவரத்துத் துறையிலிருந்தான விலைத் திருத்தங்களை மேற்கொள்வதிலுள்ள கேள்வி உணர்திறன் இலங்கையில் குறைந்த மட்டங்களிலேயே காணப்படுகின்றது. 2015 இலிருந்து 2019 வரையான காலப்பகுதியில் 3.4 பில்லியன் லீற்றர்களைக் கொண்ட சராசரி விற்பனை அளவுகளுடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.6 பில்லியன் லீற்றர்களாக விளங்குகின்ற போக்குவரத்துத் துறைக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை அளவுகளில் இதனை அவதானிக்க முடியும். 2022இன் முன்னைய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்றில் உயர்ந்தளவிலான விலைத் திருத்தங்களுக்கு மத்தியில் பெற்றோலிய உற்பத்திகளுக்கான தொடர்ச்சியான வலுவான கேள்வியினால் இது மேலும் சான்றுறுதிப்படுத்தப்படுகின்றது. பெற்றோலிய உற்பத்திகளுக்கான அதிகரித்த கேள்விகளுக்கான நியாயமான பரிசீலனையுடன் மற்றையவற்றிற்கிடையில் புதுப்பிக்கத்தக்க மின்வலு உருவாக்க இயலளவின் விரிவாக்கம் போன்ற பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியைக் கட்டுப்படுத்தும் ஏனைய வழிகளை அடையாளங்காணுவதற்கும் தனியார் போக்குவரத்தின் பயன்பாட்டினைக் குறைப்பதற்கான நெரிசல் கட்டணங்கள் அல்லது கட்டண அறவீட்டு நிலையங்கள் போன்ற வழிமுறைகளுடன் இணைந்து பொதுப் போக்குவரத்தில் தரம்சார் மேம்பாடுகளை ஏற்படுத்தவும் வலு அமைச்சு மற்றும் மின்சார மற்றும் போக்குவரத்துத் துறையிலுள்ள ஏனைய தொடர்புடைய ஆர்வலர்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறித்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகின்றது. தற்போதுள்ள வலு நெருக்கடியானது உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் அபிவிருத்திகளுக்கான முறையான பரிசீலனைகளுடன் முன்னோக்கிய பார்வையிலமைந்த தீர்மானங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ள வேண்டுமென்ற வலுவான தேவைப்பாடொன்றும் காணப்படுகின்றதென்பதனை மீள்வலியுறுத்துகின்றது. அண்மைய மாதங்களில் காணப்படக்கூடிய நிரம்பல் இடையூறுகள் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையிலுள்ள பிரச்சனைகளிலிருந்து பகுதியளவில் தோற்றம் பெற்றுள்ளன என்பது நன்கு அடையாளம் காணப்பட்டுள்ள வேளையில், இத்தகைய வழங்கல் இடையூறுகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தொடர்புடைய அரச ஆர்வலர்களுடன் ஒருங்கிணைந்த முறையொன்றில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் காலந்தவறாத மற்றும் முன்மதியுடைய தீர்மானங்களினூடாகக் குறைத்திருக்க முடியும்.

பெற்றோலியத் துறையின் செயலாற்றத்தினையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள ஆண்டு காலப்பகுதியில் குறைவானதொரு வேகத்தில் முன்னெடுக்கப்பட்டன. நாளொன்றிற்கு 100,000 பீப்பாய்கள் கொள்ளளவுடனான பில்ட்-ஒபரேட்-டிரான்ஸ்பர் மாதிரியொன்றின் கீழான அரச தனியார் பங்குடைமையொன்றாக சபுகஸ்கந்தவில் புதிய சுத்திகரிப்பு ஆலையொன்றினை நிறுவுவதற்கான விரிவான சாத்திய ஆய்வானது 2021இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நிறைவுசெய்யப்பட்டது. அதேவேளை, பெற்றோலிய உற்பத்திகளுக்குக் கிடைப்பனவாகவுள்ள களஞ்சிய வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு கொலன்னாவயில் மொத்தமாக 93,000m^3 கொள்ளளவு கொண்ட இரண்டு களஞ்சியக் கட்டடவாக்கச் செயற்றிட்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தின் பகுதியாக வானூர்தி மீள் எரிபொருளேற்றும் முனையத்தினை அபிவிருத்தி செய்வதற்கும் தரமுயர்த்துவதற்குமான நடவடிக்கைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்தது. மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்மொழியப்பட்ட

அட்டவணை 3.1
பெற்றோலியத் துறையின் செயலாற்றம்

விடயம்		2020(அ)	2021(ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2020(அ)	2021(ஆ)
இறக்குமதிகளின் அளவு ('000 மெ.தொ)					
மசகு எண்ணெய்		1,667	1,182	-9.5	-29.1
சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள்		4,028	4,553	-15.0	13.0
நிலக்கரி		2,600	2,206	8.8	-15.1
திரவப் பெற்றோலிய வாயு		437	422	1.7	-3.3
உள்நாட்டு திரவப் பெற்றோலிய வாயு உற்பத்தி ('000 மெ.தொ)		25	17	-6.4	-34.1
இறக்குமதிகளின் பெறுமதி (ச.உ.செ)					
மசகு எண்ணெய்	(ரூ.மில்)	107,665	123,865	-38.0	15.0
	(ஐ.அ.டொ.மில்)	583	625	-39.9	7.2
சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள்	(ரூ.மில்)	321,818	564,681	-33.4	75.5
	(ஐ.அ.டொ.மில்)	1,742	2,840	-35.6	63.0
நிலக்கரி	(ரூ.மில்)	40,194	55,118	3.8	37.1
	(ஐ.அ.டொ.மில்)	217	278	1.3	27.8
திரவப் பெற்றோலிய வாயு	(ரூ.மில்)	43,812	64,436	1.5	47.1
	(ஐ.அ.டொ.மில்)	236	324	-2.2	37.2
மசகு எண்ணெயின் சராசரி விலை (ச.உ.செ.)					
	(ரூ.மில்)	8,415	13,645	-31.6	62.2
	(ஐ.அ.டொ.மில்)	45.57	68.86	-33.8	51.1
பெற்றோலிய ஏற்றுமதிகளின் தொகை ('000 மெ.தொ)		798	853	-18.9	7.0
பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி (ரூ.மில்)		68,849	100,975	-26.1	46.7
	(ஐ.அ.டொ.மில்)	374	506	-28.3	35.6
உள்நாட்டு விற்பனைகள் - சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ('000 மெ.தொ)		4,600	4,246	-16.8	-7.7
இதில் பெற்றோல் (92 ஒக்டேன்) (இ)		1,139	1,238	-10.2	8.7
பெற்றோல் (95 ஒக்டேன்)		120	116	-23.6	-3.5
தன்னியக்க டீசல் (ஈ)		1,750	1,875	-18.2	7.1
சிறப்பு டீசல்		69	75	-18.8	8.2
மண்ணெண்ணெய்		176	188	-14.8	7.2
உலையெண்ணெய்		971	513	-4.0	-47.2
அவுட்டூர்		189	224	-60.2	18.6
நப்தா		165	11	1.7	-93.5
உள்நாட்டு விற்பனைகள் - திரவப் பெற்றோலிய வாயு ('000 மெ.தொ.)		473	457	1.5	-3.3
உள்நாட்டு விலை (காலமுடிவில்) (ரூ/லீற்றர்)					
பெற்றோல் (92 ஒக்டேன்)		137.00	177.00	-	29.2
பெற்றோல் (95 ஒக்டேன்)		161.00	207.00	-	28.6
தன்னியக்க டீசல்		104.00	121.00	-	16.3
சிறப்பு டீசல்		132.00	159.00	-	20.5
மண்ணெண்ணெய்		70.00	87.00	-	24.3
உலையெண்ணெய்					
800 செக்கன்கள்		70.00	110.00	-27.1	57.14
1,500 செக்கன்கள்		70.00	110.00	-27.1	57.14
திரவப் பெற்றோலிய வாயு (ரூ/கி.கி)					
லிட்ரோ வாயு		119.44	214.00	-	79.2
லாவ்ஸ் வாயு		119.44	227.20	-	90.2
பன்னாட்டு மசகு எண்ணெய் விலைகள் (ஐ.அ.டொலர்/ பீப்பாய்)					
பிரெண்ட்		43.35	70.80	-32.3	63.3
வெஸ்ட் டெக்ஸாஸ் இன்டர்மீடியட் (WTI)		39.78	67.94	-30.2	70.8
பெற்றோலியம் மற்றும் ஏனைய திரவங்கள் உலக எண்ணெய் நிரம்பல் (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்) (உ)		93.9	70.80	-6.4	1.8
உலக எண்ணெய் கேள்வி (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்)(உ)		92.0	67.94	-8.6	6.0

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்ஸ்ரா பிரிமியம் யூரோ 3 உள்ளடங்கலாக
(ஈ) எக்ஸ்ராமைல் டீசல் உள்ளடங்கலாக

மூலங்கள்:
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி
வரையறுக்கப்பட்ட லங்கா மராயன் (தனியார்) சேவிஸ் கம்பனி
வரையறுக்கப்பட்ட லிட்ரோ காஸ் லங்கா கம்பனி
வரையறுக்கப்பட்ட லாவ்ஸ் காஸ் பீஎல்சீ
இலங்கைச் சுங்கம்
புளூம்பேர்க்
ஐ.அ.அமெரிக்கா வலுத் தகவல் நிர்வாகம்

திரவப்படுத்தப்பட்ட இயற்கை வாயு மின்வலுச் செயற்றிற்றட்டத்தின் கீழ் களனிதிஸ்ஸ மின்வலு ஆலைக்கு எரிவாயுவைக் கடத்தும் குழாய்களை நிர்மாணிப்பதற்கு இலங்கை மின்சார சபையின் ஒத்துழைப்புடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் பணியாற்றியது. இதற்கமைய காணிக் கையகப்படுத்தல் மற்றும் செயற்றிட்ட முன்மொழிவுகளின் மதிப்பீடு 2021இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் எரிவாயு குழாய்ச் செயற்றிட்டம் 2023 ஆண்டளவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2022இன் ஆரம்ப பகுதியில் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் திருகோணமலை எண்ணெய்த் தாங்கி அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை முன்னெடுப்பதற்கான உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டது. இதற்கமைய, திருகோணமலை எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியிலுள்ள 99 எண்ணெய்த் தாங்கிகளில் 24 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மற்றைய 61 தாங்கிகளும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்கிடையிலான கூட்டு முயற்சியொன்றாக நிறுவப்பட்டுள்ள துணை நிறுவனமொன்றினால் தரமுயர்த்தப்படவுள்ள வேளையில், எஞ்சியுள்ள 14 தாங்கிகளும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தினால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

2021 ஆண்டு காலப்பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயுவைக் கண்டறிவதனை மேம்படுத்துவதற்காக உத்வேகமிக்க தேசிய செயற்றிட்டமொன்றினை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் முனைப்புடன் ஈடுபட்டது. சுயாதீனமான, செயற்றிறனான மற்றும் வெளிப்படைத்தன்மை வாய்ந்த முன்னோக்கிய சட்டவாக்க கட்டமைப்பொன்றினை நிறுவுகின்ற முதன்மையான நோக்குடன் 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டம் 2021 ஒத்தோபரில் சட்டமாக்கப்பட்டிருந்ததன் மூலம் பெற்றோலிய வளங்கள் மற்றும் தொடர்புடைய தொழிற்பாடுகளைக் கண்காணித்து முகாமை செய்வதற்கு தெளிவான தேசிய முன்னோக்கிய கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டு கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டது. புதிய பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் சட்டவாக்கத்தினைத் தொடர்ந்து, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்திற்குப் பதிலாக தன்னிச்சையான ஒழுங்குமுறைப்படுத்துநராக இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை 2021 ஒத்தோபரில் தாபிக்கப்பட்டது. மேலும், பன்னாட்டுத் தொகுதி எல்லை நிர்ணயம் மற்றும் தற்காலப் போக்குகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், மன்னார், காவேரி மற்றும் இலங்கையின் நீர்த்தேக்கங்களை உள்ளடக்குகின்ற 871 சிறிய தொகுதிகளையும் மூன்று பாரிய தொகுதிகளையும் உள்ளடக்கியதாக புதிய கரைகடந்த ஐதரசன் காபனைக் கண்டறியும் தொகுதி வரைபடமொன்று 2021 யூலையில் வடிவமைக்கப்பட்டு வர்த்தமானியிடப்பட்டது. மேலும், 2020இல் வர்த்தமானியிடப்பட்ட இயற்கை எரிவாயு தொடர்பான தேசிய கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில், எரிவாயுப் பயன்பாட்டு முதன்மைத் செயற்றிட்டத்தின்

வரைவுடன் தொடர்புடைய ஆரம்ப செயற்பாடு 2021 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டதுடன் 2022இன் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மின்வலு

2021இல் பொருளாதார நடவடிக்கையின் மீட்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் மின்வலு கேள்வியானது தொடர்ச்சியாக அதிகரித்தது. ஆண்டு காலப்பகுதியில், நீர்மின் வலு உற்பத்தியின் அதிகரித்த பங்களிப்புடன் மின்வலு உருவாக்கமானது கடந்த ஆண்டினை விடவும் 6.4 சதவீதத்தினால் 16,716 ஜிகாவாற்று மணித்தியாலங்களாக அதிகரித்து காணப்பட்டது. நீரேந்து பிரதேசங்களின் உயர்வான மழைவீழ்ச்சியின் காரணமாக ஆண்டு முழுவதும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்கள் 60 சதவீதத்திற்கு மேல் காணப்பட்டதன் மூலம் அதிகரித்த மின்வலு கேள்வியை எதிர்கொள்வதற்கு தாழ்ந்த கிரய நீர் மின்வலு உருவாக்கத்தின் பங்களிப்பு அதிகரித்து காணப்பட்டது. அதற்கிணங்க, நீர்மின் மூலங்களிலிருந்தான மொத்த மின்வலு உருவாக்கமானது 5,640 ஜிகாவாற்று மணித்தியாலங்களுக்கு 44.2 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில், மொத்த மின்வலு உருவாக்கத்தில் நீர்மின்வலுவின் பங்களிப்பானது 2020இல் பதிவுசெய்யப்பட்ட 25 சதவீதத்திலிருந்து 2021இல் 34 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், இது எரிபொருள் எண்ணெய் மூலமான மின்வலு உற்பத்தி மீது தங்கியிருக்கும் தன்மையை 2,634 ஜிகாவாற்று மணித்தியாலத்திற்கு 37.0 சதவீதத்தினால் குறைவடைய செய்த அதேவேளை நிலக்கரி, மின்வலு உற்பத்தி 5,519 ஜிகாவாற்று மணித்தியாலங்களாக 37.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. அதேவேளை, தேசிய மின்கட்டமைப்பிற்கு புதிய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் குறிப்பாக 100 மெகாவோல்ற் மன்னார் காற்றாலையின் இணைப்பின் பாரியளவான தூண்டுதலினால்

வரைபடம் 3.6
மின்வலு உற்பத்திக் கலவை



மூலம் : இலங்கை மின்சார சபை

அட்டவணை 3.2
மின்வலுத் துறையின் செயலாற்றம்

விடயம	2020 (அ)	2021 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2020 (அ)	2021 (ஆ)
நிறுவப்பட்ட இயலளவு (மெ.வா.)	4.265	4.187	1.2	-1.8
நீர்மின் (இ)	1.383	1.383	-1.1	-
எரிபொருள் எண்ணெய் (ஈ)	1.268	1.087	-1.1	-14.3
நிலக்கரி	900	900	-	-
பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (உ)	715	817	12.4	14.3
உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் (கி.வா.ம.)	15.714	16.716	-1.3	6.4
நீர்மின் (இ)	3.911	5.640	3.4	44.2
எரிபொருள் எண்ணெய் (ஈ)	4.182	2.634	-16.6	-37.0
நிலக்கரி	5.754	5.519	7.3	-4.1
பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (உ)	1.866	2.922	5.9	56.6
இலங்கை மின்சார சபையின் மொத்த விற்பனைகள் (கி.வா.ம.)	14.286	15.214	-2.2	6.5
வீடு மற்றும் வணக்கத்தலம்	5.172	5.320	6.3	2.9
கைத்தொழில்	4.164	4.822	-5.2	15.8
பொது நோக்கம் மற்றும் உணவு விடுதி (ஊ)	3.238	3.342	-9.1	3.2
தெரு விளக்குகள்	108	97	-0.8	-9.8
லங்கா மின்சாரக் கம்பனிக்கு மொத்த விற்பனை	1.605	1.633	-4.7	1.7
லங்கா மின்சாரக் கம்பனியின் விற்பனை (கி.வா.ம.)	1.624	1.603	-1.3	-1.3
வீடு மற்றும் வணக்கத்தலம்	739	717	6.8	-3.0
கைத்தொழில்	279	306	-4.7	9.6
பொது நோக்கம் மற்றும் உணவு விடுதி (ஊ)	583	557	-8.9	-4.5
தெரு விளக்குகள்	23	23	7.7	3.4
இலங்கை மின்சார சபையின் திரண்ட ஊடுகடத்தல் மற்றும் பங்கீட்டு இழப்பு (%)	9.1	9.0	10.3	-1.1
பாவனையாளர்களின் எண்ணிக்கை ('000) (எ)	7.213	7.401	2.0	2.6
இதில் வீடு மற்றும் வணக்கத்தலங்கள்	6.273	6.411	1.8	2.2
கைத்தொழில்	70	73	3.8	4.2
பொது நோக்கம் மற்றும் உணவு விடுதி (ஊ)	867	915	4.3	5.5

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) சிறிய நீர் மின்வலு நிலையம் நீங்கலாக
(ஈ) சுயமான வலு உற்பத்தியாளர்கள் உள்ளடங்கலாக
(உ) சிறிய நீர்மின் உள்ளடங்கலாக பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலுவைக் குறிக்கிறது
(ஊ) அரச துறைக்கான விற்பனைகள் உள்ளடங்கலாக
(எ) லங்கா மின்சார கம்பனியின் நுகர்வோர் உள்ளடங்கலாக

மூலங்கள்: இலங்கை மின்சார சபை
வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி

பாரம்பரியமற்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் மூலமான மின்வலு உற்பத்தி 2,922 ஜிகாவாற்று மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் 56.6 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்திருந்தது. அதற்கிணங்க, மொத்த உருவாக்கத்தில் எரிபொருள் எண்ணெய், நிலக்கரி மற்றும் பாரம்பரியமற்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி என்பவற்றின் பங்களிப்புக்கள் முறையே 16 சதவீதமாகவும், 33 சதவீதமாகவும், அத்துடன் 17 சதவீதமாக விளங்கின. மேலும், 2021இல் மொத்த மின்வலு உருவாக்கத்துடன் தொடர்புடைய இலங்கை மின்சார சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட மின்வலுவின் பங்கு 76.0 சதவீதமாக காணப்பட்ட அதேவேளையில், எஞ்சியவை சுயாதீன வலு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. பின்தங்கிய மற்றும் கிராமியப் பிரதேசங்களுக்கான மின்வலு வழங்கல் விரிவாக்கப்பட்டபோதிலும் 2021இல் மொத்த மின்வலு உருவாக்கத்தின் சதவீதமாக திரண்ட ஊடுகடத்தல் மற்றும் பங்கீட்டு இழப்பு 9.0 சதவீதமாகப் பேணப்பட்டது. 2022 தொடக்கத்திலிருந்து வரட்சியான வானிலை நிலைமைகளின் மத்தியில் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டங்களின் துரித வீழ்ச்சியின் காரணமாக நீர்மின் வலு உருவாக்கத்தின் மீது தங்கியிருத்தலை

குறைக்க வேண்டியிருந்தது. அனல் அடிப்படையிலமைந்த மின்வலு உற்பத்தி மீது தங்கியிருத்தலின் அதிகரித்த விளைவின் காரணமாக, இலங்கை மின்சார சபையானது 2022இன் முற்பகுதியில் பொருளாதாரத்தினுடைய மின்வலுக் கேள்வியை எதிர்கொள்வதில் சவாலினை எதிர்கொள்கின்றது. வலுப் பண்டங்களின் உலகளாவிய விலை அதிகரிப்பு மற்றும் நாட்டில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணி பிரச்சினைகள் என்பவற்றின் காரணமாக எரிபொருள் கொள்வனவில் ஏற்பட்ட சவால்கள் 2022 பெப்புருவரியிலிருந்து மின் துண்டிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு வழிவகுத்தது. பொருளாதார நடவடிக்கைகளுக்கு கணிசமானளவான இடையூறுகளை குறைக்கின்ற வகையில் அத்தகைய மின் துண்டிப்புக்களை மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வது தொடர்பான முயற்சிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன.

உலகளாவிய கொவிட்-19 நோய்ப்பரவலின் தடைகளுடன் 2020இல் குறைவடைந்த கேள்வியினால் ஏற்பட்ட தாழ்ந்த மட்டத் தூண்டுதல்களின் காரணத்தினால் 2021இல் மின்வலு விற்பனைகள் 15,214 கிலோவாற்றிற்கு 6.5 சதவீதத்தினால் அதிகரித்தது. விற்பனைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியானது சமய மற்றும் தெரு விளக்கு நோக்கங்களைத் தவிர்த்து, அனைத்து ஏனைய பயன்படுத்துநர் வகைகளிலிருந்தான கேள்வியினால் தூண்டப்பட்டிருந்தது. மொத்த விற்பனைகளில் 1.4 சதவீதமாகவுள்ள சுற்றுலா விடுதிகளுக்கான மின்வலு விற்பனைகளானது ஆண்டு காலப்பகுதியில் சுற்றுலாத்துறையின் திறன் மீட்சியை சுட்டிக்காட்டி 2020இல் அவதானிக்கப்பட்ட 29.2 சதவீத சுருதியான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 13.7 சதவீதத்தினால் கணிசமானளவில் அதிகரித்தது. இத்தகைய போக்குகளுக்கு மத்தியில், இலங்கை மின்சார சபையானது மின்வலு விற்பனைகளுக்கும் மின்வலு உற்பத்தித் தரவுகளுக்குமிடையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகளின் விளைவாக நேரடி மானி வாசிப்பில் தொடர்ச்சியாக சவால்களுக்கு முகங்கொடுத்தது. அதற்கிணங்க, இலங்கை மின்சார சபையானது தொலைவு துண்டிப்பு மற்றும் தன்னியக்க மீளிணைப்புக்களின் ஊடாக துல்லியமான மற்றும் அதேநேர வலுத் தரவுகளை சேகரிப்பதற்கு முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருந்தது. இரண்டு வர்த்தக அளவிலான மானிவாசிப்பு செயற்றிட்டங்கள் தெஹிவளை மற்றும் கட்டுநாயக்கவில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. சுமூகமான பட்டியல் அறவீடுகள் மற்றும் உடனடியாகவும் செயற்திறனான வகையிலும் தொடர்ச்சியான நிலுவைச் சேகரிப்பினை உறுதிசெய்வதற்கு திறன் மானிவாசிப்பு தொழில்நுட்பங்களின் துரித நடைமுறைப்படுத்தல் பாரியளவில் பங்களிக்கமுடியுமென்பதால் உரிய நேரத்திலான அத்தகைய முன்னெடுப்புக்கள் அத்தியாவசியமானதோடு இவை இலங்கை மின்சார சபையின் பணப் பாய்ச்சல்களை மேம்படுத்தும்.

வரைபடம் 3.7
மின்வலுவிற்கான சராசரி செலவு மற்றும் சராசரி தீர்வை



விலையுயர்ந்த எரிபொருள் எண்ணெய்யை அடிப்படையாகக்கொண்ட மின்வலு உற்பத்தியின் தாழ்ந்த பங்களிப்புடன் இணைக்கப்பட்ட நீர்மின்வலு உற்பத்தி மீதான அதிகரித்த தங்கியிருக்கும் தன்மை 2021 காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையின் நிதியியல் செயலாற்றத்தின் மேம்பாட்டிற்கு ஆதரவளித்தது. எவ்வாறாயினும், இவ் மேம்பாடு ஆண்டு காலப்பகுதியிலும் அதேபோன்று கடந்த காலங்களிலும் ஏற்பட்ட இழப்புக்களுக்கு எதிரீடு செய்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை. கணக்காய்வு செய்யப்படாத தற்காலிக நிதியியல் தரவுகளுக்கமைவாக, இலங்கை மின்சார சபை 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.69.2 பில்லியன் கொண்ட இழப்புடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.22.0 பில்லியன் இழப்பினை பதிவுசெய்திருந்தது. வங்கிகளிடமிருந்தான இலங்கை மின்சார சபையின் குறுங்கால கடன்பாடுகள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன வலு உற்பத்தியாளர்களுக்கான ஏனைய செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் 2020 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்ட ரூ.208.4 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.237.8 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளையில், இலங்கை மின்சார சபையின் நீண்டகால செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.483.8 பில்லியனிலிருந்து 2021 இறுதியளவில் ரூ.502.8 பில்லியனுக்கு அதிகரித்தது. மின்சாரப் பட்டியல்களைச் செலுத்துவதற்கு சலுகைக் காலத்தை வழங்குதல் மற்றும் கட்டணங்களைச் செலுத்தாத பாவனையாளர்களுக்கான சேவைகளை துண்டிப்பதை பிற்போடல் என்பவை தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானமானது இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல் நிலைமைகளை மேலும் மோசமடையச்செய்தது. மேலும், 2021இல் மற்றும் 2022இன் ஆரம்பத்தில் உள்நாட்டு எரிபொருள் விலைகளுக்கான அண்மைய திருத்தங்கள் அதேபோல் புவியியல்சார் பதற்றங்களிலிருந்து தோன்றுகின்ற வலுப் பண்ட விலைகளின் துரிதமான அதிகரிப்பு என்பன 2022இல் இலங்கை மின்சார சபையின் நிதியியல் செயலாற்றத்தின் மீது மேலும் பாதகமான

அட்டவணை 3.3
மின்வலுவின் சராசரி செலவு மற்றும் சராசரி தீர்வைகள்

விடயம்	2020 (அ)	2021 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2020 (அ)	2021 (ஆ)
இலங்கை மின்சார சபையின் சராசரி செலவு (ரூ./கிவாம)	10.35	8.78	-19.8	-15.2
நீர்மின்	2.33	1.67	-6.6	-28.3
எரிபொருள் எண்ணெய்	29.01	32.03	-9.3	10.4
நிலக்கரி	10.87	10.68	-13.1	-1.7
தனியாரின் சராசரி செலவு (ரூ./கிவாம)	22.94	16.94	-13.3	-26.2
எரிபொருள் எண்ணெய்	27.55	30.35	-8.7	10.2
பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (இ)	18.99	16.22	4.2	-14.6
திரண்ட சராசரி செலவு (ரூ./கிவாம)				
உருவாக்க நிலையில்	13.99	11.74	-15.8	-16.1
விற்பனை நிலையில்	21.67	18.63	-10.2	-14.0
சராசரித் தீர்வை (ரூ./கிவாம)	16.72	16.37	0.5	-2.1
வீடு	14.87	14.91	5.2	0.3
பொதுப் பயன்	23.91	23.42	-0.1	-2.0
அரச	18.06	18.25	-0.7	1.1
கைத்தொழில்	14.84	14.70	0.8	-0.9
விடுதி	18.13	17.79	2.4	-1.9

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது
(இ) நீர்மின்னின் சராசரி செலவு பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலுவையும் உள்ளடக்கிறது

மூலம் : இலங்கை மின்சார சபை

தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இத்தகைய அபிவிருத்திகள் மின்சார தீர்வைகளுக்கு செலவை பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான உடனடித் தேவையை துரிதப்படுத்துவதுடன் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் விரிவாக்கத்தின் ஊடாக வலு உருவாக்க இயலளவினை அதிகரிப்பதற்கான முயற்சிகளையும் நடைமுறைப்படுத்தும். இத்தகைய அபிவிருத்திகளானது, மின்சார தீர்வைகளுக்கான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒழுங்குமுறையான மீள்திருத்தங்களை விசேடமாக 2014இலிருந்து மின்சாரத் தீர்வைகள் திருத்தியமைக்கப்படவில்லை என்பதை கருத்திற்கொண்டு திருத்தங்களை மேற்கொள்வதற்குமான உடனடித் தேவையை துரிதப்படுத்துகின்றன. புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடான சக்தி உருவாக்க இயலாற்றலை அதிகரிப்பதற்கான முயற்சிகளும் அவசியமானவையாக காணப்படுகின்றன.

மின்வலுத் துறைக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரசபையான இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, தொடர்ச்சியான மின்வழங்கல் ஏற்பாட்டினை உறுதிசெய்யும் நோக்குடன் அதன் கண்காணித்தல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக வலுப்படுத்தியது. இலங்கை மின்சார சபையானது 2022-2041இற்கான நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தினை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக 2021 ஒத்தோபரில் சமர்ப்பித்தது. புதுப்பிக்கத்தக்க சக்திப் பங்களிப்பானது 2030 அளவில் மொத்த மின்வலு உற்பத்தியில் 50 சதவீதமாக காணப்படுமென இத்திட்டம் அடிகோடிட்டுக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், 2030 அளவில் மின்வலு உற்பத்தியில் 70 சதவீதத்திற்கு பங்களிக்கக்கூடிய புதுப்பிக்கத்தக்க சக்தி குறித்த அரசாங்கத்தினுடைய இலக்கிடலுக்கு அமைவாக நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தினை மறுசீரமைக்குமாறு இலங்கை மின்சார சபையைக் கோரியிருந்தது. 2022 யூன் அளவில் திருத்தப்பட்ட நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தினை சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்திருந்தது. 2021 யூலை அளவில், அமைச்சரவையானது நீடித்து நிலைத்துநிற்கும் சக்தி அபிவிருத்திக்கும் தூய வலுவினை வழங்குவதற்கு அதன் கடப்பாட்டினை துரிதப்படுத்துவதற்கும் அண்மைய எதிர்காலத்தில் எந்தவொரு புதிய நிலக்கரி வலு ஆலைகளை நிர்மாணிப்பதில்லையென தீர்மானித்தது. குறித்த தீர்மானமானது 2050 அளவில் காபன் சமநிலையை அடைவதற்கான காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு நியதியின் கீழான கடப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் இருப்பதை நோக்காகக் கொண்டிருந்தது. அதேவேளை, தேசிய மின்னியலாளர் உத்தரவாதக் கட்டமைப்பின் அபிவிருத்தி, புதுப்பிக்கத்தக்க சக்தி ஆலைகளின் மேற்பார்வைகள், மற்றும் மின்னியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கான பயிற்சி போன்ற மின்வலுவின் ஏனைய கண்காணித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளும் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

ஆண்டு காலப்பகுதியில் மின்வலுக் கேள்வியின் உறுதியான வளர்ச்சிப் போக்குடன் இசைந்து செல்லும் வகையில் சக்தி உற்பத்தியை விரிவுபடுத்துகின்ற பல்வேறு மின்வலு ஆலைகளின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், முன்னேற்றமடைந்து காணப்பட்டன. நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்திற்கமைவாக மின்வலு உற்பத்தியின் முக்கிய மூலவளங்களுள் ஒன்றான திரவ இயற்கை வாயு மின் உற்பத்தியின் எதிர்கால தங்கிருப்பினைக் கருத்திற்கொண்டு, அமைச்சரவையானது கெரவலபிட்டியவில் இலங்கையின் முதலாவது திரவ இயற்கை வாயு வலு ஆலையை நிர்மாணிப்பதற்கான ஒப்புதலை வழங்கியது. முதலாவது 300 மெகாவாற்று மின்வலு ஆலையின் நிர்மாணப் பணிகள் 2021 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2024இன் ஆரம்பம் அளவில் தேசிய தொகுதியுடன் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், இரண்டாவது 300 மெகாவாற்று ஆலை கட்டுமானத்தின் ஆரம்பக் கட்டங்களில் இருப்பதுடன் 2024 இறுதியளவில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டுமானம்-உடமை-செயற்படுத்தல் அடிப்படையில், மிதவை சேமிப்பக மறுசீரமைப்பு அலகு மற்றும் கட்டுமானம்-செயற்படுத்தல்-மாற்றல் அடிப்படையில் வழங்கல் குழாய் பெறுவழி போன்ற வசதிகளை உள்ளடக்கிய திரவ இயற்கை வாயு முனையத்தின்

நிர்மாணத்திற்கான போட்டித்தன்மைமிக்க விலைக்குறிப்பீட்டு சென்முறையினை ஆரம்பித்திருந்தது. இவ் திரவ இயற்கை வாயு அடிப்படையிலமைந்த மின்வலு நிலையங்கள் திரவ இயற்கை வாயு வழங்கலுக்கான இடையூறுகளின் போது தொடர்ச்சியான வழங்கலை உறுதிசெய்வதற்கு எரிபொருள் வழங்கல் மற்றும் காப்பக ஏற்பாடுகள் உள்ளடங்கலாக இரட்டை எரிபொருள் இயலளவுகளுடன் பொருத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம், பாரிய கொழும்பு மாற்றீட்டு மற்றும் நட்டக் குறைப்பு செயற்றிட்டம் மற்றும் மின்வலு முறைமை நம்பக வலுவூட்டல் செயற்றிட்டம் உள்ளடங்கலாக பல்வேறு மாற்றீட்டு மற்றும் பகிர்ந்தளிப்பு கருத்திட்டங்கள் என்பன முறைமையின் நம்பகத்தன்மையை பேணுகின்ற அதேவேளையில், முறைமையின் இழப்புக்களை குறைக்கின்ற மற்றும் அதிக புதுப்பிக்கத்தக்க சக்தியை உள்ளடக்குகின்ற நோக்குடன் மின்வலு மாற்றீடு மற்றும் பகிர்ந்தளிப்பு முறைமையினை விரிவுப்படுத்தி வலுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டன.

அரசாங்கமானது புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்தியின் ஊடாக வலுத் துறையின் நீடித்து நிலைத்துநிற்கும் தன்மையை உறுதிப்படுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. அதற்கிணங்க, முக்கிய நீர்மின்வலு செயற்றிடங்களான உமா ஓயா (120 மெகாவாற்று) மற்றும் பிரோட்லேன்ட் (35 மெகாவாற்று) செயற்றிட்டங்கள் என்பன 2021 இறுதியில் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதுடன் 2022இல் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, மொரகொல்ல, ஜின் கங்கா, மற்றும் தல்பிட்டிகல நீர்மின்வலு செயற்றிட்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் செயற்பாட்டிலிருந்ததுடன், இந்த ஆலைகள் தேசிய மின்கட்டமைப்பிற்கு 65 மெகாவாற்று மொத்த இயலாற்றலை உள்ளீர்க்குமென எதிர்பார்க்கப்படுகின்றன. 2021 நடுப்பகுதியில் முதலாவது பாரியளவான 100 மெகாவாற்று மன்னார் காற்றாலையின் (கட்டம் I) அதற்கான முற்றுமுழுதான இயலளவின் வெற்றிகரமான வலுவூட்டலுடன் குறித்த ஆலையிலிருந்து தேசிய மின்கட்டமைப்பிற்கு மேலதிகமாக 50 மெகாவாற்றை உள்வாங்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னாரில் இரண்டு கட்டங்களாக இரண்டு 100 மெகாவோல்ற் காற்றாலை பூங்காக்களை நிறுவுவதற்கான முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளையில், பூநகரி கலப்பு புதுப்பிக்கத்தக்க வலுப் பூங்காவிலும் திருகோணமலையிலும் அமைந்துள்ள காற்றாலை நிலையங்களுடன் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளும் தொழிற்பாட்டிலுள்ளன. சூரியசக்தி தொடர்பில் கருத்திற்கொள்கையில், 2021 இறுதியிலுள்ளவாறு, ஏறத்தாழ 27,068 பாவனையாளர்கள் சூரிய பால சங்கிரமாய செயற்றிட்டத்தில் இணைந்ததுடன் இத்திட்டத்தின் கீழ் 416 மெகாவோல்ற் தேசிய மின்கட்டமைப்பிற்கு உள்வாங்கப்பட்டது. அதேவேளை, சிம்பலந்துவ சூரிய சக்திப் பூங்கா மற்றும் பூநகரி கலப்பு புதுப்பிக்கத்தக்க வலுப் பூங்கா (150 மெகாவாற்று) என்பவற்றின் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கக் கட்டடங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் அத்துடன் மிதவை சூரிய சக்தி முன்னோடித் திட்டங்கள் என்பவற்றில் மேல் கூரையில் பொருத்தப்பட்ட சூரியசக்தி ஆலைகளை நிறுவுவதற்கு 2021 யூனில் ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறுமதியான கடன் ஒப்பந்தமொன்று இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டது. அதற்கிணங்க, இச்செயற்றிட்டமானது மின்கட்டமைப்பிற்கு மேலதிகமாக 120 மெகாவாற்று சூரிய சக்தியை உள்வாங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சம்பூர், திருகோணமலையில் சூரிய சக்தி ஆலைகளை நிறுவுவதற்கு 2022 மார்ச்சில் நெஷனல் தர்மல் பவர் கோபரேஷன் இந்தியா நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றிலும் இலங்கை கைச்சாத்திட்டது. வலு உற்பத்தியில் புதிய முன்னெடுப்பொன்றாக, 2021 பெப்புருவரியில் இலங்கையின் முதலாவது கழிவு சக்தி வலு ஆலை 10 மெகாவாற்று இயலளவுடன் கெரவலப்பிட்டியவில் அதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. பல புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்கள் வரிசையில் காணப்படினும், முன்மொழியப்பட்டதும் திட்டமிடப்பட்டதுமான இச் செயற்றிட்டங்கள் மின் பற்றாக்குறையைத் தவிர்த்து உயரிய கிரய மாற்றுவழிகளினூடான உற்பத்தியை நாட்டத்தை தவிர்க்கின்ற அதேவேளையில், ஒட்டுமொத்த உற்பத்திக் கலப்பு 70 சதவீத புதுப்பிக்கத்தக்க வலு பங்களிப்பை அடைவதற்கான அரசாங்கத்தின் கொள்கை இலக்கிடலையும் உறுதிசெய்வதற்கும் உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், நீண்டகால பொருளாதாரக் கிரயங்கள், உயர்வான மூலதன முதலீடு மற்றும் பராமரிப்புக் கிரயம், மற்றும் சுற்றாடல் மற்றும் சமூகம் தொடர்பான வலு மூலங்களின் வெளிப்படைத்தன்மைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, பொருத்தமானதும் நீடித்து நிலைத்துநிற்கின்ற சக்திக் கலப்பினை உருவாக்குவதற்கான நிலையான கொள்கைக் கட்டமைப்பினை விருத்தி செய்வதற்கு இது அவசியமாகும். அதற்கிணங்க, புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்திக்காக உபாயத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் முன்மொழியப்பட்ட புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் சாத்தியமான காலதாமதங்களை தணிப்பதற்கும் 2022 பெப்புருவரியில் அமைச்சரவை துணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இலங்கையின் நீடித்து நிலைத்துநிற்கும் வலு அதிகாரசபையானது நாட்டில் நீடித்து நிலைத்துநிற்கும் வலு அபிவிருத்தியை ஊக்கப்படுத்துவதற்காக அதன் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொள்கின்றது. இலங்கையின் நீடித்துநிலைத்துநிற்கும் வலு அதிகார சபையானது நாட்டினுடைய வலுப் பாதுகாப்பிற்கு வசதியளிப்பதற்காக சக்தி முகாமைத்துவ முறைமைகளை மற்றும் வலுப் பெயரிடல் நிகழ்ச்சித்திட்டத்தை தாபித்தல் போன்ற வலுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில்

ஈடுபட்டது. 2021-2026இற்கான புதுப்பிக்கத்தக்க வலு மூலவள அபிவிருத்தித் திட்டமானது புதுப்பிக்கத்தக்க வலு மூலவளங்களின் சாதகமான பயன்பாடு, செயற்றிட்டங்களுக்கான காணி மூலவளங்கள் மற்றும் சாத்தியமான ஊடுகடத்தல் முறைமைகளின் அடையாளப்படுத்தல் என்பவை தொடர்பான உரிய கரிசனைகளுடன் உருவாக்கப்பட்டது. மேலும், இலங்கையின் நீடித்து நிலைத்துநிற்கும் வலு அதிகார சபையானது வர்த்தகளவான செயற்றிட்டங்களில் சுதேச புதுப்பிக்கத்தக்க மூலவளங்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு வலு அனுமதிப் பத்திரங்களையும் தற்காலிக அனுமதிகளையும் வழங்கும் செயன்முறையில் ஈடுபட்டிருந்தது.

3 வீதி அபிவிருத்தி

கிராம-நகர தொடர்பினை மேம்படுத்தும் முனைப்புடன் இடமாற்ற நேரத்தைக் குறைக்கும் நோக்கில் வீதிப் போக்குவரத்தின் தரத்தினை அதிகரிக்கும் அதேவேளையில், மக்களினதும் பொருட்களினதும் வசதியான இடமாற்றத்தை மேம்படுத்துகின்ற நோக்குடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னெடுப்புக்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பராமரிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் (A மற்றும் B வகுப்பு வீதிகள்) மொத்த நீளமானது ஏறத்தாழ 12,225 கிலோமீற்றராக காணப்பட்ட அதேவேளையில், விரைவுப் பாதைகளின் மொத்தம் நீளம் 312.6 கிலோமீற்றராக காணப்பட்டது. பராமரிப்பு, விரைவுப் பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகளின் அபிவிருத்தி, வீதி விரிவுப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல், பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் கட்டமைப்புக்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வீதிகளின் புனரமைப்பு என்பவற்றினூடான வீதி வலையமைப்புக்களின் மேம்படுத்தல்களுடன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ரூ.200.8 பில்லியன் தொகையினை ஏற்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையை வழிப்படுத்தியது. விரைவுப் பாதைகளினதும் அதிவேக நெடுஞ்சாலைகளினதும் அபிவிருத்தி தொடர்பாக ஏற்பட்ட செலவினமானது முறையே ரூ.19 பில்லியனாகவும் ரூ.155.9 பில்லியனாகவும் காணப்பட்ட அதேவேளையில், ஆண்டுக்கான பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிர்மாணங்களுடன் தொடர்புடைய செலவினமானது ரூ.14.7 பில்லியனாக கணக்கிடப்பட்டுள்ளது.

கொவிட்-19 நோய்ப்பரவலின் காரணமாக தொழிலாளர் மற்றும் கட்டடவாக்க மூலப்பொருட்களின் இறக்குமதிகளின் கிடைப்பனவுடன் தொடர்புடைய சவால்கள் காணப்பட்டபோதிலும், அரசாங்கமானது நாட்டினுடைய கிராமிய- நகர இணைப்புக்களை மேம்படுத்துவதனை உறுதிப்படுத்தி இதனால் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிசெய்தது. அதற்கிணங்க, 2022 சனவரி நடுப்பகுதியிலிருந்து மீரிகம தொடக்கம் குருணாகல வரை நீடிக்கின்ற பகுதியை பொதுமக்கள் பாவனைக்கு வழங்குவதற்கு இயலுமைப்படுத்துகின்ற வகையில் கடவத்த தொடக்கம் தம்புள்ள வரை நீடிக்கின்ற மத்திய விரைவுப்பாதையுடன் தொடர்புடைய கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டன. மேலும், பொத்துஹெர தொடக்கம் ரம்புக்கன வரையான முதலாவது 12 கிலோமீற்றர் விரைவுப் பாதையுடன் தொடர்புடைய ஆரம்பக்கட்ட கட்டடவாக்க நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. கடவத்த தொடக்கம் மீரிகம வரை நீடிக்கின்ற பகுதியின் நிர்மாணச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட அதேவேளையில், குருணாகல தொடக்கம் தம்புள்ள வரையான செயற்றிட்டத்தின் பகுதி IVஇன் செயற்பாடுகள் 2021 இறுதியிலுள்ளவாறு 7.7 சதவீதமாகக் காணப்பட்டன. அதேவேளை, கஹதுடுவ தொடக்கம் பல்மதுல்ல வரையான 76 கிலோமீற்றர் நீளமான ருவன்புர விரைவுப் பாதையின் நிர்மாணப் பணிகள் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. அதற்கிணங்க, கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரை நீண்ட விரைவுப்பாதை கட்டம் 01இன் நிர்மாணப் பணிகள் 2021 ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், இங்கிரிய தொடக்கம் பல்மடுல்ல வரையான கட்டங்கள் 02 மற்றும் 03 என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொருத்தமான சாத்திய ஆய்வின் மறுபரிசீலனையின் நிறைவுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது.

2021இல் விரைவுப்பாதைகளில் ஒட்டுமொத்த வாகன நெரிசலானது அதிகரித்து காணப்பட்டது. அதற்கிணங்க, கொட்டாவ தொடக்கம் கொடகம மற்றும் பாலதுவ தொடக்கம் மத்தல வரையான தெற்கு விரைவுப்பாதையில் நாளாந்த அடிப்படையில் பயணம் மேற்கொண்ட வாகனங்களின் சாராசரி எண்ணிக்கையானது 2020ஐ விட அதிகமாக முறையே 2.7 சதவீதத்தினாலும் 30.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை, கொழும்பு கட்டுநாயக்க விரைவுப் பாதை மற்றும் வெளிச்சுற்று விரைவுப் பாதை ஊடாக பயணிக்கின்ற வாகனங்களின் நாளாந்த எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 6.7 சதவீதம் மற்றும் 38.8 சதவீத வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன. இத்தகைய சாதகமான அபிவிருத்திகளுடன், விரைவுப் பாதைகளிலிருந்தான வருமானமானது 2021இன் வருடாந்த வருமானத்தில் 20.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து ஏறத்தாழ ரூ.8.8 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. 2022 சனவரி நடுப்பகுதியில் மீரிகம தொடக்கம் குருணாகலை வரை நீளமான மத்திய விரைவுப் பாதை பிரிவின் திறப்பினைத் தொடர்ந்து 2022 பெப்புருவரி இறுதியில் இப்பிரிவிலிருந்தான மொத்த சேகரிப்பானது ரூ.134.4 மில்லியனைப் பதிவுசெய்திருந்தது.

தற்போதுள்ள வீதி வலையமைப்பினதும் பாலங்களினதும் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும்

முன்னெடுக்கப்பட்டன. 2021 நவெம்பர் பிற்பகுதியில் பேலியகொடவில் புதிய களனிப் பாலத்தின் திறத்தலானது கொழும்பு பெருநகர் பிரதேசத்தில் போக்குவரத்து நெரிசலை தணிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முன்னெடுப்புக்களுக்கான முக்கிய மைல்கல்லாகும். இச்செயற்றிட்டமானது பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தையும் கொழும்பு துறைமுகத்தையும் இணைக்கின்ற முக்கிய போக்குவரத்து மையத்தின் மத்தியில் அமைந்துள்ளது. நகரத்திற்கு வழிகாட்டும் வகையில் அதன் உயரமான பாதையுடன் புதிதாக திறந்துவைக்கப்பட்ட ஆறு-ஒழுங்கைப் பாலமானது கடந்த பல ஆண்டுகளாக பிரதேசத்தில் அவதானிக்கப்பட்டு வருகின்ற போக்குவரத்து நெரிசலைத் பெருமளவில் தணிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொம்பனித்தெரு, கெட்டெம்பே சந்தி மற்றும் கொஹுவல ஆகிய இடங்களில் மேம்பாலங்களின் கட்டுமானங்கள் போன்ற பல்வேறு ஏனைய வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களும் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. தெற்கு வீதிகளின் இணைப்பின் அபிவிருத்தியில் குறிப்பாக தெற்கு விரைவுப்பாதை குறித்து அவதானம் செலுத்துகின்ற தெற்கு வீதி இணைப்பு செயற்றிட்டமும் பதுளை - செங்கலடி வீதி மேம்பாட்டுச் செயற்றிட்டத்துடன் (A005) சேர்த்து ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, புதிய களனிப் பாலம் தொடக்கம் வெளிச்சுற்று விரைவுப் பாதை வரையான உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையின் நிர்மாணத்துடன் தொடர்புடைய காணி கையேற்பு மற்றும் மீள்குடியேற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட அதேவேளையில், புதிய களனிப் பாலம் தொடக்கம் ராஜகிரிய வரை நீடிக்கின்ற பகுதிக்கான சுற்றாடல்த் தாக்க மதிப்பீடு ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

வீதிப் பயணிப் போக்குவரத்து

வீதிப் பயணிப் போக்குவரத்து நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த செயலாற்றமானது 2021இல் தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்பட்டு, தனியார் போக்குவரத்திற்கான அதிகரித்த விருப்பினையும் கொவிட்-19 நோய்ப்பரவலை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் இடையிடையே மேற்கொள்ளப்பட்ட இயக்கக் கட்டுப்பாடுகளின் மத்தியில் அரச மற்றும் தனியார் துறை இரண்டிலுமான வரையறுக்கப்பட்ட போக்குவரத்துத் தொழிற்பாடுகளைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக, இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்து தொழிற்பாட்டாளர்களது தொழிற்பாடுகளில் 2021இல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன. இதற்கமைய, இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்படுத்தப்பட்ட கி.மீ. தூரம் மற்றும் பயணிகள் கி.மீ. தூரம் என்பன ஆண்டு காலப்பகுதியில் முறையே 19.7 மற்றும் 28.4 சதவீதங்களினால் வீழ்ச்சியடைந்த வேளையில், 2021இல் தொழிற்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை 2020இல் பதிவுசெய்த 4,045 பேருந்துகளிலிருந்து 4,449இற்கு அதிகரித்து, ஆண்டு காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பொதுப் போக்குவரத்துத் தொழிற்பாடுகளுக்குச் செயற்றிறன்மிக்க விதத்தில் கிடைப்பனவாகவிருந்த வாகனங்களின் எண்ணிக்கையில் ஏறத்தாழ 85.7 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை, தனியார் துறையினால் தொழிற்படுத்தப்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 10,787 இலிருந்து 2021இல் 9,053 இற்கு 16.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் தனியார் பேருந்துகளின் பயணிகள் கி.மீ. தூரம் மற்றும் தொழிற்படுத்தப்பட்ட கி.மீ. தூரம் என்பன முறையே 12.2 சதவீதத்தினாலும் 4.4 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. 2021 இறுதியிலுள்ளவாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தனியார் பேருந்துத் தொழிற்பாடுகளிற்காக 1,978 மாகாணங்களுக்கிடையிலான அனுமதிப்பத்திரங்களையும் 16,914 மாகாணங்களுக்குள்ளான அனுமதிப்பத்திரங்களையும் வழங்கியது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவானது 2021 காலப்பகுதியில் பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து வசதிகளை விரிவாக்குவதனை நோக்காகக் கொண்டு பணியாற்றிய வேளையில் கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை குறிப்பாக இருக்கை கொள்ளளவை மட்டுப்படுத்தும் வழிகாட்டல்களை பின்பற்றியது. இதற்கமைய, கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய சுகாதார வழிகாட்டல்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் சிசு செரிய, கெமி செரிய மற்றும் நிசி செரிய என்பன உள்ளடங்கலாக பல்வேறு பேருந்து சேவைகள் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டன. பாடசாலை மாணவர்களின் போக்குவரத்தினை வசதிப்படுத்தும் பொருட்டு ஏறத்தாழ 97 புதிய சேவைகள் சிசு செரிய சேவைக்கு இணைக்கப்பட்டன. 2021 இறுதியுள்ளவாறு சிசு செரிய செயற்றிட்டத்தின் கீழ் 1,563 சேவைகள், நிசி செரிய செயற்றிட்டத்தின் கீழ் 194 சேவைகள் மற்றும் கெமி செரிய கிராமிய பேருந்துச் சேவைச் செயற்றிட்டத்தின் கீழ் 14 சேவைகள் தொழிற்பாட்டிலிருந்தன. இச்செயற்றிட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் ஆண்டு காலப்பகுதியில் 305 புதிய நிசி செரிய சேவைகளை இணைப்பதற்கான ஒப்புதலை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவானது இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்கியது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெற்கு, சப்ரகமுவ, ஊவா மற்றும் வட மத்திய மாகாணங்களை உள்ளடக்கும் விதத்தில் 59 புதிய பேருந்துச் சேவைகளை ஆரம்பித்தது.

2021இல் எரிபொருளின் உள்நாட்டு விலைகளுக்கான இரண்டு சுற்றுக்களிளான திருத்தங்களும் 2022 மாச்சில் மேற்கொள்ளப்பட்ட விலைத்திருத்தமும் தேசிய போக்குவரத்து

ஆணைக்குழுவை பேருந்துக் கட்டணங்களின் மேல்நோக்கியத் திருத்தத்திற்குத் தூண்டியது. இதற்கமைய, சாதாரண, சொகுசு மற்றும் அரைச்சொகுசுப் பேருந்துச் சேவைகளின் கட்டணங்கள் 2021 திசெம்பரில் 17.4 சதவீத சராசரியொன்றினால் மேல்நோக்கித் திருத்தப்பட்டு குறைந்தளவிலான பேருந்துக் கட்டணமானது ரூ. 14.00இலிருந்து ரூ. 17.00இற்கு அதிகரித்து திருத்தப்பட்ட கட்டணங்கள் 2022 சனவரி 05 தொடக்கம் நடைமுறைக்கு வந்தன. 2022 மாச்சில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு திருத்தங்களின் சுற்றானது குறைந்தளவிலான பேருந்துக் கட்டணம் ரூ. 20.00இற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டு, பேருந்துக் கட்டணங்களில் 15.0 சதவீத சராசரி அதிகரிப்பொன்றிற்கு வழிவகுத்தது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் நிதியியல் சந்தை மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் 2021இல் தொடர்ந்தும் தேய்வடைந்தது. கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை போக்குவரத்துச் சபையின் மொத்த வருமானம் 2021இல் ரூ. 26.9 பில்லியனிற்கு 13.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்த வேளையில், மொத்த செலவினமும் ரூ. 30.4 பில்லியனிற்கு ஏறத்தாழ 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இலங்கை போக்குவரத்துச் சபை முன்னைய ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 2.2 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ. 3.4 தொழிற்பாட்டு நட்டத்தினைப் பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில், பொருளாதார ரீதியாக பயன்குறைந்த பயண வழிகளின் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கும் மானியம் வழங்கப்பட்ட பருவகால பயணச் சீட்டுக்களுக்களை வசதிப்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ.12.2 பில்லியனாக விளங்கியது. அதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபை அதன் வாகனங்களை மேம்படுத்துவதற்குப் பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டிருந்ததன் மூலம் பயணிகளுக்கு அதன் பணி வழங்கலை மேம்படுத்தியது. இதற்கமைய, மறுசீரமைப்புக்குப் பின்னர் ஏறத்தாழ 213 பேருந்துகள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட வேளையில், 2022இன் முன்னைய பகுதியில் இந்தியக் கொடுகடன் வசதியின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 500 புதிய பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்புதல் அமைச்சரவையினால் வழங்கப்பட்டது.

அட்டவணை 3.4
உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள்

விடயம்	2020	2021 (அ)	வளர்ச்சி வீதம் (%) 2020	2021 (அ)
உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் (எண்.)	202,628	33,850	-44.8	-83.3
பேருந்துகள்	578	281	-64.2	-51.4
மோட்டார் கார்கள்	21,021	3,495	-45.0	-83.4
முச்சக்கர வண்டிகள்	7,150	2,093	-53.8	-70.7
இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள்	9,532	771	-29.2	-91.9
உந்து ஈருருளிகள்	151,634	8,011	-46.7	-94.7
சரக்குக் கொண்டு செல்வதற்கான ஊர்திகள்	3,941	4,432	-24.5	12.5
நில ஊர்திகள்	8,302	14,764	8.3	77.8
குவாட்சி ஈருளிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள்	470	3	-64.4	-99.4

(அ) தற்காலிகமானது

மூலம் : போக்குவரத்துத் திணைக்களம்

வரைபடம் 3.8
உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள்



மூலம் : போக்குவரத்து திணைக்களம்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து அத்தியாவசியமற்ற இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து மோட்டார் ஊர்திகளின் புதிய பதிவு 2021இல் தொடர்ந்தும் சுருக்கமடைந்து காணப்பட்டது. மோட்டார் ஊர்திகளின் புதிய பதிவு 2020 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 44.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 83.3 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. தனிநபர் ஊர்திகள், உந்து ஊர்திகள், உந்து ஈருருளி மற்றும் இரட்டை நோக்கிலமைந்து ஊர்திகளின் புதிய பதிவு 80 சதவீதத்திற்கும் மேலான வீழ்ச்சியுடன் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் மோட்டார் ஊர்திகளின் சகல முக்கிய வகைகளிலும் குறைப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

புகையிரதப் போக்குவரத்து[1]

இலங்கைப் புகையிரதம் 2021இல் நலிவடைந்த நிதியியல் செயலாற்றத்தினைப் பதிவுசெய்தது. தற்காலிகமான நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கைப் புகையிரதம் 2020இல் பதிவுசெய்த ரூ. 10.1 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 10.3 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டமொன்றினைப் பதிவுசெய்தது. இலங்கைப் புகையிரதத்தின் மொத்த வருவாய்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்

1 ஆண்டறிக்கை வெளியிடும்போது இலங்கை புகையிரதத்தின் நடவடிக்கைகள் தொடர்பிலான தரவுகள் கிடைக்கப்பெறவில்லை.

2021இல் 41.3 சதவீத குறிப்பிடத்தக்க குறைப்பொன்றுடன் ரூ. 2.7 பில்லியனாக விளங்கியமைக்கு கொவிட்-19 நோய்த்தொற்றின் ஏப்பிறல் மற்றும் ஓகத்து தோற்றப்பாடுகளினால் தூண்டப்பட்டு பயணிகள் போக்குவரத்திலிருந்து உருவாக்கப்பட்ட வருவாய்களில் ஏற்பட்ட 53.0 சதவீத சுருக்கம் முக்கிய காரணமாயமைந்தது. ஆண்டு காலப்பகுதியில் நடைமுறை மற்றும் மூலதனச் செலவினம் ரூ. 13.0 பில்லியனிற்கும் ரூ. 27.4 பில்லியனிற்கும் முறையே 11.2 சதவீதத்தினாலும் 19.6 சதவீதத்தினாலும் குறைவடைந்தமையினால் இலங்கைப் புகையிரதத்தின் மொத்த செலவினம் ரூ. 40.4 பில்லியனிற்கு 17.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தனியாள் ஊதியங்களின் குறைப்பு மற்றும் தொழிற்பாடுகளின் வீழ்ச்சியால் குறைவடைந்த எரிபொருள் செலவினம் என்பன நடைமுறைச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான முக்கிய காரணிகளாக அமைந்தன.

இலங்கைப் புகையிரதம் 2021இல் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளையும் பணிகள் மேம்பாட்டு நடவடிக்கைகளையும் குறைவான வேகத்தில் முன்னெடுத்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில் வலையமைப்புக்கள், புகையிரதத் தொகுதிகள் மற்றும் சமிக்ஞையிடல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் என்பவற்றினைக் கண்காணிப்பதற்கான சகல மேம்பாட்டு

அட்டவணை 3.5
போக்குவரத்து துறையிலுள்ள அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் முக்கிய பண்புகள்

விடயம்	2020 (அ)	2021 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2020 (அ)	2021 (ஆ)
1.இலங்கை போக்குவரத்துச் சபை				
தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்)	309	248	-28.4	-19.7
பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்)	8,623	6,175	-39.9	-28.4
மொத்த வருவாய் (ரூ.மில்லியன்)	31,233	26,948	-28.2	-13.7
தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்)	33,437	30,386	-20.3	-9.1
தொழிற்பாட்டு இலாபம் (+)/நட்டம்(-) (ரூ.மில்லியன்)	-2,204	-3,438	-241.6	56.0
2.இலங்கைப் புகையிரதப்				
தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ('000)	7,990	வி.கி.	-28.9	-
பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்)	3,906	வி.கி.	-46.6	-
சரக்குத் தொன் கிலோமீற்றர்கள் (மில்லியன்)	114	வி.கி.	-1.1	-
மொத்த வருவாய் (ரூ.மில்லியன்)	4,567	2,679	-42.2	-41.3
தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்)	14,618	12,979	-5.5	-11.2
தொழிற்பாட்டு இலாபம் (+)/நட்டம்(-) (ரூ.மில்லியன்)	-10,051	-10,300	32.9	2.5
3.சிறிலங்கன் எயார்லைன்ஸ்				
பறந்த மணித்தியாலங்கள்	41,585	50,287	-61.1	20.9
பறந்த பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்)	3,641	2,868	-76.5	-21.2
பயணிகள் சுமைக்காரணி (%)	56	36	-32.6	-36.0
நிறை சுமைக்காரணி (%)	62	74	-16.8	19.6
சரக்கு (மெ.தொ. '000)	56	93	-54.3	66.0
வேலைவாய்ப்பு (எண்ணிக்கை)	6,489	5,732	-3.3	-11.7

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கைப் புகையிரதம் சேவைகள்
இலங்கை போக்குவரத்துச் சபை
இலங்கை சிவில்விமானப் போக்குவரத்து அதிகாரசபை

மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மதிமான வேகத்தில் முன்னேற்றமடைந்தன. ஆண்டு காலப்பகுதியில் குரணயிலிருந்து நீர்கொழும்பு வரையிலான புகையிரதப் பாதையில் இரட்டைப் புகையிரதப் பாதையமைத்தல் நடவடிக்கைகள் நிறைவடைந்திருந்த வேளையில், கண்டியிலிருந்து சரசவி உயண வரையிலான 5 கி.மீ புகையிரதப் பாதையில் இரட்டைப் புகையிரதப் பாதையமைக்கின்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2020இல் ஆரம்பிக்கப்பட்ட 200 பயணிகள் புகையிரதப் பெட்டிகளை புனரமைக்கின்ற செயற்றிட்டம் நிறைவடைந்திருந்ததுடன் செயற்றிட்டத்தின் விரிவாக்கமாக மற்றைய 100 பயணிகள் புகையிரதப் பெட்டிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த வேளையில் 30 பயணிகள் புகையிரதப் பெட்டிகள் மீண்டும் சேவையினுள் ஈடுபடுத்தப்பட்டன. 2017இல் பெறப்பட்ட இந்திய கொடுகடன் வசதியின் கீழ் இரு குளிரூட்டப்பட்ட வலுப்பொறித் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டு புகையிரதச் சேவையில் இணைக்கப்பட்ட வேளையில், ஆண்டு காலப்பகுதியில் 120 பயணிகள் புகையிரதப் பெட்டிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பிரதான புகையிரதப் பாதை, கரையோரப் பாதை, புத்தளம் பாதை, களனிவெளிப் பாதை, மாத்தளைப் பாதை, வட மற்றும் கிழக்குப் பாதைகளில் அமையப்பெற்றுள்ள புகையிரதப் பாலங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றங்களையடைந்தன. சமிக்ஞையிடல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் முறைமையின் ஏற்பாடுகளுடன் தொடர்புடைய பல்வேறு செயற்றிட்டங்களும் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

வான்வழிப் போக்குவரத்து

வான்வழிப் போக்குவரத்துக் கைத்தொழில் துறையின் செயலாற்றம் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் போக்குவரத்துக்கான தளர்வடைந்த நாட்டத்துடன் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது. இதற்கமைய, பயணிகளின் வருகைகள் 2020இல் அவதானிக்கப்பட்ட 76

வரைபடம் 3.9
விமானப் பயணிகள் மற்றும் விமான சரக்கு கையாளல்



மூலம் : இலங்கை வான்வழிப்போக்குவரத்து அதிகாரசபை

அட்டவணை 3.6
வான்வழித் துறையின் செயலாற்றம்

விடயம்	2020 (அ)	2021 (ஆ)	வளர்ச்சி வீதம் (%)	
			2020 (அ)	2021 (ஆ)
1. பயணிகள்	2,372,928	1,500,078	-76.0	-36.8
சிறிலங்கன் எயார்லைன்ஸ்	1,237,931	857,158	-77.8	-30.8
வெளிநாட்டு எயார்லைன்ஸ்	1,134,997	642,920	-73.7	-43.4
2. சரக்கு கையாளுதல் (மெ.மெத)	136,093	184,139	-44.8	35.3
சிறிலங்கன் எயார்லைன்ஸ்	56,151	93,195	-54.3	66.0
வெளிநாட்டு எயார்லைன்ஸ்	79,942	90,944	-35.3	13.8
3. வானார்திகளின் கோர்வுகள் (எண்ணிக்கை) (இ)	25,576	25,090	-74.0	-1.9
ப.ச.வி	24,931	24,336	-74.3	-2.4
மா.ரா.ப.வி	505	722	-60.9	43.0
யா.ப.வி	140	32	-31.4	-77.1

(அ) தற்காலிகமானது
(ஆ) இடைநிற் பயணிகள் நீங்கலாக
(இ) உளள்நாட்டு விமான நடமாட்டங்கள் உள்ளடங்களாக

மூலம் : இலங்கை வான்வழி போக்குவரத்து அதிகாரசபை

சதவீத சடுதியான வீழ்ச்சியினைத் தொடர்ந்து 2021இல் 36.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வானூர்தி நடமாட்டங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் சிறியளவிலான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. துறையின் செயலாற்றமானது கொவிட்-19 நோய்த்தொற்றுடன் வழிகாட்டல்களைக் கடுமையாகப் பின்பற்றுவதனை நிச்சயப்படுத்துகின்ற பொது ஆர்வலர்களின் அர்ப்பணிப்பினால் ஊக்கமளிக்கப்பட்டிருந்த வேளையில், பயணிகளின் நேர்த்தியான இடமாற்றலினை நிச்சயப்படுத்தியது. பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்திற்கு மேலதிகமாக கொழும்பு - இரத்மலானை பன்னாட்டு விமான நிலையமும் பன்னாட்டு சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் பன்னாட்டு விமான நிலையங்கள் சபையிடமிருந்து விமான நிலைய சுகாதார ஒப்புதல் சான்றிதழினைப் பெற்றுக்கொண்டது. அதேவேளை, மத்திய கிழக்கிலுள்ள குறித்த சில நாடுகளுக்குப் பயணிக்கும் பயணிகளின் விசேட தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதனை நோக்காகக்கொண்டு பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் துரித பீசீஆர் பரிசோதனைப் பணி வசதியும் ஏற்படுத்தப்பட்டது. முழுமையாகத் தடுப்பூசியேற்றிக்கொண்ட மற்றும் 12 வயதிற்குக் கீழ்ப்பட்ட உள்வரும் பயணிகள் 2022 மார்சு தொடக்கம் கொவிட்-19 பீசீஆர் பரிசோதனைகள் அல்லது துரித அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ளத் தேவைப்படுத்தப்படவில்லை. உலகளாவிய நோய்த்தொற்றின் படிப்படியான தணிப்புடன் இணைந்து பயணிப்பதற்கான இயல்புநிலைக்குத் திரும்புகின்ற இத்தகைய வழிமுறைகள் துறையில் வலுவான மீட்சியினை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட தடங்கல்களுக்கு மத்தியிலும், பல்வேறு வான்வழிப் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மெதுவான வேகத்தில் முன்னெடுக்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் வான்வழிப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) நிறுவனம் பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் (பொதி யு இரண்டாம் முனையக் கட்டுமானத்தில் தொடர்ந்தும் முன்னேற்றங்கண்டது. 2021 நவெம்பரில், தொலை சுற்றுவட்டப் பிரதேசம் மற்றும் விமானம் நகர்வுப் பாதையானது (பொதி டீ) விமான நிலையத்தினால் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. மேலும், 2021 இறுதியிலுள்ளவாறு மேலதிக சுற்றுவட்டப் பாதையொன்றுடனான புதிய விமான நகர்வுப் பாதைக் கட்டுமானத்தின் 75 சதவீதமானது கொழும்பு - இரத்மலானை பன்னாட்டு விமான நிலையத்தின் 2030ஐ நோக்கிய முதன்மைச் செயற்றிட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்டது.

2021இன் ஆரம்பத்தில் இலங்கையின் எல்லைகள் பன்னாட்டுப் பயணங்களுக்காக மீளத்திறக்கப்பட்டமை மற்றும் பயணத்திற்கான உலகளாவிய நாட்டத்தில் ஒட்டுமொத்த மேம்பாடுகள் என்பவற்றிற்கு மத்தியில் சிறிலங்கன் எயார்லைன்ஸின் நிதியியல் செயலாற்றமானது முன்னேற்றங்களைப் பதிவுசெய்தது. சிறிலங்கன் எயார்லைன்ஸின் தொழிற்பாட்டு இழப்பானது 2021 திசம்பரில் முடிவடையும் ஒன்பது மாத காலப்பகுதியில் ரூ. 14.3 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்ததன் மூலம் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 49.3 சதவீத மேம்பாடொன்றினைப் பதிவுசெய்தது. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் 152.9 சதவீதத்தினால் வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியிலிருந்து தோற்றம்பெற்ற மேம்பாடானது 54.9 சதவீதத்தினால் தொழிற்பாட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினை விஞ்சிக் காணப்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸின் தொழிற்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை இயலச்செய்த குறிப்பான முயற்சிகள் ஏற்றுமதித் தொழிற்பாடுகளைத் தொடர்வதனை மாத்திரமன்றி அத்தியாவசிய மருந்து நிரம்பல்கள் மற்றும் தடுப்பு மருந்துகளின் போக்குவரத்துக்கான சரக்குத் தொழிற்பாடுகள் மீதான புத்துயிர்பெற்ற கவனத்தினை உள்ளடக்கியிருந்தன. சிறிலங்கன் எயார்லைன்ஸ் அதன் எல்லைகளுக்கிடையிலான வர்த்தகச் சரக்குத் தொழிற்பாடுகளையும் அதிகரித்தது. குறிப்பாக, தேசிய விமானமானது ஆண்டு காலப்பகுதியில் அதனுடைய விமானங்களின் தொடர்ச்சியான தொழிற்பாட்டினை இயலச்செய்யும் விதத்தில் பல்வேறு புதிய நாடுகளுக்கு விரிவடைந்தது. சிறிலங்கன் எயார்லைன்ஸானது 2022 மார்சில் நடைபெற்ற முக்கியமானதோர் உலகளாவிய விளையாட்டு நிகழ்ச்சிக்கான உத்தியோகபூர்வ விமான சேவையாகத் தொழிற்பட்டதுடன் இலங்கையின் சுற்றுலா முயற்சிகளில் தொடர்ந்தும் முனைப்புடன் ஈடுபட்டது.

துறைமுகப் பணிகள்

2021இல் துறைமுகப் பணிகளின் ஒட்டுமொத்த செயலாற்றமானது நோய்ப்பரவலிற்கு முன்னரான மட்டங்களை விஞ்சாத தொழிற்பாடுகளுடன் தீவிரமாக மீட்சியடைந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் மெதுவடைந்தப்போக்கு

அட்டவணை 3.7
துறைமுகப் பணிகளின் செயலாற்றம்

விடயம்	2020	2021 (அ)	வளர்ச்சி வீதம் (%) 2020	2021 (அ)
1. வருகை தந்த கப்பல்கள் (எண்ணிக்கை)	4,337	4,180	-7.7	-3.6
கொழும்பு	3,806	3,675	-9.3	-3.4
காலி	22	14	-48.8	-36.4
திருகோணமலை	135	117	-4.9	-13.3
அம்பாந்தோட்டை	374	374	19.1	-
2. கையாளப்பட்ட மொத்தச்சரக்கு ('000 மெ.தொ)	102,908	109,369	-3.8	6.3
கொழும்பு	97,681	103,824	-4.2	6.3
எஸ்ஏஜீரி	24,878	24,062	-6.2	-3.3
சிஐசீரி	37,310	42,400	0.6	13.6
இதுஅ	35,493	37,362	-7.4	5.4
காலி	404	106	-20.8	-73.8
திருகோணமலை	3,072	3,190	-7.0	3.8
அம்பாந்தோட்டை	1,750	2,249	41.2	28.5
3. மொத்தக் கொள்கலன் போக்குவரத்து (ஆ) ('000 இ.க.அ.) (ஆ)	6,855	7,249	-5.2	5.8
எஸ்ஏஜீரி	1,872	1,839	-8.8	-1.8
சிஐசீரி	2,885	3,212	-0.3	11.3
இதுஅ	2,098	2,198	-8.1	4.8
4. மாற்றிக் கப்பலேற்றல் கொள்கலன் கையாளல் ('000 இ.ச.அ) (ஆ) (இ)	5,765	6,050	-3.2	4.9
எஸ்ஏஜீரி	1,607	1,573	-2.7	-2.1
சிஐசீரி	2,291	2,600	-0.2	13.4
இதுஅ	1,867	1,877	-7.0	0.6

(அ) தற்காலிகமானது
(ஆ) இ.ச.அ = இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகள்
(இ) மீட்டமைத்தல் உள்ளடங்கலாக

மூலம்: இலங்கைத் துறைமுக அதிகாரசபை

அவதானிக்கப்பட்டிருப்பினும், கொவிட்-19 டெல்டா திரிபின் துரிதமான பரவலினால் துறைமுகத் தொழிற்பாடுகளுக்கு சில தடங்கல்கள் ஏற்பட்டமையின் விளைவாக ஓகத்து மற்றும் செத்தெம்பர் மாதங்கள் தவிர்த்து ஆண்டு முழுவதும் துறைமுக தொழிற்பாடுகளில் முழுமையான மீட்சி அவதானிக்கப்பட்டது. ஆண்டுகாலப்பகுதியில், வரலாற்று ரீதியான அதிகரிப்பினை விஞ்சுகின்ற வகையில் 7.2 மில்லியன் பெறுமதியான இருபது அடிக்கு நிகரான அலகுகளையுடைய கொள்கலன்களும் 109,369 மெற்றிக்தொன் சரக்குகளும் கையாளப்பட்டன. அதற்கிணங்க, கொழும்புத் துறைமுகமானது கொள்கலன் மற்றும் சரக்கு கையாளல்களில் ஆண்டுக்கு ஆண்டு விரிவாக்கங்களாக முறையே 5.8 சதவீதத்தையும் 6.3 சதவீதத்தையும் பதிவுசெய்தன. மேலும், கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை என்பன சரக்குக் கையாளுதல் மற்றும் கொள்கலன் கையாளுதல் இரண்டிலும் அதிகரிப்புக்களை பதிவுசெய்த அதேவேளையில், தெற்காசிய நுழைவாயில் முனைக்கோடிகள் சிறிதளவான வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. குறிப்பாக, கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி ஒரு தசாப்தத்திற்கு முன்னரான அதன் தொடக்கத்திலிருந்து முதன்முறையாக 3 மில்லியனிற்கு கூடுதலான இருபது அடிக்கு நிகரான அலகுகளை கையாண்டிருந்தது. கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட கொள்கலன்களின் மொத்த அளவில் கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் தெற்காசிய நுழைவாயில் முனைக்கோடி என்பன முறையே 44.3 சதவீதமாகவும், 30.3 சதவீதமாகவும் மற்றும் 25.4 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டிருந்தன. ஆண்டுகாலப்பகுதியில், 2020 ஒத்தோபரில் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு கொள்கலன் முனைக்கோடியினால் 390,069 இருபது அடிக்கு நிகரான அலகுகள் கையாளப்பட்டன. பாரியளவான கப்பல்களின் அதிகரித்த வருகைகளுடன், தொழிற்பாடுகளில் விரிவாக்கம் காணப்பட்டபோதிலும், ஒட்டுமொத்த வருகைகள் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன. கொழும்பு துறைமுகமானது பிராந்தியத்தில் முன்னணி மையமாக தோற்றம்பெறுவதற்கான உறுதியான சாத்தியப்பாட்டினை முன்னிலைப்படுத்தி உலக வங்கி மற்றும் ஐஎச்எஸ் மார்க்கிட் என்பவற்றினால் தொகுக்கப்பட்ட கொள்கலன் துறைமுக செயலாற்றச் சுட்டெண் (17வது நிலை), வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டினால் தொகுக்கப்பட்ட துறைமுக கப்பல் கப்பலேற்றல் இணைப்புச் சுட்டெண் (17வது நிலை), போன்ற பன்னாட்டுத் தரங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக உயர்ந்த தரத்தில் தரமிடப்பட்டுள்ளது.

வரைபடம் 3.10
கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் அளவு மற்றும் கப்பல் வருகைகள்



மூலம் : இலங்கை துறைமுக அதிகாரசபை

வரைபடம் 3.11
துறைமுக நடவடிக்கைகளின் செயலாற்றல்



மூலம் : இலங்கை துறைமுக அதிகாரசபை

3

கொழும்பு துறைமுகத்தின் முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி முன்னெடுப்புகள் கொவிட்-19 நோய்ப்பரவலுடன் தொடர்புடைய இடையூறுகள் காணப்பட்டபோதிலும் ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ந்தும் உறுதியாக மேற்கொள்ளப்பட்டன. கிழக்கு கொள்கலன் முனைக்கோடியின் இரண்டாம் கட்டத்தின் நிர்மாணம் 2022 சனவரியில் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளையில், 35 ஆண்டுகளுக்கு நீடிக்கின்ற மேற்கு கொள்கலன் முனைக்கோடிக்கான அரச-தனியார் மாற்றல் ஒப்பந்தமானது வெளிநாட்டு முதலீட்டாளர், உள்நாட்டு முதலீட்டாளர் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது. 2025 மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் முறையே கிழக்கு கொள்கலன் முனைக்கோடி மற்றும் மேற்கு கொள்கலன் முனைக்கோடி என்பவற்றின் முடிவுறுத்தலைத் தொடர்ந்து, கொழும்பு துறைமுகத்தின் இயலளவானது 6 மில்லியன் இருபது அடிக்கு நிகரான அலகுகளினால் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தேசிய துறைமுக முதன்மை திட்டத்திற்கமைவாக, புதிய துறைமுக தொடர்பூட்டல் முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு உத்தேச வடிவமைப்பும் சாத்தியவள ஆய்வும் 2021 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செய்ற்றிட்டத்தினுடைய சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலாவிற்காக காலி துறைமுகத்தை நிறைவான துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு என்பன ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

உள்நாட்டு வாகனக் கையாளுதலில் மிகத் தாழ்ந்த செயலாற்றம் காணப்பட்டபோதிலும், மாற்றிக்கப்பலேற்றல்களின் குறிப்பிடத்தக்களவான மேம்படுத்தல்களினால் முழுமையாக உந்தப்பட்டு, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அதன் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மொத்த வாகனக் கையாளுதல் உயர்வான வளர்ச்சியைப் பதிவுசெய்து 2021 ஆண்டுகாலப்பகுதியில் 40.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. அதற்கிணங்க, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கையாளப்பட்ட வாகனங்களின் மொத்த எண்ணிக்கையானது 493,400ஆக அமைந்திருந்ததுடன், இதில் 489,942 வாகன கப்லேற்றல்களாகும். வாகனக் கப்பலேற்றல்கள் 46.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்த அதேவேளையில், மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியுடன் உள்நாட்டு வாகனக் கையாளுதல் 76.9 சதவீதமான கடுமையான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதியியல் செயலாற்றமானது துறைமுக நடவடிக்கைகளின் அதிகரிப்புடன் 2021இல் மேம்பட்டிருந்தது. அதற்கிணங்க, இலங்கை துறைமுக அதிகார சபையானது வரிக்கு முன்னரான 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.20.3 பில்லியன் கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.25.6 பில்லியன் கொண்டஇலாபத்தைப் பதிவுசெய்தது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த வருமானமானது ஆண்டுகாலப்பகுதியில் ரூ.45.5 பில்லியனுக்கு 16.8 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் தொழிற்பாட்டுச் செலவினமும் ரூ.32.9 பில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

தொடர்பூட்டல் பணிகள்

கொவிட்-19 நோய்ப்பரவலின் தொடர்ச்சிக்கு மத்தியில் பொருளாதாரத்தின் தற்போதைய தொடர்பூட்டல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கும் வகையில் தொலைத்தொடர்புத் துறையானது 2021இல் தொடர்ந்ததும் விரிவடைந்தது. 2020இல் அவதானிக்கப்பட்டவாறு, தொலைத்தொடர்புத் துறையானது ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கையின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கினை தொடர்ந்தும் வகித்தது. பொருளாதார நடவடிக்கைகளுக்கான அநேகமான இணையவழித் தளங்களின் அதிகரித்த பின்பற்றலானது துறையினுடைய வளர்ச்சியின் ஆரோக்கியமான போக்கிற்கான பாதையை செப்பமிட்டது. இதன் விளைவாக, தொலைபேசி மற்றும் செல்லிடத் தொலைபேசி ஊடுருவலின் முன்னேற்றங்களுக்கு இணையாக மொத்த செல்லிடத் தொலைபேசி இணைப்புக்கள், நிலையான கம்பிவழி மற்றும் கம்பியல்லா தொலைபேசி இணைப்புக்களும் தொடர்ச்சியாக அதிகரித்தன.

"வீட்டிலிருந்து பணியாற்றல்" ஏற்பாடுகள் மற்றும் தொலைதூரக் கற்றல் தளங்களினூடான கல்வி நடவடிக்கைகளின் தொடர்ச்சி என்பவற்றின் பின்பற்றலினால் பாரியளவில் தூண்டப்பட்டு இணையப் பயன்பாடும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. அதற்கிணங்க, செல்லிடத் தொலைப்பேசி மற்றும் நிலையான இணைய இணைப்புக்கள் மூலம் ஆகிய இரண்டினதும் வளர்ச்சியுடன் மொத்த

வரைபடம் 3.12
தொலைபேசி நுழைவு



மூலங்கள் : இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 3.8
தொலைத்தொடர்பூட்டல் துறையின் செயலாற்றம்

விடயம்	2020	2021 (அ)	வளர்ச்சி வீதம் (%)	
			2020	2021 (அ)
பொருத்தப்பட்ட தொலைபேசி பணிகள் (எண்ணிக்கை) ('000)	2,613	2,852	13.6	9.1
சேவையிலுள்ள கம்பிவழித் தொலைபேசி இணைப்புக்கள்	1,246	1,264	0.1	1.5
கம்பியல்லா உள்ளூர் தொலைபேசி இணைப்புக்கள்	1,367	1,587	29.6	16.1
செலூலர் தொலைபேசிகள் (எண்ணிக்கை) ('000)	28,739	29,959	-12.6	4.2
இணையத்தளத் தொடர்புகள் (எண்ணிக்கை)('000) (இ)	17,524	22,236	30.7	26.9
பொதுத் தொலைபேசிக் கூண்டுகள் (எண்ணிக்கை)	461	கி.ய.	-3.2	கி.ய.
நுழைவு (ஈ)				
பொருத்தப்பட்ட தொலைபேசிகள்	11.9	12.9	13.0	8.0
செலூலர் தொலைபேசிகள்	131.1	135.2	-13.1	3.1
இணையத்தள ஊடுருவல் (இ)	79.9	100.4	30.0	25.5

(அ) தற்காலிகமானது
(ஆ) செல்லிட இணையத்தள சேவைகள் உள்ளடங்கலாக
(இ) செலூலர் இணையத்தன தொடர்புகள் உள்ளடங்கலாக
(ஈ) 100 நபர்களுக்கானது என வரையறுக்கப்பட்டுள்ளது

மூலங்கள்: இலங்கைத் தொலைத் தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இணைய இணைப்புக்கள் 26.9 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், 100 ஆட்களுக்கான இணைய இணைப்புக்கள் என அளவிடப்படுகின்ற இணைய அடர்த்தியானது, இணையவழித் தளங்களுக்கான பொருளாதார நடவடிக்கையின் துரித நிலைமாற்றத்தை குறிப்பாக சேவைகள் துறையில், பிரதிபலித்து 2020இல் பதிவுசெய்யப்பட்ட 79.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 100.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, கொவிட்-19 நோய்த்தொற்றின் இரண்டாம் அலைப் பரவலுடன் 2020 ஒத்தோபரிலிருந்து மேல்நோக்கிய போக்கில் காணப்பட்ட மொத்த தரவுப் பயன்பாடானது 2021இன் தொடக்கத்திலிந்து நடமாட்டக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன் 2021இன் முதலாம் காலாண்டில் படிப்படியான மிதமான போக்கினைப் பதிவுசெய்தது. இருப்பினும், 2021 ஏப்பிறலில் நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் தாக்கத்துடன், பயணக் கட்டுப்பாடுகளின் அமுலாக்கம் மற்றும் இணையவழி பணியாற்றல் அத்துடன் கல்வி ஒழுங்கேற்பாடுகளுக்கான மாற்றம் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் இணையவழி தரவுப் பயன்பாட்டில் துரிதமான வளர்ச்சியொன்று காணப்பட்டது. நடமாட்டக் கட்டுப்பாடுகளின் நீக்கம் மற்றும் பொருளாதாரத்தை இயல்புநிலைக்கு மீளத்திருப்புதல் என்பவற்றுடன் 2021 ஒத்தோபர் ஆரம்பத்திலிருந்து வளர்ச்சிப் போக்கானது வீழ்ச்சியடைந்தது.

கொவிட்-19க்குப் பின்னரான மீளெழுச்சிச் செயன்முறையில் டிஜிட்டல் நிலைமாற்றலினை கருத்திற்கொண்டு தேசிய டிஜிட்டல் நிலைமாற்றல் உபாயத்தை (2021-2024) நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆண்டுகாலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. அதன் அடிப்படையில், குறித்த உபாயத்தின் நடைமுறைப்படுத்தலை முன்னெடுப்பதற்கு தகவல் மற்றும்

வரைபடம் 3.13
அகலப்பட்டை தரவுப் பயன்பாடு



குறிப்பு : பெடாபைட் = பில்லியன் ஜிகாபைட்

மூலங்கள் : டயலொக் எக்சியாட்டா பி.எல்.சி.
இலங்கை டெலிகொம் பி.எல்.சி.
மொபிடெல் (தனியார்) லிமிடெட்
பார்டி எயார்டெல் லங்கா (தனியார்) லிமிடெட்

தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மைக்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. இக்குறித்த உபாயத்தின் கீழ், டிஜிட்டல் அரசாங்கம், இலத்திரியல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பணிகள் போன்றவற்றின் முக்கிய நிகழ்ச்சித்திட்டத் தூ ண்களை தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. டிஜிட்டல் அரசாங்கம் மற்றும் டிஜிட்டல் பணிகள் என்பவற்றின் தூண்கள் அரச நிறுவனங்களுக்கிடையில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் தொடர்பில் அவதானம் செலுத்தும் அதேவேளையில், டிஜிட்டல் பொருளாதாரத் தூண்கள் பொருளாதாரத்தின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரச் செயன்முறை முகாமைத்துவத்திலிருந்து ஐ.அ.டொலர் 3 பில்லியன் வருடாந்த ஏற்றுமதி வருமானத்தை உருவாக்குவதற்கு இயலுமைப்படுத்துவதற்காக உள்நாட்டு இயலளவு அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்துகின்றது. மேலும், தேசிய டிஜிட்டல் நிலைமாற்ற உபாயத்தின் செயற்றிறனான நடைமுறைப்படுத்தல் குறித்த நோக்குடன், சுயாதீனதுமானதும் பக்கச்சார்பற்றதுமான ஆளுகையினை உறுதிப்படுத்துவற்கான அனைத்து செயற்றிட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்குகின்ற உத்வேகமான கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைமையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

நாட்டினுடைய டிஜிட்டல் உட்கட்டமைப்புத் தளத்தினை மேம்படுத்தல் தொடர்பாக அவதானம் செலுத்துகின்ற தேசிய டிஜிட்டல் நிலைமாற்றல் உபாயத்தினை நிறைவேற்றுகின்ற பல்வேறு ஏனைய வழிமுறைகளும் முக்கிய ஆர்வலர் நிறுவனங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவானது அனைத்து மாவட்டங்களிலுமுள்ள 14,000 கிராம சேவையாளர் பிரிவுகளில் 4ஜு கவரேஜ் வலையமைப்பினை மேம்படுத்துவதற்காக கமட சன்னிவேதனய என்ற தேசிய செயற்றிட்டத்தினை முன்னெடுத்திருந்தது. செயற்றிட்டமானது 2024 இறுதியளவில் நாடளாவிய ரீதியில் 4ஜு கவரேஜ்

வலையமைப்பினை எய்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2021 இறுதியளவில், செயற்றிட்டத்தின் நடவடிக்கைகள் பத்து மாவட்டங்களில் 251 இடங்களில் முன்னெடுக்கப்பட்டன. நோய்ப்பரவல் காலப்பகுதியில் தொலைதூரக் கற்றலுக்கு வசதியளிப்பதற்கும் அனைவருக்குமான கிடைப்பனவினை உறுதிசெய்வதற்கும் இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது இணைய கல்விக்கூடல் மற்றும் இணையவழிக் கற்றல் தளங்களானது எவ்வித தரவுக் கட்டணங்களுமின்றி பயன்படுத்துநர்கள் அத்தகைய தளங்களை அணுகுவதற்கு இயலுமைப்படுத்தி அனுமதியளித்து. "வரையறுக்கப்படாத இணையத் திட்டங்களுக்கான" அனுமதியினை வழங்குதல் மற்றும் "செல்லிட இலக்கத்தினை தேர்ந்தெடுத்தல்" பணிகளைப் பயன்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு சட்ட அனுமதியினை வழங்குதல் என்பன வாடிக்கையாளர்களின் தேவை அதிகரிப்பினை வசதிப்படுத்துவதற்காக இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய முன்னெடுப்புகளாகும். தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மையானது இலங்கையின் தனித்துவமான டிஜிட்டல் அடையாளப்படுத்தல், இலத்திரனியல் காணிப் பதிவகம், டிஜிட்டல் சுகாதாரத் திட்டம், டிஜிட்டல் நூலகத் திட்டம், லங்கா அரசாங்க வலையமைப்பு 2.0 மற்றும் லங்கா அரசாங்க கிளவுட் 2.0 போன்ற பொருளாதாரத்தின் டிஜிட்டல் மாற்றத்துடன் தொடர்புடைய முயற்சிகளை முன்னெடுப்பதை தொடர்ந்தும் மேற்கொண்டது. இவற்றிற்கு மேலாக தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மையானது கொவிட்-19 நோய்ப்பரவலுக்கு மத்தியில் அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளின் தொடர்ச்சியை இயலுமைப்படுத்துவதற்காக மின்னஞ்சல், நிகழ்நிலை மாநாடு, டிஜிட்டல் படிவ சமர்ப்பித்தல் வசதிகள் என்பவற்றையும் விருத்தி செய்திருந்தது.

அஞ்சல் திணைக்களத்தின் செயலாற்றமானது நோய்ப்பரவலினால் ஏற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில் தொடர்ந்தும் மந்தநிலையில் காணப்பட்டது. நோய்பரவலின் மூன்றாம் அலை மற்றும் தொடர்புடைய கொவிட்-19 கட்டுப்படுத்தல் வழிமுறைகளினால் அஞ்சல் சேவைகள் தடைப்பட்டிருப்பினும், 2021 யூனில் அரசாங்கத்தினால் அஞ்சல் சேவைகள் "அத்தியாவசிய சேவை" என பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அஞ்சல் திணைக்களமானது நவீன அணுகுமுறைகளின் பின்பற்றலினூடாக அதன் சேவைகளை தொடர்ந்தும் வழங்குவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. 2020இன் பிற்பகுதியில் மீள ஆரம்பிக்கப்பட்ட "வழங்கலின் போதான காசுக் கொடுப்பனவு" சேவைகள் ரூ.34.0 மில்லியன் வருமானத்தை ஈட்டி 2021 காலப்பகுதியிலும் வெற்றிகரமாக தொடர்ந்தது. அதேவேளை, அஞ்சல் திணைக்களமானது நோயாளர்களுக்கான மருந்துகளின் இலவச பங்கிர்ந்தளிப்பிற்கு வசதியளித்த அதேவேளையில், அரசாங்க ஓய்வூதியங்கள், விவசாயிகளுக்கான ஓய்வூதியங்கள், மீன்பிடி ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய சமூக சேவைக் கொடுப்பனவுகள் போன்ற கொடுப்பனவுகளுக்கு வசதியளிப்பதையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. இத்தகைய முக்கியப் பணிகள் நாடளாவியரீதியில் 8,157 வழங்கல் பிரதேசங்களை உள்ளடக்குகின்றவகையில் 654 பிரதான அஞ்சல் அலுவல்களையும், 3,410 உப அஞ்சல் அலுவலகங்களையும் 130 முகவர் அஞ்சல் அலுவலகங்களையும் உள்ளடக்கியதாக அஞ்சல் திணைக்கள வலையமைப்பினூடாக எவ்வித இடையூறுகளுமின்றி வழங்கப்பட்டன. அஞ்சல் திணைக்களத்தின் நிதியியல் நிலைமையானது 2020இன் ரூ.7.7 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூ.7.2 பில்லியன் தொழிற்பாட்டு நட்டத்துடன் 2021இல் தொடர்ச்சியாக நலிவடைந்து காணப்பட்டமையானது தற்போதுள்ள டிஜிட்டல் நிலைமாற்றம் மற்றும் அதிகரித்துவருகின்ற வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகள் என்பவற்றுடன் இசைந்து செல்கின்ற நவீன பெறுமதி கூட்டப்பட்ட சேவைகளுடன் அஞ்சல் திணைக்களத்தை இணைப்பதற்கான தேவைப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது.

நீர் வழங்கல் மற்றும் நீர்பாசனம்

முக்கிய அம்சமொன்றாக 2025 அளவில் ஒவ்வொரு வீட்டலகுகளுக்கும் சுத்தமான பாதுகாப்பான குடிநீர் வழங்கலை அடிகோடிட்டுக் காட்டுகின்ற அரசாங்கத்தின் தேசியக் கொள்கை கட்டமைப்பிற்கமைவாக 2021 காலப்பகுதியில் புதிய நீர்வழங்கல் இணைப்பு வழங்கல் செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. அதற்கிணங்க, ஆண்டின் இறுதியளவில் மொத்தமாக 2.8 மில்லியன் இணைப்புக்களை எய்தக்கூடியவகையில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் 192,087 புதிய நீர் வழங்கல் இணைப்புக்கள் வழங்கப்பட்டன. இதன் விளைவாக குடியிருப்பாளர்களின் பாதுகாப்பான குடிநீர் அணுகல் வசதியானது 2020இன் இறுதியில் காணப்பட்ட 93.2 சதவீதத்திலிருந்து 2021இன் இறுதியளவில் 94.4 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. இருப்பினும், நாட்டின் வருமானமல்லா நீர்ப்

வரைபடம் 3.14
நீர் வழங்கலின் நிலைமை



மூலம் : தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை

அட்டவணை 3.9
தேசிய நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல்

விடயம்	2020	2021 (அ)	வளர்ச்சி வீதம் (%)	
			2020	2021 (அ)
மொத்த நீர் வழங்கல் திட்டங்கள் (எண்ணிக்கை) (ஆ)	331	337	-4.9	1.8
காலப்பகுதியில் புதிதாக வழங்கப்பட்ட மொத்த புதிய இணைப்புக்கள் (எண்ணிக்கை)	122,733	192,087	12.8	56.5
மொத்த இணைப்புக்கள் (எண்ணிக்கை) (ஆ)	2,560,237	2,752,324	5.0	7.5
மொத்த நீர் உற்பத்தி (மி.க.மீ) (இ)	782	815	4.8	4.2
வருவாயற்ற நீர் (சதவீதம்)				
கொழும்பு நகரம்	39.2	34.8	-3.4	-11.4
முழுத்தீவும்	24.6	25.8	-1.7	4.8
பாதுகாப்பான குடிநீரின் கிடைக்குந்தன்மை (சதவீதம்) (ஈ)	93.2	94.4	1.4	1.3
பாதுகாப்பான குழாய் நீரின் கிடைக்குந்தன்மை (சதவீதம்) (உ)	53.1	54.3	2.5	2.3

(அ) திருத்தப்பட்டது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(இ) மி.க.மீ = மில்லியன் கன மீற்றர்கள்
(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர்களின் வருமானச் செலவின அளவீடு - 2019இன் அடிப்படையிலான ஒப்பீட்டு தரவு 88.5 சதவீதமாகும்.
(உ) ஏனைய அதிகாரசபைகளினால் முகாமைத்துவம் செய்யப்படும் முறைமைகள் உள்ளடங்கலாக

மூலம் : தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

பயன்பாடானது 2020இன் 24.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் 25.8 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. அதேவேளை, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஏற்பட்ட தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புத் தேவைப்பாடுகளின் அதிகரிப்புக்களின் காரணமாக, கடந்த ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ரூ.370.5 மில்லியன் தேறிய இழப்புடன் ஒப்பிடுகையில் இவ் ஆண்டுகாலப்பகுதியில் ரூ.3.1 பில்லியன் தேறிய நட்டத்தினைப் பதிவுசெய்தது.

தேசிய கொள்கை கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மீளாய்வின் கீழ் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுகாலப்பகுதியில், தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் மக்களுக்காக தயாரிக்கப்பட்ட அனைவருக்கும் நீர் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தின் கீழ் 118 செயற்றிட்டங்களின் பௌதீகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், நாடு முழுவதும் பாதுகாப்பான குடிநீர் அளவினை மேம்படுத்துகின்ற நோக்குடன், 2021 ஆண்டுகாலப்பகுதியில் 33 முக்கிய நீர்வழங்கல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, 2016ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தெதுறு ஓயா நீர் வழங்கல் செயற்றிட்டம் ஆண்டுகாலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டதன் மூலமாக மாஹோ மற்றும் பொல்பித்திகம பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற 97,700 பயன்பெறுநர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுகின்ற அதேவேளையில், கிரிமா கட்டுவான நீர் வழங்கல் செயற்றிட்டம் மற்றும் கட்டான நீர் வழங்கல் செயற்றிட்டம் உள்ளடங்கலாக பல ஏனைய செயற்றிட்டங்களும் 2021 காலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டன. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளின் ஏற்பாட்டினை மேம்படுத்துகின்ற நோக்குடனான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டமானது 2021ஆம் ஆண்டின் இறுதியளவில் 61 சதவீத பௌதீக முன்னேற்றங்களை அடைந்துள்ளது. ஆண்டுகாலப்பகுதியில், இச்செயற்றிட்டத்தின் கீழ், தாழையடி கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை, நயினாதீவு கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர்ப் பகிர்ந்தளிப்பு வலையமைப்பு என்பவற்றுடன் தொடர்புடைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், மாத்தளை மாவட்டத்தில் சுத்தமான குடிநீர் செயற்பரப்பினை அதிகரிக்கின்ற நோக்குடனான பாரிய மாத்தளை நீர் வழங்கல் திட்டமானது 2021 இறுதியளவில் 94 சதவீத பௌதீக முன்னேற்றத்தினை அடைந்துள்ளது.

நீர்ப்பாசன திணைக்களமானது ஆண்டுகாலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் வேளாண்மைத் துறையின் செயலாற்றத்தினை அதிகரிப்பதற்கு நீர்பாசன திட்டங்களை அபிவிருத்தி செய்வதைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதற்கிணங்க, குடவிலச்சியா நீர்த்தேக்கம் மற்றும் தெமட்டகல தாங்கி என்பவற்றின் மறுசீரமைப்பு போன்ற பல்வேறு செயற்றிட்டங்களுடன் சேர்த்து எல்லேவெவ நீர்த்தேக்கத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும். கம சமக பிலிசந்தர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முக்கிய முன்னெடுப்பொன்றாக தீவின் பல்வேறு பகுதிகளிலும் சிறிய சமூகங்களுக்கான நீர்ப்பாசன நீர் ஏற்பாடானது தொடர்ச்சியாக விரிவுபடுத்தப்பட்டது. ஆண்டுகாலப்பகுதியில், ரூ.5.6 பில்லியன் செலவினை ஏற்படுத்தப்படுகின்ற 26 முக்கிய நீர்ப்பாசன செயற்றிட்டங்கள் தொழிற்பாட்டிலிருந்ததுடன், இதில் ரூ.2.7 பில்லியன் மற்றும் ரூ.556.1 மில்லியன் என்பன முறையே யன் ஓயா மற்றும் தெதுறு ஓயா நீர்த்தேக்க செயற்றிட்டங்களுக்காக செலவிடப்பட்டன. அதேவேளை, 25 மாவட்டங்கள் அனைத்திலும் கிராமியத் தாங்கிகளையும் அணைக்கட்டுக்களையும் புனரமைப்பதற்காக வாரி சௌபாக்கியா தேசிய நிகழ்ச்சித்திட்டமும் 2021இல் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்றிட்டமானது 2,500 கிராமிய தாங்கிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகளினூடாக 50,000 ஏக்கர் அளவான தரிசு வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதை நோக்காகக் கொண்டுள்ளது. பாரதூ ரமான காலநிலைப் பதற்றங்களுக்கெதிராக நீரியல் ரீதியான உட்கட்டமைப்பு தாக்குபிடிக்குந்தன்மையை மேம்படுத்துகின்ற நோக்குடன் 2014இல் ஆரம்பிக்கப்பட்ட காலநிலை தாக்குபிடிக்குந்தன்மை மேம்பாட்டுத் திட்டம் 2021 காலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டது. மேலும், உமா ஓயா நீரோட்டத் திசை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மொத்தச் செலவினை ரூ.9.4 பில்லியனிலிருந்து ரூ.17.9 பில்லியனாக அதிகரிப்பதை திருத்தியமைப்பதற்கான ஒப்புதலை அமைச்சரவை வழங்கியது. செயற்றிட்டமானது 2021 இறுதியளவில் 65 சதவீத பௌதீக

முன்னேற்றத்தினை எய்திருந்தது. மேலும், 97,832 விவசாயக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 72,882 ஏக்கர் அளவான நீர்ப்பாசன நிலங்கள் முழுவதும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பினை மேம்படுத்துகின்ற நோக்குடன் 2017ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட உற்பத்தித்திறன் அதிகரித்தல் மற்றும் நீர்பாசன முறைமை வினைத்திறன் மேம்படுத்தல் செயற்றிட்டமானது கொவிட்-19 நோப்பரவலினால் தோற்றம்பெற்ற இடையூறுகளின் காரணமாக மெதுவடைந்தப்போக்கில் காணப்பட்டப்போதிலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

3.3 சமூக உட்கட்டமைப்பு கொள்கைகள், நிறுவனசார் கட்டமைப்பு மற்றும் செயலாற்றம்

சுகாதாரம்

2021 காலப்பகுதியில் கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவலுக்கு டெல்டா திரிபினது பரவல் முதன்மைக் காரணியாக அமைந்த போதிலும் உலகளாவிய ரீதியில் வரவேற்கப்பட்ட தடுப்பூசியேற்றும் செயற்றிட்ட முன்னெடுப்புடன் இணைந்து பொருத்தமானதும் காலந்தவறாததுமான இயக்கக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதித்தமையானது இலங்கை 2022இன் முன்னைய பகுதியில் ஒமிக்ரோன் திரிபின் தீவிரத்தன்மையினைக் குறைப்பதனை இயலச்செய்தது. 2020 மார்ச்சிலும் 2020 ஒத்தோபரிலும் ஏற்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டு அலைகளைத் தொடர்ந்து கொவிட்-19 நோய்த்தொற்றினால் உந்தப்பட்டு 2021 ஏப்பிறலில் உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலை தோற்றம்பெற்றது. 2021 ஓகத்து இறுதியில் மூன்றாம் அலை உச்சத்தை எட்டிய போது 2021 ஏப்பிறல் நடுப்பகுதி வரை அறிக்கையிடப்பட்ட ஒரு மில்லியன் சனத்தொகையினருக்கு 11 நோயாளர்கள் என்ற எண்ணிக்கைக்கு எதிராக மில்லியனொன்றிற்கான நாளாந்த புதிய உறுதிப்படுத்தப்பட்ட கொவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை (சீராக்கப்பட்ட) 276இற்கு அதிகரித்தது. இவ் அதிகரிப்பு முக்கியமாக அதிக தொற்றுவீச்சுடைய டெல்டா திரிபினால் ஏற்பட்டதாகும். இருப்பினும், 2020 மாச்சு மற்றும் ஏப்பிறலில் உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாம் அலையேற்பட்ட காலப்பகுதியின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட நாடளாவிய ரீதியிலான இறுக்கமான முடக்கத்திற்கு மாறாக, மூன்றாம் அலையேற்பட்ட காலப்பகுதியில் நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் இயக்கக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றியிருந்த வேளையில் ஒட்டுமொத்த சமூக பொருளாதார நலனோம்புகையின் உச்ச அளவிலான முக்கியத்துவத்தினைக் கொண்டிருந்த பொருளாதார நடவடிக்கையின் தொடர்ச்சித்தன்மையினையும் வசதிப்படுத்தியது. மூன்றாம் அலையின் ஆரம்ப கட்டங்களில் அடையாளங்காணப்பட்ட சகல நோயாளர்களும் வைத்தியசாலைகளில் அல்லது குறித்துரைக்கப்பட்ட நிலையங்களில் அனுமதிக்கப்பட்ட வேளையில் தொற்றுக்குள்ளான நோயாளர்களுடனான நேரடியான தொடர்புகளைப் பேணியோர் தனிமைப்படுத்தல் மையங்களில் அல்லது அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டனர். இருப்பினும், தொற்றுக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தமையினால், சனநெரிசலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் முன்னுரிமையினடிப்படையில் கொவிட்-19 நோயாளர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்குத் தீர்மானித்தது. 2021 ஓகத்து காலப்பகுதியில் இறப்பு வீதத்தில் அவதானிக்கட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது 2021 ஓகத்து 21 தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் அரசாங்கம் நாடாளாவிய ரீதியிலான ஊரடங்குச் சட்டத்தினை விதிப்பதற்கு வழிவகுத்த போதிலும் இக்காலப்பகுதியில் அத்தியாவசிய பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான அனுமதியளிக்கப்பட்டது. 2021 யூலை இறுதிப்பகுதியிலிருந்து தடுப்பூசி முன்னெடுப்பு வேகமடைந்ததுடன் 2021 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து நோயாளர்களின் எண்ணிக்கையில் அவதானிக்கப்பட்ட வலுவானதொரு வீழ்ச்சியானது 2021 ஒத்தோபர் 01ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சகல இயக்கக் கட்டுப்பாடுகளையும் நீக்குவதற்கு அனுமதித்தது. 2021 திசெம்பர் முன்னைய பகுதியில் ஒமிக்ரோன் திரிபு கண்டறியப்பட்டதனைத் தொடர்ந்து, 2022 பெப்ருவரி நடுப்பகுதியில் ஒரு மில்லியன் குடித்தொகையினருக்கு 66 நோயாளர்கள் என்ற எண்ணிக்கையில் வலுவான அதிகரிப்பொன்று காணப்பட்டது. இவ்வலுவான அதிகரிப்பிற்கு மத்தியிலும், குடித்தொகையினரில் 65 சதவீதமானோர் 2 தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டதுடன் சனத்தொகையில் 28 சதவீதமானோர் பூஸ்டர் தடுப்பூசிகளையும் பெற்றுள்ளதுடன் இறப்பு வீதமானது 2021 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட மில்லியன் சனத்தொகையினருக்கு 10 இறப்புக்கள் என்ற எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மில்லியன் சனத்தொகையினருக்கு ஏறத்தாழ

வரைபடம் 3.15
கொவிட் - 19 தடுப்பூசி வழங்கலின் நிலைமை



மூலம் : சுகாதார அமைச்சு

2 இறப்புக்கள் என்ற எண்ணிக்கையில் ஒப்பீட்டளவில் குறைவடைந்து காணப்பட்டது. தடுப்புமருந்து முன்னெடுப்பின் துரித வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, நோய்த்தொற்றுக்கான அறிகுறிகளின் தொடக்க திகதியிலிருந்து அல்லது துரித அன்டிஜன் பரிசோதனை அல்லது பீசீஆர் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதிலிருந்து 7 நாட்களின் பின்னர் தொற்றுக்குள்ளான நோயாளர்களை தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுவதனை அனுமதிக்கின்ற சுற்றுநிருபத்தினைச் சுகாதார அமைச்சு 2022 சனவரி மாத பிற்பகுதியில் வெளியிட்டது. மேலும், முழுமையாகத் தடுப்பூசியேற்றி நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் கொவிட்-19 நோய்த்தொற்றின் அறிகுறிகளேதுமில்லாத பட்சத்தில் தனிமைப்படுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படாத வேளையில் பகுதியளவில் தடுப்பூசியேற்றிக்கொண்ட அல்லது தடுப்பூசியேற்றிக்கொள்ளாதவர்கள் 7 நாள் தனிமைப்படுத்தல் காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படலாம். 2022 பெப்ருவரியில் 12-15 வயதுப் பிரிவிலுள்ளவர்களுக்குப் முதலாவது பைசர் தடுப்பூசி டோஸ் ஏற்றப்பட்டதுடன் 12 வயதுப் பிரிவினருக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் உள்ளடக்கும் விதத்தில் தடுப்பூசியேற்றும் செயற்றிட்டமானது விரிவாக்கப்பட்டது. 2022 ஏப்பிறல் 30ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொவிட்-19 நோய்த்தொற்றிற்கு எதிராக முழுமையாகத் தடுப்பூசியேற்றிக் கொண்டமையினை எண்பிக்கும் சான்றினை உடைமையில் வைத்திருக்காதவர்கள் மக்கள் பொது இடங்களுக்குள் நுழையத்தடை விதிக்கும் அதிவிசேட வர்த்தமானியொன்று 2022 சனவரி மாதப் பிற்பகுதியில் வெளியிடப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய ஆண்டிற்கான அரச செலவினம் ரூ. 165.6 பில்லியனாக விளங்கியது. இதில் தடுப்புமருந்து, தனிமைப்படுத்தல் வசதிகள், சுகாதாரத்துறை உட்கட்டமைப்பு மற்றும் மருத்துவ வழங்கல்கள் போன்ற சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய செலவினங்கள் ரூ. 130.1 பில்லியனாக காணப்பட்டது.

உலகளாவிய நோய்த்தொற்றின் சவால்களுக்கு மத்தியில், இலங்கை பிற தொற்று நோய்களின் தோற்றங்களையும் ஆண்டு காலப்பகுதியில் கையாண்டுள்ளது. 2021இல் மொத்தமாக 23,853 டெங்கு நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதில் குறிப்பிடத்தக்க பங்கு பருவகால மழையின் தொடக்கத்துடன் திசெம்பர் மாதத்தில் பதிவுசெய்யப்பட்டது. கொழும்பு, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருணாகல் மாவட்டங்களிலிருந்து ஏறத்தாழ 70 சதவீதமான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 2022இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் அடையாளங்காணப்பட்ட 8,000இற்கும் மேலான டெங்கு நோயாளர்களுடன் மேல்நோக்கிய போக்கு தொடர்ந்தும் காணப்பட்டு, குறிப்பாக 2020 மற்றும் 2021இல் அறிக்கையிடப்பட்டிருந்த ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான நோயாளர்களுக்குப் பின்னர் டெங்கு நோயின் மீளெழுச்சி தொடர்பிலான கரிசனைகள் அதிகரித்தன. நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் தன்மையானது குடியிருப்பாளர்கள் தம்மைச் சூழவுள்ள பகுதியினைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும் நுளம்பு பரவாத வகையில் சுற்றுச்சூழலைப் பேணுவதற்கும் இயலச்செய்த கொவிட்-19 இயக்கக் கட்டுப்பாடுகளினால் உந்தப்பட்டது. தனியாள் உடல்நலம், குறிப்பாக முகக்கவசங்களின் அதிகரித்த பயன்பாடு தொடர்பில் தனிப்பட்டவர்களுக்கு மத்தியில் காணப்பட்ட அதிகரித்த விழிப்புணர்வு ஆண்டு காலப்பகுதியில் வழமையான பருவகால வைரஸ் தொற்றுப் பரவல் ஏற்படாமலிருப்பதற்கு வழிவகுத்தது. 2021இல் அடையாளங்காணப்பட்ட காமாலை நோயாளர்களின் எண்ணிக்கை 2020இல் அறிக்கையிடப்பட்ட 8,579உடன் ஒப்பிடுகையில் 6,855ஆக விளங்கியது.

சுகாதாரத்துறை மீது கொவிட்-19 நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களுக்கு மத்தியிலும் தொற்றாத நோய்களினால் பாதிப்படைந்துள்ள மற்றும் இலக்கிடப்பட்ட நலக்கவனிப்பு அவசியமாகின்ற குடித்தொகைப் பிரிவினருக்குத் தொடர்ச்சியான மருத்துவக் கவனிப்பினை நிச்சயப்படுத்துவதில் அரசாங்கம் தொடர்ந்தும் ஈடுபட்டது. இதற்கமைய, சுகாதார அமைச்சு மருந்துகளின் தடங்கலற்ற நிரம்பலினை நிச்சயப்படுத்துவதற்கும் நோயாளிகளுக்கான சிகிச்சைகளை மேற்கொள்வதற்கும் மாவட்ட மட்ட மருத்துவ அலுவலர்களுடன் தொடர்ந்தும் ஒருங்கிணைந்து செயற்பட்டது. 2020இல் உள்ளவாறு சுகாதார அமைச்சு சுகாதாரத்துறை அலுவலர்கள், சுகாதாரமல்லா அரசாங்க அலுவலர்கள் மற்றும் அஞ்சலினூடாக மருந்துகளை விநியோகித்தது. வசதிமிக்க கொள்வனவையும் வீடுகளுக்கு மருந்துகளை விநியோகிப்பதனையும் வசதிப்படுத்துவதற்கு மருந்தக உரிமையாளர்களின் சங்கத்துடன் கூட்டிணைந்து வலையத்தள அடிப்படையிலமைந்த பொறிமுறையொன்றினையும் தாபித்தது. மேலும் சுகாதார அமைச்சானது ஆரோக்கியமான வாழ்வுமுறைப் பழக்கங்களைப் பின்பற்றுதல், தொற்றாத நோய்களின் முகாமைத்துவம், அவசரகால எச்சரிக்கை அறிகுறிகளை இனங்காணுதல் மற்றும் அவசர நிலையொன்றின் போது மருத்துவ சேவைகளை எவ்வழிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்வது என்பன தொடர்பில் வெகுசன ஊடகம் மற்றும் சமூக வலைத்தள ஊடகங்களினூடாக விழிப்புணர்வையேற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. குடும்ப சுகாதார பணியகமும் இனப்பெருக்க, மகப்பேறு, குழந்தை, சிசு, பருவ மற்றும் இளவயது சுகாதாரக் கவனிப்பினை, குறிப்பாக கொவிட்-19 தொற்றுக்குள்ளான கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்குமான ஏற்பாடுகளை மேற்கொள்வதனூடாக உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் பாதிக்கப்படக்கூடிய தாய்மார் மற்றும் சிசுப் பிரிவினரின் சுகாதாரத் தேவைகளைப் பூரணப்படுத்துகின்ற அநேகமான முயற்சிகளை முன்னெடுத்தது. நோய்த்தொற்றின் தாக்கத்தினைக் குறைக்கும்

அட்டவணை 3.10
சுகாதாரத்துறைப் பணிகளின் முக்கிய பண்புகள்

விடயம்	2020 (அ)	2021 (ஆ)
1. அரசாங்கம் (எண்ணிக்கை)		
மருத்துவமனைகள் (மேற்கத்தேய மருத்துவத்தைக் கையாள்பவை)	609	618
படுக்கைகள்	77,121	78,228
ஆரம்ப நலக்கவனிப்பு பிரிவுகள்	514	542
மருத்துவர்கள்	18,218	18,992
துணை மருத்துவ தொழில் புரிபவர்கள்	690	650
தாதிமார்கள்	37,133	38,743
உடன் கவனிப்பாளர்கள்	8,177	8,176
2. ஆயுர்வேதம் (எண்ணிக்கை)		
மருத்துவமனைகள்	118	118
படுக்கைகள்	5,022	5,444
தகுதிபெற்ற ஆயுர்வேத மருத்துவர்கள்	1,749	1,806
பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் (இ)	26,061	26,183

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஆயுர்வேத ஆணையாளர் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்டது

மூலங்கள் : சுகாதார அமைச்சு
ஆயுர்வேத திணைக்களம்

3

முயற்சியொன்றாக கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தடுப்பூசியேற்றிய முதலாவது தென்னாசிய நாடு இலங்கையாகும். ஊட்டச்சத்துக் குறைபாடு, அதிக எடை அல்லது உடல் பருமன் மற்றும் நுண்ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகிய போசாக்கின்மைகளின் முச்சுமைகளுடனான இலங்கையின் போராட்டம் தொடர்பிலான உரிய கரிசனையுடன் இப்பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு மாவட்ட ரீதியில் குறித்துரைக்கப்பட்ட பல்வேறு இலக்கிடப்பட்ட தலையீடுகள் விருத்திசெய்யப்பட்டிருந்த வேளையில் செல்லிடத் தொலைபேசிச் செயலியொன்றினூடாக மாவட்ட ஊட்டச்சத்துக் கண்காணிப்புச் செயற்றிட்டமொன்றும் தாபிக்கப்பட்டது.

ஆண்டு காலப்பகுதியில் பொதுச் சுகாதார முறைமையின் உட்கட்டமைப்புத் தளத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய, 9 சுகாதாரக் கவனிப்பு நிறுவனங்கள் தரமுயர்த்தப்பட்டு மீள்வகைப்படுத்தப்பட்ட வேளையில், 27 புதிய ஆரம்ப நலக்கவனிப்புப் பிரிவுகளைத் தாபிப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. மாத்தறை புதிய மாவட்ட பொது வைத்தியசாலையில் மேலதிக கட்டடங்களின் மீள்வடிவமைத்தல் மற்றும் கட்டடவாக்கத்துடன் தொடர்புடைய செயற்றிட்டம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு 90 சதவீத பௌதீக முன்னேற்றங்களை அடையப்பெற்றது. இதற்கு மேலதிகமாக, கராபிடிய போதனா வைத்தியசாலையிலுள்ள புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் பௌதீக உட்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் 28 நிரல் அமைச்சு வைத்தியசாலைகளில் விபத்து மற்றும் அவசர கவனிப்பு விடுதிகளின் வலுப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றம் அடைந்தன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையேற்பட்ட காலப்பகுதியில் பொதுச் சுகாதாரத் துறை மீதான அழுத்தங்களை நீக்குவதில் தனியார் துறை சுகாதாரக் கவனிப்புப் பணிகள் இன்றியமையாதொரு வகிபாகத்தினைக் கொண்டிருந்தன. குறிப்பாக உலகளாவிய நோய்த்தொற்றினால் உந்தப்பட்ட குடித்தொகையின் வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு ஆரம்ப சேவைகளை வழங்குவதில் தனியார் வைத்தியசாலைகள் முன்னணியில் இருந்துள்ளன. தனியார் சுகாதாரக் கவனிப்பு வழங்குநர்களினூடாக வசதிமிக்க தொலைபேசி மருத்துவச் சேவைகளின் பரந்தளவிலான கிடைப்பனவானது தொலைத்தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தின் பயனைக்கொண்டு நோயாளர்கள் மருத்துவ நிபுணர்களிடமிருந்து மதிப்பீடுகள், நோய் அறிகுறிகளைக் கண்டறிதல் மற்றும் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதனை அனுமதித்துள்ளது. கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய பரிசோதனைச் சேவைகளுக்கும் சிகிச்சைகளுக்கும் மேலதிகமாக இடைநிலைக் கவனிப்பு நிலையங்களின் காலந்தவறாத ஏற்பாடுகளினூடாக கொவிட்-19 நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் தனியார் வைத்தியசாலைகளும் இன்றியமையாத வகிபாகத்தினைக் கொண்டிருந்தன. தனியார் சுகாதாரக் கவனிப்பு வழங்குநர்களினால் முன்னெடுக்கப்பட்ட விரிவான பணி வழங்கல் குடித்தொகையில் உதவி தேவையான துறையினரும் தனியார் சுகாதார கவனிப்புக்கான அணுகலற்றவர்களும் பொதுத்துறை சுகாதார கவனிப்புப் பணிகளைப் பெறும் நோக்கில் கூட்டமாகத் திரளாதிருப்பதனை நிச்சயப்படுத்தினர். 2021 இறுதியிலுள்ளவாறு, 5,444 கட்டில்களின் கொள்ளளவொன்றுடனான 233 வைத்தியசாலைகளைத் தனியார் சுகாதார கவனிப்பு முறைமை உள்ளடக்கியுள்ளது.

கல்வி

கல்வி அமைச்சானது உற்பத்தித்திறன் வாய்ந்த பிரசைகளையும் துடிப்பான மனித வளத் தளத்தினையும் உருவாக்குவதனை நோக்கிய அரசாங்கத்தின் தொலைநோக்குடன் இசைந்துசெல்லும் விதத்தில் பொருளாதாரத்தின் மனித மூலதனத் தளத்தின் உற்பத்தித்திறன்மிக்க உள்ளார்ந்த வாய்ப்புக்களை மேம்படுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டது. இதற்கமைய, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர கல்வி மட்டங்களில் "சகலருக்கும் கல்வி" எனும் கொள்கையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் மாகாண கல்வி அதிகாரசபைகளுடனும் தேசிய மட்ட கல்வி நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து 2021-2025 காலப்பகுதிக்கான உபாய செயற்றிட்டமொன்றினைக் கல்வி அமைச்சு விருத்திசெய்தது. பொதுக் கல்வித் துறைக்கான நடுத்தர காலச் செயற்றிட்டமானது கல்வியில் சமத்துவத்தை வலுப்படுத்தல், கல்வித் தரத்தினை முன்னேற்றுதல், பொதுக் கல்வியின் பொறுப்பாண்மையையும் பணிகள் வழங்கலினையும் வலுப்படுத்தல் அதேபோன்று சான்றினடிப்படையிலமைந்த கல்விக் கொள்கைத் தயாரிப்பு மற்றும் திட்டமிடலை மேம்படுத்தல் ஆகிய நான்கு முக்கிய விடயப் பரப்புக்களின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. புதிய தேசிய பாடசாலை

அபிவிருத்திச் செயற்றிட்டம் போன்ற ஏனைய முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. புதிய தேசிய பாடசாலை அபிவிருத்திச் செயற்றிட்டமானது நாடளாவிய ரீதியிலான தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையினை 1,204இற்கு அதிகரிக்கும் பொருட்டு "தேசிய பாடசாலை" வகையினுள் 831 தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளைத் தரமுயர்த்தப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், இச்செயற்றிட்டத்திற்காக ரூ. 1.9 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலையும் பௌதீக மற்றும் கற்றல் உட்கட்டமைப்பின் மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்காக ரூ. 2.0 மில்லியனைப் பெற்றுக்கொண்டது. முதற் கட்டமாக, 2021இன் முன்னைய பகுதியில் 09 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. கற்றல் பெறுபேறுகளுக்கான பண்புசார் மேம்பாடுகளைத் தூண்டும் நோக்குடன் தேசிய கல்வி நிறுவனம் வினைத்திறன்மிக்க கற்றல் தொடர்பில் அதிகரித்த கவனத்துடன் "விசாரணை அடிப்படையிலமைந்த கற்றல்" எனும் கருப்பொருளின் கீழ் சாதாரண தரத்திற்கும் உயர் தரத்திற்குமான புதிய பாடவிதானமொன்றினை விருத்திசெய்த வேளையில், விசாரணை அடிப்படையிலமைந்த கற்றல் செயன்முறைகளை வசதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடத்தொகுதிகளும் கையேடுகளும் மேம்படுத்தப்பட்டன. உயர் தரத்தில் ஐந்தாவது பிரிவாக தொழில்நுட்பப் பிரிவினை அறிமுகப்படுத்துவதற்கான செயற்றிட்டமானது 09 பாடசாலைகளை செயற்றிட்டத்தினுள் உள்ளீர்த்து 2021இல் முன்னேற்றமடைந்து, 2021 இறுதியில் தொழில்நுட்பப் பிரிவில் 466 பாடசாலைகளைத் தோற்றுவித்தது. அதேவேளை, உயர்தரக் கற்கைகளுக்காக "தொழிற்கல்விப்" பிரிவினை வழங்கும் நாடளாவிய ரீதியிலான 523 பாடசாலைகளுடன் ஆண்டு காலப்பகுதியில் "13 ஆண்டு கால கல்விக்" கொள்கை மேலும் விரிவுபடுத்தப்பட்டது. குறிப்பாக, தொழிற்கல்விப் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 9,603 மாணவர்களில், ஏறத்தாழ 87 சதவீதமானோர் இத்தெரிவு இல்லாத பட்சத்தில், கல்வி முறைமையிலிருந்து வெளியேறுகின்ற அபாயத்தினையுடையவர்களென அடையாளம் காணப்பட்டனர். ஆண்டு காலப்பகுதியில் இப்பிரிவின் கீழ் கல்வியைத் தொடர்ந்த 11,000 மாணவர்கள் நிறுவன ரீதியிலான பயிற்சிக்கு நெறிப்படுத்தப்பட்டனர். மேலும், முன்னைய ஆண்டுகளில் இப்பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்த 6,390 மாணவர்கள் தேசிய தொழிற்தகைமைப் பயிற்சியின் 04ஆவது மட்டத்தினை நிறைவுசெய்துள்ளதுடன் மற்றையவற்றிற்கிடையில் சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல், ஊர்திகள்/ மின்சார பணிகள், பராமரிப்பு/ விளையாட்டுக்கள், தகவல் தொழில்நுட்பம், கட்டடவாக்கம் மற்றும் வேளாண்மை மற்றும் பெருந்தோட்டம் போன்ற பல்வேறு கைத்தொழில்களில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இச்செயற்றிட்டத்தினை 2022இல் மேலும் 78 பாடசாலைகளுக்கு விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாடசாலைகளைப் பௌதீக ரீதியில் அணுகுவதில் காணப்பட்ட இடைக்கிடையிலான மூடுதல்கள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் சவால்களுக்கு மத்தியில் பொதுக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பல்வேறு புதிய முறைகளைப் பின்பற்றுவதனை ஆண்டு காலப்பகுதியில் அத்தியாவசியப்படுத்தின. மார்ச்சு மாத மற்றும் 2021இன் இறுதிக் காலாண்டுப்பகுதியில் வழமையான தொழிற்பாடுகளின் குறுகியகால இடைவெளிகளுடன் 2021இன் பெரும்பாலான பகுதிகளில் பகுதியளவில் அல்லது முழுமையாகப் பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டன. இத்தகைய குறுகியகால தொடக்க காலப்பகுதியில் சுகாதார அமைச்சுடன் கூட்டிணைந்து கல்வி அமைச்சானது பாடசாலை வளாகங்களினுள் பிள்ளைகள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய வழிகாட்டல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதனை நிச்சயப்படுத்துகின்ற பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. அத்தகைய வழிமுறைகள் வகுப்பறைகளைக் கிரமமாகத் தொற்றுநீக்குதல், கை கழுவும் வசதிகளது கிடைப்பனவு, பௌதீக ரீதியாக இடைவெளியிடப்பட்ட வகுப்பறை ஏற்பாடுகள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்து ஏற்பாடுகளை ஒருங்கிணைத்தல் என்பவற்றினை உள்ளடக்கியிருந்தன. ஆண்டின் பிற்பகுதியில், கல்வி அமைச்சானது சுகாதாரத்துறை ஆர்வலர்களுடன் முனைப்புடன் செயற்பட்டு ஆசிரியர்களுக்குத் தடுப்பூசியேற்றுகின்ற செயன்முறையைத் துரிதப்படுத்துகின்ற வேளையில் 12 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்குத் தடுப்பூசியேற்றுவதனையும் விரிவுபடுத்தியது. முடக்கல் காலப்பகுதியில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக கலப்புப் பொறிமுறையினூடாக கல்வி நடவடிக்கைகளின் தடங்கலற்ற தன்மையினை நிச்சயப்படுத்துவதற்குக் கல்வி அமைச்சு பெருமுயற்சியினை மேற்கொண்டது. 2020 காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த இணையவழி நிகழ்ச்சித்திட்ட ஏற்பாட்டின் தொடர்ச்சியும் மேலதிக விரிவாக்கமும் கலப்புப் பொறிமுறைகளின் முக்கியமானதொரு அம்சமாகும். இதற்கமைய, தேசிய இ-கற்றல் முகாமைத்துவ முறையான இ-தக்ஷலாவ சகல பாடசாலைத் தரங்களுக்கும் மேலதிக உள்ளடக்கங்களுடன் விரிவுபடுத்தப்பட்ட வேளையில் கல்வி அமைச்சானது குருகெதர கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கல்விசார் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்தும் ஒளிபரப்பியது. ஆண்டு காலப்பகுதியில், தேசிய வானொலி அலைவரிசைகளினூடாக இக்கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் கேட்பொலியினை எல்லோருக்கும் சென்றடையும் வகையில் ஒலிபரப்புவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக கிராமப்புற மற்றும் தோட்டப் பகுதிகளில் தொழில்நுட்ப மற்றும் இணையத்தள உட்கட்டமைப்பில் காணப்படுகின்ற இடைவெளிகளை முறையாகக் கருத்திற்கொண்டு குருகெதர நிகழ்ச்சித்திட்டத்தின் ஒலி உள்ளடக்கங்களுக்கான முழுநேர அணுகலை வழங்குவதற்கு வானொலி இ-தக்ஷலாவ

செல்லிடத் தொலைபேசிச் செயலி ஆண்டு காலப்பகுதியில் விருத்திசெய்யப்பட்டது. அதேவேளை, தற்போதுள்ள இணையவழி கற்றல் வசதிகளை அணுகுவதில் இடர்பாடுகளைக் கொண்டுள்ள மாணவர்களை வசதிப்படுத்துவதற்குப் பின்தங்கிய பகுதிகளில் 2,000இற்கும் மேலான பிராந்திய தொலைதூரக் கல்வி மையங்கள் தாபிக்கப்பட்டன. குறிப்பாக, ஆண்டு காலப்பகுதியில், விசேட கல்வித் தேவைப்பாடுகளுடைய பிள்ளைகளை மதிப்பிடுவதற்குப் புதிய மதிப்பீட்டுச் சாதனமொன்றினைக் கல்வி அமைச்சு வெளியிட்டதன் மூலம் கற்றல் சூழலில் நேருக்கு நேரான தொடர்புகளில் காணப்பட்ட பற்றாக்குறைக்கு மத்தியில் அத்தகைய பிள்ளைகளது, குறிப்பாக பலவீனமான கற்றல் பெறுபேறுகளினால் அதிகரித்தளவில் பாதிப்படையக்கூடிய தன்மையினைக் கருத்திற்கொண்டு தனிப்பட்ட கல்வித் திட்டங்களின் உருவாக்கத்தினை வசதிப்படுதியது. கொவிட்-19 நோய்த்தொற்றினால் ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக பல்வேறு தேசிய ரீதியிலான பரீட்சைகள் தாமதமடைந்த போதிலும் இப்பரீட்சைகள் 2022இல் நடைபெறுவதற்கு உடனடியாக மீளட்டவணையிடப்பட்டன. இதற்கமைய, 2021 ஓகத்தில் நடைபெறவிருந்த தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையும் உயர்தரப் பரீட்சையும் பிற்போடப்பட்டு பின்னர் முறையே 2022 சனவரியிலும் 2022 பெப்ருவரியிலும் நடைபெற்ற வேளையில் சாதாரண தரப் பரீட்சையானது 2022 மே மாதத்திற்குப் பிற்போடப்பட்டது. பொதுக் கல்வி நடவடிக்கைகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு குறிப்பாக அத்தகைய நடவடிக்கைகளை இணையவழித் தளங்களுக்குத் துரிதமாக மாற்றுவதில் சகல தொடர்புடைய ஆர்வலர்களதும் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டத்தக்கதொன்றாகக் காணப்பட்ட போதிலும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அணுகலிலும் தொடர்புடைய கல்வியறிவு மட்டங்களிலுமுள்ள ஏற்றத்தாழ்வுகளினால் பெருமளவு உந்தப்பட்டு கற்றல் பெறுபேறுகளில் தற்போதுள்ள சமமின்மைகளை அந்நடவடிக்கைகள் மோசமடையச் செய்திருக்கக்கூடும் என்பதை முறையாக அடையாளங்காண்பது முக்கியமானதொன்றாகும். மேலும், ஆசிரியர்களுடனும் சக நண்பர்களுடனும் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுகூட சூழலில் மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் தனித்தன்மைவாய்ந்ததாகக் கருதப்படக்கூடிய பௌதீக இடைத்தொடர்புகளின் பற்றாக்குறையினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளினால் தெளிவற்ற தன்மைகளைக் கொண்டுள்ளமையினால் இணையவழிக் கற்றலின் பெறுபேறுகளின் தரம் கேள்விக்குரியதாயுள்ளது. மேலும், இக்கற்றல் இடைவெளிகள் காலந்தவறாத முறையொன்றில் தீர்க்கப்படாதவிடத்து மாணவர்களின் கற்றல் பெறுபேறுகள் தொடர்பிலான நீடித்த விளைவுளை ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் அவர்களது கல்விசார் முன்னேற்றம் மற்றும் வெற்றியில் தடைகளை ஏற்படுத்தும் விதத்தில் திறன்கள், இயலுமைகள் மற்றும் அறிவு என்பவற்றில் குறிப்பிடத்தக்க இடைவெளிகளாக

அட்டவணை 3.11
பொதுக் கல்வியின் முக்கிய பண்புகள்

விடயம்	2020 (அ)	2021 (ஆ)
1. பாடசாலைகள் (எண்ணிக்கை)	11,091	11,095
அரச பாடசாலைகள்	10,155	10,152
முதலாந்தர	3,884	3,883
இரண்டாந்தர	6,271	6,269
இதில் தேசிய பாடசாலைகள்	373	383
ஏனைய பாடசாலைகள்	936	943
பிரிவேனா	816	819
தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ)	120	124
2. மாணவர்கள் (எண்ணிக்கை) (ஈ)	4,272,289	4,238,760
அரச பாடசாலைகள்	4,063,685	4,032,211
ஏனைய பாடசாலைகள்	208,604	206,549
பிரிவேனா	69,878	69,500
தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ)	138,726	137,049
சர்வதேச பாடசாலைகள்	வி.கி.	வி.கி.
3. ஆசிரியர்கள் (எண்ணிக்கை) (ஈ)	265,394	264,215
அரச பாடசாலைகள்	249,494	248,500
ஏனைய பாடசாலைகள்	15,900	15,715
பிரிவேனா	7,336	7,400
தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ)	8,564	8,315
சர்வதேச பாடசாலைகள்	வி.கி.	வி.கி.
4. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் (எண்ணிக்கை) (உ)	319,405	307,415
5. மாணவர்கள்/ ஆசிரியர்கள் விகிதம்		
அரச பாடசாலைகள்	16	16
ஏனைய பாடசாலைகள்	13	13
சர்வதேச பாடசாலைகள்	வி.கி.	வி.கி.
6. முதலாந்தர தேறிய அனுமதி விகிதம் (தரம் 1 - 5)	94.04	94.39
7. இரண்டாந்தர தேறிய அனுமதி விகிதம் (தரம் 6 - 11)	91.68	91.46
8. வயது குறித்துரைக்கப்பட்ட அனுமதி விகிதம் (தரம் 1 - 9)	வி.கி.	வி.கி.
9. ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் (எண்ணிக்கை)	8	8
10. ஆண்டுக்காலப்பகுதியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (எண்ணிக்கை)	973	973
11. தேசிய கல்வியியற் கல்லூரிகள் (எண்ணிக்கை)	19	19
பயிற்சி ஆசிரியர்கள் (எண்ணிக்கை)	12,331	12,037
ஆண்டுக்காலப்பகுதியில் சித்தியடைந்தோர் எண்ணிக்கை	3,864	4,447

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் விசேட தேவைகளுடனான சிறுவர் பாடசாலைகள் (இந்த எண்ணிக்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலைகள் நீங்கலானது)
(ஈ) சர்வதேச பாடசாலைகலிருந்தான தரவுகள் நீங்கலாக
(உ) அரச பாடசாலைகள் மட்டும்

மூலம்: கல்வி அமைச்சு

மாற்றமடையும். தொடர்புடைய ஆர்வலர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் சாத்தியமான கற்றல் இழப்புக்களின் முற்கூட்டிய மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் 2022 மார்சு நடுப்பகுதியிலிருந்து மாணவர்கள் பௌதீக ரீதியாக பாடசாலைக்குத் திரும்பியதுடன் இக்கற்றல் இடைவெளிகளை நிரப்புவதற்கு முனைப்புடன்கூடிய மற்றும் இலக்கிடப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இம்மிக முக்கியமான வளங்களுக்கான தடங்லற்ற அணுகல் மற்றும் இலவச கிடைப்பனவு என்பனவூடாக நாட்டில் நிலவுகின்ற கல்வி உட்கட்டமைப்புத் தளத்தில் தற்போதுள்ள சமனின்மைகளைக் குறைப்பதற்குப் பங்களிக்க முடியுமென்பதனால் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு விருத்திசெய்யப்பட்டுள்ள இணையவழிக் கல்வி உட்கட்டமைப்புத் தளத்தினை அரசாங்கம் தொடர்ந்தும் பேணுவதும் இன்றியமையாததொன்றாகும்.

அரசாங்கம் 2021 காலப்பகுதியில் தொலைதூரக் கற்றல் தளங்களினூடாக உயர் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. ஆண்டு காலப்பகுதியில் 2020 மார்ச்சு தொடக்கம் நடைமுறையிலிருந்த லங்கா கல்வி மற்றும் ஆய்வு வலையமைப்பு இணையவழிக் கல்வி முறைமையினூடாக உயர் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. லங்கா கல்வி மற்றும் ஆய்வு வலையமைப்புத் தளத்தின் கீழ் மாணவர்களுக்கும் கல்வியலாளர்களுக்கும் இலவச தரவு வசதி வழங்கப்பட்டதுடன் விரிவுரைகள் ஸும் தளத்தினூடாக மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் சில சந்தர்ப்பங்களில் நாளொன்றிற்கு 250,000 பங்கேற்பாளர்களும் இருந்துள்ளதுடன் அதில் 100,000 பங்கேற்பாளர்கள் சமநேர பயனாளர்களாகவுமிருந்தனர். அதேவேளை, இணையவழிக் கல்விப் பணிகளின் தரத்தினை நிச்சயப்படுத்தும் நோக்குடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களுடன் கூட்டிணைந்து லங்கா கல்வி மற்றும் ஆய்வு வலையமைப்புத் தளத்தின் முன்னேற்றத்தினைத் தொடர்ந்தும் மீளாய்வு செய்தது.

ஆண்டு காலப்பகுதியல் நாட்டின் மூன்றாம் நிலைக் கல்வி உட்கட்டமைப்புத் தளத்தினை விரிவாக்குவதற்கான பல்வேறு முயற்சிகள் முன்னேற்றம் அடைந்தன. இதற்கமைய, சுதேச மருத்துவத்தின் கம்பஹா விக்ரமாராச்சி பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்கள் ஆண்டு காலப்பகுதியில் தாபிக்கப்பட்டன. கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவனம் 08 இளமாணிப் பாடநெறிகளையும் 08 முதுமாணி மட்ட பாடநெறிகளையும் வழங்கும் வசதியுடன் 13 கல்வித் துறைகளுடன் 04 பீடங்களை உள்ளடக்கி முழுமையான பல்கலைக்கழகமொன்றாக 2021 மார்சில் தரமுயர்த்தப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமானது 2021 ஓகத்தில் வவுனியாப் பல்கலைக்கழகமாக பல்கலைக்கழக அந்தஸ்திற்குத் தரமுயர்த்தப்பட்டதுடன் வணிகக் கல்வி, பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் ஆகிய துறைகளில் உயர் மூன்றாம் நிலைக் கல்வியை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தேசிய தாதியர் பல்கலைக்கழகமொன்றினையும் தேசிய ஆசிரிய பயிற்சிப் பல்கலைக்கழகமொன்றினையும் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. 2020/21 கல்வியாண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதினாறு புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

தனியார் துறையும் நாட்டின் உயர் கல்வித் துறையிலான வாய்ப்புக்களின் விரிவாக்கத்தினைத் தொடர்ந்தும் வசதிப்படுத்தியது. இதற்கமைய, 2021 இறுதியிலுள்ளவாறு 21 அரசல்லா உயர் கல்வி நிறுவனங்கள் பட்டப்படிப்பினை வழங்குகின்ற நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் அரசல்லா உயர் கல்வி நிறுவனங்களினால்

அட்டவணை 3.12
பல்கலைக்கழகக் கல்வியின் முக்கிய பண்புகள் (அ)

	விடயம்	2020 (ஆ)	2021 (இ)
1.	பல்கலைக்கழகங்கள் (எண்ணிக்கை)	15	17
2.	ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் (எண்ணிக்கை)	20	19
3.	மாணவர்கள் (இளநிலை பட்டதாரிகள்) (எண்ணிக்கை) (ஈ)		
	பல்கலைக்கழகங்கள் (உ)	106,641	118,711
	நிறுவகங்கள்	3,844	3,610
	திறந்த பல்கலைக்கழகம்	26,255	25,329
4.	மொத்த அலுவலர்கள் (அனைத்துப் பல்கலைக்கழகங்கள்) (எண்ணிக்கை)		
	கல்விசார்	6,525	6,742
	கல்விசாராதோர்	12,821	12,971
5.	மாணவர்கள்/ ஆசிரியர்கள் விகிதம்	18.8	19.7
6.	வயது குறித்துரைக்கப்பட்ட இளநிலை பட்டதாரி மாணவர்களின் உள்ளெடுப்பு விகிதம் (19-23 வருடங்கள்) (ஈ)	8.2	8.7
7.	க.பொ.த (உ.த.) இருந்து பல்கலைக்கழகங்களுக்கு முன்னேற்றம்		
	பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் (%)	62.42	62.44
	தகுதி பெற்றோர் சதவீத அடிப்படையிலான அனுமதி (%)	22.98	22.49
8.	பட்டம் பெற்ற மாணவர்கள் (எண்ணிக்கை) (ஊ)	32,066	வி.கி.
	முதற் பட்டம்	24,565	வி.கி.
	பட்டமேற்படிப்பு பட்டம்	7,501	வி.கி.
9.	முதற் பட்டத்திற்கான புதிய அனுமதிகள் (எண்ணிக்கை) (எ)	41,669	வி.கி.
10.	பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் (எண்ணிக்கை)	181,206	194,297

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) வெளிவாரிப்பட்ட கற்கை நெறிகள் நீங்கலாக
(உ) திறந்த பல்கலைக்கழகம் நீங்கலாக
(ஊ) வெளிவாரிப் பட்டம் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக
(எ) வெளிவாரிப் பட்டம் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் நீங்கலாக

மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

வழங்கப்படுகின்ற ஒப்புதலளிக்கப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை 2020இல் 167இலிருந்து 190இற்கு அதிகரித்ததன் மூலம் தனியார் துறையினூடாக உயர் கல்வியைத் தொடருகின்ற மாணவர்களுக்கு வேறுபட்ட கற்கைத் துறைகளில் அதிகரித்த வாய்ப்புக்களை வழங்கியது. அதேவேளை, கல்வி அமைச்சானது இவ்வரசல்லா உயர் கல்வி நிறுவனங்களின் தர நியமங்களை நிச்சயப்படுத்துகின்ற நோக்குடன் ஐந்து வருட மீளாய்வு வழிகாட்டலொன்றினை விருத்திசெய்யும் பொருட்டு தொடர்ந்தும் பணியாற்றிய வேளையில் அரசல்லா உயர் கல்வி நிறுவனங்களின் நிறுவனசார் மீளாய்வுக்கும் செயற்றிட்ட மீளாய்வுக்குமான குறைந்தபட்ச நியமங்களின் அறிமுகம் தொடர்பிலான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சித் துறையானது பொருளாதாரத்தின் தோற்றம்பெறும் தேவைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் தொழிற்படையின் ஆற்றல் மட்டங்களை மேம்படுத்துகின்ற நோக்குடன் 2021 காலப்பகுதியில் கல்விசார் வாய்ப்புக்களைத் தொடர்ந்தும்

அட்டவணை 3.13
மூன்றாந்தர மற்றும் தொழில்நிலைக் கல்வி மற்றும் பயிற்சியின் முக்கிய பண்புகள்

விடயம்	2020	2021 (அ)
1. பதிவு செய்யப்பட்ட மூன்றாந்தர தொழில்நிலைக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (எண்ணிக்கை) (ஆ)	1,239	1,071
அரசு	570	478
தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள்	669	593
2. அங்கீகாரம் பெற்ற மொத்த கற்கை நெறிகள் (எண்ணிக்கை)	3,413	3,014
அரசு	2,900	2,387
தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள்	513	627
3. வழங்கப்பட்ட தேசிய தொழில் பயிற்சி தகைமைச் சான்றிதழ்கள் (எண்ணிக்கை)	47,621	45,033
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்	8,670	4,633
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபை	8,266	7,441
தொழிற்பயிற்சி அதிகார சபை	15,608	17,253
தேசிய இளைஞர் பணிகள் ஆணைக்குழு	2,118	3,897
தனியார்	12,959	11,809

(அ) தற்காலிகமானது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு

மூலம்: மூன்றாந்தர மற்றும் தொழில்நிலை கல்வி ஆணைக்குழு

வழங்கியது. 2021 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கி 1,071 பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சிக் கல்வியினை வழங்கின. நிறுவனங்களின் இப்பரந்த வலையமைப்பினூடாக 3,000இற்கும் மேற்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட கற்கைநெறிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் மாணவர்களைத் தகைமைக்குட்படுத்தும் 45,033 தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதேவேளை, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவானது இணையவழித் தளங்களினூடாகவும் தொலைக்காட்சி பாடத்தொடர்களினூடாகவும் தேசிய தொழிற்தகைமைச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில் மாணவர்களின் பயிற்சிச் செயலாற்றம் தொடர்பிலான தரவுகளைத் திரட்டுவதற்கும் அதேபோன்று செயற்றிட்ட விண்ணப்பதாரர்களை மதிப்பீடு செய்வதற்கும் இணையத்தள முறைமையொன்றினையும் விருத்திசெய்தது. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழு பல்வேறு தேசிய தொழிற்தகைமை மட்டங்களுக்கான புதிய தேசிய நியமங்களை விருத்திசெய்த வேளையில் தேசிய தொழிற்தகைமைச் செயற்றிட்டங்களின் தொடர்ச்சியான இயைபுத்தன்மையினை நிச்சயப்படுத்துவதற்குத் தற்போதுள்ள வழிகாட்டல்களைத் திருத்திய வேளையில் அத்தகைய செயற்றிட்டங்களின் தரத்தினை உத்தரவாதப்படுத்தியது. அதேவேளை, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கான கைத்தொழில்சார் கேள்வியைப் பூரணப்படுத்தும் விதத்தில் நாடளாவிய ரீதியில் தொழிற்பயிற்சி வசதிகளைத் தொடர்ந்தும் தரமுயர்த்தியது. இதற்கமைய. டெக் உதான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு உட்கட்டமைப்பு மேம்படுத்தல் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட வேளையில் புதிய தொழில்நுட்பக் கல்லூரியொன்றும் ஆண்டு காலப்பகுதியில் தாபிக்கப்பட்டது.

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

கொவிட்-19 நோய்ப்பரவலின் காரணமாக தோற்றம்பெற்ற பல்வேறு தடங்கல்களுக்கு மத்தியிலும், அரசாங்கமானது நாட்டில் வீடமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற இலக்குடன் பல்வேறு செயற்றிட்டங்களை ஆரம்பித்து அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதற்கமைவாக, நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்ற அரசாங்கத்தினுடைய கொள்கைச் சட்டகத்திற்கமைவாக இலங்கையர் அனைவருக்கும் வசதியானதும் மலிவானதுமான வீடமைப்பு வசதிகளை உறுதிப்படுத்துகின்ற பல்வேறு வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் நோக்கத்திற்கமைவாக, காணி உரிமை இருந்தபோதிலும் வீடுகளை நிர்மாணிக்க இயலாத குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் வீடமைப்புத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்காக ஒபட கெயக்-ரட்ட ஹெட்டக் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்தும் மேற்கொண்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தேசிய வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி அதிகார சபையானது ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் குறைந்தது ஒரு வீட்டை நிர்மாணிக்க எதிர்பார்த்துள்ளது. அதற்கிணங்க, 2021இல், 12,092 வீட்டலகுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதில் 4,075 வீட்டலகுகள் ஆண்டுகாலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டன. மேலும், குறைந்த-வருமானம் பெறுகின்ற துறவறப் பிக்குகளின் பெற்றோருக்கான மிஹிந்து நிவஹன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நடுத்தர வருமான உழைப்பாளர்களுக்கான நியாயமான வீடமைப்பினை வழங்குவதற்கான சியபத்த மற்றும் சப்பிரி மஹல் நிவாச வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன ஆய்விற்குரிய காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. பொதுத்துறை ஊழியர்கள் உள்ளடங்கலாக நடுத்தர வருமானம் பெறுகின்ற சனத்தொகையின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கு இயலச்செய்கின்ற அதேவேளையில், நகரப் பிரதேசங்களிலும் அவற்றை அண்மித்த சுற்றுச்சூழலிலும் அதிகரிக்கின்ற வீடமைப்புத் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையானது அதன் நடுத்தர வருமான வீடமைப்பு திட்டத்தையும் நியாயமான வீடமைப்புத் திட்டத்தையும் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது பிரசைகளை மையமாகக்கொண்ட நகரக் குடியிருப்பினை அபிவிருத்தி செய்கின்ற அதேவேளையில், நகரச் சுற்றாடலின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துகின்ற நோக்குடன் ஆண்டு காலப்பகுதியில்

பல்வேறு செயற்றிட்டங்களில் ஈடுபட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நகரக்குடியிருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பொரலெஸ்கமுவ பலநோக்கு கட்டிடம், மினுவங்கொட சந்தை, மற்றும் அதேநேர வெள்ளத் தணிப்பு நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலாக 57 செயற்றிட்டங்கள் ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. இச்செயற்றிட்டங்கள் கார் தரிப்பிடங்கள், பேருந்துத் தரிப்பிடங்கள், பொதுச் சந்தைகள், பலநோக்கு கட்டிடங்கள் அத்துடன் நகரப் பூங்காக்கள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் நகர அபிவிருத்திக்கான நகரத்திட்டங்களுக்கமைவாக அனைத்து ஒன்பது மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையானது பிரதேச நகர மையங்களை மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத்தரத்துடன் கூடிய பிரசைகள் மைய நகரங்களாக மீள அபிவிருத்தி செய்வதற்கு சிய்யக் நகர (நூறு நகரங்கள்) அழகுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்திருந்தது. அரச நிறுவன அபிவிருத்தி செயற்றிட்டங்கள், நதிக்கரை புனரமைப்பு மற்றும் மீள் அபிவிருத்திக் செயற்றிட்டம், யாழ்ப்பாண நகர மண்டபத்தின் மீள்க்கட்டமைப்பு, மற்றும் கடற்கரை நகர அபிவிருத்தி செயற்றிட்டம் போன்ற ஏனைய முக்கிய செயற்றிட்டங்களும் 2021 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதுடன் நகரச் சுற்றாடலின் அழகியல் அம்சங்களையும் தொழிற்பாடுகளையும் மேம்படுத்துவதில் அவதானம் செலுத்தப்பட்டது. மேலும், மேற்குப் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் மேற்கு பிராந்தியத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய போக்குவரத்து முறைமையொன்றினை உருவாக்குவதற்கும் நகர போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கும் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைவாக, பாரிய புகையிரத போக்குவரத்து முறைமை மற்றும் கடவத்த மற்றும் கொழும்பு-துறைமுக போக்குவரத்து மையங்கள் போன்ற பல்மாதிரி போக்குவரத்து நிலையங்களின் நிர்மாணப் பணி 2021இல் செயற்படுத்தப்பட்டன. வெளிநாட்டு நேரடி முதலீட்டினை கவர்வது தொடர்பில் கவனம் செலுத்தி, காலி நகர மத்தியில் பாரிய-உயர் கலப்பு அபிவிருத்தி, கிரிகெரி ஏரியில் தீம் பார்க் திட்டம் அம்பாந்தோட்டை லொஜிஸ்டிக் ஹப் மற்றும் கட்டுநாயக்காவில் பலமாடி கார் தரிப்பிடம் போன்ற முதலீட்டுக் செயற்றிட்டங்களும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்திக் கொத்தணிகளின் கீழ் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசாங்கமானது ஒருங்கிணைந்த திண்மக் கழிவு தொடர்பில் தேசிய இயலளவினை கட்டியெழுப்புவதற்காக கழிவகற்றல் முறைமைகளில் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு அதன் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டமானது நகரப் பிரதேசங்களுக்கு நீண்டகாலம் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய திண்மக் கழிவு முகாமைத்துவ முறைமையை வழங்குவதற்காக முன்னெடுக்கப்பட்டது. இச்செயற்றிட்டமானது 2021 இறுதியளவில் 87 சதவீத நிதியியல் மற்றும் பௌதீக முன்னேற்றமடைந்து காணப்படுவதோடு 2022 நடுப்பகுதியளவில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. திட்டத்தின் முடிவுறுத்தலைத் தொடர்ந்து, தற்போதுள்ள புகையிரதத் தொகுதிகளைப் பயன்படுத்தி நாளொன்றிற்கு ஏறத்தாழ 1,200 தொன் அளவுடைய கழிவுப் பொருட்கள் அருவகாலு காணி நிரம்பலுக்கு எடுத்துச் செல்லப்படும். இத்திட்டத்தின் சுற்றாடல்சார் பாதிப்புக்கள் தொடர்பில் பல்வேறு ஆர்வலர்களினால் அதிருப்திகள் எழுப்பப்பட்டிருப்பினும், முறையான வடிவமைப்பு மற்றும் பொருத்தமான முகாமைத்துவத்தினூடாக சுகாதார காணி நிரம்பலின் ஊடாக நாட்டில் அதிகரித்து வருகின்ற கழிவகற்றல் பிரச்சினைகளுக்கு நிலையானதொரு தீர்வினை முன்வைக்க இயலுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, அரசாங்கமானது எதிர்வரும் சில ஆண்டுகளில் கழிவு முகாமைத்துவ பூங்காக்களை நிறுவுவதற்கும், சிறியளவான கழிவு முகாமைத்துவ நிலையங்களை அமைப்பதற்கும், அத்துடன் ஹோமாகம, பதுள்ள மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இயந்திர உரமாக்கல் ஆலைகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

முதற்தர நிதியியல் மையத்தினையும் தெற்காசியாவில் நவீனமானதும் கவர்ச்சிகரமானதுமான நகரங்களை கட்டமைக்கின்ற நோக்குடன் கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் 2021இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. நில மீட்சி நடவடிக்கைகள் அனைத்தும் முடிவடைந்ததைத் தொடர்ந்து, மீட்சிப் பிரதேசமானது 2021 மே மாதத்தில் நிறைவேற்றப்பட்ட 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினால் விசேட பொருளாதார வலயமாக பெயர்குறித்துரைக்கப்பட்டது. உட்கட்டப்பு பணிகளில் 67 சதவீதமான பௌதீக முன்னேற்றத்தையும் அத்துடன் 52 சதவீதமான உட்கட்டமைப்பு, அலுவலகம், சில்லறை வியாபார இடைவெளி மற்றும் வதிவிட அலகுகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற கட்டம் 1இன் இயற்கை வனப்புமிக்கதான அழகுப்படுத்தல் நடவடிக்கைகளையும் அடையப்பெற்று உள்ளக உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 2021இல் முன்னெடுக்கப்பட்டன. மேலும், 2021 இறுதியளவில், கொழும்பு துறைமுக நகரத்தின் கழிவு மற்றும் கழிவுநீர் அகற்றல் உட்கட்டமைப்புடன் தொடர்புடைய நிர்மாண நடவடிக்கைகள் பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்திற்கமைவாக செயற்படுத்தப்பட்டிருந்தது. மாலிகாகந்தவிலிருந்தான நீர் வழங்கல் வழியானது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், எல்லி-கவுஸ் நீர் வழங்கல் வழியானது 2021 இறுதியில் 55 சதவீத முன்னேற்றத்தினை அடைந்திருந்தது. மத்திய மலைநாட்டிலிருந்து கொழும்பு துறைமுக நகரத்திற்கான பிரதான பாதை அணுகல் வசதித்

3

தொடர்புகளின் நிர்மாணப் பணிகள் செயற்பாட்டிலுள்ளன. முக்கிய அணுகல்வசதி உட்கட்டமைப்பில், நெடுஞ்சாலை வலையமைப்பிலிருந்து துறைமுக நகரத்திற்கான அணுகல் வசதியினை இயலச்செய்கின்ற துறைமுக அணுகல்வசதியின் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையானது 2021 இறுதியளவில் 35 சதவீத முன்னேற்றத்தினை அடையப்பெற்றுள்ள அதேவேளையில், கொழும்பு துறைமுக நகரத்திலிருந்து கொழும்பு தெற்கிற்கான அணுகல் வசதியினை வழங்குகின்ற மெரைன் டிரைவ் நீடிப்புச் செயற்றிட்டம் அதன் ஆரம்பக்கட்டங்களில் உள்ளது. மெரினா படகுத்தளப் பிரதேசம் 2022 சனவரியில் பொதுமக்களுக்காக திறந்துவைக்கப்பட்ட அதேவேளையில், உட்கட்டமைப்பு வசதிகளின் துரிதப்படுத்தப்பட்ட முடிவுறுத்தலுடன் 2023ஆம் ஆண்டின் ஆரம்பமளவில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. துறைமுக நகரச் செயற்றிட்டமானது நடுத்தரக்காலத்தில் புதிய தொழில் வாய்ப்புக்கள், வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள், மற்றும் அதிகரித்த மொத்த உள்நாட்டு உற்பத்தி பெறுமதி சேரல் என்பவற்றினூடாக இலங்கைப் பொருளாதாரத்தை மீளவடிவமைக்கின்ற நுழைவாயிலாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வறுமை ஒழிப்பு மற்றும் பாதுகாப்பு வலையமைப்புக்கள்

வறுமை ஒழிப்பில் இலங்கையின் பாராட்டத்தக்க முன்னேற்றமானது ஏற்கனவே பரவலாகக் காணப்படுகின்ற சமமின்மையின் விரிவுப்படுத்தலுக்கு இணையாக நோய்பரவலின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தென்படுகின்றது. அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை தோற்றுவிக்கும் பொருட்டு, தொடர்ந்துவந்த அரசாங்கங்களின் பலதரப்பட்ட பல்நோக்கு வறுமை ஒழிப்பு முன்னெடுப்புக்களினதும் அவர்களின் முயற்சிகளினதும் விளைவாக இலங்கையானது கடந்த இரண்டரை தசாப்தகாலமாக வறுமைக் குறைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2002ஆம் ஆண்டின் வீட்டுத்துறையினரின் வருமானம் மற்றும் செலவின அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட உத்தியோகப்பூர்வ வறுமைக் கோட்டின்படி, தலைக்குரிய வறுமை விகிதச் சுட்டெண் 1995/1996இன் 28.8 சதவீதத்திலிருந்து 2019ஆம் ஆண்டு அளவீட்டுச் சுற்றில் 3.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது. 2012/2013ஆண்டுகளின் வீட்டுத்துறையினரின் வருமானம் மற்றும் செலவின அளவீட்டு தரவுகளைப் பயன்படுத்தி உத்தியோகப்பூர்வ வறுமைக் கோட்டின் அண்மைய இற்றைப்படுத்தலின் மூலம், வறுமையின் வீழ்ச்சிப்போக்கு ஒத்ததாக இருந்தபோதிலும், 2019இல் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடித்தொகையின் பங்கு 14.3 சதவீதமாகக் காணப்பட்டது. இதற்கமைய, இற்றைப்படுத்தப்பட்ட வறுமைக் கோட்டின்படி, ஏறத்தாழ 3.04 மில்லியன் தனிநபர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். இது, 2002இல் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்வதாக முன்னர் மதிப்பிடப்பட்ட மக்களின் எண்ணிக்கையை விடவும் ஏறத்தாழ 4.4 மடங்குகள் அதிகமாகக் காணப்படுகின்றது. 2019ஆம் ஆண்டின் வீட்டுத்துறையினரின் வருமானம் மற்றும் செலவின அளவீட்டின் அடிப்படையிலான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பிந்திய வறுமைத் தரவானது அண்ணளவாக ஆறு இலங்கையர்களில் ஒருவர் பலவடிவங்களில் ஏழ்மையாகவுள்ளதாகவும் நிறையேற்றப்பட்ட குறிகாட்டிகளின்படி 42 சதவீதமானோர் வறுமையை அநுபவிப்பதாகவும் வெளிப்படுத்துகின்றது. அதற்கிணங்க, தேசிய பல்பரிமாண தலைக்குரிய வறுமை விகிதங்களானது நகரப் பிரதேசங்களில் 16.6 சதவீதமாகவும் தோட்டப் பிரதேசங்களில் 51.3 சதவீதமாகவும் ஒப்பீட்டளவில் உயர்வாகக் காணப்பட்டன. பெருந்தோட்டத்துறையிலுள்ள மக்கள் வறுமையின் உச்ச மட்டத்தினை அநுபவித்தனர். மாவட்டங்களுக்கிடையில், பல்பரிமாண வறுமையின் ஆகக்குறைந்த குறிகாட்டிகள் கொழும்பிலும் (3.5 சதவீதம்) கம்பஹாவிலும் (5.1 சதவீதம்) காணப்பட்ட அதேவேளையில், நுவரெலியாவில் (44.2 சதவீதம்)ஆக உயர்வாகக் காணப்பட்டது.

வரைபடம் 3.16
வறுமைப் போக்குகள்



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மாவட்டங்களிடையே கணிசமானளவான ஏற்றத்தாழ்வுகள் நிலவியபோதிலும், நகரப் பிரதேசங்களில் பொதுவாக நிலவுகின்ற உயரிய சனத்தொகை அடர்த்தியின் காரணமாக கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வாழும் பலவகைகளிலும் ஏழ்மையாகவுள்ள மக்களின் அளவு உயர்ந்தளவில் காணப்படுகின்றது. கொவிட் -19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முன்னரும் கூட குடித்தொகையின் கணிசமான பகுதியினர் வறுமைக்குட்பட்டிருப்பதை இது எடுத்துகாட்டுகின்றது. நோய்த்தொற்று நீடிப்பதாலும், அது ஏற்படுத்திய இடையூறுகளாலும், வறுமையின் விளிம்பில் இருக்கும் குடித்தொகையில் "புதிய ஏழ்மைப்" பிரிவொன்று சமீபத்திய ஆண்டுகளில் வெளிப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. வரையறுக்கப்பட்ட இறை இடைவெளி மற்றும் சவால்மிக்க

வரைபடம் 3.17
மாவட்ட ரீதியிலான பல்பரிமாண
வறுமை மட்டத்தின் விகிதம் - 2019



பொருளாதார நிலைப்பாடுகள் காணப்பட்டப்போதிலும், மோசமான வறுமைப் பெறுபேறுகள் மற்றும் சமமின்மை சாத்தியப்பாட்டிற்கான உரிய கரிசனையுடன் அரசாங்கமும் மத்திய வங்கியும் முன்னெப்பொழுதுமில்லாத இறை மற்றும் நாணய ஊக்குவிப்புப் பொதிகளினூடாக சனத்தொகையில் பாதிக்கப்படக்கூடிய பிரிவு தொடர்பாக நோய்பரவலின் தீவிரமான தாக்கங்களை தணிப்பது குறித்து தொடர்ந்தும் அவதானம் செலுத்தின. இத்தகைய வழிமுறைகள் சனத்தொகையின் நிதியியல் மற்றும் ஊட்டச்சத்து நிலையின் மீது நோய்ப்பரவலின் தாக்கத்தினை ஓரளவிற்கு குறைத்திருப்பினும், சுகாதாரம் மற்றும் கல்வி உட்கட்டமைப்பு அத்துடன் வீட்டுத்துறையினாரின் சொத்துத்தளம் என்பவற்றுக்கான அணுகல் வசதி என்பவற்றுடன் தொடர்புடைய அத்தகைய நோய்பரவல் நிலைமைக்கு முன்னரான ஏனைய ஏற்றத்தாழ்வுகள் வீட்டுத்துறையினரின் தற்போதைய மற்றும் எதிர்கால உற்பத்தித்திறன் இயலளவில் தடையை ஏற்படுத்தியிருக்கலாம். கொவிட்-19 நோய்ப்பரவலினால் நீடிக்கின்ற தாக்கங்களினூடாக வீட்டுத்துறையினரின் ஏதேனும் வடுக்களை தடுப்பதற்கு பயனளிக்கத்தக்கதும் இலக்கிடப்பட்டதுமான கொள்கை முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கமானது முன்னோக்கிச் செல்லுதல் வேண்டுமென்பதுடன், வறுமையுடன் தொடர்புடைய அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் அண்மைய தரவுத்தொகுப்புக்கள் உரிய நேரத்தில் தொடர்புடைய நிறுவனங்களினால் கிடைக்கப்பெறச்செய்தல் இன்றியமையாததாகும அரசாங்கமானது கொவிட்-19 நோய்பரவலிருந்து தோற்றம்பெறுகின்ற வாழ்வாதார இழப்புக்களின் நிதியியல் சுமையினை ஒழிப்பதற்கான நோக்குடன் சனத்தொகையில் பாதிப்படையக்கூடிய பிரிவினரை இலக்காகக்கொண்டு பல்வேறு சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளை முன்னெடுத்தது. அரசாங்கமானது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் கொவிட்-19 நோய்ப்பரவலின் விகிதாசாரமற்ற தாக்கத்திற்கான உரிய கரிசனையுடன் சமூகத்தில் தேவைப்பாடுடைய பிரிவினருக்கு தற்போதுள்ள உதவி நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்துவதை தொடர்ந்தது. அதற்கிணங்க, அரசாங்கம் நோய்ப்பரவலின் மூன்றாம் அலைக் காலப்பகுதியில், 2021ஆம் ஆண்டின் ஏப்பிறல் மற்றும் யூன் மாதக் காலப்பகுதிகளில் இரண்டு சுற்றுக்களில் பாதிக்கப்படக்கூடிய வீட்டுத்துறையினருக்கு ரூ.5,000 உதவுத்தொகையினை வழங்கியது. அவ்வகையில், 2021 ஏப்பிறலில் 2.8 மில்லியன் தகுதியுடைய வீட்டுத்துறையினருக்கிடையில் ரூ.14.1 பில்லியன் தொகையளவில் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து 2021 யூனில் இரண்டாம் சுற்றில் 1.7 மில்லியன் குடுப்பங்களுக்கிடையில் ரூ.8.2 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. சமூர்த்தி பயனாளிகள், குறை-வருமான மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள், வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் உள்ளடங்கலாக பல வீட்டுத்துறையினர் இந்நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பயனடைந்தனர். இதற்கு மேலதிகமாக, 2021 ஓகத்திலிருந்து நடைமுறைக்குவரும் வகையில், தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ள ஆனால் அரசாங்கத்தின் தற்போதுள்ள எந்தவொரு உதவுத்தொகை நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தும் உதவியினைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களை இலக்குவைத்து அரசாங்கமானது குடும்பமொன்றிற்கு ரூ.2,000 உதவுத்தொகையினையும் வழங்கியது. அதற்கிணங்க, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொத்தமாக ரூ.12.0 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

நடைமுறையிலுள்ள அனைத்து பாதுகாப்புவலை நிகழ்ச்சித்திட்டங்களும் குடித்தொகையின் பாதிக்கப்படக்கூடிய பகுதியினரின் பொருளாதார நலநோன்புகையை பாதுகாப்பதற்கு பாடுபட்டமையின் காரணமாக அரசாங்கமானது அவற்றை ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு உறுதி பூண்டது. ஆண்டுகாலப்பகுதியில், சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களமானது நீடிக்கின்ற சமூர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.51.6 பில்லியன் தொகையை 1.8 மில்லியன் பயனாளிக் குடும்பங்களிடையே பகிர்ந்தளித்தது. சமூர்த்தித் திணைக்களமானது வீட்டுத்துறையினர் வறுமையிலிருந்து தாமாகவே வெளியேறுவதற்கு இயலச்செய்கின்ற "பாதுகாப்பு இணைப்புக்களை" உருவாக்கின்ற நோக்குடன் வாழ்வாதாரம், சமூகம் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்கொண்டது.

அட்டவணை 3.14
பிரதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் - நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும்

ஆண்டு	திவிநெகும / சமுர்த்தி மானிய நிகழ்ச்சித்திட்டம்		சத்துணவு முற்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் (அ)		உலர் உணவு நிகழ்ச்சித்திட்டம்
	குடும்பங்கள் (எண்ணிக்கை) (அ)	பெறுமதி (ரூ.மில்லியன்) (இ)	பயனாளர்கள் (எண்ணிக்கை) (ஆ)	பெறுமதி (ரூ.மில்லியன்)	பெறுமதி (ரூ.மில்லியன்)
2017	1,388,242	39,707	372,407	5,408	84
2018	1,384,021	39,239	329,047	5,490	58
2019	1,800,182	44,660	300,246	5,279	105
2020	1,770,086	52,434	238,034	4,761	வி.கி.
2021	1,760,485	55,400	250,848	5,248	வி.கி.

(அ) கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கானது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(இ) மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக

மூலங்கள் : சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு
நிதி அமைச்சு

3

அரசாங்கமானது முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொண்டும் தேசிய பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலையில் உணவுகளுக்குப் பதிலாக "வீட்டிலிருந்து எடுத்துச்செல்லுங்கள்" நிகழ்ச்சித்திட்டத்தை முன்வைத்த அதேவேளையில், இளவயது தாய்மார்களுக்கு ரூ.20,000.ஸ்ரீ ஊட்டச்சத்து உதவுத்தொகையை வழங்குவதையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வழிமுறைகள், நோய்ப்பரவலின் காரணமாக தேவையுடைய வீட்டுத்துறையினரால் முகங்கொடுக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியில் இளவயது மாணவர்களினதும் புதிய தாய்மார்களினதும் ஊட்டச்சத்து தரத்தினை பேணுவதில் முக்கிய பங்கு வகிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன.விகிதசமமற்ற உயர்வு மற்றும் வறியவர்கள் மீதான கொவிட்-19 நோய்த்தொற்றின் மிக விரைவானத் தாக்கம் என்பவற்றை கருத்திற்கொண்டு, 2022இன் வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு, 2022 பெப்புருவரியிலிருந்து சமுர்த்தி உதவுத்தொகையை பயனாளிக் குடும்பமொன்றிற்கு அண்ணளவாக 28 சதவீதமளவில் அதிகரிப்பதற்கான தீர்மானத்தினால் மேலும் அதிகரிக்கப்பட்டது. அதற்கிணங்க, குடும்பமொன்றிற்கான ரூ.3,500, ரூ.2,500 மற்றும் ரூ.1,500 குடும்ப அலகு உதவுத்தொகைகள் குடும்பமொன்றிற்கு முறையே ரூ.4,500, ரூ.3,200 மற்றும் ரூ.1,900 ஆக அதிகரிக்கப்பட்டன.

பல்வேறு பாதுகாப்பு வலைகளின் பரவலாக்கமானது இலங்கைக்கு வறுமை ஒழிப்பில் கணிசமானளவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஆதரவளித்து சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் மீதான கொவிட்-19 நோய்ப்பரவலின் தாக்கத்தினை தணிக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தில் கருத்திற்கொள்ளப்படாத புதிய முன்னெடுப்புகளின் அத்தகைய வழிமுறைகளினதும் அபிவிருத்திகளினதும் செயற்றிறனான இலக்கிடலானது, வினைத்திறனையும் நீடித்துநிலைத்துநிற்கும் பெறுபேறுகளையும் உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாதவையாகும். அண்மைய ஆண்டுகளில், சமுர்த்தி போன்ற உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் மோசமான இலக்கிடலின் காரணமாக வறுமை ஒழிப்பில் குறைவான செயற்றிறனைக் கொண்டுள்ளன என்ற கரிசனைகள் நிலவியிருந்தன. உண்மையாகவே பாதிக்கப்படக்கூடிய குடித்தொகையை இனங்காண்பதற்கு சமூக உதவிப் பெறுநர்களின் பட்டியலை மீளாய்வு செய்தல், வறியவர்களுக்கான பொருளாதார வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மற்றும் நியாயமான கால இடைவெளிக்குள் சமூக உதவி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து காத்திரமான வெளியேறல் பொறிமுறையொன்றின் உருவாக்கம் என்பன சமூக ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட இலக்கிடலுக்கு முக்கியமானதாகும். இது தொடர்பாக, அத்தகைய தலையீடுகளின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கு கிரமமாக இற்றைப்படுத்தப்பட்ட சமூக பதிவகமொன்றினை நிறுவுவதை துரிதப்படுத்துவது கட்டாயமானதாகும். அதேவேளை, வயதுமுதிர்ந்த சமூகத்தை நோக்கிய இலங்கையின் துரிதமான குடியியல் மாற்றமானது ஓய்வூதிய நன்மைத் திட்டங்களின் குறிப்பாக அரசாங்கத்தின் ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியத் திட்டங்கள் போன்ற நடைமுறையிலிருக்கின்ற சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அப்பாலுள்ள முறைசாரா துறைகளின் தொழிலாளர்களுக்கான முக்கியத்துவத்தினை சுட்டிக்காட்டுகின்றன. தற்போது முறைசார் ஓய்வூதிய திட்டத்திற்குள் குடித்தொகையில் அண்ணளவாக 30 சதவீதமானவர்கள் மாத்திரம் உள்ளீர்க்கப்பட்டிருப்பினும், அரசாங்கத்தின் தற்போதைய ஓய்வூதிய கட்டமைப்பானது சுருங்கிவருகின்ற இறை இடைவெளிக்கு மத்தியில் அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தின் மீது அதிகரித்துவருகின்ற இறைச் சுமையாக மாறிவருகின்றது. ஆகவே, எதிர்வரும் தசாப்தங்களில் அனைவருக்கும் பாதுகாப்பான ஓய்வூதியத்தை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பாக இலங்கையர்களின் அதிகரித்துவரும் வாழ்க்கை எதிர்பார்க்கைகளையும் அவர்களது

வளர்ந்துவரும் தேவைப்பாடுகளையும் கருத்திற்கொண்டு தேசியளவிலான பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் அறிமுகத்தினூடாக நாட்டினுடைய சமூகப் பாதுகாப்புக் கட்டமைப்பினை விரிவுப்படுத்துதல் இன்றியமையாததாகும்.

சுற்றாடல்

சுற்றாடல் அமைச்சானது நாட்டினுடைய இயற்கை வளங்களின் பாதுகாப்புடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தலையும் கொள்கைக் கட்டமைப்பினையும் வலுப்படுத்துவதுடன் தொடர்புடைய பல்வேறு முன்னெடுப்புகளில் ஈடுபட்டிருந்தது. சுற்றாடல் பிரச்சினைகளை தணிப்பதற்கும் நீடித்து நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும் தூண்டுதலளிக்கின்ற கொள்கைச் சூழலினை உருவாக்குவதன் முக்கிய படிமுறைகள் தேசிய சூழல் கொள்கை - 2022 மற்றும் தேசிய சூழல் செயற்றிட்டம் -2021-2030 என்பவற்றின் முன்னேற்பாடுகளாகும். உயிரினப்பல்வகைப்படுத்தலின் செயற்பாடுகளான சுற்றாடல்சார் உணர்திறன் பகுதிகளுடன் தொடர்புடைய அவதானத்துடனான தலையீடுகளை வழங்கும் நோக்குடன், இலங்கையில் சுற்றாடல் உணர்திறன் பகுதிகள் மீதான தேசியக் கொள்கை அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக 2021 நவம்பரில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது, 2012இல் உருவாக்கப்பட்ட இலங்கையின் தேசிய காலநிலை கொள்கையும் காலநிலை மாற்றத் துறையின் அண்மைய அபிவிருத்திகளை உள்ளடக்குவதற்கு இற்றைப்படுத்தப்பட்டுவருகின்றன. ஆண்டு காலப்பகுதியில், பல ஆர்வலர்களின் ஒத்துழைப்புக்களினூடாக நதிப் பகுதிகள் மாசடைவதைத் குறைப்பதற்கு சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நாடளாவிய ரீதியிலான உஸ்ம தென துரு தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல சுற்றாடல்சார் நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. 2021 மார்ச்சு 31இலிருந்து ஒருமுறை பயன்படுத்துகின்ற பிளாத்திக் உற்பத்திகளை தடைசெய்வதற்கான ஒழுங்குவிதிகளை வர்த்தமானப்படுத்தி அமுல்ப்படுத்தல் மற்றும் பிளாத்திக் வகை குறியீட்டு முறைமையின் அறிமுகம் என்பன ஆண்டுகாலப்பகுதியில் மேற்கொள்ப்பட்ட பராட்டத்தக்க முக்கிய முன்னெடுப்புக்களாகும். இலங்கையின் கழிவிலிருந்து சக்தி உற்பத்தி செய்யும் முதலாவது ஆலை கெரவலப்பிட்டியவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமையானது ஆண்டுகாலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முக்கிய மைல்கல்லாகுமென்பதுடன் இதன்மூலம் 10 மெகாவாற்று உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உக்கலடையக்கூடிய கழிவினைப் பயன்படுத்தி உயிரியல் வாயுவிலிருந்து மின்சாரத்தை உருவாக்குவதற்காக கொடவிலவில் மற்றுமொரு ஆலையின் கட்டுமானமும் முன்னெடுக்கப்படுகின்றது. இது தேசிய தொகுதிக்கு 400 கிலோவாற்களை சேர்க்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தகைய முன்னெடுப்புக்கள் இலங்கையின் அதிகரித்துவருகின்ற கழிவு முகாமைத்துவப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இன்றியமையாதவையாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையமும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமும் முன்கூட்டிய எச்சரிக்கைகளை வழங்குவதற்கும் நாட்டின் அனர்த்தத் தயார்நிலை மற்றும் அனர்த்தப் பதிலிறுப்புக்களை மேம்படுத்துவதற்குமான பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. ஆண்டு காலப்பகுதியில், அனர்த்த முகாமைத்துவ நிலையமானது பொதுமக்கள், தொடர்புடைய அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் மீன்பிடிச் சமூகம் ஆகியோர் முன்கூட்டிய தயார்நிலைக்கு வசதியளிப்பதனையும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளைத் தணிப்பதனையும் இயலச்செய்யும் பொருட்டு 338 விசேட வானிலை எச்சரிக்கைகளை விடுத்தது. எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பலின் எண்ணெய்க்கசிவு, தென்மேற்குப் பருவக்காற்று வெள்ளப்பெருக்குகள் மற்றும் இரண்டாவது பருவக்காற்றுக்கிடையிலான வெள்ளப்பெருக்குகள் என்பவற்றுடன் தொடர்புடைய சார்டரினைச் செயற்படுத்துவதற்கு மேலதிகமாக, அனர்த்த முகாமைத்துவ நிலையமானது எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பலின் எண்ணெய்க்கசிவை மதிப்பிடுவதற்கான தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்துடன் இணைந்தும் பணிபுரிந்தது. நாடளாவிய ரீதியிலான பாடசாலைகளின் அனர்த்த இடர்நேர்வு மதிப்பீடொன்றுடன் தொடர்புடைய தெரிவுசெய்யப்பட்ட நகரங்களுக்கும் பணிக்குமான பல்வகையான தீங்கு இடர்நேர்வுத் தோற்றப்பாட்டின் தயாரிப்பும் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. 2021இல், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது குறிப்பாக இரத்தினபுரி, கேகாலை, களுத்தறை, கண்டி மற்றும் குருநாகல் போன்ற மாவட்டங்களைக் கண்காணித்தல், வெளியேற்றத்திற்கான முன்கூட்டிய எச்சரிக்கைகளைப் பரப்புதல் மற்றும் மண்சரிவுகள் மற்றும் நிலச்சரிவுகள் தொடர்பில் சரியானதும் பாதுகாப்பானதுமான தணிப்பு வழிமுறைகளை நடைமுறைத்தல் போன்ற செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டது. ஆண்டு காலப்பகுதியில், அவசியமான விசாரணைகளையும் பகுப்பாய்வுகளையும் நடாத்திய பின்னர் 6,763 நிலச்சரிவு இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கைகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது. மேலும், தணிப்பு வழிமுறைகள் செயற்றிட்டத்தின் மூலம் நிலச்சரிவுப் பாதிப்பைக் குறைத்தல் என்பதன் கீழ், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது 24 தளங்களில் தணிப்புப் பணிகளை ஆரம்பித்ததுடன் ஏனைய 32 தளங்களில் கொள்வனவுச் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டன. நிலச்சரிவுகளில் பாதிப்படையக்கூடிய தன்மையினைக் கொண்டனவாக அடையாளங்காணப்பட்ட 147 தளங்களுடன் தொடர்புடைய அனைத்துத் தணிப்புப் பணிகளும் 2025 ஆண்டளவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

4

விலைகளும் கூலிகளும்

4.1 பொதுநோக்கு

அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்களினால் அளவிடப்பட்டவாறான பொது விலை மட்டம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரித்துச் செல்லும் போக்கொன்றினைத் தொடர்ந்ததுடன், ஆண்டின் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்க உயர்வினை நோக்கி நகர்ந்தது. உணவு மற்றும் உணவல்லாப் பொருட்கள் இரண்டினதும் உலகளாவிய பண்ட விலை உயர்வுகள், உயர்ந்த சரக்குக் கட்டணங்கள், உள்நாட்டு வழங்கல்பக்கத் தடைகள், பல்வேறுபட்ட விலைத் திருத்தங்களிலிருந்து தோன்றிய நேரடியான மற்றும் நேரடியற்ற தாக்கங்கள் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்று வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டமையால் தூண்டப்பட்ட கேள்வி அழுத்தம் என்பன உள்நாட்டு விலைகளின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. உணவு வகையில், பொது விலை மட்டத்தில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கான முக்கிய பங்களிப்பு தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளிலிருந்து கிடைத்தது. மேலும், தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2021இன் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு, சேதன வேளாண்மை நடைமுறைகளுக்கு மாறியதன் காரணமாக ஏற்பட்ட அறுவடை வீழ்ச்சி மற்றும் உலகளாவிய நோய்த்தொற்று கட்டுப்படுத்தப்பட்டமையுடன் பொருளாதார நிலைமைகள் வழமைக்குத் திரும்பியமையின் காரணமாக உயர்ந்த பண்டிகைக் காலக் கேள்வி என்பன முக்கிய ஏதுக்களாக அமைந்தன. மேலும், தளம்பல் உணவு வகை நீங்கலாக, மற்றைய உணவுப் பொருட்களின் விலைகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தன. உணவல்லா வகையிலுள்ள பண்டங்களின் விலைகள் இதே காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்ததுடன் ஆண்டின் இறுதிப்பகுதியில் உயர்ந்த வேகத்தில் அதிகரித்த போதும் உணவு வகையுடன் ஒப்பிடுகையில் இது பொது விலை மட்டத்தில் குறைந்தளவு தாக்கத்தினையே உருவாக்கியது. இவ்வபிவிருத்திகளை பிரதிபலிக்கின்ற விதத்தில், ஒட்டுமொத்த அதிகரிக்கும் போக்கை தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் சனவரியின் 138.7 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2021 திசெம்பரில் 154.7 சுட்டெண் புள்ளிகளுக்கும் சனவரியில் 142.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், 2021 திசெம்பரில் 161.0 சுட்டெண் புள்ளிகளுக்கும் அதிகரித்தது. கூலிகளின் நியதிகளில், முறைசார் மற்றும் முறைசாரா தனியார் துறையின் பெயரளவு மற்றும் உண்மைக் கூலிகள் இரண்டும் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் அதிகரித்தன. குறைந்தபட்ச கூலிகளுக்கு செய்யப்பட்ட திருத்தங்களின் காரணமாக முறைசார் தனியார் துறைக்கான கூலிகள் அதிகரித்த வேளையில் முறைசாராத் தனியார் துறைக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, கொவிட்-19 தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமை காரணமாக அதிகரித்த தொழிலாளருக்கான கேள்வி மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை என்பன காரணங்களாக அமைந்தன. அரச துறை நியதிகளில், 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் மாற்றமின்றிக் காணப்பட்ட வேளையில், உண்மை கூலி வீதச் சுட்டெண் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் வீழ்ச்சியடைந்தது.

4.2 விலைகள்

பொது விலை மட்டத்தில் அசைவுகள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்[1] ஆகிய இரண்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களினாலும் அளவிடப்பட்டவாறான பொது விலை மட்டம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரித்துச்செல்லும் போக்கினைக் கொண்டிருந்தமைக்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் காணப்பட்ட அதிகரிப்புக்களே பெரும்பாலும் காரணமாக அமைந்தன. இவ்வாண்டுப்பகுதியில் உணவு வகையின் பொருட்களின் விலைகள் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, உணவு வகையுடன் ஒப்பிடுகையில் பொது விலை மட்டத்தின் மீது குறைந்த தாக்கத்தினை உருவாக்கிய உணவல்லா வகையின் பொருட்களின் விலைகளும் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. இதற்கமைய, பொது விலை மட்டம், பெரும்போக காலத்தில் சாதகமான வழங்கல்பக்க காரணிகளின் காரணமாக உணவு வகைகள் வீழ்ச்சியடைந்த மாச்சு மாதம் தவிர, 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ச்சியான அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. மேலும், உலகளாவிய பண்ட விலை உயர்வுகள், உயர்ந்த சரக்குக் கட்டணங்கள், உற்பத்திப் பற்றாக்குறைகள் மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்வதில் காணப்பட்ட தடைகள் என்பன பொது விலை மட்டத்தின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன், உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் பல்வேறுபட்ட மேல்நோக்கிய விலைத் திருத்தங்களிலிருந்து தோன்றிய மறைமுகமான தாக்கங்கள் உள்ளடங்கலாக ஆண்டின் இறுதிப்பகுதியில் பொது விலை மட்டங்கள் கணிசமானளவு வேகத்தில் அதிகரிப்பதற்கு நிர்ப்பந்தித்தன. நிரம்பல் பற்றாகுறையைக் கொண்ட பண்டங்களினதும் பணிகளினதும் விலைகளின் அதிகரிப்பிற்க்கு வங்கித்துறையினால் பற்றாகுறை நிதியிடலின் காரணமாக அதிகரித்த பண வருமானங்களும் பங்களித்தன. மேலும், கோவிட்-19 தொடர்பான குறைந்த கேள்வி ஆண்டின் இறுதியில் குறைந்துள்ளதுடன் கேள்வி அழுத்தம் பொது விலை மட்டத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.

தளம்பலடையும் உணவு[2] வகையிலுள்ள பொருட்களின் விலைகள் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சேர்ந்து 2021ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகரித்தன. மேலும், சேதன வளமாக்கியின் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான கிடைப்பனவு, சேதன பயிர்ச்செய்கை தொடர்பான சரியான வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் இல்லாமை, ஏற்கனவே இருந்த இரசாயன வளமாக்கி இருப்புக்களின் விலைகள் உயர்வடைந்தமை, சிதைவடைந்து போன பயிர்ச்செய்கை மற்றும் குறைந்த விளைச்சல் போன்ற சேதனப் பயிர்ச்செய்கை நடைமுறைகளுக்கு முழுமையாக மாறிக்கொள்ள முயற்சித்தமையுடன் தொடர்புபட்ட பிரச்சனைகள் தளம்பலடையும் உணவு விலைகளின் மீது கணிசமான மேல்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தின. 2021 சனவரி மற்றும் பெப்புருவரியில் தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமைக்கு அரிசி, தேங்காய், பச்சை மிளகாய் மற்றும் காய்கறிகளில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். எனினும், தளம்பலடையும் உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள் 2021 மாச்சிலும் ஏப்பிறலிலும் வீழ்ச்சியடைந்தமைக்கு தேங்காய், காய்கறிகள், வெங்காயம், பச்சை மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றின் விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளே காரணமாக அமைந்தன. அவதானிக்கப்பட்ட விலைகளின் சரிவடைந்த போக்கு அதன்பின்னர் மாற்றமடைந்ததுடன் யூன் மாதத்தில் காணப்பட்ட முனைப்பான அதிகரிப்பிற்கு அரிசி, காய்கறிகள் மற்றும் உடன் மீன் என்பனவற்றின் விலைகளில் அவதானிக்கப்பட்ட உயர்வுகள் பங்களித்த வேளையில், 2021 யூலையிலும் அதேபோக்கு தொடர்ந்தும் காணப்பட்டது. தளம்பலடையும் உணவு வகைகளின் போக்கு ஓகத்தில் மாற்றமடைந்தமைக்கு அரிசி, தேங்காய் மற்றும் வெங்காயம் என்பனவற்றில் அவதானிக்கப்பட்ட விலை வீழ்ச்சிகள் காரணமாக அமைந்த வேளையில் அரிசி மற்றும் காய்கறிகளில் காணப்பட்ட விலை வீழ்ச்சிகள் 2021 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. அதன்பின்னர், ஒத்தோபரில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு அரிசி, பழங்கள், பெரிய வெங்காயம் மற்றும் கோழி இறைச்சி என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட

அட்டவணை 4.1
தெரிவுசெய்யப்பட்ட உணவு விடயங்களில் 2021இல் விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகள்

விடயம்	உயர்ந்தபட்ச சில்லறை விலை (ரூ./கி.கி.)	உயர்ந்தபட்ச சில்லறை விலை நடைமுறைக்கு வரும் திகதி
அரிசி		02.09.2021 (அ)
சம்பா	103.00	
நாட்டரிசி	98.00	
குத்தரிசி வெள்ளை	95.00	
குத்தரிசி சிவப்பு	95.00	
வெள்ளைச் சீனி		02.09.2021 (ஆ)
பொதிசெய்யப்படாதது	122.00	
பொதிசெய்யப்பட்டது	125.00	

(அ) உயர்ந்தபட்ச விலை 2021 செத்தெம்பர் 29ஆம் நாளிலிருந்து நீக்கப்பட்டது.
(ஆ) உயர்ந்தபட்ச விலை 2021 நவம்பர் 03ஆம் நாளிலிருந்து நீக்கப்பட்டது.

மூலம் : பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது உத்தியோகபூர்வ நுகர்வோர் விலைச் சுட்டெண்களாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு 2013=100) ஆகிய இரண்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களையும் மாதாந்த அடிப்படையில் தொகுக்கின்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது தேசிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளைக் குறித்துக்காட்டுகின்ற அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது கொழும்பு மாவட்டத்திலுள்ள நகர்ப்புற வீட்டுத்துறையினர் மத்தியில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளை எடுத்துக்காட்டுகின்றது.

2 தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன் மீன், கடலுணவு, தேங்காய், உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கறிச்சரக்கு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

வரைபடம் 4.1
விலைகள் மற்றும் கூலிகளின் அசைவுகள் - 2021



(அ) தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன்மீன் மற்றும் கடலுணவு, தெங்கு, உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சுவையூட்டும் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது.

(ஆ) ஏனைய உணவானது தளம்பலடையும் உணவுப் பண்டங்கள் நீக்கப்பட்ட ஏனைய உணவுப் பண்டங்களை உள்ளடக்குகின்றது.

(இ) குறிப்பிடப்பட்டுள்ள பெயரளவு மற்றும் உண்மையான கூலிகளின் மாற்றம் என்பது 2021 மற்றும் 2020 இன் சராசரிக்கு இடையிலான சதவீத மாற்றத்தைக் குறிக்கிறது.

(ஈ) கூலி நிர்ணய சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்ற முறைசார் தனியார்துறை ஊழியர்களின் கூலிகள்.

அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தன. மேலும், தளம்பலடையும் உணவு வகையில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்கள் 2021 நவெம்பர் மற்றும் திசெம்பரில் தீவிரமடைந்தமைக்கு, அரிசி, காய்கறிகள், பச்சை மிளகாய், கோழி இறைச்சி, மீன், தேங்காய், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்பனவற்றின் விலை அதிகரிப்புக்கள் பண்டிகைக் காலத்தின் காரணமாக நுகர்வோர் கேள்வியுடன் சேர்ந்து இவ்வதிகரிப்பினைத் ஏற்படுத்தின. அரிசி விலைகள் 2020/2021ஆம் ஆண்டின் பெரும்போக அறுவடை சந்தையை அடைந்த மாதங்கள் உட்பட 2021 யூலை வரையான காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தன. எனினும், அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பல்வேறு வழிமுறைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அரிசி விலைகள் 2021 ஓகத்து மற்றும் செத்தெம்பர் மாதங்களில் வீழ்ச்சியடைந்தன. மேலும், ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்ட சம்பா, நாடு, வெள்ளைப்பச்சை அரிசி, சிவப்புப்பச்சை அரிசி என்பனவற்றின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் 2021 செத்தெம்பரிலிருந்து மேல்நோக்கி சீராக்கப்பட்டதெனினும் சந்தையில் அரிசியின் பற்றாக்குறையைத் தவிர்க்கும்பொருட்டு அதே மாதத்திலேயே உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் மீதான அரச வர்த்தமானி அறிவித்தல்

வரைபடம் 4.2
வாராந்த சில்லறை விலைகள் - அரிசி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.3
வாராந்த சில்லறை விலைகள் - மரக்கறிகள்



(அ) போஞ்சி, கரட், கோவா, பீட்ரூட், லீக்ஸ், தக்காளி மற்றும் முள்ளங்கி என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்
(ஆ) கத்தரி, பூசணி, பயற்றங்காய், வெண்டி, மற்றும் புடோல் என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.4
வாராந்த சில்லறை விலைகள் - தேங்காய் (நடுத்தர அளவு)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.5
வாராந்த சில்லறை விலைகள் - மீன் (அ)



(அ) கெலவல்லா, தலபத், பாரை, பலயா, மல்லட், சியர், சுறா, சாளை, உருளை, நெத்திலி, கும்பலவா மற்றும் லின்னா என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இரத்துச்செய்யப்பட்டது. அதேவேளை, வழங்கல்பக்கப் பிரச்சனைகளை சமநிலைப்படுத்துவதற்காக, 2021 நவெம்பர் தொடக்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. எனினும், செத்தெம்பரில் தொடர்பான உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அகற்றப்பட்டதன் காரணமாக அனைத்து வகை உள்நாட்டு அரிசி வகைகளினதும் விலைகள் விரைவான வேகத்தில் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டதுடன் இதற்கு, விசேடமாக கொவிட்-19 பரவல் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியதன் காரணமாக 2021 நவெம்பர் மற்றும் திசெம்பர் காலப்பகுதியில் காணப்பட்ட உயர்ந்த பண்டிகைக்காலக் கேள்வியும் மேலதிகமாகப் பங்களித்தது. காய்கறிகளின் விலைகள் கலப்பான அசைவுகளை எடுத்துக்காட்டியமை மீது கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையினால் தூண்டப்பட்ட வழங்கலுக்கு ஏற்பட்ட இடையூறுகள், முக்கியமான பொருளாதார மையங்களில் வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்பட்டமை மற்றும் மோசமான வானிலை நிலைமைகள் என்பன முக்கியமாக செல்வாக்கைச் செலுத்திய வேளையில் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் விலைகள் உயர்வடைந்தமைக்கு வளமாக்கி மற்றும் பூச்சிக் கொல்லிகளின் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட வழங்கல் பற்றாக்குறைகளும் பண்டிகைக் காலக் கேள்வியும் முக்கிய காரணங்களாக அமைந்தன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் தேங்காய் விலைகள் ஒட்டுமொத்த வீழ்ச்சியைப் பதிவுசெய்தமையானது உயர்ந்தபட்ச சில்லறை விலைகளின் மீதான அரச வர்த்தமானி அறிவித்தலை 2021 யூன் 18ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச்செய்வதற்கு அரசாங்கத்திற்கு இடமளித்தது. எனினும், 2021 ஒத்தோபரிலிருந்து திசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் தேங்காய் விலைகள் அதிகரித்த போக்கொன்றினைக் காட்டியமைக்கு, பருவகாலக் காரணிகள், பண்டிகைக்காலத்தின் போதான உயர்ந்த நுகர்வு மற்றும் உலர் தேங்காயத் துருவலுக்கான அதிகரித்த வெளிப்புறக் கேள்வியின் காரணமாக உள்நாட்டு நுகர்விற்கான தேங்காயின் கிடைப்பனவு குறைவடைந்தமை என்பன காரணங்களாக அமைந்தன. இவ்வாண்டுப்பகுதியில் கோழி இறைச்சியின் விலை கணிசமாக அதிகரித்தமைக்கு சோளம் மற்றும் நுண்ணுயிர்க் கொல்லி போன்ற கோழித் தீனின் உயர்வடைந்த விலைகளிலிருந்து தோன்றிய உற்பத்திச் செலவின் உயர்வே முக்கிய காரணமாக

வரைபடம் 4.6
வாராந்த சில்லறை விலைகள் - உருளைக்கிழங்கு



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.7
வாராந்த சில்லறை விலைகள் - இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அமைந்தது. அதேவேளை, பெரிய மற்றும் சிறிய மீன் வகைகள் இரண்டினதும் விலைகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகரித்தன. மேலும், உருளைக்கிழங்கின் சிறப்புப் பண்டத் தீர்வை பல்வேறு திருத்தங்களுக்குள்ளாகியதுடன் 2021இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் உருளைக்கிழங்கின் விலைகள் பெரும்பாலும் உறுதியான மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் பின்னர் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. சின்ன வெங்காயத்தின் விலைகள் இக்காலப்பகுதியில் பொதுவான வீழ்ச்சியொன்றினை எடுத்துக்காட்டிய வேளையில் பெரிய வெங்காயத்தின் விலைகள் இவ்வாண்டுப்பகுதியில் பெரும்பாலும் உறுதியாகக் காணப்பட்டமைக்கு அரசாங்கத்தின் உரிய நேரத்திலான தலையீடுகள் காரணமாக அமைந்ததெனினும், ஆண்டின் பின்னரைப்பகுதியில் அது தொடர்ச்சியான அதிகரித்த போக்கினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, தளம்பலடைகின்ற உணவு வகையில் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் மீதான கட்டுப்பாட்டு விலைகளை விதிக்கின்ற விதத்தில் விடுக்கப்பட்டிருந்த அரச வர்த்தமானி அறிவித்தல்கள் சந்தையில் காணப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பற்றாக்குறையினைத் தவிர்க்கும் நோக்குடன் 2021 நவெம்பர் 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டன.

தளம்பலடையும் உணவு வகைகள் நீங்கலாக, உணவுப் பொருட்களின் விலைகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தன. இதன்படி, பருப்பின் விலைகள் 2020இல் அவதானிக்கப்பட்ட விலைகளைவிட அதிகமாக விளங்கியதுடன் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தமைக்கு உலகளாவிய சந்தையில் காணப்பட்ட விலை அதிகரிப்புக்களும் உயர்ந்த சரக்குக் கட்டணங்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. பண்டிகைக் காலக் கேள்வியின் காரணமாக ஏப்பிறலில் அதிகரித்த சீனியின் விலைகள் அதன் பின்னர் அதிகரித்து ஓகத்தில் உச்ச மட்டத்தினை அடைந்தமைக்கு சீனி இறக்குமதிகளை மேற்கொள்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தை பெற்றிருக்க வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டமை காரணமாக அமைந்தது. அரசின் தீர்மானமானது நாட்டில் சீனியின் கையிருப்பு ஏற்கனவே போதுமானளவில் இருக்கின்றது என்ற தகவலினை அடிப்படையாகக் கொண்டிருந்த போதும் தனிப்பட்ட வர்த்தகர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான இருப்புக்களை மட்டுமே உள்ளூர் சந்தைகளுக்கு விடுவித்தமையின் காரணமாக மேல்நோக்கிய விலை அழுத்தங்கள் தோன்றின. மேலும் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் உலகளாவிய சீனி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும் உலகளாவிய ரீதியில்

வரைபடம் 4.8
வாராந்த சில்லறை விலைகள் - சீனி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.9
உலகளாவிய பண்ட விலைகள் - சீனி



மூலம் : உலக வங்கி

வரைபடம் 4.10
வாராந்த சில்லறை விலைகள் - பருப்பு



வரைபடம் 4.11
வாராந்த சில்லறை விலைகள் - கோதுமை மா



அதிகரித்த கேள்வியாலும் உயர்வாக விளங்கின. இதன் விளைவாக, சீனியின் விலையினைக் குறைக்கும் நோக்குடன் 2021 செத்தெம்பர் 02ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெள்ளைச் சீனியின் மீது உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டன. எனினும், செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து சீனியின் விலைகளில் காணப்பட்ட அதிகரித்த போக்கினைத் தொடர்ந்து 2021 நவெம்பர் 03ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சீனியின் மீது விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன. அவுத்ரேலியாவிலும் நியுசிலாந்திலும் காணப்பட்ட சாதகமற்ற வானிலை நிலைமைகள் காரணமாக உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டமை, கொவிட்-19 உடன் தொடர்பான கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டமையுடன் சேர்ந்து பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமையின் விளைவாக உலகளாவிய கேள்வி அதிகரித்தமையின் விளைவாக உலகளாவிய பால்மா விலைகள் அதிகரித்தன. இதன் விளைவாக, 2020ஆம் ஆண்டு முழுவதும் மாற்றமின்றிக் காணப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலைகள் 2021 ஒத்தோபரில் மேல்நோக்கிய விலைத் திருத்தங்களுக்கு உட்பட்டமைக்கு உலகளாவிய சந்தையில் காணப்பட்ட விலை அதிகரிப்புக்களும் உயர்ந்த சரக்குக் கட்டணங்களும் கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன. இதனைத்தொடர்ந்து, உள்நாட்டு பால்மாவின் விலைகளும் 2021 ஒத்தோபர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அதிகரிக்கப்பட்டன. அதன் பின்னர், இறக்குமதி செய்யப்பட்ட பால்மா 2021இன் இறுதிப்பகுதியளவில் மற்றொரு மேல்நோக்கிய விலைத் திருத்தத்திற்கு உள்ளானது. அதேவேளை, உள்நாட்டு கருவாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக 2021 ஓகத்து 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கருவாடு மீது கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.100 கொண்ட சிறப்புப்பண்டத் தீர்வையை பேணுவது தொடர்பில் அரச வர்த்தமானி அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது. மேலும், கோதுமை மாவின் விலையும் 2021 ஒத்தோபர் 10ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.10 கொண்ட மேல்நோக்கிய விலைத்திருத்தமொன்றிற்கு உள்ளானது. இதன் பெறுபேறாக, பணிஸ் மற்றும் கேக் போன்ற ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுக்குப் புறம்பாக, 2021 ஒத்தோபர் 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 450 கிறாம் நிறைகொண்ட பாண் ஒன்றின் விலை ரூ.5 இனால் அதிகரித்தது. மேலும், கோதுமை மாவின் மீது மேற்கொள்ளப்பட்ட மேலுமொரு மேல்நோக்கிய விலைத் திருத்தம் காரணமாக 2021 நவெம்பர் 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 450 கிறாம் பாண் ஒன்றின் விலை ரூ.10 இனால் மேல்நோக்கி திருத்தப்பட்டது. பின்னர், பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் அவை தொடர்பான உள்ளீடுகளின் செலவு மற்றும் ஏனைய சந்தை நிலைமைகள் என்பனவற்றினால் தீர்மானிக்கப்படக்கூடிய விலைகளில் விற்பனை

அட்டவணை 4.2
தெரிவுசெய்யப்பட்ட உணவு விடங்களில் 2021இல் விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வை

விடயம்	சிறப்பு பண்டத் தீர்வை (ரூ./கி.கி.)	சிறப்பு பண்டத் தீர்வை நடைமுறைக்கு வரும் திகதி
இறக்குமதி செய்யப்பட்ட அரிசி		
சம்பா	65.00	11.10.2021
	0.25	02.11.2021
நாடு	65.00	11.10.2021
	0.25	02.11.2021
குத்தரிசி வெள்ளை	65.00	11.10.2021
	0.25	02.11.2021
குத்தரிசி சிவப்பு	65.00	11.10.2021
	0.25	02.11.2021
இறக்குமதி செய்யப்பட்ட உருளை கிழங்கு	15.00	12.02.2021
	50.00	27.04.2021
	20.00	01.01.2022
இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம்	0.25	14.01.2021
	40.00	08.09.2021
	10.00	01.01.2022
பருப்பு		
முழுமையானது	0.25	14.01.2021
பாதி	0.25	14.01.2021
சிவப்பு வெங்காயம்	50.00	18.05.2021
நெத்தலி	100.00	12.02.2021
கருவாடு	100.00	12.02.2021

மூலம் : நிதி அமைச்சு

வரைபடம் 4.12

உலகளாவிய பண்ட விலைகள் - மசகு எண்ணெய்



மூலங்கள் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்

வரைபடம் 4.13

உலகளாவிய பண்ட விலைகள் - திரவ பெற்றோலிய வாயு



மூலம் : சவுதி அரம்கோ திரவ பெற்றோலிய வாயு விலைகள்

அட்டவணை 4.3

தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு 2021இல் மேற்கொள்ளப்பட்ட நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள்

விடயம்	அலகு	திருத்தப்பட்ட விலை (ரூபா)	நடைமுறைக்கு வரும் திகதி
பால்மா			
இறக்குமதி செய்யப்பட்டது	400g	480.00	09.10.2021
	400g	540.00	31.12.2021
உள்நாட்டு	400g	470.00	15.10.2021
கோதுமை மா			
பிரிமா லிமிற்ட்	1kg	97.00	10.10.2021
	1kg	114.50	27.11.2021
செரண்டிப்	1kg	97.00	10.10.2021
	1kg	114.50	29.11.2021
திரவ பெற்றோலிய வாயு			
லிற்றோ காஸ் லங்கா லிமிற்றட்	9.6kg	1,150.00	25.07.2021
	12.5kg	2,675.00	10.10.2021
லாவ்ஸ் காஸ் பி.எல்சி	12.5kg	1,856.00	12.08.2021
	12.5kg	2,840.00	10.10.2021
எரிபொருள்			
பெற்றோல் (92 ஒக்டேன்)			
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1l	157.00	12.06.2021
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1l	162.00	22.10.2021
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1l	177.00	21.12.2021
தன்னியக்க டீசல்			
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1l	111.00	12.06.2021
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1l	116.00	22.10.2021
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1l	121.00	21.12.2021
மண்ணெண்ணெய			
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்	1l	77.00	12.06.2021
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்	1l	87.00	21.12.2021

மூலங்கள் : பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

செய்யப்படுவதனை அனுமதிக்கும் நோக்குடன் 2021 திசெம்பர் 21ஆம் நாளிலிருந்து பாண் உள்ளிட்ட அனைத்து வெதுப்பக உற்பத்திகளின் மீதும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலைகள் அகற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டது. வெள்ளைச் சீனி, பருப்பு, கோழி இறைச்சி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், கோதுமை மா, பாசிப்பயறு, கடலை, கருவாடு, சோளம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா ஆகிய பல அத்தியாவசிய பண்டங்களின் மீது கட்டுப்பாட்டு விலைகள் விதிக்கப்படுவது தொடர்பில் விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் 2021 நவெம்பர் 03 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டமை கவனிக்கத்தக்கதொரு விடயமாகும்.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட உயர்ந்த வேகத்துடன் சேர்ந்து தொடர்ச்சியாக அதிகரித்த போதும் உணவு வகைகளுடன் ஒப்பிடுகையில் பொது விலை மட்டத்தின் மீது குறைந்தளவு தாக்கத்தினையே உருவாக்கியிருந்தது. அதிகரித்த கொவிட்-19 தடுப்பூசி வீதங்கள், நோய்த்தொற்றுடன் தொடர்பான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமை என்பனவற்றின் காரணமாக கேள்வி வழங்கலை விஞ்சிக்காணப்பட்டமையின் விளைவாக 2021இல் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் அதிகரித்தன. இது 2020 திசெம்பருக்கும் 2021 இற்குமிடையில் 64.6 சதவீதத்தினால் அதிகரித்த மசகெண்ணெய்யின்[3] இறக்குமதி விலையில் பிரதிபலித்தது. இதன் விளைவாக, 2021இல் பெற்றோல் (92 ஒக்டேன்) ஊர்திகளுக்கான டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பனவற்றின் உள்நாட்டு விலைகள் இரண்டு தடவைகள் அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக பொது விலை மட்டத்தின் மீது மேலதிக மறைமுக விலை அழுத்தமொன்று ஏற்பட்டது. மேலும், உந்து ஊர்திகளின்

3 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் பி.எல்.சி

4

வரைபடம் 4.14
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த % மாற்றத்திற்கான பங்களிப்பு – 2021



(அ மின்சாரம், திரவ பெற்றோலிய வாயு, எரிபொருள், பஸ் கட்டணம் மற்றும் புகையிரத கட்டணம் என்பவற்றை உள்ளடக்கிய உணவல்லா வகையின் நிருவகிக்கப்பட்ட பொருட்கள்
(ஆ) உணவல்லா வகையில் நிருவகிக்கப்பட்ட பொருட்கள் நீங்கலாக

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.15
தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த % மாற்றத்துக்கான பங்களிப்பு – 2021



(அ மின்சாரம், திரவ பெற்றோலிய வாயு, எரிபொருள், பஸ் கட்டணம் மற்றும் புகையிரத கட்டணம் என்பவற்றை உள்ளடக்கிய உணவல்லா வகையின் நிருவகிக்கப்பட்ட பொருட்கள்
(ஆ) உணவல்லா வகையில் நிருவகிக்கப்பட்ட பொருட்கள் நீங்கலாக

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

4

உதிரிப்பாகங்களினது விலைகள், ஊர்திகளின் பழுதுபார்க்கும் செலவு மற்றும் வாடகை ஊர்திக் கட்டணங்கள் என்பன இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. மேலும், உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதி துணை வகையில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் 2021இல் பல தடவைகள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்திருக்கின்றன. இதற்கு, உலகளாவிய திரவப் பெற்றோலிய வாயு விலைகள் உயர்வடைந்தமையின் காரணமாக லிற்றோ காஸ் லிமிடெட் மற்றும் லாவ் காஸ் பிஎல்சி ஆகிய இரண்டும் 2021 ஒத்தோபர் 10ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 12.5 கி.கிறாம் திரவப்பெற்றோலிய வாயு உருளையொன்றின் விலையை கணிசமானளவிற்கு மேல்நோக்கித் திருத்தியமை பகுதியளவில் காரணமாக விளங்கியது. 2020 திசெம்பருக்கும் 2021 திசெம்பருக்கும் இற்குமிடையில் உலகளாவிய சந்தையில் திரவப்பெற்றோலிய வாயுவின்[4] அதாவது புறப்பேன் மற்றும் பியூட்டேன் என்பனவற்றின் விலைகள் முறையே 76.6 சதவீதத்தினாலும் 63 சதவீதத்தினாலும் அதிகரித்தமை கவனிக்கத்தக்கதொரு விடயமாகும். திரவப்பெற்றோலிய வாயு விலைகளின் திருத்தத்திற்குப் புறம்பாக, அதிகரித்த உணவு விலைகளும் தயாரிக்கப்பட்ட உணவின் உள்நாட்டு விலைகளின் மேல்நோக்கிய சீராக்கத்திற்கு முனைப்பான வகிபாகமொன்றினை ஆற்றின. இவ்வாண்டின் பெரும்பாலான பகுதியில் நிலையான மட்டமொன்றில் காணப்பட்ட கல்வி துணைத் துறை 2021 செத்தெம்பரிலிருந்து அதிகரித்தமைக்கு இரண்டாந்தர கல்விக்கான பன்னாட்டு பாடசாலைக் கட்டணங்களிலும் தனியார் வகுப்புக் கட்டணங்களிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். தனியார் மருத்துவ பயிற்சிகளை மேற்கொள்வதற்கான விலைகள் தனியார் வைத்தியசாலை கட்டணங்கள்/ மருத்துவ ஆய்வுகூடக் கட்டணங்கள் மற்றும் மருந்து/ மருந்தாக்கல் உற்பத்திகள் என்பனவற்றுக்கான கொடுப்பனவுகள் எடுத்துக்காட்டிய இடைப்பட்ட திருத்தங்கள் ஏப்பிறலிலிருந்து சுகாதார துணைத் துறையில் தொடர்ச்சியான அதிகரிப்புக்கள் ஏற்பட வழிவகுத்தன. எனினும், 2021 ஒத்தோபரில் வீட்டு வாடகைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பு நோய்த்தொற்றிற்கு முன்னர் அவதானிக்கப்பட்ட போக்குகளுடன் ஒப்பிடுகையில் சிறிதளவாகக் காணப்பட்ட வேளையில் வீட்டுத் துறையின் பேணல் மற்றும் கருவிகளின் செலவு 2021 செத்தெம்பரிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருக்கிறது. அதேவேளை, 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பெரும்பாலும் நிலையான மட்டங்களில் காணப்பட்ட ஆடை மற்றும் காலணிகளின் விலை 2021இல் தொடர்ச்சியாக அதிகரித்ததுடன் ஒத்தோபரின் பின்னர் உயர்ந்த வீதத்தில் அதிகரித்தது.

நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2021 சனவரியில் 138.7 சுட்டெண் புள்ளிகளிலிருந்து திசெம்பரில் 154.7 சுட்டெண் புள்ளிகளிற்கு விரைவாக அதிகரித்தது. 2021 சனவரியிலும் பெப்புருவரியிலும் அவதானிக்கப்பட்ட மாதாந்த அதிகரிப்புக்களுக்கு உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகள் அசைவுற்றமையே உதவியாக அமைந்தது. எனினும், மார்சு மற்றும் ஏப்பிறல் மாத காலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் அவதானிக்கப்பட்ட மாதாந்த வீழ்ச்சிகள் உணவு வகைகளின் விலை அசைவுகளின் மூலமே முழுமையாகத் தூண்டப்பட்டன. அதன் பின்னர், உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலை அசைவுகள் மே மற்றும் யூன் மாதங்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுக்கு பங்களித்ததுடன் உயர்ந்த பங்களிப்பு உணவு வகைகளிலிருந்து பெறப்பட்டது. யூலையில் அவதானிக்கப்பட்ட கொழும்பு

4 சவுதி அராம்கொ திரவ பெற்றோலிய வாயு விலைகள்

நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உணவல்லா வகையில் காணப்பட்ட பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அசைவுகளே முக்கியமாகப் பங்களித்ததெனினும், ஓகத்து மற்றும் செத்தெம்பர் இரண்டு மாதங்களிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகளினால் தூண்டப்பட்டன. இதேபோன்று உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகள் 2021 ஒத்தோபரிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க மாதாந்த அதிகரிப்பிற்கு பங்களித்ததுடன் இதில் கணிசமான பங்கு உணவு வகைகளிலிருந்து உருவாக்கப்பட்டதாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

சனவரியில் 142.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதாந்த வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்த மாச்சு தவிர, தொடர்ச்சியாக அதிகரித்து, 2021 திசெம்பரில் 161.0 சுட்டெண் புள்ளிகளை அடைந்தது. உணவு வகையின் விலைகளில் ஏற்பட்ட அசைவுகள் முக்கியமாக 2021 சனவரி மற்றும் பெப்புருவரி மாதங்களில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தன. 2021 மாச்சில் அதிகரித்துச்செல்லும் போக்கு மாற்றமடைந்தமைக்கு உணவு வகையில் காணப்பட்ட பொருட்களின் விலை வீழ்ச்சிகளே ஒரே காரணமாகும். எனினும், கொவிட்-19 நோய்த்தொற்றின் மூன்றாவது அலை தோற்றம்பெற்ற வேளையான ஏப்பிறலிலிருந்து உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலும் காணப்பட்ட பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக 2021 திசெம்பர் வரை தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரித்ததெனினும், உணவல்லா வகையில் முக்கிய செல்வாக்கினைக் கொண்டிருந்த செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மாதங்கள் நீங்கலாக, கணிசமான பங்களிப்புக்கள் உணவு வகைகளிலிருந்து கிடைத்தது. உணவுப்பொருட்களின் நிரம்பல் பற்றாக்குறை அவற்றின் விலைகளை உயர்த்தி அதேவேளை குறிப்பிட்ட துறைக்குடித்தொகையின் பண வருமான அதிகரிப்பும் இவ்விலைகளின் அதிகரிப்புக்கு பங்களித்தன.

உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படுகின்ற வேளாண்மை, தயாரிப்பு மற்றும் பொதுப் பயன்பாட்டு வசதிகள் துறைகளிலுள்ள பொருட்கள் மற்றும் பணிகளின் உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் பெறப்பட்ட சராசரி விலைகளினால் அளவிடப்பட்டவாறான உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் 2021 நவெம்பரில், 2013இன் நான்காம் காலாண்டிலிருந்து 2018இன் நான்காம் காலாண்டிற்கு மீள் தளப்படுத்தப்பட்டது. இதற்கமைய, உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணின் மீள்தளப்படுத்தப்பட்ட நிறைகள் மற்றும் விலைகளுடன் தொடர்பான காலம் தற்போதைய பொருளாதாரப் போக்குகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் இற்றைப்படுத்தப்பட்டன. மேலும், தயாரிப்பு துணைத் துறையின் புவியியல்சார் பிரதேசங்களின் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்துவதற்கு மேலதிகமாக, பல புதிய பொருட்கள் சேர்க்கப்பட்டதுடன் ஏற்கனவேயுள்ள சில பொருட்கள் வேளாண்மை மற்றும் தயாரிப்பு துணைத் துறைகளிலிருந்து நீக்கப்பட்டன. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (2018 4ம் காலாண்டு = 100) சனவரியின் 116.0 சுட்டெண் புள்ளியிலிருந்து 2021 திசெம்பரில் 133.7 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்து 2021 காலப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. வேளாண்மைத் துணைத் துறையிலுள்ள உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் சனவரியில் 134.0 சுட்டெண் புள்ளிகளைப் புதிவுசெய்து ஒப்பீட்டு ரீதியில் உறுதியான மட்டமொன்றில் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதி ஐந்து மாத காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்து 2021 திசெம்பரில் 161.7 சுட்டெண் புள்ளிகளை அடைந்தது. அதேவேளை, தயாரிப்பு துணைத் துறையிலுள்ள உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் 2021 சனவரியிலும் திசெம்பரிலும் முறையே 113.9 சுட்டெண் புள்ளிகளையும் 131.4 சுட்டெண் புள்ளிகளையும் பதிவுசெய்து இவ்வாண்டுப்பகுதியில் பெரும்பாலும் மாதாந்த அதிகரிப்புக்களை பதிவுசெய்தன. சனவரியில் 100.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த பொதுப் பயன்பாட்டு வசதி துணைத் துறையிலுள்ள உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (மின்வலு, வாயு, நீராவி மற்றும் வளிச்சீராக்கி வழங்கல் மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் விநியோகம்) முதல் நான்கு மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு தளம்பல்களைப் பதிவுசெய்ததுடன் அதன்பின்னர் ஆண்டு முழுவதிலும் உறுதியடைந்து 2021 திசெம்பரில் 102.5 சுட்டெண் புள்ளியை அடைந்தது.

4.3 கூலிகள்

முறைசார் மற்றும் முறைசாரா தனியார் துறைகளிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் அதிகரிப்பொன்றினைக் காட்டிய வேளையில் அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் தேய்வொன்றினைக் காட்டின. பெயரளவு கூலிகளும் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் நியதிகளில் அதிகரிப்பொன்றினைக் காட்டிய வேளையில் அரச துறையிலுள்ள ஊழியர்களுக்கான நியதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் மாற்றமின்றிக் காணப்பட்டன. பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட சுருக்கம் போன்ற கொவிட்-19 நோய்த்தொற்றின் விளைவுகள் 2021இல் கூலிகளின் வளர்ச்சியின் மீது எதிர்க்கணியமான தாக்கமொன்றினை ஏற்படுத்தின. மறுபுறத்தில், கொவிட்-19 நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமை

வரைபடம் 4.16
2021இல் முறைசாரா தனியார் துறை கூலி விலைச் சுட்டெண்ணின் அசைவு (பெயரளவு)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் குறைந்தபட்சக் கூலிகளை அதிகரிப்பதற்கான தீர்மானம் என்பன குறிப்பாக, முறைசார் மற்றும் முறைசாரா தனியார் துறைக் கூலிகளின் மீது நேர்க்கணியமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்தன.

தனியார் துறை கூலிகள்

முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான முறைசாரா தனியார் ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் (2012=100) 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினைத் தொடர்ந்தன. பெயரளவு கூலி வீதச் சுட்டெண் 2021 ஏப்பிறலில் காணப்பட்ட சிறிதளவு வீழ்ச்சி நீங்கலாக, 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மிதமான அதிகரிப்பொன்றினை பதிவுசெய்ததுடன் 2021 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் ஆகிய இரண்டு மாதங்களிலும் கடுமையான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. ஏப்பிறலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு சிறு கைத்தொழில் நடவடிக்கைகளின் கூலிகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சி காரணமாக இருந்தவிடத்து, 2021 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபரில் கடுமையான அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டமைக்கு அனைத்து துணை நடவடிக்கைகளும் அதாவது வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளினால் தூண்டப்பட்டமையே காரணமாகும். இவ்வபிவிருத்திகளின் காரணமாக முறைசாரா தனியார் துறையின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 9.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் வேளாண்மையின் பெயரளவுக் கூலிகள் 6.4 சதவீதத்தினாலும் கைத்தொழில் துறையின் பெயரளவுக் கூலிகள் 9.7 சதவீதத்தினாலும் பணிகள் துறையின் பெயரளவுக் கூலிகள் 10.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன கொவிட்-19 உடன் தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியமை மற்றும் நாடளாவிய நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன முறைசாரா துறையின் கூலிகள் அதிகரிப்பதற்கு வழியமைத்தன. மேலும், தொழில்நிலை எண்ணிக்கையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு கைத்தொழில்கள் இடையேயான தொழிலாளர் பெயர்வுகளின் காரணமாக தொழிலாளர் கேள்விகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் தொடர்பான கூலிகளின் அதிகரிப்பிற்கு ஓரளவு காரணமாக அமைந்தன. மேலும், வாழ்க்கைச் செலவின் உயர்வும் முறைசாராத் தனியார் துறைக் கூலிகள் குறிப்பாக, ஆண்டின் பிற்பகுதியில் அதிகரிப்பதற்கு பங்களித்தன. அதேவேளை, முறைசாரா தனியார் துறையின் உண்மை கூலி வீதச் சுட்டெண் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 2.0 சதவீதத்தினால் அதிகரித்தன.

கூலி நிர்ணய சபையினால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணினால் (1978 திசெம்பர் =100) அளவிடப்பட்டவாறான முறைசார் தனியார் துறையிலுள்ள[5] ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 74.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. இக்கணிசமான அதிகரிப்பிற்கு, தேயிலை மற்றும் இறப்பர் பயிரிடல் மற்றும் தயாரிப்பு வர்த்தகத்திற்கான கூலி தொடர்பான கூலி நிர்ணய சபைகள் ஊடாக 2021 மாச்சு 05 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த கூலி ரூ.1,000 இற்கு அதிகரித்தமை காரணமாக அமைந்தது. மேலும், 2021 ஓகத்து 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2016ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தொழிலாளர் தேசிய குறைந்தபட்ச கூலிகள் சட்டத்திற்கு செய்யப்பட்ட திருத்தங்களின் காரணமாக தனியார் துறையின் குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் ரூ.10,000 இலிருந்து ரூ.12,500 இற்கு அதிகரித்தமை மற்றும் குறைந்தபட்ச நாளாந்தக் கூலி ரூ.400 இலிருந்து ரூ.500 இற்கு அதிகரிக்கப்பட்டமையும் இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தன. இதற்கமைய, முறைசார் தனியார் துறையின் உண்மை கூலி வீதச் சுட்டெண்ணும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் 64.3 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை, கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக வீடுகளில் தங்கியிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட ஊழியர்கள் தொடர்பான நிலைமைகளைப் பொறுத்தவரையில், இறுதியாகச் செலுத்தப்பட்ட அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் அல்லது மாதம் ஒன்றிற்கு ரூ.14,500 இதில் எது ஊழியர்களுக்குச் சாதகமானதோ அதனை ஊழியருக்குச் செலுத்துவது தொடர்பான முத்தரப்பு உடன்படிக்கை சுற்றுலாத் தொழில் துறைக்காக 2021 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டது.

அரச துறை கூலிகள்

அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் (2016 = 100) அளவிடப்பட்டவாறான, அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்

5 கூலி நிர்ணய சபைகளினால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட முறைசார் தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் (1978 திசெம்பர் = 100) தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றன.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன. மறுபுறத்தில், அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 6.4 சதவீதத்தினால் தேய்வடைந்தன. 2022 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதிபர்கள், ஆசிரியர்களின் கூலிகளில் காணப்பட்ட கூலி முரண்பாட்டைத் தீர்க்கும் நோக்கில் இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை என்பனவற்றின் கூலிகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தம் மற்றும் நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்ட ரூ.5,000 கொண்ட சிறப்புப் படி என்பன அரச துறை ஊழியர்களின் கூலிகள் மீதான நியதிகளில் நேர்க்கணியத்தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும்.

5

வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

5.1 பொதுநோக்கு

விடாப்பிடியான உயர்வான படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள், வெளிநாட்டு நாணயப் பெறுமதி மீதான தொடர்ச்சியான அழுத்தத்துடன் கூடிய உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மந்தமான செயலாற்றுகையுடன் ஒன்றிணைந்த நலிவுற்ற சென்மதி நிலுவைகள் என்பவற்றுக்கு மத்தியில் 2021ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுத்துறை உக்கிரமடைந்த பாதிக்கப்படும் தன்மைகளை அனுபவித்தது. ஏற்றுமதிகளில் மீளெழுச்சியும் உறுதியான வளர்ச்சியும் அவதானிக்கப்பட்ட போதிலும், மிகவும் உயர்வான இறக்குமதிச் செலவினம், வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவு விரிவடைவதற்கு வழிவகுத்து வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் மீது எதிர்மறையாக அழுத்தம் செலுத்தியது. தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இடம்பெற்றிருந்தும்கூட, ஏற்றுமதிகளின் வளர்ச்சியினை விஞ்சியிருந்த இறக்குமதிகளின் கணிசமான அதிகரிப்பானது வர்த்தகக் கணக்கில் இவ்விரிவடைதலைத் தூண்டியது. பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புதல் அதேபோன்று உயர்வான சக்தி விலைகள் என்பன காரணமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட துரிதமான மீட்சியின் ஒன்றிணைந்த விளைவின் காரணமாக 2021ஆம் ஆண்டின் பிந்திய பகுதியிலும் 2022ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைதல் மிகவும் தெளிவாகத் தென்பட்டது. கணனிப் பணிகள் துறை ஆரோக்கியமாக வளர்ச்சியடைந்த அதேவேளை சுற்றுலாத் துறையானது ஆண்டின் பிந்திய பகுதியினை நோக்கி மாத்திரம் படிப்படியாக உயர்வடைந்தமைக்கு மத்தியில், 2020 இலும் 2021 இலும் பணிகள் துறைகள் செயலாற்றமும் குறைவடைந்து காணப்பட்டது. 2021 காலப்பகுதியில் வட்டி மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுகள் குறைவாகயிருந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை, 2021இல் சிறிதளவு குறைவடைந்தது. ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் தொழிலாளர் பணவனுப்பல்களில் மெதுவடைதலொன்று அவதானிக்கப்பட்டு, இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகையில் வீழ்ச்சியினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டில் பதிவாகிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.0 சதவீதத்திற்கு கணிசமாக விரிவடைந்தது. வெளிநாட்டு நேரடி முதலீடு வடிவிலான வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைந்து காணப்பட்டமையினால் நிதியியல் கணக்கும் குறைந்த செயலாற்றத்தினைப் பதிவுசெய்த அதேவேளை, பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் சொத்துப்பட்டியல் முதலீடுகள் தொடர்ந்தும் தேறிய வெளிப்பாய்ச்சல்களையே அனுபவித்தன. வெளிநாட்டுக் கணக்குகள் மீதான அழுத்தத்தை அதிகரித்து, அரசாங்கத்திற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு கருத்திட்டக் கடன்களுக்கும் கொடைகளுக்கும் அதேபோன்று இரண்டு வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மத்திய வங்கியானது, பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து புதிய சிறப்பு எடுப்பனவுகள் ஒதுக்கீடு மற்றும் 2021ஆம் ஆண்டில் வங்களாதேச வங்கி, சீன மக்கள் வங்கி அத்துடன் 2022ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இந்திய ரிசேர்வ் வங்கி ஆகியவற்றுடனான பன்னாட்டு பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த ஏற்பாடுகள் வடிவில்

குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொண்டது. வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் குறைவின் காரணமாக வெளிநாட்டுத் துறையில் அதிகரிக்கின்ற சமமின்மைகளை கரிசனையிற் கொண்டு, உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் பன்னாட்டு ஒதுக்குகளை மீள்நிரப்புவதற்கும் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன. ஏற்றுமதி பெறுகைகளை கட்டாயமாக மாற்றுதல் தேவைப்பாட்டினை மத்திய வங்கி விதித்து அதேபோன்று மாற்றல் செய்யப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளினதும் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் ஒரு பாகத்தினை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறும் வங்கிகளுக்குப் பணிப்புரை விடுத்தது. ஆண்டுகாலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிப்பதற்கு மத்திய வங்கியும் அரசாங்கமும் பல வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தின. சந்தையில் நிலவிய வெளிநாட்டு செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறையினைக் கருத்திற் கொண்டு, மத்திய வங்கியானது 2021 மற்றும் 2022இல் தேசிய முன்னுரிமையாக அத்தியாவசியப் பொருட்களின், பிரதானமாக எரிபொருள், திரவப் பெற்றோலிய வாயு மற்றும் நிலக்கரி இறக்குமதிக்கான நிதியளித்தலுக்கு ஆதரவை வழங்கியது. பொருளாதாரத்தினை மீட்டெடுக்கும் செயன்முறைக்கு ஆதரவளிக்கும் பொருட்டு, 2021 காலப்பகுதியிலும் 2022 முந்திய பகுதியிலும் செலாவணி வீதம் பரந்தளவில் நிலையாகப் பேணப்பட்டபோதிலும், மத்திய வங்கியானது 2022 மார்ச்சு தொடக்கத்திலிருந்து செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கங்களுக்கு இடமளித்தது. இருப்பினும், உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் எடுத்துக் காட்டப்பட்ட குறிப்பிடத்தக்களவு அழுத்தங்கள் பாரிய தளம்பல்களை ஏற்படுத்தின. இதன் விளைவாக, 2021ஆம் ஆண்டில் 7.0 வீதத்தினால் தேய்வடைந்த இலங்கை ரூபா 2022 மார்ச்சு இறுதியளவில் 33.0 சதவீதத்தினால் கணிசமாகத் தேய்வடைந்தது. அவசர வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையினை இனங்கண்டு, வெளிநாட்டுத் துறை பாதிக்கப்படும் தன்மைகளை தீர்த்துக்கொள்வதற்கும் பொருளாதாரத்தில் விடாப்பிடியான அத்துடன் நீண்டகாலம் நிலைத்திருக்கின்ற சிக்கல்களைத் தீர்ப்பதில் பரந்த பொருளாதார மறுசீரமைப்புக்களைக் கொண்டு நிறைவுசெய்வதற்கும் அரசாங்கமும் மத்திய வங்கியும் பன்னாட்டு நாணய நிதியத்துடனான ஈடுபாடுகளைத் தொடங்குதல் உள்ளடங்கலாக 2022ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் மேலும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தின.

அட்டவணை 5.1
சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

விபரம்	ஐ.அ.டொ. மில்லியன்		ரூபா. மில்லியன்	
	2020 (அ)	2021 (ஆ)	2020 (அ)	2021 (ஆ)
நடைமுறை கணக்கு (தேறிய)	**-1,187**	**-3,343**	**-238,248**	**-672,960**
வர்த்தக நிலுவை	**-6,008**	**-8,139**	**-1,115,988**	**-1,617,274**
ஏற்றுமதிகள்	10,047	12,499	1,858,927	2,486,943
இறக்குமதிகள்	16,055	20,637	2,974,915	4,104,218
பணிகள் (தேறிய)	**819**	**1,586**	**150,014**	**316,225**
பெறுகைகள்	3,035	2,475	559,615	493,320
கொடுப்பனவுகள்	2,216	889	409,601	177,095
முதலாந்தர வருமானம் (தேறிய)	**-2,205**	**-2,018**	**-423,063**	**-406,605**
பெறுகைகள்	198	116	36,766	22,769
கொடுப்பனவுகள்	2,404	2,134	459,829	429,374
இரண்டாந்தர வருமானம் (தேறிய)	**6,207**	**5,228**	**1,150,789**	**1,034,694**
இரண்டாந்தர வருமானம்: வரவு	7,117	5,498	1,319,377	1,088,388
தொழிலாளர் பணவனுப்பல்கள்	7,104	5,491	1,317,007	1,087,188
அரசாங்க மாற்றல்கள்	13	6	2,371	1,200
இரண்டாந்தர வருமானம்: செலவு	910	270	168,589	53,694
மூலதன கணக்கு (தேறிய)	**28**	**25**	**5,193**	**5,009**
மூலதன கணக்கு : வரவு	51	50	9,472	9,850
மூலதன கணக்கு : செலவு	23	24	4,279	4,841
நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)	**-1,159**	**-3,318**	**-233,056**	**-667,951**
நிதியியல் கணக்கு (தேறிய)	**-394**	**-4,029**	**-77,578**	**-962,044**
நேரடி முதலீடு : சொத்துக்கள்	**15**	**17**	**2,699**	**3,468**
நேரடி முதலீடு : பொறுப்புகள்	**434**	**598**	**80,592**	**118,973**
சொத்துப் பட்டியல் முதலீடு : சொத்துக்கள்	-	-	-	-
சொத்துப் பட்டியல் முதலீடு : பொறுப்புக்கள்	**-2,383**	**-906**	**-441,922**	**-181,568**
பங்கு மூலதனம்	-217	-236	-40,223	-46,914
படுகடன் பிணையங்கள்	-2,166	-670	-401,700	-134,654
நிதியியல் பெறுதிகள்	-	-	-	-
ஏனைய முதலீடு : சொத்துக்கள்	**-136**	**387**	**-27,446**	**77,454**
நாணயம் மற்றும் வைப்புகள்	64	306	11,666	62,761
வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள்	-224	257	-41,647	51,199
ஏனைய பெறத்தக்க கணக்குகள்	24	-176	2,535	-36,506
ஏனைய முதலீடு : பொறுப்புகள்	**231**	**2,216**	**38,567**	**605,734**
நாணயம் மற்றும் வைப்புகள்	-15	4,016	-3,519	810,195
கடன்கள்	174	-1,552	29,568	-309,188
மத்திய வங்கி	-14	-57	-2,689	-11,377
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	75	-2,152	10,390	-429,506
மத்திய அரசாங்கம்	169	664	31,961	132,662
ஏனைய துறைகள்	-56	-7	-10,093	-968
வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள்	185	-428	32,565	-87,756
ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள்	-114	180	-20,046	34,713
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	-	787	-	157,771
ஒதுக்கு சொத்துக்கள்	**-1,992**	**-2,526**	**-375,594**	**-499,826**
நாணய தங்கம்	-667	-212	-123,485	-42,734
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	-5	123	-825	24,635
ப.நா.நி இல் ஒதுக்கு நிலைமை	-	-	-	-
ஏனைய ஒதுக்கு சொத்துக்கள்	-1,319	-2,437	-251,284	-481,726
நாணயம் மற்றும் வைப்புகள்	-177	1,536	-37,326	300,122
பிணையங்கள்	-1,143	-3,976	-214,172	-782,339
தேறிய பிழைகளும் தவறுகளும்	**765**	**-711**	**155,478**	**-294,093**
திரண்ட நிலுவை (இ)	**-2,328**	**-3,967**	**-405,854**	**-745,312**
மொ.உ.உ. இன் சதவீதமாக				
வர்த்தக நிலுவை	-7.4	-9.6		
பொருட்கள் மற்றும் பணிகள்	-6.4	-7.8		
நடைமுறை கணக்கு	-1.5	-4.0		
நடைமுறை மற்றும் மூலதன கணக்கு	-1.4	-3.9		

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.12 பார்க்குக

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.1

வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம்











வரைபடம் 5.2
சென்மதி நிலுவை



மூலம் : இலங்கை மத்திய வங்கி

5.2 நடைமுறைக் கணக்கு நிலுவை

சேவைகள் கணக்கு நிலுவை அதிகரிப்பிற்கும் முதலாந்தர வருமான கணக்குப் பற்றாக்குறை வீழ்ச்சிக்கும் மத்தியில், விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை அத்துடன் இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் விளைவாக 2021ஆம் ஆண்டில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை கணிசமானளவு விரிவடைந்தது. ஏற்றுமதி வருவாய்களுடன் ஒப்பிடும்போது உயர்வான இறக்குமதிச் செலவினம், 2020ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 6.0 பில்லியன் கொண்ட ஒப்பீட்டளவில் குறைவான வர்த்தகப் பற்றாக்குறைக்கு எதிராக 2021ஆம் ஆண்டில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 8.1 பில்லியன் கொண்ட விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையினைத் தோற்றுவித்தது. தொழில் செயன்முறைப்படுத்தல் வெளியிலிருந்து சேவை பெற்றுக்கொள்ளல் (IT/BPO) தொடர்புபட்ட பணிகளின் முன்னிலையிலான தகவல் தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்துத் துறையின் மேம்பாடுகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட உயர்வான உட்பாய்ச்சல்கள் காரணமாக பணிகள் கணக்கு மிகை அதிகரித்தது. ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் சுற்றுலாத்துறையும் மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியது. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளில் மீள்முதலிடப்பட்ட வருவாய்களில் பதிவாகிய அதிகரிப்புக்கு மத்தியிலும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் மீதான பங்கிலாபக் கொடுப்பனவுகளின் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் கணக்கு மீதான் கூப்பன் கொடுப்பனவுகளின் வீழ்ச்சியுடன் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை சுருக்கமடைந்தது. 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் குறிப்பாக ஆண்டுகாலப்பகுதியின் பிந்திய அரைப் பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் அக்காலப்பகுதியில் நிலவிய உத்தியோகபூர்வ வீதத்துடன் ஒப்பிடுகையில் போலிச் சந்தையில் நிலவிய செலாவணி வீதத்தின் குறிப்பிடத்தக்க வேறுபாட்டின் காரணமாக குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தன. இதன்விளைவாக, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 1.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 3.3 பில்லியனுக்கு விரிவடைந்தது. நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறையில் விரிவடைதலையும் வெளியீட்டில் மிதமான விரிவடைதலையும் பிரதிபலித்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டின் 1.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 4.0 சதவீதமாகக் காணப்பட்டது.

அட்டவணை 5.2
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

ஐ.அ.டொலர் மில்லியன்

விடயம்	2020 (அ)			2021 (ஆ)		
	வரவு	செலவு	தேறிய	வரவு	செலவு	தேறிய
பொருட்கள் மற்றும் பணிகள்	13,083	18,271	-5,189	14,974	21,526	-6,552
பொருட்கள்	10,047	16,055	-6,008	12,499	20,637	-8,139
பொது வணிகம்	10,047	16,047	-5,999	12,499	20,636	-8,138
நாணயமல்லா தங்கம்	-	9	-9	-	1	-1
பணிகள்	3,035	2,216	819	2,475	889	1,586
போக்குவரத்து	1,174	1,059	114	608	256	352
கடல்வழி போக்குவரத்து	702	635	67	450	150	300
சரக்குத் தொகுதி	702	635	67	450	150	300
வான்வழி போக்குவரத்து	472	424	48	158	106	52
பயணிகள்	394	354	40	108	89	19
சரக்குத் தொகுதி	78	71	7	50	17	33
பயணம் (இ)	682	449	234	507	239	268
கட்டுமானம்	7	10	-3	10	11	-1
காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும்	39	82	-42	20	37	-17
நிதியியல் பணிகள்	96	220	-125	95	102	-7
தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள்	995	288	706	1,201	171	1,030
தொலைத்தொடர்புகள்	24	32	-8	32	31	2
கணனி பணிகள்	971	257	714	1,168	140	1,028
ஏனைய வியாபார பணிகள்	16	37	-21	16	17	-1
அரச பொருட்கள் மற்றும் பணிகள் வே.இ.உ.இ.	26	70	-44	19	57	-38
முதலாந்தர வருமானம்	198	2,404	-2,205	116	2,134	-2,018
ஊழியர்களுக்கான நட்டஈடு	36	132	-96	30	74	-43
முதலீட்டு வருமானம்	162	2,271	-2,110	86	2,060	-1,975
நேரடி முதலீடு	17	636	-619	16	647	-631
பங்கு இலாபங்கள்	14	445	-431	12	357	-345
மீள் முதலிடப்பட்ட வருவாய்கள்	3	191	-188	4	290	-286
சொத்துப் பட்டியல் முதலீடு	-	943	-943	-	818	-818
பங்கு மூலதனம்	-	35	-35	-	26	-26
வட்டி	-	908	-908	-	793	-793
குறுங்காலம்	-	2	-2	-	...	...
நீண்டகாலம்	-	905	-905	-	793	-793
ஏனைய முதலீடு	56	693	-637	43	595	-552
ஒதுக்கு சொத்துக்கள்	89	-	89	27	-	27
இரண்டாந்தர வருமானம்	7,117	910	6,207	5,498	270	5,228
பொது அரசாங்கம்	13	-	13	6	-	6
தொழிலாளர் பணவனுப்பல்கள்	7,104	910	6,194	5,491	270	5,221
நடைமுறை கணக்கு	20,398	21,585	-1,187	20,587	23,930	-3,343
மூலதன கணக்கு	51	23	28	50	24	25
மூலதன மாற்றல்கள்	51	23	28	50	24	25
பொது அரசாங்கம்	24	-	24	11	-	11
கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை	27	23	4	38	24	14
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு	20,449	21,608	-1,159	20,637	23,955	-3,318

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் என்பன போக்குவரத்துப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன

மூலம்: இலங்கை மத்திய வங்கி

5.2.1 பொருட்களிலான வர்த்தகக் கணக்கு வர்த்தக நிலுவை

கடந்த இரு வருடங்களாக சுருக்கமடைந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை, 2021இல் ஏற்றுமதிகளின் உறுதியான அதிகரிப்பை இறக்குமதிகளின் சடுதியான அதிகரிப்பு விஞ்சியமையினால் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது. வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 6,008 மில்லியனிலிருந்து 2021ஆம் ஆண்டில் 8,139 மில்லியனாக விரிவடைந்தது. வர்த்தக பற்றாக்குறையின் விரிவடைதலுக்கு பங்களிப்புச்செய்து, முதன்மையாக எரிபொருள் விலைகள் உள்ளடங்கலாக உயர்வான பண்ட விலைகள், பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்கு திரும்பியமையினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான அதிகரித்த கேள்வி, தடுப்புமருந்துகள் போன்ற மருத்துவம் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் மீதான உயர்வான செலவினம் அத்துடன் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகள் சிலவற்றின் மீதான தடைகளைத் தளர்த்தல் என்பனவற்றின் காரணமாக இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டின் 7.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 9.6 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம், வர்த்தக மாற்றுவிகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

ஏற்றுமதிச் செயலாற்றம்

வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2019ஆம் ஆண்டில் பதிவாகியிருந்த ஐ.அ.டொலர் 11,940 மில்லியன் கொண்ட முன்னைய அதியுயர்வான ஏற்றுமதி வருவாய்களை விஞ்சி ஆண்டுக்கான உயர்வான ஏற்றுமதி வருவாய்களைப் பதிவுசெய்து, 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 12,499 மில்லியனை எட்டியது. அதற்கமைய, ஏற்றுமதி வருவாய்கள் 2020 காலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 10,047 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 24.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. வலுவான ஏற்றுமதி செயலாற்றத்தினை எடுத்துக்காட்டி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2021ஆம் ஆண்டின் யூனிலிருந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் ஐ.அ.டொலர் 1.0 பில்லியனைத் தொடர்ந்தும் விஞ்சியிருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 1,211 மில்லியன் கொண்ட ஒரு போதுமில்லாத உயர்வான மாதாந்தப் பெறுமதியும் 2021 நவெம்பரில் பதிவாகியது. 2021 காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது அநேகமான ஏற்றுமதி வகைகளிலிருந்தான வருவாய்களில் பரந்த அடிப்படையிலான அதிகரிப்பின் பெறுபேறாகவிருந்தது. ஏற்றுமதியை நோக்காகக்கொண்ட மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு அரசாங்கத்திடமிருந்தும்

வரைபடம் 5.3
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை
(ஐ.அ.டொ. பில்லியன்)



மூலம் : இலங்கைச் சங்கம்
இலங்கை மத்திய வங்கி

மத்திய வங்கியிடமிருந்தும் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்தும் குறிப்பாக, புதிதாக பின்தொடர் நடவடிக்கைகளை நிறுவுதல் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குதல் வாயிலாக கிடைக்கப்பெற்ற விசேட கொள்கைசார்ந்த கவனிப்பு, துரித தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டம் என்பன காரணமாக உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட மீட்சி, அதேபோன்று உலகளாவிய சந்தைகள் வழமைக்கு திரும்பியதுடன் கேள்வி மற்றும் வழங்கல் சந்தைச் சங்கிலிகள் இரண்டினதும் படிப்படியான மீட்சி என்பன இதற்கு முக்கிய தூண்டுகோல்களாக அமைந்தன. ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதி சுட்டெண்களின் அசைவுகளிலிருந்தான சான்றுக்கமைய, ஏற்றுமதி அளவுகளிலான அதிகரிப்பு ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்புக்கு கணிசமாகப் பங்களித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஏற்றுமதி வருவாய்கள் 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 12.4 சதவீதத்திலிருந்து 2021ஆம் ஆண்டில் 14.8 சதவீதத்திற்கு அதிகரித்தன.

கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 9,702

வரைபடம் 5.4
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் - 2021



மூலம் : இலங்கைச் சங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.3
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

வகை	2020		2021 (அ)		பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன்	ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் %	மாற்றத்திற்கான பங்களிப்பு %
	பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்	பங்கு %	பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்	பங்கு %			
வேளாண்மை ஏற்றுமதிகள்	**2,336.2**	**23.3**	**2,729.5**	**21.8**	**393.3**	**16.8**	**16.0**
தேயிலை	1,240.9	12.4	1,324.4	10.6	83.4	6.7	3.4
வாசனைப் பொருட்கள்	333.5	3.3	454.8	3.6	121.3	36.4	4.9
தெங்கு	345.2	3.4	425.2	3.4	80.1	23.2	3.3
கடலுணவு	189.8	1.9	274.1	2.2	84.3	44.4	3.4
சிறு வேளாண்மை உற்பத்திகள்	134.7	1.3	148.8	1.2	14.1	10.5	0.6
இறப்பர்	30.1	0.3	42.2	0.3	12.1	40.1	0.5
தயாரிக்கப்படாத புகையிலை	25.5	0.3	31.6	0.3	6.1	23.9	0.2
மரக்கறிகள்	36.6	0.4	28.5	0.2	-8.0	-22.0	-0.3
கைத்தொழில் ஏற்றுமதிகள்	**7,672.0**	**76.4**	**9,702.0**	**77.6**	**2,030.0**	**26.5**	**82.8**
புடவைகளும் ஆடைகளும்	4,423.1	44.0	5,435.1	43.5	1,012.1	22.9	41.3
இறப்பர் உற்பத்திகள்	786.1	7.8	1,050.4	8.4	264.4	33.6	10.8
உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை	464.0	4.6	586.9	4.7	122.8	26.5	5.0
பெற்றோலிய உற்பத்திகள்	373.6	3.7	506.4	4.1	132.8	35.6	5.4
பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள்	337.5	3.4	500.9	4.0	163.4	48.4	6.7
இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள்	181.5	1.8	276.7	2.2	95.2	52.5	3.9
இரசாயன உற்பத்திகள்	172.7	1.7	223.2	1.8	50.5	29.2	2.1
அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள்	110.9	1.1	156.4	1.3	45.5	41.1	1.9
விலங்குத் தீன்	102.9	1.0	149.4	1.2	46.5	45.2	1.9
போக்குவரத்துச் சாதனங்கள்	71.4	0.7	148.2	1.2	76.8	107.5	3.1
ஏனைய கைத்தொழில் உற்பத்திகள்	648.4	6.5	668.5	5.3	20.1	3.1	0.8
கனிப்பொருள் ஏற்றுமதிகள்	**25.1**	**0.2**	**44.5**	**0.4**	**19.4**	**77.3**	**0.8**
வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்	**14.1**	**0.1**	**22.6**	**0.2**	**8.5**	**60.1**	**0.3**
மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)	**10,047.4**	**100.0**	**12,498.6**	**100.0**	**2,451.2**	**24.4**	**100.0**
ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)	**185.52**		**198.88**				

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) பின்னடைவுகள் மற்றும் பதிவின் பிற காரணிகளுக்காக சரிசெய்யப்பட்டது
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலாவணி வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

மில்லியனுக்கு 26.5 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 78 சதவீதத்திற்கு வகைகூறின. கைத்தொழில் ஏற்றுமதி வகையினுள் வளர்ச்சியானது அனைத்து முக்கிய வகைகளுக்குள்ளும் பரந்த அடிப்படையில் அமைந்திருந்த அதேவேளை புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 5,435 மில்லியனுக்கு 22.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்து மொத்த ஏற்றுமதிகளில் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தது. ஆடைகள் ஏற்றுமதிசெய்யப்படுகின்ற அனைத்து முக்கிய நாடுகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் இவ்வதிகரிப்புக்கு வழிவகுத்தன. திடமான டயர்கள் மற்றும் வீட்டுப்பாவனை இறப்பர் கையுறைகள் மூலம் முன்னிலைப்படுத்தப்பட்டு இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 1 பில்லியன் பதிவினை விஞ்சி, மேம்பட்ட இறப்பர் உற்பத்தித்துறையின் செயலாற்றத்தினை பதிவு செய்வதற்கு துணையளித்து, ஆடைகள் மற்றும் தேயிலை ஏற்றுமதிக்கு அடுத்ததாக இலங்கையின் மூன்றாவது மிகவும் முக்கிய ஏற்றுமதித் துறையாக உருவெடுத்தது. குறைவானளவு விநியோகங்களுக்கு மத்தியில் சராசரி ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பின் காரணமாக நீர்க்கல மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதிகளால் முன்னிலைப்படுத்தப்பட்டு பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை வகையிலுள்ளவற்றின் அதிகரிப்பானது பெறுமதி சேர்க்கப்பட்ட தேங்காய் உற்பத்திகள், விலங்கு அல்லது காய்கறிக் கொழுப்பு மற்றும் எண்ணெய் அத்துடன் ஒடுடைய மீன் வகைத் தயாரிப்புகள் (பிரதானமாக நண்டுகள்) என்பன மூலம் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. எனினும், இலங்கையினால் ஏற்றுமதிசெய்யப்படுகின்ற தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்கான பலவீனமடைந்த கேள்வினைப் பிரதிபலித்து, பிளாத்திக் மற்றும் அதன் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் (பிரதானமாக முகக்கவசங்கள்) மற்றும் பிளாத்திக் ஆடைப்பொருட்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் 2021 காலப்பகுதியில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன.

அநேகமான துணை வகைகளின் மேம்பட்ட செயலாற்றத்துடன் வேளாண்மை ஏற்றுமதிகள் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் 16.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. வாசனைத்திரவியங்கள், தேயிலை, கடல் உணவு மற்றும் தேங்காய் உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான உயர்வான வருவாய்கள் இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்த அதேவேளை, காய்கறிகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. 2021ஆம் ஆண்டில் சராசரி ஏற்றுமதி விலைகளில் வீழ்ச்சியினை எதிரீடுசெய்து ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட 7.7 சதவீத அதிகரிப்பு, தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பிற்கு இட்டுச்சென்றது. இயற்கை இறப்பர், வாசனைத்திரவியங்கள் (பிரதானமாக கறுவா மற்றும் சாதிக்காய்) மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை உற்பத்திகள் என்பவற்றிலிருந்து பதிவாகிய உயர்வான வருவாய்கள், உயர்வான ஏற்றுமதி விலைகளால் தூண்டப்பட்ட அதேவேளை, உயர்வான விலைகள் மற்றும் அளவுகள் இரண்டும் கடல் உணவு, மிளகு மற்றும் தேங்காய் (உள்ளீடு மற்றும் உள்ளீடற்ற உற்பத்திகள் இரண்டும்) என்பவற்றிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தன. பழங்கள், தானியங்கள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய் ஏற்றுமதிகள் என்பவற்றின் உயர்வான ஏற்றுமதி அளவுகள் காரணமாக சிறு வேளாண்மை உற்பத்திகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. எனினும், உயர்வான விலைகளுக்கு மத்தியிலும் குறைவான ஏற்றுமதி அளவுகளே காய்கறி ஏற்றுமதிகளின் நலிவான செயலாற்றத்திற்கு வழிவகுத்தன.

மொத்த ஏற்றுமதிகளில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாக வகைகூறுகின்ற கனிம ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ம் ஆண்டில் 77.3 சதவீதத்தினால் மேம்பட்டன. உலோகத் தாது, கசடு மற்றும் சாம்பல் என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட டைடானியம் உலோகத் தாது, இவ்வதிகரிப்புக்கு முதன்மையாக பங்களித்த அதேவேளையில் இயற்கை காரியம் மற்றும் பளிங்கு என்பவற்றிலான அதிகரிப்பு, புவிப் பொருட்கள் மற்றும் கற்கள், அரும் உலோகங்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்புக்கு வழிவகுத்தன.

இறக்குமதிச் செயலாற்றம்

சில இறக்குமதிக் கட்டுப்பாடுகள், பிரதானமாக தனிப்பட்ட வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்ந்தமைக்கு மத்தியிலும், இறக்குமதி மீதான செலவினம், 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் ஐ.அ.டொலர் 20,637 மில்லியனுக்கு 28.5 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. தனிப்பட்ட பாவனை மோட்டார் வாகனங்களின் மிகக்குறைந்த இறக்குமதிகளுக்கு மத்தியிலும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மீளத்தொடங்கியதுடன் உள்ளீடுகளுக்கான அதிகரிக்கின்ற கேள்வி, எரிபொருள் விலை உள்ளடங்கலாக உலகளாவிய பண்டச் சந்தைகளில் உயர்வடைந்த விலை

வரைபடம் 5.5
இறக்குமதிகளின் உள்ளடக்கம் - 2021



மட்டங்கள், சுத்திகரிப்புச்சாலை அவ்வப்போது மூடப்பட்டமை காரணமாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதியில் அதிகளவு தங்கியிருந்தமை, தடுப்புமருந்துகள் போன்ற மருத்துவ மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் மீதான உயர்வான செலவினங்கள் அத்துடன் சில இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்த்தல்கள் என்பன இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாக வகைகூறின. அநேகமான அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளிலும் அதிகரிப்புகள் அவதானிக்கப்பட்டு இறக்குமதி வளர்ச்சி பரந்த அடிப்படையில் அமைந்திருந்தது. இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்களின் அசைவுகளினால் அவதானிக்கப்பட்டவாறு இறக்குமதிகளின் முக்கிய வகைகளுக்கிடையில் அளவு மற்றும் விலை மாற்றங்களின் விளைவு மாறுபட்டிருந்தமைக்கு மத்தியிலும் பொதுவாக அளவு மற்றும் விலை அதிகரிப்புக்கள் இரண்டின் மூலமும் இறக்குமதிச் செலவினத்தில் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இறக்குமதிச் செலவினமானது மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2020ஆம் ஆண்டின் 19.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 24.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

மொத்த இறக்குமதிச் செலவினத்திற்கு அரைவாசிக்கு மேல் வகைகூறுகின்ற இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் 2021 காலப்பகுதியில் இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு பாரியளவு பங்களித்தது. ஆண்டுகாலப்பகுதியில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம், ஐ.அ.டொலர் 12,309 மில்லியனுக்கு 35.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 காலப்பகுதியில் நாட்டின் இறக்குமதிச் செலவினத்தில் பாரிய செலவின வகையாக எரிபொருள் காணப்பட்டதோடு மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (திரவப் பெற்றோலிய வாயு உள்ளடங்கலாக) மற்றும் நிலக்கரி என்பவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 2,543 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,743 பில்லியனுக்கு அதிகரித்தது. அனைத்து மூன்று துணை வகைகளின் சராசரி விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களும் அதேபோன்று சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதி

அட்டவணை 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம்

வகை	2020		2021 (அ)		பெறுமதியின் மாற்றம்	ஆண்டுக்கு ஆண்டு மாற்றம்	மாற்றத்திற்கான பங்களிப்பு
	பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்	பங்கு %	பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்	பங்கு %	ஐ.அ.டொலர் மில்லியன்	%	%
நுகர்வுப் பொருட்கள்	**3,401.7**	**21.2**	**3,848.7**	**18.6**	**447.0**	**13.1**	**9.8**
உணவும் குடிபானங்களும்	1,554.4	9.7	1,666.5	8.1	112.1	7.2	2.4
அரிசி	10.5	0.1	73.0	0.4	62.5	595.3	1.4
சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள்	277.1	1.7	288.8	1.4	11.7	4.2	0.3
பால் உற்பத்திகள்	333.8	2.1	317.7	1.5	-16.1	-4.8	-0.4
பருப்புவகை	96.9	0.6	143.0	0.7	46.1	47.5	1.0
ஏனையவை	836.0	5.2	843.9	4.1	7.9	0.9	0.2
உணவல்லாத நுகர்வுப் பொருட்கள்	1,847.3	11.5	2,182.2	10.6	334.9	18.1	7.3
மருத்துவ மற்றும் மருந்தாங்கல் பொருட்கள்	595.5	3.7	882.5	4.3	287.0	48.2	6.3
தொலைத் தொடர்பூட்டல் சாதனங்கள்	268.4	1.7	382.9	1.9	114.5	42.6	2.5
வீட்டுப் பாவனைப் பொருட்கள்	174.2	1.1	257.1	1.2	82.9	47.6	1.8
புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள்	200.7	1.2	221.3	1.1	20.7	10.3	0.5
ஏனையவை	608.5	3.8	438.4	2.1	-170.0	-27.9	-3.7
இடைநிலைப் பொருட்கள்	**9,076.5**	**56.5**	**12,308.9**	**59.6**	**3,232.4**	**35.6**	**70.5**
எரிபொருள்	2,542.6	15.8	3,742.9	18.1	1,200.3	47.2	26.2
புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள்	2,335.1	14.5	3,066.9	14.9	731.9	31.3	16.0
இரசாயன உற்பத்திகள்	831.5	5.2	1,074.4	5.2	242.9	29.2	5.3
அடிப்படை உலோகங்கள்	460.3	2.9	866.4	4.2	406.1	88.2	8.9
பிளாத்திக்குகள் மற்றும் அவற்றின் பொருட்கள்	540.2	3.4	765.7	3.7	225.6	41.8	4.9
தாள், அட்டை மற்றும் அதன் பொருட்கள்	383.1	2.4	468.9	2.3	85.8	22.4	1.9
கோதுமை மற்றும் சோளம்	384.4	2.4	418.3	2.0	33.8	8.8	0.7
ஏனைய இடைநிலைப் பொருட்கள்	1,599.4	10.0	1,905.4	9.2	306.0	19.1	6.7
முதலீட்டுப் பொருட்கள்	**3,563.2**	**22.2**	**4,462.7**	**21.6**	**899.5**	**25.2**	**19.6**
பொறியும் கருவியும்	2,176.1	13.6	2,809.5	13.6	633.4	29.1	13.8
கட்டடப் பொருட்கள்	1,035.6	6.5	1,248.9	6.1	213.2	20.6	4.7
போக்குவரத்துக் கருவிகள்	348.3	2.2	398.5	1.9	50.2	14.4	1.1
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	3.2	0.02	5.8	0.03	2.6	81.4	0.1
வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்	**14.0**	**0.1**	**17.1**	**0.1**	**3.1**	**22.2**	**0.1**
மொத்த இறக்குமதிகள் (ஆ) (இ)	**16,055.4**	**100.0**	**20,637.4**	**100.0**	**4,582.0**	**28.5**	**100.0**
ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (ஈ)	**185.52**		**198.88**				

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ ஐ.அ.டொலர் நாணயமாற்று வீதம்

மூலங்கள் : இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் எரிபொருள் செலவு உயர்வடைவதற்கு காரணமாகி, மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளின் குறைவான அளவுகளின் விளைவினைப் புறந்தள்ளின. புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமானது முதற்தடவையாக ஐ.அ.டொலர் 3 பில்லியன் பதிவினை விஞ்சிச்சென்று இரண்டாவது பாரிய இறக்குமதிப் பொருளாகத் தோற்றம்பெற்றது. ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்து இலங்கையின் ஆடைகளுக்கு கிடைத்த உயர்வான கேள்வியினை நிறைவுசெய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட துணி மற்றும் நூல் மீதான செலவினத்தின் அதிகரிப்பு இதற்கு வழிவகுத்தது. இரசாயன உற்பத்திகளின் (பிரதானமாக காபன்) இறக்குமதிகள் முதற்தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிய அதேவேளை அடிப்படை உலோகங்கள் (பிரதானமான இரும்பு மற்றும் உருக்கு), முதனிலை வடிவிலான பிளாத்திக் பொருட்கள் மற்றும் இயற்கை மற்றும் செயற்கை இறப்பர் என்பன உள்ளடங்கலாக ஏனைய இறக்குமதி வகைகள் ஆண்டின்போது உயர்வான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. எனினும், இரசாயன வளமாக்கிகளை இறக்குமதி செய்வதன் மீது 2021ஆம் ஆண்டின் அநேகமான காலப்பகுதிகளில் நிலவிய தடை, வளமாக்கி மீது (பிரதானமாக யூரியா) குறைவான செலவினத்திற்கு வழிவகுத்த அதேவேளை தயாரிக்கப்படாத புகையிலை அத்துடன் சீமெந்து கிளிங்கற் கற்கள் போன்ற கனிம உற்பத்திகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டின் குறைவான செலவினப் பெறுமதிகளைப் பதிவுசெய்தன.

மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏறத்தாழ 22 சதவீதத்திற்கு வகைகூறிய முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4,463 மில்லியனுக்கு 25.2 சதவீத்தினால் அதிகரித்தது. பொறி மற்றும் உபகரணப் பாகங்கள் தவிர பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அனைத்து பொருட்கள் மீதுமான செலவினமானது 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் அதிகரித்த அதேவேளை அலுவலக இயந்திரங்கள் (பிரதானமாக

கணனிகள்), தொலைத்தொடர்பு சாதனங்கள் (கடத்தல் கருவிகள்) அத்துடன் மருத்துவ மற்றும் ஆய்வுகூட உற்பத்திகள் என்பன இவ்வதிகரிப்புக்கு அதிகமாக பங்களித்தன. 2021ஆம் ஆண்டு முழுவதும் சில இறக்குமதி கட்டுப்பாட்டு வழிமுறைகள் தொடர்ந்தமைக்கு மத்தியிலும் கட்டடப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் (வர்த்தகப் பயன்பாட்டிற்கான உந்து ஊர்திகள் உள்ளடங்கலாக) இறக்குமதிகளும் அதிகரித்தன. சீமெந்து மீதான குறைவான செலவினத்திற்கு மத்தியில் இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதிகளினால் கட்டடப்பொருட்கள் வகையில் அதிகரிப்பு தூண்டப்பட்டிருந்த அதேவேளை, வேளாண்மை உழவு இயந்திரங்கள், பார ஊர்திகள் மற்றும் புகையிரத சாதனங்கள் மீதான செலவினம் போக்குவரத்துச்சாதன இறக்குமதிகளின் அதிகரிப்புக்கு வழிவகுத்தன.

உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம், 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 1,847 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2,182 மில்லியனுக்கு 18.1 சதவீதத்தால் அதிகரித்தது. மருத்துவம் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள், குறிப்பாக கொவிட்-19 தடுப்புமருந்து நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இறக்குமதிசெய்யப்பட்ட தடுப்புமருந்துகள் இவ்வதிகரிப்புக்கு பாரிய பங்களிப்பை வழங்கின. கையடக்கத் தொலைபேசிகள், இறப்பர் டயர்கள் மற்றும் தொலைக்காட்சிகள் என்பன உணவல்லா நுகர்வோர் இறக்குமதிகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு பங்களித்த ஏனைய வகைகளுக்குள் காணப்பட்டன. எனினும், 2020 மார்ச்சு தொடக்கம் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தொடர்ந்தமையினால் 2021 காலப்பகுதியில் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான உந்து ஊர்தி இறக்குமதி 2019 மற்றும் 2020 உடன் ஒப்பிடுகையில் ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

அட்டவணை 5.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

விடயம்	2017	2018	2019	2020	2021 (அ)
சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (ஆ)	4,895	4,959	4,740	4,028	4,553
1ஆம் காலாண்டு	1,275	1,382	1,199	1,249	1,378
2ஆம் காலாண்டு	1,123	1,207	1,206	678	1,008
3ஆம் காலாண்டு	1,336	1,317	1,211	1,123	865
4ஆம் காலாண்டு	1,161	1,054	1,124	978	1,302
கோதுமை	1,250	1,297	1,159	1,404	1,307
1ஆம் காலாண்டு	291	412	164	272	323
2ஆம் காலாண்டு	334	329	318	285	288
3ஆம் காலாண்டு	359	285	292	498	335
4ஆம் காலாண்டு	265	271	385	348	360
மசகு எண்ணெய் (ஆ)	1,591	1,674	1,842	1,667	1,182
1ஆம் காலாண்டு	282	283	461	464	274
2ஆம் காலாண்டு	376	459	460	265	368
3ஆம் காலாண்டு	464	461	461	568	362
4ஆம் காலாண்டு	469	471	460	370	178
சீனி	498	645	556	683	582
1ஆம் காலாண்டு	108	205	140	193	293
2ஆம் காலாண்டு	158	166	153	108	140
3ஆம் காலாண்டு	101	119	100	209	14
4ஆம் காலாண்டு	132	154	164	172	136
வளமாக்கி	399	861	707	952	412
1ஆம் காலாண்டு	78	256	148	88	114
2ஆம் காலாண்டு	73	154	142	294	182
3ஆம் காலாண்டு	129	225	238	126	17
4ஆம் காலாண்டு	119	226	179	444	98
அரிசி	748	249	24	16	147
1ஆம் காலாண்டு	259	203	8	8	3
2ஆம் காலாண்டு	79	37	3	2	4
3ஆம் காலாண்டு	160	2	5	2	3
4ஆம் காலாண்டு	250	7	8	4	137

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

உணவு மற்றும் குடிபானங்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது. உணவு மற்றும் குடிபானங்கள் இறக்குமதி வகைகளின் கீழ் எண்ணெய் மற்றும் கொழுப்பு வகை பாரிய அதிகரிப்பினைப் பதிவுசெய்வதற்கு தேங்காய் எண்ணெய்யின் உயர்வான இறக்குமதிகள் வழிவகுத்த அதேவேளை, பிரதானமாக ஆண்டின் இறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி (2021ஆம் ஆண்டின் இறுதி இரண்டு மாத காலப்பகுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 63 மில்லியன்) 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் தானியங்கள் மற்றும் அரைக்கும் கைத்தொழில் உற்பத்தி வகை கணிசமான அதிகரிப்பினைப் பதிவுசெய்வதற்கு காரணமாயிருந்தது. 2021ஆம் ஆண்டில் அதிகரித்த இறக்குமதிச் செலவினத்தைப் பதிவுசெய்த ஏனைய பிரதான உணவுப் பொருட்களாக பருப்பு, சீனி மற்றும் உடன் பழங்கள் காணப்பட்டன. எனினும், 2021 காலப்பகுதியில் தகரத்திலடைத்த மீன் மற்றும் நெத்தலிக்கருவாடு, வெறியக் குடிவகைகள் மற்றும் பால்மா என்பன மீதான குறைவான இறக்குமதிச் செலவினத்தால் தூண்டப்பட்டு, முறையே கடல் உணவு, குடிபானங்கள் மற்றும் பால் உற்பத்திகள் என்பவற்றிலான செலவினம் வீழ்ச்சியடைந்தது. அலகுப் பெறுமதியில் ஏற்பட்ட உயர்வு, இறக்குமதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு பாரியளவில் பங்களித்தது.

வர்த்தக மாற்றுவிகிதம்

இலங்கையின் ஏற்றுமதியின் விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்கிடையிலான விகிதமான வர்த்தக மாற்றுவிகிதம் 2021இல் தேய்வடைந்தது. ஏற்றுமதி விலைச்சுட்டெண், 92.4 சுட்டெண் புள்ளிகளுக்கு 5.4 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை இறக்குமதி விலைச்சுட்டெண் 94.9 சுட்டெண் புள்ளிகளுக்கு 15.2 சதவீதத்தினால் உயர்வான வீதத்தில் அதிகரித்தது. அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளினதும் விலைச்சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பிற்குப் பங்களித்த அதேவேளை இடைநிலைப்பொருட்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் இறக்குமதிகளின் உயர்வான விலைகள் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண்ணின் அதிகரிப்பிற்குப் பிரதானமாக வகைகூறின. அதற்கமைய, இறக்குமதி விலைச்சுட்டெண் ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணை விட

வரைபடம் 5.6
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்



உயர்வான வேகத்தில் அதிகரித்தமையினால் 2021இல் வர்த்தக மாற்றுவிகிதம் 97.4 சுட்டெண் புள்ளிகளுக்கு 8.6 சதவீதத்தினால் தேய்வடைந்து, ஏற்றுமதிகளின் அலகொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்படக்கூடிய இறக்குமதிகளின் தொகை தேய்வடைந்துள்ளதை எடுத்துக்காட்டியது.

2021 காலப்பகுதியில் வர்த்தக அளவுகளில் ஏற்பட்ட விரிவாக்கம் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதி செலவினம் இரண்டினதும் அதிகரிப்பிற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கியது. ஆண்டுகாலப்பகுதியின் மூன்று முக்கிய ஏற்றுமதி வகைகளுக்குமான ஏற்றுமதி அளவுச் சுட்டெண்கள் மேம்பட்ட அதேவேளை இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களுக்கான இறக்குமதி அளவு சுட்டெண்கள் அதிகரித்தன. எனினும், 2021ஆம் ஆண்டில் நுகர்வோர் பொருட்களுக்கான இறக்குமதி விலைச்சுட்டெண் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

வர்த்தகத்தின் போக்கு

இலங்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் அதே முக்கிய வர்த்தகப் பங்காளர்களை தொடர்ந்தும் பேணியது. பெறுமதி நியதிகளில், 2021ஆம் ஆண்டில் இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராக அதன் நிலையை இந்தியா மீளப்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து சீனாவும், ஐக்கிய அமெரிக்காவும் காணப்பட்டன. இவை அனைத்தும்

அட்டவணை 5.6
வர்த்தக சுட்டெண்கள் (அ)

2010 = 100

வகை	பெறுமதிச் சுட்டெண்			அளவுச் சுட்டெண்			அலகுப் பெறுமதிச் சுட்டெண்		
	2020	2021 (ஆ)	ஆண்டுக்காண்டு மாற்றம் %	2020	2021 (ஆ)	ஆண்டுக்காண்டு மாற்றம் %	2020	2021 (ஆ)	ஆண்டுக்காண்டு மாற்றம் %
ஏற்றுமதிகள்									
வேளாண்மை ஏற்றுமதிகள்	**101.3**	**118.4**	**16.8**	**90.5**	**101.1**	**11.7**	**112.0**	**117.1**	**4.6**
தேயிலை	86.2	92.0	6.7	80.7	87.2	8.0	106.8	105.5	-1.2
இறப்பர்	17.4	24.3	40.1	29.4	29.3	-0.5	59.1	83.2	40.8
தெங்கு	208.4	256.7	23.2	168.0	188.1	11.9	124.0	136.5	10.1
வாசனைத்திரவியங்கள்	161.0	219.5	36.4	114.5	146.9	28.3	140.6	149.4	6.3
சிறுவேளாண்மை உற்பத்திகள்	188.6	208.3	10.5	173.1	188.4	8.8	108.9	110.6	1.5
கைத்தொழில் ஏற்றுமதிகள்	**125.9**	**159.3**	**26.5**	**153.5**	**183.2**	**19.3**	**82.1**	**86.9**	**6.0**
புடவைகள் மற்றும் ஆடைகள்	131.9	162.1	22.9	111.5	140.6	26.1	118.3	115.3	-2.5
பெற்றோலிய உற்பத்திகள்	141.9	192.4	35.6	238.5	282.8	18.6	59.5	68.0	14.3
இறப்பர் உற்பத்திகள்	141.2	188.7	33.6	100.0	112.6	12.7	141.3	167.6	18.6
கனிப்பொருள் ஏற்றுமதிகள்	**103.6**	**183.7**	**77.3**	**68.6**	**111.4**	**62.6**	**151.2**	**164.8**	**9.1**
மொத்த ஏற்றுமதிகள்	**116.5**	**145.0**	**24.4**	**132.9**	**156.9**	**18.0**	**87.7**	**92.4**	**5.4**
இறக்குமதிகள்									
நுகர்வுப் பொருட்கள்	**137.5**	**155.5**	**13.1**	**128.0**	**127.8**	**-0.2**	**107.4**	**121.7**	**13.3**
உணவு மற்றும் குடிபானங்கள்	117.5	126.0	7.2	127.4	125.5	-1.5	92.2	100.4	8.8
உணவல்லா நுகர்வுப் பொருட்கள்	160.4	189.5	18.1	128.7	130.4	1.3	124.7	145.3	16.6
இடைநிலைப் பொருட்கள்	**112.8**	**152.9**	**35.6**	**140.2**	**152.0**	**8.5**	**80.5**	**100.6**	**25.0**
எரிபொருள்	83.6	123.1	47.2	133.1	134.2	0.8	62.8	91.7	46.1
வளமாக்கி	107.8	65.9	-38.9	160.2	74.5	-53.5	67.3	88.4	31.4
இரசாயன உற்பத்திகள்	159.9	206.6	29.2	157.9	177.3	12.2	101.3	116.6	15.1
கோதுமை மற்றும் சோளம்	144.8	157.6	8.8	138.9	134.2	-3.3	104.3	117.4	12.6
புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள்	129.1	169.5	31.3	126.8	153.9	21.4	101.8	110.2	8.2
பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள்	127.7	181.0	41.8	148.9	169.5	13.8	85.8	106.8	24.6
வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள்	31.0	38.0	22.5	36.5	41.9	14.7	85.1	90.9	6.8
முதலீட்டுப் பொருட்கள்	**129.3**	**162.0**	**25.2**	**183.4**	**230.6**	**25.7**	**70.5**	**70.3**	**-0.4**
கட்டடப் பொருட்கள்	126.0	152.0	20.6	147.7	154.5	4.7	85.4	98.3	15.2
போக்குவரத்துக் கருவி	58.8	67.3	14.4	50.4	46.7	-7.5	116.6	144.1	23.6
பொறி மற்றும் கருவி	162.7	210.1	29.1	264.5	359.0	35.7	61.5	58.5	-4.9
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	96.2	174.5	81.4	112.9	142.6	26.4	85.2	122.3	43.5
மொத்த இறக்குமதிகள்	**119.7**	**153.9**	**28.5**	**145.5**	**162.2**	**11.5**	**82.3**	**94.9**	**15.2**
வர்த்தக மாற்று விகிதம்							**106.5**	**97.4**	**-8.6**

(அ) ஐ.அ.டொலரின் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒன்றிணைந்து இலங்கையின் மொத்த வர்த்தகத்தின் (ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும்) ஏறத்தாழ 42 சதவீதத்திற்குப் பங்களிப்புச்செய்தன. இந்தியாவுடனும் சீனாவுடனுமான மொத்த வர்த்தகம் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 5 பில்லியனை விஞ்சிய அதேவேளை ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தகம் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனை விஞ்சியிருந்தது. ஐக்கிய அரபு இராச்சியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி ஆகியன ஏனைய முக்கிய பங்காளர்களாக விளங்கி 2021ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கு மேல் வகைகூறின. 2021ஆம் ஆண்டில் நாடு ரீதியான வர்த்தக மீதிகள் குறிப்பிடுவதற்கமைய, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, நெதர்லாந்து, இத்தாலி மற்றும் பெல்ஜியம் போன்ற மேற்கத்தேய நாடுகள் குறிப்பிடத்தக்க வர்த்தக மிகைகளைப் பதிவுசெய்த அதேவேளை சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற ஆசிய நாடுகள் குறிப்பிடத்தக்கப் வர்த்தகப் பற்றாக்குறையினைப் பதிவுசெய்தன.

இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளாக 2021ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் காணப்பட்டன. ஐ.அ.டொலர் 3 பில்லியனுக்கு அதிகமான ஏற்றுமதிப் பெறுமதியுடன் இலங்கை ஏற்றுமதிகளின் பாரிய தனியொரு கொள்வனவு நாடாக ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் விளங்கி மொத்த ஏற்றுமதிகளின் 24.9 சதவீதத்திற்கு வகைகூறியது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (7.5 சதவீதம்), இந்தியா (6.6 சதவீதம்), ஜேர்மனி (6.1 சதவீதம்) மற்றும் இத்தாலி (4.6 சதவீதம்) ஆகிய நாடுகள் அமைந்திருந்தன. அதிகரித்த ஏற்றுமதிகளுக்கு இசைவாக, இலங்கையின் முதல் 10 ஏற்றுமதி நாடுகள் உள்ளடங்கலாக அநேகமான நாடுகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2021 காலப்பகுதியில் அதிகரித்தன. ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறி மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பன ஐக்கிய அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய உற்பத்திகளாகும். 2021ஆம் ஆண்டில் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 42 சதவீதப் பங்குடன் இலங்கைக்கான பாரியளவு ஆடை ஏற்றுமதிசெய்கின்ற

வரைபடம் 5.7

நாடுகள் ரீதியான வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ.மில்லியன்)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

தனியொரு நாடாகத் தொடர்ந்தும் ஐக்கிய அமெரிக்கா விளங்கியது. ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகளில் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இயந்திரம் மற்றும் பொறியியல் சாதனங்கள் மற்றும் கடல் உணவு என்பன ஆதிக்கம் செலுத்தின. வாசனைத்திரவியங்கள், விலங்குத்தீன், புடவைகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, மர மற்றும் கடதாசி உற்பத்திகள் மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகள் என்பன இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பிராந்தியமொன்றாக ஐரோப்பிய ஒன்றியம் 2021ஆம் ஆண்டில் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 30 சதவீதம் உள்ளடங்கலாக மொத்த ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 24 சதவீதத்திற்கு வகைகூறியது. இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை, கடல் உணவு, இயந்திரம் மற்றும் பொறியியல் சாதனங்கள் அத்துடன் தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகள் என்பன ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மற்றைய முக்கிய பொருட்களுள் காணப்பட்டன. 2021ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு மற்றும் ரஷ்ய முன்னிலையிலான பொதுநலவாய சுதந்திர நாடுகள் இணைந்து இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 58 சதவீதத்திற்கு பங்களிப்புச்செய்து தேயிலைக்கான முக்கிய ஏற்றுமதி அடைவிடங்களாக விளங்கின.

இலங்கை இறக்குமதிகளுக்கான முக்கிய மூலங்களாக ஆசிய நாடுகள் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் இடம்பிடித்தன. இறக்குமதிக்கான பாரிய மூலமாக தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகவும் சீனா தொடர்ந்தும் விளங்கி 2021இல் மொத்த இறக்குமதிகளின் ஏறத்தாழ 23 சதவீதத்துடன் ஐ.அ.டொலர் 4.7 பில்லியனுக்கு மேல் பதிவுசெய்தது. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், கட்டடப்பொருட்கள் அத்துடன் மருத்துவ மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் என்பவற்றின் அதிகரித்த இறக்குமதிகள் காரணமாக சீனாவிலிருந்தான இறக்குமதிச் செலவினம் 33 சதவீதத்தினால் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து, இந்தியாவும் ஐக்கிய அரபு இராச்சியமும் இறக்குமதிக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் மூல நாடுகளாக விளங்கி முறையே 22.4 சதவீதத்திற்கும் 6.8 சதவீதப் பங்குகளுக்கு வகைகூறின. பெற்றோலிய உற்பத்திகள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் கோதுமை இறக்குமதிகள் காரணமாக இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் மீதான செலவினம் 50 சதவீதத்தினால் அதிகரித்தது. பெற்றோலிய உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் கட்டடப்பொருட்கள் என்பன பிரதானமாக ஐக்கிய அரபு இராச்சியத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவை ஐக்கிய அரபு இராச்சியத்திடமிருந்தான மொத்த இறக்குமதிகளின் சுமார் 86 சதவீதத்திற்குப் பங்களித்தன. இறக்குமதி மூல நாடு என்ற வகையில் மலேசியா, பெற்றோலிய உற்பத்திகள், உணவுத் தயார்படுத்தல்கள், பொறி மற்றும் உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் அத்துடன் எண்ணெய் மற்றும் கொழுப்பு போன்ற

வரைபடம் 5.8
நாடுகளின்படி ஏற்றுமதிகள்



மூலம் : இலங்கைச் சுங்கம்

வரைபடம் 5.9
நாடுகளின்படி இறக்குமதிகள்



* ஐக்கிய இராச்சியம் நீங்கலாக

மூலம் : இலங்கைச் சுங்கம்

5

முக்கிய இறக்குமதிப் பொருட்களின் அதிகரிப்புக்கள் காரணமாக 2021ஆம் ஆண்டில் நான்காம் நிலையைப் பெற்றுக்கொண்டது. 2021ஆம் ஆண்டில் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட முக்கிய பொருட்கள் பெற்றோலிய உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் மற்றும் பொறி மற்றும் உபகரணங்களை உள்ளடக்கியிருந்தன. பிரதானமாக ஆண்டுகாலப்பகுதியில் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக இறக்குமதி மூல நாடு என்ற வகையில் ஜப்பான், ஆண்டுகாலப்பகுதியில் 2020ஆம் ஆண்டின் அதன் ஆறாவது நிலையுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் பத்தாவது நிலைக்கு தள்ளப்பட்டது.

வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

உலகளாவிய நோய்த்தொற்றின் நாசம் விளைவிக்கின்ற தாக்கத்திற்கு மத்தியில் 2021ஆம் ஆண்டில் வணிகப்பொருள் வர்த்தகத் துறைக்கு புத்துயிரளிப்பதற்கு கொள்கை ஆதரவும் துறையின் அனைத்து ஆர்வலர்களின் முயற்சிகளும் உறுதுணையளித்தன. அரசாங்கத்திடமிருந்தும் மத்திய வங்கியிடமிருந்தும் கிடைத்த கொள்கைசார்ந்த தூண்டல்கள், மேம்படுகின்ற உலகளாவிய பொருளாதார நிலைமைகளுடன் ஒன்றிணைந்து ஏற்றுமதித்துறை நோய்த்தொற்றுக்கு முன்னைய மட்டத்தையும் தாண்டி மீளெழுச்சிபெறுவதற்கு உதவின. பல வேளாண்மை மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்கான இறக்குமதி மாற்றீடுகளை அபிவிருத்தி செய்வதனூடாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை கடுமையான ஏற்றுமதி ஊக்குவிப்பினை நடாத்துவதற்கு அரசாங்கம் முயற்சித்துடன் குறைவான வரிகள் தொடர்ந்து பேணப்பட்டன. 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பொருளாதார புத்துயிரளித்தல் மற்றும் வறுமை ஒழிப்பு மீதான சனாதிபதி செயலணி, சீரமைக்கப்பட்ட அத்துடன் இலக்கிடப்பட்ட முறையில் அதன் நடவடிக்கைகளுடன் அணிசேர்வதற்கு தொடர்புடைய ஆர்வலர்களுடனான ஒன்றிணைந்த முயற்சியினூடாக ஏற்றுமதி வருவாய்களை ஊக்குவிப்பதற்கும் வேறு படுகடனற்ற வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மீதும் அதன் கவனத்தை மையப்படுத்தியிருந்தது. அதற்கமைய, வணிகப்பொருள் வர்த்தகம் (புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணம், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, தேங்காய் உற்பத்திகள், கடற்றொழில், வாசனைத்திரவியங்கள் மற்றும் சிறுவேளாண்மை ஏற்றுமதிப் பயிர்கள்), சுற்றுலாத்துறை வருவாய்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் அதேபோன்று வெளிநாட்டு முதலீடுகள் போன்ற ஒவ்வொரு முக்கியத்துறைக்குமென மத்திய வங்கியினால் ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு துணைக்குழுக்கள் தொடங்கிவைக்கப்பட்டன. இத்துணைக்குழுக்கள்

குறித்தொதுக்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கு முயற்சித்த அதேவேளை ஒவ்வொரு துறையினதும் முன்னேற்றத்தினை தடைப்படுத்திய உடனடிச் சிக்கல்களையும் முட்டுக்கட்டைகளையும் தீர்ப்பதற்கு தொடர்புடைய ஆர்வலர்களுடன் இணைந்து செயற்பட்டன. அதேநேரம், வர்த்தகம் மீதான கொள்கை வழிகாட்டலை வலுப்படுத்துவதற்கு தேசிய வர்த்தகக் கொள்கையொன்றினை வகுக்க வர்த்தக அமைச்சு தொடங்கியது. உலக வர்த்தக அமைப்பு 2021ஆம் ஆண்டில் உலக வணிகப்பொருள் வர்த்தக அளவு 9.8 சதவீதத்தினால் மீளெழுச்சிபெறும் என்றும் (2020ஆம் ஆண்டின் 5.0 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து) 2022ஆம் ஆண்டில் வளர்ச்சி 3.0 சதவீதத்திற்கு மிதமடையும் என்றும் எதிர்பார்க்கின்றது. பொருத்தமான கொள்கை ஆதரவு ஊடாக பன்னாட்டு சந்தையில் ஏற்றுமதிப் பங்கினைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

2021 காலப்பகுதியில் பல இறக்குமதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் தளர்த்தப்பட்டன. வெளிநாட்டுத் துறை அழுத்தங்களின் காரணமாக 2020ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுப்பகுதியில் அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் 2021 காலப்பகுதியில் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன. அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வரி நிர்ணயக் குழுவின் வழிகாட்டல்களின் கீழ் 2020 மற்றும் 2021 காலப்பகுதிகளில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மீது பணிப்புரைகளை விடுத்து இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் இது தொடர்பில் பல அதிவிசேட வர்த்தமானிகள் வெளியிடப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணியினைப் பாதுகாக்கும் பொருட்டு உள்நாட்டுத் தொழிற்துறைகள் மற்றும் வாடிக்கையாளர் மீது ஆகக்குறைந்த எதிர்பார்க்கப்பட்ட தாக்கத்துடன் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற இறக்குமதிப்பொருட்களை முதன்மையாகக்கொண்டு தற்காலிக அடிப்படையில் இக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2021 செத்தெம்பர் காலப்பகுதியின் குறுகிய காலமொன்றின்போது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனும் தேசிய சேமிப்பு வங்கியுடனுமான கடன்பத்திரங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்கான ஆவணங்கள் என்பவற்றின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற/ அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிகளுக்கெதிராக மத்திய வங்கி 100 சதவீத காசு எல்லைத்தேவைப்பாட்டினை விதித்தபோதிலும், 2021 யூன் தொடக்கம் இவ்விறக்குமதிக் கட்டுப்பாடுகள் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, சேதன வேளாண்மைக்கு மாறுதலடைகின்ற அரசாங்கத்தின் கொள்கை முயற்சிக்கு இணங்க, 2021 மேயில் அசேதன வளமாக்கி இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது. எனினும், 2021 நவெம்பர் அளவில் இவ்வழிமுறைகளும் தளர்த்தப்பட்டன. வெளிநாட்டுத்துறை மீதான தொடர்ச்சியான அழுத்தத்தினைக் கருத்திற்கொண்டு, அரசாங்கமானது தெரிவுசெய்யப்பட்ட அவசரமற்ற மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்காக அவற்றுக்கு இறக்குமதி உரிமங்களின் தேவைப்பாடுகள் போன்ற பல கட்டுப்பாடுகளை 2022 மார்சு காலப்பகுதியில் விதித்த அதேவேளை, இறக்குமதி தீர்வைகளையும் அதிகரித்தது.

உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்களிலிருந்து துறையினை மீட்டெடுப்பதற்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2021 காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறைக்கு நிறுவனசார் ஆதரவினை மேம்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இனைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்திய அதேவேளை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மீளத்தொடங்கியது. சந்தை அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கிலி அபிவிருத்தி அத்துடன் இயலளவை விருத்திசெய்தல் போன்ற துறைகளில் தேசிய ஏற்றுமதி உபாய நடவடிக்கைத் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இணையத்தளம் அடிப்படையிலமைந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை 2020 காலப்பகுதியில் அநேகமாக மெய்நிகர் வாயிலாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த வர்த்தக சந்தைகள், வணிகத்திற்கான வணிகம் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வர்த்தக நாம ஊக்குவிப்பு பிரசாரங்கள் போன்றவற்றில் நேரடியாக பங்கேற்பதை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மீளத்தொடங்கியது. ஏற்றுமதி ஊக்குவிப்பினை நோக்கி வர்த்தக சம்மேளனங்களும் பங்கேற்றன. இது கொள்கை வகுத்தல் மற்றும் குறைகளைக் கையாளல் என்பவற்றில் அரசாங்க மற்றும் தனியார்துறை ஆர்வலர்களைத் தொடர்புபடுத்துவதற்கு உதவியது. இலங்கை கட்டளைகள் நிறுவனமானது தேசிய தரநியமங்களை வகுத்து தரமுயர்த்துகின்ற செயல்முறையினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தமையானது வெளிநாட்டு உற்பத்திகளுடன் போட்டிபோடுவதற்கு உள்நாட்டு தயாரிப்பாளர்களுக்கு உதவியது. அதற்கமைய, தேசிய தரநியமங்களை சர்வதேச தரநியமங்களுக்கு இசைவாகப் பேணுவதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவனம் 2021 இறுதியளவில் வெளியிடப்பட்ட 327 தரநியமங்களில் 128 தரநியமங்களை திருத்தம் செய்தது. சவால்மிக்க சந்தைச் சூழலுக்கு மத்தியில் இலங்கை ஏற்றுமதி கொடுகடன் கூட்டுத்தாபனமானது முன்னைய ஆண்டை விட ஏறத்தாழ ரூ.11.6 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்து, ரூ.48.7 பில்லியன் பெறுமதியுடைய காப்பீடுசெய்யப்பட்ட வியாபாரங்களை அறிக்கையிட்டது. இலங்கைச் சுங்கத்திற்கான நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம், பத்து துணைக்குழுக்களின் கீழ் தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவச் செயன்முறைகளைப் பகுப்பாய்வுசெய்து தேவையான மறுசீரமைப்புக்கள் பற்றிய பரிந்துரைகளை வழங்குவதை தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதேவேளை, செயன்முறைகளை மேம்படுத்துவதற்கும் வருவாய்க் கசிவுகளை தடுப்பதற்கும், இலங்கை சுங்கம் தொடர்புபட்ட கருமங்கள் பற்றி விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 2021 பெப்புருவரியில் சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல்

உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இலங்கைச் சுங்கம் அதன் நடவடிக்கைகளை மேலும் சீரமைத்தது.

2021ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளிலிருந்தான ஒட்டுமொத்த வருவாய்களின் அதிகரிப்பிற்கு இசைவாக வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள் மேம்பட்டன. மீளாய்வுட்படுகின்ற காலப்பகுதியில் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான அதாவது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா நாடுகளுடனான பொதுவாக்கப்பட்ட விசேட முன்னுரிமைத் திட்டங்களின் கீழான வர்த்தகம், அதிகரித்த சந்தை வாய்ப்புகளுக்கு வழிவகுத்தது. 2020 யூலையில் தாழ்ந்த மத்திய வருமான நாடொன்றாக இலங்கை மீள்வகைப்படுத்தப்பட்ட பின்னர், தாபிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி+ என அழைக்கப்படும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்திலிருந்து 2023 இன் இறுதியில் முடிவடைகின்ற அதன் செல்லுபடியான காலம் வரை தற்போதைய நன்மைகளை இலங்கை பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் 2020 திசெம்பர் 31 அன்று காலாவதியடைந்ததுடன் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பொதுவான நடைமுறைக்கு அமைவாக பின்னோக்கி செயற்படும் அடிப்படையில் மீள அதிகாரமளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வேறுபட்ட வரிமுறையாகக் காணப்படுகின்ற ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய வரிகள் 2021 சனவரி 01 அன்று நடைமுறைக்கு வந்ததுடன் ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி+ பயன்பெறுநராக இலங்கை ஐக்கிய இராச்சியத்திடமிருந்து அதே தீர்வையற்ற பெறுவழியினை தொடர்ந்தும் அனுபவிக்கும். எனினும், 2022ஆம் ஆண்டிலிருந்து புதிய ஜிஎஸ்பி திட்டத்தினை ஐக்கிய இராச்சியம் நடைமுறைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன் இலங்கையின் வர்த்தகத் திணைக்களம் ஐக்கிய இராச்சியத்திலுள்ள தொடர்புடைய அதிகாரிகளுக்கு தேவையான உள்ளீடுகளை வழங்கியுள்ளது. 2021 மார்சு 31 அன்று காலாவதியான ஜப்பான் மூலம் வழங்கப்பட்ட ஜிஎஸ்பி திட்டம் 2031 வரை 10 வருடங்கள்

அட்டவணை 5.7
இலங்கையின் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான ஏற்றுமதிகள்

முன்னுரிமை உடன்படிக்கை	2020	2021 (அ)			முக்கிய ஏற்றுமதி உற்பத்திகள் (ஏற்றுமதியின் அளவினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது)
	பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)	பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)	வளர்ச்சி (%)	பங்கு (%)	
முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜி.எஸ்.பீ)	3,671.8	4,312.7	17.5	80.8	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள்
இதில் ஐரோப்பிய ஒன்றியம் ((முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + உள்ளடங்கலாக) (ஆ)	1,907.0	2,402.1	26.0	45.0	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள்
ஐக்கிய இராச்சியம்	690.9	680.7	-1.5	12.8	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, போக்குவரத்துச் சாதனங்கள்
ஐக்கிய அமெரிக்கா (இ)	585.7	677.8	15.7	12.7	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இரசாயன உற்பத்திகள், வாசனைப் பொருட்கள்
ருசிய கூட்டாட்சி (ஈ)	142.2	132.9	-6.5	2.5	தேயிலை, இறப்பர் உற்பத்திகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், ஆடைகள் மற்றும் இரசாயன உற்பத்திகள்
அவுஸ்திரேலியா	79.2	103.5	30.7	1.9	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை, தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள்
கனடா	61.0	87.9	44.0	1.6	இறப்பர் உற்பத்திகள், ஆடைகள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு
யப்பான்	71.0	87.6	23.4	1.6	தேயிலை, இரசாயன உற்பத்திகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு
துருக்கி	80.3	74.1	-7.7	1.4	தேயிலை, இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், ஆடைகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள்
ஏனைய முன்னுரிமைகளில் பொதுவாக்கப்பட்ட முறைமை	54.6	66.1	21.1	1.2	
2000 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை	358.4	525.8	46.7	9.9	விலங்குத் தீனி, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, வாசனைப் பொருட்கள், சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், மர மற்றும் காகித உற்பத்திகள்
1975 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (உ)	204.7	238.6	16.6	4.5	ஆடைகள், தேயிலை, தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள்
1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை	89.5	91.8	2.5	1.7	வாசனைப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், விலங்குத் தீனி, இறப்பர் உற்பத்திகள்
2005 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை	53.0	62.3	17.6	1.2	சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், இயற்கை இறப்பர், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள்
2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தெற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம்	42.2	101.6	140.6	1.9	வாசனைப் பொருட்கள், தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், புடவைகள், தேயிலை
1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை	0.8	1.4	83.6	0.03	இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, புடவைகள்
முன்னுரிமை உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள்	**4,420.4**	**5,334.3**	**20.7**	**100.0**	
இலங்கையினுடைய மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் பங்காக	**44.0**	**42.7**			

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் 66 வீதமானவைக்கு ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பீ. முன்னுரிமையான நுழைவை வழங்கும் அதே வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதே தீர்வைகளிற்குப் பூச்சிய தீர்வை நுழைவை ஜீ.எஸ்.பீ. + வழங்குகிறது.
(இ) ஐக்கிய அமெரிக்கா ஜீ.எஸ்.பீ. 31.12.2020 அன்று காலாவதியானதிலிருந்து ஜீஎஸ்பீ தகைமைபெற்ற ஏற்றுமதிகளை காண்பிப்பதுடன் பின்னோக்கிய அடிப்படையுடன் மீள புதுப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
(ஈ) ருசியா, பெலாறுஸ் மற்றும் கசகஸ்தான் உள்ளடங்கலாக
(உ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை (1975) என அழைக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை வர்த்தகத் திணைக்களம்
இலங்கை சுங்கம்

கொண்ட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரஷ்ய சம்மேளனம், துருக்கி, அவுஸ்திரேலியா, கனடா, சுவிர்சர்லாந்து, நோர்வே மற்றும் நியூசிலாந்து போன்ற ஏனைய பல நாடுகளுக்கான ஏற்றுமதிகள் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்ற போதிலும் அந்நாடுகளால் வழங்கப்படும் ஜிஎஸ்பி திட்டங்களிலிருந்து இலங்கை தொடர்ந்தும் நன்மையடைந்தது. 2021ஆம் ஆண்டில் இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ், இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பன தொடர்ந்தும் இலங்கைக்கு நன்மையளித்து, சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்குப் பங்களித்தன. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் ஊடான ஏற்றுமதிகள், 2021ஆம் ஆண்டில் இந்நாடுகளுக்கான மொத்த ஏற்றுமதியின் ஏறத்தாழ 65 சதவீதமாக உயர்வாகக் காணப்பட்டன. அதேவேளை, இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பவற்றின் கீழான இறக்குமதிகளின் பங்கு இந்தியாவிடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்துமான மொத்த இறக்குமதிகளின் முறையே 5 சதவீதத்திற்கும் (ஐ.அ.டொலர் 209 மில்லியன்) மற்றும் 3 சதவீதத்திற்கும் (ஐ.அ.டொலர் 12 மில்லியன்) கீழேயே காணப்பட்டன. பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ்வருகின்ற ஆசிய பசுபிக் உடன்படிக்கைகள் (சீனா, தென்கொரியா மற்றும் வங்களாதேசம் நாடுகளுக்கான உயர்வான ஏற்றுமதிகள் காரணமாக) மற்றும் உலகளாவிய வர்த்தக முன்னுரிமை முறைமை (மெக்சிக்கோவிற்கான உயர்வான கறுவா ஏற்றுமதிகள் காரணமாக) என்பவற்றின் கீழான ஏற்றுமதிகள், 2021 காலப்பகுதியில் மேம்பட்டன. 2020 செத்தெம்பரில் ஆசிய பசுபிக் உடன்படிக்கையின் ஏழாவது உறுப்பு நாடாக மொங்கோலியா இணைந்துகொண்டதுடன் இலங்கை உள்ளடங்கலாக ஏனைய பங்கேற்கின்ற நாடுகள் 2021 சனவரி 1 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மொங்கோலியாவுடன் வரிச்சலுகைகளை எதிரீடான அடிப்படையில் பரிமாற்றம் செய்துகொண்டன. 2021 காலப்பகுதியில் சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை கீழான ஏற்றுமதிகள் குறைவான மட்டத்தில் காணப்பட்ட அதேவேளை தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் கீழான ஏற்றுமதிகள் மேம்பட்டன. உலக வர்த்தக அமைப்புடனான இலங்கையின் பல்தரப்பு வர்த்தக ஈடுபாடு 2021இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. சீனா, ஜப்பான், இந்தோனேசியா மற்றும் வங்காளதேசம் போன்ற எதிர்கால வாய்ப்புக்களைக் கொண்ட வர்த்தகப் பங்காளர்களுடன் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் பற்றி கலந்துரையாடுவதற்கும் உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடுவதற்குமான பணி முன்னெடுக்கப்படுவதுடன் 2021 காலப்பகுதியில் சிங்கப்பூர்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மீளாய்வுச் செயன்முறையும் முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை ஏற்றுமதி சந்தையினை விரிவடையச்செய்து பன்முகப்படுத்துவதற்கு பிராந்திய அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதாரப் பங்குடமை போன்ற வேறு பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளுடன் இணைந்துகொள்வதற்கான சாத்தியப்பாட்டையும் இலங்கை கண்டறியலாம்.

5.2.2 பணிகள் கணக்கு

பணிகள் கணக்கின் மிகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்திருப்பினும் உலகளாவிய நோய்த்தொற்றுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் முந்திய மட்டங்களை விடவும் குறைவாகக் காணப்பட்டது. கணனி சார்ந்த பணிகளிலிருந்தான ஆரோக்கியமான வளர்ச்சி, சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் படிப்படியாக மேம்பட்டமை அத்துடன் கடல் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள் தொடர்புபட்ட சரக்கனுப்பல் பணிகளில் மேம்பாடுகள் இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. இதன்விளைவாக, பணிகள் கணக்கின் மிகைகள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 0.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1.6 பில்லியனுக்கு வகைகூறின.

பயணம் மற்றும் சுற்றுலா

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை, பாதுகாப்பாக பயணிப்பதற்கான அமைவிடமாக இலங்கை பற்றிய மேம்பட்ட உலகளாவிய எண்ணப்பாங்குடன் இணைந்து தொடர்புடைய அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட காத்திரமான வழிமுறைகளினால் உதவியளிக்கப்பட்டு 2021ஆம் ஆண்டின் பிந்திய பகுதியில் உறுதியான மீட்சியொன்றை அவதானித்தது. 2021 சனவரியில் வெளிநாட்டுப் பயணிகளுக்காக நாடு திறக்கப்பட்டதிலிருந்து அவ்வப்போதான முடக்கல்களுக்கு மத்தியிலும் பன்னாட்டு பயணிகளின் வருகைகளில் நிலையான அதிகரிப்பொன்றை இலங்கை கண்ணுற்றது. செயல்திறன்மிக்கது என உறுதிப்படுத்தப்பட்ட ஆரோக்கியமானது பாதுகாப்பானதுமான நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சுற்றுலாத்துறையை இது இயலச்செய்தது. நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் அவசரநிலையின் காரணமாக 2021 ஏப்பிறலில் தற்காலிக கட்டுப்படுத்தலினைத் தொடர்ந்து இலங்கை 2021 யூலையில் தனிமைப்படுத்தலற்ற நுழைவுடன் முழுமையாக தடுப்புமருந்தை பெற்றுக்கொண்ட பயணிகளுக்காக திறக்கப்பட்டது. வெற்றிகரமான உள்நாட்டு தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து இவ்வழிமுறைகளின் விளைவாக பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 செத்தெம்பர் தொடக்கம் உறுதியாக அதிகரித்து, 2021 திசெம்பரில் 89,506 வருகைகளுடன் உச்சத்தை எட்டியது. சுற்றுலாத்துறையினை மீட்டெடுப்பதற்கான ஆதரவளித்தலில் அனைத்து சுற்றுலா தொழில்முயற்சிகள் மற்றும் சுற்றுலாப் பணிகளுக்குமான சுகாதார மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளைக் குறித்துரைக்கின்ற நடத்தைக் கோவைகளைத்

திருத்துதல் மற்றும் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களை தரமுயர்த்துதல் போன்ற பல்வேறு வழிமுறைகளை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தினர். 2019இலிருந்து சுற்றுலாத்துறை அனுபவித்த பின்னடைவுகளிலிருந்து மீட்சியடைவதற்கு இயலுமாகவிருந்த காலம் வரையில், இத்துறையானது நிதியியல் துறைக்கு செலுத்தத்தக்க அதன் படுகடன் மீதான நீடித்த கடன் சட்டஇசைவுத்தாமதத்தினையும் வழங்கியது. சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் 2020ஆம் ஆண்டின் 507,704 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 194,495 ஆக 61.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதில் 507,311 வருகைகள் 2020ஆம் ஆண்டின் முதல் மூன்றுமாத காலப்பகுதியில் பதிவாகியிருந்தன. புவிசார் அரசியல் பதற்றங்களால் தோற்றுவிக்கப்பட்ட உலகளாவிய சுற்றுலாத்துறைக்கான இடையூறுகளுக்கு மத்தியில் சுற்றுலாப்பயணி வருகைகளில் உறுதியான அதிகரிப்பானது 2022ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் தொடர்ந்தது.

சுற்றுலாப்பயணிகளின் வருகைகளுக்கான ஆதிக்கம் செலுத்துகின்ற பிராந்தியமாக ஐரோப்பிய ஒன்றியம் விளங்கிய அதேவேளை சுற்றுலாப்பயணிகளின் வருகைக்கான தனியொரு நாடாக இந்தியா ஆதிக்கம் செலுத்தியது. ஐரோப்பாவிலிருந்து ஏறத்தாழ 93,496 வருகைகள் பதிவாகி மொத்த சுற்றுலாப் பயணிகள் வருகைகளில் 48 சதவீதத்திற்கு வகைகூறியது. ஆசிய பசுபிக் பிராந்தியமானது சீனாவிலிருந்து பயணிகள் வருகைதராமைக்கு மத்தியிலும் 83,926 சுற்றுலாப்பயணிகளுடன் 2021ஆம் ஆண்டில் இரண்டாவது கூடிய வருகைகளைப் பதிவுசெய்து மொத்த சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் 43.2 சதவீதத்திற்கு வகைகூறியது. 2021 காலப்பகுதியில் தனிப்பட்ட நாடுகள் அடிப்படையிலான சுற்றுலாப்பயணி வருகை நியதிகளில் இந்தியா

அட்டவணை 5.8
சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

	2017	2018	2019	2020	2021(அ)	ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2021
சுற்றுலா பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை)	2,116,407	2,333,796	1,913,702	507,704	194,495	-61.7
வருகையின் நோக்கத்தின் அடிப்படையில்						
பொழுதுபோக்கு	1,744,149	1,979,819	1,592,212	444,328	157,766	-64.5
வியாபாரம்	70,683	71,255	70,068	13,946	3,956	-71.6
ஏனையவை	301,575	282,722	251,422	49,430	32,773	-33.7
சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000)	23,068	25,205	19,902	4,315	2,937	-31.9
தங்கும் அறை குடியிருப்பு வீதம் (%)	73.3	72.8	57.1	15.0	18.6	24.3
மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்)	598,143	711,961	646,362	124,189	101,903	-17.9
தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ)	282,622	305,066	337,755	244,609	523,936	114.2
மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) (ஆ)	359,215	388,487	402,607	347,751	357,927	2.9
நேரடி தொழில்நிலை	156,369	169,003	173,592	175,990	177,476	0.8
மறைமுக தொழில்நிலை	202,846	219,484	229,015	171,761	180,451	5.1

(அ) தற்காலிகமானது
(ஆ) மதிப்பீடுகள்

மூலங்கள் : இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.10
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்



மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

56,268 வருகைகளுடன் முன்னிலை வகித்து அதனைத் தொடர்ந்து ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பாகிஸ்தான் என்பன இடம்பிடித்தன. 2021 ஓகத்து பிந்திய பகுதியில் இலங்கை முழுமையாக தடுப்பு மருந்துபெற்றுக்கொண்ட பயணிகளுக்கு அதன் எல்லைகளைத் திறந்து இந்தியாவில் அதன் சுற்றுலாப்பிரச்சாரத்தை மீளத்தொடங்கியது. ரஷ்யாவிலிருந்து ஒப்பந்த அடிப்படையிலான விமான பயணங்களை இலக்கு வைத்து இடம்பெற்ற சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களின் ஊக்குவிப்பு காரணமாக 2021ஆம் ஆண்டில் இரண்டாவது பாரிய சுற்றுலாப்பயணிகள் வருகின்ற நாடாக ஐக்கிய இராச்சியத்தினை ரஷ்யா முந்திச் சென்றது. மரபுசார்ந்த மற்றும் மரபுசாரா சந்தைகள் இரண்டிலுமிருந்தும் சுற்றுலாப்பயணிகளைக் கவருவதற்கான வழிகளாக கிரமமான பயணவழிகள் மற்றும் பருவகால ஒப்பந்த அடிப்படையிலான விமான பயணத்தொழிற்பாடுகள் ஊடாக அதிகரிக்கப்பட்ட தொடர்புகை என்பன ஊக்குவிக்கப்படலாம் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. 2021ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த சுற்றுலாப்பயணி வருகைகளின் 56.4 சதவீதத்திற்கு முதல் 5 சுற்றுலாப்பயணிகள் வருகின்ற நாடுகளே வகைகூறின.

சுற்றுலாப்பயணி ஒருவருக்கான சராசரி செலவிடல் மற்றும் தங்குகின்ற காலம் இரண்டிலும் அதிகரிப்பொன்று காணப்படுகின்ற வேளையில் குறைவடைந்த சுற்றுலாப்பயணி வருகைகளின் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் மிதமடைந்தன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் 2021இற்கான சுற்றுலாப்பயணி செலவிடல் மற்றும் தங்கும் காலம் பற்றிய திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம், சுற்றுலாப்பயணி ஒருவருக்கான சராசரி செலவிடல் 2020ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 158.1இலிருந்து 2021ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 172.6 ஆக உயர்வடைந்தது. மேலும், சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி தங்கும் காலமானது 2020ஆம் ஆண்டின் 8.5 நாட்களுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 15.1 நாட்களாக இருக்குமென மதிப்பிடப்பட்டு,

சிறப்புக்குறிப்பு 5
இலங்கையில் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சிக் காலப்பகுதியில் சுற்றுலாத்துறையின் வகிபாகம்

அறிமுகம்

ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பினால் சுற்றுலாத்துறை என்பது "தனியாள் அல்லது வியாபார/தொழில்சார் நிபுணத்துவ நோக்கங்களுக்காக மக்கள் நாடுகளுக்கு அல்லது தமது வழக்கமான சூழலுக்கு வெளியில் அமைந்துள்ள இடங்களுக்கு நகர்வதனை உள்ளடக்கின்ற ஒரு சமூக, கலாசார மற்றும் பொருளாதார நிகழ்வு" என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. பன்னாட்டுச் சுற்றுலாத்துறை (இதனகத்துப் பின்னர் "சுற்றுலாத்துறை எனக் குறிப்பிடப்படும்) என்பது அடிப்படையில் பணிகளின் ஏற்றுமதியாகும். சுற்றுலாத்துறை வருவாய்கள் மற்றும் செலவினம் என்பன சென்மதி நிலுவையின் (சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமைக் கையேடு -பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேடு 6) பொருட்கள் மற்றும் பணிகள் கணக்கில் "பணிகளின்" கீழ் "பயணம்" எனப் பதியப்படுகின்றன. உள்ளீட்டுக் கணக்கின் மீதான வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்கள் குறைந்தளவில் காணப்படுகின்றமையினால் ஒரு நாட்டிற்கான தேறிய வெளிநாட்டு நாணய வருவாய்களின் முக்கிய மூலமொன்றாக சுற்றுலாத்துறை திகழ்கின்றது. வெளிநாட்டு நாணய வருவாயீட்டலுக்கு மேலதிகமாக சுற்றுலாத் துறையானது பொருளாதார வளர்ச்சி, தொழில்வாய்ப்பு மற்றும் பிராந்திய வருமான ஏற்றத்தாழ்வில் குறைப்பு என்பவற்றிற்கும் பங்களிக்கிறது. அமைதியான, தூய்மையான, பாதுகாப்பான மற்றும் வெளிநாட்டினருக்கு இசைவான சூழல் என்பவற்றுடன்கூடிய இலங்கையின் மூலோபாய அமைவிடம், கவர்ச்சிகரமான இயற்கை வளங்கள், கலாசார பன்முகத்தன்மை மற்றும் வளமான வரலாறு ஆகியன இக்கைத்தொழில் செழிப்படைவதற்கான அடிப்படையை வழங்குகின்றன. ஆதலால், சுற்றுலாத் துறையின் அபிவிருத்தியானது குறிப்பாக உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னைய பொருளாதார மீட்சிக் காலப்பகுதியில் நாட்டில் வெளிநாட்டுத் துறைச் சமமின்மைகளைத் தணிப்பதற்கான முக்கிய பொருளாதார முன்னுரிமையாக அமையும்.

தற்காலத்தில் பொருளாதாரத்திற்குச் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களின் முக்கியத்துவம்

2014 மற்றும் 2019இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய வருவாய்களின் மூன்றாவது மிகப்பெரும் மூலமாக சுற்றுலாத்துறை காணப்பட்டதுடன் இக்காலப்பகுதியில் மொத்த வெளிநாட்டு நாணய வருவாய்களின் ஏறத்தாழ 14 சதவீதத்திற்குப் பங்களித்தது. வெளிநாட்டு நாணய வருவாய்களின் மிகப்பெரும் மூலமாக விளங்குகின்ற ஏற்றுமதி வருவாய்கள் 2010இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,626 மில்லியனிலிருந்து 2021இல் ஐ.அ.டொலர் 12,499 மில்லியனிற்கு வளர்ச்சியடைந்த போதிலும், அத்தகைய ஏற்றுமதிகளின் ஊடாக வருவாய்களை உருவாக்குவதானது உள்ளீடுகள் மீதான கணிசமான அளவிலானதொரு இறக்குமதிச் செலவினத்தினைத் தேவைப்படுத்தியது. எனினும், தனியானதொரு கைத்தொழிலாக சுற்றுலாத்துறையானது உள்ளீட்டு இறக்குமதிகள் மீதான ஒப்பீட்டளவிலான தாழ்ந்த தங்கியிருக்கும் தன்மையுடன் கணிசமானளவிலான வருவாய்களை உருவாக்கும் இயலுமையைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, இலங்கையில் சுற்றுலாத்துறையின் உச்ச ஆண்டில் அதாவது 2018இல் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 4,381 மில்லியன் என மதிப்பிடப்பட்டு, ஆடைக் கைத்தொழிலின் தேறிய ஏற்றுமதி வருவாய்கள் அதாவது, புடவைகள் மீதான இறக்குமதிச் செலவினம் நீங்கலாக ஏற்றுமதி வருவாய்கள் (ஐ.அ.டொலர் 2,459 மில்லியன்) மற்றும் தேயிலை (ஐ.அ.டொலர் 1,428 மில்லியன்) மற்றும் இறப்பர் உற்பத்திகள் (ஐ.அ.டொலர் 875 மில்லியன்) போன்ற ஏனைய முக்கிய கைத்தொழில்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் என்பவற்றினை விஞ்சிக் காணப்பட்டன. அதேவேளை, வெளிநாட்டு நாணய வருவாய்களின் இரண்டாவது மிகப்பெரும் மூலமாக விளங்குகின்ற தொழிலாளர் பணவனுப்பல்கள் 2014 மற்றும் 2019இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஆண்டு சராசரியில் ஐ.அ.டொலர் 7,023 மில்லியன் கொண்ட சராசரியொன்றினைக் காட்டிய போதிலும் 2021இல் ஐ.அ.டொலர் 5,491 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தன. ஆதலால், சுற்றுலாத்துறையானது இலங்கைக்கான வெளிநாட்டு நாணய வருவாய்களின் முக்கிய மூலமொன்றாகக் காணப்படுவதுடன் வெளிநாட்டுத்துறை அழுத்தங்களுக்கு நாட்டின் தங்கியிருக்கும் தன்மையினைப் பேணுவதற்கான முக்கிய வகிபாகத்தினையும் கொண்டுள்ளது.

சுற்றுலாத் துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மை

உலகளாவிய சுற்றுலாத்துறையானது உலகளாவிய நிதி நெருக்கடி மற்றும் தொற்றுநோய்களின் பரவல் போன்ற நிகழ்வுகளினால் காலத்திற்குக் காலம் பின்னடைவுகளைச் சந்தித்த போதிலும் அண்மைய தசாப்தங்களில் வலுவான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் பிரகாரம் 2019இல் உலகில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1,468 மில்லியனை அண்மித்தன. இலங்கையும் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த 2010இலிருந்து கணிசமான அதிகரிப்பொன்றுடன் கடந்த 2018 வரையிலான காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் தொடர்ச்சியானதொரு அதிகரிப்பினைக் கண்டுள்ளது. 2018இல் புகழ்பெற்ற சுற்றுலாத்துறைத் தகவல் வழங்குநரான "லோன்லி பிளனட்" இனால் 2019ஆம் ஆண்டிற்கான சிறந்த நாடாக இலங்கை பெயரிடப்பட்டிருந்தது. எனினும், துரதிஷ்டவசமாக 2019 ஏப்பிறலில் உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களின் காரணமாக 2019இல் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் பின்னடைவொன்றினைக் கண்ட போதிலும், உலகளாவிய சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் அவ்வாண்டு காலப்பகுதியில் வரலாற்றில் உயர்ந்தளவிலான எண்ணிக்கைகளைப் பதிவுசெய்து சாதனையை எட்டியது. இப்பின்னடைவுக்கு மத்தியிலும், சுற்றுலாப் பயணிகளின் வருகைகளும் வருவாய்களும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக மீண்டும் வீழ்ச்சியடைய ஆரம்பிப்பதற்கு முன்னர் 2019இன் இறுதியளவில் மற்றும் 2020இன் முன்னைய காலப்பகுதியில் மீட்சியொன்றினைக் காண்பித்தன. அதேவேளை உலகளாவிய சுற்றுலாத்துறையானது எதிர்வரும் ஆண்டு காலப்பகுதியில் மெதுவானதொரு மீட்சியினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2022 சனவரியில் ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பினால் அதன் சுற்றுலாத்துறை நிபுணர்கள் குழாமினுள் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் பிரகாரம், பதிலிறுப்பாளர்களில் 63 சதவீதமானோர் தமது நாடுகளில் பன்னாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2024 வரை 2019இன் மட்டத்திற்கு மீட்சியடையாது என எதிர்பார்த்த வேளையில், பதிலிறுப்பாளர்களில் 79

சதவீதமானோர் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பயணிகளின் வருகைகள் 2024 வரை 2019இன் மட்டங்களுக்கு மீட்சியடையாது என நம்பினர். எனினும், ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு, உலக பயண மற்றும் சுற்றுலாத்துறைச் சபை மற்றும் சந்தைப் பகுப்பாய்வாளர்கள் கணிசமானளவு உயர்வடைந்த சேமிப்புக்களும் ஆற்றல்வாய்ந்த பயணர்களுக்கு மத்தியில் பயணிப்பதற்கான அவாவொன்றும் காணப்படுவதாகக் காண்பித்துள்ள வேளையில், சுற்றுலாத்துறைசார் சிறப்பியல்புகள் உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக அடிப்படையிலேயே மாற்றமடைந்துள்ளன. ஆதலால், பொருத்தமான உபாயங்கள் வினைத்திறனுடனும் செயல்திறன்வாய்ந்த விதத்திலும் நடைமுறைப்படுத்தப்படுமேயானால், 2022 மற்றும் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியிலும்கூட, கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு மற்றும்/அல்லது சுற்றுலாத்துறையிலிருந்து கணிசமானளவிலான வெளிநாட்டு நாணய வருவாய்களை உருவாக்குவதற்கான ஆற்றல்வாய்ந்த தன்மை இலங்கைக்குக் காணப்படுகிறது.

"புதிய இயல்பு நிலை" யுகத்தில் உலகளாவிய நோய்த்தொற்றும் சுற்றுலாத்துறைப் பதிலிறுப்பும்

சுற்றுலாத்துறையை ஆதரிப்பதன் முக்கியத்துவத்தினை அடையாளங்கண்டு அரசாங்கமும் மத்திய வங்கியும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் படுகடன் சட்ட இசைவுத்தாமதம், சலுகைக் கடன் திட்டங்கள், கட்டணத் தளர்த்தல்கள், மின்பட்டியல்கள் மீதான சலுகை, ஒரே தடவையிலான மானியங்கள் மற்றும் வரிச் சலுகை வழிமுறைகள் போன்ற ஏராளமான நிவாரண வழிமுறைகளை வழங்கின. அதேவேளை, சுற்றுலாத்துறை தொடர்பில் நாட்டிற்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலினை நிச்சயப்படுத்தும் விதத்தில், சுற்றுலா விடுதிப் பணி வழங்குநர்கள் வதிவற்றோரிடமிருந்தான கொடுப்பனவுகளை வெளிநாட்டு நாணயங்களில் மாத்திரம் ஏற்பதனைத் தேவைப்படுத்துகின்ற விதிமுறைகள் 2022 சனவரியில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்டன. துறையானது ரூபாய்களிலும் வெளிநாட்டு நாணயங்களிலும் அதிகளவிலான முதலீடுகளை மேற்கொண்டுள்ளமையினால் பாரியளவிலான மூலதன முதலீடுகளின்றி வெளிநாட்டு நாணயத்தில் அதன் வருவாய்களைச் சுற்றுலாத்துறை வலுப்படுத்துவதனையும் இது அனுமதிக்கிறது. அதேவேளை, துறையானது ஒட்டுமொத்தமாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக குறிப்பிடத்தக்க பின்னடைவொன்றினை எதிர்கொண்ட போது சில சிறிய அளவிலான சுற்றுலா விடுதிகள் தனிமைப்படுத்தல் மையங்களாக வாடகைக்குக்கொடுக்கப்பட்டு செயற்பாடுகளைத் தொடர்ந்தன.

"புதிய இயல்பு நிலை" இன் பல்வேறு புதிய பண்புகளை அல்லது உலகளாவிய சுற்றுலாத்துறையில் பின்பற்றப்பட வேண்டிய தற்போதைய போக்குகளை உலக பயண மற்றும் சுற்றுலா சபையானது எடுத்துக்காட்டியுள்ளது (பயணத்தின் போக்குகள் - 2021இல் மற்றும் அதற்கப்பால், பயணத்திலும் சுற்றுலாத்துறையிலும் தோற்றம்பெற்றுவரும் நுகர்வோர் போக்குகள், 2021 நவெம்பர்). உதாரணமாக, பயணிகள் முற்கூட்டியே முற்பதிவுகளை மேற்கொள்வதில் சந்தேகம் கொண்டுள்ளமைக்கு நாடுகள் விதித்துள்ள கட்டுப்பாடுகளில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்றிற்குள்ளாகும் இடர்நேர்வுகள் என்பன காரணமாயமைகின்றன. மேலும், பயணிகள் அபராதமின்றி திடீரென இரத்து செய்ய அனுமதிக்கின்ற தங்குமிட மற்றும் போக்குவரத்துத் தெரிவுகளை விரும்புகின்றனர். இரண்டாவதாக, உலகளாவிய நோய்த்தொற்றுக் காலத்தில் தொலைவில் பணிபுரிவதனை இயல்புநிலைக்குட்படுத்துவதன் காரணமாக, "இலத்திரனியல் நாடோடிகள்" மற்றும் "ஸ்ரேகேஷன்" போன்ற எண்ணக்கருக்கள் பிரபல்யமடைந்துள்ளதுடன் பயணிகள் நீண்ட கால வீசாக்கள், தங்குமிடங்களில் நீண்ட கால கழிவுகள், விரைவான இணையத்தள மற்றும் ஏனைய பணியுடன் தொடர்புடைய வசதிகள் போன்றவற்றினை நாடுகின்றனர். 2021இல் தங்கியிருக்கும் காலமும் சுற்றுலாவொன்றிற்கான செலவிடலும் அதிகரித்துள்ளதாகப் பன்னாட்டுச் சுற்றுலாத்துறை அமைப்புக்கள் மேலும் குறிப்பிடுகின்றன. மூன்றாவதாக, சுகாதார கரிசனைகள் காரணமாக வயது முதிர்ந்தவர்கள் அல்லது சிறு குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களைக் காட்டிலும் அதிகளவிலான இள வயது பயணிகள் (அவர்களது 20 தொடக்கம் 40 வயது வரை) பயணங்களைத் தெரிவுசெய்வதுடன் பயணிகளின் போக்கு மாற்றமடைந்துள்ளது. ஆதலால், சுற்றுலாத்துறை மற்றும் நாடு முழுதளவில் இத்தகைய சுற்றுலாப் பயணிகளின் தேவைகளுக்கும் விருப்பிற்கும் ஏற்ப இசைந்துசெல்வதற்குரிய இயலளவினைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வயதுக் குழுவினர் சாகசத்தையும் தனித்துவத்தையும் பெறுமதியாகக் கருதுவதுடன் அவர்கள் சுற்றுலாப் பயணங்களைத் திட்டமிடுவதற்கும் முற்பதிவுகளை மேற்கொள்வதற்கும் செல்லிடத் தொலைபேசிகளையும் இலத்திரனியல் பணிகளையும் பயன்படுத்துவதுடன் சமூக ஊடகங்கள், வலைப்பதிவுகள் மற்றும் மற்றைய பயணிகளின் இணையவழி மீளாய்வுகள் என்பவற்றில் தங்கியுள்ளனர். நான்காவதாக, உளநலம் மற்றும் தனியாள் ஆரோக்கியம் போன்றவற்றைப் பாராட்டுதல் அண்மைய கடந்த காலங்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதுடன் பயணிப்பதன் ஊடாக இத்தேவைகளை அடைந்துகொள்வதிலுள்ள நுகர்வோர் ஆர்வமும் அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் தம்மைப் பரோபாகார நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக்கொள்ள முடியுமான "பரோபாகாரச் சுற்றுலா" மற்றும் உலகெங்கிலுமுள்ள சூழலியல்சார் மையங்கள் தொடர்பிலான அறிவைப் பெறுவதற்குரிய "சூழல்நேய சுற்றுலா" என்பவற்றிற்கான ஆர்வமொன்றும் காணப்படுகின்றது. ஐந்தாவது, முக்கியமான சுற்றுலாத்துறைத் தளங்களுக்கும் மற்றும் கிராமப்புற சுற்றுலாத்துறை இடங்களுக்கு அண்மையிலுள்ள அதிகளவு அறியப்படாத இடங்களைக் கண்டறியும் இரண்டாந்தர சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ளும் போக்கும் அதிகரித்துள்ளது.

இலங்கைச் சுற்றுலாத்துறை: முன்னோக்கிய பார்வை

சுற்றுலாத்துறை அமைச்சும் அதன் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களும் தனியார் துறையுடன் இணைந்து நாட்டின் சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கும் இலக்குச் சந்தைகளில் இலங்கையை ஊக்குவிப்பதற்குமான பெருமளவிலான வழிமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் அபிவிருத்திசெய்யப்பட்ட சுற்றுலாத்துறை மூலோபாய செயற்றிட்டம் 2022-2025ஆனது துறையினைத் தரமுயர்த்துவதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான காத்திரமான வழிகாட்டலை வழங்குகிறது. அனைத்தையுமுள்ளடக்கிய சுற்றுலாத்துறைக் கொள்கையொன்று சுற்றுலாத்துறை அமைச்சினால் வரையப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. எனினும், கொள்கை

அபிவிருத்தியிலும் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதிலும் உள்ள முக்கியத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்ற சில அம்சங்கள் காணப்படுகின்றன:

(i) சுற்றுலாத்துறையின் புதிய இயக்கிகளைக் கண்டறிதல்

ஆரோக்கிய சுற்றுலாத்துறை, கல்விசார் சுற்றுலாத்துறை மற்றும் பரோபாகார சுற்றுலாத்துறை போன்ற சுற்றுலாத்துறையின் புதிய பகுதிகளில் பணிகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் இலங்கை ஆற்றல்வாய்ந்த தன்மையினைக் கொண்டுள்ளது. ஆரோக்கியமான சுற்றுலாத்துறையில் அமைதியான மற்றும் ஓய்வான தங்குதல்கள், ஓய்விடங்கள், தியானம், யோகா வாய்ப்புக்கள் மற்றும் ஆயுர்வேத சிகிச்சைகள் போன்ற உடல் மற்றும் உள நலனோம்புகையினை மேம்படுத்துகின்ற வசதிகளை வழங்குவதனை இலக்காகக்கொண்ட வாய்ப்புக்கள் விரிவுபடுத்தப்படலாம். கல்விசார் சுற்றுலாத்துறையின் கீழ் ஆங்கிலம் மற்றும் தெற்காசிய கலாசாரம் மற்றும் நாகரீகம் போன்ற பகுதிகளில் குறுங்கால அல்லது நீண்ட கால கல்விசார் நிகழ்வுகள் தற்போதுள்ள அல்லது புதிய கல்விசார் நிறுவனங்களில் வழங்கப்படலாம். கிழக்காசியர்கள் பள்ளிக் கல்வியை முடித்ததன் பின்னர் வெளிநாட்டில் ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்வது பொதுவானதொன்றாகக் காணப்படுவதுடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை இலங்கையில் வழங்க முடியும். வெளிநாட்டு மாணவர்களுக்குப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வீட்டில் இருந்தவாறு மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவும் ஊக்குவிக்கப்பட முடியும். பரோபாகார சுற்றுலாத்துறை நாட்டில் அறப்பணிகள் மற்றும் வேளாண்மைத் தொழில் போன்ற பரோபாகார நடவடிக்கைகளில் வெளிநாட்டவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை வழங்க முடியும்.

(ii) இயற்கைச் சுற்றுச்சூழலைப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றின் பெருமளவு முக்கியத்துவம்

ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு மற்றும் உலக பயண மற்றும் சுற்றுலாத்துறைச் சபை என்பவற்றின் பல்வேறு வெளியீடுகளிலும் அதேபோன்று இலங்கைச் சுற்றுலா விடுதித் துறையிலிருந்தான தொலைத்தொடர்பூட்டல்களிலும் குறிப்பிடப்பட்டதற்கமைய உலக பயணிகளிடையே இயற்கையைப் பாதுகாத்தல் மற்றும் சூழல் நேயம் என்பன மீதான வலுவான மற்றும் வளர்ந்துவரும் கரிசனையொன்று காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிடங்களின் கட்டடவாக்கமானது (கடற்கரையோரங்களில் உள்ள சுற்றுலா விடுதிகள் போன்றன) இயற்கையையோ அல்லது மற்றவர்களுக்கான இயற்கை வனப்புடனான காட்சிகளையோ அழித்துவிடாதிருப்பதனையும் பொதுமக்களது பார்வையிலிருந்து மறைந்துள்ள காடுகள் மற்றும் ஏனைய பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் அத்துமீறுகையினைத் தோற்றுவிக்காதிருப்பதனையும் நிச்சயப்படுத்துகின்ற பாரியளவிலானதொரு வகிபாகத்தினை இலங்கை அதிகாரசபைகள் கொண்டுள்ளன. மேலும், பார்வையிடுமிடங்களுக்கும் தங்குமிடங்களுக்கும் அருகில் ஒலி மாசடைதலானது முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். சுற்றுலாத்துறைப் பணி வழங்குநர்கள் சூழல் நேயமிக்க விதத்தில் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனரா (உதாரணமாக, திமிங்கிலங்களைப் பார்வையிடச்செல்லும் சுற்றுலாக்கள் திமிங்கிலங்களுக்கு இடையூறு விளைவிக்கின்றன) என்பதனை மேற்பார்வை செய்யும் நடைமுறைகளும் அவசியமாகின்றன. அத்துடன், அண்மையில் சட்டமாக்கப்பட்ட விலங்கின நலம்பேணல் சட்டமானது யானைகள் மற்றும் வன விலங்குகள், குறிப்பாக சிறுத்தைகள் நடத்தப்படும் விதம் காரணமாக உருவாக்கப்படும் எதிர்மறையான விளம்பரத்தினைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

(iii) தனியாள் சுற்றுலாப் பயணிகளின் பயணம் தொடர்பிலான கவனம்

இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை புறப்படுகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு மத்தியில் பெரும்பாலும் ஆண்டு அடிப்படையொன்றில் கணக்கெடுப்பொன்றினை மேற்கொள்கிறது. 2018-2019 கணக்கெடுப்பு அறிக்கையில் சுற்றுலாப் பயணிகளில் 17 சதவீதமானோர் மாத்திரமே பயணத் தொகுதிகளைப் பயன்படுத்தினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது, சுற்றுலாப் பயணிகள் தமது சொந்தப் பயணங்களையே பெருமளவில் மேற்கொள்ளத் திட்டமிடுகின்றனர் என்பதனைக் காண்பிக்கின்றது. மேலும், கணக்கெடுப்பிற்குள்ளாக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளில் 60 சதவீதமானோர் நண்பர்களிடமிருந்தும் உறவினர்களிடமிருந்தும் பயணத் தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் 30 சதவீதமானோர் இணையவழி மூலங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளமையானது தனியாள் பரிந்துரைகளதும் தனியாள் இணையவழி மீளாய்வுகளதும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகிறது. இக்கண்டறிதல்கள் ஒவ்வொரு சுற்றுலாப் பயணியையும் திருப்திப்படுத்துவதன் முக்கியத்துவத்தினையும் தனிநபர்களினால் மேற்கொள்ளப்படும் விளம்பரப்படுத்தல்கள் தொடர்பிலான தாக்கத்தினையும் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், சுற்றுலாப் பயணிகளில் 60 சதவீதமானோர் மாத்திரம் அவர்களது தங்கியிருத்தலானது "மிகச் சிறப்பாக" அமைந்திருந்ததெனக் கூறியிருந்ததுடன் சுற்றுலாப் பயணிகளில் 36 சதவீதமானோர் மாத்திரமே மீண்டும் இலங்கைக்கு வருகைதர விரும்புவதாகத் தெரிவித்தமையினால் பொதுவான திருப்தி மட்டமானது மிதமடைந்து காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுகின்ற நுட்பமான அசௌகரியங்கள், அவர்கள் பெற்றுக்கொண்ட ஒட்டுமொத்த அனுபவத்தையும் அழிக்கவல்லன என்பதுடன் அது எதிர்மறையான விளம்பரப்படுத்தலைத் தூண்டி மொத்த சுற்றுலாத்துறையையும் பாதிப்படையச் செய்யும்.

(iv) இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் பாரியளவிலான பயன்பாடு

சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தினையும் உயர் அடர்த்தியிலிருந்து சமூக இடைவெளிகொண்ட சுற்றுலாத்துறைக்கு மாறுதலடைதலினையும் மேம்படுத்தும் பொருட்டு இலத்திரனியல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டினை உயர்வடையச் செய்வதற்கான நோக்கெல்லையொன்று காணப்படுகிறது. இப்போக்கில் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை இணையத்தளம் மற்றும் சுற்றுலாத்துறைச் செல்லிடத் தொலைபேசிச் செயலி (விருத்திசெய்யப்பட்டு வருகிறது) போன்ற சில படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், இலத்திரனியல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கான மேம்பட்ட வழிமுறைகள் விரைவாக அவசியப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன "கொவிட்-19 மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் பகுதிகளில் சுற்றுலாத்துறையின் எதிர்காலம்" (2022 மார்சு) இல் சுற்றுலாத்துறையில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் விரிவடையும் வகிபாகத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில், சுற்றுலாத்துறையானது மேற்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும் சீகிரியா பிராந்தியத்திலும் கவனம் செலுத்தியுள்ளது. தேசிய பூங்காக்களில் மக்கள் திரள்வதானது அண்மைக் காலமாக கணிசமானளவிலான எதிர்மறையான

விளம்பரப்படுத்தலினைப் பெற்றுள்ளது. அதேவேளை, அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய புராதன நகரங்களும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில்லை (புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 86). நாட்டின் பிற பகுதிகள் ஆரோக்கியம், கிராமப்புற, பரோபாகார, சாகச சுற்றுலாத்துறை போன்றவற்றினை மேற்கொள்வதற்கான சிறந்த இடங்களை வழங்குவதுடன் சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிகளிலுள்ள இடங்களை நோக்கி ஈர்க்கப்படுவதற்கு நெறிப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை, தனியாள் சுற்றுலாத்துறைத் தளங்களில் பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நிகழ்வுகள் (பெரஹராக்கள் மற்றும் திருவிழாக்கள், சிறியளவிலானவையாக இருப்பினும்), பொதுப் போக்குவரத்து, பாதுகாப்புப் பணிகள், சமய ஸ்தானங்களுக்கான ஆடை விதிமுறைகள், தேசிய பூங்காக்களில் தடைசெய்யப்பட்ட விடயங்கள் போன்றன தொடர்பிலான தகவல்களை நேரலையில் இற்றைப்படுத்தாதிருத்தல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக சுற்றுலாப் பயணிகள் அசௌகரியங்களுக்குள்ளாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளனர். ஆதலால், விருத்தி செய்யப்பட்டுவருகின்ற செல்லிடத் தொலைபேசிச் செயலிக்கு அல்லது சுற்றுலாப் பயணிகளுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட இணையத்தளமொன்றிற்கு தனியாள் விருப்பின் பிரகாரம் அத்தகைய தகவல்களினதும் பல்வகைப்படுத்தப்பட்ட பயணச்சீட்டுத் தொகுதிகளின் கொள்வனவிற்கான வசதியினதும் ஒருங்கிணைப்பானது உயர்ந்தளவில் பயனுள்ளதாயமையும். தொடுகையின்றிய பணி வழங்கல் முறைகள் மற்றும் கியுஆர் குறியீட்டினடிப்படையிலமைந்த தொடர்பின்றிய கொடுப்பனவுத் தெரிவுகளை வழங்குவதற்கும் சுகாதார மற்றும் பாதுகாப்புத் தகவல்களைக் களஞ்சியப்படுத்துவதற்கும் பகிர்வதற்கும் இலத்திரனியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தப்பட முடியும்.

(v) சிறந்த கொள்கை வகுத்தலுக்காக சுற்றுலாத்துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு தகவல்களை மேம்படுத்தல்

பொருத்தமான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதானது சிறந்த தகவல் வலையமைப்பில் தங்கியுள்ளது. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு நாடுகளுக்கிடையிலுள்ள தீவிர போட்டித்தன்மை மற்றும் சுற்றுலாப் பயணிகளின் சிறப்பம்சங்களில் பரிணாமமடைந்துவருகின்ற தன்மை என்பவற்றினைக் கருத்திற்கொண்டு கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வலுவானதொரு தகவல் வலையமைப்பின் பயன்பாடு இன்றியமையாததொன்றாகக் காணப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் ஆதரவுடன் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நடைமுறைப்படுத்தி வருகின்ற "சுற்றுலாத்துறைச் செயற்கைக்கோள் கணக்கியல்" முயற்சியானது தேசிய கணக்கிற்குச் சுற்றுலாத்துறையின் பொருளாதாரப் பங்களிப்பின் சிறந்த மதிப்பீட்டினை இயலுமைப்படுத்தும். ஆதலால், அதன் நடைமுறைப்படுத்தலானது விரைவாகப் பின்தொடரப்பட வேண்டும். மேலும், சுற்றுலா வீசாவின் கீழ் வருகைதருகின்ற ஆட்களின் குணாதிசயங்கள், எவ்வளவு செலவிடுகின்றனர் மற்றும் எதற்காக எங்கு செலவிடுகின்றனர், திருப்தி மட்டம், சுற்றுலாத்துறையில் தொழில்வாய்ப்பு, நேரடி மற்றும் மறைமுக சுற்றுலாத்துறை பணி வழங்குநர்களினது எண்ணிக்கை மற்றும் வகைப்பாடுகள் மற்றும் பல்வேறு இடம்சார்ந்த தகவல்கள் போன்ற பெருமளவிலான பிற அம்சங்கள் தொடர்பிலான அதிகளவில் உயர்ந்த கால இடைவெளியிலமைந்த தரவுகள் அவசியமாகின்றன. தேசிய சுற்றுலாத்துறை அதிகார சபை நுகர்வோர் பயணத்தினை மேம்படுத்துதல், புத்துருவாக்கத்தினைத் தூண்டுதல் மற்றும் தனியார் துறைக்கு நுண்ணறிதல்களை வழங்குதல் என்பவற்றிற்கான தமது சந்தை ஆய்வு இயலுமைகளை மேம்படுத்துவதற்கான தேவையானது பன்னாட்டு நாணய நிதியத்தினால் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்-நாட்டுக் கற்கைகளிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. (நோய்த்தொற்றிற்குப் பின்னரான உலகில் சுற்றுலாத்துறை: ஆசிய-பசுபிக் மற்றும் மேற்கு அரைக்கோளத்திற்கான பொருளாதார சவால்களும் வாய்ப்புக்களும், பன்னாட்டு நாணய நிதியம்,2021)

(vi) சுற்றுலாத்துறையின் இடர் முகாமைத்துவ இயலளவுகளை மேம்படுத்தல்

சுற்றுலாத்துறையானது இயல்பிலேயே புவிசார் அரசியல் நிகழ்வுகளுக்கு மிகவும் எளிதில் பாதிப்படையக்கூடியதாகவும் பருவகாலத் துறையொன்றாகவும் காணப்படுகின்றமையால், துறையானது படுகடன் சட்ட இசைவுத்தாமதம் மற்றும் இறை ஆதரவு என்பவற்றின் மீது மாத்திரம் தங்கியிருக்காது அதன் சொந்த இடர் முகாமைத்துவ இயலுமைகளை மேம்படுத்த வேண்டும். படுகடன் சட்ட இசைவுத்தாமதமானது வங்கிகளின் வருமானங்களைக் குறைத்து அவற்றின் திரவத்தன்மையினைப் பாதிப்படையச் செய்வதுடன் இடர்நேர்வுகளை அதிகரிக்கிறது. வங்கித்தொழில் துறையில் ஏற்படும் பாதகமான விளைவானது ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மீதும் தொடர்ச்சியானதும் பரந்தளவிலுமான தாக்கங்களை ஏற்படுத்தும்.

(vii) துறையினுள் முறைசாரா துணைத் துறைகளைக் குறைத்தல்

இலங்கையில் சுற்றுலாத்துறையானது பாரியளவிலான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் வகைப்படுத்தப்பட்டு, தமது முறைசாரா வியாபாரங்களை முன்னெடுத்து வருகிறது. எனினும், அத்தகைய ஆட்களை அதிகாரசபைகளுடன் பதிவுசெய்வதற்கு ஊக்குவிப்பதானது அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற மூலோபாயங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படுவதனையும் நிவாரண வழிமுறைகள் தேவைப்படுமேயானால் சகல பங்கேற்பாளர்களுக்கும் சமத்துவமிக்க விதத்தில் வழங்கப்படுவதனையும் நிச்சயப்படுத்துவதற்குத் துணைபுரியும். அத்துடன், தொழில் துறையொன்றின் உயர்ந்தளவிலான முறைசாராத் தன்மையானது கொள்கைத் தீர்மானமெடுக்கும் நோக்கங்களுக்கான தகவல் சேகரிப்பு, அரச பணிகளை வழங்குதல் மற்றும் தர நியமங்களுக்கான ஒழுங்குவிதிகள் என்பவற்றைக் கட்டுப்படுத்துகிறது. வியாபாரங்களைப் பதிவுசெய்வதானது நிதிக்கான அணுகலை மேம்படுத்தும் வேளையில் வரிச் சேகரிப்பினையும் மேம்படுத்தும்.

(viii) சுற்றுலாப் பயணிகளுக்கு மத்தியில் பன்முகத்தன்மையினை ஊக்குவித்தல்

தேறிய உயர் வருமானமீட்டும் தனிநபர்களை மாத்திரம் இலக்கிடுவதனைப் பார்க்கிலும் வெவ்வேறு வகையிலான பயணிகளை அவர்களின் ஆர்வம், பிறந்த நாடு மற்றும் செலவிடும் இயலளவு என்பவற்றின் பிரகாரம் திருப்திப்படுத்துவதனை நோக்காகக் கொண்டதாக வசதிகள் அமைய வேண்டும். இது குறிப்பிட்ட குணாதிசயங்களுடன் அல்லது ஒரு நாடு/பிராந்தியத்திலிருந்து வருகைதரும் பயணிகளில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு உதவும். உண்மையில், சகல வகைகளிலுமான பயணிகள் இலங்கையின் சாதகமான சந்தைப்படுத்தலுக்குப் பங்களிக்கின்றனர். வெவ்வேறு செலவிடும்

இயலளவினைக்கொண்ட சுற்றுலாப் பயணிகளுக்கு உபசரித்தல் தொழில் துறையில் வெவ்வேறு முதலீட்டு இயலளவுகளுடனான உள்ளூர் நிறுவனங்கள் தொழிற்படுவதனையும் இயலச்செய்யும்.

(ix) சுற்றுலாத்துறையின் மீது அதிகளவில் தங்கியிருத்தலைக் குறைத்தல்

பன்னாட்டு நாணய நிதியம் "நோய்த்தொற்றிற்குப் பின்னரான உலகில் சுற்றுலாத்துறை - ஆசிய-பசுபிக் மற்றும் மேற்கு அரைக்கோளத்திற்கான பொருளாதார சவால்களும் வாய்ப்புக்களும்" (2021) இல் சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கின்ற நாடுகள் உண்மையில் சிறிய அளவிலானவையெனவும் அவை போதிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களையும் தாங்கிருப்புக்களையும் கொண்டிராத, வரையறுக்கப்பட்ட இறை இடைவெளி மற்றும் ஏனைய பேரண்டப்பொருளாதார பாதிப்படையக்கூடிய தன்மைகளைக் கொண்டவையெனவும் குறிப்பிடுகிறது. தற்செயலாக, சுற்றுலாத்துறையில் அதிகளவில் தங்கியிருக்கின்ற நாடுகள் மற்றைய ஏற்றுமதிகளில் குறைவாக வெற்றியீட்டுகின்ற பண்பினைக் கொண்டுள்ளதுடன் அத்தகைய பண்புகளினால் பாதிப்படைகின்றன. சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கின்ற அத்தகைய நாடுகள் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான ஏற்றுமதிச் சிக்கல் தன்மைகளைக் கொண்டுள்ளதுடன் அவை புதிய உற்பத்தி அபிவிருத்திகளுக்கான அவர்களின் தெரிவுகளையும் பாதிக்கின்றன. புதிய உற்பத்திகளின் அபிவிருத்தியானது உற்பத்திசார் அறிவு மற்றும் இயலளவுகளின் விரிவாக்கத்தினைத் தேவைப்படுத்துகிறது. சுற்றுலாத்துறையானது ஒரு நாட்டின் தொழில்நுட்ப இயலளவினை மேம்படுத்துகின்றதொரு தொழில்துறையாகக் காணப்படாததோடு வெளிவாரியான அதிர்வுகளுக்கு உயர்ந்தளவில் பாதிப்படையக்கூடிய தன்மையினைக் கொண்டுள்ளது. மேற்கூறிய வெளியீட்டில், பன்னாட்டு நாணய நிதியமானது புதிய தொழில்நுட்ப பொருளாதாரக் கருவிகளைப் பயன்படுத்தி அல்லது ஒட்டுமொத்த ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்துகின்ற ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதித் துறையினை வளர்ப்பதில் சுற்றுலாத்துறையில் தங்கியிருக்கும் நாடுகளின் (இலங்கை உட்பட) முன்மதியினைக் காண்பிக்கிறது. இவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவாறு, நடுத்தர காலத்தில் இலங்கை அதன் சுற்றுலாத்துறை மாதிரி தொடர்பில் மீள்சிந்தனை செய்து அவசியமான கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களை முன்னெடுக்க வேண்டும்.

முடிவுரை

புவிசார் அரசியல் பதற்ற நிலைகளின் தாக்கம் மற்றும் சவால்மிக்க உள்நாட்டுச் சமூக அரசியல் சுற்றுச்சூழல் என்பவற்றிற்கு மத்தியில் குறுங்காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் உலகளாவிய தொற்றுநோய்க்குப் பின்னரான மீட்சிக்கான உத்வேகமொன்றினைச் சுற்றுலாத்துறை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தினதும் தனியார் துறையினதும் ஒருங்கிணைந்த முயற்சிகள் புதிய இயல்புநிலையைத் தழுவுவதனை மாத்திரமன்றி அதனை உருவாக்குவதனையும் நோக்காகக் கொண்டிருத்தல் அவசியமானதொன்றாயமையும். இம்முயற்சிகளில் இலங்கையின் அண்மைக்கால பொருளாதார நிலைமையினை அடிப்படையாகக்கொண்டு சில அரசாங்கங்களினால் விடுக்கப்பட்ட பயண ஆலோசனைகள் சிறந்த ஈடுபாட்டினூடாக இலங்கை அதிகாரிகளினால் எதிர்கொள்ளப்பட வேண்டும். தொழில் துறையில் மீட்சியானது நவீன பயணிகளின் தேவைகளை எந்தளவு சிறப்பாகப் பூர்த்தி செய்கிறது, சாத்தியமான நிரம்பல் மற்றும் வலுப் பற்றாக்குறைகளுக்கான தயார்நிலை மற்றும் கடன் இசைவுத்தாமதத்திற்குப் பின்னரான கட்டங்களில் பொருளாதாரங்களின் சிறந்த முகாமைத்துவம் என்பவற்றில் தங்கியிருக்கும். சந்தைப்படுத்தல் நோக்கிலிருந்து பார்க்கும்போது தியானம் மற்றும் மருத்துவ மற்றும் வரலாற்று ரீதியான ஆய்வுகளுக்கான இளைஞர் குழுக்கள் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட நலன்களுக்காக சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு மேலும் ஆற்றல்வாய்ந்த தன்மை காணப்படுகிறது. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தனியார் பயணத் தொழிற்பாட்டாளர்கள் ஆகிய இரண்டும் பிராந்தியத்திலுள்ள நட்பு நாடுகளுடன் ஒப்பிடுகையில் கவர்ச்சியூட்டுகின்ற தொகுதிகளை வழங்கி சுற்றுலாப் பயணிகளின் இவ்விசேட குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதனை ஊக்குவிக்க வேண்டும். உலகளாவிய நோய்த்தொற்றின் படிப்படியான குறைதலுடன் சுற்றுலாத்துறையானது இலங்கைப் பொருளாதார மீட்சியில் குறிப்பிட்டதொரு வகிபாகத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உசாத்துணைகள்

2009. Balance of Payments and International Investment Position Manual (BPM 6), Sixth Edition. International Monetary Fund.

2020. Survey of Department Tourists from Sri Lanka 2018-2019. Sri Lanka Tourism Development Authority.

2021. Trending in Travel - Emerging Consumer Trends in Travel & Tourism in 2021 and Beyond. World Travel and Tourism Organisation.

2021. Tourism in the Post-Pandemic World - Economic Challenges and Opportunities for Asia-Pacific and the Western Hemisphere. International Monetary Fund.

2022. World Tourism Barometer January 2022. United Nations World Tourism Organisation.

2022. Covid-19 and the Future of Tourism in the Asia and Pacific. Asian Development Bank and United Nations World Tourism Organisation.

கொவிட்-19 கட்டுப்பாடுகளின் காரணமாக தனிமைப்படுத்தலின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. சுற்றுலாவிருந்தான வருவாய்கள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 682 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ஐ.அ.டொலர் 507 மில்லியனுக்கு 25.7 சதவீதத்தினால் குறைவடைந்தது. அதேவேளை, 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் சுற்றுலா தொடர்புபட்ட மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்பாய்ச்சல்களே பதிவாகியிருந்தன.

சுற்றுலாத்துறை மீதான முதலீடு 2021ஆம் ஆண்டில் மேலும் விரிவடைந்து இலங்கையின் சுற்றுலாத்துறை வாய்ப்பு பற்றிய முதலீட்டாளர்களின் தொடர்ச்சியான நம்பிக்கையினை எடுத்துக்காட்டியது. மொத்தமாக 1,328 அறைகள் இயலளவுடன் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 134 மில்லியன் தொகையுடைய சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட 45 புதிய முதலீட்டுக் கருத்திட்டங்கள் இலங்கை சுற்றுலா அதிகாரசபையின்

முதலீட்டாளர் தொடர்புகள் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றது. அதேவேளை, முதலீட்டாளர் தொடர்புகள் பிரிவானது கூட்டாக 922 அறைகள் இயலளவுடன் ஐ.அ.டொலர் 104 மில்லியன் தொகைக்கு 2021 காலப்பகுதியில் 30 சுற்றுலாவுடன் தொடர்புடைய கருத்திட்டங்களுக்கு அனுமதிகளை வழங்கியது. இதற்கு மேலதிகமாக, 6,265 அறைகளுடன் கூடிய 87 விடுதிக் கருத்திட்டங்கள் பல்வேறு மட்டங்களில் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய, 2021இல் மொத்தமாக 25,958 அறை இயலளவுடன் கூடிய 480 தொகையுடைய தரப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சிறிய வில்லா இல்லங்கள், பங்களாக்கள், அதிதி இல்லங்கள், மரபுரிமை பங்களாக்கள், மரபுரிமை இல்லங்கள், வீட்டில் தங்கும் அலகுகள், வாடகைக்கு விடப்படும் அடுக்குமாடி மனைகள் மற்றும் வாடகைக்கு விடப்படும் இல்லங்கள் என்பன உள்ளடங்கலாக மொத்தமாக 21,379 அறை இயலளவுடன்கூடிய 3,177 துணை நிறுவனங்களும் 2021இல் தொழிற்பட்டன.

சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து பல்வேறு கொள்கை முன்முயற்சிகளையும் பல ஊக்குவிப்பு நிகழ்சித்திட்டங்களையும் 2021ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தின. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு பதிலிறுத்துவதில் 2021 மார்சு 31 வரை செயற்பாட்டிலிருந்த மத்திய வங்கியின் கோரிக்கையின் பெயரில் உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மூலம் வழங்கப்பட்ட சுற்றுலாத்துறை தொடர்பிலான கடன்களைத் காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதி 2021 ஒத்தோபர் 01 வரை மேலும் நீடிக்கப்பட்டது. எனினும், தொழில்துறை மீது நோய்த்தொற்றின் பாதகமான தாக்கங்கள் நீடித்திருப்பதைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கி கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதியினை 2022 யூலையில் முடிவடையும் விதத்தில் மேலும் ஒன்பது மாதங்களுக்கு மீண்டும் நீடித்தது. இந்நீடிப்புக்கு இசைவாக, சுற்றுலாத்துறைக்கு பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குகின்ற வியாபார மற்றும் தனியார்துறை வாகனங்கள் மீதான குத்தகை வாடகைக்கான கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதியும் நீடிக்கப்பட்டது. மேலும், சுற்றுலாத்துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் சலுகை வட்டிவீதத்தில் கடன்களை வழங்குவதற்கு மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன்வசதியானது விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் 2022 யூன் 30 வரை பல தடவைகள் நீடிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, சுற்றுலாத்துறையின் ஆர்வலர்கள் எதிர்கொண்ட சுமையினைக் குறைப்பதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்துள்ள அனைத்து சுற்றுலா நிறுவனங்களினதும் உரிமங்களின் செல்லுபடிக் காலத்தினை நீடித்தல் மற்றும் சுற்றுலாப்பயணி வழிகாட்டி உரிமங்களின் செல்லுபடியினை 2021 திசெம்பர் 31 வரை நீடித்தல் போன்ற பல வழிமுறைகள் சுற்றுலாத் துறைசார்ந்த அதிகாரிகளினால் எடுக்கப்பட்டன. இலங்கைச் சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனத்துடனான கூட்டிணைப்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அனைத்து பதிவுசெய்யப்பட்ட வழிகாட்டிகளின் தொடர்ச்சியான தொழில்சார் பண்பு விருத்திக்காக அவர்களது அறிவினையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கு இ-கற்றல் தளமொன்றினை அறிமுகப்படுத்தியது. மேலும், முறைசாராத்துறை சுற்றுலாத் தொழிற்பாட்டாளர்களை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்வதை ஊக்குவிப்பதற்கு உறுப்புரிமை வழங்கும் செயன்முறையினையும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தொடங்கியது. சுற்றுலா விடுதிகள், அதிதி இல்லங்கள், வீட்டில் தங்குமிட வசதி வழங்குவோர், பங்களாக்கள், பயண முகவர்கள், சுற்றுலாப்பயணி சிநேகமிக்க உணவகங்கள், உணவகங்கள், ஸ்பாக்கள் மற்றும் ஆரோக்கிய நிலையங்கள் என்பன உள்ளடங்கலாக அனைத்து முறைசாரா சுற்றுலா வியாபாரங்களையும் தற்காலிகமாகப் பதிவுசெய்தல் செயன்முறை ஊடாக பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டன. தனித்துவமான துறைகளை மையப்படுத்தி உலகளாவிலுமுள்ளவர்களை கவருவதற்கு உலகளவில் நாட்டை ஊக்குவிப்பதற்காக பல உபாய ரீதியான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்நோக்கில், இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 2021 மார்சில் ஐந்து வருட உலகளாவிய தொடர்பூட்டல் பிரசாரத்தினைத் தொடங்கி 2021 ஒத்தோபரில் இந்திய சினிமாவுக்கான திரைப்படச் சுற்றுலா ஊக்குவிப்பினைத் தொடங்கியது. மேலும், 2021 ஒத்தோபர் 1 தொடக்கம் 2022 மார்சு 31 வரை டுபாயில் இடம்பெற்ற வேல்ட் எக்ஸ்போ 2020 நிகழ்வு இலங்கைக்கு வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்புக்கான வாய்ப்பினை வழங்கியது. 2021இல் இணையவழி ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்காக நேரலை வனவிலங்கு காணொளியான 'கோ ஒன் கோச் சபாரி' என்ற டிஜிட்டல் நிகழ்சித்திட்டம் போன்ற பல புதிய தொனிப்பொருட்கள் முதற்தடவையாக இலங்கை சுற்றுலாத்துறைக்குச் சேர்க்கப்பட்டன. தீவிரமான சுற்றுலா ஊக்குவிப்புக்கள், கொண்டே நஸ்ட், ட்ரெவல் அன்ட் லெசர் சஞ்சிகை, சீஎன்என் ட்ரெவல் போன்றன மூலம் 2021 காலப்பகுதியில் பயணம் செய்வதற்கு சிறந்த அடைவிடமாக உலகப்புகழ் பெற்ற சுற்றுலா அமைப்புக்களிடமிருந்து பல பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்ட அதேவேளை ஆரோக்கியச் சுற்றுலாவுக்கான மிகச் சிறந்த அடைவிடமாக விமன் சோலோ ட்ரெவல் சுட்டெண்ணின் தரப்படுத்தப்படுத்தலில் இலங்கை இரண்டாம் நிலையை அடைவதற்கு வழிவகுத்தன.

போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் மற்றும் ஏனைய பணிகள்

2021 காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து சேவைபெற்றுக்கொள்ளும் துறை ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சி சிறப்பாக செயலாற்றியது. நோய்த்தொற்றுக் காரணமாக 2020ஆம் ஆண்டில் கடல்வழிச் சரக்குப் போக்குவரத்துப் பணிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க

இடையூறுகளுக்குப் பின்னர் சரக்குப் போக்குவரத்துப் பணிகள் 2021இல் சாதகமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. நாட்டின் துறைமுகங்களுக்கான கப்பல் போக்குவரத்துகள் 2021இல் சிறிதளவு வீழ்ச்சியடைந்த போதிலும் உள்நாட்டு கொள்கலன் கையாளுதல், மாற்றிக் கப்பலேற்றுதல் மற்றும் மாற்றியேற்றுதல் தொழிற்பாடுகள் உள்ளடங்கலாக மொத்த கொள்கலன் கையாளுதலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்டது. ஏற்றப்பட்ட கப்பல் சரக்கு மற்றும் இறக்கப்பட்ட கப்பல் சரக்கு என்ற நியதிகளில் கையாளப்பட்ட மொத்த கப்பல் சரக்கும் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்தது. இது உலகளாவிய உயர்வான கப்பல் சரக்கு கையாளல் வீதங்களுடன் ஒன்றிணைந்ததாகக் காணப்பட்டு, நாட்டின் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டுக்குமான நாட்டின் உயர்வான கப்பல் சரக்கு அனுப்புதல் கட்டணங்களுக்கு வழிவகுத்தது. அதேவேளை, உலகளாவிய நோய்த்தொற்றுடன் சுற்றுலாப்பயணிகளின் வருகைகளில் வீழ்ச்சி காரணமாக விமானப் பயணி பணிகளிலிருந்தான வருவாய்களில் குறிப்பிடத்தக்களவு குறைவு அவதானிக்கப்பட்டது. நோய்த்தொற்றின் காரணமாக வதிவைக்கொண்டிராத விமான நிறுவனங்களில் பயணிப்பதற்காக இலங்கையர்களுக்கு பயண வாய்ப்புகள் தடைப்பட்டதன் விளைவாக பயணி பணிகளின் வெளிப்பாய்ச்சல்களும் குறைவடைந்தன. நிதியியல் பணிகள், நிர்மாணப் பணிகள், அரசாங்கப் பணிகள் மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் உள்ளடங்கலாக ஏனைய பணிகள் துணைத் துறைகளும் 2021இல் மிதமான தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. அதற்கமைய பணிகள் கணக்கின் மிகைகள், 2020இன் ஐ.அ.டொலர் 0.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் 1.6 பில்லியனுக்கு அதிகரித்தன. எனினும், பிரதானமாக சுற்றுலாத்துறையிலிருந்தான குறைவடைந்த வருவாய்களினால் 2020 மற்றும் 2021 இல் பணிகள் கணக்கு மிகைகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முந்திய மட்டங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமாகக் குறைவடைந்து காணப்பட்டது.

5.2.3 முதலாந்தர வருமானம்

நேரடி முதலீட்டுத்தொழில் முயற்சிகளின் மீள்முதலிடப்பட்ட வருவாய்களின் அதிகரிப்பிற்கு மத்தியிலும் குறைவான வெளிநாட்டுக் கடன்களின் வட்டிக்கொடுப்பனவுகள், அரசாங்கப் பிணையங்களில் முதலீட்டுக் கணக்குகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகள் மற்றும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் பங்கிலாபக் கொடுப்பனவுகள் என்பவற்றின் விளைவாக 2021ஆம் ஆண்டில் முதலாந்தர வருமானக்கணக்குப் பற்றாக்குறைச் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. அரசாங்கம், தனியார்துறை மற்றும் அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் என்பவற்றின் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த அதேவேளை வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மூலமான வதியாதோருக்கான வட்டிக்கொடுப்பனவுகள் ஆண்டுகாலப்பகுதியில் மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. அரசாங்கமானது குறைந்த செலவு சலுகை நிதியளித்தலை நோக்கிப் படிப்படியாக நகர்வதுடன் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்த அதேவேளை சில குறுகியகால வர்த்தக கடன்கள் கொடுப்பனவு செய்யப்பட்டு வந்தன. மேலும், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சொத்தாண்மையின் ஒரு பாகம் வதியாதவர்களிடமிருந்து வதிபவர்களுக்கு மாற்றம்பெற்றமை அதேபோன்று புதிய வழங்கலின்றி 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி என்பன காரணமாக வதியாதோர்களுக்கான நாட்டின் பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று காணப்பட்டது. எனினும், 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் மீள்முதலிடப்பட்ட வருவாய்களில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அதேவேளை, 2021ஆம் ஆண்டில், பன்னாட்டு ஒதுக்குகள் கணக்கின் முதலீட்டு வருமானத்தில் குறைவடைதலின் முதன்மை காரணமாக முதலாந்தர கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்தன. இவ்வபிவிருத்திகளுடன் இணைந்து முதலாந்தர கணக்கின் பற்றாக்குறையானது 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2.0 பில்லியனாக இருந்ததென மதிப்பிடப்பட்டுள்ளது.

5.2.4 இரண்டாந்தர வருமானம்

தொழிலாளர் பணவனுப்பல்களில் மிதமடைதலின் விளைவாக இரண்டாந்தர வருமானக் கணக்கு 2021ஆம் ஆண்டில் பலவீனமடைந்தது. 2021ஆம் ஆண்டில் முதல் ஐந்து மாதங்களில் ஆரோக்கியமான வளர்ச்சியினைப் பதிவுசெய்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021 யூன் தொடக்கம் படிப்படியாக வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 5.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது, 2021ஆம் ஆண்டில் 22.7 சதவீதம் கொண்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. அலுவல்சார் வீதத்துடன் ஒப்பிடுகையில் கண்காணிக்கப்படாத சந்தையில் நிலவிய செலாவணி வீதங்களின் குறிப்பிடத்தக்க வேறுபாடு காரணமாக உத்தியோகபூர்வ வழிகள் ஊடாக கிடைக்கப்பெற்ற குறைந்தளவான பணவனுப்பல்களே இவ்வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணமாகயிருக்கக்கூடும். இவ்வபிவிருத்திகளுடன் இணைந்து இரண்டாந்தர வருமானக்கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 6.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 5.2 பில்லியனுக்கு குறைவடைந்தது. 2022 மார்ச் தொடக்கத்திலிருந்து செலாவணி வீதத்தில் ஏற்பட்ட சடுதியான தேய்வுடன் 2022ஆம் ஆண்டில் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்களவு மீட்சி ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வங்கித்தொழில்துறையினூடாக தொழிலாளர்களின் பணவனுப்பல்களை வசதிப்படுத்தும்

பொருட்டு மத்திய வங்கியானது 'வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம்' என்ற பெயரில் புதிய திணைக்களமொன்றினைத் தாபித்த அதேவேளை, வங்கித்தொழில் துறையூடாக பணவனுப்புகின்ற தொழிலாளர்களுக்காக பல ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. மேலும், அநேகமான உரிமம்பெற்ற வங்கிகளின் பங்கேற்புடன் லங்காகிளியர் மூலம் 'லங்கா ரெமிட்' என அழைக்கப்படும் வெளிநாட்டு பணவனுப்பல்கள் செல்லிடச் செயலி தொடங்கி வைக்கப்பட்டது. ரூபாய்களாக மாற்றல்செய்யப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களுக்காக சாதாரண செலாவணி வீதத்திற்கு மேல் தற்காலிக பண ஊக்குவிப்புத் தொகையொன்று வழங்கப்பட்ட அதேவேளை புலம்பெயர்ந்த பணியாளர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நலனோம்புகையினை மேம்படுத்துவதனை மையப்படுத்தி தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிப்பதற்கு வேறு பல ஊக்குவிப்புத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான முனைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

5.3 மூலதனக் கணக்கு நிலுவை

மூலதனக் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2021ஆம் ஆண்டில் பரந்தளவில் மாற்றமின்றி காணப்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கான மூலதன மாற்றல்கள் குறைவடைந்த அதேவேளை தனியார் துறைக்கான மாற்றல்கள் அதிகரிப்பொன்றினை பதிவுசெய்தன. இதன் விளைவாக, மூலதனக் கணக்கானது 2020ஆம் ஆண்டின் பதிவாகிய ஐ.அ.டொலர் 28 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 25 மில்லியன் மிகையினைப் பதிவுசெய்தது.

5.4 நிதியியல் கணக்கு

சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொறுப்புக்களின் தேறிய உறுதல் அதிகரித்த அதேவேளை சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் குறிப்பிடத்தக்க குறைவொன்றினைப் பதிவுசெய்தது. பொறுப்புக்களின் தேறிய உறுதல் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 1.7 பில்லியன் கொண்ட குறைவுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1.9 பில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. கொவிட்-19 நோய்த்தொற்று அதேபோன்று உள்நாட்டுச் சூழ்நிலைகள் என்பனவற்றினால் தூண்டப்பட்ட தொடர்ச்சியான நிச்சயமின்மையினைப் பிரதிபலித்து நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள், முன்னைய ஆண்டினைப் போன்றே 2021ஆம் ஆண்டில் மிதமானதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 670 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 784 மில்லியனுக்கு மிதமான

வரைபடம் 5.11
நிதியியல் கணக்கு



மூலம் : இலங்கை மத்திய வங்கி

தொகையுடையதாகயிருந்தது. மேலும், நேரடி வெளிநாட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2020ஆம் ஆண்டின் பதிவாகிய ஐ.அ.டொலர் 434 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 598 மில்லியனாகவிருந்தது. துறைரீதியான அடிப்படையில் தொலைத்தொடர்புகள், ஆதன அபிவிருத்தி, புடவைகள் மற்றும் விடுதிகள் தொடர்புபட்ட கருத்திட்டங்களுக்காக பாரிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைக்கப்பெற்றிருந்த அதேவேளை அத்தகைய வெளிநாட்டு நேரடி முதலீடுகள், ஏற்கனவே நிறுவப்பட்ட நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கே முதன்மையாக கிடைக்கப்பெற்றது. 2021ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் மிதமடைதலுக்கு மத்தியில் முன்னோக்கிச் சென்று, நேரடி வெளிநாட்டு முதலீடுகள் குறிப்பாக கொழும்பு துறைமுக நகரத்திற்கும் அம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டத்திற்கும் கிடைக்கப்பெறுமென எதிர்பார்க்கிறது. மேலும், நாட்டிற்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களுக்கு பங்களிப்புச் செய்யும் முகமாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள கீழ்செயலாற்றமிக்க சொத்துக்களைப் பணமாக்குவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

2021 காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான முக்கிய நிதியியல் உட்பாய்ச்சல்கள், சீனா அபிவிருத்தி வங்கியிடமிருந்து மொத்தமாக, ஏறத்தாழ ஐ.அ.டொலர் 810 மில்லியன் தொகையுடைய 2021 ஏப்பிறலிலும் செத்தெம்பரிலும் கிடைக்கப்பெற்ற இரண்டு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளின் கிடைப்பனவை உள்ளடங்கியிருந்தன. இதற்கு மேலதிகமாக, நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் ரூபா பெயர் குறிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளைப் பிரதானமாக உள்ளடக்குகின்ற படுகடன் பிணையங்கள் வடிவிலான முதலீடுகள் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 670 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. இதற்கு 2021 யூலையில் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றின் முதிர்ச்சியின் தேறிய தாக்கம் காரணமாக

சிறப்புக்குறிப்பு 6
நிதியியல் சந்தைகள் மற்றும் பொருளாதாரத்தின் மீது முறைசாரா பணமாற்றல்களின் தாக்கம்

அறிமுகம்

நாட்டிற்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் வினைத்திறனும் பாதுகாப்பானதுமான நிதியத்தின் நகர்வு நாடொன்றின் நிதியியல் முறைமையில் முக்கியமானதொரு கூறாகக் காணப்படுகிறது. வெளிநாட்டுச் செலாவணி தொடர்புபடுகின்றவிடத்து, நாடுகளுக்கிடையிலான மாற்றல்களுக்கு இது மிக முக்கியமானதாகும். வழமையாக, இக்கொடுக்கல்வாங்கல்களில் பாரிய பெரும் பங்கு முறைசார்ந்த மார்க்கங்களூடாகவே நிகழ்கின்றன. எனினும், எந்தவொரு பொருளாதாரத்திலும் வேறுபட்ட அளவுகளில், முக்கியமாக, நாடுகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களுக்காக முறைசாரா மார்க்கங்களூடாகவும் நாணய மாற்றல்கள் இடம்பெறுகின்றன. முறைசாரா மார்க்கங்களின் அளவு மற்றும் பணம் அனுப்புபவர்களினால் முறைசார்ந்த மார்க்கங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவதும் குறிப்பிட்ட பொருளாதாரம், நிதியியல் சந்தை மற்றும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வத்தன்மை என்பனவற்றின் குணாம்சங்களில் தங்கியிருக்கிறது. முறைசார்ந்த மார்க்கங்கள் நிதியியல் நிறுவனங்கள் போன்ற உரிமம்பெற்ற மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களினால் வழங்கப்படும் பணிகளை உள்ளடக்குகிறது. முறைசாரா மார்க்கங்கள் ஹவாலா, உண்டி அல்லது உண்டியல் (தென்னாசியா), வெய்ஹுயின் அல்லது சீட்டு (தென்கிழக்காசியா) மற்றும் கறுப்புச் சந்தை பீசோ (ஐக்கிய நாடுகள்) போன்ற பணிகளை வழங்கும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத சந்தைகளின் பங்கேற்பாளர்களை உள்ளடக்குகிறது. பெரும்பாலான நாடுகளின் பணவனுப்பல் பணிகளை ஆற்றுவதற்கு இவர்களுக்கு உரிமம் வழங்கப்படுவதில்லை. எனினும், தற்பொழுது, ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற குறிப்பிட்ட நாடுகளில் முறைசாரா நாணய மாற்றல் மார்க்கங்கள் பணம் தூயதாக்கலைத் தடைசெய்யும் தேவைப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், அத்தகைய பணி வழங்குவோரைப் பதிவுசெய்தல், உரிமம் வழங்கல் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. நிதியத்தின் பௌதீக அசைவுகளில்லாமல் பணத்தின் பெறுமதியினை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதற்கு, முறைசார்ந்த வங்கித்தொழில் மார்க்கங்கள் காணப்படாத பண்டைக் காலத்திலிருந்து ஹவாலா மார்க்கங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்கள் மிக இலகுவாக்கப்பட்டு, வசதிப்படுத்தப்பட்டு செல்லிடத் தொலைபேசிச் செயலிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்ற இன்றைய நிலையிலும் கூட, இன்றும் அத்தகைய முறைசாரா மார்க்கங்கள் இருக்கவே செய்கின்றன. இம்முறைசாரா பணவனுப்பல் பணிகள் சட்டபூர்வமான அதேபோன்று சட்டபூர்வமல்லா நோக்கங்களுக்காக பல்வேறுபட்ட தனிப்பட்டவர்களினாலும் குழுமங்களினாலும் நிறுவனங்களினாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய பணிகள் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் உள்ளிட்ட குற்றவியல் நடவடிக்கைகளுக்காக பாரியளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, 2001இல் ஐக்கிய அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீதான கொடிய பயங்கரவாத தாக்குதல்களுக்கு வழிவகுத்த நடவடிக்கைகளுக்கு நிதியிட ஹவாலா மார்க்கங்களே பயன்படுத்தப்பட்டன. குறைந்த செலவிலான கொடுக்கல்வாங்கல்கள், இலகுவாக அணுகக்கூடிய தன்மை, குறைந்த எழுத்து வேலைகள் மற்றும் விரைவான மாற்றல் போன்ற சில சாதகமான பண்புகள் பணம் அனுப்புபவர்களிடையே பிரபல்யமடையக் காரணமாயின. எனினும், முறைசாரா வியாபாரங்கள் குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்புபடுவதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளமையினால் பணத்தினை இழக்கின்ற சாத்தியங்களை இது ஏற்படுத்துமென்பதனால் இடர்நேர்வுகளை ஏற்படுத்தும் மார்க்கமாகக் காணப்படுகிறது. மிக முக்கியமான அம்சம் யாதெனில் பணம் தூயதாக்குவோர் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோர் இதனை தவறான பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவதனால் இம்மார்க்கங்கள் அதிகளவிற்குப் பாதிக்கப்படும் தன்மையினைக் கொண்டுள்ளது. முறைசாரா மற்றும் சட்டத்திற்கு மாறான கொடுப்பனவு மார்க்கங்களின் இவ்வகைகள் பொருளாதார மூலவளங்களை முறைசார்ந்த துறையிலிருந்து பொருளாதாரமொன்றின் முறைசாரா மார்க்கங்களுக்கு நகரச்செய்து விடுமென்பதனால் நாட்டின் நிதியியல் முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டிற்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் தீங்கினை ஏற்படுத்தக்கூடும். இக்கட்டுரையின் நோக்கம் நிதியியல் முறைமையின் மீதும் பொருளாதாரத்தின் மீதும் முறைசாரா பணவனுப்பல் மார்க்கங்களின் மோசமான தாக்கங்களின் மீதும் கவனத்தினைச் செலுத்துவதாக இருக்கிறது. இம்முறைசாரா பணவனுப்பல் மார்க்கங்கள் அனைத்தும் பெரும்பாலும் ஒரே மாதிரியான பண்புகளைக் கொண்டிருப்பதனால் இக்கட்டுரையானது இலங்கையில் முக்கியமாக பயன்படுத்தப்படும் மார்க்கமான ஹவாலா மீது கவனம் செலுத்துவதுடன் இது ஹவாலா மார்க்கம் அல்லது மாற்று ஏற்பாடாக முறைசாரா மார்க்கம் எனக் குறிப்பிடப்படுகிறது.

ஹவாலா கொடுக்கல்வாங்கல்களின் அறிமுகம்

இப்பணவனுப்பல் மார்க்கங்கள் வலையமைப்பு ஏற்பாடுகளாகத் தொழிற்படுவதுடன் சில நேரங்களில் குறிப்பிட்ட சமூகத்திலுள்ள குறிப்பிட்ட சமூகத்தவரினுள் காணப்படுகின்றது. இவ்வேற்பாடுகளில், பெறுமதி மாற்றல்களுக்கு உலகம் முழுவதிலும் அமைந்துள்ள இவ்வலையமைப்புக்களுக்குச் சொந்தக்காரராகவுள்ள முகவர்களினால் வசதியளிக்கப்படுகிறது. ஹவாலா மார்க்கங்களில், ஹவாலா முகவர்கள் அல்லது வணிகர்கள் (ஹவாலா டர்ஸ் எனவும் அறியப்படுகிறது) வேறுபட்ட நாடுகளில் வசிப்பதுடன் கொடுக்கல்வாங்கல் தீர்ப்பனவுகள் முழுமையாக நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறுகின்றன. நாடொன்றிலுள்ள முகவரொருவர் மற்றொரு நாட்டிற்குப் பணத்தினை அனுப்புவதற்குத் தேவையுள்ள மக்களிடமிருந்து பணத்தினை சேகரித்து குறிப்பிட்ட நாட்டிலுள்ள முகவருக்கு உரிய பெறுநருக்கு அத்தொகையினை அவர்கள் விரும்பிய நாணயத்தில் தீர்ப்பனவு செய்வதற்காக அனுப்பி வைப்பார். இதன்படி, நாடுகளுக்கிடையேயான பௌதீக ரீதியான காசு நகர்வுகள் ஏதுமில்லை. நாடுகளுக்கிடையேயான கொடுக்கல்வாங்கல்களில் நிதியியல் நிறுவனங்கள் தொடர்புபடுவதில்லை. இம்மார்க்கங்களின் கீழ் கொடுக்கல்வாங்கல்கள் எதுவும் சரியான முறையில் பதிவுசெய்யப்படுவதில்லை. எனினும், உள்நாட்டு நிதிய மாற்றல்கள் தேவைப்படும் போது நிதியியல் நிறுவனங்கள் இச்சம்பவத்தில் தொடர்புபடக்கூடும்.

ஹவாலா மார்க்கங்களின் பயன்படுத்துநர்கள்

ஹவாலா, வேறுபட்ட பொருளாதார முகவர்களினால் சட்டபூர்வமான அதேபோன்று சட்டபூர்வமற்ற நோக்கங்கள் இரண்டிற்குமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவை (அ) வெளிநாட்டு வேலையாட்களினால் தமது நாட்டிலுள்ள குடும்பங்களுக்காக அனுப்பப்படுகின்ற பணம் (ஆ) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான வர்த்தகர்கள் செலுத்துகின்ற நிதி மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்காகப் பெறப்படுகின்ற நிதி (இ) பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்காக மாற்றல் செய்யும் நிதியம் (ஈ) மக்கள் வசிக்கும் பிரதேசங்களிலுள்ள வங்கிகள் பணவனுப்பல் பணிகளை வழங்குகின்ற அபிவிருத்தியடைந்த மார்க்கங்களைக் குறைவாகக் கொண்டிருத்தல் (உ) சரியான விசா இல்லாத புலம்பெயர்ந்தோர் அனுப்புகின்ற நிதி (ஊ) பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோர் சட்டத்திற்கு மாறான பயன்படுத்துநர் ஆகியோரை உள்ளடக்குகிறது.

ஹவாலா மார்க்கங்களின் முக்கிய பண்புகள்

ஹவாலா மற்றும் முறைசாரா மார்க்கங்கள் விசேட பண்புகளைப் கொண்டுள்ளன. இவை மேற்கொள்ளும் பணவனுப்பல் மார்க்கங்கள் பயன்படுத்துநரை கவர்வனவாகவுள்ளன. அவற்றின் பண்புகளில் சில பின்வருமாறு. **அணுகக்கூடிய தன்மை:** முறைசாரா மார்க்கங்கள் உலகின் ஒவ்வொரு மூலையிலும் நுணுக்கமான விதத்தில் நுழைந்திருப்பதுடன் முறைசார்ந்த வங்கித்தொழில் வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள அல்லது கிடைக்காத தூர இடங்கள் உட்பட பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களுக்கே உரிய முறையில் நுழைந்து கொள்ளும் தன்மை. **தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மை:** ஹவாலாவுடன் தொடர்புபட்டுள்ள தரகுக் கட்டணங்களுடன் ஒப்பிடுகையில் முறைசார்ந்த வங்கித்தொழில் மார்க்கங்களின் ஊடாகச் செய்யப்படும் நிதிய மாற்றல்களுடன் தொடர்பான கட்டணம் செலவுகூடியதாக இருத்தல். அத்துடன், வழமையாக, ஹவாலா முகவர்களினால் வழங்கப்படுகின்ற செலாவணி வீதம் வெளிநாட்டுச் செலாவணியிலுள்ள அதிகாரம்பெற்ற வணிகர்களினால் வழங்கப்படும் வீதத்தினை விடக் கூடியளவிற்கு கவர்ச்சிகரமானதாக இருத்தல். **விரைவுத்தன்மை:** இம்முறைசாரா மார்க்கங்களில் நாடுகளுக்கிடையிலான நகர்வுகள் நாணயத்தில் இடம்பெறுவதில்லை என்பதுடன் வெளிநாட்டு நாணய பெறுமதிக்குச் சமமான தொகையினை பெறுநரின் கணக்கிற்கொன்றில் வைப்புச் செய்வதன் மூலம் அல்லது காசாகத் தீர்ப்பனவு செய்வதன் மூலம் உள்நாட்டில் தீர்ப்பனவு செய்யப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில், பெறுநர் பணத்தினை இரண்டொரு மணித்தியாலங்களிலும் சிலர் ஹவாலா முகவரிடம் தமது கடவுச்சொல்லினை தெரிவிப்பதன் மூலம் வீட்டுவாசலிலும் பெற்றுக்கொள்கின்றனர். **வசதி:** குவைத், தென் கொரியா, மாலைதீவு போன்ற நாடுகளில் தொழில்புரியும் இலங்கை வேலையாட்களைப் பொறுத்தவரையில், அந்நாடுகளிலுள்ள முகவர்கள், வேலையாட்கள் தொழில்புரியும் பணிமனைகளிலிருந்தே, அவர்களது குடும்பங்களுக்கு அனுப்புகின்ற நோக்கத்திற்கான பணத்தினை அவர்களின் சம்பளத்திலிருந்து சேகரித்துக் கொள்ளும் பொறிமுறையொன்றினைக் கொண்டிருப்பதனால் பணம் அனுப்புகின்றவர்களின் கண்ணோட்டத்தில் இம்முறைசாரா ஏற்பாடுகள் வசதியானவைகளாகக் காணப்படுகின்றன. **சாத்தியமான அநாமதேயம்:** ஹவாலாவின் மிக முக்கியமான கவனத்தைக் கவரும் பண்பு இதுவாகும். இவ்வேற்பாடுகளுக்கு காகிதம் அல்லது ஆவண எண்பிப்பு எதுவும் தேவையில்லை. எனவே, தமது கொடுக்கல்வாங்கல்களில் இரகசியமான தன்மையினைப் பேண விரும்பும் மக்களுக்கு இது ஒரு மறைமுகமான அழைப்பாகும். மேலும், இம்முகவர்கள் எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கும் உட்பட்டிராததன் காரணமாக நிதியத்தின் மூலம் தொடர்பான சட்டபூர்வத்தன்மை பற்றிய கேள்வி எதுவும் பணிவழங்குநரால் கேட்கப்படமாட்டாது.

ஹவாலா மார்க்கங்களினூடாகப் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல்

முறைசாரா பணவனுப்பல் மார்க்கங்கள், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகளுடாக சட்டத்திற்கு மாறான பணமாற்றல்களுக்கு வசதியான தளங்களை வழங்குகின்றன. பணம் தூயதாக்கல் என்பது சட்டத்திற்கு மாறான குற்றவியல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட பணத்தினை சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பணமாக மாற்றுதலாகும். பணம் தூயதாக்கல் செய்முறை பின்வரும் மூன்று படிமுறைகளுடன் தொடர்புபடுகிறது. முதலாவது படிமுறை யாதெனில் சட்டத்திற்கு மாறான பணப் பெறுகைகள் நிதியியல் மார்க்கத்தில் அதாவது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படுகிறது. இரண்டாவது படிமுறை அடுக்கு முறைப்படுத்தலாம். இது சட்டத்திற்கு மாறான குற்றவியல் பணத்தின் தோற்றுவாயினை மறைப்பதற்கான தொடர்ச்சியான கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்டதாகும். மூன்றாவது கட்டம் சட்டத்திற்கு மாறான குற்றப்பணம் பொருளாதாரத்திற்குள் ஈர்த்துக் கொள்ளப்படும் ஒருங்கிணைத்தலுடன் தொடர்புபட்டதாகும். பயங்கரவாதிகளுக்கு நிதியளித்தல் என்பது பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு அத்துடன்/ அல்லது நிறுவனங்களுக்கு நிதியிடும் நடவடிக்கையாகும். பயங்கரவாதத்திற்கு நிதியளிக்கின்ற மூலம் சட்ட ரீதியானதாக அல்லது சட்டத்திற்கு மாறானதாக இருக்கலாம். பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக உட்பாய்கின்ற பணம் பயங்கரவாதக் குழுவினரின் நிகழ்ச்சிநிரலைத் தொடர்கின்ற விதத்தில் தொடர்ச்சியாக இடம்பெறுதல் வேண்டும். எனவே, பயங்கரவாதிகள் அவர்களின் நிதியிடல் தேவைகளுக்காக வேறுபட்ட வழிவகைகளைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

ஹவாலா மார்க்கங்கள் அநேக வழிகளில் பணம் தூயதாக்கலுக்கும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கும் உதவுகிறது. இம்மார்க்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏதேனும் குறைபாடுகள் மற்றும் எதிர்மறையான விளைவுகளை அடையாளம் காண்பதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்று இல்லாமையானது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலிலிருந்து அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான காரணிகளிலொன்றாகக் காணப்படுகிறது. இம்முகவர்களினால் சரியான பதிவேடுகளைப் பேணும் நடைமுறை காணப்படாமை மற்றொரு உதவு காரணியாக விளங்குகிறது. வங்கித்தொழில் துறையுடன் ஒப்பிடுகையில் இக்கொடுக்கல்வாங்கல்களின் போது நிதியின் மூலம் மற்றும் பயன்பாடு தொடர்பான கவனக் குறையும் பணம் தூயதாக்குபவர்களையும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பவர்களையும் ஊக்குவிக்கிறது. சட்ட நடவடிக்கைகளை தொடங்குவதில் காணப்படும் இடர்ப்பாடு மற்றொரு குறிப்பிடத்தக்க பண்பாகும்.

முறைசாரா மார்க்கங்களைப் பயன்படுத்துவதிலுள்ள இடர்நேர்வுகள்

அநேக அப்பாவிப் பொதுமக்கள் சட்ட ரீதியானதும் சட்டபூர்வமானதுமான கொடுக்கல்வாங்கல்கள் மூலம் பெறப்பட்ட பணத்தினை மாற்றல் செய்வதற்கு ஹவாலா மார்க்கங்களைப் பயன்படுத்துவதற்கு அவர்கள் தெரிவுசெய்வதன் விளைவாக சட்ட நடைமுறைப்படுத்தல் விசாரணைகளில் அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஹவாலா குறிப்பிட்ட பணமாற்று சாதனங்களையோ அல்லது தந்தி மாற்றல்களையோ அடிக்கடி பயன்படுத்துவதில்லை. பதிலாக பணமாற்றல்கள் ஹவாலா வணிகரின் உறுப்பினர்களுக்கிடையேயான தொடர்பூட்டலின் அடிப்படையிலேயே இடம்பெறுகிறது. எனவே, கொடுக்கல்வாங்கல்களை நிரூபிப்பதற்கான வழி எதுவுமில்லை என்பதுடன் மாற்றல் செய்யப்பட வேண்டிய கஷ்டப்பட்டு உழைத்த பணத்தினை இழக்கக்கூடிய சாத்தியங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. சில சமயங்களில் ஹவாலா வணிகர்கள் மோசடி மற்றும் போதை மருந்து கடத்தல் போன்ற குற்ற நடவடிக்கைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புபடுகிறார்கள். எனவே, சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்கள் ஹவாலா முகவர்களை விசாரணை செய்வதற்கு அதிகளவு சாத்தியங்கள் காணப்படுகின்றன. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அப்பாவித்தனமாகவோ அல்லது தெரியாமலோ ஹவாலா மார்க்கங்களைப் பயன்படுத்துகின்ற மக்கள் அதிகாரிகளினால் விசாரணை செய்யப்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

நிதியியல் சந்தைகள், பொருளாதாரம் மற்றும் நாட்டின் மீதான ஹவாலாவின் தாக்கம்

நாடுகளுக்கிடையிலான முறைசாராக் கொடுக்கல்வாங்கல்கள் நிதியியல் சந்தைகள், பொருளாதாரம் மற்றும் நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பன மீது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். கணிசமான அளவினைக் கொண்ட முறைசாரா நாடுகளுக்கிடையிலான மார்க்கங்களின் கணிசமான அளவினைக் கொண்டிருப்பதன் மூலம் தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடிய முக்கிய துறைகள் வருமாறு:

குறைந்த வரி வருமானம்

ஹவாலா மார்க்கங்கள் தனிப்பட்டவர்களை அல்லது நிறுவனங்களை பணமாற்றல்களை முறைசாரா மார்க்கங்களினூடாக மேற்கொள்ள அனுமதிப்பதன் மூலம் வரி ஏய்ப்புக்களுக்கு வசதியளிக்கிறது. வருமான வரிகள் வடிவில் நேரடி வரிகளிலிருந்தும் அதேபோன்று அத்தகைய கொடுக்கல்வாங்கல் தொடர்பான மறைமுக வரிகளிலிருந்தும் அரசாங்கத்திற்கு இழப்புக்கள் ஏற்படுகின்றன. ஹவாலா மார்க்கங்களினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் பதிவுசெய்யப்படாமையின் காரணமாகவும் அத்தகைய தகவல்கள் உள்நாட்டு வரி அதிகாரிகளுக்குக் கிடைக்காமையின் காரணமாகவும் இக்கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்ட தரப்பினரின் வருமானமும் ஹவாலா முகவர்களின் வருமானமும் நாட்டின் வருமான வரியிலிருந்து விலக்கப்படுகின்றன. மேலும், முறைசார்ந்த முறைமைகளினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான பதிவுசெய்தல் கட்டணம் மற்றும் பணிக் கட்டண வரிகள் போன்ற மறைமுக வரிகளும் தவிர்க்கப்படுகின்றன. இதன் மூலம் அரசாங்கத்தின் வருமானம் எதிர்க்கணியமாகப் பாதிக்கப்படுகின்றது. பொருட்கள் மீதான வரி விதிப்பினைத் தவிர்க்கும் நோக்கத்திற்காக நாட்டின் இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் ஹவாலா கொடுக்கல்வாங்கல்களைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக இறக்குமதியாளர் வெளிநாட்டிலுள்ள ஏற்றுமதியாளரை பொருட்பட்டியலிலுள்ள விலைப்பட்டியலின் பெறுமதியினைக் குறைத்துக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்வதன் மூலம் இறக்குமதியாளரினால் அரசாங்கத்திற்குச் செலுத்தப்படக்கூடிய வரி குறைக்கப்படுகிறது. உண்மையான செலவிற்கும் பொருட்பட்டியலிலுள்ள செலவிற்குமிடையிலான வேறுபாடு, வரி அதிகாரிகளினால் கவனிக்கப்படாத ஹவாலா மார்க்கங்களின் ஊடாகத் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

சென்மதி நிலுவை மற்றும் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் மீதான தாக்கம்

இலங்கை போன்ற தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களின் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களிலும் சென்மதி நிலுவையிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் முக்கியமானதொரு கூறாக மாறியுள்ளன. தொழிலாளர்கள் ஹவாலா போன்ற முறைசாரா மார்க்கங்களினூடாக வெளிநாட்டு வருவாய்களை அனுப்பும் போது அத்தகைய வருவாய்கள் சென்மதி நிலுவையைக் கணிக்கும் போதும் வருவாய்களாகப் பிரதிபலிக்கப்படுவதில்லை. இது வணிகப்பொருள் வர்த்தகத்தினைப் போன்று சென்மதி நிலுவையில் அறிவிக்கப்பட்ட மற்றைய பல கூறுகளுடன் தொடர்பானதாகும். இதன்படி, சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்கள் நாடொன்றின் வெளிநாட்டுத் துறையின் உண்மையான நிலைமையினைப் பிரதிபலிக்கமாட்டாது. மேலும், நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் முறைசார்ந்த மார்க்கங்களுடாக நிதியின் மாற்றல் மூலமொன்று திரள்வதன் காரணமாக, ஹவாலா மாற்றல்கள், நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்ப உதவாது, உண்மையில் இது முறைசார்ந்த மற்றும் முறைசாரா மார்க்கங்களுக்கிடையிலான சாத்தியமான மாற்றல்கள் காரணமாக ஒதுக்குகளைக் குறைத்துவிடக்கூடும்.

பணநிரம்பல் மீதான தாக்கம்

ஹவாலா கொடுக்கல்வாங்கல்களில் காசின் பௌதீக ரீதியான நகர்வு எதுவும் இல்லையாகையால் பொருளாதாரமொன்றின் விரிந்த பணநிரம்பல் மீதான தக்கம் பெரும்பாலும் பூச்சியமாகும். எனினும், காசுக் கொடுக்கல்வாங்கல்களின் சார்பில் வங்கி வைப்புக் கணக்குகளில் (சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள்) வீழ்ச்சி ஏற்படக்கூடுமென்பதனால் கொடுக்கல்வாங்கல்களினது காசு செறிவுத்தன்மையின் காரணமாக பெறுநரின் நாட்டின் விரிந்த பணத்தின் உள்ளமைப்பு ஹவாலா கொடுக்கல்வாங்கல்களினால் பாதிக்கப்படக்கூடும். வங்கித்தொழில் துறை மீதான ஹவாலா மார்க்கங்களின் எதிர்க்கணியமான தாக்கமும் பணத்திற்கான கேள்வியில் உறுதிப்பாடின்மையினை தோற்றுவிக்கக்கூடிய காசுப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியும் நிதியியல் இடையேற்பாடுகளையும் நாணயப் பரிமாற்றச் செயன்முறையினையும் மட்டுப்படுத்துவதன் மூலம் நாணயக் கொள்கையின் வினைத்திறனற்ற தன்மைக்குக் காரணமாகிறது.

நிதியியல் இடையேற்பாடுகளின் மீதான தாக்கம்

வங்கித்தொழில் முறைமையிலிருந்து கசிகின்ற பணம் வங்கித்தொழில் மூலங்களின் கிடைப்பனவுத் தன்மையினை தடைசெய்கிறது. இது, உயர்ந்த வட்டி வீதங்களை வழங்குவதன் மூலம் வைப்புக்களைக் கவர்வதற்கு வங்கிகள் முயற்சிக்கும் போது சந்தை வட்டி வீதங்களில் அதிகரிப்பொன்று ஏற்படக் காரணமாகிறது. மேலும், நிதியியல் இடையேற்பாடுகளின் இன்றியமையாத தொழிற்பாடுகள் மாற்று முறைசாரா நாணயம் மற்றும் மார்க்கங்களின் அச்சுறுத்தல்களுக்குள்ளாகின்றன. ஹவாலா வலையமைப்பில் ஏற்படும் அதிகரிப்பொன்றின் காரணமாக வங்கிகளும் அவற்றின் சந்தைப் பங்குகளை இழக்கக்கூடும்.

தேசிய பாதுகாப்பின் மீதான தாக்கம்

உலகின் பல பாரிய பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அத்தகைய மார்க்கங்களே பகுதியளவில் நிதியிட்டிருப்பதனால் முறைசாரா மார்க்கங்கள் நிலை பெற்றிருப்பது தேசிய பாதுகாப்பு முகவர்களுக்குச் சவால்மிக்கதாகக் காணப்படுகிறது. ஹவாலா தலைமறைவான வங்கித்தொழில் முறையாக இருப்பதனால், பயங்கரவாத நிதியிடலின் குறிப்பிட்ட மூலங்கள் முறைசாரா பொறிமுறைகளினூடாக வழிப்படுத்தப்படுவதன் காரணமாக பயங்கரவாதிகளுக்கு நிதியிடுவதற்கெதிராக போராட்டங்களின் காத்திரமான தன்மைக்கு அச்சுறுத்தலாக விளங்குமெனக் கருதப்படுகிறது. இதற்கமைய, இம்மார்க்கங்கள் விரிவடைவதனை நிறுத்துவதற்கும் ஹவாலா மார்க்கங்களையும் பயங்கரவாதிகள் பயன்படுத்துவதனை நிறுத்துவதற்கும் ஒவ்வொரு முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும்.

இலங்கையும் ஹவாலா மார்க்கங்களும்

முறைசாரா நாணய மாற்றல் மார்க்கங்களின் வளர்ச்சி:

2021இல் இலங்கையில் தொழிலாளர் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமைக்கு உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் ஒரு சில தொழிலாளர்களே வெளிநாடுகளுக்குச் சென்றமையும் முறைசார்ந்த சந்தைக்கும் போலிச் சந்தைக்குமிடையிலான பெருமளவு செலாவணி வீத வேறுபாடுகளின் காரணமாக ஹவாலா மார்க்கங்கள் விரிவடைந்தமையும் காரணங்களாக அமைந்தன. ஹவாலா முகவர்களினால் வெளிநாட்டுச் செலாவணி மாற்றல் மீது செலுத்தப்படும் முதற் கட்டணத்தின் மூலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஹவாலா மார்க்கங்களுக்கு மாறிக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். 2021இல் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி இலங்கையின் சென்மதி நிலுவையின் நிலைமை மீது எதிர்க்கணியமான தாக்கத்தினை ஏற்படுத்தின. வெளிநாட்டு நாணயத்தினைப் பெறுவதற்கு ஹவாலா மார்க்கங்களைப் பயன்படுத்துவது செலவு கூடியதாக இருந்த போதும் கூட, செலாவணி வீத வேறுபாடுகளிலிருந்து தோன்றுகின்ற முறைசார்ந்த மார்க்கங்களில் காணப்படும் வெளிநாட்டு நாணய வழங்கலில் காணப்படும் பற்றாக்குறை காரணமாக இலங்கையின் இறக்குமதியாளர்களும் கூட தமது இறக்குமதி உண்டியல்களைச் செலுத்துவதற்கு ஹவாலா மார்க்கங்களைப் பயன்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக. அண்மைக் காலத்தில் ஹவாலா மார்க்கத்தின் பிரபல்யம், நாட்டினை, முறைசார்ந்த மார்க்கங்களினூடாக வெளிநாட்டு நாணயத்தில் முக்கியமான பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்து கவர்ந்து கொண்டதன் காரணமாக வெளிநாட்டுச் செலாவணியின் நிரம்பல் குறைவடைந்ததுடன் வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் சுருக்கமடைந்து சென்மதி நிலுவையில் கரிசனைகளைத் தோற்றுவித்தது. எனவே, ஹவாலா மார்க்கங்கள் விரிவடைந்தமையானது இலங்கையில் சென்மதி நிலுவை நிலைமையில் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலைத் தோற்றவித்தது. எனினும், முறைசார்ந்த மார்க்கங்கள் தொடர்ச்சியாக போட்டித்தன்மை வாய்ந்த செலாவணி வீதம் சந்தையின் கேள்வி மற்றும் நிரம்பலை அடிப்படையாகக் கொண்டது. செலாவணி வீத வேறுபாடு கணிசமாகக் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுவதனால் முறைசாரா பணவனுப்பல் மார்க்கங்களுக்கான கேள்வி கட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹவாலா மார்க்கங்களுக்கெதிராக எடுக்கப்பட்ட அண்மைய நடவடிக்கைகள்

முன்னர் கலந்துரையாடப்பட்டவாறு, பொருளாதாரத்திற்கு ஹவாலா ஏற்படுத்திய கடுமையான அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு நாட்டில் அதன் மார்க்கங்களின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் 2021இல் வலுப்படுத்தப்பட்டன. ஹவாலா வகை கொடுக்கல்வாங்கல்களின் இடர்நேர்வு மீதான பொதுமக்களின் புரிந்துணர்வின் மட்டத்தினை அதிகரிப்பதற்காக செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் கட்டுரைகள் என்பனவற்றை உள்ளடக்கிய பொதுமக்கள் விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான கணக்குகளின் நிதியம், சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்புகளின் சாத்தியம் பற்றிய விசாரணைகள் முடிவடையும் வரை முடக்கப்படுகின்றன. மேலும், வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அவர்களது வருவாய்களை வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் போன்ற முறைசார்ந்த மார்க்கங்களினூடாக அனுப்புவதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்காக மேலதிக ரூபாய்களை வழங்குவது போன்ற மேலதிக நிதியியல் ஊக்குவிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், முறைசார்ந்த பணவனுப்பல் மார்க்கங்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் முறைசாரா மார்க்கங்களின் பயன்பாட்டினை ஊக்கம் குன்றச் செய்யும் நோக்குடன் வெளிநாட்டுப் பணவனுப்புநர்களுக்கான ஓய்வுகால நன்மைகள் மற்றும் கடன் வசதிகள் போன்ற மற்றைய ஊக்குவிப்புக்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

முன்னோக்கிப் பயணித்தல்

ஹவாலா மார்க்கங்கள் நிலைபெற்றிருப்பது உலகளாவிய பொருளாதாரத்திற்கு பெரும் இடர்நேர்வாக இருப்பதுடன் இம்மார்க்கங்களின் பாரிய விரிவினால் ஏற்படும் அச்சுறுத்தல் வேறுபட்ட உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் வேறுபட்ட நாடுகளினால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில், ஹவாலா கொடுக்கல்வாங்கல்கள் இந்திய ஒதுக்கு வங்கியிலிருந்தான நிபந்தனை ரீதியான ஒப்புதல் இல்லாமல் இந்தியாவிற்கு வெளியே எந்தவொரு ஆளுக்கும் எந்தவொரு கொடுப்பனவினையும் செய்வதனைத் தடை செய்ததன் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. மேலும், இந்திய றிசேர்வ் வங்கி ஹவாலா மார்க்கங்களின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான

பணமாற்றல் பணிகள் திட்டங்களை அணுகுவதற்கு முறைசார்ந்த நிதியியல் பணிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட வங்கியல்லா நிதியியல் துறைகளை அணுகுவதற்குமாக/ முறைசார்ந்த நிதியியல் பணிகள்/ கிராமியப் பகுதிகளில் வர்த்தக வங்கிகளின் கிளைகளை நிறுவுவது போன்ற முறைசாரா நிதியியல் பணிகளின் தரத்தினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, இந்திய அரசாங்கம் 1970களில் நிதியியல் செலாவணி முகாமைத்துவச் சட்டத்தினை இயற்றியது. பாகிஸ்தான நாணய மாற்றுநர்களை வெளிநாட்டுச் செலாவணிக் கம்பனிகளாக மாற்றியமைப்பதனை நோக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது தொடர்பில் அவை பதிவுசெய்து கொள்ளவும் இணங்கி நடப்பதற்கும் இரண்டு ஆண்டுகள் வழங்கப்பட்டன. நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவினால் 2013இல் வெளியிடப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பில் ஹவாலாவினதும் அதனையொத்த பணி வழங்குநர்களினதும் வகிபாகம் என்ற பெயரிலான நூல் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத ஹவாலா மற்றும் அதனையொத்த பணி வழங்குபவர்களை அடையாளம் காண்பதற்கான உத்திகளையும் அவர்களது வியாபாரங்களை முறைப்படுத்துவதற்கான ஊக்குவிப்புக்களை உருவாக்குவதற்கான சாத்தியமான வழிகளையும் விளக்குகிறது. தற்பொழுது, அதிகாரிகள் இலங்கையில் ஹவாலா மார்க்கங்களைக் கண்காணித்து சட்டபூர்வமாக்குவதற்குப் பொருத்தமான சட்டக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களைத் தொடங்கியுள்ளனர்.

உசாத்துணைகள்

1. Chene, M., 2008. Hawala Remittance System and Money Laundering, U4 Help Desk, Transparency International. [online] U4.no. Available at: <https://www.u4.no/ publications/ hawala-remittance-system-and-money-laundering.pdf> [Accessed 18 March 2022].
2. Qorchi, M., Maimbo, S. and Wilson, J., 2003. Informal Funds Transfer Systems An Analysis of the Informal Hawala System. [online] Available at: <https://www.imf.org/external/pubs/nft/ op/222/index.htm> [Accessed 18 March 2022].
3. Mumin, D., 2014. The Implications of Hawala Remittance System to The Somali Businesses: A Case Study of Eastleigh, Nairobi. [online] Erepo.usiu.ac.ke. Available at: <http://erepo.usiu.ac.ke/ bitstream/handle/11732/48/Deeqo.pdf?isAllowed=y&sequence=1> [Accessed 18 March 2022].
4. Passas, N., 2003. Informal Value Transfer Systems, Terrorism and Money Laundering A Report To The National Institute Of Justice. [online] Ojp.gov. Available at: <https://www.ojp.gov/ pdffiles1/nij/grants/208301.pdf> [Accessed 18 March 2022].
5. El Qorchi, M., Maimbo, S. and Wilson, J., 2003. Informal Funds Transfer Systems: An Analysis of the Informal Hawala System. Occasional Papers, [online] Available at: <https://doi. org/10.5089/9781589062269.084> [Accessed 7 April 2022].

அமைந்தது. இதில், ஆண்டுகாலப்பகுதியில் வதியாதோர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா பெயர் குறிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய விற்பனைகள் மற்றும் இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பில் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து வதியாதோர்களால் செய்யப்பட்ட தேறிய கொள்வனவுகள் என்பவற்றுக்கு ஐ.அ.டொலர் 700 மில்லியன் செலுத்தவேண்டியிருந்தது. 2021 ஓகத்தில் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீட்டின் கிடைப்பனவு (ஐ.அ.டொலர் 787 மில்லியன்), 2021 ஓகத்து மற்றும் செத்தெம்பரில் வங்களாதேச வங்கியுடனான இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியிடமிருந்து கிடைத்த பெறுகைகள் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) என்பன உள்ளடங்கலாக சில முக்கிய உட்பாய்ச்சல்களின் அளவினை மத்திய வங்கி பெற்றுக்கொண்டது. மேலும், மத்திய வங்கியானது 2021 திசெம்பரில் செயற்படுத்தப்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்கு சமமான இருதரப்புப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியினை 2021 மார்சில் சீன மக்கள் வங்கியுடன் கைச்சாத்திட்டது. மேலும், 2020ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட ஐ.அ.டொலர் 400 மில்லியன் தொகையினைக் கொண்ட இந்திய ரிசேர்வ் வங்கியுடனான பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியினை மத்திய வங்கி ஆண்டுகாலப்பகுதியில் தீர்ப்பனவு செய்தது. 2021ஆம் ஆண்டில் தனியார் துறைக்கான நிதியியல் உட்பாய்ச்சல்களும் மிதமடைந்து காணப்பட்டன. இதனால், நேரடி முதலீட்டு கொடுக்கல்வாங்கல்கள் தவிர கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டில் வதிபவர்களின் முதலீடுகளை உள்ளடக்குகின்ற பங்குரிமை மூலதனம் வடிவிலான சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 217 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 236 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. மேலும், தனியார்துறைக்கும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குமான வெளிநாட்டு கடன் உட்பாய்ச்சல்களும் 2020ஆம் ஆண்டைப்போன்றே 2021ஆம் ஆண்டில் மிதமான தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. அதேவேளை, வங்கித்துறைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் நியதிகளில் நாணயம் மற்றும் வைப்புகள், தேறிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை குறுகிய கால வெளிநாட்டு கடன்பொறுப்புக்களின் தீர்ப்பனவுகளும் வங்கித்தொழில் துறைகளினால் தீர்ப்பனவுசெய்யப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் குறைவான எரிபொருள் கேள்வி காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட எரிபொருள் விலைப்பட்டியல்களின் தீர்ப்பனவுகளின் முதன்மைக் காரணமாக வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. மேலும், மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படுகின்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்களைப் பிரதானமாக உள்ளடக்குகின்ற ஏனைய கொடுப்பனவு செய்யத்தக்க கணக்குகள் 2021ஆம் ஆண்டில் தேறிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

2021இல் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் வீழ்ச்சியினைப் பிரதிபலித்து நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் குறிப்பிடத்தக்க குறைவொன்றினைப் பதிவுசெய்தது. நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல், மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட குறைவினைப் பிரதான காரணமாகக் கொண்டு 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் பாரிய வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள், மத்திய

அட்டவணை 5.9 அ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)	
	நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல்	பொறுப்புக்களின் தேறிய உறப்படல்	நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல்	பொறுப்புக்களின் தேறிய உறப்படல்
நிதியியல் கணக்கு	**-2,113**	**-1,718**	**-2,122**	**1,907**
நேரடி முதலீடு	**15**	**434**	**17**	**598**
பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப்பங்குகள்	10	211	13	317
வருவாய்களின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம்	7	20	9	27
நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர்	7	20	9	27
வருவாய்களின் மீள் முதலீடு	3	191	4	290
படுகடன் கருவிகள்	4	223	5	281
நேரடி முதலீடு தொழில் முயற்சிகளில் நேரடிமுதலீட்டாளர்	4	223	5	281
சொத்துப்பட்டியல் முதலீடு	**-**	**-2,383**	**-**	**-906**
பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்	-	-217	-	-236
படுகடன் பிணையங்கள்	-	-2,166	-	-670
பொது அரசாங்கம்	-	-2,166	-	-670
குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்)	-	-122	-	-2
நீண்ட காலம்	-	-2,044	-	-668
திறைசேரி முறிகள்	-	-431	-	-25
இலங்கை அபிவிருத்தி முறிகள்	-	22	-	-2
நாட்டுக்கான முறிகள்	-	-1,635	-	-640
வழங்கல்கள்	-	-	-	-
உடமைகளின் முதிர்வுகள்	-	-859	-	-700
இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள்	-	-776	-	60
நிதியியல் பெறுதிகள்	-	-	-	-
ஏனைய முதலீடு	**-136**	**231**	**387**	**2,216**
நாணயமும் வைப்புக்களும்	64	-15	306	4,016
மத்திய வங்கி	-	400	-	1,375
குறுங்காலம்	-	...	-	1
நீண்ட காலம்	-	400	-	1,374
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	64	-415	306	2,641
குறுங்காலம்	259	-415	256	2,641
நீண்ட காலம்	-194	-	50	-
பக்கம் xxx இல் தொடர்கிறது.				
ஞாபகார்த்த விடயங்கள்				
வெளிநாட்டு நேரடி முதலீடுகள்				
பங்கு மூலதனம்		20		27
வருவாய்களின் மீள் முதலீடு		191		290
கம்பனிகளுக்கிடையிலான கடன்கள்		223		281
மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1)		**434**		**598**
முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் (2)		236		187
முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1+2) (இ)		**670**		**784**
கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்		**-225**		**-238**
நேரடி முதலீடுகள்		-8		-2
சொத்துப்பட்டியல் முதலீடுகள்		-217		-236
ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) மீதான தேறிய வெளிநாட்டு முதலீடு		**-553**		**-27**
வெளிநாட்டு கொள்வனவுகள்		120		17
வெளிநாட்டு விற்பனைகள்		673		44

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபையின் மதிப்பீடுகளுடனான வித்தியாசம் விடயப்பரப்பு மற்றும் தொகுப்பு ஏதாவது முறைமைகளிலான வேறுபாட்டினாலானது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.9 ஆ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)	
	நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல்	பொறுப்புக்களின் தேறிய உறப்படல்	நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல்	பொறுப்புக்களின் தேறிய உறப்படல்
ஏனைய முதலீடு (பக்கம் xxx இலிருந்து தொடர்கிறது)				
கடன்கள்	-	174	-	-1,552
மத்திய வங்கி	-	-14	-	-57
ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள்	-	-14	-	-57
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி	-	-14	-	-57
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	-	75	-	-2,152
குறுங்காலம்	-	403	-	-2,169
நீண்ட காலம்	-	-328	-	17
பொது அரசாங்கம்	-	169	-	664
நீண்ட காலம்	-	169	-	664
ஏனைய துறைகள் (இ)	-	-56	-	-7
நீண்ட காலம்	-	-56	-	-7
வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள்	-224	185	257	-428
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	9	-	-3	-
குறுங்காலம்	9	-	-3	-
ஏனைய துறைகள் (ஈ)	-233	185	260	-428
குறுங்காலம்	-233	185	260	-428
ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள்	24	-114	-176	180
மத்திய வங்கி	-	-114	-	180
குறுங்காலம் (உ)	-	-114	-	180
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	24	-	-176	-
குறுங்காலம்	24	-	-176	-
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	-	-	-	787
ஒதுக்குச் சொத்துக்கள்	**-1,992**		**-2,526**	
நாணய தங்கம்	-667		-212	
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	-5		123	
பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை	-		-	
ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள்	-1,319		-2,437	
நாணயமும் வைப்புக்களும்	-177		1,536	
நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள்	-1,092		1,055	
ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள்	914		481	
பிணையங்கள்	-1,143		-3,976	
படுகடன் பிணையங்கள்	-1,143		-3,976	
நீண்ட காலம்	-1,143		-3,976	
ஏனைய கோரல்கள்	1		3	
நிதியியல் கணக்கு (தேறிய)	**-394**		**-4,029**	
ஞாபகார்த்த விடயங்கள்				
அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)	**169**		**664**	
உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்)	1,882		2,418	
செயற்திட்டக்கடன்கள்	1,382		1,608	
வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள்	500		810	
மீள்கொடுப்பனவுகள்	1,713		1,754	

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வங்கியின் முதிர்ச்சியடைகின்ற கடன் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் அதேபோன்று எரிபொருள், எரிவாயு, நிலக்கரி, மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்கு 2021ஆம் ஆண்டின், குறிப்பாக பிற்பகுதியில் மத்திய வங்கியின் குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி வழங்கல் என்பன காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், ஆண்டுக்காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2.5 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன. எனினும், வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் நாணய மற்றும் வைப்புகள் வடிவிலான சொத்துகளின் தேறிய கையகப்படுத்தலும் இலங்கை ஏற்றுமதியாளர்களால் அவர்களின் கடல்கடந்த வர்த்தகப் பங்காளர்களுக்கு வழங்கப்பட்ட வர்த்தகக்

அட்டவணை 5.10
2021 இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்

கடன் வழங்குநரும் செயற்றிட்டங்களும்	பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ஐ.அ.டொ.மில்
அரசாங்க செயற்றிட்டங்கள் - மொத்தம்	**1,608**
இதில்,	
ஆசிய அபிவிருத்தி வங்கி	**613**
இதில்,	
ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம்	221
இரண்டாம் நிலைக் கல்வித்துறை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்	52
மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்	42
பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு	**294**
இதில்,	
காலநிலை தாக்குப்பிடித்தல் மேம்பாட்டு முகாமைத்துவம்	36
உபாய நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம்	28
யப்பானிய அரசு	**135**
இதில்,	
களனி நதியின் மேலான புதிய பால கட்டடவாக்க செயற்திட்டம்	51
தேசிய ஊடுகடத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன்மிக்க மேம்பாட்டுச் செயற்திட்டம்	34
புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி	**131**
இதில்,	
கொவிட் - 19 அவசர பதிலிறுப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியிடல்	54
முதன்மை சுகாதார கவனிப்பு முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம்	42
சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி	**126**
இதில்,	
கண்டி வடக்கு பாததும்பர ஒன்றிணைந்த நீர்வழங்கல் செயற்திட்டம்	54
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கட்டடவாக்க விரிவாக்கம்,	36
வீதிகளின் விரிவாக்கம் மற்றும் மேம்பாடு மற்றும் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 13 பாலங்களின் புனரமைப்பு	34
இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி	**81**
இதில்,	
புகையிரத துறை அபிவிருத்திக்கான டொலர் கொடுகடன் வசதி	80
பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம்	**27**
இதில்,	
அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் வலுச் சேமிப்பு செயற்திட்ட அமுலாக்கம்	10
ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி	**22**
இதில்,	
கொழும்பு நகர்ப்புற மீளுருவாக்க செயற்திட்டதிற்கான ஆதரவு	19
கூட்டுறவு மத்திய ரைபைசன் - போரன்லீன்பன் வங்கி	**22**
இதில்,	
களுத்துறை பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி	13

மூலம் : நிதி அமைச்சு

கொடுகடன் மற்றும் முற்பணங்களைப் பிரநிதித்துவப்படுத்துகின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் மீதான சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தலும் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்த அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஏனைய கிடைக்கப்பெறத்தக்க கணக்குகள் ஆண்டுகாலப்பகுதியில் தேறிய குறைவொன்றினைப் பதிவுசெய்தன.

5.5 திரண்ட நிலுவை

தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் மாற்றங்களைப் எடுத்துக்காட்டுகின்ற சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் தொடர்ச்சியாக மிதமடைதல், கணிசமான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அத்துடன் ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கி மூலம் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கான தேறிய விற்பனைகள் என்பன காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக, 2021 இறுதியளவில் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்து 2020இன் ஐ.அ.டொலர் 2.3 பில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2021இல் திரண்ட நிலுவையில், ஏறத்தாழ 4.0 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்வதற்கு வழிவகுத்தது.

5.6 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

பன்னாட்டு முதலீட்டு நிலைமை நியதிகளில் 2020 இறுதியிலிருந்து 2021 இறுதியில் இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையானது அதிகரித்த அதேவேளை வெளிநாட்டுச் சொத்து நிலைமை வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, நாட்டின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையானது 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 58.6 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 64.5 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை நாட்டின் வெளிநாட்டு சொத்து நிலைமை 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ.டொலர் 10.9 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 8.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, பன்னாட்டு முதலீட்டு நிலையின் தேறிய பொறுப்பு நிலைமை 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 47.7 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 55.7 பில்லியனுக்கு அதிகரித்தது.

வதிவற்றவர்களுடனான இலங்கையின் வெளிநாட்டு சொத்துநிலைமை 2021 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் வீழ்ச்சியின் பிரதான காரணமாக வெளிநாட்டு சொத்துக்களின் இருப்புநிலைமை 2020ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 5.7 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் 3.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.[1] அதேவேளை, வதிகின்ற இலங்கையர்களின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை ஆண்டுகாலப்பகுதியில் சிறிதளவு அதிகரித்தது. நாணயம் மற்றும் வைப்புகள் வடிவில் வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களின் சொத்து நிலைமை அதிகரித்த அதேவேளை ஏனைய பெறத்தக்க கணக்குகள் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. அதேவேளை, தனியார்துறை மூலம் வதியாதோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் செலுத்தவேண்டிய சொத்துநிலைமை 2020 இறுதியில் அவதானிக்கப்பட்ட நிலையிலிருந்து 2021 இறுதியில் அதிகரித்தது.

பன்னாட்டு முதலீட்டு நிலைமை பிரதிபலித்து வதியாதோர்களுக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமையும் 2021 இறுதியளவில் குறிப்பிடத்தக்களவு

1 ஒதுக்குச் சொத்து நிலைமை பற்றிய விரிவான பகுப்பாய்வினை 5.6.1ஆம் பிரிவு தருகின்றது.

அட்டவணை 5.11
பன்னாட்டு முதலீட்டு நிலைமை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

வகை	2020 (ஆ)		2021 (ஆ)	
	சொத்துக்கள்	பொறுப்புக்கள்	சொத்துக்கள்	பொறுப்புக்கள்
நேரடி முதலீடு (இ)	**1,509**	**13,655**	**1,522**	**17,891**
பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்	1,473	8,665	1,482	12,626
படுகடன் கருவிகள்	36	4,990	40	5,264
சொத்துப்பட்டியல் முதலீடுகள்	**...**	**8,579**	**...**	**7,508**
பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்		867		1,148
ஏனைய துறைகள்		867		1,148
படுகடன் பிணையங்கள் (ஈ)	...	7,712	...	6,360
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	...		...	
குறுங்காலம்	...		...	
பொது அரசாங்கம்		7,616		6,266
குறுங்காலம்		4		1
நீண்ட காலம்		7,613		6,265
ஏனைய துறைகள்		96		94
நீண்ட காலம்		96		94
நிதியியல் பெறுதிகள்	-	-	-	-
ஏனைய முதலீடு	**3,710**	**36,340**	**4,096**	**39,100**
நாணயமும் வைப்புக்களும்	**835**	**1,734**	**1,142**	**5,749**
மத்திய வங்கி		400		1,775
குறுங்காலம்		...		1
நீண்ட காலம்		400		1,774
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	835	1,333	1,142	3,974
குறுங்காலம்	622	1,333	878	3,974
நீண்ட காலம்	214		264	
கடன்கள்		**31,353**		**29,585**
மத்திய வங்கி		1,378		1,265
ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள்		1,378		1,265
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்		5,324		3,172
குறுங்காலம்		4,174		2,005
நீண்ட காலம்		1,150		1,167
பொது அரசாங்கம்		20,570		21,077
நீண்ட காலம்		20,570		21,077
ஏனைய துறைகள் (உ)		4,081		4,071
நீண்ட காலம்		4,081		4,071
வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்	**954**	**2,341**	**1,211**	**1,913**
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	101		98	
குறுங்காலம்	101		98	
ஏனைய துறைகள் (ஊ)	853	2,341	1,113	1,913
குறுங்காலம்	853	2,341	1,113	1,913
ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள்	**1,920**	**343**	**1,744**	**523**
மத்திய வங்கி (எ)		343		523
குறுங்காலம்		343		523
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	1,920		1,744	
குறுங்காலம்	1,920		1,744	
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்		**570**		**1,330**
ஒதுக்குச் சொத்துக்கள்	**5,664**		**3,139**	
நாணய தங்கம்	409		175	
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	3		124	
ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை	69		67	
ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள்	5,184		2,773	
நாணயமும் வைப்புக்களும்	2,210		2,729	
நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள்	861		899	
ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள்	1,350		1,830	
பிணையங்கள்	2,974		44	
படுகடன் பிணையங்கள்	2,974		44	
மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்	**10,883**	**58,574**	**8,758**	**64,498**
தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை		**-47,691**		**-55,740**
ஞாபகார்த்த விடயங்கள்				
பழுறி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு	10,883	58,574	8,758	64,498
குறுங்காலம்	6,184	9,062	6,804	9,564
நீண்ட காலம்	4,699	49,512	1,954	54,934

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.
(ஈ) உள்நாட்டு நாணய வழங்கல்கள் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வழங்கல்கள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
(உ) அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநிற்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.
(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.
(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அதிகரித்தது. நேரடி முதலீட்டுப் பொறுப்புகளில் அதிகரிப்பு, மத்திய வங்கி மற்றும் வைப்பு ஏற்கும் நிறுவனங்களின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புகளில் அதிகரிப்பு அதேபோன்று சிறப்பு எடுப்பனவு ஒதுக்கீட்டிலிருந்து ஏற்பட்ட அதிகரிப்பு என்பன இதற்கு பிரதான காரணங்களாக அமைந்தன. பங்குரிமை மூலதன வடிவில் செலுத்தவேண்டிய நேரடி முதலீடுகளின் பொறுப்பு நிலைமையானது கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட சில முக்கிய வதியாதோர் பங்குரிமை மூலதன நிலைமைகளில் கணிசமான பெறுமதி ஈட்டல்கள் காரணமாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4.0 பில்லியனை அண்மித்த தொகையினால் அதிகரித்தது. ஆண்டின் தொடக்கத்திலிருந்து பங்குரிமை மூலதன நிலை கணிசமாக அதிகரித்தமையினால் பங்குரிமை மூலதனத்தின் இவ்வீட்டல் குறிப்பாக சில கம்பனிகளில் முக்கியமானதாக அமைந்து, 2021 இறுதியளவில் இவ்வதியாத முதலீட்டாளர்களுக்கான குறிப்பிடத்தக்க பெறுமதி ஈட்டல்களைத் தோற்றுவித்தது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் சீன மக்கள் வங்கியுடன் சீன யுவான் 10 பில்லியன் தொகையுடைய (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்கு சமனான) அத்துடன் வங்காளதேச வங்கியுடன் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) புதிதாக இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டமையும் இந்திய ரிசேர்வ் வங்கியுடனான (ஐ.அ.டொலர் 400 மில்லியன்) சார்க் நிதிய பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியின் தீர்ப்பனவினதும் ஒன்றிணைந்த தாக்கத்தினால் 2021இன் இறுதியளவில் மத்திய வங்கியின் நாணய மற்றும் வைப்புக்களின் பொறுப்பு நிலைமை அதிகரித்தது. அதேவேளை, வைப்பினை ஏற்கும் நிறுவனங்களின் நாணய மற்றும் வைப்பு பொறுப்பு நிலைமையும் 2021 இறுதியில் அதிகரித்தது. மேலும் ஆண்டுகாலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 787 மில்லியன் கொண்ட பன்னாட்டு நாணய நிதியம் மூலமான சிறப்பு எடுப்பனவு உரிமையின் புதிய ஒதுக்கீட்டுடன் இணைந்து சிறப்பு எடுப்பனவு உரிமைப் பொறுப்பு நிலைமையும் 2021 இறுதியில் அதிகரித்தது. எனினும், ஆண்டுகாலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறியின் மீள்கொடுப்பனவு அத்துடன் வெளிநின்ற அரசாங்க நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளின் வீழ்ச்சி என்பவற்றுடன் சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு நிலைமையானது 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியளவில் வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கியின் மற்றும் வைப்பு ஏற்கும் நிறுவனங்களின் வெளிநாட்டு கடன்பொறுப்புக்களில் குறைவடைதல் மூலம் பிரதானமாகப் பங்களிக்கப்பட்டு நேரடி முதலீட்டு நிலைமையின் வெளிநாட்டுக் கடன்பொறுப்பு நிலைமையும் 2021 இறுதியில் வீழ்ச்சியடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் பிரதானமாக பெற்றுக்கொண்ட இரண்டு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளின் நோக்கில் அரசாங்கத்தின் வெளிநாட்டு கடன் பொறுப்புநிலைமை அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், இலங்கை இறக்குமதியாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட செலுத்தவேண்டிய வர்த்தகக் கொடுகடன்கள் 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த அதேவேளை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துடன்

தொடர்புபட்ட மத்திய வங்கியின் பொறுப்புக்களின் அதிகரிப்புடன் ஏனைய செலுத்தத்தக்க கணக்குகளின் செலுத்தவேண்டிய நிலையும் அதிகரித்தது.

5.6.1 ஒதுக்குச் சொத்துநிலைமை

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2020 இறுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 5.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 3.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்கில் ஏற்பட்ட வீழ்ச்சியானது குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மிதமடையச்செய்யும் நோக்கில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு என்பவற்றின் ஒன்றிணைந்த விளைவாகவிருந்தது. ஆண்டுகாலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை மீளமைப்பதற்கு உதவிய முக்கிய உட்பாய்ச்சல்களாக சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைத்த ஏறத்தாழ ஐ.அ.டொலர் 810 மில்லியன் கொண்ட இரண்டு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலமான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 787 மில்லியன் கொண்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடு மற்றும் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் (சீன யுவான் 10 பில்லியன்), கொண்ட சீன மக்கள் வங்கியுடனான அத்துடன் ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட வங்காளதேச வங்கியுடனான இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதிகள் என்பன உள்ளடங்கியிருந்தன. எனினும், ஆண்டுகாலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறி மீள்கொடுப்பனவு (ஐ.அ.டொலர் 1.0 பில்லியன்), வெளிநாட்டுக் கருத்திட்டக் கடன்கள் அத்துடன் வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளுடன் தொடர்புடைய முதன்மை மற்றும் வட்டிக்கொடுப்பனவுகள் (ஐ.அ.டொலர் 2.2 பில்லியன்), இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான கடன்கள் என்பவற்றுக்கான மூலதன மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் (ஐ.அ.டொலர் 2.3 பில்லியன்) உள்ளடங்கலாக கணிசமான வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவுகள் அத்துடன் அத்தியாவசிய இறக்குமதிச் செலவுகளுக்கு நிதியளிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்கல் செய்வதன் வாயிலாக உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு என்பன மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டத்தின் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்தன. ஆண்டின் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குமட்டம் 1.8 மாதங்களுக்கான இறக்குமதிகளுக்கு (2020இல் 4.2 மாதங்களுக்கான இறக்குமதிகள்) போதுமானதாகவும் எஞ்சியிருக்கின்ற முதிர்ச்சி அடிப்படையில் நாட்டின் குறுகியகால படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 23 சதவீதத்திற்கு (2020இல் 43 சதவீதம்) சமமானதாகவும் காணப்பட்டது. அதேவேளை, வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களின் வெளிநாட்டுச் சொத்து உரித்துகள் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த போதிலும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் வீழ்ச்சி காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில்துறையின் வெளிநாட்டு சொத்துக்களையும் உள்ளடக்குகின்ற மொத்தப் பன்னாட்டு ஒதுக்குகளும் 2021ஆம் ஆண்டின் இறுதியை நோக்கி வீழ்ச்சியடைந்தன. நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020இல் 6.4 மாதங்களுக்கான இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டின் இறுதியளவில் 3.6 மாத இறக்குமதிகளுக்கு போதுமானதாகவிருந்தது.

அட்டவணை 5.12
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

ஐ.அ.டொலர் மில்லியன்

விடயம்	2017	2018	2019	2020	2021(அ)
				(கால இறுதியிலான நிலைமை)	
1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள்	488	817	386	155	177
2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள்	7,470	6,102	7,256	5,510	2,962
3. **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2)**	**7,959**	**6,919**	**7,642**	**5,664**	**3,139**
4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள்	2,478	2,664	2,760	2,856	2,983
5. **மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ)**	**10,436**	**9,583**	**10,402**	**8,521**	**6,122**
6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ)	1,361	1,425	1,771	2,121	3,562
7. **தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6)**	**6,597**	**5,495**	**5,871**	**3,543**	**-423**
8. **திரண்ட நிலுவை (ஈ)**	**2,068**	**-1,103**	**377**	**-2,328**	**-3,967**
9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி:					
9.1 பொருட்களின் இறக்குமதிகள்	4.6	3.7	4.6	4.2	1.8
9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள்	3.8	3.1	3.7	3.7	1.8
10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி:					
10.1 பொருட்களின் இறக்குமதிகள்	6.0	5.2	6.3	6.4	3.6
10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள்	4.9	4.3	5.1	5.6	3.4

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.12
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

5.7 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுகள்

5.7.1 வெளிநாட்டுப் படுகடன்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலை பிரதானமாக மத்திய வங்கியின் மற்றும் வைப்பு ஏற்கும் நிறுவனங்களின் வெளிநாட்டுப் படுகடன் அதிகரிப்புடன் 2021இல் உயர்வடைந்தது. நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடனானது 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 49.0 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 50.7 பில்லியனுக்கு அதிகரித்தது. பிரதானமாக சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட இரண்டு வெளிநாட்டு நாணயத் தவணை நிதியளித்தல் வசதிகளின் கிடைப்பனவு காரணமாக அரசாங்கத்தின் மொத்த செலுத்தவேண்டிய வெளிநாட்டுக் கடன்களில் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரிப்பொன்று பதிவாகிய போதிலும், சந்தை விலையில் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பானது 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 28.2 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 27.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இது, இலங்கையின் வெளிநிற்கின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் வீழ்ச்சி அத்துடன் 2021 யூலையில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு என்பவற்றின் ஒன்றிணைந்த விளைவின் பெறுபேறாக அமைந்திருந்தது. 2021ஆம் ஆண்டின் வெளிநின்ற அரசாங்க படுகடனின் குறைவுக்கு பிரதான காரணமாக பன்னாட்டு சந்தைகளிலிருந்தான புதிய கடன்பெறுகைகளின் பற்றாக்குறை காணப்பட்ட அதேவேளை, அரசாங்கத்தின் சில வெளிநாட்டு படுகடன் கடப்பாடுகள் மத்திய வங்கியின் ஒதுக்குகளை பயன்படுத்துவதன் மூலம் மீளச் செலுத்தப்பட்டது. அதேவேளை, 2020ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட இந்திய ரிசேர்வ் வங்கியுடனான பன்னாட்டு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் வசதி ஆண்டுகாலப்பகுதியில் மீளக்கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வங்காளதேச வங்கி மற்றும் சீன மக்கள் வங்கி என்பவற்றுடன் புதிய இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த ஏற்பாடுகள் காரணமாக 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில்

வரைபடம் 5.13
வெளிநாட்டுப் படுகடன்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.13
வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

வகை	2020(ஆ)	2021(ஆ)
பொது அரசாங்கம்	**28,187**	**27,344**
குறுங்காலம்	4	1
படுகடன் பிணையங்கள்	4	1
திறைசேரி உண்டியல்கள் (இ)	4	1
நீண்ட காலம்	**28,183**	**27,343**
படுகடன் பிணையங்கள்	7,613	6,265
திறைசேரி முறிகள் (இ)	31	8
இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ)	27	24
நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ)	7,555	6,233
கடன்கள்	20,570	21,077
மத்திய வங்கி	**2,690**	**4,892**
குறுங்காலம்	**343**	**524**
நாணயம் மற்றும் வைப்புக்கள்	...	1
ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள்	343	523
ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள்	343	523
நீண்ட காலம்	2,348	4,368
சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள்	570	1,330
நாணயம் மற்றும் வைப்புக்கள்	400	1,774
கடன்கள்	1,378	1,265
ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள்	1,378	1,265
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் அவசர உதவி	1,378	1,265
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	**6,657**	**7,146**
குறுங்காலம்	**5,507**	**5,979**
நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ)	1,333	3,974
வர்த்தக வங்கிகள்	1,333	3,974
கடன்கள்	4,174	2,005
வர்த்தக வங்கிகள்	4,174	2,005
நீண்ட காலம்	**1,150**	**1,167**
கடன்கள்	1,150	1,167
வர்த்தக வங்கிகள்	1,109	1,084
ஏனைய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	41	83
ஏனைய துறைகள் (எ)	**6,517**	**6,078**
குறுங்காலம்	**2,341**	**1,913**
வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ)	2,341	1,913
நீண்ட காலம்	**4,176**	**4,165**
படுகடன் பிணையங்கள் (உ)	96	94
கடன்கள்	4,081	4,071
தனியார் துறை கூட்டுத்தாபனங்கள்	2,315	2,425
அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளும் அரச கூட்டுத்தாபனங்களும்	1,766	1,646
நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ)	**4,990**	**5,264**
மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை	**49,041**	**50,724**
மொ.உ.உ. சதவீதமாக		
மொத்த வெளிநாட்டு படுகடன்	60.5	60.0
குறுங்கால படுகடன்	10.1	10.0
நீண்டகால படுகடன்	50.4	50.0
மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக		
குறுங்கால படுகடன்	16.7	16.6
நீண்டகால படுகடன்	83.3	83.4
ஞாபகார்த்த விடயங்கள்		
படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு	**12,058**	**11,400**
பொது அரசாங்கம்	11,883	11,225
திறைசேரி உண்டியல்கள்	4	1
திறைசேரி முறிகள்	33	9
இலங்கை அபிவிருத்தி முறிகள்	27	24
நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்	11,820	11,191
ஏனைய துறைகள்	175	175
நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப்பெறுமதி	**14,050**	**13,050**
வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள்	11,820	11,191
வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (2019 திசெம்பரில் முதல் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளன)	2,230	1,859

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(எ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஏ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஐ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

மூலம் : இலங்கை மத்திய வங்கி

2021 இறுதியில் மத்திய வங்கியின் செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. குறுகிய கால கடன்களின் நிலை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தபோதிலும், நாணய மற்றும் வைப்புகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காரணமாக வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களின் செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை தனியார் துறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் அதிகரிப்புக்கு மத்தியிலும் தனியார் துறைக்கு கிடைக்கப்பெற்ற செலுத்தவேண்டிய வர்த்தக கொடுகடன்களின் குறைவுடனும் அரசுக்குச் சொந்தமான வியாபார தொழல்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுடனும் இணைந்து 2021ஆம் ஆண்டில் தனியார் துறையினதும் அரசுக்குச் சொந்தமான வியாபார முயற்சிகளினதும் செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் வீழ்ச்சியடைந்தது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் நேரடி முதலீட்டுக் கம்பனிகளில் அநேகமானவை கம்பனிகளுக்கிடையிலான கடன்களையும் பங்குடமையாளர் முற்பணங்களையும் பெற்றுக்கொண்டமை மூலம் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பெறுதல் 2021 காலப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 60.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 60.0 சதவீதமாகக் காணப்பட்டு 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் பெயரளவு உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில் அதிகரிப்பொன்றினைப் பிரதிபலிக்கின்றது. மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலையில் அரசாங்கத்தின் செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் படுகடன் நிலை 2020 இறுதியில் பதிவாகிய 57.5 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 53.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. படுகடன் முதிர்ச்சித் தொகுப்பு நியதிகளில் நீண்டகால முதிர்ச்சியுடன் கூடிய படுகடன், 2020 இறுதியளவில் இருந்த மொ.உ.உற்பத்தியின் 50.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியளவில் மொ.உ.உற்பத்தியின் 50.0 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

5.7.2 வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

மூலதன மீள்கொடுப்பனவுகளில் சிறிதளவு அதிகரிப்புக்கு மத்தியில் வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறைவு காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டுப் படுகடன் மீதான மூலதனக் கொடுப்பனவுகள் 2020ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 3.1 பில்லியனுக்கு அதிகரித்தன. 2021ஆம் ஆண்டில் மூலதன மீள்கொடுப்பனவுகள், இந்திய ரிசேர்வ் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த வசதியினை உள்ளடக்கியிருந்தன. மேலும், 2021 காலப்பகுதியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் ஒரு பில்லியன் பெறுமதியுடைய நாட்டிற்கான பன்னாட்டு முறியில் ஐ.அ.டொலர் 700 மில்லியன் முதிர்ச்சியின் அடிப்படையில் வதியாதோர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட அதேவேளை எஞ்சிய தீர்ப்பனவுகளை வதிவோர் பெற்றனர். ஆண்டுகாலப்பகுதியில் அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கடன்களின் மூலதனக் கொடுப்பனவுகள் சிறிதளவு அதிகரித்தன. அதேவேளை, தனியார்துறை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் வைப்பு ஏற்கின்ற நிறுவனங்கள் மூலமான வெளிநாட்டுக் கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுகாலப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கியானது சென்மதி நிலுவை ஆதரவளித்தல் வழியொன்றாக பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து 2016இல் பெற்றுக்கொள்ளப்பட்ட நீடிக்கப்பட்ட நிதி வசதியுடன் தொடர்புடைய கடன் தவணைக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் மீளச்செலுத்தியது. வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 1.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1.4 பில்லியனுக்கு ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. இதற்கு, ஆண்டுகாலப்பகுதியில் வதியாதோருக்குவழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகளின் வீழ்ச்சி, ரூபா பெயர் குறிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் என்பன காரணமாக அமைந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பினதும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் வீழ்ச்சியினதும் இணைந்த தாக்கத்தின் காரணமாக பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2020ஆம் ஆண்டின் 35.2 சதவீதத்திலிருந்து 2021ஆம் ஆண்டில் 30.0 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் பங்கும் 2020ஆம் ஆண்டின் 86.5 சதவீதத்திலிருந்து 2021இல் மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவின் 81.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

5.8 செலாவணி வீத அசைவுகள்

இலங்கை ரூபா, 2022ஆம் ஆண்டின் மார்ச்சு ஆரம்பப்பகுதியில் செலாவணி வீதத்தில் சீராக்கமொன்றை இடமளிப்பதற்கு முன்னர் 2021 காலப்பகுதியிலும் 2022ஆம் ஆண்டின் ஆரம்பகாலத்திலும் பரந்தளவில் நிலையான மட்டத்திலேயே காணப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய திரவத்தன்மை காரணமாக, குறிப்பாக 2021ஆம் ஆண்டின் முதல் நான்கு காலப்பகுதியின்போது தேய்வுறுவதற்கான அழுத்தத்துடன் ரூபா சில தளம்பலை வெளிக்காட்டியது. இறக்குமதிச் செலவுகளை நிறைவுசெய்வதற்கான

அட்டவணை 5.14
வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

ரூபா.மில்லியன்

வகை	2020 (அ)	2021 (ஆ)
1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்	**4,604**	**4,498**
1.1 கடன் தவணைக் கொடுப்பனவு	**3,004**	**3,111**
பொது அரசாங்கம்	2,577	2,460
செயற்றிட்டக் கடன்கள்	1,713	1,754
படுகடன் பிணையங்கள்	864	706
மத்திய வங்கி	14	457
பன்னாட்டு நாணய நிதியம்	14	57
பரஸ்பர பரிமாற்றல் மற்றும் ஏனைய பொறுப்புகள்	-	400
தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	412	193
வெளிநாட்டு கடன்கள்	412	193
1.2 வட்டிக்கொடுப்பனவுகள்	**1,601**	**1,388**
பொது அரசாங்கம்	1,405	1,187
செயற்றிட்ட கடன்கள்	497	394
படுகடன் பிணையங்கள்	908	793
மத்திய வங்கி	19	15
பன்னாட்டு நாணய நிதியம்	18	15
பரஸ்பர பரிமாற்றல் மற்றும் ஏனைய பொறுப்புகள்	2	1
தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	167	175
வெளிநாட்டு கடன்கள்	167	175
நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான படுகடன்	10	11
2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்	**13,083**	**14,974**
3. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்	**20,398**	**20,587**
4. படுகடன் பணி விகிதம்		
4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக		
ஒட்டு மொத்த விகிதம்	35.2	30.0
ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக	35.0	29.6
4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக		
ஒட்டு மொத்த விகிதம்	22.6	21.8
ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக	22.4	21.5
5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்		
5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ)	3,982	3,648
5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக	86.5	81.1

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சல்களுக்கும் அரசாங்கத்தின் படுகடன் பணித் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகளுக்கும் மத்தியில் படுகடன் மற்றும் படுகடனற்ற உட்பாய்ச்சல்கள் என்ற இருவடிவிலும் குறைவடைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் இதற்கு பெருமளவில் காரணங்களாக அமைந்தன. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் தொடர்ச்சியான தார்மீக நெறிமுறைகள் என்பன ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் அதேபோன்று 2022ஆம் ஆண்டின் சில மாதங்களிலும் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியினை நிலைநிறுத்துவதற்கு உதவின. அதற்கமைய, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட ஆதரவுடன், மத்திய வங்கியின் ஈடுபாட்டுடன் வங்கிகளுக்கிடையிலான சந்தையில் நிறையேற்றப்பட்ட சராசரி உடனடி செலாவணிவீதம் 2021ஆம் ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூபா 200-203 ஆகப் பரந்தளவில் உறுதியாகக் காணப்பட்டது. ஆகையினால், 2021 இறுதியில் ரூபாவின் வருடாந்த தேய்மானம் ஐ.அ.டொலருக்கெதிராக 7.0 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இது உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து நாசம் விளைவிக்கும் அதிர்விலிருந்து மீட்சியடைகின்ற போக்கில் பொருளாதாரம் காணப்பட்ட காலத்தில் நாணயத்தின் மிதமிஞ்சிய தேய்மானத்தின் பாதகமான விளைவுகளைத் தணிப்பதற்கு உதவியது. உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் அவதானிக்கப்பட்ட அழுத்தங்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியை உழைப்போர்களால் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் போதியளவு மாற்றப்படாமை பகுதியளவில் காரணமாக அமைந்திருக்கலாம். ஏற்றுமதிப் பெறுகைகளின் கட்டாயமாக மாற்றுதல் தேவைப்படுத்தல்கள் மீதான ஒழுங்குவிதிகளை விதித்தமையுடன் உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை நிலைமை ஒரளவிற்கு மேம்பட்டது. அதேவேளை, குறுக்கு நாணய செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலித்து 2021 காலப்பகுதியில் இலங்கை ரூபா ஜப்பான் யென் (3.8 சதவீதம்) மற்றும் யூரோ (1.1 சதவீதம்) என்பவற்றுக்கெதிராக உயர்வடைந்ததுடன், ஸ்ரேலிங் பவுன் (6.0 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (5.5 சதவீதம்) என்பவற்றுக்கெதிராகத் தேய்வடைந்தது. 2022ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் உயர்தர தார்மீக நெறிமுறைகள் காரணமாக இலங்கை ரூபா பரந்தளவில் நிலையானதாகக் காணப்பட்டது. எனினும், 2021இலும் 2022 ஆரம்பப்பகுதியிலும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இறுக்கமடைந்த திரவத்தன்மைக்கு மத்தியில் செலாவணி வீதத்தில் அனுமதிக்கப்பட்ட அளவிடப்பட்ட சீராக்கமொன்றை தேவைப்படுத்தின. எனினும், அதற்கு பின்னர் 2022 மார்ச்சின் ஆரம்பப்பகுதியில் அனுமதிக்கப்பட்ட செலாவணிவீத நெகிழ்ச்சித்தன்மையின் பெறுபேறானது சந்தை அழுத்தங்களால் ஏற்பட்ட பாரிய விஞ்சுதல் காரணமாக குறைந்த எதிர்பார்ப்பை உணரச்செய்தது. அதற்கமைய, 2022 மார்ச்சு இறுதியளவில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 33 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அத்தகைய அபிவிருத்திகளானது, ஏனைய தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகளை அகற்றுதல் மற்றும் புதிதாக விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பவற்றுடன் இணைந்து, குறிப்பாக எற்றுமதியாளர்களுக்கும் பணவனுப்புவோருக்கும் தேறிய ஈட்டலை ஏற்படுத்தும் அதேவேளை அவசியமற்ற இறக்குமதிகளையும் ஏனைய வெளிப்பாய்ச்சல்களையும் ஊக்கமிழக்கச செய்வதன் காரணமாக போன்றன உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு அதிக வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைத் தூண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. குறுக்கு நாணய செலாவணி வீதத்தை பிரதிபலித்து இலங்கை ரூபா 2022 மார்ச்சு இறுதியளவில் யூரோ (32.1 சதவீதம்), ஸ்ரேலிங்பவுன் (31.1 சதவீதம்), இந்திய ரூபா (31.7 சதவீதம்) மற்றும் ஜப்பானிய யென் (28.9 சதவீதம்) ஆகிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்தது.

அட்டவணை 5.15
செலாவணி வீத அசைவுகள்

நாணயம்	வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா						முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ)			
	ஆண்டிறுதி வீதம்			ஆண்டுச் சராசரி வீதம்			ஆண்டிறுதி		ஆண்டுச் சராசரி	
	2019	2020	2021	2019	2020	2021	2020	2021	2020	2021
யூரோ	203.67	229.42	226.86	200.14	212.07	235.10	-11.23	1.13	-5.62	-9.80
இந்திய ரூபா	2.55	2.55	2.69	2.54	2.50	2.69	0.00	-5.45	1.46	-6.95
யப்பானிய யென்	1.67	1.81	1.74	1.64	1.74	1.81	-7.54	3.82	-5.65	-3.96
ஸ்டேர்லிங் பவுண்	238.46	254.35	270.60	228.20	238.22	273.51	-6.25	-6.00	-4.21	-12.90
ஐ.அ.டொலர்	181.63	186.41	200.43	178.78	185.52	198.88	-2.56	-7.00	-3.64	-6.72
சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ.)	251.17	268.48	280.53	246.97	258.61	283.18	-6.45	-4.29	-4.50	-8.68
தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ)	**ஆண்டிறுதி சுட்டெண்**			**ஆண்டுச் சராசரி சுட்டெண்**			**முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம்**			
							ஆண்டிறுதி சுட்டெண்		**ஆண்டுச் சராசரி சுட்டெண்**	
(2017=100)	2019	2020	2021	2019	2020	2021	2020	2021	2020	2021
பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள்	86.74	83.12	79.65	88.17	85.93	78.64	-4.17	-4.18	-2.54	-8.48
உ.தா.செ.வீ 24 - நாணயங்கள்	90.74	88.37	86.06	90.42	91.52	86.13	-2.61	-2.61	1.22	-5.90

(அ) இலங்கை ரூபாவின் வெளிநாட்டு நாணயங்களிற்கு சமமான அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது தாக்கமுள்ள நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியில் நேரடியாக பிரதிபலிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சக்தி விலைகளில் உயர்வடைந்த மேல்நோக்கிய தளம்பல், பங்குரிமை மூலதன கீழ்செயலாற்றுகை, ஐக்கிய அமெரிக்கா பெடரல் ரிசேர்வ் மூலமான கொள்கை வீத உயர்வுகள் அத்துடன் பாதுகாப்பான நாணயமாக ஐக்கிய அமெரிக்க டொலரை நாடுகின்ற முதலீட்டாளர்களுக்கான தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்பதற்கான திரவத்தன்மை கரிசனைகள் போன்ற பல காரணிகளால், 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் பரந்தளவில் வலுப்படுத்தப்பட்டதற்கமைவாக ஏனைய முக்கிய நாணயங்களும் ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைந்தன. அதற்கமைய, 2021ஆம் ஆண்டின் இறுதியளவில் ஐ.அ.டொலருக்கெதிராக யப்பானிய யென் (10.4 சதவீதம்), யூரோ (8.0 சதவீதம்), இந்திய ரூபா (1.6 சதவீதம்) மற்றும் ஸ்ரேலிங் பவுன் (1.1 சதவீதம்) ஆகிய நாணயங்கள் தேய்வடைந்தன. அநேகமான முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபாவின் தேய்மானத்தின் ஒன்றிணைந்த தாக்கத்துடன் 2021 காலப்பகுதியிலும் 2022 காலப்பகுதியில் மார்ச்சு இறுதிவரையிலும் இலங்கை ரூபா சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக முறையே 4.3 சதவீதத்தினாலும் 32.1 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

5.8.1 பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

நாணயங்கள் கூடைக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவுகளை அளவிடுகின்ற 5-நாணய மற்றும் 24-நாணய பெயரளவுத் தாக்கமுள்ள விளைவு செலாவணி வீதச் சுட்டெண்கள் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளுடன் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவுத் தேய்மானத்தைப் பிரதிபலித்து பெயரளவு

வரைபடம் 5.14
செலாவணி வீத அசைவுகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.15
வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய நடவடிக்கைகளின் காலாண்டுக்கான அளவுகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன. அதற்கமைய 5-நாணய மற்றும் 24-நாணய பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீத குறிகாட்டிகள் 2021ஆம் ஆண்டில் முறையே 3.6 சதவீதத்தினாலும் 4.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. கூடையில் உள்ள பெயரளவு செலாவணி வீதங்களின் மாறுபாட்டினையும் அதேபோன்று நாடுகளுக்கிடையிலான பணவீக்க வேறுபாடுகளையும் கருத்திற்கொள்கின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணிவீதச் சுட்டெண்கள் கலந்த செயலாற்றங்களைக் காண்பித்தன. அதற்கமைய, 2021ஆம் ஆண்டில் 5-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 6.9 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, 24-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச்சுட்டெண் 2.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், 2021ஆம் ஆண்டில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் பெரும்பாலும் அடிப்படையாண்டு மட்டத்திற்கு (2017=100) கீழ் காணப்பட்டு இலங்கை ரூபாவின் தொடர்ச்சியான போட்டித்தன்மையை எடுத்துக்காட்டியது. 2022 மார்ச்சில் செலாவணி வீதத்தின் சடுதியான தேய்மானத்துடன் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் இரண்டும் கணிசமாக வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலருக்கும் கூடையில் கருத்திற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய நாணயங்களுக்குமெதிராக இலங்கை ரூபா பெயரளவுத் தேய்வொன்றினைப் பிரதிபலித்தது. அதற்கமைய 2022 மார்ச்சு இறுதியில் 5-நாணய மற்றும் 24-நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் முறையே 31.9 சதவீதத்தினாலும், 31.1 சதவீதத்தினாலும், 32.1 சதவீதத்தினாலும் 35.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

5.8.2 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் பரிமாற்று அளவுகள் 2021ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடைந்தன. அதற்கமைய, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 18,408 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 12,160 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உடனடி செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 10,445 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 5,852 மில்லியனுக்கு (மொத்த கொடுக்கல்வாங்கல்களின் 48.1 சதவீதம்) குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மொத்த முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் அளவும் 2020ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 7,964 மில்லியனிலிருந்து 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 6,308 மில்லியனுக்கு குறைவடைந்தது. 2021ஆம் ஆண்டின் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 747 மில்லியனை வழங்குவதன் வாயிலாக மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. ஆண்டுகாலப்பகுதியில் தேறிய தொகையானது ஐ.அ.டொலர் 1,253 மில்லியன் கொண்ட வழங்கலினதும் ஐ.அ.டொலர் 506 மில்லியன் கொண்ட கொள்வனவினதும் பெறுபேறாக அமைந்திருந்தது. 2022ஆம் ஆண்டின் முதற்காலாண்டில் தேறிய அடிப்படையில், ஐ.அ.டொலர் 265 மில்லியனை வழங்கியதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டது. மத்திய வங்கி தலையிட்டமை செலாவணி வீதத்தில் பாரிய தளம்பலைத் தவிர்ப்பதற்கு உதவியதுடன் பொருளாதாரத்திற்கும் மக்களுக்குமான இடையூறுகளைத் தவிர்ப்பதனை உறுதிசெய்வதற்கு அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கான தேவைக்குத் துணையளித்தது. எனினும், 2021 ஆம் ஆண்டின் பிந்திய பகுதியில் நிலவிய நிலையான செலாவணி வீதமானது, மலிவான கிரயத்தில் முன்கூட்டிய இறக்குமதிகளுக்காக இறக்குமதியாளார்களுக்கு உதவிபுரிகின்ற அதேவேளை, அவர்களின் ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுவதற்கு விருப்பமற்று காணப்பட்டமையானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை பாதகமாக தாக்கியது.

6

இறைக்கொள்கையும் அரச நிதியும்

6.1 பொதுநோக்கு

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கும் பன்முகத்தன்மை கொண்ட வெளிநாட்டுச் சவால்களுக்கும் எதிராக நாடு போரிட்டுக் கொண்டிருந்த வேளையில், மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள் 2021இல் ஆழமாக வேரூன்றிப்போன சமநிலையற்ற தன்மை மற்றும் குறிப்பிட்ட இறைக்கொள்கை வழிமுறைகளின் எதிர்பாராத விளைவுகள் என்பவற்றைப் பிரதிபலித்திருந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2020இல் கடுமையாக வீழ்ச்சியடைந்த அரசிறை சேகரிப்பானது 2021இல் வரலாற்றிலேயே மிகக்குறைந்த மட்டத்திற்கு மேலும் நலிவடைந்தமைக்கு நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட குறைந்த பொருளாதார செயலாற்றத்திலிருந்து தோன்றிய அரசிறை இழப்புக்கள், 2019இன் பிற்பகுதியிலிருந்து உருவான தாழ்ந்த வரி அமைப்பு என்பன காரணங்களாக அமைந்திருந்தன. அதேவேளை, நோய்த்தொற்றுடன் தொடர்புடைய செலவுகளுடன் சேர்ந்து சம்பளங்கள் மற்றும் கூலிகளின் பேரிலான உயர்ந்த செலவினம் மற்றும் வட்டிச் செலவினம் என்பனவற்றின் காரணமாக மீளாய்விற்குரிய காலப்பகுதியில் அரசாங்க செலவினம் குறைக்கப்பட முடியாததாகக் காணப்பட்டது. மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்திருந்தபோதிலும் 2021இல் அரச முதலீடுகள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்திருந்தன. ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை 2021இல் மேலும் விரிவடைந்த அதேவேளை வரவு செலவுத்திட்ட மட்டத்திலிருந்து கணிசமாக பிறழ்வடைந்து 1988இற்குப் பின்னர் மிக உயர்ந்த மட்டத்தினை அடைந்தது. மோசமான உலகளாவிய சந்தை அபிவிருத்திகள் அதேபோன்று நாட்டிற்கான கொடுகடன் தரமிடல் குறைவடைந்தமை என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டு நிதியிடல் மார்க்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டு வந்தமையின் விளைவாக அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்திற்கு நிதியிடுவதற்கு உள்நாட்டு வங்கித்தொழில் முறைமைகளின் மீது குறிப்பாக மத்திய வங்கியிலிருந்தான நிதியில் தங்கியிருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட சமூகப் பொருளாதாரச் சவால்களுக்கு மத்தியிலும் இறைத்தொழிற்பாடுகளின் செயற்பாட்டினை சுமுகப்படுத்துவதற்காக மத்திய வங்கி அரசாங்கத்திற்கு கணிசமானளவு நிதியினை வழங்கிய வேளையில், கடன்பாட்டுச் செலவினை குறைந்த மட்டத்தில் பேணுவதற்காக 2021 ஓகத்து வரை தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலையொன்று பேணப்பட்டது. எனினும், வங்கித்தொழில் முறைமையினூடாக மிகையான பணவீக்கத்தினை ஏற்படுத்துமென்பதனால் மத்திய வங்கியின் நிதியிடலை படிப்படியாகக் குறைப்பதும் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு செயற்பாடு நிறைந்ததொரு விதத்தில் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு நீண்டகால வெளிநாட்டு நிதியிடல் முறையினைப் பின்பற்றுவதன் மூலம் நாணய உறுதிப்பாடு பேணப்படுதல் வேண்டும். அதேவேளை, 2021 இறுதியில் மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் பெயரளவு நியதிகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டு நியதிகளிலும் ஒழுங்கற்றதொரு மட்டத்தில் வளர்ச்சியடைந்ததுடன் இவ்வளர்ச்சியானது விரிவடைந்த இறைப்பற்றாக்குறை, அதிகரித்த சந்தை வட்டி வீதங்கள் அதேபோன்று செலாவணி வீதத் தேய்வின் காரணமாக உருவான சமமதிப்பு வேறுபாடு என்பனவற்றின் இணைந்த விளைவாகும். செலுத்தப்பட வேண்டிய உயர்ந்த மீள்கொடுப்பனவுகளுக்கெதிராக வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளில் ஏற்பட்ட குறைப்பினால் வலியுறுத்தப்பட்ட மோசமடைந்துவரும் வெளிநாட்டுத் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் போதுமானதற்ற நிதியிடல் உட்பாய்ச்சல்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு 2021ஆம் ஆண்டுப்பகுதியில் தரமிடல் முகவர்களினால் நாட்டிற்கான தரமிடல்கள் குறைக்கப்பட்டன. படுகடன் தொடர்ச்சியாக ஒன்றுதிரண்டமை, விரைவடைந்த பணவீக்கம் மற்றும் உள்நாட்டு நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் வெளிநாட்டு துறையில் காணப்பட்ட பாதிக்கப்படும் தன்மை என்பவற்றிற்கிடையில் அரசிறையின் உட்பாய்ச்சல் போதுமானளவில்

இல்லாமை, அரச படுகடன் தொடர்பான உறுதித்தன்மை பற்றிய கரிசனைகள் மற்றும் உள்நாட்டு வங்கித்தொழில் முலங்களினூடான பற்றாக்குறைக்கு நிதியிடல் என்பனவற்றின் காரணமாக இறைத்துறையின் தோற்றப்பாடு தொடர்ந்தும் இடையூறுகளைக் கொண்டிருந்தது. இப்பின்னணியில், குறைவடைந்த அரசிறை திரட்சிப்பாதையை உறுதியானதொரு அடிப்படையில் மாற்றியமைக்கும் பொருட்டு வரி நிருவாகத்தினை வலுப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கை மூலம் பொருத்தமான வரிகளை அறிமுகப்படுத்துவது மற்றும் வரித்தளத்தினை விரிவுபடுத்திக் கொள்வது ஆகிய நியதிகளில், குறிப்பாக அரசிறை வழிமுறைகளில் கவனம் செலுத்துவதனூடாக வலுவான இறைத்திரட்சி வழிமுறைகளை தொடர்ச்சியாகக் கொண்டிருப்பது முன்னொருபோதுமில்லாத அளவிற்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்ற அதேவேளை அரசின் நிதியிடல் தேவைப்பாடுகளையும் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதேவேளை, முன்னோக்கிச் செல்லும் இறைத்திரட்சிப் பயணம் தடம்புரண்டு போகாமல் இருப்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் செலவினக் கொள்கைகளிலிருந்து விலகிக் கொள்வதன் மூலம் அரச செலவினத்தின் மீது இறுக்கமாகக் கடிவாளமிடுவது மிக முக்கியமானதாகும். இதற்கமைய, மீண்டெழும் செலவினத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினைக் குறைப்பதும் அதேவேளை அரசிறைத் திரட்சியை வலுப்படுத்துவதன் மூலம் நடுத்தர காலப்பகுதியில் ஆரம்ப நிலுவையில் மிகையினை அடையும் விதத்தில் நம்பகமான திட்டத்தினை ஏற்படுத்துவதன் வாயிலாக ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்வதும் அரச படுகடனின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு இக்காலகட்டத்தில் மிக முக்கியமானதாகும். தேவையான திருத்தங்களுடன் நடுத்தரகாலப் படுகடன் முகாமைத்துவ உபாயத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் பொறுப்பு முகாமைத்துவ நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவது சுமுகமாக படுகடன் மீள்கொடுப்பனவுகளுக்கும் அதேபோன்று இறைத்துறைக்கும் அண்மிய காலத்தில் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

6.2 இறைக்கொள்கை வழிமுறைகள்[1]

2021 வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு அரசாங்கத்தின் இறை உபாயமானது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் பேணி வளர்க்கும் நோக்குடன் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்தியிருந்த போதிலும் 2021இல் எதிர்பார்க்கப்பட்ட இறைப் பெறுபேறுகள் முழுமையாக அடையப்படாமைக்கு சவால்நிறைந்த பேரண்டப் பொருளாதார நிலைமைகளும் நம்பிக்கை வைக்கப்பட்ட இறை இலக்குகள் போதுமானதும் நிலையானதுமான கொள்கைகளினால் போதுமானளவிற்கு ஆதரவளிக்கப்படாமல் போனமையும் முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன. அரசாங்கத்தின் இறை உபாயத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் 2021இல் அரசிறைச் சேகரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10.7 சதவீதத்திற்கு அதிகரிக்குமெனவும் அதன் மூலம் 2021இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும் வெளிநின்ற மத்திய அரச படுகடனும் முறையே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.8 சதவீதத்திலும் மொ.உ.உற்பத்தியின் 96.3 சதவீதத்திலும் பேணப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கத்தின் நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டம் அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பான "சுபீட்சத்தின் தொலைநோக்கில்" எதிர்பார்க்கப்பட்டவாறு வறுமை ஒழிப்பையும் பொருளாதார மீளெழுச்சியையும் இலக்காகக் கொண்டிருந்தது. அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பில் செய்யப்படும் உயர்ந்த முதலீடுகளின் மூலம் பிரதேசங்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படும் அதேவேளையில், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று போன்ற எதிர்பாராத பேரழிவுகளிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் எதிர்பார்க்கப்பட்டது. இதற்கமைய, 2021 - 2025 காலப்பகுதிக்கான நடுத்தரகாலப் பேரண்ட இறைக் கட்டமைப்பு 2021இல் அரச முதலீட்டினை மொ.உ.உற்பத்தியின் 5.4 சதவீதத்திற்கு அதிகரிப்பதனையும் நடுத்தர காலத்தில் உயர்ந்ததும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதுமான பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்காக நடுத்தர காலத்தில் சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியை 5 - 6 சதவீதத்திற்கு மேற்பட்ட அரச முதலீட்டினைப் பேணுவதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. செலவினத்தினைச் சிக்கனப்படுத்தும் வழிமுறைகளின் தொடர்ச்சியாக மீண்டெழும் செலவினம் 2021இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 14.2 சதவீதத்திலும் 2025இல் மேலும் குறைக்கப்பட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.3 சதவீதத்திலும் பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்களுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 14.2 சதவீதம் கொண்ட உயர்ந்த அரசிறைச் சேகரிப்பும் சேர்ந்து வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2012இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.0 சதவீதத்திற்குக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, வெளிநின்ற படுகடன் இருப்பு 2021இன் மொ.உ.உற்பத்தியில் 96.3 சதவீதத்திற்குக் குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் நடுத்தர காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 75.5 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்படுமென

1 இப்பிரிவில் ஆராயப்பட்ட முக்கிய இறைக்கொள்கை வழிமுறைகள் சிறப்புக் குறிப்பு 12இல் "முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்" இன் கீழ் விபரமாகத் தரப்பட்டுள்ளன. இது 2021 சனவரி 01 இலிருந்து 2022 மார்ச்சு 15 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார இறைக்கொள்கை வழிமுறைகளை உள்ளடக்குகின்றது.

வரைபடம் 6.1
இறைத்துறையின் செயலாற்றம்











வரைபடம் 6.2
முக்கிய இறை மீதிகள்
(மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)



(அ) நிதி அமைச்சினமையை 2019இற்கான இறைத்துறைப் புள்ளிவிபரங்கள் 2020இற்கான வரவுசெலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மீளுருப்படுத்தப்பட்டுள்ளது.

மூலம்: நிதி அமைச்சு

எதிர்பார்க்கப்பட்டது. இறைத் தொழிற்பாடுகள் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தம் முக்கியமானதொரு பகுதியாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. எனினும், 2021இற்காக அறிவிக்கப்பட்ட முக்கிய இறை இலக்குகள் சவால்மிக்கப் பொருளாதாரச் சூழல் மற்றும் குறைந்த அரசிறைச் சேகரிப்பு மற்றும் நெகிழ்ச்சித்தன்மையற்ற அரச செலவினம் என்பனவற்றிற்கு வழிவகுத்த நிலையற்ற கொள்கை பின்னணியில் இவ்விலக்குகள் அளவுக்கதிகமான நம்பிக்கை கொண்ட எடுகோள்களினால் தூண்டப்பட்டமையினால் செயல் வடிவம் பெறமுடியாமல் போயின.

2021 காலப்பகுதியில் முழுமையான பொருளாதார மீட்சியையும் வளர்ச்சியையும் ஊக்குவிப்பதற்காக, பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் குறைந்த வரி அமைப்பினைப் பேணுவதற்கான அரசாங்கத்தின் கடப்பாடு அரசிறையில் குறைந்த செயலாற்றத்தினைத் தோற்றுவித்திருந்தது. இதனை அடையும் விதத்தில் கம்பனி வருமான வரியான தனிப்பட்டவர் மட்டங்களிலான வருமான வரிகள் மற்றும் பெறுமதிசேரி வரிகள் தொடர்பில் 2019இன் பிற்பகுதியிலிருந்து உருவாக்கப்பட்ட வரிச் சீர்திருத்தங்கள் 2021இல் பேணப்பட்டன. அதற்கமைய, 2021 மேயில் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் திருத்தப்பட்டு 2019 நவெம்பரில் அறிவிக்கப்பட்ட வரித் திருத்தங்களும் 2020 சனவரியிலும் 2021 ஏப்பிறலிலும் செய்யப்பட்ட மற்றைய அறிவிப்புக்களும் புகுத்தப்பட்டன. மேலும், நடைமுறைப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகள் நிறைவடைந்ததன் பின்னர் குறித்துரைக்கப்பட்ட புதிய கைத்தொழில்களிலிருந்தும் பெறப்பட்ட நன்மைகள் மற்றும் இலாபங்கள் மீது பல வரி விடுப்புக்கள் வழங்கப்பட்டன. இதன்படி, இலங்கையில் மீள்சுழற்சிப்படுத்தப்பட்ட கட்டுமானப் பொருட்களை விற்கின்ற ஏதேனும் நிறுவனம், தொழில்பயிற்சி கல்விக்காக தரப்படுத்தப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்திலிருந்து தொழில்பயிற்சிக் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் தனிப்பட்ட ஒருவரால் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம், இலங்கையில் படகுகள் அல்லது கப்பல்களைத் தயாரிப்பதற்காக இலங்கையில் வதிபவரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தொழில்முயற்சி, நூறு மெகாவட்டிற்குக் குறையாத சூரிய வலு அல்லது காற்றாலை மூலமான வலுவினை உற்பத்தி செய்து அத்தகைய மின்வலுவினை தேசிய மின்தொகுதிக்கு வழங்கும் நோக்குடன் நிறுவப்பட்ட ஏதேனும் புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டம், உள்நாட்டு தொழிலாளர் மற்றும் இலங்கையிலுள்ள உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தொடர்பூட்டல் கோபுரங்களையும் அதனுடன் தொடர்பான சாதனங்களையும் நிருமாணித்து நிறுவுகின்ற வதியும் ஆளொருவரினால் முன்னெடுக்கப்பட்ட ஏதேனும் தொழில்முயற்சிகள் அல்லது அத்தகைய கட்டுமானத்திற்குத் தேவையான தொழில்நுட்பப் பணிகளை அல்லது நிறுவுகைகளை வழங்குகின்ற ஏதேனும் நிறுவனங்கள் இவ்வரி விடுப்பினை அனுபவிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றன. மேலும், தங்கம், இரத்தினக்கற்கள் அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களின் வெளிநாட்டு நாணய வருவாய்கள் ஏதேனும் உள்நாட்டு வங்கியில் வெளிநாட்டு நாணயத்தில் வைப்புச் செய்யப்பட்ட பல்தேசிய கம்பனிகளின் வட்டி வருமானம் இலங்கை உண்மைச் சொத்து முதலீட்டு நம்பிக்கை நிதியத்திற்கு விற்பனை செய்யப்பட்ட, பரிமாற்றப்பட்ட அல்லது மாற்றல் செய்யப்பட்ட காணி அல்லது கட்டடத்திலிருந்து ஆளொருவரினால் பெறப்பட்ட இலாபம் என்பன 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு 2021 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. மேலும், உண்ணாட்டரசிறைச் சட்ட ஏற்பாடுகளின் சிக்கலான தன்மைகளை நீக்கும் பொருட்டும் வரி இணங்குவிப்புக்களை அதிகரிப்பதற்கான பல்வேறு தரப்பினரின் கோரிக்கையினை உள்ளடக்குவதற்காகவும் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பல ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு 2022 மாச்சில் அமைச்சரவை ஒப்புதல் வழங்கிய வேளையில் பொருளாதாரத்தில் தோற்றம்பெற்று வரும் துறைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அதேவேளை, 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரி 2021ஆம் ஆண்டில் திருத்தப்பட்டதுடன் 2019இன் பிற்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட வரித் திருத்தங்கள் புகுத்தப்பட்டன. ஏற்றுமதிகளையும் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் ஊக்குவிப்பதற்காகவும் இவ்வாண்டுப்பகுதியில் பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்டத் தீர்வை மற்றும் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித்

தீர்வை என்பனவற்றிலிருந்து பல குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சிகள் செயற்றிட்டங்கள் விலக்களிக்கப்பட்டன. இதற்கமைய, செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலின் அல்லது நிருமாண காலப்பகுதியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஐ.அ.டொலர் 50 மில்லியன் அல்லது அதற்கும் கூடுதலான முதலீட்டுடன் ஏற்றுமதிப்பொருட்களின் தயாரிப்பினூடாகப் பதனிடப்பட்ட கழிவுத் துண்டுகள்/கழிவுகளின் ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கின்ற ஏதேனும் தொழில்முயற்சிகள் மற்றும் ஏதேனும் தொழில்முயற்சிகள் அல்லது உபாய அபிவிருத்திச் செயற்றிட்டங்களினால் மேற்கொள்ளப்படும் பொருட்களின் இறக்குமதிகள் பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்டத் தீர்வை மற்றும் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை என்பனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டன. மேலும், கொவிட்-19 தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் விதத்தில் மருந்துச் சாதனங்களின் இறக்குமதிகளுக்கு துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அதேவேளை, அரிசி, உருளைக்கிழங்கு, சோளம், கருவாடு, பாற்பண்ணைப்பொருட்கள், பெரிய வெங்காயம், நெத்தலி போன்ற பல உணவுப்பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது வேளாண்மையாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பினை வழங்குவதனையும் உள்நாட்டுச் சந்தையில் பொருட்களின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்தும் வழங்கல்பக்க முகாமைத்துவ வழிமுறைகளாகவும் திருத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட கொள்கைகளின் நோக்கம் பொருளாதார நடவடிக்கைகளுக்கு விரைவாக புத்துயிரளிப்பதாகவும் அதன் மூலம் அரசிறைப் பாய்ச்சலை உத்வேகப்படுத்துவதாகவும் இருந்த போதும் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான வேகம் 2021இல் உயர்ந்த அரச அரசிறையினை மோசமான முறையில் விதித்தது.

2021இலும் 2022இன் தொடக்கப்பகுதியிலும் வரி ஏய்ப்பினைக் குறைப்பதனையும் வரி நிருவாகத்தில் காணப்பட்ட சிக்கலான தன்மைகளைக் குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்டு பல வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சித்தது. இதற்கமைய, 2021இன் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வரி மன்னிப்பிற்கான சட்டவாக்கத்தினை இயற்றுவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இது மற்றைய விடயங்களுடன் 2020 மார்ச் 31 உடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான அல்லது அதற்கு முன்னைய காலப்பகுதிக்கான ஏதேனும் வரி விதிக்கத்தக்க தமது வரி விதிக்கத்தக்க வெளிப்படுத்தப்படாத வழங்கல்கள் மற்றும் சொத்துக்கள் அல்லது 2020 மார்ச 31இல் முடிவடைந்த அல்லது அதற்கு முன்னரான காலப்பகுதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றின் தன்னிச்சையாக அறிவிக்கின்ற ஆட்களுக்கு வழங்கப்படுகிறது. எனினும், வலுவான நடைமுறைப்படுத்தல் வழிமுறைகள் இல்லாத நிலையில் வரி மன்னிப்பிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறை 2021இல் ரூ.174.6 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. குறுங்கால அரசிறைப் பற்றாக்குறையினைப் பூர்த்தி செய்வதற்காக வரி மன்னிப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதும், அத்தகைய கொள்கைகள் பெறப்பட்ட தரவுகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு விரும்பத்தக்க பெறுபேறுகள் எதனையும் உருவாக்கவில்லை என்பதுடன் இக்கொள்கைகள் சட்டத்தினை மதிக்கும் வரி செலுத்துவோரை ஊக்கம் குன்றச் செய்திருக்கும் என்பதுடன் ஊழல்களையும் பணம் தூயதாக்கலையும் கூட ஊக்குவிப்பதாக இருந்தது. அதேவேளை, குடிவகை சிகரெட், ஊர்திகள் (ஊர்திகளின் பொருத்துதல்களுக்கான உதிரிப்பாகங்கள் உட்பட) தொலைத்தொடர்பூட்டல்கள் மற்றும் குதிரைப்பந்தயம், சூதாட்டம் மீதான தற்போதுள்ள வரிகளுக்குப் பதிலாக கலப்பு வரியொன்றாக, விசேட பொருட்கள் மற்றும் பணிகள் வரியொன்றினை விதிப்பதற்கு 2022 சனவரியில் மசோதவொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. விசேட பொருட்கள் மற்றும் பணிகள் வரியினை விதிப்பதன் நோக்கம், குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மீதான பல்வேறு வரி அமைப்புக்களின் பிரயோகம் மற்றும் நிருவாகத்துடன் இணைந்த சிக்கலான தன்மைகளைத் தவிர்ப்பதனூடாக வரி நிருவாகத்தின் வினைத்திறனை உறுதிப்படுத்திக் கொள்வதேயாகும். இருப்பினும், விசேட பொருட்கள் மற்றும் பணிகள் வரி மசோதாவிற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களை பரிசீலனையில் கொண்ட உயர் நீதிமன்றம் விசேட பொருட்கள் மற்றும் பணிகள் வரி மசோதா பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைகளினால் நிறைவேற்றப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தியதுடன் மசோதாவிலுள்ள பல கிளை வாசகங்கள் அரசியல் யாப்புடன் ஒவ்வாமல் இருப்பதனால் சர்வசன வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டது. மேலும், வரி நிருவாகத்திற்கு அனைத்து வரி தொடர்பான மூல ஆவணங்களில் வரி செலுத்துபவரின் அடையாள இலக்கத்தினை கட்டாயமாகப் பயன்படுத்துவது மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளைப் பொறுத்தவரை இ-நிரம்பலைக் கட்டாயமாக்குதல் போன்ற பல முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன. அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் நீண்ட கால அடிப்படையில் அரச நிதியினை மேம்படுத்துவதும் வரி அமைப்பினை மீளாய்வு செய்து எளிமைப்படுத்துவதும் வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதும் தற்பொழுது தவிர்க்க முடியாததாகக் காணப்படுகிறது.

உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் தொடர்ந்தும் மூலவளங்களை வழிப்படுத்திய அதேவேளை பொருளாதார

ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குழுவினருக்கு ஆதரவினையும் வழங்கியிருந்தது. இதன்படி, அரசாங்கம் உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இறுதியான வழிமுறைகளை மேற்கொண்டதுடன் பிரசைகளின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தி வேளையில் தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினூடாக வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளித்ததுடன் நாடளாவிய ரீதியில் நோய்த்தடுப்பு தூண்டுதல்களையும் விரைவுபடுத்தியது. இறைத் தொழிற்பாடுகளின் மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் அதிகரித்த அழுத்தத்தினைக் கருத்திற் கொண்டு, பாராளுமன்றம் 2021இற்கான ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட கடன்பாட்டு வரையறையான ரூ.2,997 பில்லியனுக்குள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதன் பேரிலான எதிர்பாராத செலவினை ஈடுசெய்வதற்காக 2021 யூனில் ரூ.200 பில்லியன் கொண்ட வரவு செலவுத்திட்ட துணை நிரப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. அதேவேளை, 2022 சனவரியில் அரசாங்கம் பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக மக்களினால் எதிர்நோக்கப்பட்ட பொருளாதாரக் கஷ்டங்களைக் குறைக்கும் நோக்குடன் ரூ.229 பில்லியன் பெறுமதியான நிவாரணப் பொதியொன்றினை அறிமுகப்படுத்தியது. இந்நிவாரண பொதியின் கீழ் ஓய்வூதியத்திற்கு கணக்கிலெடுக்கப்படாத ரூ.5,000 கொண்ட மாதாந்தப் படியொன்று 2022 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அரச அலுவலர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் வழங்கப்பட்ட வேளையில் மாதமொன்றிற்கு ரூ.1,000 என்ற உயர்ந்தபட்ச வரையறைக்குட்பட்டு விகிதசம அடிப்படையில் சமுர்த்தி நன்மைபெறுநர்களுக்கு மாதாந்த படியொன்று வழங்கப்பட்டது. மேலும், பெரும்போகத்தில் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி இழப்புக்களுடன் இணைந்து காணப்பட்ட வருமான இழப்புக்களை ஈடுசெய்வதற்காக வேளாண்மையாளர்களின் வருமானத்தினை அதிகரிக்கும் கி.கிறாம் நெல்லிற்கு ரூ.75 என்ற ரீதியில் ஒரு கி.கிறாம் நெல்லிற்கு ரூ.25 இனைக் கொடுப்பனவு செய்வது, பெருந்தோட்டத் துறையிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் கி.கிறாமொன்றிற்கு ரூ.80 கொண்ட உதவுதொகை வீதத்தில் 15 கி.கிறாம் மாவினை வழங்குவது, 20 பேர்ச்சுக்கும் குறைவான நிலத்தில் வீட்டுத்தோட்டத்தினை பயிரிடுபவர்களுக்கு ரூ.5,000 இனைச் செலுத்துவது 20 பேர்ச்சுக்கும் கூடுதலான நிலத்தில் பயிர்ச்செய்கையினை மேற்கொள்பவர்களுக்கான ரூ.10,000 கொண்ட கொடுப்பனவ மற்றும் அனைத்து அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் மருந்து உற்பத்திகள் மீதான அனைத்து வரிகளையும் நீக்குதல் என்பன உட்பட இன்னமும் நடைமுறைப்படுத்த வேண்டிய பல வழிமுறைகள் காணப்படுகின்றன. அத்தகைய மேலதிக வரவு செலவுத்திட்ட நிவாரண வழிமுறைகள் பொதுமக்களுக்கு உதவிகள் வழங்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்த போதும் ஒன்றில் படுகடனை உருவாக்காத நிதியிடல் தேர்வுகள் அல்லது மற்றைய செலவுகளில் கணிசமானளவு கீழ் நோக்கிய சீராக்கங்களைச் செய்யாமல் நிவாரணங்களைக் குறிப்பாக, அரசிறை வருமானத் திரட்சி குறைவாகக் காணப்படும் நேரத்தில் வழங்குவது, படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மை கரிசனைகளைப் பெரிதாக்குவதுடன் சாத்தியங்களை ஏற்படுத்துகின்ற வேளையில் பணவீக்கத்தினையும் வெளிநாட்டுத் துறை அழுத்தத்தினையும் தூண்டிவிடுகிறது. இது பொதுமக்கள் மீதான சுமையினைக் குறைப்பதற்குப் பதிலாக, இறுதியில் அதனைத் தீவிரப்படுத்தக்கூடும். ஆகவே, அத்தகைய நிவாரண வழிமுறைகள், இறைத் துறையின் மீதான அத்தகைய கொள்கைகளின் தாக்கத்தின் மீதான உரிய பரிசீலனைகளுடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

அரசாங்கத்தின் இறுக்கமான செலவினங்கள், உண்மையான அரசிறைத் திரட்சியில் காணப்படும் பற்றாக்குறை மற்றும் அதிகரித்த உள்நாட்டு நிதியிடல் தேவைப்பாடுகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு கடன்பாட்டு வரையறைகளும் அதேபோன்று மைல்கற்கள் மற்றும் இறை விதிகளுடன் தொடர்பான வரையறைகளும் 2021இல் திருத்தப்பட்டன. இதற்கமைய, திறைசேரி உண்டியலை முன்னைய வரையறையான ரூ.2,000 பில்லியனிலிருந்து ரூ.3,000 பில்லியனுக்கு அதிகரிப்பதற்கான தீர்மானத்திற்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்திருந்தது. மேலும், 2021ஆம் ஆண்டிற்கான மொத்தக் கடன்பாட்டு வரையறையினை ரூ.400 பில்லியன், 2021 நவெம்பரில் உயர்த்தும் விதத்தில் 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் திருத்தப்பட்டது. அதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் இலக்கிடலை 60 சதவீதத்தில் எய்துகின்ற கால அட்டவணையினை 2020 இலிருந்து 2030 இற்குத் திருத்துவதற்கும் அரசினால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் மீதான வரையறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்குமாக 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மைச்) சட்டம் திருத்தப்பட்டது.

மத்திய அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தின் மீது கணிசமான சுமையினை ஏற்படுத்தி பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசிற்குச் சொந்தமான வங்கிகளுக்கு சுமையினை ஏற்படுத்திய போதும் அரசாங்கமானது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு தொடர்ச்சியாக வசதியளித்திருந்தது. சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிப்படைத்தன்மை, நியாயபூர்வமான தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காக உபாயக் கட்டமைப்பொன்றினை

நிறுவுகின்ற நோக்கத்துடன் கம்பனி ஆளுகை மீது வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன. பொதுமக்களின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்காக, இவ்வழிகாட்டல்கள் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தலைவர், பணிப்பாளர் சபையினரின் கடமைப்பாடு தொடர்பான ஏற்பாடுகளையும் ஆர்வலர்களுடனான அவர்களின் தொடர்புகளது உருவாக்கத்தினையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தொடர்பான குறிக்கோள்களைப் பூரணப்படுத்தும் பொருட்டும் அவற்றின் செயலாற்றத்தினை மேம்படுத்தும் விதத்திலும் அவர்களது வியாபார நடத்தைகள் தொடர்பில் பணிப்புரைகளை வழங்கும் விதத்தில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு தொழிற்பாட்டுக் கைநூலொன்று வழங்கப்பட்டது. அதேவேளை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பிலான முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக முதலீடுகள் தொடர்பில் முகாமைத்துவக் குழுவொன்று அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சிறிலங்கன் எயார்லையின்ஸிசின் மோசமடைந்த நிதியியல் செயலாற்றத்தினைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம், சிறிலங்கன் எயார்லையின்சுக்கு மூலதனத்தினை உள்ளீடு செய்யத் தீர்மானித்த வேளையில், அதன் நிதியியல் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு சிறிலங்கன் எயார்லையின்சுக்கு உத்தரவாதங்களையும் வசதிப்படுத்தல் கடிதத்தினையும் வழங்கியது. இதன் விளைவாக, சிறிலங்கன் எயார்லையின்சுக்கிற்கு இரண்டு பிரிவுகளாக ரூ.27.7 பில்லியன் கொண்ட தொகை 2020 நவெம்பரிலும் மேலும் ரூ.18.0 பில்லியன் கொண்ட தொகை 2021 ஏப்பிறலிலும் வழங்கப்பட்டது. இது 2020 ஒத்தோபர் 26ஆம் திகதி அமைச்சினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட மூலதனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாகும். மேலும், குறுங்கால கொடுகடன் வசதிளின் ஏற்பாடுகளைத் தொடரும் பொருட்டு பொதுத் திறைசேரியினூடாக, ஐ.அ.டொலர் 205.4 மில்லியன் மற்றும் 27.6 பில்லியனுக்குச் சமமான இரண்டு அரச வங்கிகளினதும் பெயரிலான காலாவதியான அனைத்து வசதிக் கடிதங்களையும் மீள வழங்குவதற்கு அரசாங்கம் ஒப்புதலளித்தது. மேலும், திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்காக அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில், இரண்டு அரச வங்கிகளும் 2021இல் சிறிலங்கன் எயார்லையின்சுக்கு மொத்தமாக ஐ.அ.டொலா 75 மில்லியன் கொண்ட தொகையினைப் புதிய தொழிற்படு மூலதனமாக வழங்கின. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்தவரும் நிதியியல் இழப்புக்களையும் அதன் விளைவாக வங்கித்தொழில் துறைக்கு ஏற்பட்டுள்ள சுமையினையும் கருத்திற்கொண்டு அரசாங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளை 2021இலும் 2022இன் ஆரம்பத்திலும் திருத்துவதற்கு அனுமதித்தது. எனினும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இறைச் சுமையினைக் குறைப்பதற்காக அந்நிறுவனங்களை அவற்றின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக வெளிப்படையான முறையில் அரசிற்குச் சொந்தமான முக்கிய தொழில்முயற்சிகளுக்காக செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்கும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைப்பதனையும் அரசாங்கம் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

அரசிறைத் திரட்சியில் காணப்பட்ட குறைந்த செயலாற்றத்தினை அடையாளங்கண்டு அரசாங்கமானது 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினூடாக குறுங்கால அரசிறை அதிகரிப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. இதற்கமைய, 2022 சனவரி 01ஆம் நாளிலிருந்து நிறுவனங்கள் மீது விதிக்கத்தக்க பெறுமதிசேர் வரியினை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்காக 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தினைத் திருத்துவதற்கான மசோதா 2022 மாச்சில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது. அதேவேளை, வரவு செலவுத்திட்டம் - 2022இல் முன்மொழியப்பட்டவாறு, குடிவகை மற்றும் சிகரெட் மீதான கலால் தீர்வை 2021 நவெம்பரில் மேல் நோக்கித் திருத்தப்பட்டது. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வரி விதிக்கப்படத்தக்க வருமானத்தினையுடையவர்களென கணிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள், பங்குடமையாளர்கள் மற்றும் கம்பனிகளைப் பொறுத்தவரை அவர்களது வரி விதிக்கத்தக்க வருமானம் 2020ஆம் ஆண்டின் ஏப்பிரல் 01ஆம் நாளிலிருந்து ஆரம்பமாகின்ற வரி மதிப்பீட்டாண்டிற்கான அவர்களது வரி விதிக்கத்தக்க வருமானம் ரூ.2 பில்லியனையும் பிந்தியதாக இருக்குமிடத்து அவர்கள் மீது 25 சதவீதம் கொண்ட ஒரே தடவையிலான கடந்த காலத்தினையும் அளாவிய வரியொன்றினை விதிக்கும் நோக்குடன் 2022 இல 14 என்ற மேலதிக வரிக் கட்டண மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. உத்தேச ஒரே தடவையிலான கடந்த காலத்தினையும் அளாவிய வரிகள் குறிப்பிட்ட ஆண்டிற்கான அரசிறையினை உயர்த்துவதற்கு உதவுகின்ற போதும் அத்தகைய வரிக் கொள்கைகள் அரசிறையினை நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் உருவாக்காது. மேலும், அத்தகைய பின்னோக்கிய கடந்த கால வரிகள் நிச்சயமற்ற தன்மைகளை உருவாக்கி முதலீட்டாளர் நம்பிக்கையினையும் அவர்களின் ஆர்வத்தினையும் பாதிக்கக்கூடும்.

2022இல் அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளி மற்றும் நாட்டில் காணப்படும் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை என்பனவற்றிற்கு மத்தியிலும் அரச செலவினத்தினை முகாமைப்படுத்தும் நோக்குடன்

பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியிருந்தது. இவ்வாண்டுப்பகுதியில், அரசாங்கம் ஊர்திகள், கட்டடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் மீதான செலவினங்களைக் கட்டுப்படுத்தியமையின் மூலமும் அரச நிறுவனங்களுக்கான கட்டடங்களின் கட்டுமானத்தினை இடைநிறுத்தியமையின் மூலமும் செலவினத்தினைச் சிக்கனப்படுத்த முயற்சித்த வேளையில் அரச முதலீடுகள், அத்தகைய முதலீடுகளின் பொருளாதார நன்மைகளின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்டன. வரவு செலவுத்திட்டம் 2022உடன் இசைந்து செல்லும் விதத்தில் அரச நிறுவனங்களுக்கான மின்வலுவிற்கான ஒதுக்குகளை 10 சதவீதத்தினால் குறைத்தல், அரச நிறுவனங்களின் தொலைபேசிச் செலவுகளை 25 சதவீதத்தினால் குறைத்தல், அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கும் அரசாங்கத்தின் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்ட எரிபொருள் படியினை மாதமொன்றிற்கு 5 லீற்றர்களினால் குறைத்தல், புதிய அலுவலக பணிமனைகளின் கட்டுமானத்தினை இரண்டாண்டுகளுக்கு இடைநிறுத்துதல் என்பன உட்பட பல்வேறு வழிமுறைகளை 2021 நவெம்பரில் அறிவித்திருந்தது. எனினும், அத்தகைய வழிமுறைகள் அரசாங்கத்தின் குவிந்துவரும் செலவினத்தினைக் கணிசமானளவிற்குக் குறைப்பதற்கும் அரச நிதியினை மேம்படுத்துவதற்கும் போமானதாகவில்லை. நாட்டில் நிலவுகின்ற வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறையின் காரணமாக, ஊர்திகள், மின்தூக்கிகள், வளிச்சீராக்கிகள் மற்றும் ஏனைய மின்னியல் உபகரணங்கள் என்பனவற்றின் பயன்பாட்டினைக் குறைப்பதனூடாக அரச துறையின் மின்வலு மற்றும் எரிபொருள் பயன்பாட்டினைக் குறைப்பதற்கு 2022 மாச்சில் அரசாங்கத்தினால் பல வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன. மேலும், அதிகரித்த வாழ்நாள் எதிர்பார்ப்புக்காலம் மற்றும் அதன் விளைவாக அரச பணிகளில் சுறுசுறுப்பாக பணியாற்றக்கூடிய இயலாற்றல் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு அரச அலுவலர்களின் கட்டாய ஓய்வுபெறும் வயதினை, நாட்டின் தொழிற்படையினை வலுப்படுத்தும் நோக்குடனும் 2022 சனவரி 01 இலிருந்து 65 வயது வரை நீடிக்கப்பட்டது. அதேவேளை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஊழியர்களது கட்டாய ஓய்வுபெறும் வயதும் 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 62 வயதிற்கு நீடிக்கப்பட்டது.

அட்டவணை 6.1
அரசின் இறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்

விடயம்	2020 (அ)	2021 (ஆ)
	ரூ. மில்லியன்	
மொத்த அரசிறை மற்றும் கொடைகள்	**1,373,308**	**1,463,810**
மொத்த அரசிறை	1,367,960	1,457,071
வரி அரசிறை	1,216,542	1,298,019
வரியல்லா அரசிறை	151,417	159,052
கொடைகள்	5,348	6,740
செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	**3,040,996**	**3,521,735**
மீண்டெழும்	2,548,359	2,747,512
நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள்	-123,428	-
மூலதனமும் தேறிய கடன் வழங்கலும்	492,638	774,223
இதில் அரச முதலீடு	811,773	789,636
நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள்	-299,178	-
நடைமுறைக்கணக்கு மீதி	**-1,180,399**	**-1,290,441**
ஆரம்ப மீதி	**-687,386**	**-1,009,542**
திரண்ட இறை மீதி	**-1,667,688**	**-2,057,925**
மொத்த நிதியிடல்	**1,667,688**	**2,057,925**
வெளிநாட்டு நிதியிடல்	-83,199	-13,901
உள்நாட்டு நிதியிடல்	1,750,887	2,071,826
	மொ.உ.உ இன் சதவீதமாக (இ)	
மொத்த அரசிறை மற்றும் கொடைகள்	**9.1**	**8.7**
மொத்த அரசிறை	9.1	8.7
வரி அரசிறை	8.1	7.7
வரியல்லா அரசிறை	1.0	0.9
கொடைகள்	0.04	0.04
செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	**20.2**	**21.0**
மீண்டெழும்	17.0	16.3
நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள்	-0.8	-
மூலதனமும் தேறிய கடன் வழங்கலும்	3.3	4.6
இதில் அரச முதலீடு	5.4	4.7
நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள்	-2.0	-
நடைமுறைக்கணக்கு மீதி	**-7.9**	**-7.7**
ஆரம்ப மீதி	**-4.6**	**-6.0**
திரண்ட இறை மீதி	**-11.1**	**-12.2**
மொத்த நிதியிடல்	**11.1**	**12.2**
வெளிநாட்டு நிதியிடல்	-0.6	-0.1
உள்நாட்டு நிதியிடல்	11.7	12.3

(அ) நிதியமைச்சின்படி, 2020இற்கான இறைத்துறை புள்ளிவிபரங்கள் 2020இற்கான வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டன.
(ஆ) தற்காலிகமானது
(இ) 2020இற்கான தரவிற்கு 2022 மார்ச் 29ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மூலம்: நிதி அமைச்சு

உயர்ந்த வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள், போதுமானதற்ற நிதியியல் உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்தமையினைக் கருத்திற்கொண்டு இலங்கையின் நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்கள் நாட்டிற்கான பன்னாட்டு கொடுகடன் தரமிடல் முகவர்களினால் 2021 காலப்பகுதியில் தரம் குறைக்கப்பட்டது. ஸ்டான்டட் அன்ட் புவர் குளோபல் றேட்டிங் இலங்கையின் நாட்டிற்கான தரமிடலை 2021 ஓகத்து 27 அன்று "CCC+ (உறுதியானது)" இலிருந்து "CCC+ (எதிர்மறைக்கும்)" 2022 சனவரி 12 அன்று "CCC (எதிர்மறைக்கும்)" மேலும் குறைத்தது. பிட்ஜ் றேட்டிங் அதன் தரமிடலை 2020 நவெம்பர் 27 இலிருந்து ஓராண்டிற்கும் மேலாக "CCC" தரத்தில் பேணிய போதும் அவர்களும் கூட இலங்கையின் நாட்டிற்கான தரத்தினை 2021 திசெம்பர் 17 அன்று 'CC' இற்குக் குறைத்துக் கொண்டனர். அதேபோன்று, மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விஸ்சும் இலங்கையின் நாட்டிற்கான தரமிடலை 2021 ஒத்தோபர் 28 அன்று 'Caa1' (உறுதியானது) இலிருந்து 'Caa2' இற்கு (உறுதியானது) குறைத்துக் கொண்டது. அத்தகைய தரமிடல் தீர்மானங்கள் இறைச்

சமமின்மைகள், வெளிநாட்டு நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதில் நாட்டினால் எதிர்நோக்கப்படும் சவால்கள், நிச்சயமற்ற கொள்கைத் தோற்றப்பாடு மற்றும் இறைத் திரட்சியின் மெதுவான தன்மையின் இடர்நேர்வுகள் என்பன மீதான மதிப்பீடுகளின் மூலம் முக்கியமாக பெறப்படுகின்றன. இருப்பினும், அரசாங்கம் 2021 யூலை 27 அன்று முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் 2022 சனவரி 18 அன்று முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவு உட்பட அதன் அனைத்துப் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளையும் 2021இல் மீளச்செலுத்தியிருந்தது.

வரைபடம் 6.3
அரசிறையின் உள்ளமைப்பு - 2021



மூலம்: நிதி அமைச்சு

6.3 அரச வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

அரசிறையும் கொடைகளும்

அரசிறை

2019இன் பிற்பகுதியிலிருந்து குறைந்த வரி அமைப்பு பின்பற்றப்பட்டமையின் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரி விகிதம் வரலாற்றிலேயே மிகக் குறைந்த விளைவினை ஏற்படுத்துவதன் மூலம் 2021இல் அரசிறை மந்தமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. 2021இல் பெயரளவு நியதிகளில் அரச அரசிறை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ரூ.1,457.1 பில்லியனுக்கு 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு பெறுமதிசேர் வரி, வருமான வரிகள், துறைமுகம் மற்றும் வானூர்திநிலைய தீர்வை மற்றும் செஸ் தீர்வை என்பனவற்றிலிருந்தான உயர்ந்த வரி இறைச் சேகரிப்புக்களிலிருந்தான நன்மைகளே காரணமாக அமைந்தன. வரி அரசிறை முன்னைய ஆண்டின் ரூ.1,216.5 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.1,298.0 பில்லியனுக்கு 6.7 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, வரியல்லா அரசிறை 2020இன் ரூ.151.4 மில்லியனிலிருந்து 2021இல் ரூ.159.1 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு கட்டணம் மற்றும் விதிப்புக்கள், வாடகை வருமானம், வட்டி வருமானம் மற்றும் மத்திய வங்கியிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட பங்கிடத்தக்க இலாபம் என்பனவற்றில் குறைப்புக் காணப்பட்ட போதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்புக்கள் என்பனவற்றில் ஏற்பட்ட உயர்வுகள் காரணமாக அமைந்தன. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறை முன்னைய ஆண்டின் 9.1 சதவீதத்திலிருந்து 2021இல் 8.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2020இல் மொ.உ.உற்பத்தியின் 8.1 சதவீதம் கொண்ட குறைந்த மட்டத்தில் காணப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறை 2021இல் 7.7 சவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியுற்றது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறை மற்றும் வரி அரசிறை இரண்டும் சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தொடர்ச்சியான குறைந்த வரி அமைப்பு, வெளிநாட்டுத் துறை அழுத்தங்களை இலகுபடுத்துவதற்காக விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதாரத்தின் மிதமான வளர்ச்சி என்பன காரணங்களாக அமைந்தன. அதேவேளை, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை, 2020இல் பதிவுசெய்யப்பட்ட 1.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 0.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவிடத்து அரசாங்கத்தினால் பெறப்பட்ட செலவினங்கள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.5.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் 6.7 பில்லியன் கொண்ட சிறிதளவு முன்னேற்றத்தினைப் பதிவுசெய்தது.

வருமான வரியிலிருந்தான அரசிறை, பெயரளவு நியதிகளில், 2020இன் ரூ.268.2 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.302.1 பில்லியனுக்கு 12.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 2020இன் தொடக்கத்தில் ஒழிக்கப்பட்ட பொருளாதாரப் பணிக் கட்டணம் தவிர்ந்த அனைத்து வருமான வகை வரிகளிலுமிருந்தான அதிகரித்த அரசிறைத் திரட்சிக்குப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது. வருமான வரிகளிலிருந்தான அதிகரித்த அரசிறையின் காரணமாக மொத்த வரி அரசிறைச் சேகரிப்பில் நேரடி வரி அரசிறையின் பங்கு 2020இல் பதிவுசெய்யப்பட்ட 22.1 சதவீதத்திற்கு மேலாக 2021இல் 23.3 சதவீதத்திற்கு மேம்பட்டது. கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகளிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.228.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.273.6 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியுற்றமையினையும் முக்கியமாக கம்பனிகளின் செயலாற்றம் மேம்பட்டமையினையும் எடுத்துக்காட்டின. ஆய்விற்குரிய காலப்பகுதியில் உயர்தர

தனியாள் வருமான வரி மற்றும் பிடித்துவைத்தல் வரி என்பனவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 2020இன் முறையே ரூ.15.0 பில்லியன் ரூ.10.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் முறையே ரூ.15.4 பில்லியனுக்கும் ரூ.12.4 பில்லியனுக்கும் சிறிதளவால் அதிகரித்தன. அதேவேளை, 2020 சனவரியில் பொருளாதாரப் பணிகள் கட்டணம் நீக்கப்பட்டமையினைத் தொடர்ந்து 2021இல் பொருளாதாரப் பணிக் கட்டணத்தின் மீது சேகரிக்கப்பட்ட நிலுவை 2021இல் ரூ.0.7 பில்லியனாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வருமான வரிகளிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறை 2021இல் 1.8 சதவீதமாக விளங்கி 2020 இலிருந்து பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டது.

பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மீளெழுச்சி ஆதரவாக அமைந்தது. இதன்படி, பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு 2020இன் ரூ.233.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.308.2 பில்லியனுக்கு அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பெறுமதிசேரி வரி அரசிறை 2020இன் 1.6 சதவீதத்திலிருந்து 2021இல் 1.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் பேரில் உருவாக்கப்பட்ட பெறுமதிசேர் வரி அரசிறை 2020இன் ரூ.148.1 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.185.5 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் இறக்குமதிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2020இன் ரூ.85.7 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.122.8 பில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வாண்டுப்பகுதியில், மொத்த அரசிறை மற்றும் மொத்த வரி அரசிறையில் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறையின் பங்கு 2020இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 17.1 சதவீதம் மற்றும் 19.2 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் முறையே 21.2 சதவீதத்திற்கும் 23.7 சதவீதத்திற்கும் அதிகரித்தது. அதேவேளை, 2021இல் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீது சேகரிக்கப்பட்ட நிலுவை 2019 திசெம்பரில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஒழிக்கப்பட்டதனைத் தொடர்ந்து 2021இல் 0.4 பில்லியனாகக் காணப்பட்டது.

கலால் தீர்வைகளை அடிப்படையாகக் கொண்ட அரசிறைச் சேகரிப்பு 2021இல் வீழ்ச்சியடைந்து, நாட்டில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை பிரச்சனைகளைக் கருத்திற்கொண்டு உந்து ஊர்திகளின் இறக்குமதி மீது தொடர்ச்சியாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக கலால் அரசிறை மூலங்கள் நலிவடைந்தமையினைப் பிரதிபலித்திருந்தது. இதற்கமைய, பெயரளவு நியதிகளில், கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2020இன் ரூ.322.0 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.306.9 பில்லியனுக்கு

அட்டவணை 6.2
அரசிறையின் சுருக்கம்

விடயம்	2020 (அ)	2021 (ஆ)
	ரூ. மில்லியன்	
வரி அரசிறை	1,216,542	1,298,019
வருமான வரிகள்	268,249	302,115
பெறுமதி சேர் வரிகள்	233,786	308,213
கலால் வரிகள்	321,932	306,861
இறக்குமதி தீர்வைகள்	114,183	64,339
ஏனைய வரிகள்	278,392	316,490
வரியல்லா அரசிறை	151,417	159,052
மொத்த அரசிறை	1,367,960	1,457,071
	மொ.உ.உ இன் சதவீதமாக (இ)	
வரி அரசிறை	8.1	7.7
வருமான வரிகள்	1.8	1.8
பெறுமதி சேர் வரிகள்	1.6	1.8
கலால் வரிகள்	2.1	1.8
இறக்குமதி தீர்வைகள்	0.8	0.4
ஏனைய வரிகள்	1.9	1.9
வரியல்லா அரசிறை	1.0	0.9
மொத்த அரசிறை	9.1	8.7

மூலம்: நிதி அமைச்சு

(அ) நிதியமைச்சின்படி, 2020இற்கான இறைத்துறை புள்ளிவிபரங்கள் 2020 இற்காக அறிவிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.
(அ) தற்காலிகமானது
(இ) 2020இற்கான தரவிற்கு 2022 மார்ச் 29ஆம் நாளன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வீழ்ச்சியடைந்த வேளையில், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக கலால் தீர்வைகளின் திரட்சி முன்னைய ஆண்டின் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 1.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு 2019இன் ரூ.130.4 பில்லியன் மற்றும் 2020இன் ரூ.48.8 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.18.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, சிகரெட் மற்றும் புகையிலை மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறையும் 2020இன் ரூ.94.3 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.88.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2020இன் ரூ.53.1 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.55.3 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு ஆய்விற்குரிய காலப்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகளே காரணமாகும். மேலும், குடிவகை மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2021இல் ரூ.138.6 பில்லியனுக்கு 14.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, அதிகரித்த குடிவகை உற்பத்திகள் காரணமாக அமைந்து, உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான இடையூறுகளுக்கு மத்தியிலும் சுற்றுலா/உணவகங்கள்/சுற்றுலாவுடன் தொடர்பான பணிகளில் ஏற்பட்ட மீட்சியைப் பிரதிபலித்தது.

அத்தியாவசியமல்லா பொருட்கள் பலவற்றின் இறக்குமதி மீது காணப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான வரிகளிலிருந்தான அரசிறை 2021இல் கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது. சுங்கத் தீர்வைகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.114.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.64.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தவிர, 2020 நவெம்பரில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான சுங்கத் தீர்வை அமைப்பின் எளிமைப்படுத்தலுடன் இசைந்து செல்லும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சுங்கத் தீர்வை வீதம் 30 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டமையும் கூட பன்னாட்டு வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறையின் வீழ்ச்சிக்குப் பங்களித்தது. அதேவேளை, சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறைச் சேகரிப்பும் 2020இன் ரூ.82.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.55.8 பில்லியனக்கு 32.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பல அத்தியாவசியமல்லாப் பொருட்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், கருவாடு, பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு மீதான வரிக் குறைப்பு, உப்பு, அரிசி தேய்காய்த் துருவல் மற்றும் சோளம் மீது தீர்வைத் தளர்த்தல்கள் விதிக்கப்பட்டமை என்பன சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு வீழ்ச்சியடையக் காரணமாயின. மறுபுறத்தில் அத்தியாவசியமல்லாத பல்வேறு பொருட்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், மருத்துவச் சாதனங்கள், செயற்றிட்டம் தொடர்பான பொருட்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீது வழங்கப்பட்ட விலக்கல்கள் என்பனவற்றிற்கு மத்தியிலும் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலையத் தீர்வை மற்றும் செஸ் தீர்வையிலிருந்தான அரசிறை இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தது. இதற்கமைய, துறைமுகம் மற்றும் வானூர்திநலைய தீர்வையிலிருந்தான அரசிறை 2020இன் ரூ.115.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.154.1 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் செஸ் தீர்வையிலிருந்தான அரசிறை 2020இனை விட 2021இல் ரூ.75.5 பில்லியனுக்கு 53.2 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020 நவெம்பரில் சுங்கத் தீர்வை அமைப்பின் எளிமைப்படுத்தலுடன் இசைந்து செல்லும் விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கான செஸ் தீர்வை மீதான வரிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு செஸ் தீர்வைகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்ட உயர்விற்குப் பங்களித்தது.

இவ்வாண்டுப்பகுதியில், வரியல்லா அரசிறை, பெயரளவு நியதிகளில் அதிகரித்து அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்களிலிருந்தான அரசிறை சேகரிப்புக்களிலும் சமூக பாதுகாப்புப் பங்களிப்புக்களிலும் ஏற்பட்ட உயர்வினைப் பிரதிபலித்தது. இதன்படி, வரியல்லா அரசிறை 2020இன் ரூ.151.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.159.1 பில்லியனுக்கு அதிகரித்தது. அரசிற்கான தொழில்முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் மாற்றல்கள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.30.6 பில்லியனுக்கு 73.6 சதவீதத்தினால் அதிகரித்து, பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புக்களிலிருந்தான அரசிறை ஆய்விற்குரிய காலப்பகுதியில் ரூ.34.6 பில்லியனுக்கு 6.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், வட்டி மற்றும் வாடகை வருமானங்களிலிருந்தான அரசிறை 2020இன் ரூ.19.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.11.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், கட்டணம் மற்றும் விதிப்புக்களிலிருந்தான அரசிறை 2021இல் ரூ.42.6 பில்லியனுக்கு 10.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2021இல் அரசாங்கத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட மத்திய வங்கியின் பங்கிடத்தக்க இலாபம் 2020இன் ரூ.24.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.15.0 பில்லியனாக விளங்கின.

கொடைகள்

இருபுடை மற்றும் பல்புடை மூலங்களிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் 2020இன் ரூ.5.3 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.6.7 பில்லியனுக்கு அதிகரித்தது. இருபுடை மூலங்களிலிருந்தான வெளிநாட்டுக் கொடைகள் 2020இன் ரூ.2.8 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.3.2 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில், பல்புடை மூலங்களிலிருந்தான வெளிநாட்டுக் கொடைகள் 2020இன் ரூ.2.5 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.3.5 பில்லியனுக்கு அதிகரித்தது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கொடைகளை வழங்கிய முக்கிய அபிவிருத்திப் பங்காளர்களிடையே யப்பானிய அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய அமெரிக்காவின் வேளாண்மைத் திணைக்களம் என்பன காணப்பட்டன.

செலவினமும் தேறிய கடன்வழங்கலும்

இவ்வாண்டுப்பகுதியில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் அதிகரித்தமைக்கு மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாயமைந்தன. இதன்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தேறிய கடன்வழங்கலும் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.3,041.0 பில்லியனுடன் (மொ.உ.உற்பத்தியில் 20.2 சதவீதம்) ஒப்பிடுகையில் 2021இல் ரூ.3,521 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 21.0 சதவீதம்) ரூ.480.7 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. 2021இல் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2021இற்கான ஆண்டு மதிப்பீட்டில் 99.9 சதவீதத்திற்கும் 2021இற்கான திருத்தப்பட்ட ஆண்டு மதிப்பீட்டில் 105.9 சதவீதத்திற்கும் வகைகூறின.

வரைபடம் 6.4
அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2021



மூலம்: நிதி அமைச்சு

மீண்டெழும் செலவினம் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,548.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.2,747.5 பில்லியனுக்கு அதிகரித்து சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் பேரில் ஏற்பட்ட உயர்ந்த செலவினங்களைப் பிரதிபலித்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் கூட 2020இன் ரூ.492.6 பில்லியனிலிருந்து ரூ.774.2 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

2021இல் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் பேரில் ஏற்பட்ட உயர்ந்த செலவினம் மீண்டெழும் செலவினம் உயர்வடைவதற்குப் பங்களித்திருந்தது. சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் 2020இன் ரூ.794.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.845.7 பில்லியனுக்கு ரூ.51.5 பில்லியனால் அதிகரித்தமைக்கு குறைந்த வருமானக் குடும்பங்களிலிருந்து குறைந்த தேர்ச்சியைக் கொண்ட தனிப்பட்டவர்கள், தொழிலற்ற பட்டதாரிகள், டிப்ளோமா சான்றிதழ்பெற்றவர்கள் ஆகியோர் 2020 செத்தெம்பரில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை, சம்பளங்கள் மற்றும் கூலிகளின் ஏற்பட்ட வருடாந்த சம்பளங்களின் உயர்ந்த தாக்கம் என்பன ஓரளவிற்குக் காரணங்களாக விளங்கின. 2021இற்கான சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் அரச அரசிறையில் 58.0 சதவீதத்திற்கும் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 30.8 சதவீதத்திற்கும் வகைகூறின. வட்டிக் கொடுப்பனவுகளும் 2020இன் ரூ.980.3 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.1,048.4 பில்லியனுக்கு 6.9 சதவீதத்தினால் உயர்வடைந்து, திறைசேரி முறிகள் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்து, உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகளின் உயர்வில் ஏற்பட்ட தாக்கத்தினைப் பிரதிபலித்தது. திறைசேரி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2020இன் ரூ.550.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.593.4 பில்லியனாக விளங்கியமைக்கு திறைசேரி உண்டியல் வழங்கலூடான கடன்பாடுகள் 2021இல் ரூ.1,248.4 பில்லியனால் ரூ.6,968.0 பில்லியனுக்கு அதிகரித்தமையே காரணமாகும். வட்டிக் கொடுப்பனவுகள் 2020இன் 71.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் அரசிறையில் 72.0 சதவீதத்திற்கு வகைகூறி, குறைந்தபட்சம் அரசாங்கத்தின் கடுமையான மீண்டெழும் செலவினத்தினை ஈடுசெய்கின்ற அளவிற்காவது அரசிறைத் திரட்சி போதுமானதாக இல்லாமை

அட்டவணை 6.3
செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்களின் பொருளாதார பகுப்பாய்வு

விடயம்	2020 (அ)	2021 (ஆ)
ரூ. மில்லியன்		
மீண்டெழும் செலவினம்	**2,548,359**	**2,747,512**
பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம்	974,351	1,014,612
இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள்	794,158	845,680
வட்டிக் கொடுப்பனவுகள்	980,302	1,048,382
வெளிநாடு	266,679	253,750
உள்நாடு	713,623	794,633
நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்	717,133	684,518
இதில் வீட்டுத்துறை மற்றும் ஏனைய துறைக்கானது	610,486	595,696
சமூர்த்தி	52,434	55,400
ஓய்வூதியம்	257,833	269,827
வளமாக்கி மானியம்	36,687	21,235
ஏனையவை	263,532	249,233
நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுக்கான சீராக்கங்கள்	-123,428	-
மூலதனச் செலவினம்	**795,368**	**767,606**
உண்மைச் சொத்துக்களின் கையேற்பு	483,543	438,753
மூலதன மாற்றல்கள்	307,917	326,578
ஏனையவை	3,907	2,275
தேறிய கடன் வழங்கல்	**-3,552**	**6,617**
நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுக்கான சீராக்கங்கள்	-299,178	-
மூலதன செலவினமும் தேறிய கடன்வழங்கலும்	492,638	774,223
மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	3,040,996	3,521,735
மொ.உ.உ.இன் சதவீதமாக (இ)		
மீண்டெழும் செலவினம்	**17.0**	**16.3**
பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம்	6.5	6.0
இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள்	5.3	5.0
வட்டிக் கொடுப்பனவுகள்	6.5	6.2
வெளிநாடு	1.8	1.5
உள்நாடு	4.7	4.7
நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்	4.8	4.1
இதில் வீட்டுத்துறைகளும் ஏனைய துறைகளும்	4.1	3.5
சமூர்த்தி	0.3	0.3
ஓய்வூதியம்	1.7	1.6
வளமாக்கி மானியம்	0.2	0.1
ஏனையவை	1.8	1.5
நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுக்கான சீராக்கங்கள்	-0.8	-
மூலதனச் செலவினம்	**5.3**	**4.6**
உண்மைச் சொத்துக்களின் கையேற்பு	3.2	2.6
மூலதன மாற்றல்கள்	2.0	1.9
ஏனையவை	0.03	0.01
தேறிய கடன்வழங்கல்	**-0.02**	**0.04**
நிதி அமைச்சிற்கு ஏற்றவாறான முற்கொடுப்பனவுக்கான சீராக்கங்கள்	-2.0	-
மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	3.3	4.6
மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	20.2	21.0

மூலம்: நிதி அமைச்சு

(அ) நிதியமைச்சின்படி 2020இற்கான இறைத்துறை புள்ளிவிபரங்கள் 2020 இற்காக அறிவிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.
(அ) தற்காலிகமானது
(இ) 2020இற்கான தரவானது 2022 மார்ச் 29ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை பயன்படுத்தியுள்ளது.

வரைபடம் 6.5
தொழிற்பாட்டின்படி மொத்த செலவினமும் கடன் வழங்களும் - 2021



மூலம்: நிதி அமைச்சு

கரிசனைகளுக்கான அழுத்தத்தினைத் தோற்றுவிப்பதாக இருந்தது. அதேவேளை, உதவுதொகை மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம் 2020இன் ரூ.717.1 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.684.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, 2021 சிறுபோகத்திலிருந்து இரசாயன வளமாக்கிக்கு வழங்கப்பட்ட வளமாக்கி உதவுதொகை நீக்கப்பட்டமை மற்றும் பள்ளிக்கூட மற்றும் உயர் கல்வி பருவகால பயணச்சீட்டு 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான நிதியியல் ஆதரவு போன்ற உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம் மீதான செலவினம் குறைவடைந்தமை என்பனவற்றின் விளைவாக வீட்டுத் துறையிலிருந்தான உதவுதொகை குறைக்கப்பட்டமையின் காரணமாக அமைந்தது. எனினும், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2021இல் ரூ.269.8 பில்லியனக்கு 4.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சமூர்த்திக் கொடுப்பனவுகள் தொடர்பான செலவினம் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.55.4 பில்லியனுக்கு 5.7 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2020இல் 17.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 16.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் இரண்டும் பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உற்பத்தியினதும் பங்காகவும் அதிகரித்தன. இதற்கமைய, மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2020இனை விட 2021இல் ரூ.774.2 பில்லியனுக்கு 57.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினம் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதத்தினை விட 2021இல் 4.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், 2020இல் மூலதனச் செலவினத்தின் நிலுவைக் கொடுப்பனவுகளின் சீராக்கம் இல்லாதவிடத்து மூலதனச் செலவினம் 2020இன் ரூ.795.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.767.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 6.4
செலவினங்களின் தொழிற்பாட்டுப் பகுப்பாய்வு

விடயம்	2021 (அ)
ரூ. மில்லியன்	
மீண்டெழும் செலவினம்	**2,747,512**
பொதுமக்கள் பணிகள்	499,629
சிவில் நிர்வாகம்	134,930
பாதுகாப்பு	257,918
பொதுக் கட்டளையும் பாதுகாப்பும்	106,782
சமூகப் பணிகள்	974,821
கல்வி	261,716
சுகாதாரம்	275,165
நலன்புரி	397,343
சமூகக்குழு பணிகள்	40,597
பொருளாதாரப் பணிகள்	164,590
விவாசயமும் நீர்வழங்களும்	68,206
வலு மற்றும் நீர்வழங்கள்	1,385
போக்குவரத்தும் தொடர்பூட்டலும்	47,255
ஏனையவை	47,744
ஏனையவை	1,108,472
இதில் வட்டிக் கொடுப்பனவுகள்	1,048,382
மூலதன செலவினமும் கடன்வழங்களும்	**789,636**
பொதுப் பணிகள்	61,675
சிவில் நிர்வாகம்	54,624
பொதுக் கட்டளையும் பாதுகாப்பும்	7,051
சமூகப் பணிகள்	189,733
கல்வி	48,897
சுகாதாரம்	111,956
வீடமைப்பு	18,333
சமூகக்குழு பணிகள.	10,547
பொருளாதாரப் பணிகள்	537,370
விவாசாயமும் நீர்ப்பாசனமும்	79,463
வலு மற்றும் நீர் வழங்கல்	96,520
போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்	263,042
ஏனையவை	98,346
ஏனையவை	858
மொத்த செலவினமும் கடன் வழங்களும்	**3,537,148**
மொ.உ.உ.இன் சதவீதமாக	
பொதுமக்கள் பணிகள்	3.3
சமூகப் பணிகள்	6.9
பொருளாதாரப் பணிகள்	4.2
ஏனையவை	6.6
இதில் வட்டிக் கொடுப்பனவுகள்	6.2
மொத்த செலவினமும் கடன் வழங்களும்	**21.0**

(அ) தற்காலிகமானது

மூலம்: நிதி அமைச்சு

முக்கிய இறை மீதிகளும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கான நிதியீட்டமும்

குறைந்த அரசிறைச் சேகரிப்பு மற்றும் உயர்வடைந்த அரச செலவினம் என்பவற்றின் காரணமாக 2021இல் முக்கிய இறை மீதிகள் தொடர்ந்தும் நலிவுற்றுக் காணப்பட்டன. நிதி அமைச்சின் இறைத் துறை புள்ளிவிபரங்களின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2020இல் அறிவிக்கப்பட்ட 11.1 சதவீதத்திலிருந்து (ரூ.1,667,7 பில்லியன்) 2021இல் 12.2 சதவீதத்திற்கு (ரூ.2,057.9 பில்லியன்) மேலும் வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் குறைச் சேமிப்புக்களைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் 2021இல் மொ.உ.உற்பத்தியின் (ரூ.1,290.4 பில்லியன்) 7.7 சதவீதத்தில் தொடர்ந்தும் உயர்வாக விளங்கி 2020இல்

6

அறிவிக்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 7.9 சதவீதத்திலிருந்து (ரூ.1,180.4 பில்லியன்) பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டது. அதேவேளை, நடைமுறையாண்டின் தற்றுணிபு இறைக் கொள்கையின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றதும் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளை நீக்கிவிடுவதன் மூலம் கணிக்கப்பட்டதுமான ஆரம்பப் பற்றாக்குறையும் 2020இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 4.6 சதவீதத்துடன் (ரூ.687.4 பில்லியன்) ஒப்பிடுகையில் 2021இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.0 சதவீதத்திற்கு (ரூ.1,009.5 பில்லியன்) நலிவடைந்தது.

வெளிநாட்டு மூலங்களை நாடுவது மட்டுப்படுத்தப்பட்டிருந்தமைக்கு மத்தியில் வெளிநாட்டு நிதியிடல் மாற்று ஏற்பாடுகளுக்கு உள்ளாகக்கூடிய தன்மையினைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முன்னுரிமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2021இல் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு அரசாங்கம் முக்கியமாக உள்நாட்டு நிதியிடலில் தங்கியிருந்தது. நிதி அமைச்சின்படி, திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளினூடாக அனைத்து தேறிய கடன்பாடுகள், கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பனவற்றையெல்லாம் உள்ளடக்கிய உள்நாட்டு மூலங்களினூடான தேறிய நிதியிடல் ரூ.2,071.8 பில்லியனாக விளங்கி, 2020இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் மொ.உ.உற்பத்தியின் 12.3 சதவீதமாகக் காணப்பட்டது. அதேநேரம், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தேறிய மீள்கொடுப்பனவினை உள்ளடக்கிய தேறிய வெளிநாட்டு மீள்கொடுப்பனவுகள் ரூ.13.9 பில்லியனாக விளங்கின.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டு மூலங்களிலிருந்து குறிப்பாக வங்கித்தொழில் மூலங்களிலிருந்து பற்றாக்குறைக்கு நிதியிட்டமையானது அரச பிணையங்கள் மீதான விளைவுகள் மீதும் குறுங்கால பணச்சந்தை வீதங்கள் மீதும் மேல் நோக்கிய அழுத்தமொன்றினைத் தோற்றுவித்திருந்தது. வங்கித்தொழில் துறையிலிருந்தான அரசின் கடன்பாடுகள் மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடலில் 63.0 சதவீதத்திற்கு (ரூ.1,304.3 பில்லியன்) வகைகூறியது. இத்தொகையில், தேறிய மத்திய வங்கி நிதியிடல் ரூ.1,225.2 பில்லியனாகக் காணப்பட்டது. 2021இல் வர்த்தக வங்கிகளிலிருந்தான தேறிய நிதியிடல் ரூ.79.1 பில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை, பணவீக்கமல்லா மூலங்களெனக் கருதப்படுகின்ற வங்கியல்லா துறைகளிலிருந்தான கடன்பாடுகள் ரூ.767.5 பில்லியனாக விளங்கி 2021இன் மொத்தத் தேறிய உள்நாட்டுக் கடன்பாடுகளில் 37.0 சதவீதப் பங்குகளைக் கொண்டிருந்தது. சாதனங்களின் நியதிகளில், உள்நாட்டு நிதியிடலில் 62.8 சதவீதம் (ரூ.1,301.5 பில்லியன்) திறைசேரி முறிகளிலிருந்தும் அதனைத் தொடர்ந்து 30.7 சதவீதம் திறைசேரி உண்டியலிலிருந்து (ரூ.635.1 பில்லியன்) 16.6 சதவீதம் (ரூ.343.0 பில்லியன்) மேலதிகப் பற்று வசதிகளிலிருந்தும் கிடைத்தன. எனினும், 2021இல் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான கடன்பாடுகள் தேறிய மீள்கொடுப்பனவினைப் பதிவுசெய்தன.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த தேறிய வெளிநாட்டு நிதியிடல், தேறிய அடிப்படையில், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளுக்கான ரூ.199.9 பில்லியன் (ஐ.அ.டொலர் 1 பில்லியன்) மீள்கொடுப்பனவுகளுடன் சேர்த்து ரூ.13.9 பில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுகளைப் பதிவுசெய்தன. ரூ.164.9 பில்லியன் கொண்ட தேறிய கடன்பாடுகள் (ஐ.அ.டொலர் 0.8 பில்லியன்) மற்றும் ரூ.18.2 பில்லியன் கொண்ட (ஐ.அ.டொலர் 0.1 பில்லியன்) மீள்கொடுப்பனவுகளின் விளைவாக 2021இல் வெளிநாட்டு நாணயத் தவணை நிதியிடல் வசதியூடான தேறிய கடன்பாடுகள் ரூ.146.7 பில்லியனைப் (ஐ.அ.டொலர் 0.7 பில்லியன்) பதிவுசெய்தன.

6.4 அரச படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

மத்திய அரச படுகடன்

உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அளவுக்கதிகமாக விரிவடைந்து, தொடர்ச்சியாக நலிவடைந்து இறைச் செயலாற்றத்திலிருந்து தோன்றிய தொடர்ச்சியான உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, 2021 இறுதியில் வெளிநின்ற மத்திய அரச படுகடனில் கணிசமான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. பெயரளவு நியதிகளில், மொத்த வெளிநின்ற மத்திய அரச படுகடன் இருப்பு 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.15,117.2 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.17,589.4 பில்லியனுக்கு அதிகரித்தது. சாதகமற்ற பன்னாட்டுச் சந்தை நிலைமைகள் பாதுகாப்பான இடர்நேர்வுகளற்ற சொத்துக்கள் மீது காட்டப்பட்ட உலகளாவிய ஆர்வம், முறையீடு செய்யமுடியாத இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் என்பனவற்றின் காரணமாக அதிகரித்த நிதியிடல் தேவைப்பாடுகளின் விளைவாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்காக உள்நாட்டு மூலங்களில் தங்கியிருந்தமையானது மத்திய அரச படுகடனின் வெளிநின்ற இருப்பின் உள்ளமைப்பின் மீது குறிப்பிடத்தக்க மாற்றத்தினை விளைவித்திருக்கிறது. இதன் விளைவாக, உள்நாட்டுப் படுகடனின் பங்கு முன்னைய ஆண்டின் மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநின்ற படுகடனின் பங்கான 60.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 63.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, மொத்த வெளிநின்ற மத்திய அரச படுகடனின் பங்காக வெளிநாட்டுப் படுகடனின் அளவு

2020இல் பதிவுசெய்யப்பட்ட 40.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 36.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முக்கிய இறை மாறிகளின் குறைந்த செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், மொ.உ.உற்பத்திக்கான மத்திய அரச படுகடனின் விகிதம் 2020 இறுதியின் 100.6 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 104.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2020 இறுதியின் 60.3 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 66.0 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடன் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 40.3 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 38.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், மொத்த வெளிநின்ற மத்திய அரச படுகடனின் பங்காக வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் 2020 இறுதியில் நிலவிய 47.5 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 42.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையானது, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை உள்நாட்டு மூலங்களிலிருந்து நிதியிடுவதன் மீதும் 2021இல் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறி உட்பட வெளிநாட்டு படுகடன் கடப்பாடுகளைத் தீர்ப்பதிலும் உயர்ந்தளவு கவனம் செலுத்தப்பட்டமையினைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. எனினும், வெளிநின்ற மொத்தப் படுகடன் இருப்பின் சராசரி முதிர்ச்சிக் காலம் 2020 இறுதியின் 5.7 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 5.2 ஆண்டுகளுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு குறுங்காலப் படுகடன் சாதனங்களினூடாக கடன்பாடுகள் அதிகரித்தளவில் திரட்டப்படமையே காரணமாகும்.

மத்திய அரசாங்கத்தின் மொத்த உள்நாட்டுப் படுகடன் 2020 இறுதியின் ரூ.2,032.2 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைக்காட்டி 2021 இறுதியில் ரூ.11,097.2 பில்லியனை அடைந்தது.[2] அரச பிணையங்களின் நீண்ட முதிர்ச்சிக் காலத்திற்கான சந்தை ஆர்வம் குறைவடைந்தமை, குறிப்பாக முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட உயர்ந்தபட்ச விளைவு வீதங்கள் மற்றும் வட்டி வீதங்கள் உயர்வடையலாம் என்ற சந்தை எதிர்பார்ப்பு என்பனவற்றின் காரணமாக குறுங்கால நிதியிடலில் அதிகரித்தளவிற்கு தங்கியிருந்தமையானது குறுங்கால உள்நாட்டுப் படுகடன் இருப்பினை 2020 இறுதியில் அறிவிக்கப்பட்ட ரூ.2,197.6 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.3,139.8 பில்லியனுக்கு 42.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கமைய, மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் குறுங்கால படுகடனின் பங்கு 2020 இறுதியின் 24.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 28.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. பெயரளவு நியதிகளில், குறுங்கால படுகடன் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் இருப்பு 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,670.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.2,270.5 பில்லியனுக்கு 40.1 சதவீதத்தினால் அதிகரித்தமையே பெருமளவிற்குத் தூண்டுதலாக அமைந்தது. இதன் விளைவாக, 2021 இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2020 இறுதியின் 17.9 சதவீதத்திலிருந்து 20.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்களின் பேரிலான வெளிநின்ற படுகடன் இருப்பு 2020 இறுதியின் ரூ.153.1 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.150.1 பில்லியனை அடைந்து சிறிதளவு குறைப்பினை எடுத்துக்காட்டியது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு கூடியளவிற்கு குறுங்கால சாதனங்களில் தங்கியிருப்பதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமாக மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் நடுத்தர மற்றும் நீண்டகால உள்நாட்டு படுகடன் இருப்பின் பங்கு 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 75.8 சதவீதத்திலிருந்து 71.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பெயரளவு நியதிகளில், நடுத்தர மற்றும் நீண்ட கால உள்நாட்டுப் படுகடன் இருப்பும் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.6,867.5 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.7,957.4 பில்லியனுக்கு 15.9 சதவீதத்தினால் அதிகரித்தது. வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலில் தொடர்ந்தும் ஆதிக்கம் பெற்றிருந்த திறைசேரி முறிகள் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 63.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் மொத்த வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் இருப்பில் ஏறத்தாழ 62.8 சதவீதத்திற்கு வகைகூறியது. பெயரளவு நியதிகளில், உள்நாட்டுப் படுகடனிலுள்ள திறைசேரி முறிகள் 2020 இறுதியில்

வரைபடம் 6.6
மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்



மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

2 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட அரச நிதி புள்ளிவிபரவியல் கையேலிலுள்ள அரச படுகடன் புள்ளிவிபரவியல் தொகுப்பின் வழிகாட்டல்களிலுள்ளவாறு.

6

பதிவுசெய்யப்பட்ட ரூ.5,713.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.6,966.2 பில்லியனுக்கு 21.9 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, வதிவோரின் உடமையிலிருந்த இலங்கை அபிவிருத்தி முறிகள் 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூ.486.9 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 2,611.9 மில்லியன்) ரூ.455.2 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 2,271.1 மில்லியன்) வீழ்ச்சியடைந்தன. மேலும், உள்நாட்டு வதிவோருக்குச் சொந்தமான நாட்டிற்கான பன்னாட்டு முறிகளும் 2020 இறுதியின் ரூ.415.8 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 2,230.4 மில்லியன்) 2021 இறுதியில் ரூ.372.6 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 1,859.0 மில்லியன்) வீழ்ச்சியடைந்தன. இதற்கு ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் முதிர்ச்சியடைந்தமை முக்கிய காரணமாக அமைந்ததுடன் இதில் ஐ.அ.டொலர் 371.3 மில்லியன் உள்நாட்டு முறி உடமையாளர்களுக்கு மீளச்செலுத்தப்பட்டன. மேலும், கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலிருந்தான வெளிநின்ற படுகடன் 2021 இறுதியில் ரூ.139.3 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 695.0 மில்லியன்) 2020 இறுதியிலிருந்து ரூ.88.1 பில்லியன் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 2021 இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் 2020 இறுதியின் ரூ.1,130.0 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 6,062.2 மில்லியன்) ரூ.162.9 பில்லியனால் ரூ.967.1 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 4,825.1 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது.[3] அதேவேளை, உள்நாட்டு வங்கித்தொழில் துறைக்கான மத்திய அரசாங்கத்தின் படுகடன் கடப்பாடு 2021 இறுதியில் ரூ.5,467.1 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு வர்த்தக வங்கிகளுக்கும் மத்திய வங்கிக்கும் சொந்தமான வெளிநின்ற அரச படுகடன் முறையே ரூ.3,901.6 பில்லியனாலும் ரூ.1,565.5 பில்லியனாலும் அதிகரித்தமையே காரணமாகும். மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட மத்திய அரசாங்கத்தின் படுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு திறைசேரி உண்டியல் உடமைகள் 2020இன் ரூ.654.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.1,391.3 பில்லியனுக்கு அதிகரித்தமையே காரணமாகும். இது, குறைவடைந்த சந்தை உதவுதொகை மற்றும் மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியலின் நிருவாக சிறப்பு ஒதுக்குகளுக்கிடையிலும் முதலாந்தர ஏலங்களில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகளின் உதவுதொகையின் விளைவாகும். அதேவேளை, வர்த்தக வங்கிகளுக்குச் சொந்தமான வெளிநின்ற படுகடன் 2021 இறுதியில் ரூ.3,901.6 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு, 2021இல் திறைசேரி முறிகளில் வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட உயர்ந்த முதலீடுகளே காரணமாகும். வர்த்தக வங்கிகள் வசமுள்ள திறைசேரி முறிகளின் இருப்பு 2020 இறுதியில் அறிவிக்கப்பட்ட ரூ.1,513.3 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.1,648.8 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், மொத்த உள்நாட்டுப் படுகடனில் வங்கித்தொழில் துறையின் பங்கு 2020இன் இறுதியில் காணப்பட்ட 52.2 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 49.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வங்கியல்லா துறையினால் வைத்திருக்கப்பட்ட வெளிநின்ற அரச படுகடன் இருப்பு 2020 இறுதியில் காணப்பட்ட ரூ.4,333.4 பில்லியனுக்கெதிராக 2021 இறுதியில் ரூ.5,630.1 பில்லியனாகக் காணப்பட்டது.

பெயரளவு நியதிகளில், மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் பொறுப்புக்கள் 2020 இறுதியின் ரூ.6,052.2 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.6,492.2 பில்லியனுக்கு அதிகரித்தது.[4] எனினும், வெளிநாட்டு மூலங்களை அணுகுவதற்கான வரையறைகள், உள்நாட்டு மூலங்களின் மீது முக்கியமாக தங்கியிருப்பதற்கான அரசாங்கத்தின் தெளிவான நிதியிடல் உபாயம் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் தேறிய மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றின் காரணமாக, மொத்த வெளிநின்ற படுகடன் இருப்பில் வெளிநாட்டுப் படுகடனின் பங்கு 2020 இறுதியின் 40.0 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 36.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த வெளிநாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலில், சலுகையல்லாப் படுகடனின் பங்கு 2020 இறுதியின் 50.6 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 52.3 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு பல்புடைக் கடன்களின் அதிகரித்த பெறுகைகள், வெளிநாட்டு நாணயத் தவணை நிதியிடல் வசதி அதேபோன்று ரூபாவின் தேய்வின் தாக்கம்

3 வதிவோரின் வசமுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகளின் உடமை மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் உடமையினை உள்ளடக்கி வெளிநின்ற வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவினால் வைத்திருக்கப்பட்ட வெளிநின்ற அரச படுகடன்கள்

4 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்தினால் செலவிடப்பட்ட அரச நிதி புள்ளிவிபரவியல் கைநூலிலுள்ள அரச படுகடன் புள்ளிவிபரவியல் தொகுப்பின் வழிகாட்டலிலுள்ளவாறு மத்திய அரச படுகடனின் வதியாதோர் உடமைகள் வெளிநாட்டுப் படுகடனாக வகைப்படுத்தப்படுகிறது.

வரைபடம் 6.7
மத்திய அரசின் வெளிநின்ற உள்நாட்டு படுகடனின் உள்ளமைப்பு - 2021இன் இறுதியில் உள்ளவாறு



அட்டவணை 6.5
மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (ஆண்டு முடிவில் உள்ளவாறு)

ரூ. மில்லியன்

விடயம்	2018	2019 (அ)(ஆ)	2020 (அ)(ஆ)	2021 (அ)(ஆ)
வெளிநின்ற மத்திய அரச படுகடன்	12,030,548	13,031,543	15,117,247	17,589,373
உள்நாட்டு படுகடன் (ச)	6,071,001	6,830,260	9,065,068	11,097,223
முதிர்வு காலத்தின்படி				
குறுங்காலம்	1,134,553	1,270,374	2,197,594	3,139,794
நடுத்தர மற்றும் நீண்டகால	4,936,447	5,559,887	6,867,473	7,957,430
நிறுவனங்களின்படி (உ)				
வங்கி	2,321,802	2,887,739	4,731,652	5,467,126
வங்கியல்லா	3,749,199	3,942,521	4,333,416	5,630,097
வெளிநாட்டு படுகடன்	5,959,547	6,201,283	6,052,179	6,492,150
வகைகளின் படி				
சலுகைக் கடன்கள்	2,705,836	2,767,459	2,988,113	3,097,585
சலுகையல்லா கடன்கள்	3,253,711	3,433,824	3,064,066	3,394,565
பல்பக்க	58,586	112,943	156,252	324,112
இருபக்க	209,970	198,733	184,051	171,327
வர்த்தக	2,985,156	3,122,148	2,723,763	2,899,126
நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்	2,220,411	2,531,493	2,203,279	2,243,049
வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதி	330,174	242,191	279,612	445,521
திறைச்சேரி உண்டியல்கள் மீதான வதியாதோர் முதலீடுகள்	11,909	23,727	670	204
திறைச்சேரி முறிகள் மீதான வதியாதோர் முதலீடுகள்	146,914	80,294	6,204	1,710
ஏனையவை	275,747	244,444	233,997	208,643
நாணயங்களின்படி				
சி.எ.உ.	954,761	927,372	970,714	986,072
ஐ.அ.டொலர்	3,781,626	4,076,588	3,875,950	4,275,471
யப்பானிய யென்	622,852	624,956	664,291	623,206
யூரோ	225,831	228,713	251,406	240,521
ஏனையவை	374,477	343,653	289,818	366,880
வெளிநின்ற மத்திய அரசாங்கம் படுகடன் / மொ.உ.உ. (ஊ)	84.2	86.9	100.6	104.6
ஞாபகார்த்த விடயங்கள்				
மொத்த நாணயமாற்று வீத வேறுபாடுகள் மீதான	1,063,218	12,401	355,663	500,206
வெளிநாட்டுப் படுகடன்	963,181	16,857	329,895	474,322
வெளிநாட்டு நாணயவடிவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப்படுகடன்	100,037	-4,456	25,767	25,884

(அ) 2014 சர்வதேச நாணய நிதியத்தால் அரச நிதி புள்ளிவிபரங்களுக்கான கையேட்டில் அரசாங்கம் படுகடன் புள்ளிவிபரங்களை தொகுத்தல் தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைய வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவிலுள்ள வதியாதோர் வசமுள்ள வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளிநாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் உள்ள இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பில் வதியோர் வசமுள்ளவை உள்நாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானது

(இ) திருத்தப்பட்டது

(ச) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இல் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போதைய வெளிநின்ற பெறுமதியானது ரூ. 56,662 மில்லியன் பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேரி முறிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(உ) வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் வசமுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான சீராக்கங்களின் காரணமாக 2017இலிருந்து வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா தொழில் துறைகளின் வசமுள்ள உள்நாட்டு படுகடனின் உள்ளமைப்பானது திருத்தப்பட்டது.

(ஊ) 2019 மற்றும் 2020 இற்கான தரவுகளுக்கு 2022 மார்ச் 29ஆம் நாளன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

என்பன காரணங்களாக அமைந்தன. பெயரளவு நியதிகளில், சலுகையல்லா படுகடன் இருப்பின் வெளிநின்ற நிலுவை 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3,064.1 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.3,394.6 பில்லியனுக்க 10.8 சதவீதத்தினால் அதிகரித்தது. வதியும் (ஐ.அ.டொலர் 371.3 மில்லியன் மற்றும் வதிவற்ற முதலீட்டாளர்கள் (ஐ.அ.டொலர் 628.7 மில்லியன்) இருவருக்குமான ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் பெறுமதியான நாட்டிற்கான பன்னாட்டு முறியின் மீள்கொடுப்பனவுகளுக்கு மத்தியிலும் வதிவற்றோரினால் வைத்திருக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறியின் ரூபாப் பெறுமதி ரூ.39.8 பில்லியனால் அதிகரித்தமைக்கு ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையே காரணமாகும். அதேவேளை, மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பின் சலுகை ரீதியான படுகடனின் பங்கு 2020 இறுதியில் அறிவிக்கப்பட்ட 49.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 47.7 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்திருப்பினும் 2021ஆம் ஆண்டின் இறுதியில் வெளிநின்ற சலுகை ரீதியான படுகடன் ரூ.3,097.6 பில்லியனுக்கு ரூ.109.5 பில்லியனால் அதிகரித்திருந்தது.

வரைபடம் 6.8
மத்திய அரசின் வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் உள்ளமைப்பு - 2021இன் இறுதியில் உள்ளவாறு



மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 6.9
மத்திய அரசின் மொத்த வெளிநின்ற படுகடனின் நாணய உள்ளமைப்பு - 2021இன் இறுதியில் உள்ளவாறு



2020 இறுதியில் ஐ.அ.டொலர் 38,492.7 மில்லியனாக அமைந்திருந்த வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற படுகடன் 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 37,206.1 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. படுகடன் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் காரணமாக ஏற்பட்ட சமப்பெறுமதி வேறுபாடுகளினால் வெளிநாட்டு நாணயப் படுகடனின் ரூபாய்ப் பெறுமதி 2021 இறுதியில் ஏறத்தாழ ரூ.500.2 பில்லியனால் அதிகரித்தது. வெளிநின்ற வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்கள் வெளிநாட்டு நாணயத் தவணை நிதியிடல் வசதி மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறி என்பன தொடர்பான சமப்பெறுமதி வேறுபாடு ரூ.474.3 பில்லியனாக விளங்கிய வேளையில் வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறி மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு என்பன தொடர்பான சமப்பெறுமதி வேறுபாடு ரூ.25.9 பில்லியனாகக் காணப்பட்டது. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலைப் பயன்படுத்தித் தீர்க்கப்பட்டிருக்குமாயின் சமப்பெறுமதி காரணமாக ரூபா நியதிகளில் வெளிநின்ற படுகடன் இருப்பில் ஏற்பட்ட பெயரளவு அதிகரிப்பின் தாக்கம் அதிகளவானதாக இருக்காது. எனினும், அரசாங்கத்திற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் கணிசமானளவு ரூபா நிதியம் பயன்படுத்தப்படுவதும் அரச கடன்பாட்டுத் தேவைப்பாடுகளில் ஏற்படும் அதிகரிப்பினை வங்கித்தொழில் துறையினூடாக நிதியிடுவதும் தொடர்ந்தும் கரிசனைக்குரியதாகவே காணப்படுகிறது.

இலங்கையின் மத்திய அரச படுகடன் கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் குழப்பமானதொரு மட்டத்திற்கு உயர்வடைந்து தொடர்ச்சியான இறைப் பற்றாக்குறைகளின் தாக்கம் சலுகை ரீதியான நிதியிடலை அணுகுவது கட்டுப்படுத்தப்பட்டிருப்பது மற்றும் வட்டி வீத மற்றும் செலாவணி வீத அசைவுகளினால் தூண்டப்பட்ட மோசமான தாக்கங்கள் என்பனவற்றைப் பிரதிபலித்திருந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடன் 2020இன் 40.3 சதவீதத்திலிருந்து 2021இல் 38.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதும், அண்மிய காலத்தில் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுடன் தொடர்பான இடர்நேர்வுகள் உயர்வடைந்தமைக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று அதேபோன்று சாதகமற்ற நாட்டிற்கான கொடுகடன் தரமிடல் குறைக்கப்பட்டமை என்பனவற்றின் தூண்டுதலினால் சவால்மிக்க உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் அதேபோன்று பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகள் என்பனவற்றின் பின்னணியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியுற்றமையே காரணமாகும். நம்பகமான நிறுத்திகளின் கீழ் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களின் மூலம் பெருமளவிற்கு அதிகரிக்கப்பட்டாலொழிய, ஆண்டுதோறும் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை 2022 இலிருந்து சராசரியாக ஐ.அ.டொலர் 5 பில்லியனுக்கு மேல் செலுத்தப்பட வேண்டியிருப்பது இலங்கைக்கு கடுமையான சவால்மிக்க பணியாகவே இருக்கும். படுகடன் சொத்துப்பட்டியல் மீளப்பட்டியற்படுத்துவதுடன் சேர்த்து முன்மதியுடைய இறைக் கொள்கை வழிமுறைகளும் மூலவளங்களைப் பெருக்குவதும் உடனடியாகத் தேவையாக இருக்கிறது. அதேவேளை, படுகடன் மேலும் ஒன்றுசேர்வதனைத் தவிர்ப்பதற்கு வட்டிக் கொடுப்பனவுகள் மூலதன மயப்படுத்தப்படாமல் படுகடன் மீள்நிதியிடலை முக்கியமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயப் படுகடன் இரண்டினையும் மீள்கொடுப்பனவு செய்வதற்குப் பயன்படுத்தும் விதத்தில் அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமையளித்தல் வேண்டும். அண்மிய காலத்தில் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளைப் பூர்த்திசெய்வதற்கு வெளிநாட்டு நாணயப் படுகடனைத் திரட்ட வேண்டியிருக்கின்ற போதும், படுகடனை உருவாக்காத உட்பாய்ச்சல்கள் நடைமுறையிலிருக்கும் சந்தர்ப்பத்தில், நடுத்தர காலத்தில் மேலும், கடன்பாடுகளை பெறுவது படிப்படியாக குறைக்கப்பட வேண்டியிருக்கின்ற வேளையில், மூலவளங்களின் கிடைப்பனவுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறையிலிருந்து தோன்றுகின்ற புதிய

நிதியிடல் தேவைப்பாடுகளுடன் இணைக்கப்படுகின்றன. உயர்வடைந்துவரும் படுகடனுடன் தொடர்பான பாதிக்கப்படும் தன்மைகளைக் கவனத்திற்கொள்கையில், படுகடனை உறுதிப்படுத்துவதனை நோக்கிய காத்திரமான படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கு வழிகாட்டுவதற்குத் தேவையான திருத்தங்களுடன் நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் ஆற்றல் வாய்ந்த பொறுப்பு முகாமைத்துவ நடைமுறைகள் நாட்டிற்கு தேவைப்படுகின்றன. நீண்டகாலத்தில் படுகடன் பணிக் கொடுப்பனவுகளை சீர்ப்படுத்துவதன் ஊடாக அண்மிய காலத்தில் படுகடன் சுமையை குறைப்பதற்கு படுகடன் மீள்கட்டமைப்பு தொடர்பான தற்போதைய முயற்சிகள் மிகவும் அவசியாமானதாகும். அதேநேரம், மீண்டெழும் செலவினத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் நடைமுறைக் கணக்கிலுள்ள பற்றாக்குறையினைக் குறைக்கின்ற வேளையில் நம்பகத்தன்மை, நிலையான கடப்பாடுகளுடன் அரசிறைத் திரட்சியை வலுப்படுத்திக் கொள்வது நடுத்தர காலத்தில் ஆரம்ப மீதியில் மிகையினைப் பதிவுசெய்வதற்கு மிக முக்கியமானதாக காணப்படுவதுடன் அதன் ஊடாக மூலம் அரச படுகடனின் உறுதித்தன்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.

மத்திய அரசாங்கத்தின் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

உண்மை நியதிகளில், படுகடன் தீர்ப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் இரண்டிலும் ஏற்பட்ட உயர்வுடன் மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இல்

அட்டவணை 6.6
மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

ரூ.மில்லியன்

விடயம்	2018	2019	2020	2021 (அ)
படுகடன் பணிக் கொடுப்பனவுகள்	2,088,551	2,022,507	1,941,373	2,375,599
உள்நாடு	1,561,363	1,213,698	1,169,522	1,590,131
வெளிநாடு	527,188	808,809	771,851	785,468
கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள்	1,236,361	1,121,155	961,071	1,327,216
உள்நாடு	921,881	546,315	455,899	795,498
வெளிநாடு	314,480	574,839	505,172	531,718
வட்டிக் கொடுப்பனவுகள்	852,190	901,353	980,302	1,048,383
உள்நாடு	639,482	667,383	713,623	794,633
குறுங்காலம்	74,525	81,029	77,965	98,694
நடுத்தர மற்றும் நீண்டகாலம்	564,957	586,354	635,658	695,939
வெளிநாடு	212,708	233,970	266,679	253,750

(அ) தற்காலிகமானது

மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 6.10
மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
(மொ.உ.உ.இன் சதவீதமாக)



மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

ரூ.2,375.6 பில்லியனுக்கு 22.4 சதவீதத்தினால் அதிகரித்தன. உள்நாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள் அதாவது கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இல் ரூ.795.5 பில்லியனுக்கு 74.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு திறைசேரி முறிகள் மற்றும் இலங்கைக்கான அபிவிருத்தி முறிகளின் முதிர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள் 2021இல் ரூ.531.7 பில்லியன் ஒதுக்கு 5.3 சதவீதத்தினால் அதிகரித்தமை முக்கியமாக, 2021 யூலையில் முதிர்ச்சியடைந்த ரூ.199.9 பில்லியன் (ஐ.அ.டொலர் 1 பில்லியன்) பெறுமதியான நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவுகள், இவ்வாண்டுப்பகுதியில் இடம்பெற்ற ரூ.330.6 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணயத் தவணை நிதியிடல் வசதியின் மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றை முக்கியமாகப் பிரதிபலித்தன. இதன்விளைவாக, மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் 55.9 சதவீதத்திற்கு வகைகூறும் மொத்தக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் ரூ.961.1 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.1,327.2 பில்லியனுக்கு 38.1 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, மத்திய அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2021 ரூ.1,048.4 பில்லியனுக்கு 6.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டில் வெளிநின்ற படுகடன் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளே காரணமாகும்.

வெளிநாட்டு நிதியிடலுக்கான அணுகுவசதி மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, உள்நாட்டு வட்டி வீதங்களில் குறிப்பாக, 2021இன் பின்னரைப் பகுதியில் ஏற்பட்ட உயர்வு என்பனவற்றிற்கு மத்தியிலும் மத்திய அரசின் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2021இல் ரூ.794.6 பில்லியனுக்கு 11.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் உள்நாட்டுக் கடன்பாடுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே காரணமாகும். நாட்டிற்கான பன்னாட்டு முறிகள், வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதி மற்றும் செயற்றிட்டக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.266.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.253.8 பில்லியனுக்குக் குறைவடைந்தன. ஒட்டுமொத்தமாக, உள்நாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ.1,590.1 பில்லியனுக்கு 36.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.785.5 பில்லியனுக்கு 1.8 சதவீதத்தினால் அதிகரித்தன.

குவிகின்ற படுகடன் இருப்பு மற்றும் அதன் விளைவாக ஏற்படும் உயர்ந்த வட்டி வீதக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் காரணமாக படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுடன் தொடர்பான முக்கிய குறிகாட்டிகள்

அட்டவணை 6.7
மத்திய அரசின் படுகடன் குறிகாட்டிகள்

சதவீதம்

குறிகாட்டிகள்	2018	2019 (அ)	2020(அ)	2021 (ஆ)
மத்திய அரச படுகடன்/மொ.உ.உ	84.2	86.9	100.6	104.6
உள்நாட்டு படுகடன்/மொ.உ.உ (இ)	42.5	45.5	60.3	66.0
வெளிநாட்டு படுகடன்/மொ.உ.உ	41.7	41.3	40.3	38.6
உள்நாட்டு படுகடன்/ மத்திய அரச படுகடன்	50.5	52.4	60.0	63.1
வெளிநாட்டு படுகடன்/ மத்திய அரச படுகடன்	49.5	47.6	40.0	36.9
வெளிநாட்டு படுகடன்/ஏற்றுமதிகள் (ஈ)	181.0	178.6	250.2	217.8
படுகடன் பணிகள்/மொ.உ.உ	14.6	13.5	12.9	14.1
படுகடன் பணிகள்/அரசிறை	108.8	107.0	141.9	163.0
இதில் உள்நாட்டு படுகடன் பணிகள்/அரசிறை	81.3	64.2	85.5	109.1
படுகடன் பணிகள்/அரச செலவினம் (உ)	53.1	45.4	48.5	49.0
இதில் உள்நாட்டு படுகடன் பணிகள்/அரச செலவினம் (உ)	39.7	27.2	29.2	32.8
வெளிநாட்டு படுகடன் பணிகள்/ஏற்றுமதிகள் (ஈ)	16.0	23.3	31.9	26.4
வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ	6.0	6.0	6.5	6.2
வட்டிச் செலுத்தல்கள்/அரச செலவினம் (உ)	21.7	20.2	24.5	21.6
உள்நாட்டு வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ	4.5	4.5	4.7	4.7
வெளிநாட்டு வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ	1.5	1.6	1.8	1.5
வட்டிச் செலுத்தல்கள்/அரச மீண்டெழும் செலவினம்	40.8	37.2	38.5	38.2
வெளிநாட்டு வட்டிச் செலுத்தல்கள்/ ஏற்றுமதிகள் (ஈ)	6.5	6.7	11.0	8.5

(அ) 2019 மற்றும் 2020 இற்கான தரவுகளுக்கு 2022 மார்ச் 29ஆம் நாளன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(ஆ) தற்காலிகமானது
(இ) 2012இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இல் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போதைய வெளிநின்ற பெறுமதியானது ரூ. 56,662 மில்லியன் பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேரி முறிகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.
(ஈ) பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்
(உ) அரச செலவினம் கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்றது.

மூலங்கள்: நிதி அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2021இல் உயர்வடைந்தன. மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 12.9 சதவீதத்திலிருந்து 2021இல் மொ.உ.உற்பத்தியின் 14.1 சதவீதத்திற்கு அதிகரித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடன் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2020இன் 3.0 சதவீதத்திலிருந்து 2021இல் 4.7 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடனுக்கான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2020இன் 3.4 சதவீதத்திலிருந்து 2021இல் 3.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் 2020இன் 6.5 சதவீதத்திலிருந்து 2021இல் 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2021இல் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் பெரும்பாலும் 4.7 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்ட வேளையில் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதத்திலிருந்து 2021இல் மொ.உ.உற்பத்தியின் 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, அரச அரசிறைக்கான மத்திய அரச படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் விகிதம் 2020இன் 141.9 சதவீதத்திலிருந்து 2021இல் 163.0 சதவீதத்திற்கு தேய்வடைந்து அரசாங்கத்தின் மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு அரச அரசிறையினை கணிசமானளவிற்கு விஞ்சியமையினால் அரச படுகடன் சுமையின் பாரதூரத்தன்மையினை கோடிட்டுக் காட்டுகிறது. மேலும், பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிக்கான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் விகிதம் 2020இன் 31.9 சதவீதத்திலிருந்து 2021இல் 26.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, 2021இல் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியில் ஏற்பட்ட உறுதியான வளர்ச்சியே காரணமாகும்.

வெளிநின்ற அரச படுகடன்

வெளிநின்ற மத்திய அரச படுகடன் இருப்பு, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்கள் மற்றும் அரச உத்தரவாதப் படுகடன் என்பனவற்றை உள்ளடக்கிய வெளிநின்ற அரச படுகடன் இருப்பு 2021இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு மத்திய அரச படுகடன் இருப்பில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாகும்.

அட்டவணை 6.8
வெளிநின்ற பொதுப் படுகடன் (ஆண்டிறுதியில் உள்ளவாறு)

விடயம்	2018	2019	2020	2021 (அ)
		ரூ.மில்லியன்		
மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநின்ற படுகடன் (ஆ)	**12,030,548**	**13,031,543**	**15,117,247**	**17,589,373**
பொது உத்தரவாதமின்றி அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்றிட்ட கடன்கள்	**366,130**	**345,453**	**323,510**	**311,191**
வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள்	24,964	22,317	22,189	21,833
இலங்கை மின்சாரசபை	168,649	150,418	136,720	128,026
இலங்கை துறைமுக அதிகாரசபை	172,517	172,717	164,602	161,332
பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் (இ) (ஈ)	**781,741**	**778,305**	**986,391**	**1,506,743**
வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள்	10,829	16,532	34,801	115,332
இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி	வி.கி.	வி.கி.	வி.கி.	36,540
இலங்கை மின்சாரசபை	21,376	25,212	70,559	89,311
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	333,869	297,220	345,500	561,267
வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்	13,098	12,613	12,505	12,263
ஜெனரல் சேர் ஜேன் கொத்தவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்	36,843	35,311	35,562	35,738
வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி	11,000	5,398	9,692	13,899
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	85,541	102,339	138,180	200,851
நெல் சந்தைப்படுத்தல் சபை	11,436	11,420	2,023	1,313
வீதி அபிவிருத்தி அதிகார சபை	189,022	206,563	262,015	349,895
வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயர்லைன்ஸ்	31,981	32,083	43,530	60,336
ஏனைய கூட்டுத்தாபனங்கள்	36,746	33,615	32,023	29,998
பொதுப்படுகடன்	**13,178,418**	**14,155,301**	**16,427,148**	**19,407,307**
		மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக (உ)		
மொத்த வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடன் (ஆ)	84.2	86.9	100.6	104.6
பொது உத்தரவாதமின்றி அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்றிட்டக் கடன்கள்	2.6	2.3	2.2	1.9
பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் (இ)(ஈ)	5.5	5.2	6.6	9.0
பொதுப் படுகடன்	**92.2**	**94.4**	**109.4**	**115.5**

(அ) தற்காலிகமானது

(ஆ) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேரி முறிகளை உள்ளடக்குவதுடன் இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இல் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போதைய வெளிநின்ற பெறுமதியானது ரூ.56,662 மில்லியனாகும்.

(இ) நிதியல்லா பொதுக் கூட்டுத்தாபனங்களை மட்டும் உள்ளடக்கியுள்ளது.

(ஈ) 2014 யூனில் சிறிலங்கன் எயார்லைன்சினால் வெளியிடப்பட்ட 175 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான பன்னாட்டு முறியினை உள்ளடக்கியுள்ளது. இது 2019 யூன் மாதத்தில் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் மேலும் 5 வருடங்களுக்காக மீண்டும் மீள்வெளியிடப்பட்டது.

(உ) 2019 மற்றும் 2020 இற்கான தரவுகளுக்கு 2022 மார்ச் 29இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மீள்திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, வெளிநின்ற அரச படுகடன் இருப்பு, 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 109.4 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 115.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. முழுமையான நியதிகளில், வெளிநின்ற பொதுப்படுகடன் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.16,427.1 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.19,407.3 பில்லியனுக்கு 18.1 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. மொத்த வெளிநின்ற மத்திய அரச படுகடன் இருப்பு வெளிநின்ற மொத்த அரச படுகடனின் 90.6 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, முழுமையான நியதிகளில், அரச உத்தரவாதப் படுகடன் 2020 இறுதியின் ரூ.986.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.1,506.7 பில்லியனை அடைந்து 52.8 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டியதுடன் மொத்த வெளிநின்ற அரச படுகடனில் 7.8 சதவீதத்திற்கு வகைகூறியது. மொத்த வெளிநின்ற அரச உத்தரவாதப் படுகடனில் 62.1 சதவீதம் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்டது. மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்களுடன் தொடர்பான வெளிநின்ற படுகடன் 2020 இறுதியின் ரூ.323.5 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.311.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினதும் இலங்கை மின்சபையினதும் வெளிநின்ற கடன்களின் மீள்கொடுப்பனவுகள் முறையே 2.0 சதவீதம் மற்றும் 6.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. 2021 இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பனவற்றின் வெளிநின்ற அரச உத்தரவாதப் படுகடன் முறையே 62.5 சதவீதம் மற்றும் 45.4 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்புக்களை எடுத்துக்காட்டியதுடன் 2020 உடன் ஒப்பிடுகையில் முறையே ரூ.561.3 பில்லியனையும் ரூ.200.9 பில்லியனையும் அடைந்தது. அதேவேளை, 2021 இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அரச உத்தரவாத படுகடன் இருப்பில் முக்கிய பங்கிற்கு வகைகூறியதுடன் முறையே 37.3 சதவீதம் மற்றும் 23.2 சதவீதப் பங்குகளைக் கொண்டிருந்தன.

சிறப்புக்குறிப்பு 7
வளர்ச்சிக்கு வசதியளிப்பவைகளாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள உபாயப்படுத்தல்

மிக நீண்ட காலமாக, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்[1] நாடுகளின் சமூக பொருளாதார அபிவிருத்திகளில் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றி வருகின்றன. சிங்கப்பூர், யப்பான், சீனா மற்றும் கொரியா போன்ற ஆசியாவிலுள்ள இணை நாடுகள் உட்பட பல நாடுகளில் கூட அரசிற்குச் சொந்தமான ஆரோக்கியமான தொழில்முயற்சிகள் தொழில்நிலை உருவாக்கம், வறுமையொழிப்பு, இறை உறுதிப்பாடு, துறையின் அல்லது புவியியல்சார் பிரதேசங்களின் அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு, என்பனவற்றிற்கு சார்ந்த ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு பாரிய பங்களிப்பு செய்துள்ளன.

அண்மிய தசாப்த காலப்பகுதியில் காணப்பட்டதுபோல் தனியார்மயமாக்கல் மற்றும் ஒழுங்குவிதிகளைத் தளர்த்தல் தொடர்பில் சாதகமான இணக்கப்பாடுகள் அதிகரித்து வருகின்ற போதும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வகிபாகம், குறிப்பாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் குறையவில்லை. இதற்கு முக்கியமான காரணம் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் குடித்தொகையினரின் ஒட்டுமொத்த நலனோம்புகை என்பன மீது உயர்ந்த தாக்கத்தினைக் கொண்டுள்ள இன்றியமையாத உட்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களுக்கான பணிகளைத் தொடர்ந்தும் வழங்குகின்றவைகளாக இருப்பதேயாகும். எனினும், அபிவிருத்தியடைந்துவரும் உலகில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் குறைந்த உற்பத்தித்திறனால் பாதிக்கப்படுவதுடன் இவை போட்டித்தன்மையினை உருகுலச்செய்வதுடன் சரிவரக் கொண்டிராததுடன் ஊழல் தன்மையினால் பாதிக்கப்பட்டும் வருகின்றன. இதன் விளைவாக இவை வரவுசெலவுத் திட்டத்தின் மீதும் அரசாங்கத்தின் மீதும் குறிப்பிடத்தக்களவு சுமையினைத் தோற்றுவித்து வருவதுடன் சில விடயங்களைப் பொறுத்தவரை இறை மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் இட்டுச் செல்கின்றன. இப்பின்னணியில், இலங்கை அதன் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றம் தொடர்பில் தொடர்ந்தும் விழிப்புடன் இருப்பது அவசியமானதாகும்.

இலங்கையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பரிணாம வளர்ச்சி

இலங்கையில் அரச துறை தொழில்முயற்சிகளின் அபிவிருத்தியின் தொடக்கம் இரண்டாம் உலகப் போர் காலப்பகுதியான 1939 - 1945 இற்கு முன்னர் இருந்தே ஆரம்பமாகின்றது. இந்த போர்க் காலப்பகுதியில் நிரம்பல் கட்டுப்படுத்தப்பட்டிருந்த இன்றியமையாத பொருட்களை வழங்குவதற்காக அரசிற்குச் சொந்தமான பல தொழில்முயற்சிகள் நிறுவப்பட்டன. 1950 களின் நடுப்பகுதியில் சோவியத் ஒன்றியத்தில் சோசலிசம் வெற்றிபெற்றமையின் காரணமாக, இதே காலப்பகுதியில் சோசலிச மாதிரிகளை இந்தியாவிலும் பின்பற்றுவதற்கான முயற்சிகள் காணப்பட்டதனால் சோசலிசம் மீதான ஆர்வம் அதிகரித்தது. இதற்கமைய, அக்காலப்பகுதியில் இருந்த அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திக்கு மத்திய திட்டமிடல் அவசியமானது எனக் கருதியது.

இக்காலப்பகுதியில், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அபிவிருத்திச் செயன்முறையின் ஊக்கியாக இரண்டு முக்கிய சட்டவாக்கங்கள் காணப்பட்டன. அதாவது முறையே 1955ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க அரச உபசரணை கூட்டுத்தாபனங்கள் சட்டம் மற்றையது 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டம். முன்னையது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவரும் கைத்தொழில்களைக் கூட்டிணைக்க முயற்சித்த வேளையில், பின்னையது எந்தவொரு கைத்தொழில் நடவடிக்கையினையும் ஏற்படுத்தவும் கொண்டு நடத்தவும் அரசாங்கத்திற்கு வலுவளித்தது. 1957ற்குள் சிமெந்து, காகிதம், மட்பாண்டம், தோல் மற்றும் காலணி என்பனவற்றை உள்ளடக்கிய பல முக்கியமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொழிற்பாடுகளைத் தொடங்கின. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற இன்னொரு அபிவிருத்தி யாதெனில் 1958இல் இலங்கை போக்குவரத்துச் சபை உருவாவதற்கு வழியமைத்த பேருந்துக் கம்பனிகள் தேசியமயமாக்கப்பட்டமையாகும்.

1959இல் பத்தாண்டு திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கலை வலியுறுத்தியது. இத்திட்டம் முழுமையாக தொழிற்படுத்தப்படாத போதும் அடுத்து வந்த ஆண்டுகளின் பொருளாதாரக் கொள்கைகளை பாரியளவில் வழிநடத்தியது.இதற்கமைய, சிமெந்து, உருக்கு, காகிதம், டயர், கனிப்பொருள் மணல், உப்பு, மாவாலை, ஒட்டுப்பலகை, பெற்றோலிய சுத்திகரிப்பு மற்றும் வளமாக்கி போன்ற "அடிப்படைக் கைத்தொழில்களை" அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், அரசாங்கத்தின் ஈடுபாட்டிற்குரிய காலணி, மட்பாண்டம், புடவைகள் மற்றும் தோல் உற்பத்திகள் போன்ற சில துறைகள் தனியார் தொழில்முயற்சிகளின் பங்கேற்பிற்காகவும் அனுமதிக்கப்பட்டன. இவ்வுள்முகம் நோக்கிய அபிவிருத்தி உபாயம் சென்மதி நிலுவையில் காணப்பட்ட விடாப்பிடியான பற்றாக்குறையினால் தேவைப்படுத்தப்பட்டதுடன் 1960 இலிருந்து கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தும் நிலையினைத் தோற்றுவித்தது.

புதிய தொழில்முயற்சிகளை நிறுவுதல் மற்றும் தொடர்ச்சியான தேசிய மயமாக்கல் மற்றும் தனியார் முயற்சிகளின் கையகப்படுத்துகை இரண்டினூடாகவும் அரச துறையில் பல

1 அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சி என்பதற்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கம் எதுவும் கிடையாது. (ஐரோப்பிய ஆணைக்குழு, 2013, ப.நா.நிதியம் 2014, ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு, 2015). எனினும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சில பண்புகள் வருமாறு (1) அதன் சொந்த, தனியான சட்ட ஆளுமைத் தன்மையினைக் கொண்ட நிறுவனம் (2) அரச பிரிவினால் குறைந்தபட்சம் பகுதியளவில் கட்டுப்படுத்தப்படும் நிறுவனம் மற்றும் (3) வர்த்தக ரீதியாக அல்லது பொருளாதார நடவடிக்கைகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ள நிறுவனம் (ப.நா.நிதியம் 2020) அரச நிதியியல் புள்ளிவிபரவியல் கைநூல் 2014 (ப.நா.நிதியம் 2014) ஏதேனும் நியாயப்படுத்தல்களில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் அரச கட்டுப்பாடுகளை மதிப்பிடுவது எனக் குறிப்பிடுகிறது. இதற்கமைய, அரசாங்கம் சிறியளவு எண்ணிக்கையான பங்குகளை மாத்திரம் சொந்தமாகக் கொண்டுள்ள வேளையிலும்கூட கம்பனித் தீர்மானங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினை அரசு புரியக்கூடும்.

தனியுரிமைகள் ஏற்படுத்தப்பட்டமை உட்பட தன்நிறைவினை நோக்கிய புதிய வழிமுறைகள் 1970களில் உருவாக்கப்பட்டன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உருவாக்கம் என்பது நலம் பயக்கிறதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது ஏனெனில், இவை இயல்பான தனியுரிமைகளாக இருப்பதனால் தனியார் துறை தொழிற்பாட்டாளர்களினால் வழங்கக்கூடியதிலும் பார்க்கக் குறைவான விலையில் சேவைகளையும் உற்பத்திகளையும் வழங்குவார்கள் என்றும் இவை முழுச் சந்தையின் கேள்வியையும் பூர்த்திசெய்யக்கூடியனவாகவும், சில வேளை ஏற்றுமதி உள்ளாற்றல் கொண்டவையாகவும் இருப்பார்கள் என்பதனாலாகும். இதற்கமைய, அடுத்துவந்த ஆண்டுகளில் துறைமுகப் பணிகள், பயணிகள் போக்குவரத்து, பெருந்தோட்டம் போன்ற இன்னும் பல துறைகளில் ஈடுபட்டிருந்த தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. 1970களின் நடுப்பகுதியில், வங்கித்தொழில், பெருந்தோட்டங்கள், பாரியளவு கைத்தொழில்கள், போக்குவரத்து, காப்புறுதி, தொலைத்தொடர்பூட்டல், அஞ்சல் பணிகள், துறைமுகங்கள், மின்வலு, பெற்றோலியத்தின் இறக்குமதி மற்றும் விநியோகம், வீதிகள், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய பொருளாதாரச் சமூக நடவடிக்கைகள் ஒன்றில் அரச துறை தனியுரிமைகளாக அல்லது அரச தொழில்முயற்சிகளினால் பெருமளவிற்குப் பொறுப்பேற்கப்பட்டனவாக இருந்தன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை 1962இன் 14 இலிருந்து 1980களின் நடுப்பகுதியில் 280 இற்கு மேற்பட்ட தொழில்முயற்சிகளுக்கு அதிகரித்தன.

1980களின் நடுப்பகுதியில், அரச தொழில்முயற்சிகள் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர்நோக்கியமை ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு விடயமாக இருந்தது. இவை மோசமான நிதியியல் செயலாற்றத்திற்குக் காரணமாயமைந்த வினைத்திறனற்ற தொழிற்பாடு, உற்பத்திகள் மற்றும் சேவைகளின் மோசமான தரம் மற்றும் நிரம்பல் பற்றாக்குறை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உண்மையான தேவைப்பாடுகளிலும் பார்க்க அரசியல் காரணங்களினால் தூண்டப்பட்ட ஆட்சேர்ப்புக்கள், பாரிய முதலீட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் மூலவளங்களைத் திரட்ட முடியாத தன்மை மற்றும் அரச செலவுத்திட்டத்தின் மீது மிகையாகத் தங்கியிருக்கும் நிலை என்பனவற்றை உள்ளடக்கிக் காணப்பட்டன. வரவுசெலவுத் திட்டத்தின் மீது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வளர்ந்துவரும் சுமையுடன் பேரண்டப்பொருளாதார உறுதிப்படுத்தலுக்கான அவசரத் தேவைப்பாட்டினை பல்புடை கொடையாளி முகவர்கள் எடுத்துக்காட்டியது என்பது 1988இல் அரச கொள்கையொன்றாக தனியார் மயப்படுத்தலை அரசாங்கம் அறிவிப்பதனை விளைவித்தது. 1989இல் தொடங்கி 1993 வரையிலான காலப்பகுதியில் 43 வர்த்தக தொழில்முயற்சிகளின் பகுதியளவிலான அல்லது முழுமையான உரிமை நீக்க நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், இவ்வுரித்து நீக்க நிகழ்ச்சித்திட்டம் அதன் பின்னரான காலப்பகுதியில் பெருமளவு விமர்சனங்களுக்குள்ளானது. தனியார்மயப்படுத்தல் தொடர்பான இலங்கையின் அனுபவங்களைப் பார்க்கின்றபோது பொருளாதாரமும் ஆளுகை நிறுவனங்களும் எந்தளவிற்கு நலிவாகக் காணப்படுகின்றனவோ, அந்தளவிற்கு தனியார்மயப்படுத்தலின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கடினமாகயிருக்கும்.

இலங்கையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தற்போதைய நிலை

கடந்த மூன்று சதாப்த காலத்தில், தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தனியார் மயப்படுத்தலுக்கும் தேசிய மயமாக்கலுக்குமிடையிலான முயற்சிகளுக்கிடையில் மாறிவந்தன. தற்போது நானூறுக்கும் மேற்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், வலு, சக்தி, நிதி மற்றும் காப்புறுதி, நீர், விமானப் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கல்வி அத்துடன் இன்னும் பல விடயங்கள் உள்ளிட்ட முக்கியமான துறைகளில் செயற்படுகின்றன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் பெரும்பாலானவை 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் "நிருவகிப்பவர் பகுதி II" இன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுடன் அண்மைக் காலத்தில் பல நிறுவனங்கள் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் பொருளாதாரத்தின் தொழிற்பாடுகள் மற்றும் உருமாற்றத்திற்கு உபாயகர ரீதியல் முக்கியமானவை எனக் கருதப்படுவதனால் 52 அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகள் என (SOBEs) இனங்காணப்பட்டுள்ளன. ஏனையவையுடன், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை துறைமுக அதிகாரசபை, சிறிலங்கன் எயர்லைன்ஸ், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தேசிய மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், என்பவை இலங்கையில் அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகள் என்பவற்றிற்குள் உள்ளடங்கும்.

பொருளாதாரத்திலுள்ள உபாயம் மிக்க துறைகளில் இவை முக்கியமான வகிபாகத்தினைக் கொண்டுள்ளபோதும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மோசமான நிதியியல் செயலாற்றம் பாரிய இறைச் சுமையினைக் கொண்டனவாக மாறியுள்ளன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் இழப்புக்களை நிதியிடுவதற்கு அளவுக்கதிகமாக வங்கித்தொழில் முறையில் தங்கியிருப்பது செயற்றிறனான முதலீடுகளை இல்லாமல் செய்வது மட்டுமன்றி அவற்றின் பலயீனமான நிதியியல் செயலாற்றத்தின் காரணமாக நிதியியல் முறைமையின் மீது ஏய்துநிலையை ஏற்படுத்தியுள்ளது. அவற்றின் நிதியியல் இழப்புக்கள் அதிகரித்துச் செல்வது இன்றியமையாத பொருட்களுக்கும் பணிகளுக்குமான உள்நாட்டுக் கேள்வியை சுமுகமாகப் பூர்த்திசெய்வதற்கான அவற்றின் இயலாற்றலைக் குறைத்துவிடுவதனால் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடும் அச்சறுத்தலுக்குள்ளாகிறது. இந்த விடயத்தினை அங்கீகரித்து, அண்மைய ஆண்டுகளில், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளைச் சீரமைப்பதற்கு அரசாங்கம் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. இது தொடர்பிலான முக்கிய

சீர்த்திருத்தங்களாகத் தொடர்பான தொழில்முயற்சி, தொடர்பான அமைச்சு மற்றும் நிதி அமைச்சு என்பனவற்றினால் முக்கூட்டு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றாகக் கூட்டாண்மை எண்ணக்கூற்றின் அறிமுகமென்பதுடன் வர்த்தக ரீதியான சுதந்திரத்தினை வழங்குவதுடன அவற்றின் பொறுப்புக்கூறும் மட்டத்தினை அதிகரிக்கும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் அறிமுகமாகும். ஒரேவிதமான குறிக்கோள்களையும் ஒரேவிதமான பெறுமதிச் சங்கிலி மட்டத்தினையும் கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை "பொருளாதார அளவுச் சிக்கனத்தினை" அடையும் விதத்தில் அம்முயற்சிகளை ஒருங்கிணைத்தல் அல்லது இணைத்தல் தொடர்பான கொள்கைச் சீர்திருத்தங்களும் இனம் காணப்பட்டுள்ளன. மேலும், அரசாங்கம் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் காணப்படுவது போன்று 'உடமைக் கம்பனி' மாதிரிகளில் காணப்பட்ட வெற்றியினைக் கருத்திற்கொண்டு உயர் பெறுமதி கொண்ட உண்மைச் சொத்துக்களினை ஒன்றிணைப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் முழுமையாக அரசிற்குச் சொந்தமான செலன்டிவா இன்வெஸ்ட்மன்ட் லிமிடெட் இனை அரசாங்கம் அண்மையில் உருவாக்கியது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னைய பொருளாதாரத்தின் மீட்சிச் செய்முறைகளின் போது, பொருளாதாரத்தினை மிக அவசரமான முறையில் சீர்செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்தகைய சீர்திருத்தங்களை விரைவுபடுத்த வேண்டிய கடுமையானதொரு நிலைமை தோன்றியதுடன் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை வளர்ச்சிக்கு வசதியளிப்பவைகளாக உத்வேகமும் விரைவானதுமான முறையில் மாற்றியமைப்பதன் மீது கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. அவற்றின் வினைத்திறன், உற்பத்தியாக்கம் மற்றும் இலாபத்தன்மை என்பனவற்றை மேம்படுத்துவதும் இதன் மூலம் பொருளாதார மீட்சிச் செய்முறைக்கு அவை காத்திரமான விதத்திலும் நீடித்துநிலைத்திருக்கும் முறையிலும் அவற்றின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள அவற்றிற்கு வலுவூட்டுவதும் இன்றியமையாததாகக் காணப்படுகிறது. பரிசீலிக்கப்படக்கூடிய அத்தகைய சீர்திருத்தங்கள் கீழே ஆராயப்படுகின்றன.

முன்மொழியப்படும் முக்கியமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்கள்

அ. செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் கொள்கையினை அறிமுகப்படுத்தல்

அடிக்கடி அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் நிதியியல் நிலையேற்றுத்தன்மையை உறுதிசெய்யும் அதேவேளையில் அரசாங்கம் அதன் சமூகப் பொருளாதாரக் குறிக்கோள்களை எய்துகின்றது தொடர்பில் ஓர் நுணுக்கமான சமநிலையினை அடைய முயற்சிக்கவேண்டும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வர்த்தக ரீதியில் சில வேளைகளில் வர்த்தக ரீதியில் சாத்தியமற்று இருப்பினும் அத்தியாவசியமான பணிகளையும் உற்பத்திகளையும் வழங்குவதில் ஈடுபட்டிருக்கும் போது தோன்றக்கூடும் இவ்வகையிலான சவால் எழலாம். எடுத்துக்காட்டாக, கிராமப்புற சமூகத்தினருக்கு போக்குவரத்துப் பணிகளை வழங்குவதில் அல்லது மலைப்பாங்கான பிராந்தியங்கள் போன்ற சவால்நிறைந்த பிரதேசங்களில் மின்வலுவினை வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் 'இன்றியமையாதது' தன்மையுடன் காணப்பட்டபோதிலும் இப்பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கலை நிலைத்திருக்கூடிய விதத்திலும் தடங்கலின்றியும் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் பொறிமுறையினை நிறுவுதல் என்பது மிகவும் முன்னுரிமை வாய்ந்ததாகும்.

கடந்த அண்மைக் காலத்தில், செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில், குறிப்பாக, எரிபொருள் உற்பத்திகள், நீர் மற்றும் மின்வலு போன்ற பொது வசதிகள் போன்றவற்றிற்கு விலையிடுவது தொடர்பில் பெரும் இடர்ப்பாடுகளை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருந்தது. உலகளாவிய அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் எரிபொருள் உற்பத்திகளின் விலைகள் ஓர் குறுகிய காலப்பகுதியில் அடிக்கடி சீராக்கப்பட்டபோதிலும், 2019 செத்தெம்பருக்கும் 2021 யூனுக்குமிடையிலான காலப்பகுதியில் எந்தவிதமான விலைத் திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்குப் பின்னர் உயர்ந்துச் செல்லும் உலகளாவிய மசகெண்ணெய் விலைகளுக்கும் கடந்த பல ஆண்டுகளாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட இழப்புக்களையும் ஈடுசெய்யும் விதத்தில் மூன்று சுற்றுக்களில் மேல் நோக்கிய விலைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீர் மற்றும் மின்வலுவிற்கான தீர்வைகள் முறையே 2012 மற்றும் 2014 இற்குப் பின்னர் திருத்தப்படவில்லை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளில் தங்கியுள்ள தொழில்முயற்சிகளைப் பொறுத்தவரையில், உலகளாவிய பண்ட விலைகளுக்கேற்ப அவற்றின் விலைகளைக் கிரமமாகத் திருத்துவது அவசியமானது என்பதனை மீண்டும் வலியுறுத்துவது அவசியமாகும். எனவே, வெளிநாட்டு அதிர்வுகளினால் ஏற்படுகின்ற இழப்புக்கள் தொடர்பான இழப்புக்களை இத்தொழில் முய்றிகளினால் ஈர்த்துக் கொள்ள முடியுமென எதிர்பார்க்க முடியாதாகையால் நீண்ட காலமாக விலைகளையும் தீர்வைகளையும் மாற்றாமல் இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இதற்கமைய, இது தொடர்பில் வெளிப்படையானதும் அரசியல் மயப்படுத்தப்படாததுமான விலையிடல் விதி மிக அவசரமான தேவைப்பாடாகும். உதவுதொகை வழங்கப்பட்ட விலைகள் குறுகிய காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு சில நிதியியல் வசதிகளையும் இடைவெளியையும் வழங்குகின்ற வேளையில், செலவிற்கும் குறைவான விலையில் பொருட்களை வழங்குவதுடன் தொடர்புடைய செலவின சுமை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அத்தகைய விலைப் பிறழ்வுகளும் உதவுதொகை வழங்கப்பட்ட விலைகளின் காரணமாக மூலவளங்கள் தவறாக ஒதுக்கப்படுவதும் கணிசமான பேரண்ட பொருளாதாரச் செலவுகளை ஏற்படுத்தி அதன் மூலம், தற்பொழுது இடம்பெற்றுவரும் வலு மற்றும் சக்தி நெருக்கடிகளினால்

எடுத்துக்காட்டப்படுகின்றவாறு பொருளாதாரத்தில் வெல்ல முடியாத இடையூறுகளுக்கு இட்டுச்செல்வனவாகக் காணப்படுகின்றன. செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் பொறிமுறையானது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் குறைந்த செலவின் நன்மைகளை நுகர்வோருக்கு வெளிப்படையாகவும் சரியான நேரத்திலும் கீழ்மட்ட இலாபங்களுக்கு எவ்விதமான எதிர்க்கணியத் தாக்கங்களும் இல்லாமல் வழங்குவதனை உறுதிப்படுத்தும். அத்தகைய பொறிமுறையினால் பொருளாதாரம் முழுவதற்கும் நேர்க்கணியமாக தாக்கம் பரவிச்செல்லும் விதத்தில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் பெருமளவிற்கு உத்வேகப்படுத்த முடியும்.

ஆ. உபாய நெறிப்படுத்தல்களை மேம்படுத்தல்

அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியின் முதன்மைப் பணி குறுங்காலத்தில் வெறுமனே அரசாங்கத்திற்கான நிதியியல் வருவாயினை உருவாக்குவது மட்டுமன்றி, பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களுக்கும் அவற்றின் உற்பத்தியாக்க உள்ளார்ந்த வளத்தினையும் ஒட்டுமொத்த நலனோம்புகைகளையும் வசதிப்படுத்தி தரமுயர்த்துவதன் மூலம் உபாயம் மிக்க பெறுமானத்தினை வழங்குவதேயாகும். இதற்கமைய, இத்தொழில்முயற்சிகள் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த தொலைநோக்குடன் நன்கு இணைக்கப்பட்ட வெளிப்படையானதும் தெளிவானதுமான உபாயமொன்றினைக் கொண்டிருப்பது அத்தியாவசியமாகும். இது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான தெளிவான நோக்கத்தினையும் பணிகளையும் உறுதிப்படுத்தும்.

கடந்த அண்மைக்காலத்தில் காணப்பட்ட சான்றுகள், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் ஆர்வலர்களுக்கான பெறுமானங்களையும் தனித்துவமான வளர்ச்சியையும் உருவாக்குவதற்குப் போதுமான விதத்தில் மூலவளங்களை உயர்த்திக்கொள்ள முடியாதனவாக இருந்தமையினை எடுத்துக்காட்டின. இது, பொருளாதாரத்தில் தடைகளுக்குக் காரணமாகவுள்ள உபாயத்திட்டமிடலில் காணப்படும் பற்றாக்குறையான தன்மையினால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் உள்நாட்டு அபிவிருத்திகளிலிருந்து மட்டுமன்றி உலகளாவிய நிகழ்வுகளிலிருந்தும் தோன்றுகின்ற வாய்ப்புக்களையும் சவால்களையும் முன்கூட்டியே அடையாளம் கண்டு கட்டுப்படுத்துவதற்கு அடிக்கடி தவறியிருப்பதற்கு காரணமாகிறது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மோசமான உபாயத் திட்டமிடல்களுக்கு உலகளாவிய வலு மற்றும் உணவுப் பண்டத்தின் விலைகளில் ஏற்பட்ட மோசமான தன்மை மற்றும் இத்தளம்பல்களை இறுக்கக்கட்டிப் போடத்தக்க உத்வேகம் நிறைந்த தாங்கிருப்புக்களும் இல்லாத தன்மையின் காரணமாக பொருளாதாரம் அனுபவிக்கின்ற வழங்கல்பக்க அதிர்வுகள் இதற்குச் சான்றாகக் காணப்படுகின்றன.

வரைபடம் சிறப்புக்குறிப்பு 7.1
இலாபங்கள் மற்றும் இழப்புக்களின் ஒப்பீடு மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காக வங்கித்தொழில் துறையிலிருந்து பெறப்பட்ட கொடுகடன்



(அ) 31 மார்ச்சுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நிதியியல் செயலாற்றம். 2021இற்கான தரவுகள் 2022 மார்ச்சுடன் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்குமானது.
(ஆ) இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்படும் நாணயப் புள்ளிவிபரங்களின்படி

மூலம் : தொடர்பான நிறுவனங்கள், நிதிய அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி

ஆகவே, உபாய நெறிகளை மேம்படுத்துவதற்கு, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் தொழிற்பாடுகளை நுணுக்குமாக மதிப்பிடுவது முக்கியமானதாகும். உற்பத்திகள் அல்லது பணிகளின் முழுப் பெறுமதிச் சங்கிலியினையும் வெவ்வேறாகப் பிரித்துக்கொள்வது தொழில்முயற்சிகள் தாம் இயல்பான அனுகூலத்தினைக் கொண்டுள்ள துறைகளை மதிப்பீட்டுக் கொள்வதனை இயலுமைப்படுத்தும். ஆகவே, பிரிக்கப்பட்ட தனித்தனியான நடவடிக்கைகள் போன்றவற்றின்

மூலம் தனியார் துறை பங்கேற்புக்களுக்கு வசதியளிக்க முடியும். இதன்படி, தொழிற்பாட்டு வினைத்திறனின்மைகளை அரசாங்கத்தினாலோ அல்லது வாடிக்கையாளர்களினாலோ அல்லது தொடர்பான ஆர்வலர்களினாலோ தாங்கிகக் கொள்ளவேண்டியதில்லை.

இ. நிதியியல் வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் அதிகரித்தல்

அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வர்த்தக ரீதியற்ற குறிக்கோள்களை நிறைவேற்ற முயற்சிக்கின்றன வேளையில் போட்டித்தன்மை கொண்டனவாகவும் வர்த்தக ரீதியில் ஆற்றல்வாய்ந்தனவாகவும் இருக்க வேண்டிய அழுத்தத்திற்கு உட்படுவதனால், இது நிதியியல் செயலாற்றத்தை விட்டுக்கொடுக்கப்படுவதனை அவசியமாக்கலாம். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் சமூகக் கடப்பாடுகளை அவற்றின் வர்த்தக ரீதியான கடப்பாடுகளுடன் காத்திரமான விதத்தில் சமநிலைப்படுத்திக் கொள்கின்றனவா என்பதனைக் கண்டறிந்து கொள்வதற்கு பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை என்பனவற்றைக் கொண்ட கோட்பாடுகளை உள்ளடக்கிய ஆற்றல்வாய்ந்த செயலாற்றக் கண்காணிப்புக் கட்டமைப்பொன்றினை உருவாக்குவது முக்கியமானதாகும்.

இது தொடர்பில், மிக அவசியமாக தேவைப்படுகின்ற முக்கிய அம்சங்களிலொன்றாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பெறுபேறுகளை அளவிடுவதற்கும் மதிப்பிடுவதற்குமான முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளை அடையாளம் (Key Performance Indicators) இனங்காண்பதும் அபிவிருத்தி செய்வதுமாகும். அத்தகைய முதன்மைச் செயலாற்றக் குறிகாட்டிகள் நிதியியல் பெறுபேறுகளை மதிப்பீடு செய்கின்ற அதேவேளையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வெறுமனே அரசாங்கத்திற்கான இலாபத்தினை உருவாக்குகின்றனவாக இருப்பதன்றி அது பரந்தளவிலான நோக்கங்களைக் கொண்டிருப்பதனால் அது சமூக, மனித மற்றும் சூழல் மூலதனங்கள் மீதான தாக்கத்தினையும் பரிசீலனையில் கொள்வது முக்கியமானதாகும்.

வலியுறுத்தப்பட வேண்டிய இன்னொரு அம்சம் யாதெனில், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிப்படுத்துகைகளையும் வெளிப்படைத்தன்மையினையும் மேம்படுத்துவதாகும். இதன்படி, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் உயர்தரங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் உயர்தரக் கணக்கீடு, வெளிப்படுத்துகை, இணங்குவிப்பு, பட்டியலிடப்பட்ட கம்பனிகள் என்ற ரீதியில் கணக்காய்வு நியமங்கள் என்பனவற்றிற்கு உட்பட்டனவாக இருத்தல் வேண்டும். அநேகமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் ஆண்டு இறுதியில் நிதியியல் கூற்றுக்களை அல்லது வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை உரிய நேரத்தில் தயாரிப்பதில்லை. சில சமயங்களில் ஆண்டுக் கணக்கிலும் தாமதமாவது கரிசனைகளை ஏற்படுத்துவதாகவுள்ளது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிலையினை மதிப்பிடுவதற்காக நிதியியல் மற்றும் நிதியல்லாத தகவல்கள் மீதான வெளிப்படுத்துகைகளுடன் சரியான நேரத்தில் காலாந்தர அறிக்கையிடல்களையும் அவர்கள் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மையுடனும் பொருளாதார ரீதியாக நீடித்துநிலைத்திருக்கக்கூடிய விதத்தில் செயலாற்றுகின்றனவா என்பதனையும் உறுதிப்படுத்துவதற்குக் கடுமையான பொறிமுறையொன்று அவசியமானதாக இருக்கிறது.

ஈ. கம்பனி ஆளுகையினை வலுப்படுத்துதல்

இத்தொழில்முயற்சிகளின் வெற்றி என்பது தகுதிவாய்ந்த சபையொன்றின் வினைத்திறன் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ முகாமைத்துவத்தின் மீதே தங்கியுள்ளது. சபையானது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிருவாகத்திற்கும் செயலாற்றத்திற்கும் முழுப்பொறுப்புடன் இருப்பது அவசியமென்பதுடன் அரசின் தொழில்நோக்கத்திற்கு சாதகமான முறையில் உபாயத்தன்மையாக தொழில்முயற்சியை வழிகாட்டத்தக்க முழுத்தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும். இதன்மூலம் பொருளாதார முன்னேற்றத்தினை வழிகாட்ட வேண்டும். சபை தொடர்பில் காணப்படும் வினைத்திறனின்மைகள் உபாய நெறிமுறைகளில் போதுமானதற்ற தன்மையினை ஏற்படுத்தி, இலங்கையிலுள்ள சில அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் காணப்பட்டவாறு அரச மூலவளங்களின் மிக்பெரிய தவறான முகாமைத்துவத்திற்கு வழியமைக்கிறது.

சபைகளின் உள்ளமைப்பு கம்பனி ஆளுகையின் தரத்தில் மிகமுக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுகிறது. வலுவான பொறுப்புக்கூறும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு சபைக்கு தகுதிவாய்ந்த, அனுபவம்மிக்க, தொழில்சார் தகைமையுடைய தனிப்பட்டவர்கள் நியமிக்கப்படுவதனை அரசாங்கம் ஊக்குவித்தல் வேண்டும். நியமனங்கள் நிலையான காலப்பகுதிக்கு அடிப்படையிலானதாக தேர்தல் சுழற்சிகளிலிருந்தும் சுயாதீனமானதாக இருத்தல் வேண்டும்.இது தற்காலிகமான தீர்வுகளின் நடைமுறைப்படுத்தல்களிலும் பார்க்க, நடுத்தர காலத்தில் மாற்றங்களைச் செய்வதற்குப் பொருத்தமான நன்மைபயக்கக்கூடிய உபாயத்திட்டமிடல்களை உறுதிப்படுத்தும்.

சபைகளும் மூத்த முகாமைத்துத்தினரும் நேர்மையுடனும் சுறுசுறுப்புடனும் பணியாற்றுவதும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட வளங்கள் இறுதியாக பொதுமக்களுடையவை என்பதனை மனதில் கொண்டும் தீவிரமான கவனத்துடன் செயற்படுவதும் மிக முக்கியமானதாகும். கம்பனி ஆளுகையின் மீது அண்மையில் நிதியமைச்சினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களும் 2021 இறுதிப்பகுதியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காக வெளியிடப்பட்ட தொழிற்பாட்டு கைநூலும் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகவுள்ளன. அனைத்து அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் இவ்வழிகாட்டல்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் தொழிற்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நிதியமைச்சின் உத்வேகம்மிக்க கண்காணிப்பு இந்நிறுவனங்களினை மாற்றியமைக்கின்ற ஊக்கியாக விளங்கமுடியும். வழிகாட்டல்களை கிரமமாக மீளாய்வு செய்வதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கம்பனி ஆளுகை நியமங்களை சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன்

இசைந்துசெல்லும் விதத்தில் அணிப்படுத்துவதும் அவசியமாகும்.

அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மேலும் செயற்றிறனாக செயற்படுவதற்கு, மூலதனத்திற்கான நுழைவினை மேம்படுத்துவதற்கு மற்றும் திறமையற்ற செயலாண்மைக்கு எதிராக பாதுகாப்பதுடன் இடர்நேர்வினையையும் மட்டுப்படுத்த நல்ல கம்பனி ஆளுகை உதவும். ஆளுகை சீரமைப்புக்களை மேற்கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு பல நேரடியான நன்மைகள் உண்டு என்பதனை ஆராய்ச்சி முடிவுகள் எடுத்துக்காட்டுகிறன. தொழிற்பாட்டுச் செயலாற்றத்தின் மேம்பாடு, உள்நாட்டு மற்றும் வெளிநாடு மூலதன சந்தைகள் மூலம் மாறுபட்ட நிதியிடல் மூலங்களுக்கான அதிகரித்த நுழைவு, உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான நிதியிடல், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தாழ்ந்த இறைச் சுமை, அதிகமான பங்கிலாப கொடுப்பனவுகள் மூலம் வரவு செலவுத்திட்டத்திற்கு அதிகரித்த தேறிய பங்களிப்பு மற்றும் குறைவான ஊழல் மற்றும் மேம்பட்ட வெளிபடையானத்தன்மை என்பவை இவ்வகையிலான நன்மைகளுக்குள் உள்ளடங்கும்.

பிராந்திய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அனுபவம்

உலகம் முழுவதுமுள்ள நாடுகள் தங்களது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மாற்றியமைப்பதற்கான முயற்சிகளை பல தசாப்தங்களாக மேற்கொண்டுவருகின்றனர். இலங்கைக்கு பொருத்தமான தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்த அனுபவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூர்

சிங்கப்பூரினைப் பொறுத்தவரையில், முதலீட்டு உடமைக் கம்பனியான தெமாசெக் (Temasek) மிகுந்த வெற்றியைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இது 1974இல் சிங்கப்பூர் அரசாங்கத்தினால் முன்னர் வைத்திருக்கப்பட்ட சொத்துக்களையும் முதலீடுகளையும் வர்த்தக ரீதியில் முகாமைப்படுத்துவதற்காக சொந்தமாக நிறுவப்பட்டது. 1965இல் சுதந்திரம் கிடைத்ததனைத் தொடர்ந்து, இயற்கை மூலப் பொருட்களின் பற்றாக்குறை என்பது தீவிரமான கைத்தொழில் மயமாக்கல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு சிங்கப்பூரைத் தூண்டியது. அரசாங்கம் பல உபாயம் மிக்க புதிய துறைகளை ஆரம்பித்தபோது அரசாங்கம் கட்டுப்பாட்டுப் பங்குகளைக் கொண்டிருந்த தொழில்முயற்சிகளின் வர்த்தக முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சுக்களை விடுவிப்பதற்காக தெமாசெக் நிறுவப்பட்டது. காலப்போக்கில், இந்த நிதியமானது சொத்துப்பட்டியல் கம்பனிகள் மற்றைய சந்தைகளுக்கு விரிவாக்கப்படவும் அதேபோன்று இணைப்புக்களைத் தொடர்வதற்கும் கூடியளவிற்கு பன்னாட்டு ரீதியாக போட்டித்தன்மையுடையவாக மாற்றுவதற்கு ஏற்றவிதத்தில் மற்றைய கம்பனிகளை கையேற்பதற்கும் ஊக்குவித்தது. பல சுற்றுக்களாக ஒப்பந்தத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்குப் பின்னர் தற்போதைய சந்ததியினருக்கு அப்பாற்பட்டு நீடித்துநிலைத்திருக்கும் வருமானத்தினை உருவாக்குகின்ற பணியுடன் உலகளாவிய முதலீட்டுக் கம்பனியாக பரிணாமமடைவதற்கு தெமாசெக்கினை இட்டுச்சென்றது. தெமாசெக்கின் சொத்துப்பட்டியல் பெறுமதி 2021 மார்ச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 283 பில்லியனாக விளங்கியதுடன் உருவாக்கப்பட்ட குழுமத்தின் தேறிய இலாபம் அதே ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 42 பில்லியனாகக் காணப்பட்டது. தெமாசெக்கின் கீழுள்ள சொத்துப்பட்டியல் கம்பனிகளின் சபைகளில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. மேலும், முக்கிய ஆளணியினரின் நியமனம் தொடர்பிலும் தெமாசெக்கின் தொழிற்பாடுகள் அல்லது மற்றைய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பிலும் எந்தவொரு செல்வாக்கினையும் சிங்கப்பூர் அரசாங்கம் கொண்டிருப்பதில்லை.

சீனா

சீனாவின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் 1970 இலிருந்து தொடர்ச்சியாக வெளிநாட்டு வர்த்தகத்திற்கு பொருளாதாரத்தினை திறந்துவிடுவதனை நோக்கமாகக் கொண்ட சந்தை சார்ந்த பொருளாதார சீர்திருத்தங்களினால் தூண்டப்பட்டு வருகின்றன. 2003இல் அரசிற்குச் சொந்தமான சொத்துக்கள் மேற்பார்வை மற்றும் நிருவாக ஆணைக்குழுவானது (State-Owned Assets Supervision and Administration Commission, SASAC) அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுவதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமாக நிறுவப்பட்டது. 2013 இலிருந்து சீனா பாரிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை ஒன்றினைப்பதிலும் கலப்பான சொத்துடமை நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்துவதிலும் கவனத்தினைச் செலுத்தி வருகிறது. தற்பொழுது, சீனாவின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியை சீர்திருத்த நிகழ்ச்சிநிரல், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை “வலுவானதாகவும், சிறந்தளவானதாகவும், பெரியதாகவும்” ('stronger, better and bigger") செய்வதன் மீது கவனத்தினைச் செலுத்துகிறது. இதன்படி, SASACஇன் zhuada fangxiao (பெரியதை பிடித்துக்கொள்ளல் சிறியதை விட்டு விடுதல்) அணுகுமுறை தனியார் மயப்படுத்தலினூடாகவும் சொத்துக்களின் விற்பனை ஊடாகவும் சிறிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கின்ற வேளையில் பொருளாதாரத்தில் உபாய ரீதியில் முக்கியமானது என கருதப்படும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை வலுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. SASACஇன் வசமுள்ள கம்பனிகளின் ஆளுகை தனியார் துறை இணைத்தரப்பினருடன் ஒப்பிடுகையில்கூட உயர்வாகவே காணப்படுகிறது என்ற கருத்து நிலவுகிறது. முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் பணிப்பாளர்களும் விபரமான பங்குலாப இலக்குகளுடன் கூடிய செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தத்தில் காணப்படுகின்றன. சபையும் பொறுப்புக்கூறும் தன்மையினை மேம்படுத்துவதற்காக தொழில்சார் சுயாதீனப் பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

பிரேசில்

குறைந்த செயலாற்றத்தினைக் கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பில் விடாப்பிடியான பிரச்சனைகள் காணப்பட்டமைக்கிடையிலும் பிரேசில், போர்ஜீன் குளோபல் 500இல் (Fortune Global 500) பட்டியற்படுத்தப்பட்ட பெட்றோப்றஸ் (Petrobras) போன்ற மிகவும் வெற்றிகரமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை உருவாக்கியிருக்கிறது. 2010இல் பெட்ரோப்ராஸ் முழுமையாக அரசிற்குச் சொந்தமான கம்பனியிலிருந்து கலப்புக் கம்பனியாக மாற்றமடைந்தது. நாளதுவரையில், இவ்வுருவாக்கத்தின் பயனான பங்குத்தாபனமாக்கல் மூலதனச் சந்தைகளின் வரலாற்றில் மிகப்பாரிய மூலதன அதிகரிப்பு கொடுக்கல்வாங்கல்களிலொன்றாகக் காணப்படுகிறது. இது, கம்பனியின் சந்தைப் பெறுமதியில் அதிகரிப்பொன்றினை உருவாக்கிய வேளையில், இதன் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் முதலீடுகளைத் திரட்டுவதற்கு கம்பனிக்கான வாய்ப்புக்களை உருவாக்கியது. பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டமையும் கம்பனி ஆளுகை கணிசமானளவில் மேம்படுதவற்கு வழியமைத்ததுடன் ஏக சொந்தக்காரர் என்ற ரீதியில் அரசின் பங்கேற்பு கணிசமானளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டது. இதன் மூலம் அரசியல் செல்வாக்கின் இடர்நேர்வும் சபையினதும் முகாமைத்துவத்தினதும் குறைவான கடப்பாடும் தடுக்கப்பட்டது.

இந்தியா

வினைத்திறனற்ற அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மைய ஆண்டுகளில் இந்தியா முதலீடுகளின் விற்பனை (disinvestment) உபாயத்தினைப் பின்பற்றுகிறது. முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் மாற்றல் உட்பட, தொழில்முயற்சிகளின் அரச பங்குடமையின் கணிசமான வீதத்தின் விற்பனையினை இது பாராதீனப்படுத்துகிறது. சீனாவிற்கு அடுத்ததாக போர்ஜீன் குளோபல் 500இல் (Fortune Global 500) அதிகளவில் பட்டியலிடப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இரண்டாவது இடத்தை இந்தியா பிடித்துள்ளது. அதன் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் அண்மையில் இடம்பெற்ற நகர்வாக எயர் இந்தியா தனியார்மயப்படுத்தப்பட்டமை காணப்படுகிறது. இதன் காரணமாக இந்திய அரசாங்கம் பங்குரிமையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 360 மில்லியனை பெற்றுக்கொண்டதுடன் தனிப்பட்ட பல்தொழில் கூட்டுக்குழுமம் நிறுவனமொன்று ஐ.அ.டொலர் 2 பில்லியன் கொண்ட படுகடனையும் பொறுப்பேற்றுக் கொண்டது. இந்திய அரச முகவர்கள் மற்றும் அரச துறை நிறுவனங்களின் மிகையான காணிகளையும் கட்டடங்களையும் உடமையில் கொள்வதற்கும் முகாமைப்படுத்தி நாணய மயப்படுத்துவதற்குமாக National Land Monetisation Corporation பெயரிலான கம்பனியொன்று நிறுவப்பட்டது. இது அரசிற்கு முழுமையாக சொந்தமான கம்பனியொன்றாக நிதியமைச்சின் கீழ் ஏற்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியின் வெற்றிகரமான மாற்றம்: சிறிலங்கா ரெலிகொம் பிஎல்சி பற்றிய குறிப்பு

தரம், நம்பகத்தன்மை மற்றும் பணிகளின் விலையிடல் ஆகிய நியதிகளில் இலங்கையிலுள்ள மிக வெற்றிகரமாகவுள்ள பணிகள் துறைகளிலொன்றாக தொடர்பூட்டல் துறை விளங்குகின்றது. இன்று, இலங்கை பெருமைப்பட்டுக்கொள்ளக்கூடிய விதத்தில் 135 சதவீதத்திற்கும் மேலான செல்லிடத்தொலைபேசி நுழைவு வீதத்தினையும் இப்பிராந்தியத்திலேயே மிகக்குறைவான செல்லிட, இணையத்தளக் கட்டணங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இத்தொழில்துறையில் முக்கிய தொழிற்பாட்டாளராக சிறிலங்கா ரெலிக்கொம் பிஎல்சி விளங்குவதுடன் இது கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக, மிக வெற்றிகரமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியாகவும் தோற்றம் பெற்றிருக்கிறது.

1980களின் தொடக்கத்தில் இடம்பெற்ற பொருளாதார தாராளமயமாக்கலைத் தொடர்ந்து, இலங்கை, தொலைத்தொடர்பூட்டல் துறையினை மீளமைப்பதற்கு தொலைத்தொடர்பூட்டல் திணைக்களத்தினை நிறுவனமயப்படுத்திய பின் இது தனது செயற்பாட்டு தொழிற்பாடுகளை பின்னர் சிறிலங்கா ரெலிக்கொம என்ற பெயரிடப்பட்ட ஓ ர் அரச கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டது. 1996இல் சிறிலங்கா ரெலிகொம் அரசிற்கு முழுமையாகச் சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாக மீளமைக்கப்பட்டது. இந்த அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிக்கு திருப்பு முனையாக இருந்தது யாதெனில் ஐ.அ.டொலர் 225 மில்லியனுக்காக 25 சதவீதமான மூலதனப்பங்கு நிப்போன் ரெலிகிறாப் அன்ட் ரெலிபோன் கோப்பரேசனுக்கு அடுத்துவந்த ஆண்டில் விற்கப்பட்டதாகும். இதனை அடுத்து 2003இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் சிறிலங்கா ரெலிகொம் பிஎல்சி வெற்றிகரமாக பட்டியலிடப்பட்டது. 2020 இறுதியில் சிறிலங்கா ரெலிகொம் பிஎல்சி இன் இரண்டு முக்கிய பங்குடமையாளர்களாக திறைசேரி செயலாளரூடாக 49.50 சதவீத பங்குடமையினைப் பெற்றுக்கொண்ட அரசாங்கமும் 44.98 சதவீதப் பங்கினைப் பெற்றுக்கொண்ட குளோபல் ரெலிகொமினிகேசன் ஹோல்டிங் என். வி உம் விளங்கியதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பகிரங்கமாக விற்பனை செய்யப்பட்ட எஞ்சியவை மற்றைய பங்குடமையாளர்களினாலும் வைத்திருக்கப்பட்டன. இதற்கமைய, சிறிலங்கா ரெலிகொமிலிருந்தான பங்கிலாபம் 2020இல் ரூ.947 மில்லியன்களாகக் காணப்பட்டதுடன் 2022இலும் அதற்குஅப்பாலுக்குமான இத்தொகை ரூ.1.4 பில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கிறது.

சிறிலங்கா ரெலிகொம்மினைப் பொறுத்தவரை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்றில் ஏற்கனவே இயல்பாகவே காணப்படக்கூடிய உள்ளார்ந்த வளத்தினையும் இவ்வுள்ளார்ந்த வளத்தினை பொருளாதார ரீதியில் பயன்படுத்திக்கொள்ள உதவக்கூடிய உரிமை நீக்கம் போன்ற, உரிய நேரத்திலான சீர்திருத்தங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்பதனையும் எடுத்துக்காட்டுகிறது. இவ்விடயத்தில் கவனிக்கத்தக்க

மற்றொரு அம்சம் சிறிலங்கா ரெலிகொம்மின் முன்னேற்றத்திற்கு வசதியளித்த, போட்டித்தன்மையினையும் எதிர்த்து நிற்கக்கூடிய தன்மையினையும் வழங்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை உருக்கியதனூடாக இத்துறையில் ஒட்டுமொத்த இயக்கவாற்றல் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்திய சுயாதீனமான ஒழுங்குமுறைப்படுத்துநராக இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டமையாகும்.

சிறிலங்கா ரெலிகொம் தொடர்பில் காணப்பட்ட வெற்றியை கருத்திற்கொண்டு, எதிர்வரும் காலத்தில் அரசானது அதற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் விற்பனை இல்லாவிடில் அதனது சிறுபான்மை பங்குரிமைகளை விற்பதனை கருதலாம். இது தொடர்பில், தொடர்ந்துவரும் அரசாங்கங்கள் அரசச் சொத்துக்களின் விற்பனை தொடர்பில் ஓர் இசைவான மாற்றமில்லாத கொள்கை நிலைப்பாட்டினை பேணுவது அவசியமான அதே வேளையில் இவ்வகையிலான வழிமுறைகளில் ஆர்வல்களின் கரிசனைகளை ஓர் நேரகாலமான மற்றும் முன்மதியான முறையில் தீர்க்கவேண்டும்

முன்னோக்கிய நோக்கு

முன்னோக்கிச் செல்கையில், கொவிட்-19 இற்குப் பின்னரான மீட்புப்பயணத்தில் இலங்கையின் முன்னேற்றமும் உயர் நடுத்தர வருமான அந்தஸ்திற்கு மாறியுள்ளமையும் கவனத்திற்கொள்கையில் அரசாங்கம் தற்பொழுது நடைபெற்றுவருகின்ற சீர்திருத்தங்கள், குறிப்பாக இணைப்புக்கள் ஒன்று சேர்த்தல்கள் தொடர்பானவற்றை விரைவான முறையில் நடைமுறைக்கிடுவதும், மேற்குறிப்பிட்டவற்றை முன்மொழிந்திருக்கின்ற கம்பனி ஆளுகையினை வலுப்படுத்துவதும் மிக முக்கியமானவையாகும். வெளிப்படையான விலையிடல் பொறிமுறையினை நடைமுறைப்படுத்தல், உபாயநெறிமுறைகளை மேம்படுத்தல் மற்றும் நிதியியல் பொறுப்புக்கூறும் தன்மையினை அதிகரித்தல் என்பனவற்றுடன் தொடர்பான சீர்திருத்தங்கள் குறுங்காலத்தில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றத்திற்கு தவிர்க்கமுடியாதவையாகும். இவை மேம்பட்ட அரசிறையினை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி வரவுசெலவுத் திட்ட மாற்றல்கள் அல்லது வங்கித்தொழில் முறைமையினூடாக கடன்பாடுகள் ஊடாக நிதியிடும் தேவையினையும் குறைத்துவிடுகின்றன. இது, வீட்டுடமையாளர்கள் மற்றும் தொழில்முயற்சிகளின் உற்பத்தியாக்கம் மிக்க வருமான உருவாக்கங்களுக்கு அல்லது சொத்து உருவாக்கத்திற்கும் வழிப்படுத்தப்படக்கூடிய கணிசமானளவு மூலவளங்களை விடுவிக்க உதவும். இதற்கமைய, குறுங்காலத்தில் அரச அரசிறையில் பல்பெருக்கத் தாக்கமொன்றும் நடுத்தரத்திலிருந்து நீண்டகாலப்பகுதியில் வளர்ச்சியொன்றும் காணப்படும்.

பொருளாதார அபிவிருத்திச் செய்முறையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் ஆற்றும் முக்கிய வகிபாகத்தினை, குறிப்பாக, உபாயத்துறைகளில் அவற்றின் பரந்த அடிப்படையிலான பிரசன்னத்தினைப் பரிசீலனையில் கொள்கையில் இத்தொழில்முயற்சிகள் அரசிற்கு நிதியியல் சுமையினை ஏற்படுத்தாமல் காத்திரமான முறையில் செயலாற்றி சாதகமான சமூகப் பொருளாதார பெறுபேறுகளை வழங்குவது மிக முக்கியமானதாகும். இது தொடர்பில், அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் தொடர்பில் தனிப்பட்ட சாத்திய ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றின் சில சொத்துக்களை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பது தொடர்பில் நேரகாலத்திற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இதற்குப் பின்னர், அரசு இந்த அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை இவையை அரசியல்மயப்படுத்தாமல் நிலைத்திருக்கக்கூடிய மற்றும் சாத்தியமான தொழிற்பாடுகளை உறுதிசெய்யும் வகையில் மீளுபாயப்படுத்தலாம். அத்தகைய சீர்திருத்தங்கள், ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கை முன்னெடுப்புக்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடுமெனினும் அது நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலம் வரையான காலப்பகுதியில் நிதியியல் ரீதியில் ஆற்றல்வாய்ந்ததும் பொருளாதார ரீதியில் நன்மை பயப்பதுமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்கான பாதையினை இடும். அத்தகைய சீர்திருத்தங்களூடாக தற்போதுள்ள அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை "நிதியியல் சுமையிலிருந்து" "பெறுமதி உருவாக்குநர்" ஆக மாற்றியமைப்பது தடைக்கல்லாக இருப்பதிலும் பார்க்க உயர் வளர்ச்சி உத்வேத்திற்கு இலங்கையை முன்னேற்றுகின்ற வசதிப்படுத்துநர்களாக இவை தோற்றம் பெறுவதற்கு மிக இன்றியமையாததாகும்.

உசாத்துணைகள்

1. Central Bank of Sri Lanka. A Review of the Economy of Sri Lanka, 1950 – 1975
2. Central Bank of Sri Lanka. 1998. Economic Progress of Independent Sri Lanka.
3. Central Bank of Sri Lanka. Annual Reports, Various Issues.
4. European Commission. 2013. European System of Accounts 2010 (ESA10), Section 2.51, Luxembourg.
5. IMF. 2014. Government Finance Statistics Manual 2014. Washington, DC: International Monetary Fund.
6. IMF. 2020. 'State-Owned Enterprises: The Other Government.' IMF Fiscal Monitor, April 2020.
7. Guluzade, A., 2020, May. How reform has made China's state-owned enterprises stronger. In World Economic Forum, May (Vol. 21).
8. Kim, K. and Panchanatham, N., 2021. Reform and privatization of state-owned enterprises in India. In Reforming State-Owned Enterprises in Asia (pp. 157-168). Springer, Singapore.
9. Knight, M., Guruge, A. and Cham, M.R., 2017. State-owned enterprise reforms in Sri Lanka: the way forward. Manila: Asian Development Bank Institute.
10. Lakshman, W.D. ed., 1997. Dilemmas of development: fifty years of economic change in Sri Lanka. Sri Lanka Association of Economists.
11. Ministry of Finance. Annual Report, Various Issues.
12. Mukherjee, A., Sarma, A.P., Barah, A. and Mohan, A., 2020. Public Sector Enterprises in India: Enhancing Geo-Strategic Reach and Exports.
13. OECD. 2015. OECD Guidelines on Corporate Governance of State-Owned Enterprises, 2015 Edition. Paris: OECD Publishing.
14. PwC. State-Owned Enterprises: Catalysts for public value creation?
15. World Bank Group. 2014. Corporate Governance of State-Owned Enterprises: A tool kit.

6.5. துணைத் தேசிய அரசாங்கங்களின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

துணைத் தேசிய அரசாங்கங்களினால் எடுக்கப்பட்ட கொள்கைப் பணிப்புரைகளும் வழிமுறைகளும்

2021ஆம் ஆண்டுப்பகுதியில், பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் அரச துறை பணி வழங்கல் மேம்பாடு என்பனவற்றை இலக்காகக் கொண்டு துணை தேசிய அரசாங்க மட்டத்தில் பலசெயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டது.[5] இதற்கமைய, உள்ளூராட்சிமன்ற மேம்பாட்டுத் துறைச் செயற்றிட்டம் கிராமிய பாலங்கள் கட்டுமானச் செயற்றிட்டம், தோற்றம் பெற்றுவரும் பிரதேசங்களிலுள்ள கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம், மாகாண வீதி அபிவிருத்திச் செயற்றிட்டம், பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவச் செயற்றிட்டம் மற்றும் உள்நாட்டு அபிவிருத்தி ஆதரவுச் செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கிய பல உட்கட்டமைப்புடன் தொடர்பான செயற்றிட்டங்கள் இவ்வாண்டுப்பகுதியில் நடைமுறைக்கிடப்பட்டன. அதேவேளை, துணைத் தேசிய அரச மட்டத்தில் சுகாதாரம் மற்றும் கல்வி பணி வழங்கலின் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு முறைமையினை வலுப்படுத்துகின்ற செயற்றிட்டம் மற்றும் பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் என்பனவும் 2021இல் முன்னேற்றம் கண்டன.

நாட்டில் ஏற்றத்தாழ்வற்ற பிரதேச அபிவிருத்தியையும் பகிரப்பட்ட சதவீதத்தினையும் அடைந்து கொள்ளும் நோக்குடன் நிதி ஆணைக்குழு ஏற்றத்தாழ்வற்ற பிரதேச வளர்ச்சி, முகவர்களுக்கிடையிலான இணைப்பு, அபிவிருத்தியடைந்த வருமான உருவாக்கம், தனியார் துறைப் பங்கேற்பு போன்ற துறைகளில், தேசிய வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி, 2021இல் நடைமுறைப்படுத்துவதற்கென பல வழிமுறைகளை விதந்துரைத்தது. நிதி ஆணைக்குழு, மாகாண சபைகள் துணைத் தேசிய மட்டத்தில் அவற்றின் கல்வி மற்றும் சுகாதாரப் பணிகளை வழங்குவது உள்ளிட்ட செலவுத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட வேண்டுமென விதந்துரைத்திருந்தது. மேலும், மூலவளங்கள் காத்திரமான விதத்தில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் மாகாண சபைகளுக்கு நேரடியாக நிதிகளைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் பிரதேச ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒன்றுதிரட்டப்பட்ட வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டத்தினைத் தயாரிப்பதற்கும், மாகாணங்களுக்கிடையே சமச்சீரான முறையில் மூலவளங்கள் ஒதுக்கப்படுவதனை கவனிப்பதற்கும் விதந்துரைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அனர்த்த பதிலிறுப்புக்கள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட தலையீடுகள் என்பனவற்றில் பெரும்பாலானவை மாகாண சபைகளூடாகவும் உள்ளூராட்சிமன்றங்களூடாகவும் மேற்கொள்ளப்படுவதனால், ஆணைக்குழு, உள்ளூராட்சி மன்றங்கள் பணிகளை வழங்குவதற்கும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக தேசிய வரவு செலவுத்திட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு விசேட கொடைகளை ஒதுக்குமாறு விதந்துரைத்திருக்கிறது. இவ்விதந்துரைப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதி ஆணைக்குழு அத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் மற்றைய அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்குமான ஒதுக்குகளை நிறுத்த வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக்காட்டியது. மேலும், நிதி ஆணைக்குழு மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் மீது தங்கியிருப்பதனை குறைக்கும் பொருட்டு உயர்ந்த வருமான உருவாக்கத்தினை மேற்கொள்வதற்கு மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வலுவூட்டுவதற்கு விதந்துரைத்தது. நிதி ஆணைக்குழு, அரசாங்கங்களுக்கிடையிலான நிதி இணைப்புக்களை வலுப்படுத்துவதற்கு தேசிய மற்றும் துணைத் தேசிய அரசாங்கங்களில் திட்டமிடல், வரவு செலவுத்திடங்களை மேற்கொள்ளல், அரச முதலீடுகளை அறிக்கையிடல் என்பனவற்றிற்காக பொதுவான கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு விதந்துரைத்தது. தரமான பணிகள் வழங்கப்படுவதனை அதிகரிப்பதற்கு தொடர்பான துறைகளிலும் பிரதேசங்களிலும் தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கின்ற வேளையில் நாட்டில் சமச்சீரான அபிவிருத்தியைப் பேணுவதற்கும் அரச வரவு செலவுத்திட்டத்திற்குக் குறைந்த சுமையினை ஏற்படுத்துவதற்கும் விதந்துரைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாகாண சபைகளின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

2021இல் மாகாண சபைகளின் அரசிறைச் சேகரிப்புக்கள் மேம்பாடடைந்திருந்ததுடன் அது பொருளாதார நடவடிக்கைகள் 2020 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்திருந்தமையினை எடுத்துக்காட்டின. மாகாண சபைகளின் மொத்த அரசிறை 2020இன் ரூ.52.2 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.58.1 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு வரி அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். வரி அரசிறைச் சேகரிப்பு 2020இன்

5 துணைத் தேசிய அரசாங்கங்கள் ஒன்பது மாகாண சபைகளையும் 24 மாநகர சபைகளையும் 41 நகர சபைகளையும் 276 பிரதேச சபைகளையும் உள்ளடக்கிய 341 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்குகிறது.

ரூ.43.1 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.51.1 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு முத்திரைத் தீர்வையிலிருந்தான உயர்ந்த அரசிறைச் சேகரிப்பே காரணமாகும். இது, மாகாண சபைகளினது அரசிறையின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் 2020இன் ரூ.27.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.38.8 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், உரிமக் கட்டணத்திலிருந்து உழைக்கப்பட்ட அரசிறை 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.11.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.10.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தற்பொழுது காணப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடுளின் காரணமாக உந்து ஊர்திகளின் பதிவுகள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2019 திசெம்பரில் நாட்டைக் கட்டியெழுப்பும் வரி அகற்றப்பட்டமை, மத்திய அரசாங்கத்திடமிருந்து மாற்றல் செய்யப்பட்டமை தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி அரசிறை 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.2.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் 0.3 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி, முத்திரைத் தீர்வையிலிருந்தான அரசிறையின் பங்கு 2020இன் ரூ.63.5 சதவீதத்திலிருந்து 2021இல் 76.0 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறையின் பங்கு 2020இன் 6.3 சதவீதத்திலிருந்து 2021இல் 0.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வரியல்லா அரசிறை 2020இன் ரூ.9.1 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.7.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மேல் மாகாணம் தவிர்ந்த மற்றைய அனைத்து மாகாணங்களினதும் அரசிறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, அனைத்து மாகாண சபைகளினாலும் சேகரிக்கப்பட்ட மொத்த அரசிறையில் மேல் மாகாணத்தின் அரசிறை 2020இன் 46.8 சதவீதத்திலிருந்து 2021இல் 53.6 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு முத்திரைத் தீர்வை மற்றும் வட்டி வருமானங்களில் ஏற்பட்ட சேகரிக்கப்பட்ட அதிகரித்த வருமானமே காரணமாகும். மற்றைய மாகாண சபைகளின் அரசிறைச் சேகரிப்பில் வடமேல் மாகாணமும் தென் மாகாணமும் மொத்த அரசிறையில் முறையே 10.3 சதவீதத்திற்கும் 10.0 சதவீதத்திற்கும் வகைகூறின.

மாகாண சபைகளின் மொத்தச் செலவினம் அதிகரித்தமைக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாகும். பெயரளவு நியதிகளில் மொத்தச் செலவினம் 2020இன் ரூ.337.0 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.376.4 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2021இல் 2.2 சதவீதத்தில் எவ்விதமான பெரிய மாற்றங்களுமின்றிக் காணப்பட்டது. மீண்டெழும் செலவினம் 2020இன் ரூ.289.7 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.317.0 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு 2020இன் ரூ.228.6 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.251.5 பில்லியனுக்கு அதிகரித்த தனியாள் ஊதியங்கள் தொடர்பில் ஏற்பட்ட செலவினத்தில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாகும். மீண்டெழும் செலவினத்தில் மிகப்பெரும் கூறாக விளங்கும் தனியாள் ஊதியங்கள் மாகாண சபைகளின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் ஏறத்தாழ 79.4 சதவீதத்திற்கு வகைகூறின. அதேவேளை, மாகாண சபைகளின் தனியாள் ஊதியங்களில் ஏறத்தாழ 90 சதவீதம் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளின் மீது செலவிடப்பட்டது. மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்கள் மிக உயர்ந்த செலவிடல் சபைகளாக விளங்கி மாகாண சபைகளின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 20.6 சதவீதத்திற்கும் 12.8 சதவீதத்திற்கும் 12.5 சதவீதத்திற்கும் வகைகூறின. அதேவேளை, மாகாண சபைகளின் மூலதனச் செலவினம் 2020இன் ரூ.47.3 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.59.5 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு சிறப்புச் செயற்றிட்டங்கள் தொடர்பில் ஏற்பட்ட செலவினத்தில் காணப்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

இவ்வாண்டுப்பகுதியில் மாகாண சபைகளிடையே உயர்ந்த அரசிறைச் சேகரிப்பு காணப்பட்ட போதும் மத்திய தரத்திலிருந்து மாகாண சபைக்கான மாற்றல்கள் மாகாண சபைகளினால் உறப்பட்ட உயர்ந்த செலவினங்களை ஈடுசெய்வதற்காக குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. இதன்படி, மத்திய அரசாங்கத்திலிருந்தான மாகாண சபைகளுக்கான மாற்றல்கள் 2021இல் ரூ.318.3 பில்லியனுக்கு 11.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தொகை வடிவிலான கொடைகளிலும் சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான கொடைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய

அட்டவணை 6.9
மாகாணசபைகளுக்கான வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு

ரூ.மில்லியன்

விடயம்	2018	2019	2020 (அ)	2021 (ஆ)
மொத்த அரசிறை	**88,689**	**91,344**	**52,245**	**58,141**
வரி அரசிறை	82,228	81,499	43,096	51,067
வரியல்லா அரசிறை	6,461	9,845	9,149	7,075
மொத்த செலவினம்	**292,265**	**310,124**	**337,006**	**376,447**
மீண்டெழும் செலவினம்	251,552	286,884	289,667	316,969
இதில் தனியாள் ஊதியம்	198,129	219,698	228,561	251,525
மூலதனச் செலவினம்	40,713	23,240	47,339	59,478
மத்திய அரசின் மாற்றல்கள்	**203,576**	**218,780**	**284,761**	**318,306**
மொத்த கொடைகள்	180,095	199,968	265,593	284,602
பிரமாணங்களை அடிப்படையாக கொண்ட கொடைகள்	2,462	2,205	1,752	2,559
குறிப்பாக மாகாணத்திற்கான அபிவிருத்திக் கொடைகள்	13,536	11,376	11,004	12,632
சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டு கொடைகள்	7,483	5,230	6,412	18,513

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: நிதி அமைச்சு
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சு

காரணமாகும். மத்திய அரசாங்கத்திலிருந்தான மாற்றல்கள் 2021இல் மொ.உ.உற்பத்தியின் 1.9 சதவீதமாகத் தொடர்ந்தும் விளங்கி 2020 இலிருந்து எவ்வித மாற்றமுமின்றி காணப்பட்டது. மாகாண சபைகளுக்கான தொகை வடிவிலான கொடைகள் 2021இல் ரூ.284.6 பில்லியனாக விளங்கி மொத்த மாற்றல்களில் 89.4 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தின. மேலும், சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான கொடைகள் 2020இன் ரூ.6.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.18.5 பில்லியனுக்கு அதிகரித்தன. 2021இல் மாகாண ரீதியில் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி கொடைகளின் கீழான மாற்றல்களும் பிரமாண அடிப்படையிலான மாற்றல்களும் முறையே ரூ.12.6 பில்லியனாகவும் ரூ.2.6 பில்லியனாகவும் விளங்கின. அதேநேரம், ஆய்விற்குரிய காலப்பகுதியில், மாகாண சபைகளின் செலவினத்தில் ஏறத்தாழ 84.6 சதவீதம் மத்திய அரச மாற்றல்களூடாக நிதியிடப்பட்டமையானது மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் மீதான அழுத்தத்தினைக் குறைக்கும் விதத்தில் மாகாண சபைகளுக்கிடையே அரசிறைத் திரட்சியை ஊக்குவிக்கின்ற பிரதேச மட்டத்திலான உபாயங்களைக் கட்டியெழுப்புவதன் அவசியத்தினைப் பிரதிபலிக்கின்றது. பாரியளவான உள்ளூராட்சி மற்றும் மாகாண அரசாங்க முறைமையின் தொடர்ச்சியானது மத்திய அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தின் மீது கணிசமான நிதியியல் சுமைகளை கொண்டுள்ளது. எனவே, உள்ளூராட்சி மற்றும் மாகாண அரசாங்க முறைமைக்குள் மிகவும் இறுக்கமான ஆளுகைக் கட்டமைப்பு அமுல்படுத்தப்படல் வேண்டுமென இங்கு பரிந்துரைக்கப்படுவதுடன் அது அவற்றின் நிதியியல் விடயங்கள் தொடர்பில் பொறுப்புத்தன்மை மற்றும் பொது அவதானிப்பு என்பவற்றையும் உறுதிப்படுத்தும்.

6

7

நாணயக் கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்

7.1 பொதுநோக்கு

பணவீக்க அழுத்தங்கள் 2021இல் கட்டியெழுப்பப்படுவதனை தடுத்து நிறுத்துவதற்காகவும் வெளிநாட்டுத் துறையில் காணப்பட்ட சமநிலையின்மைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கி அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினை மாற்றியது. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நாணயக் கொள்கை ஆதரவுகள் 2021இன் பெரும்பாலான காலப்பகுதியில் தொடர்ந்ததுடன் அதன் காரணமாக சந்தை வட்டி வீதங்கள் வரலாற்றிலேயே மிகக் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் மீட்சிக் கட்டத்தில் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்காக அரசாங்கத்தினதும் தனியார் துறையினதும் நிதியிடல் தேவைகளுக்கும் வசதியளித்தன. இதற்கமைய, குறைந்த செலவிலான அபரிமிதமான நிதி பக்கபலமாக விளங்கிய அரச மற்றும் தனியார் துறை இரண்டிற்குமான கொடுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்ததுடன் இதன் மூலம் இது விரிந்த பண நிரம்பல் உயர்மட்டத்தினைத் தொடர்ந்து அடையக் காரணமாகியது. நடுத்தரகாலத்தில் மிகையான பணவீக்க அழுத்தங்கள் ஏதேனும் கட்டியெழுப்பப்படுவதனை முன்கூட்டியே தடுப்பதனையும் வெளிநாட்டுத் துறையிலும் நிதியியல் சந்தைகளில் காணப்படும் சமநிலையின்மைகளைக் கட்டுப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களையும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களுக்கும் பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு விகிதத்தினையும் அதிகரிப்பதற்கு 2021 ஓகத்தில் தீர்மானித்தது. நாணய இறுக்கமாக்கலுடன் சேர்ந்து, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை பயன்படுத்தி அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகளும் சுற்றோட்டத்திலுள்ள அதிகரித்த நாணயமும் உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மை குறைவடையக் காரணமாக விளங்கின. அத்தகைய இறுக்கமான கொள்கை வழிமுறைகளின் காரணமாக, குறுகிய கால சந்தை வட்டி வீதங்கள் மேல்நோக்கி அதிகரித்ததனைத் தொடர்ந்து, விளைவுகள் மீதான உச்ச வரம்பு அகற்றப்பட்டமையின் மூலம் அதிகரிப்பதற்கு ஆதரவளிக்கப்பட்ட அரச பிணையங்கள் மீதான விளைவுகள் உட்பட, ஏனைய சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக அதிகரித்தன. வெளிநாட்டுத் துறை மற்றும் பணவீக்கப் பக்கத்திலிருந்து தோன்றுகின்ற சவால்களுடன், குறிப்பாக, ஒற்றை இலக்க பணவீக்கத்தினை தொடர்ச்சியாகக் கொண்ட 12 ஆண்டுகால சாதனை தகர்ந்து போனதைப் பரிசீலனையில் கொண்டு பொருளாதாரத்தில் காணப்படும் கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பணவீக்க எதிர்பார்ப்புக்களை உறுதிநிலைப்படுத்துவதற்கும் 2022இன் முதற்காலாண்டுப்பகுதியில் நாணயக் கொள்கை நிலையினை இறுக்கமாக்குவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இறுக்கமான கொள்கை வழிமுறைகள் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துதல், உள்நாட்டு கடன் வழங்கல் வீதங்கள் மீதான உச்ச எல்லையினைத் தளர்த்துதல், வெளிநாட்டு நாணய வைப்பு வீதங்கள் மீதான உச்ச எல்லையினை அகற்றுதல் மற்றும் சலுகை அடிப்படையிலான ஈட்டினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள் தொடர்பான வட்டி வீதங்களை உயர்த்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. ரூபாவின் விரைவான தேய்மானம், மற்றும் உலகளாவிய பண்ட விலைகளில் நீடித்த அதிகரிப்பு என்பவற்றினைத் தொடர்ந்து உள்நாட்டு விலைகளில் விரைவான மேல்நோக்கிய திருத்தங்கள் அவதானிக்கப்பட்டமை பணவீக்கத்தின் மீது கணிசமான மேல்நோக்கிய இடர்நேர்வுகளினை தோற்றுவித்தன. இதற்கு பதிலிறுத்தும் வகையில், 2022 ஏப்பிறல் ஆரம்பத்தில் மத்திய வங்கி அண்மைய வரலாற்றிலே மிக உயர்ந்த ஒரே நாளிலான திருத்தமாக விளங்கிய 700 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்து அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை கணிசமானளவு இறுக்கமாக்கிய வேளையில் கடன் வழங்கல் சாதனங்கள் மீதான அநேகமாக அனைத்து உச்ச எல்லைகளையும் நீக்கியது. இத்தகைய கொள்கைப் பதிலிறுப்பானது ரூபாவின் தேய்மானத்தினைத் தொடர்ந்து இறக்குமதிக் கேள்வியின் எதிர்பார்க்கப்படும் குறைப்பு மற்றும் முக்கிய பண்டங்களின் உலகளாவிய வழங்கல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களுடன் இணைந்து பொருளாதாரத்தில் கேள்வி அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனை கட்டுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் மூலம் நடுத்தர காலத்தில் விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மீளக் கட்டியெழுப்பப்படும்.

7.2 நாணயக் கொள்கை நிலை

பொருளாதார நடவடிக்கைக்கும் அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சலுக்கும் ஆதரவளிப்பதற்காக, உலகளாவிய நோய்த்தொற்று ஆரம்பமானதிலிருந்து, முன்னொருபோதுமில்லாத அளவிற்கு நாணயத் தூண்டுதல்களைத் தொடர்ந்தும் வழங்கிய மத்திய வங்கி பொருளாதாரத்தில் மிகையான பணவீக்க அழுத்தங்கள் விரும்பத்தக்க மட்டங்களுக்கு அப்பால் செல்வதனை முன்கூட்டியே தடுப்பதனையும் வெளிநாட்டுத் துறையிலும் நிதியியல் சந்தைகளிலும் காணப்பட்ட தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு 2021 ஓகத்திலிருந்து நாணயக் கொள்கை நிலையினை இறுக்கமாக்கத் தொடங்கியது. பொருளாதார நடவடிக்கைகளுக்குக் கடுமையான இடையூறுகளை ஏற்படுத்திய உலகளாவிய நோய்த்தொற்றின் பல்வேறு அலைகளினதும் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு 2021இன் முதலரைப்பகுதியில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட அசாதாரணமான நாணயக் கொள்கை தளர்த்தல்கள் தேவையாக இருந்தது. மத்திய வங்கியின் நாணயக் கொள்கையின் தீவிரமான தளர்த்தல் நிலையும் உள்நாட்டு பணச் சந்தைக்கான திரவத்தன்மை பெருமளவிற்கு உள்ளீடு செய்யப்பட்டமையும் சந்தை வட்டி வீதங்களை 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வரலாற்றிலேயே மிகக்குறைந்த மட்டத்திற்கு இட்டுச்சென்றதுடன், இதன் மூலம் அரச துறை, தனியார் துறை இரண்டிற்குமான நிதிச் செலவும் குறைந்தது. இதற்கமைய, தனியார் துறைக்கான கொடுகடன் உத்வேகம் மிக்கதாக விளங்கி பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு உதவியாக அமைந்தது. அரச துறைக்கான கொடுகடன், குறிப்பாக மத்திய வங்கியிலிருந்தான நாணய நிதியிடல் உட்பட, வங்கித்தொழில் துறையிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைத்த தேறிய கொடுகடன் இவ்வாண்டுப்பகுதியில் கணிசமாக விரிவடைந்தது. எதிர்பார்க்கப்பட்ட அரசிறைத்திரட்சி குறைவாக இருந்தமை மற்றும் உயர்ந்த செலவினம் என்பனவற்றின் காரணமாக காசுப்பாய்ச்சலுக்கேற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில், அரசாங்கத்தின் அவசரகால நிதியிடல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு முதலாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களின் கணிசமான தொகையினைக் கொள்வனவு செய்தமையின் மூலமும் அதேபோன்று திறைசேரி உண்டியல்களின் நேரடியான ஒதுக்குகளை மேற்கொண்டதன் மூலம் மத்திய வங்கி அரசாங்கத்திற்கு நிதியியல் உதவியினை வழங்கியது. இதன் விளைவாக உள்நாட்டு கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கம் விரிந்த நாணயக் கூட்டுக்கள் உயர்வடையக் காரணமாகியபோதும் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையின் மூலம் இது மிதமடைந்தது. பொருளாதாரத்தில் உள்ள தளம்பல்களின் சில சமிக்ஞைகள் எடுத்துக்காட்டிவாறு, குறிப்பாக கேள்வி அழுத்தங்கள் கட்டியெழுப்பப்பட்டமை, வெளிநாட்டுத் துறையிலும் நிதியியல் சந்தைகளிலும் காணப்பட்ட அழுத்தங்கள் காரணமாக, மத்திய வங்கி, ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதாரத்தினை சமநிலைப்படுத்தும் நோக்குடன் 2021 இன் பின்னரைப்பகுதியில் நாணய மற்றும் திரவத்தன்மையினை இறுக்கமாக்க மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. இதற்கமைய, மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் அதாவது, துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன ஒவ்வொன்றும் 2021 ஓகத்து நடுப்பகுதியிலிருந்து 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.00 சதவீதத்திற்கும் 6.00 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டன. மற்றைய பல வழிமுறைகளுடன் நியதி ஒதுக்கு விகிதமும் 2021 செத்தெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2 சதவீதப் புள்ளியினால் 4.0 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டு சேர்ந்து வங்கித்தொழில் முறையிலிருந்து ரூ.170 பில்லியன் ஈர்த்துக்கொள்ளப்படக் காரணமாகியது. மேலும், உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையில் காணப்பட்ட இறுக்கமான திரவத்தன்மை காரணமாக,வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கு சில வங்கிகளினால் வழங்கப்படும் வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையினால் தோன்றிய ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் வட்டி வீதங்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2021 ஓகத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புச் சாதனங்களுக்காக வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் மீது உச்ச எல்லையொன்றினை விதிப்பதற்கு மத்திய வங்கியை தேவைப்படுத்தியது. நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக்கப்பட்டமையினைத் தொடர்ந்து உள்நாட்டு பணச் சந்தையில் காணப்பட்ட ஒட்டுமொத்த திரவத்தன்மை பாரிய பற்றாக்குறை மட்டமொன்றிற்கு மாற்றமடைந்து, சந்தை வட்டி வீத அமைப்பு படிப்படியாக மேல்நோக்கி சீராக்கப்பட காரணமாகியது.

எனினும், தளர்த்தப்பட்ட இறைக் கொள்கை நிலையுடன் சேர்ந்து வெளிநாட்டுத் துறையில் காணப்பட்ட நீடித்த அழுத்தங்களுக்கு மத்தியில் பணவீக்கம் விரும்பத்தக்க மட்டத்திற்கு அப்பால் தொடர்ச்சியாக அதிகரித்தமையின் காரணமாக 2021 ஓகத்தில் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள் 2022இல் மிகத்தீவிரமான நிலையொன்றிற்கு மாற்றமடைந்தன. இதற்கமைய, 2022 சனவரியிலிருந்து மார்ச்சு வரையான காலப்பகுதியில் கொள்கை வட்டி வீதங்கள், மொத்தமாக 150 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டமையின் மூலம் இறக்குமதிக்கான கேள்வியை ஊக்குவித்தல், பணம் மற்றும் கொடுகடனின் விரிவாக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. சாதகமற்ற வழங்கல்பக்க அபிவிருத்திகளினால் உருவாக்கப்பட்ட தொடர்ச்சியான விலை உயர்வுகளுக்கு மத்தியில் மோசமான பணவீக்க எதிர்பார்ப்புக்கள் கட்டியெழுப்பப்படுவதற்கான

வரைபடம் 7.1
நாணயத்துறை அபிவிருத்திகள்



சாத்தியத்தன்மையும் தடுக்கப்பட்டது. இறுக்கமான நாணயக் கொள்கையின் தாக்கம் மற்றும் மற்றைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் என்பனவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக மேல்நோக்கி சீராக்கப்படத்தொடங்கின. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தற்பொழுது சந்தையில் நிலவுகின்ற நிலைமைகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் 2021 திசெம்பர் இறுதியில் தளர்த்தப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து 2022 மாச்சில் அகற்றப்பட்டது. மேலும், 2020இல் சம்பளம் பெறும் ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஈட்டினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட சிறப்பு வீடமைப்புக் கடன்களுக்கு ஏற்புடைத்தான வட்டி வீதங்களும் திருத்தப்பட்டன. மேலும், உள்நாட்டு கடன் வழங்கல் சாதனங்களின் வட்டி வீதங்களின் மீது 2020 ஓகத்தில் விதிக்கப்பட்டிருந்த உச்ச எல்லை 2022 மாச்சில் மேல்நோக்கித் திருத்தப்பட்டது. பொருளாதாரத்தில் காணப்படும் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படத்துவதற்கு நாணயக் கொள்கையானது முறையியல் அடிப்படையில் இறுக்கமாக்கப்பட்ட போதிலும் ரூபாவின் கணிசமான தேய்மானம், குறிப்பாக பன்னாட்டு மசகெண்ணை விலைகள் உள்ளடங்கலாக உலகளாவிய பண்ட விலைகளிலான நீடித்த விலை உயர்வுகளுடன் இணைந்து உள்நாட்டு விலைகளில் உடனடியாக கடுமையான மேல்நோக்கிய திருத்தங்களுக்கு வழிவகுத்து அதன் மூலம் பணவீக்கத்தில் கணிசமான மேல்நோக்கிய இடர்நேர்வுகளைத் தோற்றுவித்தது. இத்தகைய பணவீக்க அழுத்தங்களின் விளைவுகளை எதிர்கொள்வதற்கும் ஏனைய கரிசனைகளுக்கு மத்தியில் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள் உயர்வடைவதனை முன்கூட்டியே தடுப்பதற்காகவும் மத்திய வங்கி அண்மைக்கால வரலாற்றில் அதியுயர்ந்த ஒரே நாளிலான திருத்தமாக 700 அடிப்படைப் புள்ளிகளினால் அதன் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்ததுடன் கடன் வழங்கல் சாதனங்கள் மீதான அநேகமான அனைத்து உச்ச எல்லைகளையும் நீக்கியது. இத்தகைய வழிமுறைகளின் ஆதரவுடன் சந்தை வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் மிகையான நுகர்வுகள் ஊக்கமிழக்கச் செய்யப்பட்டு சேமிப்புக்கள் ஊக்குவிக்கப்படும். இது பொருளாதாரத்தில் காணப்படும் கேள்வி அழுத்தங்களையும் அதேபோன்று எதிர்பார்க்கைகளையும் தளர்வடையச் செய்து நடுத்தரகாலத்தில் விரும்பத்தக்க ஒற்றை இலக்க மட்டங்களிற்கு மீண்டும் திரும்புவதற்கு துணைபுரிவதன் மூலம் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும்.

பொருளாதாரத்திற்கு பல்வேறுபட்ட வெளிப்புறச் சவால்கள் காணப்பட்டமைக்கிடையிலும் அண்மிய காலத்தில், பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கின்ற நோக்குடன் பொருளாதார

அட்டவணை 7.1
அண்மைக்கால நாணயக்கொள்கை வழிமுறைகள்

திகதி	வழிமுறை
2019-பெப்-22	நியதி ஒதுக்கு விகிதம், 2019 மாச்சு 01இல் ஆரம்பமாகும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 1.00 சதவீதப் புள்ளியினால் 5.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
2019-மே-31	துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமானது 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 7.50 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது.
2019-ஒகத்-23	துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமானது 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 7.00 சதவீதத்திற்கும் 8.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது.
2020-சன-30	துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமானது 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது.
2020-மார்-17	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.25 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.
2020-மார்-17	2020 மாச்சு 16ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 1.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
2020-மார்-27	கொவிட் 19 என்பதனால் பாதிக்கப்பட்ட வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ரூ. 50 பில்லியன் கொண்ட சௌபாக்கியா கொவிட் 19 புத்துயிரளித்தல் வசதி (பாகம் ஐ மீள்நிதியிடல் திட்டம்) என்பது 4.00 சதவீத வட்டியுடன் ஓர் சலுகையான கடன் செயற்திட்டம் அறிமுகஞ்செய்யப்பட்டது.
2020-ஏப்-03	2020 ஏப்பிறல் 03ஆம் நாளின் வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.00 சதவீதத்திற்கும் 7.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.
2020 ஏப் 16	வங்கி வீதமானது 500 அடிப்படைப் புள்ளிகளினால் 10.00 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டு ,300 அடிப்படை புள்ளிகள் எல்லையுடன் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தன்னியக்கமாக சரிசெய்துகொள்ள அனுமதிக்கப்பட்டது.
2020 மே 06	"2020 மே 06ஆம் நாளில் வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன."
2020 யூன் 16	2020 யூன் 16ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நியதி ஒதுக்கு விகிதம் 2.00 சதவீதப் புள்ளியினால் 2.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
2020 யூன் 16	2020 மார்ச்சு 27 அன்று கொவிட் - 19 என்பதனால் பாதிக்கப்பட்ட வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட சலுகையான கடன் (சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - பாகம் ஐஐ)
2020 யூலை 09	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. வங்கி வீதம் தன்னியக்கமாக 8.50 சதவீதத்திற்கு சீராக்கப்பட்டது.
2021 ஓகத் 19	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.00 சதவீதத்திற்கும் 6.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது. வங்கி வீதம் தன்னியக்கமாக 9.00 சதவீதத்திற்கு சீராக்கப்பட்டது.
2021 ஓகத் 19	2021 செத் 01ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதத்திற்குக் அதிகரிக்கப்பட்டது.
2022 சன 20	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது. வங்கி வீதம் தன்னியக்கமாக 9.50 சதவீதத்திற்கு சீராக்கப்பட்டது.
2022 மார் 04	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது. வங்கி வீதம் தன்னியக்கமாக 10.50 சதவீதத்திற்கு சீராக்கப்பட்டது.
2022 மார் 07	செலாவணி வீதத்தில் ஓர் சீராக்கம் அனுமதிக்கப்பட்டது.
2022 ஏப் 08	2022 ஏப்பிறல் அன்று வர்த்தக முடிவில் நடைமுறைக்குவரும் வகையில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 700 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 13.50 சதவீதத்திற்கும் 14.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது. வங்கி வீதம் தன்னியக்கமாக 17.50 சதவீதத்திற்கு சீராக்கப்பட்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

குறிப்பு:

26.04.2019	வட்டி வீதங்கள் மீது விதிக்கப்பட்ட எல்லைகள் பின்வருமாறு விதிக்கப்பட்டது/ திருத்தப்பட்டது : உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புச் சாதனங்களின் மீது வட்டி வீத உச்ச எல்லைகள் விதிக்கப்பட்டன
24.09.2019	கடன் வழங்கல் மீது வட்டி வீத உச்ச எல்லைகள் விதிக்கப்பட்ட அதே வேளையில் உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்புக்கள் மீதான வட்டி வீத உச்ச எல்லைகள் புறக்கீடு செய்யப்பட்டன.
27.04.2020	உரிமம் பெற்ற வங்கிகளின் அடவுபிடித்தல் முற்பணங்களின் மீது வட்டி வீத உச்ச எல்லைகள் விதிக்கப்பட்டன
24.08.2020	உரிமம் பெற்ற வங்கிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் சாதனங்கள் மீதான வட்டி வீத எல்லைகள் இறுக்கப்பட்டன.
26.11.2020	ஈட்டினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வீட்டு கடன்கள் மீது அதிகபட்ச வட்டி வீதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
24.08.2021	உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தொடர்பில் செலுத்தப்படும் வட்டி வீங்கள் மீதான உச்ச எல்லைகள் விதிக்கபட்டன
30.12.2021	உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தொடர்பில் செலுத்தப்படும் வட்டி வீங்கள் (364 நாள் திறைசேரி உண்டியல் விளைவுடன் இணைக்கப்பட்டது) மீதான உச்ச எல்லைகள் விதிக்கபட்டன
31.12.2021	பிணையமிடப்பட்ட வீட்டுக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் (சராசரி நிறுவேற்றப்பட்ட முதன்மை வீதமுடன் இணைக்கப்பட்டது) மீதான உச்ச எல்லைகள் திருத்தப்பட்டது.
04.03.2022	தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் சாதனங்கள் மீதான வட்டி வீத எல்லைகள் திருத்தப்பட்டன (தளர்த்தப்பட்டன).
11.03.2022	உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தொடர்பில் செலுத்தப்படும் வட்டி வீங்கள் மீதான உச்ச எல்லைகள் நீக்கப்பட்டன
08.04.2022	தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் சாதனங்கள் மீதான வட்டி வீத எல்லைகள் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

வரைபடம் 7.2
முக்கிய கொள்கை கருவிகள் மற்றும் நடைமுறை இலக்கின் அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

முகவர்களின் எதிர்பார்ப்புக்களையும் நடத்தையும் வழிப்படுத்தும் விதத்தில் மத்திய வங்கியின் நடத்தைகள் தொடர்பாக துல்லியமான தகவல்களை முக்கியமாக வெளியிடுவதற்காக 2021இல் மத்திய வங்கி அதன் தொடர்பூட்டல் கொள்கையினை மேற்கொண்டது. இது தொடர்பில், மத்திய வங்கி தகவல்களைப் பரப்புவதற்கு பாரம்பரியமான தொடர்பூட்டல் மார்க்கங்களையும் அதேபோன்று சமூக வலைத்தளங்களையும் டிஜிட்டல் தளங்களையும் சமயோசிதமான விதத்தில் பயன்படுத்தியது. "வழிகாட்டல்: 2021 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்" இனை 2021இன் தொடக்கத்தில் வெளியிடுவதுடன் ஆண்டு ஆரம்பமானதுடன் இது நடுத்தரகாலத்திற்கான நாணயக் கொள்கை மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகளை இது வெளிப்படுத்தியது. சவால்கள் தீவிரமடைந்து, நிச்சயமற்ற தன்மைகள் பெருகத்தொடங்கியதும் மத்திய வங்கி மும்முனைக் கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு சந்தைக்கு உத்தரவாதத்தினை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தினை வலுப்படுத்தி பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை வழங்கும் நோக்குடன் 2021 ஒத்தோபரில் "பேரண்ட பெருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கான ஆறுமாத வழிகாட்டல்" ஒன்றினைச் சமர்ப்பித்தது. தேவையேற்படும் போது மத்திய வங்கி நடுத்தரகால எறிவுகளுடன் உறுதிநிலைப்படுத்தக்கூடிய ஆர்வலர்களின் எதிர்பார்ப்புக்களை சந்தையினை வழிநடத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்துகின்ற நாணயக் கொள்கை தொடர்பான ஊடக வெளியீடுகளைத் தொடர்ந்தும் வெளியிட்டது. சமூக இடைவெளி தொடர்பில் தற்காலிகமான கட்டுப்பாடுகள் காணப்பட்டமைக்கிடையிலும் மத்திய வங்கி நாணயக் கொள்கை ஊடக வெளியீடு தொடர்பில் இணையவழி அமர்வுகளைத் தொடர்ச்சியாக நடத்தியவேளையில் சாத்தியமான நேரங்களிலெல்லாம் நேரடியாக கலந்துகொள்ளும் அமர்வுகளையும் கிரமமாக நடத்தியது. சமூக வலைத்தளங்களூடாக அத்தகைய நேரலை நிகழ்வுகளை நடத்துவதற்குப் புறம்பாக, மத்திய வங்கி உறுதிப்பாட்டிற்கான அதன் கொள்கை, ஆர்வலர்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல் என்பனவற்றினை வலியுறுத்துகின்ற விதத்தில் மும்மொழிகளிலும் ஊடக வெளியீடுகள், இணையத்தள ஆய்வரங்குகள், ஆய்வரங்கு மற்றும் நேர்காணல் என்பனவற்றினை அடிக்கடி நடத்தியது. மேலும், உலகளாவிய நோய்த்தொற்று சவால்களை ஏற்படுத்தியமைக்கிடையிலும்கூட, ஆண்டறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட மும்மொழிப்பிரசுரங்களும் கிரமமாக வெளியிடப்பட்டன. மத்திய வங்கி அதன் அலுவல்சார் இணையத்தளத்தில் நாளாந்த, வாராந்த, மாதாந்த மற்றும் காலாண்டு இடைவெளிகளில் முக்கியமான பேரண்டப் பொருளாதாரப் புள்ளிவிபரங்களை வெளியிட்டு வருகின்றது.

7.3 பணவீக்கத்தின் அபிவிருத்திகள்

முக்கியமாக உலகளாவிய மற்றும் உள்நாட்டு வழங்கல்பக்க இடையூறுகள், உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்பட்ட உயர்வு, நிருவகிக்கப்பட்ட விலைகளில் செய்யப்பட்ட மேல்நோக்கிய திருத்தம் என்பன முக்கிய தூண்டுதலாக அமைந்த வேளையில், கேள்வி அழுத்தங்கள் படிப்படியாக உறுதியுடன் அதிகரித்தமையினையும் பிரதிபலித்து 2021இல் முதன்மைப் பணவீக்கம் விரைவடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் (2013ஸ்ரீ100) தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் (2013ஸ்ரீ100) ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் ஆண்டின் தொடக்கத்தில் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் பின்னர் உணவுப் பணவீக்கத்தினதும் அதேபோன்று உணவல்லாப் பணவீக்கத்தினதும் அதிகரிப்பின் காரணமாக அதன்பின்னர் விரைவடைந்தது. உயர்வடைந்த உணவுப் பணவீக்கத்திற்கு உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் (அரிசி, காய்கறிகள் போன்றவை) உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் காரணமாக வழங்கல்பக்கத்தில் காணப்பட்ட இடையூறுகள் பெருமளவிற்குக் காரணமாக அமைந்தன. மேலும், எண்ணெய், எரிவாயு மற்றும் குறிப்பிட்ட மற்றைய பண்டங்களின் உலகளாவிய விலைகளில் ஏற்பட்ட கடுமையான உயர்வு பொருட்கள் மற்றும் பணிகளின் உள்நாடு விலைகளின் மேல்நோக்கிய திருத்தங்கள் பலவற்றிற்கு வழிவகுத்ததுடன் அவற்றிலிருந்து கசியும் தாக்கங்கள் அதேபோன்று வெளிநாட்டு அதிர்வுகள் பலவற்றை ஈர்த்துக்கொள்ளுமொரு முறையாக உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அகற்றப்பட்டமையும் உணவுப் பணவீக்கம் மற்றும் உணவல்லாப் பணவீக்கம் இரண்டும் 2021இன் பின்னரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு விரைவடைவதற்குக் காரணமாயின. மேலும், உணவல்லாப் பணவீக்கத்தில் ஏற்பட்ட

வரைபடம் 7.3
ஆண்டுக்காண்டு முதன்மை பணவீக்கத்திற்கான
(கொ.நு.வி.சு.) பங்களிப்பு



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 7.4
ஆண்டுக்காண்டு முதன்மை பணவீக்கத்திற்கான
(தே.நு.வி.சு.) பங்களிப்பு



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

உயர்விற்கு உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான உயர்மட்ட செலவுக்காரணிகளின் காரணமாக சுகாதாரம் போன்ற வகைகளின் செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாயின. இதற்கமைய, 12 தொடர்ச்சியான ஆண்டுகளாக ஒற்றை இலக்க பணவீக்கத்தினைத் தொடர்ந்து, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2020இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 12.1 சதவீதத்திற்கு விரைவுற்றது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 4.6 சதவீதத்திலிருந்து 2021இல் 6.0 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இதேபோக்கினைத் தொடர்கின்ற விதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமும் 2020 இறுதியில் 4.6 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 14.0 சதவீதத்திற்கு விரைவுற்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுச் சராசரி பணவீக்கம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 6.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 7.0 சதவீதத்தில் பதிவுசெய்யப்பட்டது. பணவீக்கத்தின் விரைவுத்தன்மை 2022இன் தொடக்கப்பகுதியிலும் தொடர்ந்ததுடன் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 மார்சில் 18.7 சதவீதத்தினைப் பதிவுசெய்த வேளையில், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 பெப்புருவரியில் 17.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

கணிசமான நாணயத் தளர்த்தல்களின் காலம் கடந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், பணவீக்கத்தின் கேள்வித் தூண்டல்களினை அளவிடுகின்ற மையப் பணவீக்கமும் 2021இன் பின்னரைப்பகுதியில் மேல்நோக்கிய போக்கினைத் தொடர்ந்தது. 2021இன் ஆரம்பத்தில் மிதமான மட்டத்தில் தொடர்ந்து காணப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் அதன்பின்னர் விரைவடைந்தது. மையப் பணவீக்கத்தினை அளவிடுகின்ற போது தளம்பலடையும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து வகைகள் நீக்கப்பட்டபோதும், பால்மா, பாண் மற்றும் வெதுப்பக உற்பத்திகள் போன்ற குறிப்பிட்ட ஏனைய உணவு விடயங்களுக்குச் செய்யப்பட்ட பல மேல்நோக்கிய திருத்தங்கள் சுகாதாரம், உணவகங்கள் மற்றும் சுற்றுலா

7

அட்டவணை 7.2
ஆண்டுக்காண்டு பணவீக்கத்தின் அசைவுகள்

சதவீதம்

		திசெ - 16	திசெ - 17	திசெ - 18	திசெ - 19	திசெ - 20	திசெ - 21	மார்ச் - 22
முதன்மை பணவீக்கம்	கொ.நு.வி.சு. (2013=100)	**4.5**	**7.1**	**2.8**	**4.8**	**4.2**	**12.1**	**18.7**
	உணவு பணவீக்கம்	4.1	14.4	-1.5	6.3	9.2	22.1	30.2
	உணவல்லா பணவீக்கம்	4.5	4.2	4.8	4.3	2.0	7.5	13.4
	தே.நு.வி.சு. (2013=100)	**4.2**	**7.3**	**0.4**	**6.2**	**4.6**	**14.0**	**17.5 (அ)**
	உணவு பணவீக்கம்	2.3	12.8	-4.5	8.6	7.5	21.5	24.7 (அ)
	உணவல்லா பணவீக்கம்	5.8	2.9	4.7	4.2	2.2	7.6	11.0 (அ)
மைய பணவீக்கம்	கொ.நு.வி.சு. (2013=100)	**5.8**	**4.3**	**3.1**	**4.8**	**3.5**	**8.3**	**13.0**
	தே.நு.வி.சு. (2013=100)	**6.7**	**2.7**	**3.1**	**5.2**	**4.7**	**10.8**	**14.1 (அ)**

(அ) பெப்புருவரி 2022 இறுதியில்

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

வரைபடம் 7.5
ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கத்தின் அசைவுகள்



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

விடுதிகள் போன்ற உணவல்லா விடயங்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வுடன் சேர்த்து 2021இன் பிற்பகுதியில் மையப் பணவீக்கம் விரைவடைய பங்களித்தன. மையப் பணவீக்கத்தில் காணப்பட்ட அசைவுகள் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட கணிசமான இறை மற்றும் நாணயக் கொள்கைத் தூண்டுதல்களின் உதவியுடன் கேள்வி அழுத்தங்கள் படிப்படியாக கட்டியெழுப்பப்பட்டமையினைப் பிரதிபலித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2020இல் 3.5 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 8.3 சதவீதத்திற்கு விரைந்து 2022 மார்ச்சில் 13.0 இற்கு மேலும் உயர்வடைந்த வேளையில் ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 4.4 சதவீதமாகக் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் 2020 இறுதியில் 4.7 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 10.8 சதவீதத்திற்கும் 2022 பெப்புருவரியில் 14.1 சதவீதத்திற்கும் மேலும் அதிகரித்தது. ஆண்டுச் சராசரி மையப்பணவீக்கம் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 4.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 5.5 சதவீதத்தில் பதிவுசெய்யப்பட்டது. மையப் பணவீக்கத்தில் காணப்பட்ட உண்மையான மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அசைவுகள் கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்க அழுத்தங்களையும் கட்டுப்படுத்துகின்றதும் பணவீக்க எதிர்பார்ப்புக்களை உறுதிநிலைப்படுத்துகின்றதுமான நோக்குடன் நாணய நிலைமைகளை இறுக்கமாக்கும் முன்கூட்டிய நாணயக் கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வதற்கு மத்திய வங்கியைத் தூண்டின.

மத்திய வங்கியின் பணவீக்க எதிர்பார்ப்பு அளவீட்டினால் அளவிடப்பட்டவாறான கம்பனி மற்றும் வீட்டுத்துறை இரண்டினதும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் உண்மையான பணவீக்கத்தில் காணப்பட்ட அசைவுகளினால் தூண்டப்பட்டு 2021ஆம் ஆண்டுப்பகுதியில் உயர்வடைந்து காணப்பட்டன. அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்களின்படி, கம்பனி மற்றும் வீட்டுத்துறை இரண்டும் வழங்கல்பக்க இடையூறுகள் காரணமாக அண்மிய காலத்தில் பணவீக்கம் மேல்நோக்கிய போக்கினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கின்றன. மாற்றமடைந்துவருகின்ற உலகளாவிய மற்றும் உள்நாட்டு வழங்கல் மற்றும் கேள்வி நிலைமைகள், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான நடமாட்டத் தடைகள், பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு, ரூபா தேய்வடையக்கூடிய சாத்தியம், இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள், பண்டிகைக் காலத்தில் காணப்பட்ட உயர்ந்த கேள்வி, விரிவடைந்த இறைக் கொள்கைநிலை, எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளின் சாத்தியமான விலை அதிகரிப்பு, உலகளாவிய பண்ட விலைகளினதும் இறக்குமதி விடயங்களின் விலைகளிலும் சாத்தியமான அதிகரிப்பு, குறிப்பாக, வளமாக்கிக் கட்டுப்பாடுகளின் காரணமாக உள்நாட்டு நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சி, மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் மீட்சி என்பன பணவீக்க எதிர்பார்ப்புக்களில் ஏற்படும் அதிகரிப்பிற்கான காரணங்களாக அளவீட்டிற்கு பதிலிறுத்தவர்களினால் எடுத்துக்காட்டப்படுகிறது. மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளையும் அதன் மூலம் வட்டி வீதங்களில் தோன்றுகின்ற அதிகரிப்பினையும் கருத்திற்கொண்டு, ஆண்டின் பிற்பகுதியில் இனிவரும் காலப்பகுதிக்கான கம்பனித்துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருந்தது. இது, அளவீட்டிற்கும் பதிலிறுத்தவர்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, வழங்கல் நிலைமைகளில் ஏற்பட்ட மேம்பாடுகளையும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்த்தல்களையும் பிரதிபலிக்கின்றது.

7.4 வட்டி வீதங்களில் அசைவுகள்

சந்தைத் திரவத்தன்மை மற்றும் குறுங்கால வட்டி வீதங்கள்

2021 நடுப்பகுதி வரை கணிசமானளவு மிகையினைப் பதிவுசெய்த உள்நாட்டுப் பணச் சந்தையிலுள்ள ரூபாத் திரவத்தன்மை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து 2021 இறுதியில் பாரிய பற்றாக்குறை மட்டமொன்றினை அடைந்தது. முதலாந்தர சந்தை ஏலங்களில் மத்திய வங்கியினால் அரச பிணையங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியல்களின் நேரடி ஒதுக்கு என்பன உள்நாட்டுப் பணச் சந்தைக்கு கணிசமானளவு திரவத்தன்மையினை உள்ளீடு செய்தபோதும் ஏனைய பல காரணிகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் திரவத்தன்மை வீழ்ச்சியடைய காரணமாயின. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு கடன்களை மீள்கொடுப்பனவு செய்தமை, வங்கித்தொழில் முறைமையிலிருந்து பொதுமக்களினால் நாணயம் எடுப்பனவு செய்யப்பட்டமை, உள்நாட்டு வங்கிகளுடனான வெளிநாட்டு

சிறுகுறிப்பு 8
அண்மைய உலகளாவிய பணவீக்க நிகழ்ச்சிகளின் மீளாய்வு

அறிமுகம்

மத்திய வங்கிகள் அவற்றின் பிரதான அல்லது முக்கியமான குறிக்கோளாக விளங்கும் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினை, அதாவது விலை உறுதிப்பாட்டினைப் பேணுவது பற்றிய கரிசனைகளைக் கொண்டிருக்கின்றன. நாணயக் கொள்கையானது மிகையான பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் பக்கச்சார்பானதாக இருப்பதுடன் குறிப்பாக, வறிய மக்களின் கொள்வனவுச் சக்தியை பாதுகாத்துக் கொள்வதன் மூலம் குறைந்த வருமானத்தினைக் கொண்ட மற்றும் நிலையான வருமானத்தினை ஈட்டுவோருக்கு பணவீக்கமானது விகிதசமமில்லாத விதத்தில் தீங்கிழைக்கிறது. இசைவான கொள்கை முயற்சிகள் மற்றும் பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினைப் பின்பற்றுவது உட்பட, நாணயக் கொள்கை வகுப்பிற்கான தொடர்ச்சியான மேம்பாடுகள் என்பனவற்றின் காரணமாக உலகளாவிய பணவீக்கம் கடந்த பல தசாப்தங்களாக தெளிவான கீழ் நோக்கிய போக்கொன்றினைக் காட்டியது. எனினும், பல காரணங்களின் காரணமாக உலகளாவிய அதேபோன்று உள்நாட்டு ரீதியாக உயர்ந்த பணவீக்க நிகழ்ச்சிகள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. அத்தகைய அண்மைய அம்சங்கள் பற்றிய பரந்தளவிலான பகுப்பாய்வுகள் பொருத்தமான கொள்கைப் பதிலிறுப்புக்களுக்கு இன்றியமையாததாக இருப்பதுடன், இது, அத்தகைய நிகழ்வுகளை எதிர்காலத்தில் எதிர்த்துநிற்பதற்கும் மோசமான தாக்கங்களைத் தணிப்பதற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

வரலாற்றில் உயர் பணவீக்க நிகழ்ச்சிகள்

உலகப் போர் II இனை உடனடுத்து உலகளாவிய பணவீக்கம் கீழ் நோக்கிய போக்கினைக் கொண்டிருந்த போதும் கூட, விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை, அழுத்தப் பற்றாக்குறை, அடக்கி வைக்கப்பட்ட கேள்வி, சில சந்தர்ப்பங்களில் இடம்பெறக்கூடிய கொள்கை ரீதியான தவறுகள் காரணமாக சில நாடுகளில் அவ்வப்போது உயர் பணவீக்க நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த காலத்தில் உலகளாவிய பணவீக்கத்தின் போக்கில் வேறுபட்ட போக்குகளும் குணாதியங்களும் பொருளாதாரங்களின் வேறுபட்ட வகுப்புக்களின் அடிப்படையில் காணப்பட்டமையினை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன (வரைபடம் சி.கு.8.1).

தங்க மாற்றல் ஆரம்பமாகியதன் காரணமாக பொருளாதாரத்தின் மீது பணவீக்க அழுத்தங்கள் ஏற்பட வழிவகுத்தமையின் மூலம் 1960 களின் பிற்பகுதியில் பாரிய நாணய விரிவாக்கத்தின் காரணமாக ஐ.அ.டொலர் மீது ஏற்பட்ட தீவிரமடைந்த அழுத்தங்கள் நாட்டின் சென்தி நிலுவை பற்றாக்குறையினூடாக உலகின் எஞ்சிய பகுதிகளுக்கும் பரவியது. இது, 'பாரிய பணவீக்க' யுகத்தின் ஆரம்பம் எனக் குறிப்பிடப்படுவதுடன், ஐக்கிய அமெரிக்காவின் அதிகாரிகளினால் தங்கத்திற்கு டொலர்களை மாற்றுகின்ற முறை இடைநிறுத்தப்பட்டமையுடன் சேர்த்து

வரைபடம் சி.கு. 8.1
உலகளாவிய பணவீக்கம் (1970 – 2020)



மூலம் : Ha, J.M.et al. (2021)

குறிப்பு: உலகளாவிய பணவீக்கம் என்பது 193 நாடுகளின் சராசரி முதன்மை நுகர்வோர் பணவீக்கமாகும். முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் 36 நாடுகளிலுள்ள பணவீக்கத்தினையும் தோற்றம்பெற்று வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் 157 நாடுகளிலுள்ள பணவீக்கத்தினையும் உள்ளடக்குவதுடன் இதில் 27 நாடுகள் குறைந்த வருமான நாடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1970களின் ஆரம்பத்தில் பிறெட்டன்வூட் உடன்படிக்கை[1] தகர்ந்து போவதற்கு வழிவகுத்தது. எனினும், அரபு பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பினால் விதிக்கப்பட்ட வணிகத் தடை உருவாக்கத்துடன் 1973இல் தோற்றம்பெற்ற எண்ணெய் உயர்வுடன் உலகளாவிய சராசரி நுகர்வோர் விலைப் பணவீக்கம் 1974இல் உச்சம் தொட்டது. முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் நாணயக் கொள்கையை இறுக்கமாக்கியதன் மூலம் விலை அதிர்வுகளுக்குப் பதிலிறுத்தியதுடன் அதன் விளைவாக, கொள்கை பரிமாற்றமொன்றாக 1980களின் நடுப்பகுதியில் மட்டும் வீழ்ச்சியடைந்த பணவீக்கத்தின் போக்கு 1980களின் தொடக்கத்தில் ஏற்பட்ட எண்ணெய் விலைகளின் உயர்வினால் இடையூறுகளுக்குட்பட்டதுடன் இதற்கு ஈரானிய புரட்சியும் அதனைத் தொடர்ந்து வந்த ஈரான்-ஈராக் போரும் காரணங்களாயின. இதன்படி, முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களிலுள்ள 1974இல் இரட்டை இலக்க மட்டங்களில் காணப்பட்ட சராசரி நுகர்வோர் விலைப் பணவீக்கம் 1986இல் ஒன்றை இலக்கத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் ஆழமான மந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் கூட, மத்திய வங்கியின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்தியது. இது 1976 இலிருந்து 1981 வரையான ஐந்தாண்டுகளுக்கிடையில் ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீதங்கள் நான்கு மடங்காகியதில் பிரதிபலிக்கப்பட்டது. இதன் காரணமாக 1981 தொடக்கத்திற்கும் 1982 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கடுமையான சுருக்கமொன்று தோற்றுவிக்கப்பட்டது. ஐரோப்பாவிலுள்ள முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களும் கூட, பணவீக்கத்தில் காணப்பட்ட உச்சத்தன்மைக்கு மிகக் கடுமையான விதத்தில் பதிலிறுத்தமையானது, 'பெருமளவிற்கு மிதமான தன்மை' என அழைக்கப்பட்ட காலப்பகுதியில் பணவீக்கம் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டமையானது கொள்கை வழிமுறைகளினூடாகப் பேரண்டப் பொருளாதாரம் உறுதித்தன்மையடைவதற்கு

1 பிறெட்டன் வூட்ஸ் முறைமை மீது உடன்பாடுகொள்வதற்கு 44 நாடுகளிலிருந்தான பிரதிநிதிகள் ஐக்கிய அமெரிக்காவில் பிறெட்டன் வூட்ஸ், நியூ கம்ப்சையரில் 1944 யூலையில் சந்தித்தனர். இங்கு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு தங்கம் அடிப்படையாகும் என்ற நிர்ணயிக்கப்பட்டதுடன் ஏனைய நாணயங்கள் ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதியுடன் நிலைப்படுத்தப்பட்டன.

காலம்	உயர் பணவீக்கத்திற்கான காரணங்கள்
1973-1982	இரண்டு எண்ணெய் விலை உயர்வுகள் முதலாவது அரபு பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட வணிகத் தடையினால் ஏற்பட்டது. இரண்டாவது ஈரானிய புரட்சி மற்றும் ரான் - ஈராக் போரின் காரணமாக எண்ணெய் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் உருவானது.
2008	2004 இலிருந்து 2008 வரையான காலப்பகுதியில் அதிகரிதத உணவு விலைகள் மற்றும் மும்மடங்காக அதிகரித்த எண்ணெய் விலைகள் உள்ளிட்ட உலகளாவிய கேள்வித் தூண்டல் காரணிகள். இதற்கு ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட மேலதிகத் தளர்த்தல் நாணயக் கொள்கை நிலைமைகளின் கசிவுத் தாக்கமும் பங்களித்தது.
தற்போதைய நிகழ்ச்சி 2021 இலிருந்து	வழங்கல் சங்கிலிக்கு ஏற்பட்ட கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான இடையூறுகள், அதிகரித்த வலு மற்றும் பண்ட விலைகள், அதிகரித்த வளமாக்கி விலைகள், அதிகரித்த புவிசார் அரசியல் பதற்றங்களின் காரணமாக ஏற்பட்ட குழப்பநிலை மற்றும் வழமைப்படுத்தல் நடவடிக்கையின் காரணமாக கேள்வி நிலைமைகளின் மீளெழுச்சி.

பெருமளவிற்கு காரணமாகியது. உயர் பணவீக்கத்தினைக் காட்டிய பெரும்பாலான நாடுகள் அவர்களின் கொள்கைக் கட்டமைப்பாக பணவீக்க இலக்கிடலைப் பின்பற்றியதுடன் குறைந்த தளம்பல்களுடன் உலகளாவிய குறைப் பணவீக்கத்தினையும் தோற்றுவித்தது. எனினும், தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களும் தாழ்ந்த வருமான நாடுகளும் உயர் பணவீக்க வீதங்களைச் சரிசெய்வதில் தாமதமான அனுபவங்களைக் கொண்டிருந்ததுடன் இவை பொதுவாக 1990களின் நடுப்பகுதியில் ஆரம்பமாகின. இதற்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் கலாச்சாரம் விடாப்பிடியான மற்றும் கணிசமான இறை மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை போன்ற அவர்களது பொருளாதாரங்களில் காணப்பட்ட அமைப்பியல் பிரச்சனைகள் பெரும்பாலும் காரணங்களாயமைந்தன. சில சமயங்களில் இவை, நிலையான செலாவணி வீத அமைப்புக்கள், பண்ட ஏற்றுமதியாளர்களுக்கான மோசமடைந்த வர்த்தக மாற்று விகிதம் மற்றும் கைத்தொழில் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் வழங்கல்பக்க பிரச்சனைகள் போன்ற சமாந்தரமான பிரச்சனைகளையும் கொண்டிருக்கக்கூம். இப்பொருளாதாரங்களிலுள்ள பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், சில விடயங்களைப் பொறுத்தவரையில், உள்நாட்டுப் போர்களுக்கு மத்தியிலும் 1989 இலிருந்து 1994 வரையான காலப்பகுதியில் கடுமையான உற்பத்தி இழப்புக்களை தோற்றுவித்திருந்தன.

பொருளாதாரங்கள் உலகளாவிய நிதியியல் நெருக்கடியினை நோக்கி நகரும் வரை, 2000 களின் தொடக்கத்தில் குறிப்பிடடதொரு காலப்பகுதியில்

வரைபடம் சி.கு. 8.2
2000ஆம் ஆண்டிலிருந்து உலகளாவிய பணவீக்க இயக்கவாற்றல்
(ஆண்டிற்கு ஆண்டு காலாண்டு ரீதியான
நுகர்வோர் விலைப் பணவீக்கம்)



மூலம் : Global Projection Model Network
இலங்கையின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

உலகளாவிய பணவீக்கத்தில் காணப்பட்ட கீழ் நோக்கிய போக்கு நிறுத்தப்பட்ட போது, உலகளாவிய வலு விலைகளும் உணவு விலைகளும் உயர்வடைந்தன. இதற்கு குறிப்பாக வலுவில் ஏற்பட்ட விரைந்த வளர்ச்சி காரணமாக அமைந்ததுடன் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் பண்டங்களைத் தீவிரமாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சியின் மீது பெருமளவிற்குத் தங்கியிருந்தன. வலுவான கேள்வி வலு விலைகளை விடாப்பிடியாக மேல் நோக்கித் தள்ளியதுடன் உணவு விலைகள் நிதியியல் நெருக்கடியுடன் தகர்ந்து போகும் வரை மேல் நோக்கி அசைந்தன. வலு விலைகளின் உயர்விற்க மந்தமான வழங்கல் செயலாற்றத்தினால பெருமளவிற்கு தூண்டப்பட்டவிடத்து, உற்பத்தி மற்றும் பகிர்ந்தளிப்பு இயலாற்றல் விரைவாக அதிகரிக்கின்ற கேள்விக்கு பதிலிறுத்துகின்ற விதத்தில் கட்டியெழுப்பல் மெதுவாகக் காணப்பட்டது. உணவு விலைகளும் நிலவிய உயர்ந்த பணவீக்கத்திற்கு தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களிலிருந்தான கேள்வியுடன் சேர்ந்து பங்களித்ததுடன் சாதகமற்ற வானிலை நிலைமைகள் உணவு ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றமை, சீனா, உக்ரேன் மற்றும் ஆர்ஜென்ரீனா போன்ற முக்கிய தானிய ஏற்றுமதி நாடுகளினால் நடைமுறைக்கிடப்பட்ட ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் உட்பட ஏனைய பல காரணங்களும் காணப்படுகின்றன.

எனினும், நெருக்கடியினை உடனடுத்து, பணவீக்கம் குறைந்த மட்டங்களை அடைந்தவிடத்து, உலகளாவிய வருடாந்த சராசரி பணவீக்கம் 2017 அளவில் 2.6 சதவீதத்தினை அடைந்தது. குறிப்பாக, 2015இல் முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் ஏறத்தாழ அரைப்பங்கு எதிர்க்கணிமான பணவீக்க வீதங்களைப் பதிவுசெய்தன. ஒவ்வொரு நான்கில் மூன்று பங்கு பொருளாதாரங்கள் தாழ்ந்த ஒற்றை இலக்க பணவீக்கத்தினைப் பதிவுசெய்துள்ளன (ஜோன்கிறம் க உம் மற்றையவர்களும்). பணவீக்க இலக்கிடலை நடைமுறைப்படுத்துகின்றவைகள் உட்பட, தோற்றம்பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களைப் பொறுத்தவரையில் குறைப் பணவீக்கம் முனைப்பானதாகக் காணப்பட்டதுடன்

ஒவ்வொரு ஐந்தில் மூன்று பொருளாதாரங்களும் பணவீக்க வீதங்களை இலக்கிடல் மட்டங்களுக்கு கீழேயே பதிவுசெய்கின்றன.

2021 முதலான உயர் பணவீக்க நிகழ்ச்சி

தற்போதைய உயர் பணவீக்க நிகழ்ச்சி பல்வேறு செலவுத் தூண்டல்கள் மற்றும் கேள்வித் தூண்டல் காரணிகள் இணைந்தமையின் காரணமாக தோற்றம் பெற்றமையினால் அது முன்னைய நிகழ்ச்சிகளிலும் பார்க்க பெருமளவிற்குப் பரந்ததாகவும் விடாப்பிடியான தன்மையினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக வலுவுடன் தொடர்பான அத்துடன் வேளாண்மைப் பண்டங்கள் உட்பட முக்கிய பண்டங்களின் வழங்கல்பக்க இடையூறுகள், வழங்கல் சங்கிலி பிரச்சனைகள், தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பியமையின் காரணமாக பொருட்கள் மற்றும் வணிகளுக்கான கேள்வி அதிகரித்தமை என்பன இந்நிகழ்விற்கு முக்கிய பங்களிப்புக் காரணிகளாக விளங்கின. 2022 பெப்புருவரி பிற்பகுதியிலிருந்து ஆரம்பமான ருஷ்யா - உக்ரேன் போரின் காரணமாக உருவான புவிசார் அரசியல் பதற்றம் காரணமாக உயர்த்தப்பட்ட பணவீக்கம் நிச்சயமற்ற தன்மைகளிலிருந்து கிளைவிட்ட பல்முனைகளிலிருந்தான தாக்கத்தினால் மேலும் உயர்வடைந்ததுடன் பண்ட விலைகளின் உயர்வும் இப்பணவீக்கத்திற்குப் பங்களித்தன.

பணவீக்கத்தின் வழங்கல்பக்கத்துடன் தொடர்பான இக்காரணங்களுடன் சேர்ந்து, உலகம் முழுவதிலுமுள்ள நாணய மற்றும் இறை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட ஏராளமான கொள்கைத் தூண்டல்கள் அதேபோன்று, உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் பொருளாதாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கான பல்புடை நிறுவனங்களிலிருந்தான மேலதிகக் கொள்கை ஆதரவுகளும் பணவீக்கத்திற்கு மேலும் எண்ணெய் வார்த்திருக்கலாம் போல் தோற்றுவதுடன் வழங்கல்பக்கக் காரணிகளினால் தோற்றம்பெற்ற பணவீக்கம் ஆரம்பத்தில் எதிர்பார்ப்பதனைவிட நீண்ட காலத்திற்கு விடாப்பிடியாக தொடரும் போல் தெரிகிறது. இவ்விசைகளின் இணைந்த தாக்கம், பணவீக்க இலக்கிடல்களிலும் பார்க்கவும். பொருளாதார அந்தஸ்தினைக் கருத்திற்கொள்ளாது பல

வரைபடம் சி.கு. 8.3

நாடுகளின்படி பணவீக்கத்தின் குணாம்சங்கள்

மத்திய வங்கியின் சுயாதீனம் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையின்படி பணவீக்கம்



நாடுகளின் குழுமப்படி பணவீக்கத் தளம்பல்



பொதுப்படுகடன் வீதத்தின்படி சராசரி மையப் பணவீக்கம்



செலாவணி வீத அமைப்பின்படி சராசரி மையப் பணவீக்கம்



மூலம் : Ha, J.M.et al. (2021)

பொருளாதாரங்களில் வரலாற்றில் காணப்பட்ட சராசரிகளிலும் பார்க்கவும் பல மடங்கு உயர்ந்த பணவீக்கத்திற்கு வழிவகுத்தது. இதன்படி, 2021இல் உலகளாவிய பணவீக்கம் ஏறத்தாழ 14 ஆண்டுகளிலேயே மிக உயர்ந்த மட்டத்தினை அடைந்தது. ஐக்கிய அமெரிக்கா 40 ஆண்டுகளில் முதற்றடவையாக மிக உயர்ந்த பணவீக்கத்திற்கு உட்பட்டிருந்ததுடன் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பு 2022 பெப்புருவரியில் 7.9 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. 2022 பெப்புருவரியில் ஐக்கிய இராச்சியம் மற்றும் நியூசிலாந்து பொருளாதாரங்கள் கடந்த 12 மாதங்களில் முறையே 6.2 சதவீதம் மற்றும் 5.9 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தமையின் மூலம் கடந்த மூன்று தசாப்தங்களிலேயே மிக உயர்ந்த பணவீக்க மட்டங்களைப் பதிவுசெய்தன. முன்னணிப் பொருளாதாரங்களிலும் அதேபோன்று தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலும் தொடர்ச்சியாகக் காணப்பட்ட போக்கு 2022இல் பணவீக்க அழுத்தங்களைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. யூரோ வலையத்திலும் கூட பணவீக்கம் பெருமளவிற்கு அதிகரித்து 2021இல் ஏறத்தாழ 5.0 சதவீதமாகக் காணப்பட்டது.

தற்போதைய உயர் பணவீக்க நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் இப்பணவீக்க அழுத்தங்கள் தற்காலிகமானவை எனப் பரந்தளவிற்கு நம்பப்படுவதனால், நாணயக் கொள்கையினூடாகப் பதிலிறுத்துவது உலகளாவிய நோய்த்தொற்றிற்கு பின்னைய காலப்பகுதியில் வளர்ச்சியின் மீட்சியைப் பாதிக்கக்கூடும் என்பதனால் அதற்கான தேவை தோன்றவில்லை போல் தெரிகிறது. எனினும், தற்பொழுது காணப்படுகின்ற வழங்கல் சங்கிலிக்கான இடையூறுகள் மற்றும் உயர்ந்த வலு விலைகள் என்பனவற்றின் காரணமாக உலகளாவிய பணவீக்கம் முன்னர் உலகளாவிய சிந்தனையாளர்களினால் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மிக நீண்ட காலத்திற்கு மிகப்பெரும் அளவில் விடாப்பிடியாகத் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. இது, பொருளாதார வளர்ச்சி தொடர்பான உறுதிப்பாட்டிற்கு முன்னுரிமையளிக்கின்ற சிந்தனைகளுக்கு கொள்கை வகுப்போர் கவனம் செலுத்த வேண்டிய தேவையினை ஏற்படுத்தியுள்ளதுடன், முன்னேற்றம் கண்ட, தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் முடிவுறுத்தல் கொள்கைத் தூண்டல்களை ஆரம்பித்துள்ளதுடன், இறுக்கமான கொள்கை வட்டி வீதங்களின் மூலம் தீவிரமான நிலையொன்றினைப் பின்பற்றத் தொடங்கியிருப்பதுடன், பணவீக்கத்திற்கெதிராகப் போரிடுவதற்கான முன்னோக்கிய வழிகாட்டல்களினூடாக மேலும் இறுக்கமாக்குவதற்கான அவர்களின் கடப்பாட்டினை தெரியப்படுத்தியிருக்கின்றனர். இறுக்கமான உலகளாவிய நாணய நிலைமைகளின் பெறுபேறு உலகளாவிய பணவீக்கத்தினை, கொள்கை வகுப்புடன் மீண்டும் விரும்பத்தக்க மட்டமொன்றில் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேள்விப்பக்க வழிமுறைகளுக்குப் புறம்பாக, சில நாடுகள் யதார்த்தமான தாங்கிருப்புக்களைப் பேணுவதற்காக எதிர்பார்ப்புக்களைக் கொண்ட பாரம்பரிய வேளாண்மை நடைமுறைகள், அத்தியாவசிய பண்டங்களின் விலை உயர்வுகளைத் தவிர்க்கும் விதத்தில் இறக்குமதிக் கொள்கைகளைத் திருத்துதல் போன்ற குறிப்பிட்ட வழங்கல்பக்க வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் சாத்தியம் பற்றியும் ஆராய்ந்து வருகின்றன.

பொதுவாக மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கொள்கைப் பதிலிறுப்புக்கள்

பொதுவாக, உயர் பணவீக்க நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக, அரசாங்கத்தின் பொருத்தமான இறைக் கொள்கைகளின் ஆதரவுடன் மத்திய வங்கிகளினால் நாணய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மத்திய வங்கிகள் கடன்பாட்டுச் செலவுகளை அதிகரிப்பதற்கும் அதன் மூலம் வாடிக்கையாளரின் செலவிடல் தொகையினை ஊக்கமிழக்கச் செய்வதற்குமாக கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்துள்ளன. இறைப் பக்கத்தில் அரசாங்கம், கேள்வியினால் தூண்டப்படும் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக வரிகளை அதிகரிப்பதன் மூலமும் அரச செலவிடலைக் குறைப்பதன் மூலமும் பணவீக்க அழுத்தத்தினைக் குறைக்கிறது. அத்துடன் விலைக் கட்டுப்பாடுகளும் உதவுதொகைகளும் செலவினால் தூண்டப்படும் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் விதத்தில் உற்பத்திச் செலவினைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய வகிபாகத்தினை ஆற்றி வருகின்றன.

மிக முக்கியமாக, வெளிப்படையானதும் சுயாதீனமானதுமான மத்திய வங்கிகளினால் பொருளாதார ஆர்வலர்களிடையே நம்பகத்தன்மையினை நிறுவுவதனூடாக பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிறுத்துவதன் மூலம் விரைவான வீதத்தில் பணவீக்கத்தினைக் குறைக்கமுடியும். பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டின் மீது மத்திய வங்கியின் சுயாதீனமான தாக்கங்கள் தொடர்பான அநேக மதிப்பீடுகள் மத்திய வங்கியின் சுயாதீனத்திற்கும் பணவீக்கத்திற்குமிடையிலான எதிர்மறையான தொடர்புகளைக் கண்டறிந்திருக்கின்றன (புறூம் 2002, 2011 ஹாரிகயா மற்றும் றொட்டிகுயிஷ் 2020 பேர்கர், த ஹான் மற்றும் எஜிப்பின்கர் 2001). அனுபவ ரீதியாக, மத்திய வங்கியின் வெளிப்படைத்தன்மை முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிறுத்த உதவியிருப்பதனைக் காணமுடிவதுடன் இதன் மூலம் உறுதிப்பாடு, பணவீக்கம் மற்றும் பணவீக்கத்தில் காணப்படும் நிச்சயமற்றதன்மையினைக் குறைத்தல் என்பனவற்றை மேற்கொள்ள முடிகிறது (வான் டெர் குறூ ஜ்சென் மற்றும் டெமேட்ற்சிஸ் 2007 டெமேட்ற்சிஸ் மற்றும் கலட் 2007 வெர்பர் 2016 சிக்லோஸ் 2003). பொதுவாக, நிறுவனங்களை வலுப்படுத்தல், மத்திய வங்கித்தொழில் பெருமளவு சுயநிர்ணயம் மற்றும் பொருத்தமான இறைச் சூழலை உருவாக்குதல் போன்ற பொருத்தமான சமநிலைப்படுத்தல் கொள்கைகள் அமைப்பியல் ரீதியாக விடாப்பிடியாகக் காணப்படும் பணவீக்கத்தினைக் குறைக்க உதவும். மேலும், கொள்கைக் கடப்பாடுகள் போன்றவை, தற்காலிகமான வழங்கல் தூண்டல் பணவீக்க அழுத்தங்களை வெற்றிகரமாக கையாள்வதற்கு ஒரு கருவியாக விளங்குவதுடன் இவ்வழுத்தங்களைப் பொருளாதார முகவர்களினால் நன்கு நிறுத்தப்பட்ட எதிர்பார்ப்புக்களின் மூலம் தற்காலிகமாகவே நீடிக்க முடியும்.

வரலாற்று ரீதியான பணவீக்க போக்கினை ஆராயும் போது, அபிவிருத்தியடைந்த மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களை ஒப்பிடும் போது, பல அபிவிருத்தியடைந்துவரும் அல்லது தாழ்ந்த வருமான நாடுகள் தொடர்பான காலப்பகுதியில் உயர்ந்தளவிற்கு

வரைபடம் சி.கு. 8.4

கொ.நு.வி. சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்கள்)



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கைகள்

வேறுபாடுகளைக் கொண்டிராத பணவீக்கத்தினைக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்நாடுளில் தாழ்வானதும் உறுதியானதுமான பணவீக்கத்தினை எய்துவதும் பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிறுத்துவதும் மத்திய வங்கிகளுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு சவால் நிறைந்ததாகவே இருக்கும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படும் பணவீக்கம் எண்ணெய் விலைகள் மற்றும் உணவு விலைகள் போன்ற வெளிநாட்டு அதிர்வுகளுக்கு இலகுவில் உள்ளாகும் தன்மையினைக் கொண்டிருந்த போதும், அநேகமான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உறுதியான மற்றும் விடாப்பிடியான பணவீக்க வீதங்களை நிரூபிக்கின்ற சில காரணங்களாக உயர் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் மத்திய வங்கியின் நிதியிடல் பற்றாக்குறை உள்ளிட்ட அமைப்பியல், உயர்ந்த அரச செலவினம், உயர் இராணுவச் செலவினம், குறைந்த உற்பத்தியாக்கம், அடிக்கடி ஏற்படும் வானிலைத் தாக்கங்கள், பொருளாதார முகவர்களினால் விடாப்பிடியான உயர்ந்த பணவீக்க எதிர்பார்ப்புக்கள், மிகையான பணவீக்க நிரம்பல் மற்றும் உறுதியற்ற செலாவணி வீதம் என்பன காணப்படுகின்றன.

வரைபடம் சி.கு.8.3 நாடுகளுக்கிடையே பணவீக்கத்தின் அடிப்படைக் கேள்வித் தூண்டல் கூறுகளினை அளவிடுகின்ற உள்நாட்டு மையப் பணவீக்கத்திலுள்ள தூண்டல் பணவீக்கத்தினை உலகளாவிய காரணிகளின் தாக்கத்தினைக் காட்டுகின்றது.

இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கை, கட்டுப்பாட்டு விலைகள் என்பன பணவிக்கத்தினைக் கட்டுப்படுத்த உதவியதுடன், பணவீக்க அழுத்தங்களின் தாக்கம், காசு மாற்றல்கள், உணவு உதவுதொகை போன்ற பாதுகாப்பு வலையமைப்பு தலையீடுகளினூடாக காலத்திற்குக் காலம் ஓரளவிற்குக் குறைக்கப்பட்டன. அநேகமான அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் இறை விதிகள் உட்பட, பொருளாதாரங்களில் தடுக்கின்ற இணைச் சுழற்சி கொள்கைகளின் தீவிரமான பயன்பாடானது உலகளாவிய அதிர்வுகளின் தாக்கத்திலிருந்து பொருளாதாரங்களைப் பாதுகாக்க உதவுகிறது.

இலங்கையில் உயர் பணவீக்க நிகழ்ச்சிகள்

இலங்கையின் பொருளாதாரமும் உலகளாவிய பணவீக்க இயக்கத்தன்மை, செலவுத் தூண்டல் காரணிகள் மற்றும் கேள்வி முகாமைத்துவத்தில் அமைப்பியல் வரையறைகள் என்பனவற்றிற்கு விதிவிலக்கானதல்ல. இலங்கையும் நிலையற்ற வழங்கல்பக்க இடையூறுகள், குறிப்பாக வானிலையுடன் தொடர்பான மற்றும் பன்னாட்டு பண்ட விலைகளில் ஏற்பட்ட உயர்வுகள், பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு ஆதரவளிப்பதற்கான நாணய விரிவாக்கத்தன் காலம் கடந்த தாக்கத்துடன் சேர்ந்து கொண்டதன் காரணமாக பல காலமாக உயர் பணவீக்க நிகழ்ச்சித்திட்டங்களுக்குள்ளானது. இருப்பினும் கூட, கொள்கை உருவாக்கம் கொள்கைத் தொடர்பூட்டல் என்பனவற்றிற்குச் செய்யப்பட்ட தொடர்ச்சியான மேம்பாடுகளின் உதவியுடன் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இலங்கை குறைந்ததும் உறுதியானதுமான மட்டங்களில் பணவீக்கத்தினைப் பேணியது. அதேநேரம், அத்தியாவசிய பண்டங்கள் மீதான குறிப்பிட்ட வரிகள் குறைக்கப்பட்டன. குறிப்பிட்ட பண்டங்களின் இறக்குமதி, குறிப்பிட்ட பண்டங்களுக்கான உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டமை என்பனவற்றின் மூலமாக அரச தலையீடுகளூடாக மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளிகளுக்குள்ளும் வழங்கல்பக்கக் கரிசனைகள்

தற்காலிகமாகக் கட்டுப்படுத்தப்பட்டன. மத்திய வங்கி, கேள்வித் தூண்டல்களினால் ஏற்படும் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காக நாணயக் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் நாணயக் கொள்கைக் கட்டமைப்பினைப் பின்பற்றுவது நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு ஆதரவளிக்கின்ற வேளையில் மத்திய வங்கியின் வெளிப்படையான தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் உறுதிப்படுத்துவதன் மூலம் நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை குறைந்த மற்றும் உறுதியான மட்டத்தில் பேணும் நோக்குடன் அதிகரித்துச் செல்லும் முன்னோக்கிய பார்வையுடன் நாணயக் கொள்கைகளை நடத்துவதற்கு மத்திய வங்கிக்கு உதவியிருக்கிறது. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க இலக்கிடல்களை எய்துகின்ற நோக்கத்துடன் தொடர்புபட்டதாக இருப்பதனால் இதனை பணவீக்க எதிர்வுகூறல்களினூடாக மிக நெருக்கமாகக் கண்காணிக்க முடியுமென்பதுடன், நாணயக் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்கின்ற செய்முறைக்கு, விரும்பத்தக்க இலக்குகளிலிருந்து பணவீக்க எதிர்வுகூறல்கள் புறள்வுகள் மீதான முன்னோக்கி மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வின் மூலம் வசதியளிக்கப்படுகிறது. ஆகவே, பணவீக்கத்தினை விரும்பத்தக்க இலக்கு மட்டங்களுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கும் அதேவேளை பணவீக்க எதிர்பார்ப்புக்களைச் சரியான முறையில் நிறுத்துவதற்கும் அத்தகைய பிறழ்வுகளுக்கான அதிர்வுகளை முன்கூட்டிய கொள்கை வழிமுறைகளினூடாக சரியான நேரத்தில் கட்டுப்படுத்தவும் முடியும்.

உலகம் முழுவதிலுமுள்ள அநேக நாடுகளைப் போன்றே இலங்கையும் உயர்மட்ட பணவீக்கத்திற்கு உள்ளாகியிருக்கிறது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் உருவாக்கப்பட்ட சூழ்நிலைகளுக்குப் புறம்பாக, அண்மையில் பணவீக்கத்தில் ஏற்பட்ட விரைவான தன்மையானது எரிபொருள் மற்றும் சில அத்தியாவசிய இறக்குமதிப் பண்டங்களை உள்ளடக்கிய பன்னாட்டு பண்ட விலைகளிலிருந்து தோன்றிய வழங்கல்பக்க காரணிகளினால் தூண்டப்பட்டது. விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை மற்றும் அவற்றின் கசியும் தாக்கங்கள் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான கொள்கைத் தூண்டல் வழிமுறைகளிலிருந்து தோன்றிய பணவீக்க அழுத்தங்களின் கேள்வித் தூண்டல் கட்டியெழுப்பப்பட்டமையும் பணவீக்கத்திற்குப் பங்களித்தன. அடிப்படை கேள்வி நிலைமைகளிலிருந்து அதிகரித்துவரும் அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், தளம்பல் உணவு விலைகள், வலு மற்றும் போக்குவரத்துச் செலவுகளை உள்ளடக்காத மையப் பணவீக்கம் மற்றைய நாடுகளைப் போன்று அதிகரித்துச் செல்லும் போக்கினை எடுத்துக்காட்டியது. அத்தகைய கேள்வித் தூண்டல் அழுத்தங்கள் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளினூடாகவும் முன்னர் இலக்கிடப்பட்ட வீச்சிற்குள் பணவீக்கத்தினை மீண்டும் கொண்டுவரும் கடப்பாட்டினை வலியுறுத்துகின்ற தொடர்பூட்டலினூடாகவும் கவனமாக மேற்கொள்ளப்பட்டன. எனவே, மத்திய வங்கி கொள்கை வீதங்களைத் தீவிரமானதொரு முறையில் அதிகரித்த வேளையில் பொருளாதார மீட்சிக்கு குறைந்தளவு இடையூறுகளை மாத்திரம் ஏற்படுத்தக்கூடிய விதத்தில் சாத்தியமானளவு கூடியளவு வேகத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு பணவீக்கம் திரும்புவதனை உறுதிப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான கொள்கைகள் பின்பற்றப்பட்டன. இருப்பினும் கூட, வழங்கல்பக்க கரிசனைகளை வெற்றிக் கொள்வதற்கு அரசாங்கத்தின் தலையீடுகள் தொடர்ந்தும் காணப்படுவது இன்றியமையாததாகவுள்ள வேளையில், பொருளாதாரத்தில் காணப்படும் மிகையான பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாணயக் கொள்கை தூண்டல் வழிமுறைகளை இயலுமைப்படுத்துவதும் இதன் மூலம் கொள்கைகளை உத்வேகப்படுத்தி இணைப்பதும் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். மத்திய வங்கியின் தலையீடு பொருளாதார முகவர்களின் ஊகங்களிலிருந்து கட்டியெழுப்பப்படுகின்ற பணவீக்க அழுத்தங்களையும் இதன் மூலம் பணவீக்க எதிர்பார்ப்புக்களையும் கட்டுப்படுத்துவது மிக முக்கியமானதாகும். வழங்கல்பக்க இடையூறுகளிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் மோசமான பணவீக்க அழுத்தங்களை நேர காலத்துடன் கண்டறிவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நேரகாலத்துடன், முன்கூட்டிய கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்கு அலுவலகத்தினால் பொறிமுறையொன்று நிறுவப்படுவது மிக முக்கியமானதாகும். பணவீக்கத்தின் உறுதியானதும் ஆரோக்கியமானதுமான ஆடம்பரம் மிகுந்த தன்மையினை அனுபவிப்பதற்கு மீண்டும் பழைய இலக்குகளை நோக்கி விரைவாக நகர விரும்புகின்ற எந்தவொரு நாட்டிற்கும் அத்தகைய கொள்கைக் கலப்பு முக்கயமானதாகும் என்பதுடன் இதன் மூலம் மக்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தினை உறுதிப்படுத்துகின்ற நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

உசாத்துணைகள்

1. Berger, H., Haan, J. De and Eijffinger, S. C. W. (2001) 'Central bank independence: an update of theory and evidence', Journal of Economic Surveys, 3-40.
2. Brumm, H. J. (2011) 'Inflation and central bank independence: Two-way causality?', Economics Letters, 220-222.
3. Garriga, A. and Rodriguez, C. (2020) 'More effective than we thought: Central bank independence and inflation in developing countries', Economic Modelling, 87-105.
4. Ha, J. M., Kose, A. and Ohnsorge, F. (2019) Inflation in Emerging and Developing Economies and Developing Economies. World Bank Group.
5. Ha, J. M., Kose, A. and Ohnsorge, F. (2021) 'One-Stop Source, A Global Database of Inflation', Policy Research Working Paper, (9737). World Bank Group.
6. Kwon, G., L. McFarlane, and W. Robinson, (2009) 'Public Debt, Money Supply, and Inflation: A Cross-Country Study', IMF Staff Papers, (56(3)), 476-515.
7. Rouse, C. C., Zhang J., and Tedeschi, E. (2021) 'Historical Parallel's to Today's Inflationary Episode'.
8. Weber, C. S. (2016) 'Central Bank Transparency and Inflation (Volatility)—New Evidence', International Economics and Economic Policy, (15), 21-67.

வரைபடம் 7.6
உள்நாட்டு பணச்சந்தையில் ரூபாயின் திரவத்தன்மை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

நாணய வாங்கல்-விற்றல் பரஸ்பர பரிமாற்றல்களின் முதிர்வுகள் என்பன உள்நாட்டு பணச் சந்தையில் திரவத்தன்மை தொடர்ந்து குறைவடைய வழிவகுத்து, 2021 ஓகத்து நடுப்பகுதியில் சிறிதளவு பற்றாக்குறை ஏற்படக்காரணமாகியன. உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மையானது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு விகிதம் 2021 செத்தெம்பரில் 2.0 சதவீதப் புள்ளியினால் 4.0 புள்ளிக்கு அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக திரவத்தன்மை நிரந்தரமாக ஈர்க்கப்பட்டதுடன் மேலும் குறைவடைந்தது. அதேநேரம் 2021 ஓகத்து நடுப்பகுதியில் நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து, மத்திய வங்கி குறுங்கால சந்தை வட்டி வீதங்களை வழிப்படுத்தும் பொருட்டு சந்தையிலிருந்து மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. அதேவேளை, மத்திய வங்கி குறிப்பிட்ட வங்கிகளின் திரவத்தன்மை அழுத்தத்தினைத் தளர்த்துவதற்காக நீண்டகால அடிப்படையில் திரவத்தன்மையினை உள்ளீடு செய்யும் விதத்தில், தேவையைப் பொறுத்து நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. அத்தியாவசியப் பொருட்களின் இடையூறுகளற்ற இறக்குமதிக்கு வசதியளிப்பதற்காக வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதற்காக மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் தலையிட்டமையும் சந்தை திரவத்தன்மை குறைவதற்குக் காரணமாகியது. இவ்வபிவிருத்திகளை கவனத்திற்கொண்டு, 2021இன் முதலரைப்பகுதியில் ஏறத்தாழ ரூ.137 பில்லியன் மிகையினைப் பதிவுசெய்த உள்நாட்டு பணச் சந்தையின் நாளாந்த சராசரி திரவத்தன்மை 2021இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் ஏறத்தாள ரூ.205 பில்லியன் கொண்ட பற்றாக்குறைக்கு வீழ்ச்சியடைந்தது. 2022 மார்ச்சு தொடக்கத்தில் உள்ளவாறு உள்நாட்டு பணச் சந்தையில் ஓரிரவு திரவத்தன்மையில் ஏற்பட்ட பற்றாக்குறை மேலும் அதிகரித்து ரூ.600 பில்லியனை விஞ்சிய உயர்மட்டத்தில் காணப்பட்டது.

2021 ஓகத்து நடுப்பகுதியில் நாணயக் கொள்கை நிலையில் ஏற்பட்ட மாற்றத்தினையும் பாரிய பற்றாக்குறைத் திரவத்தன்மை மட்டங்களையும் பிரதிபலிக்கின்ற விதத்தில், நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காக விளங்கும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் கொள்கை வீத வீச்சின் மேல் எல்லையினை அடைந்தது. 2021இன் ஆரம்பத்தில் கொள்கை வீத வீச்சின் கீழ் எல்லைக்கு நெருக்கமாக தொடர்ந்தும் காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 2021இன் இரண்டாந்தர காலாண்டுப்பகுதியிலிருந்து உள்நாட்டு பணச் சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மையில் ஏற்பட்ட படிப்படியான குறைப்புடன் இணைந்து படிப்படியாக அதிகரித்தது. மேலும், 2021 ஓகத்து தொடக்கத்தில் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டதுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையை நோக்கி சீராக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இதற்கமைய, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2021 ஓகத்திலிருந்து ஏறத்தாழ 240 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்து, 2021 ஓகத்திலிருந்து 200 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட ஒன்றுசேர்ந்த கொள்கை வீத சீராக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்திற்குப் பின்னர் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் ஏறத்தாழ 240 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்து, 2022 மார்ச்சு நடுப்பகுதியில் 7.49 சதவீதத்தனை அடைந்த அதேவேளை, மீள்கொள்வனவுச் சந்தையில் கொடுக்கல்வாங்கல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வீதமும் 2022 மார்ச்சு இறுதியில் 7.50 சதவீதத்தினை அடைந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் நகர்வினை மிக நெருக்கமாக பின்தொடர்ந்தது.

அரச பிணையங்கள் மீதான விளைவுகள்

2020ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த அரச பிணையங்கள் மீதான விளைவுகள் நாணயக் கொள்கை நிலையில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதங்கள் அகற்றப்பட்டமை என்பனவற்றிற்கு மத்தியிலும் அரசாங்கத்தின் அதிகரித்த கடன்பாட்டுத் தேவைகளை கருத்திற்கொண்டு 2021இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக அரசாங்கத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களும் அதன் விளைவாக உள்நாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகளில் அரசாங்கம் பெருமளவிற்கு தங்கியிருந்தமையும் 2021 முழுவதும் அரச பிணையங்கள் மீதான விளைவுகள் மீதான

மேல்நோக்கிய அழுத்தங்களுக்கு காரணமாயின. எனினும், அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதங்கள் காணப்பட்டமை அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு உதவின. இருப்பினும்கூட, 2021 ஓகத்து நடுப்பகுதியில் கொள்கை வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் 2021 செத்தெம்பர் நடுப்பகுதியில் அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக்கெள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதம் அகற்றப்பட்டமை என்பனவற்றினைத் தொடர்ந்து அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் பாரிய கடன்பாட்டுத் தேவைப்பாடு மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரச் செயற்பாட்டில் அதன் தாக்கம் என்பவற்றிற்கு மத்தியில் இறைத் துறைச் சிக்கல்களைக் கவனத்திற்கொண்டு முதலீட்டாளர்களின் மோசமடைந்துவரும் மனப்பாங்கினையும் 2022 முதற்காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீத அதிகரிப்புக்களையும் பிரதிபலித்து 2022 ஆரம்பத்தில் மேலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு விளைவு வீதங்களில் அவதானிக்கப்பட்டது. இதன்படி, திறைசேரி உண்டியல் மீதான விளைவுகள் 2020 இறுதியிலிருந்து 2022 மாச்சு இறுதி வரையான காலப்பகுதியில் அனைத்து முதிர்வுக் காலங்களிற்கும் 720-820 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட வீச்சில் அதிகரித்தன. அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதங்கள் அகற்றப்பட்டதன் காரணமாக சந்தை ஆர்வம் அதிகரித்ததுடன் திறைசேரி உண்டியல்களின் பெரும்பங்கிற்கு சந்தை பங்கேற்பாளர்களினால் கோரல் வழங்கப்பட்டது. எனினும், 2021ஆம் ஆண்டுப்பகுதியில், குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில், சந்தையினால் கோரப்பட்ட திறைசேரி உண்டியல்களில் பெரும் பங்கு 91 நாள் முதிர்ச்சிக்கூடையிலிருந்து கிடைத்ததுடன், இது தொடர்ச்சியான நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில் முதலீட்டாளர்கள் குறுங்கால முதலீடுகளுக்கு முன்னுரிமை அளித்தமையினை எடுத்துக்காட்டியது. 2021 தொடக்கத்திலிருந்து 2022 மாச்சு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட திறைசேரி

வரைபடம் 7.7
முதலாந்தரச் சந்தையின் திறைசேரி உண்டியல் விளைவுகள் (அ)



(அ) ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்படாமை, மற்றும் தொடர்பான முதிர்வுக்காலங்களில் வழங்கப்படாமை .போன்றவற்றால் சில வாரங்களிற்கான விளைவு வீதங்களின் விபரம் கிடைக்கப்பெறவில்லை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 7.8
அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

முறிகள் மீதான முதலாந்தரச் சந்தையின் விளைவுகளும் அனைத்து காலங்களுக்குமான முதிர்ச்சிகளுக்கு ஏறத்தாழ 220-880 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தன. அரச பிணையங்கள் மீதான இரண்டாந்தர சந்தை விளைவுகளும் இதே காலப்பகுதியில் அனைத்து முதிர்ச்சிகளுக்கும் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. இதன்படி, 2020 இறுதியிலிருந்து மாச்சு 2022 வரையான காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்கள் மீதான இரண்டாந்தரச் சந்தை விளைவுகள் அனைத்து கால முதிர்ச்சிகளுக்கும் ஏறத்தாழ 740-860 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்த வேளையில் திறைசேரி முறிகள் மீதான இரண்டாந்தர சந்தை விளைவுகளில் காணப்பட்ட அதிகரிப்புக்கள் 740-860 வீச்சினைக் கொண்ட அடிப்படைப் புள்ளிகளில் காணப்பட்டன. அதேவேளை, 2021 காலப்பகுதியிலிருந்து 2022 மாச்சு இறுதி வரையான காலப்பகுதியில் அரசாங்கம் 5.00 - 10.00 சதவீதம் வரையான வட்டி வீச்சில் பல்வேறுபட்ட நிலையான வீதங்களில் ஐ.அ.டொலர்களில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளினூடாக நிதிகளைத் திரட்டியது.

வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் வட்டி வீதங்கள்

நாணய நிலைமைகளைத் தளர்த்துவதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் 2021 ஓகத்து வரை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்பு வட்டி வீதங்கள் 2021 ஓகத்தில் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஒப்பீட்டளவில் ஒரு மெதுவான வேகத்தில் அதிகரித்தது. சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமும்[1] சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமும்[2] 2021 ஓகத்து இறுதியில்

1 சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள அனைத்து வெளிநிற்கும் வட்டி உழைக்கின்ற ரூபாய் வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களின் அசைவுகளைப் பிரதிபலிக்கின்றது.

2 சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள அனைத்து வெளிநிற்கும் வட்டி உழைக்கின்ற ரூபாய் தவணை வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

வரைபடம் 7.9
தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அவற்றின் வரலாற்றிலேயே குறைந்த மட்டங்களான 4.75 சதவீதத்தினையும் 5.62 சதவீதத்தினையும் பதிவுசெய்தன. மேலும், சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதமும்[3] சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதமும்[4] முறையே 2021 ஏப்பிறலில் மிகக் குறைந்த வீதமான 4.77 சதவீதத்தையும் 2021 மேயில் 4.90 சதவீதத்தையும் பதிவுசெய்தன. இதற்கமைய, சராசரி வைப்பு வட்டி வீதங்கள் 2019 இலிருந்து ஏறத்தாழ 340-440 அடிப்படைப் புள்ளிகளினால் குறைவடைந்து அவற்றின் மிகக்குறைந்த மட்டங்களை அடைந்தன. எனினும், நாணய நிலைமைகள் இறுக்கமாக்கப்பட்டமையினைத் தொடர்ந்து அனைத்து வைப்பு வீதங்களும் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதத்துடன் இணைந்து 2021 ஓகத்திலிருந்து 2022 பெப்புருவரி இறுதிவரையான காலப்பகுதியில் 32 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்த வேளையில், சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதமும் இதேகாலப்பகுதியில் 131 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தது. வைப்பு வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் வேகம் சந்தை கடன் வழங்கல் வீதங்களின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மெதுவாகக் காணப்பட்டமையினை அவதானிக்க முடிந்தது. மேலும், வங்கித்தொழில் துறையின் சில வைப்புச் சாதனங்கள் 2021இன் பிற்பகுதியில் எதிர்க்கணியமான உண்மை வட்டி வீதங்களைப் பதிவுசெய்தமைக்கு பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு சந்தை வைப்பு வீதங்களில் செய்யப்பட்ட மேல்நோக்கிய சீராக்கங்களை விஞ்சியமையே காரணங்களாகும்.

தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளின் காரணமாக கீழ்நோக்கிய போக்கினைக் கொண்டிருந்த சந்தை கடன் வழங்கல் வட்டி வீதங்கள் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டமையினைத் தொடர்ந்து ஆண்டின் பிற்பகுதியில் விரைவாக அதிகரித்தன. பெரும்பாலான சந்தை கடன் வழங்கல் வீதங்கள் அவற்றின் வரலாற்றிலேயே மிகக்குறைந்த மட்டங்களை 2021இல் பதிவுசெய்தவிடத்து மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம்[5], சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம்[6] மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம்[7] என்பன முறையே 2021 ஏப்பிறலில் வரலாற்றிலேயே மிகக்குறைந்த பெறுமதியான முறையே 5.65 சதவீதத்தினையும் 2021 செத்தெம்பரில் 9.37 சதவீதத்தினையும் 2021 யூனில் 7.47 சதவீதத்தினையும் பதிவுசெய்து, 2019 இறுதியுடன் ஒப்பிடுகையில், ஏறத்தாழ 422-533 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட குறைப்பினைப் பதிவுசெய்தன. அதனைத்தொடர்ந்து, நாணய நிலைமைகள் இறுக்கமாக்கப்பட்டமையுடன் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம் என்பன 2021 ஓகத்திலிருந்து 2022 பெப்புருவரி இறுதிவரை முறையே 310, 75 மற்றும் 203 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தன. பிணையங்களின் வகைப்படி, 2022 பெப்புருவரி இறுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதத்தில் பதிவுசெய்யப்பட்டவாறு ஆவண உண்டியல்களுக்கெதிரான கடன் வழங்கல் வீதங்கள் (கொள்வனவு செய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்கள் நீங்கலாக) மற்றைய வகைகளுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வட்டி வீதத்தினை எடுத்துக்காட்டிய வேளையில் நிலையான, சேமிப்பு மற்றும் ஏனைய வைப்புக்கள் மற்றும் வைப்புச் சான்றிதழ்களுக்கெதிரான கடன் வழங்கல் வீதங்கள் குறைந்த வட்டி வீதங்களைப் பதிவுசெய்தன. 2021 ஓகத்தில் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டதற்கு மாறாக 2022 பெப்புருவரி இறுதியில் அனைத்து வகை பிணையங்களுக்குமான சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் 2020 இறுதியில் அவதானிக்கப்பட்ட வீதங்களைவிட குறைவாக தொடர்ந்தும் காணப்பட்டு, கடன்களின் வெளிநின்ற இருப்புக்களின் தாக்கத்தினையும் எதிர்காலத்தில் சந்தை வட்டி வீதங்களை மேல்நோக்கிச் சீராக்குவதற்கு மேலும் வாய்ப்புக்கள் உள்ளமையினையும் எடுத்துக்காட்டுகின்றன. மாதாந்த சிறிய நடுத்தர தொழில்முயற்சிக் கொடுகடன் அளவீட்டில்[8] அளவிடப்பட்டவாறு, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான

3 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் என்பது குறித்த மாதமொன்றின் போது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் திரட்டப்படும் அனைத்து புதிய வட்டி உழைக்கும் ரூபாய் வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

4 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் என்பது குறித்த மாதமொன்றின் போது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் திரட்டப்படும் அனைத்து புதிய வட்டி உழைக்கும் ரூபாய் கால வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

5 சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை வீதம் ஓர் குறிப்பிட்ட வாரத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தங்களது முதன்மை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் குறுங்கால ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு பொருந்தும் வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

6 சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதமானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

7 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதமானது குறித்த மாதகாலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து புதிய ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களை உள்ளடக்குகிறது.

8 மாதாந்த சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் கொடுகடன் அளவீட்டின் நோக்கங்களுக்காக, ஆண்டிற்கு ரூ.1 பில்லியனை விஞ்சாத மொத்தப் புரள்வினையும் 300 குறைவான ஊழியர்களையும் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதனை பரிசீலனையில் கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

வரைபடம் 7.10
பிணை வகைகளின்படி சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதங்கள் (%)



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 7.3
வட்டி வீதங்களின் அசைவுகள்

ஆண்டுக்கு சதவீதம்

வட்டி வீதம்	2020 முடிவில்	2021 முடிவில்	அடிப்படைப் புள்ளிகளில் மாற்றம்
கொள்கை வட்டி வீதங்கள்			
துணைநில் வைப்பு வசதி வீதம்	4.50	5.00	50
துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம்	5.50	6.00	50
சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்	4.55	5.95	140
அரச பிணையங்களின் மீதான விளைவு வீதம்			
முதலாந்தரச் சந்தை (அ)			
திறைசேரி உண்டியல்கள்			
91-நாள்	4.69	8.16	347
182-நாள்	4.80	8.33	353
364-நாள்	5.05	8.24	319
திறைசேரி முறிகள்			
2-ஆண்டு	5.65 (ஆ)	9.16 (இ)	351
3-ஆண்டு	5.99 (ஆ)	9.70 (இ)	371
4-ஆண்டு	6.32 (ஆ)	8.55 (இ)	223
5-ஆண்டு	6.79 (ஆ)	11.14 (இ)	435
10-ஆண்டு	9.99 (ஆ)	8.86 (இ)	-113
இரண்டாந்தரச் சந்தை			
திறைசேரி உண்டியல்கள்			
91-நாள்	4.63	7.77	314
182-நாள்	4.73	8.07	334
364-நாள்	4.98	8.22	324
திறைசேரி முறிகள்			
2-ஆண்டு	5.56	8.58	302
3-ஆண்டு	5.96	9.55	359
4-ஆண்டு	6.40	10.38	398
5-ஆண்டு	6.65	10.66	401
10-ஆண்டு	7.55	11.71	416
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (ஈ)			
வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்			
சேமிப்பு வைப்புக்கள்	0.10-7.00	0.05-6.35	-
ஒரு வருட நிலையான வைப்புக்கள் (உ)	0.25-15.00	0.15-15.00	-
சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் (ஊ)	5.80	4.94	-86
சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் (ஊ)	7.14	5.94	-120
சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் (ஊ)	4.93	6.45	152
சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் (ஊ)	5.08	6.67	159
கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்கள்			
சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் (மாதாந்த)	5.74	8.33	259
சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம்	10.29	9.87	-42
சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம்	8.38	9.48	110
ஏனைய நிதி நிறுவனங்கள் (எ)			
வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்			
தேசிய சேமிப்பு வங்கி			
சேமிப்பு வைப்புக்கள்	3.50	3.50	0
ஒரு வருட நிலையான வைப்புக்கள்	5.25	5.50	25
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் (ஏ)			
சேமிப்பு வைப்புக்கள்	3.40-4.74	3.46-4.75	-
ஒரு வருட நிலையான வைப்புக்கள்	6.56-7.21	9.02-10.13	-
கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்கள்			
தேசிய சேமிப்பு வங்கி	7.00-10.00	7.50-11.50	-
அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி (ஐ)	8.73-12.50	7.50-12.50	-
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் (ஏ)			
நிதிக்குத்தகை	14.31-28.97	12.77-28.33	-
வாடகைக் கொள்வனவு	13.71-20.05	11.08-27.00	-
உண்மைச் சொத்துக்களுக்கு எதிரான கடன்கள் (ஒ)	19.95-22.30	-	-
அசையாச் சொத்துக்களுக்கு எதிரான கடன்கள் (ஒ)	-	15.77-16.77	-
கம்பனிப் படுகடன் சந்தை			
தொகுதிக்கடன்கள்	9.00-13.25	8.00-12.00	-
வர்த்தகப் பத்திரம்	6.50-15.50	6.00-12.00	-

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
தொடர்புடைய நிதியியல் நிறுவனங்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) இறுதியாகக் கிடைக்கப்பெற்ற ஏலத்தில் உள்ளவாறான சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள்.

(ஆ) 2020இல் இறுதியான முதலாந்தர ஏலம் - 2 ஆண்டு - 28 செத், 3 ஆண்டு: 11 திசெ, 4 ஆண்டு - 12 நவ, 5 ஆண்டு - 11 திசெ, 10 ஆண்டு - 13 சன

(இ) 2021இல் இறுதியான முதலாந்தர ஏலம் 2 ஆண்டு: 11 நவ, 3 ஆண்டு - 13 திசெ, 4 ஆண்டு: 30 ஒக, 5 ஆண்டு - 12 ஒத், 10 ஆண்டு: 29 யூலை

(ஈ) வர்த்தக வங்கிகளால் குறிந்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

(உ) உயர்ந்தபட்ச வீதமானது குறிப்பிட்ட வர்த்த வங்கிகளால் வழங்கப்பட்ட சிறப்பு வீதமாகும்.

(ஊ) 2018 யூலையிலிருந்து அரசினால் வழங்கப்பட்ட மூத்த பிரஜைகளுக்கான சிறப்பு வைப்பு வட்டி வீதத்தின் தாக்கத்தினை நீக்குவதற்காக சிறப்பு வட்டி வீதமான 15 சதவீதத்திற்குப் பதிலாக தொடர்புடைய சந்தை வட்டி வீதங்களைப் பயன்படுத்தி சதி.வை. வீதமும் சதி.நி.வை வீதமும் கணிப்பிடப்பட்டுள்ளது. 2018 யூலையிலிருந்து சதி.பு.வை வீதத்தையும் சதி.பு.நி.வை வீதத்தையும் கணிப்பிடுவதற்கு இதேமுறை பிரயோகிக்கப்பட்டுள்ளது.

(எ) ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களினால் குறிந்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

(ஏ) தொடர்புடைய மாதங்களுக்காகத் திரட்டப்பட்ட வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல்கள் மீது பிரயோகிக்கப்படும் வட்டி வீதங்களின் எல்லையானது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் குறிக்கப்பட்ட சராசரி உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்களை அடிப்படையாகக் கொண்டது. 2021 இற்கான தரவு தற்காலிகமானது.

(ஐ) வீட்மைப்பு நோக்கங்களுக்கான கடன் வழங்கல் மட்டும்.

(ஒ) 2021 யூலை முதல் "உண்மைச் சொத்துக்களுக்கு எதிரான கடன்கள்" குறிகாட்டி "அசையாச் சொத்துக்களுக்கு எதிரான கடன்கள்" என மாற்றப்பட்டுள்ளது.

தொழில்முயற்சிகளுக்கான கடன்களை பரிசீலனையில் கொள்ளும்போது உரிமம்பெற்ற வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கு வழங்கப்படும் கடன்கள் மீதான சராசரி வட்டி வீதங்கள் உரிமம்பெற்ற வங்கிகளின் ஒட்டுமொத்த சராசரி கடன் வழங்கல் வீதங்களின் போக்கினை எடுத்துக்காட்டுகின்றதெனினும் அவை உயர்வானவையாகக் காணப்பட்டன. இதற்கமைய, சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய, நடுத்தர தொழில்முயற்சி கடன் வழங்கல் வீதம்[9] மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் கடன் வழங்கல் வீதம்[10] 2021 இறுதியில் முறையே 10.49 சதவீதத்தினையும் 10.04 சதவீதத்தினையும் அடைந்தன. இறுக்கமாக்கப்பட்ட நாணய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கடன் வழங்கல் சாதனங்களின் மீது பிரயோகிக்கத்தக்க பல உயர்ந்தபட்ச கடன் வழங்கல் வீதங்கள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இதற்கமைய, 2020 திசெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட சம்பளம் பெறும் ஊழியர்களுக்கான சிறப்பு ஈட்டினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டத்தின் மீது பிரயோகிக்கத்தக்க வட்டி வீதம் கடனின் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு 7 சதவீதம் கொண்ட நிலையான வீதத்திலிருந்து மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதங்களுடன் மாறுபடும் வீதங்களிற்கு மாற்றப்பட்டன. மேலும், இறுக்கமாக்கப்பட்ட நாணய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு உள்நாட்டு கடன் வழங்கல் சாதனங்களின் வட்டி வீதங்களின் மீது 2020 ஓகத்தில் விதிக்கப்பட்ட உச்ச அளவு 2022 மாச்சில் மேல்நோக்கித் திருத்தப்பட்டவிடத்து கொடுகடன் அட்டைகள் மீது

9 சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கல் வீதமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களினை அடிப்படையாகக் கொண்டது, அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் மீள்நிதியிடப்பட்ட திட்டங்கள் நீங்கலாக.

10 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கல் வீதமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு குறித்த மாதகாலப்பகுதியொன்றில் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து புதிய ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களை கணக்காணிக்கிறது. அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் மீள்நிதியிடப்பட்ட திட்டங்கள் நீங்கலாக.

பிரயோகிக்கத்தக்க உயர்ந்தபட்ச வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு 20 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மீதான வட்டி ஆண்டொன்றிற்கு 18 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதுடன் அடகு பிடித்தல் வசதிகளுக்கான வட்டி ஆண்டொன்றிற்கு 12 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இவை அதன் பின்னர் 2022 ஏப்பிறல் ஆரம்பத்தில் முழுமையாக நீக்கப்பட்டன.

நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற சட்ட வீதமும் சந்தை வீதமும்[11] 2021 ஆண்டிற்கான ஆண்டொன்றுக்குரிய 10.12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆண்டிற்கு, ஆண்டொன்றிற்கு 7.48 சதவீதமாகக் காணப்பட்டது. 2020 நவெம்பரிலிருந்து 2021 ஒத்தோபர் வரையான முற்போந்த பன்னிரண்டு மாத காலப்பகுதியில் நிலவிய வர்த்தக வங்கிகளின் மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் என்பனவற்றின் எளிய சராசரியின் அடிப்படையில் 2022ஆம் ஆண்டிற்கான சட்ட வீதமும் சந்தை வீதமும் கணிக்கப்பட்டன.

வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மட்டுப்படுத்தப்பட்ட திரவத்தன்மைக்கு மத்தியில் வெளிநாட்டு நாணய வைப்புக்களைத் திரட்டுவதில் வங்கிகளுக்கிடையே காணப்பட்ட அதிகரித்த போட்டித்தன்மையினை பிரதிபலிக்கின்ற விதத்தில் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் கடுமையாக மேல்நோக்கிய அதிகரிப்பினைப் பதிவுசெய்தமையானது, வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ரூபா வட்டி வீதங்களுக்குமிடையிலான முரண்பாடுகளைச் சரிசெய்வதற்கு குறிப்பிட்ட வழிமுறைகளை விதிப்பதன் அவசியத்தை தேவைப்படுத்தின. தடுப்பு மருந்து நிகழ்ச்சித்திட்டத்தின் ஆதரவுடன் உலகளாவிய பொருளாதாரம் மீட்சிபெற்றமையுடன் முக்கியமாக உயர்வடைந்துவரும் பணவீக்க அழுத்தங்களின் காரணமாக பெரும்பாலான நாடுகளில் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்படத் தொடங்கியது. இறுக்கமாக்கப்பட்ட உலகளாவிய வட்டி வீதங்களையும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய திரவத்தன்மை நிலைமைகளுடன் சேர்ந்து உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான குறிப்பிட்ட வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக இருந்தமையின் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வைப்புச் சாதனங்களுக்கிடையில் வட்டி வீத முரண்பாடுகளைத் தோற்றுவித்தன. எனவே, அத்தகைய வட்டி வீத முரண்பாடுகளைத் தீர்த்துவைக்கும் பொருட்டு 2021 ஓகத்து பிற்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் வட்டி வீதங்கள் மீது மத்திய வங்கியினால் உயர்ந்தபட்ச வட்டி வீதமொன்று விதிக்கப்பட்டது. இதன் விளைவாக, வெளிநாட்டு நாணய வைப்புக்களின் வட்டி வீதங்கள் ஓரளவிற்குத் தளர்த்தப்பட்டன. எனினும், 2021 ஓகத்தில் நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக்கப்பட்டமையினைத் தொடர்ந்து ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சாதனங்கள் மீதான வட்டி வீதங்களில் படிப்படியான அதிகரிப்பொன்று காணப்பட்டமையின் காரணமாக வெளிநாட்டு நாணய வைப்பு வட்டி வீதங்களுக்கான உயர்ந்தபட்ச வரையறையும் சந்தை நிலைமைகளை சிறந்த முறையில் பிரதிபலிக்கின்ற விதத்தில் திருத்தப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து 2022 மாச்சில் அது அகற்றப்பட்டன. இதற்கமைய, ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் 2020 இறுதியின் 0.03-4.00 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 0.03-4.60 சதவீத வீச்சில் காணப்பட்டன. ஸ்ரேலிங் பவுணில் குறித்துரைக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்கள் தொடர்பான வட்டி வீதங்கள் 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியளவில் 0.03-3.00 வீச்சில் மாற்றமின்றி தொடர்ந்திருந்தன. அதேவேளை, ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட தவணை வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.10-6.00 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 0.02-7.00 சதவீத வீச்சிற்கிடையில் காணப்பட்டன. மேலும், ஸ்ரேலிங் பவுணில் குறித்துரைக்கப்பட்ட தவணை வைப்புக்கள் மீதான ஏற்புடைத்தான வட்டி வீதங்கள் 2020 இறுதியின் 0.05-4.25 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 0.02-5.75 சதவீத வீச்சில் காணப்பட்டன.

7.5 நாணயம் மற்றும் கொடுகடன் கூட்டுக்களில் அசைவுகள்

ஒதுக்குப் பணம்

பொருளாதாரத்தின் நாணயத் தளத்தினைப் பிரதிபலிக்கின்ற ஒதுக்குப் பணம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்து, சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் நியதி ஒதுக்கு விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் தாக்கத்தினையும் பிரதிபலித்தது. 2021 இறுதியில் ஒதுக்குப் பணம் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.4 சதவீதம் கொண்ட விரிவுடன் ஒப்பிடுகையில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 35.4 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மை நியதிகளில்

11 சட்ட வீதம் என்பது 1990ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க குடியியல் நடைமுறைக் கோவை (திருத்தம்) சட்டத்தின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டதுடன் இது குறிப்பிட்ட பணத் தொகையின் அறவீட்டிற்கான எந்தவொரு நடவடிக்கைக்கும் பிரயோகிக்கத்தக்கதாகும். சந்தை வீதம் என்பது 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க படுகடன் அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளதுடன் இது இணங்கப்பட்ட வட்டி வீதம் இல்லாத சந்தர்ப்பத்தில் வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழும் ரூ.150,000 இனை விஞ்சுகின்ற படுகடனை அறவிடுவதற்கான கடன் வழங்கும் நிறுவனங்களினால் உருவாக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மாத்திரம் பிரயோகிக்கத்தக்கதாகும்.

அட்டவணை 7.4
நாணயக் கூட்டுக்களின் அபிவிருத்திகள்

ரூ. பில்லியன்

விடயம்	2020 முடிவில்	2021 முடிவில் (அ)	மாற்றம்			
			2020		2021	
			தொகை	%	தொகை	%
1. வெளிநின்ற நாணயம்	834.8	1,005.1	156.8	23.1	170.3	20.4
1.1 பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம்	641.0	784.4	146.8	29.7	143.4	22.4
1.2 வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்	193.8	220.6	10.0	5.5	26.9	13.9
2. மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் (ஆ)	129.6	300.7	-125.0	-49.1	171.1	132.0
3. மத்திய வங்கியிலுள்ள அரச முகவர்களின் வைப்புக்கள் (இ)	0.03	0.01				
4. ஒதுக்குப்பணம் (1+2+3)	**964.4**	**1,305.8**	**31.8**	**3.4**	**341.4**	**35.4**
5. வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள்	536.1	675.4	164.9	44.4	139.3	26.0
6. குறுகிய பணநிரம்பல், M_1 (1.1+5)	**1,177.2**	**1,459.9**	**311.7**	**36.0**	**282.7**	**24.0**
7. வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்	7,318.6	8,179.0	1,271.4	21.0	860.4	11.8
8. விரிந்த பணநிரம்பல், M_2 (6+7)	**8,495.8**	**9,638.9**	**1,583.1**	**22.9**	**1,143.1**	**13.5**
9. சீரமைக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள் (ஈ)	909.9	1,008.4	198.5	27.9	98.5	10.8
10. ஒன்று திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல், M_{2b} (8+9)	**9,405.7**	**10,647.3**	**1,781.6**	**23.4**	**1,241.6**	**13.2**
பணப்பெருக்கி, M_{2b}	9.75	8.15				
சுற்றோட்ட வேகம், M_{2b} (உ)	1.77 (ஊ)	1.65				

(அ) தற்காலிகமானது.
(ஆ) மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் மற்றும் மத்திய வங்கியுடனான முதன்மை வணிகர்களின் நிலுவைகள் இரண்டையும் உள்ளடக்குகின்றது.
(இ) மத்திய வங்கியுடனான அரச முகவர்களின் வைப்பு 2020 இறுதியில் ரூ. 30.4 மில்லியன் மற்றும் 2021 இறுதியில் ரூ. 5.5 மில்லியனாக இருந்தது
(ஈ) கரை கடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வதிவோர் வகையிலான வைப்புக்களையும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளுடனான வெளிநாட்டு நாணய வைப்புக்களின் ஒரு பகுதியினையும் உள்ளடக்குகின்றது.
(உ) ஆண்டிற்கான சராசரி
(ஊ) திருத்தப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒதுக்குப் பணம் 2020ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.31.8 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.1,305.8 பில்லியனுக்கு ரூ.341.4 பில்லியனால் அதிகரித்தது. இதன்படி, இவ்வாண்டுப்பகுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயம் உயர்மட்டத்தில் காணப்பட்டமைக்கு உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் அதனுடன் இணைந்த முடக்கல்கள் என்பனவற்றின் காரணமாக, பொதுமக்களின் நாணயத்திற்கான உயர்ந்த முன்னெச்சரிக்கையுடனான கேள்வி மற்றும் பொருளாதார நடவடிக்கை பகுதியளவில் வழமைக்குத் திரும்புகின்றமை மற்றும் வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தமை என்பன காரணங்களாக விளங்கின. இதன்படி, சுற்றோட்டத்திலிருந்த நாணயம் 2020ஆம் ஆண்டின் ரூ.56.8 பில்லியன் அதிகரிப்பிற்கு மேலாக இவ்வாண்டுப்பகுதியில் ரூ.170.3 பில்லியனால் அதிகரித்து 2021 இறுதியில் ரூ.1,005.1 பில்லியனாக விளங்கியது. பொருளாதாரத்திற்கு விடுக்கப்பட்ட பணத்தில் காணப்பட்ட பாரிய அதிகரிப்பு 2021 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாதகாலப்பகுதியில் பின்பற்றப்பட்ட மேலதிக தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, 2020 செத்தெம்பரில் நியதி ஒதுக்கு விகிதம் 2 சதவீதத்தினால் மேல்நோக்கி சீராக்கப்பட்டமையினைத் தொடர்ந்து மத்திய வங்கியில் பேணப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. இதன்படி, 2021 இறுதியில் மத்திய வங்கியுடனான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் ரூ.171.1 பில்லியனால் ரூ.300.7 பில்லியனுக்கு அதிகரித்தன.

மத்திய வங்கி ஐந்தொகையின் சொத்துக்கள் பக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் ஒதுக்குப் பணத்தின் விரிவாக்கம் முழுவதற்கும் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக இருந்த வேளையில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சி கண்டன. மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு, 2020ஆம் ஆண்டின் ரூ.505.9 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.1,225.2 பில்லியனால் அதிகரித்த அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. இது, முதலாந்தரச் சந்தை ஏலங்களில் திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியல்களின் நேரடி ஒதுக்கு என்பன காரணமாக மத்திய வங்கியின் அரச பிணையங்களின் உடமைகளில் (தேறிய மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்) ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. இதற்கமைய, மத்திய வங்கியின் அரச பிணையங்களினது உடமைகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.1,228.1 பில்லியனால் ரூ.1,945.4 பில்லியனுக்கு அதிகரித்தன. அதேவேளை, பொருளாதார நடவடிக்கையின் படிப்படியான மீட்சிக்கு மத்தியில் உரிமம்பெற்ற

வரைபடம் 7.11
மத்திய வங்கியின் ஐந்தொகையின் பகுப்பாய்வு



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வர்த்தக வங்கிகள் மீதான மத்திய வங்கியின் கோரல்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு, உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளூடாக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சலுகைக் கடன்களின் மீள்கொடுப்பனவு காரணமாக விளங்கியது. இணைந்த விளைவொன்றாக, மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூ.401.1 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.1,255.4 பில்லியனால் அதிகரித்தன. அதேவேளை, மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.914 பில்லியனால் எதிர்க்கணிய மட்டத்திற்கு குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தன. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு நியூயோர்க்கின் பெடரல் றிசேர்வ் வங்கியுடனான ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் முதிர்ச்சியடைந்த மீள்கொள்வனவு உடன்படிக்கை தொடர்பில் 2021 பெப்புருவரியிலும் மார்ச்சிலும் இரண்டு பிரிவுகளாகச் செலுத்தப்பட்ட மீள்கொடுப்பனவு, 2021 யூலையில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவு என்பனவற்றை உள்ளடக்கி அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளே காரணமாகிய அதேவேளையில் மத்திய வங்கியில் வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பொறுப்புக்கள் இக்காலப்பகுதியில் அதிகரித்தன. மேலும், அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்கு வசதியளிக்கும் பொருட்டு மத்திய வங்கி அதன் பன்னாட்டு ஒதுக்கு சொத்துப்பட்டியலிலிருந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு தொடர்ந்தும் வெளிநாட்டு நாணயங்களை வழங்கியது.

விரிந்த பண நிரம்பலுக்கும் ஒதுக்குப் பணத்திற்குமிடையிலான விகிதமாக விளங்கும் பணப்பெருக்கி 2021இல் வீழ்ச்சியடைந்தமைக்கு ஒதுக்குப் பணத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கமே காரணமாகி விரிந்த பண நிரம்பலின் (M_{2b}) விரிவாக்கத்தினது தாக்கத்தினை விஞ்சிக் காணப்பட்டது. இதற்கமைய, விரிந்த பணத்தினை அடிப்படையாகக் கொண்ட பணப்பெருக்கி 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.75 இலிருந்து 2021 இறுதியில் 8.15 இற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வைப்பிற்கான நாணய விகிதம் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.3 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 8.0 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பொதுமக்கள் வசமிருந்த தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் முன்னைய ஆண்டினைவிட ஒப்பீட்டு ரீதியில் குறைவான வேகத்தில் அதிகரித்தன.

விரிந்த பணம் (M_{2b}) மற்றும் உள்நாட்டுக் கொடுகடன்

உள்நாட்டுக் கொடுகடனில் தொடர்ச்சியான விரிவாக்கம் காணப்பட்டமைக்கிடையிலும் 2021இன் பிற்பகுதியில் விரிந்தபண நிரம்பலின் வளர்ச்சி மிதமடைந்தமைக்கு வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் சுருக்கமடைந்தமையே காரணமாகும். இதற்கமைய, விரிந்த பண நிரம்பலின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 23.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 13.2 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. விரிந்த பண நிரம்பலின் ஒட்டுமொத்த இருப்பு 2020 இறுதியின் ரூ.9,405.7 பில்லியன் மட்டத்திலிருந்து 2021 இறுதியில் ரூ.10,647.3 பில்லியனுக்கு ரூ.1,241.6 பில்லியனால் அதிகரித்தது. விரிந்த பண நிரம்பலின் முக்கிய மூலமொன்றாக வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 2021 காலப்பகுதியில் ரூ.2,014.1 பில்லியனால் அதிகரித்தமைக்கு உள்நாட்டு கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய தூண்டுதலாக அமைந்த வேளையில் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் இவ்வாண்டுப்பகுதியில் ரூ.772.5 பில்லியனால் சுருக்கமடைந்தன.

விரிந்த பண நிரம்பலின் பொறுப்புக்கள் பக்கத்தின் நியதிகளில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலுள்ள பொதுமக்கள் வசமிருந்த தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 2021இன் நாணய விரிவாக்கத்திற்கு பங்களித்த போதும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிதமான தன்மையொன்று அவதானிக்கப்பட்டது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,469.9 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.958.8 பில்லியனால் அதிகரித்து இவ்வாண்டுப்பகுதியில் விரிந்த பண நிரம்பலின் விரிவாக்கத்தில் ஏறத்தாழ 77 சதவீதத்திற்கு வகைகூறின. 2021இல் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களில் வைப்புச் செய்யப்பட்ட நிதியத்தில் காணப்பட்ட மிதமான

வரைபடம் 7.12
விரிந்த பணத்தின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு - M_{2b} (சொத்துப்பக்கம்)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

தன்மைக்கு சந்தை வைப்பு வீதங்களின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காரணமாக அமைந்ததுடன் இதன் மூலம் 2021 இறுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் வளர்ச்சி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2020இன் 21.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 11.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளையில், உலகளாவிய நோய்த்தொற்று மீண்டும் தோற்றம்பெற்றமையுடன் தொடர்பான நிச்சயமற்றதன்மைகளின் காரணமாக பொதுமக்களினால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்களும் நாணயமும் (இது குறுகிய பண நிரம்பல் பிரதிபலிக்கிறது) 2020இன் ரூ.311.7 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் ரூ.282.7 பில்லியனால் அதிகரித்தன. இதன்படி, பண நிரம்பலின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2020 இறுதியின் 36.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 24.0 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சியடைந்தது.

M_{2b} இன் சொத்துக்கள் பக்கத்திலிருந்து நோக்குகையில், 2020ஆம் ஆண்டுப்பகுதியில் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் சுருக்கமடைந்தமைக்கு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் அவதானிக்கப்பட்ட முன்னேற்றங்களுக்கு மத்தியிலும் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே காரணமாகும். உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் இரண்டினதும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கம் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.59.0 பில்லியன்

அட்டவணை 7.5
ஒதுக்குப்பணத்தினதும் விரிந்த பணத்தினதும் (M_{2b}) சொத்துப்பக்கம்

ரூ. பில்லியன்

விடயம்	2020 முடிவில்	2021 முடிவில் (அ)	மாற்றம் 2020 தொகை	மாற்றம் 2020 %	மாற்றம் 2021 தொகை	மாற்றம் 2021 %
ஒதுக்குப் பணம்	**964.4**	**1,305.8**	**31.8**	**3.4**	**341.4**	**35.4**
மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்	526.8	-387.3	-369.2	-41.2	-914.0	-173.5
மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்	437.7	1,693.1	401.1	1,095.6	1,255.4	286.8
அரசிற்கான தேறிய கொடுகடன்	868.9	2,094.1	505.9	139.3	1,225.2	141.0
வர்த்தக வங்கிகள் மீதான கோரல்கள்	114.5	143.2	112.7	6,181.0	28.7	25.1
ஏனைய விடயங்கள் (தேறிய) (ஆ)	-545.7	-544.2	-217.5	-66.2	1.5	0.3
விரிந்த பணம் (M_{2b})	**9,405.7**	**10,647.3**	**1,781.6**	**23.4**	**1,241.6**	**13.2**
தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்	-209.5	-982.0	-310.2	-308.0	-772.5	-368.8
நாணய அதிகாரசபைகள் (இ)	526.8	-387.3	-369.2	-41.2	-914.0	-173.5
வர்த்தக வங்கிகள்	-736.2	-594.7	59.0	7.4	141.5	19.2
தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்	9,615.2	11,629.3	2,091.8	27.8	2,014.1	20.9
உள்நாட்டு கொடுகடன்	11,721.2	14,002.0	2,310.4	24.6	2,280.8	19.5
அரசுக்கான தேறிய கொடுகடன்	4,548.1	5,832.4	1,752.1	62.7	1,284.4	28.2
மத்திய வங்கி	868.9	2,094.1	505.9	139.3	1,225.2	141.0
வர்த்தக வங்கிகள்	3,679.2	3,738.3	1,246.3	51.2	59.2	1.6
அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன்	1,002.2	1,188.1	184.2	22.5	185.9	18.6
தனியார் துறைக்கான கொடுகடன்	6,170.9	6,981.4	374.1	6.5	810.5	13.1
ஏனைய விடயங்கள் (தேறிய) (ஆ)	-2,106.0	-2,372.7	-218.7	-11.6	-266.7	-12.7

(அ) தற்காலிகமானது
(ஆ) ஏனைய சொத்துக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களுக்கு இடையிலான வித்தியாசமா கணிப்பிடப்பட்டுள்ளது.
(இ) மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதேபோன்று அரச கணக்குகள் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட அரசிற்கான அரச முகவர் நிலுவைகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொண்ட அதிகரிப்பினைவிட 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.141.5 பில்லியனால் அதிகரித்தன. உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.45.6 பில்லியனால் அதிகரித்தமைக்கு வதிவற்றோரின் வைப்புப் பொறுப்புக்களின் நியதிகளில், வெளிநாட்டு நாணய பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுக்கு மத்தியிலும் வெளிநாட்டு வங்கிகளுடனான வெளிநாட்டு நாணய வைப்புக்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களே முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், தொழிலாளர் பணவனுப்பல்கள் வடிவில் பெறப்படுகின்ற பெறுகைகள் வங்கித்தொழில் முறைமைக்குள் மாற்றப்படுவது குறைவடைந்துள்ளமையானது 2021ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படக்கூடிய சாத்தியமான முன்னேற்றத்தினை மட்டுப்படுத்திருக்கக்கூடும். அதேநேரம் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021இல் ரூ.95.9 பில்லியனால் அதிகரித்தமைக்கு வெளிநாட்டுக் கடன்பாடுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் சேர்ந்து, வதிவற்றோருக்கான கடன் வழங்கல் அதிகரித்தமையே காரணமாகும்.

வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 2021ஆம் ஆண்டுப் பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தமைக்கு அரச மற்றும் தனியார் துறைகள் இரண்டிற்குமான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பே தூண்டுதலாக அமைந்தது. வெளிநாட்டு நிதியிடலைப் பெறுவதில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றுக்கிடையிலும் அரசாங்கத்தின் அதிகரித்த நிதியிடல் தேவைப்பாடுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறைமைகளினூடாக, முக்கியமாக மத்திய வங்கியினூடாக பெருமளவிற்குப் பூர்த்திசெய்யப்பட்டன. 2020இல் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் 2021இல் 1,284.4 பில்லியனால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இதில் ஏறத்தாழ 95 சதவீதம் மத்திய வங்கியினால் நிதியிடப்பட்டது. இதன்படி, 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ.1,225.2 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை, மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் 2021இன் தொடக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூ.198.2 பில்லியனிலிருந்து 2021 திசெம்பரில் ரூ.150.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, 2021 இற்கான திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தொடர்ந்து அரசாங்கத்தின் தற்காலிக முற்பணங்களின் மீள்கொடுப்பனவே காரணமாகும். அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அரசிற்கான தேறிய கொடுகடன் 2020இன் ரூ.1,246.3 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.59.2 பில்லியனால் அதிகரித்தமைக்கு உள்நாட்டு

வரைபடம் 7.13
உள்நாட்டு கொடுகடனின் ஆண்டிற்கான அதிகரிப்பு



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வங்கித்தொழில் பிரிவினால் செய்யப்பட்ட அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பே முழுக் காரணமுமாகும். அதேவேளை, இவ்வாண்டுகாலப்பகுதியில் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவின் அரசிற்கான தேறிய கொடுகடன் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. இதன்படி, உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ.157.6 பில்லியனால் அதிகரித்தமைக்கு நீண்டகால அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளும் அதேபோன்று அரச வங்கிகளினால் வழங்கப்பட்ட அரசாங்கத்திற்கான மேலதிகப் பற்று நிலுவைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் முக்கிய காரணங்களாக அமைந்தன. கரைகடந்த வங்கித்தொழில் பிரிவின் அரசிற்கான தேறிய கொடுகடன் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.22.3 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ.98.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, அரசாங்கத்திற்கான நேரடி வெளிநாட்டு நாணயக் கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வசமிருந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சியும் வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணிக் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமைக்கு இடையில் முதிர்ச்சியினைத் தொடர்ந்து இலங்கை அபிவிருத்தி முறிகளில் மீள்முதலீடு செய்வதற்கான நாட்டமின்மை என்பனவும் காரணங்களாக அமைந்தன.

வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட கொடுகடன் 2021இல் தொடர்ச்சியாக விரிவடைந்து அவற்றின் நலிவடைந்த நிதியியல் நிலைமைகளையும் வழிவழியாக வந்த பிரச்சனைகளையும் பிரதிபலித்தன. இதற்கமைய, வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட கொடுகடன் 2020இன் ரூ.184.2 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.185.9 பில்லியனால் அதிகரித்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால்

வரைபடம் 7.14
வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கான கொடுகடன்



பெறப்பட்ட வங்கிக் கடன்பாடுகள் 2021இல் ரூ.123.5 பில்லியனால் அதிகரித்தது. ஒன்றுசேர்ந்த நியதிகளில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட கொடுகடனின் விரிவாக்கத்திற்கு பெருமளவிற்குப் பங்களிப்புச் செய்தது. அதேவேளை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வங்கிக் கடன்பாடுகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.24.5 பில்லியனால் அதிகரித்த வேளையில், இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கடன்பாடுகள் ரூ.14.6 பில்லியனால் அதிகரித்து, உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான மருத்துவச் செலவினங்களுக்கு வசதியளிப்பதற்காக அதிகரித்த நிதியியல் தேவைகள் காணப்பட்டமையினைப் பிரதிபலித்தது. மேலும், இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம், சிறிலங்கன் எயார்லைன்ஸ், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை என்பனவற்றினால் பெறப்பட்ட கொடுகடன்களும் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. அதேவேளை, இலங்கைத் துறைமுக அதிகாரசபை, நெற் சந்தைப்படுத்தும் சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பன இவ்வாண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மீள்கொடுப்பனவுகளை மேற்கொண்டன.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்து, குறைந்த வட்டி வீதச் சூழலில் பொருளாதார நடவடிக்கைகள் மேம்பட்டமையினைப் பிரதிபலித்தது. இதற்கமைய, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2020ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.374.1 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 810.5 பில்லியனால் அதிகரித்தது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமையின் ஆதரவுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சி 2021 ஓகத்து வரை படிப்படியாக விரிவடைந்து இக்காலப்பகுதியில் ஏறத்தாழ 624.6 பில்லியன் கொண்ட விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தது. தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியில் ஓரளவு மிதமான தன்மை அவதானிக்கப்பட்டமையானது அதன்பின்னர், 2021இன் பிற்பகுதியில் சந்தையில் காணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையினதும் திரவத்தன்மையினதும் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கான கடன் பாய்ச்சலை உயர்த்துவதற்காக 2021 ஏப்பிறலில் விதிக்கப்பட்ட கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான அதேபோன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கான முன்னுரிமைத் துறைக் கடன்களுக்கான இலக்குகளுக்கும் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமத்தினை சாத்தியமானளவிற்கு மூலதனமயப்படுத்திக்கொள்வதும் இவ்வாண்டுகாலப்பகுதியில் கொடுகடன் விரிவாக்கத்திற்குப் பங்களித்திருக்கக்கூடும். 2020இன் இறுதியில் 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2021 இறுதியில் 13.2 சதவீதத்திற்கு மிதமடைவதற்கு முன்னதாக 2021 ஓகத்தில் 15.1 சதவீதத்திற்கு விரைவடைந்தது.

வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான காலாண்டு அளவீட்டின்படி, முக்கிய பொருளாதாரத் துறைகளுக்கான கொடுகடன் வளர்ச்சி 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வேகமுற்று மேம்பட்ட பொருளாதார நடவடிக்கையைப் பிரதிபலித்த போதும் 2021இன் இறுதிப்பகுதியில் தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சியில் ஓரளவு மிதமான தன்மை அவதானிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக, கைத்தொழில் (ரூ.340.4 பில்லியன்) மற்றும் பணிகள் (ரூ.259.3 பில்லியன்) துறைக்கான கொடுகடன் ஏறத்தாழ 43 சதவீதம் மற்றும் 33 சதவீதம் கொண்ட பங்களிப்புக்களை

வரைபடம் 7.15
முக்கிய துறைகளுக்கான தனியார் துறையின்
கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி (%)



அட்டவணை 7.6
வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் துறைவாரியான பரம்பல்

ரூ. பில்லியன்

துறை	2020 முடிவில்	2021 முடிவில் (இ)	% பங்கு 2020	% மாற்றம் 2020
வேளாண்மை மற்றும் மீன்பிடி	**489.7**	**543.6**	**7.6**	**11.0**
இதில், தேயிலை	102.0	101.2	1.4	-0.8
இறப்பர்	30.8	41.4	0.6	34.4
தெங்கு	27.8	33.7	0.5	21.2
நெல்	38.6	44.4	0.6	15.3
மரக்கறி, பழப்பயிர்ச்செய்கை மற்றும் சிறிய உணவுப் பயிர்கள்	29.2	30.9	0.4	5.8
மீன்பிடி	20.5	24.0	0.3	17.0
கைத்தொழில்	**2,540.1**	**2,880.5**	**40.2**	**13.4**
இதில், கட்டடவாக்கம்	1,348.6	1,544.7	21.6	14.5
உணவு மற்றும் குடிபானங்கள்	148.3	174.7	2.4	17.8
துணிகள் மற்றும் ஆடைகள்	235.1	273.1	3.8	16.1
உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக்கருவிகள்	132.9	152.8	2.1	14.9
பணிகள்	**1,716.7**	**1,976.0**	**27.6**	**15.1**
இதில், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்	501.8	549.8	7.7	9.6
சுற்றுலா	261.7	288.2	4.0	10.1
நிதி மற்றும் வியாபாரப் பணிகள்	350.1	437.2	6.1	24.9
கப்பலேற்றல், வான்போக்குவரத்து மற்றும் சரக்கு பரிமாற்றம்	21.6	30.3	0.4	40.1
தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ஈ)	**1,632.1**	**1,762.2**	**24.6**	**8.0**
இதில், நீண்ட கால நுகர்வு பொருட்கள்	330.8	375.0	5.2	13.3
அடகுபிடித்தல்	248.7	294.9	4.1	18.6
கடன் அட்டைகள்	127.8	143.1	2.0	12.0
மொத்தம் (உ)	6,378.6	7,162.3	100.0	12.3

(அ) வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றின் காலாண்டு அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது.
மூலம்: இலங்கை மத்திய வங்கி
(ஆ) கடன்கள், மேலதிக பற்றுக்கள் மற்றும் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சேகரிப்பு நிலையில் உள்ள காசு விடயங்கள் நீக்கப்பட்டுள்ளன
(இ) தற்காலிகமானது
(ஈ) 'கைத்தொழிலின்' கீழ் வகைப்படுத்தப்பட்ட 'கட்டடவாக்கம்' என வகைப்படுத்தப்பட்ட தனியாள் வீடமைப்பு கடன்கள் நீங்கலாகவும் பாதுகாப்பு வலைத் திட்டங்கள் தொடர்பான கடன்கள் உள்ளடங்கலாக
(உ) தொகுத்தல் செயல்முறையிலுள்ள வேறுபாடுகளினால் காலாண்டு அளவீட்டின் அடிப்படையிலான தனியார் துறைக்கான கடன் நாணய அளவீட்டிலிருந்து வேறுபடுகிறது.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஒட்டுமொத்த விரிவாக்கத்திற்கு வழங்கிய வேளையில், வேளாண்மை மற்றும் மீன்பிடி (ரூ.53.9 பில்லியனால்) மற்றும் தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்களில் (ரூ.130.1 பில்லியனால்) ஏற்பட்ட அதிகரிப்பு முறையே ஏறத்தாழ 7 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் பங்களித்தது. துறைவாரியான செயலாற்றத்தின் நியதிகளில் வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளுக்கான கொடுகடன் 2020 இறுதியின் 3.9 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 11.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இத்துறைக்குள் நெல், இறப்பர், தெங்கு, காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்களின் பயிற்செய்கை, சிறு உணவுப் பயிற்செய்கை மற்றும் மீன்பிடித் துணைத் துறைகளுக்கான கொடுகடன் பாய்ச்சல் இவ்வாண்டுப்பகுதியில் விரிவாக்கங்களைப் பதிவுசெய்த வேளையில், தேயிலைத் துணைத் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் சிறிதளவால் சுருக்கமடைந்தது.

அதேவேளை, பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகளில் மீட்சி ஏற்பட்டமையினைக் காட்டுகின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறை நடவடிக்கைகள் மேம்பட்டு பெரும்பாலான துறைகளுக்கான ஆரோக்கியமான கொடுகடன் பாய்ச்சலை எடுத்துக்காட்டியது. இதற்கமைய, கைத்தொழில் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020இன் இறுதியின் 4.7 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 13.4 சதவீதத்தினால் விரைவடைந்தது. கைத்தொழில் துறைக்குள், மொத்த கைத்தொழில் கொடுகடன் பாய்ச்சலில் ஏறத்தாழ 54 சதவீதத்திற்கு வகைகூறும் கட்டடவாக்கத் துணைத் துறைக்கான கொடுகடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 இறுதியில் 14.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. ஏனைய துணைத் துறைகளுக்கான அதாவது புடவை மற்றும் ஆடைகள், மற்றும் உணவு மற்றும் குடிபானம் ஆகியவற்றுக்கான கொடுகடனும் 2021 இறுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சி கண்டது. பணிகள் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 இறுதியின் 1.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 15.1 சதவீதத்திற்கு விரைவடைந்தது. பணிகள் துறைக்குள் வர்த்தகத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மேம்பட்டமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவு சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 9.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தொழில்துறையை உத்வேகப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமத வசதிகளும் ஏனைய வழிமுறைகளும் அதன் மீட்சியுடன் சேர்ந்து சுற்றுலாத் துறைக்கான கொடுகடன் வசதியை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவாக்கியமையினைக் கருத்திற்கொள்கையில் இத்துறைக்கான அதிகரித்த கொடுகடன் பாய்ச்சலைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2021 இறுதியில் 10.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், பணிகள் துறையின் கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு நிதியியல் மற்றும் வியாபாரப் பணிகள் மற்றும் போக்குவரத்து துணைத் துறைக்கான கடன் வழங்கல் ஆதரவளித்தது. தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் வடிவிலமைந்த கொடுகடன் வளர்ச்சி 2020 இறுதியின் 15.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 8.0 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சியடைந்தது. மிதமான விரிவாக்கத்திற்கு பங்களிக்கின்ற விதத்தில் நீண்டகால நுகர்வுப் பொருட்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சி 2020 இறுதியின் 38.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஆண்டிற்கு

அட்டவணை 7.7
வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற கொடுகடனின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு (அ) (ஆ)

துறை	முதிர்வு	திசெம்பர் 2020		திசெம்பர் 2021 (இ)	
		% பங்கு	% வளர்ச்சி	% பங்கு	% வளர்ச்சி
வேளாண்மை மற்றும் மீன்பிடி	குறுங்காலம்	4.5	-1.7	4.6	14.6
	நடுத்தரகாலம்	1.7	-5.3	1.6	9.2
	நீண்டகாலம்	1.5	44.0	1.4	2.4
கைத்தொழில்	குறுங்காலம்	11.5	-9.2	12.3	19.7
	நடுத்தரகாலம்	8.5	0.1	8.4	10.8
	நீண்டகாலம்	19.8	17.4	19.5	10.8
பணிகள	குறுங்காலம்	8.6	-12.6	9.2	19.9
	நடுத்தரகாலம்	9.1	4.3	8.7	8.1
	நீண்டகாலம்	9.2	15.6	9.6	17.5
தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்	குறுங்காலம்	9.2	-3.6	9.7	17.3
	நடுத்தரகாலம்	5.5	10.4	5.0	1.6
	நீண்டகாலம்	10.8	41.5	10.0	3.2
மொத்தம்	குறுங்காலம்	33.9	-7.7	35.7	18.4
	நடுத்தரகாலம்	24.8	3.4(ஈ)	23.8	6.0
	நீண்டகாலம்	41.3	23.3	40.5	10.0

(அ) வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் காலாண்டு அளவீட்டினை அடிப்படையாக கொண்டது.
(ஆ) கொடுகடனின் வகைப்படுத்தலானது ஆரம்ப முதிர்ச்சியினை அடிப்படையாக கொண்டதுடன் அது பின்வருமாறு: ஒரு வருடம் வரை - குறுங்காலம், ஒரு வருடத்திற்கும் ஐந்து வருடத்திற்கும் இடையில் - நடுத்தர காலம், ஐந்து வருடத்திற்கு மேல் - நீண்டகாலம்.
(இ) தற்காலிகமானது.
(ஈ) திருத்தப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆண்டு அடிப்படையில் 13.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அடகு பிடித்தலுடன் தொடர்பான முற்பணங்கள் 2021 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 18.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்து, அதிகரித்த தங்க விலைகள் மற்றும் காசுப் பாய்ச்சலுக்குக்காணப்பட்ட இடையூறுகள் என்பனவற்றின் காரணமாக அத்தகைய கொடுகடன்களுக்கான நாட்டம் அதிகரித்தமையினைப் பிரதிபலித்தது. கொடுகடன் அட்டை முற்பணங்களும் 2020 இறுதியின் 2.5 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.0 சதவீதத்தினால் மேம்பட்டது. மேலும், உரிமம்பெற்ற வாத்தக வங்கிகளின் தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடன் முதிர்ச்சியின் நியதிகளில், குறுங்கால மற்றும் நடுத்தரகால கொடுகடனில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட வேளையில் நீண்டகால கொடுகடன் வசதிகளில் மெதுவான தன்மையொன்று அவதானிக்கப்பட்டமையானது இவ்வாண்டின் இறுதிப்பகுதியளவில் பொருளாதாரத்தில் இறுக்கமான நாணய நிலைமைகளை பிரதிபலிக்கின்ற சாத்தியத்தினைக் கொண்டிருக்கின்றது.

விரிந்த பணம் (M_4)

M_{2b} இல் காணப்பட்ட அதேபோக்கினைத் தொடர்ந்து, நிதியியல் அளவீட்டினால்[12] அளவிடப்பட்டவாறான விரிந்த பண நிரம்பலின் வளர்ச்சி 2021 இறுதியில் குறைவடைந்தது. M_4 இன் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 21.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலிருந்து 2021 இறுதியில் 13.3 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. சொத்துப்பக்கத்திலிருந்து நோக்கும் போது, M_4 இன் விரிவாக்கம் முழுவதும் தேறிய உள்நாட்டு சொத்தின் விரிவாக்கத்தினால் ஏற்பட்டதுடன் இதில் உரிமம்பெற்ற வங்கிகளினால் ஏற்படுத்தப்பட்ட உள்நாட்டு கொடுகடன் ரூ.259.6 பில்லியனால் அதிகரித்த அதேவேளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அத்தகைய உள்நாட்டு கொடுகடன் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.103.6 பில்லியனால் அதிகரித்தது. ஆ4 இனை அடிப்படையாகக் கொண்ட மொத்த அரசிற்கான தேறிய கொடுகடனின் விரிவாக்கம் இவ்வாண்டுப்பகுதியில் ரூ.1,403.6 பில்லியனாக விளங்கியதுடன் இதில் ரூ.102.3 பில்லியன் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளு

வரைபடம் 7.16
நாணயக் கூட்டுக்களின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

12 நிதியியல் அளவீடானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் மத்திய வங்கிக்கும் மேலதிகமாக உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உள்ளடங்கலாக அனைத்து வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களையும் உள்ளடக்கி பரந்தளவிலான திரவத்தன்மை பற்றிய அளவீடொன்றினை வழங்குகின்றது.

அட்டவணை 7.8
விரிந்த பணத்தின் (M_4) சொத்துப்பக்கம்
(நிதியியல் அளவீட்டின்படி கணிப்பிடப்பட்டது)

ரூ. பில்லியன்

விடயம்	2020 முடிவில் (அ)	2021 முடிவில் (அ)	மாற்றம் 2020 தொகை	2020 %	2021 தொகை	2021 %
நிதியியல் அளவீடு (M_4)	11,461.9	12,985.4	2,017.4	21.4	1,523.5	13.3
உள்ளார்ந்த காரணிகள்						
தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்	-217.1	-998.6	-305.9	-344.6	-781.5	-360.0
நாணய அதிகாரசபைகள் (ஆ)	526.8	-387.3	-369.2	-41.2	-914.0	-173.5
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	-736.2	-594.7	59.0	7.4	141.5	19.2
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்	-7.6	-16.6	4.3	36.0	-9.0	-117.9
தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்	11,679.0	13,984.0	2,323.2	24.8	2,305.0	19.7
உள்நாட்டுக் கொடுகடன்	14,652.4	17,296.4	2,558.3	21.2	2,643.9	18.0
அரசிற்கான தேறிய கொடுகடன்	5,365.7	6,769.3	1,882.8	54.1	1,403.6	26.2
மத்திய வங்கி	868.9	2,094.1	505.9	139.3	1,225.2	141.0
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	3,679.2	3,738.3	1,246.3	51.2	59.2	1.6
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	742.2	844.5	128.4	20.9	102.3	13.8
உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்	75.5	92.4	2.3	3.1	16.9	22.4
அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்)	1,002.2	1,188.1	184.2	22.5	185.9	18.6
தனியார்துறைக்கான கொடுகடன்	8,284.5	9,338.9	491.3	6.3	1,054.4	12.7
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	6,170.9	6,981.4	374.1	6.5	810.5	13.1
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	936.5	1,093.7	122.3	15.0	157.3	16.8
உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்	1,177.1	1,263.8	-5.1	-0.4	86.7	7.4
ஏனைய விடயங்கள் (தேறிய) (ஈ)	-2,973.4	-3,312.4	-235.1	-8.6	-339.0	-11.4

(அ) தற்காலிகமானது
(ஆ) மத்திய வங்கின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதேபோன்று அரச கணக்குகள் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட அரசிற்கான அரச முகவர் நிலுவைகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது
(இ) ஏனைய சொத்துக்களுக்கும் ஏனைய பொறுப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடாகக் கணக்கிடப்படுகிறது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

டாகவும் ரூ.16.9 பில்லியன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளூ டாகவும் பெறப்பட்டது. மேலும், குறைந்த வட்டி வீத சூழலின் பக்கபலத்துடன் உரிமம்பெற்ற வங்கிகளினாலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினாலும் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 6.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலிருந்து 2021இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2021இல் ரூ.157.3 பில்லியனால் அதிகரித்து, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 16.8 சதவீதம் கொண்ட ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, உரிமம்பெற்ற கம்பனிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2021இல் ரூ.86.7 பில்லியனால் உயர்வடைந்து, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.4 சதவீதம் கொண்ட ஆண்டு வளர்ச்சியைக் குறித்துக்காட்டியது. எனினும் ஆ4 இன் ஒட்டுமொத்த தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 ஆண்டுப்பகுதியில் ரூ.781.5 பில்லியனால் சுருக்கமடைந்தமைக்கு வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 9.0 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன.

M_4 **இன் பொறுப்புக்கள் பக்கத்தில் உரிமம்பெற்ற வங்கிகளிலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிலும் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் வளர்ச்சி 2021 இறுதியில் மிதமடைந்தது.** இதன்படி, ஆ4 இன் படி தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் வளர்ச்சி 2020 இறுதியின் 20.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஆண்டிற்கு அண்டு அடிப்படையில் 11.6 சதவீதத்திற்கு மிதமடைந்தன. உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளில் வைத்திருக்கப்படும் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 21.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 13.5 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன. எனினும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனியுடன் வைத்திருக்கப்பட்ட தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.7 சதவீதம் கொண்ட சிறிதளவு சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 5.5 சதவீதத்தினால் மாத்திரம் வளர்ச்சி கண்டது. ஆ4 இன்படி தவணை, சேமிப்பு வைப்புக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி, வங்கித்தொழில் துறையினால் வட்டி உழைக்கும் வைப்புக்களின் திரட்டல் மெதுவடைந்தமையின் காரணமாக மிதமடைந்ததுடன் 2021இல் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் திரட்டப்பட்ட தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களில் ஓரளவு முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.

8

நிதியியல்துறை செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை

8.1 பொதுநோக்கு

வலுவான பேரண்டப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் 2021இல் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மை பேணிப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. வங்கித்தொழில் துறையின் நிதியியல் இடையேற்பாடுகள் திருப்திகரமாகக் காணப்பட்ட வேளையில் போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்களும் பேணப்பட்டன. மேலும், 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் துறையின் இலாபத்தன்மை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவிற்கு மேம்பட்டமைக்கு தேறிய வட்டி வருமானம் மற்றும் வட்டியல்லா வருமானம் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களே காரணமாகும். எனினும், நாடு எதிர்நோக்கிய பல்வேறு தரமிடல் குறைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட குறைவு காரணமாக வங்கிகள் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மைப் பற்றாக்குறையினை எதிர்கொண்டன. ஒட்டுமொத்த அடிப்படையில், கொடுகடன் வளர்ச்சி மற்றும் இலாபத்தன்மை நியதிகளில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் துறையின் செயலாற்றம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை எடுத்துக்காட்டியது. நடுத்தர காலப்பகுதியில் வலுவானதும் உறுதித்தன்மை வாய்ந்ததுமான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளைக் கட்டியெழுப்புவதற்கும் துறையின் வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்குமாக 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நிதியியல் துறையினை ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் செயற்பட்டது. மேலும், புதிய வழமையினைப் பின்பற்றுவதில் நெகிழ்ச்சித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்திற்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதற்கும் மத்திய வங்கி, குறித்த காலப்பகுதியில் அதன் அதிகாரவரம்பிற்குள் வரும் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளில் சிலவற்றைத் தளர்த்தியது. காப்புறுதித் துறையும் சொத்துக்கள் மற்றும் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பண நியதிகளில் விரிவாக்கத்தினைப் பதிவுசெய்த வேளையில் இலாபத்தில் சிறிதளவான சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது. அதேவேளை நிதியியல் சந்தைகளின் செயலாற்றம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கலப்பான செயலாற்றமொன்றினைக் கொண்டிருந்தன. 2021இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மிகையான மட்டத்தில் தொடர்ந்து காணப்பட்ட பணச் சந்தையின் திரவத்தன்மையானது வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை மாற்றமடைந்தமை என்பனவற்றின் விளைவாக பற்றாக்குறைக்கு மாற்றமடைந்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை கடுமையாகப் பாதிக்கப்பட்டமைக்கு சுற்றுலாத் துறையின் மெதுவான மீட்சி மற்றும் குறைவடைந்த பணவனுப்பல் வருவாய்கள், ஏற்றுமதிப் பெறுகைகள் மெதுவாக மாற்றப்பட்டமை, அதிகரித்த இறக்குமதிச் செலவினம் மற்றும் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமை என்பன காரணங்களாக அமைந்தன. 2021இன் பிற்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையின் முதலாந்தர ஏலங்களில் முதலீட்டாளர்களின் முன்னுரிமை குறுங்கால திறைசேரி உண்டியல்களை நோக்கிக் காணப்பட்டதுடன், உயர்ந்தபட்ச வட்டிவீதம் அகற்றப்பட்டமை மற்றும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை மாற்றமடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2021இன் பிற்பகுதியில் இரண்டாந்தரச் சந்தையின் விளைவுவீத வளையி மேல்நோக்கி நகர்ந்தது. குறைந்த வட்டி வீதச் சூழலில் உள்நாட்டு முதலீட்டாளர்களின் தெரிவு பங்குச் சந்தையை நோக்கி நகர்ந்தமையால் 2021இல் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை உத்வேகம் மிக்க வளர்ச்சியொன்றினை அறிக்கையிட்டது. அதேவேளை, நாட்டின் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள், நெருக்கமான ஒழுங்குவிதிகள் மற்றும் கண்காணிப்பினூடாக உயர்ந்தளவு தாங்குதிறன் தன்மையுடன் இலங்கை மத்திய வங்கியினால் சுமுகமாகத் தொழிற்படுத்தப்பட்டன. மேலும், மத்திய வங்கி ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்புக் கட்டமைப்பிற்கு வலிமையானதொரு சட்ட அடித்தளத்தை வழங்கும் நோக்குடன் முக்கிய சட்டவாக்கச்

அட்டவணை 8.1
நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)	
	ரூ. பில்	பங்கு (%)	ரூ. பில்	பங்கு (%)
வங்கித்தொழில்துறை	17,087.9	72.9	19,969.9	74.7
மத்திய வங்கி	2,421.6	10.3	3,046.3	11.4
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	12,828.8	54.7	14,820.5	55.4
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	1,837.5	7.8	2,103.0	7.9
வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்	1,536.5	6.6	1,636.7	6.1
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்	1,367.9	5.8	1,452.0	5.4
கூட்டுறவு கிராமிய வங்கிகள் (இ)	167.8	0.7	183.9	0.7
சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கம்	0.8	0.0	0.8	0.0
சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்	386.5	1.6	387.7	1.4
சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்	33.7	0.1	35.7	0.1
உரிமம்பெற்ற நுண்கடன் கம்பனிகள்	6.6	0.0	8.4	0.0
முதனிலை வணிக்கள்	87.2	0.4	78.7	0.3
பங்குத்தரகர்கள்	19.9	0.1	36.5	0.1
நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள்	204.0	0.9	198.5	0.7
சந்தை இடையீட்டாளர்கள் (ஈ)	18.0	0.1	11.8	0.0
துணிகர மூலதனக் கம்பனிகள்	17.1	0.1	18.2	0.1
ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்	4,425.6	18.9	4,756.1	17.8
காப்புறுதிக் கம்பனிகள்	789.7	3.4	879.8	3.3
ஊழியர் சேம நிதியம்	2,824.3	12.1	3,166.1	11.8
ஊழியர் நம்பிக்கை நிதியம்	376.6	1.6	419.1	1.6
அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேம நிதியங்கள்	364.9	1.6	207.6	0.8
அரச பணி சேம நிதியம்	70.1	0.3	83.5	0.3
மொத்தம்	23,436.5	100.0	26,750.4	100.0

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவு இல்லாமையால் கூட்டுறவு கிராமிய வங்கியின் 2021 2ஆம் காலாண்டு இறுதி சொத்துத்தளம் 2021 இறுதியில் உள்ள சொத்துத்தளத்திற்கு சமமாகக் கொள்ளப்பட்டது.
(ஈ) சந்தை இடையீட்டாளர்களாக பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் நீங்களாக.

மூலம்: இலங்கை மத்திய வங்கி
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
தொழில் திணைக்களம்
ஓய்வுதியத் திணைக்களம்
ஊழியர் நம்பிக்கை நிதியசபை
இலங்கை காப்புறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
சனச கூட்டமைப்பு
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை கூறு நம்பிக்கை சங்கம்
துணிகர மூலதன கம்பனிகள்

சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதைத் தொடர்ந்தது. மத்திய வங்கி தனது ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு பலத்தை அதிகரிப்பதற்காக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதியியல் வியாபாரச் சட்டத்திற்கு சீர்திருத்தங்களை தயாரித்ததுடன் புதிய வங்கிச் சட்டம் தொடர்பான இரண்டாம் சுற்று கலந்துரையாடல்களையும் 2021இல் நிறைவுசெய்தது.

8.2 வங்கித்தொழில் துறையின் செயலாற்றம்

2021ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிதமான வேகமொன்றில் விரிவடைந்து, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய வலுவான சவால்கள் மற்றும் தொடர்பான பேரண்ட பொருளாதாரக் கரிசனைகள் என்பனவற்றிற்கிடையிலும் போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்பு என்பனவற்றுடன் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கொண்டிருந்தது. குறிப்பிட்ட துறைகளுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதம் தொடர்ச்சியாகக் காணப்பட்டமை மற்றும் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சலுகைகள் படிப்படியாகக் குறைவடைந்தமை போன்றவற்றிற்கு மத்தியிலும் வங்கித்தொழில் துறை மூலதனம் மற்றும் திரவத்தன்மை நியதிகளில் குறைந்தபட்ச முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது.

வங்கித்தொழில் துறை, நிதியியல் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியதுடன் 2021ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்களில் 63.3 சதவீதத்திற்கு வகைகூறியது. தற்பொழுது காணப்படும் உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய சவால்கள் மிக்க பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கும் பேரண்டப் பொருளாதாரத்துடன் தொடர்பான கரிசனைகளுக்கும் மத்தியிலும் வங்கித்தொழில் துறை 2021ஆம் ஆண்டுப்பகுதியில் நியாயமான கொடுகடன் வளர்ச்சியைப் பேணியது. வைப்புக்கள், நிதியிடலின் ஆதிக்கம்பெற்ற மூலமாக தொடர்ந்தும் விளங்கிய வேளையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூபாக் கடன்பாடுகளை நோக்கிய குறிப்பிடத்தக்க சரிவொன்றினை அவதானிக்க முடிந்தது. எனினும், வெளிநாட்டு மூலங்களிலிருந்தான வெளிநாட்டு கடன்பாடுகள் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டதன் மூலம் பாதிக்கப்பட்டன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டமைக்கு தேறிய வட்டி வருமானத்திலும் வட்டியல்லா வருமானத்திலும் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் காரணமாயமைந்தன.

வியாபார விரிவாக்கம்: 2021 இறுதியில் வங்கித்தொழில் துறையானது 11 வெளிநாட்டு வங்கிக் கிளைகள் உட்பட 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கி 30 வங்கிகளைக் கொண்டிருந்தது. வங்கித்தொழில் துறை தொடர்ந்தும் அதன் இடையேற்பாட்டு வகிபாகத்தினை ஆற்றியதுடன் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கித்தொழில் வலையமைப்பினையும் விரிவுபடுத்தியது. 2021இல் உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வங்கிகளை நேரடியாக அணுகுவதில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக பெரும்பாலான வங்கிகள் வாடிக்கையாளர்களின் வங்கித்தொழில் தேவைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் அவர்களுக்கு தொழில்நுட்பவியலை அடிப்படையாகக் கொண்ட நிகழ்நிலை சாதனங்கள்/ பணிகளை அறிமுகப்படுத்தின.

சொத்துக்கள்: இவ்வாண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளம் ரூ.2.3 றில்லியனால் அதிகரித்து, 2021 இறுதியில் ரூ.16.9 றில்லியனை விஞ்சி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 17.1

வரைபடம் - 8.1

நிதியியல் துறையின் செயலாற்றம்



அட்டவணை 8.2

வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி பணிநிலையங்களின் பரம்பல்கள்

வகை	2020 முடிவில் (அ)	2021 முடிவில் (ஆ)
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்		
I. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை	24	24
உள்நாட்டு வங்கிகள்	13	13
வெளிநாட்டு வங்கிகள்	11	11
II. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை	6,702	6,614
கிளைகள்(இ)	2,915	2,919
உள்நாட்டு வங்கிகள்	2,869	2,874
வெளிநாட்டு வங்கிகள்	46	45
மாணவர் சேமிப்பு பிரிவுகள்	3,787	3,695
III. தன்னியக்க கூற்றுப் பொறிகள்	5,744	5,891
உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்		
I. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை	6	6
தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள்	1	1
வீடமைப்பு நிதி நிறுவனங்கள்	2	2
ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	3	3
II. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை	704	705
கிளைகள் (இ)	704	705
தேசிய மட்ட சேமிப்பு வங்கி	266	263
வீடமைப்பு நிதி நிறுவனங்கள்	64	64
ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	374	378
தன்னியக்க கூற்றுப் பொறிகள்	432	451
வங்கிக் கிளைகளினதும் ஏனைய பணி நிலையங்களினதும் மொத்த எண்ணிக்கை	7,406	7,319
தன்னியக்க கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை	6,176	6,342

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மாணவர் சேமிப்புப் பிரிவுகள் தவிர்ந்த அனைத்து வங்கிப் பணிநிலையங்கள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.3

வங்கித் தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)		மாற்றம் (%)	
	ரூ.பில்	பங்கு (%)	ரூ.பில்	பங்கு (%)	2020 (அ)	2021 (ஆ)
சொத்துக்கள்						
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	9,091.7	62.0	10,479.7	61.9	11.9	15.3
முதலீடுகள்	4,195.8	28.6	4,885.6	28.9	40.0	16.4
ஏனையவை (இ)	1,378.8	9.4	1,558.3	9.2	-1.8	13.0
பொறுப்புக்கள்						
வைப்புக்கள்	11,140.9	76.0	12,671.3	74.9	21.6	13.7
கடன் பெறுகைகள்	1,692.2	11.5	2,181.2	12.9	0.8	28.9
முதலீட்டு நிதிகள்	1,254.2	8.6	1,464.4	8.7	11.0	16.8
ஏனையவை	578.9	3.9	606.6	3.6	5.0	4.8
மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்	14,666.3	100.0	16,923.6	100.0	17.1	15.4

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 15.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அத்தகைய சொத்துக்களின் வளர்ச்சிக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களிலும் முதலீடுகளிலும் ஏற்பட்ட வளர்ச்சி முக்கிய தூண்டுதலாக அமைந்தது. கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட வளர்ச்சி 2020இன் 11.9 சதவீதத்திலிருந்து 2021இல் 15.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஏறத்தாழ, 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கடன் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட அதிகரிப்பில் 92.2 சதவீதத்திற்கு ரூபாக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக அமைந்தது. கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு பொருளாதாரத்தின் முக்கிய துறைகள் முழுவதிலும் பரந்து காணப்பட்டது. சாதனங்களின் நியதிகளில் மேலதிகப் பற்றுக்கள் (40.7 சதவீதம்) அடகு முற்பணங்கள் (21.5 சதவீதம்) மற்றும் கொடுகடன் அட்டைகள் (12.6 சதவீதம்) என்பன முக்கிய சாதனங்களாகக் காணப்பட்டதுடன், இவை 2021ஆம் ஆண்டுப்பகுதியில் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன. அதேவேளை, முதலீடுகளில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2020 இறுதியின் 40 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 16.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் சொத்துப்பட்டியல் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 24.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு திறைசேரி முறிகள், மீதான முதலீடுகள் ரூ.903.7 பில்லியனால் அதிகரித்தமையுடன் திறைசேரி உண்டியல் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான முதலீடுகள் முறையே ரூ.99.8 பில்லியன், ரூ.55 பில்லியனால் குறைவடைந்தமையே காரணமாகும். வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 21.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. பெயரளவு நியதிகளில், திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் முறையே ரூ.50 பில்லியனாலும் ரூ.47.6 பில்லியனாலும் ரூ.63.8 பில்லியனாலும் சுருக்கமடைந்தன.

பொறுப்புக்கள்: வைப்புக்கள், நிதியிடலின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து கடன்பாடுகள் காணப்பட்டன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் 42.7 சதவீதத்திற்கு தவணை வைப்புக்கள் வகைகூறியமைக்கிடையிலும் மொத்த வைப்புக்களில் அதன் பங்கு 2020 இறுதியின் 63 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 60.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2021 இறுதியில் மொத்த வைப்புக்களில் சேமிப்பு மற்றும் நடைமுறை வைப்புக்கள் முறையே 29.5 சதவீதத்திற்கும் 7 சதவீதத்திற்கும் வகைகூறின. இதற்கமைய, நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளின் விகிதம் 2020இன் 34.5 சதவீதத்திலிருந்து 2021இல் 36.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த வைப்புக்களின் வளர்ச்சி வீதம் 2021 ஆண்டு காலப்பகுதியில் குறைவடைந்தமையால் வங்கிகள் தங்கள் கடன்பாடுகளை அதிகரிக்க வேண்டிய கட்டாயமேற்பட்டது. வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்பாடுகள் 2020இன் ரூ.12.8 பில்லியன் (0.8 சதவீதம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.489

அட்டவணை 8.4

வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)		மாற்றம் (%)	
	ரூ.பில்	பங்கு (%)	ரூ.பில்	பங்கு (%)	2020 (ஆ)	2021 (ஆ)
கேள்வி வைப்புக்கள்	696.9	6.3	889.2	7.0	31.8	27.6
சேமிப்பு வைப்புக்கள்	3,149.9	28.3	3,742.7	29.5	34.4	18.8
தவணை வைப்புக்கள்	7,022.3	63.0	7,676.3	60.6	15.3	9.3
ஏனைய வைப்புக்கள்	271.9	2.4	363.1	2.9	38.1	33.6
மொத்த வைப்புக்கள்	11,140.9	100.0	12,671.3	100.0	21.6	13.7

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பில்லியனால் (28.9 சதவீதம்) அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு 2021இன் 86.6 சதவீதம் (688 பில்லியன்) கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்த ரூபாக் கடன்பாடுகள் முக்கிய காரணமாக அமைந்த வேளையில் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் 27.6 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் 1.3 பில்லியன்) வீழ்ச்சியடைந்து நாட்டிற்கான தரமிடல் குறைவடைந்தமையின் எதிர்க்கணியத் தாக்கத்தினைப் பிரதிபலித்தன.

ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள்: **சவால்மிக்க வியாபாரச் சூழ்நிலைகளின் காரணமாக 2021இல் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 16.1 சதவீத (ரூ.675.2 பில்லியன்) வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீதம் கொண்ட (ரூ.160.6 பில்லியன் கொண்ட வீழ்ச்சி) எதிர்க்கணிய வளர்ச்சியை அறிக்கையிட்டன.** குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்துகைகளிலும் (ரூ.410.9 பில்லியன்) எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் தொடர்களிலும் (ரூ.81.5 பில்லியன்) அவதானிக்கப்பட்ட வேளையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் உத்தரவாதங்கள் மற்றும் முறிகள் (ரூ.139 பில்லியன்) மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புபட்ட வெளிப்படுத்துகைகள் (ஆவண ரீதியான கொடுகடன் (ரூ.138.9 பில்லியன்) மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் (ரூ.92 பில்லியன்)) என்பன அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

வரைபடம் 8.2

வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் - (2021 இறுதியில் உள்ளவாறு)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வங்கித்தொழில் துறையின் இடர்நேர்வுகள்

கொடுகடன் இடர்நேர்வு

2021ஆம் ஆண்டு காலப்பகுதி முழுவதிலும் உலகளாவிய நோய்த்தொற்று வேறுபட்ட அளவுகளில் தொடர்ந்தும் காணப்பட்டமையினால், குறிப்பிட்ட துறைகளிலுள்ள உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதங்களுக்கு 2022 வரை பல நீடிப்புக்கள் வழங்கப்பட்டன. சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் கடன்களையும் முற்பணங்களையும் செயற்படாக் கடன் வகைகளுக்கு வகைப்படுத்துவது முடக்கப்பட்டிருந்ததுடன் சட்ட இசைவுத்தாமதம் நிறுத்தப்பட்டதும் வழமையான வகைப்படுத்தல் விதிகள் பிரயோகிக்கப்படும். எனினும், வங்கிகள் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடுவதற்காக கொவிட்-19 காரணமாக இடர்நேர்வுகள் தோன்றியுள்ள துறைகளை அடையாளம் காணுகின்ற நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன. சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ் கொடுகடன் வசதிகளை வகைப்படுத்துவது முடக்கப்பட்டுள்ள போதும் செயற்படாக் கடன்கள் 2020ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.66.4 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.20.1 பில்லியனால் அதிகரித்துள்ளன. எனினும், 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்களிலும் முற்பணங்களிலும் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த அதிகரிப்புக்கள் காணப்பட்டமையின் காரணமாக, மொத்த செயற்படாக் கடன்களின் விகிதம் 2020 இறுதியின் 4.9 சதவீதத்திலிருந்து 2021இன் இறுதியில் 4.5 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. அத்துடன், உயர்ந்த ஏற்பாட்டுக் காப்பு விகிதத்தினைத் தேவைப்படுத்துகின்ற வகைகளுக்கான செயற்படாக் கடன்களின் கீழ் நோக்கிய பெயர்வின் காரணமாக தேறிய செயற்படாக் கடன் விகிதம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் குறைவடைந்தது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில், மொத்தக் கடன்

வரைபடம் 8.3

வங்கித்தொழில் துறையின் செயற்படாக்கடன்கள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

8

வரைபடம் 8.4
வங்கித்தொழில் துறையின் ஏற்பாடுகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

இழப்பு ஏற்பாடுகள் ரூ.80.2 பில்லியனால் அதிகரித்ததுடன், இதில், குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் 84.7 சதவீதத்திற்கு வகைகூறின. செயற்படாக் கடன்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் ஏற்பாடுகளில் காணப்பட்ட உயர்ந்த அதிகரிப்புக்கள் குறித்துரைக்கப்பட்ட மற்றும் மொத்தப் பாதுகாப்பு ஏற்பாட்டு விகிதங்களில் முறையே 64 சதவீதம் மற்றும் 75.8 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தன. இதன் விளைவாக, கொடுகடன் இடர்நேர்வு முகாமைப்படுத்தப்பட்ட மட்டங்களில் காணப்பட்டமைக்கிடையில் வங்கித்தொழில் துறை கொடுகடன் அதிர்ச்சிகளினால் தோன்றக்கூடிய தாக்கங்களை உள்வாங்கிக்கொள்ளும் விதத்தில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் மூலதன தாங்கியிருப்புடன் தொழிற்பட்டது.

மொத்தக் கடன் சொத்துப்பட்டியலில் 63.8 சதவீதமான கடன்கள், நுகர்வு, கட்டடவாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு, வர்த்தகம், தயாரிப்பு மற்றும் வேளாண்மை ஆகிய 5 துறைகளில் முக்கியமாகக் குவிந்து காணப்பட்டன. தயாரிப்பு, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், வேளாண்மை, கட்டடவாக்கம், காடாக்கம் மற்றும் மீன்பிடி, சுற்றுலாத் துறைகள் 2021 இறுதியில் மொத்த வங்கித்தொழில் துறையின் சராசரியான 4.5 சதவீதத்திலும் பார்க்க உயர்ந்த செயற்படாக் கடன் விகிதத்தினைப் பதிவுசெய்தன.

மேலும், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9 இன்படி, எதிர்பார்க்கப்பட்ட இழப்பு மாதிரி நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் 2021 இறுதியில் வங்கித்தொழில் துறையிலுள்ள மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்கள் 7.64 சதவீதத்தினையும் மொத்தக் கடன்களுக்கான (பழுதுறக்கூடிய கட்டம் 3 நீங்கலாக) கட்டம் 3 கடன்கள் (பழுதுறக்கூடிய கட்டம் 3 நீங்கலாக) 4.26 சதவீதத்தினையும் எடுத்துக்காட்டின.

சந்தை இடர்நேர்வு

வட்டி வீதங்கள்: வட்டி வீத உணர்திறன் விகிதம் (12 மாதங்களைவிடக் குறைவான முதிர்வுகளுடன் கூடிய வட்டியுடைய பொறுப்புக்களின் பங்கொன்றாக வட்டியை உழைக்கும் சொத்துக்கள்) 2020 இறுதியின் 74.9 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 79.6 சதவீதத்திற்கு அதிகரித்தமையின் மூலம் 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் வட்டி வீத இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையினைக் குறைவடையச் செய்துள்ளது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் திறைசேரி முறிகள் மீதான மூலதன இலாபம் ரூ.4.1 பில்லியனாக அமைந்து 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.12.2 பில்லியனிலும் பார்க்கக் குறைவாகக் காணப்பட்டது. இதற்கு 2020இல் நிலவிய தாழ்ந்த வட்டி வீதங்கள் உயர்ந்த இலாபங்களுக்கு வழிவகுத்தமை காரணமாக அமைந்த வேளையில் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டதுடன் வட்டி வீதங்களின் மேல் நோக்கிய சீராக்கம் 2021இன் பின்னரைப்பகுதியில் அவதானிக்கப்பட்டது.

பங்குரிமை விலைகள்: வங்கித்தொழில் துறையின் பங்குரிமை இடர்நேர்வு 2021ஆம் ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது. 2021ஆம் ஆண்டு இறுதியில் பங்குரிமைச் சந்தைகளுக்கான வங்கிகளின் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை ரூ.12.5 பில்லியனாக விளங்கியதுடன், இது, வர்த்தப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட மொத்தச் சொத்துக்கள் மற்றும் முதலீடுகளில் முறையே 0.1 சதவீதமாகவும் 2.1 சதவீதமாகவும் மட்டுமே காணப்பட்டன.

அட்டவணை 8.5
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் துறைசார் உள்ளடக்கம் (2021 இறுதியில் உள்ளவாறு)

துறைகள்	தொகை ரூபில் (அ)	மொத்த கடன்களின் பங்கு (%)	செயற்படாக் கடன்களின் விகிதம் (%)
நுகர்வு	1,785.1	17.0	3.1
கட்டடவாக்கம்	1,608.4	15.3	6.2
மொத்த மற்றும் சில்லறை வாணிபம்	1,373.2	13.1	6.5
தயாரிப்பு	992.9	9.5	8.1
உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்	930.7	8.9	1.8
நிதி அமைச்சுக்கான கடன் வழங்கல்கள்	857.5	8.2	-
வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி	813.5	7.8	6.3
நிதியியல் சேவைகள்	460.7	4.4	1.6
வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கடன் வழங்கல்	419.2	4.0	3.2
சுகாதார நலன், சமூக சேவைகள் மற்றும் துணைச் சேவைகள்	391.9	3.7	2.7
சுற்றுலா	358.2	3.4	5.6
போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்	206.0	2.0	6.1
தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செற்பாடுகள்	142.9	1.4	3.0
தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைகள்	73.2	0.7	5.9
கல்வி	54.6	0.5	2.9
கலைகள், பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ்வு	11.8	0.1	4.5
மொத்தக் கடன்கள்	10,479.7	100.0	4.5

(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.5
வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை விகிதங்கள்



வரைபடம் 8.6
திரண்ட பொறுப்புகளின்
சதவீதமாக திரண்ட முதிர்ச்சி இடைவெளி



செலாவணி வீதங்கள்: வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் அதிகளவிற்கு குறைவடைந்தமையின் காரணமாக, வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 2020 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 30 மில்லியன் கொண்ட குறுகிய நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 133.2 மில்லியன் கொண்ட நீண்ட நிலைக்கு அதிகரித்தது. வங்கிகளின் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை, 2020இன் இறுதியின் 0.3 சதவீதத்திலிருந்து அதிகரித்து 2021 இறுதியில் 1.3 சதவீதத்தில் காணப்பட்டது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் அதிகரித்தமைக்கு கடன்கள், வங்கிகளுடனான வைப்புகளின் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்ததுடன், அதிகரிப்பு, ஐந்தொகைக்கு வெளியேயான சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க குறைவாக இருந்தமைக்கு முன்னோக்கிய கொள்வனவுகள் மற்றும் ஏனைய பெறுதிச்சாதனங்களின் வீழ்ச்சிகள் காரணமாயமைந்தன. அதேவேளை, ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வாடிக்கையாளர் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக அமைந்த வேளையில், ஐந்தொகைக்கு வெளியிலான பொறுப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாக முன்னோக்கிய விற்பனைகள் காரணமாயிருந்தன. வங்கித்தொழில் துறை 2020ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.16.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆண்டுப்பகுதியில் ரூ.28.7 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபத்தினை அறிக்கையிட்டது.

திரவத்தன்மை இடர்நேர்வு: ஒட்டுமொத்த வங்கித்தொழில் துறை 20 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச நியதி திரவச் சொத்து விகிதத்துடன் இணங்கியொழுகியது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் குறைந்தபட்சம் 20 சதவீதம் கொண்ட நியதி திரவச் சொத்து ஒதுக்கினை பேணவேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டன. உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் நியதி திரவச்சொத்து விகிதம் 2020 இறுதியில் 37.8 சதவீதத்திலிருந்து 2021 இதியில் 33.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவின் நியதி திரவச்சொத்து விகிதம் தொடர்பான காலப்பகுதியில் 43.2 சதவீதத்திலிருந்து 34 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுகடனில் உயர்ந்த அதிகரிப்பு காணப்பட்ட போதும், வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கான கொடுகடன் விகிதம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில், மொத்த சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதமும் வைப்புக்களுக்கான திரவச் சொத்து விகிதமும் வீழ்ச்சியடைந்தன.

2021இன் இறுதியில் வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை அழுத்தச் சூழ்நிலைகளின் கீழ் 30 நாட்களுக்கான திரவத்தன்மைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக இரண்டாந்தரச் சந்தையில் இலகுவாகவும் உடனடியாகவும் காசாக்கப்படக்கூடிய பொறுப்புக்களற்ற உயர்தர திரவச்சொத்துக்களின் பங்காக எடுத்தியம்பும் ரூபா மற்றும் அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு விகிதம் முறையே 217.8 சதவீதமாகவும் 171.8 சதவீதமாகவும் அமைந்து குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் விகிதமான 100 சதவீதத்தினைவிட மிக உயர்வாகக் காணப்பட்டன. மேலும் 2021 இறுதியில் தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதம் அதாவது கிடைக்கத்தக்க உறுதிப்பாடு நிதியிடலுக்கு தொடர்பான தேவையான உறுதிப்பாடு நிதியிடல், 135.1 சதவீதமாக விளங்கி, ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான 100 சதவீதத்தினைவிட மிக உயர்வாகக் காணப்பட்டது. 2021 இறுதியில் மொத்த திரவத்தன்மைச் சொத்துக்கள் ரூ.5 நில்லியனாக விளங்கியதுடன் இதில் அரச பிணையங்களிலான முதலீடுகள் 75.2 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தின. 30 நாட்களுக்குக் குறைவானதும் 12 மாதங்களுக்குக்

அட்டவணை 8.6
வங்கித்தொழில் துறையின் திரவச் சொத்துக்களின் உள்ளடக்கம்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)		மாற்றம் (ரூ.பில்)	
	ரூ.பில்	பங்கு (%)	ரூ.பில்	பங்கு (%)	2020 (அ)	2021 (ஆ)
திறைசேரி உண்டியல்கள்	1,149.9	23.0	1,040.6	20.8	278.7	-109.3
திறைசேரி முறிகள்	1,685.3	33.7	2,142.3	42.9	481.8	457.1
இலங்கை அபிவிருத்தி முறிகள்	655.8	13.1	577.0	11.5	86.1	-78.8
காசு	203.1	4.1	231.8	4.6	6.2	28.7
அழைப்புப் பணம்	337.7	6.8	177.2	3.5	168.9	-160.5
வெளிநாட்டிலுள்ள வங்கிகளுடனான மீதிகள்	469.9	9.4	538.9	10.8	42.4	69.0
ஏனையவை	493.6	9.9	290.3	5.8	309.8	-203.3
மொத்த திரவச் சொத்துக்கள்	**4,995.1**	**100.0**	**4,998.0**	**100.0**	**1,373.9**	**2.9**

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கூடுதலானதுமான முதிர்ச்சியைக் கொண்ட முதிர்ச்சிக் கூடைகளுக்கான வங்கித்தொழில் துறையின் ஒன்றுசேர்ந்த பொறுப்புக்களின் சதவீதமாக ஒன்று சேர்ந்த முதிர்ச்சி இடைவெளி 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் விரிவடைந்து, வட்டி வீதங்களின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை பரிசீலனையில் கொள்கையில் கூடுதலான பொறுப்புக்கள் சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த வட்டி வீதங்களில் மீள்விலையிடப்பட்டமையால் குறுங்காலத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சிறந்த முகாமைத்துவத்தினை எடுத்துக்காட்டின. வங்கிகள், குறைந்தபட்ச திரவத்தன்மை தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யக்கூடியனவாக இருந்தபோதும் முதிர்ச்சி இடைவெளியின் மிகையான விரிவு திரவத்தன்மை இடர்நேர்வில் அதிகரிப்பொன்று ஏற்பட வழிவகுக்கலாம்.

வங்கித்தொழில் துறையின் செயலாற்றம்

இலாபத்தன்மை: வங்கித்தொழில் துறையின் வட்டி வருமானம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 3.2 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் வட்டிச் செலவினங்கள் ஒப்பிடுகையில் 11.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையால் தேறிய வட்டி வருமானத்தினை 28.5 சதவீத்தினால் அதிகரித்தது. இதன்விளைவாக, தேறிய வட்டி இலாபம் 2020 இறுதியின் 3.1 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 3.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. தேறிய வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.121.8 பில்லியனால் அதிகரித்த வேளையில் வட்டியல்லா வருமானம் ரூ.24.6 பில்லியனால் அதிகரித்தமைக்கு 2021இல் காணப்பட்ட உயர்ந்த வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபமே முக்கிய காரணமாகும். வட்டியல்லா செலவினங்கள் ரூ.47.4 பில்லியனால் அதிகரித்தமைக்கு முக்கிய காரணம் அலுவலர் செலவு ரூ.20.5 பில்லியனால் அதிகரித்த அதேவேளையில் கடன் இழப்பு ஏற்பாடுகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ. 7.7 பில்லியனால் அதிகரித்தமையாகும். இதன்விளைவாக, ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலின்படி கூட்டாண்மை வரிக்கு முன்னரான இலாபம் 2021இல் ரூ.258.7 பில்லியனாகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டினை விட ரூ.69 பில்லியன் உயர்வானதாகக் காணப்பட்டது.

அட்டவணை 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபம்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)	
	தொகை (ரூ.பில்)	சராசரி சொத்தின் % ஆக	தொகை (ரூ.பில்)	சராசரி சொத்தின் % ஆக
தேறிய வட்டி வருமானம்	427.1	3.1	548.9	3.4
வட்டி வருமானம்	1,161.1	8.5	1,198.3	7.5
வட்டிச் செலவினம்	734.0	5.4	649.3	4.1
வட்டியல்லா வருமானம்	141.9	1.0	166.6	1.0
வெளிநாட்டு செலாவணி வருமானம்	31.5	0.2	46.4	0.3
வட்டியல்லா செலவினம்	252.4	1.9	299.8	1.9
ஊழியர் செலவுகள்	128.0	0.9	148.4	0.9
கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள்	83.5	0.6	91.3	0.6
வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான)	189.7	1.4	258.7	1.6
வரிக்கு பின்னரான இலாபம்	135.8	1.0	198.4	1.2

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதங்கள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

8

2021இன் இறுதியில் வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ.198.4 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 46 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றியினைப் பதிவுசெய்தது. இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு சொத்தின் மீதான வருவாயில் வரிக்கு முன்னரான இலாபம் பிரதிபலிக்கப்பட்டதுடன் 2020இன் இறுதியில் 1.4 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 1.6 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பங்குரிமை மீதான வருவாய் - வரிக்குப் பின்னர் 2020 இறுதியில் 11.4 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 14.5 சதவீதத்திற்கு மேம்பட்டது. மேலும், தொழிற்பாட்டு செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக வினைத்திறன் விகிதம் 2020இன் 51.8 சதவீதத்திலிருந்து 2021இல் 48.1 சதவீதத்திற்கு மேம்பட்டது.

மூலதனம்: 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறை மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணைந்து ஒழுகுவதாகக் காணப்பட்டது. தொடர்பான காலப்பகுதியில் எந்தவொரு வங்கியும் மூலதன பாதுகாப்பு தாங்கியிருப்பில் எடுப்பனவு எதனையும் மேற்கொண்டிருக்கவில்லை.

புதிய மூலதனத்தினை திரட்டுவதில் காணப்படும் சவால்களை பரிசீலனையில் கொண்டு, வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை உயர்த்துவதற்கான கால அவகாசம் 2022 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9இன் நடைமுறைப்படுத்தலிருந்தான முதல் நாள் தாக்கத்திற்கு அங்கீகரிப்பினை வழங்கியதன் பின்னர் உயர்தர மூலதனத்தினைத் திரட்டுவதற்கு வங்கிகள் ஊக்குவிக்கப்பட்டன. இதன்விளைவாக, வங்கிகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் இலாபத்தினை பிடித்து வைத்துக்கொண்டதன் ஊடாகவும் (ரூ.70 பில்லியன்) புதிய பங்குகளை வழங்கியதனூடாகவும் (ரூ.16.8 பில்லியன்) அடுக்கு 1 மூலதனத்தினைத் திரட்டிக்கொண்டன. வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல்

வரைபடம் 8.8
வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.8
வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்

விடயம்	தொகை (ரூ.பில்)		உள்ளடக்கம் (%)	
	2020 (அ)	2021 (ஆ)	2020 (அ)	2021 (ஆ)
அடுக்கு I மூலதனம்	1,041.4	1,083.8	100.0	100.0
பங்கு மூலதனம்	335.3	352.1	32.2	32.5
நியதி ஒதுக்கு நிதிகள்	65.9	66.7	6.3	6.2
பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபம்	410.6	480.5	39.4	44.3
பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள்	257.9	250.5	24.8	23.1
ஏனையவை	32.9	21.6	3.2	2.0
ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள்	-61.1	-87.5	-5.9	-8.0
அடுக்கு II மூலதனம்	266.2	279.8	100.0	100.0
மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள்	27.2	35.3	10.2	12.6
கீழ்மட்ட தவணை படுகடன்	166.5	160.2	62.6	57.2
பொது ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை	73.7	84.7	27.7	30.3
ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள்	-1.3	-0.4	-0.5	-0.1
மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்	1,307.6	1,363.6		

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மூலதனம் இவ்வாண்டுப்பகுதியில் 4.3 சதவீத வளர்ச்சியை அறிக்கையிட்டதுடன் இதில், அடுக்கு 1 மூலதனம் அதிகரிப்பில் 75.7 சதவீதத்திற்குப் பங்களித்தது.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்

2021ஆம் ஆண்டுப்பகுதியில், இலங்கை மத்திய வங்கி வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக, உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மையினை பலப்படுத்தும் விதத்தில் முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளையும் ஒழுங்குவிதிகளையும் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தியது. அதேநேரம், வங்கித்தொழில் துறை புதிய வழமைக்கு தம்மை சீராக்கிக் கொள்வதற்கு வசதியளிப்பதற்காகவும் கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத் துறைகளுக்கு சலுகைகளைத் தொடர்ந்து வழங்குவதற்காகவும் மத்திய வங்கி எச்சரிக்கையுடன் சில ஒழுங்குவிதிகளை தளர்த்தியது.

பரந்த அடிப்படையில் பொருளாதார மீட்சிக்கு வழிசமைக்கும் உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி வருவாயின் நியதிகளில் அதிக வளர்ச்சி சாத்தியமான பொருளாதாரத் துறைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் மத்திய வங்கி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைகளிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் மீது முன்னுரிமைத் துறை கடன் வழங்கல் இலக்கினை அறிமுகப்படுத்தியது. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு முன்னைய ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்ட கடனின் வெளிநிற்கும் இருப்பின் மீது ஆண்டிற்கு

ஆண்டு அடிப்படையில் ஆண்டொன்றிற்கு 20 சதவீதத்திற்குக் குறையாமல் தமது கொடுகடனை அதிகரிக்க வேண்டியிருந்தது. மேலும், எதிர்வரும் அறுவடைக்காலத்திற்காக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறிய, நடுத்தர, தொழில்முயற்சியிலுள்ள நெல் ஆலையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கான அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களை பரிசீலனையில் கொண்டு, 2021 சனவரி 01 இலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள நெல் ஆலையாளர்களுக்கெதிரான அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிக்கின்ற அதன் முயற்சிகளை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்ட வேளையில், நீண்டகால படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் தாக்கத்திற்கு மத்தியிலும் நிதியியல் முறைமையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்தியது. பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகள் பயணிகள் போக்குவரத்து பணிகளில் ஈடுபட்டுள்ள பாதிக்கப்பட்ட வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகளை 2021 ஏப்பிறலிலிருந்து ஆரம்பமாகின்ற 6 மாத காலப்பகுதிக்கு வழங்குதல், சுற்றுலாத் துறையிலுள்ள கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமத்தினை 2021 ஏப்பிறலிலிருந்து தொடர்கின்ற விதத்தில் மற்றொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடித்தல் மற்றும் கொவிட்-19 மூன்றாவது அலையினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட நிவாரண வழிமுறைகள் மற்றும் சலுகைகள் என்பனவற்றை உள்ளடக்கிறது.

அட்டவணை 8.9
31.12.2021இல் உள்ளவாறாக கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்ட செயற்படும் கடன்பாட்டாளர்களுக்கு உரிமம்பெற்ற வங்கிகளால் மார்ச் 2020 முதல் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தின் நிலைமை

படுகடன் சட்ட இசைவுத் தாமத கட்டம்	உரிமம் பெற்ற வங்கிகள்	
	ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள்	மொத்த வெளிநிற்கும் மூலதனம் (ரூ.பில்)
கட்டம் 1	1,266,620	2,185.0
கட்டம் 2	127,289	939.0
கட்டம் 3	176,188	917.0
கட்டம் 4	145,687	642.4
மொத்தம்	1,715,784	வி.கி.*

* சில கடன்பாட்டாளர்கள் பல திட்டங்களினூடாக சட்ட இசைவுத் தாமதத்தினை பெற்றுக்கொண்டிருக்கக்கூடும்

மூலம்: உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

அதனைத்தொடர்ந்து இச்சலுகைகள் 2021 செத்தெம்பரிலிருந்து 2021 இறுதிவரை நீடிக்கப்பட்டதுடன் சுற்றுலாத் துறையினைப் பொறுத்தவரை, தொடர்ந்து ஏற்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றினை பரிசீலனையில் கொண்டு 2022 யூன் இறுதிவரை நீடிக்கப்பட்டன. 2021 இறுதியில் உள்ளவாறாக வங்கித்தொழில் துறையின் கொடுகடன்களில் ஏறத்தாழ 6 சதவீதம் கொடுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ் காணப்பட்டது. எனினும், இந்தக் கொடுகடன்களில் ஏற்படும் சாத்தியமான தாக்கம் உள்ளிருக்கும் பிணைய பெறுமதிகள் மற்றும் கொடுகடன்களுக்கெதிராக பழுதுறல் ஏற்பாடுகளின் தேறிய அளவாகவே இருக்கும்.

படுகடன் சட்ட இசைவுத்தாமதத்திற்கு மாற்று ஏற்பாடாக, கடன்பாட்டாளர்கள் அவர்களது தற்போதுள்ள வசதிகளை சந்தையில் நிலவுகின்ற தாழ்ந்த வட்டி வீதத்தில், நீண்டதொரு காலப்பகுதிக்கு மறுசீரமைப்புச் செய்வதற்குரிய விருப்பத்தெரிவினை எதிர்கால காசுப்பாய்ச்சலைப் பரிசீலனையில் கொண்டும் ஆற்றல்வாய்ந்த மீளெழுச்சித் திட்டமொன்றினை அவர்கள் வழங்குவதற்கு உட்படும் போதும் அது பற்றி வங்கிகள் பரிசீலனையில் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கெதிரான "பராட்டே" நிறைவேற்றல் மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்களை நிர்ப்பந்தமான முறையில் பறிமுதல் செய்தல் போன்ற அனைத்து அறவிடல் நடவடிக்கைகளும் 2022 மார்ச்சு இறுதிவரையும் சுற்றுலாத் தொழில்களையும் பொறுத்தவரை 2022 யூன் வரையும் நீடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிவுக் கொடுப்பனவுகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் 2021 சனவரியில் தற்காலிகமாக தளர்த்தப்பட்டதுடன் 2021 யூலையில் மீள விதிக்கப்பட்டன. இதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகள் 2020ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் மட்டும் காசுப் பங்கிலாபங்களை செலுத்துவதற்கும் இலாபங்களை தாய் நாட்டிற்கு மீள அனுப்புவதற்கும் அனுமதிக்கப்பட்ட வேளையில் பங்குகளை மீண்டும் வாங்குவதிலிருந்தும் அத்தியாவசியமற்ற செலவினங்களை அதிகரிப்பதிலிருந்தும் விலகியிருக்குமாறும் 2021 யூன் இறுதி வரை மூலதனச் செலவினத்தினை செலவிடும் போது கடுமையான உரிய விழிப்புக்கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும், தீவிரமாக பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மீண்டும் ஏற்பட்டமையின் காரணமாக திரவத்தன்மை மீதும் உரிமம்பெற்ற வங்கிகளின் ஏனைய முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் மீதும் ஏற்படக்கூடிய சாத்தியமான மோசமான தாக்கத்தின் பின்னணியில் கட்டுப்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டு 2021 யூலையில் மீள விதிக்கப்பட்டன.

சிறப்புக்குறிப்பு 9

கொவிட்-19 சலுகைகளும் காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதியும்: சவால்களும் முன்நோக்கிய பாதையும்

கடந்த நூற்றாண்டில் மானிட சமூகம் எதிர்கொண்ட பாரிய பொருளாதார சவால்

கொவிட்-19, இந்நூற்றாண்டில் மானிட சமூகம் எதிர்கொண்ட பாரிய சுகாதார மற்றும் பொருளாதார சவாலாக விவாதிக்கப்படுகின்றது. 2020 காலப்பகுதியில், உலகம் முழுவதுமுள்ள நாடுகளில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டவை அவற்றின் பொருளாதார நடவடிக்கைகளில் சுருக்கங்களைப் பதிவுசெய்தன. உலகப் பொருளாதாரத்தின் ஒன்றுக்கொன்றுக்கிடையிலான தொடர்பும் ஒன்றின் மீது மற்றொன்று தங்கியிருக்கும் தன்மையும் எதிர்பாராத உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைத் தோற்றுவித்து இரண்டு உலக மகா யுத்தங்கள், பாரிய பொருளாதார மந்தம், உலகளாவிய நிதியியல் நெருக்கடி என்பவற்றிலிருந்து தோன்றிய தாக்கங்களையும் விஞ்சிச்சென்றது (உலக வங்கி, 2022).

கொவிட்-19 தாக்கத்திற்கெதிராக மத்திய வங்கிகள் எவ்வாறு எதிர்வினையாற்றின?

உலகளவிலுமுள்ள மத்திய வங்கிகளும் நாணய அதிகாரசபைகளும் உலகளாவிய நோய்த்தொற்றின் பல கோணங்களைக் கொண்ட சவால்களை முறியடிப்பதற்கு மரபுசார்ந்த அதேபோன்று மரபுசாரா கொள்கை பதிலிறுப்புக்களை அறிமுகப்படுத்தின. நாணயக் கொள்கை தளர்வுகள், சொத்து மீள்கொள்வனவு செய்தல்/அளவுசார் தளர்த்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தளர்வுகள் அதேபோன்று வரிக் குறைப்புகள்/பிற்போடுதல்கள், நேரடி பணக் கொடுப்பனவுகள், கடன்தீர்க்க வகையற்ற நிலைமைக்கு ஆதரவளித்தல் மற்றும் கொடுப்பனவை நிறுத்துதல்/காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதி போன்ற அரசாங்கம் தலைமையிலான இறைசார்ந்த வழிமுறைகள் போன்றவற்றை இவ்வழிமுறைகள் உள்ளடக்கியிருந்தன (பன்னாட்டு நாணய நிதியம், 2022).

உலகளாவிய நோய்த்தொற்றின் உருவாக்கத்தின் பின்னணியில், பொருளாதாரத்திற்கு திரவத்தன்மையை வழங்குவதற்காகவும், உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கும் (இதன் பின்னர் நிதியியல் நிறுவனங்கள் என குறிப்பீடு செய்யப்படும்) தொழிற்பாட்டு நெகிழ்வுத்தன்மையை வழங்குவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் தளர்வுகளை வழங்குவதற்கும் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு உதவும் பொருட்டும், இலங்கை மத்திய வங்கியும் அதிவிசேட கொள்கை வழிமுறைகளைக் கொண்ட தொடரொன்றினை அறிமுகப்படுத்தியது.

அதற்கமைய, நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களின் முதன்மைத் தொகை மீதும் வட்டி மீதும் ஆறு மாத காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதியினை வழங்குமாறும் அத்தகைய கடன்கள் மீது அறவிடப்படுகின்ற ஏதேனும் ஒன்றுசேர்ந்த அத்துடன் கொடுப்பனவு செய்யப்படாத தண்ட வட்டியினை தள்ளுபடி செய்யுமாறும் இலங்கை மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களைக் கோரியது. உலகளாவிய நோய்த்தொற்றின் தொடர்ந்துவந்த அலைகளைக் கருத்திற்கொண்டு, மோசமாகப் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கென இச்சலுகைகள் 18 மாதங்களுக்கும் அதிகமாக நீடிக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வாடிக்கையாளர்களுக்காக குறைந்த செலவில் நிதியிடலை வழங்குவதற்கு ரூ.50 பில்லியன் மீள்நிதியிடல் மற்றும் கொடுகடன் உத்தரவாதத்தினையும் மத்திய வங்கி அறிமுகப்படுத்தி இலக்கிடப்பட்ட கடன் வழங்குதல் உற்பத்திகள் மீது குறைந்த வட்டி வீதங்களை வழங்கி, நிர்மாணத் துறைக்கும் வேறு அரசாங்க வழங்குநர்களுக்கும் திரவத்தன்மை வசதிகளை வழங்கியதுடன் செயலாற்றமற்ற கடன்களுக்கெதிரான அறவீட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்தி, சில்லறை வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பல்வேறு வங்கித்தொழில் பணிகள் மீதான கட்டணங்களையும் அறவீடுகளையும் குறைத்தது.

உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட புதிய சவால்களும் வாய்ப்புக்களும்

கொவிட்-19 பரவலானது வியாபாரங்களை சமவிகிதமற்ற முறையில் பாதித்தது. சில வியாபாரங்களும் பொருளாதாரத் துறைகளும் மொத்தமாக ஸ்தம்பித நிலையை அடைந்த அதேவேளை, நோய்த்தொற்றுக்கு மத்தியில் தமது வியாபாரங்களை வளர்த்துக்கொள்வதற்கு சிலர் புதிய வாய்ப்புக்களையும் வழிமுறைகளையும் கண்டறிந்தனர்.

நோய்த்தொற்று விரிவடைந்த போது, உலகெங்கிலும் உள்ள பல வணிகங்கள் தொலைதூர வேலை (remote working) மற்றும் நெகிழ்வான வேலை ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டதுடன், இவை தற்போது அவற்றின் பன்முகத்திறன் மற்றும் செலவு சேமிப்புக் காரணமாக நிரந்தரமானதொன்றாக மாறிவிட்டன. இதேபோன்று, பல வணிகங்கள், அதிக செலவுமிக்க வணிகப் பயணங்கள் மற்றும் கூட்டங்களை இணையவழி மாநாடுகள் மற்றும் மெய்நிகர் கூட்டங்களாக மாற்றியுள்ளன. முன்னுரிமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் வணிகங்களை தங்கள் உட்கட்டமைப்பை முதன்மையான பன்முகத்தன்மை கொண்டதாக மாற்றியமைக்க கட்டாயப்படுத்தியுள்ளன (Sadun, Simcoe & Conti, 2021; Nugent, 2021). மேலும், டிஜிட்டல் சேவைகள் மற்றும் இணையவழி கொள்வனவை நோக்கிய அதிகரித்த நுகர்வோர் விருப்பங்கள், பல்பொருள் அங்காடிகள், சில்லறை வியாபாரங்கள், அலங்காரம் மற்றும் பொழுதுபோக்கு போன்ற சேவைத் துறைகளிலுள்ள வணிகங்கள் தங்கள் வியாபார சந்தைப்படுத்தலை முதலில்-செல்லிடத்தொலைபேசி ஊடாக முன்னெடுப்பதற்குத் தூண்டியுள்ளன. இந்த நிகழ்வு உள்ளூர் வியாபார சூழலிலும் வெளிப்படையாகக் காணப்படுகிறது. இங்கு இணையவழி மூலமான சில்லறைக் கொள்வனவுகள், வைத்தியர்களின் வீடியோ ஆலோசனைச் சேவை, இணையவழி மூலமான கற்றல் மற்றும் கல்விச் சேவை வழங்குநர்கள் ஆகியவற்றுக்கான கேள்வி அதிகரித்துள்ளதுடன் திரையரங்குகள், பாரிய அளவிலான திருமண வரவேற்புக்கள், கச்சேரிகள், கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளுக்கான கேள்வி குறைந்துள்ளது. இந்த மாற்றங்கள் சில வணிகங்களையும் அவற்றினுடைய மதிப்பேற்ற சங்கிலியினையும் எதிர்மறையாகப் பாதித்துள்ள அதேவேளை பல நிறுவனங்கள் புத்தாக்கத்தைத் தூண்டி இம்மாற்றங்களை வாய்ப்புக்களாக மாற்றி ஏற்றுக்கொண்டன.

அதேபோன்று நிதியியல் நிறுவனங்களும் நிதியியல் துறையும் நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நன்மைகளையும் தீமைகளையும்

சமமாக அனுபவித்தன. நோய்த்தொற்றுக் காலப்பகுதியின் போது உலகெங்கிலுமுள்ள நிதியியல் நிறுவனங்கள் எதிர்கொண்ட மிக முக்கிய சவால்களாக திரவத்தன்மை மற்றும் கொடுகடன் இடர்நேர்வுகள் அமைந்திருந்தன. நோய்த்தொற்று மற்றும் அதன் மூலம் தூண்டப்பட்ட பொருளாதார இடையூறுகள் காரணமாக வியாபாரங்களை மூடுதல், தொழில் மற்றும் வருமானம் இழத்தல் என்பன தமது படுகடன் மீள்கொடுப்பனவு கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு கடன்பெறுநர்களுக்கான சிக்கல்களை அதிகரிக்கச்செய்தன. ஒட்டுமொத்த பொருளாதார நிலைமையில் காணப்பட்ட அதிகரிக்கின்ற நிச்சயமின்மை காரணமாக உரிய காலத்தில் மீள்கொடுப்பனவைச் செய்கின்றவர்களுக்கும் கூட எதிர்காலத்தில் தவணைதவறுதல் இடம்பெறக்கூடிய வாய்ப்பு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. நிதியியல் நிறுவனங்களின் சொத்துத் தரத்தில் இது கணிசமானளவு தாக்கம்செலுத்தியது. கடன்பெறுநர்கள் தமது மீள்கொடுப்பனவுகளைத் தாமதித்தமையினாலும் வைப்பாளர்கள் தமது பணங்களை மிகவும் அடிக்கடி மீளப்பெற்றதாலும் நிதியியல் நிறுவனங்களின் திரவத்தன்மை நிலைமைகளும் இறுக்கமடைந்தன. இது, திரவத்தன்மை பற்றாக்குறையினைத் தோற்றுவித்துடன் கொடுகடன் இடர்நேர்வினை அதிகரித்து, கடன்வழங்குவதற்கான நிதியியல் நிறுவனங்களின் இயலுமையினை வலுவிழக்கச்செய்தது. இதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளை மீட்டுக்கொள்வதற்கான கொடுகடன் உட்பாய்ச்சல்கள் மட்டுப்படுத்தப்பட்டன.

அதிகரித்த நிச்சயமின்மை காரணமாக நிதியியல் நிறுவனங்களின் கடன்வழங்குநர்கள், வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் அதிகளவில் நிதியளிப்பதை ஏற்றுக்கொள்வதற்கு தயங்கியமையினால் புதிதாக நிதியங்களைத் திரட்டுதலும் ஏற்கனவே காணப்படுகின்ற நிதியளித்தல் வழிகளை நீடித்தலும் நிதியியல் நிறுவனங்கள் எதிர்கொண்ட மற்றுமொரு சவாலாகும். நிதியியல் நிறுவனங்களின் நிதியிடல் செலவினையும் மீள்நிதியிடல் இடர்நேர்வினையும் இது அதிகரித்தது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு இடர்நேர்வு அதேபோன்று தொழில் தொடர்ச்சி இடர்நேர்வு போன்ற வேறு இடர்நேர்வுகளையும் உலகளாவிய நோய்த்தொற்று அதிகரித்தது. டிஜிட்டல் வாயிலான பணி வழங்கல் வழிகளில் அதிகளவில் தங்கியிருக்கின்றமை இணைய பாதுகாப்பு இடர்நேர்வினையும் தொழில்நுட்பம் சார்ந்த இடர்நேர்வினையும் அதிகரித்து, தோற்றம்பெறுகின்ற இவ்விடர்நேர்வுகளையும் அச்சுறுத்தல்களையும் தணிப்பதற்கு அதிக வளங்களை அர்ப்பணிப்பதற்கு நிதியியல் நிறுவனங்களை நிர்ப்பந்தித்தது. இறுதியாக, இவை அதிகரித்த உபாய ரீதியான இடர்நேர்வாக மாற்றம்பெற்றன. ஏற்கனவே திட்டமிடப்பட்ட உபாயங்கள் "புதிய இயல்பு" நிலைமையில் இனிமேலும் செல்லுபடியற்றதாகியமையினால், நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் இடர்நேர்வுகளை மீள்மதிப்பீடு செய்வதற்கும் அவற்றின் முன்னுரிமைகளை மீளொழுங்குசெய்வதற்கும் அவற்றின் தொழில் நெறிப்படுத்தல்களில் மீளமையப்படுத்துவதற்கும் வேண்டப்பட்டன.

எனினும், இணையவழி வங்கித்தொழில், காசற்ற கொடுப்பனவு முறைகள், டிஜிட்டல் பணப்பைகள் போன்ற சில வியாபாரத் துறைகள் நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அபரிமிதமாக வளர்ச்சியுற்றன. உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பின்னணியில் பொதுவாக அவதானிக்கப்பட்ட குறைக்கப்பட்ட வட்டி வீதங்களிலிருந்தும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மீது சந்தை விலை குறிக்கப்பட்ட இலாபங்கள் காரணமாக செலாவணி வீத அசைவுகளிலிருந்தும் நிதியியல் நிறுவனங்கள நன்மையடைந்தன. இலங்கை மத்திய வங்கி இவ்வபிவிருத்திகளைக் கண்காணித்து நிதியியல் துறையில் காணப்பட்ட அதிகரித்த இடர்நேர்வுகளை முன்மதியுடன் முகாமைசெய்வதற்கு அவசியமானவிடத்து உரிய கால ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

அடிப்படைகளை சமநிலைப்படுத்தல்: சலுகைகளும் உறுதிப்பாடும்

நாட்டின் உயர்மட்ட நிதியியில் அதிகாரசபை என்ற வகையில் இலங்கை மத்திய வங்கியானது, பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணுகின்ற அதன் மையக் குறிக்கோள்களுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய மிதமிஞ்சிய இடர்நேர்வு கட்டியெழுப்பப்படுவதைத் தவிர்ப்பதற்கு சலுகைகளை வழங்குவதற்கும் பாதிக்கப்பட்ட பொருளாதாரத் துறைகளை மீட்டெடுப்பதற்கும் அதேவேளை உரிய கால வழிமுறைகளையும் எடுத்தது.

இலங்கை மத்திய வங்கியானது உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் காசுப்பாய்ச்சல் இன்னல்களை எதிர்கொண்ட கடன்பெறுநர்களுக்காகவும் செயலாற்றமற்ற கடனுக்குள் அத்தகைய கடன்பெறுநர்கள் வீழ்வதை தடுப்பதற்கும் அதனோடிணைந்த விளைவுகளுக்குமாக குறுகியகால பரிகாரமாக காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதியினை அறிமுகப்படுத்தியது. எனினும், காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதிக் காலமும் கடன் பெறுமதியும் பெரிதாக வளர்ச்சியடைந்தமையினால் தமது வைப்பாளர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் சலுகைக் காலப்பகுதியின் போது தொழிற்பாட்டுச் செலவுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் நிதியியல் நிறுவனங்கள் மாற்றுவழி நிதியிடல்களைத் தேடவேண்டியிருந்தது. மேற்குறித்தவற்றை கருத்திற்கொண்டு, நிதியங்களின் செலவுகளை போதியளவு சமாளிப்பதற்கு காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதியின் மீது பெயரளவு வட்டியினை அறிவிடுவதற்கு நிதியியல் நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கி அனுமதித்தது. மேலதிக வட்டி அறவிடப்பட்டமை காரணமாக, கடன்பெறுநர்கள் எதிர்கொண்ட இன்னல்களைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது கடன்பெறுநர்களுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் ஆகக்குறைந்த செலவுத் தீர்வொன்றினை வழங்குவதற்கான பொறிமுறையொன்றினைத் தொடங்கியுள்ளது.

பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிக வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியிலும், வைப்பாளர்களின் நிதியங்கள் மீது ஏதேனும் அளவுக்குமிஞ்சிய அழுத்தத்தினை தோற்றுவிக்காதும் தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் மீதும் நிதியியல் முறைமை மீதும் அளவுக்குமிஞ்சிய அழுத்தத்தினைத் தோற்றுவிக்காதும் தமது கடன்பெறுநர்கள் கடன் மீள்கொடுப்பனவுகளை 18 மாதங்களுக்கு மேல் பிற்போடுவதற்கு அனுமதிப்பதற்கு இது நிதியியல் நிறுவனங்களை இயலச்செய்தது.

காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதியினைத் தளர்த்தல்: கால வரையறையின் முக்கியத்துவம்

பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்பி, நாடுகள் வணிகத்திற்காக அவற்றின் எல்லைகளைத் திறந்துவிடுகின்றமையினால் உலகம் முழுவதுமுள்ள மத்திய

வங்கிகள் கொவிட்-19 நோய்ப்பரவலுக்கு பதிலிறுத்துவதில் இடம்பெறச்செய்த அதிவிசேட கொள்கை வழிமுறைகளை படிப்படியாக குறைத்துள்ளன. எவ்வாறாயினும், பொருளாதாரத்தின் திரவத்தன்மையினையும் கடன் தீராற்றலினையும் பேணிய, ஆதரவளிக்கும் வழிமுறைகளை முன்கூட்டியே அகற்றுதலானது பரந்தளவிலான கொடுகடன் இடர்பாடுகளையும், படுகடன் முன்முடிப்புகளையும், கடன்தீராற்றலின்மைகளையும், அதிகரித்த தொழிலின்மையினையும் ஏற்படுத்தலாம் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இது, உலகளாவிய நோய்த்தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்சிக்கு ஊறுவிளைவிப்பதாக அமையலாம் என்பதுடன் இத்தாக்கங்களின் சுயமான மீளவலுப்பெறும் தன்மையானது பின்னூட்டல் விளைவின் காரணமாக குறுகிய அதேபோன்று நீண்டகால விளைவுகள் இரண்டினையும் தோற்றுவிக்கக்கூடும் (Financial Stability Board, 2021).

மறுபுறம், மிக நீண்ட காலத்திற்கு ஆதரவளிக்கும் வழிமுறைகளைப் பேணுதலும், அதிகரித்த கடன்சுமை, நிறுவனங்களும், வீட்டுத் துறையினரும் இடர்நேர்வினை மிதமிஞ்சி எடுத்துக்கொள்ளல், அதிகரித்த கொடுகடன் இடர்நேர்வு, நெறிமுறைசாராந்த ஆபத்தினைத் தோற்றுவித்தல் போன்றவற்றுக்கு வழிவகுக்கலாம். நீண்டகாலத்திற்கு சலுகைகளை வழங்குவதில் ஏற்படும் செலவு, இறுக்கமான இறை நிலைமைகளுடன் கூடிய நாடுகளுக்கு மிகவும் செலவு மிக்கதாக அமையலாம். மேலும், அதிகம் வினைத்திறன் மிக்க துறைகளுக்கும் அத்துடன் தொழில்நுட்பவியல் மாறுதலடைதலுக்கும் பொருளாதார வளங்களை மீள ஒதுக்கீடு செய்வதற்காக நலிவான தொழில்/உறுதியற்ற தொழில் மாதிரிகளை நீக்குதல் போன்ற அவசியமான பொருளாதார சீர்படுத்தல்களையும் அது வேகம் குறையச்செய்யலாம் (Financial Stability Board, 2021)

காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதிக்கு அப்பால் நிகழ்வது யாது?

தளர்த்தப்படுகின்ற காலம்தாழ்த்தி கடன் செலுத்தும் வசதியும் ஏனைய நிவாரண வழிமுறைகளும் கடன்பெறுநருக்கும் அதேபோன்று நிதியியல் நிறுவனங்களுக்கும் சவால்மிக்கதாக அமையக்கூடும். உலகளாவிய நோய்த்தொற்று பல்வேறு தொழில் துறைகளில் நிலையான மாற்றங்களை ஏற்படுத்தி சில தொழில் மாதிரிகள் அவை முன்னர் இலாபம் உழைத்ததைப் போன்று இனிமேலும் அவ்வாறு இலாபமீட்டாத தொழில்களாக ஆக்கியுள்ளது (Jacobides & Reeves, 2020).

போதிய மூலதனத்தைக் கொண்டிராத, அவசர நிலைத் திட்டங்களைக் கொண்டிராத மற்றும் உயிரோட்டமிக்க தீர்மானங்களை எடுக்காத நிறுவனங்களுக்கு உலகளாவிய நோய்த்தொற்று கடும் சோதனையாக அமைந்திருந்தது. சில நிறுவனங்களுக்கு சலுகை வழிமுறைகள் அத்தகைய வியாபாரங்களை உயிரோட்டம் மிக்கதாகப் பேணுவதற்கான ஒரே காரணியாக அமைந்தன. ஆகையினால், தொழில்களுக்கு புத்துயிரளிப்பதற்கு நிதியியல் நிறுவனங்களால் எடுக்கப்படும் எவையேனும் முயற்சிகள், நிதியியல் ரீதியாக கட்டுரம்வாய்ந்த ஆனால், உலகளாவிய நோய்த்தொற்றினால் நேரடியாகத் தோற்றுவிக்கப்பட்ட திரவத்தன்மை மற்றும் கடன்தீராற்றல் பிரச்சனைகளிலிருந்து வருந்துகின்ற நிறுவனங்களையே மையப்படுத்தியிருக்க வேண்டும். அதேபோன்று அத்தகைய தலையீடுகள் வெளிப்படை மிக்கதாகவும் சந்தைப் போட்டியினை திரிபுபடுத்தாததாகவும் இருக்கவேண்டும். (OECD, 2021).

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது சாத்தியமான வியாபாரங்களை புதுப்பிப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகளில் நோய்த்தொற்றுக்கு பிந்திய பொருளாதார மறுமலர்ச்சி அலகுகளை உருவாக்குவதற்கான வழிகாட்டல்களை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கியது.

இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் மறுமலர்ச்சித் திட்டங்களை வகுப்பதுடன் மற்றும் சட்ட இசைவுத்தாமதக்காலத்தின் நிறைவின் பின்னர் திரவத்தன்மைத் தேவைப்படுபவர்கள் உள்ளடங்கலாக மறுவாழ்வு உதவித்திட்டம் தேவைப்படும் குறைசெயற்றிறன் மற்றும் செயற்படாக் கடன்பாட்டாளர்களினை இனங்காணல் வேண்டும்.

அத்தகைய கடன்பாட்டாளர்களின் தற்போதைய கடன் வசதிகளினை மறுசீரமைக்க/ மீள் அட்டவணைப்படுத்தத் தேவையான நிதி மற்றும் நிதியல்லா உதவிகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளதுடன், மேலும், அவர்களின் வணிகங்களைப் புதுப்பிப்பதற்கான தேவையின் அடிப்படையில் கூடுதல் கடன் வசதிகள் மற்றும்/ அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான ஆதரவு நடவடிக்கைகள் வழங்கப்படும்.

எனினும், வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் என அடையாளம் காணப்பட்ட கடன்பாட்டாளர்கள், கடன்பெற்ற நிதியை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தியவர்கள் மற்றும் செயற்படுத்த முடியாத வணிகங்கள் அல்லது வணிகத் திட்டங்களைக் கொண்டவர்கள் மற்றும் வணிகங்களில் தவறான முகாமைத்தும் மற்றும்/ அல்லது மோசடி காரணமாக கடனைச் செலுத்தத் தவறியவர்கள் ஆகியோருக்கு இத்திட்டம் உரித்துடையதாகாது.

முன்னோக்கிய பாதை: நிலைபெறத்தக்க, அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற நோய்த்தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்பு

மேற்குறித்த அனைத்துத் தலையீடுகளினதும் இறுதி இலக்கும் பொருளாதாரத்திற்கு ஏற்படும் இடையூறுகளைக் குறைப்பதும், மக்களின் வாழ்வாதாரத்தில் இயல்புநிலையை மீட்டெடுப்பதும் ஆகும். இது தொடர்பாக, பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களும் நோய்த்தொற்றிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களைப் பற்றி கூட்டாகப் பிரதிபலித்து நோய்த்தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

முன்னோக்கி நோக்குகையில், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் இரண்டும் அவற்றின் தொழில் மாதிரிகளை மீளவும் சிந்தித்து நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட புதிய வியாபார வாய்ப்புக்களை கண்டறியவேண்டும் என்பதுடன் வினைத்திறனையும் போட்டித்தன்மையினையும் மேம்படுத்தவதற்கு தமது செயன்முறைகளையும் நடைமுறைகளையும் மீள வடிவமைக்கவேண்டும். தொழில்நுட்பத்தில் முதலீடுசெய்து தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துகின்ற அதேவேளை, அதிகரித்த இடர்நேர்வுகளை முன்மதியுடன் முகாமைசெய்வது முன்னோக்கிய பயணத்தில் மற்றுமொரு முன்னுரிமையாக அமைந்திருக்கும். அவ்வாறு செய்வதில் அந்நிறுவனங்கள், தமது படுகடன் அளவு பற்றி அவர்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்பதுடன்

அவற்றின் புதிய காசுப்பாய்ச்சல் மற்றும் மீள்கொடுப்பனவு இயலளவுகளுடன் பொருந்தக்கூடிய விதத்தில் அவற்றின் படுகடனை ஒன்றுதிரட்டுவதற்கு, மீளக்கட்டமைப்பதற்கு அல்லது மீள அட்டவணைப்படுத்துவதற்கு நாடவேண்டும் அல்லது கடன்தீராற்றலைப் பேணுவதற்கும் அத்தகைய வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் குறைவான செலவில் நிதியளித்தலுக்கான அல்லது உள்ளக மூலதன உருவாக்கத்திற்கான மாற்றுவழி வழிமுறைகளை தேடவேண்டும்.

இவ்வழிமுறைகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு உள்ளக மூலதன உருவாக்கத்தினை ஊக்குவித்தல், அறவீட்டுத் திட்டமிடல், தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம், நீண்டகால குறைந்த செலவு நிதியை வழங்குதல் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றமற்ற சொத்துக்களை முறையாக விற்பனை செய்தல் என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக பல கொள்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

உசாத்துணை:

1. Financial Stability Board. (2021). COVID-19 support measures, Extending, amending and ending. Basel: Financial Stability Board.
2. International Monetary Fund. (2022, February 26). Policy Responses to COVID-19. Retrieved from International Monetary Fund: https://www.imf.org/en/Topics/imf-and-covid19/Policy-Responses-to-COVID-19
3. Jacobides, M. G., & Reeves, M. (2020, October 30). Adapt Your Business to the New Reality. Retrieved from Havard Business Review: https://hbr.org/2020/09/adapt-your-business-to-the-new-reality
4. Morgan, B. (2020, May 01). 10 Examples of How COVID-19 Forced Business Transformation. Retrieved from Forbes: https://www.forbes.com/sites/blakemorgan/2020/05/01/10-examples-of-how-covid-19-forced-business-transformation/?sh=29ac793a1be3
5. Nugent, T. (2021, October 14). 5 Ways COVID Has Changed Global Business. Retrieved from Business Because: https://www.businessbecause.com/news/insights/7763/how-covid-has-changed-global-business?sponsored
6. OECD. (2021). COVID-19 emergency government support and ensuring a level playing field on the road to recovery. Paris: Organisation for Economic Co-operation and Development.
7. Sadun, R., Simcoe, T., & Conti, A. (2021, September 30). Has COVID-19 Permanently Changed Business Strategy? What Experts Say. Retrieved from MIT Sloan Management Review: https://sloanreview.mit.edu/strategy-forum/has-covid-19-permanently-changed-business-strategy-what-experts-say
8. The World Bank. (2022). Finance for an Equitable Recovery. Washington, DC: International Bank for Reconstruction and Development / The World Bank.

2021ஆம் ஆண்டுப்பகுதியில், இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட மிகையான தளம்பல்களை தவிர்ப்பதற்காகவும், செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைத் தளர்த்துவதற்காகவும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான தாக்கத்தினை குறைப்பதற்காகவும் உரிமம்பெற்ற வங்கிகளில் குறித்தான வெளிநாட்டுச் செலாவணியின் சாத்தியமான/ ஏற்படக்கூடிய வெளிப்பாய்ச்சல்களைக் கட்டுப்படுத்துவதற்காக முன்கூட்டிய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வழிமுறைகள் உரிமம்பெற்ற வங்கிகளினால் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதனை தற்காலிகமாகக் கட்டுப்படுத்துதல், இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் பன்னாட்டிற்கான இலங்கை முறிகள் கொள்வனவு செய்யப்படுவதனைத் தற்காலிகமாக இடைநிறுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், மத்திய வங்கி, உண்மைப் பொருளாதாரத்தில் மூலதன உருவாக்கத்தினைத் தூண்டுவதற்காகவும் நாட்டின் வெளிநாட்டு நாணயத் தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்காகவும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்குத் திருத்தங்களை அறிமுகப்படுத்தியது.

உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் சாதனங்கள் தொடர்பிலான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டதுடன் வங்கித்தொழில் துறையின்நிலையானதும்முன்மதியுடையதுமானநடைமுறைகளை நிறுவும் பொருட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 9: நிதியியல் சாதனங்களின் கீழ் கொடுகடன் வசதிகள் மற்றும் ஏனைய நிதியியல் சொத்துக்களுக்கான வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் பிரமாணங்களுடன் அணிப்படுத்தப்பட்டன. இப்புதிய பணிப்புரைகளின் நடைமுறைப்படுத்தல் உரிமம்பெற்ற வங்கிகளின் கொடுகடன் வசதிகள் மற்றும் ஏனைய நிதியியல் சொத்துக்களின் தற்போதைய இடர்நேர்வுகளையும் அதேபோன்று எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளையும் மிகத் துல்லியமாகப் மதிப்பிடுவதற்கான வசதியை வழங்குமென எதிர்பார்க்கப்பட்டது.

உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவது 2021இன் ஆண்டுப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் முக்கிய கவனத்திற்குரிய பகுதியொன்றாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, 2021 யூனில், உரிமம்பெற்ற வங்கிகள் நிறுவன ரீதியாக குறித்துரைக்கப்பட்ட அழுத்தங்கள், சந்தை ரீதியான அழுத்தங்கள் அல்லது இரண்டும் இணைந்ததன் மூலம் தோன்றக்கூடிய மூலதன, திரவத்தன்மை மற்றும் ஏனைய அம்சங்களில் உருவாகக்கூடிய அதிர்வுகளைக் கையாள்வதற்கான அறவிடல் திட்டங்களைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மை என்பனவற்றிற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்று வங்கிகள் அவற்றின் தகவல் முறைமைகளையும் தொழில்நுட்பவியல் தளங்களையும் பன்னாட்டு நியமங்களுடனும் சிறந்த நடைமுறைகளுடனும் இசைந்து செல்லும் விதத்தில் சரியான விதத்தில் தரமுயர்த்துவதற்கும் வலுப்படுத்துவதற்குமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கட்டமைப்பானது, தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது பொதுவாக,

உரிம்பெற்ற வங்கிகளுக்கான தாக்குப்பிடிக்கும் தன்மை மீது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிர்ணயித்ததுடன் அதேபோன்று உணர்திறன் மிக்க தரவு, மிக முக்கியமான தகவல் முறைமைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட தகவல் முறைமைக் கட்டமைப்பின் வகை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஆளுகைக் கட்டமைப்பை மேம்படுத்துவதும் இந்த தேவைப்பாடுகள் நோக்கமாகக் கொண்டிருந்தன.

வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வைப்புக்களுக்கு நிலவுகின்ற வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் விதிக்கப்பட்டதுடன் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் பேரண்ட பொருளாதார அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்டு ஈட்டினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் விதிக்கப்பட்டன.

2021இல் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளாக வேறும் பல கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மத்திய அரசாங்கம் தொடர்பான வெளிநாட்டுக் கோரல்களுக்குப் பிரயோகிக்கத்தக்க இடர்நேர்வு நிறைகள் மீதான உரிமம்பெற்ற வங்கிகளுக்காக பாசல் IIIஇன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகளைத் திருத்துவது தொடர்பான ஒழுங்குவிதிகள், குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக தாய் பாத் நிர்ணயிக்கப்பட்டமை, ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரொருவராக லங்கா றேட்டிங் ஏஜென்சி லிமிடெட் அங்கீகரிக்கப்பட்டமை, முடக்கல் காலப்பகுதியில் வங்கித்தொழில் பணிகளின் ஏற்பாடுகள் மற்றும் 2022ஆம் ஆண்டிற்கான உரிமம்பெற்ற வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணத்திற்காக புதிய வருடாந்த உரிமக்கட்டண அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன இதில் உள்ளடங்குகின்றன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்துக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் இவ்வறிக்கையின் முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள் - 2021இன் பிரிவின் கீழ் தரப்பட்டுள்ளன.

மத்திய வங்கி கூடுதலானளவிற்கு உத்வேகம் மிக்க இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சிப்பு பொறிமுறைகளுக்கும் வங்கியின்நீடித்துநிலைத்திருக்கும்தரமிடல் குறிகாட்டி என அழைக்கப்படும் உள்ளகத் தரமிடல் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய மேற்பார்வை வழிகாட்டல் கட்டமைப்பிற்கும் தரமுயர்த்தியது. இதற்கமைய, உள்ளகத் தரமிடல் அனைத்து 30 உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் வழங்கப்பட்டதுடன் வங்கி உறுதித்தன்மை தரமிடல் குறிகாட்டியுடன் இசைந்து செல்லும் விதத்தில் அனைத்து வங்கிகளிலும் நியதி ஒதுக்குப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் வங்கித்தொழில் உறுதித்தன்மைத் தரமிடல் குறிகாட்டி இடர்நேர்வு அடிப்படையிலான கண்காணிப்பிற்கு வசதியளிக்கின்றது. வங்கிகளுக்கான உள்முகத் தரமிடலை மேம்படுத்த அதிக இடர்நேர்வு உள்ள பரப்புக்களை பரீட்சிக்கவும் பலவீனமான செயலாற்றமற்ற வங்கி நடப்புக்களை பரீட்சிக்கவும் எதிர்கால நியதிச் சட்ட பங்கேற்புக்களில் அதிக வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் பல்வேறு வழிகளும் வாய்ப்புக்களும் கவனத்திற்கொள்ளப்படும். மேலும், தெரிவுசெய்யப்பட்ட வங்கித்தொழில் குழுமங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை, மத்திய வங்கியின் நியதி பரீட்சிப்புக்களின் செயற்பரப்பினை குழும நிறுவனங்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வு வரை விரிவாக்கியிருக்கிறது.

8.3 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம்

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் துறை

2021ஆம் ஆண்டுப்பகுதியில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் செயலாற்றம், குறிப்பாக கொடுகடன் வளர்ச்சி மற்றும் இலாபத்தன்மை ஆகிய நியதிகளில் கணிசமானளவிற்கு மேம்பட்டது. 2021 இறுதியில் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூ.1,487.7 பில்லியனாக விளங்கி இலங்கையின் நிதியியல் முறைமையின் சொத்துக்களில் 5.6 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. குறிப்பிட்ட நிறுவனங்கள், தனிப்பட்ட மட்டத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் இடர்ப்பாடுகளை எதிர்கொண்ட போதும், குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் மேலாக, ஆரோக்கியமான மட்டங்களில் மூலதனமும் திரவத்தன்மையும் பேணப்பட்டமையின் காரணமாக

அட்டவணை 8.10
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் மாகாண ரீதியான கிளைகளின் பரம்பல்

மாகாணம்	2020 முடிவில்(அ)	2021 முடிவில்(ஆ)	ஆண்டுகாலப் பகுதியின் அசைவு
மத்திய	166	184	18
கிழக்கு	119	142	23
வட மத்திய	107	111	4
வட மேல்	165	180	15
வடக்கு	96	119	23
சப்ரகமுவ	116	122	6
தென்	162	178	16
ஊவா	70	82	12
மேல்	516	589	73
மொத்தம்	1,517	1,707	190

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.9
சாதனங்கள் வாரியான (திரண்ட) கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2020 மற்றும் 2021



அட்டவணை 8.11
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)		மாற்றம் (%)	
	ரூ. பில்	பங்கு (%)	ரூ. பில்	பங்கு (%)	2020 (அ)	2021 (ஆ)
சொத்துக்கள்						
கடன் மற்றும் முற்பணங்கள் (தேறிய)	1,039.8	74.2	1,142.5	76.8	-5.7	9.9
முதலீடுகள்	158.9	11.3	167.4	11.3	20.2	5.4
ஏனையவை	203.0	14.5	177.9	12.0	2.6	-12.4
பொறுப்புக்கள்						
மொத்த வைப்புக்கள்	748.6	53.4	783.3	52.7	-1.1	4.6
மொத்த கடன் பெறுகைகள்	328.0	23.4	325.9	21.9	-19.1	-0.6
மூலதன கூறுகள்	248.1	17.7	304.0	20.4	22.1	22.6
ஏனையவை	77.0	5.5	74.5	5.0	14.6	-3.3
மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்	1,401.7	100.0	1,487.7	100.0	-2.2	6.1

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
மூலம்: இலங்கை மத்திய வங்கி

துறை தொடர்ந்தும் உறுதியாகக் காணப்பட்டது. பலயீனமான நிதியியல் நிலைமைகளுடன் கூடிய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை மீளப்புதுப்பிக்கும் பரிசீலனைகளுடன் மத்திய வங்கி முக்கியமான முன்மதியுடைய குறிகாட்டிகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் வைப்பாளர்களைப் பாதுகாக்கின்ற குறிக்கோளுடன் நடுத்தர காலத்தில் வலுவானதும் உறுதியானதுமான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளைக் கட்டியெழுப்புவதற்கான நிதியியல் துறை ஒருங்கிணைப்பு முதன்மைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் இடம்பெற்று வருகிறது. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் திடீர் பரவலால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிப்பதற்காக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த வசதிகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் வழங்குவதற்காக பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

வியாபார விரிவாக்கம்

விரிவாக்கம்: 2021 இறுதியில் துறையானது, 39 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும்[1] 3 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது. இத்துறையில் 1,707 கிளைகளும் 309 ஏனைய பணி நிலையங்களும் காணப்பட்டதுடன் இதில் 1,359 கிளைகள் மற்றும் பணிநிலையங்கள் (67.4 சதவீதம்) மேல் மாகாணத்திற்கு வெளியே அமைந்திருந்தன.

சொத்துக்கள்: துறையின் சொத்துத்தளம் 2020இல் அவதானிக்கப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.1,487.7 பில்லியனுக்கு 6.1 சதவீதத்தினால் (ரூ.86 பில்லியனால்) அதிகரித்தது. துறையின் விரிவாக்கத்திற்கு கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சி முக்கிய தூண்டுதலாக அமைந்தது. கடன்களும் முற்பணங்களும் துறையின் மொத்தச் சொத்துக்களில் 76.8 சதவீதத்திற்கு வகைகூறின. துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் நிதியியல் குத்தகைகளின் மீதே பெருமளவிற்கு குவிந்து காணப்பட்டதுடன் இது 2021 இறுதியில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 48.3 சதவீதத்திற்கு வகைகூறியது. வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சலைக் கட்டுப்படுத்துமொரு வழிமுறையாக உந்து ஊர்திகளின் இறக்குமதி மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் முக்கிய காரணமாக குத்தகைக்குவிடும் சொத்துப்பட்டியலின் வளர்ச்சி குறைவடைந்தது. எனினும், துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் இவ்வாண்டுப்பகுதியில் வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு ஏனைய பாதுகாப்பான கடன்கள், முற்பணங்கள் மற்றும் அடகுமுற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இதற்கமைய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினாலும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினாலும் வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் 2020இன் தொடர்பான காலப்பகுதியின் 5.7 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 9.9 சதவீதத்தினால் (ரூ.102.7 பில்லியன்) ரூ.1,142.5 பில்லியனுக்கு அதிகரித்தன.

அட்டவணை 8.12
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

விடயம்	தொகை (ரூபில்)		உள்ளடக்கம் (%)	
	2020 (அ)	2021 (ஆ)	2020 (அ)	2021 (ஆ)
தவணை வைப்புக்கள்	710.5	744.3	94.9	95.0
சேமிப்பு வைப்புக்கள்	37.3	38.4	5.0	4.9
வைப்புச் சான்றிதழ்கள்	0.8	0.6	0.1	0.1
மொத்த வைப்புக்கள்	748.6	783.3	100.0	100.0

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
மூலம்: இலங்கை மத்திய வங்கி

1 2020 யூலை 13ஆம் நாளிலிருந்து, நாணயச் சபையினால் வியாபாரத் தொழிற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள இரண்டு கம்பனிகள் உட்பட.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் கம்பனி படுகடன் சாதனங்கள், அரச பிணையங்கள் மற்றும் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2020இன் 20.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியை மாத்திரம் பதிவுசெய்து, 2021இல் ரூ.167.4 பில்லியனை அடைந்தமைக்கு 12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட அரச பிணையங்களில் காணப்பட்ட அதிகரித்த முதலீடுகளே முக்கிய காரணமாகும். வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள காசு மற்றும் காசு மீதிகளை முக்கியமாக உள்ளடக்கிய ஏனைய சொத்துக்கள் 2021இல் 12.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பொறுப்புக்கள்: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் பொறுப்புக்களில் வாடிக்கையாளர் வைப்புக்கள் தொடர்ந்தும் ஆதிக்கம் பெற்றிருந்ததுடன் 52.7 சதவீதம் கொண்ட பங்கிற்கும் வகைகூறியது. இவ்வாண்டுப்பகுதியில் வைப்புக்கள் 4.6 சதவீதத்தினால் (ரூ.34.7 பில்லியன்) ரூ.783.3 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் கடன்பாடுகள் 0.6 சதவீதத்தினால் (ரூ.2.1 பில்லியன்) ரூ.325.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

இலாபத்தன்மை: 2021இல் துறையின் தேறிய வட்டி வருமானம் 18.2 சதவீதத்தினால் (ரூ.20.2 பில்லியன்) குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து ரூ.131.4 பில்லியனை அடைந்தது. இதற்கு வட்டி வருமானம் 5 சதவீதத்தினால் (ரூ.11.5 பில்லியன்) சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் வட்டிச் செலவினம் 27.1 சதவீதத்தினால் (ரூ.31.8 பில்லியன்) குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். துறையின் தேறிய வட்டி இலாபம் (சராசரி சொத்துக்களின் சதவீதமாக தேறிய வட்டி வருமானம்) 2020இன் 7.3 சதவீதத்திலிருந்து 2021இல் 8.6 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு

அட்டவணை 8.13
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் வருமானம் மற்றும் செலவுகளின் உள்ளடக்கம்

விடயம்	2020 (அ)		2021 (ஆ)	
	தொகை (ரூ.பில்)	சராசரி சொத்துக்களின் சதவீதமாக	தொகை (ரூ.பில்)	சராசரி சொத்துக்களின் சதவீதமாக
வட்டி வருமானம்	228.5	15.0	217.0	14.2
வட்டிச் செலவினம்	117.4	7.7	85.6	5.6
தேறிய வட்டி வருமானம்	111.2	7.3	131.4	8.6
வட்டியல்லா வருமானம்	32.0	2.1	49.5	3.2
வட்டியல்லா செலவினம்	78.4	5.2	87.1	5.7
கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் (தேறிய))	38.2	2.5	11.1	0.7
வரிக்கு முன்னதான இலாபம்	26.6	1.7	82.7	5.4
வரிக்குப் பின்னரான இலாபம்	13.7	0.9	55.6	3.6

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.10
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இலாபக் குறிகாட்டிகள்



சராசரி சொத்துக்களில் ஏற்பட்ட (மொத்தம்) சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பே காரணமாகும்.

2021இல் வட்டியல்லா வருமானம் 54.5 சதவீதத்தினாலும் (ரூ.17.5 பில்லியன்) வட்டியல்லாச் செலவினம் 11.1 சதவீதத்தினாலும் (ரூ.8.7 பில்லியன்) அதிகரித்தமையின் மூலம் துறையின் இலாபத்தன்மைக்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தன. வட்டியல்லாச் செலவுகள் அதிகரித்தமைக்கு அலுவலர்களுக்கான சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய நன்மைகள் (ரூ.4.7 பில்லியன்), நிருவாகச் செலவினங்கள் (ரூ.2.8 பில்லியன்), ஏனைய செலவினங்கள் (ரூ.3.0 பில்லியன்) என்பன முக்கிய காரணங்களாக விளங்கின. இவ்வாண்டுப்பகுதியில் செயற்படாக் கடன்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட கடன் இழப்பு ஏற்பாடுகள் ரூ.27.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு இக்காலப்பகுதியில் அதிகரித்த சேகரிப்புக்களே பெருமளவிற்குக் காரணமாகும். வரிக்குப் பின்னரான துறையின் இலாபம் 2020இன் ரூ.13.7 பில்லியனிலிருந்து 307.1 சதவீதத்தினால் 2021இல் ரூ.55.6 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக அல்லது முதலீட்டுப் பிணையங்கள் ரூ.1.2 பில்லியன் சேவைக் கட்டணங்கள் ரூ.1.8 பில்லியன், குறைக்கட்டணங்கள் ரூ.6.8 பில்லியன் வருமானங்கள் உள்ளடங்கலாக வட்டியல்லா வருமானத்தில் ரூ.17.5 பில்லியனால் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இலாபத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு 2021இல் 20.2 சதவீதத்திற்கு சடுதியாக அதிகரித்த பங்குரிமை மீதான வருவாயிலும் வரிக்கு முன்னரான சொத்தின் மீதான வருவாயில் ஏற்பட்ட 5.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பிலும் பிரதிபலிக்கப்பட்டது. 2020இல் இது தொடர்பில் முறையே 6.1 சதவீதமும் 1.7 சதவீதமும் பதிவுசெய்யப்பட்டன. உயர்ந்த சொத்து மீதான வருமானம் பங்குரிமை மீதான வருவாயும் துறையின் மூலதன உருவாக்கத்திற்கு நன்மை பயப்பதாக

வரைபடம் 8.11
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும்
சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின்
இடர்நேர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும்
மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அமைந்து துறைக்கு புதிய முதலீட்டாளர்களைக் கவர்வதனை இயலுமைப்படுத்தும். வருமானத்திற்கான செலவு விகிதம் 2020இன் 89.7 சதவீதத்திலிருந்து 2021இல் 69 சதவீதத்திற்கு மேம்பட்டமைக்கு இக்காலப்பகுதியில் மொத்தச் செலவினங்கள் குறைவடைந்தமையும் வருமானம் அதிகரித்தமையும் முக்கிய காரணங்களாக அமைந்த வேளையில் வினைத்திறன் விகிதம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 51.3 சதவீதத்திற்கு மேம்பட்டது.

மூலதனம்: இவ்வாண்டுப்பகுதியில் மூலதனம் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் மேலே பேணப்பட்டமையின் காரணமாக இத்துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடியதாகக் காணப்பட்டது. 2021 சனவரி 01 அளவில் ரூ.2 பில்லியன் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளையும் 2022 சனவரி 01இல் ரூ.2.5 பில்லியன் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினையும் பூர்த்தி செய்வதற்காக அநேக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் புதிய மூலதனம் உள்ளீடு செய்யப்பட்டமையின் காரணமாக மூலதனத் தளம் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.218.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.251.6 பில்லியனுக்கு மேம்பட்டது. துறையின் மைய மூலதனம் மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 14.5 சதவீதம் மற்றும் 15.7 சதவீதங்களிலிருந்து 2021 இறுதியில் முறையே 15.5 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

2021இல் பன்முகப்படுத்தப்பட்ட வியாபார மாதிரிகளுடன் முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற 25 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினை வலுவாகவும் உறுதியாகவும் கட்டியெழுப்புவதற்காக முதன்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. முதன்மைத் திட்டத்தின் கீழ் கையேற்றல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பனவற்றின் பொருட்டு 12 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு 6 பூர்வாங்க ஒப்புதல்கள் வழங்கப்பட்டிருந்தன. முதன்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமைக்குப் புறம்பாக, நிதியியல் நிலைமை மேலும் மோசமடைந்து போவதனை தவிர்க்கும் நோக்குடனும் அத்தகைய நிறுவனங்களின் உறுதிப்பாட்டினைப் பேணும் விதத்திலும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் மத்திய வங்கியினால் பல ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையில் காணப்படும் இடர்நேர்வுகள்

கொடுகடன் இடர்நேர்வு: 2021 இறுதியில் முழு மொத்தச் செயற்படாக் கடன்கள் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 26.2 சதவீதம் (ரூ.33.4 பில்லியன்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 13.9 சதவீதத்தினால் (ரூ.22 பில்லியன்) குறைவடைந்தன. மொத்தச்

வரைபடம் 8.12
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் துறையின்
செயற்படாக்கடன்கள் மற்றும் ஏற்பாட்டுக்காப்பு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.13
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் திரவக் குறிகாட்டிகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

செயற்படாக் கடன் விகிதம் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 13.9 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதும் துறையின் செயற்படாக் கடன் விகிதம் இன்னமும் உயர்வாகவே காணப்படுகிறது. தேறிய செயற்படாக் கடன் விகிதம் 2020 இறுதியின் 4.2 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 2.7 சதவீதத்திற்குக் குறைவடைந்தமைக்கு செயற்படாக்கடன்களுக்கான உயர்ந்த பாதுகாப்பு ஏற்பாடுகளே காரணமாகும். பாதுகாப்பு ஏற்பாட்டு விகிதம் 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 58.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 66.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. துறையின் கொடுகடன் இடர்நேர்வு இன்னமும் முகாமைப்படுத்தத்தக்களவில் காணப்படுகின்ற போதும் சட்ட இசைவுத்தாமதத்தின் கீழான கடன்களின் வகைப்படுத்தல் முடக்கப்பட்டிருப்பதன் தாக்கம் துறையின் கொடுகடன் இடர்நேர்வினை மதிப்பிடும் போது காரணிப்படுத்தப்படுவது அவசியமாகும். அதேபோன்று கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து 2021இல் அடகுபிடித்தல் முற்பணங்களிலும் தங்கக் கடன்களிலும் (ரூ.58 பில்லியன்) அதிகரித்த போக்கொன்று காணப்பட்டது. எனவே, தங்கச் சந்தையில் ஏற்படக்கூடிய விலை வீழ்ச்சிகள் இத்துறையின் செயலாற்றத்தினையும் அதன் செயற்படாக் கடன்களையும் மோசமாகப் பாதிக்கும்.

சந்தை இடர்நேர்வு: துறையானது, வட்டி வீத இடர்நேர்வினையும் பங்குச் சந்தை இடர்நேர்வினையும் உள்ளடக்கிய தாழ்ந்த சந்தை இடர்நேர்வினைத் தொடர்ந்தும் அனுபவித்தது.

வட்டி வீத இடர்நேர்வு: திறைசேரி உண்டியல் வட்டி வீதங்களின் விடாப்பிடியான மேல் நோக்கிய திருத்தங்களின் அண்மைய போக்குகளின் காரணமாக வைப்புக்களுக்கான தொடர்பான வீதங்கள் 2021 நவெம்பர் 01 இலிருந்து மேல் நோக்கித் திருத்தப்பட்டன. இதற்கமைய, வட்டி உழைக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டில் காணப்படுகின்ற எதிர்மறையான பொருத்தப்பாடின்மையின் காரணமாக வட்டி வீத இடர்நேர்வு அதிகரிக்கக்கூடும்.

பங்குரிமை இடர்நேர்வு: ஆய்விற்குரிய காலப்பகுதியில் துறையின் பங்குரிமை இடர்நேர்வு தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டமைக்கு பட்டியலிடப்பட்ட பங்குகளின் முதலீட்டு வடிவத்தில் காணப்பட்ட பங்குரிமைச் சந்தைகளுக்கான வெளிப்படுத்துகைகள் 2020இல் மொத்தச் சொத்துக்களின் 1 சதவீதத்திலிருந்து 2021இல் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

திரவத்தன்மை இடர்நேர்வு: துறையானது 2021இல் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கும் மிக மேலாக திரவத்தன்மையினைப் பேணியது. 2021 இறுதியில் துறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச் சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாடான ரூ.89.9 பில்லியனுக்கெதிராக ரூ.155.9 பில்லியனாகக் காணப்பட்டன. எனினும், 2021 இறுதியில் திரவத்தன்மை மிகை 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.89.0 பில்லியன் கொண்ட திரவத்தன்மை மிகையுடன் ஒப்பிடுகையில் 25.9 சதவீதத்தினால் (ரூ.23 பில்லியன்) வீழ்ச்சியடைந்தமைக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் திரவத்தன்மைச் சொத்துக்களின் தேவைப்பாடுகள் மீது விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தளர்த்தல்கள் இடைநிறுத்தப்பட்டமையின் விளைவாக குறைந்தபட்சத் திரவத்தன்மை தேவைப்பாடுகளில் காணப்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். திரவத்தன்மை விகிதம் (வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கெதிரான திரவச் சொத்துக்கள்) 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 13 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 14.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர் கம்பனிகள்

2021 இறுதியிலுள்ளவாறு, அரச பிணையங்கள் சந்தையில் 6 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 முதனிலை கம்பனிகளும் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. பான் ஏசியா பாங்கிக் கோப்பரேஷன் பிஎல்சியும் பேர்ப்பெட்ஜுவல் ரெசறீஸ் லிமிடெட் நிறுவனங்களின் முதனிலை வணிகர் வியாபாரங்கள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் முறையே 2017 ஒகத்து 15 இலிருந்தும் 2017 யூலை 06 இலிருந்தும் இடைநிறுத்தப்பட்டன. 2017 யூலை 24ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பதிலிருந்தும் என்றஸ்ட் செக்குறிட்டீஸ்

பிஎல்சி தடைசெய்யப்பட்டது. இதற்கமைய, 5 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 5 முதனிலை வணிகர் கம்பனிகளும் 2021 இறுதியில் உள்ளவாறாக முதனிலை வணிகர்களாக அரச பிணையங்கள் சந்தையில் செயற்பட்டன.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்: 2021இல் முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 9.8 சதவீதத்தினால் ரூ.78.7 பில்லியனுக்கு குறைவடைந்தன. வர்த்தகப்படுத்தல், விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துப்பட்டியல் என்பனவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்களின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2021 இறுதியில் ரூ.70.5 பில்லியனாக விளங்கின. இது, இவ்வாண்டுப்பகுதியில் 12 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.62.6 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.54.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துப்பட்டியல் 2020 இறுதியில் ரூ.14.7 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.12 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துப்பட்டியல் 2020 இறுதியின் ரூ.2.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.3.6 பில்லியனுக்கு அதிகரித்தது.

இலாபத்தன்மை: முதனிலை வணிகர் கம்பனிகள் 2020 காலப்பகுதியில் நிலவிய ரூ.4.9 பில்லியன் கொண்ட வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் ரூ.0.4 பில்லியனை வரிக்குப் பின்னரான நட்டமாகப் பதிவுசெய்திருக்கின்றமையானது விளைவு வீதங்களில் காணப்பட்ட அதிகரிப்பின் விளைவாக இலாபத்தன்மையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் மூலதன இலாபங்களில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி முதனிலை வணிகர் கம்பனிகளினால் பதிவுசெய்யப்பட்ட சந்தைப்படியான இழப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களுடன் சேர்ந்து 2021இல் பதிவுசெய்யப்பட்ட வரிக்குப் பின்னரான இழப்புக்களுக்குப் பெருமளவிற்குப் பங்களித்தது. மேலும், முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்து மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மீதான வருவாய் என்பன 2020இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 7.6 சதவீதம் மற்றும் 30.5 சதவீதங்களிலிருந்து 2021 இறுதியில் முறையே எதிர்க்கணியமான 0.7 சதவீதத்திற்கும் எதிர்க்கணியமான 3.2 சதவீதத்திற்கும் சுருக்கமடைந்தன.

மூலதனம்: முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்குரிமை மூலதனம் 6.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் ஏற்பட்ட இழப்புக்களே முக்கிய காரணமாகும். முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் 10 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச தேவைப்பாட்டுத் தொகையினை விட மிக உயர்வாகக் காணப்பட்டதுடன் 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 27 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 42.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

முதனிலை வணிகர் கம்பனிகள் துறையின் இடர்நேர்வுகள்

சந்தை இடர்நேர்வு: முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலிலுக்கான வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் விகிதம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து 2020 இறுதியில் காணப்பட்ட 78.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 77.9 சதவீதத்தினைப் பதிவுசெய்து இத்தொழில்துறையின் தொடர்பான சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகையில் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

திரவத்தன்மை இடர்நேர்வு: முதனிலை வணிகர் கம்பனிகளின் ஒட்டுமொத்த திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துகை அதிகரித்தமைக்கு, 2021 இறுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிச் தோற்றப்பாட்டிலுள்ள ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மையில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மை 2020 இறுதியிலுள்ளவாறான ரூ.13 பில்லியனிலிருந்து (79.5 சதவீதம்) ரூ.20.3 பில்லியனுக்கு அதிகரித்தது. இது, 2021 இறுதியில் ஓரிரவுப் பொறுப்புக்களில் 82.8 சதவீதத்திற்கான அதிகரிப்பாகும். முதனிலை வணிகர்கள் வசம் இடர்நேர்வற்ற அரச பிணையங்கள் பெருமளவில் இருந்தமையினையும் எதிர்பார்க்கப்படாத ஏதேனும் திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு நிதிகளைப் பெற்றுக்கொள்ள அத்தகைய அரச பிணையங்களை பிணையுறுதியாகப் பயன்படுத்துவதனையும் கருத்திற் கொள்கையில், திரவத்தன்மைப் பிரச்சனையினை எதிர்நோக்குகின்ற என்ரஸ்ட் செகுரிட்டீஸ் பிஎல்சி தவிர, மற்றைய முதனிலை வணிகர் கம்பனிகளின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாடு ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது. பெரும்பாலான முதனிலை வணிகர் கம்பனிகள் எந்தவொரு திரவத்தன்மை இடைவெளிகளையும் நிரப்புவதற்கு எதிர்பாராத துணைநில் நிதியிடல் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன.

சந்தை நடத்தை

முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகள்: 2021இல் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான முதலாந்தரச் சந்தை ஏலங்களில் முதனிலை வணிகர்களின் பங்கேற்பு கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது. 2021இல் நடத்தப்பட்ட 52 திறைசேரி உண்டியல் ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த விலைக்குறிப்பீட்டில் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்,

முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பனவற்றின் காத்திரமான பங்கேற்பு முறையே 43.1 சதவீதத்திற்கும் 56.3 சதவீதத்திற்கும் 0.6 சதவீதத்திற்கும் வகைகூறின. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் நடத்தப்பட்ட 22 திறைசேரி முறி ஏலங்களில் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் ஊ.சே. நிதியம் என்பனவற்றின் காத்திரமான பங்கேற்புக்கள் முறையே 36 சதவீதத்திற்கும் 27.5 சதவீதத்திற்கும் 36.5 சதவீதத்திற்கும் வகைகூறின.

முதனிலை வணிகர் கம்பனிகளின் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்: முதனிலை வணிகர் கம்பனிகளினால் அரசாங்கப் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் (அளவு நியதிகளில்) 2021இல் ரூ.5,068.3 பில்லியனுக்கு 33.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இதில், நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் 63.5 சதவீதத்திற்கு வகைகூறின. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் உடனடிக் கொள்வனவு 56 சதவீதத்தினால் வீழ்ச்சியடைய முதனிலை வணிகர்களின் உடனடி விற்பனைகள் 2020 உடன் ஒப்பிடுகையில் 11.4 சதவீதத்தினால் அதிகரித்தன.

உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்

4 நிறுவனங்களை உள்ளடக்கிய உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் துறையின் சொத்துத் தளம் 2021 இறுதியில் 27.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிவித்ததுடன் ரூ.8.4 பில்லியனை அடைந்தது. நுண்பாக நிதிக் கடன்களும் முற்பணங்களும் மொத்தச் சொத்துக்களில் மிகப் பெரும் பங்கிற்கு வகைகூறியதுடன் அவை 74.6 சதவீதமாகக் காணப்பட்டன. 2021இல் நுண்பாக நிதிக் கடன்களும் முற்பணங்களும் ரூ.6.3 பில்லியனாக விளங்கி 2020 இறுதியின் ரூ.5.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 14.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிவித்தன. 2021 இறுதியில் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியின் செயற்படாக்கடன்கள் 16.8 சதவீதத்தில் காணப்பட்டது. துறையின் மொத்த வைப்புத்தளம் 2020இனை ரூ.488 மில்லியனிலிருந்து 2021இன் ரூ.544 மில்லியனுக்கு 11 சதவீதத்தினால் வளர்ச்சிகண்டது. துறையின் மொத்தப் பொறுப்புக்கள் 2020இன் ரூ.4.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.5.5 பில்லியனுக்கு 29 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டமைக்கிடையில் பங்குரிமைக்கான படுகடன் விகிதம் 2020 இறுதியில் பங்குரிமை அதிகரிப்புடன் 1.9 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 2.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் காணப்பட்ட தொழிற்பாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்கு கிடைக்கத்தக்க திரவச் சொத்துக்களைப் பயன்படுத்தும் விதத்தில், நாணயச் சபை, 2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின்படி உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் திரவச் சொத்துக்களைப் பேண வேண்டுமென்ற தேவைப்பாட்டினை புறக்கீடு செய்யும் அதன் தீர்மானத்தினைத் தொடர்ந்தது. துறையின் மைய மூலதன மட்டம் தொடர்ந்தும் ரூ.2.7 பில்லியனில் காணப்பட்டதுடன் அனைத்து உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் மைய மூலதனம் தொடர்பான குறைந்தபட்ச முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கிக் காணப்பட்டன.

கூறுநம்பிக்கைகள்

2021 இறுதியில் கூறுநம்பிக்கைகளின் எண்ணிக்கை 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 75 ஆக மாற்றமின்றிக் காணப்பட்ட வேளையில் கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளின் எண்ணிக்கை 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 18 கம்பனிகளிலிருந்து 2021 இறுதியில் 16 இற்குக் குறைவடைந்தன. கூறுநம்பிக்கை நிதிகளில் முக்கியமாக பணச் சந்தை நிதியமும் அதனைத் தொடர்ந்து வருமான நிதியமும் ஆதிக்கம் பெற்றிருந்ததுடன் கூறுநம்பிக்கைத் தொழில் துறையில் முறையே 23 சதவீதத்தினையும் 21 சதவீதத்தினையும் பிரசன்னப்படுத்தின. மேலும், நிறைகாப்புடைய நிதியம், வளர்ச்சி நிதியம் மற்றும் சமநிலைப்படுத்தப்பட்ட நிதியம் என்பன கூறுநம்பிக்கை தொழில் துறையில் முறையே 15 சதவீதத்திற்கும் 13 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்கும் வகைகூறின.

வியாபார வளர்ச்சி: 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கூறுநம்பிக்கைத் துறையின் மொத்தச் சொத்துத்தளத்தில் சுருக்கமொன்று அவதானிக்கப்பட்டது. துறையின் மொத்தச் சொத்துக்கள் 2021 இறுதியில் 195 பில்லியனுக்கு 3 சதவீதத்தால் குறைவடைந்தது. வழங்கப்பட்ட கூறுகளும் 2020இன் இறுதியில் காணப்பட்ட 8,014 மில்லியனிலிருந்து 2021இன் இறுதியில் 7,835 மில்லியனாகக் குறைந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், கூறுநம்பிக்கை உடமையாளர்களின் எண்ணிக்கை 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 52,402 இலிருந்து 2021 இறுதியில் 59,426இற்கு அதிகரித்தது.

வரைபடம் 8.14
நிதியங்களின் எண்ணிக்கை அடிப்படையில் கூறு நம்பிக்கை துறையின் வகைப்படுத்தல்



அட்டவணை 8.14
கூறு நம்பிக்கைகள் துறையின் செயலாற்றம்

விடயம்	2020(அ)	2021(ஆ)
கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை	75	75
உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை	52,402	59,426
வழங்களில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை (மில்)	8,014	7,835
மொத்த சொத்துக்கள் (ரூ. பில்)	201.0	195.0
தேறிய சொத்துப் பெறுமதி	201.5	191.3
பங்குரிமை மூலதன்திலான முதலீடுகள் (ரூ. பில்)	14.1	17.6
மொத்த தேறிய சொத்துக்களின் பங்கு (%)	7.0	9.1
அரச பிணையங்களிலான முதலீடுகள் (ரூ. பில்)	25.3	23.4
மொத்த தேறிய சொத்துக்களின் பங்கு (%)	12.6	12.1

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை கூறு நம்பிக்கைகளின் சங்கம்

முதலீடுகள்: தேறிய சொத்துக்களின் சதவீதமாக, கூறுநம்பிக்கைகளினால் அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்கு 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 12.6 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 12.1 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. எனினும், தேறிய சொத்துக்களின் சதவீதமாகப் பங்குரிமைகளில் செய்யப்பட்ட முதலீடுகள் 2020 இறுதியின் 7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 9.1 சதவீதத்திற்கு அதிகரித்தன.

காப்புறுதித் துறை

2021 இறுதியில் நாட்டில் 27 காப்புறுதிக் கம்பனிகள் தொழிற்பட்டதுடன் இதில் 13 நீண்ட காலக் காப்புறுதி கம்பனிகளையும் 12 பொதுக் காப்புறுதிக் கம்பனிகளையும் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டுடன் தொடர்புபட்ட 2 கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தன.

2021இல் காப்புறுதித் துறை அதன் சொத்துத் தளத்தில் மிதமான வளர்ச்சியொன்றினை அறிக்கையிட்டது. காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 இறுதியில் 11.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ரூ.879.8 பில்லியனை அடைந்தது. நீண்ட காலக் காப்புறுதி துணைத் துறையின் சொத்துத் தளம் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 16.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.633 பில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தவிடத்து பொதுக் காப்புறுதித் துறையின் சொத்துத் தளம் 9.2 சதவீதத்தினால் அதிகரித்து 2021 இறுதியில் ரூ.246.8 பில்லியனை அடைந்தது. மொத்தக் காப்புறுதித் துறையின் சொத்துத்தளத்தில் நீண்ட காலக் காப்புறுதி துணைத் துறையின் சொத்துத் தளத்தின் பங்கு 2021 இறுதியில் 71.9 சதவீதத்தில் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டது. இது, 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 71.4 சதவீதத்திலிருந்து சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வதிகரிப்புடன் தொடர்புபடுகின்ற விதத்தில் மொத்தச் சொத்துக்களில் பொதுக் காப்புறுதி துணைத் துறையின் சொத்துக்கள் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 28.6 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 28.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

காப்புறுதித்துறையின் மொத்தமாக எழுத்தப்பட்ட கட்டுப்பணமானது 2020 இறுதியின் ரூ.208.2 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.238.8 பில்லியனுக்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்தது. நீண்ட காலக் காப்புறுதி துணைத் துறையினதும் பொதுவான காப்புறுதித் துணைத் துறையினதும் மொத்தமாக எழுதப்பட்ட கட்டுப்பணம் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் முறையே 21.1 சதவீதத்தினாலும் 3.6 சதவீதத்தினாலும் அதிகரித்தது. இதற்கமைய, நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறை, துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் முக்கிய பங்களிப்பாளராக மாறியதுடன் இது 2021 இறுதியில் 53.3 சதவீத பங்குகளைப் பதிவுசெய்தது. பொதுக் காப்புறுதி துணைத் துறை உந்து ஊர்திக் காப்புறுதியின் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தியதுடன் 2021 இறுதியில் பொதுக் காப்புறுதியின் பங்கில் 55.9 சதவீதத்தினையும் பிரசன்னப்படுத்தியது. உந்து ஊர்திகள் காப்புறுதித் துணைத் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2021 இறுதியில் 0.3 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

காப்புறுதித் துறையின் இலாபத்தன்மை 2021 காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து வரிக்கு முன்னரான இலாபத்தில் 4.9 சதவீதமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. நீண்டகால காப்புறுதித் துணைத் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் 16.1 சதவீதம் கொண்ட

அட்டவணை 8.15
காப்புறுதித்துறையின் செயலாற்றம்*

ரூ. பில்லியன்

விடயம்		2020(அ)	2021(ஆ)
மொத்தச் சொத்துக்கள்		789.7	879.8
அரச பிணையங்கள்		309.3	337.1
பங்குரிமை மூலதனம்		44.8	53.8
காசு மற்றும் வைப்புக்கள்		117.3	132.5
மொத்த கட்டுப்பணம்		208.2	233.8
மொத்த வருமானம்		264.3	298.6
கட்டுப்பண வருமானம்		208.2	233.8
முதலீட்டு வருமானம்		56.1	64.9
வரிக்கு முன்னரான இலாபம்		40.4	38.4
மூலதன போதுமான்தன்மை விகிதம் (%)	- நீண்டகாலக் காப்புறுதி	352.0	384.0
	- பொதுக் காப்புறுதி	272.0	224.0
பிடித்து வைத்தல் விகிதம் (%)	- நீண்டகாலக் காப்புறுதி	95.4	96.0
	- பொதுக் காப்புறுதி	82.4	76.2
கோரல் வீதம் (%)	- நீண்டகாலக் காப்புறுதி	38.6	38.7
	- பொதுக் காப்புறுதி	49.2	55.8
இணைந்த தொழிற்பாட்டு விகிதம்	- நீண்டகாலக் காப்புறுதி	82.7	81.2
	- பொதுக் காப்புறுதி	88.6	94.9
சொத்துக்கள் மீதான வருவாய் (%)	- நீண்டகாலக் காப்புறுதி	3.3	3.4
	- பொதுக் காப்புறுதி	10.7	7.8
பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%)	- நீண்டகாலக் காப்புறுதி	14.5	15.7
	- பொதுக் காப்புறுதி	22.7	15.5
ஒப்புறுதி விகிதம் (%)	- பொதுக் காப்புறுதி	32.6	25.3

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

* தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நீங்கலான தகவல்

வரைபடம் 8.15
காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்



மூலம் : இலங்கை காப்புறுதித்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

அதிகரிப்பினைப் பதிவுசெய்ததுடன் பொதுக் காப்புறுதி துணைத் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் 2021 காலப்பகுதியில் 20.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு 2021இல் காணப்பட்ட அதிகரித்த கோரல்களே காரணமாகும். அதேவேளை, துறையின் ஒப்புறுதி இலாபமும் 2021 இறுதியில் 22.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

2021 இறுதியில் காப்புறுதித் துறையிலிருந்தான கோரல்கள் 17.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.94.7 பில்லியனைப் பதிவுசெய்தது. நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறைகள் இரண்டினதும் கோரல்கள் 2021 இறுதியில் முறையே 22.3 சதவீதத்தினாலும் 13.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குகள் மீதான வருவாயும் அதிகரித்த வேளையில் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குகள் மீதான வருவாயும் 2020 உடன் ஒப்பிடுகையில் ஆய்வுக்குரிய ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் 3.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பொதுக் காப்புறுதித் துணை துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் 2021 இறுதியில் 7.8 சதவீதத்திற்கு குறைவடைந்தது. நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் பங்குரிமை மீதான வருவாய் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 14.5 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 15.7 சதவீதத்திற்கு அதிகரித்தவிடத்து பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் பங்குகள் மீதான வருவாய் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 22.7 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 15.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் மொத்தச் சொத்துக்களுக்கான மூலதனம் 2020 இறுதியின் 22.1 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 20.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவிடத்து பொதுக் காப்புறுதி துணைத் துறையின் மொத்தச் சொத்துக்களுக்கான மூலதனம் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 48.3 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 50.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

காப்புறுதித் துறையினால் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்ந்தும் அரச பிணையங்கள் மீது செறிந்து காணப்பட்டன. அரச பிணையங்கள் மீதான நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் பங்கு 2020 இறுதியில் காணப்பட்ட 46.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 46.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், அரச பிணையங்கள் மீதான பொதுக் காப்பறுதித் துணைத் துறையின் சொத்துக்களினது பங்கு 2020 இறுதியின் 40.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியின் 45.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், நீண்ட கால காப்புறுதித் துணைத் துறையினதும் பொதுக் காப்புறுதித் துணைத் துறையினதும் பங்குரிமை மீதான முதலீடுகளின் பங்குகள் 2020 இறுதியின் 6.3 சதவீதத்திலிருந்தும் 7.6 சதவீதத்திலிருந்தும் 2021 இறுதியில் முறையே 7.2 சதவீதத்திற்கும் 8 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

ஓய்வுகால நிதியங்கள்

ஓய்வுகால நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2021 இறுதியில் ரூ.3,876.3 பில்லியனாக விளங்கி, நிதியியல் துறை சொத்துக்களில் 14.5 சதவீதத்திற்குப் பங்களித்தது. இத்துறையானது ஊழியர் சேம நிதியத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்ததுடன் இது ஓய்வுகாலத் துறையின் மொத்தச் சொத்துக்களில் 81.7 சதவீதத்திற்கு வகைகூறியது. ஊ.சே. நிதியத்திற்குப் புறம்பாக, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரச துறை அரச பணிகள் சேம நிதியம் என அழைக்கப்படும் இரண்டு பகிரங்கமாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்கள் காணப்படுகின்றன.

ஊழியர் சேம நிதியம்

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்திற்கமைய ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில், தொழில் ஆணையாளரிடம் நிதியத்தின் பொது நிருவாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேம நிதியத் திணைக்களம் நாணயச் சபை அதன் கடமைகள், தொழிற்பாடுகள் என்பனவற்றை ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆற்றுவதற்கு வசதியளிக்கிறது.

2021 இறுதியில் நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,824.3 பில்லியனிலிருந்து ரூ.3,166.1 பில்லியனுக்கு ரூ.341.8 பில்லியனால் அதிகரித்து 12.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

அட்டவணை 8.16
ஊழியர் சேம நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்ற சுருக்கம்

விடயம்	2017	2018	2019	2020 (அ)	2021 (ஆ)
நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்)	2,066.3	2,289.4	2,540.4	2,824.3	3,166.1
உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்)	2,020.8	2,254.2	2,497.6	2,767.8	3,066.9
மொத்த பங்களிப்புக்கள் (ரூ.பில்)	133.3	145	157.2	150.7	165.7
மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்)	117.5	108	126.3	109.7	118.2
தேறிய பங்களிப்பு (ரூ.பில்)	15.8	37.0	30.9	41.0	47.5
வட்டிவீதம் (%)	10.50	9.50	9.25	9.00	9.00
உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்)	18.1	18.7	19.4	19.8	19.8
செயல் நிலையிலுள்ள உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்)	2.8	2.9	2.9	2.6	2.3

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இவ்வளர்ச்சிக்கு உறுப்பினர்களின் தேறிய பங்களிப்புக்கள் (மீளளிப்புக் கொடுப்பனவுகளைக் கழித்த பங்களிப்புக்கள்) மற்றும் நிதியத்தின் முதலீடுகளூடாக உருவாக்கப்பட்ட வருமானம் என்பவற்றின் இணைந்த தாக்கமே காரணமாக அமைந்தது. உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு 2021ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.3,066.9 பில்லியனாக விளங்கி 2020இன் இறுதியில் ரூ.2,767.8 பில்லியனிலிருந்து 10.8 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2021ஆம் ஆண்டிற்கான மொத்தப் பங்களிப்பு ரூ.165.7 பில்லியனுக்கு 9.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்டபூர்வமான வாரிசுகளுக்கும் செலுத்தப்பட்ட மீளளிப்புக்களின் மொத்தத் தொகை 2021இல் ரூ.118.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது, 2020இனை விட 7.7 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகக் காணப்பட்டது. இதற்கமைய நிதியத்திற்கான தேறிய பங்களிப்பு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.47.5 பில்லியனாகக் காணப்பட்டது. நிதியத்தின் வருடாந்த இலாபம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.244.9 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.299.1 பில்லியனுக்கு 22.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு, இலாபம் அல்லது நட்டமூடாக உண்மைப் பெறுமதியில் நிதியியல் சாதனங்கள் மீதான (பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம்) தேறிய இலாபத்தில் ரூ.36.8 பில்லியனால் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது.

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்தப்பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2020 இறுதியின் ரூ.2,829.5 பில்லியனிலிருந்து 2021 இறுதியில் ரூ.3,173.3 பில்லியனுக்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்தது. நிதியத்தின் முதலீட்டுக் கொள்கை உறுப்பினர்களுக்கு நீண்ட கால நேர்க்கணிய உண்மை வருவாய் வீதமொன்றினை வழங்குவதனை முக்கிய கவனத்தில் கொண்டிருந்த வேளையில், நிதியத்தின் பாதுகாப்பினையும் மீளளிப்புக் கொடுப்பனவுகளையும் நிதியத்தின் ஏனைய செலவுகளையும் பூர்த்தி செய்யத்தக்க விதத்தில் திரவத்தன்மை போதுமான மட்டத்தில் கிடைப்பதனையும் உறுதிப்படுத்துவதாக இருந்தது. இதற்கமைய, 2021 இறுதியிலுள்ளவாறு முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அரச பிணையங்களிலுள்ள 93.2 சதவீதத்தினையும் பங்குரிமை மூலதனத்திலுள்ள 3.8 சதவீதத்தினையும் கம்பனி தொகுதிக் கடன்களிலுள்ள 0.8 சதவீதத்தினையும் நிலையான வைப்புக்களிலுள்ள 1.8 சதவீதத்தினையும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள 0.4 சதவீதத்தினையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது.

முதலீட்டு வருமானம்: நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் 2021இல் ரூ.342.2 பில்லியனாக விளங்கி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. வட்டி வருமானம் நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாகத் தொடர்ந்துமிருந்ததுடன் இது 2020இன் ரூ.277.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.293.7 பில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தது. பங்கிலாப வருமானம் 2020இல் ரூ.3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.6.7 பில்லியனுக்கு 124.0 சதவீதத்தினால் அதிகரித்தது. இலாபம் அல்லது இழப்பினூடாக உண்மைப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களின் மீதான தேறிய இலாபம்/ இழப்பு 2020இன் ரூ.5.0 பில்லியன் கொண்ட தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.41.8 பில்லியன் கொண்ட தேறிய இலாபத்தினைப் பதிவுசெய்தது.

நிதியத்தின் ஒட்டுமொத்த வருமானம்: 2021இல் நிதியமானது ரூ.342.4 பில்லியன் கொண்ட முழுமொத்த வருமானத்தினை ஈட்டியதன் மூலம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. தொழிற்பாட்டுச் செலவினம் மற்றும் வரிச் செலவினம் என்பனவற்றிற்காகச் சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் 2021ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூ.299.1 பில்லியனாகக் காணப்பட்டது. இது, 2020 உடன் ஒப்பிடுகையில் 22.1 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதற்கமைய, 2021இல் ஊ.சே.நிதியத்தின் சராசரி முதலீட்டின் மீதான வருவாய் 11.4 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், நிதியமானது மொத்த வருமானத்திற்கான தொழிற்பாட்டுச் செலவினத்தின் விகிதத்தினை 2021இல் 0.48 சதவீதத்தில் பேணக்கூடியதாக இருந்தது. எனினும், 2021இன் இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து நிதியத்தின் வரிச் செலவினம் 2020 உடன் ஒப்பிடுகையில் ரூ.2.6 பில்லியனால் அதிகரித்தது. இருப்பினும் கூட நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவு முறைகளுக்காகப் பிரயோகிக்கப்படும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9 இன் பின்பற்றலுடன் இதற்கேற்ப பட்டியலிடப்பட்ட பங்குரிமைச் சாதனங்களின் உண்மைப் பெறுமதியில் அளவிடப்பட்டதுடன் பங்குச் சந்தையின் விரும்பத்தக்க நிலைமைகளின் கீழ் 2021ஆம் ஆண்டிற்கான வருமானமொன்றாக ரூ.41.8 பில்லியன் கொண்ட தேறிய இலாபம் பதிவுசெய்யப்பட்டது. இதன்படி, ஊழியர் சே

.நிதியம் 2021இல் உறுப்பினர் மீதிகளுக்கு 9.00 சதவீதம் கொண்ட வட்டியை பிரகடனம் செய்தது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கிரமமான தொழிற்பாட்டுப் பொறிமுறைகள் இவ்வாண்டுப்பகுதியில் இடையூறுக்குள்ளான போதிலும் இடர்நேர்வு முகாமைத்துவத்துடன், உள்ளகக் கட்டுப்பாட்டுத் தேவைகளும் இணங்கியொழுகும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, அனைத்து முதலீட்டு நடவடிக்கைகளும் நாணயச் சபையால் அனுமதிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கைக் கூற்றில் குறித்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகள், உபாயச் சொத்து ஒதுக்கு மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட வேளையில் நிதியத்திற்கான பாதுகாப்பும் உயர்ந்தபட்ச வருமானமும் உறுதிப்படுத்தப்பட்டன. இவ்வாண்டுப்பகுதியில் நாட்டில் நிலவிய முதலீட்டிற்கான சூழல் சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட கடுமையான மாற்றங்கள், பங்குச் சந்தையில் காணப்பட்ட தளம்பல்கள் மற்றும் ஏனைய பொருளாதார நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக கணிசமானளவு சவால்களுக்குட்பட்டன. இதன்படி, உத்தேவகம் மிக்க முதலீட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்ட வேளையில், மாற்றமடைகின்ற பொருளாதாரச் சூழலின் காரணமாக ஏற்படும் எந்தவொரு இடர்நேர்வும் கட்டுப்படுத்தப்பட்டன. மேலும், சந்தை நிலைமைகள், பன்னாட்டு நியமங்கள் மற்றும் மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் கூடிய சிறந்த நடைமுறைகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு முதலீட்டுத் தீர்மானங்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு தற்போதுள்ள முதலீட்டு வழிகாட்டல்களை மீளாய்வு செய்து திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஓய்வுகால நிதியத் துறையின் சொத்துத் தளத்தில் 10.8 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த ஊழியர் நம்பிக்கை நிதியம் அதன் சொத்துத் தளம், மொத்தப் பங்களிப்புக்கள் மற்றும் முதலீடுகளில் முன்னேற்றத்தினைப் பதிவுசெய்த அதேவேளை, உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் 14.7 மில்லியன் உறுப்பினர் கணக்குகளில் 2.1 மில்லியன் கணக்குகள் மாத்திரமே 2021 இறுதியில் செயற்பாட்டிலிருந்தன. நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்த தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2020 இறுதியின் 75,756 இலிருந்து 2021 இறுதியில் 44,501 இற்கு வீழ்ச்சியடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த உறுப்பினர் மீதி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 8.3 சதவீதத்தினால் அதிகரித்து 2021 இறுதியில் ரூ.406.3 பில்லியனை அடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குப் பெறப்பட்ட மொத்தப் பங்களிப்பு ஆண்டிற்கு

அட்டவணை 8.17
ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றம்

விடயம்	2020 (அ)	2021 (ஆ)
மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்)	376.6	419.1
மொத்த அங்கத்தவர் மீதி (ரூ. பில்)	375.2	406.3
அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்)	15.9	14.7
இயங்கு நிலையிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்)	2.5	2.1
பங்களிப்புச் செய்யும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை	75,756	44,501
மொத்த பங்களிப்புக்கள் (ரூ. பில்)	26.8	29.7
மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்)	18.6	19.8
மொத்த முதலீட்டுப்பட்டியல் (ரூ.பில்)	371.3	410.1
இதில்: அரச பிணையங்கள் (%)	80.0	86.0
மொத்த வருமானம் (ரூ. பில்)	34.7	35.5
பகிர்ந்தளிப்பிற்காக உள்ள இலாபம் (ரூ. பில்)	31.5	32.7
முதலீடுகளிலிருந்தான வருவாய் (%)	9.1	8.6
அங்கத்தவர் மீதிகளுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம் (%)	8.0	7.3

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

ஆண்டு அடிப்படையில் 11 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.29.7 பில்லியனை அடைந்த வேளையில் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த நன்மைகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.6 சதவீதத்தினால் அதிகரித்து 2021 இறுதியில் ரூ.20.2 பில்லியனை அடைந்தது.

அதேவேளை, 2021 இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 11.3 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.419.1 பில்லியனை அடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீடுகள் 2021 இறுதியில் ரூ.410.1 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 10.5 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டின் 80 சதவீத முதலீட்டுடன் ஒப்பிடுகையில், 2021 இறுதியில் இம்முதலீடுகளில் 86 சதவீதம் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டது. நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட பங்கு 2020 இறுதியின் 14.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 6.9 சதவீதத்திற்கு கணிசமானளவு குறைவடைந்தது. நிதியமானது 2021இல் அதன் உறுப்பினர் மீதிகளின் மீது 7.3 சதவீதம் கொண்ட வருமானத்தினைச் செலுத்தக்கூடியதாக இருந்தது. இது, முன்னைய ஆண்டு காலப்பகுதியில் செலுத்தப்பட்ட 8 சதவீதம் கொண்ட வருவாயைவிட வீழ்ச்சியாகும்.

ஏனைய ஓய்வுகால நிதியங்கள்

2021இல் ஓய்வுகால நிதியத் துறையில் 2.2 சதவீதத்திற்கு வகைகூறிய பொதுப் பணிகள் சேமலாப நிதியம் சொத்துக்கள், முதலீடுகள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள் ஆகிய நியதிகளில் அதிகரித்தன. நிதியமானது 19.1 சதவீதத்தினால் அதிகரித்து 2021 இறுதியில் சொத்துக்களின் நியதிகளில் ரூ.83.5 பில்லியனை அடைந்தது. 2021இன் நிதியத்தில் செயற்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2020 இறுதியின் 235,884

செயற்படும் உறுப்பினர்களுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 241,384 ஆகக் காணப்பட்டது. அதேவேளை, நிதியத்தின் முதலீடுகள் 16.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2021 இறுதியில் ரூ.81 பில்லியனை அடைந்தது. பொதுப் பணிகள் சேமலாப நிதியம் 2021 இறுதியில் அரச பிணையங்களில் அதன் மொத்த முதலீட்டில் 57.4 சதவீதத்தினை முதலீடு செய்திருக்கும் அதேவேளை ஏனைய முதலீடுகள் மொத்த முதலீடுகளில் 42.6 சதவீதத்திற்கு வகைகூறின. 2021ஆம் ஆண்டின் தேறிய பங்களிப்பு முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூ.507 மில்லியன் கொண்ட தேறிய பங்களிப்புடன் ஒப்பிடுகையில் ரூ.835 மில்லியனாகக் காணப்பட்டது. 2021இல் உறுப்பினர் மீதிகள் மீதான வருவாய் வீதம் 2020இற்கான 9.75 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8 சதவீதமாகக் காணப்பட்டது.

2021 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்கள் ஓய்வுகால நிதியங்களில் 5.4 சதவீதத்திற்கு வகைகூறின. 2021 இறுதியில் தனிப்பட்ட சேமலாப நிதியத்தினால் உள்ளடக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 76,692 ஆகக் காணப்பட்டதுடன் நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ.207.6 பில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டன.

8.4 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

உள்நாட்டுப் பணச்சந்தை

சந்தைத் திரவத்தன்மை

2020ஆம் ஆண்டுப்பகுதியிலும் 2021இன் முதலரைப்பகுதி முழுவதிலும் விடாப்பிடியாகத் தொடர்ச்சியாக மிகையான மட்டத்தில் காணப்பட்ட உள்நாட்டுப் பணச் சந்தைகளின் திரவத்தன்மை 2021 யூலை நடுப்பகுதியிலிருந்து கணிசமாக வீழ்ச்சியடைந்து 2021 ஓகத்து இறுதியில் எதிர்க்கணியத்திற்குத் திரும்பியது. 2021இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட கணிசமான மிகையான திரவத்தன்மைக்கு முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டமையும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. எனினும், அதன் பின்னர் உள்நாட்டுப் பணச் சந்தையின் மிகையான திரவத்தன்மை வீழ்ச்சியடைந்தமைக்கு அரசாங்கத்தின் வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவுகள், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணய எடுப்பனவுகள், மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தமை மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனான மத்திய வங்கியின் முதிர்ச்சியடைந்த வெளிநாட்டு நாணய வாங்கல் - விற்றல் இடமாற்றுக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. 2021 ஓகத்து நடுப்பகுதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை மாற்றமடைந்தமை, 2021 செத்தெம்பர் 1இல் தொடங்குகின்ற காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஒதுக்குப் பேணல் 2.00 சதவீத புள்ளிகளினால் 4.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய, 2020 இறுதியில் ரூ.206.8 பில்லியன் மிகையைக் கொண்டிருந்த சந்தைத் திரவத்தன்மை 2021 செத்தெம்பரில் ரூ.119.6 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. நாணயக் கொள்கை நிலையினால் வழிகாட்டப்பட்டவாறு, மீள்கொள்வனவு ஏலங்களை நடத்துவதன் மூலம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக ஓரிரவு பணச் சந்தைத் திரவத்தன்மையில் பற்றாக்குறையொன்று 2021 ஓகத்து இறுதிப் பகுதியிலிருந்து பேணப்பட்டது. இதற்கமைய, மத்திய வங்கியின்

வரைபடம் 8.16
பணச்சந்தை திரவத்தன்மையின் நாளாந்த மாற்றங்களை பாதித்தக் காரணிகள்



வரைபடம் 8.17
திறந்த சந்தை தொழிற்பாட்டு ஏலங்கள், துணைநில் வசதி, துணைநில் வீச்சு மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் (01 சனவரி 2021 - திசெம்பர், இறுதி 2021)



திறைசேரி உண்டியல்களின் ஆரம்பக் கொள்வனவுகள் மற்றும் மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியல்களின் விசேட ஒதுக்குகள் காரணமாக ஏற்பட்ட மிகையான திரவத்தன்மையை நிரந்தரமான அடிப்படையில் ஈர்த்துக்கொள்ளும் பொருட்டு, 2021 நவெம்பர் மற்றும் திசெம்பர் காலப்பகுதியில் மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவு ஏலங்களை நடத்திய அதேவேளையில் அத்தகைய மிகையான திரவத்தன்மையின் காரணமாக ஏற்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் மீதான ஏதேனும் கீழ் நோக்கிய அழுத்தம் கட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளை, 2021இன் பின்னரைப்பகுதியில் குறிப்பிட்ட சில வங்கிகளினால் எதிர்நோக்கப்பட்ட திரவத்தன்மை அழுத்தங்களைத் தளர்த்துவதற்காக, இரண்டு தடவைகள் கால திரும்பல் மீள்கொள்வனவு ஏலங்களை மத்திய வங்கி நடத்தியது. எனினும், 2021 இறுதியில், உள்நாட்டு பணச்சந்தைத் திரவத்தன்மை ரூ.366.2 பில்லியன் பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.

பணச் சந்தை வட்டி வீதங்கள்

நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காக விளங்கும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 2021 இலிருந்தான இறுக்கமான நாணயச் சந்தைத் திரவத்தன்மை நிலைமைகளோடு சேர்ந்து 2021 ஓகத்தில் கொள்கை வட்டி வீதங்களில் செய்யப்பட்ட மேல் நோக்கிய சீராக்கத்துடன் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையினை நோக்கி படிப்படியாக நகர்ந்தது. 2021 யூலை நடுப்பகுதியிலிருந்து, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் வீழ்ச்சியடைந்து செல்லும் பணச் சந்தை திரவத்தன்மையுடன் இசைந்து செல்லும் விதத்தில் துணைநில் வீத வீச்சின் நடுப்பகுதிக்கு மேலே தொடர்ந்தும் காணப்பட்டது. இதற்கமைய, ஏனைய குறுங்கால பணச்சந்தை வீதங்களும் 2021 யூலையிலிருந்து மேல் நோக்கிய சீராக்கத்தினைக் காட்டின. குறிப்பிட்ட சில வங்கிகளின் அதிகரித்த கடன்பாடுகள், ஒரு சில வெளிநாட்டு வங்கிகளில் குவிந்து காணப்பட்ட திரவத்தன்மை அதேபோன்று சந்தைப் பங்கேற்பாளர்களிடையேயான பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பிரயோகிக்கத்தக்க வெளிப்படுத்துகை வரையறைகள் என்பன உள்நாட்டுப் பணச் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கப் பங்களித்தன. மேலும், 2021 ஓகத்து 19ஆம் நாளன்று 50 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்கள் மேல் நோக்கிச் சீராக்கப்பட்டமையுடன் நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம் மேலும் அதிகரித்து 2021 செத்தெம்பர் இறுதியில் 5.94 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், 2021 இறுதியில் நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் மேல் நோக்கிய எல்லைக்கு நெருக்கமாக பெருமளவிற்கு உறுதியடைந்து காணப்பட்டது. நிறையேற்றப்பட்ட சராசரி மீள்கொள்வனவு வீதமும் இக்காலப்பகுதியில் நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதத்துடன் இசைந்து அசைவடைந்தது. 2021 இறுதியில் நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதமும் நிறையேற்றப்பட்ட சராசரி மீள்கொள்வனவு வீதமும் முறையே 5.95 சதவீதத்திலும் 5.98 சதவீதத்திலும் காணப்பட்டன.

அட்டவணை 8.18
திறந்த சந்தை தொழிற்பாடுகள் மற்றும் பணச் சந்தை கொடுக்கல்வாங்கல்களின் சாராம்சம்

கொடுக்கல்வாங்கல்கள்	அளவு (ரூ.பில்)		வருட இறுதியில் உள்ளவாறான நிறையேற்றப்பட்ட சராசரி வட்டிவீதம் (கூடியது - குறைந்தது)%	
	2020	2021	2020	2021
சந்தை				
அழைப்புப் பணம் (ஓரிரவு)	3,234	7,935	4.52 - 7.50	4.53-5.97
மீள்கொள்வனவு (ஓரிரவு)	3,151	3,533	4.53 - 7.53	4.55-6.00
திறந்த சந்தை தொழிற்பாடுகள்				
ஓரிரவு அடிப்படையில்				
மீள்கொள்வனவு	320	1,183	6.73 - 7.51	5.71-5.99
நேர்மாற்று மீள்கொள்வனவு	175	-	5.88 - 7.54	-
திரவத்தன்மை ஆதரவு வசதி	18	-	6.23 - 7.12	-
குறுங்கால அடிப்படையில்				
மீள்கொள்வனவு	31	423	7.01 - 7.16	5.96-5.99
நேர்மாற்று மீள்கொள்வனவு	66	-	4.53 - 6.85	-
திரவத்தன்மை ஆதரவு வசதி	48	-	6.30 - 6.93	-
நீண்டகால அடிப்படையில்			-	
மீள்கொள்வனவு	3	60	7.10 - 7.15	6.04-6.05
நேர்மாற்று மீள்கொள்வனவு	299	204	4.53 - 7.53	6.13-7.20
திரவத்தன்மை ஆதரவு வசதி	86	-	4.88 - 7.16	-
உடனடி விற்பனை/ கொள்வனவு அடிப்படையில்				
திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு	-	-	-	-
திறைசேரி முறிகளின் கொள்வனவு	22	-	8.42-9.68	-
திறைசேரி உண்டியல்களின் விற்பனை	-	14	-	7.00-7.23
திறைசேரி முறிகளின் விற்பனை	-	-	-	-
துணைநில் வசதி (கொள்கை வட்டிவீதங்களில்)				
துணைநில் வைப்பு வசதி	32,809	29,450	4.50	5.00
துணைநில் கடன் வழங்கல் வசதி	715	30,095	5.50	6.00

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

2021ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2020 இறுதியில் ரூ.186.41 இலிருந்து 2021 இறுதியில் ரூ.200.43 இற்கு 7 சதவீதத்தினால் தேய்வடைந்தது. ஆண்டின் தொடக்கத்தில் எல்லையினைக் கடந்து ஏறத்தாழ ரூ.186 ஆகக் காணப்பட்ட செலாவணி வீதம் 2021இன் முதல் காலாண்டில் அழுத்தங்களுக்குள்ளாகியமைக்கு சுற்றுலாக் கைத்தொழிலின் மீளெழுச்சியில் காணப்பட்ட தாமதம், ஒப்பீட்டு ரீதியில் குறைவடைந்த பணவனுப்பல்கள் நாட்டிற்கான தரமிடல் தொடர்ச்சியாக தரம் குறைக்கப்பட்டமையின் விளைவாக பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுவதில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் போன்ற கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல்களுக்கு மத்தியிலும் உள்ளூர் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் ஏற்பட்ட அதிகரித்த கேள்விக்கு உயர்ந்த இறக்குமதி

அளவுகள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுத் தேவைப்பாடுகள் தொடர்ந்தமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. விடாப்பிடியாகக் காணப்பட்ட உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் திரவத்தன்மைப் பற்றாக்குறையானது குறைந்த ஏற்றுமதியாளர்களின் மாற்றல், நிழல் வெளிநாட்டு நாணயச் சந்தைகளின் தோற்றத்துடன் தொழிலாளர் பணவனுப்பல்கள் முறைசாரா மார்க்கங்களுக்கு திசைதிரும்பியமை என்பனவற்றினால் மேலும் தீவிரமடைந்தது. 2021 ஏப்பிறல் இறுதியிலிருந்து வங்கிகள் தேய்வு தொடர்பான அழுத்தத்தினையும் செலாவணி வீதம் தொடர்பான சந்தை ஊகங்களையும் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தும் பொருட்டும் வங்கிகள் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதத்தினை ரூ.200 - ரூ.203 இற்குள் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு பரஸ்பரம் இணங்கிக் கொண்டன. தேய்வு அழுத்தமானது, மத்திய வங்கியினால் அத்தியாவசிய இறக்குமதி உண்டியல்களுக்கு வசதியளிப்பதற்காக இருதரப்பு விற்றல் வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர கொடுக்கல்வாங்கல் தொடர்களுடன் சேர்த்து மேற்கொள்ளப்பட்ட கணிசமான உடனடித் தலையீடுகளுடான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் குறிப்பிடத்தக்க வழங்கல் மூலம் பெருமளவிற்குத் தணிக்கப்பட்டது. 2021 செத்தெம்பர் தொடக்கத்திலிருந்து ரூ.200 - ரூ.203 பிரிவிற்கிடையில் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதத்திற்குள் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்காக அனைத்து வங்கிகளுக்கும் விடுக்கப்பட்ட மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட சராசரி உடன் செலாவணி வீதம் குறித்துரைக்கப்பட்ட வீச்சிற்குள் ஊசலாடிக் கொண்டிருந்தது. அதேவேளை, வெளிநாட்டுச் செலாவணி மாற்றல்களைப் பேணுகின்ற வேளையில் நாட்டிற்கு கூடியளவு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்காக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட கொள்கைப் பணிப்புரைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஐ.அ.டொலாருக்கெதிராக இலங்கை ரூபாவின் ஒட்டுமொத்த தேய்வுடன் இசைந்து செல்லும் விதத்தில், தந்தி மாற்றல்களுக்கான வர்த்தக வங்கிகளின் சராசரி ஐ.அ.டொலர்களின் வாங்குகின்ற மற்றும் விற்கின்ற செலாவணி வீதங்கள் முறையே 2020 இறுதியில் காணப்பட்ட ரூ.184.12 மற்றும் ரூ.189.18 உடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.198.50 ஆகவும் ரூ.203.00 ஆகவும் காணப்பட்டது. அதேவேளை, 2021ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா ஸ்டேர்லிங் பவுண், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலருக்கெதிராகவும் தேய்வடைந்தது.

2021இல் மத்திய வங்கி உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் தேறிய விற்பனையாளராகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமையினைக் கட்டியெழுப்புவதற்காக மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் ஒரு பகுதியையும் மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளில் குறிப்பிட்ட சதவீதத்தினையும் வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு விற்பனை செய்ய வேண்டுமென்ற கட்டாயத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டமையின் கீழ் முக்கியமாக வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் மிதமாகக் காணப்பட்டமைக்கிடையிலும் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்காக மத்திய வங்கி குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செலாவணியினை சந்தைக்கு வழங்கியது. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி வழங்கல் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறையினை வரையறுக்கப்பட்ட அளவிற்குக் கட்டுப்படுத்த உதவியது. இதற்கமைய 2021ஆம் ஆண்டில் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 506 மில்லியனை ஈர்த்துக் கொண்டு ஐ.அ.டொலர் 1,253 மில்லியனை நிரம்பல் செய்யக்கூடியதாக இருந்தமையின் மூலம் ஐ.அ.டொலர் 747 மில்லியன் கொண்ட தேறிய விற்பனையொன்று உருவானது.

மேலும், கூடுதலான வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களை நாட்டிற்குள் கவருகின்ற நோக்கத்துடனும் அதன் மூலம் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் அரசாங்கம் இலங்கை மத்திய வங்கியுடன் சேர்ந்து முறைசார்ந்த வங்கித்தொழில் துறையினூடாக வழிப்படுத்தப்படும் தொழிலாளர் பணவனுப்பல்களுக்கு பல ஊக்குவிப்புக்களை வழங்கியது. பொதுமக்களுக்கும், அவர்கள் வெளிநாட்டு நாணயத் தாள்களை இலங்கை ரூபாவிற்கு மாற்றும் பொழுது ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.10 கொண்ட மேலதிகக் கொடுப்பனவு உள்ளிட்ட பல தற்காலிக வழிமுறைகள் வழங்கப்பட்டமையின் மூலம் ஊக்குவிக்கப்பட்டனர்.

2021இல் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2020இன் ஐ.அ.டொலர் 18.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ. டொலர் 12.2 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கமைய, வங்கிகளுக்கிடையிலான உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வர்த்தகத்தின் அளவு 2020ஆம் ஆண்டின் வர்த்தக அளவுடன் ஒப்பிடுகையில் 33.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வபிவிருத்தியுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சராசரி நாளாந்த அளவு 2020இன் ஐ.அ.டொலர் 77 மில்லியனிலிருந்து 2021இல் ஐ.அ.டொலர் 50 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

அரச பிணையங்கள் சந்தை

அரச பிணையங்களின் விளைவு வளையி அதிகரித்து 2021இன் பிற்பகுதியில் உயர்ந்த மட்டங்களில் உறுதியாகக் காணப்பட்டது. 2021 ஓகத்தில் கொள்கை வீதங்களில் செய்யப்பட்ட 50 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு மற்றும் நியதி ஒதுக்கு விகிதம் 200 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டமை என்பனவற்றினை உள்ளடக்கும் நாணயக் கொள்கை நடவடிக்கைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் மேல் நோக்கிச் சீராக்கப்பட்டன. 2021 செத்தெம்பரில் உயர்ந்தபட்ச ஏற்பளவு விளைவு வீதங்களின் அறிவிப்பு நீக்கப்பட்டமையுடன் எதிர்க்கணியமான நாட்டிற்கான தரமிடல் நடவடிக்கை மற்றும் அதிகரித்த அரச கடன்பாடுகள் என்பனவற்றுடன் பதிவுசெய்யப்படாத பிணையங்கள் மத்திய வங்கிக்கு ஒதுக்கப்பட்டமையால் விளைவு வீதங்களின் மேல்நோக்கிய சீராக்கங்களின் மற்றுமொரு சுற்று அவதானிக்கப்பட்டது.

திறைசேரி உண்டியல்களின் முதலாந்தர ஏலங்களில் சந்தை முன்னுரிமை, குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் 91 நாள் முதிர்ச்சியை நோக்கிக் காணப்பட்டது. இதற்குமாறாக, முதலாந்தர ஏலங்களில் பொதுவாக, முதலீட்டாளர்கள் நீண்டகால திறைசேரி முறிகளுக்கு முன்னுரிமையளித்தனர். குறுங்கால 91 நாள் திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் 2021 இறுதியில் 8.16 சதவீதத்தில் பெருமளவிற்கு உறுதியாகக் காணப்பட்ட வேளையில் 182 நாள் மற்றும் 364 நாட்களுக்கான அடிப்படை அளவுக் குறியீடு முறையே 8.33 சதவீதமாகவும் 8.24 சதவீதமாகவும் காணப்பட்டன. எனினும், 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டில்களின் விளைவு வீதங்கள் 2020 இறுதியிலிருந்தது 2021 இறுதியில் முறையே 314, 334 மற்றும் 324 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தன. 2021இல் திறைசேரி முறிகளின் விளைவு வீதங்களும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. மொத்தமாக, 2020இல் 7.39 சதவீதம் கொண்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் ரூ.1,332.1 பில்லியன் கொண்ட வழங்கப்பட்ட திறைசேரி முறிகளுடன் ஒப்பிடுகையில் பொதுவாக 2021இல் 8.70 சதவீதத்துடன் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் ரூ.1,762 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. மேலும், 2021இல் ஒட்டுமொத்தமாக 6.09 சதவீதமான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் ரூ.3,821.4 வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுடன் ஒப்பிடுகையில் 2020இல் 5.82 சதவீதம் கொண்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் ரூ.2,590.5 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டன[2].

வரைபடம் 8.18
திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் ஆரம்ப சந்தையின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் (ஆண்டுக்கான சதவீதம்)



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.19
அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

ஆண்டுக்கான சதவீதம்

விடயம்	முதலாந்தரச் சந்தை		இரண்டாந்தரச் சந்தை	
	2020	2021	2020	2021
திறைசேரி உண்டியல்கள்				
91 நாட்கள்	4.51 - 7.55	4.69 - 8.43	4.50 - 7.54	4.63 - 8.00
182 நாட்கள்	3.87 - 8.15	4.75- 8.33	4.61 - 8.12	4.71 - 8.07
364 நாட்கள்	4.13 - 8.61	4.98 - 8.26	4.80 - 8.57	4.94 - 8.33
திறைசேரி முறிகள்				
2 ஆண்டுகள்	5.47 - 5.86	6.19 - 9.36	5.16 - 8.94	5.25 - 8.96
3 ஆண்டுகள்	5.72 - 9.33	6.25 - 9.94	5.59 - 9.38	5.68 - 9.81
4 ஆண்டுகள்	6.32 - 9.39	6.34 - 8.55	6.02 - 9.59	6.21 - 10.40
5 ஆண்டுகள்	6.50 - 9.81	6.72 - 11.14	6.30 - 9.81	6.43 - 11.03
6 ஆண்டுகள்	6.57 - 8.59	7.44 - 10.90	6.37 - 9.89	6.61 - 11.26
8 ஆண்டுகள்	6.97 - 9.99	7.16 - 11.63	6.63 - 9.99	6.98 - 11.55
10 ஆண்டுகள்	9.99	8.86 - 11.91	6.84 - 10.05	7.44 - 11.80
15 ஆண்டுகள்	7.84	8.44 - 12.06	7.13 - 10.18	7.76 - 11.85
20 ஆண்டுகள்	-	-	7.15 - 10.25	7.89 - 11.83
30 ஆண்டுகள்	-	-	7.61 - 10.52	8.04 - 11.81

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுவது தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் இது பல்வேறு எதிர்கணிய நாட்டிற்கான தரமிடல், இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளுக்காக விலக்கப்பட்ட இரண்டாந்தரச் சந்தை விளைவு மட்டங்கள், மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மைகள் என்பனவற்றினால் மேலும் சிக்கலடைந்துள்ளது. குறிப்பாக, உயர்ந்த செலவினைக் கொண்ட வர்த்தகக் கடன்பாடுகளைக் கொண்ட வெளிநாட்டு பொறுப்புக்களை படிப்படியாக குறைக்கும் நோக்குடன் இசைந்துசெல்லும் விதத்தில் புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதனை நாடாமல் 2021 யூலையில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. உள்நாட்டு வெளிநாட்டு நாணய நிதியிடல்

2 ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் நிருவாக ரீதியாக அறிவுறுத்தப்பட்ட வழங்கல் செலவு உள்ளீட்ட, மொத்த சராசரி கடன்பாட்டுச் செலவினை உள்ளடக்குகிறது.

அட்டவணை 8.20
திறைசேரி உண்டியல்களின் முதலாந்தரச் சந்தையின் நிறையேற்றப்பட்ட சராசரி முதலாந்தர விளைவு வீதங்கள்

ஓராண்டுக்கான சதவீதம்

ஆண்டு	முதிர்ச்சி			திரண்ட ஆண்டுச் சராசரி
	91-நாட்கள்	182-நாட்கள்	364-நாட்கள்	
2017	9.01	9.80	10.07	9.77
2018	8.40	8.58	9.68	9.36
2019	8.15	8.44	9.40	9.06
2020	5.93	5.72	6.37	6.09
2021	6.35	6.13	5.33	6.24

குறிப்பு: அரச பிணையங்களின் வட்டி மீதான 10 சதவீத நிறுத்திவைத்தல் வரி 2018 ஏப்பிறல் முதலாம் திகதி அமுலாகும் வகையில் நீக்கப்பட்டது.
மூலம்: இலங்கை மத்திய வங்கி

துறையில் 2021இல் ஐ.அ.டொலர் 1,041.3 மில்லியன் தொகை கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் திரட்டப்பட்டதுடன் இது இவ்வாண்டுப்பகுதியில் முதிர்ச்சியடைந்த இலங்கை அபிவிருத்தி முறிகளிலும் பார்க்க சிறிதளவு குறைவானதாகும்.

இவ்வாண்டுப்பகுதியில் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த தேறிய வெளிப்பாய்ச்சல் 2020இன் ஐ.அ.டொலர் 552.7 மில்லியன் கொண்ட வெளிப்பாச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 27.3 மில்லியனாகக் காணப்பட்டன. ரூபா நியதிகளில், அரச பிணையங்களின் வெளிநாட்டு உடமைகள் 2020 இறுதியில் காணப்பட்ட ரூ.6.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.1.8 பில்லியனைப் பதிவுசெய்து, புதிய முதலீடுகளுக்கு கணிசமானளவு வாய்ப்புக்கள் திறக்கப்பட்டுள்ளமையினை எடுத்துக்காட்டின.

பங்குரிமைச் சந்தை

கொழும்பு பங்குச் சந்தை உள்நாட்டு முதலீட்டாளர்களின் தூண்டுதல் காரணமாக 2021ஆம் ஆண்டுப்பகுதியில் விரைந்த வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணும் ஸ்டான்டட் அன்ட புவர் இலங்கை 20 சுட்டெண்ணும் முறையே 80.5 சதவீதம் மற்றும் 60.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. சந்தை மூலதனமயமாக்கல் 2021 இறுதியில் ரூ.5,489.2 பில்லியன்களாக விளங்கி 85.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக சந்தை மூலதகமயமாக்கல் 2020 இறுதியின் 19.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 10 ஆண்டுகளிலேயே மிக உயர்ந்த வீதமான 36.7 சதவீதத்தினைப் பதிவுசெய்தன.

2021இல் நிலவிய தாழ்ந்த வட்டி வீத அமைப்பின் காரணமாக முதலீட்டாளர்கள் முன்னுரிமை பங்குரிமை மூலதனத்தினை நோக்கி பெயர்ந்துவருவதன் காரணமாக உள்நாட்டு முதலீட்டாளர்களின் பிரசன்னம் பங்குரிமைச்

வரைபடம் 8.19
விலைச்சுட்டிகளின் அசைவும் சந்தை மூலதனமாக்கலும



மூலம்: கொழும்பு பங்குச் சந்தை

சந்தையில் முனைப்புடையதாகக் காணப்பட்டது. உள்நாட்டு தனிப்பட்ட முதலீட்டாளர் வசமிருந்த பிணையங்களின் அளவுகள் 2021 இறுதியில் ரூ.30.5 பில்லியன்களுக்கு அதிகரித்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 53.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, உள்நாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் அளவுகள் 17.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், தனிப்பட்ட மற்றும் நிறுவன ரீதியான வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் அளவுகளினதும் ஆண்டுக்காண்டு வளர்ச்சி முறையே 0.3 சதவீதமாகவும் 2.6 சதவீதமாகவும் சிறிதளவாகக் காணப்பட்டது.

உள்நாட்டு முதலீட்டாளர்களின் தீவிரமான பங்கேற்புடனும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் பிணையங்கள் பரிவர்த்தனைக் குழுக்களினால் 2021இல் மேற்கொள்ளப்பட்ட எண்ணிம மயப்படுத்தல் போன்ற உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட சில முன்னெடுப்புக்களின் காரணமாக நாளாந்த மொத்தப் புரள்வும் மூலதனத்திரட்சியும் மேம்பட்டன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 13 புதிய ஆரம்ப பொதுமக்கள் பங்குரிமை

வரைபடம் 8.20
கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் வெளிநாட்டுப் பங்கேற்பு



மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வழங்கல்கள் காணப்பட்டதுடன் இதன் மூலம் ரூ.12.7 பில்லியன் திரட்டப்பட்டது. 2021 இறுதியில் விலை வருவாய் விகிதமும் ஏட்டுப்பெறுமதிக்கான விலையும் 2020 இறுதியில் நிலவிய 11.2 கொண்ட விலை வருவாய் விகிதத்துடனும் 1.1 கொண்ட ஏட்டுப் பெறுமதிக்கான விலையுடனும் ஒப்பிடுகையில் முறையே 13.6 ஆகவும் 1.7 ஆகவும் காணப்பட்டது. இரண்டாந்தரச் சந்தை 2020ஆம் ஆண்டுப்பகுதியில் செய்யப்பட்ட ரூ.1,899 மில்லியன் கொண்ட சராசரி நாளாந்த புரள்வுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.4,888.2 பில்லியன் கொண்ட அசாதாரணமான சராசரி நாளாந்த புரள்வினைப் பதிவுசெய்தது.

சந்தையில் வெளிநாட்டுப் பங்கேற்பு தொடர்ந்தும் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் சொற்பமாகவே காணப்பட்டது. 2020இல் பதிவுசெய்யப்பட்ட 13.4 சதவீதம் கொண்ட பங்களிப்புடன் ஒப்பிடுகையில் 2021இல் வெளிநாட்டு கொள்வனவுகளினூடக உருவாக்கப்பட்ட மொத்தப்புரள்வு 2.9 சதவீதமாக மாத்திரமே காணப்பட்ட வேளையில் சந்தையிலிருந்தான வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்டன. 2021இல் சந்தையின் வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.51.1 பில்லியன் கொண்ட வெளிப்பாச்சலுடன் ஒப்பிடுகையில் ரூ.52.6 பில்லியனைப் பதிவுசெய்தது. இதன்படி, பங்குரிமையின் மொத்தப் பெறுமதியின் சதவீதமாக வெளிநாட்டு உடமைகள் 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 25.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 24.6 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் சந்தை

வர்த்தகப் பத்திரங்கள் சந்தை 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் ஒப்பீட்டு ரீதியில் செயற்பாடு நிறைந்ததாகக் காணப்பட்டது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளின் ஆதரவுடன் வர்த்தகப் பத்திரங்களின் வழங்கல்கள் ஊடாக திரட்டப்பட்ட ரூ.4.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.5.8 பில்லியன் திரட்டப்பட்டிருந்தது. 2021இல் வர்த்தகப் பத்திரங்களின் வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 6.50 இலிருந்து 15.50 சதவீதத்திற்குமிடையிலான வீச்சிலிருந்து 6.00 இலிருந்து 12.00 சதவீதம் வரையிலான வீச்சிற்கு வேறுபட்டது.

2021இல் கூட்டாண்மை தொகுதிக்கடன் சந்தையில் செயலாற்ற மட்டம் 2020 உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் 14 கம்பனிகளினால் வழங்கப்பட்ட கூட்டாண்மைத் தொகுதிக்கடன்களின் 27 ஆரம்ப பங்கு வழங்கலினூடாக 2020இல் திரட்டப்பட்ட ரூ.21.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.84.4 பில்லியன் திரட்டப்பட்டது. நிலையான மற்றும் மிதக்கும் வட்டி வீதங்கள் இரண்டுடனும் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்ட வேளையில் நிலையான வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டின் 9.00 இலிருந்து 13.25 சதவீதம் வரையிலான வீச்சுடன் ஒப்பிடுகையில் 8.00 இலிருந்து 12.00 சதவீதம் வரையிலான வீழ்ச்சில் வேறுபட்டன.

8.5 அபிவிருத்தி நிதி மற்றும் நிதியினைப் பெறுவதற்கான அணுகுவழிகள்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அனைத்து பொருளாதார துறைகளினதும் சுயவேலைவாய்ப்பிலுள்ள தனிப்பட்டவர்கள் உட்பட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட சவால்களை முறியடிப்பதற்காக மத்திய வங்கி பல்வேறுபட்ட கொடுகடன் திட்டங்களினூடாக பங்களித்தது. மத்திய வங்கி பல்வேறுபட்ட மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை இணைத்து, வசதியளித்து, நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்த வேளையில் 2021இல் பரந்த வீச்சிலான கொடுகடன் துணை நிரம்பல் பணிகள் வழங்கப்பட்டன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 14 மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் மற்றும் 6 வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழ், பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினூடாக 80,899 நன்மைபெறுநர்களுக்கு ரூ.27,268 மில்லியன் கொண்ட மொத்தக் கடன்கள் விடுக்கப்பட்டதுடன் இதில் 58 சதவீதத்திற்கு மீள்நிதியிடல் திட்டங்களும் 42 சதவீதத்திற்கு வட்டி உதவுதொகைகளும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களும் வகைகூறின.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் மத்திய வங்கியினால் அதிவிசேட வழிமுறைகள் பல எடுக்கப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் சலுகைகளை வழங்குகின்ற விதத்தில் மத்திய வங்கி ஆண்டு முழுவதும் பல்வேறுபட்ட விசேட கொள்கை வழிமுறைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இதன்படி, மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சலுகை அடிப்படையிலான கொடுகடன் திட்டங்களுக்காக வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத மீள்கொடுப்பனவுக் காலம் 24 மாதங்களிலிருந்து 36 மாதங்கள் வரையும் சலுகைக் காலம் 2021 செத்தெம்பர் 30 வரையும் அதனைத்தொடர்ந்து 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது. மேலும், சுற்றுலாத் துறையின் கடன்களுக்கான சலுகைக் காலம் 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டமையின் மூலம் அத்துறைக்கு அதிவிசேட வழிமுறைகளினூடாக வசதியளிக்கப்பட்டது. மத்திய வங்கி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்கியதன் மூலமும் பல்வேறு கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலமும்

சிறப்புக்குறிப்பு 10

இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்: "சிறந்த வாழ்க்கைக்காக சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்"

அறிமுகம்

நிதியியல் வசதிக்குட்படுத்தல் என்பது தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அணுகுகின்ற பயன்மிக்கதும் தாங்கிக்கொள்ளக்கூடியதுமான நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள் - கொடுக்கல்வாங்கல்கள், கொடுப்பனவுகள், சேமிப்புக்கள், கொடுகடன் மற்றும் காப்புறுதி - பொறுப்புமிக்கதும் நீடித்துநிலைத்திருக்கும் வழியில் வழங்கப்படுவது என பரந்த அடிப்படையில் வரைவிலக்கணம் செய்யப்படுகிறது[1]. நிதியியல் வசதிக்குட்படுத்தல் தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் தமது வருமான மூலங்களையும் வாழ்க்கைத்தரத்தினையும் மேம்படுத்துவதற்காக முறைசார்ந்த நிதியியல் துறையில் பங்கேற்கும் நிதியியல் பணிகளை பயன்படுத்திக்கொள்வதற்கும் காணப்படக்கூடிய தடைகளை அகற்றுவதற்குமாக கடுமையாக முயற்சிப்பதன் காரணமாக அது நிதியியல் வசதிக்குட்படுத்துவது எனவும் அடையாளப்படுத்தப்படுகிறது.

2000ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியிலிருந்து நிதியியல் வசதிக்குட்படுத்தல் கருதுகோள் உலகளாவிய கொள்கை நிகழ்ச்சி நிரலின் மையப்பகுதியாக மாறி இருக்கின்றது. அநேகமான நாடுகள் நிதியியல் வசதிக்குட்படுத்தலை, தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் வறுமையிலிருந்து வெளியேறவும் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்குமாக தாமாகவே தம்மை உயர்த்திக்கொள்வதற்கான சம வாய்ப்புக்களை ஊக்குவிக்கின்றதொரு முயற்சியாக பயன்படுத்துகின்றன. நிதியியல் துறையிலிருந்து புறந்தள்ளப்படுகின்றவர்கள் அவர்களது நிதியினை திட்டமிடுவதற்கும் சிறந்த முறையில் முகாமைப்படுத்திக்கொள்வதற்கும் இயலுமைப்படுத்துவதற்கும் நிதியியல் பணிகளையும் சாதனங்களையும் அணுகுவதனை அதிகரிக்கின்ற வேளையில், சிறந்த வாழ்க்கைத்தரத்திற்கான வாய்ப்புக்களும் திறக்கப்படுகின்றன. நுண்பாக, சிறிய, நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு நிதியினைப் பெறக்கூடியதாக இருப்பது, புதியதும் கூடுதலானதுமான உற்பத்தி வியாபார நடவடிக்கைகளில் முதலீடு செய்வதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் அவர்களை ஊக்குவிக்கின்ற வேளையில், தொழில்வாய்ப்புக்களும் உருவாக்கப்படுகின்றன. நிதியியல் வசதிக்குட்படுத்தல் மாத்திரம் வறுமையிலிருந்து மக்களைத் தூக்கிவிடாது என்கின்றபோதும் இது சிறந்த வாழ்க்கையினைக் கட்டியெழுப்புவதற்கான ஊக்குவிப்பிற்கு உதவும். மேலும், நாடொன்றின் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான வலுவான அத்திவாரத்தினைக் கட்டியெழுப்புவதில் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் முக்கியத்துவம் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன்மூலம் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்திக்கும் வசதியளிக்கப்படுகிறது. இது தொடர்பில், நிதியியல் வசதிக்குட்படுத்தல் கோட்பாட்டினையும் கொள்கைத் தளங்களுக்கான முயற்சிகளையும் தரமுயர்த்துவது நிதியியல் வசதிக்குட்படுத்தலின் மட்டம் மதிப்பிடப்பட்டு, கணியப்படுத்தப்படுவதனையும் பொருளாதாரத்தினதும் தணிப்பட்டவர்களினதும் உண்மையான தேவைப்பாடுகளை மிகக்கவனமாக நுண்ணாய்வு செய்யப்படுவதனையும் தேவைப்படுத்துகிறது.

இத்தகையதொரு பின்னணியில், இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டத்தின் மதிப்பீடு, தேசிய மட்டமொன்றில் இலக்கிடலை நிர்ணயித்தல் மற்றும் மூன்று பரிமாணங்களின்[2] கீழ் நிதியியல் வசதிக்குட்படுத்தல் முன்னெடுப்புக்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் ஆகிய நோக்கங்களுக்காக இலங்கைக் கொள்கை வகுப்போரால் மேற்கொள்ளப்பட்டது.

"அணுகல்" பரிமாணம் நிதியியல் பணிகளின் பாரிய செயல்விளைவுகளின் ஆழத்தினை அதாவது வங்கிக்கிளைகளின் நுழைவு, தன்னியக்கக்கூற்றுப் பொறி அல்லது விற்பனை மையக் கருவிகள் அல்லது செலவு அல்லது தகவல் போன்ற நிதியியல் பணிகளை அணுகுவதற்கு வாடிக்கையாளர்களினால் எதிர்நோக்கப்படும் கேள்விப்பக்கத் தடைகள் என்பனவற்றை பிரதிபலிக்கின்றன. "பயன்பாட்டு" பரிமாணம் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் நிதியியல் சாதனங்கள்/ பணிகளின் காலஇடைவெளி மற்றும் காலப்பகுதி போன்றவற்றை வாடிக்கையாளர் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளகின்றனர் என்பதனை பிரதிபலிக்கிறது. வழங்கப்படுகின்ற சாதனங்கள் மற்றும் பணிகளின் "தரம்" வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான தேர்வுகளின் கிடைப்பனவினையும் அதேபோன்று நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு அம்சங்களையும் நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் விழிப்புணர்வு மற்றும் விளங்கிக்கொள்ளும் தன்மையின் அளவு என்பனவற்றை விபரிக்கிறது.

நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடர்பில் இலங்கை எங்கே நிற்கின்றது?

நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிப்பதற்கான இலங்கையின் நீண்டகால முயற்சி 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஆரம்பமாகிறது. இம்முயற்சிகளின் விளைவாக இலங்கை நிதியியல் வசதிக்குட்படுத்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், உலக வங்கிக் குழுமம் என்பனவற்றின் ஆதரவுடன் 2018இல் இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின்படி, இலங்கையில் கணக்கினைச் சொந்தமாக வைத்திருப்பவர்களின் நிலை 88 சதவீதமாகக் காணப்பட்டது. இது தென்னாசிய சராசரியினைவிட உயர்வானதாகும்[3]. கணக்குடமைகளை சொந்தமாகக் கொண்டிருப்பது தொடர்பில்

1. உலக வங்கி



2. ஜி20, நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிகாட்டிகள்
3. 2017இன் குளோபல் பின்டெக்சின் படி இலங்கையிலுள்ள 73.65 சதவீதமான வயது வந்தோர் நிதியியல் நிறுவனங்களில் கணக்குகளை வைத்திருப்பதுடன் தென்னாசியாவின் பிராந்திய சராசரி 70 சதவீதமாகக் காணப்படுகிறது. (36 சதவீதத்தினைக் கொண்ட இந்தியா நீங்கலாக)

பால் அடிப்படையிலான சமமின்மையோ அல்லது கிராமப் புறங்களில் வதிபவர்கள் உட்பட, குடித்தொகையினரின் அனுகூலம் குறைந்தவர்களிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகளோ அல்லது குறைந்த வருமானம் பெறுபவர்களிடையேயோ காணப்படாமையானது கவனிக்கத்தக்கதொரு விடயமாகும். இலங்கையும் உயர்மட்ட வங்கிக் கிளை நுழைவினை அனுபவிக்கிறது. 2021 திசெம்பரில்[4] உள்ளவாறு வங்கிக் கிளை அடர்த்தி ஒவ்வொரு 100,000 வயது வந்தோருக்கும் 16.4 கிளைகளாகக் காணப்பட்டது. எனினும், இலங்கையர்களிடையே காணப்படும் உயர்ந்த கல்விஅறிவு வீதத்திற்கு (92.9 சதவீதம்[5]) மாறாக நிதியியல் அறிவின் குறைந்தமட்டம் (35 சதவீதம்[6]) அனைத்தையுமுள்ளடக்கிய சாதனங்களுக்கு தடையொன்றாக இது ஆங்காங்கே காணப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

விபரமாக குறிப்பிடும் போது, உயர்மட்ட அணுகுவசதிகள் காணப்பட்ட போதும், கணக்குகளின் பயன்பாடும் செல்லிடத்தொலைபேசிப் பணம், காப்புறுதி ஓய்வுகாலத் திட்டங்கள், முறி மற்றும் பங்குரிமைச் சாதனங்கள் போன்ற ஏனைய நிதியியல் சாதனங்களினதும் பணிகளினது பயன்பாடும் மிதமாகவே காணப்படுகின்றது. மிக முக்கியமான விடயம் யாதெனில் முறைசார்ந்த பணி வழங்குவோரிடமிருந்து பொருத்தமான கொடுகடன் சாதனங்களைப் பெற்றுக்கொள்வது தனிப்பட்டவர்கள் மற்றும் நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு தொடர்ந்தும் தடையாகவே காணப்படுகிறது[7]. இலங்கையில் நகர மற்றும் கைத்தொழில் துறை நுண்பாக, சிறய, நடுத்தர தொழில்முயற்சிகள் முறைசார்ந்த நிதியியல் மூலங்களை சிறந்த முறையில் அணுகக்கூடியதாக இருந்தபோதும் சிறிய அளவு கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகள் நிதியியல் வசதிகளை அணுகுவதற்கு மறுக்கப்படுகின்றன. இதன் விளைவாக பாதிக்கப்படக்கூடிய குழுவினர் முறைசாராத் துறையினரை நாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதன்மூலம் அவர்கள் தகாத நடவடிக்கைகளின் காரணமாக உயர் இடர்நேர்வுகளுக்கு உள்ளாக்கப்படுவதுடன் கூடியளவிற்கு வறுமையினாலும் பாதிக்கப்படுகின்றனர். டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய டிஜிட்டல் நிதியியல் பணிகளில் மேலும் வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வாய்ப்புக்கள் காணப்படுவதனை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீடு - 2018 எடுத்துக்காட்டுகிறது. கிடைக்கத்தக்க நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் பயன்படுத்திக்கொள்ள நிதியியல் தேர்ச்சி மற்றும் இயலாற்றல் போதாமையின் காரணமாக நாடானது சாத்தியமானளவிற்கு உயர்ந்தமட்ட நன்மைகளை நீடித்துநிலைத்திருக்கும் மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கு தவறிவிட்டது. பாதிக்கப்பட்ட குழுவினருக்கு காத்திரமான ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையும் சட்ட ரீதியான பாதுகாப்பும் போதுமானளவில் இல்லாமை இலங்கையில் அவதானிக்கப்பட்ட நிதியியல் உள்ளடக்க வசதிக்குட்படுத்தல் நடைமுறைகளுக்கு பங்களித்த முக்கிய காரணிகளாகவுள்ளன.

இப்பின்னணியில், இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் உருவாக்கம் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முயற்சியாக கருதப்படுவதுடன் இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை எய்துவதற்காக நீண்டகால, அனைத்தையுமுள்ளடக்கிய, ஒருங்கிணைக்கப்பட்ட உபாயத்தினை மேற்கொள்வதற்காக முதற்தடவையாக அனைத்து முக்கிய ஆர்வலர்களையும் ஒன்றுசேர்த்திருக்கிறது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் அபிவிருத்தி அரச நிறுவனங்கள், முறைசார்ந்த நிதியியல் பணிகளை வழங்குவோர் மற்றும் ஏனைய தொழில்சார் சபைகள் உள்ளிட்ட அனைத்து ஆர்வலர்களினதும் ஒத்துழைப்புடன் இலங்கை மத்திய வங்கியினால் வழிநடத்தப்படுகிறது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாத்திற்கு 2020 மார்சில் அமைச்சரவை ஒப்புதலளித்ததுடன் 2021 மார்சில் இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தற்பொழுது 20 இற்கும் மேற்பட்ட நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தொழிற்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுததல் உபாய கொள்கைக் கட்டமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல்

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய கொள்கையின் நோக்கம் யாதெனில், நாட்டின் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதனை நோக்கிப் பயணிப்பதற்காக அனைத்து ஆர்வலர்களுக்கும் நீண்டகால, அனைத்தையுமுள்ளடக்கிய நியமப்படுத்தப்பட்ட மற்றும் நன்கு இணைக்கப்பட்ட அணுகுமுறையினை வழங்குவதேயாகும்.

இலங்கையில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலின் தொலைநோக்கு, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்திலுள்ள ஆர்வலர்களின் ஒத்துழைப்பு மூலமாக அடைந்துகொள்ள விரும்பும் அபிலாசைகளையும் நீண்டகால இலக்குகளையும் பிரதிபலிக்கின்ற உபாயங்களின் முன்னுரிமைகளுக்காக உபாய நெறிப்படுத்தல்களை வழங்குகிறது.

"சிறந்த வாழ்க்கைக்காக சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்"

இலங்கையிலுள்ள அனைத்து தனிப்பட்டவர்களும் தொழில்முயற்சிகளும் - பொருளாதார வளர்ச்சிக்கும் அவர்களது வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கு பயனளிக்கக்கூடிய விதத்திலும் அவர்கள் பயன்படுத்தக்கூடிய உயர்தரத்திலான, பொருத்தமான பாதுகாப்பான மற்றும் வாயப்பளிக்கின்ற நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் பரந்தளவில் அணுகக்கூடிய சிறந்த அறிவினையும் நியாயமானதும் சமத்துவமானதுமான அணுகுவசதிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதேயாகும்.

தொலைநோக்கானது நிதியியல் பணிகளை இலகுவாக "அணுகுதல்" இற்கு அப்பால் முக்கியமான கருதுகோள்களை கூட்டிணைக்கிறது. நிதியியல் வசதிக்குட்படுத்தலானது சிறந்த தகவல்களின் அடிப்படையில் வாடிக்கையாளர்கள் நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்வதற்கும் பயன்படுத்துவதற்குமான இயலுமைப்படுத்தும் சூழலொன்று நிலவுவதனைத் தேவைப்படுத்துகிறது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமானது பொருத்தமான விதத்தில் வடிவமைக்கப்பட்டு, தாங்கக்கூடியதொரு விதத்தில் முறைசார்ந்த நிதியியல் துறையினூடாக வழங்கப்படும் உயர்தரத்திலான நிதியியல் சாதனங்களை அணுகுவதற்கான விரிவுபடுத்தப்பட்ட வசதியை உறுதிப்படுத்துவதன் மீது கவனத்தினை செலுத்துகிறது.

நிதியியல் வசதிக்குட்படுத்தலின் இலங்கை நாட்டிற்கான

4. இலங்கை மத்திய வங்கி
5. பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிரவியல் அறிக்கை - 2021 - இலங்கை மத்திய வங்கி
6. ஸ்டான்டட் அன்ட் புவர் இன் உலகளாவிய நிதியியல் அறிவு விகிதம்
7. இலங்கை நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்

நிதியியல் வசதிக்குட்படுத்தல் என்பது இலங்கையிலுள்ள அனைத்து தனிப்பட்டவர்களும் தொழில்முயற்சிகளும் அவர்களின் தேவைகள் மற்றும் சந்தைத் தெரிவின் அடிப்படையில் உயர்தரத்திலான, பொருத்தமான, பாதுகாப்பான மற்றும் தாங்கிக்கொள்ளக்கூடிய நிதியியல் பணிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கின்ற அத்துடன் அவர்களது பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதற்கும் அவர்களது வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்திக்கொள்வதற்கும் இப்பணிகளை வினைத்திறனுடனும் காத்திரமான விதத்திலும் பயன்படுத்திக்கொள்வதாகும்.



வரைவிலக்கணம் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் தொலைநோக்குடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இது நிதியியல் வசதிக்குட்படுத்தல் என்பது வெறுமனே தனியானதொரு இலக்கல்ல என்பதனையும் அது சமூகத்திற்குச் சாதகமான பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களுக்கு வழிப்படுத்தக்கூடியது என்பதனையும் அங்கீகரிக்கிறது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுதல் உபாயமானது நான்கு முக்கிய கொள்கைத் தூண்களைச் சுற்றி மையப்படுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கொள்கை குறிக்கோள்களின் தொகுப்பொன்றினை வரைவிலக்கணம் செய்கிறது.

I. டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள்

II. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நிதி

III. நுகர்வோர் பாதுகாப்பு, மற்றும்

IV. நிதியியல் அறிவினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புதல்

இம்முக்கிய துறைகளான தரவு, உட்கட்டமைப்பு மற்றும் கொள்கைக் கருவிகள் மற்றும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள ஒழுங்குமுறைப்படுத்தக்கூடிய இயலுமைப்படுத்தல் ஆகிய துறைகளில் முன்னேற்றங்களை எய்துவதற்கு ஆதரவளிப்பதற்கு மைய இயலுமைப்படுத்துநர்களின் தொகுப்பொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கட்டமைப்பு



நிதியியல் வசதிக்குட்படுத்தலின் தற்போதைய நிலையினை மதிப்பிட்டதன் மூலமும் ஒவ்வொரு தூண் தொடர்பான தடைகளையும் வாய்ப்புக்களையும் அடையாளம் கண்டதன் மூலமும் தேவையான கொள்கை முன்னெடுப்புக்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் உயர்மட்டத்திலான நிதியியல் வசதிகளை எய்துவதற்கேற்ப தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைத் திட்டம் வடிவமைக்கப்பட்டது. நடவடிக்கைத் திட்டமானது, நிறுவன ரீதியான மட்டத்தில் பொறுப்புக்களைத் தெளிவாக எடுத்துக்காட்டும் விதத்தில் தொடர்ச்சியானதும் கால அட்டவணையினைக் கொண்டதுமான நடவடிக்கைகளை உள்ளடக்குகிறது.

இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை செயற்படுத்துவது தொடர்பில் நிறுவனங்களின் 04 மட்டங்களைக் கொண்ட ஆளுகைக் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டது. உயர்மட்டத்தில் காணப்படும் தேசிய சபை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தும் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பொதுவான கொள்கை வழிகாட்டலை வழங்குவதுடன் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நாளாந்த நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்வதற்கும் தேசிய சபைக்கு கிரமமாக இற்றைப்படுத்தலை வழங்குவதற்குமான பொறுப்பு முகாமைத்துவக் குழுவிடவும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை, எதிர்பார்க்கப்பட்ட காலகட்டமைப்பிற்குள் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய இலக்குகளை அடைந்துகொள்வதற்காக வேறுபட்ட நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களிடையேயான இணப்பினையும் கண்காணிப்பினையும் உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு கொள்கை தூணின் கீழுமுள்ள செயற்பாட்டுக் குழுக்கள் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தும் உபாய செயலகத்தில் ஆலோசனை மன்றங்களாக நிறுவப்பட்டன.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய ஆளுகை அமைப்பு



கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையின் கீழ் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் தேசிய பொறுபேற்றுக் கட்டமைப்பு, அறவிடத்தக்க குறிகாட்டிகளுக்கு மாற்றப்பட்ட நிதியியல் வசதிக்குட்படுத்தலின் முக்கிய குறிக்கோள்களுடன்கூடிய செய்முறைகளினூடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை மிக வெளிப்படையாக விளக்குகிறது.

அனைத்து துறைகளையும் உள்ளடக்குகின்ற நிதியியல் கல்வியை மேம்படுத்துகின்ற அவசியம், ஒட்டுமொத்த செய்முறையில் முன்னுரிமைக்குரிய நடவடிக்கையொன்றாக எடுத்துக்காட்டப்படுகின்றது. நிதியியல் அறிவு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புகின்ற கொள்கைகள் துறைகளின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படுகின்றமை தொடர்பான ஆர்வலர்கள் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக ஒத்துழைக்கின்றனர். எதிர்கால தலைமுறையினரிடையே

நிதியியல் வசதிக்குட்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கான சரியான நேரத்திலமைந்த காத்திரமான கொள்கைக் கருவியொன்றாக கல்வி அமைச்சு தரம் 6 இலிருந்து 11 வரை கட்டாய மூலமொன்றாக பாடசாலைப் பாடவிதானத்தில் நிதியியல் கல்வியை புகுத்தும் பொருட்டு தொடர்பான ஆர்வலர்களுடன் சேர்ந்து பல வழிமுறைகளை மேற்கொண்டிருக்கிறது.

வயதுவந்தவர்களின் நிதியியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை தரப்படுத்தும்பொருட்டு, நிதியியல் கல்வி அறிவு மீதான கல்வி மாதிரிகளும் டிஜிட்டல் கல்வி அறிவும் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் பயிற்சியாளர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், நாட்டின் நிதியியல் அறிவு மட்டத்தினை மதிப்பிடும் பொருட்டு 2021இல் நாடளாவிய ரீதியில் நிதியியல் அறிவு அளவீடு நடத்தப்பட்டது. அளவீடு மூலமாக திரட்டப்பட்ட தரவுகள் இலங்கையர்களிடையேயான நிதியியல் அறிவின் மட்டத்தினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும். அளவீடானது நிதியியல் அறிவு, நிதியியல் நடத்தை மற்றும் நிதியியல் மனோபாவம் ஆகிய மூன்று முக்கிய கூறுகளின்கீழ் பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நியம நிதியியல் அறிவு புள்ளியிடும்முறைக்கிணங்க வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

தனியொரு திசையினை நோக்கி நகர்கின்ற முக்கியத்துவத்தினை பரிசீலனையில் கொண்டு, நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களையும் நுண்பாக, சிறிய, நடுத்தரளவு தொழில்முயற்சி ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துகின்ற அனைத்து ஆர்வலர் நிறுவனங்களுக்குமிடையேயான இணைப்புக்களை மேம்படுத்தவதற்காக இணைப்பு பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. இதற்குமப்பால், முன்மொழியப்பட்டுள்ள நிதியியல் அறிவு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புகின்ற வழிகாட்டலானது, நிதியியல் கல்வி மற்றும் நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சி ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களின் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக உபாய நெறிப்படுத்தல்களையும் கோட்பாடுகளையும் ஏற்படுத்தும்.

இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் இலக்குகளை எய்துவதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் எவ்வாறு ஆதரவளிக்கும்

உபாயமானது ஒட்டுமொத்த தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டத்தினை மேம்படுத்துவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நிறைவுசெய்வதன் மூலம் வருமானம், புவியியல்சார் அமைவிடம், வயது, பால் போன்ற சமூக மற்றும் குடித்தொகையியல் மனோபாவங்களுடன் இணைந்த நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டங்களில் காணப்பட்ட சமமற்ற தன்மைகளை குறைத்துவிடுவதனையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

வசதிகளற்ற மற்றும் பின்தங்கிய பிரிவினர் அவர்களது நிதியியலின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவதற்கு உதவும் நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் அணுகும் தன்மையினை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதியினை அணுகும் தன்மை அதிகரித்தமையின் காரணமாக, நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் வளர்ச்சியுற்று, வருமான உருவாக்கம், கூடியளவு முறைசார்ந்த தொழில் உருவாக்க வாய்ப்புக்கள் தொடர்பில் கூடியளவிற்கு உற்பத்தியாக்கம் மிக்கதாகமாறும்.

இதற்குச் சமாந்தரமாக, நன்கு வடிவமைக்கப்பட்ட, இணைக்கப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் அறிவு முன்னெடுப்புக்கள் சரியான நிதியியல் அறிவு, தேர்ச்சி மற்றும் நிதியியல் வாடிக்கையாளர்களின் நடத்தை என்பனவற்றை விரிவுபடுத்தி, எதிர்கால இலங்கையர்கள் அவர்களது அடிப்படை நிதியியல் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான இயலாற்றலையும் உறுதிப்படுத்தும். கூடியளவிற்கு நிதியியல் ஆற்றலைக் கொண்ட வலுவூட்டப்பட்ட வாடிக்கையாளர்கள் இறுதியில் திறந்த சந்தை நடவடிக்கைகளை ஊக்குவித்து நிதியியல் பணிகளை மேம்படுத்துவதன் மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான நோ்மை மிக்க சுழற்சியொன்றினைத் தோற்றுவிக்கிறது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினூடாக, நிதியியல் பணி வழங்குவோரின் அனைத்து வகையினரினதும் சந்தை நடத்தைகளை பலப்படுத்துவதற்குப் பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் சுழலொன்றினைக் கொண்டிருப்பதன் மூலம் நுகர்வோர் பாதுகாப்பு, மீள வலுப்படுத்தப்படும். வாடிக்கையாளரின் நலனோம்புகைகளுக்காக சிறந்த நடவடிக்கை முறைகள் நிறுவப்படவுள்ள வேளையில், வாடிக்கையாளரின் நம்பிக்கை அதிகரிக்கின்றமையானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் பரந்த குறிக்கோள்களுக்கும் வசதியளிக்கின்றது.

மறுபுறத்தில், டிஜிட்டல் நிதி சூழலியல் முறைமையில் காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கூடியளவிற்கு தூண்டுதலளிக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் சுழல் மற்றும் தேவையான டிஜிட்டல் உட்கட்டமைப்பினால் வசதியளிக்கப்பட்டமையின் மூலம் குறைந்த வருமானம் பெறும் தனிப்பட்டவர்களுக்கும் சமூகத்தின் சிறிய தொழில்முயற்சிகளுக்கும் கணிசமான செலவுக் குறைப்பிற்கும் நிதியியல் பணிகளின் ஆற்றல்வாய்ந்த விநியோகத்திற்கும் வசதியளிப்பதன் காரணமாக நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு ஒரு வரமாகக் காணப்படும் என்பதுடன் சந்தைத் தொழிற்பாட்டாளர்கள் கூடியளவு புத்தாக்க நிதியியல் பணிகள் வழங்குவதனையும் இயலுமைப்படுத்தும்.

உசாத்துணை:

1. World Bank, Financial Inclusion, Overview: https://www.worldbank.org/en/topic/financialinclusion/overview#1
2. How to Measure Financial Inclusion, World Bank (2015): https://www.worldbank.org/en/topic/financialinclusion/brief/how-to-measure-financialinclusion
3. The Global Findex Database, World Bank Group (2017): https://openknowledge.worldbank.org/handle/10986/29510
4. Central Bank of Sri Lanka (2021)
5. Economics and Statistics Report, Central Bank of Sri Lanka (2021): https://www.cbsl.gov.lk/en/publications/other-publications/statistical-publications/economic-and-social-statistics-of-sri-lanka/ess-2021
6. The Standard and Poor's Global Financial Inclusion Survey (2014 – 2015): https://gflec.org/wp-content/uploads/2016/02/Gallup-country-list-with-score.pdf
7 National Financial Inclusion Strategy for Sri Lanka (2021-2024): https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/NFIS %20 Summary %2 English_2.pdf

தொடர்ந்தும் ஆதரவளித்தது. சந்தைத் தூண்டல் பெறுமதிச் சங்கிலி நிதியிடலை நாட்டிற்குள் நிறுவும் நோக்குடன் இலங்கையில் வேளாண்மைத் துறைக்காக அனைத்தையுமுள்ளடக்கிய பெறுமதிச் சங்கிலி நிகழ்ச்சித்திட்டமொன்றினை அபிவிருத்தி செய்வதற்கு இடைவெளிகளையும் வாய்ப்புக்களையும் அடையாளம் காண்பதற்கான முன்னோடிச் செயற்றிட்டமாக உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கும் இலங்கையிலுள்ள இறால் பண்ணைகளை செறிவுபடுத்துவதற்காகவும் கொடுகடன் உத்தரவாதங்களை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்துவதற்காகவும் வட்டி உதவுதொகைத் திட்டங்களுக்காகவும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. பாற்பண்ணைத் தொழிலை உயர்த்துவதற்காகவும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் 2021இல் கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கைக்கான தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமொன்றினை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவது அண்மைய கடந்தகாலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கு நாட்டின் கவனம் செலுத்தப்படவேண்டிய முக்கிய துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மத்திய வங்கி இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை 2021 மார்ச்சில் வெற்றிகரமாக ஆரம்பித்ததுடன், நாடு முழுவதும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அடையாளம் காணவும், மேம்படுத்தவும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினைத் தொழிற்படுத்தும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் அனைத்து கொள்கை தூண்களிடையேயான முன்னுரிமை நடவடிக்கையொன்றாக நிதியியல் கல்வியை மேம்படுத்துவதற்கான தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்தில் நாடளாவிய நிதியியல் அறிவு அளவீடொன்று 2021இல் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்ட வேளையில் தரம் 6 இலிருந்து தரம் 11 வரையான மாணவர்களுக்கு நிதியியல் கல்வியை பாடசாலைப் பாடவிதானத்திற்குள் கட்டாயப்பாடமொன்றாக இணைத்துக்கொள்வதற்காக மாதிரிகளும் கல்வியியல் மூலப் பொருட்களும் மத்திய வங்கியினதும் ஏனைய தொடர்பான ஆர்வலர்களினதும் ஒத்துழைப்புடன் கல்வி அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட முக்கிய துறைகளிலொன்றான நிதியியல் அறிவினை நாட்டு மக்களிடையே உயர்த்துவதற்கான முக்கிய வகிபாகம் மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஆற்றப்படவேண்டியிருக்கிறது. நாடு முழுவதும் நிதியியல் அறிவினை உயர்த்தும் குறிக்கோளுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மத்திய வங்கியின் 6 பிரதேச அலுவலகங்களின் ஆதரவுடன் இவ்வாண்டுப்பகுதியில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் முன்னெடுத்தது. இதற்கமைய, 08 பயிற்றுவிப்பாளர் பயிற்சி கலந்துரையாடல், 17 வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிநிரல்கள், 07 அறிவினைப்பகிர்ந்து கொள்கின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 330 இற்கு மேற்பட்ட நிதியியல் அறிவு, தொழில்முயற்சியாண்மை மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2021இல் நடத்தப்பட்டன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பரவலாகக் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளுடன் இணைந்து காணப்பட்ட தடைகளுக்கு மத்தியிலும் புதிதாக உருவாக்கப்பட்ட இணையவழிசார்ந்த பயிற்சியளித்தல் மற்றும் விழிப்புணர்வுச் சாதனங்களைப் பயன்படுத்தி இணையவழி நிகழ்ச்சித்திட்டங்களாக பல நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள்

2021இல் காணப்பட்ட கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பான சவால்கள் பலவற்றிற்கு மத்தியிலும் மத்திய வங்கி நாட்டின் தடங்கலற்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிகளை உறுதிப்படுத்தியதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் வசதியளித்தது. வினைத்திறன் மிக்கதும் பாதுகாப்பானதுமான

அட்டவணை 8.21
கொடுப்பனவு முறைமைகளின் ஊடான கொடுக்கல்வாங்கல்கள்

கொடுப்பனவு முறைமை	2020 (அ)		2021 (ஆ)	
	தொகை ('000)	பெறுமதி (ரூ.பில்.)	தொகை ('000)	பெறுமதி (ரூ.பில்.)
பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்				
அதேநேர மொத்த கொடுப்பனவு முறைமை	397	150,051	450	294,602
சில்லறை பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்				
பிரதான காசோலை தீர்ப்பனவு முறைமை	33,631	7,491	33,021	8,311
இலங்கை வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவு முறைமை	36,830	2,257	41,868	2,862
கொடுகடன் அட்டைகள்	44,692	222	50,689	283
படுகடன் அட்டைகள்	75,094	210	108,040	316
இணைய வங்கித்தொழில்	57,861	4,442	135,387	6,470
தொலைபேசி வங்கித்தொழில்	26,701	485	27,897	538
தபால் சாதனங்கள்	646	5	596	5
மொத்தம்	275,852	165,163	397,948	313,387
ஐ.அமெ.டொலர் காசோலை தீர்ப்பனவு முறைமை	32	48	28	51

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறப்புக்குறிப்பு 11

நிதியியல் தொழில்நுட்பத்தின் எழுச்சி: வங்கித்தொழில் மேற்பார்வைகளுக்கான முன்னோக்கிய பயணம்

அறிமுகம்

வங்கித்தொழிலானது கணினிமயப்படுத்தப்பட்ட வங்கித்தொழில் முறைமையிலிருந்து தன்னியக்க கூற்று பொறிகளுக்கும் இணையவழி வங்கித்தொழில் முறைமைகளுக்கும் பல தசாப்தங்களாக தொழில்நுட்பத்துடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. தொழில்நுட்பத்தின் பயன்பாடு தொடர்ச்சியாக செயற்திறனை அதிகரித்து, இடைநிலைச் செலவுகளைக் குறைத்து இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கு வங்கிகளை இயலச்செய்தது. இலாபத்தன்மையை அதிகரிக்கும் நோக்குடன் வங்கிகளால் பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பத்தின் இத்தீவிர பயன்பாடு நவீன நிதியியல் தொழில்நுட்பத் தொழிற்துறைக்கு மேம்பாட்டினை வழங்கி, புதிய வியாபார வழிமுறையொன்றாக தொழில்நுட்ப முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

பின்டெக் அல்லது நிதியியல் தொழில்நுட்பம் என பொதுவாக அறியப்படுகின்ற இத்தொழில்நுட்பம் கடந்த தசாப்தக் காலப்பகுதியில் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் தற்காலத்தில் மரபுரீதியான வங்கித்தொழில் வியாபார மாதிரிகளிலும் மரபுரீதியான வங்கித்தொழில் மேற்பார்வை முறையியல்களிலும் சவால்களைத் தோற்றுவிக்கின்றது.

அதிகரித்த செயற்திறன்களுக்கு மேலதிகமாக, நிதியியல் தொழில்நுட்பத்தினால் இயலச்செய்யப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் பணிகள் மரபுசாரா வழிமுறைகளினூடாக மரபுசார் நிதியியல்ச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது வங்கிகளை அணுக இயலாத வங்கிச் சேவையை முழுமையாக பெற்றுக்கொள்ள இயலாத மற்றும் பகுதியளவில் வங்கிச்சேவையைப் பெற்றுக்கொள்கின்ற சனத்தொகைக்கான வாய்ப்புக்களையும் நிதியியல் தொழில்நுட்பம் வழங்குகின்றது. இதற்கு நிதியியல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட வங்கித்தொழில் பணிகளை வழங்குகின்ற முதன்மை ஊடகமான திறன் கையடக்கத் தொலைபேசிகளின் பயன்பாடும் வசதிகுறைந்த சனத்தொகையினர் மத்தியிலும் செல்லிடத் தொலைபேசியின் ஊடுருவல் சார்பளவில் உயர்வாகக் காணப்படுகின்றமையும் காரணமாகும். ஆகவே, நிதியியல் தொழில்நுட்பமானது வங்கித்தொழில் வியாபாரங்களில் உயர்வான போட்டித்தன்மைக்கும், அதிகரித்த செயற்திறனிற்கும், அத்துடன் குறைந்த இடையீட்டு கிரயங்களுக்குமான வாய்ப்பினை வழங்குகின்றது என்பதற்குச் சான்றாகும். எவ்வாறாயினும், மரபுசார் வங்கிகளின் பகுதியொன்றான தன்னிறைவு வங்கித்தொழில் வாடிக்கையாளர்களின் வினைத்திறனை துரிதப்படுத்துகின்றமையின் விளைவாக வளர்ந்துவரும் நிதியியல் தொழில்நுட்பத்தினால் தூண்டப்படுகின்ற நிறுவனங்கள் தமது வியாபாரத்தைத் துரிதமாக இழப்பதாக பார்க்கின்றன.

நிதியியல் தொழில்நுட்பத்தின் துரிதமான தோற்றமானது தொழில்நுட்பம், தரவு ஆளுகை, மற்றும் சந்தை நடத்தை என்பவற்றுடன் தொடர்புடைய சாத்தியமான புதிய இடர்நேர்வுகளுக்கு வழிவகுத்திருக்கின்றது. இது, வங்கித்தொழில் துறையினால் நிதியியல் தொழில்நுட்பத்தின் பின்பற்றலுக்கு ஆதரவளிக்கின்ற மேற்பார்வை அணுகுமுறைக்கான தேவைப்பாட்டினை தோற்றுவிக்கின்றது. அத்தகைய அணுகுமுறையானது புத்தாக்கத்தையும் போட்டித்தன்மையையும் அதிகரிக்கின்ற அதேவேளையில், பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான இடர்நேர்வுகளை வலியுறுத்துவதற்கும் தேவைப்படுத்தப்படுகின்றன.

மரபுசார் வங்கித்தொழிலில் செல்வாக்கு செலுத்தவுள்ள நிதியியல் தொழில்நுட்பத்தின் புத்தாக்கங்கள்

பல நிதியியல் தொழில்நுட்ப புத்தாக்கங்கள் காணப்பட்டபோதிலும், சில புத்தாக்கங்கள் மரபுசார் வங்கித்தொழில் முறைகளில் குறிப்பிடத்தக்களவான தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளன. திறந்த வங்கித்தொழில், மெய்நிகர் வங்கித்தொழில், மற்றும் இலத்திரனியல் நாணயங்கள் என்பன மரபுசார் வங்கித்தொழில் மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறையில் குறிப்பிடத் தக்களவிலான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியப்பாட்டினைக் கொண்டிருக்கின்ற அத்தகைய நிதியியல் தொழில்நுட்பத்தின் மூன்று புத்தாக்கங்களாகும். இவை கீழே விபரமாக விபரிக்கப்படுகின்றன:

மெய்நிகர் வங்கித்தொழில்

வங்கியொன்று பௌதீக ரீதியான தலையீட்டின் தேவைப்பாடின்றி முற்றுமுழுதாக இலத்திரனியல் வழிகளினூடாக வாடிக்கையாளர்களுக்கு அதன் சேவைகளை வழங்குமாயின் அவ்வங்கி மெய்நிகர் வங்கி எனக் கருதப்படுகின்றது. இது பௌதீக இட அமைவினையும் அலுவலர்களுக்கான தேவைப்பாட்டினையும் மட்டுப்படுத்துவதன் காரணமாக கணிசமானளவான கிரய சேமிப்புக்களுக்கு வழிவகுக்கின்றது. இத்தகைய கவர்ச்சிகரமான கிரய சேமிப்பின் காரணமாக தற்போது தொழிற்பாட்டிலிருக்கின்ற மற்றும் புதிய வங்கிகள் மெய்நிகர் வங்கித்தொழிலை நோக்கித் தூண்டப்படுகின்றனர். மெய்நிகர் வங்கி வாடிக்கையாளர்கள் வங்கிக் கிளைக்குச் சமூகமளிக்காது செல்லிடச் செயலி அல்லது இணையவழி வங்கித்தொழில் ஊடாக நிதிகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வைப்புக்களை மேற்கொள்வதற்கு கணக்கினைத் திறப்பதனூடாக அனைத்து வங்கித்தொழில் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இயலும். பெரும்பாலும் மாற்றமின்றி காணப்படுகின்ற மெய்நிகர் வங்கித்தொழிலின் ஊடாக வழங்கப்படுகின்ற வங்கித்தொழில் சேவைகளுக்கான தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் செயன்முறைத் தொழிற்பாடுகளின் காரணமாக, ஏனைய நிதியியல் தொழில்நுட்ப வியாபாரங்களினால் வழங்கப்படுகின்ற தோற்றம்பெறும் நிதியியல் தொழில்நுட்பத்தினால் செயற்படுத்தப்படுகின்ற வங்கிகள் மற்றும் பணிகளின் சலாவ்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு மரபுரீதியான வங்கிகளுக்கு மிகவும் வசதியான வழிமுறைகளிலொன்றாகவும் மெய்நிகர் வங்கித்தொழில் அமையவுள்ளது.

திறந்த வங்கித்தொழில்

திறந்த வங்கித்தொழிலானது பிரயோக செயல்நிரலாக்க இடைமுகங்களைப் பயன்படுத்தி வங்கியில் வாடிக்கையாளர் தரவுகளை அணுகுவதற்கு அனுமதிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர்களை அனுமதிக்கின்றது. இது, வேறுப்பட்ட நிதியியல் நிறுவனங்களிலிருந்து வங்கித்தொழில் தரவுகளை அணுகுவதற்கும் பலதரப்பட்ட வங்கிகளைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களை இலகுவாக மேற்கொள்வதற்கும் அனுமதிக்கின்ற செல்லிடப் பிரயோகங்கள் போன்ற பல்வேறு தீர்வுகளை பாவனையாளர்களுக்கு

முன்வைப்பதற்கு மூன்றாந்தரப்பு நிதியியல் தொழில்நுட்ப வழங்குநர்களுக்கு இயலுமைப்படுத்துகின்றது. திறந்த வங்கித்தொழிலுக்கு இயலுமைப்படுத்தப்பட்டுள்ள வங்கியொன்று மரபுரீதியான நிறுவனமொன்றிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்தை தோற்றுவிக்கலாம். வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய மரபுரீதியான வங்கியால் ஆரம்பத்தில் வழங்க இயலாதுபோன மரபுரீதியாகவும் துல்லியமாகவும் வடிவமைக்கப்பட்ட நிதியியல் பணிகளின் அநுகூலங்களைப் பெற்றுத்தருவதற்கு வாய்பினை வழங்குகின்ற திறந்த வங்கித்தொழிலானது வாடிக்கையாளர்கள் தமது தரவுகளை கட்டுப்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது. அதற்கிணங்க, தனிப்பட்ட வாடிக்கையாளர்களும் வியாபாரங்களும் திறந்த வங்கித்தொழிலுடன் தமது நிதிகளை அதிக செயற்திறனுடன் முகாமைச்செய்வதற்கு இயலுமாகயிருக்கும். அதிலும் குறிப்பாக, திறந்த வங்கித்தொழிலானது வங்கிகளினால் எவ்வாறு நிதியியல் பணிகள் வழங்கப்படுகின்றன என்பதை வெளிப்படுத்தி மறுசீரமைப்பதற்கு அனுமதித்து நிதியியல் தொழில்நுட்பத் தொழிற்துறையில் புத்தாக்கங்களுக்கு வசதியளிக்கின்றது.

ஒன்றுக்கொன்று ஒப்பான கடன்வழங்கல் தளம்

ஒன்றுக்கொன்று ஒப்பான கடன்வழங்கலானது தோற்றம்பெற்றுவரும் நிதியியல் தொழில்நுட்ப வியாபாரங்கள் பெரும்பாலும் மாபுரீதியான வங்கித்தொழில் மாதிரியின் மீது உயர்ந்தளவிலான நேரடிப் பாதிப்பினைக் கொண்டுள்ளன. ஒன்றுக்கொன்று ஒப்பான கடன்வழங்கல் தளங்கள் கடன்வழங்குநர்கள் மற்றும் கடன்பெறுநர்களை நேரடியாகத் தொடர்புப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளதுடன் இதனால் நிதியியல் இடையீட்டுக் கிரயம் சடுதியாக குறைக்கப்படுகின்றது. ஒன்றுக்கொன்று ஒப்பான கடன்வழங்கல் தளங்கள் வங்கிக் கடன்வழங்கல் அணுகல் வசதியினைக் கொண்டிராத, வங்கிச்சேவைகளைப் பெறாத அத்துடன் குறைவான வங்கிச் சேவைகளைப் பெறுகின்ற வாடிக்கையாளர்களுக்கான மாற்று நிதியிடல் மூலமொன்றாக ஆரம்பத்தில் தோற்றம்பெற்றது. எவ்வாறாயினும், ஒன்றுக்கொன்று ஒப்பான கடன்வழங்கலானது அதன் கிரய செயற்திறனின் காரணமாக மரபுரீதியான வங்கிகளின் வழக்கமான வாடிக்கையாளர்களையும் தற்போது கவர்கின்றது. மூலதன போதுமாந்தன்மை அல்லது திரவத்தன்மை தேவைப்பாடு அத்துடன் ஒன்றுக்கொன்று ஒப்பான கடன்வழங்கல் நடவடிக்கைகளுக்கான வைப்புக் காப்புறுதி போன்ற பாதுகாப்பு வலை வழிமுறைகள் போன்றவற்றுக்கான சாத்தியமான வழிமுறைகள் இல்லாமையைக் கருத்திற்கொண்டு, ஒன்றுக்கொன்று ஒப்பான கடன்வழங்கல் தளங்களுக்கு வங்கித்தொழில் வாடிக்கைளயாளர்களின் நடுத்தரகால பெயர்வும் வங்கித்தொழில் மேற்பார்வைகளுக்கான நிதியியல் உறதிப்பாட்டு கரிசனைகளாக அமையவுள்ளன.

இலத்திரனியல் நாணயங்கள்

இலத்திரனியல் நாணயங்களின் தோற்றம் அநேகமாக மரபுரீதியான நாணய மற்றும் வங்கித்தொழில் முறைமைகளினால் முகங்கொடுக்கப்படுகின்ற பாரியளவான நிதியியல் தொழில்நுட்பத் தூண்டுதல் சவாலாகும். பொதுமக்களால் மேற்கொள்ளப்படுகின்ற வங்கித்தொழில் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பெரும்பாலும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளமையின் காரணமாக மறைகுறி நாணங்கள் அத்துடன் மத்திய வங்கியின் இலத்திரனியல் நாணயங்கள் போன்ற இவ்விரு வகையான இலத்திரனியல் நாணயங்களும் இன்றியமையாதவையாக மாற்றமடைந்துள்ளன. மறைகுறி நாணயங்களானது குறியாக்கவியலினால் பாதுகாக்கப்பட்டு பாரிய பரவலாக்கப்பட்ட கணினி வலையமைப்புக்களைப் பயன்படுத்துகின்ற பகிரப்பட்ட பேரேடுகளான தொடரேட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொழிற்படுகின்ற இலத்திரனியல் சொத்தொன்றாகும். மறைகுறி நாணயங்கள் மத்திய வங்கி போன்ற எந்தவொரு மத்திய அதிகார சபையினாலும் வெளியிடப்படுவதில்லை. இது, மறைகுறி நாணயங்கள் அரசாங்க தலையீடுகளினால் பாதிக்கப்படுவதை குறைப்பதன் மூலம் மத்திய வங்கியின் நாணயக் கொள்கையின் வினைத்திறனில் சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மாறாக, மத்திய வங்கியின் இலத்திரனியல் நாணயங்கள் நாட்டினுடைய நாணய அதிகார சபையினால் வெளியிடப்படுமென்பதுடன் நாட்டினுடைய உத்தியோகபூர்வ நாணயத்தின் இலத்திரனியல் சான்றாகவும் தொழிற்படவுள்ளது. நாட்டினுடைய நாணய அதிகார சபையினால் மத்திய வங்கியின் இலத்திரனியல் நாணயங்கள் வெளியிடப்படுவதன் காரணமாக அவை அரசாங்கத்தினால் முழுமையாக ஆதரவளிக்கப்பட்டு நாணய அதிகார சபை வழங்கலின் முழுமையான கொள்கை நிதியியல் தொழில்நுட்பத்தைக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படவுள்ளது.

நிதியியல் தொழில்நுட்பத்தை நோக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அணுமுறை என்னவாக இருத்தல் வேண்டும்?

வங்கிகளின் பின்பற்றுகைக்கு நிதியியல் தொழில்நுட்பத்தை வசதிப்படுத்துகின்ற போது திறந்த மற்றும் எச்சரிக்கையான ஒழுங்குமுறைப்படுத்தல் அணுமுறையைப் பின்பற்றுவதற்கான தேவைப்பாடு

நிதியியல் தொழில்நுட்பத்தின் துரிதமான வளர்ச்சியானது புதிய இடர்நேர்வுகளை உள்வாங்குவதற்கு மேற்பார்வை மட்டுப்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான தேவைப்பாடு தற்போதுள்ள ஒழுங்குவிதிகள் இலத்திரனியல் நிதியியல் பணிகளின் புதிய வகைகளுக்கு போதுமானதாகவுள்ளனவர் அத்துடன் நிதியியல் தொழில்நுட்ப வியாபாரங்களுக்கு நிதியியல் தொழில்நுட்பத்தின் புத்தாக்கங்கள் மற்றும் வெளிப்படுத்துகைகளின் காரணமாக வங்கிகளினால் முகங்கொடுக்கப்படுகின்ற இடர்நேர்வுகளை எவ்வாறு அடையாளப்படுத்தி கண்காணித்து தணிப்பது போன்ற கேள்விகளை வங்கித்தொழில் மேற்பார்வைகளை நோக்கி எழுப்புகின்றது.

மேலும், நிதியில் தொழில்நுட்பத்தினால் செயற்படுத்தப்படுகின்ற பொருட்களும் சேவைகளும் பல்வேறு தகவல் முறைமைகளிலும் இணையத்துடன் இணைக்கப்பட்ட தரவுகளிலும் சார்ந்துள்ளன. ஆகவே, நிதியியல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு மற்றும் தரவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் என்பன நன்கு விளங்கிக்கொள்ளப்பட்டு முன்மதியுடன் முகாமைப்படுத்தப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், மிகையான ஒழுங்குவிதிகளும் மேற்பார்வைகளும் புத்தாக்கங்களை மட்டுப்படுத்தி வங்கிகளை போட்டித்தன்மை தொடர்பில் பிரதிகூலமான இடத்தில் நிலைநிறுத்துகின்ற

அதேவேளையில், பாவனையாளர்களை ஊக்கமிழக்கவும் செய்கின்றது. ஆகவே, வங்கித்தொழில் மேற்பார்வையாளர்கள் இடர்நேர்வுகளையும் நன்மைகளையும் அவதானமாக மதிப்பீடுசெய்வதுடன் தேவையான புத்தாக்கங்களுக்கு இடையூறாக இருப்பதனையும் தவிர்த்தல் வேண்டும்.

நிதியியல் தொழில்நுட்பத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளின் மேற்பார்வையின் போது வங்கித்தொழில் மேற்பார்வைகளினால் கைக்கொள்ளப்படுகின்ற இரண்டு தீவிர மேற்பார்வை அணுகுமுறைகள் காணப்படுகின்றன. முதலாவது இயல்பான போக்கு அணுகுமுறையாகும். இங்கு, வங்கித்தொழில் முறைமைத் தோற்றத்திற்கான தீவிர இடர்நேர்வுகளின் எல்லைப்புள்ளிவரை மேற்பார்வையின் தலையீடின்றி புத்தாக்கங்கள் அனுமதிக்கப்படுகின்றது. இரண்டாவது தீவிர அணுகுமுறையானது புத்தாக்கங்களை மட்டுப்படுத்துகின்ற ஒழுங்குவிதிகளின் அமுல்ப்படுத்தலின் மூலமாக மேற்பார்வைகளினால் விரும்பத்தக்க பொருட்களுக்கும் சேவைகளுக்கும் மாத்திரம் புத்தாக்கங்களை மட்டுப்படுத்துகின்றது.

மேற்பார்வைத் தொழில்நுட்பத்துடன் பயணிப்பதற்கான மேற்பார்வையாளர்களின் தேவைப்பாடு

பாவனையாளர்களினதும் வங்கிகளினதும் நன்மைக்காக நிதியியல் தொழில்நுட்பத்தின் நன்மைகளைப் பயன்படுத்துகின்ற அதேவேளையில், வங்கித்தொழில் முறைமையின் உறுதித்பாட்டைப் பேணுதல் வங்கித்தொழில் மேற்பார்வைகளின் பொறுப்பாகும். மரபுரீதியான வங்கித்தொழில் வழிமுறைகளினால் தோற்றுவிக்கப்படுகின்ற இடர்நேர்வுகளை வெளிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கின்ற தற்போதுள்ள மேற்பார்வைக் கொள்கைகள், நுட்பங்கள், மற்றும் மூலவளங்கள் என்பன நிதியியல் தொழில்நுட்பத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இடர்நேர்வுகளை எடுத்துரைப்பதற்கு பற்றாக்குறையாக அமையமுடியும். மேலும், வங்கித்தொழில் மேற்பார்வையின் வளங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்படுகின்றன. ஆகவே, செயற்திறனான மேற்பார்வைக்கு இயலச்செய்கின்ற மேற்பார்வை நடைமுறைகளின் பின்பற்றுகையானது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் பயன்பாடு மற்றும் நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வு அத்துடன் உறுதித்தன்மை மீதான அவதானத்துடன் இன்றியமையாததாக மாறியுள்ளது. இக் காரணிகள் மேற்பார்வை தொழில்நுட்பமாக அல்லது சுப்டெக் என பெரும்பாலும் அறியப்படுகின்ற புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட மேற்பார்வை அணுகுமுறைகளின் வங்கி மேற்பார்வை அபிவிருத்திக்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் வேண்டப்பட்டிருக்கின்றன. வங்கித்தொழில் மேற்பார்வைகளின் மேற்பார்வை தொழில்நுட்பத்தின் பின்பற்றலானது வங்கிகள் எவ்வாறு மேற்பார்வைச் செய்யப்படுகின்றன என்பது தொடர்பில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தவிருக்கின்றது.

இந்தக் காரணிகள், தொழில்நுட்ப மேற்பார்வை எனப் பரவலாகக் குறிப்பிடப்படும் புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை அணுகுமுறைகளை மேற்பார்வையாளர்கள் உருவாக்கி நடைமுறைக்கிடவேண்டும் எனத் தேவைப்படுத்துகிறது. வங்கி மேற்பார்வையாளர்கள் தொழில்நுட்ப மேற்பார்வையைக் கைக்கொள்வது வங்கி மேற்பார்வையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

வங்கித்தொழில் மேற்பார்வைகளுக்கான மேற்பார்வைத் தொழில்நுட்ப இயலளவுகளின் முக்கியத்துவம்

அதிநவீன மேற்பார்வை தகவல் முறைமைகள், உயர்தர தரவுப் பகுப்பாய்வு இயலளவுகள், மற்றும் பொருத்தமான கட்டமைக்கப்படாத தரவு மூலங்களிலிருந்து அறிவாற்றலைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு என்பன எந்தவொரு நவீன வங்கித்தொழில் மேற்பார்வைக்கும் தேவைப்படுகின்ற முக்கிய சில மேற்பார்வைத் தொழில்நுட்ப இயலளவுகளாகும்.

இவை கீழ்வருமாறு விபரிக்கப்படுகின்றன:

மேற்பார்வைத் தகவல் முறைமை

மேற்பார்வை தகவல் முறைமையானது வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினால் அறிக்கையிடப்படுகின்ற தகவல்களின் சேகரிப்பு, மதிப்பீடு, மற்றும் பகுப்பாய்வு என்பவற்றுக்கு வசதியளிக்கின்ற தகவல் முறைமையாகும். தரவுகளைச் சமர்ப்பிப்பதற்கு வங்கிகளுக்கான தொழிற்பாடு அல்லது தரவுகளைச் சீர்ப்படுத்துவற்கான மேற்பார்வை களஞ்சியப்படுத்துவதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் ஆவணங்களையும் தரவுகளையும் பாதுகாப்பதற்கான வசதிகளுடன்கூடிய தரவுக் காப்பகம் வங்கித்தொழில் மேற்பார்வைக்குள் வேறுபட்ட குழுக்களினால் தரவு விசாரணைகளையும் பகுப்பாய்வுகளையும் இயலுமைப்படுத்துவதற்கான சிறு தரவுத்தளங்கள் அல்லது தரவுச்சந்தை மற்றும் மேற்பார்வை நுண்ணறிவின் உருவாக்கத்தை இயலுமைப்படுத்துகின்ற தரவுப் பகுப்பாய்வுகள் மற்றும் வியாபார உளவறிதல் கருவிகள் என்பவற்றை அத்தகைய பண்புகள் உள்ளடக்குகின்றன.

துல்லியமானதும் உரிய நேரத்தில் விரைவான எச்சரிக்கை சமிக்ஞைகளையும் வழங்குவதற்கான மேம்படுத்தப்பட்ட தரவுப் பகுப்பாய்வு இயலளவுகள்

மேற்பார்வை தகவல் முறைமையுடன் கூடிய முன்னேற்றமான தரவுப் பகுப்பாய்வு இயலளவுகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் வங்கி மேற்பார்வை அளப்பரியப் பயனைப் பெறவிருக்கின்றது. இது, விசாரணை, பகுப்பாய்வு, மற்றும் தரவுகளின் காட்சிப்படுத்தல் என்பவற்றுக்கான இயலுமைகளை உள்ளடக்கவுள்ளது. பகுப்பாய்வுத் தளமானது வங்கி மேற்பார்வைகளின் தரப்படுத்தப்பட்ட மற்றும் அவ்வப்போதான தரவு பகுப்பாய்வுத் தேவைப்பாடுகள் இரண்டினதும் பாதுகாப்பான கணிப்பீட்டிற்கு வசதிப்படுத்தும்.

அனைத்தையுமுள்ளடக்கிய தரவுப் பகுப்பாய்வுத் தளமானது வங்கிகள், கொடுகடன் பணியகத்திடமிருந்தான நுணுக்கமானத் தரவுகள் மற்றும் வெளியக தரவுச் சேமிப்பகங்கள் அத்துடன் பேரண்டப்பொருளாதார எதிர்வுகூறல்கள் மூலமாக சமர்ப்பிக்கப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி எதிர்கூறல் பகுப்பாய்வு மாதிரிகளினூடாக பல்வேறு இடர்நேர்வு வகைகள், வங்கிகள் மற்றும் வங்கிகளின் கொத்தணிகளுக்கான முட்கூட்டிய எச்சரிக்கைகளின் உருவாக்கத்திற்கு இயலச்செய்யும். அத்தகைய தளமானது பேரண்டப்பொருளாதார எதிர்வுகூறல்கள் மற்றும் நிறுவன ரீதியான போக்குகள் என்பவற்றிற்கமைவாக அவ்வப்போதான முட்கூட்டிய எச்சரிக்கை அழுத்தப் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு வங்கித்தொழில் மேற்பார்வைகளுக்கும் இயலச்செய்யும்.

பொதுவான மற்றும் தனிப்பட்ட கட்டமைக்கப்படாத தரவுகளிலிருந்து மேற்பார்வை நுண்ணறிவின் உருவாக்கத்திற்கான செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு

முழுமையாக விருத்திசெய்யப்பட்ட தரவுப் பகுப்பாய்வுகளின் இயலளவுகள் மரபுசார் புள்ளிவிபரக் கருவிகளையும் அதேபோன்று தோற்றம்பெற்றுவரும் செயற்கை நுண்ணறிவை அடிப்படையாகக்கொண்ட தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்படாத தரவுகள் இரண்டினதும் பகுப்பாய்வினையும் விபரிப்பினையும் மேற்கொள்வதற்கு வங்கித்தொழில் மேற்பார்வைக்கு இயலச்செய்தல் வேண்டும். அதற்கிணங்க, பொதுவான மற்றும் தனிப்பட்ட கட்டமைக்கப்படாத தரவுகளிலிருந்து மேற்பார்வை நுண்ணறிதலை உருவாக்குவதற்கு வங்கித்தொழில் மேற்பார்வைகளின் செயற்கை நுண்ணறிவை அடிப்படையாகக்கொண்ட தொழில்நுட்பங்களின் பயன்பாடானது, கட்டமைக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலமைந்த பகுப்பாய்வுகளையும் வங்கித் தரமிடல்கள் மற்றும் முட்கூட்டிய எச்சரிக்கை கணக்கிடல்கள் உள்ளடங்கலாக தரவுப் பகுப்பாய்வுகள் தளம் தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்கிடல்களையும் மேம்படுத்துவதற்கு பல்வேறுப்பட்ட கட்டமைக்கப்படாத (உரை அடிப்படையிலமைந்த) தரவு மூலங்களிலிருந்து அறிவாற்றலைப் பெற்றுக்கொள்வதற்கு அவதானம் செலுத்தவுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள புத்தாக்கங்கள்

இலங்கை மத்திய வங்கி நிதியியல் தொழில்நுட்பத்தை வசதிப்படுத்துவதற்கும் முக்கிய இடர்நேர்வுகளை எடுத்துரைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றுள் சில புத்தாக்கங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குபிடிக்கும்தன்மை தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

2021இல் இலங்கை மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளுக்கான குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் பகுதியொன்றாக தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குபிடிக்கும்தன்மை தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது. மேம்படுத்தப்பட்ட தகவல் பாதுகாப்பு, முறைமை கிடைப்பனவு மற்றும் முக்கியமான தகவல் முறைமைகளுக்கான தாக்குபிடிக்கும்தன்மை தேவைப்பாடுகள், உணர்திறனான தரவுகளுக்கான மேம்படுத்தப்பட்ட தகவல் பாதுகாப்புத் தேவைப்பாடுகள், மற்றும் உள்நாட்டில் முறையியல் ரீதியான முக்கிய வங்கிகளுக்கான உயரிய இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறைகள் என்பன கட்டமைப்பின் முக்கிய பண்புகளாகும்.

ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் கூறுகள் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான ஆளுகைக் கட்டமைப்புடன் தொடர்புடைய தேவைப்பாடுகள், தகவல் பாதுகாப்பு, தகவல் முறைமைக் கிடைப்பனவு மற்றும் அனர்த்த மீட்சி, அலுவலர் திறன்கள், சர்வதேச தரங்களுக்கமைவான இணங்குவிப்பு, மற்றும் க்லவுட் கணினிப்படுத்தல் உள்ளடங்கலாக மூன்றாந்தரப்பினர் உட்கட்டமைப்பின் பயன்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக்கொள்ளுங்கள் தரவுப் பகிர்வு தொடர்பான சாத்தியப்பாட்டு எண்ணக்கரு

2021இல், இலங்கை மத்திய வங்கியானது பேரேட்டுத் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலமைந்த பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக்கொள்ளுங்கள் சாத்தியப்பாட்டு எண்ணக்கருத் தீர்வினை உருவாக்கி பரீட்சிக்கும் செயன்முறையையும் நிறைவுசெய்திருந்தது. வாடிக்கையாளர் அநுபவத்தை மேம்படுத்துதல், தொழிற்பாட்டு கிரயத்தைக் குறைத்தல், வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் தொழிற்பாட்டுக் கிரயத்தைக் குறைத்தல் என்பவற்றுக்கான சாத்தியப்பாட்டினை மதிப்பிடுவதற்கு தொழிற்துறை முழுவதும் பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக்கொள்ளுங்கள் செயன்முறையின் தொடரேட்டுத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட சாத்தியப்பாட்டு எண்ணக்கருவை உருவாக்குவதன் நோக்கமாகும். உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக்கொள்ளுங்கள் செயன்முறையின் இலத்திரனியல்மயப்படுத்தலானது விசேடமாக பயனர் சிநேகபூர்வமானதன்மை மற்றும் பாதுகாப்பாக வடிவமைப்புக்களுடன் வாடிக்கையாளர்கள் இலத்திரனியல் நிதியியல் பணிகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்கப்படுத்துவதுடன் நிதியியல் பணிகளுக்கான தமது அணுகல் வசதியையும் அதிகரிக்கவிருக்கின்றது.

வங்கிகளின் வாடிக்கையாளர்கள் மத்தியில் உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக்கொள்ளுங்கள் தகவலின் பாதுகாப்பானதும் செயற்திறனானதுமான பகிர்தலை இயலச்செய்கின்ற தொடரேட்டுத் தொழில்நுட்பத்தின் பல்வேறு முக்கியப் பண்புகளை ஆய்வுகள் விபரிக்கின்றன. இது பல்வேறு நிதியியல் பணிகளில் புத்தாக்கங்களை இயலச்செய்வதற்கு தொடரேட்டுத் தொழில்நுட்பத்தின் சாத்தியப்பாட்டினை கூட்டாக ஆராய்வதற்கு வங்கித்தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் தன்னிச்சையான பங்குப்பற்றலுக்கு வழிவகுப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோடியான தேசிய கருத்திட்டமாகும்.

ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

2020இல், இலங்கை மத்திய வங்கி நிதியியல் உற்பத்திகள் மற்றும் பணிகளுக்கு அதிகளவான செயல்திறனையும் அதிகரித்த அணுகல் வசதியையும் மேம்படுத்துகின்ற நிதியியல் தொழில்நுட்பத்தின் புத்தாக்கங்களை ஊக்குவித்து இயலுமைப்படுத்தும் நோக்குடன் நிதியியல் தொழில்நுட்ப கட்டமைப்பின் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. தெரிவுசெய்யப்பட்ட படைப்பாளிகள் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான விதிமுறைமீறல் இடர்நேர்வின்றி தமது உற்பத்திகளையும் பணிகளையும் பரீட்சிப்பதற்கு பாதுகாப்பான வசதியை வழங்குவதனை இக்கட்டமைப்பு நோக்காகக் கொண்டுள்ளது.

முன்னோக்கிய பயணம்

நிதியியல் தொழில்நுட்பத்தின் உயர்ந்தமட்டப் பொருளாதார நன்மைகளை அடைந்துகொள்வதற்காகவும் அதேவேளை நிதியியல் முறைமை உறுதித்தன்மையை மோசமாகப் பாதிக்காது என்பதை உறுதிப்படுத்துவற்காகவும் நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் இரண்டு அடுக்கு அணுகுமுறையைப்

பின்பற்ற வேண்டும். ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலானது நிதியியல் தொழில்நுட்ப புத்தாக்கங்களைப் பொறுத்தமாக வசதிக்குட்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் அதேவேளை அத்தகைய கண்டுபிடிப்புக்களால் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளைப் போதுமானளவு மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் தணிப்பதற்கும் நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துதல் கட்டமைப்புக்குத் தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும். மேலும், நிதியியல் தொழில்நுட்பத்தினை இயலுமைப்படுத்தும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பானது, வேகமாக அபிவிருத்தியடையும் நிதியியல் தொழில்நுட்ப தொழிற்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் தொடர்ச்சியாக மாற்றமடைய வேண்டும். மறுபுறம், அதிகளவு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட மற்றும் தன்னியக்க மேற்பார்வை வழிமுறைகளை நோக்கி நகர்வதனூடாக வங்கி மேற்பார்வையாளர்களின் மேற்பார்வைத் திறனானது குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தப்படல் வேண்டும். இவை நவீன மேற்பார்வை தகவல் முறைமைகளைச் செயற்படுத்தல், உயர்தர தரவுப் பகுப்பாய்வுத் திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவினால் உதவியளிக்கும் மேற்பார்வை தொழில்நுட்ப கருவிகளை அறிமுகப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கும். நிதியியல் தொழில்நுட்பத்தினால் வழிநடத்தப்படும் இக்காலகட்டத்தில் இத்தகைய மேற்பார்வை சூழலானது வங்கி மேற்பார்வையாளர்களால் வங்கித் தொழில்துறையினை திறனான முறையில் மேற்பார்வை செய்வதனை இயலுமைப்படுத்தும்.

உசாத்துணை

1. The Next Wave of Suptech Innovation - Suptech Solutions for Market Conduct Supervision, World Bank Group, March 2021
2. FinTech, RegTech and SupTech: What They Mean for Financial Supervision, Toronto Centre, August 2017
3. Supervisory Implications of FinTech in SEACEN Jurisdictions, Herbert Poenisch & Michael Zamorski, SEACEN Financial Stability Journal - Volume 7/2016

தேசிய கொடுப்பனவு உட்கட்டமைப்பிற்கு வசதியளிப்பதற்காக மத்திய வங்கி நாட்டிலுள்ள கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை தொடர்ச்சியாக ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்துவருகிறது.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை என்பனவற்றை உள்ளடக்கிய லங்கா செட்டில் முறைமையானது மீளாய்விற்குரிய காலப்பகுதியில் அதிகரித்து வருகின்ற கொடுக்கவல்வாங்கல் அளவுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் சுமுகமாக தொழிற்பட்டது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2021இல் 96.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. பெறுமதி நியதிகளில் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் மொத்தக் காசல்லா கொடுப்பனவுகளில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுகள் கொடுக்கல்வாங்கல்களின் பங்கு 94 சதவீதத்திற்கு வகைகூறியது. மத்திய வங்கி, பங்கேற்கும் நிறுவனங்களின் ஏதேனும் திரவத்தன்மைப் பிரச்சனைகளின் காரணமாக தோன்றக்கூடிய ஏதேனும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அரச பிணையங்களின் பிணையுறுதிகளுக்கெதிராக வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியைத் தொடர்ந்தும் வழங்கியது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில், ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதிக்கு கோரிக்கைவிடுத்த பங்கேற்கும் நிறுவனங்களுக்கு வியாபார நாளொன்றிற்கு ரூ.208.5 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரி பெறுமதியினை மத்திய வங்கி விடுவித்தது.

2021 இறுதியில் லங்கா செகுயரில் வைத்திருக்கப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப்பெறுமதி ரூ.9,238.6 பில்லியனாகக் (முகப்புப் பெறுமதி) காணப்பட்டது. இது முறையே ரூ.2,270.7 பில்லியன் மற்றும் ரூ.6,967.9 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது. லங்கா செகுயர் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.262.8 றில்லியன் தொகை கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு[3] வசதியளித்தது.

2021ஆம் ஆண்டுப்பகுதியில், லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படுகின்ற நாட்டின் காசோலைத் தீர்ப்பனவு முறைமை ரூ.8,311.5 பில்லியன் தொகை கொண்ட 33 மில்லியன் மொத்தத் தொகை கொண்ட காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது. லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்த அளவு 1.8 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக்காட்டிய போதும்கூட காசோலைகளின் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

2021ஆம் ஆண்டுப்பகுதியில், லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படுகின்ற நாட்டின் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை முக்கியமாக குறைந்த பெறுமதியினைக் கொண்ட சில்லறை தொகை வடிவிலான கொடுப்பனவுகளுக்கு வசதியளித்ததுடன் 2021ஆம் ஆண்டில் கொடுப்பனவுகளின் அளவு மற்றும் பெறுமதி ஆகிய இரண்டு நியதிகளிலும் 13.7 சதவீதத்தினாலும் 26.8 சதவீதத்தினாலும் முறையே 41.9 மில்லியனுக்கும் ரூ.2,862.2 பில்லியனுக்கும் அதிகரித்தன.

பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் முதற்கட்டமான பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளி, பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளியின்

3 லங்கா செகுயர் முறைமையானது முதலாந்தர வழங்கல் கொடுக்கல்வாங்கல், இரண்டாந்தரச் சந்தை வர்த்தகம் (உடனடி, மீள்கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள், பிணையுறுதிக் கொடுக்கல்வாங்கல்கள்), திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி உள்ளிட்ட அனைத்து அரச பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்கின்றது.

வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள எந்தவொரு தன்னியக்கக்கூற்றுப் பொறியிலிருந்தும் காசினை எடுப்பனவு செய்வதனையும் நிலுவைகளின் விசாரணைகளையும் இயலுமைப்படுத்தியது. ஆய்வுக்குரிய காலப்பகுதியில் பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளியின் கொடுக்கல்வாங்கல் அளவு 18.8 சதவீதத்தினால் 58.2 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளியின் கொடுக்கல்வாங்கல் பெறுமதி 32.4 சதவீதத்தினால் ரூ.671 பில்லியனுக்கு அதிகரித்தது. 2021 இறுதியில், 29 நிதியியல் நிறுவனங்கள் பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளியுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. தமது சொந்த அட்டை முகாமைத்துவ முறைமையினைத் தொழிற்படுத்துவதற்கான இயலாற்றலைக் கொண்டிராத நிதியியல் நிறுவனங்களுக்கும் பணிகளை வழங்குவதற்காக 2015இல் ஆரம்பிக்கப்பட்ட பகிரப்பட்ட தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளி இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் ஆய்விற்குரிய காலப்பகுதியில் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து சுமுகமாக மேற்கொண்டது.

2015இல் ஆரம்பிக்கப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, அதேநேர அடிப்படையில் உறுப்பு நிறுவனங்களிடையே சில்லறை நிதிய மாற்றல்களுக்கு வசதியளித்தது. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கல்களின் அளவு 27.6 மில்லியனிலிருந்து 54.7 மில்லியனுக்கு 97.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எடுத்துக்காட்டிய வேளையில், பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் பெறுமதி 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.2,415.3 பில்லியனிலிருந்து ரூ.4,926.6 மில்லியனுக்கு 104 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு எண்ணிமக் கொடுப்பனவு முறைகளை ஊக்குவிப்பதற்கு மத்திய வங்கியினாலும் நிதியியல் நிறுவனங்களினாலும் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட ஊக்குவிப்புப் பிரச்சாரங்களும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக வாடிக்கையாளர் எண்ணிமக் கொடுப்பனவு முறைகளுக்கு மாறிக்கொண்டமையும் முக்கிய காரணங்களாகும்.

பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி ஊடாக அரச நிறுவனங்களுக்கு இணையவழிக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளத்தில் ஊழியர் சேம நிதியம், இலங்கை நியமங்கள் நிறுவனம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் உண்ணாட்டரசிறைத் திணைக்களம் என்பன ஆய்விற்குரிய காலப்பகுதியில் இணைந்துகொண்டன. ஆய்விற்குரிய ஆண்டில் லங்காபே கொடுக்கல்வாங்கல் அளவு 96,258 கொடுக்கல்வாங்கல்களிலிருந்து 513,961 கொடுக்கல்வாங்கல்களுக்கு 433.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில் லங்காபே கொடுக்கல்வாங்கல் பெறுமதி ரூ.75.3 பில்லியனிலிருந்து ரூ.198.2 பில்லியனுக்கு 163.1 சதவீதத்தினால் அதிகரித்தது. லங்காபே இணையவழிக் கொடுப்பனவுத் தளக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு மற்றும் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மீளாய்விற்குரிய காலப்பகுதியில் இலங்கை சுங்கத்துடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளத்தில் உண்ணாட்டரசிறைத் திணைக்களம் இணைந்துகொண்டமையும் பெருமளவிற்குக் காரணங்களாக அமைந்தன.

2021ஆம் ஆண்டுப்பகுதியில், மொத்த அளவு மற்றும் பெறுமதி இரண்டும் முறையே 625.4 சதவீதத்தினால் 1,154,984 இற்கும் 361.3 சதவீதத்தினால் ரூ.2,487 மில்லியனுக்கும் அதிகரித்தமையின் காரணமாக லங்கா கியுஆர் இனை அடிப்படையில் கொண்ட கொடுக்கல்வாங்கல்களில் கணிசமான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் 126,670 வணிகர்கள் லங்காகியுஆர் இல் புதிதாக இணைந்து கொண்டனர். சிறிய மற்றும் நடுத்தர வணிகர்களிடையேயும் அதேபோன்று வாடிக்கையாளர்களிடையேயும் லங்காகியுஆர் கொடுப்பனவுகளை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் "லங்கா கியுஆர்" இனை தேசிய ரீதியான ஆரம்பித்து வைக்கும் பிரச்சாரம் "2021 ஒத்தோபரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும், லங்காகியுஆர் ஆரம்ப கொடுக்கல்வாங்கல்களுக்கான உயர்ந்தபட்ச வணிகர் கழிவிடல் வீதமான 0.5 சதவீதமானது லங்காகியுஆர் இனை கொடுப்பனவு மாதிரியாக ஏற்றுக்கொள்வதற்கு வணிகர்களை ஊக்குவிப்பதற்காக மறுஅறிவித்தல் வரை நீடிக்கப்பட்டது.

மத்திய வங்கி, 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டை மற்றும் செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவு முறைமை ஒழுங்குவிதிகளின் ஏற்பாட்டு நியதிகளில் கொடுப்பனவு அட்டை மற்றும் செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவு முறைமைகள் தொடர்பில் அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இதற்கமைய, ஒழுங்குவிதிகளின் நியதிகளில் இரண்டு நிதியியல் நிறுவனங்கள் பற்று அட்டைகளை வழங்குகின்றவைகளாக தொழிற்படுதவற்கு உரிமம் வழங்கப்பட்டன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மீண்டும் தோற்றம்பெற்றமை மற்றும் அரசாங்கம் பயணக்கட்டுப்பாடுகளை விதித்தமை என்பனவற்றின் காரணமாக செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவு முறைமைகளின் பணி வழங்குநர்கள் தொடர்பில் மெய்நிகர் தலத்திலான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்ட வேளையில் உரிமம்பெற்ற பணி வழங்குநர்களின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவு பணி வழங்குவோர் மற்றும் செல்லிடதொலைபேசி கொடுப்பனவு

முறைமைகளுக்கு விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுடன் அவை இணங்கியொழுகுவதனைத் தொடர்ந்தும் கண்காணிப்பதற்காக தலத்திற்கு வெளியேயான மேற்பார்வை வலுப்படுத்தப்பட்டது.

தொடரேடுத் தொழில்நுட்பவியலை அடிப்படையாகக் கொண்ட பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் வசதிக்காக நிரூபணக் கோட்பாட்டினை உருவாக்கி பரீட்சிக்கின்ற நடைமுறைகளை மத்திய வங்கி வெற்றிகரமாக முடித்துக்கொண்டது. இது இலங்கையிலுள்ள நிதியியல் துறையின் புத்தாக்கங்களை இயலுமைப்படுத்துவதற்கு தொடரேடுத் தொழில்நுட்பவியலின் உள்ளார்ந்த ஆற்றலை எடுத்துக்காட்டுகிறது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் மீதான தொழில்துறை ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுவான தேசிய கொடுப்பனவுச் சபையானது கொடுப்பனவு முறைமை வழிகாட்டல் 2020-2022 இனை தொடர்ச்சியாகக் கண்காணித்ததுடன் நிதியியல் துறையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக 2022-2024 இற்கான வரைவு வழிகாட்டல் பற்றி ஆராய்ந்த வேளையில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு காத்திரமான முறையில் வசதியளிக்கும் பொருட்டு இடர்நேர்வுகளைக் கண்காணித்து வருகின்றது. இலங்கைக்கான புதிய பணவனுப்பல் ஊடகங்களை ஆராய்வதற்கும் யோசனைகளைத் தெரிவிப்பதற்குமாக தேசிய கொடுப்பனவுச் சபை நியமித்த செயலாற்றுகைக் குழுவின் அறிக்கை 2021இல் தேசிய கொடுப்பனவு சபையிடம் கையளிக்கப்பட்டது. மேலும், திறந்த வங்கித்தொழில், மெய்நிகர் நாணயங்கள், மத்திய வங்கியின் எண்ணிம நாணயங்கள், செயற்கை நுண்ணறிவு போன்ற புத்தாக்கக் கொடுப்பனவுச் சாதனங்கள்/ தளங்கள் பற்றி பல குழுக்களின் அறிக்கைகள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் தேசிய கொடுப்பனவுச் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் அல்லது வேறேதேனும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கை தொடர்பிலான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல் மீதான தகவல்களைப் பெறுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல் தொடர்பான அதன் முக்கிய வகிபாகத்தினை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் ஆற்றியது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு அறிக்கையிடுகின்ற நிறுவனங்கள், சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து 4,696 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளையும் தகவல்களையும் பெற்றுக்கொண்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் தொடர்பான தொழிற்பாட்டு மற்றும் உபாய பகுப்பாய்வுகளை மேற்கொண்டதன் பின்னர், 1,830 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் அவசியமானவிடத்து தொடர்பான சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்களுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் பாரப்படுத்தப்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் 2,220 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்ததுடன் 641 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் ஆரம்பப் பகுப்பாய்விற்காகவும் மேலதிக ஆய்வுகளுக்காகவும் வைத்திருக்கப்பட்ட வேளையில் எஞ்சிய சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக நடவடிக்கைகள் தேவைப்படாதவை என வகைப்படுத்தப்பட்டன. மேலும், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 6இன் நியதிகளில் நிதியியல் உளவறிதல் பிரிவு 2021இல் அறிக்கையிடப்பட வேண்டிய ஆரம்பமட்டமான ரூ.1 மில்லியனை அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சியமை தொடர்பில் அறிக்கையிடுகின்ற நிறுவனத்திலிருந்து 5.7 மில்லியன் (தற்காலிகம்) காசு கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளையும் 9.2 மில்லியன் (தற்காலிகம்) இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் (உள்முக மற்றும் வெளிமுக அனுப்பல்கள்) பெற்றுக்கொண்டது.

நாட்டின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் சட்டக் கட்டமைப்புடன் நிறுவன ரீதியான இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்தும் பொருட்டு இவ்வாண்டுப்பகுதியில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வையினை நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் மேற்கொண்டது. இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சிப்புக்கள் நிதியியல் நிறுவனங்களினதும் அதேபோன்று இலங்கையிலுள்ள குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக திட்டமிடப்பட்டவாறு தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்துவதில் குறிப்பிடப்பட்ட சில இடர்பாடுகள் எதிர்நோக்கப்பட்டமைக்கிடையிலும், நிதியியல் உளவறிதல் பிரிவு 2 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களையும் 7 கூட்டு இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களையும் 7 உடன் பரீட்சிப்புக்களையும் வெற்றிகரமாக மேற்கொண்டது. மேலும், நிதியியல் நிறுவனங்களின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புக்களை மதிப்பிடுவதற்காக

4 தலத்திற்கு வெளியேயான பின் தொடர் பரீட்சிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், துறைவாரியான பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புக்களை மதிப்பிடுவதற்காக நிதியியல் நிறுவனங்கள் மீது 5 கருத்து விளக்க மீளாய்வுகளும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் துறைகள் மீது 2 கருத்து விளக்க மீளாய்வுகளும் நடத்தப்பட்டன. 2021இல் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நுண்ணாய்வு தொடர்பான வாடிக்கையாளரின் உரிய விழிப்புக்கவன விதிகளையும், வாடிக்கையாளர் அடையாளம் காணல் மற்றும் சரிபார்த்தல், சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் மற்றும் சரியான இடர்நேர்வுக் கட்டுப்பாடுகள் மற்றும் தணிப்பு வழிமுறைகளையும் மீறியமைக்காக 4 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மீதும் 5 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீதும் நிருவாக ரீதியான தண்டங்களாக ரூ.10.5 மில்லியன் விதிக்கப்பட்டன. மேலும், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்கியொழுகாத நிதியியல் நிறுவனங்களின் மீது இவ்வாண்டுப்பகுதியில் காரணங்களைக் கோருகின்ற 9 கடிதங்களும் 5 எச்சரிக்கைக் கடிதங்களும் வழங்கப்பட்டன. பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுடன் தொடர்பான இணங்குவிப்புக்களுக்காக குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியதன் மூலம் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் தொழில்சார் நிறுவனங்களின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை மேலும் வலுப்படுத்தப்பட்டது.

நாட்டின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் அமைப்பின் காத்திரமான தன்மையினை மேம்படுத்தும் குறிக்கோளுடன் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான சட்டக் கட்டமைப்பிற்கு சட்ட ரீதியான திருத்தங்களை கொண்டுவருவதற்காக 2021ஆம் ஆண்டுப்பகுதியில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும், நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்களின் விதந்துரைப்பு 1 உடன் இணங்கியொழுகும் விதத்தில் உலக வங்கியிடமிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேறிய இடர்நேர்வு மதிப்பீட்டினை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவு முன்னெடுத்தது. தேசிய இடர்நேர்வுச் செயற்பாட்டுக் குழு 66 அரச மற்றும் தனியார் துறை அலுவலர் முகவர்களையும் 123 இற்கும் கூடுதலான அலுவலர்களையும் உள்ளடக்கியிருக்கிறது.

நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்பான அனைத்து ஆர்வலர்களிடையேயுமான விழிப்புணர்வினை அதிகரிக்கின்ற விதித்தில் பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது. பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை செய்முறைகளையும் நிறுவன ரீதியான இணங்குவிப்புக்களையும் வலுப்படுத்தும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு பல வழிகாட்டல்களையும் சுற்றறிக்கைகளையும் விடுத்ததுடன் அதேபோன்று 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 50 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வள உதவிகளை வழங்கியது.

நிதியியல் துறை தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள்

மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பிற்கு வலுவான சட்ட அடித்தளமொன்றினை வழங்கும்நோக்குடன்மத்திய வங்கி அதனால் நிருவகிக்கப்படும் முக்கிய சட்டவாக்கங்களின் பகுதிகளிற்கு தொடர்ந்தும் சட்ட சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. எனவே, மத்திய வங்கி பன்னாட்டு நியமங்களுக்கு இணையான விதத்தில் வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்தும் எதிர்பார்ப்புடன் 2021இல் புதிய வங்கித்தொழில் சட்டம் தொடர்பில் இரண்டாம் சுற்று கலந்துரையாடல்களை நிறைவுசெய்தது. மேலும், மத்திய வங்கியின் தீர்மான அதிகாரசபை உட்பட, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்களை அதிகரிக்கும் பொருட்டு, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை மத்திய வங்கி தயாரித்தது.

மத்திய வங்கி வர்த்தகப்படுத்தல், தீர்ப்பனவு மற்றும் தேறல் செய்தல் சட்டம், நிதியியல் சொத்துக்கள் முகாமைத்துவச் சட்டம் மற்றும் நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டம் ஆகிய புதிய சட்டவாக்கப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதிலும் ஈடுபட்டிருந்தது. இலங்கைக்காக புதிய வர்த்தகப்படுத்தல், தீர்ப்பனவு செய்தல் மற்றும் தேறல் செய்தல் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதன் குறிக்கோள் யாதெனில் அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பிலான வர்த்தகப்படுத்தல், கொடுத்துத் தீர்த்தல், தேறல் செய்தல், தீர்ப்பனவு மற்றும் கட்டுக்காப்பு தொடர்பான அதிகரித்த ஒழுங்குவிதிகளை வழங்குவதேயாகும்.

இச்சட்டமானது, நவீனமான வர்த்தகத்திற்குப் பின்னரான தீர்ப்பனவு, மத்திய இணைத்தரப்பினர் முறைமை, பல நாணய அதேநேர தீர்ப்பனவு முறைமை போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்ட பாதுகாப்பான, நவீனமான, போட்டித்தன்மை மிகுந்த, நியாயமான சந்தை இடங்களை வழங்கக்கூடியதாக அரச பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பரிவர்த்தனை என்பனவற்றை மாற்றம் செய்யக்கூடிய அனைத்தையுமுள்ளடக்கிய சட்டம், தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு என்பனவற்றின் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்துகிறது. குறைச் செயலாற்றம் கொண்ட சொத்துக்களின் காரணமாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் ஐந்தொகையில் ஏற்படக்கூடிய சுமைகளைத் தளர்த்தும் நோக்குடன் இலங்கையில் நிதியியல் சொத்து முகாமைத்துவ கம்பனிகளை நிறுவுவதற்கான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட சட்டக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தும் நோக்குடன் நிதியியல் சொத்து முகாமைத்துவச் சட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டது. நுண்பாக நிதி வியாபாரத்திலுள்ள வாடிக்கையாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பணம் கடன் வழங்கல் மற்றும் வியாபார நுண்பாக நிதி வியாபாரங்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக தனியான ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையொன்றினை நிறுவுவதற்காக புதிய நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டமொன்று வரையப்பட்டுள்ளது.

மேலும், திறைசேரி முறிகளின் வழங்கல் செயன்முறையினை வலுப்படுத்துவதற்காகவும் இலங்கையின் அரச பிணையங்கள் சந்தையின் மீதான முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்தவும் 1937ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்திற்கும் அதன் கீழான துணைச் சட்டவாக்கப் பகுதிகளுக்கும் மத்திய வங்கியினால் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. மேலும், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமுகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காகவும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்களை வலுப்படுத்துவதற்காகவும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திற்கு திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மசோதா, கொரோனா வைரஸ் நோய் - 2019 (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) மசோதா, நிதி மசோதா, தரவுப் பாதுகாப்பு மசோதா, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை வங்கி கட்டளைகள் போன்ற ஏனைய பல ஆர்வலர்களினால் வரையப்பட்ட மத்திய வங்கியுடனும் நிதியியல் துறையுடனும் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்வதற்கு மத்திய வங்கி பங்களித்தது. அத்தகைய மீளாய்வின் போது, அச்சட்டங்களில் பொதிந்துள்ள தேசிய முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு மத்திய வங்கியின் தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பிற்கான குறிப்பிட்ட சட்டவாக்கங்கள்/ திருத்தங்களின் தாக்கம் பற்றி மத்திய வங்கி மதிப்பிட்டது. நிதியியல் முறைமை தொடர்பிலான பொதுமக்களின் நம்பிக்கையின் தாக்குபிடிக்கும் தன்மையினை பேணும் பொருட்டு, மத்திய வங்கி அதிகாரமளிக்கப்படாத நிதிக் கம்பனிகள், தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் நிதியியல் துறையிலுள்ள மற்றைய பிரச்சனைகள் தொடர்பான வழக்காடல்களை 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் மற்றும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களின் உதவியுடன் தொடர்ந்தும் மேற்கொண்டது.

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு

நிதியியல் வாடிக்கையாளர் நலவுரித்துக்களின் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் வாடிக்கையாளர்களுக்கான நியாயபூர்வமான மற்றும் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்தும். முறைப்பாடுகளையும் கோரிக்கைகளையும் செய்முறைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கும் ஒன்றில் புதிய சட்டவாக்கங்களினூடாக அல்லது ஏற்கனவேயுள்ள சட்டவாக்கங்களுக்கு திருத்தங்களை செய்வதனூடாகவும் குறிப்பிட்ட முறைப்பாடுகள் தொடர்பில் பரீட்சிப்புக்கள்/ விசாரணைகளை நடத்துவதன் மூலம் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பிற்கு வசதியளிப்பதற்கான பொருத்தமான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கும் மத்திய வங்கியினால் புதிய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வழிமுறைகள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் தொடர்பில் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகளுக்கு வலுவளிக்கும். இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 6,186 முறைப்பாடுகளையும் கோரிக்கைகளையும் பெற்றுக்கொண்டது. இது சராசரியாக மாதமொன்றிற்கு 500ஆகக் காணப்படுகின்றது. நடவடிக்கைகள் தேவைப்படும் முறைப்பாடுகளில் 91 சதவீதத்திற்கும் கூடுதலானவை மீது கவனம் செலுத்தப்பட்டிருப்பதுடன் மொத்த முறைப்பாடுகளின் ஏறத்தாழ 45.7 சதவீதமானவை வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டன. பெரும்பாலான முறைப்பாடுகள் சட்ட இசைவுத்தாமதம் கடன்களை மீள் அட்டவணைப்படுத்தல், உயர்ந்த வட்டி வீதங்கள், ஏற்றுக்கொள்ளமுடியாத/ ஒழுக்கவிழுமியமற்ற நடைமுறைகளுடனும் கொடுகடன் வசதிகள் முன்கூட்டியே தீர்ப்பனவு செய்தலுடனும் தொடர்பான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும்

நடுத்தர அளவு வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுடன் தொடர்புட்டதாகக் காணப்பட்டது. 2021இல் மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், முறைப்பாடுகளை கையாளும் செய்முறையின் வினைத்திறனை மேம்படுத்துகின்ற விதத்தில், எளிமைப்படுத்தப்பட்ட முறைப்பாடு சமர்ப்பித்தல் படிவத்தை அறிமுகப்படுத்தியது.

பலயீனமான நிதியியல் நிறுவனங்கள் மீதான தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கை

மத்திய வங்கி இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினைத் தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது. உயர்ந்தபட்ச இழப்பீட்டுக் கொடுப்பனவினை ரூ.600,000 இலிருந்து ரூ.1,100,000 இற்கு அதிகரிக்கின்ற விதத்தில் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்குப் புறம்பாக பன்னாட்டு நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் தொழிற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் முன்னைய ஒழுங்குவிதிகளை இரத்துச்செய்து, அதற்குப் பதிலாக, புதிய ஒழுங்குவிதிகள் அதாவது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வைப்புக் காப்புறுதித் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியிலும், மத்திய வங்கி உரிமம் இரத்துச்செய்யப்பட்ட/ இடைநிறுத்தப்பட்ட கம்பனிகளின் அதாவது சென்றல் இன்வெஸ்ட்மன்ற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, ஸ்ரான்டட் கிறெடிட் பினான்ஸ் லிமிடெட், ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட், த பினான்ஸ் கம்பனி லிமிடெட், ஈரிஜ பினான்ஸ் லிமிடெட், மற்றும் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸ் பிஎல்சி இன் காப்புறுதி செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இவ்வாண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கி இழப்பீடுகளை சுமுகமாக வழங்கும் தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தியது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் ஊடாக மத்திய வங்கி மேற்குறிப்பிட்ட ஆறு கம்பனிகள் தொடர்பில் 70,832 வாடிக்கையாளர்களுக்கு ரூ.29,251.46 மில்லியனை 2021.12.31இல் உள்ளவாறு உள்ளக ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட கொடுப்பனவு முறைகளைப் பின்பற்றியும் மக்கள் வங்கியுடனான முகவர் வங்கித்தொழில் உடன்படிக்கையின் கீழும் செலுத்தியது. ஒரு அங்கத்துவ நிறுவனத்திற்கு திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் வெளிநிற்கும் தொகை (மூலதனம்) 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறாக ரூ.1.4 பில்லியனாகக் காணப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளை பெற்றுக்கொண்டதனைத் தொடர்ந்து 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மீதான பல புலனாய்வுகளை நடத்தியது. மேலும், தடைசெய்யப்பட்ட திட்டங்களில் இணைவதனால் ஏற்படும் மோசமான தாக்கங்கள் பற்றி மக்களை அறியப்படுத்துவதற்காக பொதுமக்களின் வெவ்வேறு பிரிவினரின் நிதியியல் அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தீவு முழுவதும் நடத்தப்பட்டன. மத்திய வங்கி தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குள்ளே உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றிற்கான தீர்மானப்படுத்தல் கட்டமைப்பொன்றை உருவாக்கும் செயன்முறையில் ஈடுபட்டிருக்கிறது.

வெளிநாட்டுச் செலாவணியின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை

உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சவால்களை எதிர்நோக்கியமைக்கிடையிலும், இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கி தொடர்ந்தும் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தது. வெளிநாட்டுச் செலாவணி இருப்பைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பல கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பெருமளவு வினைத்திறனை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் நடைமுறைப் பிரச்சனைகளையும் கரிசனைகளையும் தீர்க்கும் பொருட்டு முன்னர் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளுக்குப் பதிலாக 2021 மார்ச் 22 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளைக் கொண்ட புதிய தொகுதியொன்று விடுக்கப்பட்டது. மேலும், உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மை பிரச்சனைகளை பரிசீலனையில் கொண்டு, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சினால் விடுக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான குறிப்பிட்ட வெளி பணவனுப்பல்கள் மட்டுப்படுத்தப்பட்டன. அதிகரிக்கப்பட்ட உள்முக பணவனுப்பல்களின் நியதிகளில் நாட்டின் மீதான நேர்க்கணிய தாக்கத்தினை பரிசீலனையில் கொண்டு 2020ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறத்தல் 2021 ஏப்பிறல் 08ஆம் திகதியிலிருந்து மேலும் ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. மேலும், வதிவற்ற முதலீட்டாளர்களிடமிருந்தும் பங்குரிமை

அட்டவணை 8.22
வெளிநாட்டு நாணய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்

கணக்கின் வகை	உள்முக பண அனுப்பல்		வெளிமுக பண அனுப்பல்		திசெம்பர் 31இல் உள்ளவாறான இருதி மீதி	
	2020	2021	2020	2021	2020	2021
தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்குகள்	766.7	663.2	205.6	234.1	2,666.2	2,715.4
வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகள்	6,796.7	7,647.9	2,805.7	3,756.9	1,951.0	3,071.7
உள்முக முதலீட்டுக் கணக்குகள்	1,382.9	854.7	1,901.1	1,221.9	1,861.1	1,969.2
சிறப்பியல்புவாய்ந்த வைப்புக் கணக்குகள்	214.9[1]	207.1[1]	3.2[2]	83.0	290.0	585.2[3]
வெளிமுக முதலீட்டுக் கணக்குகள்	138.2	11.2	8.4	6.9	வி.கி	வி.கி

1 உள்முக முதலீடுக கணக்குகள், கரைகடந்த வங்கியலகின் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புகளிலிருந்து பெறப்படும் நிதிளைத் தவிர,
2 சிறப்பியல்வாய்ந்த வைப்புக் கணக்குகளின் கீழான வைப்புகள் முதிர்வடைந்த 2020 ஒத்தோபர் 07 முதல் வெளிமுக பணவனுப்பல் நிகழத் தொடங்கியது
3 உள்முக முதலீட்டு கணக்குகள், கரைகடந்த வங்கியலகின் கணக்குகள், வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உள்ளடங்களாக பெற்றுக்கொண்ட நிதிகள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மூலதனத்திற்காக வெளிநாட்டு நாணயத்தில் பெறுகைகளை பெறுவதற்கு வதியும் கம்பனிகளுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் பணிப்புரைகள் விடுக்கப்பட்ட வேளையில், இலங்கை ரூபாவிற்கு அவற்றை மாற்றாமல் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக அத்தகைய பெறுகைளைப் பயன்படுத்த அவர்கள் இயலுமைப்படுத்தப்பட்டனர். மேலும், உள்முக பணவனுப்பல்களை கூடுதலாக கவரும்பொருட்டு, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் வெளிவாரியாக கடன்பட்ட நிதியிலிருந்து இரண்டாந்தரச் சந்தையிலிருந்து இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டன.

வதிவோரின் கைகளிலுள்ள வெளிநாட்டு நாணயத்தினை முறைசார்ந்த வங்கித்தொழில் முறைமைக்கு கவர்ந்துகொள்ளும் முயற்சியொன்றாக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகள் வெளிநாட்டு நாணயத்தினை அவர்களின் உடைமையில் வைத்திருக்கும் இலங்கையில் வதியும் ஆட்களிடமிருந்து வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கின்ற விதத்தில் நிதியமைச்சரினால் கட்டளையொன்று விடுக்கப்பட்டது. மேலும், உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காக, ஏற்றுமதியாளர்கள் அவர்களது வெளிநாட்டு ஏற்றுமதிப் பெறுகைகளை 180 நாட்களுக்குள் நாட்டிற்குக் கொண்டு வந்து அவற்றை இலங்கை ரூபாவிற்கு மாற்றிக்கொள்ள வேண்டும் என அவர்களைக் கேட்டுக்கொள்கின்ற ஒழுங்குவிதிகள் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்டன. இவ்விதிகள் தேவையைப்பொறுத்து காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டதன் மூலம் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படவேண்டிய ஏற்றுமதிப் பெறுகைகளின் சதவீதம் சீராக்கப்பட்டது. அதற்கமைய, உள்ளூர் வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு ஆதரவளிக்கும் வகையில் விதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளும் அதில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட அளவும் மிதமான வளர்ச்சியைக் காட்டின.

அட்டவணை 8.23
ஏற்றுமதி பெறுகைகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புதல் மற்றும் இலங்கை ரூபாவுக்கு மாற்றுதல்

ஐ.அ.டொ. மில்லியன்

	கா1*	கா2	கா3	கா4	மொத்தம்
2021இல் திருப்பி அனுப்பப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் மொத்த அளவு	477.32	1,072.04	1,458.12	3,169.36	6,176.84
2021இல் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் மொத்த அளவு	111.08	215.02	367.49	878.19	1,571.78

* நாணய விதிச் சட்டத்தின் கீழ் விதிமுறைகள் 28.02.2021 அன்று நடைமுறைக்கு வரும் வகையில் விதிக்கப்பட்டதால் தரவு மார்ச் 2021 முதல் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் நடவடிக்கைகள் அவர்கள் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள்

அட்டவணை 8.24
ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல்வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் மற்றும் இலங்கை ரூபாவிற்கு எதிரான வெளிநாட்டு செலாவணி விற்பனையும் கொள்வனவும்

	2020	2021
புலம்பெயர் நிதி மாற்றம்		
புலம்பெயர்வதற்கான கொடுப்பனவை அனுப்புவதற்காக வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்துடன் பதியப்பட்ட ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்களின் எண்ணிக்கை	742	787
ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் ஊடாக அனுப்பப்பட்ட வெளிச் செல்லுகை (ஐ.அமெ.டொ.மில்லியன்)	12.7	4.5
வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் (ஐ.அ.டொ. மில்)		
வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் (படிவம் 1)	11,484.3	12,019.6[1]
வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் (படிவம் 2)	20,246.3	12,153.5[1]

1. தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.25
கட்டுப்படுத்தப்பட்ட முகவர்களின் செயலாற்றம்

	2020	2021	%மாற்றம்
வங்கித் தொழித்துறைக்குள் வைப்பிலிடப்பட்டத் தொகை (ஐ.அ.டொ. மில்)	132.71	22.78	-82.8
இலங்கையில் வதிபவர்களுக்கு விற்கப்பட்ட தொகை (ஐ.அ.டொ. மில்)	3.64	3.72	2.2

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறைவடைந்தமையினால் ஆய்விற்குரிய காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் ஒட்டுமொத்த செயலாற்றம் தேய்வடைந்தது. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகள் மீதான தரவுகள் நாணயவிதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்றுமதியாளர்களும் வணிகர்களும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த அடிப்படையில் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டன. உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உட்பாய்ச்சல்/ வெளிப்பாய்ச்சல் உட்பட, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய, எல்லைகளுக்கிடையேயான வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களை கண்காணிக்கின்ற முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு 2021இல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் தொடர்பிலான பேரண்ட பொருளாதார தீர்மானங்களுக்கு ஆதரவளிக்கப்பட்டது.

கொடுகடன் தகவல்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் உருவாக்கப்பட்ட சவால்மிக்க சூழ்நிலைக்கு மத்தியிலும் கொடுகடன் தகவல் பணியகம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கடன் வழங்கும் உறுப்பு நிறுவனங்களுக்கு 8.37 மில்லியன் கொடுகடன் அறிக்கைகளை வழங்கியதன் மூலம் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. எனினும், வழங்கப்பட்ட அறிக்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 2021இல் கொடுகடன் அறிக்கைகளுக்கான சுயவிசாரணைக்கான கேள்வி 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 8,114 வாடிக்கையாளர்கள் அவர்களது சுயவிசாரணை அறிக்கைகளைப் பெறுவதற்காக பணியகத்திற்கு விஜயம் செய்திருந்ததுடன் 1,438 வாடிக்கையாளர்கள் தமது சுயவிசாரணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வங்கிகளூடாக விண்ணப்பித்திருந்தனர். கொடுகடன் தகவல் பணியகம் 2021ஆம் ஆண்டில் இணையவழி மூலமாக 2,988 சுயவிசாரணைக் கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. அத்துடன், கொடுகடன் தகவல் பணியகத்தின் மதிப்பெண்ணிற்கான கேள்வி (கொடுகடன் மதிப்பெண்) 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 183 சதவீதத்தினால் அதிகரித்தது.

கொடுகடன் தகவல் பணியகமும் நிதியியல் நிறுவனங்கள், படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குவதற்கு உதவியளித்தது. மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் கொடுகடன் தகவல் பணியகம் கடன் வழங்குநர்களுக்கு அறிக்கையிடல் வழிகாட்டல்களை விடுத்தது. இது, படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினைப் பயன்படுத்த விரும்புகின்ற கடன்பாட்டாளர்களின் கொடுகடன் தரவுகள், கொடுகடன் அறிக்கைகளில் எதிர்க்கணியத்தாக்கம் எதனையும் கொண்டிருக்காத விதத்தில் அறிக்கையிடப்பட்டிருக்கும் என்பதனை உறுதிப்படுத்துவதுடன் சட்ட இசைவுத்தாமக் காலப்பகுதியில் அக்கடன்பாட்டாளர்களின் கொடுகடன் மதிப்பெண்களையும் உறுதிப்படுத்தும்.

மேலும், கொடுகடன் தகவல் பணியகம் அதன் முறைமைகளுக்கு வசதி ஏற்பாடுகளைப் பொருத்துவதற்கும் புதிய வழமையில் கூடுதலானளவிற்கு வினைத்திறனுடன் தொழிற்படுவதற்கு செய்முறைகளை மேற்கொள்வதற்கும் அதன் எண்ணிம வளர்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்தியது. இதற்கமைய, கொடுகடன் தகவல் பணியகம் அதன் பயன்படுத்துநர்களினதும் கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆர்வலர்களினதும் பரிணாமவளர்ச்சி கண்டுவரும் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக அதன் நடைமுறையிலுள்ள முறைமையின் தரமிடலை உயர்த்துவதற்கான அதிகரித்த வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில், அதன் பணிகளின் தரத்தினை மேம்படுத்தியதுடன் பதிலிறுத்தும் நேரத்தையும் மேம்படுத்தியது. ஒன்றிலிருந்து ஒன்றிற்கான செயலி நிரல்படுத்தல் இடைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டமை, தனியார் அறிக்கை வழங்கலை தன்னியக்கப்படுத்தல் மற்றும் உறுப்பினர் நிறுவனங்களின் செல்லிடத்தொலைபேசி வங்கித்தொழில் செயலிகளுடன் இவற்றை ஒருங்கிணைத்தல் என்பன கொடுகடன் தகவல் பணியக பயன்படுத்துநர்களின் விரைவானதும் இலகுவானதுமான அணுகுதல்களை வழங்குவதற்கான முக்கியமான அம்சங்களில் சிலவாகும்.

இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதிக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல்

இலங்கை மத்திய வங்கி, இலங்கையில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதி நடைமுறையினை ஊக்குவிக்கும் நோக்குடன் 2016இல் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நீடித்து நிலைத்திருக்கும் நிதிவலையமைப்புடன் இணைந்து கொண்டது.

அதனைத்தொடர்ந்து, பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடனும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி உதவியுடனும் மத்திய வங்கி 2019 ஏப்பிறலில் "இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கும் நிதிக்கான வழிகாட்டலொன்றினை" ஆரம்பித்தது. இவ்வழிகாட்டலானது, நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் சந்தைகள் என்பனவற்றிற்கு, பசுமையான, காலநிலை சிநேகபூர்வ மற்றும் சமூகவியல் உள்ளடக்க வசதிக்குட்படுத்தல் என்பனவற்றுடன் தொடர்பான தொழில்களுக்கு நிதியளித்து வசதிக்குட்படுத்தல் உதவிகளை ஊக்குவிக்கின்ற செயற்றிட்டங்களுடன் இணைந்து காணப்படும் சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை காத்திரமான முறையில் முகாமைப்படுத்துகின்ற விதத்தில் பரந்தளவிலான பணிப்புரைகளை வழங்குகின்றது.

வழிகாட்டலின் நடவடிக்கைகளை தொழிற்படுத்துவதில், மத்திய வங்கி 2021இல் பிரயோகிக்கத்தக்க பசுமை நிதி வகுப்புத்தொகுப்பு வகைப்படுத்தலுக்கான திட்டமிடல் செய்முறையினை ஆரம்பித்தது. இது, நீடித்து நிலைத்திருக்கும் நிதியினை நோக்கி நிதியியல் துறைக்கு வசதியளிப்பதில் முக்கியமானதொரு தேவைப்பாடாகும். குறிப்பிட்ட வகுப்புத் தொகுப்பு முறை பசுமை நடவடிக்கைகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடும் முறைமையை தாபிப்பதுடன் பசுமை/ நீடித்து நிலைத்திருக்கும் செயற்றிட்டங்களைத் தீர்மானிப்பதில் நிதியியல் நிறுவனங்களுக்கு ஒரு பொதுவான உடன்படிக்கையினை வழங்கும். மத்திய வங்கியானது பசுமை நிதி வகுப்புத் தொகுப்பு முறையொன்றினை அபிவிருத்தி செய்வதில் தொழில்நுட்பம் மற்றும் நிதியியல் ஆதரவினை வழங்குகின்ற பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் நெருக்கமாக பணியாற்றுவதுடன் இதனை 2022இன் முதலரைப்பகுதியில் ஆரம்பிப்பதற்கும் எதிர்பார்க்கிறது.

பின்னிணைப்பு 1

சிறப்புக் குறிப்பு 12

முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்[1]

நாணயக் கொள்கை[2]

2021 ஓகத்து 19	-	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.00 சதவீதத்திற்கும் 6.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன. வங்கி வீதம் 8.50 சதவீதத்திலிருந்து 9.00 சதவீதத்திற்கு தன்னியக்கமாகவே அதிகரிக்கப்பட்டது.
	-	உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீதும் பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2021 செத்தெம்பர் 01இல் ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பராமரிப்புக் காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 2.00 சதவீதத்திலிருந்து 4.00 சதவீதத்திற்கு 2.00 சதவீதப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டது.
2022 சனவரி 20	-	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் 50 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன. வங்கி வீதம் 9.00 சதவீதத்திலிருந்து 9.50 சதவீதத்திற்கு தன்னியக்கமாகவே அதிகரிக்கப்பட்டது.
2022 மாச்சு 04	-	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன. வங்கி வீதம் 9.50 சதவீதத்திலிருந்து 10.50 சதவீதத்திற்கு தன்னியக்கமாகவே அதிகரிக்கப்பட்டது.
2022 மாச்சு 07	-	செலாவணி வீதத்தில் சீராக்கமொன்று அனுமதிக்கப்பட்டது.

சிறப்புக் கொடுகடன் திட்டங்கள்

2021 மாச்சு 24	-	சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய கொடுகடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு 2021 செத்தெம்பர் 30 வரை சலுகைக் காலத்தினையும் 36 மாதங்கள் வரையிலான மீள்கொடுப்பனவுக் காலத்தினையும் நீடிப்பதற்காக சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.
2021 ஏப்பிறல் 05	-	திட்டத்தின் சுமூகமான நடைமுறைப்படுத்தலுக்காக புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டு மீண்டும் விடுக்கப்பட்டன.
2021 ஏப்பிறல் 20	-	திட்டத்தின் கீழ் மஞ்சளைத் தகுதியான பயிரொன்றாக உள்ளடக்குவதற்குப் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.
2021 மே 04	-	தெரிவுசெய்யப்பட்ட வேளாண்மை பெறுமதிச் சங்கிலிகளில் தொழிற்படுகின்றவர்களின் நிதியியல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை இயலுமைப்படுத்துவதற்காக உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிச் செயற்றிட்டம் என்ற பெயரில் புதிய மீள்நிதியிடல் திட்டத்தினை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.
2021 யூன் 09	-	அனைத்துத் துறைகளுக்கும் வழங்கப்பட்ட தொழிற்படு மூலதனக் கடன்களுக்காக 2021 செத்தெம்பர் 30 வரை சலுகைக் காலத்தினையும் 36 மாதங்கள் வரையான மீள்கொடுப்பனவுக் காலத்தினையும் நீடிப்பதற்காக சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

1 இது 2021 சனவரி 01 முதல் 2022 மாச்சு 15 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகளை உள்ளடக்குகின்றது.
2 2022 ஏப்பிறல் 08 அன்று நாணயக் கொள்கை நிலைப்பாடு மேலும் இறுக்கமடைந்தது. இதன் விபரங்கள் இவ்வறிக்கையின் 7ஆம் அத்தியாயத்தில் பார்வையிட முடியும்.

2021 செத்தெம்பர் 01 - இலங்கையிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படவுள்ள கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 செத்தெம்பர் 10 - சௌபாக்யா புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II , மற்றும் III ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதம் 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

- சௌபாக்யா (சுபீட்சம்) கடன் திட்டத்தின் கீழ் 2021 செத்தெம்பர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரை படுகடன் சட்ட இசைவுத்தாமதமொன்று வழங்கப்பட்டது.

2021 செத்தெம்பர் 21 - சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புனரமைப்பு செயற்றிட்டம் மற்றும் சிறு உடமையாளர்களுக்கான வேளாண்மை வியாபாரத்திற்கான பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் கீழ் கடன்பாட்டாளர்களுக்காக 2021 செத்தெம்பர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரை படுகடன் சட்ட இசைவுத்தாமதமொன்று வழங்கப்பட்டது.

2021 செத்தெம்பர் 23 - சௌபாக்யா புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II , மற்றும் III அத்துடன் சௌபாக்கிய (சுபீட்ச) திட்டம் ஆகியவற்றின் கீழ் சுற்றுலாத் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்காக 2022 யூன் 30 வரை படுகடன் சட்ட இசைவுத்தாமதமொன்று வழங்கப்பட்டது.

2021 செத்தெம்பர் 27 - வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்தின் கீழ் 2021 செத்தெம்பர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரை படுகடன் சட்ட இசைவுத்தாமதமொன்று வழங்கப்பட்டது.

2021 ஒத்தோபர் 26 - அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகளை மீள்வலுவூட்டுவதற்காக தொழிற்படு மூலதனக் கடனை வழங்குவதற்கு சலுகை நியதிகளின் கீழ் மீள்நிதியிடல் திட்டமொன்றாக சௌபாக்யா புத்துயிரளித்தல் வசதி கட்டம் - IV இனை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 ஒத்தோபர் 29 - "சுவசக்தி ஒரு மில்லியன் தொழில்வாய்ப்புக்களை நோக்கி" கடன் திட்டத்தின் கீழ் 2021 செத்தெம்பர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரை படுகடன் சட்ட இசைவுத்தாமதமொன்று வழங்கப்பட்டது.

2021 நவெம்பர் 02 - வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டம், சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புனரமைப்பு செயற்றிட்டம், சௌபாக்யா (சுபீட்ச) திட்டம் மற்றும் சௌபாக்யா புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II , மற்றும் III ஆகியவற்றின் கீழ் சட்ட இசைவுத்தாமத கோரிக்கைகளின் சமர்ப்பிப்பினை ஏற்றுக்கொள்வதற்கான காலவரையறை 2021 நவெம்பர் 15 வரை நீடிக்கப்பட்டது.

2021 திசெம்பர் 21 - இலங்கையில் இறால் பண்ணைகளை வலுவூட்டுவதற்காக சலுகை நியதிகளின் கீழ் வட்டி உதவுத்தொகை கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

நிதியியல் துறை

உரிமம்பெற்ற வங்கிகள்

2021 சனவரி 13 - உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலையாளர்களுக்கு உதவியளிக்கின்ற அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களைப் பரிசீலனையிற்கொண்டு சிறிய மற்றும் நடுத்தரளவு நெல் ஆலையாளர்களுக்கெதிரான அறவிடல் நடவடிக்கைகளை ஆறு மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்துகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 சனவரி 19 - உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்காக வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் 2020ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு முடிவடைந்த பின்னர்

காசுப் பங்குலாபங்களைச் செலுத்துவதற்கும், இலாபத்தினை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கும் அனுமதிக்கப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் பங்குகளை மீண்டும் வாங்குவதிலிருந்தும் அத்தியாவசியமல்லாச் செலவுகளை அதிகரிப்பதிலிருந்தும் விலகியிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட வேளையில், 2021 யூன் 30 வரை மூலதனச் செலவினத்தினை மேற்கொள்ளும் போது தீவிரமான உரிய விழிப்புக் கவனத்துடனும் முன்மதியுடனும் நடந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

2021 சனவரி 25 - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்கள், என்பதை பின்பற்றுவது தொடர்பிலான வழிகாட்டல்களுக்கு, 2021ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட இழப்புக்களைக் கணிக்கும் போது இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகை தொடர்பில் ஏற்புடைத்தான இழப்புக்களை ஏற்படுத்தும் செலுத்தத் தவறுகைகளை 10 சதவீதத்திற்குக் குறைக்கின்ற திருத்தங்களை அறிமுகப்படுத்துகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

- 2021ஆம் ஆண்டிற்கான மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கோரல்கள் மீது ஏற்புடைத்தான இடர்நேர்வு நிறையினை 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைப்பதற்கும் ஈட்டினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட வதிவிட வீடமைப்புக் கடன்களுக்கு ஏற்புடைத்தான இடர்நேர்வு நிறையினை 50 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்குக் குறைப்பதற்குமாக வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மிகையான தளம்பலையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான தாக்கத்தினையும் தவிர்க்கும் பொருட்டு உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் மூன்று மாத காலப்பகுதிக்கு வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதிலிருந்து விலகியிருக்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 மார்ச்சு 10 - பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபட்டுள்ள கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைக்குவிடும் வசதிகளுக்கு 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற ஆறு மாதங்களுக்கு சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்துகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 மார்ச்சு 18 - வங்கிகளிலிருந்து சாத்தியமான வெளிநாட்டுச் செலாவணி பாரிய வெளிப்பாய்ச்சலையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதும் செலாவணி வீதத்தின் மீதும் அவற்றின் தாக்கத்தினையும் பரிசீலனையிற்கொண்டு, 2021 மார்ச்சு 23இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2021 ஏப்பிறல் 09 வரை இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதனை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 மார்ச்சு 19 - சுற்றுலாத் துறையிலுள்ள கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற மற்றுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 ஏப்பிறல் 01 - 2021 ஏப்பிறல் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழான உயர்ந்தபட்ச இழப்பீட்டுக் கொடுப்பனவை ரூ. 600,000இலிருந்து ரூ.1,100,000 வரை அதிகரிப்பதற்கு 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒழுங்குவிதி விடுக்கப்பட்டதுடன் 2021 ஏப்பிறல் 01ஆம் நாளுக்கு முன்னர் உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட/ இடைநிறுத்தப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான பாதுகாப்பின் அதிகரிப்பும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2021 ஏப்பிறல் 09	-	வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான தொகை வெளிப்பாயும் சாத்தியத்தினையும்/ வாய்ப்பினையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதும் செலாவணி வீதத்தின் மீதும் அவை கொண்டிருக்கக்கூடிய தாக்கத்தினையும் பரிசீலனையிற்கொண்டு, 2021 ஏப்பிறல் 23 வரை இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவினை இடைநிறுத்துதலை நீடிக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 ஏப்பிறல் 21	-	நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் மீது முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்கு ஒன்றினை அறிமுகப்படுத்துகின்ற விதத்தில் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் கட்டளையொன்று விடுக்கப்பட்டது. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்குமான அவற்றின் கொடுகடனை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக்கான வெளிநின்ற கடன்வழங்கல் இருப்பிற்கு மேலாக ஆண்டிற்கு 20 சதவீதத்திற்கு குறையாத அதிகரிப்பொன்றினை வழங்குதல் வேண்டும்.
2021 ஏப்பிறல் 23	-	வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான தொகை வெளிப்பாயும் சாத்தியத்தினையும்/ வாய்ப்பினையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான அதன் தாக்கத்தினையும் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினை விடுவிப்பதனையும் பரிசீலனையிற்கொண்டு மறுஅறிவித்தல் வரை இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவினை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 ஏப்பிறல் 25	-	வெளிநாட்டுச் செலாவணியின் மிகையான தளம்பலையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான அதன் தாக்கத்தினையும் தவிர்க்கும் நோக்குடன், மறுஅறிவித்தல் வரை, நிபந்தனைகளுக்குட்பட்டு உடன் திகதிக்கு அப்பாலுள்ள பெறுமதித் திகதியில் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதிலிருந்தும் விலகியிருக்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளைக் கோருகின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 மே 25	-	உண்மைப் பொருளாதாரத்திற்குள் மூலதன உருவாக்கத்தினைத் தூண்டும் பொருட்டும் நாட்டின் வெளிநாட்டு நாணயத் தேவைகளைத் துணைநிரப்பும் பொருட்டும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் ஓராண்டிற்கான குறுங்காலக் கடன்பாடுகள் மீதான தற்போதுள்ள வரையறைகளை நீக்கிய அதேவேளை தற்போதுள்ள மொத்த வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வரையறையினை 10 சதவீதம் வரையில் பேணுவதன் மீதுமான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் தொடர்பில் திருத்தமொன்று விடுக்கப்பட்டது.
	-	கொவிட்-19 உலகளாவிய நோய்ப்பரம்பலின் மூன்றாவது அலையினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிவாரண வழிமுறைகளையும் சலுகைகளை நீடிப்பதனையும் அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டது. நோய்ப்பரவலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வங்கியின் கடன்பாட்டாளர்கள் மீதான சுமையினைத் தளர்த்தும் நோக்குடன் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள் முழுவதும் ஒத்திசைவான விதத்தத்தில் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இச்சுற்றிக்கை விடுக்கப்பட்டது.
2021 யூன் 07	-	கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் கீழ் வங்கித்தொழில் பணிகளை வழங்குவது தொடர்பில் விடுக்கப்பட்ட அனைத்து தொடர்பான பாதுகாப்பு வழிமுறைகளையும் வழிகாட்டல்களையும் கடுமையாகப் பின்பற்றி இன்றியமையாத வங்கித்தொழில் பணிகளை மேற்கொள்வது பற்றி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிப்பதற்காக சுற்றிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 யூன் 16	-	நிறுவனங்களுக்கே உரித்தான அழுத்தங்கள், சந்தை அடிப்படையிலான அழுத்தங்கள் அல்லது இவையிரண்டும் இணைந்த அழுத்தங்களிலிருந்து தோன்றக்கூடிய மூலதனத் திரவத்தன்மை மற்றும் ஏனைய அனைத்து அம்சங்களுடனும் தொடர்பான அதிர்வுகளைக் கையாளக்கூடிய மீட்சித் திட்டங்களைப் பேணுவது பற்றி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிப்பதற்காக வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
	-	ஏனையவற்றுக்கு மத்தியில் இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் ஒவ்வொன்றினதும் 50 சதவீதப் பங்கினை வெளிநாடுகளிலிருந்து புதிய கடன்பாடுகளினூடாக திரட்டப்பட்ட மூலங்களிலிருந்து நிதியிட வேண்டுமென்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இரண்டாந்தரச் சந்தையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் தேசிய சேமிப்பு வங்கியினையும் அனுமதிக்கின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 யூன் 18	-	2011ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளையிலுள்ள அட்டவணையினை பதிலீடு செய்கின்ற, வங்கித்தொழிலின் கீழ் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக தாய் பாத் நாணயத்தினை ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் பற்றி அறிவிக்கும் விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.
2021 யூலை 13	-	உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்துகின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் காசுப் பங்குலாபக் கொடுப்பனவுகளையும் இலாபங்களையும் வெளிநாட்டிற்கு அனுப்புவதனையும் 2021ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு நிறைவடையும் வரை பிற்போடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன; மேலும், மூலதனச் செலவினங்களை மேற்கொள்கின்ற போது கடுமையான உரிய விழிப்புக் கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுகின்ற வேளையில் பங்குகளை மீண்டும் வாங்குவதில் ஈடுபடுவதனையும் அத்தியாவசியமற்ற செலவுகளை அதிகரிப்பதனையும் 2021 திசெம்பர் 31 வரை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.
2021 ஒகத்து 06	-	திருத்தப்பட்டவாறான 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகளை திருத்துகின்ற இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்திற்கு ஏற்புடைத்தான புதிய ஒழுங்குவிதிகள், 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகள் என்பன 2021 ஒகத்து 06ஆம் நாளன்று நடைமுறைக்கு வரும்வகையில் விடுக்கப்பட்டன.
2021 ஒகத்து 21	-	2021 ஒகத்து 20இலிருந்து 2021 ஒகத்து 30 வரையான தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் அனுமதிக்கப்பட்ட தொழிற்பாடுகளைக் குறிப்பிடுகின்ற சுகாதாரப் பணிகள் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் விடுக்கப்பட்ட அனைத்து தொடர்பான பாதுகாப்பு வழிமுறைகளையும் வழிகாட்டல்களையும் கடுமையாகப் பின்பற்றுகின்ற விதத்தில் தடங்கலற்ற அத்தியாவசிய வங்கித்தொழில் பணிகளை மேற்கொள்வதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2021 ஒகத்து 24	-	ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீது உரிமம்பெற்ற வங்கிகளினால் முன்வைக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட வட்டி வீதங்களில் காணப்படும் முரண்பாடுகளைப் பரிசீலனையிற்கொண்டு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் அனைத்து வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீது முன்வைக்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச ஆண்டு பயனுறுதி வாய்ந்த வட்டி வீதம் 5.00 சதவீதம் வரையில் இருத்தல் வேண்டுமென்பதனை அறிவுறுத்துகின்ற நாணய விதிச் சட்டக் கட்டளையொன்று அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் விடுக்கப்பட்டன. வெளிநாட்டு நாணயத்திலமைந்த சிறப்பு வைப்புக் கணக்குகளைப் பொறுத்தவரையில் முன்வைக்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய மேலதிக வட்டி வீதம் மேலே குறிப்பிடப்பட்ட வட்டி வீதங்களை விடக் கூடுதலாகவும் மேலாகவும் இருத்தல் வேண்டும்.

2021 செத்தெம்பர் 01	-	உலகளாவிய நோய்த்தொற்றின் அதிகரிப்பு மற்றும் அதன் விளைவாக வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் என்பனவற்றைப் பரிசீலனையிற்கொண்டு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட சலுகைகளை (2021 ஓகத்து 31 வரை) 2021 திசெம்பர் 31 வரை நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்குச் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2021 செத்தெம்பர் 08	-	உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செலாவணி வீதத்தினதும் திரவத்தன்மையினதும் உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியுடனான நாணயக் கடிதங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிராக தெரிவுசெய்யப்பட்ட அவசியமல்லாத பொருட்களின் இறக்குமதிகளுக்கெதிராக 100 சதவீத வட்டியற்ற காசு அளவுத் தேவைப்பாட்டை விதித்து வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
	-	சில அத்தியாவசியமல்லாத மற்றும் அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிகள் மீது உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்படும் நாணயக் கடிதங்களுக்கெதிராக வட்டியற்ற 100 சதவீத காசு வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவதன் மீது நாணய விதிச் சட்டக் கட்டளையொன்று விடுக்கப்பட்டது.
	-	உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தொடர்பான ஏனைய விடயங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் நோக்கத்திற்காக லங்கா றேடிங் ஏஜென்சி லிமிடெட்டினை ஏற்றுக்கொள்ளத்தக்க வெளிநாட்டுக் கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனமாக அங்கீகரிக்கும் விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2021 செத்தெம்பர் 13	-	சுற்றுலாத் துறையிலுள்ள கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை 2021 ஒத்தோபர் 01இல் ஆரம்பமாகின்ற மற்றொரு ஒன்பது மாத காலப்பகுதிக்கு நீடிப்பது தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2021 செத்தெம்பர் 14	-	இலங்கை கணக்கீட்டு நியமம், 'இ.நி.அ. நியமம்-9': நிதியியல் சாதனங்கள் அத்துடன் வங்கித்தொழில் துறையில் நிலையானதும் முன்மதியுடையதுமான நடைமுறைகளை நிறுவுதல் இவற்றிற்கமைவாக, உரிமம்பெற்ற வங்கிகளிலுள்ள ஏனைய கொடுகடன் வசதிகள் தவிர்ந்த கொடுகடன் வசதிகள் மற்றும் நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் மீது ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தி இணங்கச்செய்யும் நோக்குடன் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 செத்தெம்பர் 30	-	கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் சலுகைகள் எவையும் புதிய பணிப்புரைகளினால் கடுமையாக பாதிக்கப்பட மாட்டாது என்பதை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மற்றும் 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கு பிற்சேர்ப்பு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2021 ஒத்தோபர் 01	-	சில அத்தியாவசியமல்லாத மற்றும் அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிகள் மீது உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்படும் நாணயக் கடிதங்களுக்கெதிராக வட்டியற்ற 100 சதவீத காசு வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவதன் மீது விடுக்கப்பட்ட நாணய விதிச் சட்டக் கட்டளை புறக்கீடு செய்யப்பட்டது.
	-	இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையினை நீக்குகின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 ஒத்தோபர் 05	-	சுற்றுலாத் துறை உள்ளிட்ட, பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபட்டுள்ள கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகளை நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. இதற்கமைய, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட பொது மற்றும் தனிப்பட்ட பயணிகள் போக்குவரத்துப் பணிகளை வழங்குகின்ற வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்கான கோரிக்கைகளை 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழும் சுற்றுலாத் துறையிலுள்ள அத்தகைய வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான கோரிக்கைகளை 2021இன் 10ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழும் வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்பட்டன.
2021 திசெம்பர் 09	-	பன்னாட்டு நியமங்களுடனும் சிறந்த நடைமுறைகளுடனும் இசைந்து செல்லும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளின் தகவல் முறைமைகளையும் தொழில்நுட்ப தளங்களையும் வலுப்படுத்துவதற்காக அவற்றின் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கும் தாக்குப்பிடிக்கும் தன்மைக்குமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 திசெம்பர் 22	-	கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் தொடர்ந்தும் முகங்கொடுக்கப்படுகின்ற சவால்களைப் பரிசீலனையிற்கொண்டு, "முன்முடிவுறுத்தல் நடைமுறையினை நிறைவேற்றுதல்" மற்றும் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் கட்டாய மீள்உரிமையாக்கல் உள்ளடங்கலாக அனைத்து வகையான மீட்பு செயற்பாடுகளையும் 2022 மாச்சு 31 வரை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வங்கிகளைக் கோரி சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்ட அதேவேளை கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அறவிடல் நடவடிக்கைகளையும் 2022 யூன் 30 வரை இடைநிறுத்துவதற்கான தேவைப்படுத்தல் மாற்றமின்றிக் காணப்படுகின்றது.
2021 திசெம்பர் 27	-	ரூ.2 றில்லியன் தொகைக்கு மேல் சொத்துக்களைக் கொண்ட உரிமம்பெற்ற வங்கிகளுக்கான புதிய கட்டண வகையினை அறிமுகப்படுத்தி 2022ஆம் அண்டிற்கு ஏற்புடைய புதிய உரிமக் கட்டண கட்டமைப்பை அறிவிக்கின்ற வருடாந்த உரிமக் கட்டணம் மீதான வங்கித்தொழில் சட்டத் தீர்மானமொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டது.
2021 திசெம்பர் 30	-	தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளையும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயம் தொடர்பில் தற்போது நிலவுகின்ற வட்டி வீதங்களையும் பரிசீலனையிற்கொண்டு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அறிவித்து நாணய விதிச் சட்டக் கட்டளையொன்று விடுக்கப்பட்டது.
2021 திசெம்பர் 31	-	தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளையும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் தற்போது சந்தையில் நிலவுகின்ற வட்டி வீதங்களையும் பரிசீலனையிற்கொண்டு, ஈடு மூலம் பிணையளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அறிவித்து 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளைக்கான திருத்தமொன்று விடுக்கப்பட்டது.
2022 மாச்சு 11	-	அண்மைய இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகள், எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் ரூபாயில் மதிப்பிடப்படும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் தற்போதைய சந்தை வட்டி வீதங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கடன் அட்டை முற்பணங்கள், முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மற்றும் அடகு முற்பணங்கள் மீதான மீளமைக்கப்பட்ட அதிகபட்ச வட்டி வீதங்களை அறிவிக்கு முகமாக 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளையில் திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

- அண்மைய இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகள், எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கிகளினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை நீக்குவதனை அறிவிக்கு முகமாக 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளையில் திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்

2021 சனவரி 01 - மதிப்பீட்டாளர்களின் தகைமைப் பிரமாணங்களைத் திருத்தி, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

2021 பெப்புருவரி 17 - ஊர்திகள் தொடர்பில் வழங்கப்படும் கொடுகடன் வசதிகளுக்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கு முதல் பதிவிற்குப் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில், 80 சதவீத திருத்தப்பட்ட வீதத்துடன் சேர்க்கின்ற திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

2021 மாச்சு 12 - கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் 2021 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து ஆரம்பமாகின்ற ஆறு மாத காலப்பகுதிக்கு சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கோருகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 மாச்சு 19 - 2020 செத்தெம்பர் 30ஆம் நாளன்று விடுக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற மேலுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கோருகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 மாச்சு 31 - கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடுதல் மீதான 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரையினை நடைமுறைப்படுத்துவதனை மூன்று மாத காலப்பகுதிக்குப் பிற்போடுவது தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

- கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நீண்டகால தாக்கம் காரணமாக சவால்மிக்க தொழிற்பாட்டுச் சூழ்நிலையினைக் பரிசீலனையில் கொண்டு, திரவத்தன்மை அழுத்தத்தினை வெற்றிகொள்வதில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் வசதியளிக்கும் பொருட்டு, 2020 செத்தெம்பர் 30ஆம் நாள் விடுக்கப்பட்ட திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைக்கான திருத்தம் 2021 யூன் 30 வரையான மூன்று மாத காலப்பகுதிக்கு மேலும் நீடிக்கப்பட்டது.

2021 ஏப்பிறல் 01 - இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் உயர்ந்தபட்ச இழப்பீட்டுக் கொடுப்பனவினை 2021 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ரூ.600,000 இலிருந்து ரூ.1,100,000 வரை அதிகரிப்பதற்காக 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒழுங்குவிதி விடுக்கப்பட்டதுடன் 2021 ஏப்பிறல் 01ஆம் நாளுக்கு முன்னர் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட/ இடைநிறுத்தப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான பாதுகாப்பின் அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

2021 ஏப்பிறல் 09	-	உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிநாட்டு நாணய கடன்பாடுகளுக்காக நிதியிடல் கடன் அளவுகள் மூலம் தோற்றுவிக்கப்படும் எவையேனும் நிதியியல் தளம்பல்களை நிலைநிறுத்தும் குறிக்கோளுடன் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தை வழங்கியும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை நிறுவியும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.
2021 யூன் 04	-	உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு மேலதிகமாக, நிதியியல் மற்றும் நிதியியல்லாத நிறுவனங்களின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கு மேலும் ஓராண்டு காலப்பகுதிக்கு வசதியளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது என்பது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.
2021 யூன் 09	-	கொவிட்-19 உலகளாவிய நோயத்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான சலுகைகள் மீதான சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கான சலுகைகளை மேலும் நீடிக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் கோரப்பட்டன.
2021 யூலை 05	-	கடன்பாட்டாளர்களின் நிதியியல் இடர்களைப் பரிசீலனையில் கொண்டதன் பின்னர் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கான நிலுவைகளுடன் கூடிய உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் கொடுகடன் வசதிகள் தொடர்பில் ஊர்திகளைப் பறிமுதல் செய்தலை மற்றும் மீள உடமைப்படுத்தலை நிறுத்தி வைக்குமாறு (2021 செத்தெம்பர் 30 வரை) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன.
2021 யூலை 07	-	2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் (கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்) பணிப்புரையின் நடைமுறைக்குவரும் நாள் பிற்போடப்பட்டது.
	-	மாதாந்த அடிப்படையில் அல்லது அதற்குமேல் கொடுகடன் வசதிகளை மீளச்செலுத்துவதற்கான சேத இழப்பின் கீழ் விசேடமாகக் குறிப்பு வகையினையும் படி 3 வகைப்படுத்தலையும் வகைப்படுத்தும் போது முறையே 2022 ஏப்பிறல் 01 மற்றும் 2023 ஏப்பிறல் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 120 மற்றும் 90 தவணை கடந்த நாட்களைப் பின்பற்ற வேண்டுமென உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.
2021 யூலை 09	-	ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும் 2021 திசெம்பர் 31 வரை ரூ.1.0 பில்லியனுக்கும் குறையாத மட்டமொன்றில் மைய மூலதனத்தினைப் பேண வேண்டுமெனவும் அதன் பின்னர் 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.2.0 பில்லியனுக்கும் 2023 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.2.5 பில்லியன் வரையிலும் அதனை அதிகரிக்க வேண்டுமென்பதனை விபரிக்கின்ற குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு தொடர்பில் முதனிலை வணிகர் கம்பனிகளுக்குப் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.
	-	பணிப்புரையானது விசேட இடர்நேர்வு ஒதுக்கு, மூலதன மதிப்பீடு மற்றும் திட்டமிடல் செய்முறை என்பனவற்றைப் பற்றியும் விபரிக்கிறது.
2021 ஒகத்து 06	-	திருத்தப்பட்டவாறான 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகளை இரத்துச் செய்வதன் மூலம் 2021 ஒகத்து 06 திகதியன்று நடைமுறைக்குவரும் விதத்தில் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகளெனப் பெயரிடப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்திற்கு ஏற்புடைத்தான புதிய ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

2021 செத்தெம்பர் 10	-	கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகளை 2021 செத்தெம்பர் 30 வரை மேலும் நீடிக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கேட்டுக் கொள்ளும் விதத்தில் 2021 யூன் 09ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.
2021 செத்தெம்பர் 24	-	லங்கா றேட்டிங் ஏஜென்சி லிமிடெட் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2021 ஒத்தோபர் 06	-	தொடர்பான தரப்பினர்களிடமிருந்தும் அரச அதிகாரிகளிடமிருந்தும் கிடைத்த பல கோரிக்கைகளைப் பரிசீலனையில் கொண்டு, கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை 2022 மார்சு 31 வரை நீடிக்குமாறும் அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கேட்டுக் கொள்கின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2021 ஒத்தோபர் 18	-	முறைசார்ந்த நிதிப்பரிமாற்றல் வழிகளூடாக நாட்டிற்கு உயர்ந்தளவிலான தொழிலாளர் பணவனுப்பல்களை அனுப்புவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்பில் மேலதிக ஊக்குவிப்பினை கொடுப்பனவு செய்யுமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.
2021 நவெம்பர் 01	-	அதிகரிக்கும் திறைசேரி உண்டியல் வீதங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2, 3 மற்றும் 5 ஆண்டுகளைக் கொண்ட தவணை வைப்புக்களின் தற்போதைய வட்டி எல்லைகள் திருத்தப்பட்டுள்ளன.
2021 திசெம்பர் 24	-	2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழான அரசப் பிணையங்கள் தொடர்பான முதலீடானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் திரவச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டது.
2021 திசெம்பர் 31	-	உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்த தன்மையையும் உறுதிசெய்யும் பொருட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் முக்கிய பொறுப்புமிக்க ஆட்கள் தமது முக்கிய பொறுப்புக்களை வினைத்திறன்மிக்க விதத்தில் மேற்கொள்வதற்கு இயலுமாகவிருக்கின்றனர் என்பதை உறுதிசெய்யும் நோக்குடன் முக்கிய பொறுப்புமிக்க ஆட்களின் தகுதி மற்றும் பொருத்தத்தின் மதிப்பீடு தொடர்பில் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.
	-	உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபார நடத்தையில் சிறந்த ஆளுகை நடைமுறைகளை ஊக்குவிக்கும் அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாக்கும் நோக்குடன் கம்பனி ஆளுகை தொடர்பான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.
	-	மூத்த பிரசைகளுக்கான முதலீடுகள் தொடர்பில் அதிகரித்த வருவாய்களை வழங்கும் நோக்குடன் 5 ஆண்டுகளைக் கொண்ட தவணை வைப்புக்கள் மற்றும் 5 ஆண்டுகளைக் கொண்ட படுகடன் சாதனங்களின் தற்போதைய வட்டி எல்லை திருத்தப்பட்டுள்ளது.
2022 சனவரி 31	-	உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடித்தல் தொடர்பான குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைகளை அமைக்கும் நோக்குடன் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடித்தல் தொடர்பான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.
2022 பெப்புருவரி 08	-	வெளிநாட்டில் பணிபுரியும் இவங்கையர்களுக்கு ஊக்கத்தொகையை வழங்கும் நோக்குடன் உள்முக தொழிலாளர்கள் பணவனுப்பல்களின் மூலம் ஏற்படும் கொடுக்கல்வாங்கல் செலவை திருப்திச் செலுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

காப்புறுதி

2021 மார்ச்சு 10	-	காப்புறுதியாளர்களின் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு பங்குலாபம் பிரகடனப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பில் 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்கக் காப்புறுதி கம்பனிகளுக்கு காப்புறுதித்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 96ஆம் நியதிகளுக்கமைவாக 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.
2021 மார்ச்சு 23	-	காப்புறுதிக் கம்பனிகள் அவர்களது சாதனங்கள்/ பூட்கைப் படிவங்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கருத்துப்படி நியாயமானவை மற்றும் ஒப்புரவானவை என இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அச்சாதனங்களை அறிமுகப்படுத்தலாம் என்பதனை அவர்களுக்கு அறிவிப்பதற்காக 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.
	-	அனைத்து பொதுக் காப்புறுதி கம்பனிகளும் பூட்கை ஆவணங்களை ஆரம்ப உத்தேச திகதிக்கு முன்னதாக குறைந்தபட்சம் 30 தினங்களுக்குள் சமர்ப்பிப்பதற்கு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் நீண்டகால காப்புறுதிக் கம்பனிகள் பூட்கை ஆவணங்களை ஆரம்ப உத்தேச திகதிக்கு 45 நாட்களுக்கு முன்னதாக சமர்ப்பிப்பதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.
2021 மார்ச்சு 24	-	குறியீடுகளை வழங்குவது மற்றும் குறியீடுகளை மாற்றுவது மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கும் காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 96(அ)இன் நியதிகளுக்கமைவாக 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.
2021 ஏப்பிறல் 08	-	மூன்றாந்தரப்பு உந்து ஊர்தி காப்புறுதியை ஊக்குவித்தல்/ விளம்பரப்படுத்தலைத் தடைசெய்வது தொடர்பில் அனைத்துப் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.
2021 யூலை 29	-	நிதியியல் கையாடல் அல்லது மோசடிக் காரணங்களுக்காக பணி முடிவுறுத்தப்பட்ட ஆட்களை தொழிலுக்கமர்த்துவதிலிருந்தும் விலகியிருக்குமாறு அனைத்துக் காப்புறுதியாளர்கள், தரகர்கள் மற்றும் இழப்புக்களைச் சீரமைப்போரை பணிக்கின்ற விதத்தில் காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 96(அ)இன் நிதிகளுக்கமைவாக 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது. எனினும், காப்புறுதியாளரினால், தரகரினால், இழப்புச் சீரமைப்பவரினால் அல்லது நிறுவன ரீதியிலான முகவரினால் ஆளொருவரின் முடிவுறுத்தல் முன்னெடுக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய சட்ட ஆட்கள், குறிப்பாக முடிவுறுத்தலை எடுப்பதற்கான அத்தகைய தீர்மானத்திற்கு முன்பு நியாயமான நீதிக் கொள்கைகளைப் பின்பற்றி, உரிய செயன்முறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
2021 ஓகத்து 30	-	எதிர்பாராத பொறுப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தும் சந்தர்ப்பத்திலும் காப்புறுதியாளர்களின் பகிர்ந்தளிப்பின் போதும் தொடர்பான கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகும் விதத்தில் 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை திருத்தப்பட்டது.
2021 செத்தெம்பர் 06	-	தொலைத்தொடர்பூட்டல் பணி வழங்குவோரின் தளத்தினையும் (செல்லிடத் தொலைபேசிக் காப்புறுதி) அவற்றுடன் தொடர்பான விடயங்களையும் பயன்படுத்துவதனை முடிவுறுத்துகின்றமை தொடர்பாக காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 96(அ)இன் நியதிகளுக்கமைவாக 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.
2021 திசெம்பர் 06	-	நீண்டகால காப்புறுதி தொழில் மற்றும் பொது காப்புறுதி தொழிலிற்காக செலுத்தத்தக்க உயர்ந்தபட்ச தரகுப்பணம் காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 88இன்

		கீழ் மேற்கொள்ளப்பட்ட தற்போதுள்ள தீர்மானம் 10 புதிய தீர்மானம் 10 உடன் பதிலீடு செய்யப்பட்டுள்ளதுடன் காப்புறுதி கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகர்களுக்கு விடுக்கப்பட்டது.
2021 திசெம்பர் 16	-	காப்புறுதியாளர்கள் மற்றும் காப்புறுதி தரகர்களின் முதன்மை அலுவலர்கள் மீதான 2016 மே 13ஆம் திகதியன்று விடுக்கப்பட்ட தற்போதைய 09ஆம் இலக்கப் பணிப்புரையானது 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரையுடன் பதிலீடு செய்யப்பட்டு காப்புறுதி கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகர்களுக்கு விடுக்கப்பட்டது.

மூலதனச் சந்தை

2021 சனவரி	-	கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் ஆலோசனையுடன் பங்குத் தரகுக் கம்பனிகளுக்காக அனைத்தையுமுள்ளடக்கிய வழிகாட்டல்களின் தொகுதியொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது.
2021 மாச்சு	-	பங்குச் சந்தையின் முதலீட்டாளர் தளத்தினை பரந்த அடிப்படையில் விரிவாக்குவதற்காக டிஜிட்டல் தளத்திற்கு வசதியளிக்கப்பட்டது.
	-	கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள கருமபீடத் தளத்தினூடாக தங்க பத்திரத்தினை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது.
2021 ஏப்பிறல்	-	சிறப்பு நோக்கங்களுக்கான கையேற்றல் கம்பனிகளைப் பட்டியல்படுத்துவதை வசதியளிப்பதற்கான முன்மொழிவுக்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது.
2021 யூன்	-	கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் கருமபீடத் தளம் தொடர்பில் கம்பனிப் படுகடன் பிணையங்கள் மீதான மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக மத்திய வைப்பக முறைமை விதிகள் திருத்தப்பட்டன.
	-	விதிகளை வழங்குதல் மற்றும் கடன்வழங்கல் மாதிரியினை திருத்தியமைத்தல் மூலம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் கடன்வழங்கல் முறைமையினையும் வழங்கல் எதிர் கொடுப்பனவுப் பொறிமுறையினையும் மேம்படுத்தும் விதத்தில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கப்பட்டது.
	-	இஸ்லாமிய மூலதனச் சந்தைச் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது.
	-	கட்டமைக்கப்பட்ட ஆணைச்சீட்டுகளினை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது.
	-	பசுமை முறிகளை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது.
	-	நிதியங்களை ஈட்டுவது போன்ற இணையவழித் தளங்களினூடாக நிதியங்களைத் திரட்டுவதற்கு வசதியளிப்பதற்காக கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது.
	-	பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் புதிய மசோதாவினை இயற்றுவது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது.
2021 யூலை	-	பங்குச் சந்தைத் தொழிற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்தும் கட்டம் 2 ஆரம்பிக்கப்பட்டது.
	-	பிணையங்கள் கடன்படுதல் மற்றும் கடன்வழங்கலூடாக பாதுகாப்பற்ற சாதனங்களை விற்பனை செய்வதனை அறிமுகப்படுத்துவதற்காக கொள்கை ரீதியிலான அனுமதி வழங்கப்பட்டது.

2021 நவெம்பர் - கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் உள்நாட்டுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பங்குகளைப் பட்டியற்படுத்துவதை வசதிப்படுத்துவதற்கு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி பெறப்பட்டது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2021 யூன் 09 - லங்காகியூஆர் முன்முயற்சியுடன் அதிக எண்ணிக்கையான வணிகர்கள் இணைந்துகொள்வதை ஊக்குவிக்கின்ற தேவையைப் பரிசீலனையிற்கொண்டு, லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களுக்காக உயர்ந்தபட்ச வணிக கழிவு வீதத்தை 0.5 சதவீதமாக பேணுகின்ற காலப்பகுதி 2021 திசெம்பர் 31இல் முடிவடைகின்ற ஆறு மாதங்களினால் மேலும் நீடிக்கப்பட்டதுடன் திசெம்பரில் இக்காலப்பகுதி மறுஅறிவித்தல் வரும் வரை நீடிக்கப்பட்டது.

2021 திசெம்பர் 27 - லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களுக்காக உயர்ந்தபட்ச வணிகக் கழிவு வீதத்தை 0.5 சதவீதமாகப் பேணுகின்ற காலப்பகுதி மறுஅறிவித்தல் வரை மேலும் நீடிக்கப்பட்டது.

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

2021 ஏப்பிறல் 27 - இணையவழிக் கொடுப்பனவுத் தளங்களுடன் தொடர்புபட்டுள்ள தரப்பினர்கள் மீது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2021 ஏப்பிறல் 28 - வெளிநாடுகளில் பண மீளெடுப்பனவுகளில் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளுடான வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களுடன் தொடர்புபட்ட சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களின் அதிகரித்த போக்கைக் கருத்திற்கொண்டு வாடிக்கையாளர் பணியைப் பெற்றுக்கொள்ள தொடங்குகின்ற நேரத்திலும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற போதும் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளைச் செயலாற்றுவதற்கு ஆலோசனை வழங்கும் விதத்தில், 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2021 மே 04 - கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலைக் காலப்பகுதியில் தோற்றம்பெறுகின்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான மேலதிக வழிமுறைகள் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கச் சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2021 யூலை 20 - பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நோக்கங்களுக்காக சிசிரிவி தொழிற்பாடுகள் தொடர்பாக நிதியியல் நிறுவனங்களுக்கான 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வழிகாட்டல் வழங்கப்பட்டது.

2021 ஒத்தோபா 04 - 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட வைப்புக்கள் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2022 சனவரி 10 - 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நோக்கங்களுக்காக சிசிரிவி தொழிற்பாடுகள் தொடர்பாக நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களின் திருத்தம் தொடர்பில் 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

2021 சனவரி 01 - "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற

வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களின் செயற்பரப்பினை இலங்கையில் வதிகின்ற இலங்கையர்களினால் புரியப்படும் தொழிலொன்றினூடாக ஈட்டப்படுகின்ற வெளிநாட்டு நாணய வருமானம் மற்றும் வெளிநாட்டிலுள்ள தொழிலின் தன்மையைப் பொறுத்து வழங்கப்படும் பணிகளுக்காகப் பெறப்படும் வெளிநாட்டு நாணயத்திலான வருமானம் என்பனவற்றிற்கு விரிவாக்குமாறும், 2020 திசெம்பர் 28 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செய்யப்பட்ட அனைத்து வெளிநாட்டு நாணய வருமான மாற்றல்களுக்கும் ஊக்குவிப்புத் திட்டத்தினைப் பிரயோகிக்குமாறும் உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன.

2021 சனவரி 15 - நிபந்தனைகளுக்குட்பட்டு, வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளிலிருந்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளைப் பாதுகாப்பதற்காக தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணி வருவதற்கும் அனுமதிக்கின்ற விதத்தில் அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 சனவரி 27 - வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு, மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் 10 சதவீதத்தினைக் கட்டாய அடிப்படையில் மத்திய வங்கிக்கு விற்பனை செய்வதற்காக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் தொடர்பாக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 பெப்புருவரி 03 - உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பெருமளவு வினைத்திறனை எய்தும் நோக்குடன் அதிகாரம்பெற்ற வணிகர்களினதும் ஏனைய ஆர்வலர்களினதும் நடைமுறைப் பிரச்சனைகளையும் கரிசனைகளையும் கட்டுப்படுத்துகின்ற விதத்தில் தற்போதுள்ள தொடர்பான ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் இரத்துச் செய்வதன் மூலம் பின்வரும் ஒழுங்குவிதிகளும் கட்டளைகளும் 2021 மாச்சு 22 இலிருந்து தொழிற்பாட்டிற்கு வரும் விதத்தில் விடுக்கப்பட்டன:

- இலங்கையில் வதியும் ஆட்களினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்களுக்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/34ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.
- இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களினால் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்களுக்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.
- புலம்பெயர்ந்தவர்களினால் மேற்கொள்ளப்படும் நிதி அனுப்பல்களுக்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.
- பல்வேறு விதமான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்களுக்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.
- வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கங்களுக்காக கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.
- இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயம் அல்லது இலங்கை நாணயத்தின் ஏற்றுமதி அல்லது இறக்குமதி

மீதான 2020ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 8இன் கீழான கட்டளை (2213/39ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டது.

- "இலங்கையில் வதிகின்ற ஆட்களின்" தீர்மானம் மீது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் கீழான கட்டளை (2213/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டது.

2021 பெப்புருவரி 18 - கப்பலேற்றப்படும் நாட்களிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் மற்றும் இலங்கையில் கிடைக்கபெறும் சொல்லப்பட்ட மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து இருபத்தைந்து சதவீதத்தை இலங்கை ரூபாவாக உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக மாற்றுதல் என்பவை தொடர்பில் 2021 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகளுக்கமைவாக நாணய விதிச் சட்டத்தின் கீழ், 2215/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

- நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2021 பெப்புருவரி 18ஆம் நாளன்று விடுக்கப்பட்ட அரச வர்த்தமானி மற்றும் விதிகளின் கீழ், இலங்கை ரூபாவிற்கு மாற்றுவது கட்டாயமாக இருக்கின்றவிடத்து மாற்றல் செய்யப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தில் 50 சதவீதத்தினை வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு மத்திய வங்கிக்கு உரிமம்பெற்ற வங்கிகள் விற்பனை செய்வதற்கான திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 09 - மாற்றிக் கொள்வதற்கு ஏற்புடைத்தான காலப்பகுதியை 14 நாட்கள் வரை நீடித்துக் கொள்ளும் விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டுவருவதற்கான விதிகள் 2218/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 17 - இக்காலப்பகுதியில் நிலவிய சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு, மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் 10 சதவீதத்தினை மத்திய வங்கிக்கு விற்பனை செய்வதற்கான தேவைப்பாட்டினைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் விதத்தில் "உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

- இக்காலப்பகுதியில் நிலவிய சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு கட்டாயமாக மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தில் 50 சதவீதத்தினை மத்திய வங்கிக்கு விற்பனை செய்வது தொடர்பான தேவைப்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் விதத்தில் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டு வருதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 18 - 2021 பெப்புருவரி 03ஆம் நாள் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் பின்வரும் பணிப்புரைகள் (2021 மாச்சு 22இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில்) விடுக்கப்பட்டன:

- இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரின் சார்பில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு, நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்துவதற்காக இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- தகைமையுடைய வதியும்/ வதியாத தனிப்பட்டவர்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்காகத் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வதியும் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவோர்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்காக வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இராஜதந்திர தூதரகங்கள்/ பணியாட்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற வெளிநாட்டு நாணய மற்றும் இலங்கை ரூபாக் கணக்குகளுக்காக இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராஜதந்திர ரூபாக் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- 55 வயதிற்கு மேற்பட்ட மற்றும் “இலங்கை - எனது கனவு இல்ல நிகழ்ச்சித்திட்டம்” இன் கீழ் வதியும் விசாவில் இலங்கையில் நீண்ட காலம் தங்கியிருக்க விரும்புகின்ற மூத்த வெளிநாட்டு பிரசைகளினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற (சிறப்புக் கணக்குகள்) கணக்குகளுக்காக மூத்த வெளிநாட்டுப் பிரசைகளின் மீது 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற “வதியும் விருந்தினர் திட்டம்” என்பதன் கீழ் இலங்கைக்கு வருகை தரும் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களாக வரக்கூடியவர்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற கணக்குகளுக்காக (சிறப்புக் கணக்குகள்) வதியும் விருந்தினர் திட்டத்தின் மீது 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வியாபார வெளிநாட்டு நாணய கணக்கு உடமையாளர்களாகவுள்ள, வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்றவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை வழங்குவதற்காக வெளிநாட்டு வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் உடமையாளர்களுக்கான கடன் வசதிகளின் மீது 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கைப் பிரசைகளுக்கு வெளிநாட்டு நாணயத்திலும் இலங்கை நாணயத்திலும் குறித்துரைக்கப்பட்ட கடன்களை/ முற்பணங்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வழங்குவதற்காக, வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு (புலம்பெயர்ந்தவர்கள் தவிர) கடன்களையும் முற்பணங்களையும் வழங்குவதன் மீது 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- மற்றொரு நாட்டில் வதிவதற்கான நிரந்தர வதிவிட விசாவினை வைத்திருக்கின்றவர்களுக்கும் இரட்டைப் பிரசாவுரிமை உடையவர்களுக்கும் வெளிநாட்டு நாணயத்திலும் இலங்கை ரூபாவிலும் குறித்துரைக்கப்பட்ட கடன்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வழங்குவதற்காக மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர்களுக்கும் இரட்டைப் பிரசாவுரிமையுடைவர்களுக்குமான கடன்கள் மீது 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கும் சந்தைப்படுத்துவதற்குமாக குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களக் கண்காணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் அனுமதியினை வழங்குவதற்காக இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீது 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்காக வெளிநாட்டுச் செலாவணி விற்பனை (படிவம் 1) வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு (படிவம் 2) மீது 2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கைக்கு வெளியேயான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பணவனுப்பல்களை மேற்கொள்வதற்காக வதியும் ஆட்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற கணக்குகளுக்காக வெளிமுக முதலீட்டுக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கையில் மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உள்முகப் பணவனுப்பல்களை வழிப்படுத்துவதற்காக வதியாத முதலீட்டாளர்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற கணக்குகளுக்காக உள்முக முதலீட்டுக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- புலம்பெயர் படிகளை வழிப்படுத்துவதற்காக புலம்பெயர்ந்தவர்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற நாணயங்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குட்பட்டு, இலங்கையில் பெறப்பட்ட நடைமுறை வருமானத்தினை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக புலம்பெயர்ந்தவர்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற கணக்குகளுக்காக புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற புலம்பெயர்ந்தவர்களினாலும் இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள/ கூட்டிணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்/ கம்பனிகளினாலும் திறந்து பேணப்பட்டு வருகின்ற இலங்கை ரூபாக் கணக்குகளுக்காக வதிவற்றோர் ரூபாக் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின 18ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டுக் கடன்வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட கடன் பெறுகைகளை வரவு வைப்பதற்காக, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற கணக்குகளுக்காக வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- நடைமுறை மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தலுக்கு ஏற்புடைத்தான குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள், உத்தரவாதங்கள் மீது 2021ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 மார்சு 26 - வதிவோர் வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தினை முறைசார்ந்த வழிப்படுத்தல்களுக்குள் கவர்ந்து கொள்கின்றதொரு வழிமுறையாக, அவர்களது உள்நாட்டுச் சுற்றுலாவிடுதி செலவுகளைச் வெளிநாட்டு நாணயத்தில் செலுத்துவதற்கு வசதியொன்றினை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் வெளிநாட்டு நாணயத்தினைத் தமது உடமையில் வைத்திருக்கும் இலங்கையில் வதியும்

		ஆட்களிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்துள்ள சுற்றுலாவிடுதிகளை அனுமதிக்கும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றாக இல.2220/69ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.
2021 மார்சு 29	-	மத்திய வங்கியினால் நடாத்தப்படும் வாங்கல்-விற்றல் ஐ.அ.டொலர்/இலங்கை ரூபாய் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பரப் பரிமாற்றல் ஏலங்களில் பங்கேற்கின்ற போது, தகைமை, ஏற்புடைய வீதங்கள், காலப்பகுதி அத்துடன் பொறிமுறை போன்றவற்றை உள்ளடங்குகின்ற தேவைப்படுத்தல்களின் புதிய தொகுதியொன்றை பின்பற்றுமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளையும் கேட்டுக்கொள்ளும் விதத்தில் வாங்கல்-விற்றல் "ஐ.அ.டொலர்/இலங்கை ரூபாய் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பரப் பரிமாற்றல் ஏலங்களில் பங்கேற்றல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.
2021 ஏப்பிறல் 07	-	தகைமையுடைய ஆட்களினால் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கான காலப்பகுதி 2020 ஏப்பிறல் 08 இலிருந்து மேலும், 24 மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்கான ஒழுங்குவிதிகளாக 2222/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.
	-	சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல், அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள், வரவுகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கொண்ட பிரமாணங்களை அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு குறித்துரைக்கின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 ஏப்பிறல் 09	-	நாணய விதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டு வருதல் தொடர்பாக விடுக்கப்பட்ட விதிகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்வதற்கான ஏற்புடைத்தான காலப்பகுதியை 30 நாட்கள் வரை நீடிக்கும் விதத்திலும் மாற்றிக்கொள்ளும் தேவைப்பாட்டினை 10 சதவீதம் வரை குறைத்துக் கொள்ளும் விதத்திலும் மேலும் திருத்திக் கொள்வதற்காக 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இலங்கைக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளைக் கொண்டுவரும் விதிகளாக 2222/60ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.
2021 மே 04	-	இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாவிடுதிகள் தாம் வழங்கிய பணிகள் தொடர்பில் இலங்கையில் வதியும் ஆட்களிடமிருந்து வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக்கொள்வதனை அனுமதிக்கின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 மே 25	-	2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்றவர்களாகவுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அவர்களின் துணை நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது முன்னொப்புதலுடன் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை வழங்குவதற்கு அனுமதிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றாக 2229/5ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.
2021 மே 28	-	இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை அதன் தற்றுணிபிற்கிணங்க 10 சதவீதத்திற்குக் குறையாத பகுதியளவு விதிவிலக்கல்களை வழங்கலாம் என்ற ஏற்பாட்டுடன் கூடிய விதத்தில் இலங்கை ரூபாவில் மாற்றும் தேவைப்பாட்டினை 25 சதவீதம் வரை உயர்த்துகின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கைக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளைக் கொண்டுவரும் விதிகளாக 2229/9ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

	-	"உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2021 சனவரி 27ஆம் நாள் மீண்டும் கொண்டு வரப்பட்டன.
	-	"ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டு வருதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2021 பெப்புருவரி 18ஆம் நாளன்று மீண்டும் கொண்டு வரப்பட்டன.
2021 யூன் 11	-	அனுமதிக்கப்பட்ட பற்றொன்றாக, கணக்குடமையாளரின் உள்நாட்டுச் செலவுகளுக்காக வெளிநாட்டு நாணயத்தின் எடுப்பனவுகள் செய்வது உட்பட இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராஜதந்திர ரூபாக் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 யூன் 17	-	2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகளின் இணைப்பு Iஇனைத் திருத்துகின்ற விதத்தில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 யூன் 30	-	ஒழுங்குவிதிகளின் கீழ், ஆறு மாத மற்றும் பன்னிரண்டு மாத காலப்பகுதிகளுடன் திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்குகளை ஒன்றுசேர்க்கின்ற காலம் அத்தகைய வைப்புக்கள் செய்யப்பட்ட ஆரம்பத் திகதியிலிருந்து உயர்ந்தபட்சம் 24 மாதங்களை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, அக்கணக்குகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதனை அனுமதிக்கின்ற விதத்தில் ஒழுங்குவிதிகளாக 2234/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் விடுக்கப்பட்டது.
	-	வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க, இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்வதற்காக இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தினைக் கடன்பட்டிருக்கின்ற, இலங்கையிலுள்ள 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, குறிப்பிட்ட கடன்பாட்டில் 50 சதவீதத்தினைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்ற ஒழுங்குவிதிகளாக 2234/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் விடுக்கப்பட்டன.
2021 யூலை 02	-	ஆறு மாத காலப்பகுதிக்கு வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது பின்வரும் வழிமுறைகளை விதிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றாக 2234/49ஆம் இலக்க அதிவிசேட அரச வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது: • புலம்பெயர் படியின் கீழ் உடனடி குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து (அதாவது புலம்பெயர்ந்தவரின் பெற்றோர், பாட்டன், பாட்டி, பெற்றோரில் ஒருவருக்குப் பிறந்த பிள்ளை மற்றும் வாழ்க்கைத் துணை) புலம்பெயர்ந்தரொருவரினால் நாணய நன்கொடையாகப் பெறப்பட்ட நிதிகளை வெளியில் அனுப்புவதை இடைநிறுத்தல். • பொதுவான அனுமதியின் கீழ், புலம்பெயர் படிகளை ஏற்கனவே கோரியுள்ள புலம்பெயர்ந்தவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்குகளினூடான புலம்பெயர் படிகளின் கீழான நிதிகளின் அனுப்புதல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 இற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல். • பொதுவான அனுமதியின் கீழ், முதற்றடவையாக புலம்பெயர் படிகளைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் படிகளை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- பொதுவான அனுமதியின் கீழ், மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவர்களின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகளினூடாக புலம்பெயர்ந்தவர்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடைமுறை வருமானம் அல்லது ஒன்றுசேர்ந்த நடைமுறை வருமானத்தினை (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக் கொடை, ஓய்வூதியம் அல்லது வேறு ஏதேனும் ஓய்வுகால நன்மைகள் உள்ளடங்கலாக) உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்றவரும் மற்றொரு நாட்டின் தற்காலிக விசாவினைப் பெற்றுக் கொண்டிருப்பவருமாகிய தனிப்பட்ட ஆளின் இக்குறிப்பிட்ட வகையான விசா அவ்வாளினை அந்நாட்டில் எதிர்காலத் திகதியொன்றில் நிரந்தர வதிவிட அந்தஸ்தினை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுக்கொள்ளத் தகைமையுடையதாக்குமிடத்து அத்தகைய ஆளுக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- மற்றொரு நாட்டின் தற்காலிக வதிவிட விசாவின் கீழ் இலங்கையை விட்டுச்செல்ல எண்ணியுள்ள இலங்கையில் வதியும் எவரேனுமாளுக்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 இற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- பின்வருவன நீங்கலாக, இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் முதலீடு செய்யும் நோக்கத்திற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக வெளிமுகப் பணவனுப்பல்களை செய்வதற்கு வழங்கப்பட்ட பொதுவான அனுமதி இடைநிறுத்தப்படுகிறது:

  - வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களிலிருந்து நிதியிடப்படவுள்ள முதலீடுகள், அல்லது;

  - தற்போதுள்ள சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு இணங்கியொழுகும் விதத்தில், ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடுகள் மீது பிரயோகிக்கத்தக்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் அந்நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது இணை அலுவலகத்தில் செய்யப்படவுள்ள மேலதிக முதலீடுகள், அல்லது;

  - தற்போதுள்ள சட்டத்தின் அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, வெளிநாடுகளில் ஏற்கனவே கூட்டிணைக்கப்பட்டுள்ள/ நிறுவப்பட்டுள்ள துணை நிறுவனங்கள் அல்லது கிளை நிறுவனங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் முதலீட்டினைப் பெறுகின்றவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காகச் செய்யப்படவுள்ள மேலதிக முதலீடுகள்/ நிதிய உள்ளீடுகளை (ஏற்புடைத்தானவாறு) உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல், அல்லது;

  - தற்போதுள்ள சட்டத்தின் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, தகைமையுடைய வதியும் கம்பனிகளினால், வெளிநாடுகளில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள தொடர்பு அலுவலகங்கள், சந்தைப்படுத்தல், முகவர், செயற்றிட்டம், பிரதிநிதிகள் அல்லது ஏதேனும்

அதையொத்த அலுவலகங்களைப் பேணுகின்ற நோக்கத்திற்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் வரையிலான பணவனுப்பல்கள்.

- இக்கட்டளை நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் இலங்கையில் வதியும் ஆளொருவரினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது/ அத்துடன் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளுக்கிணங்க, பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வகைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 7(10)இன் நியதிகளில் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து அனுமதியினை வழங்குவதற்கான அதிகாரத்தினை நாணயச் சபை கொண்டிருக்கிறது:

  - வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனிலிருந்து நிதியிடப்படவுள்ள உத்தேச முதலீடு, அல்லது;

  - தற்போதுள்ள சட்டத்தின் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதத்தில், முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகத்தில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடுகளுக்கு ஏற்புடைத்தான விதத்தில், அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்யும் விதத்தில் மேற்கொள்ளப்படவுள்ள உத்தேச முதலீடு.

2021 யூலை 06 - 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள் ஒழுங்குவிதிகளை (2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) இலங்கை ரூபாவிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாணயத்திலுள்ள படுகடன் பிணையங்களிலும் முதலீடு செய்வது தொடர்பில் ஏற்பாடுகளை உள்ளீடு செய்தல் மற்றும் நீக்குதல் தொடர்பில் திருத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 29ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றாக 2235/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

2021 யூலை 08 - சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல் தொடர்பான பிரமாணங்கள் அனுமதிக்கப்பட பற்றுக்கள், வரவுகள், ஏனைய தேவைப்பாடுகள் மற்றும் 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கப் பணிப்புரைகளை இரத்துச் செய்தல் என்பனவற்றைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 யூலை 30 - கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணி வருதல், அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள், வரவுகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளின் பிரமாணங்களைக் குறித்துரைக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

	-	வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு தொடர்பில் 2021 மார்ச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்கு மேலதிகமாக, கணக்குடமையாளர்களினால் 2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கப் பணிப்புரைகளின் கீழ் திறக்கப்பட்ட சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த வருவாய்களின் மாற்றலை உள்ளடக்கிய வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளிற்கான அனுமதிக்கப்பட்ட பற்றொன்றாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பட்டியலிடப்பட்ட பங்குகள் அல்லது படுகடன் பிணையங்கள் தொடர்பில் செய்யப்பட்ட முதலீடுகள் காரணமாக கிடைத்த ஏதேனும் வருமானம் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2021 ஓகத்து 06	-	"ஏற்றுமதியாளர்களின் தொடர்பான வெளிநாட்டு நாணய கணக்குகளுக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை வரவு வைத்தல்" மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இதற்கமைய, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் ஆவணப்படுத்தல்கள் நிறைவடையும் வரை எடுப்பனவுகள் அத்துடன்/ அல்லது மாற்றல்கள் மீதான நிபந்தனைகளுக்குட்பட்டு, வங்கியில் பேணப்படும் ஏற்றுமதியாளரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு(கணக்குகளுக்கு) உடனடியாக ஏற்றுமதிப் பெறுகைகளை வரவு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டன.
2021 ஒத்தோபர் 28	-	அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி இலங்கையில் கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதலின் தேவைப்பாடுகளை விதிக்கும் விதத்தில், 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகளுக்கமைவாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2251/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.
2021 நவெம்பர் 01	-	"ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" தொடர்பில் நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2021 ஒத்தோபர் 28அன்று வழங்கப்பட்ட தொடர்புடைய வர்த்தமானி மற்றும் விதிகளின் திருத்தத்துடன் வெளிநாட்டுச் செலாவணியை மத்திய வங்கிக்கான விற்பனையின் அடிப்படையை திருத்துவதன் மூலம், "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. அதற்கமைய, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இலங்கை ரூபாய்க்கு மாற்றுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ள ஏற்றுமதிப் பெறுகைகளின் மீதமுள்ள 10 சதவீதத்தை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு கோரப்பட்டுள்ளன.
2021 திசெம்பர் 01	-	2021 திசெம்பர் மாதகாலப்பகுதியில் வெளிநாட்டு நாணய வருவாயை ஈட்டுகின்ற இலங்கை தொழிலாளர்களுக்கு ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூ. 8.00 மேலதிக ஊக்குவிப்பொன்றை வழங்குவதற்கு "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.
2021 திசெம்பர் 13	-	அனைத்து வெளிநாட்டு நாணயமும், முறையான வங்கித்தொழில் துறையினூடாக அனுப்பப்படுவதை ஊக்குவிக்கும் விதத்தில் "கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்தல், மாற்றுதல் அத்துடன் முதலீடு செய்தல் என்பவற்றுக்காக பொது மக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்ட அதேவேளை, பொது மக்களுக்கு பல ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டதுடன் 2021 திசெம்பர் மாதகாலப்பகுதியில் இலங்கை ரூபாய்களுக்கு மாற்றப்படும் அத்தகைய வெளிநாட்டு நாணயங்களின் 20 சதவீதத்தை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறும் உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.
2021 திசெம்பர் 15	-	2021 யூலை 02ஆம் திகதியிடப்பட்ட 2234/49ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில்

		வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையின் செல்லுபடி காலத்தை 2022 சனவரி 02இலிருந்து மேலும் ஆறு மாதகாலத்திற்கு நீடிக்கும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2258/23ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.
	-	கையிலுள்ள வெளிநாட்டு நாணயத்தைப் பற்றிய பிரகடனம் தொடர்பில் பொது மக்களினால் சமர்ப்பிக்கப்படுவதற்கான புதிய தேவைப்பாடொன்றை உள்ளடக்குவதற்கு "கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்தல், மாற்றுதல் அத்துடன் முதலீடு செய்தல் என்பவற்றுக்காக பொது மக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட 2021 திசெம்பர் 13 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.
2021 திசெம்பர் 27	-	இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து கம்பனியின் பங்கு மூலதனத்திற்குள் அவ்வாறு முதலீடொன்றாக கிடைக்கப்பெற்ற பெறுகைகளிலிருந்து நடைமுறை கொடுக்கல்வாங்கல்களை (சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் - முதலீட்டினைப் பெறுபவர்) வசதியளிப்பதற்கு முதலீட்டினைப் பெறுபவருக்கான சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை திறத்தல் மற்றும் பேணுதல் தொடர்பான பிரமாணங்களை குறித்துரைத்து அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
	-	2021ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கப் பணிப்புரைகளின் நியதிகளுக்கமைவாக கிடைக்கபெற்ற பங்கு மூலதனத்தின் பெறுகைகளிலிருந்து இப்பணிப்புரையின் கீழ் கிடைப்பெறுகின்ற கடன் வசதிகளின் கொடுப்பனவை அனுமதித்து, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குடமையாளர்களுக்கான கடன் வசதி தொடர்பான 2021 மார்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பணிப்புரையை திருத்தம் செய்து அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
	-	மாற்றல் செய்யப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களின் 25 சதவீதத்தையும், (மறுஅறிவித்தல் வரும்வரை) ஏற்றுமதிப் பெறுகைகளின் மீதமுள்ள 25 சதவீதத்தையும் (மறுஅறிவித்தல் வரும்வரை) கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்ட 25 சதவீதத்தையும் (2021 திசெம்பர் காலப்பகுதியில்) உரிமம்பெற்ற வங்கிகள் மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு கோருவதற்கு "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்", "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" அத்துடன் "கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்தல், மாற்றுதல் அத்துடன் முதலீடு செய்தல் என்பவற்றுக்காக பொது மக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட 2021 மே 28, 2021 நவெம்பர் 01 மற்றும் 2021 திசெம்பர் 13 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.
	-	மேலும், "கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்தல், மாற்றுதல் அத்துடன் முதலீடு செய்தல் என்பவற்றுக்காக பொது மக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" தொடர்பில் விடுக்கப்பட்ட 2021 திசெம்பர் 13 திகதியிடப்பட்டு 2021 திசெம்பர் 15 அன்று திருத்தப்பட்டவாறான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் 2022 சனவரி 31 வரை நீடிக்கப்பட்டன.
2022 சனவரி 21	-	இலங்கைக்கு வெளியே வதிகின்ற நபர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் வழங்கப்படும் பணிகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட மற்றும் அச்சபையினால் உரிமம்பெறப்பட்ட விடுதி பணி வழங்குநர்களை கட்டாயப்படுத்தி, 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க விடுதி பணி வழங்குநர்கள் விதிகளினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியை ஏற்றுக்கொள்வதற்கமைவாக, நாணய நிதிச் சட்டத்தின் கீழ் 2263/41ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

2022 சனவரி 31	-	இத்தகைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களின் நடைமுறைக்குவரும் காலப்பகுதிகளை நீடிப்பதற்கும் மற்றும் மறுஅறிவித்தல் வரும்வரை மாற்றல் செய்யப்பட்ட கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்தின் 25 சதவீதத்தை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு உரிமம்பெற்ற வங்கிகளை கோருவதற்கும் முறையே, உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம், "கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்தல், மாற்றுதல் அத்துடன் முதலீடு செய்தல் என்பவற்றிற்காக பொதுமக்களுக்கான ஊக்குவிப்புக்கள்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட 2021 திசெம்பர் 01 மற்றும் 2021 திசெம்பர் 27ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.
2022 பெப்புருவரி 24	-	உள்நாட்டு கல்விசார் நிறுவனத்தின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையரின் (புலம்பெயர்ந்தவரை தவிர) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து கல்விசார் நிறுவனங்களின் மாணவர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள உடனடி குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புடைய கற்கைநெறி அல்லது மேலதிக வகுப்புக் கட்டணங்களின் கொடுப்பனவை அனுமதித்து, தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2021 மார்ச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் அண்டின் 4ஆம் இலக்க பணிப்புரையின் திருத்தமொன்றாக 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
	-	வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையரின் (புலம்பெயர்ந்தவரை தவிர) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து உள்நாட்டு கல்விசார் நிறுவனத்தின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மாணவர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள உடனடி குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புடைய கற்கைநெறி அல்லது மேலதிக வகுப்புக் கட்டணங்களின் பெறுகையை அனுமதித்து, தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2021 மார்ச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் அண்டின் 5ஆம் இலக்க பணிப்புரையின் திருத்தமொன்றாக 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2022 மார்ச்சு 11	-	அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி இலங்கையில் கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவிற்கு கட்டாயமாக மாற்றியமைக்க வேண்டியதன் தேவைப்பாடுகளை திருத்தும் விதத்தில், 2021ஆம் அண்டின் 5ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகளிற்கமைவாக, நாணய விதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட 2251/42ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தி, 2022ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகளிற்கமைவாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2270/66ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.
	-	வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நோக்கங்களிற்காக குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக "தாய் பாட்" ஐக் குறித்துரைக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளின் ஒழுங்குவிதிகள்

2021 சனவரி 05	-	2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு இறக்குமதித் தடைகளின் கீழுள்ள டயர் இறக்குமதிகள் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2209/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 பெப்புருவரி 11	-	2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு கட்டுப்பாடுகளின் கீழுள்ள மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் சேலைகள் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2214/56 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2021 ஏப்பிறல் 06	-	2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு கட்டுப்பாடுகளின் கீழுள்ள தாவர எண்ணெய் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2222/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2021 ஏப்பிறல் 23	-	2020ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு, கட்டுப்பாடுகளின் கீழுள்ள நடமாடும் செயலமர்வுகளுடன் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2224/43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
	-	2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு கட்டுப்பாடுகளின் கீழுள்ள நடமாடும் செயலமர்வுகளுடன் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2224/44ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2021 மே 06	-	கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கியின் சில விடயங்களின் இறக்குமதியைத் தடை செய்வதற்கும் மற்றையவற்றிற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தினை விதிப்பதன் மீதும் 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2226/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2021 யூன் 11	-	தங்கம் மற்றும் முகக் கவசங்கள் மீது இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தினை விதிக்கின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2231/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
	-	ஒட்சிசன் மற்றும் சுவாசப் பரிசோதனைக் கருவிகளின் ஏற்றுமதி மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் விதத்தில் 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2231/17ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)
	-	2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு, கட்டுப்பாடுகளின் கீழான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2231/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது).
2021 யூலை 31	-	"தடை செய்யப்பட்ட" வகையிலிருந்து "இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம்" என்ற வகையின் கீழ் தொடர்புடைய கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கியை கொண்டுவருகின்ற 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2238/45ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 செத்தெம்பர் 30 - வெள்ளைச் சீனி மீதான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தை அகற்றி 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2247/12ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 நவெம்பர் 03 - அரிசி இறக்குமதிகள் மீதான தற்காலிகத் தடையை அகற்றி 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2252/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 நவெம்பர் 30 - 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2256/23ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

- இரசாயன வளமாக்கிகள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் களைக் கொல்லிகள் ஆகிய இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை அகற்றி,
- வானொலி அலை வழிகாட்டல் உதவிக் கருவிகள் மீது இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தை விதித்து,
- கிளைபோசேட்டு களைக்கொல்லி மீதான இறக்குமதியை தடைசெய்து,

2022 சனவரி 12 - 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2262/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

- நீளமான அரிசி வகை மீதான தற்காலிகத் தடையை அகற்றி,
- புதிய இயைபுறு முறைமைக் குறியீட்டிற்கமைவாக மீன் துண்டங்கள் மீதான தடைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து,

2022 மார்சு 09 - இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் வேண்டப்படுகின்ற பொருட்களின் இறக்குமதிப்பட்டியலுடன் 2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2270/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது) விடுக்கப்பட்டன.

விலைத் திருத்தங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மற்றும் சுகாதார அமைச்சினால் விதிக்கப்பட்ட பல்வேறு பொருட்களின் அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன:

திகதி	விடயம்	திருத்தம்
2021.02.08	வெள்ளைச் சீனி, உலர்த்திய மிளகாய் (நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை), உருளைக்கிழங்கு (இறக்குமதி செய்யப்பட்டது), கீரி சம்பா	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன.
2021.06.18	தேங்காய் (13 அங்குலத்திற்கு மேல் சுற்றளவு கொண்டவை, 12இற்கும் 13 அங்குலத்திற்குமிடையிலான சுற்றளவு கொண்டவை, 12 அங்குலத்திற்குக் குறைவான சுற்றளவு கொண்டவை)	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன.
2021.07.25	திரவப் பெற்றோலிய வாயு (எல்பி) 18 லீற்றர் உருளை (9.6 கி.கிறாம்)	மாவட்ட அடிப்படையிலான உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டன.
2021.08.12	பொலிமறேஸ் செயின் றியக்ஷன் (பிசிஆர்)	பரிசோதனை மற்றும் அறிக்கைக்கு உயர்ந்தபட்ச சில்லறை விலையாக ரூ.6,500 விதிக்கப்பட்டது.
	விரைந்த அன்ரியன் பரிசோதனை (ஆர்ஏரி)	பரிசோதனை மற்றும் அறிக்கைக்கு உயர்ந்தபட்ச சில்லறை விலையாக ரூ.2,000 விதிக்கப்பட்டது.

திகதி	விடயம்	திருத்தம்
2021.08.19	தெரிவுசெய்யப்பட்ட மருந்து பொருட்கள் மற்றும் மருத்துவச் சாதனங்கள்	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டன.
2021.09.02	வெள்ளைச் சீனி	இறக்குமதியாளரின் உயர்ந்தபட்ச மொத்த விற்பனை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.116 விதிக்கப்பட்டது.
	வெள்ளைச் சீனி (பொதியிடப்படாதது)	உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.122 விதிக்கப்பட்டது.
	வெள்ளைச் சீனி (பொதியிடப்பட்டது)	உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.125 விதிக்கப்பட்டது.
	மண்ணிற அல்லது சிவப்புச் சீனி (பொதியிடப்படாதது)	உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.125 விதிக்கப்பட்டது.
	மண்ணிற அல்லது சிவப்புச் சீனி (பொதியிடப்பட்டது)	உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.128 விதிக்கப்பட்டது.
	கீரி சம்பா	உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.120 இலிருந்து ரூ.125 இற்கு அதிகரிக்கப்பட்டது.
	வெள்ளை/ சிவப்பு சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (சூதுறு சம்பா நீங்கலாக)	உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.98 இலிருந்து ரூ.103 இற்கு அதிகரிக்கப்பட்டது.
	வெள்ளை/ சிவப்பு சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக் கறுப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக)	உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.96 இலிருந்து ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது.
	வெள்ளை/ சிவப்பு பச்சை அரிசி	உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.93 இலிருந்து ரூ.95 இற்கு அதிகரிக்கப்பட்டது.
2021.09.04	விரல் நுனியில் நாடித் துடிப்பை அளக்கும் கருவி	உயர்ந்தபட்ச சில்லறை விலையாக அலகிற்கு ரூ.3,000 விதிக்கப்பட்டது.
2021.09.29	கீரி சம்பா, வெள்ளை/ சிவப்பு சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (சூதுறு சம்பா நீங்கலாக), வெள்ளை/ சிவப்பு நாடு - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக் கறுப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக), வெள்ளை/ சிவப்புப் பச்சை அரிசி மற்றும் வெள்ளை/ சிவப்புப் பச்சை சம்பா	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன.
2021.10.08	பால்மா (முழு ஆடைப் பால்மா, கொழுப்புச் சத்து நீக்கிய பால்மா மற்றும் குழந்தைகளுக்கான பால்மா), சிமெந்து, திரவ பெற்றோலிய வாயு (எல்பி) மற்றும் கோதுமை மா	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன.

திகதி	விடயம்	திருத்தம்
2021.11.03	மைசூர் பருப்பு, நெத்தலிக் கருவாடு (தாய்லாந்து மற்றும் துபாயிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை), கடலை, பயறு, தகரத்திலடைத்த மீன் (இறக்குமதி செய்யப்பட்டவை), வெள்ளைச் சீனி, கோதுமை மா, முழு ஆடைப் பால்மா (இறக்குமதி செய்யப்பட்டவை மற்றும் உள்நாடு - 400 கிறாம் மற்றும் 1 கி.கி), உறைய வைக்கப்பட்டவை அல்லது குளிரூட்டப்பட்ட புறொயிலர் கோழி இறைச்சி (முழு இறைச்சி - தோலுடன் அல்லது தோல் நீக்கியது), உருளைக்கிழங்குகள் (இறக்குமதி செய்யப்பட்டவை), பெரிய வெங்காயம் (இறக்குமதி செய்யப்பட்டவை), உலர்த்திய மிளகாய் (நொருக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை), கருவாடு (கட்டா மற்றும் சாளையா), சஸ்டோஜன் (400கி), மாசிக் கருவாடு, தேங்காய், புறொயிலர் கோழி இறைச்சி (முழு இறைச்சி - தோலுடன் அல்லது தோல் நீக்கியது), சோளம் (எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தக்கூடியது), தகரத்திலடைத்த மீன், மண்ணிற அல்லது சிவப்புச் சீனி	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன.
2022.01.28	உள்நாட்டில் பொதி செய்யப்பட்ட/ போத்தலில் அடைக்கப்பட்ட குடி நீர்	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன.
2022.02.28	பரசிட்டமோல் மாத்திரைகள்/ வில்லைகள் (500 மி.கி)	உயர்ந்தபட்ச சில்லறை விலை மாத்திரை/வில்லையொன்றிற்கு ரூ. 1.71 இலிருந்து மாத்திரை/வில்லையொன்றிற்கு ரூ. 2.30 இற்கு அதிகரித்தது.
2022.03.15	பரசிட்டமோல் மாத்திரைகள்/ வில்லைகள் (500 மி.கி) உள்ளடங்கலாக தெரிவுசெய்யப்பட்ட மருந்துபொருட்கள்	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டன.

வரித் திருத்தங்கள்

வருமான வரிகள்

2021 மே 13 - 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் சட்டம் 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டதன் மூலம் முக்கியமாக 2020 நவெம்பரில் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளும் 2020 சனவரியிலும் 2021 ஏப்பிறலிலும் செய்யப்பட்ட ஏனைய அறிவிப்புக்களும் சட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டன.

2021 யூன் 29 - 2020 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில், 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் வருமான வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் இயலுமைப்படுத்தப்பட்ட பணிகளை குறித்துரைத்து 2234/6ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

வரி விடுமுறைகள்

2021 ஏப்பிறல் 01 - இரண்டு ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் புதிய தொழில்களிலிருந்து கிடைக்கப்பெற்ற அல்லது அடையப்பெற்ற (மூலதன இலாபங்கள் நீங்கலாக) ஆதாயங்கள் மற்றும் இலாபங்களுக்காக வரி விடுமுறைகள் வழங்கப்பட்டன:

- கட்டடவாக்கக் கைத்தொழிலில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்கு இலங்கையில் உருவாக்கப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பிரித்தெடுப்பு தளத்தில்

மீள்சுழற்சி செய்யப்பட்ட நிர்மாணப் பொருட்களின் விற்பனையை முன்னெடுப்பதற்காக பத்து ஆண்டுகளுக்கு வரி விலக்களிப்பு வழங்கப்பட்டது.

- தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி எண்ணக்கருவின் கீழ் தரப்படுத்தப்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஏதேனும் நிறுவனத்திலிருந்து தொழிற்கல்வியை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்னர் தனிநபரொருவரினால் 2021 ஏப்பிறல் 01அன்றோ அல்லது அதற்கு பின்னரோ ஆரம்பிக்கபட்ட ஏதேனும் தொழிலுக்காக ஐந்து ஆண்டுகளுக்கு வரி விலக்களிப்பு வழங்கப்பட்டது.

- இலங்கையில் படகுகள் அல்லது கப்பல்களை தயாரித்து அப்படகுகள் அல்லது கப்பல்களின் விற்பனைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற அல்லது அடையப்பெற்ற ஏதேனும் ஆதாயங்கள் மற்றும் இலாபங்கள் தொடர்பில் வதியும் நபரொருவரினால் ஆரம்பிக்கப்பட்ட முன்னெடுப்பிற்காக ஏழு ஆண்டுகளுக்கு வரி விலக்களிப்பு வழங்கப்பட்டது.

- 100 மெகாவாட்டிற்கு குறையாத சூரிய சக்தி அல்லது காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இயலாற்றலைக் கொண்டு நிறுவப்பட்டு அச்சக்தியை தேசிய மின்கட்டமைப்பிற்கு வழங்கியதுமான எந்தவொரு "மீள்புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டத்திற்கும்" ஏழு ஆண்டுகளுக்கு வரி விலக்களிப்பு வழங்கப்பட்டது.

- இலங்கையிலுள்ள உள்நாட்டு தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தொடர்பூட்டல் கோபுரங்களையும் தொடர்புடைய சாதனங்களையும் நிர்மாணிக்கின்ற அத்துடன் நிறுவுகின்ற அல்லது அத்தகைய நிர்மாணத்திற்கான அல்லது நிறுவுதலிற்கு தேவையான தொழில்நுட்ப பணிகளை வழங்குகின்ற எந்தவொரு வதியும் நபரினால் 2021 சனவரி 01 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஆரம்பிக்கப்பட்ட எந்தவொரு முன்னெடுப்பிற்கும் ஐந்து ஆண்டுகால வரி விலக்களிப்பு வழங்கப்பட்டது.

வருமான வரி விலக்களிப்புக்கள்

2021 ஏப்பிறல் 01 - 2021 ஏப்பிறல் 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருவனவற்றுக்கு வருமான வரி விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டன:

- கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டதும் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம்பெறப்பட்ட இலங்கை உண்மைச் சொத்து முதலீட்டு நம்பிக்கைக்கு விற்பனை செய்யப்பட்ட, பரிவர்த்தனை செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட காணிகள் அல்லது கட்டடங்களின் தேறலிலிருந்து ஆளொருவரினால் ஈட்டப்பட்ட இலாபங்கள்.

- எந்தவொரு இலங்கை உண்மைச் சொத்து முதலீட்டு நம்பிக்கையிலிருந்தும் அலகுவைத்திருப்பவரொருவரினால் மேற்கொள்ளப்படும் வியாபாரமொன்றின் அல்லது முதலீடொன்றின் மூலதனச்சொத்தின் தேறலிலிருந்து இலாபமாக அடையப்பெற்ற அலகுகள் அல்லது தொகைகளின் தேறலில் கிடைக்கப்பெற்ற பங்குலாபங்கள் அல்லது இலாபங்கள்.

- ஏதேனும் நலன்புரிச் சங்கத்திற்கும் (உறுப்பினர்களின் சேமிப்புக்களை ஊக்குவிக்கின்ற கருணை நிதியம் உள்ளடங்கலாக) திரட்டப்படும் அல்லது பெறப்படும் வட்டி.

- அத்தகைய வைப்பானது அம்மதிப்பீட்டு ஆண்டிற்கான அதன் இறக்குமதி செலவினத்தை ஈடுசெய்வதற்கு பேணப்படுமாயின், எந்தவாரு உள்நாட்டு வங்கியிலும் வெளிநாட்டு நாணயத்தில் அத்தகைய வைப்பில் திறக்கப்பட்டு பேணப்படும் ஏதேனும் வைப்பில் ஏதேனும் பல்தேசிய கம்பனிக்கு திரட்டப்படும் அல்லது பெறப்படும் வட்டி.

- இலங்கை அரசாங்கப் பிணையங்களிலிருந்தான சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சமூர்த்தி சங்கம் அடிப்படையிலான வங்கிகளுக்கு திரட்டப்படும் அல்லது பெறப்படும் வட்டி அல்லது கழிவு.

- 2021 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் ஐ.அ.டொலர் 100 மில்லியனிற்கும் குறையாத கூட்டு முதலீடொன்றை மேற்கொண்ட இலங்கை அரசாங்கத்தின் மூலமாக அல்லது சார்பில் வழங்கப்பட்ட அத்துடன் வர்த்தக வங்கியொன்றினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் பெறப்பட்ட அல்லது அடையப்பெற்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தேறலிலிருந்தான இலாபங்கள்.

- எந்தவொரு தங்கம், இரத்தினக்கற்கள் அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதி வியாபாரத்திலிருந்து அல்லது இலங்கைக்கு கொண்டுவரப்படுகின்ற இரத்தினக்கற்களை வெட்டுதல் மற்றும் செப்பனிடுதல் அத்துடன் வெட்டி செப்பனிடப்பட்ட பின்னர் ஏற்றுமதி செய்யப்பட்ட வியாபாரத்திலிருந்து ஈட்டப்பட்ட அல்லது அடையப்பெற்ற இலாபங்கள் அல்லது ஆதாயங்கள். வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட அத்தகைய இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் வங்கியொன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுகின்றன.

- தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி எண்ணக்கருவின் கீழ் தரப்படுத்தப்பட்டதும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஏதேனும் தொழிற்கல்வி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ஏதேனும் தொழிற்கல்வி நிறுவனத்தினால் ஈட்டப்பட்ட அல்லது அடையப்பெற்ற ஆதாயங்கள் மற்றும் இலாபங்கள். நிறுவனமானது கடந்த ஆண்டின் மாணவர் உள்வாங்கலுடன் ஒப்பிடுகையில் அத்தகைய மதிப்பீட்டு ஆண்டிற்கான அந்நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அதன் மாணவர் உள்வாங்கலை இரட்டிப்பாக்கியிருப்பின், விலக்களிப்பானது ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு கிடைக்கப்பெறும்.

- இலாபங்களையும் வருமானத்தையும் ஈட்டிய அத்துடன் அதன் வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கு அல்லது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலிருந்து பங்குகளை அல்லது ஏதேனும் பிணையங்களை கையகப்படுத்தவதற்கு அல்லது ஏதேனும் திறைசேரி உண்டியல், திறைசேரி முறி அல்லது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை கையகப்படுத்துவதற்காக இலங்கையில் முதலீடு செய்வதன் மூலமாக குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகாலப்பகுதிக்கு அத்தகைய மொத்த இலாபத்தையும் பிடித்துவைத்துள்ள இலங்கையின் நிரந்தர தாபனமொன்றினூடாக இலங்கையில் வியாபாரமொன்றினை கொண்டு நடாத்துகின்ற வதிவற்ற கம்பனியொன்றிற்கான பணவனுப்பல் வரியானது (பணவனுப்பட்ட இலாபத்தில் 14 சதவீதத்தை கொண்ட வீதத்தில்) விலக்களிக்கப்பட்டது. விலக்களிப்பானது மூன்று ஆண்டுகாலப்பகுதிக்கு கிடைக்கப்பெறுகின்றது.

பெறுமதிசேர் வரி

2021 பெப்புருவரி 01 - ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகளின் குறிப்பிட்ட ஆடைகளின் உள்ளூர் நிரம்பல் மீது துண்டு அடிப்படையில் பிரயோகிக்கத்தக்க பெறுமதிசேர் வரி (இணங்குவிப்புக் குறியீடு அத்தியாயம் 61, 62 மற்றும் 63இன் கீழ் வகைப்படுத்தப்பட்டது) 2021 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.100 இலிருந்து ரூ.25 இற்குக் குறைக்கப்பட்டது (உள்நாட்டு இறை வரித் திணைக்களப் பொது அறிவித்தல் - PN/VAT/2021-01).

2021 மே 13 - 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் 2021ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டமையின் மூலம் 2019 திசெம்பரிலிருந்து நடைமுறைக்கு வந்த பெறுமதிசேர் வரிக் குறைப்பும் 2020 சனவரியிலிருந்து நடைமுறைக்குவந்த பெறுமதிசேர் வரியினைப் பதிவுசெய்வதற்கான ஆரம்ப மட்டத்தின் அதிகரிப்பும் முக்கியமாக சட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டன.

2021 யூன் 29 - 2021 ஏப்பிறல் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில், 2021ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் பெறுமதிசேர் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் இயலுமைப்படுத்தப்பட்ட பணிகளை குறித்துரைக்கும் விதத்தில் 2234/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

2022 மார்ச்சு 31 - 2022 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான நிதியியல் பணிகள் வழங்கலில் பெறுமதிசேர் வரி வீதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும் பெறுமதிசேர் வரியிலிருந்து குறித்த பொருட்கள் மற்றும் பணிகளை விலக்களிப்பதற்கும் 2022ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் (திருத்தம்) சட்டத்தினால் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் திருத்தப்பட்டது.

கலால் தீர்வை

2021 சனவரி 01 - சுற்றுலாவிடுதி உரிமம் (FL/7), சுற்றுலாச் சபை ஒப்புதலளித்த மற்றும் அறைகள் 5 அல்லது கூடுதலான சுற்றுலாச் சபையல்லாத ஒப்புதலளிக்கப்பட்ட சுற்றுலாவிடுதிகள், சுற்றுலாவிடுதி குடிபானச்சாலை உரிமம் (FL/8), உணவக உரிமம் (சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்படாத உணவகங்களுக்கானவை) (FL/11), வாடிவீட்டு உரிமம் (FL/12) மற்றும் பணிமனைகளிலான நுகர்வு (FL/22B) (சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்படாத பணிமனைகளுக்கானவை) என்பனவற்றுக்கான வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டன (2208/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 சனவரி 07 - இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஏதேனும் உரிமம் வழங்கப்பட்ட தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு போத்தலில் அடைக்கப்பட்டு வழங்கப்படும் கள்ளின் மீதான கலால் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.50 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.25 இற்குக் குறைக்கப்பட்டது (2209/42ஆம் இலக்க அதிவிசேட அரச வர்த்தமானி அறிவித்தல்).

2021 சனவரி 11 - 2021ஆம் ஆண்டிற்கான வெறியக்குடிவகையின் பயன்பாட்டிற்காகப் பிரயோகிக்கப்படுகின்ற உறுதிச்சான்றுக் கட்டணத்தின் கொடுப்பனவிலிருந்து 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர விடுதிகள்; 5 நட்சத்திர விடுதி மற்றும் மேற்குறிப்பிட்ட நட்சத்திர விடுதிகள்/ சிறு விடுதிகள் போன்ற சில விடுதிகள் விலக்களிக்கப்பட்டன (2210/2ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 நவெம்பா 12 - உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெறியக்குடிவகை மீதான கலால் தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது. (2253/41ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்):

விடயம்	2019.12.03 இலிருந்து நடைமுறையிலுள்ள வரி (மதுசாரம் லீற்றர் ஒன்றிக்கு ரூ.)	2021.11.13 இலிருந்து வரித் திருத்தம் (மதுசாரம் லீற்றர் ஒன்றிக்கு ரூ.)
விசேட சாராயம்	3,800	4,180
வெல்லப்பாகு/ பனஞ் சாராயம்/தென்னஞ் சாராயம்	4,050	4,460
நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வெறியக்குடிவகை	4,150	4,570
பியர் (மதுசாரத்தின் சதவீதம் 5 சதவீதத்தை விடவும் குறைவானது)	3,200	3,300
பியர் (மதுசாரத்தின் சதவீதம் 5 சதவீதத்தை விட அதிகமானது அல்லது சமமானது)	3,200	3,450
வைன்	3,200	3,300

2022 சனவரி 01 - சில விடுதிகள் 2022 மார்ச்சு 31 வரையில் வெறியக்குடிவகையின் பயன்பாட்டிற்கான பிரயோகிக்கத்தக்க அங்கீகார கட்டணத்தின் கொடுப்பனவிலிருந்து 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர விடுதிகள்; 5 நட்சத்திர விடுதி மற்றும் மேற்குறிப்பிட்ட நட்சத்திர விடுதிகள்/ சிறு விடுதிகள் போன்ற சில விடுதிகள் விலக்களிக்கப்பட்டன (2260/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

- சுற்றுலாவிடுதி உரிமம் (FL/7), சுற்றுலாச் சபை ஒப்புதலளித்த மற்றும் அறைகள் 5 அல்லது 5 இற்கு மேற்பட்ட அறைகளையுடைய ஒப்புதலளிக்காத சுற்றுலாவிடுதிகள், சுற்றுலாவிடுதி குடிபானச்சாலை உரிமம் (FL/8), உணவக உரிமம் (சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்படாத உணவகங்களுக்கானவை) (FL/11), வாடிவீட்டு உரிமம் (FL/12) மற்றும் பணிமனைகளிலான நுகர்வு (FL/22B) (சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்படாத பணிமனைகளுக்கானவை) என்பவற்றுக்கான வருடாந்த மதுபான உரிமக்கட்டணங்கள் 2022 மார்ச்சு 31 வரை விலக்களிக்கப்பட்டன (2260/79ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

கலால் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்)

2021 ஏப்பிறல் 05 - திறைசேரிச் செயலாளரின் ஒப்புதலுக்குட்பட்டு, இலங்கைப் பொலிசிற்குப் பொறுப்பான தொடர்பான அமைச்சின் செயலாளரது விதந்துரைப்புக்களின் மீது இலங்கை பொலிசாருக்குக் கொள்வனவு செய்யப்பட்ட 2,000 முச்சில்லு வண்டிகளுக்கு கலால் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2222/2ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

- ஊர்திகளைத் தயாரித்தல்/ பொருத்துதல் கைத்தொழில் மற்றும் ஊர்திகளின் பாகங்களைத் தயாரிக்கின்ற கைத்தொழில்களுக்கான நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதுடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்ளூரில் பொருத்தப்பட்ட/ தயாரிக்கப்பட்ட உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகள் மீது புதிய தீர்வை அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது (2222/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 ஏப்பிறல் 22 - நடமாடும் செயலமர்வு ஊர்திகளின் மீதான கலால் தீர்வை வீதங்கள் திருத்தப்பட்டன (2224/24ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 ஓகத்து 03 - திறைசேரிச் செயலாளரின் ஒப்புதலுக்குட்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் விதந்துரைப்பின் மீது இன்றியமையாத கள நடவடிக்கைகளுக்கான 52 நீர்த்தாங்கிகள் மற்றும் 62 இரட்டை அறை ஊர்திகளின் இறக்குமதிகளுக்கு கலால் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2239/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 நவெம்பர் 12 - சிகரெட்டுக்கள் மீதான கலால் வரி பின்வருமாறு திருத்தப்பட்டது (2253/42ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்):

விடயம்	2019.12.01 இலிருந்து நடைமுறையிலுள்ள வரி (ஒவ்வொரு 1,000 சிகரட்டுக்களுக்கு ரூ.)	2021.11.13 இலிருந்து வரித் திருத்தம் (ஒவ்வொரு 1,000 சிகரட்டுக்களுக்கு ரூ.)
<60 மி.மீ.	13,360	6,750
60 - 67 மி.மீ.	22,300	28,850
67 - 72 மி.மீ.	37,650	41,100
72 - 84 மி.மீ.	43,100	46,600
>84 மி.மீ.	48,350	51,800

சுங்கத் தீர்வை

பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

விடயம்	திகதி	சுங்க இறக்குமதித் தீர்வை (லீற்றரொன்றிற்கு ரூ.)	சுங்கத் தீர்வை விலக்கல் (லீற்றரொன்றிற்கு ரூ.)	ஏற்புடைத்தான தீர்வை (லீற்றரொன்றிற்கு ரூ.)
பெற்றோல் (92 ஒக்ரேன்)	2020.12.31	50.00	18.00	32.00
	2021.02.02	50.00	29.00	21.00
	2021.03.25	50.00	45.00	5.00
பெற்றோல் (95 ஒக்ரேன்)	2020.12.31	50.00	16.00	34.00
	2021.02.02	50.00	8.00	42.00
	2021.03.25	50.00	24.00	26.00
தன்னியக்க டீசல்	2020.12.31	25.00	20.00	5.00
	2021.02.02	25.00	14.00	11.00
	2021.03.25	25.00	25.00	0.00
சிறப்பு டீசல்	2020.12.31	25.00	15.00	10.00
	2021.02.02	25.00	-	25.00
	2021.03.25	25.00	10.00	15.00

குறிப்பு: 2020 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்கு வந்த மூன்று மாத காலப்பகுதிக்காக விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணம் 2021 பெப்புருவரி 02 அன்று இரத்துச் செய்யப்பட்டது.

2021 ஓகத்து 11 - பால் மா இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்கல் கி.கிறாமொன்றுக்கு ரூ.210இலிருந்து ரூ.15இற்கு குறைக்கப்பட்டது (இலங்கை சுங்க வெப்தளத்தின் சுங்கத் தீர்வை மற்றும் வரி மாற்றங்கள் - TIP/TP/01/47 (Vol. 2).

பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்டம்

2021 சனவரி 12 - முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றினைச் செய்துள்ளதும் சுங்க உற்பத்தி முறித் திட்டத்தின் கீழ் அல்லது ஏற்றுமதிச் செயன்முறைத் திட்டத்திற்கான தற்காலிக இறக்குமதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான தொழில்முயற்சியொன்றினால் ஏற்றுமதி செய்யப்படவுள்ள பொருட்களின் தயாரிப்புச் செய்முறையூடாக உருவாக்கப்பட்ட கழிவு/ விரைய ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து அத்தொழில்முயற்சியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தம்/ பேணல் வேலைகளின் செயன்முறையினூடாக உருவாக்கப்பட்ட பொருட்களுக்கும் செஸ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2210/09ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 மார்சு 15 - ஓடுகள் மற்றும் சுகாதாரப் பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை திருத்தப்பட்டது (2219/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 மார்சு 17 - 2019 மார்சு 06 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ, செயற்றிட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஐ.அ.டொலர் 50 மில்லியனை அல்லது அதற்கும் கூடுதலான தொகையினை முதலீடு செய்கின்ற உபாய அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக ஏதேனும் தொழில்முயற்சியினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்களுக்குச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தல் காலத்தின் போது அல்லது குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் நிருமாணக் காலத்தின் போது ஆனால் வர்த்தகத் தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு செஸ்ஸிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2219/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 சனவரி 11 - அரிசி, மீன்பிடி உற்பத்திகள் மற்றும் திரவ பெற்றோலிய வாயுவுடன் தொடர்புடைய துணைப்பொருட்களுக்காக உருவாக்கப்பட்ட இணங்குவிப்பு குறியீடுகளுக்கமைய தற்போதைய செஸ் தீர்வை வீதங்கள் நீடிக்கப்பட்டன (2262/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

சிறப்புப் பண்டத் தீர்வை

பல பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

திகதி	விடயம்	திருத்தம்
2021.01.13	பெரிய வெங்காயம், சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை) மற்றும் சீனி	சிறப்புப் பண்டத் தீர்வையின் விதிப்பு மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2210/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.01.18	துருவப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட சீஸ், கொத்தமல்லி, மஞ்சள் (நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை மற்றும் ஏனையவை) மற்றும் உழுத்தம்மா	சிறப்புப் பண்டத் தீர்வையின் விதிப்பு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2211/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.02.11	நெத்தலி	சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.1 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.100 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2214/58ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	கருவாடு மற்றும் உருளைக்கிழங்கு	சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது (2214/58ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.03.03	மெக்கரல், ஜக் மற்றும் கோஸ் மக்கரல், உழுந்து, தட்டைப்பயறு, கௌபி, தினை மற்றும் குரக்கன்	சிறப்புப் பண்டத் தீர்வை விதிப்பு ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2217/23ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.04.13	பெரிய வெங்காயம், சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை) மற்றும் சீனி	சிறப்புப் பண்டத் தீர்வை விதிப்பு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2223/2ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.04.26	மீன் (உடன், குளிரூட்டப்பட்டவை அல்லது உறைய வைக்கப்பட்டவை), மாசிக் கருவாடு, பயறு, மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்த்தியவை) மற்றும் கிவிப்பழம்	சிறப்புப் பண்டத் தீர்வை விதிப்பு ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2225/1ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.04.27	தேங்காய்த்துருவல்கள்	கி.கிறாமொன்றிற்கு ரூ.300 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது (2225/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.04.27	தேங்காய்த்துருவல்கள்	கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின் மீது மாதமொன்றுக்கு மொத்தமாக 13,000 மெ.தொன்கள் வரை அரசுக்குச் சொந்தமான பி.சி.சி லங்கா லிமிடெட் மூலமான தேங்காய்த்துருவல்கள் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.300 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை மூன்று மாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2225/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

திகதி	விடயம்	திருத்தம்
2021.04.27	உருளைக்கிழங்கு	சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.50 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2225/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.05.17	யோகட், சின்ன வெங்காயம், உள்ளி, பீஸ் ((முழு மற்றும் உடைத்தவை), சிக்பீஸ் (முழு மற்றும் உடைத்தவை) பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), தோடம்பழங்கள் (உடன் மற்றும் உலர்த்தியவை), எலுமிச்சம்பழங்கள் (உடன் மற்றும் உலர்த்தியவை), திராட்சை (உடன் மற்றும் உலர்த்தியவை), அப்பிள், குயின்ஸஸ், மிளகாய் (உலர்த்தியவை, நொருக்கப்படாதவை), மிளகாய் (நொருக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை), சீரகம், வெந்தயம், சோளம், நிலக்கடலை (கோதுடன்), மாஜரின், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் முகக் கவசங்கள்	சிறப்புப் பண்டத் தீர்வை ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2228/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.06.14	கிளமன்ரைன்ஸ் (உடன் மற்றும் உலர்த்தியவை), போமலஸ் (உடன் மற்றும் உலர்த்தியவை) உட்பட திராட்சைப்பழம், பியர்ஸ், அப்பிறிகோட், புளிப்பான செறிஸ் (புறுனஸ் செறஸஸ்) செறிஸ் (ஏனையவை), பீச்சஸ் (நெக்ரறன்ஸ் உட்பட), உலர் திராட்சை மற்றும் சுலோஸ், மரக்கறிக் கொழுப்பு மற்றும் எண்ணெய் அவற்றின் பிரிவுகள் மற்றும் மாஜரின் (ஏனையவை)	சிறப்புப் பண்டத் தீர்வை ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2232/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.07.18	துருவப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட சீஸ், கொத்தமல்லி, மஞ்சள் (நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை மற்றும் ஏனையவை) மற்றும் உழுத்தம்மா	சிறப்புப் பண்டத் தீர்வை ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2236/66ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.08.11	நெத்தலி, கருவாடு, வெண்ணெய்க் கட்டி, பூசுகின்ற பாற்பொருட்கள், மதே விதைகள், குரக்கன் மா, கடுகு மற்றும் உப்பு	சிறப்புப் பண்டத் தீர்வை ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2240/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.08.11	உப்பு	மருந்தாக்கப் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின் மீது வர்த்தக நோக்கத்திற்காக அல்லாத மருந்தாக்கப் பொருட்களின் தயாரிப்புக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் மருந்தாக்கப் பொருட்களின் தயாரிப்புத் தொழில்முயற்சிகளின் மூலமான உப்பின் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.40 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஒரு வருட காலத்திற்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2240/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

திகதி	விடயம்	திருத்தம்
2021.09.07	பெரிய வெங்காயம்	சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு 25 சதத்திலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.40 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2244/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.10.11	அரிசி	கி.கிறாமொன்றிற்கு ரூ.65 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை நான்கு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது (2249/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
		வர்த்தக அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின மீது இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் மூலமான அரிசியின் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.65 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு 25 சதங்கள் சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை நான்கு மாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2249/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.10.13	உருளைக்கிழங்கு, சிவப்பு அல்லது மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைக்கப்பட்டவை) மற்றும் சீனி	சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2249/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.11.02	அரிசி	கி.கிறாமொன்றிற்கு ரூ.65 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு 25 சதங்கள் சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஆறு மாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2252/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	சோளம்	மொத்தமாக 2000 மெ.தொன்கள் வரை அரசுக்குச் சொந்தமான பி.சி.சி ஸ்ரீலங்கா திரிபோஷா லிமிடெட்டின் மூலமான 'திரிபோஷா' உற்பத்தியின் சோள இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.25 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஒரு மாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2252/9ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.11.23	தேங்காய்த்துருவல்கள்	சிறப்புப் பண்டத் தீர்வையின் விதித்தல் ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2255/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
		கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின் மீது அரசுக்குச் சொந்தமான பி.சி.சி லங்கா லிமிடெட்டின் மூலமான தேங்காய்த்துருவல் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.300 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஆறு மாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2255/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

திகதி	விடயம்	திருத்தம்
2021.12.21	சோளம்	மொத்தமாக 40,000 மெ.தொன்கள் வரை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் ஒப்புதல்/ விதந்துரைப்பை பெற்றுள்ள தயாரிப்பளர்களின் மூலமான "விலங்குத்தீன்" உற்பத்திக்கான சோளம் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.25 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஆறு மாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2259/9ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021.12.31	உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம்	உருளைக்கிழங்குகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றுக்கு ரூ.50இலிருந்து கி.கிறாமொன்றுக்கு ரூ.20இற்கு குறைக்கப்பட்ட அதேவேளை பெரிய வெங்காயம் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றுக்கு ரூ.40இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது (2260/72ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.01.11	அரிசி மற்றும் சீனி	சிறப்புப் பண்டத் தீர்வையின் விதித்தல் ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2262/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)
2022.03.03	சோளம்	சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.25இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இற்கு ஆறுமாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது (2269/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
		சிறிலங்கா திரிபோஷா லிமிடெட்டின் மூலமான 'திரிபோஷா' உற்பத்திக்கான சோள இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.10 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஆறுமாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2269/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	மக்கா சோளம் (ஏனையவை)	கி.கிறாமொன்றிற்கு ரூ.10 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஆறுமாத காலப்பகுதிக்கு சுமத்தப்பட்டது. (2269/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	மக்கிறல், உழுந்து, தட்டைப்பயறு மற்றும் குரக்கன்	சிறப்புப் பண்டத் தீர்வையின் விதித்தல் ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2269/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.03.09	யோகட், வெண்ணெய்க் கட்டி, பாற்பரவற்பொருட்கள், பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), ஆரஞ்சுகள் (உடன் மற்றும் உலர்த்தியவை) மற்றும் அப்பிள்கள்	சிறப்புப் பண்டத் தீர்வை ஆறுமாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2270/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை

2021 பெப்புருவரி 22	-	பால் மற்றும் கிறீம், செறிவூட்டப்பட்ட அல்லது சீனி அல்லது ஏனைய இனிப்பு வகை சேர்க்கப்பட்டவை (இணங்குவிப்புக் குறியீடுகள் 0402.10.00, 0402.21.00 மற்றும் 0402.29.00 கீழுள்ள உற்பத்திகள்) மீதான துறைமுக மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தி தீர்வை 10 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது (2216/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021 மார்சு 09	-	2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க வர்த்தகமைய ஒழுங்குவிதிகள் மற்றும் உபாய அபிவிருத்தி செயற்றிட்ட அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் செயற்றிட்டம் தவிர்ந்த வர்த்தக தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அல்லது நிருமாண காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 50 மில்லியனுக்கு குறைவான கட்டம் கட்டமான மூலதன முதலீட்டினைக் கொண்டுள்ள அத்தகைய தொழில்முயற்சிகளின் ஏதேனும் செயற்றிட்டத்தில் பயன்படுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றினை செய்து கொண்டுள்ள ஏதேனும் நிறுவனத்தினால் செயற்றிட்டம் தொடர்பான மூலதனப்பொருட்களின் இறக்குமதிகளுக்கு துறைமுக மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2218/51ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2021 மார்சு 19	-	சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுக்குட்பட்டு பெற்றோலியத் துறைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்புக்களின் மீது, குறிப்பாக பிற்றுமன் உற்பத்திக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் உலை எண்ணெய் மீதான துறைமுக மற்றும் விமானநிலையத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2219/68ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
